www.tamilarangam.net

# இலங்கையில் சமாதானம் பேசுதல்

## முயற்சிகள் • தோல்விகள் • படிப்பினைகள்

தொகுதி இரண்டு



பதிப்பு
கலாநிதி குமார் ரூபசிங்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தொகுதி இரண்டு
இலங்கையில் சமாதானம் பேசுதல்
முயற்சிகள் • தோல்விகள் • படிப்பினைகள்
பதிப்பு
கலாநிதி குமார் ரூபசிங்க

www.tamilarangam.net

# இலங்கையில்
# சமாதானம் பேசுதல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையில் சமாதானம் பேசுதல்

## முயற்சிகள் • தோல்விகள் • படிப்பினைகள்

தொகுதி இரண்டு

பதிப்பு

**கலாநிதி குமார் ரூபசிங்க**

அடையாளம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சகவாழ்வு மன்றத்தின் வெளியீடான இந்நூல் குறிப்பான ஒரு தேசிய அல்லது அரசியல் அக்கறையிலிருந்து தன்னிச்சையானது. இதில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துகள் சகவாழ்வு மன்றத்தையோ அதன் சபையையோ அல்லது பங்காளிகளையோ அவசியமான முறையில் முதன்மைப்படுத்தவில்லை.

இந்நூலில் உள்ள கட்டுரைகளின் கருத்துகள் இலங்கையின் முரண்பாடு பற்றிய பல்வேறு எழுத்தாளர்களின் பரவலான அபிப்பிராயங்களை எடுத்துக் கூறுகிறது. இக்கட்டுரைகளின் கருத்துகள் மற்றும் தரவுகள் அனைத்திற்கும் அந்தந்த கட்டுரையாளரே பொறுப்பாவார். எனவே இந்நூலிலுள்ள கருத்துகளை பதிப்பாசிரியரின் அபிப்பிராயமாகவோ கருத்தாகவோ பொருள்கொள்ளக் கூடாது.

இத்தொகுதி முதலில் (2006) இலங்கையில் உள்ள *இன்டர்நேஷனல் அலெட்*டினால் வெளியிடப்பட்டது. இந்தியாவில் இந்நூலை வெளியிடுவதற்கான பதிப்புரிமையைச் சகவாழ்வு மன்றம் *அடையாளத்*திற்கு வழங்கியுள்ளது.

இலங்கையில் சமாதானம் பேசுதல்: முயற்சிகள், தோல்விகள், படிப்பினைகள் • தொகுதி இரண்டு • தொகுப்பு: கலாநிதி குமார் ரூபசிங்க • © சக வாழ்வுக்கான மன்றம் • முதல் இந்தியப் பதிப்பு: 2008 • நூல் வடிவம்: த பாபிரஸ் • அச்சாக்கம்: மணி ஆப்செட், சென்னை 5.

வெளியீடு: அடையாளம், 1205/1 கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621310, திருச்சி மாவட்டம், இந்தியா. தொலைபேசி: (+91) 04332 273444.

ISBN 978 81 7720 110 9

விலை: ரூ. 550 (இரண்டு தொகுதிகள்)

*Ilankaiyil Samaathaanam Pesuthal, Vol. II* is the Tamil translation of Negotiating Peace in Srilanka, Edited by Dr. Kumar Rupasinghe, First Indian edition: 2008, Published by adaiyaalam, 1205/1 Karupur Salai, Puthanatham 621 310. Trichy Dist., India. email: info@adaiyaalam.net

## உள்ளடக்கம்

நன்றி vii

முன்னுரை ix

சுருக்க விளக்கம் xiii

அறிமுகம்: சமாதானச் செயன்முறையை மதிப்பிடுதல் 1
*குமார் ரூபசிங்க*

**இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளும் பாதுகாப்புப் பரிமாணமும்**

1. சமாதான நடவடிக்கைகளை ஆரம்பித்தலும் நிலைபெறச்செய்தலும்: தோற்றமும் சவால்களும் 79
*பிரட்மன் வீரக்கூன்*

2. சமாதான நடைமுறையும் பாதுகாப்புப் பிரச்சினைகளும் 121
*ஆஸ்டின் பெர்னாண்டோ*

3. போர்நிறுத்த உடன்படிக்கை பிரச்சினைகளும் எதிர்பார்ப்புகளும் 184
*ஜி. எல். பீரிஸுடனான நேர்காணல்*

4. போர்நிறுத்த உடன்படிக்கை மீறல்கள், வன்முறைகள் மற்றும் கண்காணிப்புக் குழுவின் பங்கு 210
*பிரியான் செனவிரத்ன, டினிது என்ரகல*

5. இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு 243
*ஹக்ரூப் ஹொக்லண்டுடன் ஒரு நேர்காணல்*

6. தமிழர் தரப்பிலான பார்வை 252
*தர்மரத்னம் சிவராம்*

7. நோர்வேயின் அனுசரணையில் சமாதானப் பேச்சுகள்: அன்டன் பாலசிங்கத்தின் நூலை முன்வைத்து ஒரு மீளாய்வு 283
*காயத்திரி விக்கிரமசிங்க*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**மனிதாபிமான எதிர்வினையும் சமாதான பலாபலனும்**

8. பொருளாதாரப் பலாபலனுடன் முரண்பாட்டை மாற்றியமைத்தல்: இலங்கை அனுபவம் 294
*சமன் கெலேகம*

9. அபிவிருத்தி எவ்வாறு சமாதானத்தைப் பலவீனப்படுத்தியது 334
*சுனில் பஸ்டியன்*

**மூன்றாம் தரப்புக் கருத்துகள்**

10. சிவில் சமூகமும் சமாதானச் செயன்முறைகளும் 374
*சுமனசிறி லியனகே*

11. இலங்கையின் சமாதானச் செயன்முறைகள்: முன்னால் இருப்பது என்ன? 401
*பேர்ணாட் ஏ. பி. குணதிலக*

12. இலங்கையின் சமாதானச் செயன்முறைகளும் முஸ்லிம் பிரச்சினையும் 412
*எம்.ஐ.எம். முஹைறீன்*

**சர்வதேசப் பார்வை**

13. சமாதானப் பணியில் நோர்வேயின் பங்களிப்பு 436
*எரிக் சொல்ஹெய்முடன் ஒரு நேர்காணல்*

14. சர்வதேச சமூகத்தின் வகிபங்கு 455
*கீத் நொயார்*

15. சமாதான செயன்முறைகள்: 2006இன் ஒரு யதார்த்தப் பரிசீலனை 513
*என். ராம்*

**பின்னிணைப்பு**

1 படத்தொகுப்பு 530
2 முக்கியமான உடன்படிக்கைகள் 534
3 சமாதானக் கால வரிசை 565
4 கட்டுரை ஆசிரியர்கள் பற்றிய குறிப்புகள் 571

## நன்றி

இந்த தொகுதியின் அச்சுப் பிரதிகளைத் திருத்துவதிலும் நூல் உருவாக்கத்திலும் அர்ப்பணிப்புடனும் முழுமையான ஈடுபாட்டுடனும் பணியாற்றிய காயத்ரி விக்கிரமசிங்க, மொழியைச் செப்பனிடுவதில் உதவிய திலினி ஜயமான்ன, ருவந்தி ஜயசுந்தர, மரியம் விலியம்ஸ் மற்றும் ஹேர்மா விக்கிரமசிங்க, இந்த நூலை அச்சிடுவதற்கு ஆதரவளித்த சுலோசனா ரகுநாதன், கட்டுரைகளை வழங்கிய ஆசிரியர்கள், முதல் பிரதிகளை வாசித்து அது தொடர்பாக தமது கருத்துகளைத் தெரிவித்த நோர்பேர்ட் ரோபேர்ஸ், பிரட்மன் வீரக்கூன் ஆகியோருக்கும் இத்தொகுப்பை வெளியிடுவதற்கு தாராளமாகப் பங்களிப்புகளை வழங்கிய நோர்வீஜிய அரசாங்கம், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் முரண்பாட்டுக் கற்கைகளுக்கான பேர்கொப் நிறுவனம் ஆகியவற்றுக்கும் நன்றி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னுரை *

இலங்கையின் இனமுரண்பாடு அண்மைக் காலத்தில் இடம்பெற்ற பல பரிமாணங்களைக் கொண்ட, நீண்டகாலகட்டத்துடன் கூடிய சமூக முரண்பாடுகளில் ஒன்றாக இருந்து வருகின்றது என எடுத்து விளக்கப் பட்டுள்ளது. நாட்டின் சுதந்திரத்துக்குப் பின்னர் ஒரு நீண்டகாலப் பிரிவின் போது அது படிப்படியாக அபிவிருத்தியடைந்து வந்ததுடன், 1983இல் ஓர் இராணுவ மோதலாகத் தீவிரமடைந்தது. அது காலனித்துவத்துக்குப் பிற்பட்ட சூழலின் ஒன்றுடன் ஒன்று போட்டியிடும் இனத்துவத் தேசியக் கோரிக்கைகளின் கவலைக்குரிய இயங்கியலை எடுத்துக் காட்டியதுடன், அச்சக்திகளுக்கு இடமளிக்கும் பொருட்டு அனைவரை யும் அரவணைத்துக்கொள்ளும் அரசியல் சமூகக் கட்டமைப்புகளை உருவாக்குவதில் உள்ள சிரமங்களையும் எடுத்துக்காட்டியது. மோதலில் ஈடுபட்டு வந்த தரப்பினர் 2002ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நோர்வீஜிய அனுசரணையுடன் போர்நிறுத்த ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டனர். அது பெருமளவுக்குச் சவால்களை எதிர்கொண்டிருந்ததுடன், எளிதில் ஊறுபடத்தக்க நிலையில் இருந்து வந்தபோதிலும் நான்கு வருட கால நிலையான போர் நிறுத்தமொன்றுக்கு வழிகோலியது. இப்போர் நிறுத்தத்தைப் பேச்சுவார்த்தையுடன் கூடிய ஒரு தீர்வை எடுத்துவருவதற்கு வழிகோலக்கூடிய நிலையான ஒரு சமாதானச் செயன்முறையாக நிலைமாற்றிக்கொள்ளும் பொருட்டு இதுவரையில் மேற்கொள்ளப் பட்ட முயற்சிகள் தோல்வி கண்டுள்ளன. எனினும் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருக்கும் இரு தரப்பினரும் அதேபோல இந்த முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்டிருக்கும் ஏனைய அக்கறைதாரர்களும் சமாதானத்துக்கான பாதையைக் கண்டறிவதற்கான தமது உச்சமட்டப் பங்களிப்பை வழங்குவதற்குத் திடசங்கற்பம் செய்துகொண்டுள்ளனர்.

நீண்ட காலமாக இடம்பெற்று வரும் சமூக முரண்பாடுகளைப் பொறுத்தவரையில் முரண்பாட்டு நிலைமாற்றம், சமாதானத்தை உருவாக்குதல் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்ப வற்றுக்கு நீண்டகால இயல்பிலான முயற்சிகள் தேவைப்படுகின்றன.

* இலங்கைப் பதிப்புக்காக எழுதப்பட்டது. (ப-ஆ)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகெங்கிலும் மோதல்கள் இடம்பெற்று வந்த பல பிரதேசங்களின் மிகுந்த சமாதானச் செயன்முறைகளிலிருந்து சேகரித்துக்கொள்ளப் பட்டிருக்கும் இந்த உள்ளுணர்வு இலங்கையைப் பொறுத்தவரையிலும் உண்மையானதாகும். நீண்டகாலமாக இடம்பெற்று வரும் சமாதான முயற்சிகளின் தேவைகளைப் புரிந்துகொள்ளும் பொருட்டு நாம் கடந்தகால அனுபவங்களை ஆராய்ந்து, அவற்றைக் கவனமான விதத்தில் பகுப்பாய்வுக்கு உட்படுத்துவது அவசியமாகும்.

இதுவே 'இலங்கையில் சமாதானம் பேசுதல்: முயற்சிகள், தோல்விகள் மற்றும் படிப்பினைகள்' என்ற இரு தொகுதிகளைக் கொண்ட இந்த வெளியீட்டின் நோக்கமாகும். ஐக்கியத் தேசிய முன்னணி (ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களுடன் கூட்டாட்சி நடத்திய) அரசாங்கத்தின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எல்டிடிஈ ஆகியோரினால் 2001 டிசம்பர் தொடக்கம் 2004 ஏப்ரல் மாதத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தைப் பொறுப்பேற்றுக்கொண்டதுவரையில் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளின்மீது இந்த இரண்டாம் தொகுதி கவனம் செலுத்துகின்றது. மேலும், அது ஐக்கியத் தேசிய முன்னணி அரசாங்கம் மற்றும் எல்டிடிஈ என்பவற்றால் வடிவமைக்கப்பட்ட சமாதானச் செயன்முறையின் முதன்மையான அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டிருப் பதனால் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் தொடர் பான பொதுவான பிரச்சினைகளையும் கவனத்தில் எடுக்கின்றது. அதாவது போர்நிறுத்த ஒப்பந்தம், நோர்வீஜிய அனுசரணை மற்றும் சர்வதேசச் சமூகத்தின் வகிபாத்திரம் போன்ற விடயங்கள் இங்குக் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் பேச்சுவார்த்தையின் மூலம் நீதியான, நிலையான சமாதானத்தை எடுத்து வருவது எவ்வாறு என்பது குறித்த உயர்மட்ட விவாதத்துக்கு பங்களிப்புச் செய்யும் அதன் முயற்சிகளின் ஒரு பாகமாக இந்நூல் சகவாழ்வு மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. கட்டுரை யாசிரியர்களும் நேர்காணல்களில் பங்கேற்றவர்களும் சமாதானச் செயன் முறையின் உருவாக்கம் மற்றும் முகாமைத்துவத்தில் அரசாங்கத்தின் தரப்பில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்த முதன்மையான நபர்களின் தனித்துவமான ஒரு குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், பிரட்மன் வீரக்கூன், ஆஸ்டின் பெர்னாண்டோ மற்றும் பேர்னாட் குணதிலக ஆகியோர் இதில் அடங்குகின்றனர். 2002–2004 சமாதானச் செயன்முறை குறித்த எல்டிடிஈ இயக்கம் மற்றும் தமிழ் மக்கள் ஆகிய தரப்பினரின் கண்ணோட்டங்கள் அன்டன் பாலசிங்கம் எழுதியுள்ள 'போரும் சமாதானமும்' என்னும்



நூலின் ஓர் அத்தியாயத்தின் சுருக்கத்தின் மூலமும் காலஞ்சென்ற தர்மரத்னம் சிவராமின் கட்டுரைகளின் ஒரு தொகுப்பின் மூலமும் முன்வைக்கப்படுகின்றன.

ஐக்கியத் தேசிய முன்னனி – எல்டிடிஈ காலப் பிரிவின்போது குறிப் பிட்ட ஒருவிதத்தில் பிரதான பண்புக்கூறுகளாக இருந்துவந்த நான்கு பிரதான விடயங்களை மையமாகக் கொண்டு இத்தொகுப்புக்கான கட்டுரைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அவையாவன:

- சமாதானச் செயன்முறையின் ஒட்டுமொத்த வடிவமைப்பு,
- போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பான அதன் அடிப்படைப் பரிமாணம், போர் நிறுத்த ஒப்பந்தத்தின் உறுதிப்பாட்டை நிலை நிறுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் அதன் மனிதப் பாதுகாப்பு,
- மனித உரிமைகள் பரிமாணத்தைப் பரப்படுத்துவதற்கென மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள் மனிதநேய மற்றும் 'சகஜ நிலைப் படுத்தல்' முயற்சிகள் மற்றும் சமாதானம்,
- அபிவிருத்தி என்பவற்றுக்கிடையிலான பிணைப்பு சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நேரடியாக சம்பந்தப்பட்டிராத தரப்பினர், அக்கறைதாரர் மற்றும் சர்வதேசச் சமூகத்தின் பாத்திரம்.

இதில் பிரதான பொறுப்பு நபரான அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் அவர்களுடன் நடத்திய ஒரு பேட்டியின் வடிவில் குறிப்பாக நோர்வே யின் கண்ணோட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் அரசாங்கத்துக்கும் எல்டிடிஈ இயக்கத்துக்கும் இடையில் மிகச் சமீபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட சமாதான முன்னெடுப்பின் வெற்றி, ஒரு புறத்தில், 2002 பிப்ரவரி மாதம் தொடக்கம் உருவாக்கப்பட்டு வந்திருக்கும் அடிப்படை களை மிகச் சிறந்த விதத்தில் பயன்படுத்திக்கொள்வதிலும் மறுபுறம் அக்காலகட்டத்தில் இடம்பெற்ற தோல்விகளிலிருந்து படிப்பினை களைப் பெற்றுக்கொள்வதிலுமே தங்கியுள்ளது. இந்தக் கூறுகளின் சேர்க்கை இந்நூலை உரியகாலத்தில் மேற்கொள்ளப்படும் மிக முக்கிய மான ஒரு பங்களிப்பாக ஆக்குவதுடன், நீண்டகாலமாக இடம்பெற்று வரும் சமாதான முன்னெடுப்புகளுக்கான ஒரு தூண்டுதலையும் வழங்குகின்றது. சம்பந்தப்பட்ட தரப்பினர் வெளிப்படையாகத் தெரியக் கூடிய நிர்ணயகரமான பெறுபேறுகளைச் சாதித்துக்கொண்டிருக்கும் இடங்கள், அவர்கள் தோல்வியடைந்த அல்லது தேங்கி நின்ற இடங்கள் எவை என்பதனையும் இது கோடிட்டுக் காட்டுகின்றது. மேலும், நிறைவேற்றிக்கொள்ளப்பட்டிருக்கும் இணக்கப்பாடுகளின் சட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பூர்வமான இயல்பு மற்றும் நிலைமாற்ற ஆற்றலுக்கு அச்சுறுத்தலாக இருந்துவரும் விடயங்கள் எவை என்பதனையும் அது காட்டுகிறது.

இந்த கட்டுரைகள், பேட்டிகளை வாசித்த பின்னர் எமக்குத் தெளிவாகத் தெரியவரும் ஒரு விடயம்: அரசியல் நிலைமாற்றம் மற்றும் சமாதான மேம்பாடு ஆகிய விடயங்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன என்பதாகும். நீண்டகாலமாக இடம்பெற்று வரும் சமாதான முன்னெடுப்புக்கு அனைத்து அக்கறைதாரர்களுக்கு இடையிலும் அனைத்துமடங்கிய, அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய பகிரங்கமான ஓர் உரையாடல் இடம்பெறுவது அவசியமாகும். ஒரு சமாதான வழியில் அனைத்துச் சமூகங்களினதும் தேவைகள், அக்கறைகள் மற்றும் விருப்பங்களுக்கு இடமளிக்கும் ஒரு பொது அரசியல் இல்லத்தை உருவாக்குவது எப்படி என்பது குறித்து இந்த உரையாடல் இடம்பெறுதல் வேண்டும். மேலும், இச்செயன்முறைக்கு உறுதியான பகுப்பாய்வின் அடிப்படையில் பல்வேறு குரல்களுக்கும் இடமளித்து, வேறுபட்ட அபிப்பிராயங்களுக்கு மதிப்பளிக்கும் ஒரு கலாசாரமும், புதுமைப்புனைவிலான தீர்வுகளின் உருவாக்கமும் அவசியமாகும். இந்த அடிப்படையிலேயே இந்நூல் இலங்கையில் சமாதான, கலாசாரத்துக்கான முதன்மையான ஒரு பங்களிப்பை வழங்குகின்றது.

நோர்பர்ட் ரோபர்ஸ்

பணிப்பாளர்
முரண்பாட்டுக் கற்கைளுக்கான பேர்கொப் மன்றம்
இலங்கை அலுவலகம்.



## சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| இயுககு/போநிககு/ எஸ்எல்எம்எம் | SLMM | இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்பு குழு |
| ஈஎஃப்எஃப் | EFF | நீடிக்கப்பட்ட நிதி உதவி |
| ஈஎன்டீஎல்எஃப் | ENTLF | ஈழ தேசிய தமிழ் விடுதலை முன்னணி |
| ஈபிஆர்எல்எஃப் | EPRLF | ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி |
| ஈபிடிபி | EPDP | ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி |
| எஃப்எல்ஐசிடி | FLICT | முரண்பாட்டு மாற்றத்திற்கான உள்ளூர் தொடங்குகைகளை அனுசரணை செய்தல் |
| எஃப்சிஈ | FCE | சகவாழ்வுக்கான அறக்கட்டளை |
| எல்டிடிஈ | LTTE | தமிழீழ விடுதலைப் புலிகள் |
| என்ஈஎம்பிஏ | NEMPA | வடகிழக்கு முஸ்லிம் சமாதான சபை |
| என்ஈஆர்எஃப் | NERF | வடகிழக்கு புனரமைப்பு நிதியம் |
| எஸ்எம்டி | SMD | இராணுவ மோதல் தணிவிற்கான உபகுழு |
| எஸ்எல்எம்சி | SLMC | இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் |
| எஸ்பிஎம் | SPM | அரசியல் விவகாரங்கள் தொடர்பிலான உபகுழு |
| எஸ்டிஎன் | SDN | மோதல் தவிர்ப்பு சகஜநிலையை ஏற்படுத்து வதற்கான உபகுழு |
| ஐஎஸ்ஜிஏ | ISGA | இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை |
| ஐசிஆர்சி | ICRC | செஞ்சிலுவை சர்வதேச அமைப்பு |
| ஐதேமு/ யூஎன்எஃப் | UNF | ஐக்கிய தேசிய முன்னணி |
| ஐமசுமு/ யூபிஎஃப்ஏ | UPFA | ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி |
| சிஎஃப்ஏ | CFA | யுத்தநிறுத்த உடன்படிக்கை |
| சிஎஸ்ஓ | CSO | சிவில் சமூக அமைப்புக்கள் |
| சிஐடிஏ/சிடா | CIDA | கனடிய சர்வதேச அபிவிருத்தி அமைப்பு |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | |
|---|---|---|
| சிரான்/ எஸ்ஐஹெச்ஆர்என் | SIHRN | வடக்கு-கிழக்கின் உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வுக்கான உபகுழு |
| டபுள்யூஎஃப்பி | WFP | உலக உணவுத் திட்டம் |
| டெலோ | TELO | தமிழீழ விடுதலை இயக்கம் |
| டிஆர்ஓ | TRO | தமிழர் புனர்வாழ்வுக் கழகம் |
| டிஎன்ஏ | TNA | தமிழ் தேசிய கூட்டமைப்பு |
| பிஆர்எஸ்பி | PRSP | வறுமைக் குறைப்பு ஆதாரத் திட்டம் |
| பிஆர்ஜிஎஃப் | PRGF | வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி |
| பிஏ | PA | பொதுஜன முன்னணி |
| பி-டோம்ஸ் | P-Toms | சுனாமிக்குப் பின்னரான அமைப்பு மேலாண்மை நடவடிக்கை |
| பிளொட் | PLOTE | தமிழீழ மக்கள் விடுதலை கழகம் |
| மேர்ஜ் | MIRJE | இனங்களுக்கிடையிலான நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் |
| யூஎன்ஹெச்சிஆர் | UNHCR | ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான ஹைகமிஷன் |
| யூஎன்டிபி | UNDP | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் |
| யூஎன்பி | UNP | ஐக்கிய தேசிய கட்சி |
| யூடிஹெச்ஆர் | UTHR(J) | மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) |
| யூனிசெஃப் | UNICEF | ஐக்கிய நாடுகளடின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் |
| வாட் | VAT | பெறுமதி கூட்டல் வரி |
| ஸ்கோப் | SCOPP | சமாதான செயன்முறைக்கான ஒருங்கிணைப்புச் செயலகம் |
| ஜேவிபி | JVP | ஜனதா விமுக்தி பெரமுன (மக்கள் விடுதலை முன்னணி) |



# அறிமுகம்: சமாதானச் செயன்முறையை மதிப்பிடுதல்

குமார் ரூபசிங்க

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையே கையெழுத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தின் நான்காம் ஆண்டு நிறைவுக்குள் நாங்கள் வெகுவிரைவில் பிரவேசிக்க உள்ளோம். இக்கட்டுரை பல குறிக்கோள்களைக் கொண்டுள்ளது. அது ஐக்கியத் தேசிய முன்னணி – எல்டிடிஈ சமாதானச் செயன்முறையை மீளாய்வு செய்வதுடன், சமாதானச் செயன்முறையின் இந்த முக்கியமான காலகட்டத்திலிருந்து நாங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினைகளையும் மதிப்பிடும். இரண்டாவதாக, இத்தொகுப்பில் முன் வைக்கப்பட்டிருக்கும் கட்டுரைகளை, ஒரு பரந்த கட்டமைப்புக்குள், தமது கருத்துகளை முன்வைப்பதன் மூலம் ஒரு விரிவான நோக்கத்தை நிறைவேற்றிவைக்கக்கூடிய விதத்தில் – அதாவது, இலங்கையின் சமாதானச் செயன்முறையை மதிப்பிடும் விதத்தில் – இங்கு அறிமுகம் செய்யும். அந்த வகையில் இந்தக் கட்டுரை ஓர் அறிமுகத்தின் பாரம்பரிய வடிவத்திற்குச் சற்று அப்பால் செல்கின்றது.

இந்தத் தொகுப்பில் முன்வைக்கப்பட்டிருக்கும் கட்டுரைகள் இலங்கை அரசாங்கம் மற்றும் எல்டிடிஈ இயக்கத்தால் துவக்கிவைக்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமாதானச் செயன்முறைக் காலகட்டத்தைக் கவனத்தில் எடுக்கின்றன. பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கூன், பாதுகாப்புத்துறைச் செயலாளர் ஆஸ்டின் பெர்னாண்டோ, இலங்கைச் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் பேர்ணாட் குணதிலக மற்றும் அரசத் தரப்பின் முதன்மைப் பேச்சு வார்த்தையாளராகச் செயல்பட்டுவந்த பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் போன்ற ஒரு சில கட்டுரையாளர்களும் நேர்காணல்களுக்கு உட்படுத்தப்பட்டவர்களும் சமாதானச் செயன்முறையின் அன்றாட விவகாரங்களில் மிகவும் நெருக்கமாகச் சம்பந்தப்பட்டிருந்தனர். அவர்கள் தமது அனுபவங்களின் செழுமையை எடுத்து வருவதுடன், பேச்சுவார்த்தைச் செயன்முறையின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போது தாம் சமாளிக்க வேண்டியிருந்த பிரச்சினைகள் குறித்த ஓர் ஆழமான பகுப்பாய்வையும் முன் வைக்கின்றனர்.

விசேட சமாதானத் தூதுவரும் தற்பொழுது நோர்வேயின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சராகச் செயல்பட்டு வருபவருமான எரிக் சொல்ஹெய்ம் தனது பேட்டியில் தான் வகித்து வந்த பாத்திரங்கள் குறித்த வெளிப்படையான, கபடமற்ற ஒரு கருத்தை இங்கு முன்வைத்துள்ளார். இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பதில் தலைவரான ஹக்ரூப் ஹொக்லண்ட் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பாத்திரத்தை எடுத்து விளக்குவதுடன், அது தொடர்பான பல தப்பெண்ணங்களைத் தெளிவுபடுத்துகிறார். அந்தவகையில் இந்தத் தொகுப்பு ஒரு தனித்துவமான தொகுப்பாக இருந்து வருகின்றது எனக் கூற முடியும். ஏனெனில், சமாதானச் செயன்முறையில் மிக நெருங்கிய விதத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் செயல்பாட்டாளர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரின் நேரடி அனுபவங்களை அது முன்வைக்கின்றது.

சமாதானச் செயன்முறையின் பொருளாதார அம்சங்கள் குறித்துச் சமன் கெலேகம மற்றும் சுனில் பஸ்டியன் ஆகியோர் இங்கு எழுதியுள்ளனர். ஐக்கியத் தேசிய முன்னணி அரசாங்கம் வெற்றிகரமான ஒரு சமாதானச் செயன்முறையைத் துவக்கிவைத்தபோதிலும், அது எவ்வாறு தோற்கடிக்கப்பட்டது என்பது குறித்து இவ்விருவரும் பகுப்பாய்வு செய்துள்ளனர். பேச்சுவார்த்தைச் செயன்முறையின் ஒரு பின்விளைவாக மக்களுக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட சமாதானத்தின் பயன் அரசியல் ஆதரவைப் பெற்றுக்கொள்ளாதது ஏன் என்பதையும் அவர்கள் பகுப்பாய்வு செய்கின்றனர். சமாதானச் செயன்முறையின் அனுகூலங்களை மக்கள் நேரடியாக அனுபவிப்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையே இந்த இரு கட்டுரைகளும் தெளிவான ஒரு செய்தியாக முன்வைக்கின்றன. கீத் நொயார் மற்றும் என். ராம் ஆகியோர் சர்வதேசக் கண்ணோட்டத்தை மிகவும் சிறப்பான விதத்தில் எடுத்து விளக்கியுள்ளனர். சர்வதேசச் சமூகத்தின் வகிபாத்திரம் குறித்தும், பாதுகாப்புவலை தொடர்பான கருத்து எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பது குறித்தும் இலங்கையின் சமாதானச் செயன்முறை எவ்வாறு மிதமிஞ்சிய அளவில் சர்வதேச மயப்படுத்தப்பட்டது என்பது குறித்தும் நொயார் விரிவாக எழுதுகிறார். இந்தியாவின் வகிபாத்திரம் மற்றும் அதன் வரையறைகள், இடையூறுகள் என்பன தொடர்பான சுவாரஸ்யமான தடுமாற்ற நிலைமைகளை ராம் கலந்துரையாடுகிறார்.

பேச்சுவார்த்தைச் செயன்முறையை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வந்த தர்மரத்னம் சிவராம் தமிழ்ச் சமூகத்தின் சிந்தனையை முன்வைக்கின்றார். அவருடைய அவதானிப்புகள் சர்ச்சைக்குரியவையாகவும்



ஆத்திரத்தைத் தூண்டுபவையாகவும் இருந்து வந்துள்ளன. அவரும் இத்தொகுப்புக்கு ஒரு கட்டுரையை வழங்க இருந்தார். ஆனால் துணைப் படைகளின் கைங்கரியம் காரணமாக அவர் அகால மரணமடைந்தமையால் அவருடைய கருத்துகளை வெளியிடுவதற்கு பல்வேறு பத்திரிகை ஆசிரியர்களின் அனுமதியை பெற்றுக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது. அன்டன் பாலசிங்கம் எழுதியுள்ள நூலின் இறுதி அத்தியாயம் குறித்த மீளாய்வைக் காயத்ரி விக்கிரமசிங்க முன்வைக்கிறார். எம்.ஐ.எம். முஹைதீன் முஸ்லிம் பரிமாணத்தையும் சமாதானச் செயன்முறையுடனான அதன் தொடர்பையும் எடுத்து விளக்குகிறார்.

முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்டிருந்த இருதரப்பினரும் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டமை மற்றும் அந்த ஒப்பந்தம் இதுவரையில் நீடித்து வந்துள்ளமை ஆகியவற்றின் அடிப்படையில் சமாதானச் செயன்முறை ஓரளவுக்கு வெற்றியடைந்துள்ளது என்ற வாதத்தையே இக்கட்டுரை முன்வைக்கின்றது. ஆனால், இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட பின்னர் பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. வாஷிங்டன் நெருக்கடிக்குப் பின்னர் எல்டிடிஈ பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்தியதுடன், ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து, மக்கள் விடுதலை முன்னணியுடன் (ஜேவிபி) இணைந்து ஓர் அரசாங்கத்தை அமைத்துக்கொண்டார். அவருடைய அரசாங்கம் பதினான்கு மாத காலம் நீடித்ததுடன், வடக்கிலும் கிழக்கிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான பொதுக் கட்டமைப்புப் பிரச்சினையின்போது மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்துக்கான தனது ஆதரவை விலக்கிக் கொண்டதை அடுத்து அது ஒரு சிறுபான்மை அரசாங்கமாக மாறியது. மேலும் , குறிப்பாக 2005 மார்ச் மாதத்துக்குப் பின்னர் மிகவும் தீவிரமான விதத்தில் போர்நிறுத்த மீறல்கள் இடம்பெற்று வந்தன. அந்த நிலையில் போர்நிறுத்த ஒப்பந்தம் மிகக் கடுமையான விதத்தில் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட வேண்டும் எனக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்தன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றதை அடுத்து, நாடு மீண்டும் போருக்குச் செல்லுமா அல்லது பேச்சுவார்த்தைக்கு ஊடாக ஒரு தீர்வை எட்டுமா என்பதை நிர்ணயிக்கும் முதன்மை விடயமாக சமாதானச் செயன்முறைக்குப் புத்துயிரூட்டும் விடயமே இருந்து வருகின்றது. இக்கட்டுரையின் முதல் தொகுதி சமாதானச் செயன் முறையை மதிப்பிட்டுக்கொள்வதில் பிரயோகிக்கக்கூடிய கருதுகோள் ரீதியான கருவிகளை முன்வைக்கும். அது உருவாக்கப்பட்டிருக்கும் கட்டமைப்பைப் பரிசீலிப்பதுடன் இச்செயன்முறையின் வடிவமைப்பை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மதிப்பிடும். வருங்கால வெற்றிக்கெனச் சமாதானச் செயன்முறையை மீளவடிவமைக்கும் பொருட்டுக் கணிசமான அளவிலான ஒரு மீளாய்வுச் செயன்முறை தேவைப்படுகின்றது என்னும் வாதத்தை இக்கட்டுரை முன்வைக்கின்றது. எந்த ஒரு செயன்முறை வடிவமைப்பும் முழுமையானதாக இருந்து வருவதில்லை. தவறுகளை விட்டுத் திருந்தும் ஒரு நடைமுறைக்கூடாகவே அது செல்லவேண்டியுள்ளது. ஆனால், தவறு செய்து திருந்தும் அணுகுமுறையில் நாங்கள் தங்கியிருக்க முடியாது. மிகவும் ஆபத்தான மட்டங்களுக்கு எமது நடைமுறைச் செயல்பாடுகளை உயர்த்தவும் முடியாது. நாட்டின் ஒட்டுமொத்த எதிர்காலமும் ஆபத்தை எதிர்கொண்டிருக்கும் ஒரு தருணத்தில் செயல்மூலம் கற்றுக்கொள்வது என்பது மிகவும் அபாயகரமான ஒரு முயற்சியாக இருந்து வருகின்றது.

ஒரு சமாதானச் செயன்முறையை மதிப்பிடுவது என்பது மிகவும் சிரமமான ஒரு பணியாகும். அத்தகைய நிலைமாற்ற இயல்பிலான ஒரு செயன்முறையை மதிப்பிடுவதில் எப்பொழுதும் பிரச்சினைகள் சம்பந்தப்பட்டுள்ளன. ஆனால், வெற்றியின் அளவுகோல் மிகவும் தெளிவானதாகவும் வெளிப்படையானதாகவும் இருந்து வருகின்றது. போர்நிறுத்தப்பட்டமை மற்றும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என அவற்றை விளக்க முடியும். நிலைமாற்றச் செயன்முறை ஒன்றின் மதிப்பீடு சிக்கலானதாகவும் சிரமமானதாகவும் இருந்து வரும் அதே வேளையில் ஏனைய சர்வதேச அனுபவங்கள் குறித்த ஆராய்ச்சி கணிசமான அளவிலான எண்ணக் கருக்களையும் அனுபவங்களையும் எமக்குப் பெற்றுத் தரும். அவற்றிலிருந்து நாங்கள் பல படிப்பினைகளையும் எண்ணக்கரு சார்ந்த கருவிகளையும் பெற்றுக்கொள்ள முடியும். அவற்றின் அடிப்படையிலேயே ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இத்துறை தொடர்பான முந்தைய ஆராய்ச்சிகள் அரசுகளுக்கிடையிலான போர்களுடன் ஒப்பிடும்பொழுது உள்நாட்டுப் போர்களைத் தீர்த்துவைக்கும் விடயம் பெருமளவுக்குக் கடினமானதாக இருந்து வருவது மட்டுமன்றி, அத்தகைய தீர்வுகளும்கூட எளிதில் ஊறுபடத் தக்கவையாக இருந்து வருகின்றன என்பதைக் காட்டுகின்றன. வரலாற்று ரீதியாக நோக்கும்பொழுது உள்நாட்டுப் போர்கள் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் மூலமான தீர்வுகள் அரிதாகவே இடம்பெற்றுள்ளன. 1800ஆம் ஆண்டு தொடக்கம் உலகில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர்களில் மூன்றிலொரு பங்கு மட்டுமே பேச்சுவார்த்தைகளின் மூலம் முடிவுக்கு வந்தன. 1945ஆம் ஆண்டுக்குப் பின்னர் இது 25 சதவீதமாக இருந்து வந்தது. ஒரு சிலர் 15 சதவீதமாக இருந்து வந்தது என்றும் கூறுகின்றனர். இதிலிருந்து நாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினைச் சமாதானச் செயன்முறைகள் உயர் அளவில் ஊறுபடத் தக்கவையாக இருந்து வருகின்றன என்பதும் போர்நிறுத்த ஒப்பந்தங்களை



நிலையான விதத்தில் உறுதியாக முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு தீர்க்கமான ஒரு கட்டுமானம் அவற்றுக்குத் தேவைப்படுகின்றது என்பதுமாகும்.[1]

## இலங்கை தொடர்பான பின்னணிப் பகுப்பாய்வு

அரசாங்கத்துக்கும் எல்டிடிஈ இயக்கத்துக்கும் இடையில் கடந்த 25 வருட காலமாக இடம்பெற்று வரும் நீடித்த மோதலை இலங்கை எதிர்கொண்டுள்ளது. இந்த முரண்பாடு இப்பொழுது அதிகாரத்தைச் சமத்துவமான விதத்தில் பகிர்ந்துகொள்ளல், சிறுபான்மையினரின் உரிமைகள் மற்றும் மொழி, குடியேற்றங்கள், வேலை வாய்ப்புகள் போன்றவற்றில் அவர்களுக்குப் பாரபட்சம் காட்டுதல் என்பன தொடர்பான பிரச்சினைகளுக்கும் அப்பால் நகர்ந்து சென்றுள்ளது. அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளல் அல்லது நாட்டைப் பிரித்தல் என்ற ஒரு பிரச்சினை பிரதான அரங்குக்கு வந்திருக்கும் ஒரு நிலைமை வரையில் இம்மோதல் நிலைமாற்றம் கண்டுள்ளது. இலங்கை 1948இல் சுதந்திரம் அடைந்த பின்னர் இலங்கையில் பல்லின அரசொன்றைக் கட்டியெழுப்புவதில் ஏற்பட்ட தோல்வியே இந்த முரண்பாட்டுக்கான மூலகாரணமாக இருந்து வந்துள்ளது எனப் பல கல்விமான்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். ஏனைய சமூகங்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள இயலாத நிலை, அவர்களுடைய மொழி மற்றும் பங்கேற்பு தொடர்பாக காட்டப்பட்ட சகிப்புத்தன்மையற்ற நிலை ஆகியவை தேசத்தைக் கட்டியெழுப்பும் செயன்முறையின் ஒரு பங்காளராக இருந்து வரும் நிலையிலிருந்து தாம் புறமொதுக்கப்பட்டிருப்பதாகவும் அந்நியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தமிழ்ச் சிறுபான்மைச் சமூகம் உணரும் ஒரு நிலைமை தோன்றுவதற்கு வழிகோலியிருந்தது. தேசத்தைக் கட்டியெழுப்புதல் என்ற அடிப்படைக் கருதுகோள் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் விதத்தில் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் ஒரு செயன்முறையாக இருந்து வரவில்லை. மாறாக, அது அரசின் மீதானச் சிங்கள மேலாதிக்கத்தை வலியுறுத்தும் ஒரு செயன்முறையாகவே இருந்து வந்தது. அகிம்சை வழிமுறைகளின் மூலம் சச்சரவுக்குச் சமாதானமான ஒரு தீர்வை எட்டுவதற்குத் தமிழ் மிதவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிவுற்றன. தமிழர்களின் ஓர் இளைய தலைமுறை ஆயுதம் ஏந்தித் தனி நாடொன்றுக்காகப் போராடவேண்டும் எனத் தீர்மானித்தபொழுது 1975ஆம் ஆண்டளவில் இலங்கையின் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்தது.

1. டேர்பி, ஜோன், *சமாதானச் செயன்முறைகளை முகாமைத்துவம் செய்தல், இனத்துவ – சமூகங்களுக்கடையிலான முரண்பாட்டு ஆய்வுகள் தொடர்*, ஹம்ப்ஷெயர், ஐக்கிய அரசு, போல் கிரேவ், 2000.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாட்டின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலிருந்து ஆயுதம் தாங்கிய ஒரு பிரிவினைவாதச் சவாலை இலங்கை முதன்முதலில் எதிர்கொண்டு இப்பொழுது 25 வருடங்களுக்கும் மேல் கடந்துபோயுள்ளது. இந்த காலப் பிரிவு முழுவதிலும் எமது நலிவுற்ற ஜனநாயகம் பல சவால்களை எதிர்கொண்டிருந்தபோதிலும் அது அந்தத் தாக்கங்களை எதிர்த்து நின்று சமாளித்து வந்துள்ளது. மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக நடைமுறைகள் பெரும்பாலானவை துஷ்பிரயோகம் செய்யப்பட்ட போதிலும், இந்த நெருக்கடியை எதிர்கொள்ளும் பொருட்டு ஜனநாயகப் பாரம்பரியங்களை வீசியெறிவதற்கு எமது அரசியல் தலைவர்கள் ஒருபோதும் முயலவில்லை. அதேபோலக் கிளர்ச்சி இயக்கம் திட்டமிட்ட பயங்கரவாதம், அரசியல் கொலைகள் மற்றும் படுகொலைகள் போன்ற முறைகளைப் பயன்படுத்தி வந்ததுடன், அது சாதாரணப் பிரஜைகள் தொடர்பாக உரிமை மீறல்களை எடுத்து வந்தது.

இருதரப்புகளையும் பொறுத்தவரையில் இப்போர் மிகவும் பிரமாண்டமான அளவிலான ஒரு செலவை எடுத்து வந்துள்ளது. இலங்கை, முன்னர் ஆசியாவிலேயே மிகச் சிறந்த வாழ்க்கைத் தரக் குறிகாட்டிகளைக் கொண்டிருந்த நாடுகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. போரின் செலவை எண்ணிக்கையில் மட்டும் அளவிடுவதற்கு முயலுவது முட்டாள்தனமாகும். ஆனால் அது மிக முக்கியமான ஒரு கதையைக் கூறுகிறது. போரில் 60 ஆயிரம் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருப்பதுடன், ஆயிரக்கணக்கானோர் காணாமல்போயுள்ளனர். மேலும், 50 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர். கடந்த 10 வருட காலத்தின்போது மட்டும் ஆயுதக்கொள்முதலுக்கென 500 பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை செலவிடப்பட்டுள்ளது. சுமார் பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாகவும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். இதன் மூலம் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டிருக்கும் செலவு அளவிட முடியாததாக இருந்து வருவதுடன், 2001ஆம் ஆண்டின் முடிவின்போது நாடு வங்குரோத்து (திவால்) நிலையை அடைந்திருந்தது. இந்த பொருளாதாரச் சீர்குலைவு நிலையும் இராணுவ ரீதியிலான சில பின்னடைவுகளுமே ஆட்சியாளர்களைச் சமாதானப் பேச்சுவார்த்தைகளின்பால் உந்தித் தள்ளியிருந்தன.

## முரண்பாட்டின் அத்தியாவசியமான அளவிடல் கூறுகள் எவை?

இலங்கையின் நீண்டகால முரண்பாடும் அதனையடுத்துத் தோன்றிய ஆயுதப் போராட்டமும் எல்டிடிஈ இயக்கம் தோல்வியடையாத ஓர் இராணுவ அணி என்ற நிலைமையை உருவாக்கியிருந்தன. அது வடக்கில் பாரம்பரிய யுத்தம் ஒன்றை நடத்தியதுடன், கிழக்கில் ஒரு கெரில்லா



யுத்தத்தை முன்னெடுத்தது. அதேநேரத்தில், தென்னிலங்கையில் அது பயங்கரவாத யுத்தத்தை நடத்தியது. இவை அனைத்தும் இறுதியில் பல இராணுவரீதியிலான அழிவுகளுக்கு வழிகோலியிருந்தன. இராணுவத் துறையில் எல்டிடிஈ இயக்கம் சம அந்தஸ்தை எட்டியுள்ளது என்ற விடயமும் ஒரு சில பிரதேசங்களை அது தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக்கொண்டுள்ளது என்ற விடயமும் பேச்சுவார்த்தைச் செயன்முறைக்கு மிக முக்கியமான ஒரு பரிமாணத்தை வழங்குகின்றன.

இருதரப்புகளுக்கும் இடையிலான சம அந்தஸ்து ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு விதத்திலேயே 2002 பிப்ரவரி மாதத்தில் கையெழுத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டிருந்தது. எல்டிடிஈ இயக்கம் தன் வசம் பெருந்தொகையான ஆயுதங்களை வைத்திருப்பதுடன், ஒரு சில பிரதேசங்களையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளது. நாட்டின் மீது அழிவுகரமான தாக்கங்களை எடுத்து வரக்கூடிய சக்தி வாய்ந்த ஒரு இராணுவப் பொறிமுறையையும் ஒதுக்குகளையும் அது கொண்டுள்ளது. கெரில்லா இயக்கங்களின் உளவியல்ரீதியான மனப்பாங்கை நாங்கள் புரிந்துகொள்வதும் முக்கியமாகும். உள்ளக உள்நாட்டுப் போர்களில் சமச்சீர் தன்மைக்காகவே போர் நடத்தப்படுகின்றது. சமச்சீர் தன்மையில் பராமரித்து வருவது முதன்மை அக்கறையாக உள்ளதுடன், அது இராணுவச் சம அந்தஸ்திலேயே தங்கியிருந்து வருகின்றது. சிவராம்[2] தனது கட்டுரையில் எல்டிடிஈ சிந்தனையை நெறிப்படுத்தி வரும் அதிகாரச் சமநிலை தொடர்பான கோட்பாட்டை எடுத்து விளக்குகிறார்.

எல்டிடிஈ இயக்கம் தொடர்பான ஓர் அனுமானம் அது தெளிவான விதத்தில் தனியொரு தலைவரது ஆணையின் கீழ் இயங்கி வந்திருக்கும் ஓர் இராணுவ–அரசியல் இயக்கம் என்பதாகும். இத்தலைவர் இந்த இயக்கம் தொடர்பான முழுமையான அதிகாரத்தைத் தன்வசம் கொண்டுள்ளார். ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளின் ஒரு செயன்முறைக்கு ஊடாக எல்டிடிஈ இயக்கம் அதன் குணாம்சத்தை மாற்றிக்கொள்ளும் என்றும், தன்னை ஒரு ஜனநாயக அமைப்பாக நிலைமாற்றம் செய்துகொள்ளும் என்றும் அனுமானிக்கப்படுகின்றது. கெரில்லா இயக்கங்கள் ஜனநாயகத் தேசிய நீரோட்டத்தில் இணைந்துகொண்டிருக்கும் வேறு பல நாடுகளின் அனுபவங்களையே இந்த அனுமானம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. நிலைமாற்றக் கட்டம் ஒன்றின்போது எல்டிடிஈ இயக்கம் ஓர் இராணுவ–அரசியல் இயக்கம் என்ற நிலையிலிருந்து ஓர் அரசியல்–இராணுவ இயக்கமாக நிலைமாற்றம் காணும் என்ற அனுமானமே இலங்கை அரசாங்கம் மற்றும் சர்வதேசச் சமூகம் என்ப

2. *தர்மரத்னம் சிவராம், தமிழ்க் கண்ணோட்டம்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வற்றின் அக்கறைகளில் பொதிந்திருந்த முதன்மையான விடயமாக இருந்து வந்தது. போரிலிருந்து சமாதானத்துக்கும் போரினால் சலிப் படையும் நிலைக்கும் நிலைமாற்றம் காண்பதானது மனப்பாங்குகளின் மாற்றத்துக்கு அவசியமான நிலைமைகளை உருவாக்க முடியும் என அனுமானிக்கப்பட்டிருந்தது. கருணாவின் கிளர்ச்சியை இந்த நிலை மாற்றத்தை வெளிப்படுத்திக் காட்டிய ஒரு விடயமாக நோக்க முடியும். எல்டிடிஈ இயக்கம் அதன் இயல்பை மாற்றிக்கொள்ளுமா என்பதனை இனிமேல்தான் பார்க்க வேண்டும். எனினும், அதன் தலைவர் குறித்தும் அவருடைய தந்திரோபாயங்கள் மற்றும் அரசியல் உத்திகள் என்பன குறித்தும் சிறிதளவுக்கு மட்டுமே அறியப்பட்டுள்ளது. எல்டிடிஈ இயக்கத்தின் தற்போதைய நிலைப்பாடு அது வடக்கு, கிழக்கில் வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதியாக இருந்து வருகின்றது என்பதாகும். வடக்கையும் கிழக்கையும் பிரிக்க முடியாது என்ற நிலைப் பாடு கருணா அணியின் தோற்றத்தையடுத்து ஆட்டம் கண்டுள்ளது. கருணா அணி இலங்கையின் சமாதானச் செயன்முறையின் மீது பாரதூர மான பின்விளைவுகளை ஏற்படுத்தும் விதத்தில் எல்டிடிஈ இயக்கத் துக்குள் இருந்தே அதன் தலைமையின் மேலாதிக்கத்துக்கு சவால் விடுத்துள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட பின்னர் எல்டிடிஈ இயக்கம் வெளியிட்ட பல அறிக்கைகளில் உள்ள சுயநிர்ணய உரிமை நிலையைக் கவனத்தில் எடுப்பதற்குத் தான் தயாராக இருந்து வருவதாகக் கூறியுள்ளது. ஒஸ்லோவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது சமஷ்டித் தீர்வொன்றுக்கு தான் இணங்குவதாக அது அறிவித்திருந்தது. இந்த அறிவித்தல்கள் தந்திரோபாயங்களாக இருந்து வருகின்றனவா அல்லது இயக்கத்தின் திசைவழியில் ஏற்பட்டிருக்கும் உபாயரீதியான ஒரு மாற்றத்தைக் குறிக்கின்றனவா என்ற விடயம் இன்னமும் கேள்விக் குறியாகவே இருந்து வருகின்றது. எனினும், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரச் சபை யோசனையைச் சமர்ப்பித்ததன் பின்னர் இந்த நிலைப் பாட்டிலிருந்து அது விலகிக்கொள்ள விரும்பியது என்பதனையே உடனடியாக வெளியிடப்பட்ட அறிக்கைகளும் சான்றுகளும் காட்டு கின்றன. இலங்கை அரசாங்கத்துடனான முறையான பேச்சுவார்த்தை களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஓர் அடிப்படையாக இந்த யோசனையை அது முன்வைத்திருந்தது. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரச் சபை சமஷ்டி முறைக்கும் அப்பால் செல்வதாக உள்ளது.

ஓர் இராணுவ அரசியல் இயக்கம் என்ற நிலையிலிருந்து ஜனநாயக அரசியல் இயக்கம் என்ற நிலைக்கு நிலைமாற்றமடைவது என்பது மிகவும் சிக்கலான, சிரமமான ஒரு செயன்முறையாக உள்ளது. இந்த



இயக்கத்தினர் 25 வருடத்துக்கும் மேல் போராட்டத்தில் ஈடுபட்டு வந்திருப்பதுடன், காடுகளில் வசித்து வந்துள்ளனர். அந்த வாழ்க்கை அவர்களிடையே ஏற்படுத்தியிருக்கும் மனநிலையில் சிவில் அரசியல் ஒழுங்குமுறையொன்றுக்கு அனுசரித்துச் செல்வது என்பது கடினமான ஒரு காரியமாக இருந்து வரும். மேலும், சிவில் அமைப்பொன்றை நிர்வகிப்பதற்குப் புதிய திறன்களும், ஆற்றல்களும் தேவைப்படுகின்றன. ஒரு தலைமுறையைச் சேர்ந்த இளைஞர்கள் மிகச் சிறு வயதிலேயே தொடர்ந்தும் படையணிகளில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கும் ஒரே கல்வி போர் பயிற்சியாகும். பல்கலைக்கழகங்களுக்கோ உயர்கல்வி நிறுவனங்களுக்கோ செல்வ தற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால், புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் அறிவுஜீவிகள் மூலம் இந்த இடைவெளி நிரப்பப்பட்டுள்ளது.

மேலும், இந்தப் பின்னணியில் இலங்கை அரசாங்கமும் மிக முக்கிய மான ஒரு சவாலை எதிர்கொண்டுள்ளது. பெருமளவுக்கு மத்திய மயப்படுத்தப்பட்டிருக்கும் ஒற்றையாட்சி அரசொன்றைச் சமத்துவமான விதத்தில் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளக்கூடிய ஓர் அமைப்பாக நிலைமாற்றம் செய்யக்கூடிய ஆற்றலை அது கொண்டுள்ளதா என்பதும், அரசியல் யாப்பைத் திருத்துவதற்கு அதனால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற முடியுமா என்பதும் கேள்விக்குறிகளாக இருந்து வருகின்றன. கடந்த காலத்தில் இலங்கை அரசாங்கத்தினால் இதனைச் செய்ய முடியாதிருந்தது.

தமிழ்க் கட்சிகளுடன் எந்தளவுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வது என்ற விடயம் தொடர்பாகத் தென்னிலங்கை மக்கள் ஒருபோதும் ஒரு கருத்தொற்றுமையை எட்டியிருக்கவில்லை. இலங்கை உயரளவில் போட்டி இடம்பெற்று வரும் ஓர் அரசியல் முறையைக் கொண்டி ருப்பதுடன், அந்த முறைக்குள் தமிழ்த் தேசியப் பிரச்சினையை கருத் தொற்றுமையின் மூலம் தீர்த்துவைக்க முடியாதுள்ளது. மேலும், பெருமளவுக்கு மத்தியமயப்படுத்தப்பட்ட இலங்கையின் அரசு பயனுள்ள விதத்திலான அதிகாரப் பரவலாக்கல் குறித்த எந்தவொரு வடிவத் துக்கும் தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளது. நாட்டின் 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்புப் பெருமளவுக்கு மத்தியமயப் படுத்தப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறையைக் கொண்டிருப் பதுடன், இந்த யாப்பில் திருத்தங்களை எடுத்து வருவதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகள் தேவைப்படுகின்றன. ஜனாதிபதி, கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவராக இருந்து வருவ துடன் பாராளுமன்றத்தினால் தீர்த்துவைக்க முடியாத பிரச்சினைகளைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீர்த்துவைக்கக்கூடிய ஆற்றலைக் கொண்டவராகவும் இருந்து வரக் கூடிய நிறைவேற்று ஜனாதிபதி முறை உருவாக்கப்பட்டுள்ளது. எனினும், ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், பிரதமர் மற்றொரு கட்சியைச் சேர்ந்தவராகவும் இருந்து வரும் நிலையில் இது பிரச்சினைகளை உருவாக்க முடியும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, மக்களால் தெரிவுசெய்யப்பட்டிருப்பதுடன், பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான விசேட அதிகாரத்தையும் பிரதமர் மற்றும் அமைச்சரவையினர் ஆகியோரை நீக்குவதற்கான அதிகாரத்தையும் கொண்டுள்ளார்.

இந்த நிலையில் இப்பிரச்சினை மேலும் தீவிரமடைகின்றது. 2000ஆம் வருடத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி பிரதமரைத் தோற்கடித்தார் என்ற விடயத்தையும் இங்குக் குறிப்பிடுதல் வேண்டும். மறுபுறத்தில், பிரதமரின் தலைமையிலான ஐக்கியத் தேசிய முன்னணி சமாதான முன்னெடுப்புக்கான மக்கள் ஆதரவை அமோகமாகப் பெற்றுக்கொண்டதுடன், பெரும்பாலான மக்களின் ஆதரவையும் பெற்றுக்கொண்டிருந்தது. இந்தக் காலப் பிரிவின்போது ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான ஒருவகையான இரட்டை அதிகாரத்தை இலங்கை அனுபவித்தது. அது ஒத்துழைப்பு மற்றும் போட்டி என்பன நிலவிய ஒரு காலப் பிரிவாக இருந்தது. இந்த இரட்டை அதிகாரம் தொடர்பான விடயத்தை இத்தொகுப்புக்குக் கட்டுரைகளை வழங்கியிருக்கும் பலர் கவனத்தில் எடுத்துள்ளனர். உண்மையிலேயே இலங்கை அரசாங்கத்துக்கும் எல்டிடிஈ இயக்கத்துக்குமிடையில் நிலவி வந்த முரண்பாட்டைவிடப் பிரதமருக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான இந்த முரண்பாடு தீவிரமாக நிலவி வந்தது. இதுவரையில் எந்தவொரு அரசாங்கமும் இந்தப் போட்டி அரசியல் முறைகளின் வரையறைகளைத் தாண்டிச் செல்லக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை. விதிவிலக்காக ஜனாதிபதி ஜயவர்தன பாராளுமன்றத்தில் ஐந்தில் நான்கு பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் தனது சொந்த விருப்பின் அடிப்படையில் செயல்படக்கூடியவராக இருந்து வந்தார்.[3]

பல்வேறு காரணங்களினாலும் முஸ்லிம் சமூகம் அரசியல் செயன்முறையில் முக்கியமான ஒரு பாத்திரத்தை வகித்து வருகின்றது. அவர்களுடைய வாக்குகள் காரணமாக அரசியல் அதிகாரம் பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து ஐக்கியத் தேசிய முன்னணிக்குக் (யூஎன்எஃப்) கைமாறியது. முஸ்லிம் சமூகம் வடக்கு–கிழக்கு பிராந்தியத்தில் மிக முக்கியமான ஒரு சிறுபான்மைச் சமூகமாக இருந்து வருவதுடன், பேச்சுவார்த்தைச் செயன்முறையில் ஓர் அக்கறைக் குழுவாகவும்

3. அரசியல் யாப்புக்கான ஒரு திருத்தத்தின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றப் பெரும்பான்மையை மாற்றியமைத்துக்கொண்டதன் மூலம் ஐந்தில் நான்கு பெரும்பான்மை பெறப்பட்டது.



உள்ளது. ஆனால் அது பல்வேறு கூறுகளாகப் பிளவுபட்டிருக்கும் ஒரு சமூகமாக இருந்து வருவதுடன், உரிய விதத்தில் கையாளப்படாவிட்டால் அது சமாதானச் செயன்முறையின் மீது மிக மோசமான ஒரு தாக்கத்தை எடுத்து வர முடியும்.

இலங்கைக் குடிசனவியலின் மற்றொரு அம்சம் இங்கு நான்கு தனித்துவமான அடையாளங்கள் இருந்து வருவதாகும். தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் மற்றும் மலைநாட்டில் வாழ்ந்து வரும் தமிழ்ப்பேசும் மக்கள் ஆகியோரே இப்பிரிவினராவர். இந்தச் சமூகங்கள் ஒவ்வொன்றும் தனக்கே உரித்தான வரலாற்றையும், தனித்துவமான அடையாளத்தையும் கொண்டுள்ளது. பறங்கியர்கள் மற்றும் ஏனைய மதங்களைப் பின்பற்றும் சிறுபிரிவினர்கள் போன்ற அளவில் சிறிய வேறு சில சிறுபான்மைச் சமூகங்களும் இங்கு வாழ்ந்து வருகின்றன. நாட்டின் குடிசனவியல் மாதிரியின்படி வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்கள் வாழ்ந்து வந்தபோதிலும், நாட்டின் தென்பகுதியிலும் கணிசமான அளவிலான தமிழர்கள் உள்ளனர். கொழும்பிலும் மேல் மாகாணத்தின் அயல் பிரதேசங்களிலும் தமிழர்கள் கணிசமான எண்ணிக்கையில் வாழ்ந்து வருகின்றனர். மறுபுறத்தில், முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் மூன்றில் ஒரு பங்கினர் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலும் மூன்றில் இரு பங்கினர் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். மலைநாட்டுத் தமிழர்கள் பிரதானமாக மத்திய மாகாணங்களிலேயே செறிந்து காணப்படுகின்றனர். சிங்கள மக்களில் பெரும்பாலானவர்கள் தென்னிலங்கையில் வாழ்ந்து வருவதுடன், அவர்களில் சிறிய ஆனால் கணிசமான அளவிலான குடித்தொகையினர் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் வசித்து வருகின்றனர். பேச்சுவார்த்தைச் செயன்முறையின்போது அரசாங்கமும் எல்டிடிஈ இயக்கமும் எதிர்கொண்டுவரும் சவால், அனைத்து மக்களினதும் திட்டவட்டமான அபிலாஷைகளைக் கவனத்தில் எடுக்கக்கூடிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்குவது எப்படி என்பதாகும். அரசியல் யாப்புகளை உருவாக்குவது தொடர்பான முந்தைய முயற்சிகளின் அனுபவம் அது ஒருபோதும் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய ஒரு செயன்முறையாக இருந்து வரவில்லை என்பதையே காட்டுகின்றது. குறுங்கால அரசியல் நோக்கங்களின் அடிப்படையிலேயே அத்தகைய அரசியல் யாப்புகள் உருவாக்கப்பட்டிருந்தன.

## இலங்கையின் பன்முக முரண்பாடுகள்

இலங்கையில் நிலவிவரும் முரண்பாட்டின் இயல்பு தெளிவான விதத்தில் வரையறுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும். இந்த முரண்பாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரதானமாக இலங்கை அரசாங்கத்துக்கும் எல்டிடிஈ இயக்கத்துக்கும் இடையிலான ஒரு முரண்பாடாக இருந்து வருகின்றது என வரையறை செய்யப்பட்டிருந்த போதிலும், பன்முக முரண்பாடுகள் இங்கு நிலவி வருகின்றன என்ற விடயத்துக்கு அங்கீகாரம் அளிப்பது முக்கியமாகும். அம்முரண்பாடுகள் இனங்காணப்பட்டு, கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் இவை பேச்சுவார்த்தைச் செயன்முறையின் மீது ஒரு நிர்ணயகரமான தாக்கத்தை எடுத்து வர முடியும். இத்தகைய பன்முக இயல்பிலான முரண்பாடுகள் குறிப் பிட்ட ஓர் ஒழுங்கில் கவனத்தில் எடுக்கப்படாததாலேயே 2004ஆம் ஆண்டில் ஐக்கியத் தேசிய முன்னணி அரசாங்கம் கவிழ்ந்தது. இந்தத் தொகுப்பின் பல கட்டுரையாசிரியர்களினால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையில் நிலவிவந்த முரண் பாடு பேச்சுவார்த்தைச் செயன்முறை முழுவதிலும் ஒரு முதன்மையான பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. இந்த பன்முக முரண்பாடுகளைப் பின்வரும் விதத்தில் அடையாளம் கண்டுகொள்ள முடியும்:

- இலங்கை அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான முரண்பாடு;
- இலங்கை அரசாங்கம், மக்கள் விடுதலை முன்னணி (ஜேவிபி) மற்றும் ஹெல உருமய இயக்கத்திற்கும் இடையிலான முரண்பாடு;
- கிழக்குப் பிராந்தியத்தில் சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகியோருக்கிடையிலான முரண்பாடு.

## சமாதானச் செயன்முறையை மதிப்பிடுவதற்கான கருவிகள்

இத்தகைய ஒரு செயல்பாட்டின்போது அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு முக்கியமான கருதுகோள்ரீதியான கருவி செயன்முறையின் வடிவமைப்பாகும். அதாவது, சமாதானச் செயன்முறையின் விளைவாக பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்வு எட்டப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கும் கட்டுமான அமைப்பு உபகரணங்கள், முறைமைகள் மற்றும் கட்டுமானக் கற்கள் என்பனவாகும். முக்கியத் தரப்பினராலும் அனுசரணையாளர்களாலும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கும் அணுகுமுறைகள், முறைமையியல்கள் மற்றும் பகுப்பாய்வு என்பவற்றை நாம் பரிசீக்க முடியும். அதேபோல அக்கறைதாரர்கள் மற்றும் செயல்பாட்டாளர்களை இனங் கண்டு கொள்ளும் காலவரிசை ஒழுங்கையும் பன்முகப்பட்ட மட்டங்களிலான மத்தியஸ்த நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும் பரிசீலிக்க முடியும். நீண்டகாலமாக நிலைத்துவரும் முரண்பாடுகள், சமாளிக்க முடியாத தொடர்புபட்டிருக்கும் பெருந்தொகையான



### அட்டவணை 1: சமாதானச் செயன்முறையை மதிப்பிடுவதற்கான கருதுகோள்ரீதியான கருவிகள்

| உபாயரீதியான வடிவமைப்பு | பிரச்சினைகள் மற்றும் விழுமியங்கள் | தலைமைத்துவம் | பேச்சுவார்த்தை உத்தி | உள்கட்டமைப்பு மற்றும் கட்டுமானம் |
|---|---|---|---|---|
| கற்ற படிப் பினைகள் | அனுசரணை யாளர்கள் | நம்பிக்கை யைக் கட்டி எழுப்புதல் | பன்முக மத்திய ஸ்தங்கள் | சர்வதேசச் சமூகம் |
| தொடர்பாடல் | தடம் 1, 2, 3 | சிவில் சமூகம் | சமாதானத்தின் பயன் | மனிதாபி மானப் பயன் |
| சீர்குலைவு இயங்கியல் | கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | | | |

மூலங்களைக் கவனத்தில் எடுக்கும் பொருட்டு நீடித்துச்செல்லும், பல தரப்பட்ட மத்தியஸ்த முயற்சிகளை அவசியப்படுத்துகின்றன என்பதே எனது வாதமாகும்.

அட்டவணை 1 செயன்முறையின் கட்டமைப்பையும் பேச்சுவார்த்தை தொடர்பான ஏற்பாடுகள் எவ்வாறு நிர்வகிக்கப்பட்டு வருகின்றன என்பதனையும் நாம் பகுப்பாய்வு செய்ய முடியும். பின்னர் தடம் 2 செயன்முறை மற்றும் தடம் 3 செயன்முறை என்பன இந்த மட்டங் களுக்கிடையில் பிணைப்பு மற்றும் குறை நிரப்பு என்பவற்றுக்கு எவ்வாறு வழிகோலுகின்றன என்பதனையும் விசாரித்து அறிந்துகொள்ள முடியும். பயன்படுத்தப்பட வேண்டிய மற்றொரு அளவுகோல் தரப் பினருக்கு இடையிலும் பரந்த மட்டத்தில் ஏனைய அக்கறைதாரர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் ஆகியோருக்கு இடையிலும் தாக்கமான தொடர்பாடல் முறைகள் இருந்து வருகின்றனவா என்பதைக் கண்டறி வதாகும். இக்கட்டுரை அத்தகைய பல கருதுகோள்ரீதியான கருவி களையும் குறிப்பிட்ட ஒரு சமாதானச் செயன்முறையை அளவிட்டுக் கொள்ளக்கூடிய ஒரு பரீட்சிப்புப் பட்டியலையும் வழங்குகின்றது. அத்தகைய ஒரு மதிப்பீட்டில் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய அளவு கோல்களை நாம் பார்க்கலாம். இந்த அப்பியாசத்துக்கு எனப் பயன்படுத்தப்படவுள்ள ஒரு சில கருதுகோள்ரீதியான கருவிகளை அட்டவணை 1 வழங்குகிறது.

எந்த மட்டத்தில் என்ன செய்யப்பட வேண்டும் என்பதை நோக்கும் பொருட்டுக் கவனத்தில் எடுக்க வேண்டிய நிலைமை மற்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படைகள் குறித்த ஒரு பொது நோக்கை அட்டவணை 1 வழங்குகின்றது. இந்தப் பரீட்சிப்புப் பட்டியலின் முன்னுரிமை வரிசை மாற்றமடைய முடியும். ஆனால், இது சமாதானத்துக்கான பாதை வழிகாட்டியில் எமக்கு உதவுவதற்கான ஒரு விசாரணைக் கருவியாக மட்டுமே இருந்து வருகின்றது. அவை சமமான முக்கியத்துவத்தைக் கொண்டிராமல் இருக்கலாம். இந்தக் கட்டுரையின் எஞ்சிய பாகம் சித்தாந்தரீதியான கோட்பாடுகளை வைத்து மேற்கொள்ளப்படும் ஒரு அனுமானமாக இருந்து வருவதுடன், இலங்கையின் சமாதானச் செயன்முறையில் அது எவ்வாறு வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது என்பதை காட்டுகிறது. இங்கு மீளாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் காலப் பிரிவு பிரதமருக்கும் எல்டிடிஈ இயக்கத்துக்குமிடையில் நோர்வே அனுசரணையுடன் ஓரளவுக்கு வெற்றிகரமான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வந்த காலப் பிரிவாகும்.

1. **உபாயரீதியான வடிவமைப்பு** என்பது ஒரு நிலைமாற்ற இயல்பிலான செயன்முறையை வடிவமைக்கும்பொழுது கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய கட்டுமான அமைப்பு மற்றும் தேவையான அடிப்படைகளை அளவிடும் ஓர் கருவியாகும். பேச்சுவார்த்தைக்கான ஒரு முடிவு எடுக்கப்படும்பொழுது முரண்பாடு தொடர்பான கணிசமான அளவு அறிவு பெறப்பட்டுள்ளது என்பதையும் முரண்பாடு தொடர்பாக விவரங்களை விளக்கும் அப்பியாசம் (பயிற்சி) மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் இது அனுமானிக்கின்றது. முரண்பாடு தொடர்பாக விளக்கமளித்தல் என்பதன் பொருள் எந்தவொரு முரண்பாட்டினதும் வரலாறு, செயல்பாட்டாளர்கள், அபாய ஏதுக்கள் *(ரிஸ்க்ஸ்)* மற்றும் வாய்ப்புகள் என்பவற்றைப் பட்டியலிடுவதாகும். இதற்குப் பிரச்சினைகளை வரிசைப்படுத்துவதிலும் அனைத்துக் கட்டுமானங்களும் உண்மையில் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் கணிசமான அளவிலான அறிவும் அனுபவமும் தேவை. எனவே, ஒரு வெற்றிகரமான செயன்முறை வடிவமைப்புக்குத் தேவைப்படும் அணியினர் அந்த வடிவமைப்பின் ஒரு தரப்பினராக இருந்து வந்தால் மட்டும் போதாது மாறாக, அவர்கள் கள நிலைமைகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கு ஏற்ற விதத்தில் அந்த வடிவமைப்பை இடையறாது கண்காணித்து, மதிப்பிட்டு மாற்றியமைத்து வரவேண்டும். சர்வதேச அனுபவங்களில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அத்தகைய செயன்முறை வடிவமைப்புப் பணி குறைந்த அளவிலேயே இடம் பெறுகின்றது. அதன் விளைவாகச் சம்பவங்கள் தோன்றும் பொழுது அவற்றுக்கு அவ்வப்போதைய எதிர்வினைகள் காட்டப்படுகின்றன. அத்தகைய உபாயரீதியான ஒரு வடிவமைப்பை அபிவிருத்தி



செய்வதில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் எந்த அளவுக்கு வெற்றியீட்டியிருந்தது? அந்த அரசாங்கத்தின் முயற்சிகள் துணிச்சலானவையாகவும் அதேவேளையில் ஆபத்தானவையாகவும் இருந்து வந்தன. தான் எதிர்கொண்டிருந்த பல இடையூறுகளுக்கு மத்தியிலும் ஒரு போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் முன் முயற்சியைப் பிரதமர் எடுத்திருந்தார். அந்தவகையில் அது ஒரு துணிச்சலான செயலாகும்.

மறுபுறத்தில், அபரிமிதமான நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருந்த எதிர் தரப்பைச் சேர்ந்த ஒரு ஜனாதிபதியுடன் பிரதமர் செயல்பட வேண்டியிருந்தது. அரசாங்கத்தைப் பதவிநீக்கம் செய்யும் அதிகாரத்தையும் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தையும் ஜனாதிபதி கொண்டிருந்தார். அந்தவகையில் பிரதமரின் முயற்சி அபாயகரமானதாக இருந்து வந்தது எனக் கூற முடியும். சமாதானத்தைச் சாதித்துக்கொள்ளும் பொருட்டு எத்தகைய செயல்பாடுகள் தேவைப்படுகின்றனவோ அவற்றை முன்னெடுப்பதற்கான குறிக்கோளையும் திடசங்கற்பத்தையும் பிரதமர் கொண்டிருந்தார் எனப் பிரட்மன் வீரக்கூன் உறுதியாக வாதிடுகிறார். பிரதமரின் அணுகுமுறை உள்நாட்டு மற்றும் சர்வதேசத் தாக்கங்களை கவனத்தில் எடுக்கும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட படிப்படியான ஓர் அணுகுமுறையாக இருந்து வந்தது என அவர் குறிப்பிடுகிறார்.

ஓர் உபாயரீதியான வடிவமைப்பை உருவாக்கிக்கொள்ளும் பொருட்டுப் பின்வரும் அடிப்படைக் கூறுகள் பயன்படுத்தப்பட்டன:

அ. சமாதானச் செயன்முறைக்கு அனுசரணை வழங்குமாறு நோர்வே அரசுக்கு அழைப்பு விடுத்தமை.

ஆ. நிலைத்து நிற்கக்கூடிய போர்நிறுத்தம் ஒன்றுக்கான அளவுகோல்களை எடுத்து விளக்கும் முரண்பாட்டுத் தரப்புகளின் இரு தலைவர்களாலும் கையெழுத்திடப்பட்ட எழுத்து மூலமான ஓர் ஒப்பந்தம்.

இ. ஒரு பேச்சுவார்த்தைச் செயன்முறையின் சிக்கலான தேவைகளைக் கையாளக்கூடிய சமாதானச் செயலகமொன்றை தாபித்தல் (நிறுவுதல்).

ஈ. வடக்கு, கிழக்கு மற்றும் எல்லைப்புறக் கிராமங்கள் என்பவற்றுக்கான நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய சமாதானத்தின் அனுகூலங்களை ஒருங்கிணைப்பதற்கெனத் தாக்கமான ஒரு நிறுவனத்தை தாபித்தல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உ. இலங்கையின் மீது ஓரளவுக்கு அக்கறைகாட்டி வரும் உலகின் முன்னணி நாடுகளைக் கொண்ட 'சர்வதேசப் பாதுகாப்பு வலை' ஒன்றை நிறுவுதல் – தேசியப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை யின் மூலமான ஓர் அரசியல் தீர்வு என்ற பொதுக் குறிக்கோளைச் சாதித்துக்கொள்வதற்குத் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் உத்தர வாதம் அளிப்பதற்கும், அதற்கெனத் தலையீடுகளை மேற் கொள்வதற்கும் இந்தப் பாதுகாப்பு வலை தேவைப்பட்டது.

ஊ. முந்தைய அரசாங்கத்திடமிருந்து நாடு பெற்றுக்கொண்டிருந்த பொருளாதார வங்குரோத்து (திவால்) நிலையிலிருந்து அதனை மீட்டெடுக்கும் நோக்கில் உறுதியான ஒரு பொருளாதாரக் கொள்கை.

எ. பேச்சுவார்த்தைச் செயன்முறைக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளும் பொருட்டு இரு மூத்த அமைச்சர்களை நியமனம் செய்தல்.

இங்கு வேறு எவற்றையும் மிஞ்சிய விதத்தில் வெளித் தெரியும் மிக முக்கியமான காரணி பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வைக் கண்டறியும் பொருட்டு இருதரப்பினரும் கொண்டிருந்த அரசியல் கடப்பாடாகும், இருதரப்புகளும் மனத்தைப் புண்படுத்தும் ஒரு ஸ்தம்பித நிலையை அடைந்திருந்தன என ஒரு சில கோட்பாட் டாளர்கள் கூற முடியும். பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வது தொடர்பான அரசியல் விருப்பை இருதரப்புகளும் கொண்டிருப்பதை தெளிவாகக் காண முடிந்தது. அந்த நிலையில் அரசியல் கடப்பாடு என்பது உண்மையிலேயே காலத்தின் தேவையாக இருந்து வந்ததுடன், போர்ச் சூழலிலிருந்து வெளியில் வருவதற்கு இருதரப்புகளும் ஒன்றின் மீது ஒன்று தங்கியிருந்து வந்தன. எனினும், 2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மையைக் கொண்டிருக்கவில்லை. உண்மையிலே அது ஒரு சிறு பெரும் பான்மையைக் கொண்டிருந்ததுடன், எந்நேரமும் பிரதமரைப் பதவி நீக்கம் செய்து பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான பேரளவிலான அதிகாரங்களைத் தன் வசம் வைத்துக்கொண்டிருந்த ஜனாதிபதியின் தயவிலேயே தங்கியிருந்தது. எனவே, இரட்டை அதிகாரம் மற்றும் போட்டி அரசியல் என்பவற்றின் இடையூறுகளுக்கு மத்தியிலேயே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இயங்கி வந்தது. இச்செயன் முறையில் ஜனாதிபதியைச் சம்பந்தப்படுத்திக்கொள்வதற்கான ஓர் உத்தியையோ திட்டத்தையோ அந்த அரசாங்கம் கொண்டிருக்க வில்லை என்பதை இப்பொழுது மீளப் பார்க்கும் பொழுது



தெளிவாகக் காண முடிகின்றது. விவாதம் உயர்மட்டத்தில் இருந்து வந்தன என்றும் ஜி.எல். பீரிஸ் மற்றும் பாதுகாப்புச் செயலாளரான ஆஸ்டின் பெர்னாண்டோ, அது ஒரு விஷக் கிணறாக இருந்து வந்தது என்றும் ஒரு சிலர் வாதிட்டுள்ளனர்.

2. **ஒரு சமாதானச் செயன்முறையை நிர்ணயிக்கும் பிரச்சினைகள் மற்றும் விழுமியங்கள் என்பவற்றை இனங்காணுதல்.** பேச்சு வார்த்தைகளை நிர்ணயிக்கும் விழுமியங்கள் தெளிவான விதத்தில் கண்டறிந்து கொள்ளப்படுதல் வேண்டும். பேச்சுவார்த்தைகள் நலன்களை அடிப்படையாகக் கொண்டவையாக அல்லது தத்தமது நிலைப்பாடு களிலிருந்து பேரம் பேசும் அடிப்படையைக் கொண்டவையாக இருந்து வருகின்றனவா? சம்பந்தப்பட்ட முரண்பாடு ஓர் அரசியல் செயன்முறையை முகாமைத்துவம் செய்யும் ஓர் அப்பியாசமாக இருந்து வருகின்றதா? அல்லது நிலைமாற்றச் செயன்முறை ஒன்றை முகாமைத்துவம் செய்யும் ஓர் அப்பியாசமாக இருந்து வருகின்றதா? ஒரு நாட்டின் அரசாங்கம் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் முரண் பாட்டுத் தீர்வை ஒரு முகாமைத்துவ அப்பியாசமாக நோக்குகின்றது. அதேவேளையில், ஒரு கிளர்ச்சி இயக்கம் ஒரு முரண்பாட்டை அதிகார உறவுகளின் ஒரு நிலைமாற்றமாக நோக்கி வருகின்றது. இந்த எண்ணக் கருக்களுக்கிடையிலான பிளவே பிரச்சினையின் மையமாக உள்ளது. ஒரு வெற்றிகரமான பேச்சுவார்த்தைச் செயன் முறையைப் பொறுத்தவரையில் அப்பேச்சுவார்த்தையின் இறுதிக் குறிக்கோள்கள், செயன்முறை மற்றும் இறுதித் தீர்வை நிர்வகிக்கும் விழுமியங்கள் என்பன தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன. வட அயர்லாந்தின் பெரிய வெள்ளிக்கிழமை (புனிதவெள்ளி) ஒப்பந்தம் இதற்கான ஓர் உதாரணமாகும். அந்த ஒப்பந்தத்தில் இந்த விடயங்கள் அனைத்தும் தெளிவாக எடுத்து விளக்கப்பட்டிருந்தன. அத்தகைய ஒரு கட்டமைப்புக்கு இணங்கத் தவறுதல் வெற்றிக் கம்பம் தொடர்ந்தும் மாற்றமடைந்து இந்தச் செயன்முறையைக் குறிக்கோளற்றதாக்கும் ஒரு நிலைமையை எடுத்து வருகின்றது.

இச்செயன்முறையின் பிரதானப் பிரச்சினைகள் மற்றும் அதனைச் சூழவுள்ள விழுமியங்கள் என்பவற்றை இனங்கண்டுகொள்வதற்கு கணிசமான அளவிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருப் பதைக் காண முடிகிறது. எனினும், இன்னமும் இருதரப்புகளினதும் விழுமியச் சட்டகங்கள் மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றில் பாரதூரமான இடைவெளிகள் உள்ளன. ஒருபுறத்தில், சமாதானம் பொருளாதாரத்தை நிலைநிறுத்திக்கொள்வதற்கான ஓர் அடிப்படை யாக இருந்து வர வேண்டும் என்ற நோக்கத்துடன் இலங்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை அணுகி வருகின்றது. எனவே, அரசாங்கத்தின் சிந்தனையில் பொருளாதார விடயங்களே பெருமளவுக்கு ஆதிக்கம் செலுத்துகின்றன. மறுபுறத்தில், எல்டிடிஈ இயக்கம் சகஜ நிலையை மீண்டும் எடுத்து வருவதிலும் சுமார் பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் புனர் வாழ்வு என்பவற்றை வழங்குவதிலேயே கரிசனை கொண்டிருந்தது. நிலைமை அநேகமாக இந்த விதத்திலேயே இருந்து வருகின்றது. இறுதித் தீர்வுகள் ஒருபோதும் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கவில்லை. எல்டிடிஈ இயக்கத்தைப் பொறுத்தவரையில் தனி நாடு என்ற குறிக்கோளே அதன் இறுதிக் குறிக்கோளாக உள்ளது. இலங்கை அரசாங்கம் சமஷ்டித் தீர்வொன்றுக்கான நிலைப்பாட்டில் நின்றது. இலங்கையின் விடயத்தில் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் முகவுரையில் தவிர அத்தகைய ஒரு கட்டமைப்பு ஒப்பந்தம் இருந்து வரவில்லை. இறுதித் தீர்வு தொடர்பாக ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது என்பதற்கு முதல் அடையாளம் ஒஸ்லோ பேச்சுவார்த்தைகளின்போது வெளியிடப்பட்ட அறிக்கைகளாகும். இங்கு இருதரப்புகளும் சமஷ்டித் தீர்வை ஆராய்ந்து பார்ப்பதற்கு இணக்கம் தெரிவித்திருந்தன. எனினும், அதன் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் எல்டிடிஈ இயக்கம் உள்ளக சுயாட்சி அதிகார சபை ஒன்று குறித்துப் பேசியபொழுது சமஷ்டித் தீர்வொன்றைக் கண்டறிவது தொடர்பான இந்த நோக்கம் திருத்தியமைக்கப்பட்டது. இந்த சுயாட்சி அதிகாரசபை ஒரு கூட்டமைப்பு மாதிரியைப் பெருமளவுக்கு ஒத்ததாக இருந்து வருகின்றது. இலங்கையின் பேச்சுவார்த்தைச் செயன்முறையில் செயன்முறையை நிர்வகிக்கும் ஒரு விழுமியச் சட்டகங்கள் மேலும் இச்செயன்முறை எம்மை எங்கு இட்டுச் செல்லும் என்பதை எடுத்துக்காட்டும் ஒரு பாதை வழிகாட்டி என்பன அறவே இருந்து வரவில்லை.

3. ***தலைமைத்துவப் பாத்திரங்களின் முக்கியத்துவம்.*** எந்தவொரு முரண்பாட்டு இயங்கியலிலும் சம்பந்தப்பட்ட தரப்பினரால் வழங்கப்பட்டுவரும் தலைமைத்துவத்தின் இயல்பு மற்றும் மனோதிடம் என்பன முரண்பாட்டு நிலைமாற்றச் செயன்முறைக்கு அத்தியாவசியமானவையாகும். தலைவர்கள் புதுப் போக்குக்கு எதிராக செல்லக் கூடியவர்களாகவும் பொறுமைகாப்பவர்களாகவும் உரிய தருணம்வரையில் காத்திருப்பவர்களாகவும் இருந்து வருதல் வேண்டும். அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கக்கூடிய ஆற்றலும் வடிவமைப்பு மற்றும் செயன்முறை என்பவற்றின் தரத்தின் மீது கவனம் செலுத்தக் கூடிய ஆற்றலும் தலைமைத்துவத்துக்கு இருக்க வேண்டும். எனினும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தைகளில் உயர் மட்டத் தலைவர்களே அதிக எண்ணிக்கையில் கலந்துகொள்கின்றனர். இந்த நிலையில் தகவல்கள் மிக அரிதாகவே பகிர்ந்துகொள்ளப்படுகின்றன ஒரு சிறு குழு மற்றவர்கள் அனைவரையும் வெளியில் நிறுத்துகின்றது.



மேலும், நாங்கள் கவனத்தில் எடுக்கவேண்டிய தலைமைத்துவத்தின் ஏனைய சில அம்சங்களும் உள்ளன. ஜனநாயக அமைப்புகளில் அவ்வப்போது இடம்பெற்றுவரும் தேர்தல்கள் மற்றும் பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டிய நிலை என்பவற்றின் அடிப்படையில் தலைமைத்துவம் நிர்ணயிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் ஆயுதம் தரித்திருக்கும் இயக்கங்கள் பொறுப்புக் கூற வேண்டிய நிலையில் இருந்து வரவில்லை. மேலும், அத்தகைய இயக்கங்களின் தலைவர்கள் நீண்டகாலம் மறைமுகமாக இயங்கி வந்திருப்பதன் காரணமாக ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்வதற்கு தயக்கம் காட்டுகின்றனர். தம்முடைய பாதுகாப்பு மற்றும் உயிர் என்பன தொடர்பாக அவர்கள் எப்பொழுதும் பீதி உணர்வுகளைக் கொண்டுள்ளனர். தலைமைத்துவம் தொடர்பான பகுப்பாய்வுகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றன: அனைத்தும் அல்லது ஒன்றும் இல்லை என்ற அணுகுமுறை, பயப்பிராந்தி மனப்பாங்குகள் மற்றும் தொடர்ச்சியான போராட்டம் குறித்த பயத்தைக் காட்டிலும் தீர்வு குறித்த பயம் தீவிரமானதாகக் காணப்படுதல். இந்த மாறிகளும் கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும்.

பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்வின் வெற்றிக்குத் தலைமைத்துவத்தின் பண்புகள் அத்தியாவசியமானவையாகும். சமாதானச் செயன்முறை தொடர்பாகப் பிரதமர் செலுத்தி வரும் கவனம் மற்றும் அது தொடர்பாகச் செலவிட்டுவரும் நேரம் என்பன விசேட முக்கியத்துவம் பெறுகின்றன. பிரட்மன் வீரக்கூன் அவர்களின் கட்டுரையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு, 'ரணில் விக்கிரமசிங்க மிகப்பெரிய நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியைப் போல சமாதானச் செயன்முறையை முகாமைத்துவம் செய்வது தொடர்பாகக் கவனம் செலுத்தி வருகின்றார். நோக்கு தெளிவானதாக உள்ளது; ஓர் உபாயரீதியான திட்டம் இருந்தது. பேசித் தீர்க்க வேண்டிய மைல்கற்களைக் கொண்ட ஒரு பாதை வழிகாட்டி இருந்தது; அந்தத் திட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டியிருந்த நிறுவனக் கட்டமைப்பின் ஆற்றலை உருவாக்குவதற்கான தேவையையும் அப்பாதை வழிகாட்டி கொண்டிருந்தது.'

பேச்சுவார்த்தைச் செயன்முறையின் வெற்றி முதன்மைத் தேவையாக இருந்து வருகின்றது என்பதனை உணர்ந்திருந்தமையால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரதமர் சமாதானச் செயன்முறைக்கு தனது அதியுயர் முன்னுரிமையை வழங்கியிருந்தார். போர்நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஓர் ஒப்பந்தத்தைச் சாதித்துக்கொள்வதற்கான அவருடைய முன்முயற்சியின் துணிச்சல் அரசியல் மதிநுட்பம் மற்றும் மனோதிடம் என்பவற்றின் ஒரு சிகரமாக இருந்து வந்தது என்பதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை. எனினும், அவர் நாட்டின் இறைமையை தாரைவார்த்துக் கொடுத்திருப்பதாகக் கூறி அவருடைய எதிரிகள் அவரைத் தீவிரமாக விமர்சித்தார்கள். மேலும், அவர் தேர்தல்களில் வெற்றியீட்டத் தவறியுள்ளார் என்றும் வசீகரம் குறைந்த ஒரு முகாமையாளராக *(மேனேஜராக)* மட்டுமே அவர் இருந்து வருகின்றார் என்றும் அவர்கள் கூறினார்கள். எனினும், அவருடைய முகாமைத்துவத் திறன்கள் மற்றும் தனது குறிக்கோளைச் சாதித்துக் கொள்வதற்கான முழுமூச்சுடனான ஈடுபாடு என்பது குறித்து எவரும் சந்தேகப்பட முடியாது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமைத்துவப் பண்புகளும் இங்குக் குறிப்பிடப்பட வேண்டும். அவருடைய தலைமைத்துவப் பாணி பிரதமரின் பாணியிலிருந்து வேறுபட்டதாகும். முகாமைத்துவத் திறன்கள் குறைவாக இருந்துவந்தபோதிலும், முன்முயற்சிகளை மேற்கொள்ளும் துணிச்சல் அவருக்கு இருந்தது. ஆனால் அவற்றை நிலையாக தக்கவைத்துக் கொள்ளும் ஆற்றலை அவர் கொண்டிருக்கவில்லை. 1994 ஜனாதிபதி தேர்தலில் அவர் அமோக வெற்றியீட்டியதுடன், இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வை எடுத்து வருவதற்கான மக்கள் ஆணையையும் பெற்றுக்கொண்டார். நாடு முழுவதும் அது தொடர்பாகப் பாரிய எதிர்பார்ப்புகள் நிலவி வந்தன. ஆனால், அவர் தொடக்கிவைத்த பேச்சுவார்த்தைகள் ஆறு மாதங்களுக்கு மேல் நீடிக்கவில்லை. எல்டிடிஈ இயக்கம் பேச்சுவார்த்தைச் செயன்முறையிலிருந்து வெளியேறியது. இந்த நூலின் முதல் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ள பெரும்பாலான கட்டுரைகள் சந்திரிகா குமாரதுங்கவினால் தொடக்கிவைக்கப்பட்ட செயன்முறையின் தொழில்முறையற்ற மற்றும் அவ்வப்போதைக்கான இயல்பையும், அத்தகைய சிக்கலான ஒரு பிரச்சினையைக் கையாள்வதில் அவர் காட்டிய குறிப்பிடத்தக்க அளவிலான பக்குவமின்மையையும் எடுத்து விளக்குகின்றன.

பேச்சுவார்த்தைச் செயன்முறை முறிவடைந்ததை அடுத்து, எல்டிடிஈ இயக்கத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கத்தைக் கொண்ட சமாதான உபாயம் ஒன்றுக்கான போர் நடத்தப்பட்டது. எனினும், போர்க்களத்தில் இலங்கைப் படையணியினர் கணிசமான அளவிலான இராணுவத் தோல்விகளை எதிர்கொண்டது. ஆனால் இது எல்டிடிஈ



இயக்கத்தின் ஆற்றலை மேலும் உயர்த்தியது. ஆரம்பத்திலிருந்தே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் சமாதானச் செயன்முறை குறித்து அவர் ஒரு பழிவாங்கும் மனப் பாங்கையே கொண்டிருந்தார். பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான வாய்ப்புக்காகவும் அவர் காத்திருந்தார். போர்நிறுத்த ஒப்பந்தத்தை விமர்சித்ததுடன், சாத்தியமான சந்தர்ப்பங்களிலெல்லாம் அதன் அமலாக்கலுக்கு அவர் குந்தகம் விளைவித்து வந்தார். ஆனால், பிற்பாடு போர்நிறுத்த ஒப்பந்தம் குறிப்பிடத்தக்க அளவிலான ஒரு வெற்றியாக இருந்து வந்தது என்ற விடயத்தை அவர் பகிரங்கமாகவே ஏற்றுக்கொள்ள நேரிட்டது. ஆனால், அப்பொழுது காலம் கடந்திருந்தது.

எல்டிடிஈ இயக்கத்தின் தலைவரான பிரபாகரன் குறித்து நாங்கள் சிறிதளவே அறிந்துள்ளோம். அவர் எப்போதாவது வெளியில் தோன்றும் ஓரிரு சந்தர்ப்பங்கள் தவிர அவருடைய சிந்தனை குறித்து எமக்கு உண்மையில் எதுவும் தெரியாது. அவருடைய பிரதிநிதியான அன்டன் பாலசிங்கம் அனைத்துப் பேச்சுவார்த்தைகளிலும் கலந்து கொண்டிருப்பதுடன், கடந்த காலத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து அபாரமான அறிவைக் கொண்டுள்ளார். தனது இராணுவ மற்றும் அமைப்புரீதியான ஆற்றல்கள் தொடர்பாகவும் தனது தளபதிகளுக்கு அதிகாரம் வழங்கும் ஆற்றல் தொடர்பாகவும் தனது குறிக்கோள்களைச் சாதித்துக்கொள்வதற்கான திடசித்தம் தொடர்பாகவும் நன்கு அறியப்பட்டிருக்கும் ஓர் உத்தியியலாளராகவே எல்டிடிஈ இயக்கத்தின் தலைவரை எம்மால் சுருக்கமாக எடுத்து விளக்க முடியும். அவர் எப்பொழுதும் நழுவிச் செல்பவராகவும் புதிர்த்தன்மை கொண்டவராகவும் இருந்து வருவதனால் அவருடைய வாழ்க்கை குறித்துச் சிறிதளவுக்கு மட்டுமே அறியப்பட்டுள்ளது. வீரம் செறிந்த தன்னுடைய இரண்டாம் தளபதியான கருணா நிகழ்த்திய புரட்சியை அடுத்துப் பிரபாகரன் கடும் அதிர்ச்சிக்குள்ளானார். கருணா, பிரபாகரனின் தலைமைத்துவத்துக்குச் சவால் விடுத்ததுடன், இப்பொழுது தீவிரம் குறைந்த ஒரு போரில் ஈடுபட்டுள்ளார். கருணாவின் பிளவு தென்னிலங்கைச் சக்திகளாலும் இராணுவத்தாலும் அவருக்குக் கிடைத்திருக்கும் ஒரு விலைமதிப்பற்ற சொத்து என நோக்கப்பட்டது.

4. **பேச்சுவார்த்தை உத்தி.** பேச்சுவார்த்தைச் செயன்முறைக்கென பின்பற்றப்பட்ட உத்தி நாம் நிகழ்வுகளின் வரிசைப்படுத்தல் மற்றும் கால அட்டவணை என்பன கவனத்தில் எடுக்க வேண்டியிருக்கும் மிக முக்கியமான கூறுகளாக இருந்து வருகின்றன. மனக்குறைகளைப் பகிரங்கமாக எடுத்துக் கூறுவதற்கான ஒரு மேடையாகப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேச்சுவார்த்தைகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. மேலும், சம்பந்தப்பட்ட தரப்பினரின் உச்ச மட்டக் கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கான ஒரு வாய்ப்பாகவும் அது பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொருவரும் தத்தமது நிலைப் பாடுகளிலிருந்து பேரம் பேசுவதானது ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காத ஓர் இறுக்கமான நிலையைத் தோற்றுவிப்பதுடன், அந்த நிலையில் ஒருவர் மற்றவரிடம் கோரிக்கைகளின் நீண்ட பட்டியல்களை முன்வைக்கின்றார். மறுபுறத்தில், பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வது என்பது சம்பந்தப்பட்ட தரப்பினர் பரஸ்பரம் ஒவ்வொருவரினதும் பிரச்சினையைப் புரிந்துகொண்டு அதைத் தீர்த்து வைப்பதற்கான ஒரு கூட்டு முயற்சியாக அப்பேச்சுவார்த்தை களை நோக்குவதாகும். இங்குக் கவனத்தில் எடுக்கப்படவேண்டிய பல தொழில்நுட்ப விடயங்கள் உள்ளன. உதாரணமாக இடம், நிகழ்ச்சி நிரல், கூட்டத்தின் குறிப்புகள் போன்ற அனைத்து விடயங் களும் கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும்.

ஆரம்பத்தில் அடிப்படைப் பிரச்சினைகள் கவனத்தில் எடுக்கப் படமாட்டா என்ற ஒரு தெளிவான புரிந்துணர்வை இருதரப்பினரும் எட்டியிருந்தனர். இதனை அவர்கள் ஜனாதிபதி குமாரதுங்கவால் நடத்தப்பட்ட முந்தைய பேச்சுவார்த்தைகளிலிருந்து கற்றுக் கொண்டிருந்தனர். அப்பொழுது அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்புதல் என்பன ஒரே நேரத்தில் கையாளப்பட வேண்டியிருந்தன. பெரும் அவதிக்குள்ளாகியிருந்த குடிமக்களின் 'வாழ்வாதாரத்' தேவைகளுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வழிமுறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என எல்டிடிஈ இயக்கம் விரும்பியது. உருவாக்கப்பட்ட செயன்முறையும் நிகழ்வுகளின் காலவரிசையும் மிகச் சிறந்த விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன என்ற விடயம் தெரிய வந்தது. இங்குச் சம்பந்தப்பட்ட தரப்பினர் நிலைப்பாடுகளில் நின்று பேரம் பேசும் நிலையிலிருந்து பிரச்சினை களைத் தீர்த்துக்கொள்ளும் நிலைக்கு நகர்ந்து சென்றிருந்தனர். மேலும், நிகழ்வுகளின் காலவரிசைப்படி நம்பிக்கையைக் கட்டி யெழுப்பும் வழிமுறைகள் முதலில் கவனத்தில் எடுக்கப்பட்டதுடன், பேச்சுவார்த்தைச் செயன்முறையின் இறுதியிலேயே அடிப்படைப் பிரச்சினைகள் கவனத்தில் எடுக்கப்பட்டன. இந்த அணுகுமுறை பாரிய அளவிலான அனுகூலங்களை எடுத்து வந்தது. நம்பிக்கை யைக் கட்டியெழுப்பும் வழிமுறைகள் சமாதானச் செயன்முறைக்கு அமோக ஆதரவை வழங்கியிருந்தன.



உயர்மட்டத்திலான பேச்சுவார்த்தைச் செயன்முறைப் பிரச்சினை களைத் தீர்த்துவைக்கும் அணுகுமுறைகளைக் கொண்டிருந்தது. இங்கு இருதரப்பினரும் நிகழ்ச்சி நிரல் தொடர்பாகத் தெளிவான உடன்பாடுகளை எட்டியிருந்ததுடன், இக்கூட்டங்களுக்குத் தலைமை வகித்த நோர்வே தரப்பினரால் கலந்துரையாடல்களுக்கு அனுசரணை வழங்கப்பட்டது. கூட்டங்களுக்கு இடையில் பெருமளவிலான தயார்ப்படுத்தும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுபோல் தெரிகிறது. துரதிர்ஷ்டவசமாக நியமனம் செய்யப்பட்டிருந்த மூன்று கமிட்டிகளின் கூட்டங்களில் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் அணுகுமுறை பிரதிபலிக்கவில்லை. உதாரணமாக, தீவிரத்தைக் குறைத்தல் மற்றும் சகஜ நிலைப்படுத்துதல் தொடர்பான குழு அதி உயர் பாதுகாப்பு வலயங்களைக் கையாள்வது தொடர்பாகக் காட்டிய தடுமாற்ற நிலை தத்தமது நிலைகளிலிருந்து பேரம் பேசுவது தொடர் பான மிக முக்கிய விடயமாக இருந்து வந்தது. இறுதியில் இந்த முக்கியமான குழு கலைக்கப்படுவதற்கு வழிகோலியது.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களின் உடனடி மனிதநேயப் புனர் வாழ்வளிப்புத் தேவைகள் குறித்த உபகுழு இறுதியில் செயலிழந்தது. இக்குழு பல தடவைகள் கூடிப் பெருந்தொகையான யோசனைகளை முன்வைத்திருந்தது. எனினும், நிர்வாகரீதியான தாமதங்கள் மற்றும் நிதிப் பற்றாக்குறை போன்றவற்றின் காரணமாக இந்த முக்கியமான கமிட்டியினால் தொடர்ந்து இயங்க முடியவில்லை. இக்குழுவின் ஒட்டுமொத்தக் கட்டமைப்பும் குறைபாடுகளைக் கொண்டதாக இருந்து வந்தது. குழுக்களின் செயல்பாடு தொடர்பாக எவரும் பெருமளவுக்குச் சிந்தித்திருந்ததாகத் தெரியவில்லை. அவை நிலைப்பாடுகளின் அடிப்படையில் பேரம் பேசும் பாரம்பரிய வடிவங்களாக இருந்து வருகின்றன. நம்பிக்கையின்மை காரணமாக குழுக்களின் வேலைகளை மேற்கொள்வது அநேகமாகச் சாத்திய மில்லாமல் போய்விட்டது. இந்த இடைவெளி ஐநா முகவரகங்களால் *(யுஎன் ஏஜென்ஸிஸ்)* நிரப்பப்பட்டது. கண்ணி வெடிகளை அகற்றுதல் மற்றும் அகதிகள் தொடர்பான கரிசனை போன்றவற்றை இதற்கான உதாரணங்களாகக் காட்டலாம். ஐக்கிய தேசியக் கட்சியின் (ஐதேக) தேர்தல் அறிக்கை யில் உள்ளடக்கப்பட்டிருந்த ஒரு வாக்குறுதியான இடைக்கால சபை மற்றும் கூட்டு விசேட அதிரடிப்படை போன்ற விடயங்கள் பெருமளவுக்குச் சர்ச்சைக்குரியவையாக இருந்து வருகின்றன என்ற அடிப்படையில் கைவிடப்பட்டமை, இருதரப்பு களும் தத்தமது அரசியல் தேவைகளைக் கவனத்தில் எடுத்து வருகின்றன என்பதற்கான அடையாளமாகவே உள்ளது. மேலும், அது நாட்டின் அதிகாரச் சமநிலையையும் பிரதிபலிக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதாவது, இடைக்காலச் சபை அல்லது கூட்டு அதிரடிப்படை போன்ற விடயங்கள் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டிருக்க முடியும். எவ்வாறிருப்பினும், இந்த நிலைப் பாட்டில் ஓர் அபாயம் உள்ளது. உயர்மட்டக் கூட்டங்கள் கொள்கை ரீதியான கலந்துரையாடல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளனவா அல்லது ஒவ்வொரு தரப்பினரதும் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளனவா என்பதைப் புரிந்துகொள்வது பொதுமக்களைப் பொறுத்தவரையில் சிரமமான ஒரு காரியமாக உள்ளது. ஒரு தரப்பு மற்றைய தரப்பின்மீது எந்த அளவுக்குச் சார்ந்திருக்கின்றதோ அந்த அளவுக்கு அதிகமாகச் சலுகைகள் வழங்கப்படும். அத்தகைய சலுகைகள் அதிக அளவில் வழங்கப்படும்பொழுது இருதரப்புகளும் தமது சொந்த மக்களிட மிருந்து நெருக்குதல்களை எதிர்கொள்கின்றன. இதில் தங்கியிருக்கும் (சார்ந்து) உளவியலைப் புரிந்துகொள்வது மிக முக்கியமாகும். இருதரப்புகளும் ஒன்றின் மீது ஒன்று தங்கியிருந்து வந்ததுடன், அனுசரணையாளர் அவற்றின்மீதும் தங்கியிருந்து வந்தார். தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிடுவது தொடர்பான சலுகையை, பெற்றுக்கொள்வதில் அரசாங்கம் எல்டிடிஈ இயக்கத்தின் மீது தங்கியிருந்தது. அதேவேளையில் சர்வதேசரீதியிலான சட்டபூர்வத் தன்மையைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு எல்டிடிஈ இயக்கம் அரசாங்கத்தின் மீது தங்கியிருந்தது.

மற்றொரு மிக முக்கியமான குறைபாடு உயர்மட்டப் பேச்சு வார்த்தைகள் குறித்தே முழுக்கவனமும் செலுத்தப்பட்டிருந்தமை யாகும். இது தொடர்பாக நாங்கள் தென்னாப்பிரிக்க அனுபவத்தி லிருந்து ஒரு படிப்பினையைப் பெற்றுக்கொள்ள முடியும். அங்கே தரப்பினருக்கிடையிலான உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளின் மீது கவனம் செலுத்தப்பட்டது. ஆனால், அதேவேளையில் கீழ்மட்டங் களில் ஏனைய முக்கியமான விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப் பட்டு, அவை முதன்மை சபைக்குத் தெரிவிக்கப்பட்டன. இலங்கை யின் அனுபவத்தைப் பொறுத்தவரையில் அத்தகைய ஒரு முறை இருந்து வரவில்லை. பேச்சுவார்த்தைச் செயன்முறையின் கட்டு மானத்தில் குறைபாடுகள் இருந்திருக்க முடியும் என்பதை பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தனது பேட்டியில் ஏற்றுக்கொள்கிறார். ஆனால், பகைமை நிலவிய ஒரு அரசியல் சூழ்நிலைக்குள் தாம் தொடர்ந்து செயல்பட வேண்டியிருந்தது என்ற விடயத்தையும் அவர் வலியுறுத்து கிறார். உதாரணமாக, பல விடயங்கள் தொடர்பாக உதவுவதற்கோ அல்லது ஒத்துழைப்பு வழங்குவதற்கோ இலங்கையின் நிறுவனங் களோ அல்லது நிபுணர் குழுக்களோ அழைக்கப்பட்டிருக்கவில்லை.



5. **பேச்சுவார்த்தைச் செயன்முறைக்கான உள்கட்டமைப்பு மற்றும் கட்டுமானம்.** ஒரு பேச்சுவார்த்தைச் செயன்முறையின்போது அதனை நிலையான அடிப்படையில் மேற்கொள்வதற்கு அத்தியாவசியமான உள்கட்டமைப்பு மற்றும் ஆதரவு செயல்பாடுகள் போன்றவை தொடர்பாகக் கணிசமான அளவில் கவனம் செலுத்தப்படுவது அவசியமாகும். கடந்தகாலப் பேச்சுவார்த்தைகளின் பொருத்தமான ஆவணங்கள், சம்பந்தப்பட்ட தனிநபர்கள் தொடர்பான விவரங்கள், பல்வேறுபட்ட அக்கறைதாரர்களுடனான தொடர்பாடல், நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல் மற்றும் தொடர் கண்காணிப்பு என்பன அத்தகைய செயலகங்களின் கடமைப் பொறுப்புகளின் ஒரு பாகமாக இருந்து வருகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இச்செயலகங்கள் ஜனாதிபதியின் அல்லது பிரதமரின் அலுவலகத்துக்குள் அமைக்கப் படுகின்றன. ஒரு சில சந்தர்ப்பங்களில் நல்லிணக்கத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்தும் பொருட்டுச் சமாதான ஆணைக்குழுக்கள் உருவாக்கப் படுகின்றன. பேச்சுவார்தைகள் எந்த வடிவத்தில் இடம்பெற்று வருகின்றன என்பதும் மிக முக்கியமான ஒரு விடயமாகும். அனை வருக்கும் வெற்றி கிட்டும் தீர்வுகளை எடுத்துவரும் பொருட்டு இங்குப் பல்வேறு விதமான கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

நன்மதிப்பும் ஆற்றலும் மிக்க இரு தூதுவர்களின் தலைமையின் கீழ் 25 ஊழியர்களுடன் ஒரு சமாதானச் செயலகம் தாபிக்கப்பட்டமை பொருத்தமான ஆவணப்படுத்தல்கள் மற்றும் நிகழ்ச்சி நிரல்கள் என்பன தயாரிக்கப்படுவதையும் அனைத்துத் தரப்பினருடனும் தொடர்பாடல்கள் பராமரிக்கப்பட்டு வருவதையும் உறுதிப்படுத்தியது. சமாதானச் செயலகம் மிகவும் வரையறுக்கப்பட்ட ஓர் ஆணைப் பத்திரத்தைக் கொண்டிருந்தது. இருதரப்பினராலும் எடுக்கப்படும் முடிவுகளைச் செயல்படுத்தி, பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்கான செயல்பாட்டு முகவரகமாக அது தன்னை வரையறுத்துக் கொண்டிருந்தது. இது துரதிர்ஷ்டவசமானதாகும். பேச்சுவார்த்தை முறையுடன் சம்பந்தப்பட்ட பெருந்தொகையான சிக்கலான பிரச்சினைகள் தொடர்பாகச் சமாதானச் செயலகம் நிபுணர் களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் என்ற எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை. செயன்முறை வடிவமைப்பின் தொடர்ச்சியான மதிப்பீட்டுக்கும் அதன் பெறுபேறுகளை முடிவுகளை எடுப்பவர் களுக்குத் தெரிவிப்பதற்கும் சமாதானச் செயலாளர்கள் பொறுப் பேற்றுக்கொண்டிருக்க முடியும். துரதிர்ஷ்டவசமாக இந்த எதிர் பார்ப்பும் நிறைவேறவில்லை. போர்நிறுத்த மீறல்களைக் கண் காணித்து வரும் செயல்பாட்டு அறை இராணுவ விடயங்களுக்கு மட்டும் தன்னை வரையறுத்துக்கொண்டுள்ளது. அது அரசியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மற்றும் பொருளாதாரக் குறிகாட்டிகள் தொடர்பான பரந்த தளத்தைக் கவனத்தில் எடுக்கவில்லை.

மேலும், மகாநாட்டு மேசையில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகள் குறித்து சிவில் சமூகத்தைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு போதியளவிலான தகவல்களை வழங்கக்கூடிய கலந்தாலோசனை பொறிமுறைகளையும் சமாதானச் செயலகம் அபிவிருத்தி செய்திருக்கவில்லை. இது தென்னாப்பிரிக்காவில் இடம்பெற்ற செயன்முறைக்கு நேர்மாறான ஒரு நடைமுறையாக உள்ளது. அங்கே பிரஜைகளின் பாரிய அணிதிரட்டலின் விளைவாகவே சமாதானச் செயலகம் உருவாக்கப்பட்டிருந்தது. அது பேச்சுவார்த்தைச் செயன்முறையின் ஒரு காவல் அமைப்பாகவும் பாதுகாவலராகவும் செயல்பட்டு வந்தது. தென்னாப்பிரிக்காவைப் பொறுத்தவரையில் பிரஜைகள் குழுக்கள் மற்றும் சமாதானக் குழுக்கள் என்பன இச்செயலகத்தின் உள்ளார்ந்த பாகங்களாக இருந்தன. எல்டிடிஈ இயக்கத்தின் சமாதானச் செயலகம் தாபிக்கப்பட்டதை அடுத்தே இலங்கை அரசின் சமாதானச் செயலகம் நிறுவப்பட்டது. அதனையடுத்து முஸ்லிம் சமாதானச் செயலகமும் உருவாயிற்று. இந்த மூன்று சமாதானச் செயலகங்களின் தாபிதத்துக்கு ஊடாகப் பேச்சுவார்த்தைகளுக்கான நிறுவனரீதியான அடித்தளம் உருவாக்கப்பட்டது.

6. **கடந்த காலத் தவறுகளிலிருந்து பெற்ற படிப்பினைகள்.** கடந்த காலப் பேச்சுவார்தை முயற்சிகளில் இழைக்கப்பட்ட தவறுகள் குறித்த தெளிவான அறிவும் அத்தகைய தவறுகள் மற்றும் தோல்விகள் குறித்த ஒரு பகுப்பாய்வும் முக்கியமாகத் தேவைப்படுகின்றன. இதற்கு ஒரு நிறுவனரீதியான நினைவு மற்றும் ஆவணப்படுத்தல் என்பன பராமரித்து வரப்படுதல் அவசியமாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இத்தகைய ஆவணப்படுத்தல் வேலை மேற்கொள்ளப்படுவதில்லை. முந்தைய பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றிய நபர்கள் வாய் மூலம் தெரிவித்த கருத்துகளின் பதிவுகளும் கிடைக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்க முந்தைய சுற்றுப் பேச்சுவார்த்தைகள் அனைத்துக்கும் ஒரு சாட்சியாக இருந்து வந்திருப்பதுடன், மிகுந்த அக்கறைகொண்ட ஒரு வரலாற்று மாணவராகவும் இருந்து வந்துள்ளார். கல்விமான்களினால் சஞ்சிகைகளில் வெளியிடப்பட்டக் கட்டுரைகளைத் தவிர, இச்செயன்முறையின்போது இருதரப்பினரும் கற்றுக்கொண்ட படிப்பினைகள் குறித்த சுய விமர்சனங்கள் அல்லது மீளாய்வு பற்றிய சரியான பதிவுகள் இருந்து வரவில்லை. இவற்றுள் சில இந்நூலின் இரு தொகுதிகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. எல்டிடிஈ இயக்கத்தைப் பொறுத்தவரையில் அவர்களுடைய சுய விமர்சனங்கள் பகிரங்கமாக ஆவணப்படுத்தப்படுவதில்லை. ஆனால், சர்வதேசச் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் நிலை இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்டு ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் நிலை, என்பன தமது சொந்தப் படிப்பினைகளைக் கற்றுக்கொள்வதற்கு எல்டிடிஈ இயக்கத்தை அனேகமாக நிர்ப்பந்தித்திருக்க முடியும்.



நாங்கள் அனுபவரீதியில் எடுத்து விளக்கக்கூடிய மிக முக்கியமான ஒரு படிப்பினை தோல்வியடைந்த ஒரு பேச்சுவார்த்தைச் செயன்முறை, வன்முறை மற்றும் அழிவு என்பன தீவிரமாக அதிகரித்து வரும் ஒரு நிலைமையைத் தோற்றுவிக்கின்றது என்பதாகும். தோல்வியடைந்த சமாதானச் செயன்முறைகள் குறித்த மீளாய்வுகள் ஒவ்வொரு தோல்வியும் வன்முறையின் அளவைப் பன்மடங்காக அதிகரிப்பது மட்டுமன்றிப் பாதுகாப்புச் செலவையும் உயர்த்தியுள்ளது என்ற விடயத்தை ஆணித்தரமான விதத்தில் எடுத்துக்காட்டியுள்ளது. உதாரணமாக, இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட முதலாவது மத்தியஸ்த முயற்சியான திம்புப் பேச்சுவார்த்தைகள் ஒவ்வொரு தரப்பினரும் தத்தமது நிலைகளிலிருந்து பேசிய ஒரு செயல்பாடாகவே இருந்தது. அரசாங்கத் தூதுக்குழு மிகச் சிறு அளவில் மட்டுமே விட்டுக்கொடுப்பதற்குத் தயாராக இருந்து வந்த அதே நேரத்தில், தமிழ்ப் போராளிகள் தமது 4 வழிகாட்டும் கோட்பாடுகளைச் சமர்ப்பிப்பதில் மட்டும் எவ்வாறு அக்கறைகொண்டிருந்தார்கள் என்பதைச் சுமனசிறி லியனகே எடுத்து விளக்குகிறார்.

இந்திய–இலங்கை ஒப்பந்தம் இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதன் பொருட்டு ஓர் உடன்பாட்டை எடுத்து வருவதற்கென ஜனாதிபதி ஜயவர்தன மற்றும் ராஜீவ் காந்தி ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாகும். எல்டிடிஈ இயக்கத்துடன் ஓர் உடன்பாட்டை எட்டத் தவறியமை காரணமாகப் புலிகள் இயக்கத்துக்கும் இந்திய அமைதிப்படைக்கும் இடையில் போர் மூண்டதுடன், அதில் 1200க்கும் மேற்பட்ட இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்திய அமைதிப்படை நாட்டைவிட்டு வெளியேறிய பின்னர் ஜனாதிபதி பிரேமதாச உள்நாட்டு மத்தியஸ்தச் செயல்பாடொன்றை மேற்கொள்ள முயன்றார். இந்தத் தேனிலவு சுமார் ஒரு வருட காலம் நீடித்தது. ஆனால், அதன் மூலம் எத்தகைய பலனும் கிட்டவில்லை. எல்டிடிஈ இயக்கத்தினால் 800க்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டதை அடுத்து வன்முறை தீவிரமாக அதிகரித்தது. ஜனாதிபதி குமாரதுங்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

– எல்டிடிஈ பேச்சுவார்த்தைகளை நாட்டின் அனைத்துத் தரப்பினரும் வரவேற்றனர். ஆனால், இந்தப் பேச்சுவார்த்தைகள் ஒரு குறுகிய காலப் பிரிவின்போது மட்டுமே இடம்பெற்றன. சமாதானத்துக்கான போர் என்ற உத்தியின் கீழ் போர் அறிவிக்கப்படுத்தப்பட்டதை அடுத்து மீண்டும் பாரிய அளவிலான வன்முறை தலைதூக்கியது. சமாதானத்துக்கான போர் உத்தியின்போது 20,000க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதுடன், பெரிய அளவில் சொத்துகளும் அழிக்கப்பட்டன. இந்த வகையில், ஒரு நிலைத்து நிற்கக்கூடிய பேச்சுவார்த்தை செயன்முறைக்குள் பிரவேசிப்பதற்கு முழுமையாகத் தயாரில்லாத நிலையில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடாதிருப்பது நல்லது என்பதையே கடந்தகால அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

7. **சம்பந்தப்பட்ட அக்கறைதாரர்கள் மற்றும் செயல்பாட்டாளர்கள் ஆகியோரை இனங்காணுதல்.** ஒரு முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர் – உதாரணமாக இலங்கை அரசாங்கம் மற்றும் எல்டிடிஈ இயக்கம் – வெறுமனே சட்டம் சம்பந்தப்பட்ட பதப் பிரயோகங்களினால் வரைவிலக்கணம் செய்யப்படுவதனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்தச் செயன்முறையின்போது தவறுகள் இழைக்கப் படுகின்றன. அத்தகைய சட்டரீதியான வரைவிலக்கணம் முறையான ஒரு ஒழுங்கில் சரியானது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், நீங்கள் உத்தியோகபூர்வமான வரைவிலக்கணங்களை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டிருந்தால் ஏனைய அக்கறைதாரர்கள் சமாதானச் செயன்முறையிலிருந்து வெளியேறிவிடுவார்கள். அக்கறைதாரர்கள் என்பவர்கள் செயன்முறையின் பெறுபேறு தொடர்பாக ஓர் அக்கறையைக் கொண்டிருக்கும் செயல்பாட்டாளர்கள் என வரைவிலக்கணப் படுத்தப்படுகின்றனர். இலங்கையின் விடயத்தைப் பொறுத்தவரையில் அனைத்துச் செயல்பாட்டாளர்களையும் அவர்களுடைய குறிப்பான நிலைப்பாடுகள், வரலாறு மற்றும் இயங்கியல் என்பவற்றை இனங்கண்டுகொள்வதாகும் என்பதே இதன் பொருளாகும். அத்தகைய அக்கறைதாரர்களை அலட்சியம் செய்வதும் அவர்களை உள்ளடக்கிக்கொள்ளாததும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எதிர்மறையான பெறுபேறுகளை எடுத்துவர முடியும். அதாவது அவர்கள் இந்தச் செயன்முறையைக் குழப்புவதற்கு முன்வரலாம்.

ஒட்டுமொத்தச் சமாதானச் செயன்முறை வடிவமைப்பின் மிக முக்கியமான ஓர் அம்சம் பொருத்தமான விதத்தில் அக்கறைதாரர்கள் குறித்த ஒரு பகுப்பாய்வு மேற்கொள்ளப்படாததும் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் ஒரு செயன்முறைத் தொடர்பாகக் கவனம் செலுத்தத் தவறியதும் ஆகும். இச்செயன்முறையில் இடம்பெற்ற



இந்த வெளிப்படையான தவறுக்கான காரணங்களை மிகக் கவனமான விதத்தில் பரிசீலிப்பது முக்கியமானதாகும். முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர் தொடர்பான முறைசார்ந்த வரைவிலக்கணம் காரணமாக இந்தத் தவறு தோன்றியிருக்க முடியும். இலங்கை அரசாங்கமும் எல்டிடிஈ இயக்கமும் தம்மை அழைத்ததாக நோர்வே அனுசரணையாளர்கள் வாதிட முடியும். எவ்வாறிருப்பினும், இந்தச் சமநிலையில் நிறைவேற்று ஜனாதிபதியின் வகிபாத்திரத்தை அவர்கள் குறைத்து மதிப்பிட்டுள்ளனர். போர்நிறுத்த ஒப்பந்தத்தை கையெழுத்திடுவதில் நோர்வே அனுசரணையாளர்கள் தன்னை தவிர்த்துச்சென்றுள்ளார்கள் என்பதே ஜனாதிபதியின் கருத்தாக இருந்து வந்தது. ஜனாதிபதி இக்குறைபாட்டை ஒரு சாக்காகப் பயன்படுத்த முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இச்செயன்முறையில் அவருடைய பங்கேற்பைப் பெற்றுக்கொள்ளும் வழியிலான சாதகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது உண்மையாகும். இந்தச் செயன்முறையிலிருந்து தாமும் ஒதுக்கப்பட்டிருப்பதாக முஸ்லிம்களும் கருதினர். இனமோதல் காரணமாக முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டிருந்தபோதிலும் அவர்கள் அந்த மோதலின் ஒரு தரப்பினராக இருந்து வரவில்லை என்ற விடயத்தை போர்நிறுத்த ஒப்பந்தம் அங்கீகரித்திருந்தது என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். முஸ்லிம்களை இந்த முரண்பாட்டின் ஒரு தரப்பினராக ஏற்றுக்கொள்வதற்குச் சம்பந்தப்பட்ட தரப்பினர் விரும்பவில்லை என்பது தெளிவாகும்.

பெருமளவுக்குச் சமூகவியல்ரீதியான மற்றும் அரசியல்ரீதியான ஒரு பகுப்பாய்வு இலங்கை இரு பிரதான அரசியல் கட்சிகளுக் கிடையில் நிரந்தரமான விதத்தில் பிளவுபட்டிருப்பதை எடுத்துக் காட்டுகின்றது. அண்மைக் காலம் வரை இரு அரசியல் குடும்பங்களே இக்கட்சிகளுக்குத் தலைமை வகித்தும் வந்தன. அவர்களுக்கிடையிலான போட்டி மற்றும் பகைமை என்பவற்றை நாம் குறைத்து மதிப்பிடக் கூடாது. ஒரு கருத்தொற்றுமையைச் சாதித்துக்கொள்ளும் பொருட்டு இப்பகைமையை எவ்வாறு தாண்டிச் செல்ல முடியும் என்பது சுதந்திரத்தின் பின்னர் நாட்டை அலைக்கழித்து வந்துள்ள முதன்மையான அடிப்படைப் பிரச்சினையாக இருந்து வந்துள்ளது.

மறுபுறத்தில், அரசாங்கம், 'கழுதைக்கு காரட்டும் கம்பும்' என்னும் ஆங்கிலக் கதையின் கொள்கையைப் பின்பற்றி வந்துள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வெற்றியீட்டியதை அடுத்துப் பொதுஜன ஐக்கிய முன்னணி (பிஏ) ஆதரவாளர்களைக் கைதுசெய்தல் மற்றும் அவர்களைத் துன்புறுத்துதல் என்பவற்றின் வடிவில் தேர்தலுக்குப் பின்னரான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. இலங்கையைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொறுத்தவரையில் ஒவ்வொரு தேர்தலுக்குப் பின்னும் இத்தகைய வன்முறை ஒரு பிரபல்யமான பொழுதுபோக்காக இருந்து வந்துள்ளது. எனினும், 1994இல் இடம்பெற்ற தேர்தல்களை அடுத்து இத்தகைய விதத்தில் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்த்தார். அதுமட்டுமன்றி ஐக்கிய தேசிய முன்னணி யின் மூத்த அமைச்சர்கள் தொலைக்காட்சியிலும் ஊடகங்களிலும் ஜனாதிபதிமீது தனிப்பட்ட முறையில் தாக்குதல் தொடுத்தார்கள். அவர் அமைச்சரவைக் கூட்டங்களில் சமூகமளித்த பொழுது அவர்களுடைய பொது நடத்தை தொடர்பான குற்றச்சாட்டுகளும் ஊகங்களும் முன்வைக்கப்பட்டதுடன், அவை பரவலான விதத்தில் பிரபலப்படுத்தப்பட்டன.

அவருடைய பங்கேற்பைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டுப் பிரதமர் இரு முனைகளிலான ஓர் அணுகுமுறையைப் பின்பற்றினார். ஒருபுறத்தில், ஒரு சில அமைச்சர்கள் – குறிப்பாக முன்னர் அவருடைய சகாக்களாகச் செயல்பட்டு வந்தவர்கள் – தொடர்ந்து அவர்மீது ஊழல் மற்றும் இலஞ்சம் தொடர்பான குற்றச்சாட்டுகளை முன்வைத்ததுடன், அவருக்கு எதிரான அவதூறுகளையும் பரப்பி வந்தனர். மறுபுறத்தில், ஜனாதிபதியின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டுப் பிரதமர் அவரிடம் தூதுவர்களை அனுப்பி வைத்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மற்றும் மிலிந்த மொரகொட போன்ற பிரதமரின் தனிப்பட்ட தூதுவர்களுக்கு ஊடாக மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் மற்றும் உரையாடல்கள் என்ப வற்றை அடுத்து நுட்பமான விதத்தில் ராஜதந்திர காய் நகர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. மிலிந்த மொரகொட மற்றும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோருக்கு இடை யிலான பேச்சுவார்த்தைகள் மூலமான ஒரு வழியும் பின்பற்றப்பட்டது.

பேச்சுவார்த்தைச் செயன்முறைக்குப் பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவிக்குமாறு ஜேவிபியைச் சேர்ந்தவர்களுக்கும், தனது கட்சியின் ஒரு பிரிவினருக்கும் ஜனாதிபதி தூண்டுதல் அளித்து வந்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவரான மங்கள சமரவீரவினால் எழுதப்பட்டிருந்த அந்தரங்கமான ஒரு குறிப்பு எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கம் எவ்வாறு நிலைகுலைக்கப்படுதல் வேண்டும் என்பது குறித்த விவரங்களை இக்குறிப்பு உள்ளடக்கியிருந்தது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் எல்டிடிஈ இயக்கத்துக்கு உதவி வருகின்றது என்றும் திருகோணமலை பிரதேசத்தில் பெருந்தொகை யான முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்றும் கூறி, அதற்கு எதிராக ஊடகங்கள் மூலம் ஒரு பிரசாரம் முன்னெடுக்கப்பட



வேண்டும் என்றும் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டு மூன்று அமைச்சுகள் பொறுப்பேற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் அக்குறிப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. இரு கட்சி களுக்குமிடையில் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கிக் கொள்ளும் பொருட்டு ஜேவிபிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. அதே வேளையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாஷிங்டனுக்கு அரசமுறை பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தபோது மூன்று அமைச்சுகளை பொறுப் பேற்றுக்கொண்டதன் மூலம் ஜனாதிபதி அத்தாக்குதலைத் தொடுத்தார். அதன் பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுப் புதிதாகத் தேர்தல் நடத்தப்பட்டது.

ஒரு சமரச நிலையை ஏற்படுத்துவதற்கென மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பவாத இயல்பிலான முயற்சிகளைத் தவிர இரு கட்சிகளுக்கு மிடையில் அரசியல் சகவாழ்வொன்றை எடுத்து வருவதற்கென முறையான மற்றும் கட்டமைக்கப்பட்ட ஒரு செயன்முறை இருந்து வரவில்லை. 1990களின் பிற்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் லியாம் ஃபொக்ஸ் அத்தகைய சகவாழ்வுக் கொள்கை ஒன்றை உத்தேசித்திருந்தார். இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தனர். ஆனால் இந்த ஒப்பந்தம் எந்த ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்த வில்லை. இந்தக் கடினமான பாதையில் கட்டமைக்கப்பட்ட மத்தியஸ்த செயன்முறை ஒன்றுக்குப் பயணிக்கும் பொருட்டு மூன்றாம் தரப்பினர் ஒருவரால் சிறந்த முறையில் உருவாக்கப்படும் ஓர் உத்தி தேவைப்படுகின்றது. நாட்டின் ஒட்டுமொத்த வாழ்வும் இதிலேயே தங்கியிருந்தது. எனினும், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் இறுதி மாதங்களின்போது இருதரப்பினரும் அரசாங்கத்தை காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு மனோ–மலிக் என்ற ஒரு செயன்முறையை ஆரம்பித்திருந்தனர். ஆனால் பாதுகாப்பு அமைச்சுத் தொடர்பாக ஓர் உடன்பாட்டை எட்ட முடியாதிருந்தமை யால் இப்பேச்சுவார்த்தைகள் பலனளிக்கவில்லை.

8. **முஸ்லிம் காரணி.** வடக்கு–கிழக்கில் வாழ்ந்துவரும் முஸ்லிம் மக்கள் பேச்சுவார்த்தைச் செயன்முறையின் ஒரு பிரதான அக்கறைக் குழுவினராக இருந்து வருகின்றனர். நாட்டின் வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் கணிசமான அளவிலான ஒரு சிறுபான்மைச் சமூகமாக அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான உறவுகள் 1983இன் பின்னர் சீர்குலைவடைந்ததுடன் தனித்துவமான ஒரு முஸ்லிம் அடையாளத்தைக் கோரி ஸ்ரீலங்கா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உருவாக்கப்பட்டதையடுத்து இரு சமூகங்களுக்குமிடையில் கொந்தளிப்பு நிலைகள் தோன்றின. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்போது இறுதி அரசியல் தீர்வில் முஸ்லிம்களின் கருத்துகள் பெறப்படவில்லை. மேலும், 1983 தொடக்கம் முஸ்லிம்கள் மிக மோசமான தாக்கங்களை எதிர்கொண்டு வந்துள்ளனர். வடமாகாணத்திலிருந்து இரண்டு மணிக்குள் சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை, கிழக்கு மாகாணத்தில் பள்ளிவாசல்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், கிழக்கில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகள் பலவந்தமாக அபகரிக்கப்பட்டமை, சாதாரணப் பொதுமக்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், முஸ்லிம்களின் பொருளாதாரம் சீர் குலைக்கப்பட்டமை மற்றும் கட்டாய வரிவசூல் போன்ற அனைத்து விடயங்களும் கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்துவரும் முஸ்லிம் களிடையே பாதுகாப்பற்ற ஓர் உணர்வை தோற்றுவித்திருந்தன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மிக மோசமான விதத்தில் பிளவு பட்டிருந்தது. அக்கட்சியில் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்ததுடன், கணிசமான எண்ணிக்கையினர் கட்சியிலிருந்து விலகிப் பாராளுமன்றத்தில் சுதந்திரமாக செயல்பட்டு வந்தனர். இந்த இருதரப்பினரையும் ஒற்றுமைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. முஸ்லிம்களின் அரசியல் சமூகத்தில் ஏற்பட்ட பிளவு காரணமாக நடத்தப்பட்டு வந்த பேச்சுவார்த்தைகளில் தம்மைப் பிரதிநிதித்துவம் செய்பவர் யார் என்பது குறித்து அவர்களால் ஒரு பொது உடன்பாட்டுக்கு வர முடியா திருந்தது. அனைத்து முஸ்லிம் கட்சிகளும் குழுக்களும் தனித்தரப்பை வலியுறுத்தி வருகின்றன. அண்மைக்காலம் வரையில் முஸ்லிம்கள் தமக்கென ஒரு செயலகத்தைக் கொண்டிருக்கவில்லை. ஆவணப் படுத்தல் மற்றும் ஆராய்ச்சி என்பன இல்லாதிருக்கும் நிலை முஸ்லிம் களைப் பொறுத்தவரையில் மிகவும் தீவிரமான ஒரு பலவீனமாக இருந்து வருகின்றது. அனைத்துத் தரப்பினராலும் முஸ்லிம் பரிமாணத் துக்குரிய விதத்தில் அங்கீகாரம் அளிக்கப்படுவது மிக முக்கியமாகும். எவ்வாறிருப்பினும், இறுதியில் முஸ்லிம்கள் தாமே தமது பிரச்சினை களைத் தீர்த்துக்கொள்ள வேண்டியவர்களாக இருந்து வருகின்றனர். எனவே இது தொடர்பான தலையீட்டுச் செயல்பாடு தவிர்க்க முடியாததாகும். குறைந்தபட்ச அளவிலான கருத்தொற்றுமையை எடுத்துவரும் பொருட்டு மூன்றாம் தரப்பு அனுசரணையைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

எம்.ஐ.எம். முஹைதீன் தனது கட்டுரையில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட காலம் தொடக்கம் முஸ்லிம்-தமிழ்



உறவுகளில் ஏற்பட்டு வந்துள்ள பரிணாம வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறார். இந்திய-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட பொழுது முஸ்லிம்களின் ஆலோசனைகள் பொருத்தமான விதத்தில் பெற்றுக்கொள்ளப்படவில்லை என அவர் குறைகூறுகிறார். அதனை யடுத்து, வடக்கைச் சேர்ந்த முஸ்லிம்கள் எதிர்கொண்டுவரும் ஒருசில பிரச்சினைகளை அவர் விரிவாக எடுத்து விளக்குகிறார். முஸ்லிம்கள் இனமோதலின் காரணமாக பாதிப்புகளை எதிர்கொண்டி ருக்கும் ஒரு தரப்பாக இருந்து வருகின்றனர் என்ற விடயத்தைப் போர்நிறுத்த ஒப்பந்தம் அங்கீகரித்தபோதிலும், முஸ்லிம்கள் இந்த முரண்பாட்டின் ஒரு தரப்பினராக இருந்து வருகின்றனர் என்ற விடயத்தை அது ஏற்றுக்கொள்ளவில்லை. போர்நிறுத்த ஒப்பந்தம் அமலாக்கப்பட்ட காலம் முழுவதும் இந்தப் பந்தியே சர்ச்சைக்குரிய ஒரு விடயமாக இருந்து வந்துள்ளது. எவ்வாறிருப்பினும், தீர்க்கப் படாதிருக்கும் ஒரு சில பிரச்சினைகள் தொடர்பாக நல்லிணக்க நிலையை எடுத்து வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எல்டிடிஈ இயக்கத்துக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு மிடையே இடம்பெற்று வந்த பேச்சுவார்த்தைகளின் வரலாற்றை யும் முஹைதீன் எடுத்து விளக்குகிறார். இப்பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் முஸ்லிம்களின் தனித்துவமான அடையாளத்தை அன்டன் பாலசிங்கம் ஏற்றுக்கொண்டிருந்ததுடன், முஸ்லிம்களை வெளி யேற்றியது ஒரு தவறு என்றும் கூறியிருந்தார்.

எல்டிடிஈ மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் களுக்கிடையில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் முஸ்லிம்கள் உண்மையான மனக்குறைகளைக் கொண்டிருந்தனர் என்ற விடயம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், இம்மனக்குறை களை நிவர்த்திக்கும் வழிமுறைகளும் தெரிவிக்கப்பட்டிருந்தன. துரதிர்ஷ்டவசமாக இந்த உடன்பாடுகள் அமலாக்கப்படவில்லை. தாய்லாந்தில் இடம்பெற்று வந்த பேச்சுவார்த்தைகளைக் குறிப்பிடும் முஹைதீன் முஸ்லிம்களிடமிருந்து அபகரிக்கப்பட்டிருக்கும் காணி களின் ஒரு பட்டியலை உருவாக்கித் தருமாறு அன்டன் பாலசிங்கமும் கேணல் கருணாவும் தன்னிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர் என்றும் கூறுகிறார். மேலும், 55,000 முஸ்லிம் குடும்பங்களுடன் பேட்டி காணப்பட்ட விதம் மற்றும் அவர்களுடைய கோரிக்கைகள் பதிவுசெய்யப்பட்ட விதம் என்பவற்றையும் அவர் குறிப்பிடு கிறார். நோர்வே அனுசரணையாளர்களுக்கு ஊடாக இக்காணிப் பதிவேடுகள் எல்டிடிஈ இயக்கத்திடம் கையளிக்கப்பட்டிருந்தன. கிழக்கு மாகாணத்தில் எல்டிடிஈ இயக்கப் பிரதிநிதிகளுக்கும் வடக்கு கிழக்கு முஸ்லிம் சமாதானப் பேரவை என்ற முஸ்லிம் சிவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூகத்தின் பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது தீர்க்கப்படாதிருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு உடன்பாடுகள் எட்டப்பட்டிருந்தன என்ற விடயத்தையும் சுட்டிக்காட்டுகிறார். இந்த ஒப்பந்தத்தையடுத்து அரசியல் படுகொலைகள், வரி வசூலித்தல், பயமுறுத்திப் பணம் பறித்தல் மற்றும் துன்புறுத்தல் போன்ற ஒரு சில பிரச்சினைகள் குறைவடைந்திருந்தன.

முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் எல்டிடிஈ இயக்கத்துக்குமிடையில் மிகக் குறைந்தளவிலான தொடர்பே நிலவி வந்துள்ளது. கடைசியாக இடம்பெற்ற பேச்சுவார்த்தை சுற்றின்போது ரவூப் ஹக்கீம் அரசாங்கத் தூதுக்குழுவின் ஓர் உறுப்பினர் என்ற முறையில் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்திருந்தார். முஸ்லிம்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற விடயத்தை அனைத்து முஸ்லிம் கட்சிகளும் வலியுறுத்தி வந்துள்ளன. குறிப்பாகத் தமது பாதுகாப்பு, பிரதிநிதித்துவம் மற்றும் காணிப் பிரச்சினை போன்ற நிர்ணயகரமான விடயங்கள் தொடர்பாக முஸ்லிம்கள் எல்டிடிஈ இயக்கத்துடன் தனியாக கலந்துரையாடல்களை நடத்துவது அவசியமாகும்.

9. ***அனுசரணையாளர்கள் மற்றும் மத்தியஸ்தர்களின் வகிபாத்திரம்.*** ஓர் அனுசரணையாளருக்கும் மத்தியஸ்தருக்குமிடையில் அவர்கள் வகித்துவரும் பாத்திரத்தில் பல வேறுபாடுகள் உள்ளன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஓர் அனுசரணையாளர் முக்கியத்துவம் குறைந்த ஒரு செயல்பாட்டை மேற்கொண்டு வருவதுடன், மறைமுகமான ஒரு பாத்திரத்தையே வகிக்கிறார். அச்சந்தர்ப்பத்தில் பேச்சுவார்த்தைச் செயன்முறையின் உள்ளடக்கம் மற்றும் படிப்படியான முன்னேற்றம் போன்றவை சம்பந்தப்பட்ட தரப்பினராலேயே நிர்ணயிக்கப்பட்டு வருகின்றன. மத்தியஸ்தர்கள்கூட பல்வேறு வகைகளைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். அதிகாரம் தொடர்பாகப் பேரம் பேசுபவர்கள், செல்வாக்குப் பிரயோகிப்பவர்கள் முதல் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உதவும் மத்தியஸ்தர்கள் வரை அவர்கள் பரந்த வீச்சில் உள்ளனர். சில சந்தர்ப்பங்களில் இந்த வேறுபாடுகள் தெளிவாகத் தென்படுவதில்லை. ஓர் அனுசரணையாளர் அல்லது மத்தியஸ்தர் நடுநிலையான்வராகவும் தனது சொந்தச் செயல்திட்டங்கள் இல்லாதவராகவும் நோக்கப்படுதலும் மனப்பதிவுகளும் மிக முக்கியமானவையாகும். அனுசரணையாளர் அல்லது மத்தியஸ்தர் மீது நம்பிக்கை கொள்ளும் ஒரு மனப்பதிவைப் பொதுமக்கள் உருவாக்கிக்கொள்வதை



உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு உச்சமட்டக் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். சமூகங்கள் உயரளவில் துருவ நிலைப்படுத்தப்பட்டிருக்கும் உள்நாட்டு போர் நிலைமைகளில் அனுசரணையாளரின் பாத்திரம் பெருமளவுக்கு அரசியல்மயப் படுத்தப்பட்டிருப்பதுடன், சமாதானச் செயன்முறையை எதிர்ப்பவர்கள் இந்த அனுசரணையாளரைத் தமது தாக்குதலுக்கான இலக்காகக் கொள்கின்றனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மத்தியஸ்தர் அல்லது அனுசரணையாளர் ஒரு பிசாசாகச் சித்திரிக்கப்படுகிறார்.

இலங்கை மூன்று வகைகளைச் சேர்ந்த மத்தியஸ்தத்தை எதிர்கொண்டுள்ளது. வல்லரசுகளின் மத்தியஸ்தம் அழிவில் முடிவுற்ற ஜனாதிபதி பிரேமதாசவினால் மேற்கொள்ளப்பட்ட தேசிய மத்தியஸ்த முயற்சியும் தோல்வியைத் தழுவியது. பின்னர் பேச்சுவார்த்தைச் செயன்முறையில் அனுசரணையாளராகச் செயல்படுமாறு நோர்வே அரசுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. சர்வதேசவாதிகள் மற்றும் தேசியவாதிகள் ஆகியோருக்கிடையிலான மிகவும் சுவாரஸ்யமான காரணிகளில் ஒன்று வெளிமத்தியஸ்தம் தொடர்பாக, அவர்கள் வியாக்கியானம் செய்யும் விதமாகும். சர்வதேசவாதிகள் வெளிமத்தியஸ்தத்தை வரவேற்கின்றனர் அதேவேளையில், தேசியவாதிகள் வெளித்தலையீடுகளைப் பேய் பிசாசுகளாகக் கருதுவதுடன், தூதுவரையும் தாக்குகிறார்கள். இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்தபொழுது இந்தியர்கள் அதனை அனுபவிக்க நேரிட்டது. அன்றாடம் ஆர்ப்பாட்டங்களும் கொடி எரிப்புகளும் இடம்பெற்றதுடன், அவற்றை அவர்கள் மிகுந்த கவலையுடன் நோக்கினர். இந்தத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் தனது பேட்டியில் நோர்வே இலங்கையின் சமாதானச் செயன்முறையில் எவ்வாறு சம்பந்தப்பட்டது என்பதை எரிக் சொல்ஹெய்ம் எடுத்து விளக்குகிறார்.

இதுவரையில் இந்த அனுசரணை செயன்முறையில் நோர்வேயின் வகிபாத்திரம் ஒரு முதன்மையான காரணியாக இருந்து வந்துள்ளது. இந்த அனுசரணை போர்நிறுத்த ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கும் இருதரப்பினருக்கும் இடையில் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும் உதவியது. இலங்கையிலிருந்து சுமார் 5000 மைல்கள் தொலைவில் அமைந்திருக்கும் ஒரு நாடான நோர்வே இலங்கையின் விவகாரங்களில் இந்த அளவுக்குத் தீவிரமாக ஏன் ஈடுபட வேண்டும் எனக் கேள்வியெழுப்புவதற்கு ஒரு நல்ல காரணம் உள்ளது: நோர்வே எண்ணெய் மற்றும் வாயு என்பவற்றின் பாரிய ஒதுக்குகளைக் கொண்டிருக்கும் உலகின் மிகச் செல்வந்த நாடுகளில் ஒன்றாகும். அந்நாடு கடந்த பலவருடகாலமாக அபிவிருத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உதவியை வழங்குவதில் முன்னணியில் இருந்து வந்திருப்பதுடன், இஸ்ரேல், பலஸ்தீன், குவதமாலா, சூடான் மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற இடங்களிலும் வேறு பல இடங்களிலும் சமாதானத்தை எடுத்துவருவதற்கான விசேஷ ஆற்றலைக் கட்டியெழுப்பியுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் நோர்வே கடந்த இரு தசாப்த காலமாக நாட்டின் முக்கியமான ஓர் அபிவிருத்திப் பங்காளராகச் செயல்பட்டு வந்திருப்பதுடன், அந்தவகையில் இலங்கை தொடர்பான கணிசமான அனுபவத்தையும் அறிவையும் பெற்றுக்கொண்டுள்ளது. சர்வதேச உறவுகளுக்கான நோர்வேயின் பங்களிப்பு சமாதானத்தைக் கட்டியெழுப்பும் துறையிலேயே இடம்பெற்று வருகின்றது எனச் சிலர் கூறுகின்றனர். இத்துறையில் அது தனக்கென ஒரு சிறப்பான பெயரை ஈட்டிக்கொண்டுள்ளது. ஆனால், இங்கு மிக முக்கியமாக கவனத்தில் எடுக்க வேண்டிய விடயம் அது முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்டிருக்கும் இருதரப்பினரதும் நம்பிக்கையை வென்றுள்ளது என்பதாகும். நோர்வேயிடம் எத்தகைய இரகசிய செயல்திட்டங்களும் இருந்து வரவில்லை என்பதனை இருதரப்பினரும் நம்புகின்றனர்.

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் நோர்வேயின் வெளிநாட்டுக் கொள்கையின் முதன்மையான ஒரு கூறாக இருந்து வருகின்றது என்ற விடயத்தையும் நாம் கருத்தில்கொள்ள வேண்டும். நோர்வேயின் அனுசரணைச் செயல்பாடு இருதரப்புகளுக்கும் இடையில் பொருத்தமான தொடர்பாடல் இடம்பெறுவதை உறுதிப்படுத்தியுள்ளது. கொழும்பில் நோர்வே தூதுவர் வெஸ்ட்போர்கும், அவரை அடுத்து ஹான்ட்ஸ் பிரட்ஸ்காரும் இருதரப்பினருக்கும் இடையிலான தொடர்பாடல் உயர் மட்டத்தில் பராமரிக்கப்பட்டு வருவதை உறுதிப்படுத்தினர். மேலும், ஒஸ்லோவில் இருந்த ஒரு குழு எல்டிடிஈ இயக்கத்துடனான தொடர்பாடல் செயன்முறையை நிலையான அடிப்படையில் பராமரித்து வந்தது. இன்று பேச்சுவார்த்தையில் ஈடுபடும் தரப்பினருக்கிடையிலான நேரடியான தொடர்பாடல்கள் பன்முக மட்டத்திலான தொடர்பாடல்களுக்கு வழிகோலியுள்ளது. இதுவும் இந்தச் செயன்முறையின் சாதகமான காரணிகளில் மிக முக்கியமான ஒன்றாகும்.

எவ்வாறிருப்பினும், தொடர்பாடல் செயன்முறையில் தீவிரமான பல குறைபாடுகள் இருந்து வந்துள்ளன. அவ்வப்பொழுது நோர்வேயின் பிரதியமைச்சர் கொழும்புக்கு மேற்கொள்ளும் வருகைகளும், ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் சம்பிரதாயபூர்வமான வருகைகளும் முன்னெடுக்கப்படவேண்டிய தீவிரமான ஆலோசனைச் செயன்முறைகளுக்கான ஒரு பதிலீடாக



இருந்து வரவில்லை. வானொலி உபகரணங்கள் இறக்குமதி செய்யப்பட்ட சர்ச்சையும்கூட உள் அதிகாரப் போராட்டத்தின் ஒரு பாகமாக இருந்து வந்ததுடன், இதில் நோர்வே அப்பாவித்தனமாகச் சிக்குண்டிருந்தது. கடந்த பல வருடகாலமாக தீவிரவாதச் சக்திகள் நோர்வே தூதரகத்திற்கு எதிரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்ததுடன், அங்குச் சவப்பெட்டிகளை வைத்தும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். அவர்கள் நோர்வே கொடியை எரித்ததுடன், அந்த நாட்டின் பக்கச் சார்பான செயல்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் இளம் பௌத்தப் பிக்குகளைக் கொண்டு வண்ணமயமான ஊர்வலங்களையும் நடத்திக்காட்டியிருந்தனர். தற்போதைய வெளிநாட்டு அமைச்சரான மங்கள சமரவீர நோர்வே காரர்களை ஒருமுறை சாலமன் மீன்களைச் சாப்பிடும் ஆசாமிகள் என வர்ணித்திருந்தார். நோர்வே குறித்த மக்களின் மனப்பதிவு எந்த அளவுக்கு இருந்தது என்றால் ஓர் அனுசரணையாளர் என்ற முறையில் அது வகித்துவரும் பாத்திரம், போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பாத்திரம் மற்றும் போர்நிறுத்த ஒப்பந்தம் என்பன இலங்கையின் எதிர்ப்பு அரசியலின் ஒரு பாகமாக உருவாகியுள்ளன. இந்த மனப் பதிவுகளைத் திருத்திக் கொள்வது சம்பந்தப்பட்ட இருதரப்பினருக்கும் உரிய வேலை என்பதே இது தொடர்பான நோர்வேயின் அனுமானம் போல் தெரிகிறது.

நோர்வே முக்கியத்துவம் குறைந்த ஒரு பாத்திரத்தை வகித்து வரவேண்டும் என இருதரப்பினரும் விரும்பியதாகச் சொல்ஹெய்ம் தனது பேட்டியில் குறிப்பிடுவதுடன், இது ஒரு தவறாக இருந்து வந்திருக்கும் என்பதையும் ஏற்றுக்கொள்கிறார். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதிவியேற்ற பின்னர் அதிகமாக இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறவில்லை. நோர்வே தூதரகத்திற்கு எதிரில் சவப்பெட்டிகள் கிடத்தப்படவுமில்லை; கொடிகள் எரிக்கப்படவுமில்லை. இது உண்மையிலேயே ஓர் எதிர்முரண் என்றே கூற வேண்டும். சமாதானச் செயன்முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் தீவிரவாத அரசியல் கட்சிகளின் வாக்கு வங்கிகளைக் கவரும் நோக்கத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசியல் செயல்திட்டங்களுக்கு நோர்வே இரையாகியுள்ளது என்பதனையே இது காட்டுகின்றது. அனுசரணையாளரை மாற்றுவது தொடர்பாக ஜனாதிபதி ராஜபக்ஷ ஜேவிபி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துகொண்டிருந்தபோதிலும், இப்பொழுது நோர்வேயின் வகிபாத்திரத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். இது வரவேற்கத்தக்க ஒரு மாற்றமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

10. ***நம்பிக்கையைக் கட்டியெழுப்புதலும் வழி விசுவாசத்தை உருவாக்குதலும்.*** போரால் சின்னாபின்னப்பட்டிருக்கும் சமூகங்களில் பெருமளவுக்கு மனிதத் துயரும் துன்பமும் அவநம்பிக்கையும் மனமுறிவும் நிலவி வருகின்றன. மோதலின் வடுக்களும் மோதலுடன் சம்பந்தப்பட்ட கடும்மன அதிர்ச்சிகளும் மக்களின் உள்ளங்களில் பசுமரத்தாணிபோல் பதிந்திருக்கின்றன. தமது அன்புக்குரியவர்களின் மரணம், காணிகள் மற்றும் சொத்துகள் என்பவற்றின் இழப்பு, உயிரிழப்புகள் ஆகியவற்றை மக்களால் ஒருபோதும் மறக்க முடிவதில்லை. மேலும், மனிதப் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்கள் எப்பொழுதும் அவர்களுடைய உள்ளங்களை அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாகச் சமாதானச் செயன்முறையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வழிமுறைகளை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இக்குறிக்கோள்களைச் சாதித்துக் கொள்ளும் பொருட்டு மனிதத் துன்பத்தையும் அச்சத்தையும் போக்கி, மக்கள் சமாதானத்தின் பயனை அனுபவிக்கக் கூடிய ஒரு நிலைமையை உருவாக்குவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். தலைவர்களுக்கிடையில் விசுவாசத்தை உருவாக்குவதும் வெற்றிக்கான ஒரு முன்நிபந்தனையாக இருந்து வருகின்றது. முந்தைய பேச்சுவார்த்தைகளின்போது இடம்பெற்ற போலித்தனமான நடத்தை, மீறப்பட்ட வாக்குறுதிகள் மற்றும் துரோகங்கள் என்பவற்றைக் கொண்ட நினைவுகளை இருதரப்பினரும் கொண்டுள்ளனர். தொடர்ச்சியான இடைத்தொடர்பு மற்றும் தொடர்பாடல்கள் என்பவற்றுக்கு ஊடாக இது களையப்படுதல் வேண்டும். ஒரு சில சந்தர்ப்பங்களில் பரஸ்பர நல்லெண்ண நடவடிக்கைகளும் ஒருவருக்கொருவர் இழைத்த கடந்தகாலக் குற்றச்செயல்களை ஏற்றுக்கொள்வதும் ஒரு பாரிய தாக்கத்தை எடுத்து வர முடியும்.

போர்நிறுத்த ஒப்பந்தம் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் ஒரு வழிமுறையாக நோக்கப்படுதல் வேண்டும். அது பெரும் தாக்கங்களைக் கொண்டிருந்ததுடன், பேச்சுவார்த்தைச் செயன்முறைக்கான ஒரு கட்டமைப்பையும் உருவாக்கியிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சம் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வழிமுறைகளுக்கும் தரப்பினருக்கிடையில் விசுவாசத்தை உருவாக்கும் வழிமுறைகளுக்கும் அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்ததாகும். அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் ஏற்பாடுகள் மற்றும் ஆயுதங்களைக் களைதல் என்பன தொடர்பான அடிப்படை விடயங்கள் பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகளின்போது எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என இருதரப்பினரும் முன்பே முடிவு செய்திருந்தனர். அந்தவகையில்



மக்களுக்கிடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதும், இருதரப்புகளுக்கும் இடையில் விசுவாசத்தை உருவாக்கிக்கொள்வதும் வெற்றிகரமான பேச்சுவார்த்தைச் செயன்முறை ஒன்றுக்கான அத்தியாவசியமான ஒரு முன்நிபந்தனையாக இருந்து வருகின்றது என்ற படிப்பினையை இருதரப்பினரும் முந்தைய பேச்சுவார்த்தைகளிலிருந்து கற்றுக்கொண்டிருந்தனர். போர்நிறுத்த ஒப்பந்தம் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட துணிச்சல் மிக்க, அபாய ஏதுக்கள் *(ரிஸ்க்ஸ்)* மலிந்த ஓர் உத்தியாக இருந்து வந்தது.

சர்வதேசக் கண்காணிப்புக் குழுவொன்று இலங்கையில் தாபிக்கப்படுவதற்கும் இந்த ஒப்பந்தம் வழிகோலியது. ஸ்கான்டினேவிய நாடுகளைச் சேர்ந்த இக்கண்காணிப்பாளர்கள் போர்நிறுத்த ஒப்பந்தத்தைக் கண்காணிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தனர். இவர்கள் ஆயுதங்களைக் கொண்டிராத ஓர் அமைதிப்படையாகவே இருந்து வந்துள்ளனர். இலங்கை அரசாங்கம் மற்றும் எல்டிடிஈ இயக்கம் தொடர்பான சமநிலையான விமர்சனங்களின் அடிப்படையில், தமது நடுநிலைத் தன்மையை எடுத்துக் காட்டியிருந்தனர். எனினும், சமாதானச் செயன்முறையை எதிர்த்தவர்கள் இக்கண்காணிப்பாளர்களை மிகக் கடுமையாக விமர்சித்து வந்துள்ளனர்.

போர்நிறுத்த ஒப்பந்தம் நாட்டின் மீது ஒரு பாரிய தாக்கத்தை எடுத்து வந்திருந்தது. போரால் சலித்துப்போயிருந்த நாடு, குண்டுகள் வெடிப்பது குறித்த அச்சமின்றியும் இரவில் தமது குடும்பங்களுக்குச் சடலங்களைச் சுற்றிய பொதிகள் வந்துசேர்வது குறித்த அச்சம் இன்றியும் காலையில் துயிலெழ முடிந்தது. பாதைத் தடைகள் உடனடியாக அகற்றப்பட்டதுடன், பிரயாணத்துக்கென பாதைகள் திறந்துவிடப்பட்டன. இரு பக்கங்களையும் சேர்ந்த மக்களுக்குத் தாராளமான விதத்தில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலை தோன்றியமையை அடுத்துப் பிரிந்திருந்த ஒரு தேசம் ஒன்றுபட்டது. இந்தச் சமாதான அனுகூலத்தின் மிக முக்கியமான அம்சம் உள்நாட்டுப் போர் இடம்பெற்று வந்த காலப்பிரிவுடன் ஒப்பிடும் பொழுது நேரடி வன்முறை இல்லாதிருந்தமையாகும். உள்நாட்டுப் போர் இடம்பெற்று வந்த காலப்பிரிவின்போது வருடாந்தம் சுமார் 6000 மக்கள் கொல்லப்பட்டதுடன், சுமார் 15000 பேர் காயங்களையும் ஊனங்களையும் எதிர்கொண்டனர். ஆனால், இங்கு இன்னொரு விடயத்தையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது, தென் இலங்கையில் வாழ்ந்துவரும் மக்கள் சமாதானத்தையும் அமைதியையும் அனுபவித்து வந்திருக்கும் அதேவேளையில், வடக்கைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொறுத்தவரையில் நிலைமை அவ்வாறிருக்கவில்லை. அங்கு வாழ்ந்து வரும் மக்கள் 40,000 பாதுகாப்புப் படையினரின் இருப்பத்தையும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களையும் மீன்பிடித்தல் தொடர்பான கட்டுப்பாடுகளையும் எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. யாழ்ப்பாணத் தீபகற்பம் முழுவதிலும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களும் இராணுவத் தளங்களும் சிதறுண்டிருப்பதும் மக்கள் தமது காணிகளையும் வீடுகளையும் மீளப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்து வருவதும் வடபுல மக்களைப் பொறுத்தவரையில் பெரும் மனக்கவலையையும் விரக்தியையும் ஏற்படுத்தும் விடயங்களாக உள்ளன.

தரப்பினருக்கிடையில் விசுவாசத்தை உருவாக்குவது பேச்சுவார்த்தைச் செயன்முறையின் முக்கியமான ஒரு காரணியாக இருந்து வந்துள்ளது. பேச்சுவார்த்தை மேசையில் இருதரப்பினருக்கும் இடையிலான நல்லெண்ண உணர்வு, தொடர்ச்சியான இடைத் தொடர்புகள் மற்றும் அனுசரணையுடன்கூடிய தொடர்பாடல்கள் என்பன பேச்சுவார்த்தைச் செயன்முறையின் முதன்மையான கூறுகளாக இருந்து வந்துள்ளன. துரதிர்ஷ்டவசமாகச் சர்வதேச சமூகத்துடன் வாஷிங்டனில் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட முடிவு எல்டிடிஈ இயக்கம் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக்கொள்ளும் ஒரு நிலையைத் தூண்டியது. அப்பொழுது பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. தென் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்கள் காரணமாக இந்த இடைநிறுத்தம் ஒரு நீண்டகாலப் பிரிவின்போது நீடித்தது.

பேச்சுவார்த்தைகளிலிருந்து எல்டிடிஈ இயக்கம் விலகிக் கொண்டது ஏன் என்பதற்கான காரணங்களை விளக்கும்பொழுது விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் தமக்கு ஏமாற்ற உணர்வு தோன்றுவதற்கான பல காரணங்களை அன்டன் பாலசிங்கம் முன்வைத் திருந்தார். அக்காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன. அன்டன் பாலசிங்கத்தின் நூல் குறித்த காயத்ரி விக்கிரசிங்கவின் மீளாய்வில் இந்த விடயங்கள் விரிவாக எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

பேச்சுவார்த்தைகளை வாஷிங்டனில் நடத்துவது என அரசாங்கம் தீர்மானித்ததன் மூலம் தரப்புகளுக்கு இடையிலான சமத்துவம் தொடர்பான அடிப்படைக் கோட்பாட்டை அது மீறியிருந்தது.

பாதுகாப்பு வலை தொடர்பான எண்ணக்கரு சர்வதேசச் சமூகத்தால் விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுடன் இணைந்த விதத்தில் எல்டிடிஈ இயக்கத்தை சமாதானப் பொறியொன்றுக்குள் சிக்க வைக்கும் அரசாங்கத்தின் மிகநுட்பமான ஒரு தந்திரமாக இருந்து வந்தது.



போரால் பாதிக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் மக்களின் துன்பத்தைப் போக்கும் பொருட்டு அரசாங்கத்தால் கணிசமான அளவில் நிவாரண அல்லது புனருத்தாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இந்தத் தொகுப்பிலுள்ள மூன்று கட்டுரைகள் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பல்வேறு பிரிவுகளையும் பகுப்பாய்வு செய்கின்றன. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற முறையில் ஆஸ்டின் பெர்னாண்டோ எழுதியிருக்கும் கட்டுரை இந்த ஒப்பந்தத்தின் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கவனத்தில் எடுப்பதுடன், அதன் பலம் மற்றும் பலவீனம் என்பவற்றையும் வெளிப்படுத்துகின்றது. பேச்சுவார்த்தைகளின்போது எடுக்கப்பட்ட பாதுகாப்பு வழிமுறைகள் சம்பந்தப்பட்ட தீர்மானங்கள் குறித்து அது கலந்துரையாடுகின்றது. மேலும், போர்நிறுத்த ஒப்பந்த மீறல்கள் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் ஒரு சில ஏற்பாடுகளுடன் சம்பந்தப்பட்டிருக்கும் விளக்க முடியாத வன்முறை குறித்தும் விரிவான விடயங்களை அது முன்வைக்கின்றது. ஜனாதிபதி, ஆயுதப்படையினரில் ஒரு பகுதியினர், ஊடகங்கள் மற்றும் எதிர்க்கட்சிகள் ஆகிய தரப்பினரின் எதிர்மறையான மனப்பாங்கினையும் அது எடுத்துக் காட்டுகின்றது.

பெர்னாண்டோவின் கட்டுரை முழுவதிலும் ஓடும் ஓர் இழை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கிடையிலான மோதலுடன் சம்பந்தப்பட்ட தடுமாற்ற நிலைகளாகும். ஜனாதிபதி பாதுகாப்பு படைகளின் பிரதம கட்டளைத் தளபதியாக இருந்து வந்ததுடன், பாதுகாப்புப் படையினர் நேரடியாக அவருக்கே பொறுப்புக் கூற வேண்டியிருந்தது. பாதுகாப்புச் சபைக் கூட்டங்களைப் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் அமலாக்கம் தொடர்பான தொழில்முறையான கலந்துரையாடல்களை நடத்துவதற்கான ஓர் இடமாக ஜனாதிபதி பயன்படுத்தவில்லை. மாறாக அவர் இந்த ஒப்பந்தத்துக்கு எதிரானத் தனது மனக்குறைகளை வெளிப்படுத்திக் காட்டினார். போர்நிறுத்த ஒப்பந்தத்தை உதாசீனம் செய்வதற்கு ஜனாதிபதி பலமுறை முயன்றிருப்பதை பெர்னாண்டோ எடுத்துக் காட்டுகிறார். மேலும், இது தொடர்பாகப் பாதுகாப்புப் படைகளிடம் போதியளவில் ஆலோசனைகள் நடத்தப்படவில்லை என்ற விடயத்தையும் அதன் காரணமாகப் படையினர் இந்த ஒப்பந்தத்தைத் தமக்குரிய ஓர் ஒப்பந்தமாகக் கருதாமல் இருந்திருக்கலாம் என்ற விடயத்தையும் அவர் ஏற்றுக்கொள்கிறார். இந்த ஒப்பந்தத்தின் ஒவ்வொரு வாசகம் தொடர்பாகவும் விரிவான ஒரு பகுப்பாய்வு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்வைக்கப்படுகின்றது. போர்நிறுத்த ஒப்பந்தத்தின் தாக்கமான அமலாக்கத்தை விரும்புபவர்களைப் பொறுத்தவரையில் இவை பெறுமதிமிக்க விடயங்களாக இருந்துவர முடியும்.

போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்த தனது மீளாய்வில் பிரியன் செனவிரத்ன மற்றும் டினிது என்ரகல ஆகியோர் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் வெளிக்களச் செயல்பாடு குறித்த விவரணரீதியிலான ஒரு பகுப்பாய்வை முன்வைக்கின்றனர். பெருமளவுக்கு மனக் கிலேசம் ஊட்டிய ஒரு தோற்றப்பாடு குறிப்பாக 2004–2005 காலப் பிரிவின்போது அதிகரித்து வந்த அரசியல் கொலைகளாகும். இக்கொலைகளைச் செய்தவர்கள் யார் என்பதை அடையாளம் காண முடியாதிருந்தது. இதன்விளைவாக இவற்றைப் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் மீறல்கள் எனக் கருத முடியாதிருந்தது. இனங்காணப் பட்டிருந்த ஏனைய முக்கியமான அம்சங்களில் சிறுவர்களைப் படையணிகளில் சேர்த்துக்கொள்வது தொடர்பான உறுப்புரை 2.1 விடுதலைப்புலிகள் இயக்கத்தால் மீறப்பட்டமை மற்றும் அதனால் மேற்கொள்ளப்பட்ட ஆட்கடத்தல்கள் என்பவற்றைக் குறிப்பிட முடியும். மற்றொரு பாரதூரமான மீறல் உறுப்புரை 1.8 அமல் செய்யப்படாதிருந்தமையாகும். இதன்கீழ் தமிழ்த் துணைப்படை களின் ஆயுதங்களைக் களையும் விடயத்தில் அரசாங்கம் தோல்வி கண்டிருந்தது. 2004ஆம் ஆண்டில் கருணா பிளவை – வெளி யேற்றத்தை அடுத்து நிலைமை மோசமடைந்தது. போர்நிறுத்த ஒப்பந்தம் அமலாக்கப்பட்டு வந்த காலப் பிரிவு முழுவதிலும் சுமார் 700க்கும் மேற்பட்ட ஆட்கள் கொலை செய்யப்பட்டனர். ஆனால், இது தொடர்பாக எந்த ஒரு நபரும் கைதுசெய்யப்படவில்லை. சட்டத்தை அமலாக்கும் முகவரான பொலிஸார் இக்கொலைகள் தொடர்பான தெளிவுபடுத்தல்களையும் நிர்ணயங்களையும் மேற் கொள்ள முடியாத நிலையில் இருந்து வந்தனர் என்பதே இதன் பொருளாகும். விசாரணைகளை நடத்திக் குற்றவாளிகளைக் கைது செய்வதற்கான பொலிஸாரின் ஆற்றல், மிகக் கடுமையான விதத்தில் வரையறுக்கப்பட்டிருந்தது என்பது தெளிவாகும்.

இலங்கை சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகமான பேர்ணாட் குணதிலக போர்நிறுத்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்ட விதம் குறித்து ஆழமான அறிவைக் கொண்டுள்ளார். அந்த வகை யில் அவர் இங்கு ஒரு சுவாரஸ்யமான பகுப்பாய்வைத் தருகிறார். இந்த ஒப்பந்தத்தைக் கையெழுத்திடுவதில் அநாவசியமான ஒரு அவசரம் இருந்து வந்தது என அவர் வாதிடுகிறார். அவருடைய வார்த்தைகளில் கூறுவதானால், 'எவ்வாறிருப்பினும், இருதரப்



பினராலும் இழைக்கப்பட்ட முடிவுகளை எடுப்பதுடன் சம்பந்தப் பட்ட முதலாவது தவறு போர்நிறுத்த உடன்படிக்கை அவசர அவசரமாகப் பேசித் தீர்க்கப்பட்டமையாகும். இது நிறைவேற்றி வைக்க முடியாத எதிர்பார்ப்புகளுக்கு வழிகோலியிருந்தது.' அவர் மேலும் பின்வருமாறு வாதிடுகிறார்:

> ஆரம்பத்திலிருந்தே சமாதானச் செயன்முறையுடன் சம்பந்தப்பட்டிருந்த ஒருவர் என்ற முறையில் இந்த ஒப்பந்தத்தின் முதல் வரைவு தொடர் பாக நோர்வே அனுசரணையாளர்களுடன் நடத்தப்பட்ட பூர்வாங்கக் கலந்துரையாடலை என்னால் சரியாக நினைவுகூர முடியும். முறைசாராத போர்நிறுத்தத்தின் மூன்றாம் மாதத்தின் நீடிப்பு முடிவடைவதற்கு முன்னர் 2002ஆம் வருடம் பிப்ரவரி மாதத்துக்குள் முறையான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதே அவர்களுடைய முன்னுரிமையாக இருந்து வந்தது. அந்தச் செயன்முறையின்போது இந்த உடன்படிக்கையின் சாரத்தைவிட அது உடனடியாக கையெழுத்திடப்பட வேண்டிய விடயத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

இந்த வரைவை முழுவதும் பரிசீலித்து தமது அவதானிப்பு களை முன்வைப்பதற்கான வாய்ப்பு பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப்படவில்லை என்று அவர் மேலும் வாதிடுகிறார்:

> மேலும், எல்டிடிஈ இயக்கத்திடமிருந்து உள்ளீடுகளைப் பெற்றுக் கொண்டிருந்த தமது வரைவே அந்த இயக்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய உயரளவிலான வாய்ப்புகளைக் கொண்டுள்ளது என நோர்வே தரப்பினர் வலியுறுத்தினர். இதன் பொருள் இந்த வரைவில் எத்தகைய திருத்தங்கள் மேற்கொள்வதையும் அவர்கள் விரும்பவில்லை என்பதாகும்.

குணதிலக மேலும் பின்வருமாறு கூறுகிறார்:

> ஆயுதப்படையினர் நிலைகொண்டிருந்த சமய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பொதுக்கட்டடங்கள் என்பவற்றிலிருந்து குறிப்பிட்ட காலப் பிரிவுக்குள் வெளியேறுதல் போன்ற நிபந்தனைகள் மற்றும் இலக்குகள் என்பவற்றைப் பாதுகாப்புப் படையினர் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. இவை அமலாக்குவதற்கு கடினமான விடயங்களாகும்.

மறுபுறம், இத்தொகுதியில் இடம்பெற்றிருக்கும் பேட்டியில் ஜனாதிபதியுடன் கலந்தாலோசிக்கத் தவறியது ஏன் எனக் கேட்கப் பட்டபொழுது நோர்வே அனுசரணையாளர் அதற்குப் பின்வருமாறு பதிலளித்துள்ளார்:

> அது சமாதானச் செயன்முறையின் மிகவும் உவப்பான அம்சங்களில் ஒன்றாக இருந்து வரவில்லை. அதற்கு நான் எவரையும் குறைகூறப் போவதில்லை. ஆனால், அது பின்னர் பெருமளவுக்குக் கசப்புணர்வு களை ஏற்படுத்தியிருந்தது. (சமாதானச் செயன்முறைக்கான பொறுப்பு இருதரப்பினரதும் கைகளில் இருந்து வருகின்றது என்ற விடயத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்ஹெய்ம் இப்பேட்டியில் வலியுறுத்துகிறார்). நான் கடந்த ஏழு வருட காலமாக இதில் சம்பந்தப்பட்டுள்ளேன். ஆனால், இக்காலப்பிரிவின் போது நான் அறிந்தவரையில் இது தொடர்பாக நோர்வேயினால் எந்த ஒரு முடிவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதுவே இந்த விளையாட்டின் இயல்பாகும்'.

இருதரப்பினருடனும் போதியளவில் கலந்தாலோசனைகளை நடத்தும் விடயம் தொடர்பாக சொல்ஹெய்ம் பின்வருமாறு வாதிடுகிறார்:

> நான் இந்த ஒப்பந்தத்தின் பிரதானத் தேவைப்பாடுகள் குறித்து லண்டனில் அன்டன் பாலசிங்கத்துடன் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தினேன். பின்னர் கொழும்பில் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், மிலிந்த மொரகொட மற்றும் ஏனையவர்கள் போன்ற அரசாங்கத் தலைவர்களுடன் பேசினேன். பிரச்சினைகள் மற்றும் கரிசனைகள் என்பன குறித்துக் கலந்துரையாடுவதிலும் வரைவைப் பரிசீலிப்பதிலும் பல மணிநேரங்களை நாங்கள் செலவிட்டுள்ளோம். இருதரப்பினரும் பெருந்தொகையான மாற்றங்களை மேற்கொண்டதுடன், அந்த வரைவை மீண்டும் எம்மிடம் எடுத்து வந்தார்கள். பின்னர் நான் மீண்டும் ஒரு புதிய யோசனையைத் தயாரித்தேன். அதற்கு இரண்டு மாதகாலம் எடுத்தது. அது பிப்ரவரி 22ஆம் நாள் கையெழுத்திடப்பட்டது. கலந்துரையாடல்களிலும், ஒப்பந்தத்தை வரைவதிலும் 6–8 வார காலம் செலவிடப்பட்டிருந்தது.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வகிபாத்திரம் குறித்துக் கணிசமான அளவிலான தப்பெண்ணங்கள் இருந்து வருவதைக் காண முடிகிறது. போர்நிறுத்த ஒப்பந்தத்தை வாசித்துப் பார்க்கும்பொழுது இந்த முரண்பாட்டுக்கான தரப்பினர் – அதாவது இலங்கை அரசாங்கம் மற்றும் எல்டிடிஈ இயக்கம் ஆகிய தரப்பினர் – இந்த ஒப்பந்தத்தை அலாக்குவதற்குப் பொறுப்பாக இருந்து வருகின்றனர் என்பதைக் காண முடிகிறது. இந்த ஒப்பந்தம் மேலே இருந்து திணிக்கப்படவில்லை. அதற்கு மாறாக இருதரப்பினரும் தாமாகவே முன்வந்து அதில் கையொப்பமிட்டுள்ளனர். இங்குப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, கண்காணிப்பாளர் பாத்திரத்தையே வகித்து வருகின்றது. ஆனால், சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த ஒப்பந்தத்துக்கு இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான அதிகாரங்கள் அதற்கில்லை. இக்குழு நீல ஹெல்மட்டுகளை அணிந்து செல்லும் சுமார் 60 நிராயுதபாணி நபர்களைக் கொண்டுள்ளது. பொதுமக்களுக்குப் போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்தோ அல்லது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பாத்திரம் குறித்தோ தகவல்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எந்த ஒரு தரப்பும் மேற்கொண்டிருக்கவில்லை. இக்குழுவின் தலைமைப்பொறுப்பேற்பதில் நோர்வே ஆர்வம்காட்டவில்லை எனச் சொல்ஹெய்ம்



தனது பேட்டியில் வாதிடுகின்றார். இதற்கு நோர்வே தலைமை வகிக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட இருதரப்புகளும் வலியுறுத்தி வந்திருப்பதுபோல் தெரிகிறது. ஜெனிவாவில் பிப்ரவரி 22–23ஆம் தேதிகளில் நடைபெறவுள்ள பேச்சுகளின்போது போர்நிறுத்த ஒப்பந்தத்தின் அமலாக்கம் மிகவும் தீவிரமான விதத்தில் ஒரு மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் என்பதில் சந்தேகமில்லை.

11. **பல தரப்பு மத்தியஸ்தம் மற்றும் நிலைத்து நிற்கக்கூடிய விதத்தில் கட்டமைக்கப்படும் செயன்முறைகள்.** மத்தியஸ்தம் என்பது பெரும்பாலும் ஒரு முரண்பாட்டின் முதன்மையான தரப்பினருக்கிடையில் இடம்பெற்றுவரும் ஒரு விடயம் என நோக்கப்பட்டு வருகிறது. இங்கு அத்தகைய ஒரு முறைசார்ந்த அமைப்பில் ஒரு மத்தியஸ்தரின் தலைமையின்கீழ் உயர்மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னரும் ஊடகங்களுக்கு ஓர் அறிக்கை வெளியிடப்படுகின்றது. ஆனால், நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் முரண்பாடுகள் நாட்டில் பல தரப்பட்ட முரண்பாடுகளாக இருந்து வருகின்றன என்பதையே காட்டுகின்றன. அதாவது, இரண்டாம் மட்டத்தில் பெருந்தொகையான அரசியல் மற்றும் இனத்துவ முரண்பாடுகள் நிலவி வருகின்றன. இந்தப் பன்முக முரண்பாடுகள் கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும்; அவ்வாறு செய்யாவிடின் அவை அரங்கின் மையத்துக்கு வந்து, ஒட்டு மொத்தச் சமாதானச் செயன்முறையையும் சீர்குலைக்க முடியும். சமாளிக்க முடியாத பிரச்சினைகளுக்கான மூலங்களைகளின் பொருட்டு இந்த இரண்டாம்தர முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு மத்தி யஸ்த மற்றும் அனுசரணைச் செயல்பாடுகளும் இணையான அளவில் தேவைப்படுகின்றன. செயன்முறை குறித்த ஒரு வடிவமைப்பு இந்தப் பன்முக முரண்பாடுகளைக் கவனத்தில் எடுத்துக் கண்காணிப்பது அவசியமாகும். மேலும், நிலையான ஓர் அடிப்படையில் இப்பிரச்சினைகளைக் கவனத்தில் எடுப்பதில் ஏனைய செயல்பாட்டாளர்களும் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக இந்தப் பெறுமதிமிக்கப் படிப்பினைப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் புறக்கணிக்கப்படுவதுடன், இரண்டாம்தர முரண்பாடுகள் முற்றிச் செல்வதற்கும் பேச்சுவார்த்தைச் செயன்முறையைப் பாதிக்கக் கூடிய அளவுக்கு தீவிரமடைவதற்கும் இடமளிக்கப்படுகின்றது. பன்முக முரண்பாடுகள் குறித்த இந்த எண்ணக்கரு நாங்கள் ஒரு முரண்பாடு தொடர்பாக நீளவாக்கிலான அணுகுமுறைகளைக் கைவிட்டுப் பக்க வாட்டிலான சிந்தனையைப் பின்பற்ற வேண்டியுள்ளது என்பதையே குறிக்கின்றது. அதற்கெனப் பெருந்தொகையான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூன்றாம் தரப்புகளால் பன்முக மத்தியஸ்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. இத்தகைய மத்தியஸ்தங்களின் தடம் 2 மட்டத்தில் முக்கியத்துவம் பெறும் விடயம் அவை மிகச் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டி ருப்பதுடன், நிலைத்து நிற்கும் இயல்பையும் கொண்டிருப்பதாகும்.

இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய விடயம் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் மத்தியஸ்தச் செயன்முறை ஒன்றைக் கட்டமைப்பதற்கென முறையான பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதாகும். இரு கட்சிகளும் இச்செயன்முறைக்கு ஆதரவளிக்கக்கூடிய ஓர் அமைப்பை உருவாக்கிக்கொள்வதற்கென எளிதில் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய கருவிகள் மற்றும் பொறிமுறைகள் இருக்கின்றன என்பதில் சந்தேக மில்லை. லியாம் ஃபாக்ஸ் முன்முயற்சியின் பின்னர் பிரச்சினைக்கான இருபக்கத் தீர்வொன்றை உருவாக்கும் பொருட்டு அவ்வப்போது சந்தர்ப்பவாத இயல்பிலான முயற்சிகள் மட்டுமே மேற்கொள்ளப் பட்டு வந்துள்ளன.

நிலையான மத்தியஸ்தச் செயல்பாடு அவசியமாக இருந்துவரும் மற்றொரு துறை காணி தொடர்பான பிரச்சினைகளின் தீர்வாகும். தமது சொந்த இடங்களுக்கு மீண்டும் திரும்பிவரும் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் மக்களும் அகதிகளும் தமது வீடுகளில் சிலவற்றில் ஏற்கனவே வேறு ஆட்கள் வசித்து வருவதைக் காண நேரிடலாம். உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் மக்களில் ஒரு சிலர் உயர்பாதுகாப்பு வலயங்களில் பிரவேசிக்க முடியாதிருக்கலாம். பலவந்தமாக வெளியேற்றப்பட்ட சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் தமது வீடுகள் மற்றும் வியாபார தாபனங்கள் என்பவற்றை வேறு நபர்கள் கைப்பற்றிக் கொண்டிருக்கும் ஒரு நிலையை எதிர்கொள்வார்கள். அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வை வழங்கும் பொருட்டு சமாதானக் கண்காணிப்பாளர்கள் அவர்களுடன் சேர்ந்து செல்ல வேண்டும். கிழக்கு மாகாணத்தில் சுமார் 45,000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட தமது காணிகள் எல்டிடிஈ இயக்கத்தால் பலவந்தமாக அபகரித்துக் கொள்ளப்பட்டுள்ளன என முஸ்லிம்கள் கூறுகின்றனர். உரிமைக் கோரல்களை முன்வைக்கும் ஒரு காணிப் பதிவேடு தம்மிடம் வழங்கப்பட்ட பின்னர் இக்காணிகள் திருப்பி அளிக்கப்படும் என எல்டிடிஈ இயக்கம் வாக்குறுதி அளித்துள்ளது. இக்காணிகள் தற்பொழுது ஏனையவர்களின் வசம் இருந்து வருகின்றன. அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்குக் கூட்டாகவும் தனிப்பட்ட முறையிலும் மத்தியஸ்தம் மற்றும்



பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல் ஆகிய செயல்பாடுகள் தேவைப் படுகின்றன. நாட்டின் ஏனைய பகுதிகளில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் மத்தியஸ்த சபைகள் வடக்கு, கிழக்குப் பகுதியில் முனைப் புடன் இயங்கி வரவில்லை. சொத்துகளை முறையான விதத்தில் கைமாற்றும் பொருட்டு மத்தியஸ்தம் மற்றும் அனுசரணைத் திறன்கள் அபிவிருத்திச் செய்யப்பட வேண்டும் என்பதையும், ஆற்றல்கள் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதையுமே இவையனைத்தும் எடுத்துக்காட்டுகின்றன.

12. **சுமைகளைப் பகிர்ந்துகொள்ளல்.** உள்ளகச் செயல்பாட்டாளர்கள் இம்முரண்பாட்டைத் தீர்த்துவைப்பதற்கான ஆற்றலைக் கொண்டிருக்க வில்லை. இந்த முறுகல் நிலைக்கான மூலகாரணங்களைக் கையாளக் கூடிய நிலையிலும் அவர்கள் இருந்து வரவில்லை. இதனால் சுமை களைப் பகிர்ந்துகொள்ள வேண்டிய தேவை தோன்றியுள்ளது. உள்நாட்டுப் போர்களைப் பொறுத்தவரையில் இருதரப்பினரும் வன்முறை மற்றும் அவநம்பிக்கை கொண்ட ஒரு விஷச் சூழலில் சிக்கியுள்ளனர். இதனைத் தங்கியிருக்கும் ஓர் உறவு முறையுடன் ஒப்பிட முடியும். ஒரு முரண்பாட்டின் சுமைகளைப் பகிர்ந்து கொள்வதன் நோக்கம், முரண்பாட்டில் சம்பந்தப்பட்டுச் சண்டை யிட்டுக் கொண்டிருப்பவர்களின் முக்கியமான பிரச்சினைகள் மற்றும் கரிசனைகளைக் கவனத்தில் எடுப்பதற்கென மத்தியஸ்தர்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்திக்கொள்வதாகும். முரண்பாட்டைத் தீர்த்துவைக்கும் நோக்கில் சர்வதேசக் கரிசனைக் குழுவொன்றை உருவாக்குவதன் மூலம் சச்சரவில் ஈடுபட்டு வரும் தரப்பினர் ஒரு மூன்றாம் தரப்பினரிடம் தமது அச்சங்கள் மற்றும் கவலைகள் என்ப வற்றை எடுத்துக்கூறக்கூடிய ஒரு வாய்ப்புக் கிடைக்கும். மேலும், அது ஒவ்வொரு தரப்பும் பரந்த சர்வதேசச் சமூகம் ஒன்றுக்குப் பொறுப்புக்கூற வேண்டியுள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒரு வழிமுறையாகவும் இருந்து வருகின்றது. தமது பேரம் பேசும் நிலையைத் தக்கவைத்துக் கொள்வதற்கு இது அவசியமாகும்.

சுமை எந்த அளவுக்கு அதிகமாக பகிர்ந்துகொள்ளப்படுகின்றதோ அந்த அளவுக்கு ஒரு தரப்பினர் இச்செயன்முறையிலிருந்து வெளியேறும் வாய்ப்புக் குறைவடைகின்றது. மேலும், முரண்பாடு கட்டுக்குள் வைத்துக்கொள்ளப்படும் அளவும் உயர்வடைகின்றது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால் சுமையைப் பகிர்ந்துகொள்வது முரண்பாட்டு நிலையில் ஒரு நிலைமாற்றம் தோன்றுவதற்கு உதவும். உபாயரீதியான ஆதரவுக் கட்டமைப்பொன்றை உருவாக்கிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்வது அத்தகைய ஒரு சட்டகத்தை வழங்குகின்றது. நாம் இங்கு ஒரு தொழில் பிரிவை உருவாக்கிக்கொள்வது சாத்தியமாகும். சர்வதேசச் சமூகத்தின் செயல்பாட்டாளர்கள் அதற்குள் நின்று தமது தனித்துவமான பாத்திரங்களை வகித்துவர முடியும். இச்செயன் முறை உரிய பாதையில் பயணிப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டுத் தமது திறன்களைப் பிரயோகிக்கக்கூடிய வாய்ப்பும் அவர்களுக்குக் கிடைக்கும். மொஸாம்பிக் நாட்டின் பேச்சுவார்த்தைச் செயன்முறையில் பெருந்தொகையான சர்வதேசச் செயல்பாட்டாளர் களும் நாடுகளும் பங்கேற்றிருந்தனர். இது தொடர்புக் 'குழுச் சூத்திரம்' என அழைக்கப்பட்டது. இச்சூத்திரத்தின்கீழ் சுமையைப் பகிர்ந்துகொள்ளும் முயற்சிகள் இருந்து வந்தன. சில சந்தர்ப்பங் களில் இத்தகைய கூட்டுகள் 'செயன்முறையின் நண்பர்கள்' என அழைக்கப்பட்டு வருகின்றன. வட அயர்லாந்து, குவதமாலா, தென்னாப்பிரிக்கா மற்றும் எல் சல்வடோர் பேச்சுவார்த்தைச் செயன்முறைகள் குறித்த ஆய்வு, சுமைகளைப் பகிர்ந்துகொள்ளும் தொடர்புக் குழுக்கள் அத்தகைய தொழில் பிரிப்பை மேற்கொள்ளக் கூடிய ஆற்றலைக் கொண்டிருந்தன என்பதையும் செயன்முறையின் நிலையான இயல்புக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய நிலையில் இருந்துவந்தன என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது. எவ்வாறிருப் பினும், செயன்முறையை மிதமிஞ்சிய அளவில் சர்வதேசமய மாக்குதல் தொடர்பான ஓர் அபாயமும் உள்ளது. அந்த நிலையில் தாம் விரும்பித் தெரிவு செய்யாத ஒரு கட்டமைப்புப் பொறிக்குள் சிக்கியிருப்பதை ஒரு தரப்பு உணர்ந்துகொள்ள முடியும். ஒரு தரப்பின் சார்பில் பிரச்சினை மிதமிஞ்சிய அளவில் சர்வதேசமயமாக்கப் பட்டிருக்கும் நிலை மற்றும் ஒரு தரப்பினரின் செயன்முறைப் பொறியொன்றுக்குள் அகப்பட்டுக்கொண்டிருக்கும் உணர்வு ஆகிய இரு விடயங்களையும் இலங்கையின் பின்னணியில் நாம் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

சர்வதேசச் சமூகத்திலிருந்து அமோகமான ஆதரவைப் பெற்றுக் கொண்டமையே அரசாங்கத்தின் மிக முக்கியமான ஒரு சாதனையாக இருந்து வந்துள்ளது. சமாதானச் செயன்முறையைச் சர்வதேச மயமாக்கியது ரணில் விக்கிரமசிங்கவின் தனித்துவமான ஒரு சாதனையாக இருந்து வருகின்றது என்பதே இத்தொகுப்புக்குக் கட்டுரைகளைப் பங்களிப்புச் செய்திருக்கும் பிரட்மன் வீரக்கூன் மற்றும் ஏனைய பல கட்டுரையாசிரியர்கள் ஆகியோரின் கருத்தாக உள்ளது. விக்கிரமசிங்க அத்தகைய ஓர் உத்தியை அபிவிருத்தி செய்து கொண்டமைக்குப் பல காரணங்கள் இருந்துள்ளன. அரசாங்கத்தால் பின்பற்றப்பட்ட புதிய தாராளவாதப் பொருளாதாரக் கொள்கை



சர்வதேச ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை அரசாங்கத்துக்கு எடுத்து வந்திருந்தது. கொடை வழங்குநர்களும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் புதிய தாராளவாதப் பொருளா தாரச் செயல்திட்டத்தை ஆதரித்தார்கள். உண்மையிலேயே விக்கிரம சிங்கவுக்குக் கிடைத்த ஆதரவின் அளவு மற்றும் வீச்சு என்பன மிக உயர்மட்டத்தில் இருந்து வந்தன. வீரக்கூன், நொயார், பஸ்டியன் மற்றும் கெலேகம ஆகிய அனைவரும் இச்சாதனையின் பரிமாணத்தை ஏற்றுக்கொள்கின்றனர். மேலும், வெளிப்படையாகப் புலப்பட்ட ஒரு விடயம் பொருளாதார உறுதிப்பாட்டை நாட்டின் பாதுகாப்புடன் பிணைத்துக்கொள்ளும் நோக்கம் விக்கிரமசிங்கவுக்கு இருந்து வந்தது என்பதாகும். அந்தவகையில் விக்கிரமசிங்க மற்றும் மிலிந்த மொரகொட ஆகியோரால் எடுத்து விளக்கப்பட்ட பாதுகாப்பு வலை குறித்த எண்ணக்கரு ஒரு பொருளாதார உத்தியாக மட்டும் இருந்து வரவில்லை. இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதில் சர்வதேசச் சமூகம் சம்பந்தப்பட்டிருக்கும் ஒரு பாதுகாப்பு உத்தியாகவும் அது இருந்து வந்தது. சமாதானத்தின் பயன்களுடன் பிணைக்கப்பட்ட துரிதப்படுத்தப்பட்ட பொருளாதார அபிவிருத்தி உத்தியொன்று சர்வதேசத் தர நியமங்களுக்கு இணங்கி ஒழுகும் ஒரு கட்டமைப்புக்குள் பிரவேசிப்பதற்கு எல்டிடிஈ இயக்கத்தைத் தூண்ட முடியும் என அரசாங்கம் நம்பி வந்தது என்பதைக் காண முடிகிறது. இந்த இரட்டைக் குறிக்கோளைச் சாதித்துக்கொள்ளும் பொருட்டுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் மிலிந்த மொரகொடவும் இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, சீனா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த நாடுகளுக்குப் பல முக்கியமான பயணத்தை மேற்கொண்டார்கள். ஐக்கிய அமெரிக்காவுடனான பாதுகாப்பு ஒப்பந்தங்களை நீடித்துக்கொள் வதற்கும் இந்தியாவுடன் ஒரு புதிய பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

நிவாரணம் மற்றும் மறுகட்டமைப்புக்கான சுமையைப் பகிர்ந்து கொள்வதற்கு சர்வதேசச் சமூகம் தயாராக இருந்து வந்துள்ளது. ஆதரவு வழங்கும் ஒரு கட்டமைப்பை உருவாக்கிக்கொண்டதும் சுமைகளைப் பகிர்ந்துகொண்டதும் ஒரு தனித்துவமான சாதனையாக இருந்து வந்துள்ளன. ஏனைய நாடுகளில் இடம்பெற்றிருக்கும் இத்தகைய செயன்முறைகளுக்குக் கிட்டியிருக்கும் சர்வதேச ஆதரவின் அளவுடன் ஒப்பிடும்பொழுது இலங்கை இந்த விதத்தில் அதிர்ஷ்ட சாலியாகவே இருந்து வந்துள்ளது. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய அரசு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த நாடுகள் உபாயரீதியான ஓர் ஆதரவுக் கட்டமைப்பை வழங்கியதுடன், இருதரப்பினருக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயல்படுவதற்கான சட்டகம் ஒன்றையும் வழங்கியிருந்தன. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐநா முகவரகங்கள் *(ஏஜென்சீஸ்)* போன்ற பல்தரப்பு முகவரகங்களும் இந்தச் செயன்முறைக்கு ஆதரவு வழங்கும் விதத்தில் ஒருமித்த சிந்தனையுடன் செயல்பட்டிருந்தன. மேலும், மிக முக்கியமான புள்ளிகளும் சர்வதேச ஆளுமைகளும் இலங்கைக்கு வருகை செய்த வண்ணமிருந்தனர். இலங்கையின் முரண்பாடு போதிய அளவுக்கு சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளது என்பதனையே இவை அனைத்தும் எடுத்துக்காட்டுகின்றன. ஒஸ்லோவிலும் ஜப்பானிலும் நடத்தப்பட்ட உதவி வழங்குநர்களின் இரு மகாநாடுகளில் இலங்கைக்கு 4.5 பில்லியன் அமெரிக்க டாலர் பெறுமதியான உதவியை வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் மற்றும் நோர்வே போன்ற நாடுகள் சமாதானச் செயன்முறையின் இணைத் தலைமைகளாக நியமிக்கப்பட்டன.

சர்வதேச சமூகத்தின் அழுத்தம் எல்டிடிஈ இயக்கத்தின் மீது ஒரு தாக்கத்தை எடுத்து வந்திருக்கும் என்றும் மனித உரிமைகள் மற்றும் சிறுபான்மையினரின் பாதுகாப்புத் தொடர்பான சர்வதேசத் தர நியமங்களை அனுசரித்துச் செல்வதற்கு அதனைத் தூண்டியிருக்க முடியும் என்றும் அனுமானிக்கப்பட்டிருந்தது. சிறுவர் சிப்பாய்கள் தொடர்பான யூனிசெஃப் அமைப்பின் செயல்பாடுகளையும், இந்த விடயம் தொடர்பாக ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான முயற்சிகளையும் இங்கு முக்கியமாகக் குறிப்பிடுதல் வேண்டும். இலங்கைக்கான உதவி வழங்கும் சமூகத்துக்குத் தலைமை வகிப்பதற்கான அதன் விருப்புக்கு ஊடாகச் சமாதானச் செயன்முறைக்குள் ஜப்பானின் பிரவேசமும் இலங்கைக்கான விசேட தூதுவராக அகாஷி நியமனம் செய்யப்பட்டதும் இச்செயன்முறைக்குப் புதிய பரிமாணங்களை எடுத்து வந்தன. ஜப்பான் இலங்கையின் மிகப் பெரிய கூட்டாளி நாடாக இருந்து வருவதுடன், பாரிய அளவிலான அபிவிருத்தி உதவிகளையும் இலங்கைக்கு வழங்கி வருகின்றது. மேலும், இலங்கையுடன் நீண்ட காலம் தொடர்புகளைப் பராமரித்து வந்திருக்கும் ஓர் ஆசிய நாடாகவும் அது இருந்து வருகின்றது. அது பௌத்த மதப் பாரம்பரியங்களைக் கொண்டுள்ளது என்ற விடயம் இச்செயன்முறையின் ஐரோப்பிய மைய நிலையை ஓரளவுக்குக் குறைக்கின்றது. மேலும், ஜப்பானிய வெளிநாட்டுக் கொள்கையில் ஒரு புதிய மாற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் சமாதான உருவாக்கத்துக்கு அது கணிசமான அளவிலான உள்ளீடுகளை வழங்குவதற்கு இப்போது முன்வந்துள்ளது. இது மத்தியஸ்தச் செயன்முறையில் நோர்வேயின் வகிபாத்திரம் குறைவடைந்துள்ளது என்பதைக்



காட்டவில்லை. மாறாக, இச்செயன்முறையில் திட்டவட்டமான விதத்தில் ஈடுபடுவதற்கென சர்வதேசச் சமூகத்துக்கு அழைப்பு விடுக்க வேண்டிய அவசியத்தை இது வலியுறுத்துகிறது. சர்வதேசமயமாக்கலின் மற்றொரு அம்சம் ஒரு சில பேச்சுவார்த்தைச் சுற்றுகளின்போது பிரசன்னமாகியிருக்கும் பொருட்டு மனித உரிமைகள் தொடர்பான ஆலோசகர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டதாகும்.

13. **சர்வதேசப் பாதுகாப்பு வலை.** நான் ஏற்கனவே வாதிட்டதுபோல, இலங்கைக்கான சர்வதேச ஆதரவுத் தளத்தை விரிவாக்கிக்கொள்ளும் பொருட்டு விக்கிரமசிங்க அரசாங்கத்தால் – பாதுகாப்பு வலை, என்ற எண்ணக்கரு முன்னெடுக்கப்பட்டது. மேலும், எல்டிடிஈ இயக்கத்தை ஒரு சர்வதேசக் கட்டமைப்புக்குள் எடுத்துவரும் நோக்கத்துடனும் இந்த உத்தி உருவாக்கப்பட்டிருந்தது. அப்பொழுது தராதியான சட்டகம் ஒன்றை ஏற்றுக்கொள்ளச் செய்யும் விதத்தில் எல்டிடிஈ இயக்கத்தை நிர்ப்பந்திக்கக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும். அதாவது, மனித உரிமைகள், பன்முகத் தன்மையை ஏற்றுக்கொள்ளல் மற்றும் இயக்கத்தை ஜனநாயக அரசியல் சக்தியொன்றாக நிலைமாற்றம் செய்தல் போன்றவற்றுக்கான கடப்பாட்டுக்கு எல்டிடிஈ இயக்கம் இணங்கியொழுக வேண்டியிருக்கும் என்பதே இதன் பொருளாகும். மேலும், இந்தப் பாதுகாப்பு வலை எண்ணக்கரு இலங்கையின் பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு என்பவற்றை உறுதிப்படுத்துவதிலும் மிக முக்கியமான ஒரு பங்கை வகிக்க வேண்டியிருந்தது. ஐக்கிய அமெரிக்காவுடனான இராணுவ உதவி நிகழ்ச்சித் திட்டத்தை விரிவாக்கிக்கொள்வதற்கென இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் இந்தியாவுடன் ஒரு புதிய பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதற்கென மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் அத்தகைய ஓர் உத்தியை நோக்கிய ஒரு சில கூறுகளாக இருந்து வருகின்றன. அரசாங்கத்தின் இந்த இருமுக உத்தியை எல்டிடிஈ இயக்கம் நன்கு அறிந்திருந்ததுடன், இருதரப்பினருக்கும் இடையிலான அதிகாரச் சமநிலை அரசாங்கத்துக்கு சாதகமானதாக, நுட்பமாக மாற்றமடைந்து வருவதைக் கண்டு, சங்கட உணர்வை அனுபவித்தது. சர்வதேசமயமாக்கல் செயன்முறை அம்சத்தை எல்டிடிஈ இயக்கம் வரவேற்றது என்பது தெளிவாகும். அதன்மூலம் தனது நிலைப்பாட்டை எடுத்து விளக்குவதற்கும் அதன் கோரிக்கைக்கான சட்டபூர்வத் தன்மையை பெற்றுக்கொள்வதற்கும் அதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

ஐக்கிய அமெரிக்காவோ இந்தியாவோ இலங்கையின் விவகாரத்தில் நேரடியான ஓர் இராணுவத் தலையீட்டை மேற்கொள்ளக்கூடிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சாத்தியப்பாடு குறித்துச் சிவராம் தனது கட்டுரைகளின் தொகுப்பில் ஆழமான ஒரு சந்தேகத்தை எழுப்பியுள்ளார். இந்திய அமைதிப் படை அனுபவம் இலங்கையில் அத்தகைய இராணுவத் தலையீடு ஒன்றை மேற்கொள்வதற்கு முன்னர் இந்தியாவை இருமுறை சிந்திக்கவைக்கும் என அவர் வாதிடுகிறார். மேலும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு ஊடாக இந்திய அரசாங்கம் அதன் நலன்களைப் பாதுகாத்துக்கொண்டுள்ளது என்றும், அதனூடாக இலங்கை அரசாங்கம் ஓர் ஒப்பந்தக் கடப்பாட்டைக் கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிடுகின்றார். இலங்கை தொடர்பான எந்த அளவிலான இராணுவத் தலையீடு மற்றும் உதவி என்பன இந்தியாவின் கேந்திர நலன்களுக்கு ஊறுவிளைவிக்கத் தக்கவையாக இருந்துவரும் என்பதனைத் தனது தன் விருப்பப்படி மதிப்பிட்டுக் கொள்வதற்கான சட்டரீதியான அதிகாரங்களை இந்தியா கொண்டுள்ளது. அதன்படி இலங்கை அரசாங்கத்துக்கு அது அறிவுரை வழங்க முடியும். ஐக்கிய அமெரிக்க இராணுவத் தலையீட்டைப் பொறுத்தவரையில், ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கு இராணுவ உதவியை வழங்கும் அதேவேளையில், இலங்கையின் முரண்பாட்டில் நேரடியாகச் சம்பந்தப்படமாட்டாது எனச் சிவராம் வாதிடுகிறார்.


14. **இந்தியா வகிக்கும் பாத்திரம்.** இலங்கையின் அயல்நாடு என்ற முறையில் இந்தியா வகிக்கும் பாத்திரம் பேச்சுவார்த்தைகளைப் பொறுத்தவரையில் முக்கியமான தாக்கங்களை எடுத்துவர முடியும். இப்பொழுது இந்தியா, முறையான பேச்சுவார்த்தைகளிலிருந்து ஒரு சமதூரத்தில் ஒதுங்கி நிற்கின்றது. அது எதிர்கொண்டுவரும் மிக முக்கியமான தடுமாற்றநிலை எல்டிடிஈ இயக்கத்தின் தலைவரும், அந்த இயக்கத்தைச் சேர்ந்த ஏனையவர்களும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களாக இருந்துவருவதும் எல்டிடிஈ இயக்கத் தலைவரை இந்தியாவிடம் ஒப்படைக்கும் ஒரு கட்டளை இருந்து வருவதுமாகும்.

எல்டிடிஈ இயக்கத்தால் தாம் அவமானப்படுத்தப்பட்டமை குறித்த கசப்பான நினைவுகளும் எல்டிடிஈ இயக்கத்தின் துரோகம் குறித்த கசப்பான நினைவுகளும் இந்திய-இலங்கைச் சமாதான ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்டிருந்த இந்தியத் தலைவர்கள் மற்றும் கல்விமான்களின் உள்ளங்களில் இன்னமும் நிலைத்துள்ளன. எல்டிடிஈ இயக்கம் தன்னை நிலைமாற்றிக்கொள்ளும் என்பது குறித்து இந்தியா எத்தகைய ஒரு நம்பிக்கையையும் கொண்டிருக்கவில்லை.

ஆயுதம் தாங்கிய எல்டிடிஈ இயக்கம் தனது சொந்தப் பாதுகாப்புக்கு ஓர் அச்சுறுத்தலாக இருந்து வர முடியும் என இந்தியா கவலைப்



**பேச்சுவார்த்தைச் செயன்முறையில் பல்வேறு மட்டங்களும் வகித்து வரும் பாத்திரத்தை விளக்கும் படம்**




ஆதாரம்: லெடரக், ஜோன் போல், *சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், சமாதானத்துக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனம்*, வாஷிங்டன், டிசி 1997

படுகிறது. எனவே, எல்டிடிஈ தனது ஆயுதப் படைகளைத் தக்கவைத்துக் கொள்ளக்கூடிய, ஒன்றிய மாதிரியிலான, ஒரு தீர்வை இந்தியா எதிர்க்கின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடன் சிறந்த உறவுகளை வளர்த்துக் கொண்டிருந்ததுடன், அந்நாட்டு அரசியல் தலைவர்களுக்குத் தொடர்ந்தும் தகவல்களை வழங்கி வந்தார். அமைச்சர் மிலிந்த மொரகொட அடிக்கடி இந்தியாவுக்கு பயணம் செய்ததுடன், வெளிநாட்டு அமைச்சருக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் தேவையான விளக்கங்களை அளித்தார். மேலும், இந்தியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான ஒரு கடனுதவியாக இந்தியா-இலங்கைக்கு 100 மில்லியன் அமெரிக்க டாலர் கடனொன்றையும் வழங்கியுள்ளது. சமாதானச் செயன்முறைக்கு ஆதரவளித்து வருவதாகவும் இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வருவதாகவும் கூறி, இந்தியா அதன் நிலைப்பாட்டைத் தெளிவு



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுத்தியுள்ளது. இந்தியா இச்செயல்பாட்டிலிருந்து சம தூரத்தில் ஒதுங்கியிருக்கும் நிலையை எதிர்க்கட்சியைச் சேர்ந்த சக்திகள் சமாதானச் செயன்முறைக்கான ஓர் எதிர்ப்புநிலை என அவசரமாக வியாக்கியானம் செய்துள்ளன.

நோர்வேயின் மத்தியஸ்த முயற்சிகளுக்கு எதிராக முறைப்பாடுகளை (புகார்) முன்வைக்கும் பொருட்டும் பேச்சுவார்த்தைச் செயன்முறையில் இந்தியா பெருமளவுக்கு முறைசார்ந்த ஒரு பாத்திரத்தை வகிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளும் பொருட்டும் அரசியல்வாதிகள் இந்தியாவுக்கு பயணங்களை மேற்கொண்டு வந்துள்ளனர். காங்கிரஸ் கட்சியின் தலைவர்களையும் தென்னிந்திய அரசியல் தலைவர்களையும் சந்திப்பதற்கென பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்னர் இலங்கை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு ஒரே சீரானவிதத்தில் இருந்து வந்துள்ளது. இந்திய நிலைப்பாடு பின்வரும் விதத்தில் சுருக்கமாகக் கூறப்படுகின்றது: 'இலங்கையின் சமாதானச் செயன்முறையில் இன்றைய நிலையில் இந்தியா எந்த ஒரு நேரடிப் பாத்திரத்தையும் வகிக்க முடியாது என்பது தெரிகிறது. அரசியல் மற்றும் சட்டரீதியான காரணங்களின் ஒரு கூட்டால் இந்நிலைமை தோன்றியுள்ளது. வெளிப்படையாகக் கூறுவதானால், அது, தான் சம்பந்தப்பட்டிருக்கும் ஒரு செயன்முறைக்கு அனுசரணை வழங்கி மத்தியஸ்தம் செய்வது ஒரு புறமிருக்க, எல்டிடிஈ இயக்கத்தை உத்தியோகபூர்வமான விதத்தில் சந்திக்க முடியாத நிலையில் உள்ளது. ஏனெனில், இந்தியச் சட்டத்தின் கீழ் ஒரு பயங்கரவாத இயக்கமாகக் குறிக்கப்பட்டு, எல்டிடிஈ இயக்கம் அங்குத் தடை செய்யப்பட்டுள்ளது. சர்வதேச உதவி வழங்குநர் கூட்டங்களில் அது பங்கேற்பதில்லை என்பதையே இது குறிக்கின்றது. அதேவேளையில், 2001ஆம் வருடத்தின் கடைசிப் பகுதி தொடக்கம் புதுடெல்லி இந்தச் செயல்பாட்டில் மிகவும் ஜாக்கிரதையான விதத்தில் சம்பந்தப்பட்டு வந்திருப்பதுடன், தற்போதைய சமாதானச் செயன்முறையில் சம்பந்தப்பட்டிருக்கும் அரசுத் தரப்பைச் சேர்ந்த அனைத்து செயல்பாட்டாளர்களும் முறைசாராத விதத்தில் இந்தியாவுடன் இது தொடர்பாகக் கலந்தாலோசனைகளை நடத்தி வந்துள்ளனர். இலங்கை அரசாங்கம், நோர்வே மற்றும் ஜப்பான் என்பன மட்டுமன்றிச் சமாதானச் செயன்முறையின் பின்னணியில் இருந்து வந்துள்ள ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய அரசு மற்றும் ஏனைய முக்கியமான நாடுகள் என்பனவும் இந்தியாவுடன் இது தொடர்பாகக் கலந்தாலோசித்து வந்துள்ளன என்பதே



இதன் பொருளாகும்'. மேலும், 2003ஆம் வருடத்திலும் 2005ஆம் வருடத்திலும் வெளியிடப்பட்ட கூட்டறிக்கைகளில் காணப்பட்ட சுவாரஸ்யமான கூறுகளாக இலங்கையின் பாதுகாப்பில் இந்தியா வெளிப்படுத்தியிருக்கும் 'நிலையான அக்கறை' இலங்கையின் இறைமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு தொடர்பாக அது கொண்டிருக்கும் உறுதியான கடப்பாட்டை அவர் குறிப்பிடுகிறார். இலங்கைப் பிரச்சினை தொடர்பான எந்த ஓர் இடைக்கால ஏற்பாடும் இறுதித் தீர்வின் 'பகிரங்கமான மற்றும் உள்ளார்ந்த பாகமாக' இருந்துவர வேண்டும் என்ற விடயத்தையும், அது 'இலங்கையின் ஐக்கியம் மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டு' கட்டமைப்புக்குள் இருக்க வேண்டும் என்ற ஒரு தெளிவான புரிந்துணர்வின் அடிப்படையில் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வொன்றுக்கு இந்தியாவின் ஆதரவு கிட்டும் என 2003இல் அனுமானிக்கப்பட்டிருந்தது என்ற விடயத்தையும் அவர் முக்கியமாக குறிப்பிடுகின்றார்.

15. **தொடர்பாடல்கள்.** சம்பந்தப்பட்ட தரப்பினருக்கிடையிலும் ஏனைய அக்கறைதாரர்கள் மற்றும் பிரஜைகள் ஆகியோருக்கிடையிலும் தொடர்பாடல்கள் இடம்பெறுவது எந்த ஒரு செயன்முறை வடிவமைப்பினதும் முக்கியமான ஒரு கூறாக இருந்து வருகின்றது. தொடர்பாடல் இல்லாதிருக்கும் நிலை முரண்பாட்டு இயங்கியலின் ஒரு பிரதான காரணியாக பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நோக்கப்பட்டு வருகின்றது. அப்பொழுது அந்தச் சூழலில் தப்பெண்ணங்களும் அவநம்பிக்கையும் தலைதூக்குகின்றன. அத்தகைய தப்பெண்ணங்கள் மற்றும் தவறான புரிந்துணர்வுகள் உடனடியாகக் கவனத்தில் எடுக்கப்படுவதை அனுசரணையாளர்களும் மத்தியஸ்தர்களும் உறுதிப்படுத்திக்கொள்வது அவசியமாகும். அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வரும் மிகவும் அடிப்படையான தவறுகளில் ஒன்றுதொடர்பாடல் என்ற விடயம் இருதரப்பினர் தொடர்பான தொடர்பாடலாக மட்டும் நோக்கப்பட்டு வருவதாகும். ஏனைய அக்கறைதாரர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இரண்டாம்நிலை மூலங்களுக்கு ஊடாக அல்லது செய்திப் பத்திரிகைகளுக்கு ஊடாகச் செய்திகளைப் பெற்றுக்கொள்கின்றனர். ஒழுங்கான அடிப்படையில் அனைத்துச் செயல்பாட்டாளர்களுக்கும் தகவல்களைத் தெரிவிப்பதற்குப் பொருத்தமான தொடர்பாடல் வழிமுறைகள் பயன்படுத்தப்படுவதில்லை. முரண்பாட்டு நிலைமைகளில் வதந்திகள் மற்றும் அரட்டைகள் என்பன மிக முக்கியமான ஒரு பாத்திரத்தை வகித்து வருகின்றன. மேலும், சமாதானச் செயன்முறைக்கு எதிரானவர்கள் இந்தச் செயன்முறை குறித்தும், அதன் அனுசரணையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஆகிய தரப்பினர் குறித்தும் பொய்யான தகவல்களைப் பரப்புவதில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கெட்டிக்காரர்களாக இருந்து வருகின்றனர். அத்தகைய முரண்பாட்டுச் சூழ்நிலைகளில் மாற்றமடையாத வகைமாதிரிகளை உருவாக்குவதும் அதிர்ச்சியூட்டுவதும் பொதுவான விடயங்களாகும். அனுசரணையாளர்கள் நாட்டின் ஐக்கியத்தைக் குலைப்பதற்கு வந்திருக்கும் ட்ரோஜன் நகரக் குதிரைகளாகக் கருதப்படுகின்றனர். உரியவிதத்தில் கவன மையத்தைக் கொண்ட நன்கு திட்டமிடப்பட்ட தொடர்பாடல் உத்திகள் உருவாக்கப்பட்டாலேயொழிய இந்த முதன்மையான உரையாடலைச் சீர்குலைவுவாதக் குழுக்கள் கைப்பற்றி, மக்களின் இதயங்களைத் தம்பக்கம் வென்றெடுக்க முடியும்.

ஊடகங்களின் வகிபாத்திரம் மிகவும் சிக்கலானதாகும். சிங்களப் பத்திரிகைகள் குறித்த பெருமளவுக்கு விரிவான ஒரு பகுப்பாய்வு சமாதானச் செயன்முறைக்கும் நோர்வேயின் பாத்திரத்துக்கும் எதிர்ப்பு அதிகரித்து வருகின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. எல்டிடிஈ இயக்கத்துக்கு வானொலி உபகரணங்களை இறக்குமதி செய்வது வரையிலான நிகழ்வுகள் இந்த எதிர்ப்புணர்சியை மேலும் தீவிரப்படுத்துவதற்கு உதவியுள்ளன. பிரதமர் ஊடகங்களுக்குத் தொடர்ச்சியான அடிப்படையில் தகவல்களை வழங்கி வந்துள்ளார். ஜனாதிபதியும் பத்திரிகை ஆசிரியர்களுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டிருந்ததுடன், தன்னுடைய நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் பொருட்டு மிகக் கடுமையான ஒரு முயற்சியை மேற்கொண்டிருந்தார். எனினும், பத்திரிகைகளில் அதிகளவு இடத்தையும் புகைப்படங்களில் தோன்றும் வாய்ப்பினையும் ஜேவிபியே பெற்றுக்கொண்டிருந்தது. ஒவ்வொரு சுற்றுப் பேச்சுவார்த்தையின் பின்னரும் மற்றொரு வெற்றிக்கதையாக அல்லது சாதனையாகப் பிரகடனங்கள் முன்வைக்கப்பட்டபொழுது அவற்றைக் கேட்டு மக்கள் புளித்துப் போயிருந்தனர்.

பிரதான அனுசரணையாளர்களும் எல்டிடிஈ இயக்கத்தின் பேச்சாளராக அன்டன் பாலசிங்கமும் தினசரி அடிப்படையில் செய்திளை வழங்கிக்கொண்டிருந்தனர். சந்தேக உணர்வுடன் இருந்துவந்த பொதுமக்களைப் பொறுத்தவரையில் இவை அதிகளவு தாக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைக் குழு ஆகக் குறைந்தது அமைச்சரவை உறுப்பினர்களுக்கும் பாராளுமன்றத்துக்கும் தகவல்களைத் தெரிவிக்கவேண்டிய அவசியம் இருந்து வந்தது. ஒவ்வொரு சந்திப்பிற்கு முன்னரும் பின்னரும் எதிர்க் கட்சிக்கு அது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒழுங்கான செய்தி மகாநாடுகள் மற்றும் கேள்வி பதில்கள் என்பவற்றுக்கான ஓர் அரங்கத்தை வழங்கும் பொருட்டுத் தொலைக்காட்சியைப்



பயன்படுத்திக்கொண்டிருக்க முடியும். மேலும், சிவில் சமூகத்தைச் சேர்ந்த பல்வேறு தரப்பினருக்கும் அவர்கள் தகவல்களைத் தெரிவித்திருக்க வேண்டும். இது போதியளவில் இடம்பெறவில்லை. மறுபுறத்தில், எல்டிடிஈ இயக்கம் அதன் முக்கியமான அக்கறைதாரர்களுக்குத் தகவல்களைத் தெரிவிக்கவில்லை. நோர்வே நாட்டினர் நம்பிக்கையான விதத்தில் பத்திரிகைகளுக்கான அறிக்கைகளை வெளியிட்டனர். தொடர்பாடல் உத்திகளில் நிலவிவந்த இக்குறைபாடுகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாரிய குறைபாடுகளாக இருந்து வந்தன. சமாதானச் செயன்முறையை எதிர்த்தவர்களினால் நாளாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்த பரவலான பிரசாரங்கள் மற்றும் தகவல் திரிப்புகள் என்பவற்றுக்குச் சவால் விடும் பொருட்டு ஒரு தொடர்பாடல் உத்தி உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும். சிங்களத்திலும் தமிழிலும் பரந்தளவிலான வாசகர்களைக் கொண்ட பெருந்தொகையான பத்திரிகைகள் உருவாகியிருந்தன. ஜேவிபியும் ஜாதிக ஹெல உறுமய கட்சியும் பேருந்துகளில் பிரசாரம் செய்ததுடன், வீட்டுக்கு வீடு சென்றும் பிரசாரங்களை மேற்கொண்டனர். இதன்விளைவாக சமாதானச் செயன்முறை குறித்துப் பொதுமக்களிடையே ஒரு விதமான சந்தேக உணர்வு தோன்றியிருந்தது. நாட்டின் பொருளாதார மந்தம் மற்றும் பணவீக்கம் இந்தப் பிரசாரச் செயல்பாடுகளுக்கான வரவேற்பு அதிகரிப்பதற்கு உதவின.

**16. குறைநிரப்புச் செயன்முறைகளாகத் தடம் 1, தடம் 2 மற்றும் தடம் 3.** தடம் 1 பேச்சுவார்த்தைகளின் உத்தியோகபூர்வச் செயன்முறை என எடுத்து விளக்கப்பட்டிருந்தது. இது முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்ட தரப்பினரை உள்ளடக்குகின்றது. உத்தியோகபூர்வ தடம் 1 ராஜதந்திரம் உயர்மட்டத்தில் இடம் பெறுவதுடன், அங்கு முறையான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படுகின்றது. அனைத்துப் பேச்சுவார்த்தைகளும் தனியொரு உயர்மேசையில் ஏன் இடம்பெறக்கூடாது என்பதற்கான எத்தகைய காரணமும் இல்லை. பெருந்தொகையான சிறிய மேசைகள் இருந்து வரக்கூடிய விதத்தில் ஒரு வடிவமைப்பை உருவாக்க முடியும் இங்குத் தீர்த்துக்கொள்ள முடியாத பல விடயங்கள் குறித்து ஒரே நேரத்தில் பேச்சுவார்த்தைகளை நடத்தலாம். தடம் 2 என்பது ஒரு முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்டிருக்கும் தரப்பினர்மீது செல்வாக்குச் செலுத்துவதற்கென மத்தியஸ்தர்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகள் என விளக்கப்படுகின்றது. முறைசாராத தடம் 2 முயற்சிகள் ஒரு முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கிடையில் உத்தியோகபூர்வமற்ற விதத்தில் உரையாடல்களை நடத்துவதற்கான ஓர் இடத்தை உருவாக்குவதில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிக முக்கியமான ஒரு கூறாக இருந்துவர முடியும். இந்தத் தடம் 2ஐப் பொறுத்தவரையில் பெருமளவிலான முயற்சிகள் இருந்து வருகின்றன. தரப்பினருக்கு மிக நெருக்கமாக இருந்து வருவதுடன், அவர்களுடைய நம்பிக்கையை வென்றிருக்கும் செல்வாக்குமிக்க நபர்கள் ஓரிடத்தில் சந்தித்து, இருதரப்பினரதும் அச்சங்கள், கவலைகள் மற்றும் பிரச்சினைகளைக் களைவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதையும் இது குறிக்க முடியும். நோக்கு தொடர்பான பயிற்சிகள் அல்லது பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் நுட்பங்கள் என்பவற்றுக்கு ஊடாகத் தரப்பினர் தமது கவலைகளைப் பாதுகாப்பான ஒரு சூழலில் வெளிப்படுத்துவதற்கான முறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்தகைய பயிற்சிகள் அச்சங்கள் மற்றும் கவலைகளைப் புரிந்து கொள்வதற்குத் தரப்பினருக்கு உதவ முடியும். மேலும், இவை தரப்பினருக்கிடையிலான தொடர்பாடலுக்கான வழிமுறைகளையும் வழங்குகின்றன. உரிய விதத்தில் வடிவமைக்கப்பட்டால் இத்தகைய முயற்சிகள் பெறுமதிமிக்கவையாகவும் தடம் 1 செயன்முறையின் பணிகளுக்குக் குறைநிரப்புச் செய்பவையாகவும் இருந்து வர முடியும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வளங்களின் பற்றாக்குறை காரணமாக தடம் 1 முயற்சிகள் ஒரேதடவையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளாக இருந்து வருகின்றன. தடம் 2 பயிற்சியைப் பொறுத்தவரையில் நிர்ணயகரமான விடயம் இதற்கென அழைக்கப்படும் நபர்கள் முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்டிருக்கும் தரப்பினரின் நம்பிக்கை மற்றும் விசுவாசம் என்பவற்றைப் பெற்றுக்கொண்டவர்களாக இருந்து வருவதனால், உண்மையிலேயே அவர்கள் சம்பந்தப்பட்ட தரப்பினர்மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய நிலையில் இருந்து வருவதாகும். இத்தகைய செயன்முறைகள் அத்தரப்பினரால் ஊக்குவிக்கப்படுகின்றன. சம்பந்தப்பட்ட தரப்பினர் தமது மனக்குறைகள் மற்றும் விரக்தி நிலைமைகளை வெளிப்படுத்திக் காட்டுவதற்கான ஒரு வாய்ப்பைத் தடம் 2 வழங்குகின்றது. தீர்க்கமுடியாத பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு இங்குப் பல்வேறு முறைமையியல்கள் பயன்படுத்தப்படுகின்றன. தார்மீகக் கற்பனைக்கான ஒரு பாய்ச்சல் இடம்பெறுவதையும் சாதாரண நிலைமைக்கு வெளியில் சிந்திப்பதையும் இது குறிக்கின்றது. தடம் 3 நல்லிணக்கம், காயங்களை ஆற்றுதல் மற்றும் முரண்பாட்டுத் தீர்வு என்பவற்றை உருவாக்குவதற்கான சமூகத்தில் மேற்கொள்ளப்படும் அடிப்படை முயற்சிகள் என விளக்கப்படுகின்றது. தடம் 3 முயற்சிகள் எந்த ஒரு முரண்பாட்டுச் செயன்முறை வடிவமைப்பிலும் முக்கியமான ஒரு கூறாக இருந்து வருகின்றன. இந்த இடத்திலேயே அக்கறைதாரர்



களுக்கிடையிலான உரையாடல், நல்லிணக்கச் செயல்பாடுகள், சமூகங்களுக்கிடையில் நம்பிக்கையையும் சகவாழ்வையும் கட்டியெழுப்புதல் என்பவற்றில் சமூகங்கள் ஈடுபட வேண்டியுள்ளன. பொதுவாக போரால் சின்னாபின்னப்பட்டிருக்கும் சமூகங்களில் அந்தப் போரின் வடுக்கள் அச்சமூகங்களின் உள்ளங்களில் ஆழமாக வேரூன்றியுள்ளன. இந்த முரண்பாட்டின் கடும் மன அதிர்ச்சிகளையும் வகை மாதிரிகளையும் குணப்படுத்துவது மிகவும் சிரமமான ஒரு காரியமாகும். இந்தப் பின்னணியிலேயே நல்லிணக்கம் மற்றும் காயங்களை ஆற்றுதல் என்பவற்றிலும் சகவாழ்வு முறைகளை மேம்படுத்துவதிலும் பிரஜைகள் எடுக்கும் முன்முயற்சிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. சமூகத்தின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதில் அத்தகைய செயல்பாடுகள் ஒரு முக்கியமான கூறாக இருந்து வர முடியும். மேலே குறிப்பிடப்பட்ட மூன்று நிலைகளுக்குமிடையில் குறைநிரப்புச் செயல்பாடொன்றை உறுதிப்படுத்திக்கொள்வது அவசியமாகும். மேலும், இந்த மூன்று நிலைகளுக்குமிடையிலும் ஒரு தொடர்பாடல் செயன்முறை இருந்து வருகின்றது என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றுக்கு ஊடாக பொதுமக்களுக்குத் தகவல்களைத் தெரிவிப்பதில் பல நிறுவனங்கள் ஈடுபட்டு வந்துள்ளன. கொள்கையின் மீது செல்வாக்குச் செலுத்துவதில் ஏனைய நிறுவனங்கள் மிகவும் தாக்கமான ஒரு பாத்திரத்தை வகித்து வந்துள்ளன. எனினும், தடம் 2 மட்டத்தைப் பொறுத்தவரையில் மிகக் குறைந்த அளவிலேயே பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்டிருக்கும் இருதரப்பினருக்கும் சிவில் சமூக நிறுவனங்களுக்கும் இடையில் உரையாடல் செயன்முறை ஒன்றை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டியுள்ளது. தற்பொழுது இச்செயன்முறை பெருமளவுக்கு பிரத்தியேகமான ஒரு செயன்முறையாகவே இருந்து வருகின்றது. எனினும், பல்வேறு மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட பிரஜைகளின் முன்முயற்சிகளின் விளைவாக முக்கியமான ஆதாயங்கள் ஈட்டிக்கொள்ளப்பட்டுள்ளன. பேர்கொப் மன்றம் மற்றும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விளைவாகச் சமஷ்டித் தீர்வொன்றை நோக்கிய கொள்கைக் கட்டமைப்பின்மீது அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்டிருக்கும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான பெருந்தொகையான பிரச்சினைகளைக் கையாளும் பொருட்டுப் பெண்கள் குழுவொன்றை உருவாக்குவதற்கான முடிவு, கொழும்பில் அமைந்திருக்கும் பெண்கள் அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டு வந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாக்கமான ஒரு பிரசாரத்தின் விளைவாகும். மனித உரிமைகள் நிபுணர் ஒருவரின் நியமனம், இலங்கையிலுள்ள மனித உரிமைகள் அமைப்புகளின் ஒத்துழைப்புடன் சர்வதேச அரசு சாரா அமைப் பொன்று மேற்கொண்டுவந்த செயல்பாடுகளின் விளைவாகவே சாத்தியமாகியது. கிழக்கில் முஸ்லிம், தமிழ்ச் சமூகங்களுக்கிடை யிலான கொந்தளிப்பு நிலைமை சகவாழ்வு மன்றத்தின் பணி யினூடாக கவனத்தில் எடுக்கப்பட்டிருந்தது.

17. **சிவில் சமூகத்தின் வகிபாத்திரம்.** சிவில் சமூகம் என்பது நிறுவனங்கள், அமைப்புகள், பொருளாதாரம் மற்றும் அரசுக்கிடையிலான வலை யமைப்புகள் என்பவற்றின் சிக்கலான ஒரு தொகுதியாக இருந்து வருகின்றது. சிவில் சமூகத்தில் பல்வேறுபட்ட அக்கறைதாரர்கள் உள்ளனர். தொழிற்சங்கங்கள், தொழில்சார் கழகங்கள், சமய அமைப்புகள், மகளிர் இயக்கங்கள், போரால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் தொடர்பாகக் கரிசனை செலுத்தி வரும் அமைப்புகள், வர்த்தக சங்கங்கள், கலைஞர்கள், கேளிக்கைத் துறையைச் சேர்ந்தவர்கள் மற்றும் எண்ணற்ற தொண்டு அமைப்புகள் என இப்பட்டியல் நீண்டு செல்கிறது.

பொதுவில், அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த மக்கள் சமாதானச் செயன்முறைக்கு அமோக ஆதரவை வழங்கி வந்துள்ளனர். தென்னிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்புகள் இதற்கான ஆதரவு கணிசமான அளவில் குறைவடைந்துள்ளதைக் காட்டுகின்றன. ஆனால், வடக்கு, கிழக்கில் இதற்கு 85 சதவீதத் திற்கும்மேல் ஆதரவு கிடைத்துள்ளது. பிரஜைகளை அடிப்படை யாகக்கொண்ட ராஜதந்திர செயல்பாடுகள் தப்பெண்ணங்களைத் தெளிவுபடுத்துவதிலும் இரு சமூகங்களுக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதிலும் கணிசமான அளவிலான உளவியல் தாக்கமொன்றை எடுத்து வந்திருந்தன. ஏ 9 பாதை திறக்கப் பட்டதையடுத்து வடக்குக்கும் தெற்குக்குமிடையில் இரு பக்கங் களிலும் பாரிய அளவிலான வாகனப் போக்குவரத்து செயல்படத் தொடங்கியது. இரு பிராந்தியங்களுக்கும் இடையிலான வர்த்தகமும் திறந்துவிடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தின் ஒரு சில பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டிருந்த சேதம் மற்றும் அழிவு என்பவற்றைப் பெருந் தொகையான சிங்களவர்கள் நேரில் போய்ப் பார்த்தனர். பெருந் தொகையான பயணங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் என்பன சமூகங்களுக்கு மத்தியில் சமாதானம் தொடர்பாக நிலவிவந்த பேரவாவை எடுத்துக்காட்டியிருந்தன. எனினும், சிவில் சமூகத்தின் முக்கியமான செயல்பாட்டாளர்கள் இன்னமும் வெறுமனே



வேடிக்கை பார்ப்பவர்களாக இருந்துவருவதுடன், அரசியல் கட்சி களின் வகிபாத்திரம் தொடர்பாக மிதமிஞ்சிய அளவில் நம்பிக்கை வைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் பிரஜைகள் இருந்து வர வில்லை; வாக்காளர்களே இருந்து வருகின்றனர். தமது தலைவர் களைத் தெரிவுசெய்வதில் இந்த வாக்காளர்கள் மிக முனைப்பான ஒரு பங்கை வகித்து வருகின்றனர். அதன் பின்னர் அடுத்த தேர்தல் வரும்வரையில் அவர்கள் வாளாவிருக்கின்றனர். பல்வேறு பொதுத் தளங்களில் தமது நலன்களை மேம்படுத்தும் விதத்தில் பிரஜைகள் மிகச் சிறு அளவிலான ஒரு பாத்திரத்தையே வகித்து வருகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரையில் பொதுநலனை முன்னிட்டுத் தொடுக்கப்படும் வழக்குகள் மிக அரிதாகவே உள்ளன. அத்தகைய வழக்குகளை நீண்டகாலரீதியில் முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலையும் காணப்படுகின்றது.

சுமனசிறி லியனகே 'சமாதான அரசுசார்பற்ற நிறுவனங்கள்' குறித்துக் கடுமையான ஒரு விமர்சனத்தை முன்வைக்கிறார். மக்களை அணிதிரட்டும் விடயத்தில் இந்த அமைப்புகள் எத்தகைய செல்வாக்கையும் கொண்டிருக்கவில்லை என அவர் கருதுகிறார். சமாதானத்தை எடுத்துவரும் பொருட்டு நாட்டில் பாரிய வெகுஜன இயக்கங்கள் இருந்து வரவில்லை எனக் கூறும் அவர் எல்டிடிஈ இயக்கத்தின் மனித உரிமைமீறல்களை கண்டிக்காதது தொடர்பாகச் சமாதான அமைப்புகளை விமர்சிக்கிறார். எல்டிடிஈ தொடர்பாக இவ்விதம் ஒரு விமர்சனபூர்வமான நிலைப்பாட்டை அந்த அமைப்புகள் எடுக்கத் தவறியதால் அவர்கள் எல்டிடிஈ இயக்கத்தைச் சந்தோஷப் படுத்தி வருகின்றனர் என்ற குற்றச்சாட்டை எதிர்கொள்ள நேரிட்டது என்பதே அவருடைய கருத்தாகும். இந்தச் 'சமாதான அரசு சார்பற்ற நிறுவனங்கள்' ஏற்கெனவே தமது தரப்பை ஆதரித்து வருபவர்களுடன் உரையாடும் ஒரு போக்கைக் கொண்டிருப்பதாகவும் எண்ணற்ற செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் என்பவற்றுக்குப் புதிய நபர்களை எடுத்துவருவதற்கான முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன என்றும் லியனகே வாதிடுகிறார்.

சமாதானத்துக்காக உழைத்து வரும் அரசுசாரா அமைப்புகளும் சிவில் சமூக அமைப்புகளும் கண்டனத்துக்கும் நிந்தனைக்கும் உள்ளாக்கப்பட்டுவரும் அமைப்புகளாக இருந்து வருகின்றன. குறிப்பாக, சமாதானம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாகச் செயல்பட்டு வரும் அமைப்புகள்மீது சேற்றைவாரி இறைப்பதற்கு ஒரு சிறிய ஆனால் திடசங்கற்பம் பூண்ட தீவிரவாதிகள் குழுவொன்று ஊடகங்களையும் பொதுமேடைகளையும் பயன்படுத்தி வந்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிநாட்டிலிருந்து நிதியுதவிகளைப் பெற்று வரும் அரசுசாரா அமைப்புகள் இத்தகைய தாக்குதல்களுக்கான விசேட இலக்குகளாக இருந்து வந்துள்ளன.

சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் அரசுசாரா அமைப்புகளின் வகிபாத்திரம் குறித்த மற்றொரு விமர்சனரீதியான மீளாய்வு 'உள்நாட்டுப் போரில் சிவில் சமூகம்' என்னும் நூலில் ஓர்ஜுலாவால் முன்வைக்கப்பட்டுள்ளது. அவருடைய ஆராய்ச்சி 1998–1999 காலப் பிரிவை உள்ளடக்குவதற்கு முயலுவதுடன், இலங்கையில் நான்கு சமாதான அமைப்புகளின் பணிகளை அது பரிசீலிக்கின்றது. அவருடைய முடிவுகள் லியனகேயின் நிலைப்பாடுகளை உறுதிப் படுத்துபவையாக உள்ளன. அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'சமாதான அரசுசார்பற்ற நிறுவனங்கள்' மக்களை அணிதிரட்டுவதில் தோல்வி கண்டுள்ளன. சமாதானத்துக்கான மக்களின் அர்ப்பணிப்பை அடிப்படையாகக் கொண்ட ஓர் இயக்கத்தை கட்டியெழுப்புவதற்குப் பதிலாக அவை ஏற்கனவே இருந்துவரும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட அமைப்புகளின் ஒரு குழுவை ஒன்று திரட்டியுள்ளன. பங்கேற்பாளர்களின் முனைப்பான அர்ப்பணிப்பு மற்றும் தாம் போராடும் விடயம் குறித்த அறிவு என்பவற்றிலும் பார்க்கச் சமாதானத்துக்காக மக்களை அணிதிரட்டுவதில் தற்போதைய அமைப்புகள், வலையமைப்புகள், தலைவர்கள்மீதான விசுவாசம் மற்றும் எதிர்பார்க்கப்படும் ஆதாயங்கள் என்பன அதிகளவுக்கு நிர்ணயகரமானவையாக இருந்து வருவதுபோல் தெரிகிறது. கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் சமாதான அமைப்புகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கிராம அளவில் பரந்தளவிலான தொடர்புகளைக் கொண்டிருக்கவில்லை. அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மாணவர் மற்றும் தொழில்சார் அமைப்புகள் போன்ற பொதுமக்கள் அமைப்புகளுடன் பிணைப்புகளை ஏற்படுத்திக் கொள்வதில் அவை தோல்வி கண்டுள்ளன. சமூகத்தில் நிலவிவரும் சக்திவாய்ந்த வர்க்க, இன, குல மற்றும் கட்சி அரசியல் பிரிவினைகள் பொதுவான ஒரு சமாதானக் குறிக்கோளின்பால் மக்களை ஒன்றிணைப்பதனை சிரமமான ஒரு காரியமாக ஆக்கியுள்ளன.

தொழிற்சங்கங்கள், வணிக சமூகம், சமய அமைப்புகள், தொழில்சார் அமைப்புகள் மற்றும் சிவில் சமூகத்தில் காணப்படும் ஏனைய பல்வேறு குழுமங்களின் பங்கேற்பைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு சிறந்தமுறையில் வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும். வடக்கையும் கிழக்கையும் சேர்ந்த சிவில் சமூகத்தின் பங்களிப்பைப் பெற்றுக்



கொள்வதும் முக்கியமாகும். பிளவுண்ட நிலையிலும்கூட வடக்கு, கிழக்கில் ஒரு சிவில் சமூகம் இருந்து வருகின்றது. யாழ்ப்பாணம் அதன் பிரச்சினைகளுக்கு மத்தியிலும்கூட துடிப்புடன் இயங்கி வருவதுடன், அரசியல் உரையாடல்களில் அங்குள்ள சிவில் சமூக அமைப்புகள் முனைப்புடன் பங்கேற்று வருகின்றன. அறிவுசார் மற்றும் அரசியல் உரையாடல்களின் ஒரு மையமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் காணப்படுகிறது. போரை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்கான கோரிக்கைகளை முன்வைப்பதில் குறிப்பாகக் கிறிஸ்தவ மற்றும் இந்து சமயத் தலைவர்கள் மிக முக்கியமான ஒரு பாத்திரத்தை வகித்து வந்துள்ளனர். புரிந்துணர்வை அதிகரித்துக் கொள்ளும் பொருட்டுப் பெருந்தொகையான கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்படுவதுடன் இணைந்த விதத்தில் வடக்கு–தெற்கு உரையாடல் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. எனினும், கிழக்கு மாகாணம் அதே அளவிலான செயல் துடிப்பைக் காட்டவில்லை. போரின் வடுக்களும் அச்ச உணர்வுகளும் அங்குத் தொடர்ச்சியாக நிலைத்து வருவதுடன், சிவில் சமூகம் பெருமளவுக்குச் செயல் முடங்கிக் காணப்படுகின்றது. ஆனால், அங்கும்கூடப் பள்ளிவாசல் சம்மேளனங்களும் உலமாக்களின் அமைப்புகளும் முஸ்லிம் சமூகத்துக்கு மத்தியில் முக்கியமான ஒரு சக்தியாக செயல்பட்டு வருவதை காணமுடிகிறது. அரசாங்கத்தையும் எல்டிடிஈ இயக்கத்தையும் விமர்சனம் செய்யும் மக்களின் உரிமைகளை அடிப்படையாகக்கொண்ட, இலங்கைக்கான ஒரு மாற்றுக் கட்டமைப்பை நாடும் ஒரு பாரிய மக்கள் இயக்கமே இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது. அத்தகைய ஓர் இயக்கம் மெதுவாக எழுச்சிகண்டு வருகின்றது என்ற விடயம் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற பெருமளவுக்கு நம்பிக்கையூட்டும் மாற்றங்களில் ஒன்றாக இருந்து வருகின்றது.

18. **சமாதானத்தின் அனுகூலம்.** சமாதானத்தின் அனுகூலம் என்பது சமாதானச் செயன்முறையின் வெற்றியை உரசிப் பார்க்கும் ஒரு சோதனை முயற்சியாகும். அபிவிருத்தி மற்றும் சமாதானம் என்பவை ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாகும். ஆனால், ஆழமாக பிளவுண்டிருக்கும் சமூகங்களைப் பொறுத்தவரையில் இந்த சமாதானத்தின் அனுகூலம் எப்பொழுதும் கைநழுவிச் சென்றவாறே உள்ளது. சமாதானச் செயன்முறையின் பயன்களைக் குடிமக்கள் அனுபவிக்கக் கூடிய விதத்தில் இலக்குகளுடன்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களும் திட்டவட்டமான நிகழ்ச்சித் திட்டங்களும் உருவாக்கப்படுதல் வேண்டும். இந்தச் சமாதான அனுகூலத்தைப் பல்வேறு வகைகளாகப் பிரிக்க முடியும்:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1. மனிதாபிமான அனுகூலம் போரால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் நிவாரண மற்றும் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகளை அனுபவித்து வருகின்றனர் என்பதே இதன் பொருளாகும்.
2. அதே நேரத்தில் குடித்தொகையின் ஏனைய பிரிவினர் சமாதானம் மற்றும் மனிதப் பாதுகாப்பு என்பவற்றை அதாவது, அச்சம், பாதுகாப்பின்மையிலிருந்து விடுதலை உணர்வை அனுபவித்து வருதல் வேண்டும்.
3. அதிகளவிலான வேலைவாய்ப்புகள், வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் மாற்றம் என்பவற்றின் வடிவில் நேரடியான பொருளாதார அனுகூலங்கள் கிடைக்கின்றன. எவ்வாறிருப்பினும், பல சந்தர்ப்பங்களில் இக்குறிக்கோள்கள் பலவற்றை உடனடியாகச் சாதித்துக்கொள்வதில் பல இடையூறுகள் இருந்து வருகின்றன. உலகளாவிய பொருளாதார மந்தம், சர்வதேச நிதி முகவரகங்களின் அமைப்புரீதியான சீராக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் முகாமைத்துவ உத்திகள் இல்லாதிருத்தல் ஆகியவை கடும் இடையூறுகளாக இருந்துவருவதுடன், தரப்பினர்களுக்குக் கிடைத்துவரும் தெரிவுகளையும் மட்டுப்படுத்துகின்றன.

இத்தொகுப்புக்குக் கட்டுரைகளை வழங்கியுள்ள சமன் கெலேகம மற்றும் சுனில் பஸ்டியன் ஆகியோர் சமாதான அனுகூலத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் பகுப்பாய்வு செய்ய முயல்கின்றனர். ஜனாதிபதியால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் விளைவாக, 2004ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பொதுத் தேர்தலின்போது அரசாங்கம் படுதோல்வி அடைவதற்கு ஒரு வெற்றிகரமான போர்நிறுத்த ஒப்பந்தம் எவ்வாறு வழிகோலியது என்ற கேள்விக்குப் பதிலளிக்க அவர்கள் முயல்கின்றனர். விக்கிரமசிங்க அரசாங்கத்தின் வெளிப்படையான உத்திகளில் ஒன்று சமாதானத்தின் பயன்களைத் தென்னிலங்கையில் வாழ்ந்துவரும் மக்களும் அதேபோல வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மக்களும் அனுபவிப்பதை உறுதிப்படுத்திக்கொள்வதாகும். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் திடீர்ப் பொதுத்தேர்தல் என்ற ஒரு பொறிக்கிடையில் சிக்கிக்கொண்டபோதிலும், பொருளாதார அனுகூலங்கள் மக்களுக்குச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதில் திட்டவட்டமான பொருளாதார உத்திகள், உதவிப் பங்கீடுகள் மற்றும் சர்வதேசக் கொடை வழங்குநர் சமூகத்தின் பாத்திரம் என்பன தோல்வியடைந்திருந்தன என இவ்விருவரும் வாதிடுகின்றனர். கெலேகம பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> சமாதானச் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டபொழுது பெருமளவுக்கு நம்பிக்கை நிலவி வந்தபோதிலும், சமாதானச் செயன்முறையுடன்



> உடனிகழ்வாக இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் செலவுமிக்க அமைப்புரீதியான சீராக்கல் நிகழ்ச்சித்திட்டமொன்றின் விளைவாக தென்னிலங்கைக்குக் (மோதல் இடம்பெறாத பிரதேசங்களுக்கு) குறிப்பிடத்தக்க அளவிலான எத்தகைய அனுகூலங்களும் கிடைக்கவில்லை.

அவர் மேலும் கூறுகிறார்:

> போரால் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு கிழக்கில் தற்பொழுது நிலவிவரும் சிக்கலான நிறுவனரீதியான மற்றும் இராணுவ கட்டமைப்பு மற்றும் சமாதானப் பொதி செயன்முறையுடன் சம்பந்தப்பட்ட பன்முகப்பட்ட காரணிகளும் இப்பிரதேசத்தில் ஒரு பொருளாதார பயன் தோன்றுவதை தடுத்திருந்தன. மேலும், அரசாங்கத்தின் நிறுவனக் கட்டமைப்பு வடக்கு, கிழக்கில் உதவிப் பங்கீடுகளையும் புனரமைப்புச் செயல்பாடுகளையும் தாமதப்படுத்தியது. அதேவேளையில் கொடை முகவரகங்களின் 'கருவிகளின் பொதி' அணுகுமுறையும் வடக்கு கிழக்கில் பாரிய அளவிலான உள்கட்டமைப்புச் செயல்திட்டங்களை நோக்கிய சார்புநிலையும் மக்களுக்கான பொருளாதார அனுகூலங்கள் குறைவடைவதற்குப் பங்களிப்புச் செய்திருந்தன.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் பொருளாதாரச் செயல் திட்டச் சீர்திருத்தம் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் ஆதரவைத் தக்கவைத்துக்கொள்வதற்கு உசிதமானதாக இருந்து வரவில்லை என்ற வலுவான வாதத்தைச் சுனில் பஸ்டியன் தனது கட்டுரையில் முன்வைக்கிறார்: 'பொருளாதாரச் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தின் அரசியல் சிங்களப் பெரும்பான்மை மக்களின் பாரிய ஒரு பிரிவினரை அந்நியப்படுத்தியதுடன், அது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் தோல்விக்கு வழிகோலியது. மிக முக்கியமான குறைபாடு, குறிப்பாகப் பெரும்பான்மைச் சிங்கள சமூகத்துக்கு மத்தியில் தாராளவாத முதலாளித்துவக் கொள்கைகள் எடுத்து வந்த சமூக முரண்பாடுகளை அது முற்றிலும் புறக்கணித்ததாகும். பொது மக்கள் எதிர்கொண்டிருக்கும் சமூக–பொருளாதாரப் பிரச்சினைகளை அலட்சியம் செய்யும் அதேவேளையில், எல்டிடிஈ இயக்கத்துடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள முயல்வது தோல்விக்கே வழிகோல முடியும் என்பதை இது காட்டுகின்றது. இலங்கை நிலையான ஒரு சமாதானத்தை நோக்கி நகர்ந்து செல்லவேண்டுமானால் தாராளவாதப் பொருளாதாரத்தின் அடிப்படைகள் குறித்து அது கேள்விகளை எழுப்புதல் வேண்டும்.

19. **மனிதநேயப் பரிமாணம்.** போரால் சீர்குலைந்துபோயிருக்கும் ஒரு சமூகத்தைப் புனரமைப்புச் செய்வதும் தமது நிலம் மற்றும் கண்ணியம் என்பவற்றை மீளப் பெற்றுக்கொள்ளும் பொருட்டுச் சொந்த இடங்களுக்குத் திரும்பிவரும் சுமார் பத்து இலட்சத்துக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்களுக்கும், அகதிகளுக்கும், நிவாரண உதவிகளையும் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகளையும் வழங்குவதும் ஒரு பாரிய சவாலாக இருந்து வருகின்றது. இது மிகச் சிக்கலான, நுட்பமான பிரச்சினைகளைக் கொண்டிருக்கும் பிரமாண்டமான ஒரு பணியாக உள்ளது. மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வரும் மக்களுக்கு உணவு, இருப்பிடத்தை வழங்குவதுடன், குறைந்த பட்ச அளவிலான உள்கட்டமைப்பு வசதிகளையும் பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது. அவர்கள் வருமானம் ஈட்டக்கூடிய விதத்திலான வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். கண்ணி வெடிகள் அகற்றப்படுதல் வேண்டும். இன்னமும் பெருந்தொகையான நிலப்பிரதேசங்கள் அதி உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் அமைந்துள்ளன. போரால் சின்னாபின்னப்பட்டிருக்கும் ஒரு சமூகத்தைப் புனரமைத்தல், பாதைகளைத் திருத்துதல், கண்ணி வெடிகளை அகற்றுதல், தொடர்ச்சியான நிலையான அபிவிருத்திக்கென உள்கட்டமைப்பு வசதிகளை மீள உருவாக்குதல் என்பன நாடு எதிர்நோக்கியிருக்கும் ஏனைய சவால்களாகும்.

வடக்கு கிழக்குப் பிரதேசத்துக்கு நிவாரணம், புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி என்பன தங்குதடையின்றி வழங்கப்படுவதற்கு உதவக்கூடிய ஒரு பொறிமுறையை அபிவிருத்திச் செய்வதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கக் காலப்பிரிவின்போது பெருந்தொகையான நிறுவனரீதியான கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டிருந்தன. ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளின்போது அத்தகைய பொறிமுறை ஒன்றின் அபிவிருத்தி கவனத்தில் எடுக்கப்பட்டிருந்தது. இடைக்காலப் பொறிமுறை ஒன்றின் அபிவிருத்திக்கென இருதரப்புகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய கூட்டுக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாததாலும் உச்சநீதிமன்றத்தால் நிராகரிக்கப்படும் என்ற அச்சத்தாலும் இந்த முடிவை விலக்கிக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கென அமைக்கப்பட்ட மிக முக்கியமான அமைப்பான எஸ்ஐஹெச்ஆர்என்னிடம் (சிரானிடம்) முன்னுரிமை நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி வளங்களை ஒதுக்குவதைத் தீர்மானித்தல், அமலாக்கலுக்கு எனப் பொருத்தமான முகவரகங்களைத் தெரிவு செய்தல், மனிதநேய மற்றும் புனரமைப்புத் தேவைகளை இனங்காணுதல் போன்ற பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இந்த அமைப்பால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் செயல் திட்டங்களுக்கு உலக வங்கியின்கீழ் இருந்துவந்த வடக்கு, கிழக்குப் புனரமைப்பு நிதியத்திலிருந்து நிதிப்படுத்தலை வழங்கவேண்டி இருந்தது. வடக்கு கிழக்கின் நிவாரண மற்றும் புனரமைப்புத் தேவைகளை நிர்வகிக்கும் பொறுப்பு வேறு பல அரசாங்க முகவரகங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நிவாரணம், புனர்வாழ்வளித்தல் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணையாளர் நாயகம் அலுவலகம் என்ற பெயரில் பிரதமரின் அலுவலகத்தின்கீழ் ஒரு புதிய நிறுவனம் உருவாக்கப்பட்டது. இது ட்ரிபிள் ஆர் செயல்திட்டம் என அழைக்கப்பட்டது. மேலும், நிவாரணம் மற்றும் புனரமைப்புப் பணிகளுக்குப் பொறுப்பாக வேறு பல அமைச்சுகளும் இருந்து வந்தன.

எஸ்ஐஹெச்ஆர்என் (சிரான்) அமைப்பின் பணிப்பாளரான இரேனஸ் செல்வின் 'வடக்கு கிழக்கின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான சவால்கள்' என்னும் பிரசுரிக்கப்படாத ஒரு கட்டுரையில் அங்கே நிலவிவரும் பிரமாண்டமான மனிதநேய நெருக்கடி தொடர்பாகக் கவனத்தை ஈர்க்கிறார். அப்பிரதேசத்தில் மனிதவளப் பற்றாக்குறை மிகக் கடுமையானவிதத்தில் நிலவி வருகின்றது என்பதை எடுத்துக்காட்டும் பொருட்டு அவர் புள்ளிவிவர ரீதியிலான சான்றுகளை முன்வைக்கின்றார். உதாரணமாக, அங்குப் பின்வரும் விதத்தில் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படாது இருந்து வருகின்றன: சுகாதாரத் துறை 41%, கல்வி மற்றும் நிர்வாகம் 75%, ஆசிரியர்கள் 45%, பொதுத் துறை 80%. அதேவேளையில், ஊராட்சி மன்றங்களின் கணக்காளர்கள் தொடர்பான 41 பதவிகளில் 40 பதவிகள் வெற்றிடமாக உள்ளன. தென்னிலங்கையில், 10% உடன் ஒப்பிடும்பொழுது வடக்கு, கிழக்கின் வேலையில்லாத் திண்டாட்டம் 25%ஆக உள்ளது. உள்கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரையில் சுகாதார நிறுவனங்களில் 25% முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன அல்லது செயல் இழந்துள்ளன என்றும் 500 பாடசாலைகளில் உள்ள 15,000 வகுப்பறைகள் அழிக்கப்பட்டுள்ளன அல்லது சேதமடைந்துள்ளன என்றும் அவர் குறிப்பிடுகிறார். இப்பிரதேசம் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகளின்பால் அவர் எமது கவனத்தை ஈர்ப்பதுடன், பெருமளவுக்கு மத்தியமயப்படுத்தப்பட்டுள்ள அதிகார நோக்கிலான ஓர் அணுகுமுறை உள்ளூர் ஆற்றல்களை உதாசீனம் செய்து, புதுமைப்புனைவிலான மாற்றங்களைத் தடுத்து வருகின்றது எனக் குறிப்பிடுகிறார். பிறிதொரு கோளுடன் (பிளானெட்) சம்பந்தப்பட்டதாக இருந்து வருகின்றது எனக் கருதும் விதத்தில் வடக்கு, கிழக்கு தொடர்பான திட்டமிடல் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் வாதிடுகிறார். இந்த நெருக்கடியின் அளவு குறித்த ஒரு மாதிரியை வழங்கும் பொருட்டே இப்புள்ளி விவரங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உயரளவில் மத்தியமயப்படுத்தப்பட்டிருந்த நிர்வாக அமைப்பு, புதுமைப்புனைவிலான கருத்துகள் மற்றும் படைப்புத் திறன் எதிர்ப்பின் விளைவாகவே எஸ்ஐஹெச்ஆர்என் அமைப்பு தோல்வியடைந்தது என இரேனஸ் முறைப்பாடு செய்கிறார். அனைத்துச் செயல்பாடுகள் தொடர்பாகவும் தடங்கல்களும் இடையூறுகளும் இருந்து வந்துள்ளன. சுனாமியின் பாதிப்பு இப்பிரச்சினையை மேலும் தீவிரமாக்கியது. சுனாமியின்போது வடக்கு, கிழக்குப் பிரதேசம் பெருமளவிலான உயிரிழப்புகளையும் சொத்து இழப்புகளையும் எதிர்கொள்ள நேரிட்டது. தென்னிலங்கைக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவியை வடக்கு, கிழக்குக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவியுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, நிதி ஒதுக்கீடுகளிலும் மீட்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கென உருவாக்கப்பட்டிருந்த முன்னுரிமைகளிலும் ஓர் ஏற்றத்தாழ்வு நிலை இருந்துவந்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

போரின் விளைவாக ஏற்பட்டிருக்கும் சேதங்கள் அல்லது சுனாமி பாதிப்பின் விளைவாக ஏற்பட்டிருக்கும் சேதங்கள் தொடர்பாக வடக்கு கிழக்குப் பிரதேசத்தைப் புனரமைப்புச் செய்து மீண்டும் பழைய நிலைக்கு எடுத்து வரும் விடயத்தில் அரசாங்கம் கொண்டிருக்கும் ஆற்றல் குறித்து எல்டிடிஈ இயக்கம் ஆழமான சந்தேகங்களைக் கொண்டுள்ளது. முடிவுகளை எடுக்கும் செயன்முறையில் எல்டிடிஈ இயக்கமும் பங்கேற்கும் ஒரு பொறிமுறையை உருவாக்குவதற்கென மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வி அடைந்துள்ளன.

20. ***சீர்குலைவு இயங்கியல்.*** சீர்குலைவு இயங்கியல் குறித்து மேலும் அதிகளவுக்கு ஆராய்ச்சி நடத்தப்படுதல் வேண்டும். முதன்மை அக்கறைதாரர்கள் தவிரச் சமாதானச் செயன்முறையைச் சீர்குலைப்பதன் மூலம் தமது சொந்த நலன்களை நிறைவேற்றிக்கொள்ளும் ஏனைய நபர்களையும் நாம் இனங்கண்டுகொள்ள முடியும். ஸ்டெட்மன் பின்வருமாறு கூறியுள்ளார்: 'பேச்சுவார்த்தைகளின் மூலம் தோன்றும் சமாதானம் தமது அதிகாரம், உலக நோக்கு, நலன்கள் என்பவற்றுக்கு அச்சுறுத்தலாக இருந்து வருகின்றது என நம்பும் தலைவர்களும் தரப்பினர்களும் உள்ளனர். சமாதானத்தை எடுத்து வரும் முயற்சிகளைச் சீர்குலைப்பதற்கென அவர்கள் வன்முறையைப் பயன்படுத்துகின்றனர்'. இங்குச் சீர்குலைப்பவர்கள் சமாதான உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் என்றும் இன்றைய சமாதானச் சூழ்நிலையில் நிச்சயமற்ற நிலை மற்றும் குழப்பத்தைத் தோற்றுவிப்பதற்கான பல்வேறு வழிகளையும்



தேடிக்கொண்டிருப்பவர்கள் என்றும் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளனர். உயன்கொட அண்மையில் பின்வருமாறு சுட்டிக்காட்டியிருந்தார்: 'தோல்வியடைந்திருக்கும் சமாதான முயற்சிகளிலிருந்து அரசியல் தலைவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினை, அரசாங்கங்களும் அதே போலச் சமாதானச் செயன்முறை ஒன்றின் சர்வதேச கட்டுக்காவல் தரப்பினரும் சீர்குலைவுவாதிகளிலிருந்து இந்த முன்முயற்சியைப் பாதுகாத்துக்கொள்வதற்கான தனியொரு பொறுப்பைக் கொண்டுள்ளனர் என்பதாகும்'.[4]

சமாதானச் செயன்முறையுடன் முறைசார்ந்த விதத்தில் அல்லது முறைசாராத விதத்தில் சம்பந்தப்பட்டிராத அக்கறைதாரர்களும் இருந்து வருகின்றனர். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் சமாதானச் செயன்முறை தொடர்பாக ஏமாற்றமடைந்திருந்த ஜேவிபி, ஜாதிக ஹெல உறுமய மற்றும் பாதுகாப்புப் படையினரில் ஒரு பிரிவினர் என இன்றைய நிலையில் இவர்களை இனங்கண்டு கொள்ள முடியும். இந்தச் சீர்குலைவுக் குழுக்களில் தமிழ்த் தரப்பிலும் தற்போதைய சமாதானச் செயன்முறையிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கும் பிரிவுகள் மற்றும் அரசியல் குழுக்களும் முஸ்லிம் தரப்பைப் பொறுத்தவரையில், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் போதியளவில் முஸ்லிம்களின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பொருட்டு இப்பொழுது மக்கள் பாரிய அளவில் அணிதிரள வேண்டும் எனக் குரல் எழுப்பிவரும் சக்திகளையும் குறிப்பிடலாம். இத்தகைய செயல்பாட்டாளர்களைத் தெளிவாக பார்க்க முடிகிறது. ஆனால்; அதேவேளையில், மிகவும் மறைமுகமான விதத்தில் நிழல் செயல்பாடுகளிலும் சூழ்ச்சிகளிலும் ஈடுபட்டு வரும் மறைவான நபர்களும் உள்ளனர். இவர்களை இனங்கண்டு கொள்வது மிகவும் சிரமமான ஒரு காரியமாகும். தற்போதைய கொந்தளிப்பு நிலைமைகளைப் பயன்படுத்தி, சீர்குலைவு நிலைமைகளை எடுத்துவருவதற்கு அவர்கள் விரும்பலாம். துணைப் படைகளின் பிரசன்னம் மற்றும் போர்நிறுத்த ஒப்பந்தத்தை நிலைகுலையச் செய்வதில் அவை வகித்து வரும் முனைப்பான பாத்திரத்தையும் இங்குக் கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும். எந்தவொரு உள்நாட்டுப் போரிலிருந்தும் கிடைக்கும் வருமானத்தையும் இலாபத்தையும் இழக்கும் பிரிவினரும் போர்நிறுத்தப்படுவதன் காரணமாகத் தமது சீவனோபாயத்தை இழக்கும் பிரிவினரும்கூட இருந்து வருகின்றனர். இத்தகைய நபர்களை நாம் தெளிவான விதத்தில் இனங்கண்டுகொள்ள வேண்டும். இவர்களில் சிலர்

4. பேராசிரியர் ஜயதேவ உயன்கொட, *சீர்குலைவு இயங்கியல்*, டெய்லி நியூஸ், அக்டோபர் 22, 2002.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சட்டத்துக்கு மறைவாகத் தொடர்ந்து செயல்பட்டுவரும் முந்தைய ஊர்க்காவல் படையினராகவும் இராணுவத்தைவிட்டுச் சென்ற சிப்பாய்களாகவும் ஆயுதங்கள் களையப்பட்ட தமிழ்ப் போராளி களாகவும் இருந்து வரமுடியும்.

கடந்த காலத்தின் சீர்குலைவு இயங்கியல் குறித்த ஒரு பரிசீலனை, இலங்கையில் இத்தகைய செயன்முறைகள் எவ்வாறு செயல்பட்டு வருகின்றன என்பது குறித்த ஒரு சில துப்புகளை நமக்கு வழங்கு கின்றது. சீர்குலைவு இயங்கியல் இயல்பில் பன்முகப்பட்டதாக இருந்து வருவதுடன், அது குறிப்பிட்ட சில நலன்கள் சங்கமித்து, ஒன்றுடன் ஒன்று இணைந்துகொள்வதில் தங்கியுள்ளது. அதே வேளையில், சமாதானச் செயன்முறையின் மீது ஓர் அக்கறையைக் கொண்டிருந்தபோதிலும், தாம் அதிலிருந்து ஒதுக்கப்பட்டிருப்பதாக உணர்பவர்களும் இத்தகைய சீர்குலைவுவாதிகளாக இருந்து வர முடியும்.

21. **மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு.** உபாயரீதியான வடிவமைப்பொன்றை உருவாக்கிக்கொண்ட பின்னர் அச்செயன்முறையைத் தொடர்ச்சி யான அடிப்படையில் மதிப்பிட்டு, கண்காணிப்பது அவசியமாகும். எந்தவொரு வடிவமைப்பும் குறையற்றதாக இருந்து வருவதில்லை கள நிலைமைகளின் யதார்த்தங்களுக்கு ஏற்ற விதத்தில் தவறுகள் சரிசெய்யப்பட்டு, சீராக்கப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு ஒரு குழு அல்லது ஒரு நிறுவனம் இச்செயன்முறையைக் கண்காணிப்பது அவசியமாகும். பாரிய கம்பெனிகளும் வணிக நிறுவனங்களும் செயலாற்றுகையை மதிப்பிட்டுக்கொள்வதற்கென அதிநவீனக் கருவிகளைப் பயன்படுத்தி வருவதுடன், தொடர்ச்சியான வளர்ச்சியை எடுத்துவரும் பொருட்டு முறைமைகளை உருவாக்கிக் கொள்கின்றன. வருங்காலத் தோற்றங்களை அனுமானித்துக் கொள்ளும் பொருட்டுத் தோற்றப்பாடுகளைக் கட்டி எழுப்பும் அப்பியாசம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. வணிக நிறுவனங்கள் தொடர்ச்சியான வளர்ச்சிகளைப் பராமரித்துவரும் பொருட்டுச் சமநிலைப் புள்ளி அட்டை மற்றும் தர முறைமைகள் என்பவற்றைப் பயன்படுத்துகின்றன. ஒரு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அதன் செயலாற்றுகை தொடர்பான ஒரு மேலோட்டமான நோக்கைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருந்துவருவதுடன், விடயங்கள் மோசமான திசையில் செல்லும்பொழுது அது குறித்த ஓர் எச்சரிக்கையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இருந்து வருகின்றார் என்பதே இதன் பொருளாகும். அதேவிதத்தில் செயலாற்றுகையைக் கண்காணிக்கும் பொருட்டு முரண்பாட்டுச் சூழலொன்றுக்கு அத்தகைய கருவிகள் அவசியப்படுகின்றன. இத்துறையில் முன்னோடிகளான ஒரு குழு முரண்பாட்டு நிலைமை களைக் கண்காணிப்பதில் பயனுள்ளவையாக இருந்து வரக்கூடிய குறிகாட்டிகளை அபிவிருத்தி செய்துள்ளது. இந்தக் குறிகாட்டிகளை வன்முறை அல்லது சமாதானத்துக்கான அச்சுறுத்தல்கள் தொடர்பான அரசியல், சமூக, பொருளாதார, கலாசாரக் குறிகாட்டிகள் என்ற வகைப்பாடு செய்ய முடியும். ஏனையவர்கள் அமைப்புரீதியான வன்முறை, நேரடி வன்முறை மற்றும் கலாச்சார வன்முறை என்ப வற்றை மதிப்பிடுவதற்கான வழிமுறைகளை முன்வைத்துள்ளனர். குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் மீது சமாதானம் எடுத்துவரும் தாக்கத்தை அளவிட்டுக்கொள்ளும் பொருட்டும் சமாதானக் குறிகாட்டிகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன என ஒரு சிலர் கூறியுள்ளனர். முரண்பாடுகள் எவ்வாறு தீவிரமடைந்து வருகின்றன என்பதை புரிந்துகொள்ளும் பொருட்டு துரிதப்படுத்தல் மற்றும் தூண்டுதல் கருவிகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். நாளாந்த தொடர்பு களிலிருந்து விடுபட்டிருக்கும் ஒரு மக்கள் குழுவினர் இதில் ஈடுபடுவது சிறந்ததாகும். பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருபவர் களுக்கும் கொள்கைகளை உருவாக்குபவர்களுக்கும் தேவையான உள்ளீடுகளை அவர்களால் வழங்க முடியும்.

22. **முடிவுக் குறிப்புகள்.** இந்தத் தொகுதி அதன் அனைத்துக் கட்டுரை களின் மூலமும் கடந்த இரண்டு வருட காலப் பிரிவின்போது இலங்கை எதிர்கொண்டு வந்த மிக முக்கியமான பேச்சுவார்த்தைச் செயன்முறையை மீளாய்வு செய்து, மதிப்பிட்டுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டமை மற்றும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தாபிக்கப்பட்டமை என்பன இலங்கையின் மிக முக்கியமான சாதனைகளாக இருந்து வருகின்றன. இவை பல சிரமங்களுக்கு மத்தியிலும் நிலைத்து வந்துள்ளன. போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது இலங்கையின் அரசியல் விவகாரங்களில் ஏற்பட்ட பாரிய ஒரு திருப்புமுனையாகும். இதன் மூலம் ஆயுதம் தாங்கிய ஒரு கிளர்ச்சி இயக்கத்துக்கும் அரசாங்கத் துக்கும் இடையிலான அதிகாரச் சமநிலை அங்கீகரிக்கப்பட்டது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பதவிக் காலத்தின் இறுதி மாதங்களின்போது போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஒரு தலைசிறந்த சாதனையாக இருந்து வருகிறது எனக் குறிப்பிட்டதும் பேச்சு வார்த்தை மூலமாக தீர்வுக்கான ஒரு முக்கிய கட்டுமானக் கல்லாக இருந்து வருகின்றது எனக் குறிப்பிட்டதும் உண்மையிலேயே ஓர் எதிர்முரண் நிலையாகும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போர்நிறுத்த ஒப்பந்தத்தை எதிர்த்து வந்த ஜேவிபி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் உடன்பாடுகளில் கையொப்பமிட்டிருந்தபோதிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுசரணையாளர் என்ற முறையில் நோர்வேயின் வகிபாத்திரத்தை ஏற்றுக் கொண்டிருப்பதுடன், போர்நிறுத்த ஒப்பந்தத்தை அமலாக்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை 2006 பிப்ரவரி 22-23ஆம் தேதிகளில் ஜெனிவாவில் நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார். இந்த ஒப்பந்தம் ஒரு நிலையான ஆவணமாக இருந்து வருகின்றது என்ற விடயத்தையும் அதன் அமலாக்கம் இலங்கையில் சமாதான முன்னெடுப்புகளுக்கான ஓர் அத்தியாவசிய தேவையாக இருந்து வருகின்றது என்பதையும் நிகழ்வுகள் நிரூபித்துக்காட்டியுள்ளன.

இந்தத் தொகுதி முழுவதிலும் அடிச்சரடாக ஓடும் தொனிப் பொருள் இரட்டை அதிகாரநிலை காரணமாகப் பிரதமர் என்ற முறையில் ரணில் விக்கிரமசிங்கவால் பேச்சுவார்த்தைச் செயன் முறையைத் தக்கவைத்துக்கொள்ள முடியாதிருந்தது என்பதாகும். அதாவது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சமாதானச் செயன்முறைக்கு குந்தகம் விளைவித்ததுடன், இறுதியில் மூன்று அமைச்சுகளைப் பொறுப்பேற்று, பாராளுமன்றத்தைக் கலைத்தார். அதனையடுத்து அவர் தனது சொந்தக் கூட்டரசாங்கத்தை அமைத்துக் கொண்டார். பிரதமரைப் பொறுத்தவரையில் அது, தனது தலைக்கு மேல் தொங்கிக்கொண்டிருந்த, வாளாக இருந்தது.

ரணில் விக்கிரமசிங்கவின் இடைக்கால நிருவாகத்தை ஒரு சில வழிகளில் இலங்கை அரசியல் முறையின் ஒரு முரண்பாடாக நோக்க முடியும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி இங்குப் பிரதமரின் கட்சியைச் சேர்ந்தவராக இருந்து வரவில்லை. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அதிகாரத்தில் இருந்தபொழுது எதிர்கொள்ள நேரிட்ட அதே சவாலைப் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்பொழுது எதிர்கொண்டுள்ளார். அதாவது, இலங்கையில் நீண்ட காலமாக இடம்பெற்றுவரும் உள்நாட்டுப் போருக்குப் பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வை எட்டுவது எவ்வாறு என்ற சவாலை அவர் சந்தித்துள்ளார். அந்த வகையில் ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ ஈட்டியிருக்கும் வெற்றி ஒரு தனித்துவ இயல்பைக் கொண்டுள்ளது. அவர் சிங்களப் பௌத்தர்களின் 60%க்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக்கொண்டுள்ளார். அதுமட்டுமன்றிச் சமாதானச் செயன்முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்துவரும் இரு கட்சிகளின் ஆதரவை அவர் பாராளுமன்றத்தில் கொண்டுள்ளார். விக்கிரமசிங்க பிரதமராக இருந்து வந்த காலப் பிரிவின்போது பாரிய ஆர்ப்பாட்டங்கள், கொடி எரிப்புகள், ஊடகங்களுக்கு ஊடாக மேற்கொள்ளப் பட்டு வந்த பொய்ப் பிரசாரங்கள் என்பவற்றின் வடிவில் சமாதானச் செயன்முறை பல சவால்களை எதிர்கொண்டிருந்தது. ஆனால், இன்று ஜனாதிபதி ராஜபக்ஷ அத்தகைய சவால்களை எதிர்கொள்ளவில்லை. ஆனால் அவர் கள யதார்த்த நிலைமைகளை எதிர்கொள்ள வேண்டியிருப்பதுடன், இந்தியா மற்றும் சர்வதேசச் சமூகத்தின் வற்புறுத்தலின் பேரில் நோர்வேயின் அனுசரணையையும், போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டிய தேவையையும் ஏற்றுக்கொண்டுள்ளார். தென்னிலங்கையைச் சேர்ந்த அனைத்து அரசியல் கட்சிகளிடமும் ஒரு கருத்தொற்றுமையை உருவாக்குவதற்கென முன்வந்ததன் மூலம் அவர் இருதரப்பு கருத்தொற்றுமையைப் பெற்றுக்கொள்வதற்கும் அப்பால் நகர்ந்து சென்றுள்ளார். இந்தவகையில், எல்டிடிஈ இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான முயற்சி தொடர்பாக அனைத்து அரசியல் கட்சிகளுடனும் கலந்தாலோசனை நடத்தி, அவற்றின் கருத்துகளையும் கருத்தொற்றுமையையும் பெற்றுக்கொள்வது புத்திசாலித்தனமானது என்ற விடயத்தை ஜனாதிபதி ராஜபக்ஷ கற்றுக்கொண்டுள்ளார்.

அவர் பாதுகாப்புப் படைகளில் முக்கியமான பல மாற்றங்களை மேற்கொண்டிருப்பதுடன், நாட்டின் பாதுகாப்பு தாபனத்தைக் கண்காணிக்கும் பொருட்டு கடும் போக்காளர்களான தளபதிகளையும் ஆலோசகர்களையும் எடுத்து வந்துள்ளார். ஒற்றையாட்சி அரசே தனது நிலைப்பாடாக இருந்து வருகின்றது என அவர் பிரகடனம் செய்திருப்பதுடன் பிரிட்டன், ஸ்காட்லாந்து மற்றும் வேல்ஸ் ஆகியவற்றுக்கு வழங்கியிருக்கும் தன்னாட்சி முறையை அடிப்படையாகக் கொண்ட ஓர் அதிகாரப் பரவலாக்கல் பொதியை உத்தேசித்துள்ளார்.

ஆனால், ஜனாதிபதி ராஜபக்ஷ மிகவும் சக்தி வாய்ந்த இராணுவ அரசியல் சக்தியொன்றை எதிர்த்துச் சமாளிக்க வேண்டியவராக இருந்து வருகின்றார். எல்டிடிஈ இயக்கம் தனது மாவீரர் தின உரையில் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு இறுதி வாய்ப்பை வழங்கத் தயாராக இருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கையின் எந்தவொரு அரசியல் தலைவர்மீதும் தமக்கு நம்பிக்கை இல்லை என அவர்கள் கூறியுள்ளனர். நாட்டின் அரசியல் தலைமை வடக்கு, கிழக்கில் வாழ்ந்து வரும் மக்களின் துயரங்களுக்குப் பொருத்தமான தீர்வுகளை வழங்கியிருக்கவில்லை என அவர்கள் கூறியுள்ளனர். வடக்கு, கிழக்கைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம், புனர்வாழ்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளிப்பு மற்றும் புனருதாரணம் என்பவற்றை வழங்கும் நோக்கில் முன்வைக்கப்பட்ட இடைக்காலப் பொதுக் கட்டமைப்புக்கூட உச்ச நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தது. எல்டிடிஈ இயக்கம் சுய நிர்ணய உரிமை மற்றும் பிரிந்து செல்லும் உரிமை என்பவற்றைத் தொடர்ந்தும் அதன் முதன்மைக் குறிக்கோளாக முன்னெடுத்து வருகின்றது. ஒஸ்லோ பேச்சுவார்த்தைகளின்போது வரலாற்றின் ஒரு தருணத்தில் சமஷ்டித் தீர்வொன்றைக் கவனத்தில் எடுப்பதற்குத் தாம் தயாராக இருப்பதாக விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் தெரிவித்திருந்தனர். அதனையடுத்து வந்த நிகழ்வுகளும் அரசியல் மாற்றங்களும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரச் சபையொன்றைக் கோரும் விதத்தில் தனது நிலைப்பாட்டை எல்டிடிஈ இயக்கம் மாற்றிக்கொள்வதற்கு வழிகோலியிருந்தன. இது ஒன்றிய மாதிரி ஒன்றுக்கான ஓர் அடிப்படையாக இருந்து வருவதுடன், இதன்கீழ் எல்டிடிஈ இயக்கம் அதன் ஆயுதப் படைகளைத் தக்கவைத்துக் கொள்ளும்.

இலங்கைக்குச் சமாதானத்தை எடுத்து வரும் விடயத்தில் தான் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதாகவும் பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வை எடுத்துவர விரும்புவதாகவும் ஜனாதிபதி ராஜபக்ஷ வாக்குறுதி அளித்துள்ளார். எல்டிடிஈ இயக்கத்தின் தலைவரை நேரடியாகச் சந்திப்பதற்குத் தயாராக இருப்பதாக அவர் தனது தேர்தல் பிரசார உரைகளின்போது கூறியிருந்தார். இலங்கையின் உள்நாட்டுப் போர் ஏற்கனவே 25 வருடங்களுக்கும் மேல் நீடித்து வந்துள்ளது. இது உலகின் எந்தவொரு பகுதியைப் பொறுத்தவரையிலும் நீண்ட காலமாக இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போர்களில் ஒன்றாகும். பேச்சுவார்த்தைகளுக்கான உத்தியை உருவாக்கும் பொழுது ஜனாதிபதி ராஜபக்ஷ கடந்தகாலத் தவறுகள் மற்றும் தோல்விகள் என்பவற்றிலிருந்து படிப்பினைகளைப் பெற்று, நிலையான அடிப்படையிலான பேச்சுவார்த்தைக் கட்டமைப்பொன்றை வழங்கக்கூடிய உபாயரீதியான வடிவமைப்பொன்றை அபிவிருத்தி செய்துகொள்வது அவசியமாகும். இலங்கை இவ்வளவு காலமும் நடத்தி வந்திருக்கும் நீடித்த பேச்சுவார்த்தைகள் முழுவதிலிருந்தும் நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினைகள் குறித்த விவரங்களை இந்த இரு தொகுப்புகளும் வழங்கியுள்ளன. இப்படிப்பினைகளில் சிலவற்றைப் பின்வரும் ஒழுங்கில் சுருக்கிக் கூறலாம்:

அ. நான் இக்கட்டுரையில் வலியுறுத்தியதுபோல, ஓர் உபாயரீதியான வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் சட்டகம் என்பன அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும். அது நிலைத்து நிற்கக்கூடிய பேச்சுவார்த்தைச் செயன்முறை ஒன்றுக்கான அடிப்படையை வழங்க முடியும். பேச்சுவார்த்தைச் செயன்முறையின் இறுதிப் பெறுபேறு தெளிவாகக் குறித்துரைக்கப்பட வேண்டும் என்பதே இதன் பொருளாகும். எல்டிடிஈ இயக்கத்துடன் பொது விழுமியச் சட்டகம் ஒன்றை எட்டுவதற்கென அனைத்து விதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அத்தகைய ஒரு பாதை வழிகாட்டி அத்தியாவசியமாகும். இதன் இறுதிப் பெறுபேறு இலங்கையில் வாழ்ந்து வரும் அனைத்துச் சமூகங்களையும் திருப்திப்படுத்தக்கூடிய அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் ஓர் ஏற்பாடாக இருந்து வருதல் வேண்டும். அது இலங்கையின் பல்லின இயல்பை அங்கீகரிக்க வேண்டியிருப்பதுடன், ஜனநாயக மற்றும் பன்முக அரசியல் ஒழுங்கொன்றுக்கான கடப்பாட்டையும் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ. மறைமுகமான செயல்பாடுகளுக்கு ஊடாகப் போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு குந்தகம் விளைவிக்காது அதனை அமல்படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். ஜெனிவாவில் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான உடன்பாட்டை அடுத்து அரசியல் வன்முறை பூஜ்ய மட்டத்துக்கு குறைவடைந்துள்ளது என்பது தெளிவாகும். இந்த சான்று அடிப்படையிலான விடயம் இருதரப்பினரும் துணைப் படைகளின் வன்முறைச் செயல்களாக இருந்து வந்தாலும் சரி வடக்கு, கிழக்கின் மக்கள் படையினரின் வன்முறைச் செயல்களாக இருந்து வந்தாலும் சரி வன்முறையைக் கட்டுப்படுத்துவதற்கான சக்தியைக் கொண்டுள்ளனர் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

இ. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டுத் தென்னிலங்கையின் சாத்தியமான மிகப் பரவலான அரசியல் கூட்டை உருவாக்கிக்கொள்வதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷ நிர்ப்பந்திக்கப்படுவார். பிரதான எதிர்க்கட்சியுடன் சகவாழ்வு ஏற்பாடொன்றைச் செய்துகொள்ளும் பொருட்டு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையில் கையெழுத்திடப்பட்ட லியாம் ஃபாக்ஸ் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஓர் உடன்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். உறுப்பினர்களைக் கட்சி தாவச் செய்வதைத் தூண்டும் முயற்சிகள் – அவை எமது அரசியல் கலாச்சாரத்தின் ஒரு பாகமாக இருந்து





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்த போதிலும் – மேற்கொள்ளக் கூடாது. ஒரு தீர்வுக்கான அடிப்படை அளவுகோல்கள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒரு கருத்தொற்றுமையை உருவாக்கிக்கொள்வதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

ஈ. பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கு இணையான விதத்தில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற விடயம் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தின் அனுபவத்திலிருந்து தெளிவாகின்றது. இறுக்கமான அரசிறைக் (ஃபிஸ்கல் – நிதி சம்பந்தமான) கொள்கைகளும் உள்கட்டமைப்புச் செயல் திட்டங்களும் மட்டும் போதாது என்பதே இதன் பொருளாகும். இவற்றுடன் இணைந்த விதத்தில் மக்களுக்கு உடனடி நிவாரணங் களும் உறுதியான பொருளாதார நிகழ்ச்சித் திட்டங்களும் வழங்கப்படுதல் வேண்டும்.

உ. நான் இந்தக் கட்டுரையில் வாதிட்டிருப்பதைப் போல, சம்பந்தப் பட்ட தரப்பினருடன் மட்டுமன்றி மக்களுடனும் நாம் தொடர் பாடல்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனைச் சாதித்துக்கொள்ளும் பொருட்டுச் சிவில் சமூகம், சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் வணிகத் துறை என்பவற்றைச் சேர்ந்த பல்வேறு பிரிவினருக்கு ஒழுங்கான அடிப்படையில் தகவல்களை வழங்கி, அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருத்தமான தொடர்பாடல் உத்தி உருவாக்கப்படுதல் வேண்டும்.

ஊ. சமாதானச் செயன்முறையைச் சர்வதேசமயமாக்கியமையே விக்கிரம சிங்கவின் குறிப்பிடத்தக்க வெற்றிகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது என்ற விடயம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், பொருளாதாரத்துக்கான சர்வதேச ஆதரவையும் அதேபோலப் பாதுகாப்பு ஏற்பாடுகளினூடாக இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்திக்கொள்வதையும் இணைப்பதற்கு அவர் முயன்றார். இந்த இரட்டை நோக்கம் இறுதியில் எல்டிடிஈ இயக்கம் சமாதானச் செயன்முறையி லிருந்து வெளியேறுவதற்கு வழிகோலியது. எல்டிடிஈயின் நிலைமையைப் பலவீனப்படுத்தக்கூடிய சமாதானப் பொறி யொன்றுக்குள் சிக்கவைப்பதே அரசாங்கத்தின் உத்தியாக இருந்து வருகின்றது எனக்கூறி அந்த இயக்கம் அதிலிருந்து வெளியேறியது. விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்பட்ட செயல்பாடுகளைத் தவிர்த்து அன்றி ஜனாதிபதி வேறு ஏதேனும் செயல்பாட்டு வழிமுறைகளை முன்னெடுப்பார் என எதிர்



பார்க்க முடியாது. ஓர் இறுதித் தீர்வை எட்டுவதில் பெற்றுக் கொள்ளும் பாதுகாப்பு தொடர்பான உத்தரவாதங்கள் சிங்களப் பெரும்பான்மை மக்களை ஆசுவாசப்படுத்தக் கூடிய ஒரேயொரு வழிமுறையாக இருந்து வருகின்றன. எவ்வாறிருப்பினும், மேலைநாடுகளில் தங்கியிருக்கும் நிலையிலிருந்து அப்பால் நகர்ந்து செல்வதற்கும் இந்தியா, சீனா மற்றும் ஏனைய ஆசிய நாடுகளுடன் பிணைப்புகளைத் தொடர்ந்தும் பலப்படுத்திக் கொள்வதற்கும் அவர் முயலுவார்.

எ. நீண்ட காலமாக நிலைத்து வரும் உள்நாட்டுப் போருக்குச் சமத்துவமான ஒரு தீர்வைத் தேடும் அதன் முயற்சியில் எல்டிடிஈ இயக்கமும் மிக முக்கியமான சில படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. சர்வதேசச் சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு முன்நிபந்தனையாக அரசியல் கொலைகள், சிறுவர்களைப் படையணிகளில் சேர்த்தல் மற்றும் போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான ஏனைய மீறல்கள் என்ப வற்றை அது கைவிட வேண்டும். மீண்டும் போர் நடவடிக்கைகள் தோன்ற முடியும் என்ற அச்சுறுத்தல்களை எதிர்த்து நிற்க வேண்டும். பேச்சுவார்த்தைகளுக்கு உசிதமான ஒரு சூழல் உருவாக்கப்படுதல் வேண்டும். ஒருதலைப்பட்சமாக இராணுவச் செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு முயற்சியும் முழுநாட்டுக்கும் பாரதூரமான பின்விளைவுகளை எடுத்துவர முடியும். இது தொடர்பாக சர்வதேசச் சமூகத்தின் எதிர்வினைகள் என்னவாக இருந்து வரும் என்பதனை முன் உணர்ந்து கூறுவது சிரமமாகும்.

●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1

# சமாதான நடவடிக்கைகளை ஆரம்பித்தலும் நிலைபெறச்செய்தலும்: தோற்றமும் சவால்களும்

*பிரட்மன் வீரக்கூன்*


**சுருக்கம்**

நெருக்கடியான உள்நாட்டு, சர்வதேச அரசியல் சூழ்நிலைகள் இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் பிப்ரவரி 22, 2002 அன்று போர்நிறுத்தத்தை ஆரம்பித்து வைத்தன. இக்கட்டுரையாசிரியர் இதில் நேரடி பங்கேற்பாளராகவும் பார்வையாளராகவும் இருந்து 2004 ஏப்ரலில் அரசாங்கம் வீழ்ச்சியடையும் வரையிலான காலகட்டத்தைப் பரிசீலிக்கிறார்.

இக்கட்டுரையானது, எதிர்கொள்ளப்பட்ட சவால்களை இனங் காட்டுகிறது. சகவாழ்வு அரசியல் ஒழுங்குமுறையிலான சூழ்நிலையில் இறுதி அதிகாரம் எதிராளியான பிரதம நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிவசம் இருக்கும் நிலையில் சட்டவாக்க அதிகாரத்தை மட்டுமே கொண்டிருந்த பிரதமர் ஒருவர், இலங்கையின் இன நெருக்கடி வரலாற்றில் மிகவும் நீண்டகாலத்துக்கு நீடித்த யுத்தநிறுத்தத்தை ஆரம்பித்து 25 மாதங்களுக்கு நிலைபெறச் செய்ய முடிந்ததை இக்கட்டுரை அடையாளம் கண்டு வெளிப்படுத்துகிறது.

சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட நிறுவன ரீதியான பொறிமுறை இயக்கம், ஒத்தாசைபுரிந்த உதவி வழங்கும் சமூகத்தின் செயல்பாடுகள் மற்றும் இவர்கள் வழங்கிய சர்வதேச வலைப்பின்னல் ஏற்பாடுகள் என்பன சிறிதளவு விபரமாக ஆராயப் பட்டுள்ளது. அத்துடன், பிளவுபட்ட இருதரப்பிலுமுள்ள நாசகாரர் களின் செயல்பாடுகளும் பரிசீலிக்கப்பட்டுள்ளன. மேலும், விடுதலைப் புலிகளுக்கு எஃப்.எம். வானொலி நிலையத்தை அன்பளிப்பாக வழங்கியதாகக் கூறப்பட்ட விடயம் மற்றும் மணிராசன்குளம் முகாமால்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருகோணமலையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனத் தெரிவிக்கப் பட்டமை போன்ற பொதுமக்களின் உணர்வைத் தூண்டிய சில நெருக் கடியான விவகாரங்களும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. தற்காலிக சண்டை நிறுத்தத்தை மாற்றியமைத்து இறுதியானதும் நியாயமானது மான சமாதானத்துக்கு இட்டுச் செல்லும் பாதையாக, அரசாங்கத்தால் விவரிக்கப்பட்ட, முன்மொழியப்பட்ட இடைக்கால ஏற்பாடும் இங்கு விரிவாக விவாதிக்கப்படுகிறது. இறுதியாகக் கற்றுக்கொண்ட படிப் பினைகள் அடையாளம் காணப்படுவதுடன் பெற்ற அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் செல்ல வேண்டிய மார்க்க வரைபடம் மற்றும் நிகழ்ச்சித் திட்டம் ஆகியவற்றைத் தயாரித்துக் கொள்வதற்கும் முயலப்பட்டுள்ளது.

### பின்னணி

2001இன் இறுதிப் பகுதியில் அரசியல் நிகழ்வுகள் வேகமான திருப்பத் தைச் சந்தித்தன. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அக்டோபரில் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு டிசம்பரில் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை விடுத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (ரவூப் ஹக்கீம்), இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (ஆறுமுகம் தொண்டமான்) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து கருத்து முரண்பாட்டால் வெளியேறிய பல முன்னணி உறுப்பினர்கள் ஆகியோரால் ஐக்கிய தேசிய முன்னணி (ஐதேமு) என்ற கூட்டணி துரிதமாக அமைக்கப் பட்டது.[1] இந்தக்கூட்டணியானது, இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப் படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருதல் என்ற பிரதான கொள்கையின் அடிப்படை யில் தேர்தலில் போட்டியிட்டது.[2] 20 வருடங்களாக நீடித்த யுத்தமானது கடுமையான துன்பத்தையும் பாரிய இழப்புகளையும் இனரீதியாகப் பிரிவுண்ட மக்களுக்குக் கொடுத்திருந்ததுடன் நாட்டின் பொருளாதாரமும் மோசமான நிலைக்குச் செல்வதற்குக் காரணமாக அமைந்தது[3]. நாட்டின்

1. அமைச்சர்களாகப் பொறுப்பேற்ற ஜி.எல் பீரிஸ், மஹிந்த விஜயசேகர, எஸ்.பி. திசாநாயக்கா ஆகியோரை இவை உள்ளடக்கியவை.
2. அட்டவணை 1இல் ஆட்புல எல்லை இழப்பு மதிப்பீடு, பலியான இராணுவ அதிகாரிகளின் எண்ணிக்கை, பொதுமக்கள் இழப்புகள்: இறந்தோர், இடம் பெயர்ந்தோர், போர்க்காலத்திலான பாதுகாப்புச் செலவினம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.
3. கொழும்பு நகரக் குண்டுவெடிப்பு, கட்டுநாயக்கா விமானப்படைத்தள, சர்வதேச விமான நிலையத் தாக்குதலுக்குப் பின்னர் சுற்றுலாத்துறையும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளும் மோதலினால் பாதிக்கப்பட்ட பிரதான பிரிவுகளாகும். இவை வெளியுலகின் பார்வைக்கு இலங்கை பாதுகாப்பற்ற இடம் என்ற பார்வையை உருவாக்கியது. கொழும்பு துறைமுகத்தில் வர்த்தகம், கப்பல் துறை போன்றவை அதிகளவிலான காப்புறுதியினால் மேலதிகக் கட்டணத் திற்கு உள்ளாயிற்று.



வரலாற்றில் 2001இல் முதல்தடவையாக வருடாந்த பொருளாதார வளர்ச்சி 1.5 சதவீதமாக வீழ்ச்சி கண்டது.

மக்களின் சமாதான விருப்பு நிபந்தனையற்றதாக இருந்தது. விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் பல வருடங்களாக இடம்பெற்ற போர் முயற்சிகள்[4] வெற்றியளிக்காத நிலையில் 5 டிசம்பர் 2005இல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஐதேமு வெற்றி பெற்றது[5]. ஜனாதிபதி குமாரதுங்க அரசாங்கத்தை அமைக்குமாறு ஐதேமுவிற்கு அழைப்பு விடுத்தார். அரசியலமைப்புரீதியாக நாட்டினதும் அரசாங்கத்தினதும் தலைவராக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி இருந்த நிலையில் ஐதேமு அரசாங்கம் சகவாழ்வு ஆட்சியாக அமைந்தது.

டிசம்பர் 14இல் ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார். சகல அமைச்சுப் பொறுப்புகளையும் புதிய அரசாங்கம் பெற்றுக்கொள்வதற்கு ரணில் விக்கிரமசிங்கவால் அழுத்தம் கொடுக்கப்பட்டதென்பது நன்கு தெரிந்த தொன்றே. நாட்டின் தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி வசமிருந்த பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பும் புதிய அரசாங்கத்திற்குக் கையளிக்கப் பட்டது.

சமாதான முயற்சியை முன்னெடுப்பதற்கான மக்கள் ஆணையைப் புதிய அரசாங்கம் பெற்றிருந்தது. இதன் வெற்றிக்குப் பாதுகாப்பமைச்சின் நிர்வாகம், வழிகாட்டல், கட்டுப்பாடு என்பன முக்கியமானதாக இருந்தது. பின்னர் இதுவே பிரதமருக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கும் இடையில் பாரிய சர்ச்சைக்குரிய விடயமாக உருவெடுத்தது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசியலமைப்புரீதியாகச் சகல ஆயுதப்படைகளுக்கும் பிரதம தளபதியாக இருந்ததால் அரசாங்கத்தின் இராணுவரீதியான செயல்பாடுகளுக்குரிய அதிகாரத்தில் அவர் கணிச மான செல்வாக்கைச் செலுத்தினார். பாதுகாப்புச் சேவைத்துறையில் கட்டுப்பாடு இரட்டைத் தன்மையான முறையில் இருந்ததும் எதிர்கால குழப்பத்திற்கான விதைகளாகும்.

4. 2000இன் முற்பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கழுத்துப் பகுதியிலிருக்கும் ஆனையிறவு படைத்தள முகாம் வீழ்ச்சிகண்டது. வடக்குப் பகுதிக்கு பின்தள்ளிய நிலைமை, வன்னியூடாக (ஜயசிகுரு) எதிர் கொள்ளப்பட்ட பதில் தாக்குதல்கள், யாழ்ப்பாணத்திலுள்ள படைகள் சுற்றிவளைக்கப்பட்டமை (முற்றுகைக்குள்ளான படையினரைக் கடல் மார்க்கமாக அப்புறப் படுத்துவதற்கு உதவ இந்தியா முன்வந்தமை சுட்டிக்காட்டப்பட்டது) போன்றவை யுத்த ரீதியான தேர்வு ஏற்புடையதல்ல என்றும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதே முன்னெடுக்கப்பட வேண்டிய ஒரே வழியென்ற சிந்தனையை ஏற்படுத்தியது.
5. 2001 பொதுத்தேர்தலின் முடிவுகள், கட்சிகளின் நிலைமை தொடர்பாக அட்டவணை 2 ஐப் பார்க்கவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### சமாதான நடவடிக்கைகளுக்கான சவால்

1977இலிருந்து ரணில் விக்கிரமசிங்க அரசியல்வாதியாக இருந்து வருபவர். இலங்கையில் சமாதான முன்னெடுப்பைக் கொண்டு செல்வதில் ஏற்படும் சவாலைச் சமாளிப்பதிலுள்ள கஷ்டம் அவருக்குத் தெரிந்திருந்தது. ஜனாதிபதியுடனான சகவாழ்வு அரசியலுக்கு அப்பால், கணிசமான அளவு தெற்கிலும் வெளிநாடுகளிலும் உள்ளோர் மத்தியிலும் கிளர்ச்சியாளருக்கு எதிராகக் கடுமையான யுத்தரீதியான அணுகுமுறையைக் கைக்கொள்ள வேண்டுமென்ற கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. பிரிவினைவாதிகள், பயங்கரவாதிகள் என்று கிளர்ச்சியாளரைப் பல்வேறு விதத்தில் இவர்கள் விவரித்தனர். யாவற்றுக்கும் மேலாக விடுதலைப் புலிகளும் தங்கள் இலக்கிலிருந்து மாற்றமடையாத தன்மையையே வெளிப்படுத்தியிருந்தனர். அவர்களின் உறுப்பினர்கள் போதிய யுத்த வளத்தைக் கொண்டவர்களாக்கப்பட்டிருந்ததுடன் பல வருடகால யுத்தத்தால் கெரில்லாப் போரிலும் மரபுரீதியான யுத்த தந்திரத்திலும் நிரம்பவும் அனுபவம் பெற்றவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு நிதி மற்றும் அரசியல்ரீதியாக, உலகம் முழுவதும் புலம்பெயர்ந்த மக்களின் உதவி கிட்டியுள்ளது. அபிவிருத்தி அடைந்த நாடுகளின் தலைநகரங்களில் தற்போது வாழும் புலம்பெயர்ந்தோரிடம் இருந்தே இந்த உதவி பெறுவதில் அவர்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது.

அரசாங்கத்துடன் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட போர்நிறுத்த உடன்படிக்கைகளை முறித்துக்கொள்வது தொடர்பாக நீண்ட வரலாறு ஒன்றிருந்தது. தனி நாட்டுக்காகப் போராடுவதில் உறுதிபூண்டிருந்த இக்குழுவினரை அரசியல் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்தும் பங்காளியாக மாற்றி எடுக்கும் அசாத்தியமான நடவடிக்கையில் ரணில் விக்கிரமசிங்க எவ்விதம் வெற்றிகொள்ளப்போகிறார் என்ற கேள்வி மக்கள் முன்னிலையில் காணப்பட்டது. யுத்தநிறுத்தத்தை ஒரு தரப்பு முறித்துக் கொள்ளாவிடின் முன்னெடுப்பது கடினமான காரியமல்ல.

இது மிகவும் அபாயகரமான காரியமாகும். அவருக்கு முன்னர் சிலர் இதற்குரிய விலையைச் செலுத்தியிருந்தனர். சிலர் தமது உயிரையும் பறிகொடுத்திருந்தனர்.

அத்துடன், அவரின் சொந்தக் கட்சிக்குள்ளும் இந்த விடயம் தொடர்பாக எதிர்ப்பு இருந்தது. அரசுக்கு எதிரான பயங்கரவாதம் மற்றும் ஆயுதக் கிளர்ச்சியில் விட்டுக்கொடுப்புக்கு இடமிருக்கக் கூடாதென ரணிலின் கட்சிக்குள்ளிருக்கும் எதிர்ப்பாளர்கள் கூறியிருந்தனர்.

விடுதலைப்புலிகளோ அல்லது வேறு எந்த ஆயுதக் சக்தியோ இந்த மாதிரியான இன தேசியவாதத்தை முன்னெடுக்கின்ற நிலையில் அவர்களுக்கு உள்நாட்டிலும் அத்துடன் வல்லமை மிகுந்த புலம்



பெயர்ந்தோரிடமிருந்தும் ஆதரவு கிட்டுமாக இருந்தால் இவர்களைத் தோற்கடிப்பதற்கு மிக அதிக விலையைச் செலுத்தினாலே தவிர, இந்த முயற்சி வெற்றியீட்ட முடியாததொன்று என்ற யதார்த்தத்தைத் தொடர்ந்தும் மறுத்துவருவதாகவே இது காணப்படுகிறது. கடந்தகால யுத்தங்கள்[6] இதனைச் சந்தேகமின்றி நிரூபித்துள்ளன. இறுதியில் தாங்கள் எந்த விலை கொடுத்தாவது சமாதானத்தை விரும்புவதாக மக்கள் தெரிவித்தனர். ஆயினும் நீண்டகாலப் பகைவருடன் சமாதானப் பேச்சை நடத்துவதா என்று பரிகசிப்போரும் பலர் உள்ளனர். அரசியல் எதிரிகள், இராணுவத்தின் ஒரு பகுதியினர், தேசியவாதப்போக்குடைய அரசுசார்பற்ற தொண்டு நிறுவனத்தினர், சிவில் சமூகத்திலுள்ள செல்வாக்குமிக்க உறுப்பினர்கள், பிரதான தனியார் ஊடகம், பெரும்பான்மைச் சிங்கள மக்களின் புலம் பெயர்ந்தோர் ஆகியோர் இவர்களில் உள்ளடங்கியிருந்தனர்.[7]

யதார்த்தத்தை உணர்ந்து செயல்படுத்தும் திட்டத்தையும் அணுகு முறையையும் ரணில் விக்கிரமசிங்க உள்வாங்கிக்கொண்டார். இதனை 2002 ஜனவரி 22இல் பாராளுமன்றத்திலும் மக்கள் மத்தியிலும் தமது உரையின் மூலம் வெளிப்படுத்தினார். அவருடைய அணுகுமுறை[8] உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மிக அவசியமாகத் தேவைப்பட்ட விடயங்களுக்கு ஒரே சமயத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இருந்தது. கடந்தகால அனுபவங்களைக் கொண்டு சிறப்பான முறையில் சமாதான நடவடிக்கைகளுக்கு அத்திவாரமிடப்பட வேண்டுமானால், பின்வரும் அடிப்படை அம்சங்கள் இருக்க வேண்டும் என்பதை அவர் உணர்ந்திருந்தார்:

*இருதரப்பினரும் நம்பிக்கை கொண்டிருக்கும் அனுபவம் வாய்ந்த அனுசரணையாளர்; (2000–2001இல் ஜனாதிபதி, நடவடிக்கைகளை முன்னெடுத்தபோது அனுசரணையாளர் பணிக்கு அவர் தேர்ந்தெடுத்திருந்தார்.)*

6. 2000இன் முற்பகுதியில் யாழ்ப்பாணக்குடா நாட்டின் கழுத்துப் பகுதியில் அமைந்திருக்கும் ஆனையிறவிலுள்ள தோற்கடிக்க முடியாத படைத்தள முகாமின் (10,000 வலிமையுள்ள) இழப்பானது முல்லைத்தீவு இழப்பு மற்றும் ஜயசிகுரு (உறுதிப்படுத்தப்பட்ட வெற்றி) பின்னடைவைத் தொடர்ந்து ஏற்பட்டது. இது ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ காலத்திலிருந்து இராணுவரீதியான வெற்றி சாத்தியமானதல்ல என்ற யுத்த தந்திர வல்லுநர்களின் கருத்தை உறுதிப்படுத்துவதாக இருந்ததுடன் அநேகமான உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தேவையென நம்புவதற்கும் வழிவகுத்தது.
7. இந்த மாதிரியான குழுக்கள் (எஸ்பியூஆர் ஆஸ்திரேலியா) யுத்த காலத்தில் முந்தைய அரசின் தயாரிப்பில் இரட்டை மடங்கு அமைப்புகளாக வளர்ச்சியடைந்தன. இக்குழுக்கள் யுத்த நடவடிக்கை ஊடாகவும் விடுதலைப்புலிகளை அழிப்பதன் மூலமும் இறுதிச் சமாதானம் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன. இவர்களின் அடிப்படையான வலுவான கருத்துகளை மாற்றுவதென்பது மிகவும் அசாத்தியமானதாகும்.
8. 2002இல் புதிய பேராயர் வண ஒஸ்வோல்ட் கோமிஸின் ஆரம்ப நிகழ்வின்போது கிறிஸ்தவச் சிந்தனை, நடைமுறைகளில் தமக்குள்ள அறிமுகத்தை கர்தினால் நியூமனின் அன்பான ஒளியை முன்னெடுத்து என்ற கீதத்தின் வரியைப் பயன்படுத்தியதன் மூலம் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தினார். இது அவரது அணுகுமுறையை விபரிப்பதாக அமைந்திருந்தது. நல்லதாக எடுத்துவைக்கப்பட்ட ஓரடி எனக்குப்போதும் என்பதே அவர் கூறியதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மோதலில் சம்பந்தப்பட்ட இருதரப்பு யுத்தநிறுத்தத்திற்கான எழுத்துமூல உடன்படிக்கையில் புலிகளின் சார்பில் பிரபாகரனும் அரசாங்கத்தின் சார்பில் தானும் கையெழுத்திடவேண்டும்;

மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கிடையிலான பேச்சுவார்த்தையைத் தக்கவைப்பதற்குத் தேவையானவற்றை நிர்வகிப்பதற்கான உத்தியோகபூர்வ நிறுவனரீதியானகட்டமைப்பை ஏற்படுத்துதல்.

தெற்கிலுள்ள எதிரணி அரசியல் கட்சிகள் தொடர்ந்து மேற்கொண்டு வரும் எதிர்ப்புக்கு ஈடுகட்டும் மத்தியஸ்த நடவடிக்கைகள் என்பன முன்னெடுக்கப்படுதல்.

இந்தத் தடவை எதிர்ப்பு என்பது அரசாங்கத்திற்கு வெளியில் இருந்து மட்டுமல்லாமல் உள்ளிருந்தே தோன்றியது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராக இருந்த ஜனாதிபதியிடமிருந்தே அரசுக்குள்ளிருந்து எதிர்ப்பு கிளம்பியது. சமாதான நடவடிக்கையில் கருத்து இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு லியாம் ஃபாக்ஸ் உடன்படிக்கை அத்திவாரமிட்டது. இதைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை காணப்பட்டது. லக்ஷ்மன் கதிர்காமர் போன்றவர்களைப் பயன்படுத்தக்கூடிய பெறுமதியான இணைப்புப் பாலங்களும் எதிர்க்கட்சியினர் தரப்பில் காணப்பட்டபோதும் தேர்தலின் பின்னர் ஆயிரக்கணக்கான சுதந்திரக் கட்சியினர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டமை போன்ற சம்பவங்களும் பின்னர் 19ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தைக்[9] கொண்டுவருவதன் மூலம் ஜனாதிபதியின் அதிகாரத்தைத் தடுக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் எதிர்க்கட்சித் தரப்பினருடனான நம்பிக்கையின்மையைக் குறைப்பதற்கு உதவவில்லை.

சமாதான அனுகூலத்தைப் பெறுவதற்கு ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டிய செயல்திறன்வாய்ந்த பொறிமுறை தேவையாகும். நிவாரணம், புனர்வாழ்வு, அபிவிருத்தி நடவடிக்கைகளை வடகிழக்கிலும் அதனை அண்டிய மாவட்டங்களிலும் மேற்கொள்ள வேண்டியிருந்தது ('எல்லைக் கிராமங்கள்' என்று கூறப்படுவதை உள்ளடக்கியது).

இதற்கெல்லாம் பக்கபலமாகவும் ஆதரவாகவும் அவருக்கு (ரணிலுக்கு) சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலமைப்பு தேவைப்பட்டது. இலங்கையில் கரிசனை கொண்ட முன்னணி நாடுகளை உள்ளடக்கிய வலைப்பின்னல் அமைப்பையே உருவாக்க வேண்டி இருந்தது. பேச்சுவார்த்தை மூலம் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சியில் வெற்றிபெறுவதற்குத் தேவைப்

9. 2003இல் அரசாங்கத்தால் அரசியலமைப்பால் ஜனாதிபதிக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தை விட மேலோங்கச் செய்யும் அதிகாரங்களைப் பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்குவது பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், இந்த திருத்தமானது 2/3 பெரும்பான்மை பலமும் மற்றும் பல சர்வஜனவாக்கெடுப்பில் வெற்றிபெற்றால் மட்டுமே செல்லுபடியானதாகும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டது.



படும்போது தலையிடவும் உத்தரவாதம் வழங்கவும் இந்த ஏற்பாடு வேண்டியிருந்தது.

**சமாதான நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்குத் தெற்கிலிருந்த தடைகள்**

2001 அக்டோபரில் விடுதலைப்புலிகள் அறிவித்த ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தம் அரசாங்கத்திற்கு வாய்ப்பைத் தந்தவுடன் டிசம்பர் 2001இல் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற ரணில் விக்கிரமசிங்கவும் பிரகடனத்தை வெளியிட்டார்.

விடுதலைப்புலிகளுடனான சமாதான முன்னெடுப்பானது, பாரியளவிலான இலக்கைக் கொண்டதாக இருந்தது. ரணில் விக்கிரமசிங்க முறியடிக்க முடியாத அரசியல் எதிரியைக் கொண்டிருந்தார். அவர்தான் ஜனாதிபதி. தேர்தல் காலம் முழுவதும் அதற்கு முன்னரும் ரணிலை மிகவும் உறுதியுடன் எதிர்த்து வந்தவர் ஜனாதிபதி. ஆயினும் ரணிலுடன் இணைந்து பணியாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. அவருடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் கடுமையான போராட்டமாக இருக்கும் என்பதை ரணில் அறிந்திருந்தார்.

தேர்தலில் தற்காலிகமாகத் தோல்வியுற்றிருந்தாலும் ஜனாதிபதியிடம் அரசியலமைப்புரீதியான அதிகாரம் இருந்தது. 1978 அரசியலமைப்பின் படி, ஒரு வருடத்திற்குப்பின் பாராளுமன்றத்தைத் (விக்கிரமசிங்கவின் அதிகாரத்தை நசுக்க) கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிவசம் இருந்தது.

இதற்குமுன் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சித்தோர் ரணில் விக்கிரமசிங்க போன்று இல்லாமல் அரசியலமைப்புரீதியான அரசாங்கத்தின் தலைவர்களாக இருந்தனர். நாட்டின் தலைவரான சந்திரிகா குமாரதுங்க[10] அரசியலமைப்புரீதியாக தேசத்தினதும் அரசாங்கத்தினதும் தலைவியாக இருந்தார்.

பேச்சுவார்த்தை மூலமான சமாதானத்தை மனத்திலும் வார்த்தையிலும் அவர் கொண்டிருந்தபோதிலும் தேசியப் பாதுகாப்பு, இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு, தேசிய ஐக்கியம் என்பன தொடர்பாக விக்கிரமசிங்கவின் உபாயத்தையும் செயல்பாட்டு முறைமையையும் மேற்பார்வை செய்ய வேண்டுமென்ற எதிர்பார்ப்பைக் கொண்டிருந்தார்.

10. புலிகளின் படுகொலை முயற்சியிலிருந்து தப்பியபின் 21 டிசம்பர் 1999இல் இரண்டாம் முறையாக ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றபின் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உணர்ச்சிகரமான உரையில், விடுதலைப்புலிகளின் படுகொலை முயற்சி தோல்வியடைந்து தப்பிய ஒரு அரசியல் தலைவரென்ற தனித்துவத்தை நான் கொண்டிருக்கிறேன். விடுதலைப்புலிகளின் பயங்கரவாத அமைப்பையும் முழுமையாக தோல்வியடைய வைப்பதற்கான ஒரு அரசியல் தலைவராகவும் நான் இருப்பேன் என்று அவர் தெரிவித்திருந்தார். *(சிலோன் டெய்லி நியூஸ், 23 டிசம்பர் 1999)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்ந்துவந்த ஜனாதிபதி தரப்புச் சவால்களுக்கு மேலாக ரணில் விக்கிரமசிங்க என்ன செய்கிறார் என்பது தொடர்பாகக் கணிசமான உள்மட்ட சக்திகளின் எதிர்ப்பையும் அவர் எதிர்நோக்கினார்.

'தமிழ்ச் சமூகத்தினர் அந்நியமானவர்கள், வெளியாட்கள்'[11] என்ற நீண்டகால எண்ணப்பாடு வரலாற்று அடிப்படையிலான உறுதியான தேசியவாதச் சிந்தனையும் காணப்பட்டது. இந்த நாடு பெரும்பான்மை சிங்களவர்களுக்கே உரித்தானது என்பதும் தமிழர்களுக்கு இடமில்லை என்பதும் அந்தச் சிந்தனையாகும். இந்த அபிப்பிராயம் அரசியல் களத்தில் வலுவான குறியீட்டைத் தற்போது கொண்டிருக்கும் ஜேவிபியிடமிருந்து வெளிப்பட்டது. அத்துடன், கல்விமான்கள், இந்த விடயத்துடன் தொடர்புபட்ட மாணவர்கள் போன்ற வேறுபட்ட குழுவினர் மத்தியிலும் விடுதலைப்புலிகளின் கோரிக்கைகள் அதிகளவானவை என்றும் அதனை நிறைவேற்றக் கூடாதென்றும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அவர்களது பார்வையில் சமாதானத்திற்காகக் கொடுக்கப்படும் விலை அளவுக்கதிகமானது என்பதாகும். யுத்தரீதியாகப் புலிகளை நசுக்குவதே நல்லதெனவும் அது செய்யக்கூடிய விடயமென்ற அபிப்பிராயத்தையும் அவர்கள் கொண்டிருந்தனர். ஊடகங்களும் இருவேறுபட்ட கருத்தைப் பரந்தளவில் கொண்டிருந்தன.

ஆண்களும் பெண்களும் அதிகளவிலான ஊடகத்துறையினரும் முன்னணிப் பத்திரிகைகள் ஒன்றிரண்டின் ஆசிரியர்களும் பயணிக்கும் பாதை தொடர்பாகத் தொடர்ந்து கேள்விகளை எழுப்பி வந்தனர். இலங்கையின் அரசியல் அமைப்பின் தன்மையை மாற்றுவது தவிர்க்க முடியாதது என்பது தொடர்பான அறிவுரீதியான தன்மை குறித்தும் அவர்கள் கேள்வி எழுப்பினர். அவர்களின் கருத்துக்கு ஜனத்தொகையில் பெரும்பகுதியானோர் ஆதரவாக இருந்தனர். அவர்களது கருத்துப்படி, இலங்கை எப்போதுமே[12] ஒன்றுபட்டநாடு என்றும் ஆதலால், அதன் ஒற்றையாட்சிக் கட்டமைப்பை மாற்றாமல் இருந்தவாறே இருக்க வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தினர். சமஷ்டி என்பது சகல சாத்தியமான வழிகளிலும் தூஷண வார்த்தையாயிற்று. முன்வைக்கப் பட்ட அடிப்படைக் கட்டமைப்பு மாற்றமானது, இந்தக் குழுக்களுக்கு

11. 20ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில்கூட இந்த உணர்வு சிங்களவர்கள் பலரின் மனங்களில் ஆழப்பதிந்திருந்தது. மக்களில் பலர் குறிப்பாகச் சங்கத்தின் முன்னணி மதகுருமார், இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கான ஒரு சிறந்த வழிமுறை சகல தமிழரையும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவது என்று கருதினர். கண்டிப் பகுதிகளில் மலையகத் தமிழரின் பிரச்சினை தொடர்பாக பொதுவாக இக்கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆயினும், பிழையான முறையில் வடபகுதித் தமிழர்களின் பிரச்சினைகளுடன் இணைக்கப்பட்டது.

12. வரலாற்றாய்வாளர்கள், சமூகத் தொல்பொருளியலாளர்கள் இந்தக் கருத்துத் தொடர்பாக அதிகளவு ஆதாரத்தை முன்வைத்து போட்டிக்கு உரிமை கோரினாலும் அது பயன்பாட்டில் இருக்கவில்லை (பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தன, கணநாத் ஒபய சேகர).



(ஜனாதிபதியும் பிரதமரும் கட்டமைப்பு மறுசீரமைப்பு குறித்து இணக்கப்பாடு கொண்டிருந்த நிலையில்) அதாவது ஒற்றையாட்சி முறையிலிருந்து சமஷ்டி அல்லது அரைவாசிச் சமஷ்டிக்கான மறு சீரமைப்பு யோசனையானது சபிக்கப்பட்டதாக இருந்தது.

ஊடகத்துறையினரும் தொடர்ந்து தங்களின் பத்திகளிலும் ஆசிரியர் தலையங்கங்களிலும்[13] சமாதான நடவடிக்கைகளின் பல அம்சங்களிலுள்ள அபாயங்கள் மற்றும் போர்நிறுத்த உடன்படிக்கை மற்றும் அதன் அமலாக்கத்திலுள்ள ஆபத்து குறித்தும் முன்னுரிமை கொடுத்தனர்.

இரு வருடகால நடவடிக்கைகள் முழுவதும் ஜனாதிபதி எடுத்திருந்ததாகவும் தென்பட்ட நிலைப்பாடானது ஒத்துழைப்புத் தன்மையற்றதும், குந்தகம் விளைவிப்பதாகவும் இருந்ததுடன் சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்தாசையாக இருக்கவில்லை.

நோர்வே அனுசரணையாளரான அந்நாட்டின் கொழும்பிலுள்ள தூதுவர்[14], யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர்[15] மற்றும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆகியவற்றின் செயல்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதி கொண்டிருந்த நட்புறவற்ற தன்மை இதற்கான சான்றாகும். விடுதலைப்புலிகள் தொடர்பாகப் பக்கச் சார்பாகவும் அவர்கள் தரப்பு சார்ந்ததாகவும் செயல்படுகின்றார்களென்ற தன்மைகொண்ட பார்வை செலுத்தப்பட்டது. நாட்டின் தலைவியிடம்

13. ஐலண்ட் செய்திப் பத்திரிகையிலுள்ளவை குறிப்பாகக் கவனத்திற்குரியவை. விசேட சந்தர்ப்பங்களில் ஆசிரியர் காமினி வீரக்கூன் ஆசிரியர் தலையங்கத்தில் கையெழுத்திட்டிருப்பார். சண்டே டைம்ஸ் பத்திரிகையில் பாதுகாப்பு ஆய்வு எழுதும் இக்பால் அத்தாஸ் ரணிலின் சமாதான நடவடிக்கைகளைக் கிரமமாகக் காரசாரமாக விமர்சிப்பவர்.

14. யுத்தநிறுத்த உடன்படிக்கையை வடிவமைப்பதிலும் பிரபாகரன், ரணில் ஆகியவர்களிடமிருந்து இதற்குக் கையொப்பம் பெறுவதிலும் ஜோன் வெஸ்ட்போர்க் தீவிரமாகச் சம்பந்தப்பட்டிருந்தவர். சிங்களத் தரப்பு தீவிரவாதிகளின் இலக்குக்கு அவரும் அவரின் தூதரகமும் ஆளாகின. அவருடைய இருப்பிடம் மற்றும் தூதரகம் மீது இரு கிரனைட் தாக்குதல்கள் இடம்பெற்றன. ஆயினும் வெஸ்ட்போர்க் மிகவும் உறுதியானவராகவும் அசைந்து கொடுக்காதவராகவும் இருந்தார்.

15. கண்காணிப்புக்குழுவின் முதல் தலைவரான ஜெனரல் டிரைகி டெல்லிஃப்சன் அக்டோபர் 2003இல் ஜனாதிபதியால் உத்தியோகபூர்வ நிகழ்வின்றித் திருப்பி அனுப்பப்பட்டார். விடுதலைப் புலிகளின் கடற்படை அணி வடகடலில் சிறப்புரிமையுடன் இயங்கியது. கடற்பிரிவு, ஒன்று பெயரிடப்பட்டு இயக்குவதற்குரிய கரையோரப் பகுதியையும் வரையறை செய்யலாமென ஜெனரல் கருத்தை முன்வைத்திருந்தார்.

இது கடற்படை அதிகாரிகளின் கண்டனத்திற்கும் பக்கச்சார்பானதென ஊடகங்களின் விமர்சிப்பிற்கும் உள்ளானது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்பாக வேறுபட்ட 2002 பிப்ரவரியின் போது கடல் மற்றும் கடல் சார்ந்த நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் கவனத்திற்கெடுக்கப்படாமை இந்த விடயத்தில் வருந்தத்தக்க உண்மையாகும். இந்தச் சம்பவத்தின்போதே போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுக்கான யதார்த்த நிலை தொடர்பான திட்டத்தை முன்வைத்தது. விடுதலைப் புலிகளின் படகுகளில் ஒன்று கடற்படையின் கண்காணிப்புக்கு உட்பட்டிருப்பதாகப் புலிகளுக்கு டெல்லிஃப்சன் தகவல் கசியவிட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்ததையடுத்து அவர் திருப்பி அனுப்பப் பட உடனடிக் காரணமாக கொள்ளப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தே இத்தகைய அபிப்பிராயம் வெளிப்படுத்தப்படுகின்றதே என ஏனையோர் கூறும் அளவுக்கு இது வெளிப்படுத்தப்பட்டது. சர்வதேசக் கடற்பரப்பில் கடற்படையால் கப்பல் ஒன்று தாக்கப்பட்டது. அது புலிகளின் கப்பல் எனவும் அதனை மூழ்கடிக்குமாறு உத்தரவிட்டதில் ஜனாதிபதிக்கு சம்பந்த மிருப்பதாகக் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டது. ஆனால் அது வர்த்தகக் கப்பல் என்று அன்டன் பாலசிங்கம்[16] தெரிவித்திருந்தார். முப்படைகளின் தளபதியான ஜனாதிபதியே கடற்படைத் தளபதிக்கு நேரடி உத்தரவு களை வழங்கியிருப்பார் என்பது நன்கு அறிந்ததொன்றாகும்.

தேசியப் பாதுகாப்புச் சபைக்கூட்டத்துக்கு ஜனாதிபதியே தலைமை தாங்கியதுடன் யுத்தநிறுத்தக் காலப்பகுதி முழுவதும் படைத்தளபதிகளுடன் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தொடர்புகளைக் கொண்டிருந்தார். இதேவேளை மறுபக்கத்தில் இத்தகைய சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு அமைச்சகம் பிரதமருடன் நெருக்கமான முறையில் கலந்தாலோசித்து வந்தது. இந்தச் சம்பவத்தில் கடற்படையின் படகில் சர்வதேசக் கண்காணிப்பாளரை ஏற்றிக்கொண்டு சென்று மற்றைய படகில் உண்மையில் என்ன இருக்கிறது என்பதைத் தீர்மானிக்க, அக்கப்பலை இலங்கை கடல் எல்லைக்குள் கொண்டு வந்திருந்தால் அந்தப்படகு ஆயுதங்களை ஏற்றி வந்ததா அல்லது புலிகள் தெரிவித்தது போன்று வணிகக் கப்பலா என்பதையும் அனுமானித்திருக்க முடியும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் விதிமுறைகள் மீறப்பட்ட பல சம்பவங்கள் இடம்பெற்றன. அவ்வப்போது நேரிடக்கூடிய எல்லாவற்றையும் யுத்தநிறுத்த உடன்படிக்கை உள்ளடக்கும் என்றில்லை. ஒரு தடவை இத்தகைய கருத்துப் பரிமாற்றமொன்று ஜனாதிபதிக்கும் பாதுகாப்பமைச்சர் திலக் மாரப்பனவுக்கிடையில் ஏற்பட்டது. இது ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான கசப்பும் இனிப்புமான உறவை வெளிப்படுத்தியது.

விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் நெருக்கமான முறையில் ஏற்பட்ட சண்டையானது, யுத்தநிறுத்த மீறலாக கருதப்பட்டிருக்கலாம். இது தொடர்பாகப் பாதுகாப்பமைச்சரை ஜனாதிபதி கடுமையாகக் கண்டித்திருந்தார். தேசியப் பாதுகாப்புச்சபைக் கூட்டத்தின்[17] பின்னர் இந்த மாதிரியான குறைபாடுகள் குறித்துப் பாதுகாப்பமைச்சரின் கவனம் போதாதெனக் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்தது. சமாதான

16. இது யுத்தநிறுத்த உடன்படிக்கையை முழுமையாக மீறுவதாக அவர் முடிவுக்கு வந்திருந்தார்.
17. இந்த அமைப்பு கிரமமான முறையில் கூடவில்லை. ஜனாதிபதி தலைமை தாங்கினாலும் முக்கியமானது என்று கருதினாலே பிரதமர் கலந்துகொள்வார். பாதுகாப்பு அமைச்சர், அவரது செயலாளர், முப்படைத் தளபதிகள் ஏனைய உறுப்பினர்கள்



நடவடிக்கைகளின்போது சிலவற்றைக் கண்டும் காணாமலும் இருக்க வேண்டும் என்ற விதத்தில் நிதானமான கருத்தை அவர்கள் முன்வைத்த போது இவர்களையும்விடத் தமக்கு அதிகாரம் இருந்ததை ஜனாதிபதி கடும் தொனியில் வெளிப்படுத்தித்தான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்று எச்சரித்தார்[18].

யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக அதிகளவு மேற்கொள்ளப்படும் விமர்சனங்களில் ஒன்றாகப் புலிகள் 6ஆயிரம் சதுர கிலோமீட்டர் பரப்பளவைத் தம்வசம் வைத்திருக்கிறார்கள் என்று கூறப்பட்டது. புலிகளுடன் போர்நிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகாவுடன் ரணில் விக்கிரமசிங்க கலந்தாலோசனை நடத்தியிருந்தால் இந்தமாதிரி நெருக்கடியான சூழ்நிலையை எதிர் கொண்டிருக்கத் தேவையில்லையென அச்சமயம் பேசப்பட்டது. ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்துச் செய்யவில்லை என்பது கொள்கை அடிப்படையில் மட்டும் வலுவானதாகும். ஆனால், ரணில் விக்கிரமசிங்க அந்தத் தருணம் ஜனாதிபதியுடன் கலந்தாலோசனை நடத்த முயற்சி செய்திருந்தால் தாமதம் ஏற்பட்டிருப்பது மட்டுமின்றிச் சமாதான நடவடிக்கைகளின் கட்டமைப்பே, மாற்றம் செய்யப்பட்டிருப்பதுடன், சமாதான நடவடிக்கைகளும் ஒருபோதுமே தொடங்கியிருக்கமாட்டா. புலிகள் தரப்பால் யுத்தநிறுத்தத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பமும் ஈடுகட்ட முடியாத இழப்பைச் சந்தித்திருக்கும். பிப்ரவரி 2002இல் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கும் 2004 ஏப்ரலில் ஜனாதிபதியின் கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜேவிபி வெற்றிபெற்ற பின்னர் ஜனாதிபதி மீள ஆரம்பித்த சமாதான நடவடிக்கைகளுக்கும் இடையில் பயனுள்ள வேறுபாடு இருக்கவில்லை என்பதே உண்மையாகும். தேர்தலுக்கு முன்னர் பொதுஜனமுன்னணியும் (பிஏ) ஜேவிபியும் போர்நிறுத்த உடன்படிக்கை திருத்தப்படுமெனத் தெரிவித்து வந்தன. ஆனால், தேர்தலின்பின் முற்றிலும் முரண்பட்டவகையில் போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதென்றும் மாற்றியமைப்பதில்லையெனவும் ஜனாதிபதி தீர்மானித்தார். போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பாகக் கூச்சல்கள் எழுப்பப்பட்டன. நாட்டின் இறைமையை அது மீறிவிட்டதாகவும் சிங்களப் பெரும்பான்மையினரின் உரிமை விற்கப்பட்டு விட்டதாகவும் 2004இன் புதிய அரசாங்கம் இது தொடர்பாக மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி நிபந்தனைகள், விதிமுறைகளை மாற்றியமைக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இந்தக் கற்பனையான எதிர் பார்ப்புகள் நிறைவேற்றப்படவில்லை. சிலசமயம்

18. இக்கட்டுரை ஆசிரியரின் ரெண்டரிங் அன்டு சீசர் என்னும் புத்தகத்தில் விவரிக்கப்பட்டது. பேச்சுத்தன்மை மனத்தை நெருடுவதாகும். 1999 டிசம்பர் 21இல் விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சந்திரிகா குமாரதுங்க வலக்கண் பார்வையை இழந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆட்சிவாகனத்தின் சாரதி ஆசனத்தில் ஜனாதிபதி அமர்ந்திருந்ததால் யதார்த்த நிலைமை காரணமாக இருந்திருக்கலாம். வாகன ஓட்டுபவரின் பார்வையும் ஆசனத்தில் அமர்ந்திருப்பவரின் பார்வையும் முற்றிலும் வேறுபட்டதாக இருப்பது வழமையானதொன்றே.

அரசாங்கம் ஆரம்பித்திருந்த பல செயல்பாடுகள் தொடர்பாக முரண்பட்ட தன்மையை ஜனாதிபதி கொண்டிருந்தபோது, அதனை மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளைப் பிரதமர் மேற்கொண்டு, தகவல் பரிமாற்றம் மற்றும் அதிகளவிலான கலந்தாலோசனை மூலம் நல்லுறவைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை பெருமளவில் மேற்கொண்டிருக்க முடியும். ஆனால் பரஸ்பரம் இருவருக்கும் நண்பராக விளங்கியவரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான மறைந்த லக்ஷ்மன் கதிர்காமர்[19] ஊடாக எல்லாம் தெரிவிக்கப்பட்டன என்பதே பிரதமரின் பதிலாகும். ஜனாதிபதியின் விசேட ஆலோசகராகக் கதிர்காமர் இருப்பதால் இவ்வாறு அவருக்குத் தெரிவிப்பது போதுமானது என்று கருதப்பட்டது.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பான முகாமைத்துவத்தில் இரு பிரதான எதிராளிகளான ஜனாதிபதி, பிரதமருக்கிடையில் நேரடிச் சந்திப்பிற்கான மாற்றீடு இதுவல்ல. இதற்கிடையில் அரசாங்கத்தின் முக்கியப் பேச்சுவார்த்தையாளர்களில் ஒருவரான மிலிந்த மொரகொட ஜனாதிபதியைச் சந்தித்து விடயங்களை தெரிவித்து வந்தாலும் பிரதான இடைநடுவராகக் கதிர்காமரே இருந்து வந்தார்.

### நடவடிக்கைகளின் முகாமைத்துவம்மீதான துடிப்பான ஈடுபாடு

கூட்டுறவு அமைப்பொன்றின் பிரதம நிறைவேற்று அதிகாரி போன்றே சமாதான நடவடிக்கைகளின் முகாமைத்துவம் தொடர்பாக ரணில விக்கிரமசிங்க செயல்பட்டார். இந்த நடவடிக்கைகள் தொடர்பான அவரது பார்வை தெளிவாகவும் தந்திரோபாயமான திட்டமாகவும் இருந்தது[20]. செல்லும் பயணத்திற்கான (சமாதானப்)பாதை குறித்து வரைபடம் இருந்தது. இடையிலுள்ள முக்கியமான விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படவிருந்தது. செயல்பாட்டுத் திட்டத்திற்கு ஆதரவான கொள்ளளவை கொண்ட நிறுவனரீதியான

19. பிரதமருக்குக் கடப்பாடுடையவர் கதிர்காமர். தனது அமைச்சரவை உறுப்பினர்களின் கடுமையான ஆட்சேபனைகளுக்கு மத்தியிலும் விக்கிரமசிங்க கதிர்காமர்மீது ஆதரவு காட்டினார். விடுதலைப்புலிகளின் தாக்குதல் இலக்கைக் கருத்தில் கொண்டு எதிரணியைச்சேர்ந்த உறுப்பினரான கதிர்காமருக்கு சகல பாதுகாப்புகளும் வழங்கப்பட்டன. அரண் கடந்த வாசஸ்தலம், பாதுகாப்பு அமைச்சின் வாகனத்தொகுதி, நூற்றுக்கணக்கான படைவீரர், பொலிஸார், அவரது முன்னால் அமைச்சரவை அலுவலகம் முதலியவை அவருக்கு வழங்கப்பட்டன.

20. வட அயர்லாந்து, மத்தியகிழக்குப் பகுதிச் சமாதான முயற்சிகள் தொடர்பாக மோதலுக்கு தீர்வுகாணும் விடயங்கள் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் உருவாக்கிய ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்ட வீதி வரைபடங்கள் உத்தியோகபூர்வமாகப் பார்வைக்கு வந்தன.



கட்டமைப்பை உருவாக்க வேண்டிய தேவை இருந்தது. இலங்கைக்குள்ளும் வெளியேயும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. இந்த உபாயத்தை ஆராய்ந்து பார்த்தால் அவருடைய செயல்பாடானது மூன்று பிரதான விடயங்களை உள்ளடக்கியதாக இருந்தது. குறித்த வட்டத்திற்கு அப்பால் சென்று சிந்தித்தல், இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்வோர்மீது நம்பிக்கை கொண்டிருத்தல், நண்பர்களின் ஆதரவைப் பயன்படுத்துதல் ஆகியவையே இதன் பிரதான அம்சங்களாகும். இவை மிக இலகுவானதும் பலன்தரக்கூடியதுமானவை என்பது நிரூபணமான விடயமாகும்.

ஒருவர் எழுப்பக்கூடிய ஒவ்வொரு சாத்தியமான சந்தேகங்கள், விவாதங்கள் பற்றி நீண்ட காலத்திற்கு ஆராய்வது இறுதியில் தவிர்க்க முடியாத வகையில் ஸ்தம்பித நிலைக்கு இட்டுச்செல்லும் என்று ரணில் விக்கிரமசிங்க கருதினார். இதுவே கடந்த காலத்தில் இருந்த பிரச்சினையாகும். அதிகளவில் பேச்சு இருந்ததே தவிர செயல்பாடு போதாது. தனது அரசாங்கத்தில் ஆரம்பக்கட்டத்தில் விடுதலைப்புலிகளே ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தைப் பிரகடனப்படுத்திப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்திருந்ததால் இந்தமுறை அவர்கள் தீவிரமாக இருக்கிறார்களென்ற நம்பிக்கையை ரணில் கொண்டிருந்தார். பலதரப்பட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச[21] சூழ்நிலைகளால் அவர்கள் இம்முறை அக்கறையுடன் இருப்பதாக அவர் கருதினார்.

விக்கிரமசிங்க சில துணிகரமான நடவடிக்கைகளை ஆரம்பித்தார். முற்றுகைக்குள்ளாக்கப்பட்ட நகரமாகக் காட்சியளித்த கொழும்பிலுள்ள காவலரண்களை அகற்றுவித்தார். பொலிஸ், இராணுவ உயர் மட்ட அதிகாரிகள் உட்படப் பலர் காவலரண்கள் அகற்றப்படுவது பேராபத்தை ஏற்படுத்தும் என்றும் புலிகள் குண்டுகளை வைத்துவிடுவார்களெனவும் அவர்களின் ஊடுருவல் நகருக்குள் அதிகரித்துவிடுமெனவும் எச்சரித்தனர். ஆனால், இந்தக் கவலையான எண்ணப்பாடுகளுக்கு முரண்பட்டதாக நிலைமை காணப்பட்டது. யுத்தநிறுத்தம் நடைமுறையில் உள்ள 25 மாத காலப் பகுதியில் தெற்கில் புலிகள் ஒரு குண்டையெனும் வெடிக்கவைக்கவில்லை. அதே சமயம் வடக்குக்குக் கொண்டுசெல்ல அனுமதியளிக்கப்படாமல் தடைவிதிக்கப்பட்டிருந்த நுகர்வுப் பொருட்களுக்கான தடைகளையும் பிரதமர் நீக்கினார். யுத்த காலத்தில் சாக்லெட்டுகள், துடைக்கும் துண்டுகள் போன்றவைகூடத் தடைசெய்யப்பட்ட பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தன. தடைசெய்யப்பட்ட பொருட்களின் எண்ணிக்கையை விக்கிரமசிங்க 5ஆக மட்டுப்படுத்தினார்.

21. அமெரிக்காவில் 9/11இல் ஏற்பட்ட தாக்கத்தை அடுத்து உலகளாவிய பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் சுறுசுறுப்படைந்ததும் இந்தக் காரணிகளில் ஒன்றாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்ததாகப் புலிகள் மீதான தடையை நீக்கும் வேலையை ஆரம்பித்தார். புலிகள் அமைப்பின்மீது 1998 பிப்ரவரியிலேயே தடை அமலுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது (நீண்டகாலத்துக்கு முன்பே சில முன்னணி நாடுகள் தடையை அமல்படுத்தியிருந்தன). வரலாற்று நகரமான கண்டியிலுள்ள பௌத்த வணக்கத்தலமான தலதாமாளிகை மீது[22] புலிகள் தாக்குதல் நடத்தியதையடுத்தே அந்த அமைப்பு தடை செய்யப்பட்டது. இது சிங்களப் பௌத்தர்களின் உணர்வைத் தொட்ட விடயமாகும். அச்சமயம் புலிகள்மீது தடைவிதிப்பது மிக முக்கியமான விடயமாக இருந்தது. அத்துடன் அது விடுதலைப்புலிகளுக்கு எதிராக முழு அளவிலான இராணுவத்தாக்குதலை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டிருந்த காலகட்டமாகும்.

நான்கு வருடங்களுக்குப் பின்னர் இலங்கையில் யுத்தநிறுத்தம் அமலில் இருந்தவேளை புலிகள் அமைப்பின் மீதான தடையை நீக்குவது குறித்துச் சிந்திக்கப்பட்டது. முழு உலகுமே பயங்கரவாதத்துக்கு எதிராக அணிதிரண்டுவரும் நிலையில் இது மிகவும் துணிகரமான தீர்மானமாக இருந்தது. விடுதலைப்புலிகளுடன் தீவிரமான முறையில் பேச்சுகளை நடத்துவதற்கு அந்த அமைப்பின் மீதான தடையை நீக்குவதைத் தவிர இதர வழி தென்படவில்லை. இதனால் இந்த நடவடிக்கையை ரணில் மேற்கொண்டார்.

இவ்விடயத்தில் அவருடைய அமைச்சர்கள், அதிகாரிகளில் பலர் நம்பிக்கை கொள்ளவில்லை. எச்சரிக்கையாக இருக்குமாறு அவருக்கு ஆலோசனை தெரிவித்தனர். புலிகள்மீது நம்பிக்கைவைக்கலாமா என்பதில் அவர்கள் ஐயுறவு கொண்டிருந்தனர். புலிகளின் கடந்தகால செயல்பாடுகள், உடன்படிக்கைகளை முறித்துக்கொண்டமையை சுட்டிக்காட்டினர்.

தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான அதிகாரிகள்[23] மத்தியில் உற்சாக மூட்டிய பிரதமர் நடவடிக்கைகளை முன்னெடுக்க உதவக்கூடிய புலி

22. புத்தரின் புனிதப் பல்லைக் கொண்டுள்ள கோவிலானது உலகம் முழுவதுமுள்ள மில்லியன் கணக்கான பௌத்தர்களினால் புனித இடமாக வணங்கப்படுகிறது. 50ஆம் சுதந்திரதின விழாவில் கண்டியின் இந்த மாளிகையின் எண்கோண மண்டபத்திலிருந்து ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றி இருந்தமையே ட்ரக் வெடி பொருட்களுடன் புலிகள் இந்தக் கோவில் மீது தாக்குதலை நடத்தியிருக்கலாமென ஊகிக்கப்பட்டமை காரணமாகும். கண்டி நகரின் பாதுகாப்பு முழு அளவில் கச்சிதமாக இருப்பதாகத் தெரிவித்திருந்த அப்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத் இச்சம்பவம் நடந்தவுடன் தனது பதவியை (சில நாட்களுக்கு) ராஜினாமா செய்திருந்தார். பொன்விழாக் கொண்டாட்டம் கண்டியிலிருந்து கொழும்புக்கு மாற்றப்பட்டது.

23. டிஆர்ஓவுடனும் (தமிழர் புனர்வாழ்வுக் கழகம்) மற்றும் கிளிநொச்சியிலுள்ள புலித்தேவன் தலைமையிலான புலிகளின் சமாதானச் செயலகத்துடனும் தொடர்பைக் கொண்டிருந்தோரில் இக்கட்டுரையாசிரியரும் ஒருவர். கொழும்பிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அலுவலகத்தைக் கொண்டிருந்தது. ஆஸ்திரேலியாவிற்கு புலம்பெயர்ந்த தமிழர்களே இதன் ஆலோசகர்களாக☞



உறுப்பினர்களுடனும் உத்தியோகப் பற்றற்ற முறையில் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார்.

மேலும் அமைச்சரவையின் முழு அளவிலான அங்கீகாரத்துடன் நடவடிக்கைகளுக்கு உதவியாக இரு அரசமுகவர் நிலையங்களையும் அமைத்தார். இதில் முதலாவது அமைப்பிற்கு நோர்வே அரசாங்கம் நிதியுதவி அளித்தது. இருதரப்பினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கு அனுசரணை வழங்கவும் இடம் மற்றும் ஏனைய ஆதரவை அளிப்பதற்கும் ஸ்கோப்[24] அரசாங்க சமாதானச் செயலகம் ஆரம்பிக்கப்பட்டது. அச்சமயம் சீனாவில் இலங்கைத் தூதுவராக சேவையாற்றிக் கொண்டிருந்த பேர்ணாட் குணதிலக இதன் தலைவராக நியமிக்கப்பட்டார். சமாதானச் செயலகத்துக்கு வதிவிடமற்ற ஒருவர் (அதாவது இங்கிருக்காத) தலைவராக நியமிக்கப்பட்ட ஏற்பாடானது ஆரம்பக் கட்டத்திலேயே நிர்வாகப் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது. தமது பிரதான உதவியாளர்களாக வெளிநாட்டுச் சேவையைச் சேர்ந்த தனது முன்னாள் சகபாடிகளைக்[25] குணதிலக தேர்ந்தெடுத்தார். இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் வெளிநாட்டில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைக்கான சகலவிதமான ஏற்பாடுகளையும் செய்வதுடன் சமாதானப் பேச்சுகளுக்குப் பின்புலமாக ஆராய்வுப் பணியிலும் அந்த சமாதானச் செயலகம் ஈடுபட்டது. பெறுமதிமிக்க ஆவணக் களஞ்சியத்தையும் இந்த செயலகம் உருவாக்கியது. இதன் இணையதளம் www.peaceinsrilanka.org ஆகும். இது சமாதான நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையானதாகத் தோற்றம் பெற்றது.

அடுத்த புதிய முகவர் நிலையம் நிவாரண, புனர்வாழ்வு நல்லிணக்கத்திற்கான ஆணையாளர் நாயக அலுவலகமாகும். இது அரசாங்கம் மற்றும் கொழும்பிலுள்ள ஐநா அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியில்

☞ இருந்தனர். வடகிழக்கில் புனர்வாழ்வு, நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டு இங்கு வந்து பணியாற்றினர். இவர்களின் பிரபலமானவர் ஜோய் மகேஸ்வரன். அபிவிருத்தியின் பக்கமும் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.பி. தமிழ்ச்செல்வனுக்கும் ஆலோசகராகவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை மகேஸ்வரன் ஆற்றினார். மற்றைய தரப்புடனான உத்தியோகபூர்வ தொடர்புகள் அதிகரித்தது. சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சியிலும் கொழும்பிலும் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் தேவையானபோது கிரமமான தொலைபேசி உரையாடல்கள் இடம் பெற்றன. நோர்வே அனுசரணையாளரூடாக பயணங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன.

24. சமாதான நடவடிக்கை ஒருங்கிணைப்பு செயலகம்.

25. முன்னாள் தூதுவர்கள் ரோஹன் குணரத்ன, நந்த கொடகே சேர்த்துக்கொள்ளப்பட்டனர். சமாதானச் செயலகத்தின் நடத்தையும் போக்கும் விடயங்களைக் கொண்டு அளவிடப்பட்டது. பின்னுள்ளவர் சமாதானச் செயலகத்துடனான தனது பணியைக் கடும் தொனியிலான பத்திரிகைக் கட்டுரைகளுடன் இணைத்துக்கொண்டார். இது விக்கிரமசிங்கவின் அணுகுமுறைக்கு முற்று முழுதாக ஏற்புடையதாக – அதிலும் அதிகமாக மிலிந்த மொரகொடவின் – இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆரம்பிக்கப்பட்டது. *'ட்ரிபிள் ஆர்'* திட்டமென இது அழைக்கப்பட்டது. இதன் தலைவராகப் பிரதமரின் செயலாளராக இருந்தவரையே அவர் தெரிவுசெய்தார். இந்த அமைப்பு அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய உருவாக்கப்பட்ட நிறுவனமாயினும் புதிய புத்தாக்கமான இந்நிறுவனத் திற்கான ஆட்திரட்டல், தனிப்பட்டரீதியிலான தேர்வாகவே காணப் பட்டது. பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் தமிழர்கள். ஏனெனில் அவர்களுடைய பணி வடகிழக்கில். அத்துடன் மத்திய அரசாங்கம், வட–கிழக்கு மாகாணசபை, விடுதலைப்புலிகளின் நிர்வாகம் என்பவற்றுடன் இலகுவாகத் தொடர்புகொள்வதற்கும் பலதரப்பட்ட உள்சார் கட்டமைப்புத் திட்டங்களை முன்னெடுப்பதற்கும் அவசியமானதாக இருந்தது. ஏ9 வீதியை அகலமாக்கி வலுப்படுத்தும் பணியை ட்ரிபிள் ஆர் மேற்பார்வை செய்தது. வட–கிழக்கு மாகாணசபை இதற்கு உதவியாகச் செயல்பட்டதும் வட–கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கியதும் குறிப்பிடத் தக்க செயல்பாடாகும். இதனால் இது புதிய உயிரோட்டத்தைப் பெற்றது.

கண்ணிவெடி அகற்றல், இது தொடர்பாகப் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள கண்ணிவெடிகளைச் செயலிழக்க வைத்தல் (கண்ணிவெடிகளை அகற்றலானது பொது மக்கள் தமது இயல்பு வாழ்க்கையை மீள ஆரம்பிப்பதற்கு முக்கியமான நிபந்தனையாகும். யுத்தகாலத்தில் இருதரப்பினரும் 1.5 இலட்சம் கண்ணிவெடிகளைப் புதைத்துவைத்ததாக மதிப்பிட்டுள்ளது) போன்ற சகலவிதமான கண்ணிவெடி தொடர்பான செயல்பாடுகளும் *ட்ரிபிள் ஆர்* செயலகத்தின் கண்காணிப்பில் இடம்பெற்றன. *ட்ரிபிள் ஆர்* அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சராக ஜயலத் ஜயவர்தன இருந்தார். ஆனால், *ட்ரிபிள் ஆர்* செயலகம் பிரதமரின் கீழேயே செயல்பட்டது. வடகிழக்கில் இடம்பெயர்ந்த சுமார் 10 இலட்சம் மக்களின் பலதரப் பட்ட தேவைகளை இந்தச் செயலகம் கையாண்டது.

அரசாங்கம் மேற்கொண்ட குறிப்பிடத்தக்க நம்பிக்கையைக் கட்டி யெழுப்பும் தீர்மானமாக அமைந்தது. கிளிநொச்சியில் எஃப்.எம். வானொலி அலைவரிசையை ஆரம்பிக்க[26] அனுமதிப் பத்திரம் வழங்கியதாகும். இது தொடர்பாக ஊடகங்களிலும் எதிரணி வட்டங்களிலும் வழமைக்கு மாறான வினாக்கள் எழுந்தன. இந்த அலைவரிசையை ஆரம்பிப்பதற் காகக் கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்ட உபகரணம் அதிதீவிரமான தென்றும் யுத்த நோக்கத்திற்காக அதனைப் பயன்படுத்த முடியுமென்றும்

*26. விடுதலைப்புலிகள் பலவருடகாலம் சட்ட விரோதமான வானொலி ஒலிபரப்புச் சேவையைக் கொண்டிருந்தனர். புலிகளின் குரல் என்ற பெயரில் இச்சேவை இடம்பெறுகிறது.*



அத்துடன், நோர்வேத் தூதரகம் பக்கச்சார்பாக இந்த உபகரணத்தைப் புலிகளுக்கு அன்பளிப்புச் செய்வதாகவும் காரணம் கூறப்பட்டது.

இந்தக் காரணங்கள் நிரூபிக்க முடியாதவையாகும். இது தொடர்பான உண்மைகள் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டவையாகும். ஆனால், போர்நிறுத்த உடன்படிக்கைக்கு எதிரானவர்கள் தேசியப் பாதுகாப்புக்குக் குந்தகமானதும் முறைகேடானதுமான நடவடிக்கை இடம்பெற்றிருப்பதாகப் பிரசாரம் செய்தனர். ஊடகங்களின் போக்கானது மிகக் கடுமையானதாக இருந்தது[27]. சமாதான நடவடிக்கைக்குத் தேவை யானவை நிராகரிக்கப்பட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் அதிகாரிகளை முடக்கிவைக்கும் கற்பனையான கண்டுபிடிப்புக்கான உதாரணமாக இது விளங்கியது. இந்த விடயம் தொடர்பான விவரங்கள் பின்வரும் பகுதியில் தரப்படுகின்றன.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் கருத்தாவது பொதுமக்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக உறுதிப் படுத்துவதற்கான ஆணையை வழங்கியுள்ளது. 1 அக்டோபர் 2002இல் விடுதலைப்புலிகளின் அரசியல் தலைமைச் செயலகம்[28] புதிய எஃப்.எம். பரிவர்த்தனைக் கருவியைக் கொள்வனவு செய்திருப்பதாகவும், அதனை வன்னிக்குக் கொண்டுசெல்ல விரும்புவதாகவும் பிரதமரின் அலுவலகத்துக்குக் கடிதம் அனுப்பியிருந்தது.

வடகிழக்கில் சமாதான நடவடிக்கைகள் தொடர்பான விபரங்களைப் பரப்புவதற்கு உபயோகப்படுத்தவே இந்த உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதுடன் இறக்குமதி செய்ய விரும்பிய அந்த உபகரணம் குறித்த விபரங்களையும் அவர்கள் இணைத்திருந்தனர். அந்த உபகரணம் ஏற்கனவே அவர்களால் சிங்கப்பூரில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் (சிங்கப்பூர் டாலர் 93,625) கடல் மார்க்கமாக வந்துகொண்டிருந்தது. இதன் பிரதானப் பொருட்களாக எஃப்.எம். ட்ரான்ஸ்மிட்டர் பின்னணி ட்ரான்ஸ்மிட்டர் (சிங்கப்பூர் டாலர் 52,600), நான்கு பெட்டிகளில் அன்டனா (சிங்கப்பூர் டாலர் 18 ஆயிரம்) குறிப்பிட்டிருந்தன. இவற்றுக்குச் சுங்கத்தடையை நீக்குமாறும் தீர்வை விலக்களிக்குமாறும் தாமதப்படுத்த வேண்டாமெனவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. வெகுசனத் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்காருக்கு விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப்

*27. சன்டே லீடரில் பெடரிக்கா ஜான்சின் கட்டுரையில் தவிர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. தொழில் நுட்பக்குழு அனுமதிப் பத்திரத்துக்குச் சிபாரிசு செய்த அறிக்கை, கடிதப் பரிமாற்றப் பிரதிகள் என்பவற்றை உள்ளடக்கிய சம்பந்தப்பட்ட தகவல் என்பவற்றை அதிகளவில் வழங்கியது.*

*28. அரசியல் பிரிவின் இணைப்பாளர் எஸ். புலித்தேவனால் கையெழுத்திடப்பட்டது.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பணிப்பாளர் என்ற ரீதியில் கடிதத்தில்[29] எஃப்.எம். வானொலிச் சேவை இன்மையாலும் கொழும்பிலுள்ள ஒலிபரப்பு நிலையத்திலிருந்து சமிக்ஞைகள் சரிவரக் கிடைக்காமையாலும் வடகிழக்கிலுள்ள பெருந் தொகையான மக்கள் கல்விச் செய்திகள், பொழுதுபோக்கு அம்சங் களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் குறிப்பிட்டி ருந்தார். சமாதானச் செயலகம் தேவையின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு வடகிழக்கு மக்கள் பயன்பெறுவதற்காக வானொலி நிலையமொன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்திருப்பதாகவும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து உரிய அனுமதியைப் பெற்று நிலையத்தை ஆரம்பிக்கவிருப்பதாகவும் தெரிவித்திருந்தார். அத்துடன், எஃப்.எம். வானொலி நிலையமொன்றை நிறுவி இயக்குவதற்குப் பொருத்தமான அலைவரிசைக்கான ஒதுக்கீட்டை மேற்கொள்ளுமாறும் விடுக்கப்பட்ட வேண்டுகோளுடன் கடிதம் நிறைவுசெய்யப்பட்டிருந்தது.

பிரதமருக்கான உத்தியோகபூர்வமான ஆலோசனைக்குழு[30] இந்த விடயத்தை விபரமாக பரிசீலனைக்கு உட்படுத்தியதுடன் தொழில்நுட்ப மற்றும் பாதுகாப்புத் தரப்பு ஆட்சேபனைகள் தொடர்பாகச் சாதகமான பதிலையே இக்குழு வழங்கியது. கிளிநொச்சி எஃப். எம். வானொலி நிலையமானது இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழு வழங்கிய அனுமதிப் பத்திரத்தின் கீழேயே இயங்க வேண்டும். இது இலங்கை அரசாங்கத்தின் இறைமையை விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொள்வதற்கான அடையாளமாகும். இதனை ஆலோசனைக்குழு மனத்தில் கொண்டிருந்தது. ஆயினும் தீர்வையில்லாமல் இறக்குமதி செய்யும் விடயமானது பாரதூரமான தடங்கலாகக் கருதப்பட்டது. தீர்வைவிலக்கு இறக்குமதிக்கு எதிராக இறக்கமான கொள்கையை நிதியமைச்சு கடைப்பிடித்தது. அங்கீகரிக்கப்பட்ட பல அரசுசார்பற்ற நிறுவனங்கள் தமது தொண்டர் சேவைக்கான உபகரணங்களைத் தீர்வை யின்றி இறக்குமதி செய்ய அனுமதிக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டு கோள்களும் நிராகரிக்கப்பட்டிருந்தன.

29. கடிதத்தைப் பார்க்க. உபகரணப் பட்டியல், தேவைப்பட்ட விபரங்கள் அட்டவணை 3இல்.

30. ஆலோசனைக் குழு (சில சமயம் நகைச்சுவையாக ஆனால் பொருத்தமற்ற வகையில் எதிரிக் குழுவென குறிப்பிடப்பட்டது) பிரதமரின் செயலாளர், அமைச்சரவைச் செயலாளர், திறைசேரிச் செயலாளர், பாதுகாப்புச் செயலாளர், கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் (ஆர். பாஸ்கரலிங்கம்) ஸ்கோப்பின் பணிப்பாளர் நாயகம், சபை முதல்வரின் செயலாளர் (நௌஃபல் ரஹ்மான்) ஆகியோரை உள்ளடக்கியது. இது ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் காலையில் கூடும். இதற்கு மேலதிகமாக அமைச்சரவைக் கூட்டத்திற்கு முன் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள பத்திரங்களைப் பரிசீலிக்கும். அவை தொடர்பான விளக்கங்களை முன்வைக்கும். எந்தவொரு உறுப்பினர்களாவது முக்கியமான விவகாரமெனக் கருதும் விடயங்கள் தொடர்பாக விளக்கத்தைத் தெளிவுபடுத்தும். இதற்குப் பிரதமர் தலைமை தாங்குவார். வழக்கமாக இரு மணிநேரங்கள் இக்குழு கூடும்.



விடுதலைப்புலிகளின் கோரிக்கையைப் பரிசீலிக்கப் பாதுகாப்பு அமைப்பால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு[31] உபகரணத்தைச்[32] சோதித்துப் பார்த்தபின் எஃப்.எம். வானொலி நிலையத்தை இயக்கு வதற்கான அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்குப் பரிந்துரைத்தது.

வெகுஜனத் தொடர்பாடல் அமைச்சு அனுமதிப் பத்திரத்தை வழங்கு வதற்கும் இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழு அலைவரிசையை ஒதுக்குவதற்கும் ஆட்சேபனை கிடையாதெனப் பாதுகாப்பு அமைச்சு பிரகடனப்படுத்தியிருந்தது. பாதுகாப்புப் படை யினர் பயன்படுத்தும் அலைவரிசைக்கு ஒதுக்கீடு செய்யப்படவுள்ள இந்த அலைவரிசை இடையூறாக அமையாதெனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

தொழில்நுட்ப மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்களைத் தொழிநுட்பக் குழுவே ஆராய்ந்தது. அதன் அறிக்கை சாதகமாக இருந்தது. அனுமதிப் பத்திரக் கட்டணம் உரியமுறையில் செலுத்தப் பட்டுப் புலிகளின் குரல் எஃப்.எம். வானொலி சட்டரீதியாகக் கிளிநொச்சி யிலிருந்து இயங்குவதற்கு ஆயத்தமாக இருந்தது.

ஆனால் தீர்வையில்லாமல் இறக்குமதி செய்யும் விவகாரம் கணிச மான அளவு நெருக்கடியை ஏற்படுத்தியதுடன் சமாதான அனுசரணை யாளரான நோர்வேக்குக் கடும் சுமையையும் தோற்றுவித்தது. இந்த விடயத்தில் தலையிட்டுப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க முயன்ற நோர்வே (தூதரகம்) தனது இராஜதந்திர சிறப்பு உரிமையைப் பயன் படுத்தித் தீர்வையின்றி இறக்குமதி செய்ய முடியுமென்ற நியமத்தை செயல்படுத்த முடிவுசெய்தது. பரிமாற்றக் கருவி தீர்வைவரி செலுத்தப் படாமல் சிலவாரங்களாக வைக்கப்பட்டிருந்தது. இந்த விடயத்தில் நிதியமைச்சு பிடிவாதமாக இருந்தது.

இராஜதந்திரமட்ட இறக்குமதியென்று இறுதியாக அனுமதியளிக்கப் பட்டபின் உபகரணம் அரசாங்க சமாதானச் செயலகத்திடம் கையளிக்கப் பட்டது. பின்னர் சமாதானச் செயலகம் புலிகளின் சமாதானச் செயலகத் திற்கு அதனை வழங்கியது.

உபகரணம் திரும்பத் திரும்பப் பரிசோதிக்கப்பட்டது. பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான பாகங்கள் எதையேனும் கொண்டிருக்கிறதா என்றும் பரிசீலிக்கப்பட்டு பின்னர் இராணுவ லாரியில் ஓமந்தைக்கு அனுப்பப்

31. தொழில்நுட்பக் குழுவானது பலபரிமாணமானதொன்றாகும். தொலைத்தொடர்பு அமைப் பினர் தகுதிவாய்ந்த பிரதிநிதிகளை அது உள்ளடக்கியது.

32. விடுதலைப்புலிகளின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த உபகரணப் பட்டியலில் ஒரு விஎஸ்ஏரி என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் சுங்க மற்றும் தொழில்நுட்பக் குழுவால் சோதிக்கப்பட்ட உபகரணத்தொகுதியில் இது இருக்கவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டுப் பின்னர் புலிகளின் சமாதானச் செயலகப் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது. தீர்வை செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் உடனடியாகவே இராஜதந்திரப் பொருட்கள் இலங்கையின் அரசு சார்பற்ற நிறுவனங்களின் கரங்களுக்கு மாற்றப்பட்டது. இலங்கையின் சமாதானச் செயலகம் 3 மில்லியன் ரூபா தீர்வையை (8 மில்லியன் ரூபா பெறுமதியான பரிவர்த்தனை உபகரணத்துக்கு) செலுத்தவேண்டியிருந்தது. சமாதானச் செயலகத்திற்கு நோர்வே அரசாங்கம் வருடாந்தம் மானியமாகக் கொடுத்த 12 மில்லியனில் இந்தக் கொடுப்பனவு செலுத்தப்பட்டது.

இறுதியாக விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகம் உபகரணத்தைப் பெற்றுக்கொண்டது. தீர்வையை இலங்கையின் சுங்கம்/திறைசேரி செலுத்தியது. இறக்குமதி வரிக்கட்டணத்தை நோர்வே அனுசரணையாளர் செலுத்தினர். இதுவொரு நீண்டகால நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் செயல்பாடாகும். ஊடகங்களிலும் பாராளுமன்றத்திலும் அதிகளவிலான விமர்சனங்கள் இடம்பெற்றன. இதன்விளைவாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் கடும்தொனியிலான கடிதப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன (இந்தக்கதை சமாதான நடவடிக்கைகளை உணர்வுபூர்வமானதாக உருவாக்கிய பல வெற்றி தோல்வியை ஏற்படுத்திய தீர்மானங்கள் குறித்துச் சிலசமயம் விவரிக்கக் கூடுமென்பதற்காகச் சில விவரங்கள் தரப்பட்டுள்ளன. தெளிவாக, இந்த இடம் பலவீனமாக இதயம் உள்ளவர்களுக்கு அல்ல).

## சமாதான நடவடிக்கைகளை நிலைபெறச்செய்தல்

சமாதானத்தை நிலைபெறச் செய்தலும் அதனை வலுப்படுத்தலும் அதை ஆரம்பித்துவைப்பதுபோலவே கிட்டத்தட்டக் கடினமான விடயமாகும். இது தோல்வியைத் தழுவ வேண்டுமென சிலர் காத்துக்கொண்டிருந்தனர். இவ்வாறான முயற்சிகள் அனைத்திற்குமே இந்நிலைதான் ஏற்படுகின்றதா அல்லது 'சீர்குலைவிற்காக எதிர்பார்த்திருத்தல் என்பது இலங்கையில் கலாசாரரீதியாக உற்சாகப்படுத்துகிறது' என்பது ஒரு விவாதப் பொருளா? எதிர்பார்க்கக்கூடியதுபோல, தனியார் ஊடகங்கள் உட்பட பலர் இதற்கு ஆதரவாக இருக்கவில்லை. சமாதானத்திற்காக முன்னணியில் நின்று செயல்பட்ட சில அரசுசார்பற்ற நிறுவனங்களின் நிலைப்பாடும் புரிந்துகொள்வதற்குக் கடினமாயிற்று. முன்னரைப் போன்று, சமாதானம் இன்னமும் அடையப்பட வேண்டியிருந்தபோது அவர்களால் நெருங்கிவந்து செயல்படமுடியவில்லை.

ஆலோசனை வழங்குவதைவிட, அமலாக்கம் அல்லது சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் ஆகிய முயற்சிகளில் சிவில் சமூகம் கூடுதலாக



ஈடுபடுவதானது அதிகாரிகள் மட்டத்தில் இருந்து வரவேற்கப்படத்தக்கதொன்றாகக் கருதப்படவில்லை. நடவடிக்கைகளை ஸ்திரப்படுத்துகின்ற கட்டத்தில் சிவில் சமூகத்தின் ஆதரவானது மிகவும் அவசியமானதாகையால், அதிகார எல்லைக்குரிய போட்டி என்ற பிரச்சினையை எப்படி வெற்றிகொள்வது என்பது முக்கியமானதொன்றாகும். நடவடிக்கைகள் முன்நகர்ந்து செல்கின்றபோது சிவில் சமூகத்தின் குறிப்பிடத்தக்கதான விடுவிப்பானது, அவர்களை அரசாங்கம் போதியளவிற்குச் சம்பந்தப்படுத்துவதில்லையா அல்லது சிதறுண்டிருக்கின்ற இலங்கைச் சிவில் சமூகத்தின் யதார்த்தம் காரணமானதா என்பது ஆய்வுக்குரிய விடயமாகும்.

நிச்சயமாக இலங்கையில் சமாதானம் என்ற விடயம் மிக ஆழமாக பிளவுபட்டதொன்றாகும். எதிரணி அரசியல்கட்சிகள் போன்ற சில கட்சிகள் நேரடி முன்னெடுப்பு அரசியல் நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டவையாகும். முந்தைய அரசாங்கங்களின் காலத்தில் இடம்பெற்றவை போலவே ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சியும் தோல்வியடையுமென இவை கருதின. முந்தைய அரசாங்கங்களின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளை எதிரணி எதிர்த்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சமாதானத்தை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டபோது ஐதேக எதிர்த்தது. யுத்தநிறுத்தம் பல தவறுகளைக் கொண்டிருக்கின்றதென்றும் பேச்சுவார்த்தைகள் புரணப்படுத்த முடியாதவையெனவும் நேரத்தையும் பணத்தையும் விரயமாக்கும் நடவடிக்கையெனவும் அரசாங்கம் புலிகளுக்கு எந்தவிதக் கவனமுமின்றி மடமைத்தனமாக வாய்ப்பைக் கொடுத்திருப்பதாகவும் சமாதானத்தினூடாக ஆயுதங்களைச் சேகரிக்கவும் மீண்டும் தாக்குதலைத் தொடுக்கவும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதாகவும் இந்தக் குழுக்கள் தங்களால் முடிந்த அளவுக்குக் காட்ட முற்பட்டன. அடுத்த தரப்பினர் ஆயுதச் சந்தையைச் சேர்ந்தவர்களாவர். சமாதானமானது தங்களிடமிருந்து அதிகாரத்தையும் அதிகளவு வருமானத்திற்கான சந்தர்ப்பத்தையும் பறித்துவிடுமென அவர்கள் கருதினார்கள்.[33]

போர்க்காலத்தில் பொருளாதாரம் மிக மோசமான ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தவில்லை (வருடாந்த வளர்ச்சி சுமார் 4 சதவீதமாக இருந்தது). ஆயுதப்படைகள், பொலிஸாரின் எண்ணிக்கை அதிகரித்ததால் வேலைவாய்ப்பின்மை கணிசமான அளவு குறைக்கப்பட்டிருந்தது. படைவீரர்கள் குடும்பங்களுக்கு அனுப்பும் சம்பளத்தால் கிராமிய பொருளாதாரத்திற்குப் பாதிப்பு ஏற்படவில்லை. போரின்போது இறந்தாலோ

33. தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் பணத்துக்கான கைதுகள், விடுதலைகள், கொள்ளை, பாதுகாப்பு வனப்பகுதியில் பெறுமதிவாய்ந்த மரங்கள் தறிக்கப்படுதல் என்பனபற்றிய செய்திகள் நிறைய வெளிவந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அல்லது காணாமல்போனாலோ படைவீரர்களின் சம்பளம் அவர்களில் தங்கியிருப்போருக்கு எந்தவிதக் குறைப்பனவுமின்றி வழங்கப்பட்டது. சாதாரணமாக ஓய்வுபெறும் வயதுவரை இக்கொடுப்பனவு வழங்கப் பட்டது. இளம் வயதில் மரணமடைந்தாலும் குடும்பத்தின் வருமானம் குறைவடையாது).

இதனைவிட ஏனையோர் அரசாங்கம் தவறான பாதையில் செல்கின்றது என்ற அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தனர். பயங்கரவாதிகளுக்கு அரசு கொடுக்கின்றது என்ற கருத்து அவர்களிடம் இருந்தது. அத்துடன் உதவி வழங்கும் சமூகம் தமிழர்களுக்கு ஆதரவானது என்ற கருத்தையும் இவர்கள் கொண்டிருந்தனர். இது தாய்நாட்டின்[34] முடிவாக இருக்குமென அவர்கள் கருதினர். இலங்கையிலும் வெளிநாடுகளில் வாழும் சிங்களச் சமூகத்தினர் மத்தியிலும் உள்ள மத்தியதரவர்க்கம் மற்றும் தொழில்சார் நிபுணர்கள் தரத்திலும்கூடப் பரந்தளவில் இந்த நம்பிக்கை எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து இக்கட்டுரையாசிரியர் ஆச்சரியப்பட்டார்.

அவர்கள் தாங்கள் பாதுகாப்பின்றி இருப்பதாகக் கருதியதுடன், ரணில் விக்கிரமசிங்கவும் மற்றும் சமாதானத்திற்காக முன்னணியில்[35] நின்று செயல்பட்டோரின் நடவடிக்கைகள், நோக்கங்களில் இவர்கள் அதிகளவில் சந்தேகம் கொண்டிருந்தனர்.

சமாதான நடவடிக்கைக்கும் மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதியுதவியைப் பெற்றுக் கொள்ளவும் சர்வதேசச் சமூகத்தின் ஆதரவைப்பெற ரணில் விக்கிரம சிங்க ஆற்றிய குறிப்பிடத்தக்க பணி குறித்துத் தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டதுடன் அவருக்கு எதிரான உணர்வையும் ஏற்படுத்தியது எனலாம். இந்த எதிராளிகள் வளர்ச்சியடைந்த நாடுகளின் தலைவர் களான ஐரோப்பிய ஒன்றியத்தின் கிறிஸ் பட்டர்ன், ஜப்பானின் யசூசி அகாசி போன்றோர் கிளிநொச்சிக்குச் சென்று பிரபாகரனுடன் கலந்துரையாடல் நடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருந்தார்கள்.

வெளிநாட்டு நலன்விரும்பிகள் பயங்கரவாதிகளை இங்குள்ள உபராச்சியத்தின் ஆட்சியாளர் போன்று நடத்துவதன் மூலம் இலங்கையின்

34. 'நாட்டைப் பாதுகாப்பதற்காக' என்எம்ஏடி (பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய இயக்கம்) போன்ற பெயர்களைக் கொண்ட அமைப்புகள் இந்தக் காலப் பகுதியில் முக்கியத்துவம் பெற்றன.

35. சமாதானத்தை வலுவாக்குதல், மோதல் தீர்வு தொடர்பான கருத்துகள் உலகில் இடம்பெறும் ஏனைய சமாதான நடவடிக்கைகளிலும் இந்தமாதிரியான தவறான எண்ணப்பாடுகள் வேலை செய்வதை உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால், கொதிப்படைந்திருப்போருக்கு இது சிறிய அளவிலேயே ஆறுதல் அளித்தது. நாசகாரர்களாகச் செயல்படத் தீர்மானித்திருப்போருக்கு உண்மையான நிலைமையைத் தெரிவிப்பது வாத்துகளின் மீது தண்ணீர் ஊற்றுவது போன்ற பயனற்ற நடவடிக்கையாகும்.



இறைமையை முழுமையாக அலட்சியப்படுத்துகின்றனர் என்று ஐலண்ட்[36] ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்திருந்தார். இருதரப் பினருக்கும் இடையில் உறவுகளை இயல்புநிலைக்குக் கொண்டு வருவதற்கு இருவருடங்கள் மேற்கொண்ட முயற்சிதொடர்பாக ஆச்சரியப்படத்தக்க அபிப்பிராயம் கொடுத்தது. இதே மாதிரியான உணர்வுகள் 1987[37]இல் இந்தியா மத்தியஸ்தத்தை மேற்கொண்டபோது வெளியிடப்பட்டன. இறுதியாக 1990இல் வெளியேறுமாறு ஜனாதிபதி பிரேமதாசாவால் கேட்கப்பட்டது.

## சமாதான நடவடிக்கைகளுக்கான சர்வதேசச் சமூகத்தின் ஆதரவு

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் 9/11க்குப் பின்னர் உலகளாவிய ரீதியில் அதிகரித்திருந்தபோதும் முற்றிலும் எதிர்பாராதவிதமாக விக்கிரமசிங்க பயணம் செய்த உலக நாடுகளின் தலைவர்களின் மறு மொழியானது அவர் எதிர்பார்த்ததைப் போன்று கடினமானதாக இருக்க வில்லை. வாஷிங்டனில் ஜனாதிபதி புஷ், லண்டனில் டோனிபிளயர், புது டெல்லியில் வாஜ்பாய், கனடா, நோர்வே, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் இதர நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை ரணில் விக்கிரம சிங்க சந்தித்தார். அவர் சந்தித்த தலைவர்கள் அனேகமாக யாவருமே பேச்சுவார்த்தை தொடர்பாக ரணில் தேர்ந்தெடுத்த பாதையிலேயே முன்னோக்கிச் செல்லுமாறு ஊக்குவிப்பளித்தனர். ஏனையோர் மேற்கொண்டதைப் போன்று யுத்தரீதியான தேர்வைப் பிரயோசனமற்ற விதத்தில் முன்னெடுக்க வேண்டாமெனத் தெரிவித்திருந்தனர். 9/11 தாக்குதல் இடம்பெற்று சிறிதுகாலமே கடந்திருந்த அதேசமயம் பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய யுத்தம் தொடர்பாக புஷ் உரத்து குரல் கொடுத்துக்கொண்டிருந்தார். ஆனாலும் அவரது பதில் மிகவும் ஆச்சரியமானதாக இருந்தது. பேச்சுவார்த்தை மூலம் இணக்கப் பாடு காண்பது தொடர்பாக வட அயர்லாந்து விவகாரத்தில் டோனி பிளயர் அனுபவம் பெற்றிருந்தார். அவரும் மிகவும் சாதகமாகவே ஈடுபாட்டை வெளிப்படுத்தினார்.

இலங்கை அரசாங்கத்தின் கொள்கைக்கு இந்தச் சந்திப்புகளுடன் அங்கீகாரம் கிடைத்தது மாத்திரமல்லாமல் அதிகளவிலான இராணுவ மயமாக்கலால் யுத்தத்தில் வெல்வதற்கு முயற்சிப்பதைவிடப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வொன்றைக் காண்பதன் மூலம் அதிகளவு இலங்கை

36. 2004 ஏப்ரல் 11 ஞாயிறு ஆசிரியர் தலையங்கம்.

37. 1987இல் இலங்கை–இந்திய உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பின்னர் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியை வழியனுப்பிவைக்கும் மரியாதை அணிவகுப்பு நிகழ்வின்போது கடற்படைவீரர் ஒருவர் ராஜீவ் காந்தியின் தலையைத் துப்பாக்கிப் பிடியால் தாக்கியபோதே அவர் கிட்டத்தட்ட கொல்லப்பட்டதை ஒத்ததுதான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனுகூலம் பெற முடியுமென்ற வலியுறுத்தலும் விடுக்கப்பட்டது. உதவி வழங்கும் சமூகத்துக்கு விசேடமாக இணைத்தலைமை நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வேக்குத் தொடர்ந்து தெரியப்படுத்துவதும் எல்லாவேளைகளிலும் அறிவித்துக் கொண்டிருப்பதும் அதிகளவு கடுமையானதும் நீட்டிக்கும் பணியாக இருந்தது.

இந்த நாடுகளின் தூதரகங்களைச் சேர்ந்த தலைவர்கள் தமது அரசாங்கங்களின் சார்பில் அசாதாரணமான முறையில் செயல்பட்டனர். அதே போன்று சிறிய குழுவினரான அமைச்சர்களும் பிரதமர், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொரகொட ஆகியோர் அடிக்கடி சர்வதேச மட்டத்தில் விடயங்களை நயமாகப் பேசி வெளிப்படுத்தி வந்தனர். இவை மிகவும் அனுகூலமான நிலைமையைத் தோற்றுவித்தன. 2003 ஜனவரியில் டோக்கியோவில் ஒன்றுகூடிய சர்வதேச சமூகம் 4 வருடங்களுக்கு 4.5 பில்லியன் டாலர்களைப் புனர்வாழ்வு, மீட்சி பெறுதல் ஆகியவற்றுக்கு வழங்குவதாக உறுதியளித்ததுடன் ஒஸ்லோ பிரகடனத்தையும் அங்கீகரித்தது. வெளிநாடுகளிலுள்ள எமது தூதரகங்களைப் பொறுத்தவரை கவனிக்கப்படவேண்டிய ஒருவிடயம் என்னவென்றால், ஒரு சிலவற்றைத் தவிர அநேகமானவை வழமையான பாதையான பொறுத்திருந்து பார்த்தலையே கடைப்பிடித்தன. முன்னர் கொண்டிருந்த நிலைப்பாட்டையே அவை தொடர்ந்தும் கடைப்பிடித்தன. விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகளெனவும் அவர்களை யுத்தத்தின் மூலம் அழிக்க வேண்டுமெனவும் நம்பிக்கை வைத்துப் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாதெனவும் அவர்களை தடைசெய்யுமாறும் வெளிவிவகார அமைச்சு அழைப்புவிடுத்து வந்தது. இந்த நிலைப்பாட்டையே வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் அநேகமானவை கொண்டிருந்தன. இது முன்னாள் எதிரியான விடுதலைப்புலிகள் மீதான நம்பிக்கைக் குறைந்த அச்சமாகும். சிறியளவிலான ஆனால், சக்திமிக்க ஊடகத் துறையால் இந்த அச்ச உணர்வு மிகத் தீவிரமாகப் பரப்பப்பட்டது.

இந்தியாவிலிருந்து பயிற்சியைப் பெற்றுக்கொள்ளும் ஏற்பாடுகளை வலுப்படுத்திப் பாதுகாப்பு உடன்படிக்கைக்குள் பிரவேசிப்பதற்கான கலந்துரையாடல்கள் அக்டோபர் 2003இல் விக்கிரமசிங்க டெல்லிக்கு பயணம் மேற்கொண்டபோது இடம்பெற்றன. உண்மையிலேயே 1987 ஜூலை 29இல் கையெழுத்திடப்பட்ட இந்திய இலங்கை உடன்படிக்கையில் இந்த ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. பிரதமர் ராஜீவ் காந்திக்கும் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவுக்கும் இடையில் கைமாற்றப்பட்ட கடிதங்கள் உடன்படிக்கையில் இணைப்புகளாக்கப் பட்டிருந்தன. அதில் இந்தியா, இலங்கைக்குப் பயிற்சி வசதிகள் மற்றும் இராணுவ விநியோகங்களை வழங்குவது தொடர்பாக இணக்கம் காணப்பட்டுள்ளது.



உடன்படிக்கை ஒருபோதும் ரத்து செய்யப்படவில்லை. அத்துடன் இந்த ஏற்பாடு பலவருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. முப்படைகளையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான அதிகாரிகள் வருடாந்தம் இந்தியக் கல்லூரிகளில் பயிற்சிபெற்று வருகின்றனர். இராணுவ விநியோகத்தைப் பொறுத்தவரை இது ட்ரக்குகள், தொடர்புசாதனப் பொருட்கள் போன்றவற்றுடன் மட்டுப்படுத்தப்பட்டது. இந்த ஏற்பாடுகளை வலுப்படுத்துவது அவசியமெனக் கருதப்பட்டது. ஏனெனில், விடுதலைப்புலிகள் கடல்மார்க்கமாக ஆயுதங்களை சேகரித்து வருவதாகவும் தமது பலத்தை அதிகரித்து எதிர்கால யுத்தத்திற்குத் தயாராவதாகவும் ஆனால், அரசப் படையினர் பெரிய இராணுவ உபகரண வசதிகளின்றி அரசாங்கத்தால் வைக்கப்பட்டிருப்பதாகவும் எதிரணியினர் அதிகளவு குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து வந்தனர். இந்த உள்நாட்டு நிலைமையைக் கருத்தில்கொண்டே இந்தியாவுடனான பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்துவது குறித்துப் பரிசீலிக்கப்பட்டது. இந்திய உதவி கிடைக்கப்போகிறது என்ற செய்தியானது இந்தக் கட்டத்தில் மிகைப்படுத்தப்பட்ட எதிரணியின் கருத்தை மாற்றியமைப்பதற்குத் துணை நின்றது.

## 2002 பிப்ரவரி 22: யுத்தநிறுத்த உடன்படிக்கை

சமாதான நடவடிக்கைகளின் இதயமாக யுத்தநிறுத்த உடன்படிக்கையே உள்ளது. சிலசமயங்களில் இது விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் அரசியல் சார்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையெனத் தவறாக அழைக்கப்படுகிறது. இது ஒரே மேசையில் இருவர் அமர்ந்திருந்து ஒரே நேரத்தில் கையெழுத்திடும் ஏனைய உடன்படிக்கைகளைப் போன்றதல்ல. யுத்தநிறுத்த உடன்படிக்கையில் பிரபாகரன் கிளிநொச்சியிலிருந்தும் ரணில் விக்கிரமசிங்க வவுனியாவிலிருந்தும் ஒரே நாளில் 22 பிப்ரவரி 2002இல் சில மணிநேர வித்தியாசத்தில் கையெழுத்திட்டனர்.

அனுசரணையாளரென்ற வகையில் அச்சமயம் நோர்வே அரசாங்கத்தின் தூதுவராக இருந்த ஜோன் வெஸ்ட்போர்க் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் வரைவுகளை உருவாக்குவதிலும்[38] உள்ளடக்கத்தைக் கையாள்வதிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியிருந்தார்.

38. நோர்வே அனுசரணைக் குழுவிலுள்ள எரிக்சொல்ஹெய்ம் உடன்படிக்கையி லுள்ள விடயங்களின் பின்னணியில் இருந்தவர் என்ற வலுவான நம்பிக்கை காணப்பட்டது. 2001 டிசம்பர், 2002 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் உடன் படிக்கைத் தயாரிக்கப்பட்டு இருதரப்பினராலும் இணங்கிக்கொள்ளப்பட்ட துடன் தகுதியானதா என்பது தொடர்பாக விபரமாக ஆராயப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டது. தற்போது இது இரகசியத் தகவலாக உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மோதலில் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் யுத்தநிறுத்தம் தொடர்பாக எழுத்துமூலமான விபரங்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து இணங்கியமை மோதல் வரலாற்றில் முதல் தடவையாகும்.

1987 இந்திய-இலங்கை உடன்படிக்கையானது இரு நாடுகளின் அரசாங்கத்துக்குமிடையிலானதாகும். மோதலின் பிரதான பாத்திரமான விடுதலைப்புலிகள் இந்த உடன்படிக்கையில் நேரடியாகத் தொடர்பு படுத்தப்பட்டிருக்கவில்லை.

இதுவரை இது ஒன்றுமட்டும் சாத்தியமானதாக இருந்தது. ஏனெனில், வெளிநாட்டு அனுசரணை இதற்கான காரணமாகும். மத்தியஸ்தர் ஒருவர் அல்லது நடுநிலையான இடைநடுவர் ஒருவர் இல்லாவிடில் இருதரப்பிலுமுள்ள நாசமாக்குவோரின் செயல்பாடுகள் நிச்சயம் நடவடிக்கைகளைக் குழப்பியிருக்கும். யுத்தநிறுத்த உடன்படிக்கை யானது 4 உறுப்புரைகளைக் கொண்டது. யுத்தத்தில் ஈடுபடும் தரப்பினருடன் தனித்தனியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் முதலாவது உறுப் புரையில் அடங்கியுள்ளது. வடகிழக்கில் பொதுமக்கள் வாழ்வில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கத் தேவையான நடவடிக்கைகள் இரண்டாவது உறுப்புரையிலும் இலங்கைக் கண்காணிப்புக்குழுவின் கடமையும் கடப்பாடும் மூன்றாவது உறுப்புரையிலும் எந்தவொரு தரப்பினராலும் உடன்படிக்கையை எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவருவது என்பது தொடர்பான உபவிதிகள் நான்காவது பிரிவிலும் உள்ளன.

### நடவடிக்கைகளை நிர்வகித்தல்

சமாதான நடவடிக்கைகளின் செயல்பாட்டில் அதிக நேரத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செலவிட்டார். தினந்தோறும் வார இறுதியிலும் சிலவேளை பின்னிரவிலும்கூட இந்த நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டார். பலதரப்பட்டோரிடம் இது தொடர்பாகப் பெரிய, சிறிய கூட்டங்களும் சந்திப்புகளும் இடம்பெற்றன. அநேகமாக தினந்தோறும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பாதுகாப்பமைச்சின் செயலாளர், அதிகாரிகள், நோர்வே அனுசரணையாளர்களான ஜோன் வெஸ்ட்போர்க், பின்னர் ஹான்ஸ் பிரட்ஸ்கார், வெளிநாட்டு விருந்தாளிகளான நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன், எரிக் சொல்ஹெய்ம், ஜப்பானின் யசூசி அகாசி, வட அயர்லாந்தில் ஜான் ஹீயூம் மற்றும் ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரஸின் பிரதிநிதிகள் உட்பட உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகை தந்த பலதரப்பட்டவர்களையும் சந்தித்தார்.

நாட்டிற்கு வருகைதரும் அரச விருந்தினர்கள் சகலருமே சமாதான நடவடிக்கைகளில் ஆர்வம்காட்டினார்கள். ரணில் விக்கிரமசிங்கவும்



எவ்வாறு இந்த முயற்சி முன்னெடுக்கப்படுகிறதென்பதை விளங்கப் படுத்துவதில் நேரத்தைச் செலவிட்டார்.

சமாதானப் பாதையும் கணிசமான எண்ணிக்கையான தரிப்பிடங் களைக் கொண்டதாக இருந்தது. பாங்காக், பேர்லின், ஹக்கோனே, ஒஸ்லோ, டோக்கியோ போன்ற இடங்களை இது உள்ளடக்கியதாக இருந்தது.

ஒஸ்லோவில் இரு தரப்பையும் சேர்ந்த முன்னணிப் பிரதிநிதிகள் பங்கேற்றனர். அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொரகொட, ரவூப் ஹக்கீம் மற்றும் பேர்னாட் குணதிலக ஆகியோர் அரசாங்கத்தரப் பிலிருந்தும் அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.பி. தமிழ்ச்செல்வன், அன்டன் பாலசிங்கம், வி. ருத்திரகுமார், கருணா, ஜோய் மகேஸ்வரன், அடேல் பாலசிங்கம் ஆகியோர் புலிகள் தரப்பிலிருந்தும் கலந்து கொண்டு பாரியதொரு திருப்பு முனையை ஏற்படுத்தி வெற்றி கண்டனர். இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இணக்கப்பாடாகும். 20 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமது உறுதியான நிலைப்பாடாக இருந்த தனிநாட்டுக் கோரிக்கையைப் புலிகள் கைவிட்டனர். சமஷ்டி அமைப்பை ஏற்படுத்தும் இலக்கை அடைவதற்கு எழுத்து மூலம் உடன்பட்டனர்.

ஐக்கிய இலங்கைக்குள்[39] அதிகளவிலான சுயாட்சியைக் கொண்ட சமஷ்டி முறைக்கு அவர்கள் இணங்கினர். பின்னர் பேச்சுவார்த்தை இடைநிறுத்தப்பட்ட பின்பு விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகம் ஏற்பட்டது. இது தொடர்பாக இக்கட்டுரையாசிரியர் விளங்கிக் கொண்டவை கீழே தரப்படுகிறது: எப்போதுமே இறுதி இலக்கு தனித் தமிழ் ஈழமாகும். ஆயினும் இலங்கை அரசாங்கம் அதிக உயர்ந்தபட்ச அதிகாரப்பகிர்வுக்கான தனது இதயசுத்தியுடனான விருப்பத்தைக் காட்டினால் அதன் சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை வெளிப்படுத்தினால், விடுதலைப்புலிகள் தமது தனிநாட்டு கொள்கையிலிருந்தும் கீழ் இறங்கி வந்து சமஷ்டி ஏற்பாட்டு யோசனை குறித்துக் கலந்து பேசத் தயாராவார்கள். இந்த சமஷ்டி ஏற்பாடானது ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்குச் சுயாட்சிப் பிராந்தியத்தைக் கொடுப்பதாக இருக்க வேண்டும். ஆனால், முழுமையான பிரிவினை இல்லாவிடினும் அது தொடர்பாக அதிகள விலான வெளிப்பாட்டைக் கொண்டிருக்கிறது. அல்லது நீ என்ன செய்கிறாய் என்பதிலேயே நான் செய்வது தங்கியிருக்கிறது என்ற நிபந்தனையுடனான நிலைப்பாடாகும்.

39. பார்க்க ஒஸ்லோ அறிக்கை, பக். 24இல் உள்ள அடிக்குறிப்பு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தரப்பினருக்கிடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்

பாங்காக்கிற்கும் பேர்லினுக்கும் இடையில் ஆறு சுற்று உத்தியோக பூர்வப் பேச்சுவார்த்தைகள் (2002–2003) இடம்பெற்றன. பணம், கால விரயத்திற்கு அப்பால் முழுமையான ஆக்கபூர்வமான திட்டங்கள் வெளிப்படுத்தப்பட்டதாகச் சிலர் கூறுகின்றனர். கலந்துரையாடல்களின் பெறுபேறாகப் பல கூட்டு உபகுழுக்கள் நியமிக்கப்பட்டன.

உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வுத் தேவைகளை அடையாளம் கண்டுகொள்ள எஸ்ஐஹெச்ஆர்என் மற்றும் யுத்தநிறுத்தத்திற்கு முன்னரான யுத்தக் கட்டுமானத்தைக் குறைக்க எஸ்டிஎன் என்பன அமைக்கப்பட்டன. உபகுழுவானது விசேட சிறப்பு வாய்ந்ததாகும். இது இருதரப்பிலுமுள்ள பெண் பணியாளர்களைக் கொண்டதாகும். போரால் பல்வேறு வழி களில் பாதிக்கப்பட்டப் பெண்களை அடையாளம் கண்டு உண்மையைக் கண்டறிவதே இந்தக் குழுவின் செயல்பாடாகும். உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரின் பிரச்சினைகளை மட்டுமன்றி யுத்த விதவைகள், பாலியல் ஆண், பெண் பாகுபாடு தொடர்பான வன்முறைகள், வாழ்வு நிலை என்பனவும் அடையாளம் காணப்படுவதற்காகவே இக்குழு அமைக்கப்பட்டது. பால் பாகுபாடு விடயங்களைப் புனர்வாழ்வு, புனரமைப்புடன் சமாதான நடவடிக்கைகளில் சிறப்பான முறையில் உள்வாங்குவதை உறுதிப்படுத்த முயலப்பட்டது.

இந்தப் பால் பாகுபாடு தொடர்பான விடயங்களை ஆராயும் குழுவானது திறமையான முறையில் செயல்பட ஆரம்பித்தது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். சமாதான நடவடிக்கைகள் சம்பந்தமான விடயங்களில் மட்டுமன்றி இருதரப்பிலுமுள்ள பெண்கள் மத்தியில் பொதுவான பிணைப்பை ஏற்படுத்தவும் இது செயல்பட்டது.

மேலும் வடகிழக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இடையில் எதிர்கால உறவுநிலை தொடர்பான வடிவமைப்பை மேற்கொள்ள அரசியல் விவகாரக்குழுவொன்று பொறுப்பாக நியமிக்கப்பட்டது. அதே சமயம் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியளித்தல் நடவடிக் கைகள் என்ஈஆர்எஃப் ஏற்பாடுகளின் கீழ் உள்ளடக்கப்படுவதற்கான பிரேரணை முன்வைக்கப்பட்டது. சகலக் குழுக்களும் ஒரே மாதிரியாகச் செயல்படவில்லை. சில குழுக்கள் அமைக்கப்பட்டதற்கான உத்தியோக பூர்வப் பேச்சுகளுடனேயே இடை நிறுத்தப்பட்டன.

ஆயினும் இவை சமாதானத்தையும் இயல்பு நிலையையும் தோற்று விப்பதற்கு மிகவும் முக்கியமானவையாகும்.

ட்ரிபிள் ஆர் செயலகம் பிரதமரின் அலுவலகத்தில் அமைக்கப் பட்டது. இது உபகுழுக்களின் தொடர்ச்சியான பணிக்கு உதவியதுடன் எஸ்ஐஹெச்ஆர்என்னின் அபிவிருத்தித் திட்டச் செயல்பாடுகளுடன்



நெருக்கமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. இது எஸ்ஐஹெச்ஆர்என் கூட்டுக்குழுவாகச் செயல்படுவது நிறுத்தப்பட்ட பின்பும் வடகிழக்கில் 15 விசேட அபிவிருத்தித் திட்டங்களைக் கண்காணிப்பதில் தொடர்ந்தும் ஈடுபட்டது.

## 2003 ஏப்ரலில் பேச்சுவார்த்தை இடைநிறுத்தம்

2002 டிசம்பரில் ஒஸ்லோவில் இடம்பெற்ற சிறியமட்டத்திலான சந்திப்புக்குப் பின்னர் விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் உதவி வழங்கும் அமைப்புகள் பலவற்றைச் சந்தித்ததுடன் ஒஸ்லோ பிரகடனத்துக்கும் இணங்கினர். அதேவேளை 2003 ஜூனில் டோக்கியோ வில் பாரியளவிலான உதவி வழங்கும் சமூகத்தின் மகாநாட்டிற்கான ஆயத்தங்களும் இடம்பெற்றன. 2003 ஏப்ரல் 21இல்[40] அன்டன் பாலசிங்கம் பிரதமருக்குக் கடிதத்தின் மூலம் பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்துவதாக அறிவித்தார். இது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

வருத்தத்திற்குரிய தீர்மானத்தை எடுப்பதற்கான பின்வரும் காரணங் களை அன்டன் பாலசிங்கம் தெரிவித்திருந்தார்:

- வாஷிங்டனில் இடம்பெற்ற முக்கியமான உதவி வழங்கும் மகாநாட்டில் விடுதலைப்புலிகளைச் சேர்த்துக்கொள்ளாமை;
- போர்நிறுத்த ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த விதிகள், நிபந்தனைகளை அமல்படுத்தாமை;
- உள்நாட்டில் இடம்பெயர்ந்த இலட்சக்கணக்கான தமிழர்களின் நெருக்கடி நிலைமையும் துன்பமும் தொடர்கின்றமை;
- தமிழர்களின் நகரங்களிலும் பொதுமக்களின் குடியிருப்புப் பகுதி களிலும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பு;
- மிகவும் மோசமான வறுமையிலும் அடிப்படை வசதிகள் பிடுங்கப் பட்ட நிலையிலுமுள்ள வடக்கு, கிழக்குத் தமிழர்கள் அரசாங்கத்தின் பெரும்படியாக்கப் பொருளாதாரக் கொள்கைகள், உபாயங்களி லிருந்தும் ஓரம் கட்டப்பட்டிருக்கின்றமையானது பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் தமிழ் மக்கள் மற்றும் விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தின் நம்பிக்கையைப் புறந்தள்ளியுள்ளமை.

இந்தச் சூழ்நிலைகளால் குறிப்பிட்ட காலத்துக்குப் பேச்சுவார்த்தை களில் பங்குபெறுவதை இடைநிறுத்துவதெனப் புலிகளின் தலைமைத் துவம் முடிவுசெய்துள்ளது என்று பாலசிங்கத்தின் கடிதம் தொடர்ந்தது.

40.தமிழ் நெட் இணையதளத்தில் 22.04.05இல் 21 ஏப்ரல் 2003 தேதியிடப்பட்ட பாலசிங்கத்தின் கடிதத்தைப் பார்க்க.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜூனில் ஜப்பானில் இடம்பெறும் உதவி வழங்கும் அமைப்புக்களின் மகாநாட்டிற்கும் நாம் சமூகமளிக்கமாட்டோம். இந்த மனவருத்தமான தீர்மானத்தை எடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதையிட்டுக் கவலையுறும் அதேவேளை, இனநெருக்கடிக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வுகாண்பதற்கான எமது விருப்பத்தை மீள வலியுறுத்தித் தெரிவிக்க விரும்புகிறோம்.

அத்துடன் தமிழ் மக்கள் மத்தியில் சமாதான நடவடிக்கைகள் தொடர்பான நம்பிக்கையை ஏற்படுத்த யுத்தநிறுத்த உடன்படிக்கையை மேலும் தாமதமின்றி அமல்படுத்த வேண்டும் என்றும் இயல்பு நிலையை ஏற்படுத்த வேண்டுமெனவும் வடக்கு, கிழக்கில் இடம்பெயர்ந்தார் மீளக்குடியேற அனுமதியளிக்கப்பட வேண்டுமெனவும் இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்துகின்றோம்.

அத்துடன் யுத்தத்தால் அழிக்கப்பட்ட தமிழ் தேசத்தை மீள நிர்மாணிப்பதற்காகத் தனது பொருளாதார அபிவிருத்தியை மீள் மதிப்பீடு செய்யுமாறும் அரசாங்கத்தைக் கோருகிறோம்.

பேச்சு இடைநிறுத்தத்திற்கான அடுத்த காரணமாக இருப்பது உதவி வழங்கும் முக்கியமான மகாநாட்டை வாஷிங்டனில் நடத்துவதற்கு அரசாங்கம் எடுத்த பிழையான தீர்மானமாகும். சர்வதேச நாணய நிதியத்தினர், நிதியமைச்சர்களுடனான வருடாந்தச் சந்திப்பின் முன்னேற்றத்தில் தாமதம் காணப்படுவதுடன் புலிகள் மகிழ்ச்சியின்றி இருப்பதற்குக் கணிசமான காரணங்கள் உண்டு. கடிதத்தில் குறிப்பிட வேண்டிய மற்றொரு ஆர்வமூட்டும் விடயம் என்னவென்றால் இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்தி உபாயத்தில் மீண்டுவரும் இலங்கை வடபகுதியின் வறுமை நிலை தொடர்பாகப் போதியளவுக்கு குறிப்பிட்டிருக்கவில்லை. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐநா முறைமை (விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்புடன்) ஆகியவற்றால் வடகிழக்கின் அடிப்படைத் தேவைகள் தொடர்பான மதிப்பீடு துரிதமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. உதவி வழங்கும் சமூகத்தின் டோக்கியோ சந்திப்பில் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டது. முன்னேற்றத்தின் தாமதம் குறித்து அதிகரித்து வரும் அதிருப்தி தொடர்பான பதிலாக இது கருதப்படுகிறது.

### வட, கிழக்கில் இடைக்கால நிர்வாகத்திற்கான அரசாங்கத்தின் கொள்கை வடிவமைப்பு (2003 மே, ஜூலை முன்மொழிவுகள்)

பாலசிங்கத்தின் கடிதத்தின் பின்னர் உத்தியோகபூர்வச் சுற்றுப் பேச்சுகள் இடைநிறுத்தப்பட்டபோதும் அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கூடிச் செயல்படும் உறவுநிலை முறியவில்லை.



பேச்சுகள் நிறுத்தப்பட்டவுடனேயே சமாதான நடவடிக்கைகள் சீர்குலைந்துவிட்டதாக விமர்சிப்போர் தெரிவித்தனர். ஆனால், இது உண்மைக்குப் புறம்பானதாகும். போர்நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது. மனிதாபிமான நிவாரண, புனர்வாழ்வுப் பணிகள், உதவி வழங்கும் நாடுகள், அமைப்புகளின் உதவியுடன் விஸ்தரிக்கப்பட்டன. சில புதிய அபிவிருத்தி வேலைகள் விசேடமாக, சுகாதாரம், கல்வித்துறை சார்ந்தவை ஆரம்பிக்கப்பட்டன. அதேசமயம் டோக்கியோ மகாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட 4.5 பில்லியன் டாலர் உதவியின் உண்மையான தாக்கத்திற்கான பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்கும்வரை காத்திருக்க வேண்டியிருந்தது. இது உதவி வழங்கும் சமூகத்தின் நிபந்தனையாகும். ஆயினும் அதிகாரிகள் மத்தியிலான தொடர்புகள் பாதிக்கப்படாமல் இருந்தன.

விடுதலைப்புலிகளின் கோரிக்கையைத் தொடர்ந்து மே 2003இல் இலங்கை அரசாங்கம் தற்காலிக நிர்வாக ஏற்பாட்டை[41] தாபிப்பதற்கான வடிவமைப்பை உருவாக்கியது. வட, கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தால் அழிவடைந்த உள்சார் கட்டமைப்பு மற்றும் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பவும் இவை தொடர்பான செயல்பாடுகளை நிர்வகிக்கவுமான நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானம் எடுத்துச் செயல்படும் பணிகள் தொடர்பாக விடுதலைப்புலிகள் பங்களிப்பு வழங்குவதற்கு இந்த ஏற்பாடு வழி செய்தது.

அரசாங்கத்தின் யோசனைகளின் நோக்கம் கூட்டாக வழிநடத்தும் நிர்வாக ஏற்பாட்டை உருவாக்குவதாகும். இதன்மூலம் வடக்கிலும் கிழக்கிலுமுள்ள 8 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்விலும் துரித முன்னேற்றத்தை ஏற்படுத்துவதே இந்த முன்வைப்பின் குறிக்கோளாகும். அதே சமயம் 2002 டிசம்பரில் ஒஸ்லோவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் மூன்றாம் அமர்வில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் பேச்சுவார்த்தை மூலமான தீர்வு காண்பதற்கான கலந்துரையாடலில் ஈடுபடுவதெனவும் சம்பந்தப்பட்ட தரப்பினர் இணங்கியிருந்தனர்.

சகல மட்டத்திலும் பேச்சு வார்த்தையைத் தொடர வேண்டுமென்ற முக்கியத்துவத்தின் அடிப்படையில் நிர்வாக ஏற்பாட்டு யோசனை வடிவமைப்பு சமர்ப்பிக்கப்பட்டது. இதுவொரு இறுதியான ஆவணமல்ல, சம்பந்தப்பட்ட தரப்பினர் இது தொடர்பாக ஆராயக்கூடிய யோசனையாகும்.

41. இதற்கும் 2005 நடுப்பகுதியில் பொதுக்கட்டமைப்பு வெளியிடப்பட்டதற்குமான ஒற்றுமை அம்சமானது முற்றுமுழுதான தற்செயலாக ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

அதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கும் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் தூதுக் குழு பங்குபெற வேண்டுமென்ற கருத்தை இலங்கை அரசாங்கம் கொண்டிருந்தது. இதனடிப்படையில் மேற்குறிப்பிட்ட கட்டமைப்பை உருவாக்கும் யோசனைகள் தொடர்பான தனியான யோசனைகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டையும் அரசாங்கம் கொண்டிருந்தது. வட, கிழக்கு மாகாணங்களுக்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான இறுதி யோசனை (ஜுலை யோசனை) பின்வரும் அம்சங்களை உள்ளடக்கி இருந்தது.

இடைக்கால நிர்வாக சபையானது சம்பந்தப்பட்ட தரப்பினரின் தீர்மானத்திற்கு இணங்க இத்தகைய எண்ணிக்கையான உறுப்பினர்களை உள்ளடக்கியிருக்கும். உயர் அமைப்பிலிருந்து 3 பிரிவுகளைக் கொண்ட உறுப்பினர்கள் இருப்பார்கள்:

1. அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் (பொதுஜன முன்னணியினால் நியமிக்கப்பட்டவர்கள் உள்ளடக்கப்படுவார்கள்);
2. புலிகளால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்;
3. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்.

சபையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்போது புலிகளின் பெரும்பான்மை உறுதிப்படுத்தப்படும். அதேசமயம் முஸ்லிம், சிங்களச் சமூகங்களின் பிரதிநிதித்துவமும் கனதியானதாக இருக்கும்.






தலைமை தாங்குபவர் யாரென்ற பிரச்சினை நெருக்கடியானதாக இருந்தது. இரு மாற்று யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

முதலாவது மாற்று யோசனையாக, இரு தலைவர்கள் இருப்பார்கள். ஒருவர் விடுதலைப்புலிகள் தரப்பையும் மற்றவர் அரசாங்கத் தரப்பையும் சேர்ந்தவராக இருப்பார். சபையின் உறுப்பினர்கள் இவர்களைத் தெரிவு செய்வர். சபையில் சமர்ப்பிக்கப்படும் யோசனையை ரத்து (வீட்டோ) செய்யும் அதிகாரத்தை இரு தலைவர்களும் கொண்டிருப்பார்கள்.

இரண்டாவது மாற்று யோசனையானது, சபைக்கு ஒரேயொரு தலைவர் இருப்பார். அவர் சபை உறுப்பினர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படுவார். இதில் தலைமைப் பொறுப்பு புலிகளுக்கு வழங்கப்படக்கூடும்.

ஆயினும் கீழ்வரும் ஏற்பாட்டின் மூலம் சமநிலைத்தன்மை அறிமுகப்படுத்தப்பட்டது:

சபையின் ஏதாவதொரு தீர்மானம் முஸ்லிம் அல்லது சிங்களச் சமூகத்தைப் பாதிக்குமானால் அந்தத் தீர்மானத்துக்கு (அ) சபையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரவளித்தால் அத்துடன் முஸ்லிம் அல்லது சிங்களச் சமூகங்களில் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரவளித்தால் மட்டுமே அத்தீர்மானம் செல்லுபடியானதாகும்.

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் பிராந்திய நிர்வாகத்தின் செயல்பாடுகளும் அதிகாரங்களும் தற்காலிக நிர்வாக சபை செயல்படுத்தும் விதத்திலான யோசனை முன்வைக்கப்பட்டது. தற்காலிக நிர்வாகசபையின் அதிகாரங்களும் செயல்பாடுகளும் தொடர்பாகவே இந்த முன்மொழிவு வைக்கப்பட்டது.

ஆனால், பொலிஸ், பாதுகாப்பு, நிலம், வருவாய்த்துறை இதில் உள்ளடக்கப்படாது.

புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், மீள் குடியேற்றம் ஆகியவை இதில் உள்ளடக்கப்படும்.

அத்துடன் சபை மேற்கொள்ளும் தீர்மானங்களை அமல்படுத்த அரசு இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்காக அதிகாரங்களுடன் கூடிய விசேட ஆணையாளர் ஒருவரை நியமிக்கும் முன்மொழிவு வைக்கப்பட்டது.

சபை உறுப்பினர்களில் பெரும்பான்மையானோரின் இணக்கப்பாட்டுடன் இலங்கை அரசாங்கத்தினால் விசேட ஆணையாளர் நியமிக்கப்படவிருந்தார். இவர் சபையின் தீர்மானங்கள் தொடர்பாக வாக்களிக்க முடியாது. ஆனால் சபைக்குப் பதிலளிக்கும் கடப்பாடு உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### நிதிகள்

தன்வசமிருக்கும் நிதியைச் சமமாகப் பங்கிட்டு விநியோகிப்பது குறித்துச் சபை பரீசிலிக்க வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் முன்மொழிவைச் சமர்ப்பித்திருந்தது. இந்த நிதிப் பயன்பாடு அரச முகவர் நிலையங்கள், அரசுசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள், சர்வதேச முகவர் நிலையங்கள், அல்லது தனியார் முகவர் நிலையங்கள் மூலம் மேற்கொள்ள முடியும். சபைக்கான நிதி கிடைப்பனவும் உள்ளடக்கப்படவிருந்தது.

1. உதவிவழங்கும் சமூகத்திடமிருந்து வட, கிழக்கு மீள்நிர்மாண நிதியத்திற்கு (என்ஈஆர்எஃப்) கிடைத்த நிதி என்ஈஆர்எஃப் (நீர்ஃப்) என்று மாற்றப்பட்டது.
2. இலங்கை அரசாங்கத்தில் நீர்ஃபுக்கு (என்ஈஆர்எஃப்) ஒதுக்கப் பட்ட நிதி.
3. நீர்ஃபை(என்ஈஆர்எஃப்)விட வட, கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்திற்காகப் பெற்றுக்கொண்ட இதர வளங்கள்.

### விசேட நிதியம்

விசேட நிதியமொன்றை ஏற்படுத்த முன்மொழியப்பட்டது. இது தகவல், கணக்குப் பார்த்தல், கண்காணித்தல் போன்றவற்றின் வளங்களுக்காக உருவாக்கப்பட்டிருந்தது. நீர்ஃபினூடாக (என்ஈஆர்எஃப்) அல்லாமல் உதவி வழங்கும் அல்லது அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளும் வளங்கள் இந்நிதியத்தில் உள்ளடக்கப்படும். இந்த நடைமுறைக்கான நோக்கமானது வடக்கு, கிழக்கிற்கு இந்த வளங்கள் திறமையான முறையில் பயன்படுத்தப்படுவது குறித்துச் சபையானது பொறுப்பாக விருப்பதற்கும் இதனை அறிந்துகொள்வதற்கும் ஏதுவாக இருப்பதற்கும் இதில் கடன்கள் மற்றும் நீர்ஃபினூடாக வராத நிதி என்பன உள்ளடங்கும்.

### மாவட்டக் குழுக்கள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 8 மாவட்டங்களுக்கும் பின்வரும் செயல்பாடுகளுக்காக ஒவ்வொரு மாவட்டக்குழுவை அமைக்கவும் முன்மொழியப்பட்டது:

1. சபையின் தீர்மானத்தை அமல்படுத்தல்.
2. மாவட்டத்திற்குள் சகல அபிவிருத்தி நடவடிக்கைகளையும் இணைத்துச் செயல்படுத்துதல்.
3. சபையின் பரிசீலனைக்காக யோசனைகளைத் தயாரித்தல்.



யோசனையின் தற்காலிக, இடைக்கால தன்மையைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினரால் இணக்கப்பாடு காணப்பட்ட, மட்டுப்படுத்தப்பட்ட கால எல்லைக்குள் ஏற்பாடுகளைச் செயல் படுத்தல். இந்த ஏற்பாட்டு விடயங்கள் 6 மாதங்களுக்கொருமுறை மீளாய்வு செய்யப்படும்.

மேயில் சமர்ப்பித்த யோசனைகள் தொடர்பாகத் தமது அதிருப்தியை விடுதலைப்புலிகள் தெரிவித்தபோதும் ஜூலையில் முன்வைத்த யோசனைகளை உத்தியோகபூர்வமாக நிராகரிக்கவில்லை.

உயர் அமைப்பின் கட்டமைப்பும் நிதி ஏற்பாடுகளும் தாங்கள் எதிர் பார்க்கும் இடைக்கால நிர்வாகத்திற்குத் தேவையான அதிகாரத்தின் அளவு கட்டுப்படுத்தக்கூடிய தன்மை தொடர்பான தமது நிலைப் பாட்டுக்குப் போதியளவானதாக இல்லையென்பதை விடுதலைப் புலிகள் கண்டுகொண்டனர்.

ஜூலை அறிக்கையானது பேச்சு வார்த்தைகளில் முஸ்லிம் சமூகம் பங்குபெறுவது தொடர்பான பிரச்சினை குறித்ததாக இருந்தது. தற்காலிக நிர்வாகக்கட்டமைப்பை ஏற்படுத்துவது தொடர்பான பேச்சுகளில் முஸ்லிம் தூதுக்குழு கலந்துகொள்வது அவசியமென்பதை யோசனைகள் விசேடமாகச் சுட்டிக்காட்டியிருந்தன. அத்துடன் முஸ்லிம் காங்கிரஸ் மேற்குறிப்பிட்ட கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாகத் தனியான யோசனைகளை சமர்ப்பிப்பதற்கும் இடமளிக்கப்பட வேண்டும் என்பது அதில் குறிப்பிட்டிருந்தது.

### விடுதலைப்புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகள்

வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசாங்கம் முன்வைத்த யோசனைகளுக்குப் பதிலாக 2003 அக்டோபர் மாத இறுதிப் பகுதியில் அரசாங்கத்துக்கு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையைப் புலிகள் சமர்ப்பித்தனர். இது தொடர்பான நடவடிக்கை களுக்கு மட்டுமன்றி வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிர்வாகத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவருவதற்கான சிந்தனையைப் புலிகள் முன்கூட்டியே கொண்டிருந்ததுடன் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பான தமது யோசனைகளை முன்வைத்தனர். இது வடக்கு, கிழக்கு முகாமைத்துவத்தில் சுயாட்சியை நோக்கிய அதிகளவு முன்னேறிச் சென்றது என்பது தெளிவானது.

இதற்கு அரசு உடனடியாகவே பதிலளித்தது. இடைக்கால தன்னாட்சி அதிகாரச் சபையானது பேச்சுவார்த்தையின் இந்தக் கட்டத்திற்கு தேவை யானது எனத் தாங்கள் கருதுவதைக் காட்டிலும் அதிகமானதெனத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரிவித்தது அரசாங்கம். ஆனாலும் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கான அடிப்படையாக இந்த யோசனைகளை உள்ளடக்க முடியும் எனவும் அரசு தெரிவித்தது.

ஆயினும், ஊடகங்களில் கணிசமான அச்சமூட்டும் உணர்வு வெளிப்படுத்தப்படுவது ஆரம்பமாகியது: சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான சக்திகளும் அரசாங்கத்தின் அரசியல் எதிரணியும் தன்னாட்சி அதிகாரச் சபையானது ஈழத்தை உருவாக்குவதற்கான வழியைத் திறந்து விடுமென்ற பீதியைப் பரப்பின. ஊடகங்களின் எதிர்ப்பு போராட்டத்தால் ஏற்கனவே தள்ளாடிக்கொண்டிருந்த ஐதேமுவை பொதுமக்கள் மத்தியிலான விவாதமும் வாக்குவாதமும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய நிலைக்கு ஐதேமுவைக் கொண்டு சென்றன. சமாதான நடவடிக்கைகள் என்று சொல்லப்பட்டவற்றினூடாக அரசாங்கம், புலிகளுக்கு வழங்கியிருந்த பல சலுகைகள் பற்றிய தயாரிக்கப்பட்ட விபரக்கோவை[42] ஒன்றை ஊடகங்கள் வைத்திருந்தன. இவற்றின் மூலம் தேசியப் பாதுகாப்புக்கு உடனடி ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் விசேடமாக, திருகோணமலை கடற்படைத்தளத்துக்கு ஆபத்து தோன்றியிருப்பதாகவும் நகரைச்சுற்றி 13 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

களத்திலிருந்து எழுதும் நிருபர்களின் செய்திகளும் புலிகளின் முகாம்களின் பெயர்களும் தினமும் பத்திரிகைகளை நிரப்பின. குறிப்பாக மணிராசன்குளம்[43] ஒவ்வொன்றினதும் தலைப்புகளாகக் காணப்பட்டன. இறுதியாக ஹெல உறுமயவின்[44] தலைவர் தலைமையில் ஆதரவாளர்களுடன் முகாமைக் கைப்பற்ற மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது. பிரசாரத்தின் பிரகாரம், சுடக்கூடிய தூரத்திற்கு இவர்கள் செல்வதற்குமுன் இராணுவம் இவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக எழுந்த விமர்சனம் அரசாங்கத்தின் பதில் நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கையை

42. ஆயுதங்களைக் கப்பலில் கொண்டு வருகின்றமை, கிளிநொச்சியில் எஃப். எம். வானொலி நிலையத்தின் பயன்பாட்டுக்கான இறக்குமதி, பாவனைக்கான அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டமை, சட்டவிரோத வரி அளவீடு, அதிகாரபூர்வ அங்கீகாரமின்றி பொலிஸ் நிலையங்களை அமைத்தல், நீதிமன்றங்கள், சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தல், கடத்தல்கள் போன்ற குற்றச்சாட்டுகள் யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறல்களாகும்.

43. மணிராசன்குளம் புஸ்வாணமாயிற்று. இது திருகோணமலையிலிருந்து 22 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. அங்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையின் மூலம் சிறிய இயந்திரத்துப் பாக்கிகளுடன் சிறிய தொகையினரான புலி உறுப்பினர்களே உள்ளமை கண்டறியப்பட்டது. நீண்டதூரம் செல்லக்கூடிய ஆட்லறி போன்றவை அவர்களிடம் காணப்படவில்லை. அங்குப் புலிகளின் கல்லறைகள் சிலவும் நீண்டகாலத்துக்குமுன் கைவிடப்பட்ட முஸ்லிம் பள்ளி வாசலும் காணப்பட்டதைப் பின்னர் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் வெளிப்படுத்தின.

44. சிங்களப் பாரம்பரியம் தலைவர்கள் திலக் கருணாரத்ன ஒருமுறை ஐதேக பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர்.



ஏற்படுத்தவில்லை. நாடகத்தின் இறுதி விளைவுக்கான தளத்தை அமைத்துக்கொடுப்பதில் ஊடகம் வெற்றி கண்டது. ஜனாதிபதி தலையிட்டு பாதுகாப்பு, உள்நாட்டுப் பாதுகாப்பு ஆகிய மூன்று முக்கிய அமைச்சுகளையும் தன்னகத்தே நவம்பர் 3இல் எடுத்துக்கொண்டார். பிரதமர் அச்சமயம் நாட்டில் இல்லாத வேளையிலேயே ஜனாதிபதி இதனை மேற்கொண்டார். பிரதமர் வாஷிங்டனில் ஜனாதிபதி புஷ்ஷைச் சந்திக்கச் சென்றிருந்த சமயமே இது இடம்பெற்றது. இரு தலைமைப் பதவிகளையும் கொண்டிருந்தவர்களுக்கிடையிலான உறவுகளில் முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை.

## மனோ–மலிக் பேச்சுவார்த்தைகள்

மனோ–மலிக்[45] பேச்சுவார்த்தைகள் போதியளவுக்கு, புனைந்து தயாரிக்கப்பட்டவை என்பது ஊடகங்களினால் நிரூபிக்கப்பட்டவையாகும். ஏழுச் சுற்றாகவும், வசீகரிக்கக்கூடியதாகவும், நீடித்ததாகவும் இருந்தது. நான்கு பேருக்கிடையில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தை இருவர் அரசுதரப்பினர். (பிரதமரின் செயலாளரான பிரட்மன் வீரக்கூன், ஐதேக தவிசாளர் – *சேர்பர்சன்* – மலிக் சமர விக்கிரம), எதிர்த்தரப்பிலிருந்து ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யு.கே.எஸ் கருணாரத்ன, ஜனாதிபதியின் சிறப்பு ஆலோசகர் மனோதித்தவல ஆகியோருக்கிடையில் 2003 நவம்பர், டிசம்பர் மாதத்திலும் 2004 ஜனவரியிலும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இப்பேச்சுவார்த்தை இரு அடிப்படை அம்சங்களைக் கொண்டவை. முதலாவதாக, அனைவரும் ஏற்கக்கூடிய செயல்பாட்டுத்திட்டத்தை விபரத்துடன் தயாரிப்பது; இது சுலபமானதாகும். இது புலிகளுடன் மீண்டும் பேச்சை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல், லஞ்ச ஒழிப்பு மறுசீரமைப்பு குறிப்பாகத் தேர்தல் ஆணைக்குழுவை அமைப்பதற்கு முடியாமல் இருந்த முட்டுக்கட்டையை அகற்றுதல், வீதிகள், மின் உலைகள், துறைமுக வசதிகள் போன்ற உள்சார் கட்டமைப்புப் பணிகள் போன்ற நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இரண்டாம் விடயம் மிகவும் சிக்கல் வாய்ந்ததாகும். இது தொடர்பாக உடன்பாடொன்றை எட்ட முடியவில்லை. இது பாதுகாப்பு அமைப்பின் கட்டுப்பாடு சம்பந்தப்பட்ட விவகாரமாகும். ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பைத் தொடர்ந்து கையாளுகையில், பாதுகாப்பு விடயங்கள் மற்றும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்

45. ஊடகங்கள் தமது வழமையான அறியும் சக்தியின் மூலம் செயல்பாட்டை ஆரம்பித்தன. இது மிகவும் சிறிய, கச்சிதமான, வார்த்தைப் பிரயோகத்துடன் ஆரம்பமானதுடன் சம்பாஷணைக்கும் பயன்படுத்தப்பட்டது. கூட்டங்களில் அடையாளப்படுத்துவதற்காக சொற்பதத்தைப் பயன்படுத்தியதை நானே பார்த்திருக்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போன்றவற்றை மேற்கொள்ளும் அதிகாரத்தைப் பிரதமர் ஏற்றுக்கொள்ள இயலுமா என்பதே. அத்துடன் நெருக்கடியான, பிரச்சினையாகும் பேச்சுகளிலும் அவர் ஈடுபட்டார். (இந்திய அரசாங்கத்திடமிருந்தும் சில யோசனைகள் கிடைத்தன.) முடிந்தளவு முயன்றபோதும் இரு பிரதான பாத்திரங்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இணக்கப்பாடு சிறிதளவும் கிட்டவில்லை. காலம் ஓடிக்கொண்டிருந்தது. நத்தார், புத்தாண்டு விடுமுறைகளுக்குப்பின் பேச்சுகள் மீண்டும் ஆரம்பமாயின. அதிகளவுக்குத் திருப்தி தரும் ஏற்பாடாக இல்லாவிடினும் ஜனாதிபதியும் பிரதமரும் பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் செயல்படக்கூடிய ஏற்பாடொன்றை 4 உறுப்பினர் அடங்கிய குழுவினர் ஒருவாறு சமாளித்து மேற்கொண்டனர். இது 2004 ஜனவரியில் இறுதிச் சந்திப்பில் இடம்பெற்றது. சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் முடிவடைந்தபின் பிப்ரவரி 9இல் இறுதிச் சந்திப்பு நடக்கும் என்று ஜனாதிபதி தரப்பினர் அரசாங்கத் தரப்பினருக்கு உறுதியளித்திருந்தனர். பிப்ரவரி 4இல் ஜனாதிபதியின் சுதந்திர தினச் செய்தியும் உறுதிமொழி அளிப்பதாகத் தென்பட்டது. ஆயினும் தெளிவான காரணமின்றி 2004 பிப்ரவரி 7ஆம் நாள் இரவு பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 2004 ஏப்ரல் 2இல் தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட்டது. மனோ–மலிக் பேச்சுகள் காற்றில் பறந்துவிட்டன. மீண்டும் கிட்டத்தட்ட வருடாந்த பாராளுமன்றத் தேர்தல் மோதலுக்கான கோடுகள் வரையப்பட்டன.

## 2001-2004 சமாதான நடவடிக்கைகளிலிருந்து கற்றுக்கொண்ட படிப்பினைகள்

2002-2004 யுத்தநிறுத்த அனுபவம் வெளிப்படுத்திய படிப்பினைகள் மற்றும் ஏனையவை வருமாறு:

இராணுவச் சூழ்நிலைகள் பற்றிய உண்மை நிலைமையை அரசாங்கம் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தியமை யுத்தநிறுத்தத்தை ஆரம்பிப்பதற்கான உத்வேகத்தை ஏற்படுத்தியது.

யுத்தத்தின் மூலம் ஆட்சிப் புல நிலப்பரப்பைக் குறிப்பாக வடக்கே வெற்றிகொள்ளும் சாத்தியம் அரசாங்கத்திற்கு ஏற்படவில்லை என்ற வெளிப்பாடானது அரசாங்கத்திற்குத் தெளிவானமை முக்கியமான விடயங்களில் ஒன்றாகும். யுத்தம் சிறப்பாக இடம்பெறவில்லையென்பதைப் பொதுமக்கள் மத்தியில் ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்கங்கள் தயக்கம் காட்டியதும் இங்குக் குறிப்பிட வேண்டியதொன்றாகும். வெற்றிகளைப் பெரிதுபடுத்திக்காட்டிப் பாரிய இழப்புகளை (ஆட்சிகள், ஆயுதங்கள், ஆட்புலம்) வெளிப்படுத்தாமலும் இருக்கும் போக்கு காணப்பட்டது. இது, எதிரியை முழுமையாக அழிப்பதற்கு ஏன் வெற்றி



யானது உந்தப்படவில்லை என்ற கேள்வி பொதுமக்களிடம் ஏற்படுவது எதிர்மறை விளைவை ஏற்படுத்துகின்றது. கொல்லப்பட்ட படையினரின் உண்மையான தொகை, நடவடிக்கைகளின்போது காணாமல்போனோர், காயமடைந்தோர், மோதலில் சிக்கிப் பலியான பொதுமக்கள், அங்கவீனரானோர், பகைவரிடம் இழந்த ஆயுதங்கள், விமானங்கள், கப்பல்கள், செயலிழந்தவை, அழிக்கப்பட்ட தனியார், அரசாங்கச் சொத்துகள், இடம்பெயர்ந்தோர் தொகை, புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள், வெடிபொருட்கள் போன்றவை ஒருபோதுமே முக்கியத்துவம் கொடுத்து வெளிப்படுத்தப்படுவதில்லை. இது எதிரி பயன்படுத்திக்கொள்வதற்கு இடமளிப்பதாக அமைந்துவிடும். ஊடகங்கள், பத்திரிகை, தொலைக்காட்சி, திரைப்படம்[46] என்பனவும் புள்ளிவிவரங்கள் தொடர்பாக முக்கியப்படுத்தாத போக்கையே பொதுவாகக் கடைப்பிடித்தன.

யுத்தத்தினால் 1983இன் பின் இறந்தோர் தொகை 60 ஆயிரம்[47] என திரும்பத்திரும்ப தற்போதுவரை ஒரே தொகை விவரமே தவறான முறையில் தெரிவிக்கப்படுகின்றது. இவை எல்லாம் பொதுமக்கள் மனத்தில் குறுங்காலத்தில் மேற்கொள்ளப்படும் கடும் யுத்தம் (அதிக சிறப்பு இல்லாமல்) நன்மையான தேர்வு ஒன்றும் வருடங்களாக இடம்பெற்றுவரும் சமாதானத்தை உருவாக்கும் முயற்சிகள் தேவையற்ற மற்றும் கோரிக்கைகளுக்கு இணங்குவதைவிட இது பிரயோசனமான தேர்வு என்னும் சிந்தனைகள் உருவாகும் என்பதை ஊகிக்க முடியும்.

அட்டவணை 1 இறப்பு நிலைமை குறித்தும் தற்போதுள்ள நிலவரம் குறித்தும் தகவல்களை வழங்க முயல்கிறது:

தனியார் ஊடகங்களுக்கு விசேடமாகச் சிங்கள மொழி ஊடகங்களுக்குச் சமாதானம் தொடர்பான சாதக பாதகத் தன்மையைச் சரியான முறையில் தெரிவிக்கவும் அவற்றின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக வைத்திருத்தல், மாற்றடைந்திருக்கும் சிவில் சமூகத்தை அரசாங்கத்தின் பின்னால் நீண்டகாலத்துக்குத் தக்கவைத்திருத்தல்.

சர்வதேசப் பாதுகாப்பு வலைக்குள் உள்ளடங்கும் நாடுகளின் – இந்தியா உட்பட – ஆதரவைத் திரட்டிக்கொள்ளுதல். அரசாங்கத்தின் இராஜதந்திர, அரசசேவை அரசியல் துறையில் உத்தியோகபூர்வப் பதவி நிலையில் உள்ளோருக்குச் சமாதான நடவடிக்கைகளின் பரந்துபட்ட உபாயம்,

46. நகரும் யுத்தத் திரைப்படம் (அல்லது யுத்தத்துக்கு எதிரான) புரஹந்து களுவரவில் மூடப்பட்ட சவப்பெட்டிக்குள் தனது இறந்த படைவீரனான மகனின் சடலம் இருப்பதைக் கண்டிருக்கிறார். அச்சடலத்தில் பழைய சப்பாத்துகள் மாத்திரமே இருந்தன. இப்படம் பலவருடங்களாக அரசாங்கத்தால் தணிக்கைக்குட்படுத்தப்பட்டது. யுத்தநிறுத்தத்தின் பின்பே வெளியிடப்பட்டது.

47. 1983இன் பின்னர் தமிழ்க் கிளர்ச்சியில் ஏற்பட்ட மரணங்களின் தொகை குறித்தது. 70 ஆயிரம் என்பது அதிகளவுக்குச் சரியான கணிப்பீடாகும். ஆயுதப்படை, புலிகள், பொதுமக்கள் ஆகியோரின் இறப்புகள் தொடர்பான புள்ளிவிவரத்தை அட்டவணை 1இல் பார்க்கவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்கை தொடர்பாக அறிவிக்கப்படுவது உறுதிசெய்யப்படவேண்டும். பொது இணக்கப்பாடு எட்டப்பட்ட இலக்கை நோக்கியதாகப் பணியும் ஈடுபாடும் இருக்க வேண்டும் (சொந்த இலக்கு நோக்கியே அதிகளவுக் நகர்வுகள் இடம்பெறுவது வருந்தத்தக்கதாகும்). இறுதி அரசியல் தீர்வை நோக்கிய எதிர்காலத்திற்கான பாதையின் வரைபடத்தை உருவமைத்தல், இது 2002 நவம்பர் ஒஸ்லோ பிரகடனம், டிசம்பர் 2002 ஒஸ்லோ அறிக்கை[48], ஜுன் 2003 டோக்கியோ பிரகடனம் என மூன்று அடிப்படை அம்சங்களைக் கொண்டதாகும். அது வருமாறு:

1. இருதரப்பினரதும் முழுமையான இணக்கப்பாட்டுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கையை வலுப்படுத்துதல், தற்போதைய கண்காணிப்பு நடவடிக்கைகளுக்குப் பொலிஸ் அதிகாரம் இல்லை. அத்துடன் அமைதிக்காக்கும் அதிகாரங்களுக்குரிய சக்தியும் வழங்கப்படவில்லை. கிழக்கில் பல பிரிவுகள் செயல்படுகின்றன. அங்குள்ள தற்போதைய சூழ்நிலையில் இந்த மாதிரி இடம்பெறுமென ஒருவருமே பரிசீலிக்கவில்லை. இந்தப் புதிய நிலவரத்தைக் கையாள்வதற்குக் கண்காணிப்புக் குழுவுக்கு புதிய வழிமுறைச் செயல்பாட்டைக் கண்டறிய வேண்டும். அதன் மூலம் அதைத் திறமையுள்ளதாக்க முடியும்.
2. சமாதான அனுகூலங்கள் வடக்கு-கிழக்கிலுள்ள சகல பிரஜைகளுக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். இதனை அவசரமாகச் செய்யாவிடின் இறுதிச் சமாதானத்தை வென்றெடுக்க முடியாது. திறமையான முறைமைகள் விருத்தி செய்யப்பட வேண்டும். இந்த மனிதாபிமான அபிவிருத்தி உதவியானது, போர் மற்றும் சுனாமி பாதிப்பென இரண்டு வகையான துன்பங்களுக்கு பாதிக்கப்பட்டோர் வாழும் பகுதிகளில் இந்த அபிவிருத்தியை வழங்க முடியும்.
3. வன்செயல்களைக் கைவிடுதல், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், (பால் சமத்துவம், சமத்துவம் உள்ளடங்கலாக) ஜனநாயகம், சட்ட விதி, சிறுபான்மையினரின் உரிமைகளை அங்கீகரித்தல், சகல சமூகங்களினதும் தேவைகளுக்குத் தீர்வு காணுதல்

48. 2002 டிசம்பரில் ஒஸ்லோவில் மிகவும் குறிப்பிடத்தக்க விடயமொன்று மேற்கொள்ளப்பட்டது. விடுதலைப்புலிகள் முதல்தடவையாகப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வுகாண்பதற்கான மாற்றுத்திட்டமொன்றை ஏற்றுக்கொண்டனர். அந்த நிலைப்பாடானது 2002 டிசம்பர் 5 இல் வெளியிடப்பட்ட ஒஸ்லோ அறிக்கையிலும் பிரதிபலித்தது.

புலிகளின் தலைமைத்துவத்தின் யோசனைக்குப் பதிலாக, தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளின் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வொன்றைக் காணச் சம்பந்தப்பட்ட தரப்பினர் இணங்கியுள்ளனர். ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையை அடிப்படையாகக் கொண்டதாக இது இருக்கும். தீர்வானது சகல சமூகங்களுக்கும் ஏற்புடையதாக இருக்குமென்பதைச் சம்பந்தப்பட்ட தரப்பினர் ஏற்றுக்கொண்டுள்ளனர்.



**அட்டவணை 1: விடுதலைப்புலிகளுடனான ஆயுதப்போரில் ஏற்பட்ட மொத்த இழப்புகள்: ஏப்ரல் 1983 – பிப்ரவரி 2002**

| அரசாங்கப்படை | | விடுதலைப்புலிகள் | | பொதுமக்கள் (இடையில் சிக்கிப் பலியானோர்) |
|---|---|---|---|---|
| இராணுவம் | 17, 686 | உறுப்பினர்கள் | 17,763 | படை+புலிகள்+கலவரம் 26382 |
| கடற்படை | 786 | எதிரான இந்திய சமாதானப்படை | 592 | |
| விமானப்படை | 432 | | | |
| பொலிஸ் | 2387 | | | |
| துணைப்படை | 151 | | | |
| மொத்தம் | 21, 464 | | 20, 335 | 26382 |

ஆதாரம்: இராணுவம், பொலிஸ், விடுதலைப்புலிகள்

தற்போதைய யுத்தநிறுத்த காலகட்டத்தில் ஏற்பட்ட பாதுகாப்புப் படையினர், புலிகள், பொதுமக்கள் இழப்புகள்:

| 2002 | 2003 | 2004 | 2005 |
|---|---|---|---|
| 15 | 57 (25 சீன மீனவர் உட்பட) | 28 | 160 |

ஆதாரம்: போர்நிறுத்த கண்காணிப்புக் குழு

**அட்டவணை 2: டிசம்பர் 2001 பொதுத்தேர்தல் முடிவுகள்**

| கட்சி | வாக்கு வீதம் | இடங்கள் |
|---|---|---|
| ஐதேமு | 45.5 | 109 |
| பொஜமு (பிஏ) | 37.2 | 77 |
| ஜேவிபி | 9.1 | 16 |
| தமிழ்க் கூட்டமைப்பு | 4.7 | 17 |
| முஸ்லிம் காங்கிரஸ் | 1.2 | 5 |

ஆதாரம்: பாராளுமன்றம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பனவற்றை அடிப்படையாகக்கொண்ட இறுதிச் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்.

4. அரசியல் இணக்கப்பாடொன்றை எட்டுகின்ற பொருத்தமான தருணத்தில் இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கட்டம் கட்டமாக, சமத்துவமாக, மோதல் தணிவு, யுத்தமற்ற சூழ்நிலை, இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் ஆகிய நடவடிக்கைகள் தொடர்பான உடன்படிக்கையொன்று எட்டப் படுதல் வேண்டும்.

இதில் வட, கிழக்கிலுள்ள உடல், உளரீதியில் ஊனமுற்ற பொதுமக்கள், முன்னாள் போராளிகள் ஆகியோரின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் உள்ளடக்கப்படும்.



# 2

## சமாதான நடைமுறையும் பாதுகாப்புப் பிரச்சினைகளும்

ஆஸ்டின் பெர்னாண்டோ*

**சுருக்கம்**

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவது பற்றிய உரையாடலில் குறிப்பாக, முரண்பாட்டின்போது உருவாகும் பேரழிவின் காரணமாக, பாதுகாப்புப் பிரச்சினைகளை குறைத்து மதிப்பிட முடியாது. 2002 பிப்ரவரியில் இலங்கை அரசாங்கத்திற்கும், எல்டிடிஈக்குமிடையில் கையெழுத்திடப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையால் இத்தகைய பாரிய அழிவைத் தடுக்க முடிந்துள்ளது. பகைமைகளைத் தடுத்தல், வழமைக்குத் திரும்புதல் மற்றும் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறல் ஆகிய மூன்று துறைகள் யுத்தநிறுத்த உடன் படிக்கையின் பிரதான உந்துதலைப் பெற்றுள்ளன. இக்கரிசனைகள் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அவசியமானவை. இருந்தும், இது யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது.

2002க்கு முன்னர், பிராந்தியத்தின் மீது சுமத்தப்பட்ட சில பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதையும் பாதுகாப்புக் கரிசனைகள் உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டதையும் தொடர்ந்து யுத்தநிறுத்த உடன்

* இரகசியத் தன்மையின் காரணமாக, பாதுகாப்பு அமைப்பின் பெருமளவு நடவடிக்கைகள் (சமாதான நடைமுறை மற்றும் பாதுகாப்பு தொடர்பில்) பதிவுசெய்யப்படவில்லை என்பதுடன், பதிவுசெய்யப்பட்ட சாதனங்களைக்கூட, அப்போதைய இலங்கையின் ஜனாதிபதியால் பாதுகாப்பு அமைச்சு பொறுப்பேற்கப்பட்ட பின்னர், 2003 நவம்பரில் திடீரெனப் பாதுகாப்புச் செயலாளராகத் தனது ஒப்படைப்பினை விட்டு விலகிச்செல்ல வேண்டியிருந்ததால் கட்டுரையாசிரியரினால் அணுகத்தக்கதாக இருக்கவில்லை. ஆகவே, இக்கட்டுரையின் விவரணப்பாங்கிலான முறை புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அதனுள் ஏற்றப்பட்டுள்ள பெருமளவு தனிப்பட்ட அனுபவங்களை விளக்கும் அச்சம்பந்தத்தினுள் தாங்கிக் கொள்ளப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படிக்கையில் இருந்த ஏற்பாடுகள் எவ்வாறு அமல்படுத்தப்பட்டன என்பதையும் இக்கட்டுரை விளக்குகின்றது. சிலவேளைகளில் இலங்கை அரசாங்கமும் எல்டிடிஈயும் வெற்றிகளை ஈட்டின, கஷ்டங்களுக்கு முகங்கொடுத்தன, அத்துடன், கண்காணிப்பு மத்தியஸ்தர்கள் மூலம் சில அமல்படுத்தல் ஒழுங்குகள்மீது ஒருமைப்பாட்டை அடைந்தன. சில தீர்க்கப்படாத குறைபாடுகள் உள்ள பகுதிகள் பேச்சுவார்த்தை நடத்துவோரிடம் விடப்பட்டன. நடைமுறையில் அபாயத்தை எடுக்க வேண்டியிருந்தமையும் வெளிப்படையாக இருந்தது. ஆனால், சமாதானத்தை வெற்றிகரமாக ஏற்படுத்துவதற்கு, புத்திசாலித்தனமான தீர்மானமெடுத்தலும் புதுமையைப் புகுத்தலும் அத்தியாவசியமான மூல அம்சங்களாகக் கருதப்பட்டன.

இருதரப்புகளினாலும் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் உள்ள சில ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்படவில்லை என்பதே உண்மை. அப்படியிருந்தாலும், முழு அளவில், நம்பிக்கையைக் கட்டியெழுப்பு வதற்கான உகந்த சூழ்நிலையொன்றில் யுத்தநிறுத்த உடன்படிக்கை அமல்படுத்தப்பட்டது. இதுவும் எல்டிடிஈ கோரிக்கைகளுக்கு விட்டுக் கொடுக்கப்பட்டதாகவே விமர்சகர்களால் பொருள் விளக்கமளிக்கப் பட்டது. நான்கு வருடங்களுக்கு யுத்தநிறுத்த உடன்படிக்கை உறுதியாக எல்லாப் பேரிடியையும் தாங்கிக்கொண்டிருந்தது என்பதும் சமூக, பொருளாதார முன்னேற்றத்தைப் பிராந்தியம் திரும்பவும் ஏற்படுத்திக் கொண்டது என்பதும் உண்மையே. அதாவது யுத்தநிறுத்த உடன் படிக்கைத் தொடர்பான பாதுகாப்பின் அமலாக்கத்தின் வெற்றி எளிதில் நிலைநாட்டுவதாகவே முடிவடைந்துள்ளது எனலாம்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பாதுகாப்புத் தொடர்பான ஒவ்வொரு உறுப்புரையையும் இக்கட்டுரை கையாள்வதுடன், இது உடன்படிக்கை யின் பலங்களையும் பலவீனங்களையும் வெளிப்படுத்துகின்றது. பேச்சு வார்த்தையில் எடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பிலான தீர்மானங்களையும் இக்கட்டுரை விவாதிக்கிறது. மேலும், பேச்சு வார்த்தைகளின்போது வன்முறையிலான சம்பவங்களின் காரணமாக இலங்கை அரசாங்கத்தாலும் எல்டிடிஈயினாலும் முகங்கொடுக்கப் பட்ட, விளக்கமளிக்க முடியாத சூழ்நிலைகள் கோடிட்டுக் காட்டப் படுகின்றன. ஏனெனில் இவை பாதுகாப்புக்கு அதாவது சமாதானத்தை ஏற்படுத்துவதற்குச் சம்பந்தப்பட்டவையாக இருக்கலாம். மேலதிகமாக, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பயமுறுத்தலைக் கோடிட்டுக் காட்டுவதற்கு, சூழ்ச்சித்திறத்துடன் கையாள்கிற அரசியல் தாக்கத்தை யும் இராணுவம், ஊடகம் மற்றும் சர்வதேசச் செயல்பாட்டாளர்களால் அவ்வப்போது நிகழ்கின்ற எதிர்வினைகளையும் இக்கட்டுரை சுருக்க மாக ஆய்வு செய்கிறது.



இறுதியாக, கண்காணித்தல் தொடர்பான அனுபவங்களைக் கட்டுரை படம்பிடித்துக் காட்டுவதுடன், படிப்பினையையும் சுருக்கமாக விவரிக்கின்றது. இது முந்தைய அனுபவங்களிலிருந்து எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை நடத்துபவர்கள் கற்றுக்கொள்ள உதவும். அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் பெயரளவுக்கு சொல்லாட்சித்திறமிக்க அழைப்புகள் விடுத்துள்ளபோதிலும், முந்தைய சமாதானச் செயல்பாட்டாளர் களின் நிறுவனரீதியிலான நினைவுகளைப் பொதுவாகப் புரிந்துகொள் வதற்கு தயங்கியதனால், இலங்கையைப் பொறுத்த அளவில் இது அவசியமானதாகின்றது.

## அறிமுகம்

வேறுபட்ட ஆட்சிகளின்போது, இலங்கை அரசாங்கத்தினால் யுத்தம் புரிதலுடனும் சமாதான நடைமுறைகளுக்கான முயற்சிகளுடனும் இலங்கையின் மோதல், அதன் ஊசலாட்டத்தைக் கொண்டிருந்தது. இராணுவ அனுபவத்தைக் கொண்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமை, மோதலில் தொடர்ந்திருந்த அதேவேளை, சமாதானம் மீதான அதன் கருத்துக்கோணத்தைத் தொடர்ச்சியாக எதிரொலித்தது. இத்தகைய இராணுவ அனுபவத்தை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்துவோர் கொண்டிருக்கவில்லை. ஆகவே, சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஒப்பீட்டுரீதியில் பாதுகாப்பின் உள் அர்த்தங்கள் தொடர்பாகத் தவிர்க்க முடியாத விதத்தில் குறைந்தளவு எச்சரிக்கையுடனே இருந்தனர். எனினும், இலங்கையின் சமாதான நடைமுறையில் பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும் தட்டிக்கழிக்க முடியாதுள்ளது.

2001 டிசம்பரிலிருந்து 2003 நவம்பர் வரையிலான ஐதேமு அரசாங்கத்தின் ஆட்சியின்போது சமாதானத்தை ஏற்படுத்துவதில் இருந்த பாதுகாப்புப் பிரச்சினைகளை கொண்டு இக்கட்டுரை பரிசீலிக்கிறது. இலங்கையின் சமாதான உடன்படிக்கையின் அமலாக்கத்தையும், அனுபவிக்கப்பட்ட கஷ்டங்களையும், இத்தகைய பிரச்சினைகள் எவ்வாறு கையாளப் பட்டன என்பதையும், நடைமுறைசார்ந்த தொழிலாற்றும் ஒழுங்கிலான முன்னெடுப்புகளையும், இலங்கை அரசாங்கத்திடமிருந்தும் எல்டிடிஈ யிடமிருந்தும் கிடைத்த எதிர்வினைகள் மற்றும் கற்றுக்கொண்டப் படிப்பினைகளைக் கொண்டு விளக்கமளிப்பதே இக்கட்டுரையின் முயற்சியாகும்.

## ஐதேமுவின் சமாதான மூலோபாயம்

வெளியிடப்படாத கட்டுரையொன்றில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐதேமுவின் மூலோபாயத்தை[1] கலாநிதி சமன் கெலேகம வெளிப்படுத்தியுள்ளார். பொருளாதார ஊக்குவிப்புகள், நடைமுறையைச் சர்வதேசமயப்படுத்துதல், இறுதியான தீர்வொன்றுக்குப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எல்டிடிஈயை நம்பவைத்தல் ஆகியவற்றின் மூலம் எல்டிடிஈயை நெருக்கடியில் சிக்கவைப்பதற்கு மூன்றாம் தரப்புத் தலையீடுகளுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு முந்தையதும் பிந்தையதுமான நடவடிக்கைகளை இது உள்ளடக்குகிறது. மேலும் பாதுகாப்புக்கு எதிராக சமாதானம் தொடர்பான அனுபவங்களினுள் பொருந்துவதாகவும் அமைகின்றது. இந்த மூலோபாயத்தில் பாதுகாப்பு அம்சங்களும் ஒன்றிணைக்கப்பட்டன. இந்த மூலோபாயத்தில் அக்கறை கொண்ட யாராவது மேற்கோள் காட்டப்படலாம் என்பதனால் மீட்டுரைக்கப்படுவதை இக்கட்டுரை தவிர்க்கின்றது.

## யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு முந்தைய காலம்

2001 டிசம்பரில் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் நீண்டகால மோதலையும் அதன் தீய தாக்கங்களையும் தனதாக்கிக்கொண்டது. வடக்கிலும் கிழக்கிலும் அதிகரித்திருந்த வறுமைநிலைகளுடன் பெரும் ஆபத்திலான பௌதிக மற்றும் பொருளாதார அழிவானது, விடயங்களை மோசமாக்கியதுடன், பிராந்தியத்திலிருந்து எதிர்மறையான மொத்த உள்ளூர் உற்பத்திப் பங்களிப்பையும் உருவாக்கியிருக்கிறது.

இராணுவ நடவடிக்கையால் மட்டும் மோதலை முடிவுக்குக் கொண்டுவர முடியாது என்பதை ஏற்றுக்கொண்டு, அரசியல் இணக்கமொன்றுக்கு எல்டிடிஈயுடன் அது பேச்சுவார்த்தை நடத்தும் என ஐதேமுவின் தேர்தல் அறிக்கை அறிவித்திருந்தது. இது இனத்துவப் பாகுபாட்டுடன் விமர்சனத்தைக் கொண்டு வந்ததுடன், எல்டிடிஈயுடன் தீயவிளைவிலான உடன்படிக்கையொன்றைக் கொண்டிருப்பதாக ஐதேமு மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

புதிய அரசாங்கம் நிறுவப்பட்ட பின்னர் உடனடியாகவே 'பகைமைகளை நிறுத்திக்கொள்வதாக' எல்டிடிஈ தன்னிச்சையாக அறிவித்தது. இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப்படைகள் அழிக்கப்பட்டிருக்கலாம் என்றும், தமது பெருந்தன்மையே 'பகைமைகளை நிறுத்திக்கொள்வதற்கு' தூண்டுதலாக விளங்கியது என்றும் எல்டிடிஈ பெருமைப்பட்டது. எனினும், ஆயுதப்படைகளால் தக்கவைக்கப்பட்டிருந்த பகுதிகளைத் தம்வசமாக்கியதனால், இராணுவ அழுத்தத்தின் கீழ்

1. இலங்கை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த செயலமர்வில் 'பொருளாதாரப் பிரதிபலன்கள் ஊடாக மோதலொன்றின் உருமாற்றம்' என்னும் தலைப்பில் வாசிக்கப்பட்ட கட்டுரை: கலாநிதி சமன் கெலேகம, மே 2005 (அடிப்படை ஆய்வுகள் நிறுவனம், கொழும்பு, பக். 23).



எல்டிடிஈ வலுவிழந்துபோனதாக ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுள்ளது. கருத்துப் பரிமாறல்களின்போது, ஆயுதப்படைகளின் தளபதிகளும் ஒத்தவகையில் யுத்தம் தொடர்ந்திருந்தால் இராணுவ வெற்றி கிடைத்திருக்கும் என நம்பிக்கைகொண்டிருந்தனர். இந்த உறுதிபாடு கூட எல்டிடிஈக்கு எதிரான அவர்களது இறுதியான சமர்களின்போது, கடல்மூலமாக இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப்படைகளை அப்புறப்படுத்துவதற்கு, இந்தியாவின் பின்னணியிலும் சம்பந்தத்திலும் நம்பும்படியாக இல்லை.

எல்டிடிஈயின் பகைமைகளை நிறுத்திக்கொள்ளுதலுக்கு எதிர்வினையாக இலங்கை அரசாங்கம் யுத்தநிறுத்தத்தை அறிவித்தது. இது பகைமைகளை நிறுத்திக்கொள்வதற்கு ஒரு முன்னேற்றமாக விளங்கியது. பகைமைகளை நிறுத்திக்கொள்ளுதல் ஒரு குறுகிய காலத்திற்கு (உதாரணம்: கிறிஸ்துமஸ் வெசாக் அல்லது புத்தாண்டுக்கு) விளங்கும் அதேவேளை யுத்தநிறுத்தமொன்று நீண்டகாலத்திற்கும் இருக்கலாம். இது அதிக நிலைத்திருக்கத்தக்கதும் சிறந்த நோக்கத்திலானதுமான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு முன்னேற்றகரமான வழியாகும். இது சிவில், அரசியல், சமய மற்றும் சர்வதேச சமுதாயங்களினால் இருதரப்புகளையும் நோக்கிப் பெரும் பாராட்டுதல்களைக் கொண்டு வந்தது. எனினும், இந்த நகர்வைத் தீர்மானமானது என உணர்ந்த இராணுவத் தலைமையானது பகைமைகளை நிறுத்திக்கொள்வது தொடர்பாக எல்டிடிஈயையும் அதன் ஏமாற்றுகின்ற தலைவரின் நம்பகத்தன்மைச் சந்தேகித்தது.

வேறு பொருளாதார, அரசியல் மற்றும் மனிதாபிமான மறைபொருள்களையும்கூட மோதல் கொண்டிருந்தது. இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் மனிதாபிமானத் தடைகள் வடக்கு, கிழக்கில் மக்களை அடைவதில் இலங்கை அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தியது. தடைசெய்வதன் மூலம் அரசியல் தடை பிரயோகிக்கப்பட்டது. இந்த நேரத்தில், இக்கட்டுப்பாடுகளை உருவாக்கிய ஐதேக அரசாங்கம் மனிதாபிமான உணர்வுடன் அவர்களை அணுகியது.

பாதுகாப்புத் தொடர்பாக, வேறுபட்ட அணுகுமுறைகள் எடுக்கப்பட்டன. சமாதானத்தை ஏற்படுத்துவதற்குச் சட்ட/சிவில் உள்நோக்குகளை ஏற்றுக்கொள்வதற்கான முதலாவது நடவடிக்கையாகப் பாதுகாப்பு அமைச்சராக முன்னாள் சட்ட அதிபரின் நியமனம் விளங்கியது. யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரதமர், பாதுகாப்பு நடவடிக்கைத் தொடர்பாகத் தொலைவில் இருக்கலாம்; ஆதலினால் மேல் விசாரணையை நடத்துகின்ற அதிகாரத்தைக் கொண்டவராக விளங்குவார் என்பது ஒரு மூலோபாயமான நகர்வாக விளங்குகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்நிலை ஆயுதப்படைகளின் அல்லது பொலிஸாரின் நடவடிக்கைகளிலிருந்து எழுந்த ஆயுதப்படை முகாம்களுக்கு அருகில் கால்நடைகள் மேய்தல், வீதித்தடைகள் போன்ற சிறிய தகராறுகளை இணக்குவதற்குக்கூட வடக்கு, கிழக்கின் தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகளுடன் பிரதமரால் நடத்தப்பட்ட எண்ணிக்கையில் அடங்காத கூட்டங்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

எல்டிடிஈ மீதான தடையை நீக்குதல், அவர்களுக்கு அரசியல் இடைவெளியையும் கௌரவத்தையும் வழங்குதல், பாதுகாப்புத் தொடர்பான பெருமளவு நடவடிக்கைகளைத் தளர்த்துதல் (உதாரணம்: வீதித் தடைகள், வீடுகளில் தேடுதல் நடத்துதல், உடல்ரீதியான தேடுதல்கள், கைதுகள் போன்ற) பெருமளவு பொருளாதார/மனிதாபிமானத் தடைகளை நீக்குதல் ஆகியன இருதரப்புகளின் நம்பிக்கையைக் கட்டி எழுப்பின.[2]

பின்நோக்கில், சில குறைபாடுகளும் இருந்ததாக அவதானிக்கப்பட்டுள்ளது. யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தயாரிப்பதில் இராணுவத் தளபதிகளுடன் கலந்தாலோசனை நடத்தப்படவில்லை. ஐயத்திற்கிடமின்றி, வரைவையிட்டுக் கருத்துப் பரிமாறுவதற்கு அவர்களுக்கு முன்னேற்பாடற்ற வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆயுதப்படைகளின் சில மூத்த அதிகாரிகளுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கை சம்பந்தமாக கருத்துப் பரிமாறுவதற்கு வாய்ப்பொன்றைத் தாம் பெறவில்லை எனத் தெரிவித்த தளபதிகளால் இது போதுமானதாகக் கருதப்படவில்லை. 'முன்கூட்டியே தீவிர கருத்துகளைத் தவிர்க்கும் போக்குடைய' தளபதிகளுக்கு இது நேரத்தை வழங்கவில்லை என்பதுடன், அதிகாரத்தைக் கொண்டவர்களால் 'சந்தேகப்படக்கூடியதாக' அவர்கள் விளங்குகிறார்கள் என்பதை வெளிப்படையாகவே உருவாக்கியிருக்கும். இது பின்னர் யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமல்படுத்தும்போது மறைமுகமாக எதிர்மறையான விளைவுகளையும் தூண்டியிருக்கும்.

முன்கூட்டியே யுத்தநிறுத்த உடன்படிக்கையின் உள்ளடக்கங்கள் வெளிப்படுத்தப்பட்டால், ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையிலான அதிகார அரசியலின் காரணமாக முதலாம் பாய்ச்சலை நடைமுறை எடுத்திருக்கமாட்டாது என்பதே இதற்கான எதிர்வாதமாக இருந்திருக்கக்கூடும். அரசாங்கத்தின் மீதான இராணுவ விசுவாசப் பிரச்சினைகள் அவற்றின் உச்சத்தை அடைந்தபோது, இச்சந்தேகம் சரியெனப் பின்னர் நிரூபிக்கப்பட்டது. மேலும், எல்டிடிஈக்கு அல்லது சர்வதேசச் சமுதாயத்திற்குத் 'தீவிரக் கருத்துகளைத் தவிர்க்கும் போக்குடைய, ஆனால், அதிகளவு இராணுவமயப்படுத்தப்பட்ட'

2. *தமிழ்நெட், 2002 ஏப்ரல் 10, 11, 2002 அன்று வெளியிட்ட பிரபாகரனுடனான நேர்காணல்.*



யுத்தநிறுத்த உடன்படிக்கையொன்றை விற்பதற்குக் கஷ்டமானதாக இருந்திருக்கும்.

பாதுகாப்புக்கு எதிராக சமாதானம் தொடர்பில் ஜனாதிபதிக்கும், சட்டசபைக்கும் இடையிலான மோதலின் அனுபவங்கள் தேசிய பாதுகாப்புச் சபைக்கும் (தேபாச) நீடிக்கப்பட்டன. சில மாதங்களுக்கு ஒரு தடவை மட்டுமே, அதுவும்கூட, ஒழுங்குமுறையின்றிச் சீரிய தயார்படுத்தலை அல்லது கருத்துப்பரிமாறலை அனுமதிக்காத விதமாக மிகவும் குறுகிய அறிவித்தலுடன் தேபாச கூட்டப்பட்டது. பாதுகாப்பு மூலோபாயப் படுத்தல், நடவடிக்கைகளுக்கான செயல்திட்டமிடுதல், எல்டிடிஈக்கு எதிராக எதிர்த்திட்டமிடுதல், ஆயுதப்படைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மதிப்பாய்தல் ஆகியவற்றுக்கான ஒரு பொதுமன்றமாக அது தோன்றவில்லை! உதாரணமாக, பிரதமர் ஒன்றில் பிரசன்னமாகி இருக்கவில்லை அல்லது பிரசன்னமாகியிருந்தபோது பெரிதுமே அமைதியாக செவிமடுப்பவராகவே விளங்கினார்.

ஆரம்பத்தில், தேச பாதுகாப்பு சபையின் கூட்டக் குறிப்புகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக விளங்கிய கட்டுரையாசிரியரால் தயாரிக்கப்பட்டன. ஆனால், இப்பொறுப்பு பின்னர் ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்டது. ஜனாதிபதியின் உத்தியோகஸ்தர்களினால் தயாரிக்கப்பட்ட கூட்டக் குறிப்புகள் பிரதமரால் அல்லது பாதுகாப்பு அமைச்சரால்கூட ஒருபோதும் பரிமாறப்படவில்லை. பிரதமர் உட்பட எவருமே இதைப்பற்றி வினவவில்லை. ஏனெனில் அனேகமாக எல்லோருமே ஜனாதிபதியின் நோக்கங்களைப் புரிந்துகொண்டிருந்தார்கள்.

தேபா சபையின் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கும் அதன் அமலாக்கத்திற்கும் சிறிதளவு மேற்கோள் மட்டுமே செய்யப்பட்டது. ஜனாதிபதிக்கான மேற்பார்வையின்றி யுத்தநிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதால் இது ஒன்றும் புதுமையானதல்ல. ஏதாவது ஏறுமாறாகவே இடம்பெற்றபோதே ஜனாதிபதியிடமிருந்து வழமையான மேற்கோள்கள் இருந்தன. அவைகூடப் பாதுகாப்பு நிலைமையை மேம்படுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்கான அவசியமாக விளங்காமல், அரசாங்கத்தை விமர்சிப்பதாகவும் பாதுகாப்பு அமைப்பை அவர் நிருவகித்தபோது அதன் ஒப்பீட்டுரீதியான செயல்பாட்டை நிரூபிப்பதாகவும் இருந்தது. சந்திரிகா பாதுகாப்பு அமைச்சராகவும் பிரதம தளபதியாகவும் இருந்தபோது ஆயிரக்கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டன, பாரிய அழிவுகள் விளைவிக்கப்பட்டன, எல்டிடிஈயின் கைகளுக்குள் பெருமளவு முக்கியமான இராணுவத் தளங்களும் யுத்த தளவாடங்களும் வீழ்ச்சியடைந்தன என்பதை மறந்தே ஜனாதிபதியால் இவ்விமர்சனங்கள் செய்யப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதுகாப்புச் செயலாளர், படைத்தளபதிகள் பொலிஸ் மா அதிபர் போன்ற அரசாங்க உயர் அதிகாரிகளின் முன்னிலையில் அரசாங்கத்தைத் தாக்கும் ஒரு பொதுமன்றமாகவே நீண்ட தேபாச கூட்டங்கள் விளங்கின. பிரதமரின் முன்னிலையில், இத்தகைய தாக்குதலிலான கூற்றுகள் பெரிதுமே அபூர்வமானவையாகும். அவ்வாறு செய்யப்பட்டபோதும், அவை அதிகளவு கலப்படம் செய்யப்பட்டதாகவே விளங்கின. ஒருமுறை இலங்கை யுத்த கண்காணிப்புக் குழு (இயுககு) அதிகாரிகளுடன் கூட்டமொன்று நடைபெற்றதுடன், யுத்தநிறுத்த ஒப்பந்தச் செயல்பாடுகளை வசதிப்படுத்துவதை தவிர்த்து தவறைக் கண்டறிவதற்கான பொதுமன்றமாகவே இது விளங்கியது. யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்பாக ஜனாதிபதியால் நல்லது எதுவும் வெளிப்படுத்தப்படாததால், சமாதான நடைமுறைமீது எதிர்மறையான விளைவாகவே இக்கருத்துகள் விளங்கின.

### யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திடுதலும் ஜனாதிபதியும்

அரசியல் மற்றும் பேச்சுவார்த்தையிலான இணக்கத்திற்கு யுத்தநிறுத்த உடன்படிக்கை ஒரு படிக்கல்லாகும். எனினும், ஜனாதிபதி பிரதம தளபதியாகவும் நாட்டுத் தலைவராகவும் அமைச்சரவையின் தலைவராகவும் விளங்கியபோதிலும், யுத்தநிறுத்த உடன்படிக்கையின் உள்ளடக்கங்கள் அவருக்கு முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. அனைத்துத் தரப்புகளுடனும் உரிய முறையில் அடையப்பட்ட இந்த அரசியல் கலாசாரத்துடன், இச்சகவாழ்வுப் பிரச்சினைகள் தவிர்க்க முடியாதவை. அரசியல் சந்தர்ப்பவாதத்திற்கான நடைமுறையை அவர் கவிழ்த்துவிடுவார் என்ற அச்சமே 'ஒளிப்பதற்கான' நியாயப்படுத்தலாக விளங்க முடியும். இந்த அனுமானம் எவ்வளவு சரியானது என்பதை அவரது பிந்தைய நடவடிக்கைகள் (அதாவது 2003 நவம்பர் 3 அன்று பாதுகாப்பு உட்பட மூன்று அமைப்புகளையும் பொறுப்பேற்றமை) நிரூபித்தன.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சபையில் அவரைக் கொண்டிருப்பதற்கான முக்கியத்துவம் கவனித்தும் கவனியாமல் விடப்பட்டுள்ளது. இது நேர்மையற்றது, சட்ட விரோதமானது என்றும் அவரால் கருதப்பட்டிருக்கக்கூடும். அத்துடன், ஆயுதப் படைகளைக் கையாளும்போது திருப்திகரமற்ற பின்விளைவுகளுக்கு இது இட்டுச் சென்றுள்ளது. ஜனாதிபதி தலையிடும் என்ற சந்தேகத்தின் காரணமாகப் பாதுகாப்பு அமைப்பு ஊசலாட்டத்தைச் சமநிலைப்படுத்தியது. இருந்தபோதிலும், தளபதிகளுடன் அடிக்கடி நடத்தப்பட்ட நேரடியான கலந்தாய்வின் மூலம் ஆயுதப்படைகளிடமிருந்து எதிர்மறையான தாக்கத்தை அவர்



மேலும் தீவிரமாக்கியிருப்பார் என எப்பொழுதுமே சந்தேகிக்கப்பட்டது. அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு அதிகாரங்களின் அடிப்படையில் அவர்களை நியமிப்பதற்கான அதிகாரத்தையும் கொண்டிருந்ததால் அவரது வழிகாட்டல்களுக்கு அவர்கள் சரியாகக் கட்டுப்பட்டிருப்பதால் தளபதிகள் மீதும் குற்றஞ்சுமத்த முடியாது.

ஜனாதிபதியுடன் அவ்வப்போது அமைச்சர் மிலிந்த மொரகொட கொண்டிருந்த கலந்தாய்வுகளால் ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்ட சமாதான நடைமுறையை ஐதேமு கைப்பற்றிச் சுயநலத்திற்காகப் பயன்படுத்துகின்றது என்ற உணர்வு ஓரளவுக்குச் சரியாகவே விளங்குகின்றது. ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையில் முட்டுக்கட்டை நிலையிலான உறவின்கீழ் மிகவும் பயனுள்ள மூன்றாம் தரப்பு தலையீடுகளை மேற்கொண்ட காலஞ்சென்ற லக்ஷ்மன் கதிர்காமருடனான அப்போதைய பிரதமரின் நேரடித் தொடர்பு மிகவும் பெறுமதிமிக்கதாகும்.

எனினும், திருகோணமலை துறைமுகப் பகுதியிலும் மணிராசகுளத்திலும் பாதுகாப்புக் கரிசனைகள்மீது காலஞ்சென்ற கதிர்காமரின் முன்னெடுப்புகளின் அடிப்படையில் பொதுஜன முன்னணியின் (பிஏ) அரசியல் தலையீடுகள் 2003 நடுப்பகுதியில் ஐதேமு ஆட்சிக்கு எதிராகக் கடும் விமர்சனங்களைக் கொண்டுவந்தன. 2003 நவம்பரில் மூன்று அமைச்சுகளைப் பொறுப்பேற்றல், பாராளுமன்றத்தைக் கலைத்தல், இறுதியில் ஐதேமு அரசாங்கத்தின் வீழ்ச்சி ஆகியவற்றுடன் இது உச்சக்கட்டத்தை அடைந்தது. அந்தத் தோல்வியுடன் தற்காலிகமாகச் செயலற்றிருந்த சமாதான நடைமுறை முடிவுகட்டப்பட்டது. 2004 ஏப்ரலில்[3] புதிய அரசாங்கத்தை ஜனாதிபதி சந்திரிகா அமைத்த பின்னர், புத்துயிரளிப்பதற்கு அவர் முயன்று தோல்வியுற்ற சமாதானத்திற்கான அவரது முந்தைய உறுதியான பங்களிப்புகளை இந்தத் தீய பின்விளைவுகள் மூச்சுதிணறடித்தன.

### யுத்தநிறுத்த உடன்படிக்கைமீது ஆயுதப் படைகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட பின்னர் உடனடியாக அரசாங்கத்தின் சமாதானக் கரிசனைகளைத் தனிப்பட்டரீதியில் அறிவிப்பதற்காக இராணுவத் தளங்களுக்குப் பிரதமர் விக்கிரமசிங்க பயணம் செய்தார். முதலில், ஆயுதப்படைகளின் அர்ப்பணிப்பினைக் கோருகின்ற ஒரு முயற்சியாகப் பாதுகாப்பு அமைப்புக்கும் ஆயுதப்படைத் தளபதி

3. தமிழர் ஒருவராக விளங்கி இலங்கைக்காக உண்மையாகவே கடுமையாகப் பணியாற்றிய ஒரு மனிதராகவும் இலங்கை என்றுமே உருவாக்கிய மாபெரும் புத்திமானாகவும் விளங்கிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரான காலஞ்சென்ற லக்ஷ்மன் கதிர்காமருக்கு வேறெந்த இலங்கையர் போன்று கட்டுரையாசிரியரும் அளப்பரிய மரியாதையைக் கொண்டுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களுக்கும் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் உள்ளடக்கங்களையும், அடிப்படை நடவடிக்கை முறைமைகளையும் அவர் அறிவித்தார். இரண்டாவதாக, தன் வீரர்களுக்குச் சமாதானத்தின் செய்தியைக் கொண்டு செல்லுமாறு அவர் தளபதிகளை வேண்டிக்கொண்டார். முன்னர் குறிப்பிடப்பட்ட சந்தேகத்தின் பின்னணியில் தளபதிகளினால் காட்டப்பட்ட அக்கறை இயற்கையாகவே குறைவானதாகும். அவர்களும், அவர்களது மூத்த அதிகாரிகளும் அவர்களது வீரர்களுக்கு மிகவும் நெருக்கமாக இருந்ததால், அரசால் சாதாரணப்படை வீரர்களுடனான நேரடி அணுகுமுறைகளைக் கண்டறிதல் கஷ்டமான பணியாகவே இருந்தது.

மேலதிகமாக, ஆயுதப்படைகளைத் தொந்தரவு செய்யும் சில விளைவுகள் இருந்தன. முதலாவதாக, நீண்டகாலத்திற்குத் தாம் சண்டையிட்ட எதிரியை அவர்கள் சந்தேகித்தார்கள். இரண்டாவதாக, சமாதானத்தின் நோக்கங்களையும் எல்டிடிஈ அல்லது அதன் தலைவரின் விருப்புகளையும் அவர்கள் நம்பவில்லை. மூன்றாவதாக சமாதானத்தை ஏற்படுத்துவதன் காரணமாக வீரர்கள் அனுபவித்த அனுகூலங்கள் குறைக்கப்பட்டன. நான்காவதாக, சமாதானத்தின் காரணமாக இழக்கப்பட்ட அங்கீகாரம் அவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தவில்லை. எனினும், ஆயுதப்படையினர் யுத்தத்தை வரவேற்கின்றனர் என்றவாறு இவற்றைத் தவறாகப் பொருள்கொள்ளப்படலாகாது.

எல்டிடிஈ மற்றும் ஆயுதப்படைகளின் ஆரம்பநிலையிலான நடத்தையே யுத்தநிறுத்த உடன்படிக்கையின் அமலாக்கத்தில் இன்னொரு முக்கியமான அம்சமாகும். இருபது வருடங்களைக்கொண்ட மோதலின் பின்னர், இருதரப்புகளும் மாற்றமடைவது மிகவும் சடுதியானதாகும். இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் (இயுககு) கிடைக்கின்ற புள்ளிவிபரங்களின்படி,[4] 30.6.2002இல் உள்ளவாறு இலங்கை அரசாங்கத்திற்கும் எல்டிடிஈக்கும் எதிராக முறையே 130 மற்றும் 279 மீறல்களும் முறைப்பாடுகளும் உள்ளன. மாற்றமடைந்துள்ள இராணுவச் சூழ்நிலைக்கு ஏற்பச் சரிக்கட்ட முடியாததாலேயே இம்மீறல்களில் பெரும்பாலானவை உருவானதுடன், சில மாதங்களிலேயே இயுக குழுவுக்கான முறைப்பாடுகள் குறைவடைந்தன. இம்மோதலின் வரலாற்றை பார்க்கும்போது, யுத்தநிறுத்தத்தின் இத்தகைய மீறல்கள் எதிர்பார்க்கப்பட வேண்டியதே. பெருமளவு தளமட்ட ஆயுதப்படை ஆளணியினர் அல்லது எல்டிடிஈ போராளிகள் போன்று எதிர்த்து நிற்கின்ற தன்மையில் நடந்துகொண்ட எல்டிடிஈயின் பெரிய புள்ளிகளைக்கூட 'முதலாவது கியரில்' இயுக குழு ஓட்ட வேண்டியிருந்தமை அக்குழுவின் பணியை ஊக்கமிழக்கச் செய்வதாக விளங்கியது.

4. மூலம்: இயுககு செயலகம்.



யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டமை யுத்தநிறுத்த உடன்படிக்கையின் அமலாக்கத்தின் அமைப்பில், புதியதொரு இராணுவப் பரிமாணத்தை உருவாக்கியது. குறிப்பிட்ட சமுதாயம் சார்ந்த, அரசியல் ஒருங்கிணைப்பின் ஆற்றலளவைப் பராமரித்த அதேவேளை, பகைமைகளை நிறுத்திக்கொள்வதற்கும் சிவிலியன்களையும் அவர்களுடைய சொத்துகளையும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குமான அர்ப்பணிப்பொன்றை அது கொண்டுவந்துள்ளது. ஆகவே, ஐதேமு சமாதானக் கருத்துருவாக விளங்கிய ஒரு நேரத்தில் ஒரு நடவடிக்கை என்ற அணுகுமுறையும் பாதுகாப்பு அமைச்சருக்கும் ஆயுதப்படைகளுக்கும் ஏற்பட்ட அனுபவங்களும் வழமைக்கு மாறானவை என்பதுடன், வேறுபட்டவையும் ஆகும்.

## இராணுவ நிதிப்படுத்தலும் சமாதான நடைமுறையும்

சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஐதேமு கொண்டிருந்த அக்கறையின் காரணமாக, ஆயுதப்படைகளின் தரமுயர்த்தும் நடைமுறையை நிதிப்படுத்துவதில் அது அக்கறை காட்டவில்லை என்ற விமர்சனமாக அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளது. இது தயார் நிலையின் அந்தஸ்தை ஆபத்துக்குள்ளாக்கியுள்ளது. நிதிசார் மட்டுப்படுத்தல்களின் காரணமாகப் பாதுகாப்புக்கு அல்லது கல்விக்கு வரவு–செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட நிதியங்களைச் செலவழிப்பது தொடர்பாகக் கடுமையானக் கட்டுப்பாடு இருந்தது உண்மையே.

2002 வரவு–செலவுத் திட்டமானது மொத்த செலவினத்திற்கு 8.4 பில்லியன் ரூபாவையும் மீளவரும் செலவினத்திற்கு 40.84 பில்லியன் ரூபாவையும் வழங்கியிருந்தது.[5] 2002இல், உண்மையான செலவினம் முறையே 6.6 பில்லியன் ரூபாவாகவும் 40.02 பில்லியன் ரூபாவாகவும் விளங்கியது.[6] அரசியல் விமர்சகர்களால் குறிப்பிடப்பட்டவாறு இலங்கை அரசாங்கம் ஆயுதப்படைகளைத் திட்டமிட்டு உதாசீனப்படுத்தாமல், எதிர்மறையான மொத்த உள்ளூர் உற்பத்தியால் உருவாக்கப்பட்ட நிதிசார் நெருக்கடி நிலையின் காரணமாகவே அவர்களுக்காக ஒதுக்கப்படும் மொத்தச் செலவினத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 2003க்கான எண்ணிக்கைகள் மொத்தச் செலவினத்திற்கு 8.47 பில்லியன் என்றவாறும் மீளவரும் செலவினத்திற்கு 41.9 பில்லியன் ரூபா என்றவாறும் விளங்குகின்றது. 2003க்கு உண்மையான செலவினம் முறையே 3.54 பில்லியன் ரூபா மற்றும் 40.65 பில்லியன் ரூபா ஆகும்.[7]

5. வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2003, தொகுதி 1 பக்கம் 455.
6. வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2004, தொகுதி 2 பக்கம் 1.
7. வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2005, தொகுதி 1 பக்கம் 715.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீளவரும் *(ரெக்கரன்ட்)* செலவினம் ஒதுக்கப்பட்டத் தொகைக்கேற்பச் செலவழிக்கப்பட்டது என்பதையும், ஆனால், மொத்தச் செலவினத்தைப் பொறுத்தளவில் இதுவல்ல நிலை என்பதையும் குறிப்பிடத்தான் வேண்டும். மீளவரும் செலவினம் சம்பளங்களுக்கும் போக்குவரத்துக்கும் என்பதனால், குறைப்பு என்ற நிலை இருக்கவில்லை. வன்பொருள் கொள்வனவுகளில் குறைப்பையே மொத்தச் செலவினத்தில் குறைப்பு என கருத்தாகக்கொண்டுள்ளது. கொள்வனவு நடைமுறையிலான தாமதங்களும், பணப்புழக்க மட்டுப்படுத்தல்கள் காரணமாகச் சில திட்டமிடப்பட்ட மொத்தச் செலவினம்கூடச் செலவழிக்கப்படவில்லை. இத்தகைய நிலைமைகளுக்குப் பாதுகாப்பு அதிகாரவர்க்கத்தினர் பொறுப்பானவர்கள் அல்லர். எனினும், ஆயுதப்படைகளைப் பலவீனப்படுத்துவதற்குத் திட்டமிட்டதொரு முயற்சியின் அங்கமாக இந்நிகழ்வுகளை பொருள் விளக்கமளித்து, அரசாங்கத்தின் நடவடிக்கைகளையிட்டு விமர்சிப்பது அரசியல் எதிர்தரப்புக்கு இலகுவாக இருந்தது. ஆனால், இது உண்மையிலேயே தவறான வாதமாகும். இந்நிலைமை 2003இல் ஓரளவுக்கு மாற்றமடைந்து, சில கொள்வனவுகள் சாத்தியமாகின. இது ஆயுதப்படைகளின் ஆற்றலளவை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் நோக்கங்களை நிரூபித்துள்ளது.

### யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமலாக்கும் முறை

ஆரம்பத்திலேயே, அதே நிலையில் இருக்கும் தன்மையொன்றிலேயே யுத்தநிறுத்த உடன்படிக்கையை இருதரப்புகளும் நிருவகித்தன. உடன்படிக்கையின் திடீர்ப் 'பிறப்பின்' தன்மையே இதற்கு ஓரளவு காரணமாகும். யுத்தநிறுத்த உடன்படிக்கையின் உறுப்புரை 1ஐ அமல்படுத்துவது ஆயுதப்படைகள் மற்றும் எல்டிடிஈ இராணுவப் போராளிகளின் பொறுப்பாகவிருந்தது. யுத்தநிறுத்த உடன்படிக்கை செயல்படும் ஒழுங்குகள் பற்றிய அடிப்படையான அறிவை மட்டுமே ஆயுதப்படைகள் கொண்டிருந்தன. இதுவே எல்டிடிஈ போராளிகளிடமும் விளங்கியது. இரண்டாவதாக, ஆயுதப்படையும், எல்டிடிஈயும் பொறுப்பான முந்தைய இலங்கை யுத்தநிறுத்த உடன்படிக்கை அனுபவங்களை அவ்வளவாக அறிந்திருக்கவில்லை. மூன்றாவதாக, வழமைக்குத் திரும்புதல் மற்றும் கண்காணித்தல் போன்ற குறிப்பான பின்தொடர் நடவடிக்கையைப் பொறுப்பேற்பதற்குரிய அவசியத்தைக் கோருவதற்கு அல்லது உருவாக்குவதற்கு முந்தைய யுத்தநிறுத்தங்கள் நீடிக்கப்படவில்லை. இவற்றுக்கு முன்னர் நிறுவனரீதியிலான ஒழுங்குகளும் இருக்கவில்லை.

ஆகவே, அமல்படுத்தல் கஷ்டங்களையும் அவற்றின் தீர்வையும் புதிய நடைமுறைக்குரிய ஒழுங்குகளை வகுத்ததையும் புரிந்துகொள்ளும்



முகமாகவும் கற்றுக்கொண்ட படிப்பினைகளை அடையாளம் காணுமுகமாகவும் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளைத் தனிப்பட்டரீதியில் கருத்துப்பரிமாறுவது பொருத்தமானதாகும். மூன்று பிரதான யுத்தநிறுத்த உடன்படிக்கையின் உறுப்புரைகளைப் பாதுகாப்புக்காகச் சில கொண்டுள்ளதுடன், தெளிவான படமொன்றைப் பெறுவதற்குச் அனைத்து யுத்தநிறுத்த உடன்படிக்கையின் துணை உறுப்புரைகளை கொண்டு கருத்துப்பரிமாறுவது அவசியமானதாகும்.

### யுத்தநிறுத்த உடன்படிக்கையின் உறுப்புரை 1

உறுப்புரை 1இன் துணை உறுப்புரைகளை நாம் பார்ப்போம். இலங்கை அரசாங்கத்திற்கும் எல்டிடிஈக்கும் இடையிலான உடன்படிக்கை ஒன்றை அடைவதைத் துணை உறுப்புரை 1.1 கவனத்தில் கொள்கிறது. ஏனைய துணை உறுப்புரைகள் வசதிப்படுத்துபவை.

### இராணுவ நடவடிக்கையை நிறுத்திவைத்தல்

உறுப்புரை 1.2இல் ஏதாவது வலிந்து தாக்குகின்ற இராணுவ நடவடிக்கைகளில் தாக்குதல் இன்மை உள்ளடக்கப்பட்டுள்ளது. இது அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் முழுமையாக நிறுத்திவைப்பதை அவசியப்படுத்துகின்றது. நேரடியானதும் மறைமுகமானதுமான ஆயுதங்களைச் சுடுதல், ஆயுத பாணியிலான திடீர் வேட்டைகள், பதுங்கியிருந்து தாக்குதல், கொலைகள், கடத்தல்கள், சிவிலியன்கள்/இராணுவப் பொருட்களை அழித்தல், நாசவேலை, தற்கொலை நடவடிக்கைகள், ஆழ்ந்த ஊடுருவல் அலகுகளினாலான நடவடிக்கைகள் [உறுப்புரை 1.2 (அ)], விமானத்திலிருந்து குண்டுபோடுதல் [உறுப்புரை 1.2 (ஆ)] மற்றும் வலிந்து தாக்கும் கடற்படை நடவடிக்கைகள் [உறுப்புரை 1.2 (இ)] ஆகியவற்றை இராணுவ நடவடிக்கைகள். உள்ளடக்குகின்றன. இது தொடர்பாக, ஆரம்பத்தில் உயர்வான எண்ணிக்கையிலான சம்பவங்களையும் திருப்திகரமான காலச்சட்டத்தினுள் குறைப்பொன்றையும் இயுக குழுவின் தரவுகள் காட்டுகின்றன. அறிக்கையிடப்பட்ட மீறல்களின் பன்னிலையாக்கத்தையும் அதே தரவுகள் காட்டுகின்றன.[8]

விமானக் குண்டுவீச்சுச் சம்பவங்கள் இல்லாதபோதிலும், உளவு பார்க்கும் வான் பறப்புகளுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆளில்லா விமானங்கள் மூலம் வான் வேவுபார்ப்பதற்குப் புதிதாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட விமானத்தின் உளவுபார்க்கும் ஆற்றளவை கொண்டும் ஒன்றைவிடப் பல காரணங்களுக்காக எல்டிடிஈ கரிசனைகொண்டிருந்தது. ஆளில்லா விமானத்தின் உளவு பார்க்கும் பறத்தல்களின் காரணமாகச்

8. மூலம்: இயுகவு செயலகம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிவிலியன்கள் பயப்படுவதுடன், குழப்பமுமடைகின்றனர் என்பதே முறைப்பாடாகும். இது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றபோதிலும் சில வேளைகளில், இயுக குழு உட்பட எல்டிடிஈயின் வாதத்திற்கு ஆதரவாக இது விளங்கியது. நாடு முழுவதிலுமான தேசியப் பாதுகாப்புக் காகவும் வேறு சட்டவிரோதமான நடவடிக்கைகளைத் தடுப்பதற்காகவும் (உதாரணமாக மனிதர்களைக் கடத்துதல், போதைப் பொருள்களைக் கடத்துதல்) ஆளில்லா விமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

உறுப்புரை 1.3இன்கீழ் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் வலியவந்து தாக்குதல் நடவடிக்கைகள் பற்றி குறித்துரைக்கப்பட்டுள்ளன. கடல் பரப்பு சம்பவங்கள் மிகவும் ஊறுபடத்தக்கவை என்பதுடன், அனேகமாக யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கும் பயமுறுத்தக் கூடியதாகும். கடலில் தனிமைப்படுத்தி யுத்தம் புரிவதை இலங்கைக் கடற்படை பொறுப் பேற்க வேண்டியிருந்ததால், 'இலங்கையின் இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் அதன் சட்டபூர்வமான பணியை நிறைவேற்றுவதற்கு' அதன் கடப்பாட்டை கொண்டு இலங்கைக் கடற்படை உரிய திட்டம் தீட்டியுள்ளது. 1995இல் பொதுஜன முன்னணி அரசாங்கமும் இவ்வாறே எண்ணியது. வலியவந்து கடல் நடவடிக்கை களில் ஈடுபடாமல், இப்பணியை நிறைவேற்றுவது கற்பனை செய்ய முடியாததொன்றாகும். பெருமளவு மீறல்களில், கொலைகள், கடத்தல்கள் மற்றும் குடிமக்களுக்கும் இராணுவத்திற்கும் எல்டிடிஈக்கும் சொந்தமான சொத்துகளின் அழிவு ஆகியனவே பரபரப்பையும் சலசலப்பையும் ஏற்படுத்தியவையாகும். இலங்கை அரசாங்கம் நீண்டதூர ஊடுருவல் ரோந்து நடவடிக்கைகளை தீவிரப்படுத்தப்படவில்லை. ஆனால், வன்னிப் பகுதிகளில் அதன் நடவடிக்கையையிட்டு எல்டிடிஈ சந்தேகம் கொண்டிருந்தது.[9]

மீறல்களுக்கான பொறுப்பை ஏற்க ஆயுதப் படைகளும் எல்டிடிஈயும் மறுப்புத் தெரிவித்துள்ளன. ஆனால், கிடைக்கின்ற தகவல் பெருமளவு

9. ஹக்கோனேவில் பேச்சுவார்த்தை மேசையில் நீண்ட தூர வேவு பார்க்கும் ரோந்து நடவடிக்கைகள் பற்றிக் கட்டுரையாசிரியரிடம் அன்டன் பாலசிங்கம் விசாரித்ததுடன், வன்னியில் எல்டிடிஈ முகாமிலிருந்து நீண்ட தூர வேவு பார்க்கும் ஆளணியினர் உணவைத் திருடியுள்ளதாகக் குறிப்பிட்டார். இது உண்மையல்ல என்பதுடன், ஆகவே பயிற்சிக்காககூட வன்னியில் அவர்களை இலங்கை அரசாங்கம் ஈடுபடுத்தவில்லை என மறுத்துரைத்தார். சமாதான நடைமுறை முழுவதும், எல்டிடிஈயை வெளிப்படையாகவே பயமுறுத்திய நீண்டதூர வேவுபார்க்கும் ரோந்தை ஈடுபடுத்தாததற்கு அப்போதைய பிரதமர் மீது குற்றஞ்சுமத்தப் பட்டது. இதே போன்ற பயம் தற்கொலைக் குண்டுதாரிகள் மீது தென்பகுதி மக்களின் மனத்தில் இருந்து, யுத்தநிறுத்த உடன்படிக்கையின் முன், நீண்ட தூர வேவு பார்க்கும் ரோந்து புரிபவர் களால் இராணுவத் தாபனத்தில் உள்ள எல்டிடிஈ உயர் பதவி வகிப்பவர்களில் சிலர் கொல்லப்பட்டது உண்மையாகும். இது பற்றி எல்டிடிஈ யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு எதிரான வர்ணனையாளர்களால் பாராட்டத்தக்க வகையில் குறிப்பிடப்பட்டதுடன், இது தொடர்பாக அன்டன் பாலசிங்கத்தின் கரிசனையை எதிர்பார்க்கத்தான் வேண்டும்.



மீறல்களுக்கு எல்டிடிஈ இயக்கமே காரணம் என்பதை நம்புவதற்கு ஒருவரை இட்டுச் செல்கின்றது. உளவுபார்க்கும் ஆளணியினரையும் எல்டிடிஈயின் அரசியல் எதிராளிகளையும் கடத்தல்கள், கட்டாய ஆட்சேர்ப்பு, கொலைகள் ஆகியன உரிமைகளின் பாரதூரமான மீறல்கள் ஆகும். இந்தத் தணிக்கப்படாத மீறல்களின் காரணமாக வசதிப்படுத் துனரும் இயுக குழுவும் தாக்கப்படும் நிலையிலுள்ளன.

ஐதேமு ஆட்சியின்போது கடலில் இடம்பெற்ற சம்பவங்கள் அட்டவணை 1இல் காட்டப்பட்டுள்ளன. ஒன்றுடன் ஒன்றிணைந் திருந்த வாணிப கடல் பயணம் மீன்பிடித்தல் எனும் போர்வையின்கீழ் எல்டிடிஈயினரால் பெரும்பாலும் மேற்கொள்ளப்பட்ட கடல் சம்பவங் களுக்குப் பிறகு, முந்தையச் சமாதான முன்னெடுப்புகள் சீர்குலைந்தன என்பதனால், இவை மிகவும் முக்கியமானவையாகும். ஆகவே, மீன் பிடிப்பதற்கான கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்காக எல்டிடிஈயால் விடுக்கப்படும் அபரிமிதமான கோரிக்கைகள் இலங்கைக் கடல்படையால் எப்பொழுதுமே பெரும் சந்தேகத்துடன் நோக்கப்பட்டன. இருந்த போதிலும், 4.1.1995 தேதியிடப்பட்ட ஜனாதிபதிச் செயலகப் பத்திரிகை வெளியீட்டின்படி, மீன்பிடித்தல் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்குப் பொதுஜன முன்னணி அரசாங்கம் இணக்கமாக இருந்ததைக் கவனத் திற்கு எடுக்க வேண்டும். உண்மையில், யுத்தநிறுத்த உடன்படிக்கையின் வலிமையை வைத்திருப்பதற்காக மீன்பிடித்தல் பகுதிகளையும்[10] மீன் பிடித்தல் நேரங்களையும் உயர் பாதுகாப்பு வலயங்களினுள் (உபாவ) நங்கூரமிடும் பகுதிகளையும்கூட ஐதேமு அரசாங்கம் தளர்த்தியது.

### யுத்தநிறுத்த உடன்படிக்கையின் மீறல்கள்

ஆயுதப் படைகளின் கள நடவடிக்கைகளை உறுப்புரை 1.3 கையாளு கின்றது. ஆயுதப்படைகளினாலும் எல்டிடிஈயினாலும் மீறல்கள் இருந்துள்ளதாகப் புள்ளிவிபரத் தரவுகள் உறுதிப்படுத்துகின்றது. ஆனால், ஆயுதப்படைகளின் மீறல்களின் எண்ணிக்கை குறைவான தாகும்.[11] சகிப்புத்தன்மை (உதாரணம், எல்டிடிஈ ஆதரவில் பொதுசன உறுப்பினர்களினால் பருத்தித்துறை இராணுவ முகாம்மீது திடீரென தாக்கப்பட்டபோது), எல்டிடிஈயின் 'தாக்குதல் மனநிலை' (உதாரண மாக, காஞ்சிரங்குடாவில் விசேட அதிரடிப்படைக்கு எதிராக கும்பலின் திடீர் தாக்குதல்), மற்றும் திருகோணமலையில் உடனடியாகத் தொடர்ந்த பொலிஸாரின் சூட்டுச் சம்பவம் மூலம் ஆயுதப்படை மற்றும் அதிரடிப் படையினரின் எதிர்வினைகள்கூட ஒன்றிலிருந்து இன்னொன்று

10. அரசாங்க வர்த்தமானி (கெஜட்) அதிவிசேடம் இல: 1237/20, 23.5.2002.

11. மூலம்: இயுககு செயலகம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அட்டவணை 1: 22. 2. 2002 முதல் 3.11.2003 வரை கடலில் இடம் பெற்ற சம்பவங்கள்**

| சம்பவத்தின் தேதி | சம்பவத்தின் தன்மை | இயுக குழுவின் நிர்ணயம் |
|---|---|---|
| 24.4.2002 | இலங்கையின் அதிகார வர்க்கங்களினால் வழங்கப்பட்ட பறத்தல் ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடிக்காமை. | யுத்தநிறுத்த உடன்படிக்கையின் தெளிவான மீறல் |
| 1.5.2002 | எல்டிடிஈ படகைத் தகர்த்தல் | குறிப்பான நிர்ணயம் இல்லை. |
| 16.11.2002 | அங்கீகாரமின்றிச் கருணாவின் கடல் நகர்வு. | எல்டிடிஈயின் மீறலும் பாரதூரமான உடன் படிக்கையின் மீறலும். |
| 7.2.2003 | படகொன்றில் யுத்தத் தளவாடம் போன்றவற்றை எல்டிடிஈ கொண்டு சென்றது இயுக குழுக் கண்காணிப் பாளர்களுக்கு எதிராக அவர் களைத் தடுத்துவைத்ததும். | எல்டிடிஈயின் யுத்த நிறுத்த உடன்படிக்கை யின் மீறல். |
| 23.2.2003 | குச்சவெளியில் இலங்கைக் கடற்படையினால் தக்க வைக்கப்பட்டுள்ள பகுதியில் சட்ட விரோத நுழைவு. | எல்டிடிஈயால் வைக்கப்பட்டிருந்த ஆளணியினரை திரும்பப் பெறுதலும் யுத்த வீரரையும் பொலிஸையும் விடுவித்தலும். |
| 10.3.2003 | இலங்கை அரசாங்கத்தின் பிரசாரம், யுத்தத்திற்கு தேவையான பொருட்களைப் போல கொண்டு செல்லுதல். ஆனால் கப்பலானது வாணிபக் கப்பல் எனக் குறிப்பிடும் எல்டிடிஈயால் விடுக்கப்படும் சவால். | இயுக குழுவினால் இதற்கு தீர்ப்பு வழங்கப்படவில்லை |
| 20.3.2003 | சீனக் கப்பலொன்றை மூழ்கடித்தல். | எல்டிடிஈ அல்லது இலங்கை அரசாங்கம் மீது பொறுப்பு சுமத்த முடியாது. ஆனால், இது ஒரு பாரதூரமான குற்றமாகவும் பயங்கரவாத நடவடிக்கையாகவும் கருதப்படுகின்றது. |
| 8.5.2003 | மூன்று எல்டிடிஈ போராளி களால் வெடிபொருட்களின் இடமாற்றம். | குறிப்பான நிர்ணயம் இல்லை. ஆனால், வெடிமருந்துகளின் இடமாற்றம் ஒரு மீறல் என ஏற்றுக்கொள்ளுதல் |
| 8.5.2003 | இயுக குழுவின் கொடியைப் பறக்கவிடுவதற்கு இலங்கைக் கடற்படை மறுத்தல். | இயுகு கொடியை பறக்கவிடுவதை அனுமதிப்பதற்குச் சமாதானச் செயலகத் தலையீட்டுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. |
| 14.6.2003 | எல்டிடிஈ தமக்குச் சொந்தமான டாங்கிக் கப்பலை மூழ்கடித்தல். | கடல் சட்டம் மீதான ஐநாவின் சட்டத்தை எல்டிடிஈ மீறுதல். |



ஆதாரம்: இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு.

வித்தியாசமாக விளங்குகின்றன என்பதைக் காட்டுகின்றது. இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப்படைகளுக்கு இந்த உறுப்புரை பலமான வெட்டும் ஓரத்தையும் வழங்கி இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்.

### படைகளைப் புறம்பாக்குதல்

உறுப்புரை 1.4இன் கீழ்ப் படைகளைப் பிரித்தல், மொன்ட வீடியோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமவாயத்தின் (கன்வென்சன்) ஏற்பாடுகளின்கீழ், தனி நாடொன்றைக் கோருகின்ற எல்டிடிஈக்கு உதவியளிப்பதற்காக, அவர்களுக்குக் காணிப் பகுதிகளைத் தனியாக ஒதுக்குவதற்கான ஒரு முயற்சியே என ஐதேமுவின் அரசியல் எதிராளிகள் கடுமையாகத் தாக்கினார்கள்.[12] இது நாட்டை முழுமையாக விற்பதெனப் பொருள் விளக்கமளிக்கப்பட்டது. பின்னர், ஜனாதிபதி குமாரதுங்கவும் சில மூத்த அமைச்சர்களும் (உதாரணம், ஜனாதிபதி குமாரதுங்கவின் கீழ் நிதி அமைச்சரான கலாநிதி சரத் அமுனுகம) உச்ச நீதிமன்றமும் பி-டோம்ஸ் வழக்கின்போது நிறைவேற்றுவதை ஏற்றுக்கொண்டுள்ளது. இது படைகளைப் பிரிப்பதற்கான ஏற்றுக்கொள்ளலாக எடுக்கப்பட முடியும். இது யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் 'தூய்மைப்படுத்துவதுடன்', இலங்கையை விற்கின்றது என்பதிலிருந்து ஐதேமுவை தெளிவுபடுத்துகின்றது. இதனால் யுத்த நிறுத்த உடன்படிக்கை மற்றும் சமாதான நடைமுறை ஆகியன மீது ஐதேமுன்னணியை பெரிதுமே கூச்சலிட்டு விமர்சித்த மார்க்ஸிய அமைப்பான ஜனதா விமுக்தி பெரமுனவினால் அளவுக்கதிகம் பிரசாரம் செய்யப்பட்டது.

### பெருமளவுக் காரணங்களை அவசியப்படுத்தும் உறுப்புரை 1.4

1. முதலாவதாக, ஒவ்வொரு தரப்பினரும் தமது மேலாண்மை ஆதிக்கத்தின் கீழுள்ள பகுதிகளின் எல்லையைப் பற்றிய தெளிவான புரிந்துணர்வு யுத்தநிறுத்தத்திற்கு அவசியம். மேலாண்மை ஆதிக்கத்தின் அடிப்படையில் தற்காலிகமாக 'எல்லைகளை முடக்குவதும்' போக்குவரத்தை மட்டுப்படுத்தி, முன்னரங்க பாதுகாப்பு அமைவிடங்களைப் பிரகடனப்படுத்துவதுமே சிறந்த வழியாகும். 'தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் ஆரம்பத்திலேயே தங்கியிருப்பதற்கு' இருதரப்புகளைப் பணிக்கின்ற உறுப்புரை 1.9ஐக் கடைப்பிடிப்பதற்காக இது உதவியாக இருந்தது. இது யுத்தநிறுத்த உடன்படிக்கையின் 'மனத்தை நிலைப்படுத்தும் கட்டம்' ஆகும். பொதுஜன முன்னணிக்கும் எல்டிடிஈக்குமிடையிலான 'பகைமை நிறுத்தல்' இதையொத்த ஏற்பாட்டையே கொண்டிருந்தது என்பது கவனத்திற்குரியது.[13]
2. இரண்டாவதாக குறைந்த இடைத்தூரத்தில் இருப்பது மிகவும் எளிமையான சினமூட்டும் செயல்கூட ஒருவருடன் ஒருவர் உடனடியாகவே எதிர்வினையாற்றுவதற்கான ஓர் ஊக்குவிப்பாகும். ஆகவே, இருதரப்புகளையும் தூரத்தில்வைப்பது புத்திசாலித்தனமானது எனக் கருதப்பட்டதுடன், படைகளைத் தள்ளிவைப்பதும் சாதிக்கப்பட்டது.
3. மூன்றாவதாக, ஆயுதப்படையும் எல்டிடிஈ போராளிகளும் இயங்குவதற்கு அனுமதிப்பது பற்றி உறுப்புரை 1.10இலிருந்து 1.13 வரையிலான யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளது ஆகும். இதன்படி முன்னரங்கப் பாதுகாப்புநிலைமீது தன்னிச்சையாக அடையாளம் காணத்தக்கப் பரஸ்பரம் ஏற்றுக்கொண்ட எல்லைக் கோடுகளுடன் இதனை சாத்தியப்படுத்தலாம்.
4. அரசாங்க அதிபர்களின் கட்டுப்பாட்டின்கீழ் ஏற்கனவே தடை செய்யப்பட்ட சில பொருட்களை இடமாற்றுவதற்கான ஏற்பாட்டை 2002 ஜனவரி 15இன் வர்த்தமானியில் அறிவிப்பு செய்யப்பட்டது. இருதரப்புகளின் மேற்பார்வையுடன் இது திருப்திகரமாகச் செயல்படுத்தப்பட முடியும் என்பதுடன், எல்லைகளும் நிருவகிக்கப்படும் பகுதிகளாக வந்தன.
5. நான்காவதாக, யுத்தநிறுத்த உடன்படிக்கையின் உறுப்புரை 2இன் கீழ் வழமைக்குத் திரும்புதல் நடைமுறையை அமல்படுத்துவதன் மூலம் இருதரப்புகளையும் நிலைப்படுத்துவதுமீது புரிந்துணர்வொன்று இருந்தால் நடைமுறைச் சார்பில் பாதுகாப்பு வழங்கப்பட முடியும். இது மாவட்ட அல்லது பிரதேச எல்லை அடிப்படையில் செய்யப்பட முடியாது. ஏனெனில் படைகளின் அமைப்புகள் அச்சொட்டான நிருவாகப் புவியியல் எல்லைகள்மீது அமைந்திருக்கவில்லை. இது இடைக்கால அடிப்படையில்கூட செய்ய முடியாது. ஆகவே இது ஒரு தத்ரூபமான அணுகுமுறையாகும்.
6. ஆயுதப்படைகளின் அந்தஸ்தை யுத்தநிறுத்த உடன்படிக்கை ஆதரித்தது (பார்க்க: உறுப்புரை 1.3). ஆனால், நடைமுறையில்/செயல்பாட்டில் மட்டுப்படுத்தலின் காரணமாக இதைக் கடலிலும்

12. பெருமளவு தொலைக்காட்சி உரை நிகழ்ச்சிகளின்போது ஜேவிபியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ யுத்தநிறுத்த உடன்படிக்கையின் ஆபத்துகளை எடுத்துக்கூறியதுடன் மொன்ரே வீடியோ சமவாயத்தைப் பற்றியும் குறிப்பிட்டார். மொன்ரே வீடியோ சமவாயத்தை நுணுக்கமாகப் பார்க்கும்போது, அது மட்டுப்படுத்தப்பட்ட உடன்பாட்டையே கொண்டிருப்பதுடன், இலங்கை அரசாங்கம் கையெழுத்திட்ட சர்வதேச உடன்படிக்கைகளுக்கும் தொடர்பானதல்ல. சமவாயத்தின் முன்னுரை, 'சிறந்ததாகக் கண்டறியப்பட்டதும், உரிய ஒழுங்கில் இருந்ததுமான அவற்றின் முழு அதிகாரங்களையும் யார் வெளிப்படுத்துகின்றாரோ அவர் பின்வருவனவற்றுடன் உடன்படுகின்றார்' எனக் குறிப்பிடுவதுடன், சமவாயத்தின் பதினாறு உறுப்புரைகளையும் விளக்குகின்றது. மேலும், சமவாயத்தில் பங்கெடுத்த சில அரசுகள் (உதாரணம்: ஐக்கிய அமெரிக்கா, பிரேஸில், பெரு) சில உள்ளடக்கங்கள் மீது ஒதுக்கங்களைச் செய்துள்ளன. இலங்கையும் ஐக்கிய நாடுகளும் பங்கெடுப்பாளர்களாக அல்லது கையெழுத்திட்டவையாக விளங்காததினால் இச்சமவாயத்தால் வழிகாட்டப்படமாட்டாது. துரதிர்ஷ்டவசமாக இதை ஐதேமு அரசியல்வாதிகள் மறுத்துரைக்காததுடன், அதிகப் பேச்சுத்திறனைக் கொண்ட விமல் வீரவன்ஸ இக்குற்றச்சாட்டுக்களை மீள மீளக் கூறியதுடன், சமவாயம் பற்றித் தெரிந்திருக்காத மக்களின் இதயத்தையும் அவர் வென்றெடுத்தார்.

13. 'இணைந்த சகவாழ்வுப் பிரகடனம்' – 1995இல் பொதுஜன முன்னணி அரசாங்கத்திற்கும் எல்டிடிஈக்கும் இடையிலான உடன்படிக்கை.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலத்திலும் ஒரே தன்மையில் அமல்படுத்த முடியாதுள்ளது. ஆகவே, புறம்பாக்கப்பட்ட (செபரேட்) படைகளின் நடைமுறைக்குரிய அடித்தளத்தின் மீதான அடிப்படையிலேயே இராணுவ நடவடிக்கையின் செயல்படுத்தும் முறை இருக்க வேண்டும்.

7. இலங்கை அரசாங்கத்தால் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளப்படாத போதிலும், தமது ஆயுதங்களை வைத்திருந்த இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழ்ந்த வேறு தமிழ்க் குழுக்கள் இருந்ததாகச் சந்தேகிக்கப்படுகின்றது. எல்டிடிஈக்கும் இக்குழுக்களுக்குமிடையில் உத்தேசமான மோதல்களைக் குறைப்பதற்காக யுத்தநிறுத்த உடன்படிக்கையில் (உறுப்புரைகள் 1.11இலிருந்து 1.13 வரை) எல்டிடிஈ போராளிகளின் நடமாட்டம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதால், எல்லைகளில் ஏதாவது ஆயுதத் தளவாடங்களின் கைமாற்றத்திற்கு சிறிதளவு சோதனையை மேற்கொள்வதற்காக எல்லைகளைக் காரணகாரியத் தொடர்பில் பிரிப்பது அவசியமாக இருந்தது.

ஐயத்திற்கிடமின்றிப் படைகளைப் புறம்பாக்குவதில் குற்றங்குறைகள் இல்லாமல் இல்லை. பின்னின்று தூண்டுவதால் ஏற்பட்ட சில நிகழ்வுகள் 'சிறந்த நோக்கங்களை' குறைத்து மதிப்பிட்டு அல்லது 'உடன்படிக்கையின் ஆற்றலையும் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளையும்' மீறியதாக இருந்துள்ளன.

உதாரணமாக, கடல் மூலம் 2002 நவம்பர் 16 அன்று இரவு இலங்கைக் கடற்படைக்கும் இயுக குழுவுக்கும் அறிவிக்காமல் மட்டக்களப்பிலிருந்து முல்லைத்தீவுக்குக் கருணா அம்மான் சென்றது, இலங்கை அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கு அக்கறையின்றிப் பாரதூரமான மோதல் சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கக்கூடும்.[14] 2003 பிப்ரவரி 23 அன்று குச்சவெளியில் இதையொத்த பாரிய சம்பவமொன்று இடம்பெற்றது. இச்சம்பவத்தில் இலங்கைக் கடற்படையின் எல்லைப்பகுதியை எல்டிடிஈ போராளிகள் கடந்தபோது, தற்கொலை செய்துகொள்ளப் போவதாகவும் பின்னர்

14. பாதுகாப்பு அமைப்பு அல்லது இலங்கைக் கடற்படை ஆகியவற்றிலிருந்து அனுமதியின்றி இரவில் முல்லைத்தீவை நோக்கி மட்டக்களப்பிலிருந்து எல்டிடிஈ படகில் கருணா அம்மான் நகர்ந்தபோது, அவரையும் குழுவினரையும் தாக்குவதா எனக் கட்டுரையாசிரியரிடம் தொலைபேசியில் கட்டளைகள் கோரப்பட்டபோது, இராணுவரீதியிலான தாக்குதல் சமாதான நடைமுறையைத் தகர்த்து எறிந்துவிடும் என்பதனால், அது மறுக்கப்பட்டது. அனேகமாக, பின்னோக்கிப் பார்த்தால் கருணாவின் வீரதீரச் செயலைக் கொண்டு எல்டிடிஈ அந்நேரத்தில் அதிக மகிழ்ச்சியடைந்தபோதிலும், கருணாவைத் தாக்குவதற்குக் கட்டுரையாசிரியரின் மறுப்பையிட்டு அவர்கள் தற்போது வருத்தமடையக்கூடும்.



பாரிய தாக்குதலொன்றை[15] ஆரம்பிக்கப் போவதாகவும் அவர்கள் பயமுறுத்தினார்கள். இதற்கு ஆயுதப்படைகளிடமிருந்து இதையொத்த பயமுறுத்துகின்ற எதிர்த்தாக்குதல் நடத்தப் பட்டது.

இவை இயுக குழுவால் மீறல்களாக நிர்ணயிக்கப்பட்டன. ஆனால், இத்தகைய சம்பவங்கள் முன்னுரிமை, உடன்படிக்கை மற்றும் சட்ட பூர்வத்தன்மை ஆகியவற்றுக்கு மரியாதையைக் காட்டாமல், எல்லா வழிகளிலும் எல்டிடிஈயினால் மீண்டும் மீண்டும் செய்யப்பட்டன. துரதிர்ஷ்டவசமாக, யுத்தநிறுத்த உடன்படிக்கையில் எல்டிடிஈ அல்லது இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப்படைகளின் இத்தகைய நடத்தைக்கு எதிராகத் தீர்வுகள் இருக்கவில்லை. இது சமாதான நடைமுறையைப் பாதிக்கும் பாரிய பலவீனங்களாகக் கருதப்படலாம். ஏனெனில், அரசாங்கத்திற்கு எதிராக, குறிப்பாகப் பாதுகாப்பு அமைப்புக்கும் இயுக குழுவுக்கும் எதிராக பெருமளவு எதிர்மறையான விமர்சனங்களை இத்தகைய சம்பவங்கள் கொண்டுவந்தன.

கிழக்கில், மாறி மாறி அமைந்திருந்த தமிழ்–முஸ்லிம் குடியேற்றங்களின் காரணமாகப் படைகளைப் பிரிப்பதில் நடைமுறைக் கஷ்டங்கள் இருந்தன. இது முன்னரங்கப் பாதுகாப்பு அமைவிடங்களைத் தெளிவாகப் பிரிப்பதைத் தடுத்தது. ஆகவே, முஸ்லிம்கள் முதன்மையாக வாழ்ந்த குடியேற்றப் பகுதிகளுக்கு எல்டிடிஈ போராளிகள் சில வேளைகளில் நகர்ந்து, மோதல்களை உருவாக்கினார்கள். எல்டிடிஈயுடன் முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழ முடியுமா என்பதில் மனத் தளர்ச்சியிலானதும் சந்தேகத்திலானதுமான உணர்வொன்றை இது உருவாக்கியது. சில மோதல்கள் மரணத்தில் முடிவடைந்துள்ளன (உதாரணமாக, வாழைச்சேனை மற்றும் மூதூர்). இது நாள்பட்ட எதிர்ப்பிலான விரோதத்தை முஸ்லிம்கள் மனத்தில் ஏற்படுத்தியுள்ளது. இதனால் பேச்சுவார்த்தைகளில்[16] மூன்றாம் தரப்பினராக முஸ்லிம் பங்கெடுப்பின் நியாயமான கோரிக்கைக்கு இட்டுச்சென்றுள்ளது. அத்துடன் 2004 டிசம்பரில் முஸ்லிம் சமாதானச் செயலகத்தைத் தாபிப்பதில் முடிவடைந்தது. எனவே இதைச் சாதகமற்ற சூழ்நிலைகளின் சாதகமான விளைவொன்றாகக் கருதப்படலாம்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் உறுப்புரைகள் 1.5 மற்றும் 1.6 ஆகியன ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாகும். முக்கியத்

15. இதையொத்த சூழ்நிலைகள் எழுந்தபோது, எல்டிடிஈயினால் தீர்மான மெடுத்தலில் ஒத்திருக்காத தன்மையானது குச்சவெளிச் சம்பவத்தில் உறுதியாகப் பதிலிறுப்பதற்கு எல்டிடிஈயின் தயக்கத்தினால் நிரூபிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் இலங்கையின் யுத்த வீரரையும் கான்ஸ்டபிளையும் விடுவிக்குமாறு அண்ணளவாக மூன்று வாரங்களுக்கு இயுக குழு கடுமையாகக் கோரிக்கை விடுத்திருந்தது.

16. தாய்லாந்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்பட்ட தீர்மானம் 7, 2003 ஜனவரி 6–9.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தினத்திற்கு 30 நாட்களுக்கு முன்னரே, உறுப்புரை 1இல் உள்ள 'எல்லைகளைப் பிரிப்பதற்காக' தரப்புகளுக்கு உதவும் பொருட்டு முன்னரங்கப் பாதுகாப்பு அமைவிடங்கள் மீதான தகவலை, இயுக குழுவுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கியபோதிலும் எல்டிடிஈ வழங்கவில்லை. பாதுகாப்புக்கு உறுப்புரை 1.6 முக்கியமானதொரு காரணியாகும். ஏனெனில் இரண்டுக்குமிடையில் ஆகக் குறைந்தது 400 மீட்டர்கள் கொண்ட தூரத்தை, முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகள் கொண்டிருக்கவில்லை.[17] எனினும், முல்லைத்தீவு/வவுனியா எல்லையில் உள்ள சில பகுதிகளில், நீண்ட தூரங்களுக்கு முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகள் இருக்கவில்லை என்பதுடன், சமாதான நடைமுறையைத் தகர்ப்பதற்கு இப்பகுதியில் பாரிய பயமுறுத்தல்கள் இன்னுமே உருவாக்கப்படவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இதற்கு மாறாக, பருத்தித்துறையில் இராணுவ முகாம்மீதான தாக்குதலிலும் யாழ்ப்பாண குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் அத்துமீறுவதற்கான பெருமளவு முயற்சிகளிலும் இடம்பெற்றது. இது எல்டிடிஈயினால் தூண்டப்பட்டதாகக் கூறப்படும் தமிழ் மக்களால் நீண்டகாலத்திற்குமுன் தாபிக்கப்பட்ட முன்னரங்கப் பாதுகாப்பு அமைவிடங்கச் விடுக்கப்பட்ட சவால் ஆகும். இதனால் அரசாங்கத்திற்கு அரசியல் சங்கடத்தை விளைவித்துள்ளது. சம்பவத்தின் பின்னர் உடனடியாகப் பருத்தித்துறை முகாமைச் சோதித்தபோது, உயர் பாதுகாப்பு வலயங்களினுள் 'பொதுமக்களின் பிரசன்னத்தை' (எல்டிடிஈ போராளிகள் உள்ளடங்கலாக) கோரிச் சிறுவர்களையும் பெற்றோர்

17. நாகர்கோவில் முன்னரங்கப் பாதுகாப்பு நிலை ஒரு தெளிவான உதாரணமாகும். இது நாளாந்தம் ஒடுங்கிக் கொண்டு வந்தது. முன்னரங்கப் பாதுகாப்பு நிலை மீதான தகராறை இணக்குமாறு இயுக குழுவுக்குக் கட்டுரையாசிரியரின் வேண்டுகோள்கள் வெற்றியளிக்கவில்லை. ஏனெனில், சோதனை செய்வதற்கு (உதாரணம்: வெலிஓயா) இயுக குழு அனுமதிக்கப்படவில்லை. முன்னரங்கப் பாதுகாப்பு நிலை நிர்ணயிக்கப்பட்ட போது, இயுக குழுவின் நிர்ணயங்களை (உதாரணம்: மணிராசகுளம்) எல்டிடிஈ கடைப்பிடிக்கவில்லை. இது இயுக குழுவின் நிர்ணயங்களை ஏளனத்துக்குள்ளாக்கியுள்ளது. இத்தகைய நிர்ணயங்கள் எல்டிடிஈயினால் மறுதலையாகப் பதிலிறுக்கப்பட்ட போது, அரசாங்கம் செயல்திறனற்றது என விமர்சகர்கள் பெயர் சூட்டினார்கள்.

எல்டிடிஈயின்பால் ஒருதலைப்பட்சமானது என இயுக குழுவுக்கும் அனுசரணையாளருக்கும் அவர்கள் பெயர் சூட்டியதுடன், இத்தகைய கோபத்தை எடுத்துக்காட்டுவதற்காக நோர்வே தூதுவராலயத்திற்கு எதிரே பெருமளவு கடுமையான எதிர்ப்புகள் நடத்தப்பட்டன. பலதடவை, இத்தகைய பலவீனங்கள் பற்றி விசாரிக்கப்பட்டபோது, இயுக குழுவினரும் அப்போதைய நோர்வே தூதுவரும் இருப்பிலான பதிலையே கொண்டிருந்தனர். இதைச் சுருங்கச் சொல்லின், கொள்கை வகுக்கின்ற அல்லது நிறைவேற்றுகின்ற அதிகாரங்களை அவர்கள் கொண்டிருக்கவில்லை, ஆனால் விசாரிக்கும்/உதவியளிக்கும்/நிர்ணயிக்கும் அதிகாரங்களையே கொண்டிருந்தனர் என்பதாகும். ஒருவழியில் இது உண்மையாகும். இருந்தபோதிலும், இத்தகைய சம்பவங்களைக் குறிப்பிடுவதைத் தவிர, பேச்சுவார்த்தைகளில் இந்த பலவீனங்களைத் தணிப்பதற்கு தெளிவான முயற்சி இருக்கவில்லை. எப்படியாயினும், எல்டிடிஈயின் பிடிவாதத்தினால் பொதுமக்கள் கூர்ந்து ஆராயும் தன்மையின் முன்னால் அப்போதைய பிரதமரும் பாதுகாப்பு அமைச்சும் இயுக குழுவும் கடுமையாக விமர்சிக்கப்பட்டமை பரிதாபத்துக்குரியதாகும்.



களையும் எல்டிடிஈ தூண்டியுள்ளதாகத் தோன்றியது. எல்டிடிஈயின் உயர்பாதுகாப்பு வலயங்களில் (உதாரணம்: கிளிநொச்சி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, வாகரை, பிற்றுகல, தராவை, கரடியனாறு முகாம் பகுதிகள்) தமிழ் மக்கள் இத்தகைய சுதந்திரத்தை அனுபவிக்கவில்லை என்பதே முரண்பாடானதாகும்.

எல்டிடிஈயின் இத்தகைய நடத்தையை முழுமையாக நிராகரிக்கும் அதேவேளை, அதிகளவு உறுதியான விடயங்கள் ஏற்படும் என்பதையும், அதன்விளைவாக யுத்தநிறுத்த உடன்படிக்கை மூலம் விரைவாகவே நன்மதிப்பை ஈட்டுவதற்கும் எதிர்பார்த்திருந்த எல்டிடிஈயின்மீது சங்கடமும் அழுத்தமும் கொண்டுவரப்பட்டதும் கருத்தில்கொள்ள வேண்டும். ஏதாவது பிரதிபலனை அல்லது நன்மதிப்பை அடைவதில் செயலற்றதன்மையின் காரணமாக விளைந்த ஏமாற்றம் கரிசனைக்கு எடுக்கப்பட வேண்டும்.

இயுக குழுவினால் கொண்டுவரப்பட்ட தொடர்ச்சியான அழுத்தத்தின் காரணமாக, அவர்கள் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளை எவ்வாறு உணர்கிறார்கள் என்பதைக் காட்டுகின்ற வரைபடமொன்றை 2003இல் இயுக குழுவுக்கு எல்டிடிஈ சமர்ப்பித்திருந்தது.[18] அதில் குறிக்கப்பட்டிருந்த சில முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகள் தெற்குப் புறமாக எல்லைகளைக்கூடக் கடந்திருக்கின்றன. இது அநேகமாகத் தவறானதாக அல்லது தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டதாக அல்லது வேண்டுமென்றேயாக இருக்கலாம். எனினும், வடக்கு, கிழக்குக்கு வெளியே காணிகளை அபகரிக்கும் எல்டிடிஈயின் நோக்கங்களின் அறிகுறியாக இது உள்ளதாக அரசாங்கத்திற்கு எதிரான குழுக்களால் பொருள் விளக்கமளிக்கப்பட்டிருக்கலாம். வரைபடம் ஒரு பகிரங்கமான ஆவணமாக வராததால், இது தவிர்க்கப்பட்டது. இது நடைமுறையிலான சந்தேகம் என்பதுடன், எல்டிடிஈக்கு எதிராக, விசேடமாக உத்தேசமான ஈழ எல்லைகளைக் காட்டி எல்டிடிஈயினால் வெளியிடப்பட்ட வரைபடங்களின் காரணமாக அடிக்கடி சுமத்தப்படும் குற்றச்சாட்டுமாகும் என்பதை மறந்துவிடக் கூடாது. உறுப்புரை 1.6இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட காலம் தவணை கடந்ததால், சரியான எல்லைகளை வரைவதற்கு இயுக குழு தவறியிருந்தது. ஆகவே, எல்லைப் பிரச்சினைகள் இன்னுமே அது இருந்தவாறே இருக்கின்றது.

18. 'அத்துமீறலின்' மறைக்கப்பட்ட பயமுறுத்தலொன்றை இணைத்துள்ள இந்த வரைபடத்தைக் கட்டுரையாசிரியர் கண்டுள்ளார். இது வேறு ஏதும் கருத்துப்பரிமாறலின்றி நிராகரிக்கப்பட்டது. எனினும், இது சமாதான நடைமுறைமீது ஏதாவது மறுதலையான பாதுகாப்புத் தாக்கத்தை உருவாக்கவில்லை. ஆனால், போர்வையின் கீழ்த் தப்பிச் செல்ல முடியாததும் வெறுப்பூட்டுவதுமான பிரச்சினையொன்றாகக் கருதப்படுகின்றது. இது எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை நடத்துபவர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு கரிசனையாக விளங்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகைமையை நிறுத்துதலின் பிரகடனத்தில் உள்ளவாறு தவிர்ப்பதையும் அதிகாரங்களின் சமநிலையைப் பராமரிப்பதையுமே உறுப்புரை 1.7 உத்தேசமாகக் கொண்டுள்ளது. புகுவழி – வெளிவழி ஆகிய பகுதிகளை இருதரப்புகளுமே கட்டுப்படுத்துவதனால், காணியின் மீது ஓரளவுக்குத் திருப்திகரமாக உறுப்புரை 1.7 நிருவகிக்கப்பட முடியும். 'ஆயுதமற்ற இலங்கை அரசாங்கத் துருப்புக்கள் மட்டுப்படுத்தப்படாமல் செல்லும் வழி அனுமதிக்கப்பட வேண்டும்' என்பதைக் குறிப்பிடும் உறுப்புரை 1.10 மற்றும், 'ஆயுதமற்றதும், சாதாரண உடையிலானதுமான' தனிப்பட்ட போராளிகளின் நடமாட்டத்தை அனுமதிக்கும் உறுப்புரைகள் 1.11 மற்றும் 1.12 ஆகியன பாதுகாப்புக்கு ஏதாவது பயமுறுத்தல் இருக்காது என்பதை மேம்போக்கானரீதியில் நம்பவைத்துள்ளது.

உறுப்புரை 1.13இன் கீழ், அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் 'ஆயுதமின்றி' எல்டிடிஈ போராளிகள் நடமாட முடியும் என்பதுடன், அதில் அணிவதற்கான உடைகள் பற்றிக் குறித்துரைக்கப்படவில்லை. ஆயுதமின்றி ஆனால் எல்டிடிஈ சீருடைகளில் அவர்கள் நடமாட முடியுமா என்பதை இது கருத்தாகக் கொண்டுள்ளதா? இதுபற்றி கேள்வி எழுப்பப்பட்ட போது, யுத்தநிறுத்த உடன்படிக்கையின் உட்கருத்திலேயே இது கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதும் 'ஆயுதமின்றி, சாதாரண உடைகளில்' நடமாட்டம் அனுமதிக்கப்படும் என்பதுமே பாதுகாப்பு அமைச்சின் நிலையாகும். 'இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில்' இலங்கை அரசாங்கத்தின் பொலிஸார் உத்தியோகபூர்வ உடையை அணிவதற்கு உறுப்புரை 1.10 அனுமதிக்கமாட்டாது என்பதனால், சீருடையில் கிளிநொச்சிக்குச் செல்வதற்காக எல்டிடிஈ முன்னரங்கப் பாதுகாப்பு நிலையைக் கடந்த ஒரேயொரு பொலிஸ் அலுவலர் விடுவிக்கப்படுவதற்கு முன், நீண்ட காலத்திற்கு தங்கவைக்கப்பட்டிருந்தார். எனினும், பிரதேச ஒருமைப்பாடு முழுமையாக இருந்தால், ஆயுதப் படைகளின் இத்தகைய நடமாட்டங்கள்மீது கட்டுப்பாடுகளைக் கொண்டிருப்பதற்கான அவசியம் உள்ளதா என்பது பற்றி வினாவொன்று எழுப்பப்பட்டது. இது நியாயமான விசாரணையாக ஒலிக்கின்ற போதிலும், உறுப்புரை 1.4இன் கீழ்க் கருத்துப் பரிமாறப்பட்ட நடைமுறைக்குரிய விளைவுகள் இவ்விடயம்மீது முடிவுகளைக் கொண்டு வருவதில் கவனத்தை எடுக்க வேண்டும்.

எதிர்பார்க்கப்பட்டவாறு, உறுப்புரை 1.7இன் அமலாக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தோன்றவில்லை. அரசியல் போராளிகளின் நடமாட்டங்களின் போர்வையின்கீழ் வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டிலான பகுதிகளுக்கு ஆயுதங்களும் யுத்தத் தளவாடங்களும் மற்றும் வேறு இராணுவ சாதனங்களும் இடமாற்றப்பட்டதாக ஆயுதப்படைகள் சந்தேகித்துள்ளன. மேலும், இராணுவக் கட்டுப்பாட்டிலான பகுதிகளில் இடம்பெறும் கொலைகளும் ஆட்கடத்தல்களும் எல்டிடிஈயினால் இழைக்கப்பட்ட நடவடிக்கைகள் என இராணுவப் பேச்சாளர் வெளிப்படையாகவே குறிப்பிட்டுள்ளார். யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடுவதற்கு முன்னர்கூட இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் யுத்த தளவாடங்களின் மறைவிடங்களை எல்டிடிஈ கொண்டிருந்தமையே இன்னொரு முக்கியமான கருத்தாகும். இவை அகற்றப்படவில்லை என்பதுடன், இத்தகைய கொலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். எனினும், இலகுவான பாதையை எல்டிடிஈ எடுத்துள்ளதுடன் (இன்னுமே எடுக்கின்றது) இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் பாதுகாப்பு இலங்கை அரசாங்கத்தின் அலுவல் என்றும் இந்நடவடிக்கைகளில் அவர்களின் போராளிகள் சம்பந்தப்படவில்லை என்றும் நம்பவைக்கின்ற விதத்தில் எதிர்வாதம் புரிகின்றது.

உறுப்புரை 1.7இன் பாரிய பிரச்சினைகள் கடல் நடவடிக்கைகளில் தோன்றின. எல்டிடிஈயால் ஆயுதக் கடத்தல் தொடர்பான வெளிநாட்டு மற்றும் உள்ளூர் உளவுத் தகவலைப் பாதுகாப்பு அமைச்சு/இலங்கை கடற்படை பெற்றதுடன், எதிர்நடவடிக்கையையும் எடுத்தது. ஆயுதப் படைகளால் (இவ்வாறாக, இலங்கைக் கடற்படையிலிருந்து) 'வலிந்து தாக்குகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற' மிகவும் முக்கியமான அதிகாரங்களை உறுப்புரை 1.3 கொண்டுள்ளதுடன், இயுக குழுவின் ஊடாக எல்டிடிஈயை ஈடுபடுத்துவதற்குப் பாதுகாப்பு அமைச்சை/இலங்கைக் கடற்படையை நிர்ப்பந்தித்துள்ளது. கடலில் ஈடுபடுவதற்கான அதன் விதிகள் நிறைவேற்றப்பட்டாலன்றி, உறுப்புரை 1.3ஐ அமல் படுத்துவது சாத்தியமானதல்ல என்பதே இலங்கைக் கடற்படையின் நியாயமான தோரணையாகும். இயுக குழுவினூடாக இலங்கைக் கடற்படையின் தாக்குதல் பற்றிய விதிகளையிட்டு எல்டிடிஈக்கு பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. ஆனால், அவற்றை ஏற்றுக் கொள்ள எல்டிடிஈ தயாராக இருக்கவில்லை என்பதுடன், எப்பொழுதுமே அவற்றிலிருந்து தப்பிக்கவே முயன்றுள்ளது. பாதுகாப்புக்கான பிரச்சினையான இது, கடல் நடவடிக்கைகளுக்கு மட்டுமின்றி, பொலிசுக்கும் நீதித்துறை விடயங்களுக்கும்கூட விரிவடைந்திருந்தது.

பலமுறை பகிரங்கமாகக் குறிப்பிடப்பட்டவாறு (உதாரணம்: எல்டிடிஈயின் அரசியல் தலைவர் தமிழ்ச்செல்வன்) இலங்கை அரசாங்கத்தின் இறைமையை எல்டிடிஈ ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுடன், உறுப்புரை 1.3இன்கீழ்த் தற்போது இறைமைக்கு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மரியாதையளிக்குமாறு அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது சாத்தியமில்லை. இறைமையைக் கொண்ட இலங்கையின் பிரதமராக யுத்த நிறுத்த உடன்படிக்கையில் அப்போதைய பிரதமர் கையெழுத்திட்ட போது, இலங்கையின் இறைமையை எல்ரிரிஈயினர் ஏற்றுக் கொண்டிருக்காவிட்டால், யுத்தநிறுத்த உடன்படிக்கையில் அவர்கள் கையெழுத்திட்டிருக்கமாட்டார்கள் என்பதே பாதுகாப்பு அமைச்சினாலும் இலங்கைக் கடற்படையினாலும் எழுப்பப்பட்ட பிரச்சினையாகும். அவர்களது மனத்தைப் பொறுத்தளவில், யுத்தநிறுத்த உடன்படிக்கையில் எல்ரிரிஈ கையெழுத்திட்டுள்ளதால், அதைப் பின்பற்றுவது அவசியமானதாகும். இலங்கைக் கடற்படையைப் பொறுத்தளவில், கடைப்பிடிக்கப்படாமை ஏற்றுக்கொள்ளப்பட முடியாததுடன், உடன்படப்பட்ட இலங்கைக் கடற்படை/இயுக குழு நடைமுறைகளிலிருந்து தந்திரமாக தப்பிக்க, முயல்வதற்கு – இலங்கைக் கடற்படைக்கு – வழிவகுத்தது.

உதாரணமாக, அவதானிக்கப்படாமல் அல்லது கண்காணிக்கப்படாமல் எல்ரிரிஈ கப்பல்களை சமாளிப்பதற்கு தகவலைத் தாமதப்படுத்துவதன் மூலமும் இயுககுவின் பிரச்சன்னமின்மையை அனுகூலத்திற்கு எடுத்ததன் மூலமும் இயுக குழுவை எட்டத்தில் வைப்பதற்கு அவர்கள் முயன்றனர். இது எல்ரிரிஈயின் செயல்படும்விதமும்கூட. சம்பவங்களை முன்கூட்டியே அறிவிப்பதை புலிகளும் தவிர்த்துக் கொண்டதுடன், புகார் கூறுவதற்கே எப்பொழுதும் வழியமைத்தார்கள். இது எல்ரிரிஈ படகுகளின் அழிவுக்கு வழி அமைத்தது. இது தரப்புகளுக்கு இடையிலான உறவை முறித்ததுடன், பலமுறை சமாதான நடைமுறைக்கும் தொல்லையை ஏற்படுத்தியது. இரு தரப்புகளிலான இந்த சூழ்ச்சித்திறன்களைப் பற்றி இயுக குழு அறிந்திருந்ததுடன், ஏறுமாறான சம்பவங்கள் மறுபடியும் ஏற்படுவதைக் குறைந்தபட்சமாக்குவதற்குச் 'சாத்தியமான மோதல்[19] இடம்பெறும் என்ற அறிகுறிகள் இருக்கும்போது அது பற்றி உடனடியாகவே இயுக குழுவுக்கு இலங்கைக் கடற்படையும் எல்ரிரிஈயும் அறிவிக்க வேண்டும்' என அது வேண்டுகோள்விடுத்தது. இலங்கைக் கடற்படை, எல்ரிரிஈ அல்லது இயுககு ஆகியவற்றிடமிருந்து பாதுகாப்பு அமைப்பில் தகவலை அல்லது வேண்டுகோள்களைப் பெறுவதில் நேர இடைவெளி இருந்ததுடன், இது மேற்பார்வை செய்வதில் தவிர்க்க முடியாததொரு வெற்றிடத்தை உருவாக்கியது. எனவே, நடவடிக்கை எடுப்பதில் உள்ள தாமதங்களுக்காகப் பாதுகாப்பு அமைச்சை அல்லது அரசாங்கத்தைக் குற்றங்குறை சொல்வது அவசியமில்லை. மாறாக, வழங்கப்பட்ட சூழ்நிலைகளின் கீழ் முடிந்தளவுக்குச் சிறப்பான வகையில் அது செயல்பட்டது.

19. இயுககு, 27 ஜூன் 03, ஒபிஎஸ், 1679ஆம் இலக்க இயுக குழுவின் கடிதத்தின் பந்தி 7.



இங்கு, வெறுமனே ஒப்பீட்டுக் காரணத்திற்காக, ஜனாதிபதியால் பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்றப் பின்னர் என்ன நடந்தது என்பதை வைத்துப் பின்னோக்கிப் பார்க்கின்ற நோக்கைக் கொண்டிருப்பது பெறுமதிமிக்கதாகும். 2003 நவம்பரிலிருந்து இன்றுவரைக்கும் இலங்கைக் கடற்படைக்கும் கடல் புலிகளுக்குமிடையில் ஒரு கடல் மோதல்கூட இடம்பெறவில்லை. இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கின்ற உளவுத் தகவலும் உறைந்துவிட்டது என்பதாக, இது அல்லது ஆயுதக் கடத்தலை அல்லது விற்பனையை எல்ரிரிஈ நிறுத்திவிட்டது என்பதாக இருக்க முடியாது. அமைச்சு பொறுப்பேற்கப்பட்டதிலிருந்து 2005 இறுதிவரை உப்பாறு என்ற இடத்திற்கு அருகில் எல்ரிரிஈயின் சிறிய ஆயுதத் தாக்குதலுக்கு இலங்கைக் கடற்படை கப்பல் எதிர்நோக்கிய ஒரேயொரு கடல் சம்பவம் 2005 நடுப்பகுதியில் இடம்பெற்றது. மீளத்தாக்காமல் இலங்கைக் கடற்படை திரும்பப் பெற்றமை இதுவே முதல் முறையாகும் (அதாவது யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னர்). எவ்வழியிலும், தகவலைப் பரிமாறிக்கொள்ளுதல் நின்று போயிருந்தால், கடற்படையின் நடவடிக்கையைத் தூண்டுவதற்கு முக்கியமான தகவலைப் பரிமாறிக்கொள்வதன் மூலம், முக்கியமான வேளையில் ஆற்றல்வாய்ந்த சமாதான நடைமுறையைப் பிளவுபடுத்துவதற்குத் தகவல் அளிப்பவர்கள் உள்ளந்தரங்கமான நோக்கங்களைக் கொண்டிருந்தார்களா என்பதை வைத்து ஒருவர் அதிசயப்படக்கூடும்.

இதுவே விடயம் என்றால் (இவ்வாறாகவே இருக்கும் எனக் கட்டுரையாசிரியர் நம்பவில்லை) இத்தகைய சூழ்ச்சித்திறன்களைக் கொண்டு ஏதாவது அரசாங்கம் கவனமாக இருக்க வேண்டும் அல்லது மோதலைத் தவிர்த்துக்கொள்வதற்காகச் சம்பந்தப்பட்டவர்களால் பழக்கப்படுத்திக் கொண்டுள்ளவாறு கிடைக்கின்ற தகவல்மீது வேண்டுமென்றே 'பராமுக'ப் போக்கொன்று இருக்க முடியுமா? இதுவே சரியான நிலை எனக் இக்கட்டுரையாசிரியர் நம்புகின்றார். எப்படி இருந்தபோதிலும், வித்தியாசம் மிகவும் வெளிப்படையானதாகும். இத்தகைய சிக்கலான சூழ்நிலைகளைக்கூட ஐதேமு அரசாங்கம் கையாள வேண்டும் என்பதுடன், அரசியல் ஒருமைப்பாடு, ஒத்துப்போகும் தன்மை, ஸ்திரத்தன்மை ஆகியன நிலவி இருக்காவிட்டால், உண்மையான சமாதானம் மலரும் வரை என்றுமே மறுபடியும் ஏற்படும் சூழ்நிலையாக இது தொடரக்கூடும்.

நிலத்திலும் கடலிலும் ஆயுதபாணியற்ற எல்ரிரிஈ போராளிகளின் நடமாட்டத்தைச் சமாளிப்பதற்குச் செயல்பாட்டு ஒழுங்குகள் இருந்தன. இவற்றில் சில உறுப்புரை 1.7 மற்றும் உறுப்புரைகள் 1.11இலிருந்து 1.13 வரை தொடர்பானவையாகும். எல்ரிரிஈயினால் வரிவிதிக்கப்படுவது தவிர, நிலத்தில் எல்லை கடக்கும் ஒழுங்குகள், இரு சோதனைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாவடிகளிலும் (அரசாங்கம் – எல்டிடிஈ) ஒரே மாதிரியாகவே இருந்தன. யுத்தநிறுத்த உடன்படிக்கையின் ஏனைய உறுப்புரைகளை அமல்படுத்துவதற்கு அடையாள அட்டைகள், பைகள், வாகன அனுமதிப் பத்திரங்கள் போன்றவற்றை சோதிப்பது உதவிக்கரமாகவுள்ளது. ஆரம்பத்தில், நடவடிக்கைகள்மீது முறைப்பாடுகள் (புகார்கள்) இருந்தன. ஆனால், பின்னர் நடவடிக்கை தடையின்றி நகர்ந்தது. ஆனாலும், ஐயத்திற்கிடமின்றி[20] முறைமையான நிருவாகத்தில் நியாயப்படுத்தப்பட முடியாத எல்டிடிஈயின் வரிவிதிப்புமீது விமர்சனம் இருந்தது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்படாதபோதும், ஒருமைப்பாட்டிலான தீர்மானமெடுத்தலின் மூலம், மிகவும் கூருணர்விலான பிரச்சினைகள் இணக்கப்பட்டன. கடல் மூலம் எல்டிடிஈ போராளிகளைக் கொண்டுசெல்வது குறித்து இயுககு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் இலங்கைக் கடற்படை ஆகியன கருத்துப் பரிமாறியதுடன், எல்டிடிஈ படகுகளைப் பயன்படுத்துவதற்கு உடன்பட்டு, செயல் ஒழுங்குகளைத் தயார்படுத்தின. இலங்கைக் கடற்படை, இயுககு, சமாதானச் செயலகம், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுடன் நீண்ட வாதப்பிரதிவாதங்களைக் கொண்ட அமர்வுகளுக்குப் பின்னர், இயுககுழுவின் கடுமையான மேற்பார்வையினதும் இலங்கைக் கடற்படையின் கண்ணோட்டத்தினதும்கீழ்க் கடல் மூலம் போராளிகளைக் கொண்டுசெல்லும்போது மட்டுப்படுத்தப்பட்ட தொகையிலான ஆயுதங்கள், யுத்த தளவாடங்கள் ஆகியவற்றை எல்டிடிஈ கொண்டுசெல்வதற்கு அனுமதிக்கப்படவேண்டுமென 2002 ஆகஸ்ட் 12 அன்று அனைத்து தரப்புகளினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. படைகளின் சமநிலையை உறுதிப்படுத்துவதற்காக வழங்கப்பட்டதொரு நேரத்தில் இரு மாகாணங்களுக்கிடையில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கும் மற்றொன்றிலிருந்து ஒன்றுக்கும் கொண்டு செல்லப்படுவதற்கான ஆகக்கூடுதலான எண்ணிக்கை 500 என மட்டுப்படுத்தப்பட்டது.

உறுப்புரை 4.3இன்படி, யுத்தநிறுத்த உடன்படிக்கையை முறைமையாக மாற்றாமல், உத்தியோகபூர்வமான உடன்படிக்கையால் உறுப்புரை 1.7இன் மீறலாக இது பொருள் விளக்கமளிக்கப்பட்டிருக்கக்கூடும். ஆனால், வெற்றிகரமான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் இத்தகைய அபாயத்தை எடுப்பதும்

20. ஒருமுறை 25,000 எல்டிடிஈ போராளிகளைப் பராமரிப்பதற்கு இத்தகைய வரிவிதிப்பு அவசியமானது என மட்டக்களப்பில் கட்டுரையாசிரியரிடம் கருணா அம்மான் குறிப்பிட்டார். இத்தொகை மிகைப்படுத்தப்பட்டதொன்று. ஆனால், அனேகமாக சமாதானத்தைச் சந்தேகிக்க வைக்கும் விதத்தில் பாரிய 'இராணுவத்தை' அது பராமரிக்கின்றது என்பதன் எடுத்துக்காட்டாக இது கருதப்படலாம்.



நேர்மையின்மையும் அவசியமானதாகும். அவசியமற்ற தாக்குதலையிட்டு இலங்கைக் கடற்படை அச்சமுறும் அளவுக்கு, இலங்கைக் கடற்படையின் அவசியமற்ற தாக்குதலுக்குச் சமஅளவில் எல்டிடிஈயும் அச்சமடைந்தது. இத்தகைய அச்சத்துடன், ஒருவரில் ஒருவர் நம்பிக்கையை வைப்பதும் தொடர்பைக் கொண்டிருப்பதும் முன்னர் ஒருபோதுமே நேருக்குநேர் பார்க்காத இரு குழுக்களுக்குமிடையில் மாபெரும் தன்னம்பிக்கையாகவும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வெற்றியாகவும் இலகுவில் கணிக்கப்பட முடியும்.

இந்த ஒழுங்கினைப் பாதுகாப்பு அபாயமாக ஒருவர் இலகுவில் பொருள்விளக்கமளிக்க முடியும் என்றபோதிலும், இது பாதுகாப்பு அமைச்சின் எண்ணமல்ல. இத்தகையதொரு ஒழுங்கு இல்லாதிருந்தால், பின்னர் இடம்பெற்ற சம்பவங்களால் (உதாரணம்: 2005இல் கௌசல்யனின் கொலை) நிரூபிக்கப்பட்டவாறு, பாரிய ஆபத்துகளுடன் சிங்களவர்கள் பெரும்பான்மையாகக் கொண்ட பகுதிகள் ஊடாக எல்டிடிஈ போராளிகளைக் கொண்டுசெல்வதற்கு இலங்கை அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கக்கூடும். சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில், எல்டிடிஈ போராளிகளின் எதிரியாகத் தீவிரப் போக்குடைய ஒருவர், பாதிக்கப்பட்ட சிங்களவர் ஒருவர் அல்லது துணை இராணுவங்களைச் சேர்ந்த ஒருவராக இருக்கவேண்டும் என்ற அவசியமின்றி, இன்னொரு தீவிரவாதத் தமிழர் ஒருவராகக்கூட இருக்க முடியும்; உறுதியற்ற பாதுகாப்புச் சூழல் ஒன்றில், இத்தன்மையில் ஒப்பிடத்தக்க ஆபத்துகளை எடைபோடுதல் அவசியமானதாகும். சட்டபூர்வமாகத் தீவிர உணர்வில் தவறானவையாக விளங்கினாலும் கூட, விசேடமாக தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு மரபு ரீதியற்ற தீர்மானங்கள் எடுக்கப்படத்தான் வேண்டும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இத்தகைய பாதுகாப்பை வழங்குவது காணப்படவில்லை எனச் சமாதானச் செயலகத்தின் சம்பந்தப்பட்டவர்களால் அறிக்கையிடப்பட்டதாகக் கூறப்படும் அண்மையக் கருத்தானது, இருதரப்புகளுக்குமிடையில் எவ்வாறு நம்பகத்தன்மை படிப்படியாக அழிந்தது என்பதைக் காட்டுகின்றது. கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கையானது உடனடியான கடந்தகாலத்தில் செயல்களின் கட்டாயத்திலும் மறதியிலும் மனம் ஊக்கம்கெடச் செய்யும் என்பதையும் இது காட்டுகின்றது. யுத்தநிறுத்த உடன்படிக்கை ஓர் அடிப்படை உடன்படிக்கை என்பதே ஐதேமுவின் எண்ணமாகும். இதிலிருந்தே நம்பிக்கை, தன்னம்பிக்கை, தைரியம், சாமர்த்தியம் ஆகியன திட்டமிடப்படவேண்டும். கட்டாயத்தின்கீழ்ச் சவால்களுக்கு முகங்கொடுத்தல் ஐதேமுவின் சமாதானத்தை ஏற்படுத்துபவர்களுக்கு இன்னொரு மாபெரும் சவாலாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனினும், மீளமீள இடம்பெற்ற கடல் சம்பவங்கள் கடல் புலிகளுக்குப் பயமுறுத்தலை ஏற்படுத்தியபோது, கிழக்குக் கடலில்[21] 200 மைல் எல்லையிலிருந்து 'கடல் ஒழுங்கை' ஒன்று தமக்கு அவசியம் என இயுக குழுவுக்கு உத்தியோகபற்றற்ற முறையிலும் முறைசாராரீதியிலும் அவர்கள் அறியப்படுத்தினர். அது உடனடியாகவே மறுக்கப்பட்டதனால் கருத்துப் பரிமாறலுக்கு எடுக்கப்படவில்லை.

சமாதான நடைமுறைத் தொடர்பிலான பிரயாணத்திற்கு அல்லது வெளிநாட்டுக்குப் பிரயாணம் செய்வதற்குக் கிளிநொச்சியிலிருந்து வேறு மாவட்டங்களுக்கும் திரும்பவும் கிளிநொச்சிக்கும் எல்டிடிஈயின் உயர் மட்டத் தலைவர்களைக் கொண்டுசெல்வதற்கு விமானப் பயணத்திற்காக இத்தகைய ஒழுங்குகள் தயார்படுத்தப்பட்டன. முழுமையான ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி உத்தியோகபூர்வ அறிவிப்பு (வழமையாக எல்டிடிஈக்கு இயுக குழுவினால் வாய்மொழி மூலம் வழங்கப்படும்) இல்லாதிருந்தபோதிலும், எல்டிடிஈ விமானப் பயண வசதியைப் பயன்படுத்தியமை ஆலோசனைகளின் ஆகக் குறைந்தளவையாவது எல்டிடிஈ ஏற்றுக்கொண்டுள்ளது என்பதே மறைமுகமான கருத்தாகும். இந்நடவடிக்கைகள் 'எல்டிடிஈக்கு நாடு விற்கப்படுகின்றது' என எதிர்த்தரப்பினால் பலமாக விமர்சிக்கப்பட்டது. சந்திரிகா அரசாங்கத்தால் எல்டிடிஈக்குக் காட்டப்பட்ட இதையொத்த பெருந்தன்மையானது இத்தகைய செயல் ஒழுங்குகள் எந்தளவு பொருத்தமானவை, அவசியமானவை என்பதை நிரூபிக்கின்றது.

2003 மார்ச் 10 அன்று கடலில் நடைபெற்ற சம்பவத்திற்குப் பின்னர், எதிர்காலத்தில் கடலில் ஏதாவது ஏறுமாறான சம்பவங்கள் இடம்பெறாது என்பதை உறுதிப்படுத்துவதற்குத் திட்டமொன்றைத் தயார்படுத்துவதற்காக ஹக்கோனேவில் சமாதானப் பேச்சுவார்தை நடத்துபவர்கள் மீண்டும் தீர்மானித்தார்கள். இது இயுக குழுவால் பொறுப்பேற்கப்படவிருந்தது. முதலாவது வரைவு முன்வைப்பை இயுக குழுவின் தலைவரால் 2003 ஏப்ரல் 1 அன்று பாதுகாப்பு அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சரின் பார்வைக்கு அனுப்பப்படாமலேயே இக்கட்டுரையாசிரியரால் அது நிராகரிக்கப்பட்டதனால், அது ஒருபோதுமே பகிரங்க அறிவுக்கு வரவில்லை. இந்த பலவீனமான

21. இப்பிரதிநிதித்துவம் வேறு எங்கும் பதியப்படவில்லை. இது மேஜர் ஜெனரல் ட்ரக்வி ரெலிபஸன் (இயுககு), இலங்கைச் சமாதானச் செயலகத்தின் அப்போதைய பணிப்பாளர் நாயகம் மற்றும் கட்டுரையாசிரியர் ஆகியோருக்கு மட்டுமே தெரியும். யுத்தநிறுத்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கும், சர்வதேசச் சட்டத்திற்கும் எதிராக இலங்கையின் இறைமைத்துவத்தை அத்துமீறுகின்றது என்பதனால், ஆலோசனையைக் கட்டுரையாசிரியரும் சமாதான செயலகத்தின் பணிப்பாளரும் உடனேயே நிராகரித்ததினால் இதையிட்டுக் கருத்துப் பரிமாறப்படவில்லை. அதாவது எல்டிடிஈ எடுக்காததாக அறியப்பட்ட பின்தொடர் நடவடிக்கைகூட இருக்கவில்லை.



வரைவு ஆவணத்தைத் தொடர்ந்து இரண்டாவதும் மூன்றாவதுமான வரைவுகள் வந்தன. இவை சமாதானச் செயலகம், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, இலங்கைக் கடற்படை, பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றால் பரிமாறிக் கொள்ளப்பட்டதுடன், செயல்பாட்டு ஒழுங்குகளை அண்ணளவாக முடிவாக்குவதற்குமுன் நுட்பமாக ஆராயப்பட்டது.

திருத்தப்பட்ட இறுதி வரைவு (வெளிநாட்டு அலுவல்கள் அமைப்பின் பிரதிநிதிகளின் கூற்றுப்படி இது சர்வதேசச் சட்டங்களையும் கடல் சமவாயங்களையும் மீறவில்லை) மீதான கருத்துப் பரிமாறல்களில் இலங்கைக் கடற்படை உடன்பட்டபோதிலும், திரிபுபடுத்தப்பட்ட அளவில் பரிமாறிக்கொள்ளப்பட்ட ஆவணம் (மேலே குறிப்பிடப்பட்ட சம்பந்தப்பட்ட ஆவணம், சம்பந்தப்பட்டவர்கள் மத்தியில் மட்டுமே பரிமாறிக்கொள்ளப்பட்டது) கசிந்ததன் காரணமாக, இதை மேலும் பின்தொடந்து செல்ல முடியவில்லை.[22] இடைநிறுத்தப்பட்டதால், அது செயல்பாட்டு ஒழுங்குகளின் இயற்கையான மரணத்தைச் சாத்தியப்படுத்தியது. எனினும், அதன் எஞ்சிய பகுதிகள் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை நடத்துவோருக்கு வழிகாட்டியாகச் சேவையாற்றும். மீண்டும், பலதரப்பட்ட ஆழங்காண முடியாத காரணங்களின் நிமித்தம் முழுமையான அர்ப்பணிப்பு இன்றிச் சமாதான நடைமுறையொன்றை நிருவகிக்கும் சிக்கல்தன்மையை இது நிரூபிக்கின்றது.

உறுப்புரை 1.8இன்படி, யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டு, ஒரு மாதத்திற்குள் ஏனைய தமிழ் துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்களைக் களைதல், இத்தகைய துணை இராணுவக் குழுக்களுக்கு, விசேடமாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு (ஈபிடிபி) பாரிய பாதுகாப்பு ஆபத்துகளை உருவாக்கியது. பெரிதுமே யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிகளிலும் கிழக்கின் சில பகுதிகளிலும் ஆதாரத்தைக் கொண்டிருந்த இது, எல்டிடிஈயினால் பிரதானமாக விமர்சிக்கப்பட்டது. எதிர்ப்புகள் மூலம் யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிகளில் இருந்து ஈபிடிபி போராளிகளைத் தூக்கி எறிவதற்கு இலங்கை அரசாங்கத்தின் மீது அனைத்துச் செல்வாக்கையும் எல்டிடிஈ பயன்படுத்தியது. அத்துடன், ஈபிடிபிக்குச் சிறிதளவு பாதுகாப்புப் போர்வையை அளித்த இலங்கைக் கடற்படையைத் தற்காலிகமாக முகாம் தாபிக்கப்பட்டிருந்த பிரதேச சபைக் கட்டடத்திலிருந்து வெளியேற்றுமாறு கோரிக்கை விடுத்தது.

22. விசேடமாகச் சமாதான நடைமுறையொன்றில் பாதுகாப்புத் தொடர்பாக ஆவணப்படுத்தலின் விஸ்தாரமான பங்கெடுப்பின் மறுதலைத்தன்மையை இது நிரூபித்ததுடன், ஏற்கனவே ஆயுதப்படைகளுடனும், ஏனையவற்றுடனுமான வரைவு யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பங்கெடுப்பின்மையை நியாயப்படுத்தியது. மேலும், 'கசியச் செய்தவரின்' விசுவாசத்தையும் ராஜபக்தியையும் இட்டு அது கேள்வி எழுப்பியதுடன், ஆலோசனைகள்மீது அமைதியானதும் உருமறைப்பிலானதுமான எதிர்ப்பையும் எடுத்துக் காட்டியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிராந்தியத்தில் பெருமளவு ஈபிடிபி செயல்பாட்டாளர்கள் (உதாரணமாக, கிழக்கில் கொல்லப்பட்ட ஆலையடிவேம்பு பிரதேச சபைத் தலைவர், யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட கரவெட்டிப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர், கொழும்பில் கொல்லப்பட்ட ஈபிடிபியின் ஊடகச் செயலாளர் மற்றும் யாழ்ப்பாண அபேட்சகர் - வேட்பாளர்) கொல்லப்பட்டனர். இது மற்ற தமிழ் அரசியல் குழுக்களுக்கு பன்மை நிலையிலான அரசியலைத் தடைசெய்கின்றது. தமது இழப்புகளுக்கு நிராயுதபாணியாக விளங்கியமை காரணம் எனக் கூறிய அதேவேளை எல்டிடிஈ மீதே இக்கொலைகளுக்கான பொறுப்பை ஈபிடிபி சுமத்தியுள்ளது. சாத்தியமான அளவுக்கு ஈபிடிபியின் தலைவர்களுக்கும், போராளிகளுக்கும் ஆயுதப் பாதுகாப்பை பாதுகாப்பு அமைப்பும், பொலிசும் வழங்கின. இதை எல்டிடிஈ விரும்பவில்லை. ஐயத்திற்கிடமின்றி, எல்டிடிஈயின் தாக்குதல் சக்தியுடன், விசேடமாக யாழ்ப்பாணத்தில் இத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகள் தவறாகக் கருதப்பட முடியாது.

உறுப்புரை 1.8இன்படி ஆயுதங்களை மீளளிக்கும் (திருப்தி அளிக்கும்) தேவை பற்றி ஈபிடிபிக்கு அறியச் செய்யப்பட்டபோது, இயுக குழுவின் முன்னிலையில் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மற்றும் வவுனியா ஆகியவற்றில் 2002 மார்ச் 23 அன்று சிறிதளவு ஆயுதங்களும் யுத்தத் தளவாடங்களும் மீளளிக்கப்பட்டதுடன், எஞ்சியவற்றுடன் கட்சியின் கருத்துவேறுபாடு கொண்டவர்கள் ஓடிவிட்டார்கள் எனப் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்தது. வடக்கிலும் கிழக்கிலும் சில துணை இராணுவப் போராளிகள், பெரும்பாலும் இந்த கருத்து வேறுபாட்டைக்கொண்ட குழுக்கள் ஆயுதங்களுடன் நடமாடுவதாக இயுக குழுவுக்கு எல்டிடிஈ முறைப்பாடுகளைச் செய்துள்ளது!

இந்தக் குழுக்களின் தாக்குதலுக்கு எதிர்வினையாக எல்டிடிஈயினால் ஏதாவது பழிக்குப் பழி வாங்கும் நகர்வுகளைத் தவிர்ப்பதற்கும், நிலம், மொழி, கலாசாரம் மற்றும் தொடர்புகளையும் அறிந்துவைத்திருந்த, எல்டிடிஈக்கு எதிரான குழுக்களை ஒதுக்கி வைப்பதற்கும் அவசியமாக உறுப்புரை 1.8க்கான முதன்மை காரணியாக இருக்கலாம். ஆயுதப்படைகளுடன் ஒன்றிணைந்துள்ள தமிழ் துணைப்படைக் குழுக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து வெளியிடத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்ற யுத்தநிறுத்த உடன்படிக்கையில் உள்ள மேற்கோள் இக்காரணத்தை நியாயப்படுத்துகின்றது.

## நகர்வுக்கான சுதந்திரம்

உறுப்புரை 1.10இல் ஆயுதப்படைகளுக்குச் செய்யப்பட்ட ஒழுங்கானது நகர்வுகளுக்கு ஏ 9 வீதியைப் பயன்படுத்துவது பற்றியதாகும். 2002 ஏப்ரல் 8 அன்று வீதி திறக்கப்பட்டதுடன், இதற்குச் சாட்சிபகர்வதற்குச் சுமார் 30,000 மக்கள் இருந்தனர். காலவரைக்குள் சாத்தியமானளவு சரிவர யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமல்படுத்தப்படுவதை அவதானிப்பதற்கான மக்களின் ஆர்வத்தை இது காட்டியது. பொதுஜன முன்னணி அரசாங்கம்கூட அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தியபோது இதையும் இதற்கு மேலேயும் உடன்பட்டதை நினைத்துப்பார்க்க வேண்டும்;[23] ஆனால், வீதியைத் திறப்பதில் அது வெற்றியடைவதற்குத் தவறியது. இது செய்யப்பட்டிருந்தால், கப்பல், விமானத்தின் மூலம் ஆட்களையும் பாவனைப் பொருட்களையும் இடமாற்றியதற்காகச் செலவழிக்கப்பட்ட பாரிய தொகையிலான அரசாங்கப் பணத்தை மீதப்படுத்தியிருக்க முடியும். எனினும், தமது உயிருக்கு ஆபத்தானது என எண்ணியும் வடக்குக்கான மிகவும் ஆபத்தான வழி என இதைக் கருதியதும் இந்த ஆலோசனைக்கு ஆயுதப்படைகள் சார்பாக இருக்கவில்லை.

இது எல்டிடிஈயினாலும் ஏனையோரினாலும் வெளிப்படுத்தப்பட்ட நேர்மையானதாக இருந்தாலும்கூட எல்டிடிஈ மீதான ஆயுதப்படைகளின் சந்தேகத்தை நிரூபிப்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். இராணுவ வீரர்கள் (அதாவது வெலிஓயாவில்) அலைந்து திரிந்தபோதும், கிளிநொச்சியிலும் பட்டிருப்பிலும் சீருடையில் பொலிஸ் அதிகாரிகள் காணப்பட்டபோதும் எல்டிடிஈ நடந்துகொண்ட விதத்தை தொடர்ந்து இந்த முனைவை ஏற்றுக்கொள்வதற்குப் பாதுகாப்பு அதிகாரிகளை நியாயமான முறையில் கலவரப்படுத்தியிருக்கும். மேலும், அம்பாறை மாவட்டத்தில் பதினைந்து வருடங்களுக்குமுன் சரணடைந்த 600க்கு மேற்பட்ட பொலிஸார்[24] கொல்லப்பட்டதை அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

தமது குடும்ப உறுப்பினர்களிடம் திரும்பிச் செல்வதற்கும் அரசியலில் ஈடுபடுவதற்கும் நிராயுதபாணியிலான எல்டிடிஈ போராளிகளுக்கு வழங்கப்பட்ட வசதிகளைப் பற்றி உறுப்புரைகள் 1.11இலிருந்து 1.13 வரையில் குறிப்பிடப்படுகிறது. இவை பாதுகாப்பு தலையீடுகள் என்பதுடன், துரிதப்படுத்தப்படும்போது, வழமைப்படுத்தப்பட்ட தலையீடுகளாக விளங்கும். வேறு எதிர்க் குழுக்களிடமிருந்து பய முறுத்தல்கள் இல்லை என்ற உறுதிமொழியொன்றை இச்செயல்பாடு

23. ஜனாதிபதி செயலகத்தினால் 4.1.1995 தேதியிடப்பட்ட பத்திரிகை வெளியீட்டின் பத்தி 3, 'யாழ்ப்பாணத்திலிருந்தும், யாழ்ப்பாணத்திற்கும் இரு அடைதல் வழிகள் அதாவது ஆனையிறவு மற்றும் சங்குப்பிட்டி ஆகியவற்றில் திறக்கப்பட வேண்டும்' என அரசாங்கக் குழு சுட்டிச் சொல்லியது எனக் குறிப்பிட்டது. யாழ்ப்பாண குடாநாட்டின் பாதுகாப்பை ஆபத்திற்கு உள்ளாக்கிக்கூட யாழ்ப்பாணக் கடல் ஏரிக்குக் குறுக்காக எல்டிடிஈக்கு அடைதலை வழங்குவதே இதன் அர்த்தமாகும்.

24. சிங்களப் பாடல்: சந்தருவன் மத்துகம பண்டார, பக். 233.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவசியப்படுத்துகின்றது. ஆயுதங்களை விட்ட பின்னரும்கூட, எல்டிடிஈ ஆதிக்கம் செலுத்தும் பகுதிகளுக்கு ஏனைய எதிர்க்குழுக்கள் நகர முடியாது என்பதே இந்த ஒழுங்கின் முரண்பாடாகும். ஆகவே, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே அவர்கள் அரசியல் நடவடிக்கைகளை மட்டுப்படுத்த வேண்டும் என்பதுடன், எல்டிடிஈ தீவிரப் போக்காளர்கள் எனக் கூறப்படுபவர்களால் இழைக்கப்படும் பயமுறுத்தலுக்கும் முகங்கொடுக்க வேண்டும். இந்தப் பன்மைத்தன்மை சாராத போக்கும் பாகுபாடும் பாரிய பாதுகாப்புப் பயமுறுத்தலாகவும் ஜனநாயகத்திற்கு எதிரான நடத்தையாகவும் எல்டிடிஈக்கு எதிரானவர் களினால் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இது சமாதான நடைமுறை யில் முன்னேற்றத்தைப் பாதித்தது. ஏனெனில், விசேடமாகத் தெற்கிலும் பொதுவாக மேற்கு நாடுகளிலும் உள்ள சகல பாதிக்கப்பட்ட குழுக் களும் இது தொடர்பில் எதிர்மறையான பிரசாரத்தையே வழங்கின.

நல்லதாகவும் கெட்டதாகவும் தோன்றும் பாதுகாப்புச் சூழ்நிலைகள் பல இருந்தன. பாகுபாடற்ற நகர்வின் மீது கட்டுப்பாட்டை உறுதிப் படுத்துவதே உறுப்புரை 1.11இலிருந்து உறுப்புரை 1.13 வரை அமல் படுத்துவதற்கான ஆரம்ப எதிர்வினையாகும். எல்டிடிஈ, இராணுவச் சீருடைகளை அணிவதை வற்புறுத்தியதன் மூலம் பிரச்சினைகளை உருவாக்கிய கழிசடையர் இருந்தார்கள். இது சோதனைச் சாவடிகளில் ஆயுதப்படைகளுக்கு வெறுப்பூட்டியது.

கடுமையான கட்டுப்பாடுகளின் காரணமாக ஆரம்பத்தில் இடம் பெறாத போதிலும், பின்னர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு புலிகள் ஆயுதங்களையும் யுத்தத் தளவாடங்களையும் இடமாற்றம் செய்ததாகக் கூறப்படுகின்றது. ஐயத்திற்கிடமின்றி, யுத்தநிறுத்த உடன் படிக்கை கையெழுத்திடப்பட்டபோது, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில், விட்டுச் செல்லப்பட்ட ஆயுதங்களையும் ஆயுதத் தளவாடங் களையும் கொண்ட மறைவிடங்களை எல்டிடிஈ கொண்டிருந்தது என்பதில் சந்தேகமில்லை. அரசியல் அதிகாரிகள், புலனாய்வுத் துறை யினர், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆயுதப்படைகளுக்கு நெருக்கமாகவுள்ள நபர்களின் கொலைகளின் எண்ணிக்கை, இத்தகைய சட்டவிரோதமான மறைவிடம் அல்லது இடமாற்றங்களை மறைமுக மாகவும் உறுதிப்படுத்தப்படுத்தக்கூடிய வாதத்தை ஏற்படுத்தி இருக் கிறது. எனினும், இதுபோன்ற சம்பந்தத்தை எல்டிடிஈ மறுத்துள்ளதுடன், இக்குற்றச்சாட்டுக்கள் குறித்து இன்னும் உறுதியாக நிரூபிக்கப்பட வேண்டியுள்ளது.

அவசியப்பட்டால் இராணுவ நடவடிக்கையில் தமது அரசியல் போராளிகளைப் பயன்படுத்துவதற்கு எல்டிடிஈக்கு பயணத் தளர்வு ஒரு



வசதியை வழங்கியுள்ளது என்ற ஆயுதப்படைகளின் முறைப்பாடு (புகார்) ஏற்றுக்கொள்ளப்பட முடியும். இது பாதுகாப்புக்கு மறுதலையான (எதிர்மறையான) விரும்பத்தகாத விளைவுகளுக்கு உடனடிக் காரணமாகி யுள்ளது. மேலும், ஆயுதப்படைகளின் நோக்கிலிருந்து சிவிலியன் நிர்வாகம் மீதான பிடியை இராணுவம் இழந்தமையினால், அது முறைப்படியான வழமைக்குத் திரும்புதலைப் பாதித்துள்ளது. ஏனெனில் இத்தகைய வெற்றிடம் எல்டிடிஈயின் அரசியல் போராளிகளால் நிரப்பப்பட்டது. இது பாதுகாப்புத் தாக்கத்தைக் கொண்டிருக்கும் அதேவேளை, விதியாக வழமைக்குத் திரும்புதலின் இறுதியிலான விளைவு, இராணுவ எண்ணிக்கையைக் குறைப்பதாகவே இருக்க வேண்டும் என ஒருவர் வாதாட முடியும். உறுப்புரை 1.13இன்கீழ் எல்டிடிஈயின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வேறு குழுக்கள் பரஸ்பரம் சென்றுவரமுடியாத நிலை, தென்னிலங்கையின் அரசியல் அக்கறை சமாதான நடைமுறை மீது எதிர்மறையான வினையை ஏற்படுத்தியது. இதனால், ஐதேமுக்குதான் அடி கிடைத்தது.

## பொலிஸ், நீதித்துறை நடவடிக்கை

யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்படுவதற்குமுன் எல்டிடிஈ ஆதிக்கம் செலுத்திய பகுதிகளில் பொலிஸ் கடமைகளில் பதினேழு பொலிஸ் நிலையங்கள் சம்பந்தப்பட்டிருந்தது, யுத்தநிறுத்த உடன் படிக்கையின் பின்னர் பொலிஸாரின் எண்ணிக்கையும் அவர்களது நடவடிக்கைகளும் அதிகரித்தன. உள்ளூர்மயப்படுத்தப்பட்ட வழக்கு களில் விரைவான எல்டிடிஈ பொலிஸ் நடவடிக்கை இருந்தது. ஆனால், தென்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டபோது அவ்வாறாக இருக்கவில்லை. பாதுகாவலுக்குத் தென்பகுதி மக்கள் கொண்டு செல்லப்பட்டபோது முடிவுக்காக நீண்டகாலம் காத்திருக்க வேண்டியிருந்தது. இந்தத் தாமதம் அரசாங்கம், இயுக குழு மற்றும் எல்டிடிஈ ஆகியவற்றுக்கு எதிராகப் பெருமளவு விமர்சனங்களைக் கொண்டுவந்தது. எனினும், இலங்கைப் பொலிஸாருடன் நேரடியாகவன்றி, ஆனால் இலங்கை அரசாங்கத்தின் நிர்வாகத்துடன் ஒத்துழைப்பதற்கு அவர்கள் முயன்றுள்ள சில சம்பவங்கள் உள்ளன. உதாரணமாக, மன்னாரின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் கொலைசெய்யப்பட்ட சில சிங்களவர்கள் சம்பந்தப்பட்ட சம்பவத்தில், இலங்கைப் பொலிஸார் இன்றி, வவுனியா அரசாங்க அதிபருடன் எல்டிடிஈ பொலிஸ் ஒன்றிணைந்திருந்தமையை ஒருவர் மேற்கோள்காட்ட முடியும்.

பொலிஸிலும், இராணுவத்திலும் உள்ள சில புலனாய்வு ஆளணி யினரை எல்டிடிஈ கொலைசெய்தபோது, பகைமை உணர்வுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுந்தன. விசேடமாக வடக்கிலும் கிழக்கிலும் வதிவிடங்களைக் கொண்ட புலனாய்வுத் தகவல் அளிப்பவர்களைச் சம்பந்தப்படுத்தும் பெருமளவு வேறு கொலைகள் இடம்பெற்றுள்ளன. இக்கொலைகளில் ஏதாவது சம்பந்தத்தையிட்டுக் கருணா அம்மான் மறுத்துரைத்தபோதும், இந்நிகழ்ச்சிகளுக்கு அவரே பொறுப்பு எனப் பொதுவானதொரு கருத்து நிலவியது. இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர் களால் பயமுறுத்தப்பட்ட சில புலனாய்வுத் தகவல் அளிப்பவர்களுக்கு சாத்தியமான அளவுக்குப் பாதுகாப்புப் போர்வை வழங்கப்பட்ட போதிலும், இக்கொலைகளுக்குப் பின்னர் நடவடிக்கை இன்மைக்காக இலங்கை அரசாங்கம் பெரிதுமே விமர்சிக்கப்பட்டது. சில விடயங் களில், புலனாய்வுத் தகவல் அளிப்பவர்களும் அதிகாரிகளும்கூட மிகவும் முன்னேற்பாடற்ற தன்மையில் நடந்துகொண்டதால் அவர்களைத் தாக்குவது எல்டிடிஈக்கு இலகுவாக இருந்தமை வெளிப்படையாக இருந்தது. 2003 நவம்பரில் பாதுகாப்பு மற்றும் உள்ளக அமைச்சுகளை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் கொல்லப்பட்ட புலனாய்வு அதிகாரிகள் மற்றும் தகவலளிப்பவர்களின் எண்ணிக்கை பலமடங்கு அதிகரித்துள்ளன. அவருக்குக்கீழ் இருந்ததை விட, ஐதேமுவின்கீழ் அமைச்சர்கள் இருந்தபோது அவை சிறப்பாக நிருவகிக்கப்பட்டிருக்கும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னர் நீதித்துறை முறைமையும் விரிவாக்கப்பட்டது. ஆனால், எல்டிடிஈ பொலிஸின் விடயத்தில் போல, உடன்படிக்கைக்கு முன்னர் இருந்தே அது செயல்பட்டு வந்தது. சட்டத்தில் பயிற்றுவிக்கப்பட்ட எல்டிடிஈ நீதிபதிகளும் வழக்கறிஞர் களும் எல்டிடிஈ நீதிமன்றங்களில் பணியாற்றினார்கள். எல்டிடிஈ பகுதிகளுக்காகச் சட்டக் கருவிகள் எழுதப்பட்டுள்ளதுடன், அவை உபயோகத்திலும் உள்ளன. ஒருவழியில், இவ்வாறான ஒழுங்குகளைக் கொண்டிருப்பது இப்பகுதிகளில் தொழிற்படாத பொலிஸ் சேவையும் நீதித்துறையும் மாற்றீடு செய்யப்பட்டுள்ளன. எனினும், அவை செயல் படும் தன்மையைப் பார்க்கும்போது அவை தென்பகுதியிலிருந்து வருபவர்களுக்கு எதிரான சில கடினமான போக்குகளையே காட்டு கின்றன. உள்ளூர்வாசிகளைப் பொறுத்தளவில், விரைவான நீதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், நீதி வழங்கப்பட்டுள்ளது மட்டுமன்றி வழங்கப்பட்டுள்ளதாகத் தோன்றுகின்றது, எந்த அளவுக்கு நீதி வழங்கப் பட்டுள்ளது என்பதையொட்டி மேலும் ஆராயப்பட வேண்டும்.

பொதுவாக, மனிதப் பாதுகாப்புக்கும் சட்ட ஒழுங்கிற்கும் பொலிஸ் சேவையும் நீதித்துறைச் செயல்பாடும் மிகவும் முக்கியம். ஆனால் பொலிஸ் அமைப்பு போதுமான அளவு இணைந்து செயலாற்றவில்லை என இக்கட்டுரையாசிரியர் நம்புகிறார். செயலாக்கத்திற்கான தேவை,



தொடர்பாடல் சிக்கல்கள், அரசாங்கப் பொலிசுக்கும் தாபிக்கப்பட்ட கட்டமைப்புகளுக்குமிடையில் நம்பிக்கையின்மை ஆகியவற்றின் காரணமாக இவை முக்கியம் எனவும் கட்டுரையாசிரியர் நம்புகின்றார். எனினும், பேச்சுவார்த்தை மேசையில்கூட இதுபற்றி போதுமான அளவு கருத்துப் பரிமாற்றம் இல்லை. அநேகமாக, இது ஓரளவுக்கு முதிர்ச்சி அடையா நிலையில் இருக்கலாம் என்ற உண்மை இதற்குக் காரணமாக இருக்கலாம். ஒரு நல்ல விடயம் என்னவென்றால் வடக்கிலும் கிழக்கிலும் பொலிஸ் சேவையின் நடைமுறையை ஆய்வதற்குப் பிரிட்டிஷ் தலையிட்டதே ஆகும்.

### அரசியல் சூழ்ச்சிகள், இராணுவ நடவடிக்கைகள் மற்றும் சமாதான நடைமுறை

ஏற்கனவே குறிப்பிட்டவாறு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும் சட்டசபைக்கும் (ஐதேக) இடையிலான மோதல் தவிர்க்க முடியாத வகையில் சூழ்ச்சித்திறத்துடன் கையாளுதல்களை உருவாக்கியுள்ளது. இது சமாதான நடைமுறையைப் பாதிக்கக்கூடும். நெடுங்காலமாகவுள்ள மோதலுடன், நாட்டின் இறைமைத்துவம்மீது பரபரப்பையும் பாதுகாப்புமீது சலசலப்பையும் உருவாக்குவதுமே சமாதான நகர்வை அழிப்பதற்கான இலகுவான வழியாகும். இது இலங்கை யின் சமாதான நடைமுறையிலும் நிகழ்ந்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் இதற்கான பெருமளவு தருணங்களை விரிவாகக் கூற முடியும். ஆனால், இடக்கட்டுப்பாடுகளின் காரணமாக, ஐதேமு ஆட்சி தொடர்பிலான ஓர் அம்சம் மட்டுமே இங்குக் கருத்துப் பரிமாறப்படுகின்றது.

திருகோணமலைத் துறைமுகத்திலும் திருகோணமலையில் உள்ள கடற்படைத் தளத்திலும் பாதுகாப்புக்குப் பயமுறுத்தலாக விளங்கும் பாரிய தொகையிலான எல்டிடிஈ முகாம்களை வெளிச்சம் போட்டுக் காட்டியதன் (ஊடகத்தில்) மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நடைமுறையில் நெருக்கடியான சூழ்நிலையொன்று உருவாக்கப் பட்டது. பாரதூரமான அளவில் பாதுகாப்புக்குப் பயமுறுத்தல்களாக இருக்கின்றன என வெளிப்படுத்தப்பட்ட முகாம்கள் சிறியதாகவும், ஏற்கெனவே நடைமுறையில் இருந்த தற்காலிக இடமாற்ற முகாம்களும், எல்டிடிஈ இடமற்ற முகாம்களாகப் புதிதாக ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு சிலவும் இருக்கின்றன. அவசியப்பட்டால் அவற்றைச் சமாளிப்பதற்குத் தமது திட்டங்களை இராணுவம் கொண்டிருந்தது. ஆனால், யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பராமரிப்பை 'வசதிப்படுத்துமுகமாகவும் பயமுறுத்தல் உணர்வு பாரதூரமானதல்ல என்பதனாலும்' அது நடவடிக்கையை எடுக்கவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சூழ்நிலை பற்றிப் பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், அல்லது பாதுகாப்பு அமைப்புச் செயலாளர் ஆகியோருக்கு அறிவிக்காமல், முன்னாள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் காலஞ்சென்ற லக்ஷ்மன் கதிர் காமருக்கும் ஏனையோருக்கும் தகவலை இலங்கைக் கடற்படை வெளியிட்டதாக நம்பப்படுகின்றது. எனினும், எல்டிடிஈயினால் வெளிப்படையாகவே விரும்பப்படாத எதிர்கட்சியைச் சேர்ந்த பாராளு மன்ற உறுப்பினர் ஒருவருக்கு இத்தகைய கூருணர்விலான தகவலைத் (நிர்ப்பந்தத்தின் கீழ்கூட) தெரிவிப்பது சமாதான நகர்வுகளுக்கு எதிரான அரசியல் சூழ்ச்சியைக் கையாள்வதாகப் பொருள் விளக்கமளிக்கப் படுகின்றது.

திருகோணமலையில் நிலவிய அபாயகரமான பாதுகாப்பு சூழ்நிலை, பலமான எதிர்ப்புகளின் அலையொன்றை உருவாக்கியுள்ளது. இது ஐதேமு அரசாங்கம் மற்றும் எல்டிடிஈயின் நம்பகத்தன்மையின்மீது சமாதான நடைமுறையைப் பாதித்ததுடன், தேசியப் பாதுகாப்புக்கான பயமுறுத்தலாகவும் விளங்கியது. மணிராசகுளத்தின் சுற்றுப்புறத்தில், தனது பெயரைப் பின்னர் ஜாதிக ஹெல உறுமய என மாற்றிக்கொண்ட சிஹல உறுமயவினால் எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன. இதில் பௌத்தப் பிக்குமார்கள் முழுமையான பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். இந்தப் பாதுகாப்புப் பிரச்சினைக்கு எதிராக ஜேவிபியும் எதிர்ப்புத் தெரிவித்தது.

இது ஒரு மீறல் என இயுக குழு நிர்ணயித்தபோது, சூழ்நிலை பெரிதுமே தீவிரமடைந்ததுடன், இதையிட்டு மேலும் விசாரிப்பதற் கான தனது விருப்பத்தை எடுத்துக்காட்டி எல்டிடிஈ வாதம் புரிந்தது. வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், எல்டிடிஈ இயக்கம்தான் காட்டப்படும் குற்றமிழைத்தவர், நீதிபதி, நிறைவேற்றுநர் மற்றும் மேன்முறையீட்டு அதிகாரவர்க்கம் என்றவாறு கருத்தினைக் கொண்டி ருந்தது. இது அனுசரணையாளர் என்ற வகிபங்கையும் இயுக குழுவை யும் எல்டிடிஈயால் செல்லாததாக்கப்பட்டுள்ளதாகத் தென்பகுதி ஆட்சி அமைப்பொழுங்கு நம்பச் செய்தது. இது அனுசரணையாளரான இயுககு மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியவற்றுக்கு எதிரான விமர்சனங்களை அதிகரித்தது.

ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்திற்கு எதிராக மாபெரும் பிரசாரங் களைக் கட்டியெழுப்பிய பின்னர், மணிராசகுளத்திற்கு எதிராக மிகவும் தீவிரமாக பிரசாரம் செய்த கூட்டணிப் பங்காளிகளுடன் ஐக்கிய பொதுஜனச் சுதந்திர முன்னணி அதிகாரத்திற்கு வந்தது. இதுவரை மணிராசகுளம் நடைமுறையில் இருப்பதுடன், மேலும் நிரந்தரமாக தாபிக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது. வெளிப்படையாகவே



கொலைகளின் காரணமாக நடமாட்டம் முழுமையாகக் கட்டுப்படுத்தப் படும் அளவுக்குத் திருகோணமலையில் பாதுகாப்பு சிதைவடைந்தது. திருகோணமலையில் பாதுகாப்பு முகாமைத்துவத்தை அழித்ததற்குப் பொறுப்பானவர்களைத் தண்டிப்பதற்கு வழி இருக்கவில்லை என்பதே நகைச்சுவைக்கான ஒரு விடயமாகும். ஏனெனில், தலைமைப் பதவி யில் இருந்தவர்களே இதற்குப் பொறுப்பானவர்கள் என்பதுடன், பொறுப்பான பிரதான நபர் பாதுகாப்பு அமைச்சரே ஆவார்!

சமாதான செயன்முறையின் பாதுகாப்பு அம்சங்களைக் கையாள்வதில் அரசியலமைப்பு ஏற்பாடுகளால் அரசாங்கம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அரசியலமைப்பைப் பாதுகாப்பதற்கான கட்டுப்படுத்தும் வலிமை, அதிகாரப் பொறுப்பு, கணக்குக் காட்டுதல் ஆகியன பிளவுபட்டிருந்தன. பாராளுமன்றம்மீது அரசியலமைப்புரீதியில் கட்டுப்படுத்தும் வலிமை யையும் அதைப் பின்போடுவதற்கு (கிடப்பில் போடுவதற்கு) அல்லது கலைப்பதற்கான அதிகாரத்தையும் கொண்டிருந்த, அரசியல் அதிகாரத் தைக் கைப்பற்றுவதற்காகக் காத்திருக்கும் ஒரு ஜனாதிபதி இராணுவ ரீதியாகவும், பாராளுமன்றம் ஊடாக நடைமுறைரீதியாகவும் என இரு முன்னணிகளில் சமாதான நடைமுறையைச் செல்லுபடியற்றதாக்கி இருக்கலாம். சமாதானத்திற்கான பாதை மிகவும் வஞ்சகத்தன்மை யிலானது[25] என்பதுடன், அரசியல் சந்தர்ப்பவாதத்திற்கு மட்டும் நம்ப முடியாத தந்திரோபாயங்களை நாடிய ஜனாதிபதி, அப்போதைய பிரதமருக்குப் பிரச்சினைகளை உருவாக்குவதற்காக, எந்தவொரு தருணத்தையும் தனதாக்கிக்கொள்ள முயன்றார்.

இத்தகைய சூழ்ச்சித்திறத்துடன் ஒன்றுதிரண்டிருந்த நடவடிக்கை களின் விளைவை அறுவடைசெய்வதில், அமைப்பைச் சம்பந்தப் படுத்தும் பெருமளவு பாதுகாப்பு தொடர்பிலான சம்பவங்களை எல்டிடிஈ மோசமாக்கியதன் மூலம், அரசாங்கத்தின் முதுகை முறிப் பதற்கான முயற்சிகளும் துரிதமடைந்தன (உதாரணம்: இராணுவ முகாம்களினுள் பலாத்காரமாகப் புகுதல், அதிரடிப்படை முகாம்மீதான தாக்குதல், கடல் சம்பவங்கள், இராணுவப் பட்டிகளை அணிவது மூலம் அடிப்படையிலான எதிர்ப்புக்கள், சயனைட் வில்லைகளைக் கொண்டிருத்தல், அடையாளச் சின்னங்களையும், இலக்கியங்களையும் இறக்குமதி செய்தல்). இதன் ஊடகத்திலிருந்து எதிர்மறையான விமர்சனங்கள் விளைவாக (உதாரணமாக, பிரதிநிதிகளினாலும் தேசிய தொலைக்காட்சியினாலும் ஊடக அமைச்சினாலும்[26] அரசியல் மற்றும்

25. 2003 மார்ச் 10 அன்று கடலில் சம்பவம் நடைபெற்றபோது எல்டிடிஈ கப்பலை அழிக்கும்படி தான் கட்டளையிட்டதாகப் பொய்யான கூற்றுகளைச் செய்ததன் மூலம் ஜனாதிபதி நடந்து கொண்ட விதம் சமாதானத்தை ஏற்படுத்துவதில் கடந்து செல்ல வேண்டிய ஆரோக்கியமான வழிகளைக் காட்டும் சிறந்த உதாரணமாகும்.
26. பாதுகாப்பு அமைப்புக் கோவை இல.எஸ்எம்ஓடி, 133, பிஎன் (XIII).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமயக் குழுக்களினாலும் முழுமையான சரிபார்த்தலுடன் செய்யப்பட்ட புலிகளின் குரல் வானொலி). தீவிரப்போக்கிலான பாராளுமன்ற உறுப் பினர்களாலும் பௌத்தப் பிக்குமார்களினாலும் ஆதரவளிக்கப்பட்ட தேசிய தேசப்பற்று இயக்கம் போன்ற அமைப்புகள் நிறுவப்படுவதிலேயே இது முடிவடைந்துள்ளது.

விரோத மனப்பான்மையால் தனியார் ஊடகங்களும், பலவீனமான அரசாங்க ஊடகத் தலையீடுகளும், அரசாங்கத்தின் சமாதான செயலகத்தில் உள்ள, எதிர்க்கும் தன்மையற்ற ஊடக ஆளணியினரும், தேசியப் பாதுகாப்புக்கான பயமுறுத்தல்களுக்கும், சமாதான நடைமுறையினால் விளைந்துள்ள இறைமைத்துவத்திற்கான பயமுறுத்தல்களுக்கும், ஐதேமு ஆட்சியின் பொறுப்புத்தன்மையை மக்கள் மத்தியில் குற்றம் சுமத்து வதற்கு இலகுவாக வழிவகுத்தன. இலங்கை அரசாங்கத்தைவிட எல்டிடிஈயின் ஊடகத் தலையீடுகள் அதிக மேன்மையானவையாகும் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அநேகமான தாக்குதல்கள்/ மோதல்களின்போது ஆயுதப்படைகள் மற்றும் எல்டிடிஈயின் மனித உரிமை மீறல்கள், கொலைகள் மற்றும் ஆட்கடத்தல்கள் போன்றவை குறித்து பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத்தின் சார்பில் பங்கேற்றவர் களின் 'மென்மைப்போக்கு' குறித்து ஊடகங்கள் வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளதனால், அது ஐதேமுவை வெறுக்கச் செய்யவைத்தது. தேசத்தின்/நாட்டின் பாதுகாப்பையும் இறைமையையும் சிரமத்திற் குள்ளாக்கும் அரசியல் நிறுவனமாக, அரசியல் எதிராளிகள் பொது மக்களின் பார்வையில் கட்சியின் நற்பெயருக்கு அது ஊறுவிளைவித்தது.

எல்டிடிஈயுடன் சமாதானத்தை ஏற்படுத்துவதில் எதிர்மறையான அணுகுமுறைகளாக அரசியலில் சம்பந்தப்பட்டவர்களால் எடுக்கப் பட்டதாகக் கருதப்படும் வேறு நடவடிக்கைகளும் இருந்தன. இலங்கை அரசாங்கத்தால் கரேஜஸ் என்ற கப்பலின் கொள்வனவு அவர்களுக்குச் சினத்தை ஏற்படுத்தியது. இக்கப்பலில் பேச்சுவார்த்தை நடத்தியவர் களில் ஒருவர் சென்றபோது அது குறித்து வழங்கப்பட்ட பிரசாரம் அவர்களது சினத்தை மேலும் அதிகரித்தது. மறுபுறத்தில், எல்டிடிஈ சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஈடுபட்டிருந்த அதேவேளை, எல்டிடிஈ மேம்படுத்தப்பட்ட மீள் வலியுறுத்தல்களின் மூலம் போராளிகளின் மனோதிடத்தை வைத்திருப்பதற்காக ஆயுதங்களை இறக்குமதி செய்கின்றது என அறியப்பட்டிருக்கும் சமயம், சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஈடுபட்டிருந்த அமைச்சர் ஒருவரின் மனோதிடத்தை அதிகரிக்கும் நடவடிக்கையில் என்ன தவறு உள்ளது என ஒருவர் வாதாட முடியும். பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றுக்காக இலங்கை அரசாங்கத் திற்கும் இந்தியாவுக்கும் இடையில் நடந்துகொண்டிருந்த பேச்சு



வார்த்தைகளே இன்னொரு கூருணர்விலான பிரச்சினையாகும். ஆனால் இது ஒருபோதும் வெளிச்சத்திற்கு வரவில்லை.

**யுத்தநிறுத்த உடன்படிக்கையின் உறுப்புரை 2: வழமை நிலையை மீளளிப்பதற்கான நடவடிக்கைகள்**

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் உறுப்புரை 2ஐ இனி நாம் பார்க்கப் போவதுடன், சமாதான நடைமுறைமீது அதன் தாக்கங்களைக் கவனத்தில் கொள்வோம்.

உறுப்பு 2.1 மற்றும் உறுப்புரை 2.2 முறையே பகைமை மற்றும் கோபமூட்டுகின்ற நடவடிக்கை ஆகியவற்றில் ஈடுபடுவதிலிருந்து தவிர்த்துக்கொள்வதற்கான தேவைப்பாடுகளைப் பற்றிக் குறித்துரைக் கின்றது. இவை பெரிதும் எல்டிடிஈயினால் மதிக்கப்படவில்லை. உதாரணமாக, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் எல்டிடிஈ கொடி களை ஏற்றுதல், இராணுவச் சீருடைகளை அணிதல், சயனைட் வில்லை களைக் கொண்டு செல்லுதல், சமய வணக்கத்தலங்கள்மீதான தாக்குதல், ஆயுதப்படைகளின் முகாம்களுக்கு அத்துமீறிப் பிரவேசித்தல் (உதாரணம்: பருத்தித்துறை மற்றும் அம்பாறையில் உள்ள ஒரு விசேட அதிரடிப்படை முகாம்) ஆகியவற்றைக் குறிப்பிட முடியும். மேலதிகமாக, உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் புகுவதற்கான முயற்சிகளும் எதிர்ப்பினை உருவாக்கின. உறுப்புரை 1.11 மற்றும் 1.12 ஆகியன குறித்துரைக்கப் பட்ட இராணுவப் பகுதிகளுக்குள் நுழைவதை மறுத்துரைப்பதற்கான உரிமையை அவர்களுக்கு வழங்கியுள்ளதென்றும், அதனால், உயர் பாதுகாப்பு வலயங்களைவிட்டு வெளியேற வேண்டும் அல்லது அது குறித்து உடன்படிக்கை செய்யப்படும் என இறுதியான இணக்கப்பாடு அனுமதித்தாலன்றி, உயர் பாதுகாப்பு வலயங்கள்மீது பேரம்பேசுவதற் கான அரசியல் இல்லை என்னும் நிலையையே பாதுகாப்பு அமைப்பும் ஆயுதப்படைகளும் எடுத்தன.

கொழும்பில் வீதித்தடைகள் அகற்றப்பட்டபோது, யாழ்ப்பாணக் குடாநாட்டில் எதிர்ப்பு அணிவகுப்புகளின்போது யாழ்ப்பாணம் வீதி களை எல்டிடிஈ தடைசெய்தது. தமிழ்த் தேசிய கூட்டணியின் (ததேகூ) சில அரசியல்வாதிகள் கூட, எல்டிடிஈயின் நோக்கத்திற்கு ஆதரவளிக்க முயன்றுள்ளனர். யுத்தநிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னர் சித்திரவதை, பயமுறுத்தல், ஆட்கடத்தல், பணம்பறித்தல், சிறுவர்களைப் பலாத்கார மாகச் சேர்த்துக்கொள்ளுதல் மற்றும் தொந்தரவு செய்தல் ஆகியனமீது எல்டிடிஈயின் நடத்தையானது அரசு ஆயுதப்படைகளைவிட மிகவும் அதிகளவு இழிவானது என்பதுடன், அவர்களுக்குக் கெட்ட பெயரையும் ஏற்படுத்துவனவாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கத்திலிருந்து அவர்களது போராளிகள் விலகிச்சென்றபின் இடம்பெற்றதைத் தவிரப் பாலியல் வல்லுறவு அல்லது ஒழுக்கங்கெட்ட பாலியல் நடத்தைமீது எல்டிடிஈக்கு எதிராக எந்தவிதக் குற்றச்சாட்டுக்களும் இல்லை. ஏற்கனவே, உரிமைகளை மீறுபவர்களாக, அரசாங்கமும் எல்டிடிஈயும் உள்ளது என விமர்சகர்களால் விமர்சிக்கப்பட்டனர். சோதனைச் சாவடிகளில் தொந்தரவு செய்தல், வீதி விபத்துகள், தாக்குதல் போன்றன மீது ஆயுதப்படைக்கு எதிராகவும் முறைப்பாடுகள் இருந்தன.

### சமாதானத்தை ஏற்படுத்துதலும் உயர் பாதுகாப்பு வலயங்களும்

பாதுகாப்பு தொடர்பில் வழமையை ஏற்படுத்துதல் நடைமுறையில் பாடசாலைகள் அரசாங்கக் கட்டடங்களின் பிரச்சினை இன்னுமொரு முக்கியமான காரணியாகும். (பார்க்க: யுத்தநிறுத்த உடன்படிக்கையின் உறுப்புரைகள் 2.3 மற்றும் 2.4.) இக்கட்டடங்களை விட்டு வெளியேறுவதற்கு ஆயுதப்படைகள் தயங்கியதால் அது எல்டிடிஈயைக் குழப்பியது. எனினும், வடக்கில் உயர் பாதுகாப்பு வலயங்களைக் கொண்டிருப்பதற்கான அவசியத்துடன் சில தமிழ்க் குடிமக்களும் உடன்பட்டனர். உயர் பாதுகாப்பு வலயங்களினுள் (உதாரணம்: பருத்தித்துறை) நிலைகொண்டிருந்த அரசாங்க அதிகாரிகள்கூடத் தமது அன்றாட அலுவல்களில் ஆயுதப்படைகளைச் சமாளிக்கும்போது கஷ்டங்களுக்கு முகங்கொடுக்கவில்லை. எனினும், உயர் பாதுகாப்பு வலயங்கள் (உதாரணம்: வலிகாமம் பகுதிகள்) தொடர்ந்துமிருந்ததினால் அதிர்ஷ்டம் குறைந்து இடம்பெயர்ந்தவர்கள் மீளத் திரும்புவதில் தவிர்க்கமுடியாதத் தாமதம் ஏற்பட்டது என்பது ஓர் உண்மையாகும். இதேபோல, தடங்கலின்றித் தமது கடமையை ஆயுதப்படைகள் நிறைவேற்றுவதென்றால், உயர் பாதுகாப்பு வலயம் அவசியமானதாகும்.

தலைமைப்பீடம் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பலாலி விமான நிலையம் அல்லது காங்கேசன்துறை துறைமுகம் போன்ற முக்கியப் பகுதிகளிலும் கடல் ஏரிப் பகுதிகளிலும் தெரிவு செய்யப்பட்ட முகாம்களுக்கு எதிராகத் தற்கொலைத் தாக்குதல் நடத்தக்கூடிய பகுதிகளிலும் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் உயர் பாதுகாப்பு வலயங்கள் உள்ளன. கடந்துபோன ஆண்டுகளில் எல்டிடிஈ தாக்குதல் சக்தி அதிகரித்துள்ளதனால், உயர் பாதுகாப்பு வலயங்களின் அளவைக் குறைப்பதை இராணுவத்தின் உள்ளூர்த் தளபதிகள் விரும்பவில்லை. உயர் பாதுகாப்பு வலயங்களைத் திறந்துவிடுவதனால், அது எல்டிடிஈ போராளிகளின் ஊடுருவலை அனுமதிக்கும் என அவர்கள் சந்தேகிக்கின்றார்கள்.



இருந்தபோதிலும், தமிழ் மக்களின் பூர்வீக இடத்திலிருந்து பெருமளவு குடும்பங்களை உயர் பாதுகாப்பு வலயங்கள் இடம்பெயரவைத்துள்ளன. இது சுமார் 30,000 என எல்டிடிஈ தெரிவிக்கின்றது. இது பத்தாயிரத்தையும்விடக் குறைவாகும் என்கிறது இராணுவம். இந்த எண்ணிக்கை சுமார் 15,000 அல்லது அதற்கு சற்று மேல் என்கிறது சிவில் நிர்வாகம். இருப்பினும், இடம்பெயர்ந்தவர்களின் மீளத்திரும்பலுக்கு வசதிப்படுத்துவதற்கான அவசியம் மீதே உயர் பாதுகாப்பு வலயங்களின் இருப்புகளை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படையைக் கொண்டுள்ளது. இது நீண்ட காலத்திற்கு உதாசீனப்படுத்தப்படும் பிரச்சினையொன்று அல்ல என்பதுடன், பேச்சுவார்த்தைகள் இடம்பெறும்போதெல்லாம் நிகழ்ச்சி நிரலில் பிரதான விடயமாக விளங்குகின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தையின் விளைவாக நியமிக்கப்பட்ட ஜெனரல் சதீஷ் நம்பியார் – பொஸ்னியாவில் ஐநாவின் சமாதான செயல்பாட்டாளராக இருந்தவர் – படிப்படியான நடவடிக்கைகளுக்கு ஆலோசனை கூறினார்: ‘தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயங்களை அப்புறப்படுத்துவதற்கு அவற்றின் உள்ளடக்கத்தையும் விரிவெல்லையும் மதிப்பீடு செய்ய வேண்டும்; இதை ‘அப்புறப்படுத்தும் செயன்முறையின் முதல் கட்டத்தில் பொருத்தமான சூழ்நிலையில்’ செயல்படுத்த வேண்டும்.’[27]

இரண்டாம் கட்டத்தில் ‘பலாலி விமான தளத்தையும் காங்கேசன் துறைத் துறைமுகத்தையும் சுற்றியுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களின் பாதுகாப்பு புறஎல்லையின் சுற்றளவை பிற முக்கியமான பாதுகாப்பு மையங்கள் போல குறைக்கப்படவேண்டும்’.[28]

எனினும், ‘நடவடிக்கையின் நிலையை இலங்கைப் பாதுகாப்புப் படைத் தளபதிகளின் சட்டபூர்வக் கரிசனைகள்’ மீதும், ‘பரஸ்பர நம்பிக்கை குறைவுக்கு தொடர்ச்சியாக நம்பிக்கையை கட்டியெழுப்பும் நிறுவனத் தேவை’ மீதும் அவர் முக்கியத்துவம் கொடுத்தார்.[29]

ஏககாலத்தில் எல்டிடிஈ செயல்பாட்டு இராணுவ நிலைகளை அப்புறப்படுத்துதல், பொருத்தமாகவும் நடுநிலையாகவும் மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தல், இந்த நடவடிக்கைகளைப் பொறுப்பேற்பதற்கு இயுக குழுவைச் சேர்த்துக்கொள்ளுதல் அல்லது சர்வதேச இராணுவ அல்லது பொலிஸ் அவதானிப்பாளர்களை அறிமுகப்படுத்துதல் ஆகியனவும் ஜெனரல் நம்பியாரால் முன்மொழியப்பட்டன. முரண்படும் இருதரப்புகளிலிருந்தும் உடன்பாட்டைப் பெறுவதற்கான அவசியமும் கடல் மற்றும் ஆகாயக் கண்காணிப்பு, மேற்பார்வையின்

27. உயர் பாதுகாப்பு வலயத்தின் அம்சம்மீதான அறிக்கை: லெப்.ஜெனரல் சதீஷ் நம்பியார்: பக். 4
28. அதே நூலில் பக். 5.
29. அதே நூலில்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆற்றலளவை அதிகரிப்பதன் அவசியமும் அவரது அறிக்கையில் முக்கியமானவையாகக் கருதப்பட்டன. இருதரப்புகளும் தாமாகவே செய்வதற்கு உடன்படமாட்டா என்பதனால் சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் மூலம் 'சவால்விடுக்கும் சோதனை'யின் அறிமுகத்தை புதியதொரு சாதனமாக அவர் கருதினார்.

தரப்புகளுக்கிடையில் நம்பிக்கையை வளர்ப்பதற்கான இன்னொரு செயல்திறன்மிக்க வழிவகைகளாக நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் என ஜெனரல் நம்பியார் கருதினார்.[30] ஆரம்பத்தில், சர்வதேசக் கண்காணிப்பு ஆதரவுடன் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையாக ஏ 9 வீதியைப் பயன்படுத்துவதன் மூலம் எல்லைகளைக் கடப்பதைப் பொறுப்பேற்கலாம் என அவர் எண்ணினார். இந்த தொடரணிகள் *(கான்வாய்ஸ்)* மீது எல்டிடிஈயினால் தேடுதல் நடத்தப்படக்கூடாது அல்லது அவற்றுக்கு அது வழித்துணை வழங்கக்கூடாது என அவர் ஆலோசனை தெரிவித்தார். அரசாங்க அதிபர்களின் உதவியுடன் ஆயுதப்படைகளை மீள்குடியிருக்கச் செய்தல் பற்றியும் அவர் கருத்துப் பரிமாறினார். ஆனால், சுபாஷ் ஹோட்டலையும் குடாநாட்டில் உள்ள சில வேறு இராணுவ முகாம்களையும் இடமாற்றுவதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும், அவை வெற்றி பெறவில்லை.

### வணக்கத் தலங்கள்

உயர் பாதுகாப்பு வலயங்களினுள் வணக்கத் தலங்கள், பாடசாலைகள் மற்றும் அரசாங்கக் கட்டடங்கள் ஆகியவை பற்றி எல்டிடிஈ அதிகளவு கரிசனை கொண்டிருந்தது. இடம்பெயர்ந்த மக்கள் மீளத் திரும்புமுகமாக இவ்விடங்களைவிட்டு வெளியேற வேண்டும் என்பதே மேலெழுந்த வாரியான வற்புறுத்தலாகும். இது ஒரு பிரசித்தமானதும் இராணுவரீதியிலானதுமான நகர்வாகும். படைகளின் சமநிலையை[31] வைத்திருப்பதற்கான அவசியத்தை இயுக குழுவும் கரிசனையைக் கொண்டிருந்தது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இதற்கு உயர் பாதுகாப்பு வலயங்கள் ஒரு மாபெரும் கருவியாகும். வணக்கத்தலங்களையும் பாடசாலைக் கட்டடங்களையும் விட்டு ஆயுதப்படைகள் வெளியேறிய போதும், அவ்விடங்கள் பொதுமக்களின் உபயோகத்திற்குக் கிட்டவில்லை. இந்த இடங்களின் உடனடி உபயோகத்தையிட்டு எல்டிடிஈயும் ஐதேமுவும் கோரிக்கை விடுத்ததுடன், பொதுமக்களின் எதிர்ப்புகளையும் தூண்டின. வேறுவிதமாகக் கூறுவதென்றால், படைகளின் சமநிலையின்மையை உருவாக்குகின்றவாறு உயர் பாதுகாப்பு வலயங்களைவிட்டு வெளியேறுமாறு அவை ஆயுதப்படைகளை வேண்டின. சிலவேளைகளில், விசேடமாக வடக்கில் இத்தகைய எதிர்ப்புகளின் காரணமாகச் சமாதானத்தின் மீறல் இருந்தது. பாதுகாப்பு நிலையங்களை அல்லது பாதுகாப்பு இலக்குகளை மீள் குடியமர்த்துவதற்கான கோரிக்கைகளை விடும்போது மறைத்து வைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலைத் தாம் கொண்டிருப்பதாக எல்டிடிஈ வெளிப்படுத்தியுள்ளது.[32]

*30. அதே நூலில் பக். 7.*

*31. 26.12.2002 தேதியிடப்பட்ட இயுநி குழுவின் தலைவரின் மதிப்பாய்வு அறிக்கை.*



### பொதுக் கட்டடங்கள்

பொதுக் கட்டடப் பிரச்சினைகள் அதிகப் பிரச்சினைகளைக் கொண்டவையாகும். குறித்த தினத்திலிருந்து 30 நாட்களினுள் 'பிற அனைத்து பொதுக் கட்டடங்களும் அவற்றின் உத்தேசமான உபயோகத்திற்காக மீளளிக்கும் அட்டவணையொன்று' வரையப்பட வேண்டும் என யுத்தநிறுத்த உடன்படிக்கையின் உறுப்புரை 2.4 வேண்டுகின்றது. இதன்படி அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டு, இயுக குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில், பெருமளவு அத்தகைய கட்டடங்கள் பொது உபயோகத்திற்கு விடுவிக்கப்பட்டன. ஆனால், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு அல்லது திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இது திருப்திகரமாக மீளச்செய்யப்படவில்லை. மக்களுக்கு அருகில் இருந்த நிறுவனங்கள் தொழிற்படாதபோது வழமைக்குத் திரும்புதல் நடைமுறை தவிர்க்க முடியாத வகையில் பாதிக்கப்பட்டது. உதாரணமாக, மட்டக்களப்பில் மாநகரசபைக்

*32. எல்டிடிஈயின் மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களின் உதாரணங்களுக்குப் பின்வருவனவற்றை குறிப்பிட முடியும்:*

*அ. உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள தெல்லிப்பளை யூனியன் கல்லூரியை விடுவிப்பதற்குப் பாதுகாப்பு அமைப்பு உடன்பட்டதுடன், இராணுவ அனுகூலமான முனையொன்றாகத் தெல்லிப்பளைச் சந்திக்கு அப்பால் உள்ள சோதனைச் சாவடியை மீளப்பெறுவதே உடனடிக் கோரிக்கையாகும். தெல்லிப்பளைச் சந்தியைத் தக்கவைத்திருப்பவர்கள் யாழ்ப்பாண உயர் பாதுகாப்பு வலயம் மேலாக, விசேடமாகக் காங்கேசன்துறைத் துறைமுகம் மேலாக அதிகாரத்தைக் கொண்டிருப்பதாக எல்டிடிஈ அறிந்திருந்தது. இது தோல்வியுற்றபோது, யூனியன் கல்லூரிக்குத் தடங்கலற்ற அடைதலைக் கொண்டிருப்பதே எல்டிடிஈ போராளிகளின் கோரிக்கையாகும்.*

*ஆ. இது போன்று மகாஜன கல்லூரி திறக்கப்பட்டபோது, இராணுவ முகாமின் வேலிக்கு நீளவாட்டத்தில் பாடசாலைக்கு அடைதலை வழங்க வேண்டும் என்பதே கோரிக்கையாகும்.*

*இ. படையினருக்குத் தெல்லிப்பளைப் புற்றுநோய் வைத்தியசாலையை விடுவிப்பதற்கான உடன்படிக்கை சாதிக்கப்பட்டபோது, பாதுகாப்புப் படைகள் தக்கவைத்திருந்த பகுதி ஊடாகத் தடங்கலற்ற அடைதலும் தெல்லிப்பளைச் சந்தியில் உள்ள சோதனைச் சாவடியை மீளப் பெறுதலுமே கோரிக்கையாகும்.*

*ஈ. ததேகூ பாராளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளின் மீது தனங்கிளப்பில் காணிகளின் செய்கை (1,000க்கு மேற்பட்ட ஏக்கர்கள்) உயர் பாதுகாப்பு வலயத்திற்கான கட்டுப்படுத்தப்பட்ட அடைதலுடன் கட்டுரையாசிரியரின் ஒப்புதலுடன் பாதுகாப்புப் படைகளால் அனுமதிக்கப்பட்டபோது, அவற்றால் விவசாயிகள் சாராத எல்டிடிஈ போராளிகளின் பிரவேசம் குறைக்கப்பட்டதன் காரணமாக, மழைக்காலப் பெரும் போகத்தின்போது விவசாயம் மேற்கொள்ளப்படவில்லை.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டடத்தில் இராணுவம் குடியமர்ந்திருந்ததுடன், மாநகரத்திற்குரிய பணிகள் வேறு இடத்தில் மேற்கொள்ளப்பட்டன. வேறு கமநல (சாகுபடி நிலம் பற்றிய) சேவைகள், கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள், நூலகங்கள் போன்றவற்றிலும் இதையொத்த சூழ்நிலைகள் அவதானிக்கப்பட்டன.

இக்கட்டடங்களை விட்டுக்கொடுப்பதில் ஆயுதப்படைகளும் கஷ்டமான பிரச்சினைகளைக் கொண்டிருந்தன. ஒரு புறத்தில், தமது முகாம்களை மீள்குடியமர்த்த அரசாங்கத்திற்குச் சொந்தமான பொருத்த மான கட்டிடங்களோ அல்லது அரசாங்கக் காணிகளோ இருக்கவில்லை. எல்டிடிஈயால் தீங்கிழைக்கப்படும் என்பதால் காணி உரிமையாளர் களால் தனியார் நிலம் வழங்கப்படவில்லை. மக்களின் நன்மைக்கே எல்டிடிஈயினால் கோரிக்கை விடுக்கப்படுகின்றது என்றபோதிலும், பிரச்சினைகளைக் களைவதில் எல்டிடிஈ உதவியாக விளங்கவில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டில் 152 முகாம்கள் 88க்கு குறைக்கப்பட்டது போன்று, முகாம்களை இடமாற்றுவதற்கு ஏதாவது முயற்சிகள் செய்யப்பட்டபோதிலும், இதற்கு எல்டிடிஈ உடன்படாததுடன், எதிர்ப்புத் தெரிவிக்குமாறு பொதுமக்களையும் தூண்டியது. யாழ்ப் பாணம் நகரத்தில் சுபாஷ் ஹோட்டலை வேறு இடத்திற்கு மாற்றும் விடயத்திலும் இதுவே இடம்பெற்றது. பேச்சுவார்த்தைகளில் இது பற்றிக் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், மாற்று அமைவிடங்கள் கரிசனைக்கு எடுக்கப்பட்டபோது தொடர் எதிர்ப்புகள் கிளம்பின. முடிவாக முகாம், ஹோட்டலைவிட்ட நகரவில்லை. ஆகவே, ஆயுதப் படைகளுக்கும் எல்டிடிஈக்குமிடையிலான உடன்பாடின்மையானது பாதுகாப்புக்கும் வழமைக்குத் திரும்புதலுக்குமான மோதலாகவே வெளிக்காட்டப்பட்டது.[33]

### சோதனைச் சாவடிகள்

சிலவேளைகளில் மோதல்களை உருவாக்கிய இன்னொரு உடன்பாடு உறுப்புரை 2.5 ஆகும். இலங்கை அரசாங்கப் பாதுகாப்பு நடவடிக்கை களும் இராணுவக் கட்டுப்பாட்டிலான பகுதிகளிலிருந்து திரும்பப் பெறப்பட வேண்டும் என எல்டிடிஈ தமது மனத்துக்குள் விரும்பி

33. இதை எல்டிடிஈ சாதுரியமாக செய்தது கவனத்திற்குரியதாகும். ஹக்கோனேவில் பேச்சுவார்த்தை களில் வழமைக்குத் திரும்புதலை அனுமதிப்பதற்காக முகாம்களைத் தற்காலிகமாக மீள்குடி அமர்த்துவதற்கு எல்டிடிஈயின் உடன்பாட்டுடன் இலங்கை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது (2003 மார்ச் 21இன் தீர்மானம் 8). ஆனால், நடவடிக்கை பின்துரந்து செல்லப் பட்டபோது, ததேகூ பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதில் முன்னின்றனர். சிறிதளவு மழைக்கு நீரில் மூழ்கும் மாற்றுக் காணிகளை அவர்கள் முன்மொழிந்தார்கள். இதுகாறும் உள்ள நிலை தொடர்ந்ததே இறுதியான முடிவாகும். உயர் பாதுகாப்பு வலயங் களுடன் தொடர்வதை அர்த்தப்படுகின்றவாறு சிவிலியன் கோரிக்கைக்குத் ததேகூ அமைதி யாகவும் உறுதியாகவும் பதிலிறுக்கின்றதா என ஒருவர் அதிசயப்படக்கூடும்.



யிருக்கும். இறுதியான தீர்வொன்று அடையப்பட்டால் மட்டுமே இது சாத்தியப்படும். இராணுவச் சீருடைகள் அல்லது சயனைட் வில்லைகள் போன்ற எளிய பிரச்சினைகள்மீதான அடிப்படையில் மோதல்கள் தீவிரமடையும்போது, இத்தகைய ஆலோசனைக்கு உடன்படுவது கஷ்டமானதாகும். எல்டிடிஈயால் தூண்டப்பட்டு, பருத்தித்துறை இராணுவ முகாமுக்குள் புகுந்த எதிர்ப்பாளர்கள், உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள இரு கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டும் என்ற சாக்குபோக்கில் உயர் பாதுகாப்பு வலயம் ஊடாக மட்டுப் பாடற்ற அடைதலைக் கோரியதே இதற்குச் சிறந்த உதாரணமாகும். அதிர்ஷ்டவசமாக, அம்பாறையில் அதிரடிப்படை முகாமினுள் புக முற்பட்ட ஏழு பேர் கொல்லப்பட்ட சம்பவத்தைப் போலன்றி, இராணுவம் மென்மையாகவே பதிலிறுத்தது; எதிர்வினையாற்றியது.

இதே போன்று எதிர்ப்புகள் மது ரோட் சோதனைச் சாவடியிலும் எழுப்பப்பட்டன. இங்கு, யுத்தநிறுத்த உடன்படிக்கையின் இணைப்பு 'பி'இல் சோதனைச் சாவடி இல்லாதபோதும், அங்கு நகர்வதற்குச் சில கிராமவாசிகளை அனுமதிப்பதற்காகப் பிரவேச முனையொன்றைத் திறப்பதற்குப் பாதுகாப்பு அமைச்சு உடன்பட்டது. ஆலோசனையை ஆரம்பத்தில் இராணுவம் விரும்பாதபோதிலும், இது அனுமதிக்கப் பட்டது. இத்தகைய சம்பவங்களுக்கு ஒத்துப்போவதற்கு இராணுவத்தின் நடத்தையில் மிகவும் மெதுவான மாற்றத்தைக் கவனத்தில் கொள்வது ஆர்வமூட்டக்கூடியதாகும்.[34]

இராணுவக் கட்டுப்பாட்டிலான பகுதிகளில் ஆயுதப்படைகள் கடமை களை மேற்கொண்டவேளை எல்டிடிஈ போராளிகளின் மதிப்பைக் குறைக்கும் நடத்தையை ஆயுதப்படைகளும் பொலிசும் முறையிட்டன. இவை விபத்துகளால் அதிகரித்தன. இதில் இராணுவ வாகனங்கள் சம்பந்தப்பட்டிருந்ததுடன், சிவிலியன்களுக்கு மரணங்கள் அல்லது படுகாயங்கள் விளைவிக்கப்பட்டன. சூழ்நிலையின் 'சூட்டை தணிப்பதற்கு' மாவட்டச் செயலாளர் மற்றும் அரசுசார்பற்ற தாபனங்

34. யுத்தநிறுத்த உடன்படிக்கையின் உறுப்புரை 4.3 நிறைவேற்றிய பின்னர் மட்டுமே (அதாவது யுத்தநிறுத்த உடன்படிக்கை திரிபுபடுத்தப்பட்ட பின்) புதிய சோதனைச் சாவடியைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என அப்போதைய இராணுவத் தளபதி வாதம்புரிந்தார். பேச்சுகள் இடை நிறுத்தப்பட்ட காலத்தின்போது இது இடம்பெற்றது. இராணுவத் தளபதி யால் இத்தகையதொரு பதிலிறுப்புக்காக கண்ணுக்குப் புலப்படாத காரணம் கிராமவாசி களின் நியாயப்படியான வேண்டுகோளை நிறுத்துவதற்காகும். யுத்தநிறுத்த உடன்படிக்கை யின் இணைப்பு 'பி'க்குள் மடு சோதனைச் சாவடியை உள்ளடக்குவதையிட்டுப் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு முயல்வதன் மூலம் பெருமளவு வேறு சோதனைச் சாவடிகளைத் திறப்பதை அல்லது மூடுவதைக் கோருவதற்கு எல்டிடிஈக்கான வாய்ப்பொன்றை அனுமதிக்காமல் விடுவதே பாதுகாப்பு அமைப்பின் எதிர்ச்செயலாகும். எச்சரிக்கையுடன் பொறுப்பேற்கப்படவுள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீளாய்வதற்குத் தென்பகுதியில் கிராக்கியுள்ளதனால், தற்போதைக்கு இது பெரிதுமே சம்பந்தப்பட்டதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களிடமிருந்தும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்ற நகரத்தின் அதிமேற்றிராணியாரிடமிருந்தும் (பிஷப்பிடமிருந்து) தலையீடுகளைப் பாதுகாப்பு அமைச்சு வழமையாகப் பெற்றுக்கொண்டது. இது ஒரு வெற்றிகரமான பொறிமுறை என்பதுடன், இத்தகையதொரு சம்பவத்தின் பின்னர் பொலிஸ் அத்தியட்சகர் (சூப்பிரன்டென்டன்ட்) ஒருவர் கொல்லப்பட்ட பின்னரும்கூட, அவதானிக்கப்பட்டவாறு, எல்டிடிஈ யிடமிருந்து மறுதலையான எதிர்விளைவுகள் இருக்கவில்லை. எனினும், செல்வாக்கைக் கொண்டிருந்த யாழ்ப்பாணக் கத்தோலிக்க மேற்றிராணியார்கூட உதவமுடியாத சில வேளைகளும் இருந்துள்ளன. யுத்தநிறுத்த உடன்படிக்கையின்போது இருதரப்புகளுக்குமிடையில் குளிர்யுத்தம் எந்தளவுக்கு வளர்ந்துள்ளது என்பதை இது காட்டுகின்றது.

## பொருட்களின் இடமாற்றம்

ஆரம்பத்திலும் பின்னர் உறுப்புரைகள் 2.6 மற்றும் 2.7 ஆகியவற்றின் கீழும் பொருட்களின் இடமாற்றம் (பார்க்க: யுத்தநிறுத்த உடன் படிக்கையின் இணைப்பு 'ஏ' மீது தளர்வு இடம்பெற்றபோது, பாதுகாப்பு குழப்பப்படாமல் இருப்பதற்கு நடைமுறைக்குரிய ஒழுங்குகளை இலங்கை அரசாங்கம் செய்தது. இது ஏ 9 வீதியில் ஓமந்தையிலும் முகமாலையிலும் சோதனைச் சாவடிகளையும் மதவாச்சி – மன்னார் வீதியில் ஏனைய சாவடிகளையும் தாபித்ததன் மூலம் செய்யப்பட்டது. மேலும், தேவைப்பட்டபோது, அனுமதிச் சீட்டுகளை வழங்குவதற் காகச் சிவில் நிர்வாகம் ஈடுபடுத்தப்பட்டது. எனினும், இந்த சோதனைச் சாவடிகள் ஊடாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டிலான பகுதிகளுக்கு ஆயுதங்கள் மற்றும் யுத்தத் தளவாடங்களின் இடமாற்றம் இருக்கக்கூடும் என ஆயுதப் படை களின் செயல்பாட்டாளர்கள் சந்தேகப்பட்டார்கள். ஆகவே, பொது மக்களுக்கு அசௌகரியமாக இருந்தபோதிலும், பொருட்களைச் சோதனை யிடுவது சிரமத்தோடு நடந்தது. பொருளாதாரச் செயல்பாடுகளில் எல்டிடிஈ வேறு நோக்கங்களைக் கொண்டிருந்தது. சோதனைச் சாவடி களில் வரிவிதிப்பும் தீர்வைகளை அறவிடுதலும் செய்யப்பட்டன. முக்கிய மாகத் தமது ஆதிக்கத்தின் கீழுள்ள பகுதிக்குள் தேவையற்ற தரப்பினர் பிரவேசிக்கக் கூடாது என்பதை அவர்கள் உறுதிப்படுத்துவதற்கான இடங்களாகச் சோதனைச் சாவடிகள் விளங்கின. இது, இலங்கை அரசாங்கம் போன்றே தமது பாதுகாப்புக் காரணங்களுக்கானதாகும்.

வழமைக்குத் திரும்புதல் நடைமுறைக்கு வீதிகளின் (அதாவது ஏ 9) புனரமைப்பு அவசியமானதாகும். இதற்குத் தென்பகுதிகளிலிருந்து கற்கள் விநியோகிக்கப்பட வேண்டும். இச்செயல்பாட்டில், ஓமந்தையில்



விமானப்படைச் சோதனைச்சாவடி எல்டிடிஈயினால் முட்டுக்கட்டை யாகக் கருதப்பட்டது. கற்களை கீழே இறக்குதல், மீண்டும் ஏற்றுதல் ஆகியன இடைஞ்சலாகவும் கருதப்பட்டது. விமானத்தளமொன்றை நிர்மாணிப்பதாக எல்டிடிஈமீது சந்தேகிக்கப்பட்டதால் இது பாதுகாப்புத் தாற்பரியங்களைக் கொண்டிருந்தது. இச்சந்தேகம் வலுத்ததுடன், விமானத் தளமொன்றுக்கான காணி சுத்திகரிக்கப்படுவதாக ஆளில்லா விமானம் 2003 நவம்பரில் உறுதிப்படுத்தியது. 2003 ஆகஸ்டில் சந்தேகத்தின் மீது இது பொறுப்பேற்கப்பட்டபோது ஆளில்லா விமானம் எதிர்மறையான முடிவுகளை வழங்கியது.[35]

உறுப்புரைகள் 2.8 மற்றும் 2.9இன் உள்ளடக்கம் போக்குவரத்துப் பிரச்சினைகள் ஆகும். யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திட்ட போதுகூடத் திருகோணமலை – ஹபரணை வீதி திறந்திருந்தது. ரயில் திணைக்களம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் தலையீட்டினால் மட்டக்களப்பு – வெலிக்கந்த புகையிரதப் பாதை நிருமாணிக்க'ப் பட்டது. எனினும், பிரதான வீதிகளில் எல்டிடிஈயினால் வரிவிதிப்புக் காக, அது உருவாக்கிய இடைஞ்சலின் காரணமாக எல்டிடிஈயால் விரைவிலேயே ரயில் பாதை நாசமாக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப் படுகின்றது (உறுப்புரை 2.10இன் கீழ் ஏ 9 வீதியைத் திறத்தல் பற்றி ஏற்கனவே கருத்துப்பரிமாறப்பட்டிருக்கிறது).

## மீன்பிடித்தலை வழமைக்குத் திரும்புவதற்கான முயற்சிகள்

வழமைக்குத் திரும்புதலைத் தாமதப்படுத்தும் காரணியாக எல்டிடிஈ யினால் முன்வைக்கப்பட்ட பாரிய பிரச்சினை (உறுப்புரை 2.11) கட்டுப் பாடற்ற மீன்பிடித்தலாகும். இது மீனவர்களுக்கான நுழைவு – வெளி யேற்றப் பகுதிகள், மீன்பிடித்தலுக்கான தூரத்தையும் நேரங்களையும் கட்டுப்படுத்துதல், முஸ்லிம் மீனவர்களின் பிரச்சினைகள், இந்திய மீன்பிடிப் படகுப் பிரச்சினைகள், சீனப் படகுகள் மீதான தாக்குதலின் மூலம் நினைவூட்டப்பட்டவாறு பல்தேசிய மீன்பிடித்தல் செயல்பாடுகள் போன்ற பல பாதுகாப்பு கரிசனைகளைக் கொண்டுள்ளது. ஆயுதங்கள், யுத்த தளவாடங்களின் இடமாற்றம் மற்றும் புலனாய்வு தலையீடுகள் போன்ற எல்டிடிஈ செயல்பாடுகளுக்கு கட்டுப்பாடற்ற மீன்பிடித்தல் உதவியளிக்கும் என்பதனால் பாதுகாப்பு உள்ளர்த்தங்களை மீன்பிடித்தல் கொண்டுள்ளது.

35. ஜனாதிபதியால் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பேற்கப்பட்டுச் சுமார் ஆறு மாதங்களின் பின்னர் எல்டிடிஈஇனால் ஒரு விமான ஓடுபாதை திறக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப் பட்டுள்ளது. பின்னர் எஸ்.பி. தமிழ்செல்வனால் செய்யப்பட்ட கூற்றுகளில் இருந்து இது உண்மையெனத் தெரிவதுடன், இது ஜனாதிபதியின் முழுமையானப் பாதுகாப்பு நிருவாகத்தின் கீழ் நடந்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீன்பிடித்தல் பிரச்சினைகள் மீது இலங்கை கடற்படை, இயுக குழு மற்றும் மீனவர்களுக்குமிடையில் சில உடன்படிக்கைகள் அடையப் பட்டுள்ளன. இயுக குழுவினூடாக எல்டிடிஈயினால் செய்யப்பட்ட வேண்டுகோள்களின் மீது நுழைவு – வெளியேற்றப் பகுதிகளை இலங்கைக் கடற்படை மதிப்பாய்ந்ததுடன், இத்தகைய பகுதிகளின் எண்ணிக்கையையும் அதிகரித்தது. எனினும், இது மீன்பிடித்தலில் அல்லது புதிய நுழைவு – வெளியேற்ற பகுதிகளின் உபயோகத்தை உயர்த்தவில்லை என இலங்கைக் கடற்படை பின்னர் அறிவித்தது.[36]

### பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அமல்படுத்தல்

பாதுகாப்பைப் பாதித்த வழமைக்குத் திரும்புதலை நோக்கிய இன்னொரு நடவடிக்கை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (பதச) கையாண்ட உறுப்புரை 2.12 ஆகும். இதன்படி, பதசவைப் பிரயோகிப்பதை இலங்கை அரசாங்கம் இடைநிறுத்தியதுடன், கொழும்புத் தமிழ் சிவிலியன்களின் நடமாட்டத்தையிட்டு சோதனை செய்வதையும்கூட தளர்த்தியது. பதசவின் கீழ்க் கைதுகள் இடம்பெறவில்லை. அதன்கீழ் (உறுப்புரை 2.13) தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கான அடைதல் *(அக்சஸ்)* திருப்திகரமாக அமல்படுத்தப்பட்டது.

வழமைக்குத் திரும்புதல் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதலின் நோக்கத்திற்காக, தரப்புகளுக்கிடையில் கைதியொருவர் விடுவிக்கப் பட்டார். ஓமந்தையில் விடுவிப்பதைக் கொண்டாடுவதற்காக நடை பெற்ற கூட்டத்தில், இவ்விடயத்தில் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் (ஐசிஆர்சி), பாதுகாப்பு அமைப்பு, உள்ளக அலுவல்கள் அமைப்பு ஆகியவற்றின் உறுதியான பதிலிறுப்புகளை *(ரெஸ்பான்ஸஸ்)* எல்டிடிஈ பாராட்டியது.

### சமாதானப் பேச்சுவார்த்தைகளும் பாதுகாப்புப் பிரச்சினைகளும்

பேச்சுவார்த்தைகளின்போது, பாதுகாப்பு அம்சங்கள் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டோர் தீர்மானங்களை எடுத்தார்கள். அவற்றை இங்குச் சுருக்கமாகக் குறிப்பிடப்படுகிறது:

1. முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகளில், உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பிலான பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு இணைக் குழு

36. ததேகூ பாராளுமன்ற உறுப்பினர்களால் செய்யப்பட்ட பிரதிநிதித்துவத்தின் பேரில் அமைச்சர் மிலிந்த மொரகொடவுடன் யாழ்ப்பாணத்தில் மீனவர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பைக் கட்டுரையாசிரியர் கொண்டிருந்ததுடன், ஆயுதப்படைகளுக்குப் பாதுகாப்பு ஊறுபடுந் தன்மையின் ஆபத்தான நிலையைக் கோரிக்கைகள் கொண்டிருந்ததாக நம்புவதுடன், நடைமுறையிலான பாதுகாப்புச் சூழ்நிலைகளின் கீழ் மீன்பிடித்தலுக்கு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகளுடன் மீனவர்கள் திருப்தியடைந்தனர்.



ஒன்றைத் தாபித்தல் மற்றும் சர்வதேச நடமாட்டத்தை (எல்டிடிஈயின்) விஸ்தரிப்பதற்கு ஏற்பாடு ஒன்றை உருவாக்குதல் என இரு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இரண்டாம் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது, ஆனால், முதல் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை.[37]

2. சமாதானப் பேச்சுவார்த்தைகளின் இரண்டாம் அமர்வில், பாதுகாப்பு தொடர்பான மூன்று தீர்மானங்கள் இருந்தன. அதாவது,
   i. அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் கருணா ஆகியோருடனான கருத்துப் பரிமாறல்களின் ஊடாக, கிழக்கில் பாதுகாப்பு நிலைமையை மேம்படுத்துதல்.
   ii. மோதலைத் தவிர்த்தல் மற்றும்
   iii. படிப்படியாக வழமைக்குத் திரும்புதல் ஆகியனமீது துணைக் குழுவைத் தாபித்தல். இது, உள்ளடக்கத்தின் அடிப்படையில் இராணுவ நடவடிக்கைகளுக்கே அதிகளவு தொடர்புபட்டிருந்த துடன், உயர் பாதுகாப்பு வலயங்களுடனேயே பெரிதும் கரிசனைகளையும் கொண்டிருந்தது.[38]
3. மூன்றாம் அமர்வில் பாதுகாப்பு தொடர்பிலான பெருமளவுத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன், அவை பின்வருவனவற்றை உள்ளடக்கி இருந்தன:
   i. ஆயுதப்படைகள் குடியிருந்த ஹோட்டலை திருப்பி அளித்தல்,
   ii. இயுககு மேற்பார்வையின் கீழ் எல்டிடிஈயின் பகுதித் தளபதி களின் போக்குவரத்து,
   iii. யுத்தநிறுத்த உடன்படிக்கையின் கீழ் அரசியல் செயல்பாட்டில் ஈடுபடுவதற்கான எல்டிடிஈயின் உரிமை,
   iv. நெடுந்தீவில் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல் மற்றும்
   v. எல்டிடிஈ ஆதிக்கத்திலான பகுதிகளுக்கு மட்டும் எல்டிடிஈ சட்ட, ஒழுங்கு நிலையை மட்டுப்படுத்துதல்.[39]

   மாற்றுக் காணிகளை அல்லது இடவசதியைக் கண்டறிவதற்கான இயலாமையின் காரணமாகத் தீர்மானம் (i)ஐச் சாதிக்க முடிய வில்லை. தீர்மானங்கள் (ii), (iii) மற்றும் (iv) ஆகியவற்றைப் பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், தீர்மானம்

37. பேச்சுவார்த்தைகளின் முதல் சுற்றின் தீர்மானங்களின் பதிவு – 2002 செப்டம்பர் 18 அன்று எடுக்கப்பட்ட தீர்மானங்கள் முறையே 3 மற்றும் 4.
38. பேச்சுவார்த்தைகளின் இரண்டாம் அமர்வின் தீர்மானங்களின் பதிவு – 2002 நவம்பர் 3 அன்று எடுக்கப்பட்ட தீர்மானங்கள் முறையே 5, 6 மற்றும் 7.
39. பேச்சுவார்த்தைகளின் மூன்றாம் அமர்வின் தீர்மானங்களின் பதிவு – 2002 டிசம்பர் 5 அன்று எடுக்கப்பட்ட தீர்மானங்கள் முறையே 2, 3, 4, 5 மற்றும் 6.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(v) பின்னர் எதிர்மறையான ஊடக வெளிப்படுத்தல்களுடன் பிரச்சினைகளை உருவாக்கியது.

4. பேச்சுவார்த்தைகளின் நான்காம் அமர்வு பின்வருவனவற்றைத் தீர்மானித்தது:

   i. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் துரிதப்படுத்தப்பட்ட மீள்குடியேற்றத் திட்டமொன்றுக்காகச் செயல்திட்டத்தைப் பின் தொடர்தல்.

   ii. சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இராணுவ நிபுணர் ஒருவரால் (அதாவது, சதீஷ் நம்பியார்) உயர் பாதுகாப்பு வலயத்தில் இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றத்தை மதிப்பிடுதல்.

   iii. யுத்தநிறுத்த உடன்படிக்கைத் தொடர்பாக முறைப்பாடு, மீறல்களைப் பற்றி விவாதிக்க இயுக குழுவுடன் கட்டுரையாசிரியரும் கருணாவும் மாதாந்தம் சந்தித்தல்.[40]

   ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று காணிகள் மீது கருத்தெடுப் பின்மையின் காரணமாகத் தீர்மானம்:

   i. செயல்படாது நின்றுபோனது,

   ii. ஜெனரல் சதீஷ் நம்பியாரால் மேற்கொள்ளப்பட்டது,

   iii. நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு பயனுள்ள அப்பியாசமாகும் (பயிற்சியாகும்).

   ஆனால், பேச்சுவார்த்தைகளின் முறிவின் காரணமாகவும் எல்டிடிஈயினுள் தீர்மானம் எடுப்பதில் மையப்படுத்தப்பட்ட தன்மையின் காரணமாகவும் தொடர முடியவில்லை. எல்டிடிஈயின் இந்தப் போக்கு கருணாவை வாட்டியிருக்கும் என்பதுடன், அவர் பிரிந்து செல்வதற்கு ஏனைய காரணங்களுக்கு மத்தியில் இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

5. பேச்சுவார்த்தைகளின் ஐந்தாம் அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் 4, 6 மற்றும் 7 ஆகியன பாதுகாப்புக்குத் தொடர்பானவையாகும். சிறுவர்களைச் சேர்த்துக்கொள்ளுதலின்போது யுத்தநிறுத்த உடன்படிக்கையை எல்டிடிஈ மீறுகின்றது என்ற குற்றச்சாட்டை எடுப்பதற்கு ஆயுதப்படைகளுக்கும் பொலிசுக்கும் சந்தர்ப்பம் இருந்தது. எனினும் ஆயுதப்படைகளால்[41] எடுக்கப்பட்ட

40. பேச்சுவார்த்தைகளின் நான்காம் அமர்வின் தீர்மானங்களின் பதிவு – 2003 ஜனவரி 9 அன்று எடுக்கப்பட்ட தீர்மானங்கள் முறையே 4, 5, மற்றும் 6.

41. பேச்சுவார்த்தைகளின் ஐந்தாம் அமர்வின் தீர்மானங்களின் பதிவு – 2003 பிப்ரவரி 9 அன்று எடுக்கப்பட்ட தீர்மானங்கள் முறையே 4, 6 மற்றும் 7.



நடவடிக்கை எல்டிடிஈ சிறுவர்களைப் படைக்குச் சேர்த்துக் கொள்வதில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

ஐசிஆர்சியை ஒன்றிணைந்து தொடர்புகொள்ளுதல் மீதான தீர்மானம் 4ஆனது விளைவுகளைக் கொண்டுவரவில்லை. ஏனெனில், இந்நடவடிக்கையைப் பொறுப்பேற்பதற்கு ஐசிஆர்சியின் கடப்பாடு சந்தேகத்தில் இருந்தது. முஸ்லிம்களின் குழுவை எல்டிடிஈ சந்தித்த போதிலும், குழுவொன்றைத் தாபித்தல்மீதான தீர்மானம் 6இன்படி குழுவொன்றைத் தாபித்தல் திருப்திகரமான விளைவுகளைக் கொண்டு வரவில்லை. இது இன்னொரு முக்கியமான அம்சத்தைக் காட்டியது. அதாவது, இலங்கை அரசாங்கமும், இயுக குழுவும் இன்றிப் பணியாற்றுவதும் இவ்விடயங்களில் நேரடியாகப் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதும் இராணுவரீதியில் சக்திமிக்க எல்டிடிஈ யின் விருப்பமாகும். தீர்மானம் 7கூட குடியேற்றங்கள் தொடர்பான வையாகும் என்பதுடன், இது முஸ்லிம்களுக்கும் சிங்களவர் களுக்கும் உதவியளிப்பதற்கு ஏதாவது வழமைக்குத் திரும்புதல் முயற்சிகளை இடைநிறுத்துவதற்கான இன்னொரு நகர்வாகும்.

6. பேச்சுவார்த்தைகளின் ஆறாம் அமர்வின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் 1, 2, 3, 4, 5 மற்றும் 8 ஆகியன பாதுகாப்பு அம்சங்கள் தொடர்பானவையாகும்.[42] ஏற்கனவே விளக்கியுள்ளவாறு இயுக குழுவினால் தயாரிக்கப்பட்ட வரைவு கசிந்ததன் காரணமாகத் தீர்மானம் 1ஐ மேற்கொள்ள முடியவில்லை. தீர்மானம் 2 தொடர்பில், ஆயுதப்படைகள் குறித்து ஒரு பிரச்சினை மட்டுமே இருந்தது. இது இலங்கைக் கடற்படைக் கப்பல்களில் இயுகக் கொடிகளைப் பறக்கவிடுவது தொடர்பானதாகும். தீர்மானம் 3 தொடர்பில், அலைந்து திரியும் போர் வீரர்களை அல்லது எல்டிடிஈ போராளிகளைக் கையாள்வதற்கு ஏற்றுக்கொள்ளத்தக்க வழிகள் இருந்தபோதிலும், பிரதிபலிப்பதில் எல்டிடிஈ தாமதித்தது. பேச்சுவார்த்தைகள் முறிந்ததால், தீர்மானங்கள் 4ஐயும் 5ஐயும் அமல்படுத்த முடியவில்லை. ததேகூ (டிஎன்ஏ) அரசியல்வாதிகள் மூலம் எல்டிடிஈயின் சூழ்ச்சித்திறத்துடனும் பொதுமக்களைத் தூண்டி விடுகின்றதுமான நடவடிக்கைகளின் காரணமாகத் தீர்மானம் 8ஐ அமல்படுத்தப்பட முடியவில்லை.

## பேச்சுகளின் காலத்திட்ட அமைப்பும் வன்முறைச் சம்பவங்களும்

பலதரப்பட்ட சம்பவங்களை ஒருவர் நோக்கும்போது, பேச்சுகள்

42. பேச்சுவார்த்தைகளின் ஆறாம் அமர்வின் தீர்மானங்களின் பதிவு 2003 மார்ச் 21 அன்று எடுக்கப்பட்ட தீர்மானங்கள் முறையே 1, 2, 3, 4, 5 மற்றும் 8.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆரம்பிப்பதற்கு முன்னரும் அவை நடந்துகொண்டிருக்கும்போதும் இடம்பெற்ற துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் இருந்தன என்பதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இவை ஒரே நேரத்தில் நிகழ்ந்ததாக இருக்கலாம் அல்லது குழுக்களின் அறியப்பட்டிருக்காத வேண்டுமென்றேயான நடவடிக்கைகளாக இருக்கலாம். இருதரப்புகளும் விழிப்பாக இருப்பதற்கு எதிர்காலப் பேச்சுவார்த்தைகளில் பங்கெடுப்பவர்களுக்கு எச்சரிப்பதற்காக மட்டும் இவற்றில் சில இங்கு வெளிச்சமிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இவை திட்டமிட்ட முயற்சிகளாக, உள்ளூரில் அல்லது வேறு வகையில் ஆரம்பிக்கப்பட்டவையாக இருந்தால், தரப்புகளில் ஒன்றுக்கு எரிச்சல் மூட்டுவதாக அல்லது இருதரப்புகளுக்கிடையில் மேம்பாட்டையும் உறவுகளை ஸ்திரமற்றதாக்குவதற்காக இருக்கலாம். இரு வழிகளிலும், இவை அபாயகரமான சூழ்நிலைகள் என்பதுடன், சமநிலையிலான எண்ணமும் சகிப்புத்தன்மையும் மட்டுமே இதற்கு உதவிகரமானதாக இருக்கும்:

1. 2002 செப்டம்பர் 16 அன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முதலாம் சுற்றுக்கு முன்பாக, பருத்தித்துறை உயர் பாதுகாப்பு வலயம்மீதான தாக்குதல் சம்பவமொன்று இடம்பெற்றது. இது மாவட்ட மட்டத்தில் ஆயுதப்படைகள் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்ததும், ஐசிஆர்சி உதவியுடன் இருதரப்புகளிலிருந்தும் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக எல்டிடிஈயுடன் பாதுகாப்பு அமைச்சு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்ததும் எல்டிடிஈமீது இலங்கை அரசாங்கத்தின் தடையை எடுப்பதற்கான நடவடிக்கையின் நோக்கத்தின் பின்னணியில் என்ன நடந்தது என்பதைக் கவனத்திற்கு எடுக்க வேண்டும்.
2. 2002 நவம்பர் 1 அன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளின் இரண்டாம் சுற்று இடம்பெற்றது. அத்தருணத்தில் கைதிகளை விடுவிப்பதைப் பாதுகாப்பு அமைப்பு முடித்துவிட்டதுடன், களச் சோதனைகளின் பின்னர் யாழ்ப்பாண உயர் பாதுகாப்பு வலயத்தின் பாதுகாப்பு புற எல்லையைக் குறைத்திருந்தது. 2002 அக்டோபர் 9 அன்று, அம்பாறை மாவட்டத்தில் உள்ள அதிரடிப்படையின் முகாம் தாக்கப்பட்டு, ஏழு எல்டிடிஈ ஆதரவாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். பாரியதொரு ஆட்சேர்ப்பு இயக்கத்தையும் எல்டிடிஈ ஆரம்பித்தது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருந்த வேளை, 2002 நவம்பர் 2 அன்று 34 நிலக்கண்ணிவெடிகளுடனும் 25 தொகுதிகளைக் கொண்ட தொடர்பாடல் சாதனங்களுடனும் இலங்கைக் கடற்படையினால் திருகோணமலைக்கு அப்பால் ஆறு எல்டிடிஈ போராளிகள் கைதுசெய்யப்பட்டனர்.



3. 2002 டிசம்பர் 2 அன்று பேச்சுவார்த்தைகளின் மூன்றாம் சுற்று ஆரம்பமாகியது. பேச்சுவார்த்தைகளின் முன்னர் ஓமந்தையிலும் திருகோணமலையிலும் மற்றும் அம்பாறை மாவட்டத்திலும் உறுதியான தன்மையில் மாவட்டக் கூட்டங்கள் இடம்பெற்றன. தரப்புகளுக்கும் சமுதாயங்களுக்கும் இடையில் சிறிதளவு தொடர்பு விருத்தி செய்யப்பட்டதனால், இவை பயனுள்ளவையாக விளங்கின. எனினும், ஈபிடிபி போராளிகள் (40) திருப்பி ஒப்படைக்கப்பட்டதை மூலம் எல்டிடிஈ மகிழ்ச்சி அடையவில்லை என்பதுடன், அதன் முணுமுணுப்பை அதிகரிக்கச்செய்தது. பேச்சுவார்த்தைகளுக்காக ஒஸ்லோவில் வந்திறங்கிய அமைச்சர் ரவூப் ஹக்கீம், இலங்கையில் உட்கட்சிப் பிரச்சினைகளின் காரணமாக பேச்சுவார்த்தைகளில் பங்கெடுக்காமல் உடனடியாகத் திரும்ப வேண்டியிருந்தது.
4. 2003 ஜனவரி 6 அன்று பேச்சுவார்த்தைகளின் நான்காம் சுற்று ஆரம்பமாயிற்று. டிசம்பர் 10 அன்று ஆயுதத்தைக் களைதல் மற்றும் வழமைக்குத் திரும்புதல்மீதான தீர்மானம் துணைக் குழுவில் நிறைவேற்றப்பட்டது. இது ஒரு மாபெரும் வெற்றியல்ல என்ற போதிலும், இருதரப்புகள்மீதான அழுத்தத்தைக் குறைப்பதற்கான பொதுமேடையாகும். டிசம்பர் 28 அன்று இராணுவத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையானது எல்டிடிஈ தலைமைத்துவத்தை எரிச்சலூட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட சில சொற்களின் காரணமாகக் குழப்பத்தை உருவாக்கியது. இதன் பின்னரும் நிரந்தரமான வெறுப்பை இது உருவாக்கியது.
5. 2003 பிப்ரவரி 6 அன்று பேச்சுவார்த்தைகளின் ஐந்தாம் சுற்று ஆரம்பமாயிற்று. இந்த மாதத்தின்போது பெருமளவு சம்பவங்கள், அதாவது ஆட்கடத்தல், இராணுவச் சீருடைகள் அணிந்தபடி பெண் போராளிகள் நகர்வதைத் தடுத்தல் போன்றவை இடம்பெற்றன. இவற்றில் மோசமானது நெடுந்தீவுக் கடலில் இடம்பெற்ற சம்பவமாகும். இதில், பேச்சுவார்த்தைகளுக்கு முதல்நாள் கப்பல் அணி தற்கொலை செய்தது. இது முந்தைய மாதத்தைவிட அளவுக்கதிகமான வெறுப்பை உருவாக்கியது.
6. 2003 மார்ச் 18 அன்று பேச்சுவார்தைகளின் ஆறாம் சுற்று ஆரம்பமாயிற்று. குச்சவெளிச் சம்பவம், எல்டிடிஈ போராளிகள் ஹபரணை வீதியைக் கடந்து சென்றமை, 2003 மார்ச் 10 அன்று வாணிபக் கப்பலைச் சம்பந்தப்படுத்திய சம்பவம், மூதூரிலும் கந்தளாயிலும் உத்தேசமான பாதுகாப்புப் பயமுறுத்தல்கள், திருகோணமலைத் துறைமுகத்திற்கு அருகில் எல்டிடிஈ படகு ஒன்று கைப்பற்றப்பட்டமை ஆகியன மிகவும் மறுதலையானவையாகும். 2003 மார்ச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

20 அன்று சீனக் கப்பல் ஒன்று காணப்பட்டதுடன், அது எல்டிடிஈ யினால் தாக்கப்பட்டு, மூழ்கடிக்கப்பட்டது.

## இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் பாதுகாப்பும்

யுத்தநிறுத்த உடன்படிக்கைத் தொடர்பாக, இயுககுவால் ஆற்றப்படும் வகிபங்குகளை இயுக குழுவின் நோக்கங்களும் கடமைகளும் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. அமல்படுத்துவதற்கான அதிகாரம் அல்லது ஆற்றல் இன்றி விசாரிக்கும் மற்றும் நிர்ணயிக்கும் அதிகாரங்களை மட்டுமே இயுககு கொண்டுள்ளது என்ற உண்மையானது அவதானிக்கத்தக்க பலவீனங்களாகும். சமாதானமும் பாதுகாப்பும் கைகோர்த்த நிலையில் செல்ல வேண்டுமானால், அத்துறைகளிலும் எண்ணிக்கைகளிலும் இயுக குழுவைப் பலப்படுத்துவதற்கான அவசியமுள்ளது. இருந்த போதிலும், கரடுமுரடானதும் சிக்கலானதுமான சூழ்நிலைகளில் சமாதான நடைமுறையை முன்னோக்கிக் கொண்டு செல்வதில் இயுக குழு வழங்கும் சேவைகள் பாராட்டப்பட வேண்டும். இயுககு மற்றும் அதன் பங்கெடுப்பு குறித்து ஏற்கனவே பெருமளவு மேற்கோள்கள் செய்யப்பட்டுள்ளதால், இப்பகுதியில் இத்தகைய நடவடிக்கை பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லப்படமாட்டாது.

இயுக குழுவின் முதல் தலைவரின் காலத்தின்போது இயுக குழுவுக்கும் பாதுகாப்பு அமைப்புக்கும் இடையிலான உறவு ஐயத்திற்கிடமின்றி வளர்ந்தது. அவர் ஆயுதப்படை அல்லது பாதுகாப்பு அமைச்சின் மனங்களில் அதிகளவு சந்தேகத்தை உருவாக்காமல், விடயங்களைக் கையாண்டார். எல்டிடிஈயுடன் அவர் சாதகமான முறையில் தகவல் தொடர்பைக் கொண்டிருந்தார் என்ற பொது உணர்வுடனும் பத்திரிகை யாளர்களின் உதவியுடனும் சில விரோத மனப்பான்மையிலான குழுக் களால் செய்யப்பட்ட 'வெளிப்படுத்தல்களுக்குப்' பின்னர் அவரது நம்பகத்தன்மையும் சந்தேகிக்கப்பட்டது. இவ்வாறாக அவரிடமிருந்தும் இயுக குழுவிடமிருந்தும் எதிர்பார்க்கப்பட்ட பாகுபாடற்ற தன்மை ஆபத்துக்குள்ளாக்கியது. எனினும், இயுக குழுவின் இரண்டாவது தலைவர் எல்டிடிஈக்குத் தகவலை வெளியிட்டதாகச் சந்தேகிக்கப் பட்டதைத் தொடர்ந்து, இலங்கைக் கடற்படையை அதிர்ச்சியடையச் செய்த – கடலில் நடந்த – சம்பவங்கள் உச்சத்திற்கு வந்தன.

சமாதான நடைமுறைக்கு இயுக குழுமீதான சந்தேகம் சாதகமற்ற தாகும். எல்டிடிஈயுடனேயே இயுககுழு அதிகளவு கஷ்டங்களை எதிர் நோக்கியது. சோதனை நடத்துவதற்கும் விசாரிப்பதற்கும் வாய்ப்பு களை எல்டிடிஈ வழங்காத அதேவேளை, நிர்ணயிக்கப்பட்டவற்றை அமல்படுத்துவதைத் தாமதித்தது. சில கண்காணிப்பாளர்கள் எல்டிடிஈயின் கைகளில் தமது உயிர்களையே கிட்டத்தட்ட இழக்க நேர்ந்தது. இயுக குழுவினால் நிர்ணயிக்கப்பட்டவற்றுடன் இணங்குவது தொடர்பாக ஹக்கோனேவில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எல்டிடிஈயுடன் பயனற்ற வெறும் பேச்சுவார்த்தைகளாகவே விளங்கின. எல்டிடிஈயிடமிருந்து ஒத்துழைப்பு இன்மையின் காரணமாக, இயுககு காட்டிக் கொடுக்கப் பட்டதுடன், அது செயல்திறனற்றது எனத் தோற்றம் பெறச் செய்யப் பட்டது. அத்துடன், எல்டிடிஈயை நோக்கிய தமது கருத்துரைகளுக்குச் சார்பான அனுகூலத்தை நிரூபிப்பதற்குத் தென்பகுதி ஊடகங்களைச் சேர்ந்தவர்களும் இயுக குழுவுக்கு எதிரான அரசியல்வாதிகளும் அதைப் பயன்படுத்தினர். இது சமாதான நடைமுறையைப் பாதித்தது.

பெருமளவு தொழில்நுட்ப திறத்துடன் செயல்படும் ஒழுங்குகளை முன்மொழியக் காரணகர்த்தாவாக இயுக குழு இருந்ததை உறுதியாகப் பாராட்டத்தான் வேண்டும். இது இயுக குழுவின் முதல் தலைவரின் காலத்தின்போது நன்றாக அவதானிக்கப்பட்டது. அவருக்குப் பிறகு வந்த தலைவர் மூலம் அர்த்தமுள்ள தகவலின் கசிவானது அவருக்கு முந்தைய தலைவரால் செய்யப்பட்ட சிறப்பான பணியைக் களங்கப் படுத்தியதுடன், இயுக குழுவுக்கு எதிரான விமர்சனம் அதிகரித்த அளவுக்கு கண்காணிப்பாளர்களை மாற்றும்படியும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். இக்குற்றச்சாட்டுக்களின் காரணமாக அனுசரணையாளரும் கண்காணிப்பாளரும் ஒரே ஆளாக இருக்கக்கூடாது என்ற கோரிக்கை உறுதியாக வேர்விட்டது.

அனுசரணையாளருக்கும் இயுக குழுவுக்கும் இடையிலான உறவுக்குப் பாதுகாப்பு அமைச்சு உடந்தையாகவிருக்கவில்லை. எனினும், இயுக குழுமீது அனுசரணையாளரால் பிரயோகிக்கப்பட்ட சிறிதளவு உத்தி யோகப் பற்றற்றதும் முறைசாராததுமான ஆதிக்கம் இருந்திருக்கக்கூடும் என்ற உணர்வு, ஆயுதப்படைகள் மற்றும் பாதுகாப்பு அமைப்பினர் மத்தியில்கூட இருந்தது. விசேடமான சான்று எதுவும் இல்லாத போதிலும் சமாதானத் தீர்வொன்றைக் கண்டறிவதற்கு அப்போதைய நோர்வே தூதுவரின் தனிப்பட்ட அக்கறைகள் அத்தகைய ஆதிக்கத்திற் கான காரணமாக இருந்திருக்கலாம் என்பது வெளிப்படையானதாகும்.

## முடிவுரைகளும் படிப்பினைகளும்

சமாதான நடைமுறையும் பாதுகாப்பும் ஒன்றுடன் ஒன்று இணைந்த தாகும். எல்டிடிஈயையும் பாதுகாப்புப் படைகளையும் பங்குபெறச் செய்வதில், அல்லது வழமைக்குத் திரும்புவதில் இதை மனத்தில் கொண்டே யுத்தநிறுத்த உடன்படிக்கை தயாரிக்கப்பட்டது. இருந்த போதிலும், மோதல் அல்லது சமாதானத்தை ஏற்படுத்துதல் ஆகியன





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்பாக அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சர்வரோக நிவாரணியாக யுத்தநிறுத்த உடன்படிக்கை விளங்க முடியாது. பேச்சுவார்த்தைக்கான இணக்கமொன்றுக்கான படிக்கல்லாகவும் நடைமுறை முன்னேற்றமடையும்போது மேலும் வளரக்கூடிய ஓர் ஆவணமாகவும் இது கருதப்படுகின்றது.

சமாதான நடைமுறைமீது அச்சுறுத்துகின்ற பாதுகாப்புப் பிரச்சினைகளின் காரணமாக, ஜனாதிபதிக்கும் சட்டசபையின் பிரதிநிதிகளுக்கும் இடையில் அதிகளவு நேர்மையானதும் வெளிப்படையானதுமான பேச்சுவார்த்தை இருப்பது அவசியமாகும். இந்தப் படுகுழி தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அரசியல் போட்டி மனப்பான்மையின் காரணமாக இது செய்யப்பட முடியவில்லை. சமாதான நடைமுறை வெற்றியடைவதற்கும் உண்மையான விசையுடன் நகர்வானது வேகமும் தீவிரமும் கொள்ளும் நிலையைத் திரட்டிக்கொள்வதற்கும் கட்சிக் கூட்டுகளுக்கு அக்கறையின்றி, இத்தகைய ஒருமைப்பாடு அவசியமானதாகும்.

இச்சம்பவத்தில், அழுத்தத்திற்கு ஆயுதப்படைகள் பலியாகக் கூடாது. ஆனால், இவ்வாறு இருப்பதில் 'மறுதலையான' (எதிர்மறையான) பின்விளைவுகளாக இருக்கக்கூடிய பதவியுயர்வுகள், பதவிகள் போன்ற தனிப்பட்ட இழப்புகளுக்கு அக்கறையின்றி ஒழிவுமறைவற்றதாக இருக்க வேண்டும். இத்தகையதொரு நிலை எடுக்கப்படும்போது அரசியல் உயர்பீடங்கள் அதைச் சிறுமைப்படுத்துகின்றபோதிலும், இலங்கையின் வரலாற்றால் இத்தகைய பலமான சமிக்ஞைகள் பாராட்டப்படும். இதைப்போலவே சமாதானத்தை ஏற்படுத்துவதை இடம்பெறச் செய்வதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ள தமது பகுதியினுள் அவை வளைந்துகொடுக்கத்தக்கதாகவும் இருக்க வேண்டும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் உள்ள பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புகள் மற்றும் பயமுறுத்தல்கள் ஆகியன புரிந்துகொள்ளப்பட வேண்டும். ஒரு தரப்பினால் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பலமாக எது கருதப்படுகின்றதோ, அது வேறொன்றினால் பலவீனமொன்றாகக் கருதப்படும். உதாரணமாக, தேசிய இராணுவத் தலையீடுகளுடன் இலங்கை அரசாங்கத்தால் ஈட்டப்பட்ட பலத்தை உறுப்புரை 1.3இன் பிரயோகம் நிரூபித்துள்ளது (சில வேளைகளில் எல்டிடிஈயை அமைதிப்படுத்துவதன் மூலம்). எல்டிடிஈயால் மீறல்களைச் சமாளிப்பதில் உள்ள பலவீனங்கள் அனுசரணையாளர்களாலும் கண்காணிப்பாளர்களினாலுமான உறுப்புரை 3இன் பிரயோகம் நிரூபித்தது. இவ்வாறாக அவர்களின் நிலையை மறைமுகமாகப் பலப்படுத்தியது. ஆகவே, தமக்கு அனுகூலமளிப்பதற்கு அவர்களது நிலைகளைச் சூழ்ச்சித்திறத்துடன் கையாள்வதற்கு இத்தகைய மனக்குறையிலான தரப்பு



களுக்கு இது சாதாரணமாகும் (உதாரணம்: உத்தியோகப்பற்றற்ற, ஆனால் மனப்பூர்வமான கடல் ஒழுங்கைகளை எல்டிடிஈ கோருவதும் இயுக குழுவின் தலையீடுகளை மூலோபாய ரீதியிலும் வஞ்சகமான ரீதியிலும் தவிர்த்துக்கொள்ளுதலும்). சமாதான நடைமுறை நொருங்கிப் போகாது என்பதை உறுதிப்படுத்துவதற்கு இவற்றின்மீது சமநிலையொன்றை வைத்திருத்தல் அவசியமானதாகும்.

சமாதானத்தைச் சாதிக்குமுகமாக, யுத்தநிறுத்த உடன்படிக்கையொன்றைக் கொண்டிருப்பது அல்லது பெருமளவு பேச்சுவார்த்தையிலான அமர்வுகளைக் கொண்டிருப்பது போதுமானதல்ல. இது ஏனையோரின் தேவைகள், விருப்பங்கள், சித்தாந்தங்கள், கோரிக்கைகள் ஆகியவற்றையிட்டுச் சிறந்த புரிந்துணர்வைக் கொண்டிருப்பதை வேண்டுகின்றது. ஏனைய தரப்பின் தவறான செயல்களை நோக்கி உறுதித் தன்மையுடனான சகிப்புத்தன்மை, பொறுமை மற்றும் முழு அர்ப்பணிப்பு ஆகியன சமாதானம் முன்னோக்கிச் செல்வதற்கான நகர்வொன்றைச் செய்கின்றது. எல்டிடிஈயின் தவறான செயல்களையிட்டு உறுதித்தன்மை, இன்மையைக் கொண்டிருந்ததிற்காகவும் முற்றிலும் வேறுபட்டதை எல்டிடிஈ வெளிப்படுத்தியபோது அளவுக்கதிகம் பொறுமையாக இருந்ததற்காகவும் அரசாங்கத்திற்கு எதிரான மிகையான விமர்சனம் இருந்தபடியால், இக்காரணங்கள்மீது தமது முந்தைய நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மதிப்பாயும். எனினும், விசேடமாகப் பாரிய எண்ணிக்கைகளில் கடலில் எல்டிடிஈ போராளிகள் கொல்லப்பட்டபோதும், எல்டிடிஈயினால் ஆயுதப்படைகள் விரிவான அளவில் இழிவுபடுத்தப்பட்டபோதும் இருதரப்புகளும் பொறுமையுடன் இருந்ததையும், மிகவும் பாரிய அளவுக்கு சமாதானத்திற்கு அர்ப்பணிப்புடன் இருந்ததையும் ஒருவர் பாராட்டத்தான் வேண்டும்.

சமாதான நடைமுறையுடன் சேர்த்து மக்களைக்கொண்டு செல்வதற்கான தேவை, விசேடமாக, இராணுவரீதியிலான கூருணர்வுப் பின்னணியொன்றில் அவசியமானதாகும். பாரபட்சத்தைக் கொண்ட தீய எண்ணத்துடன் பிரச்சினைகள்மீது சுதந்திரமான ஊடகம் வெறிகொண்டு செல்லுதல், தமது ஒடுங்கிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஊடகங்களை அரசியல்வாதிகளும் சில இராணுவ அதிகாரிகளும் உபயோகித்தல்; அரசாங்க ஊடகங்கள் செயல்திறனற்று இருப்பதுடன், மக்களிடமிருந்து உண்மைகளை மறைத்தல், சமாதான நடைமுறைகள் தொடர்பாக முன்னேற்றங்களைக் கையாள்வதில் இலங்கை அரசாங்கத்தின் சமாதானச் செயலகத்தின் சார்பான தவறுகள் ஆகியனவற்றை எல்டிடிஈயின் உறுதியான ஊடகச் செயல்திறன்களுடன் ஒப்பிட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடியாது. சமாதான நடைமுறையின் தண்டவாளத்தின்மீது மக்களையும் இருதரப்புகளையும் ஆயுதப்படைகளையும் காவிச் செல்வதில் ஊடகங்களின், குறிப்பாகச் சுதேச மொழியிலான பத்திரிகையின், வகிபங்கு சிறப்பாகச் சாதிக்கப்பட்டிருக்க முடியும். ஆனால், செய்திக்கும் பரபரப்புக்குமான பசியின் காரணமாக இவ்வாறாக நடைபெறவில்லை. இது எதிர்காலத்தில் திருத்தப்பட வேண்டும் என்பதுடன், இது இலங்கை அரசாங்கமும் எல்டிடிஈயும் மட்டும் அன்றிப் பெரிய அளவில் பத்திரிகையாளர்களின் பொறுப்பாகவும் இருக்க வேண்டும்.

நம்பிக்கையைக் கட்டியெழுப்புதலும் புத்திசாதுரியத்திலான புதுமையானதும் உறுதியானதுமான தீர்மானமெடுத்தலும் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் வெற்றிக்கு அவசியமானவையாகும். எவ்வளவு தான் அதிகளவு விமர்சிக்கப்பட்டாலும், ஐதேமுவினால் சமாதானத்தை ஏற்படுத்துதலின் வெற்றி இங்குதான் தங்கியுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் ஒருமுறை நிறுவப்பட்டுள்ளதுடன், பின்தொடரலும் அதேவழிகளில் இருப்பதும் அவசியமானதாகும். தனிப்பட்டவர்களாலும், குழுக்களாலும், மற்றும் நிறுவனங்களாலும் பங்கிடப்பட்ட அனுபவங்களால் இடப்பட்டுள்ள தளங்கள்மீது மேலும் கட்டியெழுப்புதலை இயலச் செய்தல் சமாதானத்தை ஏற்படுத்துதலில் வெற்றியடைவதற்கான முக்கியமான தரங்களாகும். சமாதானத்தை ஏற்படுத்துதலில் அரசியல்மயப்படுத்தலின் உயர்மட்டத்தின் காரணமாக, அனுபவங்களைப் பங்கிடுதல் தடுத்துவைக்கப்பட்டுள்ளது. இது சமாதானத்தின் அக்கறையின் பேரில் நடைபெறக் கூடாது.[43]

செயல்பாடுகளில் அதிகளவு சட்டபூர்வமானதாக அல்லது பூரணமானதாக இருப்பதற்கு முயலுதல் எப்பொழுதுமே சமாதானத்தை ஏற்படுத்துதலைப் பாதித்துள்ளது. எல்டிடிஈ போன்ற தலைவர் மையத்திலான தாபனமொன்றுடன் பணியாற்றும்போது, ஒரு தனிப்பட்டவர் மீது யாவுமே தங்கியிருப்பதன் காரணமாக உறுதியற்றதன்மை, சந்தேகம்,

43. தனிப்பட்ட முறையில் எழுதும்போது சமாதானத் திட்டத்தின் தேசிய அக்கறையைக் கருத்திற்கெடுக்கையில் பாதுகாப்பு தொடர்பான ஏதாவது பிரச்சினைமீது ஐக்கியப் பொதுஜன சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் சமாதானச் செயலகத்தால் அரிதாகவே ஏதாவது ஆலோசனை நடத்தப்பட்டதாகக் கட்டுரையாசிரியரால் கூறமுடியும். கட்டுரையாசிரியருக்கு, தனிப்பட்டவர்களின் அல்லது தரப்புகளின் அங்கீகாரமின்மை அல்ல, ஆனால், நடைமுறையை தவறாக நடத்தக்கூடிய தனிப்பட்டவர்கள் மற்றும் தரப்புக்களின் மீது அளவுக்கதிகம் தங்கியிருப்பதே அபாயமாகத் தோன்றுகின்றது. ஐதேமு ஆட்சியின்போது சிலர் திடநம்பிக்கையுடன் செயல்படவில்லை என்பதையிட்டு ஒருவர் அக்கறையின்றி இருக்கக் கூடாது, ஆனால், ஐபொசுமுவின் (யூபிஎஃப்ஏ) பாதுகாப்பு நடைமுறைகளில் எண்ணத்தில் ஆதிக்கம் செலுத்துவதற்கான அதிகாரத்தில் தொடர்ந்துமிருப்பார். தமது சிந்தனையில் அவர்கள் சரியானவர்களாக விளங்கினாலும்கூட, ஐதேமு ஆட்சியின் வேறுபட்ட அனுபவங்களுக்குச் சக்தியூட்டுவதற்கும் ஒத்துழைப்பதற்கும் முயல்கையிலும் ஐபொசுமு சமாதானச் செயலகத்தால் எதுவுமே இழக்கப்பட்டிருக்க முடியாது. இது அரசாங்க அல்லது அரசியல் தேவை மட்டுமல்ல. ஆனால், பாரிய தேசிய முக்கியத்துவத்துவமுடையது என்பதனால் அவசியப்பட்டது.



மற்றும் எதிர்வுகூறமுடியாமை ஆகியவற்றை ஒருவர் எதிர்பார்க்கத்தான் வேண்டும். இத்தன்மையில் ஒருவரின் எண்ணத்திற்குப் பலியாவதற்கும் அவசியமில்லை எனவும் அவர்கள் மாற்றமடைய வேண்டும் எனவும் ஐதேமுயின் சமாதானத்தை ஏற்படுத்தும் விமர்சகர்கள் எதிர்வாதம் புரிகின்றார்கள். இந்த வாதத்தில் சிறிதளவு நியாயம் இருக்கின்ற போதிலும், அரசாங்கமொன்றாக, இலங்கை அரசாங்கம் பொருளாதார, அரசியல், இராணுவ மற்றும் சர்வதேசக் கடப்பாடுகளைக் கரிசனைக்கு எடுத்து, அதன் பிரகாரம் பதிலிறுப்பதற்கு (எதிர்வினையாற்றுவதற்கு) ஒருவர் இணங்க வேண்டும்.

இராணுவரீதியிலும் பொருளாதாரரீதியிலும் குறைந்த சக்தியைக் கொண்டுள்ள நாடாக இருப்பதால், நிச்சயமற்றதும் உறுதியற்றதும், எதிர்வுகூறமுடியாததுமான உலகச் சக்திகளினால் நிறைவுபடுத்தப்பட வேண்டும் என இலங்கை கருதப்பட வேண்டும் என்பதுடன், இந்த நிறைவுபடுத்துகின்ற செல்வாக்குகளுடன் எல்டிடிஈயின் விருப்பங்களை சமநிலைப்படுத்துவது முக்கியமானதொரு தேவைப்பாடாகக் கருதப்பட முடியும். இத்தேவையைத் திருப்திப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு வலை நகர்வுகள் கருதப்பட முடியும். ஆனால், இது எல்டிடிஈயிடமிருந்து எதிர்மறையான தன்மையைக் கொண்டுவந்துள்ளது. ஆகவே, விசேடமாக இராணுவ அலுவல்களில், பாதுகாப்பு வலையைப் பயன்படுத்தும் எல்லைகள், மிகவும் எச்சரிக்கையுடன் பகுப்பாயப்பட வேண்டும்.

அரசியல் மற்றும் வேறு மறுதலையான சூழ்ச்சித்திறத்துடனான கையாளுதல்கள் எப்பொழுதுமே சமாதானம் ஏற்படுவதைப் பாதிக்கின்றன. இலங்கையின் சமாதான நடைமுறையில் இது சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது. அரசியல், சந்தர்ப்பவாதத்தின் ஊடாக ஈட்டுவதல்ல. ஆனால், சமாதானத்தை ஏற்படுத்துவதற்குத் தனக்குத் தானே ஒத்துழைப்பதும் அர்ப்பணிப்பதும் அவசியமாகும். விசேடமாக, அரசாங்கங்கள் கைமாறும்போது, மறுதலையான தன்மையில் அடுத்தமையும் சமாதானத்தை ஏற்படுத்துபவர்களைச் சில மாறுபட்ட கருத்தைக் கொண்ட குரல்கள் ஆதிக்கம் செலுத்தும் என்பதுடன், இது அடுத்தமையும் அரசாங்கத்தினால் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும். இது இரு பாரிய தென்பகுதி அரசியல் கட்சிகளுக்கு இடையில் ஆரம்பத்திலிருந்து சாத்தியப்படவில்லை. சமாதான நடைமுறையை நடத்தும் யாரேனும் ஒருவருக்கான உண்மையான ஒத்துழைப்பும் ஆதரவும் பெரியளவில் இல்லாதிருக்கின்றது.

எல்டிடிஈயினாலான யுத்தநிறுத்த உடன்படிக்கையின் மீறலின் எண்ணிக்கையானது உடன்படிக்கைக்கான அர்ப்பணிப்பு இன்மையைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டுவதுடன், யுத்தநிறுத்த உடன்படிக்கை அமல்படுத்தும் விதத்தில் பெருமளவு விமர்சகர்களின் கூற்றுப்படி எல்டிடிஈமீது கொண்டுவரப்பட்டுள்ள அழுத்தம் போதுமானதல்ல (2002க்கும், 2003 இறுதிக்கும் இடையில்). ஆகவே, கற்ற இந்தப் படிப்பினையுடன், சர்வதேசச் சமுதாயத்திற்கு, விசேடமாக புலம்பெயர்ந்தவர்கள் வாழ்கின்ற நாடுகளுக்கு நேரம் வந்துவிட்டதுடன், சமாதானத்தை ஏற்படுத்துவதில் இலங்கை அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதற்கு, எல்டிடிஈமீதான தேவைப்படும் செல்வாக்கைக் கொண்டுவருவதற்கு, நிதியங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

உணர்வுபூர்வமான தடைகளை உருவாக்குவதன் மூலம் சமாதான நடைமுறையைச் சீர்குலைப்பதற்கு அவர்களது முயற்சிகளால் சேதத்தை விளைவிக்க இலங்கை அரசாங்கம் மற்றும் தென்பகுதி குழுக்களின் மீது இவ்வாறான செல்வாக்கைக் கொண்டுவர வேண்டும். சமாதானத்தை ஏற்படுத்துவதன் கஷ்டங்களைப் புரிந்துகொள்வதற்கு எல்டிடிஈயை அல்லது இந்தத் தென்பகுதிக் குழுக்களைக் கேட்பது போதுமானதல்ல. நடைமுறைப்படுத்தக்கூடியதும் வெற்றிகரமானதுமான அதிகாரத்தைப் பங்கிடும் முறைகளுக்கு அதிக வெளிச்சத்தை அவர்களது கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். அனுசரணையாளரின் தலையீடுகளின் மூலம் பெருமளவு வாய்ப்புகளை எல்டிடிஈ கொண்டிருந்ததுடன், சில வேளைகளில் மறுதலையான வகிபங்கொன்றை ஆற்றிய ஊடகங்கள் உட்பட மற்றவர்களுக்கும் இந்த முழுமையான வாய்ப்புகள் கிட்டச் செய்யப்பட வேண்டும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கைகளைப் பலப்படுத்துவதன் மூலம் எல்டிடிஈயைக் கட்டுப்படுத்தும் உள்நோக்கங்கொண்ட செயல்நோக்கத்துடன், சமாதானத்தை அடையுமுகமாக யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீள்வரைவதே அல்லது மதிப்பாய்வதே தென் இலங்கையின் பிந்தைய கோரிக்கையாகும். தெள்ளத்தெளிவான நோக்கமொன்றுக்கு எல்டிடிஈ கவனம் மட்டுப்பட்டுள்ளதால், இத்தகைய நகர்வுகளுக்கு, எல்டிடிஈ பிடிவாதமானது என்பதை அவர்களுடனான அனுபவம் காட்டுகின்றது. இதற்கு ஜனாதிபதிகள், பிரதமர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், பாராளுமன்றங்கள், மக்கள் அல்லது ஆயுதப்படைகளுக்கும் மேற்கோள்கள் இன்றி, ஒரு தனிப்பட்டவர் எல்டிடிஈயில் பொறுப்பை எடுக்கின்றார். எல்டிடிஈயைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒவ்வொருவருமே ஏதாவது தென்பகுதி அரசியல் சூழ்ச்சித்திறத்துடனான கையாளுதல்களுக்கு அக்கறையின்றித் தெளிவான நோக்குடன் விளங்குகின்றார்கள். அவர்களது கோரிக்கைகள் உறுதியானவை என்பதுடன், அவற்றை மீளாய்வதற்கான ஏதாவது முயற்சி எல்டிடிஈயிடமிருந்து இதையொத்த



கஷ்டமான கோரிக்கைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும். ஆகவே, யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி முறைமையான பேச்சுவார்த்தையொன்றில் மட்டுமே ஏதாவது மாற்றம் எண்ணப்பட வேண்டும் என்பதுடன், அதுவும் மிகவும் எச்சரிக்கையுடனேயே இருக்க வேண்டும்.

கண்ணுக்குத் தெரியாத பாதுகாப்பு அலுவல்கள், அளவில் சிறியவை அல்ல என்பதுடன், ஆதலினால், இதுவரை சாதிக்கப்பட்டவை பனிப்பாறையின் முனையாக மட்டுமே இருக்க முடியும். சில பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பதற்கான செயல் ஒழுங்குகளைக் கண்டறிவதற்கான அவசியம் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளதுடன், நடைமுறை முன்னோக்கி நகரும்போது இத்தகைய தலையீடுகள் அவசியப்படக்கூடும். இவ்விடயத்தில் ஒருவருடன் ஒருவரும் கண்காணிப்பாளர்களுடனும் அனுசரணையாளருடன் ஒத்துழைப்பதற்கான அவசியம் அனேகமாக முக்கியமானதாக விளங்கும். இவ்வாறு செய்கையில், அதிகளவு சக்திவாய்ந்ததும் செயல்திறனானதுமான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அனுசரணையாளர் மற்றும் கண்காணிப்பாளர்களின் வகிபங்கு, பணிகள், அதிகாரங்கள், மற்றும் கட்டுப்படுத்தும் வலிமை ஆகியவற்றையும் அவற்றினுடைய மாற்றங்களையும் கொண்டு கரிசனை செலுத்தப்பட வேண்டும். உடன்பாட்டுடனும், ஒருதலைப்பட்சமாகவும் மட்டுமே இவை யாவும் செய்யப்பட வேண்டும் என்ற உண்மையின் தோற்றத்தை ஒருவர் இழக்கக்கூடாது.

●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 3

## போர்நிறுத்த உடன்படிக்கை பிரச்சினைகளும் எதிர்பார்ப்புகளும்

ஜி. எல். பீரிஸுடனான நேர்காணல்

**1. போர்நிறுத்த உடன்படிக்கை நாட்டுக்கு ஏற்படுத்திய நன்மைகள் எவை என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

இப்போர்நிறுத்த உடன்படிக்கையானது நாட்டில் ஏனைய அபிவிருத்திகளை மேற்கொள்வதற்குச் சாதகமான, அமைதியான, சமாதானச் சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்தது. அதனால் நாம் ஆட்சியைப் பொறுப்பேற்றபோது மறைக்கணியம் 1.3 வீதமாக இருந்த நாட்டின் மொத்த தேசிய வருமானத்தை நேர்க்கணியம் 6.8 வீதமாக உயர்த்த முடிந்தது. இதற்கு முக்கியக் காரணமாக அமைந்தது நாட்டில் அப்போது நிலவிய சமாதானச் சூழ்நிலையேயாகும். அதிக அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் அதாவது 51 சதவீத அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் ஏற்றுமதித்துறையான ஆடைத் தயாரிப்புத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. பிரசல்ஸில் எமக்குக் கிடைத்த சலுகைகள், அமெரிக்காவுடன் தேயிலைக்காக – வர்த்தகமும் முதலீடும் உடன் படிக்கை வரைவு, மற்றும் முழு அளவிலான சுதந்திர வர்த்தக உடன் படிக்கையை ஏற்படுத்துவதற்கு வழியமைத்த ரொபேட் ஸெலிக் அதிகாரிகளின் வாக்குறுதி இவையெல்லாம் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் காரணமாக உருவான நம்பிக்கையினாலேயே சாத்தியமாயின. யுத்தநிறுத்த உடன்படிக்கையின் காரணமாக ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டன என்பது மிக முக்கியமானது. அதற்கு முன்னர் தேசியரீதியாக வழமையான வாழ்க்கையில் காணப்பட்ட ஒரு இறுக்கமான சூழ்நிலையையும் தடைகளையும் இது இல்லாமல் செய்தது. அனைத்துவிதமான அபிவிருத்திகளையும் குறிப்பாக வர்த்தகம், முதலீடு, உல்லாசப் பயணத்துறை (சுற்றுலாத் துறை) போன்றவற்றில் காணப்பட்ட அபிவிருத்தியை போர்நிறுத்தம் இல்லையென்றால் கண்டிருக்க



முடியாது. ஆக, இந்த முன்னேற்றகரமான நிலைமைகள் 2002 பிப்ரவரி 22ஆம் தேதி கையெழுத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையின் நேரடிப் பலனாக ஏற்பட்டவையே.

**2. யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்படுவது தொடர்பாக பல முரண்பாடுகள் நிலவின. விசேடமாக இவ்வுடன்படிக்கை தொடர்பான விடயங்கள் இரகசியமாக, மூடிமறைக்கப்பட்ட நிலையில் மேற்கொள்ளப் பட்டதாக ஜனாதிபதியால் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு, அதனால் ஜனாதிபதிக்கும் (சந்திரிகா குமாரதுங்க) பிரதமருக்குமிடையில் (ரணில் விக்கிரமசிங்க) தொடர்ந்த மனக்கசப்பு இவை தொடர்பாக நீங்கள் என்ன விளக்கம் தருவீர்கள்?**

நல்லது. பொதுக்கட்டமைப்பு அல்லது சுனாமிக்குப் பிந்தைய நிர்வாகக் கட்டமைப்பு கையெழுத்திடப்படும்போது ஏற்பட்ட அனுபவம், யுத்த நிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டபோது பின்பற்றப்பட்ட நடைமுறை, சரியானது என்பதையே காட்டுகின்றது. ஜனாதிபதி விரும்பியதுபோல இவ்விடயத்தில் செயல்பட முற்பட்டிருப்போமேயானால் போர்நிறுத்த உடன்படிக்கை என்ற ஒன்று கையெழுத்திடப் பட்டிருக்கவே முடியாது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசத் தலைவர்கள் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தம்மைத் திடப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்திய–இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தானபோது ஜே.ஆர். ஜயவர்தன இதையே செய்தார். தன்னைத் திடப்படுத்திக்கொண்டு அவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்டார். அவ்வாறே செய்யவேண்டும். இதனையே இப்போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானபோது ரணில் விக்கிரமசிங்க அவர்களும் செய்தார். அப்பொழுது சம்பந்தப்பட்ட இருதரப்பிற்கும் இடையில் நல்ல முறையில் கலந்தாலோசனைகள் இடம்பெற்றன. நோர்வே அரசாங்கம் இதற்கு அனுசரணையாக இருந்தது. இவ்விடயத்தை நீடித்துத் தாமதித்தல் என்பது அதற்கு எதிரான சக்திகளுக்கு இடமளித்து அதனைச் செயல்படாது முடமாக்குவதற்கு இடமளிப்பதாகும். சுனாமிக்கு பிந்தைய நிர்வாகக் கட்டமைப்பைக் கையெழுத்திடுவதற்கு மூன்று மாதங்கள் தாமதித்ததனால் நாட்டில் என்ன நடைபெற்றதோ அதுவே இதற்கும் நிகழ்ந்திருக்கும். அதனால் யுத்தநிறுத்த உடன் படிக்கையைக் கையெழுத்திடுவதற்கு அதனைச் சிறந்த வழியாக மட்டும் நாம் கருதவில்லை அதுவே ஒரே வழியாகவும் இருந்தது. 'இந்த உடன்படிக்கை உரிய அதிகாரம் உடையவர்களால் கையெழுத்திடப்பட வில்லை, சட்டப்படி எனக்கே அதற்குரிய முழு அதிகாரமும் உண்டு, பிரதமருக்கு அதற்குரிய அதிகாரம் வழங்கப்படவில்லை இதனால் இந்த ஆவணம் செல்லுபடியற்றது' என்றெல்லாம் அப்போது எதிர்ப்புகளைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிளப்பிய அதே ஜனாதிபதிதான் இப்போது, 'இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை ஒன்றுதான் இருள் கவிந்திருந்த முகில் கூட்டத்துள் தென்படும் ஒரே ஒளிக்கீற்று' என்றும், இந்த உடன்படிக்கை மட்டுமே ஒரு சாதனையாகும் என்றும் கூறுகிறார். யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்பிலான சரியான தன்மை, விவேகம், அனுபவம் ஆகியவற்றின் நற்சான்றிதழே இதுவாகும்.

**3. சமாதானப் பேச்சுகள் சர்வதேச நாடுகளின் தலைநகரங்களில் இடம்பெற்றன. அவை ஏன் ஸ்ரீலங்காவில் நடத்தப்படவில்லை? ஏன் வெவ்வேறு தலைநகரங்களில் நடத்தப்பட்டன? இதுவும் கண்டனத்திற்குள்ளான ஒரு விடயமாகவிருந்தது.**

அந்தப் பேச்சுகளை ஸ்ரீலங்காவில் நடத்தியிருக்க முடியவில்லை. ஏனென்றால், யதார்த்த நிலைமையின் காரணமாக நாம் கிளிநொச்சிக்கு செல்லத் தயாராக இல்லை. அதே போன்று அவர்கள் கொழும்புக்கு வருவதற்கு தயாரில்லை. பேச்சுவார்த்தைகளுக்கான பொதுநிபந்தனைகளை தோற்றுவித்த வெறுப்புணர்வின் பின்னணியில் ஒருவர் இதை நோக்க வேண்டும். இது ஓர் உணர்வுபூர்வமான விடயமாக இருந்ததால் இவ்விடயத்தில் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டுச் சர்ச்சையை ஏற்படுத்துவதை நாம் மிகவும் முட்டாள்தனமாகக் கருதினோம். பேச்சு நடத்தப்படும் இடம் முக்கியமல்ல. இலங்கை மண்ணில் பேச்சு நடத்துவதென்பது மிகவும் கடினமான விடயம். ஏனெனில், இருதரப்பிற்குமே எதிர் தரப்பின் கட்டுப்பாட்டில், ஆதிக்கத்தில் இருக்கும் பகுதிக்குள் செல்வதற்கு இணங்கவைப்பதில் சிரமமாக இருந்திருக்கும். அத்துடன் இப்பேச்சு முயற்சிகளின் வெற்றியின் பெரும்பகுதி சர்வதேசச் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது (குறிப்பாக இந்த நடவடிக்கைகளுக்குத் தேவையான பொருளாதார உதவி), என்பதை நாம் ஆரம்பத்திலேயே உணர்ந்திருந்தோம். விசேடமாகப் பொருளாதார பரிமாணங்களைப் பொறுத்தவரையில், இந்நடவடிக்கைகளின் விளைவாகத் தமது வாழ்வில் மாற்றத்தை எதிர் நோக்கும், அதாவது முன்னரிலும் பார்க்க வசதியான, வளமான, சிறப்பான வாழ்க்கையை நாட்டின் பெரும்பாலான மக்கள் காண்கின்ற போது மட்டுமே, சமாதான நடைமுறையானது அர்த்தமுள்ளதாகவும் வெற்றிகரமானதாகவும் இருக்கும். இந்நாட்டின் பெருந்தொகையான மக்களைப் பொறுத்தவரையில், இது மாயையானதாகவோ அவர்களிலிருந்து விலகியதாகவோ இருப்பதை நாம் விரும்பவில்லை. ஐம்பத்தொரு நாடுகளும் இருபத்தியொரு பல தரப்பு நிறுவனங்களும் சம்பந்தப்பட்ட 2003 டோக்கியோ பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளது போன்று சர்வதேசச் சமூகத்தின் நேரடி ஈடுபாட்டை இது குறிக்கும். அதனால் சமாதான முன்னெடுப்பைப் பொறுத்தவரையில்



சர்வதேசப் பரிமாணம் என்பது வெட்கப்பட வேண்டியதோ மூடி மறைக்கப்பட வேண்டிய விடயமோ அல்ல. நான் இதனை ஒரு சாதகமான அம்சமாக, முக்கியப் பெறுமானமாக கருதுகிறேன். சர்வதேச நாடுகளில் பேச்சுகளை நடத்துவது பலதரப்பட்ட உணர்வுகளை ஏற்படுத்தியிருந்தது. அவ்வப்போதைய நிலைமைக்கேற்ப நடைமுறைச் சாத்தியத்தைக் கருத்திற்கொள்ள வேண்டியிருந்தமையே வெவ்வேறு இடங்களில் பேச்சுகளை நடத்த வேண்டியிருந்ததற்குக் காரணமாகும். நோர்வே இவ்விடயத்தில் அனுசரணையாளராகப் பங்களிப்பு செய்ததனால் பல சுற்றுப் பேச்சுகள் ஆஸ்லோவில் நடைபெறும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் அதற்கான செலவைக் கருத்திற்கொண்டு தாய்லாந்து இதற்குப் பொருத்தமான இடமாகத் தெரிவு செய்யப்பட்டது. அது எமது நாட்டிற்கு அண்மையில இருப்பதும் செலவு குறைவாக இருந்ததுவும் காரணமாகும். ஓரிரு சந்தர்ப்பங்களில் சில காரணங்களால் நக்கோன் பதொன் எமக்குக் கிடைக்காமல் போனது. தாய்லாந்து அரசின் விருந்தினர்கள், முக்கியஸ்தர்களுக்கு அங்கு இடமளிக்க வேண்டிய ஏற்பாடுகள் முன்னரே செய்யப்பட்டிருந்ததுதான் இதற்குக் காரணம். அதனால் ஜப்பானில் டோக்கியோவில் ஹக்கோனேவில் இரு சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றன. சமாதான முன்னெடுப்புகளில் பொருளாதாரத் தேவையைப் பொறுத்தவரையில் ஜப்பானின் குறிப்பிடத்தக்க பங்களிப்பைக் கருத்திற்கொண்டே இது நடைபெற்றது. அடுத்து ஒரு சுற்றுப் பேச்சு பேர்லினில் நடைபெற்றது. அன்டன் பாலசிங்கம் அவர்களின் உடல் நிலை காரணமாக அவர் நீண்டதுரம் பயணம் செய்யமுடியாத நிலையில் இருந்தமையே இதற்குக் காரணம். இவ்வாறு நடைமுறைச் சாத்தியம், தர்க்கரீதியான விடயங்கள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு நாம் எடுத்த தீர்மானங்கள் சூழ்நிலைகளுக்கேற்ப மிகச் சிறப்பானவை என்றே நாம் கருதுகின்றோம்.

**4. மிகவும் நீண்ட ஆறு சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றன என்ற ஒரு வாதமும் உண்டு. ஏன் குறுகிய காலத்துள் இவற்றை முடிக்காமல் மிகவும் நீண்டகாலம் எடுக்கப்பட்டது? இவ்வாறு இவை இழுபடக் காரணம் என்ன?**

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் இவ்வாறான ஒரு சூழலுக்குப் பழக்கமற்றவர்கள். அதனால் இதில் ஈடுபடுவதற்குத் தயக்கம் காட்டினர். எடுத்துக்கொள்ளப்பட்ட விடயங்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக அவர்களுக்குக் குறிப்பிடத்தக்களவு ஆயத்தம், ஊக்கம் என்பன தேவைப்பட்டன. அதனால் இங்குப் பலரது நேரடிப் பங்களிப்பு இருந்தது. அத்துடன் ஒன்டாரியோ முதல்வர் பொப் ரே, டொரான்டோ பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத் துறைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேராசிரியர் டேவிட் கமரொன் போன்றவர்கள் இங்குக் குறிப்பிடத் தக்கவர்கள். அடுத்து ஜெர்மனி, சுவிட்சர்லாந்து அரசாங்கங்களின் ஆதரவிலுள்ள பேர்கொப் ஃபௌண்டேஷனின் உதவியும் கிடைக்கப் பெற்றது. அத்துடன் மெல்போர்ன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் செரில் சோண்டர்ஸ், பிரித்தானியக் கல்விமான்கள் எனப் பலரது பங்களிப்பும் உதவியும் இதிலிருந்தன. சில பிரத்தியேகமான விடயங்கள் தொடர்பாகப் பேசுவதற்குரிய தைரியத்தையும் ஊக்கத்தையும் பெறுவதற்கு இது அவசியமாக இருந்தது. அதனால் ஆரம்பம் மெதுவாகவே நகர்ந்தது. ஒவ்வொருவரும் தங்களுக்குரிய பாதையைக் கண்டுபிடிப்பதற்கான பரீட்சார்த்தக் களமாக இருந்தது. அத்துடன் உணர்வுரீதியான, உளரீதியான தடைகளை அகற்ற வேண்டியிருந்தது. அதனால் பேச்சுவார்த்தையை ஆரம்பத்தில் உடனடியாக விரைவுபடுத்துவது பிரயோசனமாக, ஆக்கபூர்வமாக அமைந்திருக்காது. அது தனக்குரிய வேகத்தை இயல்பாகவே பெற வேண்டும். இருதரப்பும் ஒருவரையொருவர் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தது. தென்னாபிரிக்க சமாதானப் பேச்சுகளை வழிநடத்திய ரோயல்ஃப் மேயருக்கும் சிறில் ரம்போசாவுக்கும் இடையில் நிலவியது போன்ற மனிதநேய, பரஸ்பர உறவுகள் இவ்வாறான சமாதான முன்னெடுப்புகளில் அவசியமாகும். ஆனால், முதல் சில சுற்றுப் பேச்சுகள் நடந்து முடிந்த நிலையில், நிலைமைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருந்தது. மட்டுப்படுத்தப்பட்டளவு ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தியிருந்தோம். இதனால் உறுதியான விரைவான முன்னேற்றம் ஏற்பட்டது. அதனால் நாம் காரணமின்றி அந்த நேரத்தில் பேச்சுகளை விரைவுபடுத்த விரும்பவில்லை. அவ்வாறு செய்திருந்தால் பேச்சுகளில் ஒரு நெருக்கடிநிலை ஏற்பட்டு முழுச்செயல்பாடுகளுமே தடைப்பட்டிருக்கும்.

**5. மற்றைய விடயம் என்னவென்றால், ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்றது உட்பட எல்லாச் சமாதானப் பேச்சுகளின்போதும் அவை தொடர்பான குறிப்புகள் எடுக்கப்படவில்லை. இதனால் வரலாற்றுச் சான்றுகள் இல்லாத நிலை ஏற்பட்டதோடு சமாதான முன்னெடுப்புகளின்போது வரலாற்றை மறந்த நிலை காணப்படுகிறது. அத்துடன் பேச்சுவார்த்தைகளின் முடிவின் அடிப்படையில் எதுவும் நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டும் பின்னர் தெரிவிக்கப்படுகிறது. இது போதிய குறிப்புகள் இல்லாத காரணத்தாலேயே மிகைப்படுத்தப்படுகிறது, இதற்கு நீங்கள் எவ்வாறு பதில் தருவீர்கள்?**

இவ்வாறு பேச்சுகளின்போது குறிப்புகள் எடுக்கப்படாததற்கு முக்கியக் காரணம் உண்டு. முதல் சுற்றுப் பேச்சுகளின்போது குறிப்புகள் எடுப்ப



தில்லை என்ற தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டது. ஏனென்றால், இவ்வாறு எடுப்பது இருதரப்புக்கும் இடையில் விரிசல் ஏற்படக் காரணமாக அமையும் எனக் கருதப்பட்டது. அதனால் முதல் சில சுற்றுப் பேச்சுகளை அவ்வாறான ஒரு சூழலிலேயே நடத்த வேண்டியிருந்தது. அவை இயற்கையான போக்கிலேயே செல்ல வேண்டியிருந்தன. இவ்வாறு பேச்சுகளில் ஈடுபடுபவர்கள் கட்டுப்படுத்தப்பட்டு ஒரு இறுகிய நிலை ஏற்படுத்தப்பட்டிருந்தால் அவர்கள் உளமார்ந்த பேச்சுகளில் ஈடுபட தயங்கியிருந்திருப்பார்கள். ஆகவே, அடிப்படை விடயங்கள் தொடர்பான விடயங்கள் எதுவும் இடம்பெறவில்லை. முக்கியமான விடயங்கள் பின்னரே கருத்தில்கொள்ளப்பட இருந்தன. இதற்குக் குறிப்புகள் உதவியிருக்க முடியாது. அதுவே ஒரு தடையையும், விரிசலையும் ஏற்படுத்தும் காரணியாக அமைந்திருக்கும். அதனால் இதனைத் தவிர்ப்பது நல்லது என இருதரப்பும் தீர்மானித்தது. அவ்வாறு குறிப்புகள் எடுக்கப்படாது இருந்தபோதிலும் தீர்மானங்களின் பதிவுகளை உள்ளடக்கிய பதிவேடு உள்ளது, அதாவது, ஒவ்வொரு சுற்றுப் பேச்சின் முடிவிலும் தீர்மானங்கள் பதிவுசெய்யப்பட்டு இரு தூதுக் குழுக்களின் தலைவர்களாலும் நோர்வே அரசின் பிரதிநிதியான பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் அவர்களாலும் ஒப்பமிடப்பட்டன. அதனால் பதிவுகள் உள்ளன. வரலாற்றுப் பதிவாக அதிகார பூர்வமாக விளக்கமளிப்பதற்கு இவை உண்டு. இதனைவிட நிகழ்ச்சிக் குறிப்புகளோ அல்லது வேறு எதுவுமோ விசேடமானவையல்ல.

சென் தோமஸ் உட்பட நான் அங்கத்தவராயிருக்கும் பல பணிப்பாளர் சபைகளில் கலந்துரையாடல்கள் பெரும்பாலும் பதிவு செய்யப்படுவதில்லை. அதாவது x இவ்வாறு சொன்னார், y இவ்வாறு சொன்னார், z இவ்வாறு பதிலளித்தார் என்று குறிப்பிடும்போது இதில் பல விடயங்கள் எந்தப் பிரயோசனமும் இல்லாததாக இருக்கும். அதனால் இவை ஒன்றும் விசேடமானவையல்ல. அன்றைய முயற்சியைப் பொறுத்தவரையில் இது வழமையானதே. பேச்சுகளைப் பொறுத்தவரையில் அடிப்படையில் எந்தவொரு விடயமும் கருத்திற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிப்பது மிகவும் தவறானது. அப்போது ஆராயப்பட்ட விடயங்கள் மிகவும் அடிப்படைத் தன்மையானவைதான். உதாரணமாக, போருக்கான மாற்று வழி என்ன? அது ஒரு அரசியல் தீர்வு எனின் அந்தத் தீர்வுக்கான அடிப்படை விடயங்கள் எவை? இவை மூன்றாவது சுற்றுப் பேச்சுகளின்போது ஆராயப்பட்டன.

2002 டிசம்பர் 5இல் இனப்பிரச்சினைக்கான தீர்வாக சமஷ்டிமுறையை அறிமுகப்படுத்துவதற்கு இருதரப்பும் முன்வந்தன. அத்துடன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தேவைப்படும் உதவி நடவடிக்கைகள் தொடர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாக பலதரப்பட்ட விடயங்கள் ஆராயப்பட்டன. இதில் பெண்கள் விவகாரம், பால்நிலை விவகாரங்கள் என்பன ஆராயப்பட்டன. சமாதான முயற்சிகளின் பலன்கள் அடிமட்டத்தில் ஊடுருவி வியாபிப்பதை உறுதிப்படுத்து முகமாக இவை முன்னெடுக்கப்பட்டன. இவற்றைச் செயல்படுத்துவதற்குத் தேவையான கட்டமைப்புகள், சமாதான முன்னெடுப்புகளில் முஸ்லிம்களின் பங்கு, பேச்சுகளில் எவ்வாறு அவர்களை இணைத்துக்கொள்வது மற்றும் சிரான் போன்ற அமைப்புகள் இவை எல்லாம் கருத்தில் கொள்ளப்பட்ட விடயங்களே. இதற்கு எதிராகத் தெரிவிக்கப்படும் விடயங்கள் யாவும் தவறானவையே.

**6. பேச்சுகள் முறிவடைந்த பின்னர், அவற்றில் முக்கிய விடயம் எதுவும் இல்லை எனவும் அதே போன்று முடிவெதுவும் தொடரப்படவில்லை எனவும் தமிழ்ச்செல்வன் தெரிவித்ததாக அறிகின்றேன். இவை பதிவு களிலுள்ள இரு குற்றச்சாட்டுகள் ஆகும். பாலசிங்கமும் இது தொடர்பாகப் பேசியுள்ளார்.**

பாலசிங்கத்தின் *போரும் சமாதானமும்* என்ற புத்தகத்தில் தெரிவிக்கப் பட்டிருக்கும் கருத்துகளை ஆராய்ந்து பார்த்தீர்கள் என்றால் தெரியும். இம்முயற்சிகளின்போது எய்தப்பட்ட விடயங்கள் மட்டுப்படுத்தப் பட்டவையாக இருந்தபோதும் அவை பயனுள்ளவை என அவர் தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளின் மனப்பாங்கு எவ்வாறு இருந்த தென்பதையும் அதன்பின் சில வரிகளில் விளக்கியுள்ளார். அவரது கூற்றை அவ்வாறே இங்கு நான் மேற்கோள்காட்டவில்லை. ஆனால் அதன் சாரத்தைத் தருகின்றேன். அதாவது, ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தால் அளிக்கப்படக்கூடிய வாக்குறுதிகளோ, நடவடிக்கை களோ மட்டுப்படுத்தப்பட்டவை. ஏனென்றால், அப்போதைய அரசின் முழுக்கட்டுப்பாடும் அந்த அரசாங்கத்தின் கையிலில்லை என்பதை விடுதலைப்புலிகள் ஆரம்பத்திலேயே அறிந்திருந்தார்கள். ஜனாதிபதி யின் மேலாட்சி அதிகாரங்கள் தொடர்பாக அவர்கள் மிக அவதானத் துடன் இருந்தார்கள். பாலசிங்கம் தனது புத்தகத்தில் குறிப்பாகப் பிரதம நீதியரசரின் பங்கு குறித்தும் தெரிவித்துள்ளார். வெறுமனே தீர்வுக்கானக் கட்டமைப்புகளை முன்வைப்பதன் மூலம் தீர்வு கிடைத்துவிடாது. இவை சட்டங்களின் பயனாகப் பெறப்பட வேண்டியவை. ஏனென்றால், இவை பிரச்சினைகளாகவும் மாறக்கூடியவை என்ற எனது கருத்தையும் அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகவும் இருக்கும்வரை பிரதமரால் முன்வைக்கப்படும் எந்த யோசனையையும் எதிர்ப்பதென ஜனாதிபதி கங்கணங்கட்டி நிற்பார் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அத்துடன் உயர்நீதிமன்றமும் எதிராகவே செயல்பட்டது. இவ்வாறான



ஒரு சூழ்நிலையில் அரசாங்கம் எவ்வளவு தான் நல்ல எண்ணங்களோடு நேர்மையாகச் செயல்பட்டாலும் இறுதித் தீர்வொன்றை எட்டுவ தென்பது அந்த நிலைமையில் முடியாதது ஒன்றே என்பதை நாம் உணர்ந்திருந்தோம். ஆனால், இதனால் எந்தவொரு ஆக்கபூர்வமான, பிரயோசனமான செயல்பாடும் சாத்தியமில்லை என்ற முடிவுக்கு நாம் வந்திருந்ததாக அர்த்தப்படுத்த முடியாது.

கொள்கைரீதியாகவும் செயல்பாட்டுரீதியாகவும் வரையறுக்கப்பட்ட நன்மை களே இருந்தன. பேச்சுகளின் அடிப்படையும் இவ்வாறான ஒரு சூழ்நிலையில் சிலவற்றையாவது சாதிப்பதற்கும் முடிவெடுக்கப்பட்ட விடயங்களை அடுத்தடுத்த கட்டங்களில் நடைமுறைப்படுத்துவதற்கும் ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டே இருந்தன. ஆனால், இதுவே பேச்சுகளின்போது அடிப்படையில் எதுவும் இடம் பெறவில்லை எனப் பொருள்படாது. ஒரு இறுதித் தீர்வை எய்தக்கூடிய பேச்சுகளாக இதனை நாம் நோக்க முடியாது. இது சாத்தியமில்லை என்பதை இருதரப்புகளும் உணர்ந்திருந்தன. பேச்சுகள் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய விதத்திலேயே மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறான எண்ணமே வேண்டும். இலங்கை தொடர்பாக உலகின் மனப்பாங்கு எவ்வாறு இருக்கிறது என்று பார்த்தால், 2002 டிசம்பரில் ஆஸ்லோவில் இடம்பெற்ற பேச்சுகளின் முன்னேற்றம் குறித்தே உலகின் பெரும் பாலான முக்கியப் பத்திரிகைகள் கருத்துத் தெரிவித்துள்ளன. ஒரு எதிர் பார்ப்பு, நம்பிக்கை, ஊக்கம் என்பன நிலவுகின்றன. விடயங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு இது மிக முக்கியமாகும். ஜோன் கென்னடி, கம்லொட் யுகத்தில் நடைபெற்றது போன்று மக்களின் நம்பிக்கை, சாதகமான எண்ணம், துணிச்சல் என்பன உலகின் கற்பனையை அழித் தொழித்தன. இன்று இதற்கு எதிர்மாறான நிலையே சமாதான நடவடிக்கை தொடர்பாகக் காணப்படுகின்றது. அது முற்றாக முறிந்துபோயுள்ளது, அது கிடப்பில் போடப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சர் தெரிவித் துள்ளார். பொதுக்கட்டமைப்பு சமாதான நடவடிக்கைகளுடன் தொடர் புடையதா என்ற கருத்துத் தொடர்பாக ஜனாதிபதி குழம்பிப்போயுள்ளார். அவர் இரண்டையும் பிரித்துப் பார்க்க முனைகிறார். அது ஒருபோதும் சரியான பார்வையாக அமையாது. சமாதான நடவடிக்கைக்கு உதவும் ஒரு அம்சமாகவே பொதுக்கட்டமைப்பை நோக்க வேண்டும். இதுவே சமாதான நடவடிக்கையின் அன்றைய சூழலின் யதார்த்தமாகவிருந்தது.

இங்கு ஒரு சம்பவம்பற்றிக் குறிப்பிடுவது பிரயோசனமாக இருக்கும் என எண்ணுகின்றேன். சமஷ்டி முறை பற்றி ஆராய்வது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டநிலையில், எந்த ஒரு விடயத்தின் முடிவிலும் ஊடக வியலாளர்களுக்கு விளக்கமளிப்பது என்ற நடைமுறைக்கேற்ப ஒவ்வொரு அமர்வின் முடிவிலும் சர்வதேச மற்றும் இலங்கைச் செய்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாளர்களுக்குக் கருத்து தெரிவித்தோம். அப்போது ஒரு செய்தியாளர் அன்டன் பாலசிங்கத்திடம் 'நீங்கள் சமஷ்டி ஆட்சி முறையை ஏற்றுக் கொண்டது என்பது ஆயுதவழியைக் கைவிட்டுவிட்டதாகப் பொருள் படுமா? யுத்தத்தை முற்றாகக் கைவிட்டுவிட்டீர்களா?' எனக் கேட்ட போது, அவர் மிகவும் கவனமாகப் பதிலளித்தார். இல்லை. நாம் யுத்தத்தை முற்றாகக் கைவிடவில்லை. அது பின்வாங்கப்பட்டுள்ளது, அது இறுதித் தெரிவாக இருக்கும் எனத் தெரிவித்த அவர், மேலும் 'நீங்கள் ஏன் அவ்விடயத்திலேயே கருத்தாக இருக்கிறீர்கள்? நாங்கள் முன்னெடுத்துள்ள பயணத்தில் மிகவும் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப் புடனும் இருக்கிறோம். அது எம்மை உரிய இடத்திற்கு இட்டுச்செல்லும் என எதிர்பார்க்கிறோம். அது முடியும் என்ற நம்பிக்கையுடனும் உறுதி யுடனும் உள்ளோம். இவ்வாறிருக்கையில், பாதகமான பக்கத்தையே நீங்கள் நோக்கவேண்டிய அவசியம் என்ன?' எனக் கேட்டிருந்தார். இதுவே விடுதலைப்புலிகளின் அன்றைய கருத்தாக இருந்தது. ஆனால், பேச்சுகளைத் தொடர முடியாதநிலை ஏற்பட்டபோது குற்றச்சாட்டுகள் எழுந்தன. அது வழக்கமானதே. ஆனால், கருதுகை அடிப்படையில் நல்ல விடயம் என்னவென்றால், அந்த நேரத்தில் 6ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தை உயர்வான உற்சாகத்துடன் கையாளப்பட்டது.

**7. மூன்று முக்கியமான அமைப்புகள் உருவாக்கப்பட்டன. ஒன்று அரசியல் தொடர்பானது, இரண்டாவது பாதுகாப்பு தொடர்பானது, மூன்றாவது எஸ்ஹெச்ஐஆர்என் (சிரான்). அரசியல் தொடர்பான அமைப்பு எந்தச் சந்திப்பையும் நடத்தவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் பாதுகாப்புக் குழுவும் உடைந்துபோனது, இறுதியாகச் சிரானும் செயலிழந்துபோனது. இதனை நீங்கள் எவ்வாறு விளக்குவீர்கள்? உயர்மட்டத்தில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், அடிமட்டத்தில் நிலைமை அவ்வாறு இருக்கவில்லை என்றே நாம் கருதுகின்றோம். இதனை நீங்கள் எவ்வாறு விளக்குவீர்கள்?**

இல்லை. அவ்வாறில்லை. இவ்வாறான தடங்கல் எதிர்பார்க்கப்பட வேண்டியதுதான். இந்த முயற்சி ஒரு தொடர் செயல்பாடு என யாராவது கருதினால் ஒவ்வொரு அமர்விலும் ஏற்பட்ட முன்னேற்றத்தையும் யதார்த்தத்திற்குப் புறம்பான வகையிலேயே நோக்க வேண்டியிருக்கும். இந்திய வெளியுறவு அமைச்சர் யஷ்வந்த் சிங் புதுடெல்லியில் தெரிவித்த கூற்று ஒன்றை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். 'இது ஒரு கடினமான நீண்ட பாதை. அவ்வப்போது பேச்சுகளில் தடங்கல் களை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். ஒரு பகுதியோ, இருதரப்போ இவற்றிலிருந்து வெளிநடப்பு செய்ய நேரிடும். ஆனால்,



அவர்கள் மீண்டும் திரும்பி வருவார்கள்' எனத் தெரிவித்தார். தென்னாப்பிரிக்கச் சமாதான முயற்சிகளின்போது எத்தனை தடவைகள் இவ்வாறு தடங்கல்கள் ஏற்பட்டன. வருடக் கணக்கில் அவை இடை நிறுத்தப்பட்டிருந்தன வட அயர்லாந்திலும் இதே போன்ற சிக்கலான நிலைமையே இருந்தது. அங்கு இடம்பெற்ற குண்டுவெடிப்புக்குப் பின் முழுமுயற்சிகளுமே தடைபட்டன. அதனால் இது ஒரு தடங்கலில்லாத தொடர் செயல்பாடாக அமைய முடியாது. அது ஒருபோதும் சாத்திய மல்ல. அதனால் இக்குழுக்கள் செயல்பட முடியாத நிலை ஏற்பட்டமை பல்வேறு காரணங்களுக்காகச் சமாதானப் பேச்சுகள் அவ்வப்போது இடைநிறுத்தப்பட்டிருந்தமை, இவையெல்லாம் இந்த செயல்பாட்டின் அம்சங்கள். அது ஆரம்பிக்கப்படும், நிறுத்தப்படும், புதுவடிவம் பெறும். அப்போது வேறு பிரச்சினைகள் எழும். இவ்வாறு இது ஒரு நீண்ட கடினமான பாதை. ஆனால் ஒரு சீராக இல்லாவிடினும் தடங்கல் களுடன் எனினும் பேச்சுகள் நகர்ந்து சென்றால் அது ஒரு சாதகமான அறிகுறியே. ஆனால் இவையெல்லாம் தற்போதைய சூழ்நிலைக்கு முழுமாறாகவே உள்ளன. அவை நகர முடியாத நிலையிலுள்ளன. ஏனெனில், இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (யூபிஎஃப்ஏ) அரசுக்குத் தெளிவான கொள்கை அறவே இல்லை.

**8. இது இன்னுமொரு கேள்வியை ஏற்படுத்துகிறது. சமாதான நடவடிக்கை களில் நோர்வேயின் பங்களிப்புப் பற்றிச் சுருக்கமாக விளக்க முடியுமா?**

நோர்வே பக்கச்சார்பாகச் செயல்படுவதாக அண்மையில் வெளிநாட்டு அமைச்சர் தெரிவித்திருந்தார். அரசாங்கத்தின் வெளிநாட்டு அமைச்சர், நோர்வே தெற்கிலுள்ள மக்களின் நலன்களைக் கருத்தில் கொள்ளாது செயல்படுவதாக உணர்வாரானால், இலங்கை அரசாங்கம் நோர்வேயை அனுசரணையாளராகப் பயன்படுத்த முடியுமா? இது, தெற்கு மக்கள் நோர்வே நேர்மையாகப் பக்கச்சார்பற்றுச் செயல்படவில்லை எனக் கருத அதாவது நோர்வே விடுதலைப்புலிகளுக்குச் சார்பாகச் செயல் படுகின்றது என்று நம்புவதற்கு இடமளிக்கிறது. இறைமையுள்ள ஒரு அரசு உண்மையாகவே இவ்வாறு கருதுமானால் நோர்வேயைத் தொடர்ந்து அனுசரணையாளராகக் கொள்ள முடியுமா? இந்த நிலைமை பற்றி உணர்வதற்கு ஒருவர் நோர்வேயிடம் எதிர்பார்ப்பது என்ன? ஜனாதிபதி அண்மையில நோர்வே பற்றித் தெரிவித்திருந்த கருத்து களுடன் வெளியுறவு அமைச்சரின் கருத்து முற்றாக முரண்படுகின்றது. அதாவது, லொக்கு பண்டார அவர்கள் சபாநாயகராகப் பதவியேற்ற மறுதினம், ஜனாதிபதி நோர்வே பிரமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் நோர்வேயின் பங்களிப்பிற்கு நன்றி தெரிவித்துள்ளதுடன், அவர்களின் தொழிற் புலமை, திறமை மற்றும் நேர்மையும் தராதரம் மிக்கதுமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயல்பாடு காரணமாகவே சமாதானச் செயன்முறை இவ்வளவு தூரம் முன்னேறியிருப்பதாகவும் கூறினார். 2004இன் இறுதியில் சமாதானச் செயன்முறையில் மேலும் ஈடுபாடுகொண்டு அதை முன்நகர்த்திச் செல்லுமாறு அவர் வலியுறுத்தினார். ஆகவே, இவ்வாறான சூழ்நிலையில் பேச்சுகளை நகர்த்திச்செல்வது சாத்தியமல்ல. காலத்திற்குக் காலம் தடைகளும் முறிவுகளும் ஏற்படுவது சகஜம். ஆனால், இது தோல்விக்கான அறிகுறியல்ல. மாறாக எந்த ஒரு பாதையிலும் இது இயல்பானதே...

**9. அரசியல் சந்திப்புகளுக்கு என்ன நிகழ்ந்தது? அவை நடைபெற்றனவா?**

அரசியல் சந்திப்புகள் நடைபெறுவதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. நாங்கள் சமஷ்டி முறையை அமல்படுத்துவதற்கு அவசியமான கட்டமைப்புகள் தொடர்பாகச் சில சம்பிரதாயபூர்வமற்ற சந்திப்புகளை நடத்தியிருந்தோம். 2002 டிசம்பர் 5இல் நோர்வே அரசால் வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ அறிவிப்பின்படி நானும் பாலசிங்கமும் 2003 டிசம்பர் அல்லது 2004 ஜனவரியில் லண்டனில் சந்திப்பதற்குத் தேவையான ஆரம்பக்கட்ட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால் ஜனாதிபதி மூன்று அமைப்புகளுக்குப் பொறுப்பேற்றதை அடுத்து, விசேடமாகப் பாதுகாப்பு அமைப்பின் பொறுப்பேற்றதையடுத்து இவையெல்லாம் பயனற்றுப்போயின. இந்த முடிவால் அடிப்படை விடயங்களிலேயே மாற்றம் ஏற்பட்டது. அரசியல் விவகாரக் குழு ஆரம்பிக்கப்படுவதற்கு இவையே தடையாக அமைந்தன. பாலசிங்கம் என்னைச் சந்திப்பதற்கு மிகுந்த ஆயத்தமுடன் இருந்தார். ஆனால் இவையெல்லாம் ஜனாதிபதியின் இந்த முடிவால் சிதைந்துபோயின. ஏனெனில், இந்த நிலைமையில் ஆயுதப்படைகளின் மீது பூரணக் கட்டுப்பாட்டைக் கொண்டிராத அரசாங்கத்துடன் அரசியல் விவகாரம் தொடர்பாகப் பேசுவது பயனற்றது என விடுதலைப்புலிகள் அப்போது தெரிவித்தனர்.

**10. அடுத்து பாதுகாப்பு பந்தோபஸ்து குழுக்களுக்கு என்ன நடந்தது?**

விடுதலைப்புலிகள் தாங்கள் இதற்கு உடன்படும் நிலையிலில்லை எனத் தெரிவித்ததையடுத்துப் பாதுகாப்புக் குழு செயலிழந்தது. அங்கு ஒரு மோதல் உருவாவதற்கு இது காரணமாக அமைந்தது. சிரானைப் பொறுத்தவரையில் அதிலிருந்து நாம் நிறையக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதில் அடிப்படைக் கட்டமைப்பில் உடன்பாடு காணப் படவில்லை என்பதல்ல. ஆனால் தீர்மானங்கள் விரைவாக மேற் கொள்ளப்படவில்லை என்பதும் அவை செயல்படுத்தப்படவில்லை என்ற விடயங்களால் ஏற்பட்ட அதிருப்தியுமே இதற்குக் காரணம்.



இதனால் எதிர்காலத்தில் இவ்விடயங்கள் ஒரு படிப்பினையாகக் கொள்ளப்பட வேண்டும். கொள்கைகளின் எந்தவொரு அடிப்படை விடயங்கள் பற்றியதாக அன்றி அமல்படுத்துகை பற்றியதாகவே இது இருந்தது.

**11. நிர்வாகியின் அல்லது நிர்வாகத்தின் அரசியல் விருப்பின்மை, இதனை நீங்கள் எவ்வாறு விளக்குவீர்கள்?**

இல்லை. இது அரசியல் விருப்பின்மை காரணமானது அல்ல. இது முழுக்க முழுக்க இருபிரிவுகள் தொடர்பானது, அப்பொழுது நிலவிய அதிகாரக் கட்டமைப்பில் காணப்பட்ட கருத்து முரண்பாடுகளுடன் தொடர்புடையது. இவை பாலசிங்கத்தின் புத்தகத்தில் குறிப்பிடப் பட்டுள்ளன. பகைமை உணர்வானது எதிர்விளைவை ஏற்படுத்துவதற்கு உந்துகிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதிராகச் செயல்பட்டு இடர்களைத் தோற்றுவித்துத் தவறுசெய்யத் தூண்டி நடவடிக்கைகளைப் பயனற்றதாக்குதல். ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகார பலத்தை அரசியல் லாபத்திற்காகப் பயன்படுத்தச் சிறிதும் தயங்கவில்லை. அரசியல் லாபத்திற்காக ஜனாதிபதியின் முழு அதிகாரமும் எந்தவித அச்சமும் இன்றிப் பயன்படுத்தப்பட்டது. சமாதான நடவடிக்கைகள் போன்ற சிக்கலான விடயங்களை முன்னெடுப்பதென்பது வரையறுக்கப்பட்ட அதிகாரங்களை மட்டும் கொண்ட அரசுக்கு மிகவும் கடினமானது. எல்லாப் பிரச்சினைகளுக்கும் இதுவே அடிப்படைக் காரணம். உதாரணமாக, ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிலேயே ஆயுதப்படைகள் இருந்தன. கடற்படை மற்றும் இராணுவத் தளபதிகளுக்குக் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம், அதிலிருந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை விலக்கி வைப்பது, ஆயுதப்படைத் தளபதிகளுடன் ஜனாதிபதிக்கு இருந்த உறவு, ஆயுதப்படைகளின் கட்டளைத் தளபதியாக அவரது செயல்பாடுகள் இவையெல்லாம் ரணில் விக்கிரமசிங்க சமாதான நடவடிக்கை தொடர்பாக ஆக்கபூர்வமாக எதனையும் செய்யமுடியாமல் தடுத்தன. அப்பொழுது கொழும்பில் இருந்த அதிகாரக் கட்டமைப்பை பாலசிங்கம், 'சகவாழ்விற்கான மிகமோசமான யுத்தம்' எனக் குறிப்பிட்டுள்ளார். நாம் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கு இதுவே அடிப்படைக் காரணமாக அமைந்தது. அடுத்து ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாவார் என்ற மிகுந்த நம்பிக்கை எமக்கிருந்தது. ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதன்மூலம் மொத்த வடிவத்தையும் மாற்றமுடியும். அப்போது ஒருமுகமான, ஒரே மனதுள்ள அரச அதிகாரத்தால் ஆதரவளிக்கப்பட்ட அரசாங்கத்தால் முழு ஆட்சியதிகாரத்துடன் நோக்கத்தை முன்னெடுக்க முடியும். அதிகாரம் பறிக்கப்பட்ட அரசால் அது முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்றைய வெற்றிக்கு எதிராகச் செயல்பட்ட பிரதான அதிகாரமாகவே இதை நான் கருதுகின்றேன்.

**12. நீங்கள் தென்னாப்பிரிக்கா, வட அயர்லாந்து போன்ற இடங்களுக்குச் சென்றிருக்கிறீர்கள். தென்னாப்பிரிக்கப் பேச்சுகளின் ஒரு முக்கிய அம்சம் ஒரு பெரிய பேச்சுவார்த்தைக் குழுவும் சிறு சிறு பேச்சுவார்த்தைக் குழுக்களுமாகும். விவாதத்திற்குரிய, ஆலோசனைக்குரிய விடயங்கள் இந்தச் சிறு குழுக்களால் விவாதிக்கப்படும். இதனை மனத்தில் கொண்டு நாங்களும் ஏன் அவ்வாறான ஒரு கட்டமைப்பை ஏற்படுத்தி, முக்கியமாக ஜனாதிபதியுடன் இணைந்து செயல்படக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கக் கூடாது? இதன் மூலம் இணைந்து செயல்படும் கொள்கையை முன்னெடுப்பதுடன் குறிப்பிட்ட காலத்தினுள் சம்பந்தப்பட்ட ஏனைய தரப்பினரையும் உள்வாங்கி ஆலோசனைக்கு எடுத்துக்கொண்டிருக்க முடியும். எல்லாமே தடம் 1இற்குரிய பேச்சுவார்த்தைச் செயன்முறையாக இருந்தது என்று, இது ஒரு முக்கியக் குற்றச்சாட்டாக இருந்து வருகிறது?**

வெளித்தோற்றத்திற்கு நிலைமை இவ்வாறு தென்படலாம். ஆனால் உண்மையில் அப்படி இருக்கவில்லை. அன்றைய நிலையில் இலங்கை அரசியலின் உண்மை நிலை அதுவல்ல. ஜனாதிபதி ஒரு விடயத்தில் குறியாக இருந்தார். அதுவே எல்லாவற்றுக்கும் வழிவகுத்தது. அதாவது, ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சியிலிருந்து வெளியேற்றுவது. சமாதான முயற்சிகளின் வெற்றி, அரசின் பலத்தையும் உறுதியையும் நீடித்த ஆயுளையும் உறுதிப்படுத்தும் என்ற சூழ்நிலையில் ஜனாதிபதியின் ஆதரவு என்ற கேள்விக்கே இடமில்லை. ஜனாதிபதி விரும்பியதெல்லாம் இதற்கு மாறானதையே. அதனால் ஜனாதிபதிக்கும் பிரதமரின் அரசாங்கத்திற்குமிடையில் இணைந்து செயல்படுவதற்கான அனுசரணை வழங்குவதற்கான பிரிவுகளையுடைய கட்டமைப்பு என்ற பேச்சிற்கே இடமில்லை. இதனை ஏற்படுத்துவதற்கான விருப்பம் ஜனாதிபதி தரப்பில் அறவே இல்லை. ஜனாதிபதி விரும்பியது இதற்கு எதிரான கொள்கையையே. அரசாங்கத்தை எவ்வளவு விரைவாகக் கலைக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அதனைக் கலைத்துத் தனது தலைமையில் ஒரு அரசாங்கத்தை அமைக்கவே அவர் விரும்பினார். அதில் யார் அங்கம் வகிப்பது, அந்த அரசு எவ்வாறு செயல்படுவது, அடிப்படையிலாவது அது இயங்கக்கூடியதாக இருக்குமா என்பதெல்லாம் அவருக்கு முக்கியமாக இருக்கவில்லை. ஜனாபதியால் முன்மொழியப்பட்டுத் தோற்றுவிக்கப்பட்ட அரசாங்கத்துடன் தொடர்புடையதாக எதனையும் செய்வதற்கு அவர் விரும்பவில்லை என்பதையே தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. உண்மையில் இது ஒரு அரசு அல்ல. அதனால் அறவே செயல்பட முடியவில்லை. ஏனெனில், மிகவும் அடிப்படை விடயங்களிலேயே ஒருமித்த கருத்தைக் கொண்டிராத கட்சிகளால் அது அமைக்கப்பட்டிருந்தது. இந்த அரசு கலைக்கப்பட வேண்டியிருந்தது. ஜேவிபியே தனது கணவரைக் கொன்றதாகவும் அரசியலைப் பொறுத்தவரையில் அவர்கள் அரிச்சுவடிகூடத் தெரியாத அறிவற்றவர்களென்றும் குற்றம்சாட்டிய ஜனாதிபதி இவ்வாறான நிலையில் எவ்வாறு அவர்களுடன் இணைந்து செயல்பட முடியும்? என்றும் ஜேவிபியினர் அரசாங்கத்திலிருந்து விலகப்போவதாக ஏன் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர்? உண்மையில் ஏன் அவ்வாறு செய்யவில்லை? என்று கூறியதுடன், அவர்கள் வெளியேறத் தயாராகும் போது அவர்களை வெளியேற வேண்டாம் என்றும் முடிவை மீளாய்வு செய்யும்படியும் கேட்டு எட்டுப் பக்கங்களைக்கொண்ட கடிதம் வரைந்தார். இது பூராவுமே தவறுகளும் பிழையான மதிப்பீடுகளும் நிறைந்ததும் முற்றிலும் முரண்பட்டதுமான ஒரு பாசுரமாகும். ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியைக் கலைத்துச் சந்திரிகாவின் ஆட்சியை நிலைநாட்ட வேண்டும் என்பதுதான் நோக்கம். அதன் உள்ளடக்கம் என்ன? அது என்ன செய்யப்போகிறது? அதற்கு ஏதாவது கொள்கை இருக்கிறதா? அதனால் முன்வைக்கப்படும் கொள்கைகளை நடைமுறைப்படுத்த முடியுமா? இவை எல்லாம் இங்கு முக்கியம் அல்ல. உண்மை நிலை இதுவாக இருக்கும்போது இரு கட்சிகளும் இணைந்து செயல்படக்கூடிய கட்டமைப்பை ஏன் உருவாக்கவில்லை என்ற கேள்வி எழுவதற்கே இடமில்லை. அதனால் அன்றைய கள நிலையை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

**13. ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்ததுமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் அதாவது கைதுகள், துன்புறுத்தல்கள் மற்றும் அமைச்சரவைக் கூட்டங்களில் இடம்பெற்ற கசப்பான சம்பவங்கள், ஜனாதிபதிக்கும் பிரதம நீதியரசருக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் இவை தொடர்பாக ஜனாதிபதியும் விவாதித்திருக்க முடியும் அல்லவா? அவ்வாறான ஒரு பக்கமும் உண்டல்லவா? இதனால் இருதரப்பினரதும் அரசியல் பழிவாங்கல்களும் இங்குச் செல்வாக்குச் செலுத்தியுள்ளதாகவே நாம் அறிகிறோம்.**

நாம் ஸ்ரீலங்காவில் இடம்பெறும் அரசியல் கைதுகளை நோக்கினால் அது மிக நீண்ட காலமாகவே வழக்கத்திலிருந்து வருகிறது. ஆட்சியில் இருப்பவர்களால் எதிர்த்தரப்பு துன்புறுத்தப்படுகிறது, சிலர் கைது செய்யப்படுகின்றார்கள், சிலரது வீடுகள் எரிக்கப்படுகின்றன, சிலர் வேலைகளை இழக்கின்றார்கள். இவையெல்லாம் இந்த நாட்டில்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணப்படும் மிகவும் வருத்தத்திற்குரிய தொடர் சம்பவங்களாகும். நிலைமை இன்னும் மோசமடைகிறதே தவிர அதில் முன்னேற்றம் இல்லை. இப்போது சிறைவைக்கப்பட்டிருக்கும் எஸ்.பி. திஸநாயக்காவை எடுத்துக்கொண்டால், அவர் தெரிவித்த ஒரு சொல் இழிவுபடுத்துவதாகவோ ஏற்க முடியாததாகவோ இருந்தமையே அவரது கைதுக்குக் காரணமாகும். இவ்வாறு இந்த விடயம் தொடராக நிகழ்வது, துன்பகரமானதே. ஜனாதிபதிமீதான அரசியல் குற்றச்சாட்டைப் பொறுத்தவரையில் அவ்வாறு செய்வதற்கு ஒருபோதும் கருதப்படவில்லை. பிரதம நீதியரசர்மீதான குற்றச்சாட்டு வெவ்வேறு காரணங்களுக்காகக் கருத்தில் கொள்ளப்பட்டது. அது சில நன்மைகளை ஏற்படுத்தும் என எண்ணினோம். ஜனாதிபதிக்கு எதிராக குற்றச்சாட்டு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஒருபோதும் அவ்வாறான ஒரு எண்ணம் இருக்கவுமில்லை. அமைச்சரவைக் கூட்டங்களில் இடம்பெற்ற காரசாரமான விவாதங்களைப் பொறுத்தவரையில், ஒரு கைதட்டி ஒருபோதும் ஒலி எழாது. இது இருதரப்புகள் தொடர்பான விடயமாகும். அமைச்சரவைக் கூட்டங்களின்போது தனக்குப் பிடிக்காதவர்கள் தொடர்பான ஜனாதிபதியின் அணுகுமுறை முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்று. ஒரு சம்பவம், டாக்டர் ராஜித சேனாரத்னவைப் பார்த்து, 'நான் உம்மோடு பேசுவதற்குத் தயாரில்லை. என்னுடன் பேச வேண்டாம்' என ஜனாதிபதித் தெரிவித்தார். அதற்கு அவர், 'இங்கு அமர்ந்து இந்த நிகழ்வில் பங்குபெறுவதற்கு எனக்கு எல்லா உரிமையுமுண்டு. ஒரு நபராக எனக்கு தங்களைப் பிடிக்காது போகலாம். உங்களுக்கு என்னைப் பிடிக்காது போகலாம். ஆனால், நாங்கள் ஒருவரையொருவர் பொறுத்து நடக்க வேண்டியுள்ளது' எனத் தெரிவித்தார். ஆனால், ஜனாதிபதி அவருடன் பேச மறுத்துவிட்டார். அமைச்சரவையில் ஓரளவு கசப்புணர்வு இருந்தது. இது அமைச்சரவையைச் செயல்பட முடியாமல் தடுத்தது. இந்தக் கசப்பு ஒரு தரப்புடன் மட்டும் தொடர்புடையதல்ல. இதுவே அன்றைய நிலை. இதனால் சமாதான நடவடிக்கைத் தொடர்பாக இருதரப்பும் இணைந்து எதையாவது சாதிப்பதென்பது இயலாத காரியம். இதனால் தான் அந்தத் தருணத்தில் ஜனாதிபதி தேர்தல் ஒன்று அவசியம் என நாம் கருதினோம். நாம் ஒரு சமருக்குத் தயாராக வேண்டியிருந்தது. ஒரு புதிய இடத்திலிருந்து நாம் புறப்பட வேண்டியிருந்தது. இவ்வாறில்லாமல் எந்த ஒரு முன்னேற்றமும் சாத்தியமல்ல என நாம் உணர்ந்தோம்.

***14. வாஷிங்டனின் நடவடிக்கைகள் தொடர்பாக நீங்கள் ஆச்சரியப்படவில்லையா? இந்த நடைமுறைகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருபவர்கள் என்ற முறையில் எமக்குத் தென்படுவது என்னவென்றால், அதன் மூலம் விடுதலைப்புலிகளின் உணர்வுகள் கவனத்திற்கொள்ளப்***



***படவில்லையென்பதாகும். விசேடமாக விடுதலைப்புலிகளைப் பாதுகாப்பு வலையிலிருந்து பொறியில் வீழ்த்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கைகள் மற்றும் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்வது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கைகள் என்பன இவ்வாறிருந்தன. வாஷிங்டன் அந்த நேரத்தில் இவ்வாறான நடவடிக்கையை ஏன் மேற்கொண்டது என நீங்கள் ஆச்சரியப்படவில்லையா?***

விடுதலைப்புலிகள் தாங்கள் பங்குபெறுவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தார்கள். அத்துடன் அதற்காக ஸ்ரீலங்கா அரசாங்கம் சில ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என எதிர்பார்த்தார்கள். எனக்குத் தெரிந்தவரையில் வாஷிங்டன் மகாநாட்டில் தாங்கள் கலந்துகொள்ள முடியாது போனால் தாங்கள் இவற்றிலிருந்து வெளியேறப்போவதாக அவர்கள் குறிப்பிடவில்லை. தங்களது நடவடிக்கைகள் அது போன்று கடுமையாக இருக்கும் எனவும் அவர்கள் தெரிவிக்கவில்லை. சமாதான நடவடிக்கைகளின்போது இருதரப்புமே சம அந்தஸ்தைக் கொண்டிருக்க வேண்டும் என இணங்கப்பட்டிருக்கிறது என்பது இங்குத் தெரிவிக்கப்பட வேண்டியிருக்கிறது. பேச்சுவார்த்தைச் செயன்முறையைப் பொறுத்தவரையில் இருதரப்பினரும் வெவ்வேறு மட்டங்களில் நடத்தப்படவில்லை.

***15. அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட ஒரு அமைப்பாக விடுதலைப் புலிகள் இருப்பதால் குறிப்பிடத்தக்க பகைமையுணர்வு நிலவும்? இதை விடுத்து வேறு ஒரு செயல்பாட்டை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? பலதரப்பட்டவர்களும் வாஷிங்டனில் சந்திக்கும் ஒருநாள் மகாநாடாக இது இருக்கும்போது அதன் பின்னர் நாம் வேறு ஒரு இடத்தில் சந்திப்போம் என ஒருவர் தெரிவித்திருக்க முடியும். அது ஒரு இடைவெளியில்லாது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டிருக்க முடியாது என்றே எனக்குத் தோன்றுகின்றது. அத்துடன் செயல்பாடுகள் கட்டுப்பாட்டிற்குள் இல்லை என்பதையே நடைபெறத் தொடங்கிய சம்பவங்கள் காட்டின.***

இந்த நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் சொந்தக் கருத்துகளும் குற்றச்சாட்டுகளும் நிலவத்தான் செய்யும். சமாதான நடவடிக்கைகள் நேர்த்தியானவை எனச் சொல்வது சாத்தியமற்றது. எந்த ஒரு இடத்திலும் நடைபெற்ற எந்தவொரு சமாதானப் பேச்சும் குறைகளற்றது என்று சொல்ல முடியாது என்றே நான் எண்ணுகின்றேன். சமாதானச் செயல்பாடுகளின்போது அவ்வப்போது தவறுகள் இடம்பெறத்தான் செய்யும். அவற்றில் சில பாரதூரமானவையாக இருக்கலாம்; சில பாரதூரமற்றவையாக இருக்கலாம். இவ்வாறான தருணத்தில் நடந்தவற்றைக் கருத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டு அந்தத் தவறுகள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதை எவ்வாறு உறுதிப்படுத்துவது என்பது அவசியமாகும். ஆகவே, இவை மிக அவசியமானவை. நாங்கள் இப்போது நடைபெற்றவற்றைத் திரும்பிப் பார்க்க வேண்டும். அவற்றை ஆராய்ந்து குறைகள் தவறுகளை ஆராய்ந்து கள நிலைமையையும் பழைய அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு எவ்வாறு முன்னேறிச்செல்வது என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

**16. வாஷிங்டன் தொடர்பான விவாதங்களுக்குப் பின்னும் பேச்சு வார்த்தைகள் ஜப்பானில் இடம்பெறும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் இருக்கிறீர்கள். விடுதலைப்புலிகள் பேச்சுகளில் பங்கேற்பார்கள் என்றே ஒரு மனதான முடிவுடன் அதற்கான ஆயத்தங்களிலும் ஈடுபட்டுள்ளீர்கள். ஜப்பான் பேச்சுகளின் ஒரு அம்சம் விடுதலைப்புலிகள் சமாதானப் பொறி எனக் கருதும் சில நிபந்தகைள் தொடர்பானது. எது உங்களை இதுவரை இட்டுச் சென்றது? அவர்கள் பங்குபெறுவார்கள் என்று ஏன் எண்ணுகிறீர்கள்?**

ஹக்கோனேவில் இடம்பெற்ற பேச்சுகளின்போது, விடுதலைப்புலிகள் டோக்கியோ மகாநாட்டில் பங்குபெறமாட்டார்கள் என்று எதுவும் உறுதியாகக் குறிப்பிடப்படவில்லை. அவர்கள் எதிர்ப்புகளைத் தெரிவித்தது உண்மை. ஆனால் ஒருபோதும் கடுமையான நிலைப்பாட்டை எடுத்திருக்கவில்லை. சம அந்தஸ்து வழங்கப்படவில்லை என்பது தொடர்பாகவே எதிர்ப்பு தெரிவித்தனர். சமாதானப் பேச்சுகளைப் பொறுத்தவரையில் அனுசரணையாளர்களால் இருதரப்பிற்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என ஆரம்பத்திலேயே தெரிவிக்கப்பட்டது. இயல்பாகவே இருதரப்பிற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு உண்டு. ஒன்று அதிகாரத்திலுள்ள அரசு, மற்றையது தீவிரவாத அமைப்பு. எனினும், புரிந்துணர்வின் அடிப்படையில் இருதரப்பும் ஒரே மாதிரியாக நடத்தப்பட வேண்டும் எனப் பரஸ்பர இணக்கம் காணப்பட்டிருந்தது. அவர்களுடன் தொடர்புகளைக் கொண்டிராத வாஷிங்டனில், உதவி வழங்கும் நாடுகளின் ஆரம்ப மகாநாடு நடத்தப்படத் தீர்மானிக்கப்பட்ட விடயத்தில் நிபந்தனை மீறப்பட்டதாக விடுதலைப்புலிகள் சுட்டிக் காட்டினார்கள். இந்த விடயத்தைத் தெளிவாகச் சுட்டிக்காட்டிக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். ஹக்கோனேவில் நாம் சந்தித்தபோது விடுதலைப்புலிகள் டோக்கியோ பேச்சுகளைப் பகிஷ்கரிப்பதற்கான சில அறிகுறிகள் இருந்தபோதும் பேச்சுகளில் இருந்து வெளியேறுவார்கள் என இறுதி முடிவுபற்றி அறிவிக்கப்படவில்லை. அதனால் ஸ்ரீலங்கா அரசைப் பொறுத்தவரையில் மகாநாடு கைவிடப்படும் என அறிவிப்பது காலத்திற்கு முந்தைய செயலாக அமைந்துவிடும். அதனால் நாங்களே பேச்சுகளிலிருந்து வெளியேறியவர்கள் என்ற நிலையும் ஏற்பட்டுவிடும். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் அவர்கள் பங்குபெறாமல்



விடக்கூடும் என்ற ஒரு அபாயநிலையிலும் டோக்கியோ மகாநாட்டிற்கான ஆயத்தங்களைச் செய்வதே சரியானது எனக் கருதப்பட்டது. அவர்கள் அவ்வாறு செய்வார்கள் என்பது உறுதியாகக் குறிப்பிடப்படவில்லை.

**17.சமாதானப் பொறியில் தம்மீது நிபந்தனைகள் விதிக்கப்படுவதாக விடுதலைப்புலிகள் உணர்ந்தார்களா?**

விடுதலைப்புலிகளின் பார்வையில் அவர்களுடைய காரணங்களுக்கு வாத அடிப்படை இருந்தது. எவ்வாறெனினும், உதவி வழங்கும் நாடுகளின் நோக்கில் சமாதானப் பேச்சுகளில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். அவர்கள் குறிப்பிடத்தக்க ஒரு பெரிய தொகையை – 4.5 பில்லியன் அமெரிக்க டாலர்களை – நாட்டின் புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளுக்காக வழங்குவதாக உறுதியளித்திருந்தார்கள். சொற்பிரயோகங்களைப் பொறுத்தவரையில் பல கருத்துகள் நிலவின. சில உதவி வழங்கும் நாடுகள் நிபந்தனைகள் என்ற வார்த்தையைப் பிரயோகிப்பதை விரும்பவில்லை என்பதை நான் இங்குத் தெரிவிக்க வேண்டும். எனினும் எத்தகைய வார்த்தைகளை அவர்கள் பிரயோகித்தபோதும் இந்த உதவிகள் இலங்கையின் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கு உதவ வேண்டும் என்ற அடிப்படையிலேயே அவ்வுதவிகளை வழங்கத் தயாராக இருந்தார்கள். இல்லாவிடில் ஸ்ரீலங்காவில் முதலீடு செய்வதில் அவர்களுக்கு எந்தவித அர்த்தமும் இல்லை. இதனால் விடுதலைப்புலிகள்மீது நிபந்தனைகளை விதிப்பது புரிந்துகொள்ளப்பட வேண்டியது.

**18. மிகவும் முக்கியமான கேள்வி என்னவென்றால், ஐக்கிய தேசிய முன்னணி அரசின் தந்திரோபாயம் விடுதலைப்புலிகளுடன் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுவதை அடிப்படையாகக் கொண்டது. உதவிகள் என்ற பெரிய குடையைக்கொண்டு விடுதலைப்புலிகளைச் சிக்கவைத்து சமாதானப் பாதைக்குள் கொண்டுவருவது என்பதாகும். இதில் குறைபாடுகள் இருந்ததை இவையெல்லாம் காட்டவில்லையா? கடந்தகால நிகழ்வுகளின்படி விடுதலைப்புலிகள் இந்த ஆக்கபூர்வச் செயல்பாடுகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவார்கள் என வாதிடுபவர்களும் உள்ளார்கள்?**

ஒரு சமாதான முன்னெடுப்பில் ஈடுபடும்போது சிறிதளவேனும் நல்லெண்ணம், கபடமற்ற நம்பிக்கை என்பன இருக்க வேண்டும். நல்லெண்ணம் மற்றைய தரப்புடன் தொடர்புடையது. இவ்வாறு நடந்து கொள்வதற்குத் தயாரில்லையெனில் சமாதான முயற்சிகள் ஆரம்பத்திலேயே கண்டனத்துள்ளாகியிருக்கும். இவ்வாறான முயற்சியில் ஈடுபடும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போது ஆக்கபூர்வமான முடிவுகளில் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் நீங்கள் எது செய்தாலும் அது விடுதலைப்புலிகளால் சுயலாபங்களுக்காகப் பயன்படுத்தப்படும். அல்லது வேறுவிதமாகத் தெரிவிப்பதெனில் விடுதலைப்புலிகளுக்கு இவற்றில் பங்குபெறுவதில் எப்பொழுதுமே அக்கறை இருந்ததில்லை என்ற எண்ணத்துடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவது வேறு நோக்கங்களை அடைவதற்காகவே என்று பொருள்படும். அப்பொழுது சமாதானப் பேச்சுகளில் ஈடுபடுவதென்பது அர்த்தமற்றதாகிவிடும்.

**19. ஆக்கபூர்வமான ஈடுபாடு என்பது சரியான அணுகுமுறை என்ற கருத்துடன் இன்னும் நீங்கள் உடன்படுகிறீர்களா?**

சுயதிறனாய்வு இருக்க வேண்டும். எல்லாமே திருப்திகரமாக அமைந்ததாக காட்டிக்கொள்வது சிறந்ததாக அமையலாம். இது தவறான முடிவுகள், பலவீனமான இடங்கள், பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் என்பவற்றை அடையாளங்காண உதவும். இவ்வாறு சொல்வதில் எந்தப் பாதிப்பும் இல்லை என்றே கருதுகின்றேன். ஆனால், சமாதான முயற்சிகள் தொடரான நிகழ்வுகள் என்ற எனது கருத்தின்படி அவர்கள் ஏதோ ஒருவகையில் விரைவில் மீண்டும் ஆரம்பிப்பார்கள் என்பதற்கான காரணங்கள் இருக்கும் நிலையில் பலவீனங்களைப்பற்றி வெளியே பேசிக்கொண்டிருப்பது அருவருக்கத்தக்கது. அதனால், ஒரு பொது நிகழ்வில் குறைபாடுகள் என்று கருதப்பட்டவற்றைப் பகிரங்கப்படுத்தமாட்டேன். சிறிதளவு உள்ளார்ந்த சிந்தனை இருக்க வேண்டும். வேறு முடிவுகள் எடுக்கப்பட முடியும் என்பதிலும் கவனமாக இருக்க வேண்டும்.

**20. ரணில் விக்கிரமசிங்க அரசின் மீதான முக்கியக் குற்றச்சாட்டு அது தேசிய வருமானம் தொடர்பான கடுமையான கொள்கைகளைக் கொண்டிருந்ததென்பதாகும். இது சமாதான ஒப்பந்தத்தின் பயனாக கிடைக்கப்பெற்ற பொருளாதார நலன்கள் மக்களைச் சென்றடைவதற்குத் தடையாக அமைந்தது. இதுவே அவர்கள் தேர்தலில் தோல்வியைத் தழுவுவதற்கான காரணம் என்றும் சொல்லலாம். இந்த நோக்குடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? எவ்வாறெனினும், தற்போதைய கொள்கையின்படி ஐக்கிய தேசிய முன்னணியின் மிகவும் பிரபல்யமான அணுகுமுறை எனக் கருதப்படுகிறது. இது ஐக்கிய தேசிய முன்னணி சிறந்த பாடம் கற்றிருக்கிறது என்பதையே காட்டுகின்றது.**

2001இல் ஐக்கிய தேசிய முன்னணி பொறுப்பேற்றது கிட்டத்தட்ட முற்றாகவே வங்குரோத்து (திவால்) நிலையிலிருந்த ஒரு அரசாங்கத்தையே



ஆகும். அப்பொழுது நாட்டின் பொருளாதார வளர்ச்சி (மறைக்கனியம் 1.3) எதிர்மறையாகவே இருந்தது. இதன் விளைவுகள் மிகப்பயங்கரமானவையாக இருந்தன. மிகப் பெரிய சவாலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆரம்பத்திலேயே பிரதமர் மிகவும் திறந்த மனத்துடன் வெளிப்படையாகவே மக்களுக்கு நிலைமையை விளக்கியிருந்தார். பொருளாதாரத்தில் மீட்சியடைவதற்கு இரண்டு வருடங்களாகும் எனவும் இக்காலத்துள் மக்கள் நலம்பேணும் செயல்பாடுகளுக்காக நிதி ஒதுக்கும் நிலையில் தாம் இல்லை எனவும் தெரிவித்தார். இது பொருளாதார மீட்சிக்கான காலமாக அமையும். இதுவே தேசிய வருமானத்திற்கான கொள்கையாக அமைந்திருந்தது. இதனடிப்படையிலேயே கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது, எவ்வாறெனினும் சமாதானத்தின் பங்கைப் பொறுத்தவரையில் 2002 பிப்ரவரியில் ஐதேமு அரசினால் போர்நிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டபோது மிக நல்லதொரு நிலைமை இருந்தது. இந்த நிலைமை தொடர்ந்தது, 2002 மார்ச்சில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டின. அத்தேர்தலில் அத்தனகல்ல உட்பட 97 வீத ஆசனங்கள் ஐதேமுக்குக் கிடைத்தன. அதுவே அன்று நாட்டின் தீவிர உணர்வாக இருந்தது. இதுவே நாடு முழுவதும் ஒரு திருப்திகரமான நிலை பரவுவதற்குக் காரணமாக அமைந்தது. நீண்டகாலமாக அணுக முடியாமலிருந்த இடங்களுக்கெல்லாம் மக்கள் தங்கள் குடும்பத்தினருடன் சென்று வரும் நிலை ஏற்பட்டது. சமாதானத்தின் நலன்கள் மக்களைச் சென்றடைய முடியாததற்குக் காரணம் அவை முழுவதுமே அபிவிருத்தி, பொதுநலன் மற்றும் முதலீட்டுத் தேவைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய இக்கட்டான நிலைமை இருந்ததே. நாங்கள் இவற்றுக்கிடையில் ஒரு தொடர்பு இருக்க வேண்டும், நாங்கள் நாட்டின் உள்ளகக் கட்டமைப்பை மாற்றி அமைக்கிறோம், பெருந்தெருக்களை அமைக்கிறோம், என்றெல்லாம் மக்களுக்குக் கூறிக் கொண்டிருக்க முடியாது. நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது ஒரு நாளில் ஆறு மணிநேரங்கள் மின்வெட்டு அமுலிலிருந்தது. மக்களைப் பொறுமைகாக்கும்படி கோர வேண்டியிருந்தது. இவற்றைச் செய்வதற்கு நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். நாட்டின் அன்றைய நிலைமையைக் கவனத்திற்கொண்டு நன்கொடைகள் வழங்க முடியாத நிலையிருந்தது. மானியம் வழங்குவது பற்றி விசேஷமாக உரமான்யம் தொடர்பாகவும் வேலை வாய்ப்புத் தொடர்பாகவும் பல உள்நிலை விவாதங்கள் இடம்பெற்றன. அரச தாபனங்களில் பல தொழில் வாய்ப்புகளை வழங்க வேண்டியிருந்தது. எனினும், நாட்டின் பொருளாதார மீட்சிக்காகவும் அதை பழைய நிலைக்குக் கொண்டு வரவும் இவற்றைக் கைவிடுவதாக உணரப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**21. சமாதான நடவடிக்கைகள் பொருளாதாரத்தைப் பலப்படுத்த உதவும் என்று எண்ணியதால்தான் பிரதமர் சமாதான நடவடிக்கைகளில் அதிகக் கவனம் செலுத்தினாரா?**

சமாதான முயற்சிகள் ஒரு அமைதிச் சூழலை உருவாக்க முனைந்தன. இது முதலீடுகளை ஊக்குவிப்பதுடன் பொருளாதாரத்தையும் வலுவடையச் செய்யும். சமாதான நடவடிக்கைகள் முக்கிய முதலீடுகளை ஊக்குவிக்கக்கூடியன என்பதால் பொருளாதார அபிவிருத்தியும் சமாதான நடவடிக்கைகளும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டவை. அதனால் சமாதான முயற்சிகளும் பொருளாதார அபிவிருத்தியும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை, அவை ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போன்றவை. தற்போதைய கொள்கையறிக்கையில் நியம நலம் பேணல் செயல்பாடுகள் எமது கலாசாரத்திற்குப் புறம்பானவை எனக் குறிப்பிடப் பட்டுள்ளதுடன் சமாதான நடவடிக்கைகளும் பொருளாதார அபிவிருத்தியும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளன. மக்கள் நலம் பேணும் நடவடிக்கைகள் பொருளாதாரத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அவற்றைக் கணிப்பிட வேண்டியிருந்தது. பொருளாதார அபிவிருத்திக்கான அடித்தளம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைவிடப் பொருளாதார வளர்ச்சி வேகமாக இருத்தலே. அதுவே அடிப்படை வழிமுறையாகும். இதனை எய்துவதற்குக் காலம் எடுக்கும். இது இரவோடிரவாக செய்து முடிக்கக்கூடிய காரியமல்ல. இதனால்தான் இந்த இடைக்காலத்தில் குறித்த, தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகள் நிர்ணயிக்கப்பட்டன. 400கிராம் பால்மா 139 ரூபாய்க்கும் 500 கிராம் பருப்பு 34 ரூபாய்க்கும், சிறியமீன் கருவாடு 500 கிராம் 94 ரூபாய்க்கும் கொடுக்கப்பட்டன. நான் முன்பு குறிப்பிட்ட எமது அடிப்படை இலக்கை அடைய முன்னர், இந்த இடைக்காலத்தில் தற்காலிக நிவாரணச் செயல்பாடுகள் அவசியம் எனக் கருதப்பட்டன.

**22. ஜனாதிபதி மூன்று அமைப்புகளைப் பொறுப்பேற்றமை, மற்றும் பாராளுமன்றத்தைக் கலைத்தமை இந்த இரு சாத்தியக்கூறுகள் தொடர்பாக ஐதேமு திட்டவகுப்பாளர்கள் ஏன் சிந்திக்கவில்லை?**

அப்போதிருந்த அரசியலதிகார யதார்த்த நிலையைப் பொறுத்த வரையில் இவ்வாறு பொறுப்பேற்பதற்கான சாத்தியம் இருப்பது இயல்பானதே. எனினும், தற்போது நடையிலுள்ள வெஸ்ட்மினிஸ்டர் முறையின் கீழ் அதிகமாக எதுவும் செய்திருக்க முடியாது. அடுத்த தேர்தலை எப்போது நடத்துவது என்ற முடிவு எடுக்கும் பொறுப்புடைய நிர்வாகமாக அது இருப்பதால். புகழ் மிக உயர்வாக இருக்கும் நிலையில் இந்த முடிவு எடுக்கப்படும். இதற்குப் பல உதாரணங்கள் உள்ளன.



உதாரணமாக, போக்லண்ட் யுத்தம் முடிவடைந்தவுடன் புதிதாகத் தேர்தலை நடத்துமாறு மார்கிரட் தாட்சர் பிரித்தானிய அரசியிடம் கோரியிருந்தார். அப்போது தாட்சரின் புகழ் உச்சத்தில் இருந்தது. அத்துடன் அவர் தேசிய வீராங்கனையாகக் கருதப்பட்டார். அவர்களது ஆட்சிமுறையின் கீழ் அவர் இதற்குத் தகுதியானவர். ஆனால், இங்கு எதிர்த்தரப்பு, அதாவது எமது அரசியல் எதிரியே தேர்தலை எப்போது நடத்துவது என்பது தொடர்பாகத் தீர்மானிக்கும் நிலையில் இருந்தார். அத்துடன் எமக்குப் பொருத்தமில்லாத ஒரு நேரத்தில், எமக்குச் சாதகமற்ற, எமது புகழ் குறைந்து செல்லும் நேரத்திலேயே இது நடத்தப்படும் என்பதும் கண்கூடு. எனினும், அவரே சட்டபூர்வமாகத் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியாக இருந்ததனால் வேறு எதனையும் செய்வதற்கில்லை. அவரே நாட்டின் தலைவியாகவும் ஆயுதப்படைகளின் தலைமைக் கட்டளைத் தளபதியாகவும் இருந்தார். தேர்தலை நடத்துவது தொடர்பான அதிகாரம் அவருக்குரியது. ஒரேயொரு விடயம் என்னவெனில், முதல் வருடம் பூர்த்தியாகும் முன் தேர்தலை நடத்த முடியாது. பாராளுமன்றத்தில் குறைந்த பெரும்பான்மையுடைய கட்சியொன்றைச் சேர்ந்தவர் ஜனாதிபதியாக இருப்பது மிகவும் கஷ்டமான ஒரு நிலைமை. 1978 அரசியலமைப்பில் இவ்வாறான எதிர்பாராத நிகழ்வுகளுக்கான ஏற்பாடு இருக்கவில்லை. ஏனெனில், 1978 இலிருந்து 2001 வரையில் ஜனாதிபதியும் பாராளுமன்றத்தில் அதிகப் பெரும்பான்மையுடையவர்களும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். 2001இல் மட்டுமே இந்த நிலைமை மாறியது. இது தொடர்பாக நாங்கள் எதுவும் செய்வதற்கு முடியவில்லை. இதற்காகத் தெரிவிக்கப்பட்ட யோசனைகள் செயல்படுத்த முடியாதவை. ஒன்று ஜனாதிபதிக்கான விநியோகத்தை நிறுத்துவது, இது பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. ஐவர் ஜெனிங்ஸ் தெரிவித்ததைப் போலப் பாராளுமன்றத்தின் முக்கியச் செயல்பாடு பொதுநிதியைக் கையாள்வதாகும். இதன்படி பொதுநிதி மீதான கட்டுப்பாடு எங்கள் கைகளுக்கு வரும். எனினும் இதற்கு எமது நிதியமைச்சர் சொக்ஸியின் வரவு செலவுத் திட்டத்திற்கெதிராக வாக்களிக்க வேண்டும். மற்றைய யோசனை, பாதுகாப்பு அமைப்பு மீதான நிதி ஒதுக்கீட்டிற்கு எதிராக வாக்களிப்பது. இதனால் இராணுவம், கடற்படை, விமானப்படை என்பன சம்பளம் இல்லாமல் வேலைசெய்ய வேண்டியேற்படும். உள்ளூராட்சி அமைப்புக்கெதிராகவும் வாக்களித்திருக்க முடியும். அவ்வாறெனில் பொலிஸ்படையும் சம்பளத்தைப் பெற முடியாது. இவ்வாறான செயல்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்வது நாட்டை அராஜகவழிக்கு இட்டுச்செல்லும் என்பதால் இவையெல்லாம் நடைமுறைச் சாத்தியமற்றவை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஊடகத்துறை அமைப்பிற்கு எதிராக வாக்களிப்பது மட்டும் சாத்திய மாக அமைந்திருக்கும். இதைப் பெரிய பிரச்சினைகள் எதுவுமின்றிச் செய்திருக்க முடியும். அதன் மூலமும் எதனையும் ஆக்கபூர்வமாகச் சாதித்திருக்க முடியாது. ஏனெனில், ரூபவாஹினி கூட்டுத்தாபனம் போன்ற அரச ஊடக நிறுவனங்கள் தமது நிதித்தேவைக்காக முழுக்க ஜனாதிபதியைச் சார்ந்திருக்கத் தேவையில்லை. அவற்றுக்குச் சுதந்திர மான வேறு வழிகளும் உண்டு. அதனால் சில அமைப்புப் பொறுப்பு களைப் பாதுகாப்பு அமைப்பும் உள்ளூராட்சி அமைப்பும் அல்ல, ஊடகத்துறை அமைச்சகம் மீளக்கையேற்பதற்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதா என்பதே கேள்வி. இவ்விடயம் உறுதியாகத் தெரிவிக்கப்படவில்லை. எனினும், அவ்வாறு செய்யப்படலாம் என ஊகிக்கக்கூடியதாய் இருந்தது. இது 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பை அடிப்படையாகக் கொண்ட எமது கட்டுப் பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயமாக இருந்தது. 2001 வரை இவ்வாறான முரணான, இக்கட்டான நிலை ஏற்படவில்லை என்பதால் இவ்வாறான நிலைமையைக் கையாள்வதற்குச் சட்டத்தில் இடமிருக்கவில்லை. 2001 டிசம்பரிலேயே முதல் முதலில் இவ்வாறான பிரச்சினை எழுந்தது. அரசியலமைப்பு ஆக்கப்பட்ட முறையானது இவ்வாறான பிரச்சினைகளை எதிர்பார்க்கவோ அவற்றுக்கான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கவோ இல்லை.

**23. ஐக்கிய தேசிய முன்னணி மீதான இன்னுமொரு குற்றச்சாட்டு, செயல்பாடுகள் சரியாக வடிவமைக்கப்படவில்லை என்பதும் திறனற்ற தாகவும் இருந்ததென்பதாகும். செயல்பாட்டு வடிவம் என்பது அதில் இடம்பெறக்கூடிய எல்லா விடயங்களும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். மற்றும் இவ்வாறான எதிர்பாராத நிகழ்வுகளை விளக்குவதற்கான கொள்கையை வரைய வேண்டும். மிலிந்த மொரகொட பிரபல்யமான தனது உரையொன்றில், 'நாங்கள் கொள்கைப்பற்று மிக்கவர்கள்' என்று தெரிவித்தது எனக்கு நினைவிருக்கிறது. அவர் இதனை மிக மேல் மட்டத்திற்கு எடுத்துச் சென்றிருந்தார் என்றே இங்கு நான் சொல்ல வேண்டும். கொள்கைப் பற்று மட்டுமே போதாத சந்தர்ப்பங்களும் உண்டு. நீங்கள் ஈடுபட்டிருந்தது மிகவும் சிக்கலான ஒரு தொடர் செயல்பாடு. அதனை முன்னெடுத்துச்செல்வதற்கு அதில் சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களும் கருத்தில் எடுக்கப்படுவதுடன் சிறந்த முறையில் கையாளவும் மாற்றங்களைச் செய்யவும் வேண்டும். வாஷிங்டன் பின்னடைவு உட்படப் பல குழுக்கள் தொடர்பான பிரச்சினைகளும் தவிர்க்கப்பட்டிருக்க முடியும்.**

ஜனாதிபதியின் அரசியல் அதிகாரங்கள் போன்ற சில விடயங்களை



மாற்றவோ மீளாய்வு செய்யவோ முடியாது என்பதை நீங்கள் மனத்தில் கொள்ள வேண்டும். எந்தச் சமாதானச் செயல்பாடுகளிலும் சில குறை பாடுகள் இருக்கத்தான் செய்யும். எந்த ஒரு சமாதான நடவடிக்கை யையும் நீங்கள் பார்த்தால் அதில் குறைபாடுகள் இருப்பது தெரியும். இது இலங்கையில் மட்டுமல்ல தென்னாப்பிரிக்கச் சமாதான நடவடிக்கை களின்போதும் இது போன்றிருந்தது. அவற்றை விவரிப்பதற்குப் பதிலாக அணுகுவதன் மூலம் அவை குறைக்கப்படலாம். எவ்வாறெனினும், பாதகமான அம்சங்களை கருத்தில் கொண்டு இத்தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்ய வேண்டும். நாங்கள் இதை இப்போது செய்கின்றோம். அவ்வாறான நிலைமைகளை விளக்கு வதற்கான பல பொறிமுறைகளையும் கொண்டிருக்கிறோம். அத்துடன் இதில் உபயோகப்படுத்தக்கூடிய ஏனைய சொற்பிரயோகங்கள் தொடர் பாகவும் மிகவும் நுணுக்கமாகத் தெரிந்துவைத்துள்ளோம்.

**24. கொள்கைப் பிரகடனத்திலும் ரணில் விக்கிரமசிங்கவின் வாக்கு மூலத்தின்படியும் ஜனாதிபதியுடன் இணைந்து செயல்படப்போவதாக உறுதியளிக்கப்பட்டது. அடுத்த கட்ட சமாதானப் பேச்சுகளில் இது ஒரு முக்கிய அம்சமாக அமையும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.**

ஆம், நிச்சயமாக அவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அதன் தேவை தெளிவாக விளக்கப்பட்டது. இந்தமுறை ரணில் விக்கிரமசிங்க கோருவது விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கான ஆணையையல்ல. 2001 டிசம்பர் மற்றும் 2004 ஏப்ரலில் மக்களிடம் கோரியிருந்த ஆணையிலிருந்து இது வேறுபட்டது. இந்த முறை கேட்பது சுதந்திரக் கட்சியினருடன் பேசு வதற்கான ஆணையையே. ஏனெனில், விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்காக. இதற்கான வாய்ப்பைத் தேசிய அரசாங்கத்தால் அதிகரிக்க முடியும் என்பதால் மற்றைய பிரதான அரசியல் கட்சியையும் இணைத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

**25. அன்டன் பாலசிங்கத்தின் 'போரும் சமாதானமும்' என்ற புத்தகத்தில், சமாதான நடவடிக்கைகளில் சர்வதேச நாடுகளை ஈடுபடுத்துவது, விசேடமாக அமெரிக்காவின் தலையீடு விடுதலைப்புலிகள் பேச்சுகளில் இருந்து வெளியேறுவதற்கு ஒரு காரணமாக அமைந்தது. குறிப்பாக அவர் களை இராணுவ மற்றும் அரசியல் நலன்களுக்காகப் பயன்படுத்தியமை. இது விடுதலைப்புலிகளை உஷார்ப்படுத்தியது என்று சொல்ல முடியும். ஐதேமுவின் இந்த நடவடிக்கைக்குக் காரணம் என்ன?**

பலம் வாய்ந்த நாடுகளின் தலையீட்டால் அதிக அழுத்தம் ஏற்பட்டது. எந்த ஒரு செயல்பாட்டிற்கும் பொருளாதார உதவி எதிர்பார்க்கப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டால் பலம் வாய்ந்த நாடுகளின் தலையீடு தவிர்க்க முடியாததாகி விடும். சிறிய வேறுபாடுகள் விடுதலைப்புலிகளின் கவனத்தை ஈர்த்திருந் தால் அது புரிந்துகொள்ளப்படக்கூடியது. அவ்வாறாக நடைபெற்ற சில விடயங்கள் வேறுவிதமாகக் கையாளப்படக்கூடும் என எண்ணுவது இயல்பானதே. இந்த அனுபவங்களினூடாக அரிய படிப்பினைகள் பெற முடியும். எதிர்காலத்தில் இடம்பெறும் சமாதானப் பேச்சுகளில் நாம் இதைப் பயன்படுத்துவோம்.

**26. வடக்கு-கிழக்கில் மனிதாபிமான விடயங்கள் புறந்தள்ளப்பட்டமை அரசியல் விடயங்களில் அதிக முன்னேற்றம், பேச்சுகள் தடைப்படுவதற்குக் காரணமாக அமைந்தன எனப் 'போரும் சமாதானமும்' என்ற புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த விவகாரங்கள். கட்டமைப்பு, மனப்போக்கு இவை இரண்டையும் வேறுபடுத்தி அறிய வேண்டிய தேவையுள்ளது. கட்டமைப்பைவிடவும் மனப்போக்கு தொடர்பாகவே பிரச்சினைகள் இருந்ததாக நான் உணர்கிறேன். கட்டமைப்பு தொடர்பாக அவ்வளவு பிரச்சினைகள் இருக்கவில்லை. சிரான், ட்ரிபிள் ஆர் இவை தொடர்ந்து செயல்பட முடியாமல்போனமை. இதிலிருந்து நிறைய படிக்க வேண்டியுள்ளது. தமது மக்களது வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே விடுதலைப்புலிகள் பேச்சுகளில் தொடர்ந்து பங்குகொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எம்முடனான நேரடிப் பேச்சுகளின் போது அவர்கள் இந்த விடயத்தில் மிகவும் அக்கறையாக இருந்தார்கள். அதனால் இந்த விடயத்தில் நாம் போதிய அக்கறை காட்டவில்லை, அல்லது விரைவாக செயல்படவில்லை என அவர்கள் உணர்ந்தால் அது புரிந்துகொள்ளப்பட வேண்டியதே.

**27. பேச்சுகளில் தோல்வி ஏற்படுவதற்குத் தொடர்பாடல்களில் இருந்த குறைபாடும் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. செய்தியாளர் மகாநாடுகள் மட்டும் போதியவையாக இருக்கவில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு அரசாங்கமானது அதன் செயல்பாடுகள், கருத்து களைப் பொதுமக்களுக்கு விளக்குவதற்குச் சிறந்த தொடர்பு முறை களைக் உருவாக்கியிருந்திருக்க வேண்டும். தயவுசெய்து இது தொடர்பாக கருத்துத் தெரிவியுங்கள்.**

இது ஒரு வகையான கருத்து. இன்னுமொரு சாராரின் கருத்து இதற்கு முழு எதிரானது. பலரது விவாதம் என்னவெனில் சமாதான முன்னெடுப் புகள் எதுவும் இவ்வகையில் நடத்தப்படக்கூடாதென்பதாகும். பேச்சு



களின் ஒவ்வொரு அமர்வின்போதும் காலையில் நாங்கள் அறையி லிருந்து வெளியேறிவரும்போதும், பின்னர் அந்தியில் திரும்பும்போதும் செய்தியாளர்கள் எங்களைச் சூழ்ந்துகொண்டு என்ன நடந்தது, முன்னேற்றம் உண்டா என வினவுவார்கள். ஊடகவியலாளரின் பங்களிப்பின் அளவினால் பேச்சுகளில் பாதிப்பு ஏற்படும் என்ற கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாதது தவிர்க்க இயலாதது. எதிர்பார்ப்புகள் வழமைக்கு மாறாக உயர்வாக இருந்தன. இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறைத் தீர்வை நாம் ஆராய்ந்துகொண்டிருந்த போது பல அறிவிப்புகளைச் செய்ய வேண்டியிருந்தது. இது தலைப்புச் செய்தியாக இடம்பிடித்துக்கொண்டது. இவ்வாறு அடிக்கடி பரபரப் பூட்டும் செய்திகள் வெளியிடப்பட்டன. ஊடகங்கள் இவ்வாறாகப் பழக்கப்பட்டுவிட்டதுடன் அவ்வாறு தொடர்ந்தும் நடந்துகொள்ள வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. ஒவ்வொரு அமர்வின் முடிவிலும் அறிவிப்புகள் வெளியாக வேண்டும் என அவர்கள் எதிர் பார்த்தார்கள். சமஷ்டிமுறையின் அம்சங்கள் தொடர்பாகக் கலந்தாலோ சித்துக்கொண்டிருக்கும்போது சிறு சிறு விடயங்கள் அதன் தலைப்பை மாற்றப்போவதில்லை. இது புரிந்து கொள்ளப்பட வேண்டும். நாம் என்ன செய்தபோதும் அது வெளிப்படையாகவே இருக்கவேண்டும் என நாம் உணர்ந்தோம். ஏனெனில், இறுதியில் பொது வாக்கெடுப்பில் மக்களின் உடன்பாடு தேவை. இரகசியமான முறையில் விடயங்களை முன்னெடுக்கும்போது இரகசியமாக ஏதோ சூழ்ச்சி நடைபெறுவதாகக் குற்றஞ்சாட்டப்படும். சுனாமிக்குப் பிந்தைய நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்த முயன்றபோது இவ்வாறு நடைபெற்றது, நான்கு மாதங் களாக எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாது போய்ப் பின்னர் இரகசியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிற்பகுதியில் பேச்சுகள் முறிவடைவதற்குச் சிறிது முன்னதாக நோர்வே ஒரு இணக்கப்பாடாக ஒரு உத்தியை வகுத்தனர். இது விடயத்தில் ஊடகங்களுக்கு அவர்கள் முற்றாகக் கதவடைப்பு செய்யாதபோதிலும், வேறுபட்ட பிரிவுகளில் ஊடகம் செயல்பட்டதைக் கண்டார்கள். எனினும், அவர்கள் வேறு பகுதியில் அமர்த்தப்பட்டார்கள். இதனால் அவர்களுடனான தொடர்பு மட்டுப்படுத்தப்பட்டது. இது சில பிரச்சினைகள் எழுவதற்குக் காரண மாக அமைந்தது.

●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 4

# போர்நிறுத்த உடன்படிக்கை மீறல்கள், வன்முறைகள் மற்றும் கண்காணிப்புக் குழுவின் பங்கு

பிரியான் செனவிரத்ன, டினிது என்ரகல


## சுருக்கம்

2001ஆம் ஆண்டு இலங்கையின் சிவில் யுத்தம் ஒரு ஸ்தம்பித நிலையை அடைந்தது. 2002 பிப்ரவரி 22ஆம் தேதி இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் உள்நாட்டு யுத்தநிறுத்த உடன்படிக்கையொன்று கையெழுத்திடப்பட்டது. இலங்கை 'இனப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்வைக் காண்பதே'[1] இதன் நோக்கமாகும். இந்த உடன்படிக்கை அமல்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்காக இருதரப்பினரும் இணைந்து இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை நியமித்தனர்.

கடந்த நான்கு வருடங்களாக நேரடியான யுத்தங்கள் எதுவுமின்றி இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை பேணப்பட்டு வருகிறது. ஆனாலும் பெருமளவான வன்முறைகள் மற்றும் மறைமுகமான வன்முறைகள் இடம்பெற்றன. இதில் மிகவும் பாரதூரமாக அமைந்தது 2004–2005க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற அடையாளம் தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட கொலைகளாகும். இதன் விளைவால் இவை யுத்தநிறுத்த மீறல்கள் எனப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவால் கூற முடியவில்லை. இந்நிலைமை யுத்தநிறுத்த உடன் படிக்கையை ஆபத்திற்குள்ளாக்கியதுடன் கண்காணிப்புக் குழுவின் நம்பகத் தன்மையையும் சீர்குலைத்தது.

மற்றைய இனங்காணப்பட்ட முக்கிய அம்சங்களில் உறுப்புரை 2.1 தொடர்பான மீறல்களும் உள்ளடங்கும். இது பிரதானமாக விடுதலைப் புலிகளால் செய்யப்பட்ட சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தலும் கடத்தலும் போன்ற மனித உரிமைகள் தொடர்பான மீறல்களாகும். உறுப்புரை 1.8ஐ மீறுகின்ற துணைத் தமிழ் இராணுவக் குழுக்களின் ஆயுதங்களை இலங்கை இராணுவத்தால் களைய முடியாமல் போனது. 2004இல் இடம்பெற்ற கருணாவின் பிரச்சினையுடனேயே நிலைமை மிகவும் மோசமடைந்தது. 2005ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் நாடு யுத்தத்தின் விளிம்பில் இருந்தது. இந்த நிலைமையிலும்கூட யுத் தநிறுத்த உடன்படிக்கையைப் பேணுவதின் அவசியத்தை இருதரப் பினரும் வலியுறுத்துகின்றனர். இது ஒரு சாதகமான சமிக்ஞையாகும். இறுதியில் யுத்தநிறுத்தத்தின் ஒப்பந்தத்தில் நோக்கின் எல்லையை விருத்தி செய்கின்ற விடயங்களை உட்புகுத்த வேண்டுமென்ற சிபாரிசுகள் முன்வைக்கப்படுகின்றன.


1. இலங்கை அரசாங்கத்திற்கும் எல்டிடிஈக்குமிடையில் கையெழுத்தான யுத்தநிறுத்த உடன்படிக்கை, இயுககு, இணையதளம்: www.slmm.ik (2005)



## அறிமுகம்

2002 பிப்ரவரி மாதம் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் யுத்தநிறுத்த ஒப்பந்தமொன்று கையெழுத்திடப் பட்டது. இது நாட்டிலே ஒரு சாதகமான சமாதானச் சூழலை ஏற்படுத் தியது. இக்கட்டுரையானது யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்பான சாதகமான சமாதானக் காலப்பகுதி தொடர்பாகவும் மற்றும் யுத்தநிறுத்த உடன்படிக்கையிலுள்ள தெளிவற்ற பகுதிகள் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பங்கு தொடர்பாகவும் எடுத்துரைக்கிறது.

## பின்னணி

18 வருடகாலச் சிவில் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இலங்கை 2001ஆம் ஆண்டின் இறுதியில் ஒரு முட்டுக்கட்டை நிலையை அடைந்தது. 1983–2002ஆம் ஆண்டுகளுக்கிடையிலான காலப் பகுதியில் 65,000 மரணங்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றில் 30,000 இராணுவத்தினரும் 18,000 புலிகளும் மிகுதி சிவிலியன்களுமாவர். மாதத்திற்கு 285 மரணங்கள் என்ற சராசரி யில் இது காணப்பட்டது. 2001ஆம் ஆண்டு கடைசிக் காலப்பகுதியளவில் இருதரப்பினரும் யுத்தத்தில் ஈடுபட முடியாத நிலையை அடைந்தனர்.

2001 டிசம்பர் மாதம் பழைய அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டுப் புதிய அரசாங்கம் பதவியேற்றதையடுத்துப் புதிய அரசின் தலைவர் புலிகளால் கடைப்பிடிக்கப்பட்ட ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்திற்குச் சாதக மாக பதிலளிக்க முடிவுசெய்தார். ஒரு நிரந்தரத் தீர்வைக் காணுவதற் கானப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள அனுசரணை வழங்குமாறு 1999ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கமானது விடுதலைப்புலிகளையும் கலந்தாலோசித்துவிட்டு நோர்வே அரசாங்கத்தைக் கோரியது. நோர்வே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனுசரணையாளர்களின் முக்கியப் பங்களிப்புக் காரணமாக 2002 பிப்ரவரி மாதம் ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த நடவடிக்கையானது 'இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான தீர்வைக் காண்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டது'[2]. யுத்தநிறுத்த உடன்படிக்கை அமலாக்கத்தைக் கண்காணிப்பதற்குக் கண்காணிப்பாளர்களை அனுப்புமாறு நோர்டிக் நாடுகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இவ்வுடன்படிக்கையின் பிரதான நோக்கம் இலங்கை இனப் பிரச்சினைக்கு இராணுவரீதியற்ற தீர்வைக் காண்பதற்கு உகந்த சூழ்நிலைகளை உருவாக்குவதாகும். நாட்டிலே இயல்பு நிலையை தோற்றுவிப்பது மற்றைய நோக்கமாகும். இது பின்வருமாறு செயல்படுத்தப் படவிருந்தது:

1. வன்முறைகளை நிறுத்தல்.
2. இருதரப்பினர்களின் இராணுவப் படைகளை அப்புறப்படுத்துதல்.
3. தரப்பினருக்கிடையிலான அனைத்து இராணுவக் கடல் மற்றும் ஆகாய நடவடிக்கைகளை நிறுத்துதல்.
4. சர்வதேசச் சட்டத்திற்கிணங்கப் பொதுமக்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுத்தல்.
5. மக்களின் சமய மற்றும் கலாசார விடயங்களில் கவனமாக இருத்தல்.
6. பாடசாலைகள் மற்றும் பொதுக்கட்டடங்களிலுள்ள படையினரை விலக்குதல்.
7. மீன்பிடி மற்றும் பொதுமக்களின் நடமாட்டம் போன்றவற்றின் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தல்.

உடன்படிக்கையானது சர்வதேச அனுசரணையாளர்களின் உதவியுடன் இருதரப்பினராலும் அமல்படுத்தப்படவிருந்தது.

இது இலங்கையின் பிரதமருக்கும் புலிகளின் தலைவருக்குமிடையிலான ஒப்பந்தமாகும். அதாவது சண்டையில. ஈடுபட்டுள்ள அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலானது என்பது அழுத்தி உரைக்கப்பட வேண்டும். அப்போது அவர்கள் இருவருமே சண்டையில் ஈடுபட்டிருந்த தரப்பினராக இருந்தபடியால் மோதலைத் தவிர்க்கும் நிலைமையில் இருக்க முடிந்ததுடன் யுத்தத்தை நிறுத்தவும் ஒப்பந்தத்திற்கு ஏற்றபடி நடக்கவும் அவர்களால் முடிந்தது.

### உள்நாட்டுப் பிரச்சினை தொடர்பான யுத்தநிறுத்தக் கண்காணிப்பு

சமாதான உடன்படிக்கைகளின் அமலாக்கம் தொடர்பான கண்காணிப்பு

2. மேலது.



மற்றும் உண்மைநிலையைக் கண்டறிதல் என்பவற்றின் அவசியம் அதிகரித்துச் செல்கின்றபோதிலும் இது தொடர்பான ஆராய்ச்சி குறைவாகவே உள்ளது. கண்காணிப்பு மற்றும் கண்காணிப்புத் தொடர்பான உண்மையைக் கண்டறிதல் என்பவற்றின் பின்னாலுள்ள சிந்தனையானது இன்னமும் அதிகாரத்தின் மூலமான மரபுவழிக் கட்டுப்பாட்டுடனேயே பிணைக்கப்பட்டுள்ளது. எனினும் உள்நாட்டுப் பிரச்சினைகளில் கண்காணிப்பு மற்றும் உண்மைநிலையைக் கண்டறிதல் என்பன நடுநிலையான கண்காணிப்பாளர்களாலும் கண்காணிப்புக் குழுக்களாலும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நடவடிக்கையானது தரப்பினர் ஒப்பந்தத்தைப் பலப்படுத்தும் வகையில் அதற்கு இணங்கி நடப்பதிலேயே தங்கியுள்ளது.

சில கண்காணிப்புப் பொறிமுறைகள் தரப்பினர் ஒப்பந்தத்திற்கு அமைவாக நடப்பதை உறுதியளிக்கக்கூடிய அமலாக்கம் தொடர்பான அதிகாரங்களைக் கொண்டுள்ளன. இப்பொறிமுறைகள் அரசியல் ரீதியாகவோ பொருளாதாரரீதியாகவோ அல்லது இராணுவ ரீதியாகவோ இயங்கலாம். உதாரணமாகக் கொசோவோவில் சர்வதேசப் பாதுகாப்புப் படை இவ்வாறு இராணுவரீதியில் அமல்படுத்தப்பட்ட கண்காணிப்புப் பொறிமுறையாகும்.

இவற்றில் பெரும்பாலானவை வெளியிலிருந்து சுமத்தப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கைகளாகும். கொசோவோவை எடுத்துக் கொண்டால் இங்குச் சர்வதேசப் பாதுகாப்புப் படைக்கும் கொசோவோ விடுதலை இராணுவத்திற்குமிடையிலான ஒப்பந்தம் கொசோவோ விடுதலை இராணுவத்தின் மீது வட அட்லாந்திக் சமவாய நிறுவனத்தால் நேட்டோ விதிக்கப்பட்டதாகும்.

இலங்கையிலுள்ள கண்காணிப்புப் பொறிமுறைக்கு அமல்படுத்தும் அதிகாரம் இல்லை. இது குவாட்டிமாலாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைக்குழுவை (மினுகுவா) ஒத்ததாகும். எனினும் இவ்விரு ஒப்பந்தங்களும் சுயமாக விதிக்கப்பட்ட உடன்படிக்கைகளின் விளைவாகும். உள்நாட்டுப் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களின் பங்காக அமைவது யுத்தநிறுத்தத்தைக் கண்காணிப்பதும் இருதரப்பினரையும் ஒப்பந்தத்திற்கு இணங்கச்செய்வதுமாகும். தரப்பினர் ஒப்பந்தத்தின்படி நடக்கிறார்களா என்பது சரிவர உண்மைநிலையை அறிந்தே தீர்மானிக்கப் படுகிறது. ஆனாலும் இது வெளிப்படையானதாக இருக்க வேண்டும். இது இருதரப்பினருக்குமிடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும்.

உண்மை நிலையைக் கண்டறிதல் என்பது 3 பிரிவுகளைக் கொண்டது. அதாவது, மீறல்களைக் கண்டுபிடித்தல், மீறல்களில் ஈடுபடுபவர்களைத் தடுத்தல் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது முறைப்பாட்டாளர்களுக்குத் தமது முறைப்பாடுகளை எடுத்துக் காட்டுவதற்குச் சந்தர்ப்பமளிக்கின்றது. உண்மைநிலையை கண்டறிதல் என்பது, மீறல்களில் ஈடுபடுபவர்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதுடன் அவர்களுக்குத் தண்டணை வழங்குவது மற்றும் அவர்கள் செய்யும் மீறல்களை மறைப்பதையும் தடுப்பதும் ஆகும். உண்மையைக் கண்டறியும் செயல்பாடானது முறைப்பாட்டுக்காரர்களுக்கு முன்னெச்சரிக்கை எடுப்பதற்கு ஏதுவாகவும் தொழிற்படுகிறது.

### யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு இணங்கி நடத்தல்

இலங்கையின் யுத்தநிறுத்த உடன்படிக்கை நான்கு பிரதான உறுப்புரைகளைக் கொண்டுள்ளது:

- **உறுப்புரை 1: யுத்தநிறுத்தத்தின் வழிமுறைகள்**

  முதல் உறுப்புரையானது இருதரப்பினரும் தமது ஆயுதப்படைகளிடையேயான யுத்தநிறுத்தத்தை அமல்படுத்துவதற்கான வழிகாட்டிகளை வழங்குகிறது. இராணுவ நடவடிக்கைகள், படைகளைப் புறம்பாக்குதல் மற்றும் தரப்பினரின் ஆயுதப்படைகளின் சுதந்திர நடமாட்டம் என்பனவே இங்குக் கருத்திலெடுக்கப்படும் முக்கியப் பகுதிகளாகும்.

- **உறுப்புரை 2: இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கான நடைமுறைகள்**

  இரண்டாம் உறுப்புரையின்படி பொதுமக்களின் மனித உரிமைகளை பாதுகாப்பது தொடர்பான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு இருதரப்பினரும் உறுதியளித்திருக்கின்றனர். பொது இடங்களிலுள்ள இராணுவத்தினரை வெளியேற்றுதல், பொதுமக்களும் இராணுவ சம்பந்தமற்ற பொருட்களின் போக்குவரத்து, மீன்பிடித் தடைகளைத் தளர்த்துதல் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ்க் கைதுகள் மேற்கொள்ளப்படுவதைத் தடுத்தல் என்பனவே இங்குக் கருத்தில் எடுக்கப்படும் முக்கிய விடயங்களாகும்.

- **உறுப்புரை 3: இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு**

  மூன்றாவது உறுப்புரை இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை உருவாக்குவதற்கான வழிகாட்டிகளை வழங்குகின்றது. இக்குழுவின் தலைவரை நியமித்தல், ஆணை, உள்ளூர் கண்காணிப்புக் குழுக்களை நியமித்தல், கண்காணிப்பாளர்கள் தமது கடமைகளைச் செய்யக்கூடியவாறு பாதுகாப்பளித்தல் மற்றும் இருதரப்பினருக்குமிடையில் அடிமட்டத் தொடர்புகளை விருத்தி செய்தல் என்பனவே இங்கு முக்கிய அம்சங்களாகும்.



- **உறுப்புரை 4: நடைமுறைப்படுத்தல், திருத்தம்செய்தல் மற்றும் முடிவுறுத்தல்**

  நான்காம் உறுப்புரையானது யுத்தநிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தல், திருத்தம்செய்தல் மற்றும் முடிவுறுத்துவதற்கான நிபந்தனைகள் பற்றிக் கூறுகிறது.

### இணங்கி நடத்தல்

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னர் இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையில் சிறு சிறு மோதல்களைத் தவிர எவ்வித யுத்த நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை. அதாவது எவ்விதப் போரும் இடம்பெறவில்லை. 2005 டிசம்பருக்கு முன்னர் தரப்பினர் எவரும் ஒருவருக்கொருவர் எதிரான இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. எவ்வித வான் தாக்குதல்களும் இடம்பெறவில்லை. தரப்பினர் இருவரும் புறம்படுத்தப்பட்டிருந்ததுடன் சுதந்திரமாக நடமாடவும் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இது ஒரு வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும். மேற்கூறிய நடவடிக்கை முறையிலேயே இருதரப்பினருக்குமிடையில் பல விரோதங்கள் இருந்தபோதும் இம்முன்னேற்றகரமான நிலை அடையப்பட்டது. இத்தகைய முன்னேற்றத்தை அடைவதற்கு எவ்வளவு தூரம் போராட வேண்டியிருந்தது என்பதை இருதரப்பினரும் அனுசரணையாளர்களும் மற்றும் கண்காணிப்பாளர்களும் அறிவர். அமைதியைத் தக்கவைப்பதற்கு அரசுமட்டுமல்ல விடுதலைப்புலிகளின் தந்திரோபாய நடவடிக்கைகளும் காரணமாகும். இது 1987 காலப்பகுதியில் இந்திய இராணுவம் இங்கு நிலைகொண்டிருந்த நிலைமையிலிருந்து வித்தியாசமானதாகும். இந்திய இராணுவத்திற்கும் புலிகளுக்குமிடையில் போர் மூண்டபோது இலங்கை அரசின் காவலிலிருந்த 13 விடுதலைப் புலிகள் சயனைட் அருந்தித் தமது உயிரைப் போக்கிக்கொண்டனர்.

### மீறல்கள்

யுத்தநிறுத்த மீறல்கள் தொடர்பாக இக்கட்டுரையில் கொடுக்கப்பட்ட புள்ளிவிபரத் தரவுகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் இணையத்தளத்திலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

மீறல்கள் தொடர்பான பிரச்சினைகளை ஆராயும்போது எழும் பிரச்சினை என்னவெனில், கட்டளை எதுவும் கொடுக்காமல் மீறல்களைக் கண்காணிப்பதும் உண்மை நிலையை அறிவதுமாகும். இது உள்ளூரவுள்ள ஒரு பிரச்சினையாகும். குற்றவாளிகள் எவரென இனம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


காண முடியாத மீறல்களின் உண்மைநிலையைக் கண்டறியும்போதே இத்தகைய பிரச்சினை ஏற்படுகிறது.

### 2002–2005இல் இடம்பெற்ற யுத்தநிறுத்த மீறல்கள்


2002 முதல் 2005 நவம்பர் வரை 3560 மீறல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 3424 (96%) புலிகளாலும் 153 (4%) அரசாங்கத்தாலும் செய்யப் பட்டுள்ளன. உறுப்புரை 1 தொடர்பாக 144 (4%) மீறல்களும் உறுப்புரை 2 தொடர்பாக 3367 (95%) மீறல்களும் உறுப்புரை 3 தொடர்பாக 23 (1%) மீறல்களும் இடம்பெற்றுள்ளன. உறுப்புரை 3.10 தொடர்பான மீறல்கள் கண்காணிப்புக் குழுவின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் மீறல்களாகும்.

மீறல்களின் மொத்த எண்ணிக்கையும் நிலுவையிலுள்ள சம்பவங் களையும் வரைபடம் 1 அ, ஆ காட்டுகிறது

வரைபடம் 1அ. யுத்தநிறுத்த உடன்படிக்கையுடன் சம்பந்தப்பட்டவர்களால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மீறல்களின் மொத்த எண்ணிக்கை 2002 – நவம்பர் 2005.





வரைபடம் 1ஆ - மொத்த எண்ணிக்கையான வன்முறைகளும் பூர்த்தியடைந்த முறைப்பாடுகளும், 2002 - நவம்பர் 2005






படம் 1.0ஆ - மொத்த எண்ணிக்கையான வன்முறைகளும் பூர்த்தியடைந்த முறைப்பாடுகளும் 2002 - நவம்பர் 2005




2002 மே முதல் 2003 அக்டோபர் வரையான காலப்பகுதியில் அதிக மீறல்கள் இடம்பெற்றன. அவற்றில் பெரும்பாலானவை கிழக்கு மாகாணத்திலேயே குறிப்பாக மட்டக்களப்பிலே இடம்பெற்றன.

தரப்பினரால் செய்யப்பட்ட மீறல்களை வரைபடம் 1அ எடுத்துக் காட்டுகிறது.

### உறுப்புரை 1 தொடர்பான மீறல்கள்

முதலாவது உறுப்புரை தொடர்பாக 144 மீறல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 82% புலிகளாலும் 18% அரசாங்கத்தாலும் செய்யப்பட்டுள்ளன. எனினும் தரப்பினருக்கிடையில் நேரடி மோதல்கள் இடம்பெறவில்லை.


**இராணுவ நடவடிக்கைகள்.** உறுப்புரை 1.2 அதாவது இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்பாக 50 மீறல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 44 மீறல்கள் விடுதலைப்புலிகளாலும் 6 அரசாங்கத்தாலும் செய்யப்பட்டுள்ளன. அதாவது 88% புலிகளாலும் 12% அரசாங்கத்தாலும் செய்யப்பட்டுள்ளன. கடந்த 4 வருடங்களில் இடம்பெற்ற மீறல் களுடன் பார்க்கையில் இவை குறைந்தளவே. துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளல், ஆயுதப்படைகளைச் சேர்ந்தவர்களை அல்லது அவர் களுடன் சம்பந்தப்பட்டவர்களைக் கடத்துதல், கடல்ரீதியான ஆயுத நடவடிக்கைகள், சட்டவிரோதமாக ஆயுதங்களை கொண்டுசெல்லுதல் மற்றும் இராணுவத்தினரின் கடற்படையினரின் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் தாக்குதல்கள் என்பனவற்றை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவானது இராணுவ நடவடிக்கைகள் என்ற வகுதிக்குள் உள்ளடக்குகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படம் 1இ - உறுப்புரிமை 1இன் மீறல்கள் - யுத்த நிறுத்த உடன்படிக்கையின் இணக்கப்பாடுகள், 2002 - நவம்பர் 2005




எனினும் முதலாவது உறுப்புரை தொடர்பான கொலைகள் கண்காணிப்புக் குழுவால் இரண்டாவது உறுப்புரையின் கீழ்ப் பட்டியல் இடப்பட்டுள்ளன. மொத்தமாக 138 கொலைகள் பதிவாகியுள்ளன. இதில் 14 யுத்தநிறுத்த மீறல்களெனத் தீர்க்கப்பட்டுள்ளது. இவை புலிகளால் செய்யப்பட்டவையாகும். மற்றைய 124 சம்பவங்கள் தொடர்பாக உண்மையைக் கண்டறிவதிலுள்ள சிக்கல்கள் காரணமாக எவ்வித தீர்ப்புகளும் வழங்கப்படவில்லை. இவற்றை மனத்தில் கொண்டே யுத்தநிறுத்த உடன்படிக்கையின் ஸ்திரத்தன்மை தொடர்பில் உறுப்புரை 1.2 தொடர்பான மீறல்கள் எவ்வளவு தூரம் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதை நோக்க வேண்டும். பெரும்பாலான கொலை களில் இறந்தவர்கள் புலிகளோ அல்லது படையினரோ அல்ல. ஆகையால் கொல்லப்படுபவர்கள் தரப்பினரைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் யுத்தம் தொடங்குவதற்கான ஆபத்து அவ்வளவு பெரிய தாகக் காணப்படவில்லை. எல்டிடிஈயின் திருகோணமலை கடற்புலிகள் உயர்மட்ட உறுப்பினரான டிக்கான் என்பவரின் கொலையின் பின்னர் பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் மீதான இனம்தெரியாத தாக்குதல்கள் அதிகரித்தன.

**படைகளின் மீறல்களை வேறுபடுத்தல்.** படைகளை வேறுபடுத்தல் தொடர்பாக 70 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 61 புலி களால் செய்யப்பட்டவை. இவற்றில் பெரும்பாலானவை 2002–2003 காலப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. இதற்கு தரப்பினரின் எல்லை



நிர்ணயிக்கப்பட்ட, அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் அவ்வெல்லைகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்காமையும், புலிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் புதிய அந்தஸ்துக்கு தரப்பினர் தம்மைப் பழக்கப்படுத்திக்கொள்வதே காரணமாகும். அரசாங்கத் தரப்பில் ஆத்திரமும் குழப்பமும் புலிகளின் தரப்பில் உணர்ச்சி வசப்பட்ட நிலையும் காணப்பட்டிருக்கலாம். இந்தப் படைகளின் மீறல்களை வேறுபடுத்தலானது 2002–2004 மார்ச் வரையிலான காலப் பகுதியில் இடம்பெற்றது.

இதுபோன்று பிரபல்யமான சம்பவமொன்று திருகோணமலையில் இடம்பெற்றது. இங்குக் குரங்குபாஞ்சான் எனும் இடத்தில் புலிகள் முகாம் ஒன்றை அமைத்தனர். இது அரசக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்திருப்பதாகக் கண்காணிப்புக் குழுவால் கண்டுபிடிக்கப்பட்ட போதும் புலிகள் அதை மாற்றியமைப்பதற்கு மறுத்தனர். நெடுந்தீவி லுள்ள முகாமைப் படையினர் மாற்றியமைக்க முன்வந்தால் தாமும் அம்முகாமை மாற்றியமைப்பதாகப் புலிகள் கூறினர். இது பெரிதும் சர்ச்சையைக் கிளப்பியதுடன் யுத்தநிறுத்தத்தை எதிர்ப்பவர்களால் தொடர்ந்தும் பூதாகரமாக்கப்பட்டது.

**சுதந்திரமான நடமாட்டம் தொடர்பான மீறல்கள்.** முதல் உறுப்புரையின் கீழ்ச் சுதந்திரமான நடமாட்டம் தொடர்பாக 24 மீறல்கள் இடம் பெற்றுள்ளன. இதில் 13 மீறல்கள் புலிகளாலும் 11 மீறல்கள் அரசாங்கத் தாலும் செய்யப்பட்டுள்ளன. மன்னாரிலுள்ள அரசக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் புலிகளின் மூத்த அரசியல்தலைவரான புலித்தேவன் உட்பட 5 புலி உறுப்பினர்களைப் பிரவேசிப்பதற்கு அனுமதிப்பதில் தாமதம் ஏற்பட்ட தால் 2002ஆம் ஆண்டு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். உயிலங்குளம் காவலர் அணிலிருந்த அதிகாரிகளுக்கும் கண்காணிப்புக் குழுவுக்குமிடையே தவறுதலான ஒரு தொடர்பாடல் காரணமாகவே இது நிகழ்ந்தது. இவற்றில் சில மீறல்கள் உடல்ரீதியான தாக்குதல்களையும் உள்ளடக்கு கின்றன. மானிப்பாயில் பெண் புலிப்போராளிகள் அரசக் கட்டுப் பாட்டினுள் செல்லும்போது தமது இடுப்புப்பட்டியைக் கழற்ற மறுத்தமையால் படையினரின் தாக்குதலுக்குள்ளாகிக் காயமடைந்தமை இங்குக் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய முக்கியச் சம்பவமாகும். எனினும் அவ்வாறு இடுப்புப்பட்டி கட்டியது யுத்தநிறுத்த மீறல் அல்ல எனக் கண்காணிப்புக்குழு பின்னர் அறிவித்தது.

**தமிழ்த் துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்களைக் களைதல்**

உறுப்புரை 1.8 ஆனது ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதிலிருந்தே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்ச்சைக்குரியதாகவே இருந்துவருகிறது. ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டவுடனேயே அதாவது ஜூன் மாதம் யாழ்ப்பாணத்தில் ஊர்காவல் துறையில் ஈழமக்கள் ஜனநாயக் கட்சிக்கெதிராக (ஈபிடிபி) பெரிய கூட்ட மொன்று நடத்தப்பட்டது. ஈபிடிபியினர் கடற்படையினரின் உதவி யுடன் யாழ்குடா நாட்டிலுள்ள அரசியல்துறைப் போராளிகளைத் தாக்குவதாக இங்குக் குற்றஞ்சாட்டப்பட்டது. இவ்வாறான முறைப்பாடு நெடுந்தீவிலிருந்தும் கிடைத்தது. இச்சம்பவங்களைத் தொடர்ந்து உடனடியாகத் தமிழ்த் துணை இராணுவக் குழுக்களிடமிருந்து ஆயுதங் களைக் களையுமாறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அப்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திடம் கோரியது. இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் இராணுவச் சீருடைகளையும் ஆயுதங் களையுமே பயன்படுத்துவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அண்மையில் வெளியிடப்பட்ட கண்காணிப்புக் குழுவின் பத்திரிகை அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

> 'அரசக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மாற்று ஆயுதக்குழுக்கள் சுதந்திரமாக நடமாடுவதே இத்தகைய சூழ்நிலைக்குக் காரணமாகும். இவை யுத்த நிறுத்தத்தைப் பலவீனப்படுத்தியுள்ளதுடன் அதிகரித்து வரும் பதற்றமான சூழ்நிலைக்கும் காரணமாகும்'[3]

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ராசிக்குழு போன்ற துணை இராணுவக் குழுக்களை மட்டக்களப்பிலே கண்காணிப்புக்குழு நேரடி யாகவே கண்டுள்ளது.

### உறுப்புரை 2 தொடர்பான மீறல்கள்


இரண்டாம் உறுப்புரை தொடர்பான மீறல்கள் 1இ என்ற படத்தில் காட்டப்பட்டுள்ளது. 3367 மீறல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 97% புலிகளாலும் 3% அரசாங்கத்தாலும் புரியப்பட்டுள்ளது. 1.0 என்ற வரைபடம் இரண்டாவது உறுப்புரைத் தொடர்பான மீறல்களின் வீழ்ச்சி யைக் காட்டுகிறது.

**சிறுவர்களை படைக்குச் சேர்த்தல்.** சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தலே கண்காணிப்புக் குழுவின் புள்ளிவிபரத் தகவலின்படி அடிக்கடி இடம் பெற்ற யுத்தநிறுத்த மீறலாகும். இவை மொத்தம் 3424 ஆகும். இவற்றில் 1789 மீறல்கள் (55%) விடுதலைப்புலிகளினால் செய்யப்பட்டவை. இம்மீறல்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலுமே இடம்பெற்றிருப்பதுடன் இதில் யாழ்ப்பாணம் முன்னிலை வகிக்கிறது.

3. 'இலங்கையில் யுத்தநிறுத்தம் இன்னும் கடைப்பிடிக்கப்படுகிறதா? இயுககு கேள்விகள்', பத்திரிக்கை குறிப்பு, காண்க www.slmm.ik (2005).



படம் 1.0ஈ - புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆட்கடத்தல்கள் மற்றும் சிறுவர்களை படையில் சேர்த்தல், 2002 – நவம்பர் 2005




2002–2005 காலப்பகுதியில் இடம்பெற்ற சிறுவர்களைப் படைக்குச் சேர்ப்பது தொடர்பான விபரங்களை 1.0ஈ வரைபடம் எடுத்துக் காட்டுகிறது. 2002இல் இவ்வகையான 677 மீறல்கள் இடம்பெற்றுள்ளன. இதுவே கடந்த 4 வருடங்களில் பதிவுசெய்யப்பட்டதில் அதிகூடிய எண்ணிக்கையாகும். யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறல்கள் தொடர்பாக 2002ஆம் ஆண்டு கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ரெயிட்டர் டோக்கெல்சன் கூறினார்: 'சிறுவர்களைப் படைக்கு ஆட்சேர்ப்பது தொடர்பாக அன்றாடம் ஆகக்குறைந்தது இரண்டு முறைப்பாடுகளாவது கிடைக்கப்பெறுகின்றன. இதுவே பெரும்பாலும் பொதுவான ஒரு முறைப்பாடாகும். மட்டக்களப்பு, அம்பாறை போன்ற கிழக்கு மாகாணத்திலேயே விடுதலைப்புலிகளுடன் இணையுமாறு சிறுவர்கள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்'.[4]

அதேவேளை கடத்தப்பட்ட சிறுவர்களை விடுவிக்குமாறு 2003ஆம் ஆண்டு வாழைச்சேனையில் சுமார் 250 பெற்றோரும் மாணவரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இச்சிறுவர்கள் சுயமாகவே தம்முடன் இணைந்ததாகப் புலிகள் கூறினர். எனினும் சிறுவர்கள் சுயமாகவே இணைந்தாலும்கூடப் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் புனர் வாழ்வு தொடர்பான ஒப்பந்தத்தை விடுதலைப்புலிகள் மீறினர். இந்த ஒப்பந்தத்திலே தாம் சிறுவர்களைப் படைக்குச் சேர்ப்பதில்லை எனப் புலிகள் உடன்பட்டிருந்தனர். இந்த ஒப்பந்தமானது யூனிசெஃப்பின் அனுசரணையில் 2003 ஜூன் மாதம் அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும்

4. சிமாலி செனநாயக, ஸ்ரீலங்கன்ஸ் தமிழ் ரிபெல்ஸ் அக்யூஸ்ட் ஆஃப் ரெக்ரியூட்டிங் சில்ரன் அஸ் சொல்ஜர்ஸ் அமிஸ்ட் டிரூஸ் (ஆங்), மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள், யாழ்ப்பாணம், 2003)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடையில் கையெழுத்திடப்பட்டது.[5] சிறுவர்களைப் படையில் சேர்ப்பதோ அல்லது யுத்தத்தில் பயன்படுத்துவதோ சர்வதேசச் சட்டப்படி குற்றமாகும்.

2004இல் சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கும் தொகை கணிசமாகக் குறைவடைந்தது. இது புலிகளால் செய்யப்படும் யுத்தநிறுத்த மீறல்களின் தொகையின் எண்ணிக்கையைப் பெரிதும் குறைத்தது. இந்த வீழ்ச்சியானது கருணா பிரிவின் வெளியேற்றத்துடன் திடீரென 2005 நவம்பர் இறுதிப் பகுதியில் மேலும் 173ஆகக் குறைவடைந்தது.

**துன்புறுத்தல்கள்.** 2005ஆம் ஆண்டைத்தவிர மற்றைய காலப்பகுதிகளில் துன்புறுத்தல்கள் தொடர்பான யுத்தநிறுத்த மீறல்கள் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தன. 2005 நவம்பர் இறுதிக் காலப்பகுதியில் இது தொடர்பான 304 மீறல்கள் இடம்பெற்றிருந்தன. இவற்றில் 20% அரசாங்கத்தாலும் 80% புலிகளாலும் செய்யப்பட்டிருந்தன. இரண்டாம் உறுப்புரை தொடர்பான மீறல்கள் அதுதொடர்பான அரசாங்க மீறல்களில் துன்புறுத்தல்கள் தொடர்பானவையே முக்கியம் பெற்றிருந்தன. அரசாங்கத்தால் செய்யப்பட்ட இரண்டாம் உறுப்புரை தொடர்பான மீறல்களில் 52% துன்புறுத்தல்களாகும்.

திருகோணமலையிலுள்ள ஈச்சிலம்பற்று எனும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள மக்கள் மஹிந்தபுரவிலுள்ள அரசப் படைகளின் காவலரண்களைக் கடக்கும்போது உடற்சோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் சரமாரியான கேள்விகளுக்கும் உட்படுத்தப்படுவதாகவும், இது ஒரு யுத்தநிறுத்த மீறல் எனவும் 2002 மார்ச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் கூறினார். கடற்படையினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் யாழ்குடா நாட்டை அண்டியுள்ள தீவுகளிலும் பதற்றம் தோன்றியது. இவ்வகையான முறைப்பாடுகள் பெரும்பாலும் காரைநகர்ப் பிரதேசத்திலே நடைபெற்றன. இங்குள்ள அகதிகளை இரவுவேளைகளில் வெளியே சென்றுவிட்டுப் பகல்வேளைகளில் வருமாறு கடற்படையினர் கட்டாயப்படுத்தியதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவம் ஒன்று 2002 மே மாதம் இடம்பெற்றது. கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு போன்ற மக்கள் குடியிருப்புப் பிரதேசங்களின் மேலாக ஆளில்லா உளவு விமானங்களை பறக்கவிட்டதாக விமானப்படை மீது குற்றம்சாட்டப்பட்டது. இத்தகைய செயல்பாடு மக்கள் மத்தியில் பெரும்பயத்தையும் அச்சத்தையும்

5. அன்டர்ஏஜ் சைல்டு ரெக்ரீயூட்மென்ட் ஆன் த இன்க்ரீஸ் (ஆங்), மனித உரிமைக் கழகம், பத்திரிக்கை குறிப்பு, ஆகஸ்ட், 2005.



ஏற்படுத்தியதாகக் கூறப்பட்டது. ஏனெனில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்னரான காலப் பகுதியில் இத்தகைய சம்பவம் நடைபெற்றால் அதன்பின் விமானக் குண்டுவீச்சு இடம்பெறுவது வழமை. 2002 மற்றும் 2003 காலப்பகுதியில் முஸ்லிம்களைத் துன்புறுத்தியதாக புலிகள்மீது குற்றம் சாட்டப்பட்டது. யுத்தநிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டபின் திருகோணமலையிலுள்ள வாழைச்சேனைப் பிரதேசத்திலும் முஸ்லிம்களிடத்தும் இருந்து பலாத்காரமாகப் பணம் மற்றும் பொருட்கள் பறித்ததாகப் புலிகள்மீது முறைப்பாடு செய்யப்பட்டது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் ஆரம்பகாலப் பகுதியில் மட்டக்களப்பிலுள்ள மீனவர்களையும் புலிகள் துன்புறுத்தியதாக அறிக்கைகள் கிடைத்தன.

ஜூன் நடுப்பகுதியில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான உறவுமுறை மோசடைந்தது. வாழைச்சேனையிலுள்ள தமிழ் மக்கள் முஸ்லிம் கடைகளில் இருந்து எப்பொருட்களையும் வாங்கக்கூடாது எனப் புலிகள் எச்சரித்ததாகக் கூறப்படுகின்றது. வடக்கு-கிழக்கு முஸ்லிம் சமாதானசபை (என்ஈஎம்பிஏ) விடுதலைப்புலிகளுடன் ஒப்பந்தங்கள் செய்துகொண்டதையடுத்து கிழக்குமாகாணத்திலே தமிழ்-முஸ்லிம் உறவு கணிசமாக முன்னேறியது. இவ்வாறு முதலில் செப்டம்பர் மாதம் மட்டக்களப்பிலும் டிசம்பர் மாதம் திருகோணமலையிலும் செய்யப்பட்டது. இவ்வொப்பந்தங்கள் சகவாழ்விற்கான நிலையத்தின் (எஃப்சிஈ) அனுசரணையுடன் இடம்பெற்றன.

அதேவேளை புலிகளுக்கு எதிரான தமிழ் அரசியல் கட்சிகளுக்கு எதிரான துன்புறுத்தல்கள் யுத்தநிறுத்த ஒப்பந்த காலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டது. ஈபிடிபி மற்றும் புளொட் ஆகியவற்றின் உறுப்பினர்கள் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டதுடன் அவர்களின் அலுவலகங்களும் தாக்கப்பட்டன. யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட பின்னர் வடமராட்சி தென்மேற்குப் பிரதேசச் சபையின் ஈபிடிபி அலுவலகம் புலிகளால் தாக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட புலிகளிற்கு எதிரான தமிழ்ப் பத்திரிகைகளும் புலிகளால் தடைசெய்யப்பட்டன.

**வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள் மற்றும் பொதுக்கட்டிடங்களில் இருந்து படைகளை வெளியேற்றுதல்.** யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு 160 நாட்களின் பின்னர் வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் படைகள் நிலைகொண்டிருத்தல் யுத்தநிறுத்த மீறல்களாகும். இது தொடர்பாகக் கண்காணிப்புக்குழு தீர்ப்புக்கூறும்போது எழும் முக்கியப் பிரச்சினை என்னவெனில் இவ்வாறான பல பொது இடங்கள் ஆக்கிர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிக்கப்பட்டுள்ளமையாகும். தொடர்ச்சியான ஆக்கிரமிப்பு இங்குக் கருத்திலெடுக்கப்படாமல் விடப்படுகிறது. இவ்வாறு ஆக்கிரமிப்புச் செய்யப்படுகின்ற ஒவ்வொரு தினமும் மீறல்களாகக் கொள்ளப்பட முடியுமா என்ற கேள்வியும் இங்கு எழுகிறது.

### உறுப்புரை 3 தொடர்பான மீறல்கள்

யுத்தநிறுத்த மீறல்கள் தொடர்பாக மீளாய்வுசெய்கின்றபோது 3.10 உறுப்புரை தொடர்பான மீறல்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டன. அதாவது 23 மீறல்களே இடம்பெற்றுள்ளன. இவை கண்காணிப்புக் குழுவின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துபவை தொடர்பானவை யாகும். அதாவது யுத்தநிறுத்த மீறல்கள் இடம்பெற்ற இடங்களைக் கண்காணிக்கச் செல்லும் கண்காணிப்பாளர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதாகும். இவ்வாறான 22 மீறல்கள் புலிகளாலும் 1 மீறல் அரசாங்கத்தாலும் செய்யப்பட்டுள்ளது.


### அரசியல் மற்றும் ஏனைய கொலைகள்

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதிலிருந்து 2005 இறுதிக் காலப்பகுதிவரை 612 கொலைகள் இடம்பெற்றுள்ளன. இது மாதத் திற்கு 13 கொலைகள் என்ற ரீதியில் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 470 கொலைகள் கிழக்கு மாகாணத்திலும் 336 கொலைகள் மட்டக்களப்பிலும் இடம்பெற்றுள்ளன. ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதிலிருந்து இடம் பெற்ற அரசியல் கொலைகள் தொடர்பான விபரம் 1.0ஈ படத்தில் காட்டப்பட்டுள்ளது. இவ்வரைபடம் 2004 மார்ச் முதல் 2005 டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் இக்கொலைகள் கணிசமான அளவு அதிகரித்துக் காணப்பட்டதைக் காட்டுகிறது.

2002 பிப்ரவரி முதல் 2004 மார்ச் வரையான காலப்பகுதியையும் 2004 மார்ச் முதல் 2005 டிசம்பர் வரையிலான காலப்பகுதியையும் ஒப்பிடுகை யில் 2004 மார்ச் முதல் 2005 டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் கொலைகள் இருமடங்காக அதிகரித்துள்ளன.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதிலிருந்து இடம்பெற்ற கொலைகளை எடுத்துப் பார்த்தால் விடுதலைப்புலிகளால் செய்யப்பட்ட தாகக் கூறப்படும் இராணுவம் மற்றும் பொலிஸாரின் தொகையே முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இவ்வாறான கொலைகள் 2006 தை இறுதியில் 108 ஆகக் காணப்பட்டன. இராணுவ மற்றும் பொலிஸாரைச் சேர்ந்த தகவல் கொடுப்பவர்கள் மற்றும் உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் 67பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் இரு இராணுவ உளவுப்பிரிவைச் சேர்ந்த உயர்அதிகாரிகளும் அடங்குவர். ஒப்பந்தம் கையெழுத்திடப்






படம் 1.0. யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னரான வடக்கு - கிழக்கில் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்ட அரசியல் படுகொலைகள்

குறிப்பு: அரசியல் கொலைகள் என்று இந்த வரைபடமானது தலைப்பிடப்பட்டிருந்தாலும், 2003 மார்ச் - செப்டம்பரில் ஏற்பட்ட அதிகரிப்பானது பிரதானமாக சிவில் கலகம் காரணமானதே ஆகும். அதே சமயம், ஏப்ரல் 2004இல் ஏற்பட்ட அதிகரிப்பானது புலிகள் – கருணா மோதல் காலத்தில் இடம்பெற்ற கொலைகளைக் காட்டவில்லை. யுத்தம் காரணமான இறப்பு 300 வரை இடம்பெற்றிருக்கலாம். பின்னோக்கிய கோடானது மாறுதல் காரணமாகத் திட்டமிடப்பட்ட மேல்நோக்கிய போக்கைக் காட்டுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டதிலிருந்து இன்றுவரை இக்கொலைகள் தொடர்கின்றன. இவை வடக்கு-கிழக்கில் மட்டுமல்லாது தெற்கிலும் இடம்பெற்றன.

இரண்டாம் முக்கிய விடயம் 2002–2006 காலப்பகுதியில் இடம் பெற்ற பொதுமக்களின் கொலைகளாகும். இவற்றில் கொல்லப்பட்ட பலரது கொலைகளுக்குரிய காரணம் பொதுமக்களுக்குத் தெரியாது. கொல்லப்பட்ட மொத்தப் பொதுமக்களின் தொகை 264 ஆகும். இதில் பெரும்பான்மையாகத் தமிழரே அடங்குவர்.

### 2002 காலப்பகுதியில் இடம்பெற்ற கொலைகள்

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட 2002ஆம் ஆண்டிலிருந்து கொலைகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துள்ளது என்பது தெள்ளத் தெளிவாகும். எனினும் 2000ஆம் ஆண்டு 29 கொலைகளே இடம்பெற்றன. இது மாதத்திற்கு 2 என்ற சராசரியில் காணப்பட்டது. திருகோணமலையிலேயே அதிகமான கொலைகள் இடம்பெற்றன.

இக்கொலைகளை வகைப்படுத்தும்போது பின்வரும் அம்சங்கள் நாம் இனங்காணக்கூடியவையாக இருக்கின்றன.

- இராணுவத் தகவல்களை வழங்குபவர்கள் மற்றும் தமிழ் அரசியல் எதிரிகள்மீதான விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கொலைகள்.
- தமிழ் முஸ்லிம் மோதல்களால் பொதுமக்கள் கொல்லப்படுதல்.
- கடற்படையினரால் திருகோணமலைக் கடற்பரப்பில் மேற்கொள்ளப் பட்ட தாக்குதல்கள்.
- விசேட அதிரடிப்படை மற்றும் பொலிஸசாருடன் ஏற்பட்ட இரு மோதல்களால் திருகோணமலையில் தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டது.

இராணுவம் மற்றும் பொலிஸாருடன் இணைந்து செயல்படும் தகவல்கள் வழங்கும் பொதுமக்கள்மீது புலிகளால் செய்யப்படுவதாகக் கூறப்படும் கொலைகள் 2002இல் தொடர்ந்து காணப்பட்டன. இக்காலப் பகுதியில் இரு கொலைகள் இடம்பெற்றதாகப் பதிவு செய்யப் பட்டுள்ளது. முதல் கொலை திருகோணமலையிலுள்ள சம்பூரிலும் இரண்டாம் கொலை கொழும்பிலுள்ள பம்பலபிட்டியிலும் இடம் பெற்றன. இந்த ஆண்டிலேயே அரசப்படைகளுக்கும் பொதுமக்களுக்கு மிடையில் மோதல்கள் இடம்பெற்றதுடன் பொதுமக்கள் பலரும் கொல்லப்பட்டனர். திருகோணமலைக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் முஸ்லிம் மீனவர்கள் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் கொல்லப்பட்டனர். ஆண்டின் இறுதிப் பகுதியில்



அம்பாறையிலுள்ள காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படை முகாமுக்குள் புக முயன்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள்மீது விசேட அதிரடிப்படையினர் தாக்குதல் நடத்திய சம்பவமும் இடம்பெற்றது. இச்சம்பவத்தைத் தொடர்ந்து 2002ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் திருகோணமலையில் அம்பாறைச் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகப் பொதுமக்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணிமீதான கிரனைட் மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இலங்கைப் பொலிஸாரும் துணை இராணுவக் குழுக்களுமே இத்தாக்குதலை நடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டது. இதனால் திருகோணமலையில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

### 2003 காலப்பகுதியில் ஏற்பட்ட கொலைகள்

முந்தையதிலும்விட 2003–2004 காலப்பகுதியில் கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டது. மொத்தமாக 119 கொலைகள் இடம்பெற்றன. இது மாதத்திற்கு ஒன்பது பேர் என்ற சராசரியே காணப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 4 மடங்கு அதிகரித்துக் காணப்பட்டது.

2003 மே இறுதிப்பகுதியில் காணப்பட்ட கொலைகள் தொடர்பான முக்கிய அம்சங்கள்:

- இலங்கை இராணுவம் மற்றும் பொலிசைச் சேர்ந்த உளவுப் பிரிவினர் மற்றும் தகவல் வழங்கும் பொதுமக்களின் கொலைகள்.
- வரதன் அணி மற்றும் டெலோ போன்ற புலி எதிர்பானவர்கள் மீதான கொலைகள்.
- தமிழ்–முஸ்லிம் பதற்றத்தினால் ஏற்பட்ட கொலைகள்.

படையினருக்குத் தகவல்களை வழங்குபவர்மீதான புலிகளால் செய்யப்பட்ட கொலைகள் 2002–2003 காலப்பகுதியில் தொடர்ந்து காணப்பட்டாலும் 2003இல் பெருமளவு அதிகரித்தன. இராணுவம் மற்றும் பொலிஸைச் சேர்ந்த உளவுப் பிரிவினர் அவர்களுக்குத் தகவல் வழங்கும் பொதுமக்கள் 15 பேர் இக்காலப்பகுதியில் கொல்லப் பட்டனர். இராணுவ புலனாய்வுப் பிரிவிற்குத் தகவல் வழங்குபவரென நம்பப்பட்ட துணைப்படை ஒன்றைச் சேர்ந்த வரதன் என்பவரது கொலையுடனேயே இக்கொலை நடவடிக்கைகள் ஆரம்பமாயின. இதனைத் தொடர்ந்து வரதன் அணியைச் சேர்ந்த பலர் மட்டக்களப்பில் கொல்லப்பட்டனர். அதேவேளை ஈபிடிபி உறுப்பினர்களும் பெரும் பாலும் மட்டக்களப்பிலே கொல்லப்பட்டனர். படையினர் தகவல்கள் வழங்குபவர்கள்மீதான கொலைகள், கிழக்கு மாகாணத்துடன் மட்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நின்றுவிடவில்லை. அவை வவுனியா போன்ற வடமாகாணத்திலும் தெகிவளை போன்ற மேல்மாகாணத்திலும் இடம்பெற்றன.

இன்னுமொரு முக்கியச் சம்பவம் திருகோணமலையில் இடம்பெற்றது. 2003 ஏப்ரலில் இரு முஸ்லிம் இளைஞர்கள் புலிகளால் கடத்தப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டை அடுத்துத் தமிழ்–முஸ்லிம் மக்களிடையே கலவரம் ஏற்பட்டது. இதில் பலர் கொல்லப்பட்டனர். 2003 ஆகஸ்டில் சர்வதேச மன்னிப்பு சபையானது விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் இந்த நாட்டிலே ஒரு நிலையான சமாதானம் ஏற்படுத்தப்படுவதைச் சீர்குலைப்பதாகப் புலிகளுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தது. ஆசிய பசுபிக் நிகழ்ச்சி திட்டத்திற்கான இடைக்காலப் பணிப்பாளர் இங்ரிட் மசாஜ் அவர்களால் கையெழுத்திடப்பட்டுப் புலிகளிற்கு அனுப்பப்பட்டிருந்த கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டிருந்தது:

> அரசியல் படுகொலைகள், கடத்தல்கள், மனித உரிமைமீறல்கள் என்பன மனித உரிமைத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட நிருவாகமுறை ஒன்றை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைக் கடுமையாக பாதிக்கின்றன. ஏற்கெனவே பல வருடகாலமாக மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்களின் மத்தியில் பயத்தையும் பாதுகாப்பற்ற சூழலையும் ஏற்படுத்தியது.[6]

இவ்வாறான கொலைகள் அடுத்த வருடமும் தொடர்ந்து இடம் பெற்றன. கிழக்கு மாகாணத்தில் இது அதிகளவு இடம்பெற்றது. வடக்கு–கிழக்கு முஸ்லிம் சமாதானச் சபைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே இரு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதைத் தொடர்ந்து இந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் தமிழ்–முஸ்லிம் கலகங்களால் ஏற்படும் கொலைகள் குறைவடைந்திருந்தன. இவ்விரு ஒப்பந்தங்களில் ஒன்று திருகோணமலையிலும் மற்றையது மட்டக்களப்பிலும் செய்யப் பட்டன. இவை இருதரப்பினருக்குமிடையில் தொடர்புகளை வலுப் படுத்திக்கொள்வதற்கு உதவியதுடன் இருதரப்பினரின் நலன்களைத் திருப்திசெய்யக்கூடிய தீர்வுகளைக் காணுவதுடன் சீர்குலைப்பு நடவடிக்கையில் ஈடுபடும் தீயசக்திகளைத் தடுப்பதற்கும் உதவின.

## 2004 காலப்பகுதியில் இடம்பெற்ற கொலைகள்

2004ஆம் ஆண்டு யுத்தநிறுத்த உடன்படிக்கையின் 3ஆம் வருடமாகும். இந்தாண்டு கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டது. மொத்தமாக 196 கொலைகள் இடம்பெற்றன. இது மாதத்திற்கு 11 கொலைகள் என்ற சராசரியில் காணப்பட்டது.

6. சுலோக்சனா பீரிஸ், மனிதப் பாதுகாப்புச் சூழல் அறிக்கை தகவல் மையம், சகவாழ்வு மன்றம், 2003, பக். 14.



இந்த ஆண்டு இடம்பெற்ற கொலைகளின் முக்கிய அம்சங்கள்:

- கருணா குழுவின் தோற்றமும் அதனால் ஏற்பட்ட கொலைகளும்.
- தேர்தல் தொடர்பான கொலைகள்.
- காரணம் எதுவும் தெரியாத நிலையில் செய்யப்பட்ட கொலைகள்.
- 2004 மார்ச்சில் இடம் பெற்ற கருணா தொடர்பான பிரச்சினையை அடுத்து கிழக்கு மாகாணம் கொலைக்களமாக மாறியது. மட்டக் களப்பு மாவட்டத்தில் இருந்து பெருமளவான சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டன.

2004 ஏப்ரலில் கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக வெலிக்கந்த பிரதேசத்தில், கருணாவின் குழுவை ஒழிக்கும் நோக்குடன் விடுதலைப் புலிகளினால் ஒரு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது ஒரு உள்வீட்டுப் பிரச்சினை என்று கூறிய புலிகள் இதில் 3ஆம் தரப்பின் தலையீடு இருப்பதை விரும்பவில்லை. இந்நடவடிக்கையின் போது கருணாவின் சகோதரரான ரெஜி எனப்படும் சிவனேசத்துரை வெலிக்கந்தயில் கொல்லப்பட்டார். அதேவேளை கொழும்பிலுள்ள கொட்டாவை எனும் இடத்தில் கருணாவின் சகாக்கள் நித்திரையில் இருந்தபொழுது சுட்டுக்கொல்லப்பட்டனர். இதனால் இப்பிரச்சினை யின் தாக்கம் கொழும்புவரை சென்றது. கருணா குழுவை ஒழிக்கும் நடவடிக்கையில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டிருந்த அதேவேளை விடுதலைப்புலிகளின் உயர்மட்டத் தலைவர்களும் கருணா குழுவால் இலக்குவைக்கப்பட்டனர். இதில் முதலாவதாக இலக்குவைக்கப் பட்டவர் மட்டக்களப்பு ஆரயம்பதியைச் சேர்ந்த கேணல் நீலன் ஆகும்.

அதைத் தொடர்ந்து புலிகளின் அரசியல்துறைத் தலைவர் வாசு, சேனாதிராசா மற்றும் புலிகளின் பிராந்திய நிவாரண மற்றும் புனர் வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் பாபா ஆகியோர் கருணா பிரச்சினை தோன்றியதிலிருந்து 3 மாதத்திற்குள் சுட்டுக்கொல்லப்பட்டனர். கருணா பிரச்சினைக்குப் பின்னர் இடம்பெற்ற கொலைகளில் குற்றவாளிகள் இனங்காணப்படவில்லை. இவர்களை இனங்காண முடியாமையால் உண்மையைக் கண்டறியும் செயல்பாட்டில் பாரிய இடைவெளி தோன்றியதுடன் பலசம்பவங்கள் தொடர்பாகத் தீர்ப்புகள் வழங்கப் படவுமில்லை. இங்குள்ள முக்கியப் பிரச்சினை என்னவென்றால் பிரகடனப்படுத்திய விடயங்களும் மறைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான தெளிவின்மையுமாகும். யுத்தநிறுத்தக் கண்காணிப்பு மற்றும் உண்மை நிலையைக் கண்டறிதல் தொடர்பாகவும் பெரியதொரு பிரச்சினையும் உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொதுமக்கள்மீதான படுகொலையும் முந்தையவற்றிலும் பார்க்க அதிகரித்துக் காணப்பட்டன. கொல்லப்பட்ட பொதுமக்கள் எவ்வித மான தொடர்புகளைக் கொண்டிருந்ததால் கொல்லப்பட்டனர் என்பது தெரியாதபடியால் அவர்களை வேறுவிதமாக வகைப்படுத்த முடிய வில்லை. கிழக்கு மாகாணத்தைக் கட்டுப்பாட்டில் கொண்டுவருவது தொடர்பாகப் புலிகளுக்கும் கருணா குழுவிற்கும் இடையில் இடம் பெற்ற போராட்டம் காரணமாகவே இக்கொலைகள் அதிகரித்தன.

### 2005இல் இடம்பெற்ற கொலைகள்

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பொறுத்தவரையில் 2005ஆம் ஆண்டு ஒரு இக்கட்டான காலப்பகுதியாகும். இவ்வாண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை 345 கொலைகள் இடம்பெற்றன. இது மாதத்திற்கு 9 பேர் என்ற சராசரியில் காணப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது இருமடங்கு அதிகரிப்பாகும். 2004ஆம் ஆண்டைப் போல இவ்வாண்டும் கொலைகள் தொடர்பான முக்கிய அம்சமாகக் காணப்பட்ட விடயம் குற்றவாளிகளை இனம்காண முடியாமையாகும். கொலைகள் போன்ற உறுப்புரை 1.2அ தொடர்பான சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் இவை யுத்தநிறுத்த மீறல்கள் எனக் கண்காணிப்புக் குழுவால் தீர்ப்புக் கூறப்படவில்லை. கண்காணிப்புக் குழுவின் புள்ளிவிபரத் தரவை எடுத்து நோக்கினால் இது புலனாகும். இங்குக் கொலைகள் தொடர்பாக 8 மீறல்களே குறிப்பிடப்பட்டுள்ளன. 2005இல் இடம்பெற்ற கொலை களின் முக்கிய அம்சங்கள்:

- 2005 பிப்ரவரியில் இடம்பெற்ற கௌசல்யனின் கொலையுடன் அதிகரித்த புலிகளின் உயர்மட்டத் தலைவர்களின் கொலைகள்.
- காரணம் தெரியாத வகையில் இடம்பெற்ற பொதுமக்களின் கொலைகள். ஏனைய கொலைகளுடன் ஒப்பிடுகையில் இதுவே அதிகம் காணப்பட்டது.
- பாதுகாப்புப் படைகள் பொலிஸார் மற்றும் ஊர்க்காவல் படை யினரின் அதிகரித்த கொலைகள்.
- வடக்குடன் ஒப்பிடுகையில் கிழக்கு மாகாணமே இக்கட்டான சூழ்நிலையில் காணப்பட்டதுடன் மொத்தம் 274 கொலைகளும் இடம்பெற்றன.
- மாவட்டரீதியில் பார்க்கையில் மட்டக்களப்பிலே அதிகக் கொலைகள் இடம்பெற்றன. 2005ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக இடம்பெற்ற 274 கொலைகளில் 184 கொலைகள் மட்டக்களப்பிலே இடம்பெற்றன.



டிசம்பர் 31, 2005இல் இடம்பெற்ற விடுதலைப்புலிகளின் மட்டக் களப்பு, அம்பாறை அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யனின் கொலையே மார்ச் மாதம் கொலைகள் அதிகரித்தமைக்குத் திருப்பு முனையாக அமைந்தது. இதுவே யுத்தநிறுத்த ஒப்பந்தம் கையெழுத் திடப்பட்ட பிறகு நடந்த கொலைகளில் இரண்டாவதாக அதிகம் இடம்பெற்ற கொலைகளாகும். கௌசல்யனின் கொலைக்குப் பின்னர் மாதத்திற்கு 15 கொலைகள் என்ற தொகையில் வீழ்ச்சி ஏற்படவில்லை.

இலங்கைப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஜெயரத்ணம் 2005 ஏப்ரலில் விடுதலைப்புலிகளால் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. இவர் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராகப் பல செயல்பாடுகளில் ஈடுபட்டமையால் புலிகளின் தாக்குதல் பட்டியலில் நீண்டகாலமாகவே இடம்பெற்றிருந்ததாகக் கூறப்பட்டது. இன்றுவரை அவரது இருப்பிடம் தொடர்பாகவோ அல்லது விடுதலைப்புலிகளின் காவலில் இருக்கிறாரா அல்லது கொல்லப்பட்டுவிட்டாரா என்பது குறித்து எந்தத் தகவலும் இல்லை.

2005 மே மாதத்தில் இன்னுமொரு முக்கியமான கொலைச்சம்பவம் இடம் பெற்றது. இதில் இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரியான மேஜர் முத்தலீஃப் என்பவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இவர் யுத்தநிறுத்தக் காலப்பகுதியில் கொல்லப்பட்ட உயர் இராணுவ அதிகாரிகளில் ஒருவராவார்.

அடுத்த ஜூனில் கிழக்கு மாகாணத்தில் கடந்த காலத்தைவிடக் கொலைகள் திடீரென அதிகரித்தன. இவையும் யுத்தநிறுத்த காலத்தில் இடம்பெற்ற அதிகூடியக் கொலைகளாகும். இவை தொடர்பாக 1.0இ படத்தில் காட்டப்பட்டுள்ளது.

2005 ஜூலையில் திருகோணமலையிலுள்ள செல்வநாயகபுரத்தில் இடம்பெற்ற கடற்புலிகளின் தலைவர் டிக்கானின் கொலையை அடுத்துப் புலிகள் காலக்கெடு ஒன்றை விதித்தனர். அரசக் கட்டுப்பாட்டிலுள்ள தமது போராளிகளுக்கு அரசாங்கம் பாதுகாப்பு வழங்காவிடில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறித் தாம் ஆயுதங்களுடன் அரசக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடமாடப்போவதாகப் புலிகள் தெரிவித்தனர்.

ஆகஸ்ட் மாதத்தில் உள்நாட்டு மற்றும் சர்வதேசரீதியில் பெரும் கண்டனத்துக்குள்ளான முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை இடம்பெற்றது. இது ஐரோப்பிய ஒன்றியமானது தனது அங்கத்துவ நாடுகளில் புலிகள்மீதான பயணத்தடையை விதிக்க வழிகோலியது. இலங்கையிலுள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் போன்ற சிவில் அமைப்புகள் 'இக்கொலையானது கடந்த 3 வருடங்களாக யுத்தநிறுத்தம் கடைப்பிடித்து வந்தமை எதிர்நிலையான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு விளைவை இன்னும் தாண்டவில்லை அல்லது ''யுத்தமும் இல்லை சமாதானமும் இல்லை'' என்பதையே ஞாபகப்படுத்துவதாக' கூறின.[7]

மேற்படி கொலையைத் தொடர்ந்து 2005 அக்டோபர் 10ஆம் தேதி மட்டக்களப்பு வவுணத் தீவுப் பிரதேசத்தில் இன்னுமொரு முக்கியக் கொலை இடம்பெற்றது. இங்குப் புலிகளின் வாகனத் தொடர் அணிமீது இனந்தெரியாதோரால் தாக்குதல் நடத்தப்பட்டது. தமிழ்த் தேசியப்படை எனத் தம்மை இனங்காட்டிக்கொள்ளும் ஒருபடை இதற்கு உரிமை கோரியது. இந்த வாகனத் தொடர் அணியில் புலிகளின் மட்டு அம்பாறை விசேடத் தளபதி கேணல் பானுவும் பயணம் செய்திருந்தார்.

2000ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு இருவாரங்களுக்கு முன்னர் அக்டோபர் 30ஆம் தேதி யாழ்ப்பாணத்தில் ஒரு பட்டதாரி ஆசிரியரும் ஒரு பல்கலைக்கழக மாணவனும் கொல்லப்பட்டனர். எனினும் இக்கொலைகளைப் புரிந்தவர்கள் இனங்காணப்படவில்லை. பின்னர் அக்டோபர் 11ஆம் தேதி கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் நடராசா சிவகடாட்சமும் இதற்குப் பழிவாங்கும் நோக்குடன் 12ஆம் தேதி யாழ் மத்தியக் கல்லூரி அதிபர் கே. இராசதுரையும் இதற்குள் கொலை செய்யப்பட்டனர். தெற்கிலுள்ள சில அரசியல் கட்சிகள் இதை விடுதலைப்புலிகளே செய்தனர் எனக் குற்றம்சாட்டினர். நடராசா சிவகடாட்சம் புலிகளின் உறுப்பினராக இருந்தவர் எனவும் புலிகளுடன் தொடர்புடைய தமிழ் மகளிர் எழுச்சிக் குழுவினருடன் நெருங்கிப் பணியாற்றியவர் எனவும் பின்னர் தெரியவந்தது. கே. இராசதுரை விடுதலைப்புலிகளுக்கு எதிரானவர் எனவும் அவர் பல தடவைகள் புலிகளால் எச்சரிக்கப்பட்டிருந்ததாகவும் தெரியவந்தது.

2005 அக்டோபர் கடைசிப்பகுதியில் அதாவது 29ஆம் தேதி பாதாள உலகத்தைச் சேர்ந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் ஜஸ்மஞ்சு என்பவரால் இலங்கைப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி கேணல் மீடின் கொல்லப் பட்டார். இவர் 2005இல் கொழும்பில் கொல்லப்பட்ட 2ஆம் புலனாய்வுத் துறை உயர் அதிகாரியாவார்.

2005 நவம்பர் மாதம் இலங்கையின் அரசியலைப் பொறுத்தவரையில் முக்கித்துவம் வாய்ந்ததாக அமைந்தது. ஏனெனில் இம்மாதம் 17ஆம் தேதி இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலே அதற்குக் காரணமாகும். தேர்தல் காலப்பகுதியில் 36 கொலைகள் இடம்பெற்றன. இக்காலத்தில் கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் முஸ்லிம் மக்களே பெருமளவு இலக்கு வைக்கப்பட்டதுடன் இவ்விரு சமூகங்களுக்குமிடையில் பதற்ற நிலைமையும் உருவாகியது. தேர்தலுக்கு முன்னதான காலப்பகுதியில்

7. *கலாநிதி பாக்கியசோதி சரவண முத்து, சென்டர் ஃபார் பாலிசி ஆல்டர்நேடிவ் தண்டம்ன்ஸ் கில்லிஸ் ஆஃப் லக்ஷ்மன் கதிர்காமர் (ஆங்), பத்திரிக்கை குறிப்பு,* www.lankawatch.com.



கொழும்பிலும் கொலைகள் தொடர்ந்து இடம்பெற்றன. ஈபிடிபி தலைவருக்கு பாதுகாப்பு வழங்கும் பணியில் ஈடுபட்ட அதன் உறுப்பினர் ஒருவரும் கொழும்பிலுள்ள வெள்ளவத்தையில் வைத்துக் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் புலனாய்வுப் பணியில் ஈடுபட்டிருந்த தாகவும் தெரிவிக்கப்பட்டது.

முந்தைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இம்முறை தேர்தல் காலத்தில் குறைந்தளவான வன்முறைகள் இடம்பெற்றன. தேர்தல் அன்று அம்பாறையில் 2 கொலைகளும் திருகோணமலையில் ஒரு கொலை யும் இடம்பெற்றன. தேர்தலுக்குப்பின் கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்தது. யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள ஈபிடிபி மீதான தாக்குதல் மற்றும் பருத்தித்துறை ஈபிடிபி அலுவலகத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் கொலை என்பன தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியில் புலி எதிர்ப்பு குழுக்கள்மீதான தாக்குதலின் கடுமையை எடுத்துக்காட்டுகின்றன. தேர்தல் காலப்பகுதியில் அம்பாறை மிகவும் பதற்றமான பிரதேசமாக மாறியதுடன் நவம்பர் மாதம் இடம்பெற்ற மொத்தம் 36 கொலைகளில் 14 கொலைகள் இங்கேயே இடம்பெற்றன. அம்பாறையில் கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் முஸ்லிம் சமூகத்தைச் சார்ந்ததுடன் புலிகளின் இரு அரசியல் போராளிகள் நவம்பர் 2ஆம் வாரமளவில் இனம் தெரியாதவர் களால் கொல்லப்பட்டனர்.

2005 நவம்பர் 18ஆம் தேதி அதிகாலை அக்கறைப்பற்று பெரிய பள்ளிவாசல்மீது தாக்குதல் நடத்தப்பட்டதுடன் தொழுகையில் ஈடுபட்டிருந்த ஐவர் கொல்லப்பட்டது கிழக்கு மாகாணத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இதனால் ஏற்பட்ட பதற்றநிலை காரணமாக தமிழ்-முஸ்லிம் மக்களிடையே மோதல்கள் இடம்பெற்றன. பலரும் கொலைசெய்யப்பட்டனர். இக்காலப்பகுதியில் மூதூரில் ஐதேக தமிழ் ஆதாரவாளர் ஒருவரும் கொல்லப்பட்டார்.

ஜனாதிபதி தேர்தலுக்குப் பின் நவம்பர் 23ஆம் தேதி புலிகள் மாவீரர்தின நிகழ்வைக் கொண்டாடினர். இதிலே உரைநிகழ்த்திய விடுதலைப் புலிகளின் தலைவர் இனப்பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பது குறித்துத் தனது நம்பிக்கையின்மையை வெளியிட்டார். எனினும் புதிய ஜனாதிபதி பேச்சுவார்த்தைமூலமான தீர்வைக் காண்பதற்கு எவ்வாறு செயல்படுகிறார் என்பதைத் தாங்கள் பொறுத்திருந்து பார்க்கப் போவதாகவும் கூறினார்.

டிசம்பர் 1ஆம் தேதி மாவீரர்தின நிகழ்வுக்கு அலங்கார வேலைகளில் ஈடுபட்டதாகக் கூறப்பட்ட இரு தமிழ் விவசாயிகள் யாழ்ப்பாணம் நெல்லியடியில் வைத்து இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டனர். அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இரு வெவ்வேறான கிளைமோர் தாக்குதல்களில் 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டமையுடன் நிலைமை மிகவும் மோசமடைந்தது.

1ஆம் கிளைமோர் டிசம்பர் 4ஆம் தேதி யாழ் பலாலி வீதியிலுள்ள கோண்டாவில் சந்தியிலேயும் 2ஆம் கிளைமோர் மார்கழி 6ஆம் தேதி இருபாலை வடக்கிலும் வெடிக்கவைக்கப்பட்டன. இதற்குப் புலிகள் மீது குற்றம் சாட்டப்பட்டபோதிலும் அதை அவர்கள் மறுத்தனர். பாதுகாப்புப் படையினர்மீதான கொலைகள் மன்னார் மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களிலும் தொடர்ந்து நடைபெற்றன. நவம்பர்-டிசம்பர் காலப்பகுதியில் மொத்தம் 45 படையினர் கொல்லப்பட்டனர். வரைபடம் 1.ஈயின்படி இக்காலப் பகுதியிலேயே அதிகளவான அதாவது 4 மடங்கான கொலைகள் இடம்பெற்றன. இக்காலப்பகுதியில் புலிகள் தரப்பில் எவரும் கொல்லப்படவில்லை. அத்துடன் இருதரப்பினரிடையேயும் எவ்விதமான நேரடி யுத்தமும் இடம்பெறவில்லை. இதற்காக அரசப் படைகள் உள்நாட்டு மற்றும் சர்வதேசரீதியில் பாராட்டப்பட்டனர்.

டிசம்பர் 6ஆம் தேதி மட்டு அம்பாறை எல்லைப் பிரதேசத்தில் புலிகளுக்கும் கருணா குழுவிற்கும் இடையே மோதல் ஒன்று இடம்பெற்றது. புலிகளின் உயர் அதிகாரி ஒருவரின் தகவலின்படி காஞ்சிரங்குடா ஆற்றுப் பகுதியில் இடம்பெற்ற இம்மோதலில் கருணா குழுவில் ஒரு முக்கிய உறுப்பினர் கொல்லப்பட்டார். மேலும் புலிகளின் தகவலின்படி இத்தாக்குதலின்போது கருணா குழு உறுப்பினர்கள் இருவர் தம்மால் கைதுசெய்யப்பட்டதாகவும் இவர்களே தேர்தலுக்குப் பின்னர் அம்பாறையில் முஸ்லிம்களின் மீது இடம்பெற்ற தாக்குதலில் ஈடுபட்டதாகவும் ஒப்புக்கொண்டனர் என அறிவிக்கப்பட்டது.

டிசம்பர் 17ஆம் தேதி புங்குடுதீவிலுள்ள கடற்படை முகாமுக்கு அருகில் கிணறு ஒன்றிலிருந்து 20 வயதுடைய இளையதம்பி தர்ஷினி என்பவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் இப்பகுதியில் பெரும்பதற்றம் நிலவியதுடன் கடற்படைக்கு எதிரான பல வன்முறைகளும் மேற்கொள்ளப்பட்டன. டிசம்பர் இறுதியளவில் கடற்படையினர்மீது மேற்கொள்ளப்பட்ட இரு தாக்குதல்களில் 16 பேர் கொலை செய்யப்பட்டனர். முதல் தாக்குதல் 22ஆம் தேதி மன்னாரிலுள்ள முகலம் துறையில் மேற்கொள்ளப்பட்டதுடன் இதில் மூவர் கொல்லப்பட்டனர். இது ஒரு தற்காப்பு நடவடிக்கை எனப் புலிகள் கூறினர். 2ஆம் சம்பவம் மன்னாரிலுள்ள பேசாலையில் நடந்தது. இங்குப் பஸ்வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்த கடற்படை மீது செய்யப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து



24ஆம் தேதி யாழ்ப்பாணத்தில் 5 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். டிசம்பர் 25ஆம் தேதி நத்தார் தினத்தன்று அதிகாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஆராதனையில் ஈடுபட்டிருந்த சமயம் மட்டக்களப்பிலுள்ள புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில் இருந்து நடைபெற்று வந்த சம்பவங்களும் புலிகளின் தலைவரின் மாவீரர்தின உரையும் யுத்த நிறுத்த உடன்படிக்கையைப் பெரும் நெருக்கடிக்குள்ளாக்கின. இதனால் பெருமளவான படையினர், அரசியல்வாதிகள், பொதுமக்கள் கொல்லப்பட்டனர். வடகிழக்கிலே இடம்பெற்ற வன்முறைகளுக்கு இருதரப்பினரும் பொறுப்பேற்க முன்வரவில்லை. இருவரும் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டினர். அத்துடன் இச்சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

## கரும் பகுதிகள்

### கருணாவின் வெளியேற்றம்

எவ்விதப் பேதமுமின்றி ஒருமித்துக் காணப்பட்ட புலிகள் அமைப்பானது கருணாவின் பிரச்சினையால் அதன் ஒற்றுமைத்தன்மை அச்சுறுத்தலுக்குள்ளானது. தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை எவ்வாறு புலிகள் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ளப் போகின்றார்கள் என்பதே கேள்வியாக இருந்தது. கருணா குழுவைக் கட்டுப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் இராணுவத்தினருடனான மோதலுக்கு வழிவகுத்து, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைக் குழப்பிவிடுமோ என்ற பிரச்சினையும் நிலவியது. எனினும் அரசும் விடுதலைப்புலிகளும் நேரடி மோதல்களைத் தவிர்க்க முடிந்தது. கிழக்கு மாகாணத்தைக் கட்டுப்படுத்துவதற்காகத் தீவிரம் குறைந்த யுத்தமொன்று புலிகளுக்கும் கருணாவிற்கும் இடையே உருவாயிற்று. இதனால் பல கொலைகளும் பிற பல வன்முறைகளும் ஏற்பட்டதுடன் இன்றுவரையும் இது தொடர்கிறது. இது தொடர்பாகப் பின்வரும் சிக்கல்களும் ஏற்பட்டன:

- பல வன்முறைகள் கண்டறியப்பட முடியாமல் போனதுடன் அவை யுத்தநிறுத்த மீறல்களா அல்லவா எனவும் தீர்மானிக்க முடியாமல்போனது. இதனால் இது தொடர்பில் வேறுபடுத்தவும் செயன்முறையில் பாரிய இடைவெளி ஏற்பட்டது.
- கருணா பிரச்சினையால் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமான உறவு சீர்குலைந்தது. ஏனெனில் கருணா குழுவுக்கு அரசாங்கமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆதரவளிப்பதாகப் புலிகள் குற்றம்சாட்டினர். இதனால் புலிகளுக்கும் அரசப் படைகளுக்குமிடையே களமட்டத்திலே ஏற்படுத்தப்பட்டிருந்த தொடர்பாடல்களும் துண்டிக்கப்பட்டன. அத்துடன் இது பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்கப்படுவதைத் தடுத்ததுடன் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கும் பங்கம் விளைவித்தது.

### கடலில் நடமாட்டம்

கடல் நடமாட்டம் தொடர்பாகவும் சிக்கல் ஏற்பட்டது. நிலத்தைப் போல் அல்லாது கடல் தொடர்பாக யுத்தநிறுத்த உடன்படிக்கையில் எவ்வித ஏற்பாடுமில்லை. தரப்பினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் எதுவும் வரையறுக்கப்படவில்லை. இதனால் பதற்றநிலைகள் உருவாகும் பொழுது சில சம்பவங்கள் மக்களிடையே மோதல்களை ஏற்படுத்தியதுடன் சொத்து அழிவையும் ஏற்படுத்தியது. எனினும் பெரும்பாலான சம்பவங்கள் புத்திசாலித்தனமாகவும் திறமையாகவும் கையாளப்பட்டன. புலிகளுக்கான கடல்பாதை ஒன்றை நிர்ணயிப்பதற்கான முயற்சி ஒன்று எடுக்கப்பட்டபோதும் அரசு அதற்கு மறுத்துவிட்டது. இந்தச் சிக்கல் கிட்டத்தட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் ஒரு முட்டுக்கட்டையை ஏற்படுத்தியதுடன் சமாதானப் பேச்சுக்கான சூழலை ஏற்படுத்தும் முயற்சிக்கும் பாதிப்பை ஏற்படுத்தியது.

### கண்காணிப்புக் குழுவின் பங்கு

உடன்படிக்கையின் 3ஆம் உறுப்புரையின்படி காண்காணப்புக் குழு உருவாக்கப்பட்டது. யுத்தநிறுத்த மீறல்களை விசாரிப்பதற்கென சர்வதேசக் கண்காணிப்புக் குழு ஒன்றை நியமிப்பதென இருவரும் இணங்கியிருந்தனர். இரு தரப்பினரின் நோக்கம் யுத்தநிறுத்தம் ஒழுங்காக அமல்படுத்துவதைத் தமது சார்பாகக் கண்காணிப்பாளர்கள் மேற்பார்வை செய்வதாகும். கண்காணிப்புக் குழுவுக்குக் கொடுக்கப்பட்ட ஆணை தொடர்பான விபரம் உறுப்புரை 3 மற்றும் 3.3 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி யுத்தநிறுத்த உடன்படிக்கையின் மீறல்களை விசாரிப்பதற்குக் கண்காணிப்புக்குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் நோக்கமானது இருதரப்பினரும் ஒப்பந்தத்திற்கு இணங்கி நடப்பதை உறுதிசெய்வதுடன் களநிலைகளில் ஏற்படும் பிரச்சினைக்கு மத்தியஸ்தம் வகிப்பதாகும்.

அவர்கள் பணி பின்வருவனவற்றையும் உள்ளடக்குகிறது:

- பாதுகாப்பு எல்லைக்கோடுகளை நிர்ணயிப்பதற்கு இரு தரப்பினருக்கும் உதவுதல்.



- ஒப்பந்தக் கட்டுப்பாடுகள் நிறைவேற்றப்படுவது தொடர்பாகச் சர்வதேச ஆய்வுப்பணியை மேற்கொள்ளல்.
- இருதரப்பினரும் முறைப்பாடுகளை உடனடியாக விசாரிப்பதுடன் அவர்களுக்கிடையில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்க்க அவர்களுக்கு உதவுதல்.
- உள்ளூர்க் கண்காணிப்புக்குழுக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவதுடன் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அமலாக்குவது தொடர்பாகக் கலந்துரையாடுவதுடன் அடிமட்ட நிலையில் புரிந்துணர்வை ஏற்படுத்துதல்.
- இருதரப்பினருக்குமிடையில் தொடர்புகளைப் பரிமாறுவதுடன் அது தொடர்பாக நேர்வே அரசாங்கத்திற்கு அறிவித்தல்.

### அமைப்பும் உருவாக்கங்களும்

இருதரப்பினரின் சம்மதத்திற்கிணங்கக் கண்காணிப்புக் குழுவின் தலைவரை நோர்வே அரசாங்கம் நியமிக்கிறது. இவரே யுத்தநிறுத்த ஒப்பந்த அமலாக்கம் தொடர்பாக இறுதி அதிகாரம் கொண்டவராவார்.

கண்காணிப்புக் குழுவானது 60 உத்தியோகஸ்தர்களைக் கொண்டுள்ளது. அவர்கள் கொழும்பிலுள்ள தலைமையகத்திலும் சம்பந்தப்பட்ட மாவட்டங்களிலும் கடமையாற்றுகின்றனர். இந்த 60 பேரில் 45-47 வரையிலான உத்தியோகஸ்தர்கள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் பணிபுரிகின்றனர். தலைமையகத்தின் பணியானது அரசாங்கத்துடன் தொடர்புகளைப் பரிமாறுவதுடன் கிளிநொச்சியிலுள்ள மற்றைய அலுவலகமானது விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளைப் பரிமாறுகிறது. யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் மாவட்ட அலுவலர்கள் பணிபுரிகிறார்கள். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசங்களில் உள்ளூர்க் கண்காணிப்புக் குழுவினர் பணிபுரிகின்றனர். இந்த ஒவ்வொரு குழுவிலும் 5 உறுப்பினர்கள் காணப்படுவதுடன் இவற்றில் 2 அரசாலும் இன்னும் இருவர் விடுதலைப்புலிகளாலும் மற்றையவர் கண்காணிப்புக் குழுத் தலைவராலும் நியமிக்கப்படுவர். இவரே இக்குழுக்களின் தலைவருமாவார். அரசினாலும் விடுதலைப்புலிகளாலும் நியமிக்கப்படுபவர்கள் உள்ளூரில் வசிக்கும் நற்பிரஜைகள் ஆவர்.

### முறைமை

மாவட்டரீதியாகக் கண்காணிப்பில் ஈடுபடுத்தல், சமூகத் தலைவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களைச் சந்தித்தல், மஸ்தியஸ்தப் பணியில் ஈடுபடுதல், நம்பிக்கையைக் கட்டி யெழுப்பல், முறைப்பாடுகளை விசாரித்தல் என்பனவே யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமலாக்கப்படுவதை மேற்பார்வையிடுவதற்குக் கண்காணிப்புக் குழுவால் பின்பற்றப்படும் முறைகளாகும். கொழும்பி லுள்ள சமாதானச் செயலகத்துடன் வாராந்த கூட்டங்கள் நடத்தப்படு வதுடன் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களும் நடத்தப்படுகின்றன. கிளிநொச்சியில் கண்காணிப்புக் குழு அதிகாரி புலிகளின் சமாதான செயலகத்துடன் ஒவ்வொரு நாளும் சந்திப்புகளை மேற்கொள்கிறார். அடிப்படையிலேயே அவர்கள் கண்காணிப்பு உண்மைநிலையைக் கண்டறிதல் மற்றும் அடிமட்ட நிலையில் மட்டுப் படுத்தப்பட்டளவு அமைதியை ஏற்படுத்துதல் போன்ற செயல்பாடு களில் ஈடுபடுகின்றனர்.

### பிரச்சினைகள் முறியடிக்கப்படுதல்

யுத்தநிறுத்தத்தின் பிற்காலப்பகுதியில் கண்காணிப்புக் குழுவானது பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியிருந்தது. இனம் தெரியாதவர்களால் செய்யப்படும் மீறல்கள் தொடர்பாகவே பெரும் பிரச்சினை எழுகிறது. இவர்களை இனங்காண முடியாதபொழுதும் தரப்பினரின் எவரினதும் ஈடுபாடு தொடர்பான வலுவான சாட்சியம் ஏதும் இல்லாதபோதும் யுத்தநிறுத்த மீறலை உறுதிசெய்ய முடியாது போகிறது. தகவல்கள் தொடர்பில் பாரிய இடைவெளி ஏற்படுவதுடன் சரியான முடிவுகள் எடுப்பதிலும் பினனடைவு ஏற்படுகிறது.

### பாதுகாப்பு எல்லைகளை நிர்ணயித்தல்

1, 1.6 உறுப்புரைகள் ஆகியன அமல்படுத்தப்படாமையால் கண்காணிப்பு மற்றும் உண்மை நிலைகளில் பிரச்சினைகள் எழுந்தன. இந்த உறுப்புரைகளின்படி சர்ச்சைக்குரிய அனைத்து இடங்களிலும் தரப்பினர் கண்காணிப்புக் குழுவின் உதவியுடன் பாதுகாப்பு எல்லைகளை நிர்ணயிக்க வேண்டும்.

### பொதுமக்களின் அலட்சியமும் கண்காணிப்புக் குழுவின் பங்கும்

யுத்தநிறுத்த உடன்படிக்கையானது மக்களால் அதிகம் பேசப்படும் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்படவில்லை. இது சமாதானத்தை விரும்பாதவர்களுக்கு யுத்தநிறுத்த ஒப்பந்தம் தொடர்பாகத் தெளிவுபடுத்தப்பட்ட செய்திகளை வழங்கவும் யுத்த நிறுத்தத்தைக் குழப்பவும் வாய்ப்பாக அமைந்தது. இத்துடன் கண்காணிப் பாளர்களைச் சிக்கலில் மாட்டவும் இது வழிவகுத்தது. பல மீறல்கள்



தொடர்பாகக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்காதது குறித்துக் கண்காணிப்பு குழுமீது தெற்கிலே கடுமையான விமர்சனம் எழுப்பப்பட்டதை உதாரணமாகக்கொள்ளலாம். கண்காணிப்பில் பக்கச்சார்பின்மை இல்லை என்ற குற்றச்சாட்டின் பேரில், 2003 ஜூலை 15ஆம் தேதிக் கண்காணிப்பு குழுவினரை நாட்டைவிட்டு வெளியேறுமாறு கோரித் திருகோணமலையில் கிழக்கு மாகாண மக்கள் முன்னணி என்ற சிங்கள அமைப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியது. கண்காணிப்புக் குழுவினர் அரசியல் பேச்சுவார்த்தைகளிலிருந்து தம்மை வேறுபடுத்துவதில்லை எனவும் களப்பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதில்லை எனவும் குற்றம்சாட்டுகின்றனர். தற்போது வடக்கு கிழக்கில் காணப்படும் பதற்றமான சூழ்நிலையால் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் தமது பாதுகாப்பு குறித்து பெரும் சிக்கலை எதிர்நோக்குகின்றனர். மட்டக் களப்பிலுள்ள கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புடன் நிலைமை மிகவும் மோசமடைகிறது. இது கண்காணிப்புக் குழுவை மிரட்டுவதாகவே அமைந்துள்ளது.

### கண்காணிப்புக் குழு தொடர்பான சில அவதானிப்புகள்

நோர்வே முதலில் இதில் ஈடுபடுவது தொடர்பாக எச்சரிக்கையுடனேயே இருந்தது. தரப்பினரின் வேண்டுகோளுக்கு இணங்கவே இதற்குப் பின்னரே சம்மதித்தனர். கண்காணிப்புக் குழுவானது ஒரு சுதந்திரமான அமைப்பு என்பதுடன் நோர்வே அரசாங்கம் உட்பட வேறெந்த வெளித் தரப்பினாலும் ஆதிக்கம் செலுத்தப்படுவதில்லை. கண்காணிப்புக் குழுவின் வெற்றியானது அதனது பக்கச்சார்பற்ற தன்மையிலும் யுத்த நிறுத்த அமலாக்கத்தில், தரப்பினர் வழங்கும் ஒத்துழைப்பிலுமே தங்கியுள்ளது. கண்காணிப்புக் குழுவானது தரப்பினரது எந்தச் செயல் பாட்டிலும் தலையிடுவதில்லை. அத்துடன் இருதரப்பினரும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்க செய்யும் பொருட்டு, ஒரு பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு முயல்கின்றது. கண்காணிப்புக் குழுவானது சமாதானத்தை அமல்படுத்துபவரோ அல்லது நடுத்தீர்ப் பாளரோ அல்ல. இது ஒரு மத்தியஸ்தரைப் போன்றதாகும். தண்டனை வழங்கும் அதிகாரமோ அல்லது அமல்படுத்தும் அதிகாரமோ இல்லை. இதன் பிரதான செயல்பாடானது தரப்பினரில் எவரேனும் யுத்த நிறுத்தத்தை மீறும்பொழுது அதைக் கவனத்தில் கொண்டுவந்து தரப்பினர் சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உதவுதல் ஆகும்.

### முடிவு

யுத்தநிறுத்த ஒப்பந்தமானது பல ஏற்ற இறக்கங்கள் காணப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போதிலும் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. எனினும் நவம்பர் – டிசம்பர் காலப்பகுதியில் மீறல்கள் வடக்கு, கிழக்கு என்று பரவி பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. புலிகள் மற்றும் படையினர் மீதான தாக்குதல்கள், கொலைகள், கண்காணிப்புக் குழுவிற்கு எதிரான நடவடிக்கைகள், பொதுமக்கள்மீதான அதிகரித்த உயிர்ப் பயமுறுத்தல்கள் என்பனவே இவ்வாறான பதற்றநிலைக்குக் காரணமாகும்.

அதிகளவான அரசியல் படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் காரணமாக யுத்தநிறுத்த உடன்படிக்கை தனது இலக்கை முழுமையாக அடையவில்லை.

பதற்றமான சூழ்நிலைகளில் கண்காணிப்புக்குழு முக்கியமான பங்களிப்பு வழங்கிய அதேவேளை அவையாவும் பிழையாக விளங்கிக் கொள்ளப்பட்டதுடன் அரசாங்கத்தால்கூடச் சவாலும் விடுக்கப்பட்டது. கண்காணிப்புக் குழு தொடர்பான மக்கள் மத்தியிலான கருத்தானது, அதன் பங்கு வரையறைகள் மற்றும் ஆணை தொடர்பான தவறான புரிதலின் அடிப்படையிலானதே ஆகும்.

அண்மைக்காலமாக வன்செயல்கள் எங்கும் பரவுகின்றபோதிலும் இருதரப்பினரும் யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதற்கான தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். யுத்தநிறுத்தத்தைப் பலப்படுத்தும் பொருட்டு வேண்டுமானால், இருதரப்பினரும் வன் செயல்களில் ஈடுபவதைக் கைவிடுவதுடன் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதையும் நிறுத்த வேண்டும். 'ஒருவரது தெளிவற்ற நடத்தை கண்டுபிடிக்கப்படும்போது அவருடைய எதிரியின் மொத்தச் சமத்துவ மின்மையும் மீளப்பெற முடியாதளவு பாதிப்படைகிறது என்பதை மனத்தில் கொள்ள வேண்டும்'.[8]

இந்நிலை உருவாகும்வரை ஒரு தவறான கணிப்புக் காரணமாக ஏதேனும் நிகழுமாயின் இந்நாட்டி லுள்ள மக்கள் குறிப்பாக வடகிழக்கு மக்கள் மூடுமந்திரமாகவிருக்கும் பிரச்சினையையும் எந்நேரமும் யுத்தம் வெடிக்கலாம் என்ற ஆபத்தையும் தாங்கிக்கொள்ள வேண்டிய தாகவிருக்கும்.

**பரிந்துரைகள்**

தற்போதைய சூழ்நிலையில் அர்த்தபுஷ்டியான பேச்சுவார்த்தைகளுக் கான உகந்த சூழலை ஏற்படுத்துவதற்குப் பின்வரும் நிபந்தனைகள் கொண்டுவரப்பட வேண்டும்:

- முரண்படும் இருதரப்பினரும் யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்ப்புச் செய்திருந்து அவற்றை மக்களிடையே விநியோகித்து அவர்களுக்கு அறிவூட்டி யிருந்திருக்க வேண்டும். தொடர்புடைய சமாதானச் செயல்கள் இந்த வேலையின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வெண்டும்.

8. ஜார்ஜ் எஃப் கென்னோன்.



- உறுப்புரை 1.8 – தமிழ்த்துணை இராணுவக்குழுக்கள். முன்னாள் உறுப்பினர்கள் பலரும் தமது உயிர்களை இழந்துள்ளனர். இப்படைகளிலிருந்து விலகும் உறுப்பினர்களின் பாதுகாப்பிற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உறுப்புரை 1.8 ஆனது முறையாக அமல்படுத்தப்படாதிருத்தல். தரப்பினர் இதை மாற்றி யமைத்து எவ்வாறு அமல்படுத்துவது எவ்வாறு பிரச்சினைகளைத் தீர்ப்பது என்று புதிய வழிகளைப் பார்க்க வேண்டும்.
- விசேடமாக அரசியல் கொலைகள் தொடர்பாக உறுப்புரை 1.2ஐப் பார்க்கப்பட வேண்டியிருக்கிறது. இந்த உறுப்புரையை இருதரப் பினரும் கடைப்பிடிப்பதை உறுதிசெய்ய வேண்டும். ஏனெனில் இதுவே பதற்றமான சூழ்நிலைகளை உருவாக்குகிறது(கடத்தல், கொலை, ஆயுதங்கள் வைத்திருத்தல்). இக்கொலைகள் யாவும் யுத்தநிறுத்த மீறல்கள் என்பதுடன், அவை அரசியல் சாரும்பொழுது யுத்தநிறுத்தத்தின் நோக்கத்தையே சீர்குலைத்துவிடுகின்றன.
- சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தல் மற்றும் கடத்தல் தொடர்பாக விசேடமாகக் கவனத்திலெடுக்க வேண்டும். பின்வரும் விடயங்கள் யூனிசெஃப்பால் செய்யப்பட்டுள்ளன:
  - சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தலைத் தடுப்பதற்கும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குப் புனர்வாழ்வளிப் பதற்கும் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் செயல் திட்ட உடன்படிக்கையொன்றை ஏற்படுவதற்கும் அனுசரணை வழங்கியமை.
  - 2003ஆம் ஆண்டு படைகளிலிருந்து விலகித் திரும்பிவரும் குழந்தைப் போராளிகளுக்குப் புனர்வாழ்வளிப்பதற்குப் புலிகளின் உதவியுடன் 2003இல் பரிமாற்ற நிலையங்களை அமைத்தமை.

  செயல்திட்ட உடன்படிக்கையானது இருதரப்பினராலும் முறையாக அமல்படுத்தப்படுவதுடன் புனர்வாழ்வு நிலையங்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட வேண்டும்.
- தமிழர்களுக்கிடையிலான பிரச்சினைகளையும் முஸ்லிம்களுக் கிடையிலான பிரச்சினைகளும் தீர்த்துக்கொள்வதற்கான பொறி முறை உருவாக்கப்படவேண்டியிருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- யுத்தநிறுத்த மீறல்களை விசாரிக்கும் பொலிஸாரின் திறமை பலப்படுத்தப்பட வேண்டும்.
- உள்நாட்டு யுத்தப் பொலிஸ் என்ற நிலையிலிருந்து யுத்தநிறுத்தப் பொலிஸ் என்ற நிலைக்கு மாற்றப்பட வேண்டும். அத்துடன் பின்வரும் விடயங்களிலும் முன்னேற்றம் காணப்பட வேண்டும்.
  - புதிய விஞ்ஞான மற்றும் நீதிமன்ற நுட்பரீதியாக அவர்களது புலனாய்வுத் திறனை விருத்தி செய்யவேண்டும்.
  - ஆகக் குறைந்த பலத்தை உபயோகிக்கும் வகையில் ஆயுதங்கள் மற்றும் தந்திரோபாயங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் கலவரம், அடக்கல் மற்றும் நெரிசல் கட்டுப்பாட்டைப் பேணும் திறமையை விருத்தி செய்யவேண்டும்.
  - பொலிஸ் – சமூகத் தொடர்பாக விசேடக் கவனம் செலுத்து வதுடன் அவற்றை மேம்படுத்துவதற்காகக் கடுமையான முயற்சி களை மேற்கொள்ளல். பொலிஸாரிடையே கடுமையான முயற்சிகளை மேற்கொள்ளல். பொலிஸாரிடையே தமிழ் பேசுகின்ற பொலிஸாரைச் சேர்த்துக்கொள்கின்ற அதேவேளை பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமூகம் பாதுகாப்பில் ஈடுபடுவதை அறிமுகம் செய்வதற்கான வாய்ப்பை இங்கே ஒருவர் கருத்தில் கொள்ளலாம்.

இறுதியாக, இலங்கையில் மனித உரிமைகளை முன்னேற்றும் பொருட்டு இயன் மார்டினால் முன்மொழியப்பட்ட விடயங்களை கவனத்திலெடுக்கலாம். இது யுத்தநிறுத்த உடன்படிக்கை அமலாக்கத்தில் சாதகமான தாக்கத்தைத் தோற்றுவிக்க முடியும்.

•



# 5

## இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு

*ஹக்ரூப் ஹொக்லண்டுடன் ஒரு நேர்காணல்

**1. யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டபோது எவ்வாறு இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உருவாக்கப்பட்டது?**

எல்லாவற்றிற்கும் முதலாக, இலங்கை ஜனாதிபதி நோர்வே அரசாங்கத் திடம் இலங்கையின் சமாதான பேச்சுவார்த்தை நடவடிக்கைகளுக்கு அனுசரணை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்ததைக் குறிப்பிடுவது முக்கியமானதாகும். தமிழீழ விடுதலைப்புலிகளும் அக்கோரிக்கைக்கு உடன்பட்டனர். இக்கோரிக்கைக்குச் சாதகமான முறையில் பதிலளித்த நோர்வே அரசாங்கம் இது தொடர்பாக விடயங்களைக் கையாள்வதற் கென ஒரு விசேடப் பிரதிநிதியையும் நியமித்தது.

இந்த சமாதான முன்னெடுப்பிற்கான அனுசரணையின் பயனாக 2002 பிப்ரவரி மாதத்தில் யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப் பட்டது. இந்த உடன்படிக்கையின்படி இருதரப்பினரும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமலாக்குவது தொடர்பாக மேற்பார்வையிடுவதற் காக ஒரு சர்வதேசக் கண்காணிப்புக் குழுவை உருவாக்கு வதற்கும் இணக்கம் தெரிவித்திருந்தனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையானது சூழ்நிலைகளை ஒரு பரந்த நோக்குடன் அணுகுகின்ற ஒரு சிறந்த ஆவணமாகும். இனப்பிரச்சினைக் கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு பேச்சுவார்த்தைக்கான ஓர் அடித்தளமாக அமைவது இந்த உடன்படிக்கையாகும். இங்குக் குறிப்பிடத்தக்க விடயமென்னவென்றால், சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அனுசரணை வழங்கும் நாடான நோர்வே போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகிக்க விரும்பியிருக்கவில்லை. உண்மையில் மற்றைய நாடுகளை உள்ளடக்கிய ஒரு கூட்டுக் கண்காணிப்புக் குழுவையே நோர்வே முன்வைத்தது. ஆனால் இந்த யோசனையை நிராகரித்த இருதரப்பினரும் நோர்வேயின் பங்களிப்பு போர்நிறுத்தக்

* இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்காணிப்புக் குழுவில் இருக்க வேண்டுமென வலியுறுத்தினர். அத்துடன் மற்றைய நோர்டிக் நாடுகளையும் (டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து மற்றும் சுவீடன்) போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகிக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

2000 மார்ச் மாதம் முதல் வாரத்தில் முதல் 23 கண்காணிப்பாளர்கள் இலங்கையை வந்தடைந்தனர் (பின்லாந்திலிருந்து அறுவர், சுவீடனி லிருந்து அறுவர், நோர்வேயிலிருந்து பதினொரு பேர்.) முதல் மூன்று மாதங்களும் வெறுமனே 23 கண்காணிப்பாளர்களை மட்டும் கொண்டு ஒரு பெரிய புவியியல் பிரதேசத்தைக் கண்காணிப்பதில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்குப் பெரும் கஷ்டமாகவே அமைந்தது. பின்னர் 2002ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் கண்காணிப்பாளர்களின் தொகை 46ஆக உயர்ந்தது (டென்மார்க்கும் ஐஸ்லாந்தும் இணைந்து கொண்டன). பின்னர் 2003ஆம் ஆண்டு காலப்பகுதியில் கண்காணிப் பாளர்களின் தொகை 60 ஆக உயர்ந்தது. இதுவே தற்போதைய எண்ணிக்கை யாகும். இங்குக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய முக்கிய விடயமென்ன வென்றால் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவானது ஒரு சுதந்திரமானதும் இருதரப்பினருக்குமான ஒரு சாதனமாகும்.

**2. யுத்தநிறுத்த உடன்படிக்கையின் அமலாக்கம் தொடர்பில் உங்கள் கருத்து யாது?**

யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமல்படுத்துவது தொடர்பாக முக்கிய மான சில பிரச்சினைகளை இயுக குழு இனங்கண்டுள்ளது. இவை விடுதலைப்புலிகளிடமும் அரசாங்கத்திடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றை எப்படித் தீர்த்துக்கொள்வது என்பது அவர்களைப் பொறுத்ததாகும். இது தொடர்பாக இதுவரை அவர்களில் எவரும் பதிலளிக்கவில்லை. எனினும் இவற்றிற்குத் தீர்வுகாண்பதற்கு அவர்கள் தீர்க்கமான நடவடிக்கைகள் எடுப்பார்களென எதிர்பார்க்கிறேன்.

இப்பொழுது பார்த்தால் ஒவ்வொருவரும் யுத்தநிறுத்த உடன் படிக்கையைக் கேள்விக்குள்ளாக்குவதுடன் அதனைத் திருத்தவேண்டு மெனவும் கூறுகிறார்கள்போல் தோன்றுகிறது. ஆனால் எவருமே எந்தெந்த அத்தியாயங்கள் திருத்தப்பட வேண்டுமெனக் கூறுவதற்கு முன்வரவில்லை. வேறு வார்த்தைகளில் சொன்னால் எவருமே காத்திர மான முன்மொழிவு களை வைக்கவில்லை.

**3. இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் பலம், பலவீனம் மற்றும் சவால்கள் என நீங்கள் காணும் விடயங்கள் எவை?**

இருதரப்பினருக்குமிடையிலான (இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள்) பரஸ்பரப் புரிந்துணர்வின் அடிப்படையிலேயே இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவானது யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்பான பிரச்சினைகளை அணுகுகிறது. ஆகவே இது தொடர்பில் முக்கிய விடயமென்னவென்றால், யுத்தநிறுத்த உடன்படிக்கையை வெற்றிகரமாக அமலாக்குவது என்பது முழுக்க முழுக்க அரசாங்கத்தினதும் விடுதலைப்புலிகளினதும் யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதிலுள்ள பற்றுறுதி யிலேயே தங்கியுள்ளது. இயுக குழுவைப் பொறுத்தவரை இதற்கு எவ்வித நிறைவேற்று அதிகாரமும் இல்லாமையால் இதன் வெற்றி யானது யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திட்ட தரப்பினரின் ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது. யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறல்கள் தொடர்பாக இயுக குழுவின் சில முடிவுகளுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர் இணங்காது விடுகின்றமை யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்பாகப் பொதுமக்களின் நம்பிக்கையில் எதிர்மறையான விளைவு களை ஏற்படுத்தியுள்ளதுடன் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நம்பகத்தன்மையிலும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. யுத்தநிறுத்த உடன்படிக்கையை அதன் விதிகளுக் கேற்ப அமல்படுத்தும் அதிகாரம் இயுக குழுவிடம் இல்லையென்பதை இங்குக் குறிப்பிட்டேயாக வேண்டும். இந்த விவகாரம் சம்பந்தப்பட்ட தரப்பினர் பலராலும் கடும் விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளது. இது தீர்க்கப்பட வேண்டிய ஒரு முக்கியப் பிரச்சினையாகும். தொடர்ச்சியான சர்வதேச அழுத்தங்களும் சிவில் சமூக அமைப்புகளின் முன்னெடுப்பு களும் சம்பந்தப்பட்ட இருதரப்பினரையும் யுத்தநிறுத்த உடன்படிக்கை யின்படி நடந்துகொள்ளச் செய்யக்கூடிய முக்கிய அம்சங்களாகும். யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமல்படுத்துவது தொடர்பாகவும் புதிய வழிமுறைகளைக் கையாள்வது தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

காலத்திற்குக் காலம் பொதுமக்களும் அரசியல்வாதிகளும் ஒரு பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். ஆனால் இங்கு ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, இயுக குழுவானது இந்த நாட்டில் பொலிஸ் வேலைகளைச் செய்ய வரவில்லை. யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமல்செய்வதற்குச் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உதவவும் கண் காணிக்கவுமே நாம் இங்கு வந்திருக்கின்றோம். பாதுகாப்பு நடவடிக்கை களை மேற்கொள்வதென்பது, இலங்கை அரசாங்கம் தனது கட்டுப் பாட்டுப் பிரதேசத்திலும் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் செய்யவேண்டிய ஒரு விடயமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிகாரத்திலுள்ளவர்களின் பிரதிநிதிகளும் சாதாரணப் பொதுமக்களும் நடைபெறுகின்ற கொலைகளையும் தாக்குதல்களையும் நிறுத்துமாறும் எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமலிருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இயுக குழுவிடம் அடிக்கடி வேண்டுகோள் விடுக்கின்றனர். இவ்வாறான சம்பவங்கள் களநிலவரங்களை மேலும் பலவீனமடையச் செய்யும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவை குற்றவியல் சம்பந்தமான குற்றங்களாகையால் இவை தொடர்பாக விசாரணை நடத்திக் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் கொண்டுவர வேண்டியது பொலிஸாரின் கடமையாகும். பெரிய பிரச்சினையாக அமைவது பொலிஸார் இக்குற்றவாளிகளைக் கைது செய்யாதது. அதாவது, இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் தாம் பிடிபடமாட்டோம் என நன்றாகவே தெரிந்து வைத்துள்ளார்கள். பொலிஸாருக்கும் புலிகளுக்குமிடையிலான ஒத்துழைப்பு இவ்வாறான குற்றவாளிகளைக் கைதுசெய்வதற்குப் பெரிதும் உதவியாக அமையும்.

இயுக குழு வெற்றிகரமாக இயங்கிவருகிறது என்பதில் எனக்கு எவ்விதச் சந்தேகமுமில்லை. நாம் அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் உள்ளூர் மட்டத்திலும் உயர்மட்டத்திலும் நல்ல தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளோம். எனினும் களப்பணிகளிலே நாம் எதிர்நோக்குகின்ற பிரதான பிரச்சினைகளில் ஒன்றாக அமைவது இருதரப்பினரும் நேரடிச் சந்திப்புகளில் ஈடுபடாமையாகும்.

தற்போது யுத்தநிறுத்த உடன்படிக்கை அமலாக்கம் தொடர்பில் அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையில் ஒரு தொடர்பை இயுக குழுவானது ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இருதரப்பினரும் தங்களுக்கிடையில் செய்திகளைப் பரிமாறிக்கொள்ளக் கூடிய வழிமுறைகளை நாம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றபோதிலும் இருதரப்பினரும் நேரடிச் சந்திப்புகளில் ஈடுபடுவதற்கு முன்வருவதாக இல்லை. அதிர்ஷ்டவசமாக யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டதிலிருந்து அரசப் படைகளுக்கும் புலிகளுக்குமிடையில் நேரடிச் சண்டைகள் எதுவும் ஏற்படவில்லை. எனினும், அண்மையில் இலங்கைக் கடற்படைக்கும் கடற்புலிகளுக்குமிடையில் மோதலொன்று மன்னார் விரிகுடாவில் இடம்பெற்றது. இவ்வாறான சம்பவங்கள் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு ஆபத்தானதாக அமைவதுடன் பாதகமாகவும் அமையும்.

**4. யுத்தநிறுத்த உடன்படிக்கை அமலாக்கம் தொடர்பான சில முக்கியப் பிரச்சினைகளைக் கவனத்திலெடுக்க விரும்புகிறோம். அவற்றில் பல இனங்காணப்பட்டுள்ளதுடன் அவற்றில் ஒன்றாக அமைவது நிகழ்வுகளின்**



**உண்மைத் தன்மையை அறிந்துகொள்ளும் பிரச்சினையாகும். கொலைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் விசேடப் பிரதிநிதி அண்மையில் வெளியிட்ட அறிக்கையொன்றில், இயுக குழு ஒரு குறுகிய வரம்பிற்குள்ளேயே செயலாற்றுவதாகவும் இனிவரும் காலங்களில் அதைத் தவிர்த்துத் தனது செயல்பாடுகளைப் பரந்தளவில் விரிவுபடுத்திக் கொண்டால்தான் உறுதியான செயல்பாடுகளை முன்னெடுக்க முடியுமெனவும் தெரிவித்துள்ளார். இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

எங்களுக்குக் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளில் பெரும்பாலானவை பொதுமக்களால் செய்யப்படுகின்ற முறைப்பாடுகளேயன்றி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட தரப்பினரால் செய்யப்படுகின்றவை அல்ல. தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்காக எம்மை நாடிவருபவர்களுக்கு நாம் உதவிசெய்து வருகின்ற அதேவேளை, இவ்வாறான எண்ணிலடங்காப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வெற்றியும் கண்டுள்ளோம். இயுக குழுவானது குறுகிய வரம்பினுள்ளேயே செயல்படுவதாகவும் இது தவிர்க்கப்பட்டு இதன் பணிகள் விரிவாக்கப்பட வேண்டுமென்பது ஐநா சபை பிரதிநிதியின் கூற்று. ஐநா சபை இயுக குழுவிற்கு யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி வழங்கப்பட்ட ஆணை மற்றும் பணி பற்றிப் புரிந்துகொள்ளாமல் இருப்பதையே எடுத்துக்காட்டுகின்றது. யுத்தநிறுத்த உடன்படிக்கையானது இருதரப்பினரிடையே செய்துகொள்ளப்பட்டதுடன் இதன் வெற்றி அவ்விரு தரப்பினரிலேயே முழுமையாகத் தங்கியுள்ளது. எமக்கான ஆணை விசாலமானது. இயுக குழுவின் ஆணை மற்றும் பணியைப் பலப்படுத்த வேண்டுமென இருதரப்பினரும் விரும்பினால் அவர்கள் யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் செம்மையாக அமல்படுத்துவதன் மூலம் அதைச் செய்யலாம். குற்றங்களை விசாரிப்பது பொலிஸாரின் கடமையே என்பதை மீண்டும் வலி யுறுத்த விரும்புகிறேன். பொலிஸ் புலன் விசாரணையை மேற்கொள்ளும் அதிகாரத்தை இயுக குழுவிற்கு வழங்குவது சட்டத்திற்கு முரணானதாகும். செய்யப்பட வேண்டிய விடயமென்னவென்றால் இலங்கைப் பொலிஸார் தம் புலன்விசாரணை செய்யும் திறனை வளர்த்துக் கொள்வதாகும்.

**5. இயுக குழுவின் சர்வதேச அனுபவங்கள் எவை?**

பெரும்பாலான கண்காணிப்பாளர்களுக்கு வேறு நாடுகளிலே சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்ட பரந்த அனுபவம் உண்டு. இயுக குழுவானது பல்வேறு தரப்பட்ட தொழில்சார் தகைமைகளைக் கொண்டவர்களை உள்ளடக்கியுள்ளது. அதாவது, இராணுவ அதிகாரிகள், பொலிஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிகாரிகள், சட்டத் தரணிகள், சமூகப் பணியாளர்கள், மனிதவர்க்க ஆராய்ச்சியாளர்கள், மனித உரிமை நிபுணர்கள் மற்றும் பலரும் உள்ளடங்குவர். இவ்வாறான நிபுணர்களின் பங்களிப்பானது நாம் முகம் கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பேருதவியாக அமைகிறது.

இலங்கை தொடர்பான எமது அனுபவம் தனித்துவமானதொன்றாகும். ஏனெனில், பங்குக் கண்காணிப்புப் பணி இருதரப்பினர்களின் பற்றுறுதியிலும் பிரச்சினைகளைச் சுமுக முறையில் தீர்த்துக்கொள்வதற்கான முன்வருகையிலுமே தங்கியுள்ளது.

**6. நோர்வேயானது சமாதான நடவடிக்கைகளில் அனுசரணைப் பணியை மேற்கொள்கின்ற அதேவேளை கண்காணிப்புக் குழுவிற்கும் தலைமை வகிப்பது பற்றித் தெரிவிக்கப்படும் கருத்துகள் தொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன?**

ஆரம்பத்தில் இயுக குழுவிற்குத் தலைமை வகிப்பது தொடர்பாக நோர்வே அரசாங்கம் அதிக அக்கறை காட்டவில்லை. யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திட்ட இருதரப்பினரினதும் அழைப்பினை அடுத்தே நோர்வே, கண்காணிப்புக் குழுவிற்குத் தலைமை வகிக்க முடிவு செய்தது. யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திட்ட ஏதாவது ஒரு தரப்பு, இயுக குழுவிற்கு நோர்வே அல்லாத வேறெதேனும் நோர்டிக் நாடொன்று தலைமைவகிக்க வேண்டுமெனவும் அது சீரான யுத்தநிறுத்த உடன்படிக்கை அமலாக்கத்திற்கு ஏதுவாக அமையுமெனவும் நம்பினால் நோர்வே எந்த நேரத்திலும் தலைமைப் பதவியிலிருந்து விலகுவதற்குத் தயாராக உள்ளது.

சீரான யுத்தநிறுத்த அமலாக்கம் என்பது யார் கண்காணிப்புக் குழுவிற்குத் தலைமை வகிக்கின்றார் என்பதில் தங்கியிருக்கவில்லை என்றே நான் நம்புகின்றேன். எவரேனும் அவ்வாறு எண்ணினால் அது வலிமையற்ற எண்ணமேயாகும். கண்காணிப்புக் குழுவின் பணியில் நோர்வே அனுசரணையாளர்கள் தலையீடுசெய்வதில்லை. யுத்தநிறுத்த உடன்படிக்கையே சமாதான முன்னெடுப்புகளுக்கான அடிப்படையாக அமைந்துள்ளதால் கண்காணிப்புக் குழுவானது இது தொடர்பில் அன்றாட விடயங்களை அனுசரணையாளர்களுக்கு அறிவிக்க வேண்டியுள்ளது. எதிர்காலத்தில்கூடக் கண்காணிப்புக் குழுத் தலைவரானவர் அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருப்பினும் இதைச் செய்ய வேண்டியிருக்கும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை அமலாக்கம் தொடர்பாக இருதரப்பினரும் எவ்வளவு தூரம் பற்றுறுதியோடு இருக்கின்றார்கள் என்பதிலேயே உண்மையான பிரச்சினை தங்கியுள்ளது. ஆரம்பத்தில் எல்லாமே நீதியானதாகவும் நியாயமானதாகவுமே இருப்பதாகக் கொள்ளப்பட்டது. ஆனால், தற்போது உள்ளது போன்று கண்காணிப்புக் குழுவின் இறையாண்மை கேள்விக்குட்படுத்தப்படவில்லை. யுத்தநிறுத்த உடன்படிக்கை அமலாக்கம் தொடர்பாக எவையேனும் தவறுகள் இடம்பெற்றால் குறித்த தரப்பினர் வேறு எவர்மீதும் பழிபோட முனைவது புரிந்து கொள்ளப்படக்கூடிய ஒன்றே.



**7. சர்வதேச மனித உரிமை ஆணைக்குழுவைச் சேர்ந்த இயன் மார்ட்டின், அண்மையில் இங்கு வந்திருந்தபோது இலங்கையில் நடைபெறுகின்ற மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்குத் தனியான ஒரு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டுமெனக் கூறியுள்ளார். உங்கள் கருத்துப்படி இது அவசியமெனக் கருதுகிறீர்களா?**

இருதரப்பினரும் உடன்படுவார்களாயின் ஒரு சர்வதேச மனித உரிமைக் குழுவை அமைப்பதை நான் ஆதரிக்கின்றேன்.

**8. யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவானது தனக்கு வழங்கப்பட்ட ஆணை தொடர்பான தவறான அபிப்பிராயங்களை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும்?**

கண்காணிப்புக் குழுவானது கடந்த இரு வருடங்களாகப் பெற்ற அனுபவங்கள் நடைமுறை விடயங்களை எவருடனும் பகிர்ந்து கொள்ளக்கூடிய நிலையிலுள்ளது. கண்காணிப்புக்குழுவையும் மற்றும் யுத்தநிறுத்த உடன்படிக்கையையும் பலப்படுத்துவதற்கான வாய்ப்புகள் எப்போதுமே காணப்படுகின்றன.

கண்காணிப்புக்குழு தொடர்பாக இருதரப்பினரும் பிழையான தகவல்களையே ஊடகத்திற்கு வழங்குகின்றனர். இது எவ்வாறு பேச்சுவார்த்தையை நேரடியாகப் பாதிக்கின்றது என்பதை அளவிடுவது என்பது கஷ்டமாயினும் இவ்வாறான சொற்போர் மற்றும் நம்பகமற்ற செயல்பாடுகள் இருதரப்பினரும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை மேலும் தீவிரமாக்கியுள்ளது என்றே நாம் கூறுவோம்.

இவ்வாறாக அரசியல்ரீதியாக வெளியிடப்படுகின்ற எதிர்மறையான கூற்றுகள் வன்முறைகளை மேலும் தூண்டுகின்ற அதேவேளை, பொது மக்கள்மீது இதனால் ஏற்படுகின்ற தாக்கத்தையும் குறைத்து மதிப்பிட முடியாது. எதிர்த்தரப்பினர்மீது செய்யப்படும் இவ்வாறான எதிர்மறைக் கூற்றுகள் சமாதானச் செயல்பாட்டை நோக்கிச் செய்யப்படும் செயல்பாடுகளைக்கூட நியாயப்படுத்த முடியாமல் போய்விடும்.

இலங்கையிலுள்ள ஊடகங்களில் பெரும்பாலானவை அரசாங்கத்திற்கு அல்லது புலிகளுக்கு சார்பாகவே நடந்துகொள்கின்றன என்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு முக்கியமான விடயமாகும். இதனால் இவ்விரு தரப்பினரும் தமக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ளவோ, கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளவோ முடியாமல் போகிறது. இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடும் ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதுடன் அவற்றை ஒரு பொறுப்புவாய்ந்த வகை சொல்லுகின்ற ஊடகங்களாகச் செயல்படுவதற்கு அரசியல்வாதிகளும் இருதரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இருதரப்பினராலும் ஊடகங்கள் மூலம் தெரிவிக்கப்படுகின்ற எதிர்மறையான கூற்றுகள் தொடர்பாக யுத்தநிறுத்த உடன்படிக்கையில் எவ்வித ஏற்பாடுமில்லை. இவ்வாறான நடவடிக்கை நம்பிக்கையை கட்டியெழுப்பும் செயல்பாட்டைச் சீர்குலைக்கும். இருதரப்பினரும் தமக்கிடையிலான உறவில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமானால் அவர்கள் முதலில் ஊடகங்களைத் தமது பிரசாரக் கருவிகளாகப் பயன்படுத்துவதை நிறுத்தவேண்டும். மாறாக ஒரு நிலையான தீர்வை எட்டுவதற்கான ஒரு நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் உபாயமாகவே ஊடகத்தைப் பயன்படுத்த வேண்டும்.

கண்காணிப்புக்குழு பற்றியோ அவர்களது செயல்பாடுகள் பற்றியோ மக்களுக்குப் போதிய விளக்கமளிப்பது இருதரப்பினரதும் பொறுப்பாகும். எமது கருத்துகள் மற்றும் செயல்பாடுகள் குறித்த ஊடகத்திற்கு விளக்கமளிப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம். உடன்படிக்கையானது ஆங்கிலத்திலேயே வரையப்பட்டுள்ளது. இதைத் தமிழுக்கோ அல்லது சிங்களத்துக்கோ மொழிபெயர்க்க நாம் முன்வரமாட்டோம். ஏனெனில் இது பல பிரச்சினைகளை ஏற்படுத்தும். மொழிபெயர்ப்பது இருதரப்பினரதும் பொறுப்பாகும்.

**9. அக்கரைப்பற்று சம்பவத்துடன் தொடர்புடைய நிகழ்வுகள் குறித்து உங்கள் நோக்கு என்ன?**

அது எல்லா இடத்திற்கும் பரவக்கூடிய ஆபத்து நிறைந்த துன்பியல் சம்பவமாகும். எனினும், முஸ்லிம்கள் ஒரு காலத்தில் திறமான முறையில் அப்பிரச்சினையைக் கையாண்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

**10. யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

யாழ்ப்பாண நிலைமை மிகவும் மோசமாகவே உள்ளது. இது சமாதான முயற்சியில் எதிர்விளைவுகளையே ஏற்படுத்துகின்றது. ஆர்ப்பாட்டங்கள் வன்முறைகளாக மாறுகின்றன. இதனால் இராணுவத்தினர் தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காக இறுக்கமான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தள்ளப்படுகின்றார்கள். இது புதிய புதிய வன்முறைகளைத் தோற்றுவிப்பதுடன் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளையும் அதிகரிக்கச் செய்கின்றது. கிளைமோர் மற்றும் கைக்குண்டு வீச்சுச் சம்பவங்களுடன் தமக்கு எவ்விதத் தொடர்பு மில்லை எனவும் மக்களே அவ்வாறு செய்கின்றனர் எனவும் புலிகள் கூறுகின்றார்கள். இவ்விதமான கிளைமோர் தாக்குதல்கள் செய்யப்படுகின்ற விதத்தைப் பார்க்கின்றபோது நன்றாகத் திட்டமிடப்பட்ட முறையில் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்களாலேயே அவை மேற்கொள்ளப்படுகின்றன. யாழ்குடாநாட்டு மக்கள்மீது புலிகளுக்கு போதியளவு செல்வாக்கு உள்ளது என்பது யாவரும் அறிந்ததே. இதைப் புலிகளும் ஒப்புக்கொண்டுள்ளனர். இதைப் பயன்படுத்திப் புலிகள் வன்முறையான ஆர்ப்பாட்டங்களை நிறுத்தவும் படையினர்மீதான தாக்குதல்களை நிறுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

●





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 6

## தமிழர் தரப்பிலான பார்வை

தர்மரத்னம் சிவராம்*

*பகுதி 1*

### சர்வதேசப் பாதுகாப்பு வலைப்பின்னல்: கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை

பனிப்போர் முடிந்து நீண்ட காலம் முடிவடைந்துவிட்டபோதிலும் இனவாத மற்றும் வகுப்புவாதப் பிரச்சினைகளுக்குள்ளாகியிருக்கும் மூன்றாம் உலக நாடுகளில் பதிலாள் யுத்தத்தை நடத்துவதற்கு அதிகாரத் தரப்புகளுக்கு விருப்பமில்லை. பனிப்போர்க் காலப்பகுதியில் அமெரிக்காவால் முத்திரை குத்தப்பட்ட பயங்கரவாதமானது நியாய 'பூர்வமான' தேசிய விடுதலைப் போராட்டங்கள் எனச் சோவியத் ஒன்றியத்தால் முண்டு கொடுக்கப்பட்டது[1].

ஆனால், இன்று குறிப்பாகச் செப்டம்பர் 11ஆம் தேதித் தாக்குதலுக்குப் பின்னர் பயங்கரவாதம் உலகத்திலிருந்து முற்றாகத் துடைத்தெறியப்பட வேண்டுமெனவும் உலகின் எந்த மூலையிலும் பயங்கரவாதத்தை எதிர்க்கும் நியாயமான உரிமை அமெரிக்காவிற்கு உண்டெனவும் ஒரு பொதுவான உடன்பாடு அனைத்து அதிகாரத் தரப்புகளின் மத்தியிலும் தோன்றியுள்ளது.

அமெரிக்கா, விடுதலைப்புலிகளை வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்துள்ளது. ஆகவே இலங்கை அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால் இலங்கையில் யுத்தம் வெடிக்கும்பட்சத்தில் புலிகளை ஒடுக்குவதற்கு அமெரிக்க இராணுவ மற்றும் இதர உதவிகளை இலங்கை அரசுக்கு வழங்கும். உலக சூப்பர்பவர் நாட்டுடனான இராணுவ ஒப்பந்தமும் நேரடி அல்லது

* 2005 ஏப்ரல் 28ஆம் தேதி கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சிவராம் இந்நூலுக்குப் பங்களிப்புச் செய்யவிருந்தார். அவரது எதிர்பாராத மரணத்தால் அவர் டெய்லி மிரர் மற்றும் நோர்த் ஈஸ்டர்ன் ஹெரால்ட் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகளை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

1. நோர்த் ஈஸ்டர்ன் ஹெரால்ட், 2002 செப்டம்பர் 6.



மறைமுக இராணுவ உதவியும் புலிகளுக்கும் பெரும் தடையாகவே இருக்கப்போகின்றன. அத்துடன் இது புலிகள் யுத்தமொன்றிற்குச் செல்ல என்ணுவதையும் பெரிதும் தடுக்கும். அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலாளர் கிரிஸ்ரினா ரொக்காவின் யாழ்ப்பாண வருகை மற்றும் அமெரிக்க இராஜாங்க பிரதிச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிட்டேஜின் அண்மைய யாழ் வருகையும் ஐதேமு அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவாக அவர்கள் வெளியிட்ட அறிக்கைகளும் சர்வதேசப் பாதுகாப்பு வலைப்பின்னல் தொடர்பான நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளது. விடுதலைப் புலிகள் அமெரிக்காவின் நிலைப்பாட்டிற்கேற்ப நடப்பதை உறுதிசெய்வதற்குத் தாம் கட்டாயமான நடவடிக்கைகளை எடுக்க விருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

அதேவேளை அரசாங்கமானது பாகிஸ்தானுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றைக் கையெழுத்திடுவதன் மூலம் அந்நாட்டுடனான தனது நீண்டகால உறவை வலுப்படுத்தவும் முனைந்துள்ளது. ஜெனரல் பர்வேஸ் முஷாரப்பிடமிருந்து தொடர்ச்சியான இராணுவ உதவிகள் மீளவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. பனிப்போரின் முடிவும், பயங்கர வாதத்திற்கு எதிராக யுத்தம் புரிவதற்கான பொது உடன்பாடும், உலக நாடுகளை தம்மிடையேயுள்ள அரசியல் மோதல்களை மறந்து புலி களுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கை அரசுக்கு உதவக்கூடும் எனும் அனுமானம், அமெரிக்காவுடனான உடன்படிக்கைகளுக்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்துள்ளதால் ஆட்டம் கண்டுள்ளது.

இங்கு இரு கேள்விகள் எழும்புகின்றன. மீண்டும் யுத்தம் வெடித்தால் எந்த நிபந்தனையின் அடிப்படையில் புலிகளுக்கு எதிராக அமெரிக்கா தனது இராணுவ பலத்தைப் பிரயோகிக்கும்? இன்னுமொரு யுத்தம் வெடிக்கும்பட்சத்தில் புலிகளை வெற்றிகொள்வதற்கு எந்தளவு இராணுவ பலத்தை இராணுவத்தின் சார்பில் அமெரிக்கா ஏற்படுத்தும்? வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் இடப் பட்டதை தவிர விடுதலைப்புலிகள் அமெரிக்க நலன்களுக்கு நேரடியான அச்சுறுத்தலாக இல்லாதபடியால் இலங்கையில் புலிகளுக்கு எதிராக இராணுவ பலத்தைப் பிரயோகிப்பதென்பது உடன்படிக்கையோ அல்லது ஐநாவின் அனுமதியோ இல்லாத நிலையில் அமெரிக்காவிற்குக் கடின மானதாகவே இருக்கும். தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அமெரிக்காவின் கூட்டாளிகளான நோர்வே, இங்கிலாந்து, தாய்லாந்து என்பன பங்குபெறுவதால் புலிகள் அமெரிக்காவிற்கு நேரடி அச்சுறுத் தலான அமைப்பு என்பது தெளிவாகின்றது.

இது இலங்கையில் புலிகளுக்கெதிரான யுத்தத்தில் எந்தளவு தூரம் அமெரிக்கா இராணுவ பலத்தைப் பிரயோகிக்கும் என்பதில் கேள்வி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுப்புகிறது. புலிகள் தலிபான் அல்ல. இது கடுமையானதும் விரைவில் பழையநிலையை அடையக்கூடியதுமான மரபுவழி யுத்தப்படையாகும். இலங்கைக்கான அமெரிக்க இராணுவ உதவியானது திட்டமிடல், யுத்தம், புலனாய்வு மற்றும் நீண்டகாலத் துப்பறிவு நடவடிக்கைகள் என்பவற்றிலான பயிற்சியிலும் அதிகமானதாக இருக்க வேண்டும். எனினும் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இவை பயனற்றதாகவே காணப்பட்டன. 1997–2001 காலப் பகுதியில் அமெரிக்க விசேடப்படை கணிசமான பயிற்சியைக் கொடுத்த போதும் வன்னி மற்றும் ஆனையிறவுத் தோல்விகளை இராணுவத்தால் தடுக்க முடியவில்லை.

எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள பாகிஸ்தானின் இராணுவ உதவிக்கும் இதேநிலை ஏற்படலாம். பாதுகாப்பு ஒப்பந்தம் மற்றும் பாகிஸ்தான் இராணுவ உதவிகள், வடகிழக்கில் புலிகளுடன் யுத்தம்புரிவதைவிட வேறுவிதமான தந்திரோபாயங்களாக அமைய வேண்டும். தற்போதைய அமெரிக்க ஒப்பந்தமானது தெற்கு ஆசியா, மத்திய ஆசியா மற்றும் அராபியக்கடல் பிரதேசங்களில் அமெரிக்காவின் கடற்படை மற்றும் விமானப்படையில் பலத்தை அதிகரிப்பதற்கே முதலில் தீர்மானிக்கப் பட்டது. இதனால் ஆட்கள் மற்றும் கடற்படை, விமானப்படைத் தாக்குதல் நடவடிக்கைகளுக்குத் தேவையான பொருள் மற்றும் ஆதரவுத் தொடர்பாக டீகோ கார்சியாவிலிருந்து இந்தியக் கடற் பிராந்தியத் திற்குத் தனது நிலையை மாற்றியமைக்கின்ற பலமான அமெரிக்க இராணுவ பங்களிப்பு உருவாகும்.

'அப்புறம் என்ன?' எனப் பாதுகாப்பு வலைப்பின்னல் கோட்பாட்டை ஆதரிப்பவர்கள் பரிகாசம் செய்கிறார்கள். 'புலிகளை ஒடுக்குவதற்குத் தேவையான பாதுகாப்பு வலைப்பின்னலையும் வலுவையும் நாம் பெறுகிறோம். இதற்குப் பதிலாக எங்களிடம் இருந்து எமக்கு எந்த கெடுதலும் ஏற்படாத வகையில் அமெரிக்கா எதனையும் பெற வேண்டி யிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக நாம் ஒரு இறைமையுள்ள நாடாகும். எமது நலன்களை பாதுகாப்பதற்காக மற்றவர்களுடன் கூட்டுச்சேர்வது எமது உரிமையாகும்' என்கிறார்கள் அவர்கள்.

அமெரிக்காவுடனான யுத்த உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்த இந்தியாவின் நிலைப்பாட்டால் கவலையடைந்தவர்கள் இவ்வாறு தெரிவிக்கும் கொழும்பிலுள்ள மூத்த அரசியல்வாதிகள் உட்படப் பலர் அந்த இறைமையுள்ள உரிமையை இந்தியாவுடன் பகிர்வதற்குச் சட்டரீதியான கடப்பாடுடையவர்கள் என்பதை மறந்துவிடுகிறார்கள். 1987 இலங்கை–இந்திய ஒப்பந்தத்தின்படி இலங்கை, இந்திய உறவுகளைப் பாதுகாப்பதற்காகத் தேவையானதும் மற்றும் வெளிநாட்டு இராணுவப் புலனாய்வு உதவியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும்



இலங்கைக்கு அறிவுரை வழங்கும் உரிமை இந்தியாவிற்குள்ளது. இவ்வுடன்படிக்கையின் பிரகாரம் இலங்கையானது இந்தியாவின் நலன்களைப் பாதிக்கும் வகையில் வெளிநாட்டு இராணுவங்கள் இலங்கையின் எந்தவொரு துறைமுகத்தையும் பாவிப்பதற்கு அனுமதிக்கக் கூடாது. இந்தியாவின் நலன்களுக்குப் பாதகமாக இல்லாதவரைக்கும் அமெரிக்க, பாகிஸ்தான் மற்றும் சீன இராணுவ உதவிகள் இலங்கைக்கு வழங்கப்படுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதெனப் புதுடெல்லியைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஒப்பந்தத்தின் சேர்க்கை 2 (i) மற்றும் கடிதப் பரிமாற்றங்களின் 2 (ii)படி இந்தியா ஒப்பந்தத்தின் பிரகாரம் தனது பங்கைச் சரியாக நிறைவேற்றியுள்ளது. ஒப்பந்தத்தின்படி தனது நாட்டிலுள்ள வெளிநாட்டு இராணுவம் மற்றும் புலனாய்வுத் துறைகளை மீளாய்வுசெய்ய வேண்டியது இலங்கையின் கடப்பாடாக உள்ளபோதிலும் 1997இல் இருந்து இடம்பெறும் முன்னேற்றங்கள் அதற்கமைவானதாகக் காணப்படவில்லை.

இலங்கையில் எந்தளவு வெளிநாட்டு இராணுவப் பங்களிப்பு தனது நலன்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது தொடர்பாக அளவீடு செய்வதற்கும் அதன்படி இங்குள்ள அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதற்கும் இந்தியாவிற்கு சட்டரீதியான உரிமை உள்ளது. கூழுக்கும் ஆசைப்பட்டு மீசைக்கும் ஆசைப்பட முடியாது. சாப்பிடுவதை மறந்துவிடுங்கள், இது பற்றிக் கதைப்பதற்கு உங்களிடம் முழுமையான தேசிய இறைமைகூட இல்லை.

### சமாதானப் பேச்சுவார்த்தையில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன?[2]

அமெரிக்கா தலைமையிலான கூட்டணி நோர்வே மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க முயல்கின்றது. அதேசமயம் இலங்கை–இந்திய ஒப்பந்தத்தின்படி இலங்கையிலுள்ள தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவிற்குள்ள சட்டரீதியான நிலைமைக்கேற்ப இங்கு நடைபெறும் சமாதான முயற்சிகளின் முன்னேற்றங்கள் தொடர்பாக உடனுக்குடன் இந்தியாவிற்கு அறிவிக்கப்படும் எனவும் உத்தரவளிக்கப்படுகிறது. இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு 1983–1987 காலப் பகுதியில் தமிழ் இராணுவக் குழுக்களைப் பராமரித்தும் மத்தியஸ்தம் செய்தும் வந்ததன் மூலம் இலங்கைப் பிரச்சினையில் இந்தியா ஒரு தீர்க்கமான செயலில் இறங்கியதை நாம் மறக்கக் கூடாது. அமெரிக்காவும் அதன் கூட்டணிகளும் மறைமுகமாக இதனையே செய்கின்றன. அவர்கள் உண்மையாகச் சமாதானத்திற்காக செயல்படவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு எல்லையைத் தாண்டும்வரை

2. நோர்த் ஈஸ்டர்ன் ஹெரால்ட், 2002 டிசம்பர் 19.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை சமாதான முயற்சிகளில் அமெரிக்க கூட்டணிகள் ஈடுபடுவதை இந்தியா உற்றுநோக்கிய வண்ணம் இருக்கும். இலங்கையிலுள்ள தனது விட்டுக்கொடுக்க முடியாத சில நலன்கள் பாதிக்கப்படாதவரை இந்தியா சமாதானப் பேச்சுகளுக்குத் தனது ஆதரவை வழங்கும். ஆகவே சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு என்ன? எவரிடமும் சரியான பதில் இல்லை போலவே தென்படுகிறது.

சமாதானப் பேச்சுக்களில் இந்தியாவிற்குக் கணிசமானதோர் பங்களிப்பு வழங்கப்பட வேண்டுமென இலங்கை அரசும் நோர்வே அனுசரணையாளர்களும் எமக்குக் கூறுகின்றனர். ஆனால் பேச்சுகளில் நேரடியாக ஈடுபடும் எந்தவொரு காரியத்திலும் புதுடெல்லி இதுவரை இறங்கவில்லை. நோர்வேயும் ஐதேமு அரசும் இந்தியாவிற்கு நிலமைகளை விளக்கியபோதிலும் ஆரம்பத்தில் தீர்வு தொடர்பான பரந்துபட்ட வரையறைகளை மட்டும் எடுத்துக்கூறிய இந்தியா வேறெதிலும் பங்குகொள்ளவில்லை.

இலங்கையின் இனப்பிரச்சினையானது தமது நாட்டின் ஆட்புல ஒருமைப்பாட்டிற்கும் இறைமைக்கும் குந்தகமாக அமையக் கூடாது என்றே இலங்கையின் விவகாரத்தில் அக்கறையுள்ள ஒவ்வொரு நாடும் திருப்பித் திருப்பிக் கூறுகிறது. இந்தியாவும் அவ்வாறே கூறியது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கடந்த காலங்களில் இந்தியா காட்டிய அக்கறையை அதன் தற்போதைய கைகழுவும் செயல்பாடானது எல்லோருக்குமே குழப்பமானதாகவே உள்ளது.

### பேச்சுவார்த்தையில் இந்தியாவிடம் என்ன இலங்கை எதிர்பார்க்கிறது?

பேச்சுகள் தொடர்பாக இந்தியா செய்யக்கூடிய விடயங்கள் மூன்று உள்ளன. விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசிற்குமிடையிலான பேச்சுவார்த்தைக்கு அனுசரணை வழங்கலாம் அல்லது மத்தியஸ்தம் செய்யலாம். பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு இடவசதி அளிப்பதுடன் தனது நாட்டு நலன்களுக்குப் பாதிப்பு ஏற்படாமலிருப்பதை உறுதி செய்வதற்காகப் பேச்சுவார்த்தைகளில் நேரடியாகப் பங்குபெறலாம். மூன்றாவதாக இறுதித்தீர்வை ஆதரிப்பதற்கு உறுதியளிக்கலாம்.

முதலாவதாக பேச்சுவார்த்தைக்கு அனுசரணை வழங்குவதற்கோ, மத்தியஸ்தம் செய்வதற்கோ இந்தியாவிற்கு நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. ஏனெனில், விடுதலைப்புலிகளுடன் இந்தியாவிற்கு உத்தியோகபூர்வத் தொடர்பில்லை. அவ்வாறான ஒரு தொடர்பை ஏற்படுத்துவதற்குச் சட்டரீதியாகவும் அரசியல்ரீதியாகவும் இந்தியாவிற்கு சாத்தியப்படாது. இதன் காரணத்தாலேயே இந்தியாவால் பேச்சுவார்த்தையிலும் கலந்துகொள்ள முடியாது. எனக்குத் தெரிந்தவரை மூன்றாவதாகக் குறிப்பிடப்பட்ட தெரிவை இந்தியா நீண்ட காலப்பகுதியின் பின்னர் கூடச் செய்யாது. இலங்கைப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதை இந்தியா தவிர்த்து வருவதற்கு இதுவும் ஒரு காரணமாயிருக்கலாம். ஒருவேளை இந்தியா அனுசரணை வழங்கவோ மத்தியஸ்தம் செய்யவோ அல்லது பேச்சுக்கு இடவசதியளிக்கவோ முடிவுசெய்தால்தான் தனித்தோ அல்லது கூட்டாகவோ ஆதரிக்க வேண்டிவரும். பிராந்தியத்தில் தோன்றும் தந்திரோபாயப் பின்னணியில் இந்தியா இந்நிலைமை உருவாவதை எப்படியேனும் தவிர்ப்பதையே விரும்பும்.

புலிகளுக்கும் அரசிற்குமிடையிலான தீர்வுத் திட்டத்திற்குப் புதுடெல்லி ஆதரவளிக்காவிட்டாலும் ஏதேனும் ஒருவகையில் சமாதான நடவடிக்கையில் ஈடுபட்டால் அது பின்னர் இங்கு எட்டப்படும் தீர்வை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை இந்தியாவின் மீது சுமத்திவிடும். இந்தியா இதிலும் சிக்கிக்கொள்ள விரும்பாது. ஏன்? விடுதலைப் புலிகள் அமைப்பானது ஆயுதரீதியிலும் வளங்களினடிப்படையிலும் பலம் பொருந்திய அமைப்பாகும். புலிகள் முக்கியத் தரப்பாகவிருக்கும் ஓர் உடன்படிக்கையை இந்தியா ஆதரித்தால் அது பாரதூரமான பிரச்சினைக்கு வழிவகுக்கும். அத்துடன் 1987இல் நடந்தவாறு புலிகளுக்கும் இந்தியாவிற்குமிடையில் மோதலொன்றை ஏற்படுத்துவதற்கும் சில தரப்பினர் முயலக்கூடும்.

தம்மால் ஒரு வாளைக்கொண்டு மரபுவழி யுத்தத்தின்மூலம் பெற முடியாததை இந்தியா ஆயிரம் வெட்டுகளுடன் இரத்தம் சிந்திப் பெறவேண்டுமென இந்தியாவின் எதிரிகள் விரும்புவதாகப் புதுடெல்லியிலுள்ள இராணுவ ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். பிராந்தியத்தில் நிலவும் சிறிய சிறிய பிரச்சினைகளில் கவனம் செலுத்தினால் அது உலகப் பொருளாதார மற்றும் யுத்த வல்லரசாக வேண்டுமென்ற இந்தியாவின் இலக்கை சீர்குலைப்பதுடன் எதிரிகளின் ஆயிரம் வெட்டுத் தந்திரத்திற்கும் இலக்காக நேரிடுமெனவும் அவர்கள் கூறுகிறார்கள்.

சீனா, பர்மாவிலுள்ள இராணுவ ஆட்சியாளர்களுடன் நல்லுறவுகளை வளர்த்துக்கொள்வதன் மூலம் வடகிழக்கு எல்லைப் பிரதேசங்களில் (அசாம், நாகாலாந்து, மணிப்பூர் மற்றும் மிசோரம்) பதற்றங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளைப் புதுடெல்லி மேற்கொண்டுள்ளது. காஷ்மீரில் இராணுவமயத்தை இல்லாமல் செய்வதற்காக தேர்தலை நடத்தவும் மாற்றுக் குழுக்களை வளர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சோவியத் ஒன்றியத்தைப் போலப் பின்னொருகாலத்தில் தனக்கு அச்சுறுத்தலாக வரலாமென அமெரிக்காவால் இனங்காணப்பட்ட பிராந்தியத்தின் மூன்று அதிகார மையங்களும் அந்நாட்டுப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதும் இச்சமயத்திலேயே.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜேன்ஸ் புலனாய்வுத் தகவல்களின்படி தனது கடற்படையை விருத்தி செய்யும் சீனாவின் நோக்கத்திற்கு அதன் சிங்கியாங் மாகாணத்தில் இடம் பெறும் முஸ்லிம் பிரிவினைவாதம் தடையாகவுள்ளது. அதேபோன்று செச்சினியாவிலுள்ள பிரிவினைக்காரர்களால் ரஷ்யாவின் அரசியல் உறுதித்தன்மை ஆபத்திற்குள்ளாகியுள்ளது. அதே போன்றே இந்தியாவிலும் காஷ்மீர் உள்ளது. இம்மூன்று நாடுகளும் தமது வளங்கள் தொடர்பில் கவனம் செலுத்தினால் அது பிற்காலத்தில் தனக்கு அச்சுறுத்தலாக அமைவதுடன் உலகவல்லரசு என்கின்ற தற்போதைய நிலைக்கும் ஆசியாவுடனான பொருளாதார, அரசியல், இராணுவரீதியிலான தொடர்புகளுக்குக் குந்தகமானதாகவே அமையும் என்பதாலேயே இதைத் தடுக்க வேண்டுமென்பது அமெரிக்காவின் நோக்கமாகும். பாகிஸ்தானுக்கான அமெரிக்க உதவி இதற்காகவே செய்யப்படுகிறது. தீவிரவாதிகளுக்குப் பாகிஸ்தான் அனுசரணை வழங்குகிறது. இது பாகிஸ்தானிய உளவுப் பிரிவுடன் நெருங்கிய தொடர்புடைய அமெரிக்க உளவுப்பிரிவுக்கும் தெரியும். இலங்கையிலேயே தனது பங்களிப்பு விடுதலைப்புலிகளுடன் மோதலை ஏற்படுத்திப் பொறிக்குள் சிக்க வைக்குமென டெல்லி நினைக்கிறது. அவ்வாறு நடக்குமானால் அதனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சில தரப்புகள் இப்பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தும். தமிழ்நாட்டில் பயங்கரவாதத்தை ஊடுருவச் செய்வதற்கு முனைப்புடன் செயல்படும் சக்திகளுக்கு ஒரு குழப்பகர மான வடகிழக்குப் பிரதேசம் வழங்கும் சந்தர்ப்பங்களைவிடப் பலம் குறைக்கப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பால் ஏற்படும் ஆபத்து குறைவெனப் புதுடெல்லி நினைக்கிறது.

ஆதலாலேயே 2000ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தனக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதலொன்றை ஏற்படுத்தி விடக்கூடாது என இந்தியா நினைத்தது. பொறிகளில் சிக்காமல் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதே இந்தியக் கொள்கை வகுப்பாளர்களின் கொள்கையாகும். இலங்கை இனப்பிரச்சினை தீர்வு நடவடிக்கையில் பங்கு கொள்வதன் மூலம் இந்தியாவிற்கு என்ன நன்மை கிடைக்கப்போகிறது? தனக்கு வேண்டியதை 1987 இந்திய–இலங்கை ஒப்பந்தம் மூலம் சட்டரீதியாகப் பெற்றுவிட்டது. ஒப்பந்தத்தின் பிற்சேர்க்கை மூலம் இதன் நோக்கங்களும் நிறைவேறிவிட்டன.

அமெரிக்கா தலைமையிலான கூட்டணி நோர்வே மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முயல்கின்றது. இலங்கையிலுள்ள தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்திய–இலங்கை ஒப்பந்தத்தின்படி இந்தியாவிற்குள்ள சட்டரீதியான நிலைமைக்கு ஏற்ப இங்கு நடைபெறும் சமாதான முயற்சிகளின் முன்னேற்றங்கள் தொடர்பாக உடனுக்குடன்



இந்தியாவிற்கு அறிவிக்கப்படுமெனவும் உத்தரவாத மளிக்கப்படுகிறது. ஒரு எல்லையைத் தாண்டும்வரை இலங்கை சமாதான முயற்சிகளில் அமெரிக்கக் கூட்டணிகள் ஈடுபடுவதை இந்தியா உற்றுநோக்கிய வண்ணம் இருக்கும். இலங்கையிலுள்ள தனது விட்டுக்கொடுக்க முடியாத நலன்கள் பாதிக்கப்படாதவரை இந்தியா சமாதானப் பேச்சுகளுக்கு தனது ஆதரவை வழங்கும்.

## புலிகளுடன் சண்டையிடுவதன் மூலம் பிராந்திய ஸ்திரத்தன்மையை இந்தியா ஆபத்திற்குள்ளாக்காது[3]

இந்தியாவில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் புலிகளின் தலைவருக்குக் கெடுகாலம் எனக் கொழும்பு சந்தோஷப்பட்டது. மே மாதம் 13ஆம் தேதி புலிகள்மீதான தடையைப் புதுடெல்லி மேலும் நீடித்தபோது இதை மேலும் உறுதியளிக்கப்படுவதாகக் கருதப்பட்டது.

இந்திய தேர்தல் முடிவு இலங்கையில் ஏற்படுத்தும் பாதிப்பு தொடர்பாக ஆங்கில மற்றும் சிங்களக் கருத்துகள் பின்வருமாறு முன்வைக்கப்பட்டன: 'சோனியா காந்தியின் கணவரது கொலை தொடர்பாகப் பிரபாகரனை நாடுகடத்த வேண்டிய தேவை இந்தியாவிற்குள்ளது. சோனியா தேர்தலில் வென்றுவிட்டார். ஆகவே தனது கணவரது கொலைக்குப் பழிதீர்க்கும் நடவடிக்கைகளை அவர் எடுப்பார். இதனால் புலிகள் பெரும் பிரச்சினையில் மாட்டிக்கொள்வார்கள். பிரபாகரனை இலக்குவைக்க சோனியா ஆரம்பித்தால் அது இலங்கைக்கு நல்லது. புலிகள் மீதான தடைநீடிப்பு இதற்கோர் நல்ல ஆரம்பமாகும்'. இலங்கையில் இந்தியாவின் பங்கு குறித்துச் சர்வதேச அரசியல் தொடர்பான ஆரம்பமில்லாத துறையினராலேயே கொழும்பிற்குத் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. 'இந்தியா புலிகளை விரும்பவில்லை. நாம் புலிகளை வெறுக்கிறோம். ஆகவே இந்தியாவின் செயல்பாடுகள் புலிகளுக்குப் பாதகமாகவே அமையும்' போன்ற சாரப்பட்ட கருத்துகளையே இத்தகவல்கள் அடிப்படையாகக் கொண்டுள்ளன.

இந்தியாவின் ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கு அமெரிக்காவிற்கு அமைவாக நடப்பதே சுலபமானது என எண்பதுகளின் காலப்பகுதிகளில் ஜே.ஆர். ஜயவர்த்தன நினைத்த நிலைமையில் இப்போது பெரிதாக மாற்றமெதுவும் ஏற்படவில்லை. புலிகள்மீதான இந்தியாவின் வெறுப்பு இருநிலைகளில் காணப்படுகிறது. அதாவது, புலிகள்மீதான தடையை நீடித்தலும் மற்றும் நாடுகடத்தும் உத்தரவுமாகும். 1992இல் புலிகள் இந்தியாவில் தடைசெய்யப்பட்டனர். எந்தவிதத்தில் இத்தடை புலிகளைப் பாதித்துள்ளது என நான் கேட்கிறேன். பிரபாகரனை நாடுகடத்தும்

3. டெய்லி மிரர், 2004 மே 29.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பணியில் இந்தியாவின் காங்கிரஸ் அரசாங்கம் இருக்கிறது என வைத்துக் கொள்வோம். இது எதைக் கருதுகிறது? பிரபாகரனைக் கைது செய்யுமாறு கொழும்பைப் புதுடெல்லி கட்டாயப்படுத்த வேண்டும் அல்லது இதைச் செய்வதற்குக் கொழும்பிற்குப் போதியளவு உதவவேண்டும் அல்லது பிரபாகரனிடம் நேரடியாகச் செல்ல வேண்டும். இவை மூன்றும் ஒரு பெரிய யுத்தத்தையே எடுத்துக்காட்டுகின்றன. எனினும் இந்தியா பாரதீய ஜனதா அரசின் கீழேயோ அல்லது காங்கிரஸ் அரசின் கீழேயோ அப்படியான ஒரு யுத்தத்தை விரும்பவில்லை. இருதரப்பினரும் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட வெண்டும் என்பதே இலங்கை தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடாகும். 1991இலிருந்து மன்மோகன் சிங்கால் செய்யப்பட்ட சீர்திருத்தங்களை எடுத்துநோக்கினால், உலகின் ஒரு பொருளாதார மையமாக இந்தியா வரக்கூடிய பாதுகாப்பான பிரச்சினைகள் இல்லாத பிராந்தியத்தை உருவாக்குவதே அதன் வெளிநாட்டுக் கொள்கையாக இருந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கும்.

பிராந்தியத்தில் பிரச்சினைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கும் கொள்கையையே இந்தியா கடைப்பிடித்து வருகிறது. இக்கொள்கையானது, புதுடெல்லி தனது எதிரிகளான சீனா மற்றும் மியான்மாருடன் நல்லுறவை வளர்க்க உதவியதுடன் 2000ஆம் ஆண்டிலிருந்து இவ்வுறவு கணிசமான அளவு விருத்தியடைந்தது. பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காகப் பிராந்தியத்தில் வலுப்பெறும் நடவடிக்கையாக தனது பிரதான எதிரியான பாகிஸ்தானுடன் புதுடெல்லி நல்லுறவுகளை வலுப்படுத்தியுள்ளது. இது மத்திய ஆசியாவிலும் பசுபிக் எல்லைப்பகுதியிலும் சீனாவிற்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தானுடன் நல்லுறவை வளர்ப்பதற்காக இம்மாதம் ஆட்சிக்கு வந்தபோது, காங்கிரஸ்கட்சி உறுதியளித்திருந்தது. உள்நாட்டிலும் பிரச்சினைகளையும் கலவரங்களையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கும் கொள்கையையே இந்தியா கடைப்பிடித்தது. இந்தியாவில் நீண்ட காலமாகக் கொடூரமான இராணுவப் புரட்சியில் ஈடுபட்ட நாகலாந்து பிரிவினவாதக் குழு தற்போது பேச்சுவார்த்தைக்குள் கொண்டுவரப்பட்டு 1997 முதல் டெல்லியுடன் யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

காஷ்மீர் பகுதிகளில் இஸ்லாமிய இராணுவத்தைக் கட்டுப்படுத்தவும் நிலைமையைப் பலப்படுத்தவும் இந்தியா எடுத்த முயற்சிகள் பாகிஸ்தான் பிரிவினைவாதிகளுக்கு அளித்த மறைமுக உதவிகளால் ஓரளவு தடைப்பட்டது. பாகிஸ்தானுடன் நல்லுறவை வளர்ப்பதன் மூலம் காஷ்மீரில் வன்முறைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் எனப் புதுடெல்லியிலுள்ள கொள்கைவகுப்பாளர்கள் கருதுகிறார்கள். காஷ்மீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேசத்



தயாரென தனது கொள்கை விளக்க உரை ஒன்றில் மன்மோகன் சிங் கூறினார். உலகின் பெரியதொரு பொருளாதார சக்தியாக வருவதற்கு இந்தியா பிரச்சினைகளில் ஈடுபடாமல் தவிர்ப்பது முக்கியமாகும். இந்த முறைமையானது கடந்த பல வருடகாலமாகத் தெளிவாகத் தெரிகிறது. 1999இல் அமெரிக்காவுடன் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட நேபாளம் மட்டுமே இதற்கு விதிவிலக்காக உள்ளது. புலிகள் மீதான தடையானது தமிழ்நாட்டின் உணர்வுகளைப் பரிசோதிப்பதற்கு உதவியாக அமையுமெனப் புதுடெல்லி நம்புகிறதுபோலும். பிரபாகரன் மீதான நாடுகடத்தல் உத்தரவும் அதற்காகவே செய்யப்பட்டது. அவ்வளவுதான்.

2000 மே மாதம் புலிகள் யாழ்ப்பாணத்தைத் தாக்குதலின் மூலம் நெருங்கியபோது அங்கு முற்றுகையிடப்பட்ட இராணுவத்தை வெளியே கொண்டுவருவதற்கு இந்தியாவின் உதவியை நாடியது கொழும்பு. எனினும் இதன் மூலம் இந்தியாவிற்கும் புலிகளுக்குமிடையில் தவறுதலாககூட யுத்தம் வந்துவிடக்கூடாது என்பதில் இந்தியா உறுதியாக இருந்தது. தீச்சுவாலை இராணுவ நடவடிக்கையின் தோல்வியைத் தொடர்ந்து 2001இல் இலங்கை விமானப்படை வடக்கிலே விமானத் தாக்குதலை மேற்கொண்டபோது இந்தியா இதனை எதிர்த்துக் கொழும்பிற்கு எச்சரிக்கைவிடுத்தது. ஆகவே இலங்கையில் யுத்தம் நடைபெறுவதை இந்தியா விரும்பவில்லை; டெல்லியிலுள்ள எவருமே பிரபாகரனைக் கைதுசெய்யும் நடவடிக்கைக்கு உத்தரவிடமாட்டார்கள். புலிகள் தனியரசைப் பிரகடனப்படுத்தாதவரை இந்தியா அவர்களை இராணுவரீதியிலோ அல்லது தனது கொமாண்டோக்கள் மற்றும் முன்னாள் போராளிகள் மூலம் மறைமுகமாகவோ உடைத்தெறிய முற்படாது.

வடகிழக்கிலே புலிகளுக்கெதிராக மறைமுகமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ அல்லது அதற்குப் பண உதவி செய்யவோ இலங்கையின் உதவியின்றி இந்தியாவால் முடியும். எல்லாவற்றிற்கும் மேல் இலங்கை இராணுவத்தாலேயே ஊடுருவித் தாக்குதலை மேற்கொள்ள முடியுமானால் வளம்படைத்த இந்தியாவால் ஏன் அது முடியாது?

இப்படியான தாக்குதல் நடவடிக்கைகளுக்கு இந்தியா பயன்படுத்தப்படக்கூடிய புலிகளின் எதிரிகளில் பெரும்பான்மையானோரைப் புலிகள் அழித்துவிட்டனர். எனினும், 1993ஆம் ஆண்டிலிருந்து புலிகளைப் பலவீனப்படுத்தும் எந்தத் தாக்குதலிலும் இந்தியா ஈடுபடவில்லை. அமெரிக்கக் கூட்டணிகள் தற்போது இலங்கை விடயத்தில் ஈடுபடுவதனால் புலிகளைப் பலவீனமடையச் செய்வது தனக்கு நடைமுறைரீதியாக அவ்வளவு சாதகமானதல்ல என இந்தியா நினைப்பதற்கும் காரணங்கள் உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியா புலிகளைப் பல கூறுகளாகப் பிரிப்பதில் வெற்றிகண்டு விட்டது என வைத்துக்கொள்வோம். இது பல கூறுகளைக்கொண்ட குழுக்கள். ஆயுதங்களுடன் பல்வேறு இடங்களிலும் காணப்படுவர். ஆங்காங்குச் சிதறிக் காணப்படும் புலிகளுக்குச் சரியான அரசியல் வழிகாட்டல் இருக்காது. இது இந்தியா தென்னிந்தியாவில் பயங்கரவாதத்தை ஏற்படுத்தும் அமைப்புகளுக்கு வாய்ப்பாக அமையும். ஏனெனில், இவை தமக்குத் தேவையான உளவாளிகள், வெடிமருந்து நிபுணர், ஊடுருவித் தாக்கும் படை போன்றவைகளைச் சிதறிப்போயுள்ள புலி உறுப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கையின் வடபகுதியில் இருந்துவரும் தொடர்ச்சியான அமைதியின்மை தென்னிந்தியாவின் பாதுகாப்பிற்கு உகந்ததல்ல. பிரச்சினைகள் அதிகரிக்கும் காரணத்தால் வெளிநாட்டு இராணுவ உத்தியோகஸ்தர்களுக்கு யாழ்ப்பாணத்திற்கு வருகை தர சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தியாவின் தென்பகுதியை இலக்கு வைக்கும் பொருட்டே இலங்கையைப் பாகிஸ்தான் பாவிப்பதாகப் புதுடெல்லி நம்புகிறது. புலிகள் ராஜீவ் காந்தியைக் கொலைசெய்தபோது அவர்கள், வேறு எந்த ஒரு இந்தியாவிற்கெதிரான வெளிநாட்டுச் சக்திகள் சார்பாக அதைச் செய்யவில்லை என்பது தெளிவாகியது. மேற்குலக நாடுகளில் பெருமளவான தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்கின்றபோதிலும் அந்நாடுகளால் புலிகளைத் தமக்குச் சாதகமான முறையில் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை.

தனக்கு எதிரான சக்திகள் இலங்கையில் காலூன்றுவதைத் தடுப்பதே இந்தியா 1983–1987 காலப்பகுதியில் இலங்கையில் தலையிட்டமைக்குக் காரணம் என்பதைக் கொழும்பு புரிந்துகொள்ள மறுக்கிறது. தமிழ்நாட்டில் பிரிவினைவாதச் சிந்தனைகளைப் புலிகள் தூண்டாதவரைக்கும் மற்றும் வெளிநாட்டுச் சக்திகளின் பிடியில் சிக்காதவரை மேற்குலக அரசியல்வாதிகளும் கருத்தியலாளர்களும் கூறுவதுபோல புலிகளுக்கு எதிராக இந்தியா செயல்படுவதிலும் இறங்காது.

## வெளிநாட்டுத் தலையீடுகளைத் தடுப்பதற்கு ஒரு சமச்சீரற்ற தடையைப் புலிகள் விருத்திசெய்கிறார்களா?[4]

இலங்கை அரசுடனான இடைக்கால நிர்வாகச் சபைக்கான பேச்சுவார்த்தைகள் ஒரு நியாயமான காலப்பகுதிக்கும் அப்பால் இழுத்தடிக்கப்பட்டால் அதிலிருந்து வெளியேறுவதற்கான திட்டமொன்றையும் புலிகள் கொண்டிருப்பர்.

4. *டெய்லி மிரர், 2001 மே 22.*



இது இயற்கையானதே. ஏனெனில், ஜனாதிபதி சந்திரிகாவின் பிரதான அரசியல் பங்காளியான மக்கள் விடுதலை முன்னணியானது (ஜேவிபி) பேச்சுவார்த்தையை முன்கொண்டு செல்வதற்குச் சந்திரிகா உடன்பட்டிருக்கும் அடிப்படையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளது. (ஐலண்ட் பத்திரிகையின் திங்கட்கிழமைப் பதிப்பில் இடம்பெற்ற நேர்காணலில் விமல் வீரவன்சவும் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பிரதமருடனான சந்திப்பில் சோமவன்ச அமரசிங்கவும்) விடுதலைப்புலிகளுடனான ஒரு காத்திரமான பேச்சுவார்த்தைச் சந்தர்ப்பத்தில் அது சந்திரிகாவின் காலை வாருகிறது. ஜேவிபி வெளியேறும் எண்ணத்துடன் புலிகள் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்கான மற்றைய காரணமாக அமைவது அரசியலமைப்பை மாற்றியமைப்பதற்கான மூன்றிலிரண்டு பெரும்பான்மை பொதுஜன முன்னணி அரசிடம் இல்லாமையாகும்.

புலிகளின் இந்த வெளியேற்றமானது யுத்தத்தையே ஏற்படுத்தும். வடகிழக்கில் போருக்குச் செல்வதற்கு தீர்மானிக்கும்போது சர்வதேசத் தலையீடுகளையும் புலிகள் சமாளிக்க வேண்டிவரும். பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இச்சந்தர்ப்பத்தில் இதைப் பற்றிக் கதைப்பது தேவையற்றது போலவே காணப்படும் எனின் எதிர்காலத்தில் இடம்பெறவிருக்கும் எத்தகைய எதிர்பாராத விடயமாகவிருந்தாலும் அவற்றிற்கமையத் திறமையாகத் திட்டமிடுவது என்பதே புலிகளின் இராணுவத் தந்திரோபாயத்தில் அவர்களுக்குள்ள தனிச்சிறப்பாகும்.

எவ்வளவு சிறிய தாக்குதல் திட்டமாகவிருந்தாலும் போராளிகள் தமது ஆயுதங்களுடன் பாதுகாப்பாகத் திரும்பிவரக்கூடிய மாற்றுத் திட்டங்களையும் அத்தாக்குதல் திட்டம் கொண்டிருக்க வேண்டும் என்பதே 1980களின் ஆரம்பத்தில் தமிழ் கெரில்லாக்கள் முதலில் கற்ற பாடமாகும். சரியான புலனாய்வுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட அனுமானங்கள் சிறிதளவு பயன்பாட்டைத் தருவனவாகவும் அமையலாமென அண்மையில் தனது நூலொன்றில் வாதிட்டுள்ள பிரித்தானிய இராணுவ வரலாற்றியலாளரான ஜோன் கீசனின் கருத்துக்கமைய எதிர்காலத் திட்டங்கள் தொடர்பான பயிற்சியானது யுத்தகளத்திலே விரைவான முடிவுகளைத் தளபதிகள் எடுப்பதற்கு வழிசெய்கிறது. உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்கள் கருணா பிரிந்து சென்றுவிட்டார் எனக் காட்டியபோதும் மிகவும் துரிதமாக அவர் வெளியேற்றப்பட்ட முறையானது புலமையும் இரகசியமுமான சசி மாஸ்டரின் கீழ் இயங்கிய இராணுவத் திட்டமிடல் மற்றும் இராணுவ விஞ்ஞானப்பிரிவு இதையொரு கிளர்ச்சியாக எடுத்துக்காட்டுவதற்குரிய தனது பங்கைச் செய்திருப்பதை எடுத்துக்காட்டுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்காலத் திட்டங்கள் தொடர்பான பயிற்சி தேவை என்பது புலிகள் கடுமையாகக் கற்றுக்கொண்ட பாடமாகும். 1987இல் நடைபெற்ற இந்தியத் தலையீட்டின்போது அவர்கள் எவ்விதமான தயார்நிலையிலும் இருக்கவில்லை. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகள் அப்போது இருக்கவில்லை. வெளிப்படையாக வேலைசெய்து கொண்டிருந்த பல புலிகளைச் சண்டை தொடங்குவதற்கு முன்பே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்திய இராணுவம் கைதுசெய்தது. இந்திய இராணுவத்துடன் சண்டையிடக் கூடாது எனப் புலிகளின் இரண்டாம் நிலைத் தளபதிகள் பிரபாகரனுக்கு ஆலோசனை வழங்கினர். எனினும் பிரபாகரன் பிடிவாதமாகவே இருந்தார். பிறகு என்ன நடந்தது என்பது யாவருக்கும் தெரிந்ததே. அதிலிருந்து எதிர்காலத்தில் இலங்கை இராணுவம் சார்பான வெளிநாட்டு இராணுவத் தலையீடு அல்லது இலங்கைப்படையினருக்கு யுத்தகளத்தில் உதவுதல் போன்றவை தொடர்பான முக்கியத்துவத்தைப் புலிகள் உணர்ந்துகொண்டனர். வெளிநாட்டு உதவியுடன் புலிகளைத் தோற்கடிக்கவோ அல்லது பலவீனப்படுத்தவோ வேண்டுமென்ற விருப்பம் தென்னிலங்கை அரசியல் வட்டாரத்தில் நிலவுகிறது. புலிகளுக்கு நன்றாகத் தெரியும். புலிகளைக் கட்டுப்படுத்தும் பலம் இலங்கை அரசுக்கு இல்லாதபடியால் புலிகளை ஒடுக்குவதற்கு வெளிநாட்டு உதவி பெறப்பட வேண்டுமென்ற கருத்து வலுப்பெறத் தொடங்கியது. (வெறுப்பு ஏற்படுத்துமளவிற்கு டெல்லியிலுள்ள பாதுகாப்பு மற்றும் புவியியல் நிபுணர்கள் எடுத்துக்கூறியுள்ள காரணங்களுக்காகப் புலிகளுக்கு எதிராக இரண்டாம் தடவை இந்திய இராணுவம் தலையிடுவது நிராகரிக்கப்படுகிறது. எனினும் இது சிங்களக் கடும்போக்காளர்களைத் திருப்திப்படுத்தவில்லை. இலங்கை அரசாங்கம் தம்மை விட்டுவிட்டது என்று அவர்கள் நினைக்கும் போதெல்லாம் அவர்கள் மேற்சொன்ன எதிர்பார்ப்பையே கொண்டிருந்தார்கள்.) அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்து சர்வதேசப் பாதுகாப்பு வலைப்பின்னலை ஏற்படுத்துவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தமை இதையே எடுத்துக்காட்டுவதாகப் புலிகள் கருதினர்.

புலிகளை அடக்குவதற்கு வெளிநாட்டுச் சக்திகளைப் பயன்படுத்த வேண்டும் எனும் தெற்கின் மனநிலையைப் பார்க்கும்போது பேச்சிலிருந்து வெளியேறுகின்ற தந்திரோபாய நடவடிக்கைகளில் வெளிநாட்டு இராணுவத்தை எதிர்கொள்ளும் சாத்தியப்பாட்டையும் புலிகள் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது இயற்கையே. இது எதிர்காலத்தில் வெளிநாட்டு இராணுவத்துடன் போரிடுவதற்குப் புலிகள் திட்டமிட்டு ஊள்ளார்கள் எனப் பொருள்படுமா? ஆம் என்றும் கூறலாம்; இல்லை எனவும் கூறலாம். தமக்கெதிரான வெளிநாட்டு இராணுவத் தலையீட்டைச் சமச்சீரற்ற தடையின் அடிப்படையிலேயே புலிகள் கருதுவதால் இல்லையென்று கூறலாம். புலிகள் தமது இராணுவ பலத்தைப் பிரயோகிக்கக்கூடிய வழிவகைகள் இருக்கும்வரை 'ஆம்' என்று கூறலாம். இதுவே புலிகளின் இராணுவப் பிரிவின்படி சமச்சீரற்ற தடையின் முக்கியப் பகுதியாகும்.



கடந்த இரு ஆண்டுகளாகப் புலிகளின் பேச்சுவார்த்தைச் செயல்பாடுகளை மேலோட்டமாக எடுத்து நோக்கினால் அவர்கள் தமது இராணுவ பலத்தைத் தம்முடன் முடியப்போகும் ஒன்றாகக் கருதவில்லை. மாறாக 1948இல் தமிழ்த் தேசிய இயக்கத்தால் எடுத்துரைக்கப்பட்ட தமிழர்களின் அடிப்படை அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான உபாயமாகவே கருதுகின்றனர். தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை அதிகரிக்க வேண்டுமெனப் புலிகள் உந்தப்பட்டிருந்தால் 2002இலேயே அவர்கள் வெளிநாட்டுத் தலையீடுகள் வருமுன் வடகிழக்கில் அதிகளவு பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்திருக்க வேண்டும். தயான் ஜயதிலக போன்ற சிங்களக் கடும்போக்காளர்கள் வாதிடுவது போல் இதுவே நடக்கப்போகிறது.

செப்டம்பர் 11ஆம் தேதி இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின்னரான அமெரிக்காவின் பயங்கரவாத எதிர்ப்பு நிலைப்பாட்டால் புலிகள் அடிபணியவைக்கப்பட்டனர் எனக் கூறுவது அபத்தமானதாகும். இத்தாக்குதலின் பின்னரான அமெரிக்காவின் கோபத்தால் புலிகளை விடப் பலம்குறைந்த இயக்கங்களைக்கூட ஒன்றும் செய்யவில்லை என்பதையே ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கத் துருப்புகள் எதிர்கொண்ட சிக்கல் நிலைமைகள் எமக்கு எடுத்துக்காட்டியுள்ளன. மேலும் 2001 டிசம்பரில் புலிகள் யுத்தநிறுத்தத்தை அறிவித்ததுடன் பேச்சைத் தொடங்க வேண்டுமெனக் கூறியமையை இங்கு எடுத்துக் கூறுவது பயனுள்ளதாக அமையும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கான அடிப்படையாகவும் அதனை வலுப்படுத்துவதாக அமையும் படைகளின் சமநிலை அல்லது தந்திரோபாயச் சமநிலை என்ற புலிகளின் கோட்பாடானது இலங்கை அரசுப் பிரச்சினையில் அரசியல் தன்மையில் கவனம் செலுத்துவதற்குத் தடையாக உள்ளது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு யுத்தத்தையே நாட வேண்டுமெனச் சிங்கள எண்ணக்கருத்துகள் வலுப்பெற்றுள்ள போதிலும் அரசு யுத்தத்திற்குச் செல்லாமல் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதற்கு இருதரப்பினருக்குமிடையிலான இராணுவச் சமநிலையே காரணமெனப் புலிகள் கருதுகின்றனர். இங்கு யுத்தத்திற்குச் செல்வதற்குத் தடையாகவுள்ளது இருதரப்பினரினதும் இராணுவச் சமநிலை அல்ல. உண்மையிலே இருதரப்பினருக்குமிடையில் இராணுவ வளங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எடுத்து நோக்கினால் சமநிலையற்ற நிலைமையே காணப்படுகின்றது. திறன்படைத்த ஆகாயப்படை மற்றும் திருகோணமலை, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் கடற்படை வசதிகள் மற்றும் நட்பு நாடுகளின் இராணுவ உதவிகளும் இலங்கை அரசிற்கு உள்ளன. புலிகளிடம் இவை எதுவும் இல்லை. எனினும், இருதரப்பினருக்கு மிடையில் இராணுவ சமநிலையைப் புலிகள் ஏற்படுத்தியுள்ளனர். படையின் மீது தமது முழுவளங்களையும் பாவித்துத் தொடர்ச்சியாக நடத்திய தாக்குதலினாலேயே புலிகள் இந்நிலையை அடைந்தனர். இதனால் யாழ்ப்பாணம் மற்றும் வன்னியில் பலப்படுத்தப்பட்டிருந்த இராணுவத்தின் களப்படையினரின் தாக்குதல்திறன் குறைக்கப்பட்ட துடன் அவர்களின் நிலையும் பலவீனப்படுத்தப்பட்டது.

யுத்தத்தைத் தொடர வேண்டும் என்ற இலங்கை அரசின் திடமான தீர்மானமானது புலிகள் கட்டுநாயக்கா விமானநிலையத்தைத் தாக்கிய போது உடைந்துபோனது. வெறுமனே புலிகளின் இராணுவச் சமநிலை மட்டுமல்லாது எதிர்காலத்தில் இலங்கையின் பொருளாதார மற்றும் அரசியல் மையங்கள்மீதும் தாக்குதல் நடத்தக்கூடிய மரபு வழியற்ற தாக்குதல்களையும் புலிகளால் செய்ய முடியும் என அவர்கள் நன்றாக எடுத்துக்காட்டியுள்ளனர். இதுவே இலங்கை அரசாங்கத்தைப் புலிகள் ஒடுக்குவதற்கான தாக்குதல்களை நடத்துவதற்குத் தடையாக அமை வதுடன் பெரும்பாலான சிங்களவர்கள் விரும்புவதுபோல ஒற்றை யாட்சியைப் புலிகளால் ஏற்றுக்கொள்ளச் செய்யவும் முடியாதுள்ளது.

சிறிய நாடான இலங்கையில் கொழும்பு மற்றும் கட்டுநாயக்கா போன்றவற்றிற்கு மாற்றான பொருளாதார மற்றும் நிர்வாகமையங்கள் இல்லை. இவ்வாறான தாக்குதல்களை இலங்கையால் தாங்கிக்கொள்ள முடியாது. இலங்கையின் மையப்பகுதியையும் தாக்கும் திறன் புலி களிடம் உண்டு என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயமாகும். இது தமது பெரியதொரு பலமெனப் புலிகள் கருதுகின்றனர். இதனாலேயே புலிகளை அதிகாரத்தின் மூலம் அடக்குவதற்குக் கொழும்பிற்கு முடியாமலுள்ளதாக அவர்கள் நம்புகின்றனர்.

வெளிநாட்டு இராணுவமொன்று புலிகளுக்கெதிராகத் தனது பலத்தைப் பிரயோகிக்க முடிவுசெய்கிறது என எடுத்துக்கொள்வோம். வடகிழக்கில் புலிகளுடன் இத்தகைய வெளிநாட்டு இராணுவம் தலையிட வேண்டுமானால் இருமுக்கியமான நிபந்தனைகள் உள்ளன. முதலாவதாக அத்தகைய ஒரு வெளிநாட்டு இராணுவத்தை வரவேற்க இலங்கை அரசு தயாராக இருக்க வேண்டும். அடுத்து வடகிழக்கில் குறிப்பிடத்தக்க அரசியல் கட்சிகள் அமைதி ஏற்படுவதற்காக என்ற பெயரில் இதை விரும்ப வேண்டும்.



புலிகளைவிடப் பத்தாயிரம் மடங்கு பெரிய இராணுவ பலத்தைக் கொண்ட வெளிநாட்டு இராணுவமாக இருந்தாலும் இவ்வாறு செய்ய முடியாது. ஏனெனில் இந்த இருநிபந்தனைகளும் ஒருபோதும் நிறைவேற்றப்பட முடியாதவை. ஒரு நிச்சயமற்ற வெளிநாட்டுத் தலையீட்டிற்காகக் கொழும்பு ஆபத்தில் இறங்காது. இரண்டாவதாகப் புலிகளுக்கு எதிரான தமிழ் குழுக்களும் பயனற்றுப்போய்விட்டன. தமிழ் அரசியலில் மிதவாதிகளையும் போராளிகளையும் பிரித்து வந்த போக்கைப் புலிகள் அழித்துவிட்டனர். தற்போது அனைவரும் ஒன்றே (முந்தைய தமிழ் மிதவாதிகளைப் புலிகளின் பதிலுரிமையாளர்கள் என முத்திரைகுத்தி இதற்குச் சிங்களப் பத்திரிகைகளும் உதவின).

ஈராக்கில் படையெடுப்பதற்கு அமெரிக்கா எவ்வாறு சியா முஸ்லிம் மிதவாதிகளில் தங்கியிருக்க வேண்டியிருந்தது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். புலிகளுக்கு எதிராக வெளிநாட்டு இராணுவத் தலையீட்டை இலங்கை விரும்பியபோதும் மக்கள் விடுதலை முன்னணி யின் இரண்டாம் இராணுவப் புரட்சியால் இந்திய இராணுவம் இங்கிருந்து வெளியேற நேரிட்டது. புலிகளுக்கு எதிராக இந்திய இராணுவத்தால் ஆதரவளிக்கப்பட்ட மாற்றுக்குழுக்கள் வடகிழக்கில் பலமான நிலையில் இருந்ததாலேயே இந்திய இராணுவம் விரைவாக வெளியேற்றப்பட்டது (எனினும் 1987 ஜூலையில் இந்தியா தனது இராணுவத்தை இங்கு அனுப்பும்போது இருநிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன).

இது வெளிநாட்டு தலையீட்டைத் தவிர்ப்பதற்கான புலிகளின் இரு அடிப்படைகள் தொடர்பான ஒரு மேற்பார்வையாகும். எனினும் அண்மைக்காலமாகப் புலிகளின் எண்ணக்கருவில் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட முறையானது நாம் இதுவரை ஆராய்ந்ததைவிடச் சிக்கலான அரசியல் இராணுவ முறைமையிலான தடையாகும்.

## பகுதி 2

## புலிகளின் சட்ட இயந்திரம்: கோடு வரைதல்[5].

1983இலிருந்து இந்நாடு கண்ட நீண்ட அமைதிக்காலப் பகுதியின் ஒவ்வொரு நாளும் சமாதான நடவடிக்கை தொடர்பான அடிப்படைப் பிரச்சினைகள் வெளியே வந்துகொண்டிருக்கின்றன. வடகிழக்கில் பாரியளவு பிரதேசத்தைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக் கிறார்கள் என்பதைச் சிங்கள அரசியல் வட்டாரம் நன்கு தெரிந்து கொண்டிருந்தபோதே பேச்சுகள் தொடங்கின. இது பற்றித் தெரிந்திராத

5. நோர்த் ஈஸ்டர்ன் ஹெரால்ட், 2002 நவம்பர் 21.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரும்பாலான சிங்களவர்கள் ஏ 9 பாதை திறக்கப்பட்டபின், வன்னியின் பெரும்பாலான பிரதேசம், வடக்கு வவுனியா மற்றும் யாழ்குடாநாட்டின் தென்பகுதி என்பவற்றைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்து நிர்வாகம் புரிகின்றனர் என்ற உண்மையைத் தெரிந்து கொண்டிருப்பர்.

நோர்வேயின் அனுசரணைக்கு ஆதரவளிக்கும் அமெரிக்கா தலைமையிலான கூட்டுநாடுகளுக்கும் இந்த உண்மை தெரியும். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அவர்கள் தாம் என்னென்ன செய்ய விரும்புகிறார்களோ அவற்றையெல்லாம் செய்வதை ஜனாதிபதி, எதிர்க்கட்சி மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தையை விமர்சிப்போர் மட்டுமல்ல நோர்வே மற்றும் நோர்வேயின் அனுசரணைப் பணிக்கு ஆதரவளிப்பவர்களும் விரும்பவில்லை எனத் தோன்றுகிறது. கிழக்கிலே புலிகள் தமது காவல்நிலையங்களைத் திறப்பது ஐதேமு அரசிற்குச் சிக்கல்களைத் தோற்றுவிப்பதுடன் சமாதானப் பேச்சுகளுக்கும் குந்தகமாக அமையும் என நோர்வேயின் தூதுவர் கூறியுள்ளார். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் இது தொடர்பான கடுமையான கவலையை வெளியிட்டிருக்கிறார். புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் எதிர்காலத்தில் தனியரசொன்றை அமைத்துவிடுவார்கள் என்ற கவலை சிங்களவர், முஸ்லிம்கள் மற்றும் நோர்வேயினரின் மனத்தில் உள்ளமையையே இவையெல்லாம் எடுத்துக்காட்டுகின்றன.

நோர்வே தூதுவர், ஐதேமு அரசு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்கட்சி மற்றும் புலிகள் நீதிமன்றங்களையும் காவல் நிலையங்கள் அமைப்பதை எதிர்ப்போர் அனைவரும் யுத்தநிறுத்த ஒப்பந்தமானது எந்த அடிப்படை உண்மையின்படி கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை முழுமையாக அல்லது தமது வசதிகருதி மறந்துவிட்டனர். கடும்போக்கு சிஹல உறுமய உட்பட அனைவருமே சமாதானத்தை வரவேற்கிறார்கள். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் தொடர்பாக என்னதான் விமர்சித்தாலும் இன்றியமையாதது என அவர்கள் ஏற்றுக்கொள்ளும் சமாதானமானது இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தமின்றிச் சாத்தியமாகாது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச எல்லைகள் ஏற்றுக்கொள்ளப்படாவிடின் யுத்தநிறுத்தம் சாத்தியப்படாது.

முதலில் தமிழ் இராணுவக் குழுக்களாலும் பின்னர் விடுதலைப் புலிகளாலும் வடகிழக்கில் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த பிரதேசங்களை ஏற்க மறுத்ததாலேயே முதல் ஈழப்போரின் கடைசிப் பகுதி, இரண்டாம் ஈழப்போர் மற்றும் மூன்றாம் ஈழப்போரை இலங்கை அரசு எதிர்கொள்ள நேர்ந்தது. இக்கட்டுப்பாட்டுப் பிரதேச எல்லையை அழிக்கவே பொதுஜன முன்னணி (பிஏ) அரசால் இராணுவச் செலவுகள்



நிறைந்த தனது ஏழாண்டு காலப்பகுதியில் ரிவிரச, சத்ஜய, ஜயசிகுரு, ரணகோஷா, ரிவிபல, அக்னிகில மற்றும் பல இராணுவ நடவடிக்கைகள் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டன.

ஆதலால் இக்கட்டுப்பாட்டுப் பிரதேச எல்லைகளின் அடிப்படையிலே யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமைய வேண்டியிருந்தது. இந்த உண்மை நிலையை மறுக்கும் அந்தக் கணமே நீங்கள் யுத்தத்தைப் பிரகடனப்படுத்தி விட்டீர்கள். ஆகவே இலங்கையின் தற்போதைய சமாதான நடவடிக்கை களை ஆதரிப்பதாகக் கூறுபவர்கள் இக்கட்டுப்பாட்டுப் பிரதேச எல்லையைத் தாமாகவே ஏற்றுக்கொள்கின்றார்கள். இக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமைதி ஏற்படுத்தப்படுமானால் இலங்கையின் சட்ட ஒழுங்கு முறைமை அங்குச் செயல்படாது என்பதை எடுத்துக்காட்டும். ஆகவே இவ்வெல்லைகளை அங்கீகரிப்பதன் மூலம் புலிகளின் பிரதேசத்தில் தனது செயல்பாடுகள் வலிதற்றவை என்பதை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. இவ்வெல்லைகளை வளர்த்திருப்பதன் மூலம் புலிகள் தமது நீதித்துறை, பொலிஸ் மற்றும் சிறைச்சாலை முறைகளை தாபிப்பதற்கு ஏதுவாகிறது.

புலிகள் தமது பிரதேசத்தில் நீதித்துறை செயல்பாடுகளை மேற்கொள்வதற்கெதிரான சிங்களக் கடும் போக்காளர்கள், நோர்வே தூதுவர் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோரின் எதிர்ப்பு இக்கட்டுப்பாட்டுப் பிரதேச எல்லைகளுக்கு எதிரான சவாலாகவே அமைகிறது.

புலிகள் தமது நீதித்துறை நடவடிக்கைகளை விஸ்தரிப்பதை நிறுத்த வேண்டுமென இவர்கள் விரும்பினால் இவர்கள் இக்கட்டுப்பாட்டு எல்லைகளை மறுதலித்துப் போருக்குச் சென்று அரசக் கட்டுப்பாட்டை அங்கு நிலைநாட்டுகிறார்கள் என்றே பொருள்படும். இந்த அடிப்படை உள்நிலையை எடுத்து நோக்கும்போது புலிகள் தமது பிரதேசத்தில் செய்பவற்றைப் பற்றி முறைப்பாடுகள் செய்வது வெறுமனே வலியுறுத்தல்களை உண்டாக்குமே தவிர யுத்தநிறுத்தத்தை முடிவுறுத்துவதற்கான வலுவான காரணங்களைத் தோற்றுவிக்காது.

விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தாபித்துள்ள அரசக் கட்டமைப்புகள் தொடர்பாக நான்கு நடைமுறைச் சாத்தியப்பாடுகளே காணப்படுகின்றன:

1. சிங்கள அரசியல் வட்டாரம், நோர்வே, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் சமாதான முன்னெடுப்புகளுக்கு ஆதரவளிக்கும் அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளின் விருப்பப்படி புலிகள் தமது கட்டமைப்புகளைத் தாமாகவே கலைத்துவிடுதல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2. மக்கள் தீர்ப்பு மற்றும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் புலிகளின் கட்டமைப்புகளை இலங்கை அரசக் கட்டமைப்புகளுள் உள்வாங்குவதற்கு இனிவரும் அடுத்த சுற்றுப் பேச்சுகளில் புலிகள் கொள்கையளவில் இணங்குதல்.
3. இலங்கை அரசு இராணுவரீதியில் புலிகளின் கட்டமைப்புகளை அழித்து அவர்களின் கீழுள்ள கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவருதல்.
4. இலங்கை அரசானது இந்தியா அல்லது அமெரிக்கா தலைமையிலான கூட்டு நாடுகளின் உதவியுடன் புலிகளை ஒடுக்கி அடக்குதல்.

இறுதித் தீர்விற்கான பேச்சுகளில் தமது படைகள், கடற்படை, பொலிஸ் நிர்வாக மற்றும் நீதித்துறை தொடர்பாகக் கவனத்திலெடுக்கப்பட வேண்டுமெனப் புலிகள் தெளிவாகக் கூறியுள்ளனர். வடகிழக்கில் சமஷ்டி ஆட்சிமுறையில் இவை எவ்வாறு உள்வாங்கப்படலாமென இறுதித்தீர்விலே முடிவெடுக்கப்படும்வரை இக்கட்டமைப்புகள் நடைமுறையிலிருக்குமென அன்டன் பாலசிங்கம் கூறியுள்ளார். பிரபாகரனுக்கு எதிராக 200 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள போதிலும் தாம் சமாதான முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபடப்போவதாகப் புலிகள் கூறுகின்றனர். சமாதானத்தைக் குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டோமெனக் கடற்புலிகள் உறுதியளித்துள்ளனர்.

இடைக்கால நிர்வாகச் சபைக்கான தமது கோரிக்கையைப் புலிகள் கைவிட்டனர். அத்துடன் கூட்டுச் செயல்குழுவிற்கான கோரிக்கையையும் அவர்கள் கைவிட்டதுடன் வலிகாமம் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களை உடனடியாக மீளக்குடியேற்றுவதை வலியுறுத்துவதையும் கைவிட்டுள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாகத் தனிநாட்டுக்கான கோரிக்கையைக்கூடக் கைவிட்டுள்ள அவர்கள் இலங்கைக்குள் நியாயமான மாற்றுத் தீர்விற்கும் உடன்பட்டுள்ளதாகத் தெளிவாகக் கூறியுள்ளனர். புலிகளைக் குறைகூறுவோர் நம்புவதுபோல் அல்லது அடிப்படைப் பிரச்சினைகளை முதலிலே பேசுவதற்கு அவர்கள் இணங்கியுள்ளனர். முஸ்லிம் தொடர்பான பிரச்சினைகளையும் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். முன்னொருபோதும் இல்லாத நிலைக்குப் புலிகளை இறங்கி வரச்செய்வதில் ஐதேமு அரசு தனித்து வெற்றி பெற்றிருக்கிறது. யுத்தம் தொடர்பான பயங்கரமான நினைவுகள் மறையத் தொடங்கும் அதேவேளை புலிகளிடமிருந்து அதிகளவு விட்டுக்கொடுப்புகள் வரத் தொடங்கியுள்ளன. சமாதானப் பேச்சுகளை அவதானித்துவரும் பலரது கருத்துகள் பொது அறிவாலன்றிப் புலிகள் மீதான நீண்டகால வெறுப்பாலேயே ஆட்கொள்ளப்படுகின்றன. எனினும் இறுதியில் தமக்குரியதைப் புலிகள் தர வேண்டும். அவர்களின் நிலைப்பாடு தமது



கோரிக்கை கட்டுப்பாட்டுப் பிரதேச எல்லை இல்லாமலாக்கப்பட வேண்டும் என்பதல்ல என்பது அவர்களுக்குத் தெரியும். அத்துடன் அங்கு எல்லைக்கோடு வரையப்படும்.

## புலிகள் இராணுவரீதியில் பலவீனமடைந்தவர்களா? [6]

பாகிஸ்தான், அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகியவற்றின் இராணுவத்தினரைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் எவ்வாறு ஈடுபட வைப்பது என்ற பல யோசனைகளை நாம் வாசித்தும் கேட்டும் வருகிறோம். இரணைமடுவில் இருப்பதாகக் கூறப்படும் புலிகளின் விமானத்தளம் மீது அமெரிக்கா – இலங்கை விமானப்படை கூட்டாகத் தாக்குதல் நடத்த வேண்டுமென ஒரு யுத்ததந்திர வல்லுநர் கூறுகிறார். எனினும் இந்தியா மற்றும் பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் செய்யப்பட வேண்டுமென்ற வற்புறுத்தல்கள் இவ்வாறான வெளிநாட்டு இராணுவம் மூலம் புலிகளுடன் சண்டையிடுவதற்கு எதிராகவே அமைகிறது. புலிகளால் இலங்கை இராணுவத்திற்கு இராணுவரீதியில் அனுகூலங்கள் கிடைக்குமாயின் வெளிநாட்டு உதவியை எவ்வாறு கோரமுடியும்...?

யுத்தநிறுத்த உடன்படிக்கையானது தொடர்ந்தும் நெருக்குவாரத்திற்குள்ளாக்கப்படுகிறது. யுத்தநிறுத்தத்தின் மீதான அழுத்தங்கள் குறைப்பதற்கான எவ்வித நிலைமைகளும் காணப்படவில்லை. இச்சந்தர்ப்பத்திலேயே புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையிலான தந்திரோபாயச் சமநிலை தொடர்பாகவே கேள்வி எழும்பும். புலிகள் தமது பலத்தை அதிகரிப்பதற்கே யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பயன்படுத்தியுள்ளதாகவே தெற்கின் கருத்து அமைந்துள்ளது. புலிகள் பலவீனமடைந்துள்ளதாகப் பாதுகாப்பமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் முடிவுக்கு வந்திருப்பதாக நம்பகரமான அறிக்கை ஒன்று எமக்குக் கிடைத்திருக்கிறது. இது தொழில்சார்ந்த ஒரு கருத்தாகும். அரசியல் நோக்கம் கொண்ட பின்பாட்டு அல்ல. எனினும் இக்கருத்தானது புலிகள் யுத்தநிறுத்த உடன்படிக்கை மூலம் முன்னொருபோதும் இல்லாத வகையில் தமது பலத்தை அதிகரித்துவிட்டனர் என்கின்ற தெற்கின் கருத்துக்கு எதிராகவே அமைந்துள்ளது. புலிகள் விமானப் படையையும் அமைத்துவிட்டார்கள் எனவும் தெற்குக் கூறுகிறது. (இலங்கை இராணுவத்தின் ஊடுருவல்படை புலிகளின் விமானப்படை தளபதி சங்கரை 4 வருடங்களுக்கு முன்கொலைசெய்தபோதிலும்.) ஆகவே புலிகள் இராணுவரீதியில் பலவீனமடைந்துவிட்டார்கள் என எவ்வாறு கூறமுடியும்? நாம் சரியான முறையில் எமது பார்வையைச் செலுத்தினால் தெற்கிலுள்ளவர்களின் கருத்து தொடர்பாகவும் பாதுகாப்பமைச்சுக்

6. *டெய்லி மிரர், 2005 மார்ச் 23.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழுவின் கருத்துத் தொடர்பாகவும் பிரச்சினை எழாது. கடந்த 4 வருடங்களில் புலிகள் எவ்வளவு தூரம் தம்மைப் பலப்படுத்தினார்களோ அதைவிட அதிகமாக இலங்கை இராணுவம் தம்மைப் பலப்படுத்தியிருந்தால் புலிகள் பலவீனமடைந்துள்ளார்கள் என்று கூறலாம்.

அமெரிக்கப் புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் மதிப்பீடு செய்த சில தகவல்களைப் பார்ப்போம். இலங்கை விமானப்படை எம்ஐ–24 யுத்த ஹெலிகொப்டர்களில் பத்து எம்35 ஹெலிகொப்டர்களும் பத்துப் போக்குவரத்து ஹெலிகொப்டர்களும் கொள்வனவு செய்தது. இதனால் விமானப்படையின் யுத்த ஹெலிகொப்டர்கள் 24ஆக உயர்ந்தது. 2001இல் 97ஆக இருந்த இராணுவத்தின் ஆட்லரி 2002இல் 187ஆக உயர்ந்தது. 158ஆக இருந்த துருப்புக் காவிகளின் எண்ணிக்கை 70 வீதத்தால் அதாவது 204ஆக அதிகரிக்கப்பட்டது. 2001இல் யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்படுவதற்குச் சற்று முன்னரான காலப் பகுதியில் ஏற்கனவே தன்னிடமிருந்த 25 யுத்த டாங்கிகளைவிட மேலதிகமாக 40 யுத்தடாங்கிகளை இலங்கை இராணுவம் கொள்வனவு செய்தது. 10 ஆயிரம் விமானப்படையினரே முதலில் இருந்துபோதும் 2002இல் அவ்வெண்ணிக்கை 19300ஆக உயர்ந்தது. 95000ஆக இருந்த இராணுவத்தின் எண்ணிக்கை 118000ஆக உயர்ந்தது. 2001இல் கடற்படையின் எண்ணிக்கை 18 ஆயிரமாக, அதாவது 80 வீதமாக உயர்ந்தது. இத்தொகை 2003 அளவில் 20600 ஆக உயர்ந்தது.

இதனைவிட அமெரிக்க தயாரிப்பான கரையோரக் கண்காணிப்புப் படகுகளையும் இலங்கைக் கடற்படை கொள்வனவு செய்துள்ளது. இவற்றை வைத்துப் பார்க்கும்போது புலிகளைவிட இலங்கைப் படையினரே பலமாகவுள்ளனர்.

விடுதலைப்புலிகளிடம் ஆறு ஆட்லரி கணைகளும் (முல்லைத் தீவில் கைப்பற்றப்பட்ட 1220எம்எம் ஆட்லரி இரண்டும் ஆனையிறவில் கைப்பாற்றப்பட்ட 152எம்எம் ஆட்லரி ஒன்றும் உள்ளடங்கலாக) மற்றும் 120எம்எம் மோட்டார்களுக்கான 2 பாட்டரிகளும் உள்ளன. இராணுவத்திடம் 187 ஆட்லரிகள் உள்ளன. மரபு வழிப்போரில் புலிகளைவிட இராணுவமே பலம் பொருந்தியதாக உள்ளது.

ஆட்லரிகள் மிகவும் பாரமானவை நடுக்கடலுக்குக் கப்பல்கள் மூலம் கொண்டுசெல்வது கடினம். 130எம்எம் ஆட்லரிகளைக் கப்பலில் ஏற்றுவதற்குப் பிறிமாமா ஆலைப் பகுதியிலுள்ள பாரம் தூக்கிகளையே இராணுவம் பயன்படுத்த வேண்டியிருந்தது, யுத்தநிறுத்த உடன்படிக்கை மூலம் புலிகள் தம்மைப் பலப்படுத்துகிறார்கள் என அலட்டிக்கொள்பவர்கள் முக்கிய விடயத்தை தவறவிட்டுவிடுகிறார்கள்.



இலங்கை இராணுவத்திடமிருந்து கைப்பற்றும்வரை புலிகளிடம் ஆட்லரிகளோ கவசவாகனங்களோ இருக்கவில்லை. சிறிய பல்குழல் ஏவுகணை மற்றும் அதிகலிபர் மோட்டார் என்பனவே யுத்தகாலத்தில் புலிகளால் வெளியிலிருந்து கொள்வனவு செய்ய முடிந்தது. புலிகளால் வன்னிக்கு எடுத்துவரக்கூடிய சிறிய ரக ஆயுதங்கள் இராணுவச் சமநிலையிலோ அல்லது மரபுவழிப்போரிலோ எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது. செக் குடியரசுத் தயாரிப்பான ஜிலின் இஸட் – 143 ரக விமானங்கள் இரண்டு அல்லது மூன்று வைத்திருப்பது மரபுவழிப் போரை மாற்றி அமைக்கும் என யார் கூறியது?

ஆதலால் முந்தைய நிலைமையுடன் ஒப்பிடுகையில் கடல், வான் மற்றும் இராணுவரீதியில் இலங்கைப்படையினர் முன்னெப்போதையும்விடத் தற்போது பலமாக உள்ளனர்.

புலிகள் தமது பலத்தை அதிகரித்துவிட்டார்கள் என்ற பீதி நிலவுகின்றபோதிலும் இலங்கை இராணுவம் தன்னை இலங்கையின் பலம் மிக்க இராணுவப்படையாக வளர்த்துவிட்டது.

இருதரப்பினரினதும் இராணுவரீதியான பலங்களை எடுத்து நோக்கும்போது இந்நாட்டின் இராணுவச் சமநிலை அவர்களின் சார்பாகவே உள்ளது. இலங்கை ராணுவத்திற்கு தமது இராணுவ வெற்றிகளை அறிக்கையிடுவதைத் தவிர வேறெதுவும் இருக்கவில்லை. ஆனால் புலிகள் கருணாவின் வெளியேற்றத்தால் தமது 3000 மேற்பட்ட போராளிகளையும் ஆயுதங்களையும் இழக்க நேர்ந்தது. கடற்புலிகள் தமது ஆயுதத் தளவாடங்களில் கணிசமானவற்றை இழந்துவிட்டதாக ராஜதந்திர அளவிலும் பாதுகாப்புத் தரப்பிலும் நம்பிக்கை நிலவுகிறது. ஆனால் இலங்கை இராணுவம் கடந்த 3 வருடங்களாக இப்படியானவற்றால் பாதிக்கப்படவில்லை. எனவே புலிகள் தம்மைப் பலப்படுத்திவிட்டார்கள் என எவ்வாறு கூற முடியும்? இந்நிலைமைகளை எடுத்துப் பார்க்கும்போது புலிகள் ரணில் விக்கிரமசிங்க அரசுடன் யுத்தநிறுத்தத்தில் கையெழுத்திட்டபோது இருந்ததைவிடத் தற்போது பலவீனமடைந்துவிட்டனர் என்பது தெளிவாகும்.

இந்நிலைமை தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்றே இலங்கை அரசு விரும்புவதுடன் புலிகள் தமது பலத்தை அதிகரிப்பதற்கான சகல வழிகளையும் தடுக்கிறது. இது விடுதலைப்புலிகளுடன் சுனாமி கூட்டுக்கட்டமைப்பு உட்பட எந்த ஒரு ஏற்பாட்டிற்கும் வருவதற்கான அரசின் ஆர்வத்தை வெகுவாகக் குறைக்கும்.

தமக்குச் சாதகமான இந்த இராணுவரீதியிலான சாதகத்தன்மையைப் புலிகள் இன்னமும் பலவீனமாகும்வரை நீடிக்க வேண்டுமென்பதே சந்திரிகா அரசின் ஆசையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு மாறுபட்ட நிலை இங்குக் காணப்படுகிறது. ஒரு பக்கம் புலிகளால் தமக்கு இராணுவரீதியில் அனுகூலமுள்ளதாக இலங்கை அரசு கூறுகிறது. ஆனால் மறுபக்கம் மீண்டும் ஒரு யுத்தம் வெடித்தால் வெளிநாட்டு இராணுவம் மூலம் புலிகளை இந்நாட்டிலிருந்து அழிக்க வேண்டுமெனச் சந்திரிகாவின் அரசாங்கமும் விடுதலைப்புலிகளை அழிக்க நினைக்கும் யுத்த நிபுணர்களும் விரும்புகின்றனர்.

பாகிஸ்தான், அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகியவற்றின் இராணுவத்தினரைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் எவ்வாறு ஈடுபட வைப்பது என்று பல யோசனைகளை நாம் வாசித்தும் கேட்டும் வருகிறோம். இரணைமடுவில் இருப்பதாகக் கூறப்படும் புலிகளின் விமானத்தளம்மீது அமெரிக்க, இலங்கை விமானப்படைகள் கூட்டாகத் தாக்குதல் நடத்த வேண்டுமென ஒரு யுத்ததந்திர வல்லுநர் கூறுகிறார். எனினும் இந்தியா மற்றும் பாகிஸ்தானுடனான பாதுகாப்பு ஒப்பந்தங்கள் செய்யப்பட வேண்டுமென்ற வற்புறுத்தல்கள் இவ்வாறான வெளிநாட்டு இராணுவம் மூலம் புலிகளுடன் சண்டையிடுவதற்கு எதிராகவே அமைகிறது.

புலிகளினால் இராணுவத்தினருக்கு இராணுவரீதியிலான அனுகூலம் இருக்குமாயின் எவ்வாறு வெளிநாட்டுத் தலையீடு பற்றிப் பேசுவது? இராணுவ அனுகூலத்தின் முக்கியப் பகுதியாக அமைவது இராணுவத்தின் திறமையிலும் துணிச்சலிலும் மக்கள் வைக்கும் நம்பிக்கையாகும். தன்னம்பிக்கையானது அளவிடப்பட முடியாவிட்டாலும் அதுவே இராணுவ அனுகூலத்தின் இன்றியமையாத பகுதியாகும்.

எனினும் இத்தன்னம்பிக்கையானது, இராணுவம் அனுபவிப்பதாகக் கருதப்படும் இராணுவச் சாதக நிலையில் தவறுகின்ற ஒரு கூறாகவே காணப்படுகின்றது என்பதையே ஜனாதிபதி சந்திரிகாவின் செய்கைகளும் அறிவிப்புகளும் புதிய சிங்களத் தேசியவாதிகளினது கூக்குரல்களும் எடுத்துக்காட்டுகின்றன.

## இராணுவச் சமநிலையிலேயே புலிகள் பேச்சுவார்த்தை நடத்துவர் [7]

இலங்கை, இந்தியப் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தமானது இங்குள்ள இராணுவச் சமநிலையைக் குலைத்துத் தமக்குப் பாதகத்தையே ஏற்படுத்துமெனக் கலாநிதி அன்டன் பாலசிங்கம் கூறுகிறார். சர்வதேசப் பாதுகாப்பு வலைப்பின்னலொன்றை அமைப்பதன் மூலம் இந்த இராணுவச் சமநிலையைக் குழப்புவதற்குப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க முயல்வதாகப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

7. டெய்லி மிரர், 2004 ஜனவரி 28.



2002 ஏப்ரலில் சுவிட்சர்லாந்தில் இடம்பெற்ற ஒரு மகாநாட்டில் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு அடிப்படையாக அமைவது புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்குமிடையிலான இராணுவச்சமநிலையே என்ற எண்ணக்கருவை முன்வைத்தேன் (லெப். ஜெனரால் ஜெரி. டீ. சில்வா இராணுவத்தின் கருத்தை முன்வைத்தார். சதம் ஹவுஸ் விதியின் பிரகாரம் இதன் விபரங்களை என்னால் வெளியிடமுடியாதுள்ளது).

2000 டிசம்பர் அளவில் தாம் இலங்கை இராணுவத்தினருக்கு சமனான நிலையிலுள்ளதாகவும் இச்சமநிலையை எந்தவொரு வெளிநாட்டு இராணுவத்தலையீட்டையும் மீறித் தொடர்ந்து பேண முடியுமெனவும் புலிகள் திருப்தியடைந்ததன் பின்னரேயே அவர்கள் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள முடிவெடுத்ததாக நான் வாதாடினேன்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்தும் பேணுவதற்கோ சமாதானப் பேச்சுவார்த்தைகள் முழுவதையும் தொடருவதற்கோ இந்த இராணுவச் சமநிலை அவசியமென ஏன் புலிகள் கருதுகிறார்கள்?

இராணுவச் சமநிலை என்பது அடிப்படையில் அரசியல் தன்மை கொண்டது என்றும் எனது எண்ணக்கருவைப் பிரபாகரன் ஒரு மீட்க முடியாத யுத்தவாதி / பயங்கரவாதி எனத் திடமாக நம்புபவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். (செப்டம்பர் 11 தாக்குதலில் பின்னரான அமெரிக்காவின் கடுங்கோபத்தினால் புலிகளின் தலைவர் பயந்துவிட்டதாகவும் அதனாலேயே அவர் நிபந்தனையின்றிப் பேச்சுகளுக்கு வந்ததாகவும் அவர்கள் கூறலாம்).

அரசியல் முடிவுகளைப் பேசுவதற்கான வழிமுறை இராணுவப் பலமே எனப் புலிகள் கருதுவதைக் கவனத்திற்கெடுக்க வேண்டும். பேச்சுவார்த்தையைப் பயனுள்ளதாக மேற்கொள்வதற்கு எதிரியின் பேச்சுவார்த்தை தொடர்பான நடத்தையைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கை அரசாங்கத்தின் கடந்தகாலப் பேச்சுவார்த்தை தொடர்பான நடத்தை என்னவாக இருந்தது? எப்போதெல்லாம் தமிழர்களின் கோரிக்கைகளைப் பலவீனப்படுத்த முடிந்ததோ அல்லது இராணுவ ரீதியான அழுத்தங்களுக்கு தாம் முகம்கொடுத்ததோ அப்போதுதான் இலங்கை அரசு பேச்சுவார்த்தைகளுக்கு வந்தது.

இரண்டு சந்தர்ப்பங்களில் மட்டுமே இலங்கை அரசு தீர்வுகாணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தியது. முதலாவதாக மாவட்ட அபிவிருத்திச் சபைகளையும் இரண்டாவதாக மாகாணசபைகளையும் குறிப்பிடலாம். முந்தையது தமிழர்களின் பேச்சுவார்த்தை நிலைப்பாட்டைப் பலவீனப்படுத்தி அவற்றை ஒற்றையாட்சி முறைகள் கொண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்வதாகும். பிந்தியது தவிர்க்க முடியாத இராணுவ அழுத்தங் களால் செய்வதாகும்.

1977இல் தனியரசொன்றை அமைப்பதற்கான மக்களின் ஆணையைக் கேட்டு தேர்தலில் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு 3 வருடங்களுக்குப் பின்னர் அதிகாரப்பரவலாக்கல் போன்ற போலியான தோற்றப்பாட்டைக் கொண்ட மாவட்ட அபிவிருத்திச் சபை எனும் கருத்தை முன்வைத்தது. இந்திய இராணுவப் படையெடுப்பிற்குப் பயந்து ஜே.ஆர். ஜயவர்தன இலங்கை–இந்திய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.

ஆதலால் இலங்கை அரசின் பேச்சுவார்த்தை தொடர்பான நடத்தைக்கு அழுத்தம் கொடுப்பதற்கு இராணுவரீதியிலான அழுத்தமே முக்கியமெனப் புலிகள் கருதுகின்றனர். மாறாக இலங்கை அரசாங்கத்திடம் அசைக்க முடியாத இராணுவ பலம் இருக்குமாயின் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகள் அனைத்தும் கைவிடப்படுவதையே இலங்கை அரசாங்கம் நாடும்.

இதனையே பெரும்பாலான தமிழர்களும் கூறுவர். 2000 டிசம்பர் 24ஆம் தேதி புலிகள் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை அறிவித்தபோது ஜனாதிபதி என்ன செய்தார்? இதைச் சடுதியாகவும் சிந்திக்காமலும் நிராகரித்தார். 2001 ஏப்ரல்வரை புலிகள் யுத்தநிறுத்தத்தை நீடித்த போதெல்லாம் அவர் இதனையே செய்தார்.

இராணுவம் ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்த *தீச்சுவாலை (அக்னிகீல)* இராணுவ நடவடிக்கை வெற்றி அடையும் என்ற எதிர்பார்ப்பிலேயே அவர் இவ்வாறு செய்தார். *தீச்சுவாலை* இராணுவ நடவடிக்கையானது வெற்றிபெற்றிருந்தால் இராணுவத்தை மேலும் ஆனையிறவு நோக்கி நகருமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருப்பார். இதனால் பேச்சுவார்த்தையைத் தொடங்குவது தொடர்பான பிரச்சினையை இன்னும் காலம் தாழ்த்தியிருப்பார் என்கிறார்கள் புலிகளின் தளபதிகள்.

இராணுவத்திற்குத் தாக்குதல் திட்டங்களை வகுப்பதற்கும் யாழ்ப்பாணத்திலே நிலைகொள்வதற்கும் நோர்வே தெரிந்தோ தெரியாமலோ சந்தர்ப்பத்தை வழங்கிவிட்டது. நோர்வேயுடன் கலந்தாலோசித்த பின்னர் 2000இல் கிறிஸ்மஸ் தினத்திற்கு முன்தினம் விடுதலைப்புலிகளால் பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்த காலப்பகுதியில் புலிகளுக்கெதிராக யுத்தம் இல்லாமையினால் இக்காலப்பகுதியில் இராணுவம் தனது படைகளை ஒன்று திரட்டிப் பயிற்சிகளை வழங்கித் தன்னைப் பலப்படுத்தியது.



இச்சந்தர்ப்பம் கிடைத்திருக்காவிட்டால் தீச்சுவாலை ராணுவ நடவடிக்கைக்காக இராணுவத்தினரைத் தயார்படுத்த முடியாமல் போயிருக்கும். இத்தாக்குதல் முஸ்தீபுகள் பற்றி நோர்வே, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் அறியாமலில்லை.

யாழ்குடாநாடு மீதான தனது பிடிப்பைக் கொழும்பு வலுப்படுத்த வேண்டுமானால் யாழ்குடாநாட்டின் தென்பகுதிப் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட வேண்டுமென இலங்கை இராணுவத்தளபதிகள் அப்போது வலியுறுத்தினர்.

சுண்டிக்குளத்திற்கும் நாகர்கோவிலுக்குமிடையிலான ஆனையிறவுக்கான பாதை மற்றும் படைகளை நிலைநிறுத்துவதற்கான பளைப் பிரதேசம் என்பனவற்றைக் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கு அவர்கள் குறியாக இருந்தனர். எனினும் இவை ஈழப்போரின் யுத்த சமநிலையில் ஆகக்குறைந்தது புவியியல்ரீதியாகவேனும் புலிகளுக்குச் சார்பாகவே இருந்தது.

வரலாற்றுரீதியாகவே யாழ்குடாநாட்டின் தென்பகுதிகளே பாதிப்புறும் பிரதேசங்களாக இருந்தன. காலனித்துவக் காலத்திலும் அதற்கு முன்னரும் யாழ்குடாவைக் கைப்பற்ற முனைந்த படைகள் முதலில் பளை மற்றும் இயக்கச்சியை உள்ளடக்கிய பச்சிலைப்பள்ளி பிரசேதத்தினூடாகவே தமது நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

1628 செப்டம்பர் 16ஆம் தேதி பெருமளவிலான படையெடுப்பாளர்கள் பச்சிலைப்பள்ளியில் நுழைந்து யாழ்ப்பாணத்திலிருந்த போர்த்துக்கீசியர் ஆட்சியாளருக்கெதிராக அங்கு அரண்களை அமைத்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து பெரும்பாலான தமிழர்கள் இப்படையெடுப்பாளர்களுடன் இணைந்துகொண்டதாகக் கூறப்படுகிறது. படையெடுப்பாளர்கள் விரைவாக முன்னேறி 13 நாட்களாகக் கோட்டையை முற்றுகையிட்டனர். அடுத்த வருடமும் போர்த்துக்கீசியர்கள் இவ்வாறான ஒரு அச்சுறுத்தலுக்குள்ளாகினர். படையெடுப்பாளர்களைப் பச்சிலைப் பள்ளியிலேயே தோற்கடித்ததாலேயே அவர்களால் தொடர்ந்தும் யாழ்குடாநாட்டைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடிந்தது.

ஆனையிறவை வைத்திருப்பவரே யாழ்ப்பாணத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என அண்மையில் வன்னியில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான பால்ராஜ் கூறினார். 2001 டிசம்பரில் புலிகள் ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தைப் பிரகடனப்படுத்த முடிவெடுக்கும் முன் புலிகள் இராணுவச் சமநிலையை அடைய ஏதுவாக இருந்த விடயம் திருகோணமலையின் தென்பகுதியை அவர்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தமையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருகோணமலைத் துறைமுகத்திற்கு எதிராக மூதூரிலே புலிகளால் அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அதிகம் எழுதப்பட்டுள்ளது. திருகோணமலை மற்றும் மூதூர்ப் பிரதேசங்கள்மீதான பிரபாகரனின் பிடிப்பும் அங்கு அவர் நிலைநிறுத்தியுள்ள படைகளும் அவரது பேச்சு வார்த்தைத் தந்திரரோபாயத்திற்கு அடிப்படையாக அமைந்த யுத்தச் சமநிலையைக் காட்டுகிறது.

இச்சமநிலையைத் தனது பக்கம் சாய்ப்பதற்காக அரசாங்கத்தால் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அது ஆபத்தானதாகும். யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையில் தான் பலமாக இருக்கும் நிலையில் புலிகளின் தலைவர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகிறார். இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் இது தொடர்பாக எதுவும் செய்யாது.

பாரிய செலவுக்கு மத்தியில் பெறப்பட்ட இராணுவச் சமநிலையானது குழம்பும்வரை புலிகள் சமாதானத்திற்கான கதவைத் திறந்தே வைத்திருப்பார்கள். ஆதலால் தெற்கின் அரசியல் மாற்றங்கள் இக்கதவை அடைக்க ஜனாதிபதியும் பிரதமரும் பேச்சுவார்த்தைகளை விரைவில் தொடங்க வேண்டும்.

### மூன்றரை வருடகால யுத்தநிறுத்தத்தின் பின்னரும் யுத்தமே ஒரு தெரிவாக உள்ளது [8]

புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான சமாதானப் பேச்சுகளுக்கு அடித்தளமாக அமைவது யுத்தநிறுத்த ஒப்பந்தமாகும். தெற்காசியாவின் மிகவும் உக்கிரமானதொரு உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த இதைப் பலரும் வரவேற்றனர். எனினும் இதில் சிக்கலும் இருந்தது.

மூன்றரை வருடங்களாக நீடித்த இந்த தற்காலிக யுத்தநிறுத்தத்தை அலட்சியப்படுத்தக்கூடாது. இது ஒரு தற்காலிகப் போர்நிறுத்தமே. எனினும் இது இவ்வளவு தூரம் நீடித்ததைச் சமாதான ஆர்வலர்கள் வரவேற்பர். வீணான அரசியல் விவாதங்களுக்குள்ளாகிக் கவனிக்கப் படாது விடப்படுகின்ற இதன் சில முக்கிய அம்சங்களை எடுத்து நோக்க வேண்டும்.

யுத்தநிறுத்தமானது எவ்விதப் பெரிய வீழ்ச்சிகளுக்கும் உட்படாமல் மூன்றரை வருடங்கள் நீடித்துள்ளபோதிலும் ஒரு நிரந்தரமான சமாதானத்தை அடைவதில் வெற்றிபெறவில்லை. நிரந்தரச் சமாதானம் ஏற்படுத்துவதற்கான ஒரு அடிப்படையையேனும் இது உருவாக்கவில்லை.

8. நோர்த் ஈஸ்டர்ன் ஹெரால்ட், 2004 நவம்பர் 21.



இருதரப்பினர் தொடர்பான கண்காணிப்புக் குழுவின் புள்ளிவிபரத் தகவல்களை ஆராய்வது இத்தருணத்தில் பயனற்ற விடயமாகும். யுத்த நிறுத்த மீறல்களுக்கும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் ஸ்திரத்தன்மைக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. ஏனெனில், இருதரப்பினரும் எல்லைப் பிரதேசங்களில் தமது மரபு வழிப்படைகளை நிலைநிறுத்தியுள்ளனர். இப்படைகள் எப்போது, ஏன் சண்டையிடுவது என்பது அவர்களுடைய தலைவர்களின் முடிவிலேயே தங்கியுள்ளது. எனினும் இடம்பெறுகின்ற யுத்தநிறுத்த மீறல்களுக்கும் இதற்கும் எவ்விதத் தொடர்புமில்லை. போர் மற்றும் சமாதானத்தைப் பற்றிக் கண்காணிப்புக் குழுவின் புள்ளி விபர தகவல் எதனையும் கூறுவதில்லை. புலிகள் பாரிய யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபட்டதாக இராணுவம் குற்றம்சாட்டினால் பதிலுக்குப் புலிகள் இராணுவத்தினரே பொது இடங்களிலிருந்து வெளியேறாமலும் துணை இராணுவக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையாமலும் விடுவதன் மூலம் தமது உறுதிமொழிகளை நிறைவேற்றவில்லை எனக் கூறுவர்.

சிங்கள அரசின் கபடத்தனமான செயல்பாட்டின் அடிப்படையிலேயே யுத்தநிறுத்த உடன்படிக்கை கொண்டு செல்லப்படுகிறது. இலங்கையின் எந்தவொரு சட்டத்தின் அடிப்படையிலும் யுத்தநிறுத்த உடன்படிக்கை தயாரிக்கப்படவில்லை. இது முற்றிலும் அரசியலமைப்புக்கு முரணானதாகும். எனினும் சிங்களக் கடும்போக்காளர்களின் கூக்குரலுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் மத்தியிலும் சிங்கள அரசு கடந்த மூன்றரை வருடங்களாக யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடித்துள்ளது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைச் செல்லுபடியாக்கச் செய்வதற்காக நீதிமன்றத்துக்குச் செல்லும் துணிவு சில சிங்களத் தேசியவாதிகளுக்கே இருந்தது. யுத்தத்தை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவருவதற்காக புலிகளும் அரசும் பேச்சுகளில் ஈடுபட ஆரம்பத்திலிருந்தே தமிழர்கள் பின்வருமாறு வாதித்து வந்தனர். அதாவது, இந்நாட்டின் சட்டத்திற்கு அப்பால் சென்று யுத்தநிறுத்த ஒப்பந்தம் மேற்கொண்டதுபோல் அரசியலமைப்புக்கு வெளியே சென்று இடைக்கால நிர்வாகச் சபையொன்றை அமைப்பதற்குச் சிங்கள அரசுக்கு போதியளவு சாத்தியப்பாடு இருப்பதாக அவர்கள் வாதித்தனர்.

எனினும் இது அரசியலமைப்புக்கு முரணானது எனக் கைவிடப்பட்டது. யுத்தம் இல்லாமல் செய்யப்பட்டதால் யுத்தநிறுத்த ஒப்பந்தம் சட்ட அந்தஸ்தைப் பெறுகிறது. தெற்கில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் சட்ட முறையானது எனக் குரலெழுப்பியவர்கள் தற்போது அமைதியாக உள்ளனர். ஆகவே யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்பாகச் சிங்கள அரசியல் வட்டாரத்தில் பொது உடன்பாடு நிலவுவதுபோல் தோன்றுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதே முறையில் இடைக்கால நிர்வாகச் சபையும் உருவாக்கப்பட வேண்டுமெனத் தமிழ்த் தரப்பின் கோரிக்கை தொடர்ச்சியாக மறுக்கப் பட்டுள்ளது. இதனால் தமிழர்கள்மீது சிங்களவர்களால் புரியப்பட்ட கபடத்தனமான செயல்பாட்டின் அடிப்படையிலேயே யுத்தநிறுத்த உடன்படிக்கை கொண்டுசெல்லப்படுகிறது எனக் கூறப்படுகிறது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை மூலம் இலங்கை அரசு தம்மை எப்படிக் கட்டுப்படுத்தலாம் என்பதைப் புலிகள் எவ்வாறு ஆராய்ந்தனர் என்பது பற்றி நான் கடந்தகாலத்தில் விரிவாக ஆராய்ந்துள்ளேன். காலப் போக்கில் புலிகள் இயக்கத்திற்குள் பிரிவுகளை ஏற்படுத்தக்கூடிய வகையிலேயே யுத்தநிறுத்த உடன்படிக்கை வடிவமைக்கப்பட்டுள்ள தாகத் தமிழ் ஊடகத் துறையைச் சேர்ந்த சிலரினதும் புலம்பெயர் தமிழர் களினதும் எச்சரிக்கைக்கு மத்தியிலேயே பிரபாகரன் ஐதேமு அரசுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்.

சமூக மற்றும் பொருளாதாரரீதியில் மக்களுக்குக் காத்திரமான ஒன்றையும் செய்ய முடியாத அரசியல் மற்றும் நிர்வாகரீதியில் பலமற்ற புலிகள் இயக்கமானது போரற்ற ஒரு சூழ்நிலை தொடர்ந்து நீடிக்குமாயின் பல பிரிவுகளாக உடையும். இது ஒரு புத்திசாதுரியமான எதிர் நடவடிக்கையாகும்.

சட்டரீதியற்றபோதிலும் போர்நிறுத்த உடன்படிக்கையைக் கடைப் பிடிக்க அரசு ஆர்வம்காட்டிய அதேவேளை இதே முறையைப் பின்பற்றி இடைக்கால நிர்வாகச் சபையை அமைக்க அரசின் செயல்பாடானது புலிகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையெனப் புலிகளுக்கு எதிரான தமிழ் விமர்சகர்கள் கருதினர்.

இதனாலேயே பல சுற்றுப்பேச்சுகளாலும் அமெரிக்கக் கூட்டுநாடு களின் வற்புறுத்தல்களாலும்கூடப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் உறுப்புரை 4.3ஐ அமல்படுத்த முடியவில்லை. இவ்வுறுப்புரை பின்வருமாறு கூறுகிறது: ‘இருதரப்பினரினதும் உடன்பாட்டின் அடிப்படையின் இந்த ஒப்பந்தமானது திருத்தம் செய்யப்படவும் மாற்றியமைக்கப்படவும் முடியும். எனினும் அவை தொடர்பாக நோர்வே அரசாங்கத்திற்கு எழுத்தில் அறிவிக்கப்பட வேண்டும்’.

மனித உரிமைகள், அரசியல் பன்முகத்தன்மை மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கக் கூடிய வகையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை விரிவுபடுத்தப்பட வேண்டுமென யுத்தநிறுத்த உடன்படிக்கையில் முதல் ஒரு வருட காலப்பகுதியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சமாதான நிபுணர்கள் மற்றும் அரசச் சார்பற்ற நிறுவனங்கள் வலியுறுத்தின.



எனினும் இத்தகைய நிபுணர்கள் இவ்வாறான ஆலோசனைகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள தமது இறைமைக்கு குழி பறிக்கும் நோக்குக் கொண்டவை எனப் புலிகள் நம்பினர். மேலும் இந்நிபுணர்கள் வடகிழக்கிலே இடம்பெறும் இரட்டை வரிவிதிப்பிற் கெதிராகவும் கருத்துக் கூறினர். மனித உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகளை உட்புகுத்துவதுபோல் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் சில ஏற்பாடுகளை உட்புகுத்தி அதன் மூலம் புலிகளின் வருமானத்தைக் கட்டுப்படுத்தவே அவர்கள் எண்ணினர். இலங்கை அரசாலும் புலி களாலும் இரண்டுதடவை வரி விதிப்பது அடிப்படை மனித உரிமை மீறல் எனக் காட்ட முடியுமென அவர்கள் கருதினர். இதன் அடிப்படை யில் இறுதி அரசியல் தீர்வுத் திட்டத்தில் வருமானம் தொடர்பான ஏற்பாடுகள் கண்டறியப்படும்வரை வரிவிதிப்பதை நிறுத்துமாறு புலிகளிடம் கூறலாம் என அவர்கள் கருதினர்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்ற சமாதான நிபுணர்களின் இத்தகைய ஆலோசனைகள் தடைப்பட்டன. ஏனெனில், தமது இராணுவ பலத்திலேயே தமது பேரம் பேசும் சக்தி தங்கியிருப் பதாகவும், தமது படைகளைத் தயார்நிலையில் வைத்திருப்பதற்கு வருமானம் முக்கியமெனவும், இதைக் குறைப்பதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டால், அது தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது தொடர்பான தமது பலத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கை தொடர்பான ஏற்பாடுகளை உட்புகுத்துதல் எனும் வெளிநாட்டு அறிஞர்களின் கருத்தும் இவ்வாறான விளைவையே ஏற்படுத்துமெனப் புலிகள் கருதினர்.

தமது மரபு வழிப் போர்த்திறனைத் தக்கவைத்துக்கொள்வதற்கு மக்களிடமிருந்து எவ்வளவு பணம் தேவைப்பட்டதோ அதேபோல் தமது படைகளைத் தொடர்ந்து வைத்திருப்பதற்குரிய சூழலை உருவாக்கு வதற்கும் தமது நிர்வாகக் கட்டமைப்புகளைப் பேணுவதற்கும் மக்களின் அணுக முடியாத ஆதரவும் புலிகளுக்குத் தேவைப்படுகிறது. சிங்கள அரசுடன் பேரம் பேசுவதற்குப் பெரும்பாலான தமிழர்களின் ஒட்டு மொத்த அரசியல் உறுதிப்பாடும் வேண்டுமெனப் புலிகள் கருது கின்றனர். இந்த அரசியல் உறுதிப்பாடானது சீர்குலைக்கப்பட்டு ஒற்றையாட்சிக்குள் தீர்வுகாண்பதற்குத் தமிழர்கள் தயாரானால் புலி களின் அரசியல் மற்றும் இராணுவக் கட்டமைப்புகள் பயனற்றுப் போய்விடும். இதற்காகவே நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டுமெனக் கூறப்படுவதாகக் கருதிய புலிகள் இது தொடர்பாக கவனமாக இருந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதனால் இந்த ஏற்பாட்டை உட்புகுத்துவதற்குப் புலிகள் விரும்ப வில்லை. வேறு பல இடங்களில் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இவ்வகையான ஏற்பாடுகள் உட்புகுத்தப்பட்ட சூழ்நிலைகளைப் புலிகள் ஆராய்ந்தனர்.

இப்படியான சில ஏற்பாடுகள் அடக்கியாளும் உபகரணங்களாகு மெனப் புலிகளுக்கு நெருங்கிய வட்டாரமொன்று 2 வருடங்களுக்கு முன்னர் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் இறைமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டை ஸ்திரப்படுத்தும் வகையில் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் நியமங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது கையெழுத்திடப்படுவதற்குமுன் இலங்கையின் இறைமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாடு என்பன பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்தன. இலங்கையின் அரசக் கட்டமைப்பு முற்றாக மறுசீரமைக்கப்பட்டாலேயே இலங்கையின் இறைமையும் ஆட்புல ஒருமைப்பாடும் பாதுகாக்கப்படும். இதை அமைதியான முறையில் பேச்சுகள் மூலம் பெற்றுக்கொள்வதற்கு ஏற்றவாறு ஐதேமு அரசும் பொதுஜன முன்னணி அரசும் யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை.

யுத்தநிறுத்த உடன்படிக்கையானது புலிகளுக்கும் அரசிற்குமிடையில் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் முற்றாகத் தவறிவிட்டது. படைபலத்தின் சமநிலையிலேயே இது தங்கி இருக்கிறது. கட்டுப்பாட்டின் எல்லையே இம்மூன்றரை வருடகால யுத்த நிறுத்தத்தின் திகைப்பூட்டும் உண்மையாகும். ஆக மூன்றரை வருட கால யுத்தநிறுத்தத்தில் யுத்தமே தெரிவாகவுள்ளது.

•



# 7

## நோர்வேயின் அனுசரணையில் சமாதானப் பேச்சுகள்

அன்டன் பாலசிங்கத்தின் *போரும் சமாதானமும்: விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டமும் சமாதான முயற்சிகளும்* எனும் நூலின் இறுதி அத்தியாயத்தை முன்வைத்து ஒரு மீளாய்வு

காயத்திரி விக்கிரமசிங்க

**சுருக்கம்**

அன்டன் பாலசிங்கத்தின் 'போரும் சமாதானமும்: விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டமும் சமாதான முயற்சிகளும்' எனும் நூலின் இறுதி அத்தியாயம் தொடர்பான இந்த மீளாய்வுக் கட்டுரையானது தனியரசுக் கான தமது போராட்டத்தில் புலிகளின் பார்வை மற்றும் இலங்கை அரசாங்கத்துடன், அதாவது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் இறுதி ஆட்சிக்காலப் பகுதியிலும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுடனும், பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அவர்கள் தீர்மானித்தது குறித்தும் ஆராய விளைகிறது. பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்குப் புலிகள் முடிவு எடுத்ததற்கான பின்னணி, இம்முடிவிற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகள், இருதரப்பினரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு வழிவகுத்த சம்பவங்கள், சோகத்தில் முடிவடைந்த தமிழ் மக்களின் ஆரம்பகால மட்டற்ற மகிழ்ச்சி, முன்மொழியப்பட்டிருக்கும் இடைக்கால நிர்வாகசபை, உயர்பாதுகாப்பு வலயத்தினால் ஏற்பட்ட பொதுமக்களின் கடுங்கோபம், ஐக்கிய தேசிய முன்னணி அரசுமீதான புலிகளின் விமர்சனமும் பேச்சுவார்த்தையி லிருந்து விலகுவதற்கு அவர்கள் எடுத்த முடிவும் என்பன தொடர்பான விரிவான விளக்கங்கள் இங்குத் தரப்படுகின்றன. ஆதலால் 'நோர்வேயின் அனுசரணையில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுகள்' என்ற தலைப்பின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கீழான மீளாய்வின் முக்கியத்துவமானது விடுதலைப்புலிகளின் தரப்புப் பார்வையின்படி தெரிவிக்கப்பட்டவாறு 2002–2003 காலப்பகுதியில் புலிகளுக்கும் ஐதேமு அரசிற்குமிடையில் இடம்பெற்ற பேச்சு வார்த்தையில் காணப்பட்ட சிக்கல்களை எடுத்து நோக்கும் பார்வை யிலேயே தங்கியுள்ளது.

## அறிமுகம்

பிரபாகரனின் அரசியல் ஆலோசகராகவும் தத்துவாசிரியராகவும் இருக்கும் அன்டன் பாலசிங்கம் புலிகள் இயக்கத்திலே அதிகம் செல்வாக்குள்ளவர்களில் ஒருவராவார். கடந்த 26 வருடங்களாகப் புலிகளின் முக்கிய உறுப்பினராக இருந்துவரும் அவர், நோர்வேயின் அனுசரணையுடனான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதற்கு முக்கியப் பங்காற்றியதுடன் கடந்த ஆறு சுற்றுப் பேச்சுகளில் புலிகளின் தலைமைப் பேச்சுவார்த்தையாளராக, புலிகளின் முடிவெடுக்கும் நடவடிக்கை களில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்.

இலங்கைப் பேச்சுவார்த்தைகளில் நோர்வே அனுசரணை வழங்கிய காலப்பகுதியிலே இக்கட்டுரை பார்வைச் செலுத்துகிறது. இக்கட்டுரை யானது புலிகளுக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்குமிடையிலான பேச்சுவார்த்தையையும் புலிகளின் தனியரசு என்கின்ற இறுதி இலக்கை அடைவதற்கான போராட்டத்தையும் விரிவாக விளக்குகிறது. தனது பிரத்தியேக அனுபவங்களைக்கொண்டு ஐக்கிய தேசிய முன்னணி அரசால் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையில் காணப்பட்ட குறை பாடுகளை நுண்ணியமாக ஆராய்வதுடன் புலிகளால் மேற்கொள்ளப் பட்ட முயற்சிகளை வரைபடரீதியாக அளவிடுகின்றார்.

## நிகழ்ச்சிகளின் சுருக்கம்

யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்படுவதற்கு வழிவகுத்த விடயங்களை விளக்கியவாறு பாலசிங்கம் தனது இறுதி அத்தியாயத்தை ஆரம்பிக்கிறார். இலங்கையின் ஒரேயொரு சர்வதேச விமானநிலையம் மீதான தாக்குதல் மற்றும் தோல்வியில் முடிவடைந்த–பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் புலிகளை யாழிலிருந்து வெளியேற்றுவதற் கான – தீச்சுவாலை இராணுவ நடவடிக்கை, இதிலேயே புலிகள் வடக்கிலே பெருமளவு நிலப்பரப்பைத் தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்ததுடன் அரசாங்கத்திற்குச் சமமான பலத்தையும் அவர்கள் பெற்றுக்கொண்டமை போன்ற சம்பவங்களை விசேடமாகக் குறிப்பிடு கின்றார். எனினும் பொதுஜன முன்னணி (பிஏ) அரசாங்கத்தின் நேர்மைத் தன்மை தொடர்பாகப் பேச்சுவார்த்தையின் ஆரம்பத்திலிருந்தே புலி களுக்குச் சந்தேகம் இருந்ததாகக் காட்டப்படுகிறது. அமைதித்தீர்வு ஒன்றைக் காணுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாகச் சர்வதேசத் திற்குக் காட்டுகின்ற அதேவேளை, திரைமறைவில் இராணுவத்தைப் பலப்படுத்திச் சமாதானத்திற்கான யுத்தமொன்றை நடத்துவதற்கு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் மூடிமறைப்பாகவே இது புலிகளால் கருதப்பட்டது.



பின்னர் 2001 பொதுத்தேர்தலில் ஐதேமு அரசு பதவிக்கு வந்ததையும் இதனால் நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண முடியும் எனப் புலிகள் நம்பிய தாகவும் பாலசிங்கம் கூறுகிறார். பொதுஜன முன்னணி அரசுடனும் ஐதேமு அரசுடனும் பேச்சு நடத்துவதில் வித்தியாசம் என்னவெனில், ஐதேமு அரசைப் புலிகள் நம்பியமை என்றும் அத்துடன் மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஐதேமு அரசு நடவடிக்கை எடுத்தமை போன்ற விடயங்களால் தாம் அவர்கள் மீது நம்பிக்கை வைத்ததாகவும் இவையே யுத்தநிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடுவதற்கு வழிகோலிய தாகவும் கூறப்படுகிறது. ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் விரிவாக ஆராயப்படுவதுடன் இருதரப்பினரும் சமஷ்டி முறையை ஆராய்வது தொடர்பாக முடிவெடுத்த மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தையும் எடுத்துக்காட்டப்படுகிறது. உள்ளக மற்றும் வெளியக சுயநிர்ணய உரிமை தொடர்பான புலிகளின் வரைவிலக்கணம் தொடர்பாகவும் விளக்கப்படுகிறது.

பின்னர் பேச்சுவார்த்தைகளிலிருந்து தற்காலிகமாக ஒதுங்குவதற்குப் புலிகள் முடிவெடுத்தமைக்கான காரணங்கள் விளக்கப்படுகின்றன. அமெரிக்காவில் நடந்த வாஷிங்டன் மகாநாட்டிற்குப் புலிகள் அழைக்கப் படாமை மற்றும் ஐதேமு அரசிடமிருந்து பாதுகாப்பு, மக்கள் தொடர் பாடல் மற்றும் உள்துறை அமைச்சுகள் ஜனாதிபதியால் திடீரெனப் பறிக்கப்பட்டமை என்பனவே பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகிறது. இவை தொடர்பாக விரிவாக குறிப்பிடுவதுடன் இவை பேச்சுவார்த்தைகளை மீளத் தொடங்குவதிலுள்ள தாக்கம் பற்றியும் குறிப்பிடப்படுகிறது. ஏனெனில் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாகப் பிரதமரிடம் அப்போது அதிகாரம் எதுவும் இல்லாத காரணத்தால் பேசுசுவார்த்தை மீளத் தொடங்கப்படும் சாத்தியம் மிகக் குறைவாகவே இருந்ததாகப் புலிகள் நினைத்தனர். புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை தொடர்பான ஜனாதிபதியின் போக்கு மற்றும் குறிப்பாக அமைச்சுகள் பறிக்கப் பட்டதன் பின்னும் 2004இல் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னும் அப்போதைய வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளியிட்ட கருத்துகள் என்பன யுத்தநிறுத்தத்தில் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தியதாகக் கூறப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## விளக்கங்களும் விமர்சனங்களும்

ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான விரிவான விளக்கத்தில் சமஷ்டிமுறை மற்றும் உள்ளக, வெளியக சுயநிர்ணய உரிமை தொடர்பாக விரிவாக விளக்கப்படுகிறது. பிரிந்து செல்வதை அல்லது வெளியக சுயநிர்ணய உரிமையை நிபந்தனையின்றிப் புலிகள் நிராகரித்து விட்டார்கள் என்றெல்லாம் அர்த்தப்படுத்தப்பட்ட ஒஸ்லோ பிரகடனம் என எவ்விதப் பிரகடனமும் செய்யப்படவில்லை எனக் கூறுகிறார். தமிழர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையானது மறுக்கப்படுமானால் தனியாகப் பிரிந்து சுதந்திரத் தனியரசை அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்கின்ற புலிகள் தலைவரின் 2002 மாவீரர் தின உரையை எடுத்துக்காட்டுகிறார். அவ்வுரையை மேலும் பின்வருமாறு எடுத்துக் காட்டுகிறார்:

> எமது போராட்டத்தின் நோக்கமானது சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டதாகும். சுயநிர்ணய உரிமைக்கான எமது போராட்டத்தில் தொடர்ச்சியாகவே நாம் பற்றுறுதியோடு இருக்கின்றோம். தமிழர் தாயகம், தமிழ்த் தேசியம் மற்றும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை என்பன அரசியல் போராட்டத்தின் அடிப்படை விடயங்களாகும். திம்பு முதல் தாய்லாந்துவரை நாம் இவற்றை வலியுறுத்தி வருகிறோம். இந்த அடிப்படையிலேயே எமது தேசியப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். தனித்துவமான இனம் என்ற அடிப்படையில் அவர்கள் சுயநிர்ணய உரிமை உடையவர்களாவர். இவ்வுரிமை உள்ளக மற்றும் வெளியக சுயநிர்ணய உரிமை என்ற இரண்டு அம்சங்களைக் கொண்டதாகும். உள்ளக சுயநிர்ணய உரிமையானது பிராந்திய சுயாட்சியை வழங்குகிறது.
>
> தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்களில் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழ வேண்டும். அவர்கள் தமது தாயகத்தில் சுயாட்சி அடிப்படையில் வாழ வேண்டும். இதுவே தமிழர்களின் அரசியல் அபிலாஷையாகும். இது உள்ளக சுயநிர்ணய உரிமைக்கான உண்மையான அர்த்தத்தைக் கொடுக்கிறது. உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் எமது தாயகத்தில் பிராந்திய சுயாட்சி மற்றும் சுய அரசாங்கம் என்பவற்றைக் கொண்ட தீர்வுத் திட்டத்தைச் சாதகமாகப் பரிசீலிக்க நாம் தயாராக உள்ளோம். (பக். 400–401)

1970ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் நாடுகளுக்கிடையிலான சிநேகிதபூர்வமான உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு பற்றிய சர்வதேசச் சட்டக் கோட்பாடுகள் தொடர்பான பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள சம உரிமைகள் மற்றும் சுயநிர்ணய உரிமை என்பவற்றை எடுத்துக்காட்டிப் புலிகளின் உள்ளக மற்றும் வெளியக சுயநிர்ணய உரிமை தொடர்பான நிலைப்பாட்டை நியாயப்படுத்துகிறார் பாலசிங்கம்.

உள்ளக சுயநிர்ணய உரிமையானது பொதுவாக உள்நாட்டிலேயே அதாவது இருக்கின்ற அரசுகளுக்கிடையிலேயே, உணரப்படுவதாகவும் இது ஆட்புல ஒருமைப்பாட்டையும் சுதந்திரமான இறைமையுள்ள அரசுகளின் அரசியல் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதாகவும் கூறுகிறார். புலிகளின் கொள்கையானது சர்வதேசச் சட்டக்கோட்பாடுகளுக்கும் ஐநா சபையின் தீர்மானங்களுக்கும் அமைவானது எனத் தனது கருத்தை வலியுறுத்துகிறார். விடுதலைப்புலிகளின் உள்ளக சுயநிர்ணய உரிமையை ஆராய்வது எனும் முடிவானது அவர்கள் பிரிந்து செல்வதைக் கைவிட்டுவிட்டார்கள் எனப் பொருள்படாது என்பதையே இது காட்டுகிறது. இருதரப்பினரும் மற்றும் நோர்வே சமாதானக் குழுத்தலைவரும் கையெழுத்திட்ட நோர்வேப் பேச்சுவார்த்தையில் சமஷ்டி முறையை ஆராய்வது எனும் புலிகளின் முடிவானது உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் பேச்சுவார்த்தையும் சமஷ்டிமுறைக்கான பிரசாரமும் தோல்வியடைந்தால் விடுதலைப்புலிகள் வெளியக சுயநிர்ணய உரிமையை நாடுவார்கள் என்பது வெளிப்படையான விடயமாகும்.

புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. போரால் அழிந்த பிரதேசத்தைக் கட்டியெழுப்பவும் தமிழர் தாயகத்தில் இயல்புநிலையைத் தோற்றுவிப்பதற்கும் தமது அதிகமான பங்களிப்புடன் முடிவெடுக்கக்கூடியதும் சட்ட அந்தஸ்தைத் தரக்கூடியதுமான இந்த இடைக்கால நிர்வாக சபையே அரசாங்கத்தின் அசமந்தப் போக்கிற்குச் சரியான தீர்வாக அமையுமெனப் புலிகள் உணர்ந்ததாகச் சுட்டிக்காட்டப்படுகிறது (பக். 449). பாலசிங்கம் தெரிவித்தவாறு விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் தயக்கமும் பேராசிரியர் பீரிஸின் இடைக்கால ஏற்பாடு என்பனவும் ஏமாற்றம் தருபவையாகவே இருந்தன. அரசாங்கம் அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசினாலும், விடுதலைப்புலிகளுக்குப் பிராந்திய சுயாட்சி வழங்குவதில் அவர்கள் நேர்மையாக இருக்கவில்லை என்பதைக் காட்டுவதாகவே இது கருதப்படுகிறது.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தைத் தம்மைத் தடைசெய்த நாடொன்றில் நடத்துவதற்கு முடிவுசெய்தமை தொடர்பாக அரசாங்கம் கடுமையாக விமர்சிக்கப்படுகிறது. ஐதேமு அரசாங்கம் இதில் தலையிட்டுப் புலிகளையும் இக்கூட்டத்தில் பங்குபெறச் செய்திருக்க வேண்டும் எனவும் பாலசிங்கம் கூறுகிறார். சம அந்தஸ்து வழங்கப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையிலிருந்து இது வேறுபடுகிறது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீள்நிர்மாணம் செய்வதற்கான நிதிகளைப் பயன்படுத்துவதற்கேதுவான நிறுவனமொன்றை அமைப்பதற்கு முன் உறுதிமொழிகளை வழங்குவது பெரிய குறைபாடாகும். வடக்கில் மீள்நிர்மாணப் பணிகளில் புலிகள் ஈடுபடுவதை அரசு விரும்பாததை அது காட்டுகிறது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதுகாப்பு வலைப்பின்னல் ஏற்படுத்துவதில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜப்பான் என்பன ஈடுபடுவது உள்நாட்டு விடயத்தில் ஒரு தேவையில்லாத தலையீடாகக் காட்டப்படுகிறது. சர்வதேசச் சமூகத்தின் பங்களிப்பு ஆரம்பக்கட்டத்தில் இருதரப்பினரையும் ஒரு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு உற்சாகப்படுத்துவதாகவும் அபிவிருத்திப் பணிகளுக்கு உதவுவதற்காகவும் இருந்தது. ஆனால் பின்னர் அது ஆக்கிரமிப்புத் தன்மையுடன் காணப்பட்டதுடன் பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தைப் பொறுத்தே நிதியுதவி வழங்கப்படுமெனவும் கூறியதாகவும் சொல்லப்படுகிறது. புலிகளை அடக்குவதற்கான ரணிலின் தந்திரமான சர்வதேசச் சமூகத்தை ஒரு பாதுகாப்புப் பின்னலாக தயார்படுத்தலில், புலிகள்மீது மட்டும் அழுத்தம் கொடுக்கின்ற அளவுக்குச் சர்வதேசச் சமூகம் செயல்பட ஆரம்பித்ததுடன் இது இங்கிருந்த சமநிலையையும் இலங்கைக்குச் சார்பாக மாற்றியமைத்தது. தம்மைச் சமபங்காளிகளாகக் கருதாது ஓரங்கட்டியமையால் புலிகள் பெரிதும் கோபமடைந்தனர். பிராந்திய வல்லரசான இந்தியாவை ஓரங்கட்டி மேற்குலக நாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாகவும் பாலசிங்கம் விமர்சிக்கிறார். இது சமாதானப் பேச்சில் எதிர்மறையான விளைவைக் கொண்டிருந்ததையே காட்டுகிறது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி மீன்பிடித்தடையைத் தளர்த்தல், பொருளாதாரத்தடையை நீக்குதல் மற்றும் வடகிழக்கிற்கு அத்தியாவசியப் பொருட்களை அனுப்புதல் போன்றவற்றை அமல்படுத்துவதில் அரசு தாமதப் போக்கைக் கடைப்பிடித்ததால் ஐதேமு அரசு தொடர்பாகப் புலிகளின் மனத்தில் எதிர்மறையான எண்ணப்பாடு தோன்றிதாகப் பாலசிங்கம் கூறுகிறார்:

> அரசியல் பேச்சுகள் இடம்பெற வேண்டும் என்ற அடிப்படையில் அமைந்த யுத்தநிறுத்தமானது பலப்படுத்தப்பட வேண்டுமென்பது எமது கருத்தாகும். சமாதானத்தை ஏற்படுத்துவதில் அரசு காட்டும் அக்கறையற்ற போக்கால் நாம் ஏமாற்றமடைந்துள்ளோம். இது பேச்சுவார்த்தை தொடர்பான எமது மக்களின் நம்பிக்கையும் சீர்குலைக்கிறது. *(பக். 372).*

கோயில்கள் மற்றும் பாடசாலைகள் போன்ற பல இடங்களில் இராணுவம் தங்கவைக்கப்பட்டிருப்பது யுத்தநிறுத்த உடன்படிக்கையின் முக்கிய நோக்கமான யுத்தத்தை நிறுத்திச் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான உகந்த சூழலை உருவாக்குதல் என்பதற்குப் பாதகமானதாகும். ஜனத்தொகை கூடிய பிரதேசங்களிலுள்ள காவல் அரண்களைக் குறைப்பதற்கு மறுத்தல் மற்றும் பொதுமக்களைத் தொடர்ந்து துன்புறுத்தல் என்பன பாரதூரமான யுத்தநிறுத்த மீறல்களெனக் காட்டப்படுகின்றன. விடுதலைப்புலிகளுக்கும் கிழக்குமாகாணத் தமிழ் மக்களுக்கும் எதிராகப் படையினரால் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.



> யுத்தநிறுத்த உடன்படிக்கையின் ஒரு தரப்பு என்ற ரீதியில் தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை குறித்து நாம் கவலையடைந்துள்ளோம். வணக்கத்தலங்களிலிருந்து வெளியேறுவதற்குப் படையினர் தயக்கம் காட்டுவது தமிழ் மக்களைக் கோபமுறச் செய்துள்ளதுடன் சமாதானப் பேச்சுகள்மீதான அவர்களது நம்பிக்கையையும் சீர்குலைக்கிறது. *(பக். 371).*

தமது வர்த்தகக் கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் பின்தொடரப்பட்டுத் தாக்கப்பட்டமையையும் அதனால் அதிலிருந்து தமது போராளிகள் தம்மைத் தாமே வெடிக்கவைத்ததையும் குறிப்பிடுகிறார். இவ்வாறான யுத்தநிறுத்த மீறல்களில் கடற்படை ஈடுபட்டிருந்ததாகவும் பேச்சுவார்த்தை முறிவடைவதற்கு இவ்வாறான செயல்பாடுகளே பெரிதும் காரணமாக அமைந்ததாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக்குடியமர வேண்டுமானால் விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் களைய வேண்டுமென அரசும், குறிப்பாக யாழ்மாவட்ட இராணுவத் தளபதியும், வலியுறுத்தியமை தொடர்பாகக் கடுமையாகக் குற்றஞ்சாட்டப்பட்டதுடன் இது யுத்தநிறுத்த உடன்படிக்கையின் நோக்கு எல்லைக்கு முற்றிலும் எதிரானதெனவும் குறிப்பிடப்படுகிறது. ஆயுதங்களைக் கீழே போடுவது என்பது நாம் பிரதிநித்துவப்படுத்தும் மக்களின் பாதுகாப்புடன் நேரடியாகத் தொடர்புபட்டதெனவும் கூறப்படுகிறது:

> எம்மைப் பொறுத்தவரை யுத்தநிலைமையைக் குறைத்தல் மற்றும் இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் என்பன ஒன்றுடனொன்று தொடர்புபட்டதுடன் பிரச்சினையின் தீவிரத் தன்மையைக் குறைத்து அதன் மூலம் மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பதை எடுத்துக்காட்டுவதாகும். இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் மக்களின் வீடுவாசல்களும் அமைதி வாழ்க்கையும் பறிக்கப்படுவதை நியாயப்படுத்தும் உங்கள் நிலைப்பாடானது உங்களால் எடுத்துக்காட்டப்படும் அரசியல் தத்துவக் கோட்பாடுகளுக்கு முரணானதாகும். *(பக். 414).*

இருதரப்பினரின் இராணுவப் பலத்திலேயே யுத்தநிறுத்த உடன்படிக்கை தங்கியிருப்பதால் உயர்பாதுகாப்பு வலயம் இல்லாமலாக்கப்பட்டு அவை பொதுமக்களிடம் விவசாயத்திற்காக வழங்கப்படுதல் இராணுவத்தின் பலத்தைக் குறைப்பதுடன் இருதரப்பினருக்குமிடையிலான இராணுவச் சமநிலையையும் குலைப்பதாக அமையுமென்ற இலங்கை இராணுவத்தின் நிலைப்பாட்டையொத்த கருத்தைக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே தெரிவித்தமை புலிகளை ஆத்திரமடையச் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தப் பிரச்சினையைப் பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவந்து மீளக் குடியமர்த்தலை ஒரு நிபந்தனையாக்குவதுபோல் காணப்பட்ட புலிகளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலைப்பாடானது தற்போது நடைபெறும் பேச்சுவார்த்தையைக் குழப்பும் ஒரு முரட்டுத்தனமான செயல்பாடாகும்.

ஆரம்பத்தில் ஐதேமு அரசைப் பற்றிச் சாதகமாகக் கருத்துத் தெரிவித்த பாலசிங்கம் அடுத்துவரும் அத்தியாயங்களில் ஐதேமு அரசின் செயல் மற்றும் செய்யாமையே பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டதற்குக் காரணமெனக் கூறுகிறார். விடுதலைப்புலிகளின் ஆரம்பக் கோரிக்கைக்கு விரைவாகப் பதிலளித்தமை, தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் பிரதமர் காட்டிய ஆர்வமும் உறுதிப்பாடும், புலிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் தயக்கம் காட்டியது குறிப்பாகத் தாய்லாந்துப் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்னர் தம்மீதான தடையை நீக்குமாறு புலிகள் கோரியபோது தயக்கம் காட்டியது, விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களுக்கு விசா பெறுவதில் ஒத்துழைப்பு வழங்கியது மற்றும் ஆறுசுற்றுப் பேச்சுவார்த்தையிலும் கலந்துகொண்ட புலிகளின் உறுப்பினர்களுடன் சுமூகமாக கலந்துகொண்ட அரசத் தூதுக்குழு போன்ற விடயங்கள் இங்கு உள்ளடக்கப்படுகின்றன. இதுவரை இலங்கையின் பல அரசாங்கங்களுடனும் அரசுத் தலைவர்களுடனும் புலிகள் பேச்சு வார்த்தை நடத்தியபோதிலும் ஐதேமு அரசே நேர்மையாக நடந்ததாகவும் அவர்களுடனான பேச்சுகளின்போதே விடுதலைப்புலிகள் இறுதிப் பேச்சை நோக்கி நகர்ந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. முழுமையாகப் பார்த்தால் பேச்சுவார்த்தை குழம்பியமையால் அரசாங்கத்தின் செயல்கள் மற்றும் முடிவுகளை அவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

ஆனால் மறுபக்கத்தில் நோர்வே அரசானது நடுநிலையாகவும் பக்கச்சார்பற்றும் செயல்பட்டதாகப் பாராட்டுகிறார். ஐதேமு அரசுடனான தொடர்புபோலன்றி நோர்வேயுடனான புலிகளின் உறவு பேச்சு வார்த்தை இடைநிறுத்தப்பட்ட பின்னரும் சுமூகமாகவே காணப்படுகிறது. இலங்கைத் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தை மூலமான ஒரு அரசியல் தீர்வைக் காண்பதற்கான நோர்வேயின் அயராத பங்களிப்பையும் பெறுமதிமிக்க உதவியையும் பாராட்டுவதாக நோர்வேயின் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் தெரிவித்திருந்தார். இந்த உயரிய பங்களிப்பைத் தமிழீழத்திலுள்ள தமிழ் மக்களும் உலகமெங்குமுள்ள தமிழ் மக்களும் மதிப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

## மதிப்பீடு

உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர அனுமதிப்பதற்கு விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழேபோட வேண்டுமென அரசு நிபந்தனை விதித்தது இலங்கை இராணுவம் செய்த மிகப் பெரிய



யுத்தநிறுத்த மீறல்களில் ஒன்றென்பது பாலசிங்கம் எடுத்துக்காட்டும் முக்கியமான விடயங்களில் ஒன்றாகும். இதனால் வடகிழக்கிலுள்ள பொதுமக்கள் பெரிதும் கஷ்டத்திற்குள்ளாவதாகவும் இதனாலேயே தாம் அரசாங்கத்தின்மீது நம்பிக்கையிழந்து பேச்சுவார்த்தையை இடைநிறுத்துவதற்கு முடிவுசெய்ததாகவும் கூறுகிறார். விடுதலைப்புலிகள் தாமே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் எனவும் தாமே அவர்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டுமெனவும் காட்டிக்கொண்டாலும் தனது நாட்டின் பிரஜைகள் அனைவரையும் பாதுகாப்பது இலங்கை அரசின் கடமையாகும். ஆதலால் இருதரப்பினரதும் யுத்தப் பிரதேச எல்லையான உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர அனுமதிப்பது அவர்களின் பாதுகாப்புத் தொடர்பாகக் கவனமெடுக்காததையே காட்டும். இது ஜனநாயக அரசொன்றின் மரபுகளுக்கு முரணானதாகும். எண்ணற்ற பணப்பறிப்புகள், மிரட்டல்கள் மற்றும் அரசியல் எதிரிகளைக் கொலை செய்தல், போன்ற விடுதலைப்புலிகளால் செய்யப்பட்ட யுத்தநிறுத்த மீறல்கள் பற்றிக் குறிப்பிடுவதை முற்றாகத் தவிர்த்துள்ள பாலசிங்கம், அதற்குப் பதிலாக அரசால் செய்யப்பட்ட மீறல்களை எடுத்துக்காட்டுவதிலேயெ முனைப்புக் காட்டுகிறார். அவர் பேச்சுவார்த்தை இடைநிறுத்தப்பட்டமைக்குப் புலிகளையும் பாத்திரமாக்காமல் ஐதேமு அரசுமீதே முறைப்பாடு(புகார்)களைச் செய்கிறார்.

இலங்கை இராணுவத்துக்கெதிராகப் பல வெற்றிகளைப் பெற்றுப் பலமான நிலையிலிருந்தும் பேச்சுவார்த்தை மூலமான தீர்வில் நம்பிக்கை கொண்டதாலேயே புலிகள் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்வந்ததாகவும் பாலசிங்கம் கூறுகிறார். இவ்வாறு கூறுவதன் மூலம் அமெரிக்காவில் செப்டம்பர் 11ஆம் தேதி நடைபெற்ற குண்டுத்தாக்குதலால் ஏற்பட்ட மாற்றங்களை அவர் முற்றாகப் புறக்கணிக்கிறார். இத்தாக்குதலுக்குப் பின் புலிகள் முன்னர் நிதிசேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பல நாடுகள் புலிகளைத் தடைசெய்தன. இதனால் புலிகள் தமது இயக்கத்தை நடத்துவது நெருக்கடிக்குள்ளானது. அதுவரை புலிகளைச் சுதந்திரப் போராளிகள் என வர்ணித்த ஐரோப்பிய ஊடகங்களும் எதிராகச் செயல்படத் தொடங்கின. இது பல அரசியல் ஆய்வாளர்கள் கூறுவதுபோல் சர்வதேச அரங்கில் புலிகளின் பலத்தைப் பெரிதும் குறைத்தது. இதை மறைக்கும் நோக்குடனேயே, பேச்சுவார்த்தைகள் அனைத்தும் தோல்வியடைந்தால் புலிகள் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவார்களெனப் பாலசிங்கம் கூறுகிறார்.

பாலசிங்கத்தின் சில விமர்சனங்கள் வலிதானவையே. ஐதேமு அரசாங்கமானது புலிகள் வாஷிங்டனில் நடந்த உதவிவழங்கும் மகாநாட்டில் கலந்துகொள்வதை உறுதிசெய்யும் எனப் புலிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்பார்த்தமை இவற்றில் ஒன்றாகும். வாஷிங்டன் மகாநாட்டைப் புலிகளை தடைசெய்யாத வேறொரு நாட்டில் நடத்துவதற்கு ஐதேமு அரசு நடவடிக்கை எடுக்காமை அவர்களது தவறாகும்.

கிடைக்கப்பெறும் நிதி உதவியைப் புலிகளுடன் சேர்ந்து பங்கிடுவது தொடர்பில் எவ்வித ஏற்பாட்டையும் செய்யாது, வடகிழக்குப் பிரதேசங் களைக் கட்டியெழுப்புவதற்கான உடன்படிக்கைகள் என்பவற்றில் ஈடுபட்டமை இன்னொரு விடயமாகும். பாலசிங்கம் கூறுவது போன்று இது முதலில் புலிகளுடன் பேசித் தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். டோக்கியோ மகாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்கின்ற புலிகளின் முடிவு விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. ஏனெனில், அரசின் இந்த நடவடிக்கையானது சமாதானப் பேச்சிலோ மீள்கட்டுமானப் பணியிலோ தம்மைச் சமபங்காளியாகக் கருதவில்லை எனப் புலிகளால் எடுத்துக்காட்ட முடியும். இது புலிகளின் வாதத்திற்கும் முக்கியப் பலமாக அமைந்தது.

## முடிவு

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தொடர்பாகக் காலக்கிரம அடிப்படையிலானதும் ஆராய்ச்சி மூலமானதுமான விடயங்களை நூலின் ஆசிரியர் எடுத்துக்கூறுகிறார். சில சமயங்களில் இது பொழுதுபோக்குக் கதைகள்போலவும் காணப் படுகின்றன. 2004 நவம்பர் மாதமளவில் வெளியிடப்பட்ட இப்புத்தக மானது விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தை தொடர்பான நிலைப் பாடுகளை அறிந்துகொள்வதற்காக எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்ட ஒரு நூலாகும். உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட முன்னர் வெளி வந்த இந்நூலின் சில பகுதிகளே மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. இறுதியாக இது' வெளியிடப்பட்டபோது இது ஒரு அதிகாரபூர்வமான நூலாகவும் வாசகர்களை ஆரம்பம் முதல் இறுதி வரை கவரும் நூலாகவும் அமைந்தது.

எதிர்காலப் பேச்சுகள் தொடர்பாகக் கேள்விக்குறியான தருணத்தில் வெளிவரும் நூலின் மூலம் இதன் ஆசிரியர் முக்கிய விடயங்கள் தொடர்பாகப் புலிகளின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதுடன் பேச்சுகள் இடைநிறுத்தப்பட்டது நிரந்தரமானவை அல்ல. அரசின் முடிவுகள் சிலவற்றின் மீதான அதிருப்தியே அதற்குக் காரணம். இது தற்காலிகமாகவே இடைநிறுத்தப்பட்டுள்ளது என்கின்ற நம்பிக்கை யையும் வாசகர்களுக்குக் கொடுக்கிறார். பாலசிங்கம் பிரச்சினைகள் தொடர்பாக வாசகர்களுக்குப் போதிய விளக்கத்தை அளிப்பதுடன் நடந்த சில சம்பவங்கள் தொடர்பான தனது பொருள்கோடலையும்



வாசகர்களால் ஏற்றுக்கொள்ளச் செய்கின்றார். இவையாவும் விடுதலைப் புலிகளின் பார்வையிலிருந்து மட்டுமே நோக்கப்படுவதால் இவை தமது இயக்கம் தொடர்பாக வாசகர் மத்தியில் நல்லெண்ணத்தை ஏற்படுத்தவே செய்யப்படுகின்றன. அத்துடன் அரசை எதிர்மறையான மூலகம் எனவும் குறிப்பிடப்படுகிறது. ஆகவே, இது ஒரு சமமான கருத்தைக் கொண்ட மீளாய்வுசெய்யும் நூல் என்ற மதிப்பைக் குறைக் கிறது. பதிலாக இது பிரச்சினை தொடர்பான ஒரு தரப்பினரின் கருத்து என்றே எடுத்துக்காட்டப்பட வேண்டும்.

●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 8

## பொருளாதாரப் பலாபலனுடன் முரண்பாட்டை மாற்றியமைத்தல்: இலங்கை அனுபவம்[1]

சமன் கெலேகம


### சுருக்கம்

இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான பகுதியானது சமாதான நடவடிக்கைகளையும் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதையும் பலப் படுத்துவதற்குப் பொருளாதாரத்தைப் பயன்படுத்தும் நல்லதோர் உதாரணத்தை வழங்குகிறது (பொருளாதார பலாபலன், மீள்நிர்மாணம், அபிவிருத்தி). சர்வதேச நாணய நிதியத்தின் செலவுமிக்கக் கட்டமைப்புத் திட்டமும் சமாதான நடவடிக்கைகளும் ஒரே காலத்தில் இடம்பெற்றதால் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு குறிப்பிடத்தக்கப் பொருளாதாரப் பிரதிபலன் கிடைக்கவில்லை. வட, கிழக்கிலே பரந்துபட்டுக் காணப் படுகின்ற நிறுவனரீதியான மற்றும் இராணுவரீதியிலான கட்டமைப்பு களும் மற்றும் சமாதான நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட பல்வேறு தரப்புகளும் முழுமையான பொருளாதாரப் பலன் கிடைப்பதற்குத் தடையாக அமைந்தன. மேலும் அரசாங்கத்தின் நிறுவனரீதியான கட்டமைப்பு உதவிகள் பகிர்ந்தளிக்கப்படுவதையும் வட, கிழக்குப் புனர்நிர்மாணத்தையும் தாமதப்படுத்தியதுடன் வட, கிழக்கிலே பாரிய உட்கட்டமைப்புத் திட்டங்களை மேற்கொள்வதில் உதவி வழங்கும் நாடுகள் பின்பற்றிய முறையும் காட்டிய பக்கச்சார்புத் தன்மையும் பொருளாதாரப் பிரதிபலனைப் பெறுவதில் தடையாக அமைந்தன. வட, கிழக்கிலே சமாதானத்தின் பிரதிபலன் கிடைக்காததால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்ட அதேவேளை இதன் காரணமாக 2004 ஏப்ரல் பொதுத்தேர்தலில் அப்போதைய அரசாங்கம் நிராகரிக்கப்பட்டது.


1. யூஎன்யூ-வைடர் மகாநாட்டில் சமாதான வேலைத்திட்டங்களை உருவாக்குதல் தொடர்பான முன்வைக்கப்பட்ட ஆவணம். 4–5 ஜூன் 2004. இதன் சுருக்கமான பதிப்பு ரோகுண்ட் பதிப்பில் தொகுதி 94இல் 381இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. சர்வதேச விவகாரங்கள் தொடர்பான பொதுநலவாய சஞ்சிகை, காப்க்ஸ் வெளியீட்டாளர்கள், லண்டன்.




சமாதான நடவடிக்கைகளைக் காப்பாற்றுவதற்காக உருவாக்கப்பட்ட சர்வதேசப் பாதுகாப்பு வலைப்பின்னலானது போருக்குச் செல்வதிலிருந்து புலிகளைத் தடுத்தது. ஆயினும் இது பேச்சுகளை மீண்டும் ஆரம்பிக்கவோ அல்லது பொருளாதாரப் பிரதிபலனை துரிதப்படுத்தவோ இல்லை. சமாதான நடவடிக்கைகளையும் பிணக்குத் தீர்வையும் பலப்படுத்துவதற்குப் பொருளாதாரத்தை பயன்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசுக்கும் உதவி வழங்கும் நாடுகளுக்கும் இலங்கையின் அனுபவமானது முக்கியப் பல விடயங்களை எடுத்துக்காட்டுகின்றது.


### அறிமுகம்

போருக்குப் பின்னரான புனர்நிர்மாணம் தொடர்பான கொள்கைகள் மற்றும் போர்க்காலப் பொருளாதாரங்கள் என்பவற்றின் குணாம்சங்கள் பற்றி நிறையவே எழுதப்படுகின்றன. இது புதிய சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் மற்றும் கணிசமான கொள்கை முன்னெடுப்புகளுக்கும் வழிகோலியுள்ளது. சமாதான நடவடிக்கை களின் வெற்றி அல்லது தோல்விக்குப் பொருளாதார அம்சங்கள் எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றன என்பது தொடர்பாகச் சீரான ஆய்வு எதுவும் செய்யப்படவில்லை. (உட்வோட் – 2002, அடிசன் – 2003 மற்றும் பிறர்) 2002–2003 காலப்பகுதியிலான இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான அனுபவங்களானது பிணக்குகளை மாற்றி அமைப்பதற்குப் பொருளாதாரத்தைப் பயன்படுத்துவது தொடர்பாகச் சிறந்த விளக்கத்தைத் தருகிறது.

வட, கிழக்கிலே தனி அரசொன்றை அமைப்பதற்காகப் புலிகள் யுத்தத்தில் ஈடுபட்டு வந்ததால் 2001 அளவில் இலங்கையானது ஏறக் குறைய இரண்டு தசாப்தங்களாக யுத்தத்திற்கு முகம் கொடுத்தது. இந்த செலவுமிக்க யுத்தத்தால் இலங்கை கடுமையான பொருளாதாரச் சுமைக்கு முகம் கொடுத்த அதேவேளை 2001 அளவில் இது மேலும் தீவிரமடைந்தது. 2002இல் இவற்றைத் தீர்க்கும் முயற்சி மேற்கொள்ளப் பட்டுச் சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டன. அதே நேரம் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டன.

இந்தச் சமாதான நடவடிக்கைகளானது பேச்சுவார்த்தை நிலையை அடைவதன் பொருட்டுச் சர்ச்சைக்குரிய அரசியல் பிரச்சினைகள் தவிர்க்கப் பட்டுப் பொருளாரப் பிரதிபலனுடனான நம்பிக்கையைக் கட்டி யெழுப்பும் நடவடிக்கைகளிலேயே கவனம் செலுத்தப்பட்டது. இது மூன்று முக்கியப் பகுதிகளைக் கொண்டிருந்தது. முதலாவதாகப் பொருளா தாரத்தை மீள்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளும் இரண்டாவதாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வட, கிழக்கை மீளக்கட்டியெழுப்புவதற்காக புதிய நிறுவனம் ஒன்றை அமைத்தல், இங்கு முதல் தடவையாகப் பேச்சுகளில் புலிகளுக்குச் சம அந்தஸ்து வழங்கப்பட்டது (நிவாரணம் மற்றும் புனர்வாழ்வும் உள்ளடங்கலாக). மூன்றாவதாக வட, கிழக்கில் நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பு வதற்குமான உதவிகளைத் தயார்படுத்தும் நடவடிக்கை. இங்கு உதவி களைத் தயார்படுத்துவதன் விளைவாகச் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குச் சர்வதேசப் பிரமுகர்களும் கொண்டுவரப்பட்டனர். சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்புத் திட்டத்திலேயே பொருளா தாரப் புத்துயிருட்டலானது தங்கிருந்தது.

சமாதான நடவடிக்கையில் அனுசரணைப் பணிவகிக்கும் நோர்வே யினரே பெரும் செல்வாக்குச் செலுத்தினர். உதாரணமாக நோர்வேயின் வெளிநாட்டமைச்சர் பின்வருமாறு கூறியுள்ளமையை (ஐபிஏ – 2002:17) எடுத்துக்காட்டலாம்: 'பெரும்பாலான ஆயுதப் போராட்டங்கள் சிக்கலான தன்மையுடையதுடன் இன மற்றும் வரலாற்று ரீதியில் ஆழமான வேர்களைக் கொண்டனவாகும். வறுமை மற்றும் பாகுபாடு காட்டுதல்' என்பவற்றிலிருந்தே இவ்வாறான போராட்டங்கள் அடிக்கடி தோற்றம் பெறுகின்றன. அத்துடன் போதியளவு பொருளாதார ரீதியிலான சந்தர்ப்பங்கள் வழங்கப்படாமையும் பேராசையும் இதற்குமேலும் காரணங்களாக அமைகின்றன. இவ்வாறான போராட்டங்களைத் தவிர்ப்பதற்கு போர் தொடர்பான பொருளாதார விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

ஏப்ரல் 2003இல் ஒன்றேகால் வருடங்களுக்குப் பின் சமாதானப் பேச்சுகள் தோல்வியடைந்து பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்ட போதும் போர் மீண்டும் மூளவில்லை. புலிகளின் பேச்சாளர் ஒருவரது கருத்துப்படி வட, கிழக்கு மக்களுக்குப் பொருளாதாரப் பிரதிபலன் களைக் கொடுக்குமளவிற்குச் சமாதானப் பேச்சுகள் விரைவாக முன் கொண்டு செல்லப்படவில்லை என்பதாகும். புலிகள் பேச்சுகளிலிருந்து வெளியேறுவது தொடர்பாக அரசியல் மற்றும் யுத்ததந்திர விடயங் களைக் குறைத்து மதிப்பிட முடியாது. அதேவேளை பொருளாதாரப் பலாபலன்கள் போதியளவு கிடைக்கவில்லை என்பது தொடர்பாகப் போதியளவு விளக்கம் தேவைப்படுகிறது.

இருதசாப்தகால யுத்தத்தின் பின்னர் குறிக்கோளும் பொருளாதாரப் பலாபலனும் கொண்ட சமாதானத் திட்டமானது தெற்கிலுள்ள மக்களுக்குப் பயம் மற்றும் பதற்றத்தைப் போக்கி ஆறுதல் அளித்தது. சமாதானப் பேச்சுகளை மேலும் முன்னெடுப்பதற்குத் தெற்கிலுள்ள மக்களின் ஆதரவு முக்கியமானதாகும். எனினும் 2004இல் இப்போதைய



அரசாங்கம் தென்பகுதி மக்களால் நிராகரிக்கப்பட்டது. இது தொடர் பாகவும் ஒரு தெளிவற்ற நிலைமையே காணப்படுகிறது.

பாதிப்புக்குள்ளான பொருளாதாரத்தைச் சீர்படுத்துவதில் இலங்கை வெற்றிபெற்றபோதிலும் சிக்கலான பிரச்சினைகளுக்கு அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டியிருந்ததால் பொருளாதாரப் பலாபலன்களை வழங்கி அதன் மூலம் பேச்சுகளைத் தொடர்ந்து முன்னெடுக்கவும் அரசாங்கத்திற்குப் போதியளவு ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கும் கடினமாகவிருந்தது. பொருளாதாரப் பலாபலனானது அரசினதும் போராளிகளினதும் அதேவேளை உதவி வழங்கும் நாடுகளினது புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பான நிலைப்பாடுகளினாலும் தடைப்படலாமென இக்கட்டுரையில் விவாதிக்கப்படுகிறது. மேலும் வெறுமனே பொருளாதாரப் பலாபலன்களால் மட்டும் பேச்சுகளை முன்னெடுக்க முடியாது. அதே போன்று பொருளாதாரத்தைக் கொண்டு பிரச்சினையைத் தீர்ப்பது என்பது அவ்வளவு சுலபமானதல்ல.

இவ்வாறான செயல்பாடுகள் சில வரையறைகளைக் கொண்டுள்ளன. இரண்டு வருடங்கள் (2002–2003) என்பது பொருளாதாரப் பலாபலன் களைப் பெற்றுக்கொள்வதற்குப் போதுமான காலப்பகுதியல்ல எனப் பொருளாதாரத்தினூடாக பிரச்சினையை மாற்றியமைக்கும் கருத்தை முன்வைப்பவர்கள் வாதிடலாம். இது ஒருவேளை சரியாக இருக்கலாம். ஆயினும் இரண்டு வருடகாலப் பகுதியில்கூடப் பொருளாதாரப் பலா பலன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படு கின்றனவா எனப் பார்க்கலாம். அத்துடன் இந்த இடத்திலேயே பிந்தைய விடயங்கள் கவனம் செலுத்தப்படுகின்றன. நிறைவேற்று ஜனாதிபதி ஒரு கட்சியையும் அரசாங்கம் இன்னொரு கட்சியையும் கொண்டதாகவும் இருவருக்கும் இடையில் போதியளவு நல்லுறவு காணப்படாத சூழ்நிலையிலேயே சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்கப் பட்டது. இங்கு அரசாங்கத்தின் பிரதமர் அதிகாரம் குறைந்தவராகவே இருந்தார். இறுதித் தீர்வில் இந்த வரையறையானது பாதிப்பை ஏற்படுத்தி யிருக்கும். இக்கட்டுரையிலும் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மிகுதிக் கட்டுரையானது பின்வரும் விடயங்களை உள்ளடக்குகிறது. பொருளாதாரப் பலாபலன்களைப் பெற்றுக்கொள்வதற்காக மேற் கொள்ளப்பட்ட பின்னணிச் செயல்பாடுகள் தொடர்பான விடயங் களைப் பிரிவு – 2 உள்ளடக்குகிறது. தெற்கின் பொருளாதாரப் பலாபலன் களை மூன்றாம் பிரிவும் வட, கிழக்கின் பொருளாதாரப் பலாபலன் தொடர்பாக நான்காம் பிரிவும் உள்ளடக்குகிறது. ஐந்தாம் பிரிவு சமாதான நடவடிக்கையில் அரசியல் பொருளாதாரத்தையும் ஆறாம் பிரிவு இறுதி விடயங்களையும் உள்ளடக்குகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### சமாதான நடவடிக்கையின் பின்னணி

பொருளாதாரச் செயல்பாடுகள் தொடர்பாக 2001ஆம் ஆண்டு ஒரு குறிப்பிடத்தக்க ஆண்டாகும். 1999 மற்றும் 2000 ஆண்டுகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாகப் பொருளாதார வளர்ச்சி வீதம் 1.4% ஆக குறைவடைந்தது. அந்த ஆண்டு ஆசியாவிலேயே இப்படியான எதிர்மறை வளர்ச்சி வீதத்தைக் காட்டிய நாடு இலங்கையாகும். எனினும் இதற்கு நாட்டின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சில சக்திகளும் காரணமாகும். அத்துடன் பொருளாதாரம் தொடர்பான சில முறையற்ற முகாமைத்துவமும் காரணமாகும் . (ஐபிஎஸ் 2002 – கெலேகம, 2003 மற்றும் பிறரும்) சர்வதேச நாணய நிதியத்துடன் 2001இல் செய்யப்பட்ட அவசரத் தேவைகளுக்கான ஒப்பந்தம் (எஸ்பிபி) செயலிலிருந்து கொண்டிருந்தது. வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 11% என்ற நிலையை அடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பொதுக்கடன் 100 சதவீதத்தையும் தாண்டியது. பணவீக்கமும் இரண்டிலக்க நிலையை அடைந்தது. இவையாவும் எந்தளவு தூரம் பாரதூரமான நிலைமையை அடைந்துள்ளது என்பதையே காட்டின.

பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமாயின் விடுதலைப் புலிகளுடன் சமாதானத்தை ஏற்படுத்துவதே ஒரே வழியென 2001இல் பதவியேற்ற ஐதேமு அரசாங்கம் கருதியது. ஏனெனில் பாதுகாப்புச் செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5-6% வீதமாக அமைந்ததால் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் பெரும் சுமை ஏற்பட்டது. குறுங்காலத்தில் வருமானம் ஈட்டித்தருவனவும் குறைந்துகொண்டு சென்றது[2]. பாதுகாப்புச் செலவினத்தைக் குறைக்காவிடின் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையைக் குறைக்க முடியாது என அரசாங்கம் கருதியது. போரால் நாட்டில் ஏற்பட்ட நிச்சயமற்ற சூழ்நிலையால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு முதலிடுவதைத் தவிர்க்கின்றனர்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை அவர்களின் போராளிகளின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டதுடன் போரால் ஏற்படும் சோர்வுத் தன்மையொன்றும் இயக்கத்திற்குள் தோன்ற ஆரம்பித்தது. அமெரிக்காவில் இடம்பெற்ற செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் ஏற்பட்ட பயங்கரவாதத்திற்கு எதிரான உணர்வுகளாலும் புலிகள் பாதிப்படைந்திருந்தனர். இதனால் தனது இயக்கத்தை மீண்டும் அணி திரட்டவும் பயங்கரவாதம் தொடர்பான நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும் புலிகளுக்கு ஓர் இடைவெளி தேவைப்

2. உதாரணமாகப் பெரும்பாலான தனியார் துறையினருக்கான வர்த்தக முதலீடுகள் 2002 அளவில் வீழ்ச்சியடைந்தன.



பட்டது (குணரத்ன, 2003). இதனால் சமாதானப் பேச்சுகளில் ஈடுபடுவதற்கு இருதரப்பினருக்குமே தேவையேற்பட்டது.

### நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படை நடவடிக்கைகள்

சமாதானத்தை ஏற்படுத்துவதிலும் வட, கிழக்கை அபிவிருத்தி செய்வதிலும் புலிகளே முக்கியமான அரசியல் பங்காளிகள் என இலங்கை அரசாங்கமும் உதவி வழங்கும் நாடுகளும் ஏற்றுக்கொண்டன. வட, கிழக்கிற்கான பொருளாதாரத் தடையை நீக்கியமை (15 ஜனவரி 2002) நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டமை (22.02.2002) மற்றும் மக்களின் போக்குவரத்திற்கான ஏ 9 பாதை திறக்கப்பட்டமை (08.04.2002) போன்ற பல நடவடிக்கைகள் சமாதான நோக்கங்களுக்காகச் செய்யப்பட்டன[3]. இதனால் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இருதரப்பினருக்குமிடையில் யுத்தமற்ற நிலைமை தோன்றியது. இது அரசாங்கம் பொருளாதார விடயங்களில் கவனம் செலுத்த வழிகோலியது. பின்னர் விடுதலைப்புலிகள்மீதான தடை நீக்கப்பட்டு அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையில் ஆறு சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றன[4].

பேச்சுகள் நிபந்தனையற்றவையாக அமைந்ததுடன் ஆயுதங்களைக் கீழேவைக்க வேண்டும் என்ற அடிப்படையில் இடம்பெறவில்லை. வட, கிழக்கிலுள்ள இரு அதிகாரக் கட்டமைப்புகள், யுத்தநிறுத்த உடன்படிக்கையின்போது உயர் பாதுகாப்பு வலயமெனப் பிரகடனப்படுத்தப்பட்ட அரசக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மற்றும் விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் என்பன 2002இல் இருந்தவாறே தொடர்ந்தும் இருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்காக வெளிநாட்டு உதவி வழங்கும் நாடுகளின் உதவியுடன் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இடம்பெயர்ந்த மக்கள் சமாதானத்திற்குப் பின்னர் அதிகளவு வரத்தொடங்கியதால் அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. இவர்களின் நிலம் மற்றும் நீர் தொடர்பான உரிமைகள், மீன்பிடி, கடற்பயணக் கட்டுப்

3. யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு எவ்வித அரசியலமைப்புரீதியான அந்தஸ்தும் இல்லை. இது தேர்தலுக்கு முன்னரான ஒழுங்குகளை அடிப்படையாகக் கொண்டு ஐதேமு அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் செய்யப்பட்டதாகும்.

4. 2002 செப்டம்பர் மற்றும் அக்டோபரில், தாய்லாந்து சட்டாசாஹிப்பின் ரோஸ் கார்டனிலும் முதலாம் மற்றும் இரண்டாம் சுற்றுப் பேச்சுகள், 2002 டிசம்பரில் ஒஸ்லோவில் மூன்றாம் சுற்றுப் பேச்சு, 2003 பிப்ரவரியில் ஜெர்மனி பேர்லினில் நான்காம் சுற்றுப் பேச்சு, 2003 மார்ச்சில் ஜப்பானில் ஐந்தாம் சுற்றுப் பேச்சு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாடுகள் மற்றும் உயர்பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியமர முடியாமை போன்ற பல சிக்கலான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியிருந்தன. படிப்படியான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பிய பின் நிரந்தர அரசியல் தீர்வு பற்றிப் பேசுதல், போரால் அழிவுற்ற பிரதேசங்களை வெளிநாட்டு உதவிமூலம் புனரமைத்தல் எனும் உத்தி பின்பற்றப்படவிருந்ததுடன் வட, கிழக்கிற்குப் பொருளாதாரப் பலாபலன்கள் வழங்கப்பட்டன (பிரிவு 5).

## சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான நிறுவனரீதியான கட்டமைப்புகள்

யுத்தநிறுத்தத்திற்கு அப்பால் சமாதான உடன்படிக்கைக்கு அரசியல் ரீதியான நிறுவனங்கள் தேவைப்படுகின்றன. (உட்வோட் 2002) கடந்த அரசாங்கத்தின் நிறுவனரீதியான வட, கிழக்கிற்கான நிவாரணம், மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளானவை பின்வரும் மூன்று விடயங்களின் அடிப்படையிலே அமைந்திருந்தன. நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் ஒருமைப்பாடு என்பனவே அவையாகும். எனினும் அரசிற்கும் அரசு சார்பற்ற நிறுவனங்களுக்குமிடையில் நிவாரண நடவடிக்கைகள் தொடர்பிலான ஒத்துழைப்பானது குறிப்பாக அரசக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் தொடர்பாகவே வலியுறுத்தப்பட்டது. புலிகளுக்கு இது தொடர்பில் எவ்விதச் சந்தர்ப்பமும் கொடுக்கப்படவில்லை. அரசாங்கமே இவற்றை வழி நடத்தியது. புலிகளின் பிரதேசங்களிலும் ஒரே சமயத்தில் நிர்வாகம் நடத்தப்படுவதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அத்துடன் இவை மீளக் குடியமர்பவர்களின் மீன்பிடி மற்றும் நிலம் தொடர்பான உரிமைகள் எனக் கூறி அவற்றைப் புறக்கணித்தது. இவ்வாறான நிவாரண நடவடிக்கைகள் மூலம் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள மக்களைக் கவர்ந்திழுப்பதற்கு அரசு முயல்வதாகப் புலிகள் கருதினர் (ஜேபிஐசி – 2003). இவ்வாறான குறைபாடுகள் புதிய நிறுவனக் கட்டமைப்புகளில் தீர்க்கப்பட வேண்டும்.

பிரதமரின் அலுவலகத்தின் கீழ் சமாதான செயலகமொன்று 2002 ஜனவரியில் உருவாக்கப்பட்டது. இதேபோல் புலிகளின் சமாதான செயலகமொன்றும் கிளிநொச்சியில் 2002 டிசம்பரில் உருவாக்கப்பட்டது. நிவாரண, மீள்குடியேற்ற மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கையாள்வதற்காகக் கூட்டுச் செயலணியை அமைப்பதற்கு 2002 செப்டம்பர் பேச்சுகளில் தீர்மானிக்கப்பட்டது. இதில் புலிகள் சம பங்காளிகளாகக் கருதப்பட்டனர். கூட்டுச் செயலணியானது சரியாக வரையறுக்கப்படாமையால் 2002 இறுதியில் இது கைவிடப்பட்டு மூன்று உபகுழுக்கள் உருவாக்கப்பட்டன. (தாய்லாந்தில் இடம்பெற்ற இரண்டாம் சுற்றுப் பேச்சுகளின் பின்னர்) உடனடி மனிதாபிமான நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான உபகுழு (சிரான்), இராணுவ நடவடிக்கைகளைக் குறைப்பதற்கான உபகுழு (எஸ்எம்டி) மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பான உபகுழு (எஸ்பிஐ) என்பனவே அவையாகும். சமாதானத்தின் பலாபலன்கள் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற பொதுவான அக்கறை இருந்தது.

ஐதேமு அரசின் அரசியல் அதிகாரமானது ஒரு பலமற்ற அத்திவாரத்திலேயே கட்டப்பட்டிருந்தது. இரு அதிகாரக் கட்டமைப்புகள் காணப்பட்டதுடன் சட்டவாக்கத் துறைக்கும் நிறைவேற்றுத் துறைக்குமிடையில் முரண்பாடு காணப்பட்டது. பிரதமரின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. வட, கிழக்கு பிரச்சினை தொடர்பாகக் காத்திரமான தீர்வுகளை எடுப்பதற்கு அரசியமைப்பின்படி பிரதமருக்கு முடியாதிருந்தது. இதனாலேயே தேவையான நிறுவனக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு அரசாங்கம் சட்டவாக்கத்துறையை நாடுவதற்கு விருப்பம் காட்டவில்லை. சிரான், எஸ்எம்டி மற்றும் எஸ்பிஐ என்பன சட்டவாக்கத் துறையினால் அதிகாரமளிக்கப்படாத பலமற்ற அமைப்புகளாகும். ஐதேமு அரசின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருந்த வட, கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை அரசியல் அமைப்புச் சிக்கல்களால் கைவிடப்பட்டது. காலப்போக்கில் இடைக்கால நிர்வாகசபையை ஏற்படுத்தும் வேலைத்திட்டத்தை உருவாக்கக் கூடிய ஒரு தற்காலிகமான பொறிமுறையை அல்லது இடைக்கால நிர்வாகசபையின் முக்கியப் பகுதிகளை உருவாக்குவதற்கு விரும்பப்பட்டது (பாலசிங்கம் 2004: 383). முன்னுரிமை வழங்கப்பட்ட வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கான நிதிகளை ஒதுக்குதல், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான முகவர்களைத் தெரிவு செய்தல், மனிதாபிமான மற்றும் புனரமைப்பு நடவடிக்கையை இனங்காணல் போன்ற பொறுப்புகள் உடனடி மனிதாபிமான நிவாரண மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான உபகுழுவிடம் வழங்கப்பட்டன[5]. இந்த உபகுழுவால் செய்யப்படும் திட்டங்களுக்கு உலக வங்கியில் பேணப்பட்ட வட, கிழக்குப் புனரமைப்பு நிதியத்திலிருந்து (என்ஈஆர்எஃப்) நிதிகள் வழங்கப்படவிருந்தன.

## பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் திட்டம்

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்யப்பட்ட அவசரத் தேவைகளுக்கான ஒப்பந்தம் செயலற்றுப் போய்க்கொண்டிருப்பதிலிருந்து

5. சிரானில் அரசாங்கம் (4) புலிகள் (4) முஸ்லிம் (2) அங்கம் வகித்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காப்பாற்றுதல் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைகளைக் குறைத்தல், கிடைக்கப்பெறும் உதவிகளின் பயன்பாட்டை அதிகரிக்கச்செய்தல் மற்றும் பொருளாதாரத்தை வளர்ச்சி நிலைக்குக் கொண்டுவருதல் போன்றன செய்யப்பட வேண்டியிருந்தன. 2002ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்குப் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டபோதிலும் அதில் வறியவர் களுக்கான சலுகைகள் பெரிதளவில் காணப்படவில்லை. வறுமையைப் போக்குவதற்குப் பொருளாதார வளர்ச்சியிலேயே அரசாங்கம் பெரிதும் தங்கியிருந்தது[6].

இலங்கைப் பொருளாதாரத்தில் இரண்டாம் தலைமுறைச் சீர்திருத்தங் களுக்கான அறிமுகமானது பெரிதும் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுத் தனியார்மயப் படுத்தல் விரிவாக்கப்பட்டபோதிலும் எரிவாயு, தொலைத்தொடர்பு, கடல் மற்றும் விமானப் போக்குவரத்து என்பன மட்டுமே இதனுள் அடங்கும். வரவுசெலவுத் திட்டத்தில் பெரும் சுமையை ஏற்படுத்திய திருத்தியமைக்கப்பட்ட வேண்டிய பல பொதுமக்கள் பாவனைக்குரிய விடயங்கள் காணப்பட்டன.

இலங்கை மின்சார சபை, இலங்கைப் புகையிரத சேவை, இலங்கைப் போக்குவரத்துச் சபை, இலங்கை அஞ்சல் சேவை, இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி என்பனவே அவையாகும். 1999இல் இடம்பெற்ற மாகாணசபை மற்றும் ஜனாதிபதி தேர்தல், 2000இல் இடம்பெற்ற தீவிரயுத்தம் மற்றும் பொதுத்தேர்தல், மற்றும் 2001இல் இடம்பெற்ற பொருளாதாரச் சிக்கல்களும் அரசியல் கூட்டமைப்பு முகாமைத்துவம் என்பவற்றால் பொருளாதார மறுசீரமைப்புகள் பிற்போடப்பட்டன. இவற்றைச் செய்யும் பொறுப்பு புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட ஐதேமு அரசாங்கத்தின்மீது சுமத்தப்பட்டது. சந்தைப் பொருளாதாரத்திற்கு ஆதரவான சட்டத்திருத்தங்களைக் கொண்டுவருதல் (தொழில் மற்றும் அந்நியச் செலவாணிச் சந்தை உட்பட) சந்தைப்படுத்தலுக்கான நிறுவனங் களை உருவாக்குதல் (பல்துறை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை, பாவனையாளர்கள் அலுவலர்கள் அதிகாரசபை) மற்றும் ஒழுங்கு படுத்தும் நடவடிக்கைகள் (தனியார் துறை வளர்ச்சிக்கான தடைகளை நீக்குதல் ஆர்எஸ்எல் 2003 இணைப்பு) என்பன புதிய பொருளாதாரத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். அப்போதைய அரசாங்கமானது பாராளுமன்றத்தில் போதியளவு பெரும்பான்மையைக் கொண்டிருக்காத தாலும் நிறைவேற்றுத் துறையுடன் காணப்பட்ட முரண்பாடுகளாலும்

6. ஆர்எஸ்எல் (2003 : 102) இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் திட்டத்தில் வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதாரப் புனர்நிர்மாணப் பணிகளுக்காக அமைக்கப்பட்ட குழுக்களில் வறுமை ஒழிப்புக்குழு காணப்படவில்லை.



சில ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் அரசை மேலும் பலவீனப் படுத்தியன.

சீர்திருத்தங்கள் துரிதமாக நடைமுறைப்படுத்தப்பட்டன. 2003ஆம் ஆண்டு நடுப்பகுதில் பொருளாதாரம் தொடர்பாக 10 சட்டங்கள் பாராளு மன்றத்தில் கொண்டுவரப்பட்டன. இதன் பெறுபேறுகள் குறிப்பிடத் தக்க அளவு பயனுள்ளவையாக இருந்தன. பொருளாதார வளர்ச்சியானது 2002இல் 4% ஆகவும் 2003இல் 5.9% ஆகவும் உயர்ந்தது. நிறைவேற்றுத் துறைக்கும் சட்டவாக்கத் துறைக்குமிடையில் முரண்பாடுகள் தோன்றும் முன் 2003 அக்டோபர் அளவில் குறிப்பிடத்தக்கப் பொருளாதார வளர்ச்சி காணப்பட்டது. சுற்றுலாத்துறையும் வெகுவாக வளர்ச்சி அடைந்தது. 2005இல் முதல்தடவையாக 5 லட்சத்திற்கும் அதிகமான உல்லாச (சுற்றுலா) பயணிகள் வருகை தந்தனர். வட, கிழக்கில் மீன்பிடித்தடை தளர்த்தப்பட்டதால் மீன்பிடி குறிப்பிடத்தக்களவு அதிகரித்ததுடன் 2002 இறுதி அளவில் நெற்செய்கை 5 மடங்காக அதிகரித்தது. வெளிநாட்டு நேரடி முதலீடு 2002இல் அமெரிக்க டாலர் 82 மில்லியனிலிருந்து 230 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்தது. தனியார் முதலீடுகளின் உள்வருகையும் கொழும்புப் பங்குச்சந்தை விலைச் சுட்டெண்களும் 1994இல் இருந்து பெறுமதியைவிட அதிகரித்தன[7].

## நிதி உதவி

தீர்வொன்றைத் காண்பதில் நிதி உதவிகளில் தங்கியிருப்பது அரசாங்கத்தின் வெளிப்படையான கொள்கையாக இருந்தது. மொரகொட (2003, பக்.261) பின்வருமாறு கூறுகிறார்: 'இந்தப் பேச்சு வார்த்தைகளின் முடிவுகளில் சர்வதேசச் சமூகத்திற்குப் பங்குண்டு என்பதை அது ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுவே எமது வெற்றிக்கான உத்தரவாதமென நாம் நம்புகிறோம்'.

45 கிலோமீட்டர் நீளமான ஏ 9 பாதை, 238 கிலோமீட்டர்கள் தூரமுள்ள சிறிய வீதிகள், 108 தண்ணீர்த் தாங்கிகள், 156 கிணறுகள், 55 பாட சாலைகள் மற்றும் 25 சுகாதார வசதிகள் புனரமைப்பிற்கும் மற்றும் 32,735 இடம்பெயர்ந்த குடும்பங்களின் புனர்வாழ்விற்கும் 2002இலிருந்து கிடைத்த நிதி உதவிகள் பங்களிப்புச் செய்தன. 2002 இன் இறுதி அளவில் அவசர உதவிகளுக்காக சர்வதேச நாணய நிதியத்துடன் செய்யப் பட்ட ஒப்பந்தம் பூர்த்திசெய்யப்பட்ட பின் வெளிநாட்டு உதவிகள் அதிகரித்தன. சீர்திருத்தங்களின் அமலாக்கம் தொடர்பான மதிப்பீடுகளின்

7. உதாரணமாக ஜோன் கீல்ஸ் நிறுவனமானது 2003 செப்டம்பரில் கொழும்பு பிளாசாவை வாங்கியது. போனிக்ஸ் தொழில் முயற்சி நிறுவனமும் ஜிவல்நிக்கிட் நிறுவனமும் இணைந்து 2003இல் பிரண்டிக்ஸ் நிறுவனத்தை உருவாக்கின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படையில் வறுமைக் குறைப்பு வளர்ச்சித் திட்டம் (பிஆர்ஜிஎஃப்) மற்றும் 2003 ஏப்ரலில் இருந்து 2006 வரை செயல்பட்ட நீடிக்கப்பட்ட நிதிவசதி (ஈஎஃப்எஃப்) போன்ற 567 மில்லியன் அமெரிக்க டாலர்களைக் கொண்ட நிதிவசதிகளுக்கு சர்வதேச நாணய நிதியம் அங்கீகாரமளித்தது. சர்வதேச நாணயத்தின் திட்டமானது இரண்டு விடயங்களில் கவனம் செலுத்தியது. முதலாவதாகப் பொதுக்கடனை அடைப்பதற்கு வருமானத்தைத் திரட்டுதல், இரண்டாவதாகப் பொதுத்துறையின் பங்கைக் குறைக்கும் கட்டமைப்புரீதியிலான சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல். இலங்கை அரசின் பொருளாதாரத் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் உலக வங்கி இலங்கையின் தனது செயல்பாடுகளை அதிகரித்தது. 2015 அளவில் வறுமையை அரைவாசியாகக் குறைப்பதே இதன் முக்கிய நோக்கமாக இருந்தது. 98 வெவ்வேறு திட்டங்களுக்காக 2.7 பில்லியன் அமெரிக்க டாலர் கடன் வழங்க உலக வங்கி உறுதியளித்தது. இதேவேளை கடன் 2.7 பில்லியன் அமெரிக்க டாலராகியது. உலக வங்கியின் கடன் வழங்கும் திட்டமானது வருடத்திற்கு 4 திட்டங்கள் என்ற அடிப்படையில் 800 மில்லியன் அமெரிக்க டாலர் தொகையைக் கொண்டதாகும். இலங்கையின் சமாதான முயற்சிக்கு ஆதரவாக ஐரோப்பிய ஆணைக்குழு தனது உடனடிச் செயல்திட்டப் பொறிமுறையின் கீழ் 27 மில்லியன் யூரோவை வழங்கத் தீர்மானித்தது.

2001இல் 13% ஆக இருந்த நிதியுதவிப் பயன்பாடு 2003, 21% ஆக உயர்ந்தது (சிபிஎஸ்எல், 2003: 197). நடைமுறைப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் மற்றும் அரசின் நடுத்தர காலத்தைக் கொண்ட பொருளாதாரத் திட்டங்கள் உதவி வழங்கும் நாடுகளின் ஆதரவைப் பெற்றன. இதனால் 2003 ஜூனில் டோக்கியோவில் இடம்பெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மகாநாட்டில் உதவித் தொகையாக 4.5 பில்லியன் அமெரிக்க டாலர் தொகை உறுதியளிக்கப்பட்டது. (2003 ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25%)[8] மொத்தத்தில் 16% தொகை வட,கிழக்குப் புனர்நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்டது. (ஈஆர்டி, 2004) எனினும் சமாதானப் பேச்சுகளின் முன்னேற்றத்தைப் பொறுத்தே நிதியுதவி வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது. இது எல்லாவகையிலும் தெளிவற்ற முறையில் வரையறுக்கப்பட்டிருந்தது (லட்டுவஹெட்டி, 2004).

மனித உரிமைகள் ஜனநாயகம், நல்ல ஆட்சி மற்றும் பன்முகத்தன்மை என்பவற்றில் முன்னேற்றம் ஏற்படுவதையே உதவி வழங்கும் நாடுகள் விரும்பும். உதாரணமாக, ஜப்பான் தன் உதவி பின்வருவனவற்றின் அடிப்படையிலேயே அமையுமென (ஜேபிஐசி 2003) விவாதித்தது:

8. ஜப்பான் (1 மில்லியன்), ஏடிபி (1 மில்லியன்), உலக வங்கி (1 மில்லியன்), சர்வதேச நாணய நிதியம் (560 மில்லியன்) பெருந்தொகை நிதி வழங்குதல் (ஐஎம்எஃப் 2004).



1. யுத்தநிறுத்த உடன்படிக்கை மற்றும் கண்காணிப்புக் குழுவின் உத்தரவுகளுக்கு அமைய நடத்தல்.
2. வட, கிழக்கில் மனித உரிமைகள் தொடர்பாகப் போதிய முன்னேற்றம்.
3. வயது குறைந்த சிறுவர்களைப் படைக்குச் சேர்ப்பதை நிறுத்துவதுடன் அவர்கள் பெற்றோரிடம் ஒப்படைத்தல்.
4. புலிகளின் பிரதேசங்களில் ஜனநாயகம் மற்றும் பன்முகத்தன்மையில் முன்னேற்றம்.
5. சமஷ்டி அல்லது உரிய ஆட்சி முறையை அமைப்பதற்கு உறுதி அளித்தல்.
6. இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவதில்லையென அரசும் புலிகளும் உறுதியளித்தல்.

அரசாங்கத்தின் சமாதானத் திட்டத்தில் வெளிநாட்டு உதவியால் கிடைத்த பொருளாதார பலாபலன்கள் முக்கியமாக இருந்தன. வெளிநாட்டு உதவியின்றிப் பொருளாதார மீட்சியானது சாத்தியமற்றதென சமாதான நடவடிக்கையில் ஈடுபட்ட முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார். சமாதானத்தால் கிடைக்கும் நன்மையை நாம் எடுத்துக் காட்டத் தவறுவோமேயானால் தரப்பினரிடையே ஒரு எதிர்மறையான நிலையை உருவாக்குவதுடன் சமாதானப் பேச்சுக் குறைவு மற்றும் யுத்தம் என்பன ஏற்பட ஏதுவாகும். உதவிகள் கிடைப்பதை அனுமதிப்பதன் மூலம் எல்லோருடைய நலன்களும் உள்ளடக்கப்படுதலானது வளர்ச்சியையும் எல்லோருக்கும் வளமான எதிர்காலத்தையும் கொண்டு வருமெனப் புலிகள் உட்பட அனைத்து மக்களுக்கும் எம்மால் காட்ட முடியும் (மொரகொட, 2003ஏ: 261).

சமாதான முயற்சிகளுக்கான நிதியுதவி பயன்படுத்தப்படுவதை நோர்வே ஆதரித்தது. சமாதானப் பேச்சுகள் வெற்றிபெறுவதற்கு மக்களின் ஆதரவு தொடர்ந்து இருக்க வேண்டும். மக்கள் தமது நாளாந்த வாழ்வில் சமாதானத்தின் பலனைக் காண வேண்டும் சர்வதேசச் சமூகத்தின் கணிசமான உதவியில்லாவிடின் இச்சந்தர்ப்பம் தவறவிடப்படும் என நோர்வேயின் வெளிநாட்டமைச்சர் ஜான் பீட்டர்சன் கூறியதாகப் பாலசிங்கத்தின் நூலில் குறிப்பிட்டுள்ளது (2004: 391).

பிரச்சினையானது அரசியல், சமூக, கலாசார மற்றும் பொருளாதார விடயங்களை உள்ளடக்கிய சிக்கலான பிரச்சினையாகும். இனப்பிரச்சினைத் தீர்விற்கும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் இலங்கை அரசு பொருளாதாரத்திலேயே அதிகம் தங்கியிருந்தது. (பொருளாதார பலாபலன், புனர்நிர்மாணம், அபிவிருத்தி) பொருளாதார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெறுபேறுகளை பலப்படுத்துவதன் மூலம் சமாதான நடவடிக்கைகளை பலப்படுத்தி முன்னெடுக்கலாமென அரசாங்கம் கருதியது.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் பொருளாதாரப் பலாபலனானது அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையைத் தக்கவைத்துக்கொள்ள உதவும் என எதிர்பார்க்கப்பட்டது. அதாவது தென்பகுதி மக்களிடமிருந்தும் பொருளாதாரப் பலாபலனால் நன்மையடையும் வட, கிழக்கு மக்களிடமிருந்து அரசிற்கு ஆதரவு கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

## இலங்கையின் தென்பகுதியில் பொருளாதாரத்தின் பலாபலன்கள்

முன்னர் குறிப்பிட்டவாறு போரானது மிகவும் செலவுமிக்கதாக இருந்ததுடன் 6 – 8% வரையான பொருளாதார வளர்ச்சியை இலங்கை அடைவதற்குத் தடையாக அமைந்தது (கெலேகம, 1999, அருணதிலக, மற்றும் பிறரும், 2001). எனினும் யுத்தம் நடைபெற்றபோதிலும் 1983–2000 வரையிலான காலப்பகுதியில் இலங்கையானது சராசரியாக 5% பொருளாதார வளர்ச்சியை அடைந்தது. போரால் பாதிக்கப்படாத தேயிலை, தைத்த ஆடை மற்றும் வெளிநாட்டிலுள்ள தொழிலாளர்களின் பண வரவு என்பனவே இதற்குக் காரணமாகும். தேசிய பாதுகாப்பு வரி, நாட்டைப் பாதுகாத்தலுக்கான பங்களிப்பு மற்றும் உயர் வட்டி வீதங்கள் என்பனவற்றிலே யுத்தச் செலவினங்களின் சுமை உணரப்பட்டது (1990களில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% ஆனது யுத்தச் செலவினங்களுக்காகப் புதிய வரிகள் விதிக்கப்பட வேண்டியிருந்தது). இந்த அதிகரிக்கப்பட்ட வரிவிதிப்புகள் மற்றும் உயர் வட்டிவீதங்களால் மத்தியதர மக்களே பாதிப்படைந்தனர்.

போர் இல்லாவிடின் வாழ்க்கைத் தரம் சிறப்பானதாக அமைந்திருக்கும் என்ற எண்ணப்பாட்டைவிடக் கிராமப்புற மக்களே போர்ச் செலவினங்களைக் கடுமையாக உணர்ந்தனர். கிராமப்புற அபிவிருத்திக்குப் போதியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என அம்மக்கள் கருதினர் (மின்சாரம், தண்ணீர், நீர்ப்பாசனம், வீதிகள்). எனினும் அவர்களின் பார்வைப்படி இவை யுத்தத்துடன் தொடர்புபடுத்தப்படக் கூடிய பிரச்சினைகள் அல்ல. மாறாக யுத்தத்தினால் சில நன்மைகளும் கிடைத்தன (அதிகமான கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்கள் இராணுவத்தில் சேவையாற்றிப் பணம் அனுப்பினர்). கிராமப்புறங்கள் விவசாயம் வீழ்ச்சியடைந்தபோது இவ்வாறான பணமே அவர்களைத் தொடர்ந்தும் வாழ்க்கை நடத்துவதற்கு உதவியது, (மத்தியக் கிழக்கு நாடுகளிலிருந்து தொழிலாளர்கள் அனுப்பும் பணம் மற்றும் ஆடைத் தொழிலாளர்களின் பணம் உட்பட [டுல்ஹாம் மற்றும் எட்வேட்ஸ், 1997]). போர் உக்கிரமடைந்ததைத் தொடர்ந்து இராணுவத்திற்கு



ஆட்சேர்ப்பும் அதிகரித்தது. இதனால் கிராமப்புறங்களுக்கான பண வரவும் அதிகரித்தது.

இந்தப் பின்னணியில் அடிப்படையிலேயே பொருளாதாரப் பலாபலன்களைப் பற்றி ஆராய வேண்டும். முதலாவதாகச் சமாதான நடவடிக்கையும் சர்வதேச நாணய நிதியத்தின் செலவுமிக்க கட்டமைப்பு ரீதியிலான ஒழுங்குபடுத்தும் திட்டமும் ஒரே சமயத்தில் வந்தன. 2001 மார்ச்சில் பொதுஜன முன்னணி அரசின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட கட்டமைப்பு ஒழுங்குபடுத்தும் திட்டங்கள் அந்த வருடம் ஜூனில் இடம் பெற்ற அரசாங்கக் கூட்டணிக்கட்சிகளின் உடைவால் செயலிழந்தது. அதன்பின் 2001 பொதுத்தேர்தல்வரை அரசியல் கூட்டணிகளைத் தக்கவைத்துக்கொள்வது தொடர்பாகவே முன்னுரிமை வழங்கப்பட்டது (கெலேகம, 2003). மிகவும் தேவையென நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காகப் பின்னர் வந்த ஐதேமு அரசாங்கம் இத்திட்டங்களைத் தொடர்ந்தும் செய்ய வேண்டியேற்பட்டது. இதன்போது சில கடுமையான முடிவுகளும் எடுக்கப்படவேண்டியிருந்ததுடன் குறுங்காலத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவேண்டியிருந்தன.

1. அரசியல் மயப்படுத்தலை இல்லாமல் செய்து, வறுமை ஒழிப்புத் திட்டங்களை மேற்கொள்ளல் (சமுர்த்தி). இதன் விளைவாக 2.5 இலட்சம் சமுர்த்திப் பெறுநர்களுக்கான கொடுப்பனவு நிறுத்தப்பட்டது.
2. விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உரமானியம் கணிசமாகக் குறைக்கப்பட வேண்டியிருந்தது.
3. உள்ளூராட்சி சபைகள் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் தங்கியிருப்பதைத் தவிர்க்கும் வகையில் மின்சாரம், தொலைபேசி மற்றும் தண்ணீர்க் கட்டணங்களை மீளாய்வுசெய்ய வேண்டியிருந்தது.
4. முந்தைய அரசாங்கத்தால் மானியம் வழங்கப்பட்ட பெட்ரோலியத் துறைக்கு தன்னியக்க விலை முறை அறிமுகப்படுத்த வேண்டியிருந்தது.
5. முன்னர் இருந்த பொருட்கள் சேவைகள் வரி (12%) மற்றும் தேசியப் பாதுகாப்பு வரி (6.5%) என்பவற்றிற்குப் பதிலாகக் கொண்டு வரப்பட்ட, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (வாட்) (முதலில் 10% மற்றும் 20% என இருவகையிலும் பின்னர் 15% ஆகவும் அறவிடப்பட்டது) பண வீக்கத்தில் தாக்கம் செலுத்தியது.
6. அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பது நிறுத்தப்பட்டு, அரசு நிறுவனங்களிலிருந்த மேலதிகமான ஊழியர்கள் குறைக்கப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2001 அளவில் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமையில் இவற்றைச் செய்வதைத் தவிர அரசிற்கு வேறெந்த வழியும் இருக்கவில்லை. பொருளாதாரத்தைச் சீர்படுத்தும் நோக்கில் அரசு எதிர்பார்த்தளவு வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைக்கவில்லை. வறுமைக் குறைப்பு வளர்ச்சித்திட்டம் (பிஆர்ஜிஎஃப்) மற்றும் நீடிக்கப்பட்ட நிதி வசதி (ஈஎஃப்எஃப்) என்பவற்றின் மூலம் 80 மில்லியன் அமெரிக்க டாலர்களே 2003இல் கிடைத்தன. ஸ்திரப்படுத்தும் திட்டங்களுக்கான செலவினங்கள் குறுங்காலத்தில் போதியளவு குறைக்கப்படவில்லை. அத்துடன் கிராமப்புற மக்களுக்குப் பலாபலன்கள் கிட்டவில்லை.

இரண்டாவதாக யுத்தம் நின்றுவிட்டபோதிலும் பாதுகாப்புச் செலவினங்கள் குறிப்பிடத்தக்களவு குறையவில்லை. அத்துடன் மூலதனச் செலவுகளுக்காக பாதுகாப்புச் செலவினங்களிலிருந்து எவ்விதச் சேமிப்பும் கிடைக்கவில்லை[9]. பாதுகாப்புச் செலவினங்களின் சேமிப்புகள் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டாலும் (3.5 இலட்சம்) இடம்பெயர்ந்தோர் திரும்பிவந்ததுடன் 3.8 இலட்சம் பேர் இன்னமும் இடம்பெயர்ந்த நிலையிலேயே உள்ளனர்)[10]. பாதுகாப்புச் செலவினங்கள் போதியளவு குறைக்கப்படாமையானது சர்வதேச நாணய நிதித்திடம் உறுதியளித்தவாறு வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு அரசாங்கமானது வேறு சில வழிகளைத் தெரிவுசெய்யவேண்டியிருந்தமையைக் காட்டியது. கூட்டுத்தாபன வரிக் குறைப்பு மற்றும் வரிச் சலுகைகள் அரசாங்கத்தின் வருமானத்தில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. வருமானத்தைவிட செலவைக் குறைப்பதற்கே முன்னுரிமையளிக்கப்பட்டதுபோல் காணப்பட்டது. 2002 மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.5 சதவீதத்தால் முதலீட்டுச் செலவு குறைக்கப்பட்டது. இதனால் கிராமப்புற அடிக்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்கள் (மின்சாரம், தண்ணீர், நீர்ப்பாசனம், நீர்த்தாங்கிகள்) பாதிப்படைந்தன. கிராமங்களுக்கும் விஸ்தரிப்பதற்காக 5 பொருளாதார வலயங்கள் உருவாக்கப்பட்டபோதும் அவை அவ்வளவாகப் பயனளிக்கவில்லை.

அரசாங்கமானது ஒழுங்குமுறையான அரச வருமானத்திற்கு முன்னுரிமை வழங்கியது. அரச வருமான முகாமைத்துவப் பொறுப்புச் சட்டம் 2003இல் இயற்றப்பட்டது. சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு நிதி தேவைப்பட்டபோது வரவுசெலவுத் திட்டம் அவசியமான விடயங்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டது (2003:4). ஆப்பிரிக்காவின்

9. 2001இல் 54 மில்லியனாகவிருந்த பாதுகாப்பு செலவினம் 2002இல் 49 மில்லியனாக, 2003இல் 47 மில்லியனாகவும் குறைந்தது. கடந்தகால பாதுகாப்பு உபகரணக் கொள்வனவுகள் தவணைக் கட்டணத்தில் கொள்வனவு செய்ததால் பாதுகாப்புச் செலவினம் குறைந்தது.

10. http ://www.peaceinsrilanka.org/insidepages/internationalsuppoer/UN/PressRel130204.asp



பிரச்சினைக்குப் பின்னரான காலப்பகுதி குறித்துக் கற்றுவரும் அடிசன் பின்வருமாறு கூறுகிறார்: 'வருமானப் பற்றாக்குறையை ஏற்படுத்தும் நடைமுறைச் சாத்தியமற்றும் அளவுக்கதிகமான திட்டங்கள் முக்கியமான அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும்போது அவை தவிர்க்கப்பட வேண்டும்'. இவை உடனடிப் பொருளாதாரப் பலாபலன்களை வழங்குவதற்குப் பயனற்றவையாக அமைவது நிரூபணமாகியுள்ளது.

போர் முடிவுற்ற முதல் ஆண்டில் தனியார் துறையானது எவ்வித துணிகர மற்றும் நீண்டகால திட்டங்களில் ஈடுபடாமல் பொறுத் திருந்து பார்க்கும் உறுதியைக் கடைப்பிடித்தது. பிரதமருக்கும் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதிக்குமிடையில் நல்லுறவு காணப்படாத நிலையில் 2002 டிசம்பர் 05ஆம் தேதிக்குப் பின்னர் எந்நேரத்திலும் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருந்தமை மற்றும் கடந்த காலங்களில் சமாதானப் பேச்சுகள் தோல்வியடைந்தபோது செய்ததுபோல் புலிகள் இம்முறையும் போருக்குச் செல்லலாம் எனத் தனியார் துறையினர் கருதியமையே இதற்குக் காரணமாகும். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தனியார் துறையினரின் பங்கு மிகவும் குறைந்ததால் சிறிதளவு வேலை வாய்ப்புகளே வழங்கப்பட்டன. அரசத் துறைக்கு ஆட்சேர்ப்பதை நிறுத்தியிருந்ததுடன் ஆட்குறைப்புத் திட்டமொன்றையும் அரசாங்கம் நடைமுறைப்படுத்திய வேளையிலேயே இந்நிலைமை காணப்பட்டது.

இதனாலேயே பொருளாதாரப் பலாபலன்கள் போதியளவு ஏற்படவில்லை. அமைதியான சூழ்நிலையையும் தென்னிலங்கையில் குண்டு வெடிப்புகள் இல்லாத நிலைமையும் தவிர பெரும்பான்மையான மக்களுக்கு வேறு எவ்வித நன்மையும் கிடைக்கவில்லை.

உதவித் தொகையானது 4.5 பில்லியன் அமெரிக்க டாலர்களைக் கொண்ட பெரிய தொகையாகக் காணப்பட்டபோதும் 2003இல் 577 மில்லியன் வழங்கப்பட்டது. அதிகளவு நிதி வழங்கப்பட்டது இந்த ஆண்டில்தான்.

## வட, கிழக்கில் பொருளாதாரப் பலாபலன்கள்

பாலசிங்கம் பின்வருமாறு கூறினார் (2004:395): 'துன்பப்படும் மக்களை பொறுத்தவரை சமாதானப் பேச்சுவார்த்தையானது நிதி மற்றும் அவசியமான உதவிகள் போன்ற பலாபலன்களைத் தராவிடின் இப்பேச்சுவார்த்தைகள் அர்த்தமற்றவையாகும். மக்களின் துன்பங்கள் மற்றும் மனிதாபிமானத் தேவைகள் தீர்க்கப்படாவிட்டால் சமாதனப் பேச்சுகளின் முக்கியத்துவம் நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பு என்பன சீர்குலையும்.'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருளாதாரப் பலாபலன்களை ஏற்படுத்துவதில் அரசாங்கம், புலிகள் மற்றும் உதவி வழங்கும் நாடுகள் ஆகிய மூன்று தரப்பினருக்குமே தடைகள் இருந்ததாக விவாதிக்கப்படும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை மூலம் சில பொருளாதாரப் பலாபலன்கள் வட, கிழக்கிற்கும் கிடைத்ததை மறுக்க முடியாது. பாதுகாப்பு நிபந்தனைகளில் முன்னேற்றம், யுத்தநிறுத்த உடன்படிக்கை மூலம் சமூகங்களுக்கிடையில் சுமுக உறவு ஏற்பட்டமை, பொருட்கள் சேவைகளை இலகுவில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தமை, வருமானம் தரக்கூடிய தொழில்கள் மற்றும் திறன்களை விருத்திசெய்யும் சந்தர்ப்பங்கள் என்பன இப்பலாபலன்களுள் அடங்கும். சுமார் 80 ஆயிரம் இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீளக்குடியமர்ந்தன. 2002இல் வடகிழக்கிலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் தொகை 17500ஆக உயர்ந்தது (ஐஆர்எஸ், 2003). மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.5%க்கும் குறைவான பங்களிப்பே வறுமைக்கு மத்தியிலும் வட, கிழக்கிலிருந்து கிடைப்பதால் அங்கு இதற்கும் அதிகமான பலாபலன்கள் கிடைத்திருக்கும். உதாரணமாக வட, கிழக்கில் 3 சதவீத மாணவர்களே குழாய் நீர் வசதியும் 64 சதவீத மாணவர்களே வீட்டு மின்சார வசதிகளையும் கொண்டுள்ளனர். ஆனால் இது தெற்கில் 52 சதவீதம் 93 சதவீதமாகும் (ஏடிபி, 2005). புலிகள் தரப்பிலே உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகத் தீவிர அக்கறை இருந்தது. புலிகளைப் பொறுத்தவரை இராணுவத்தினர் யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி உயர்பாதுகாப்பு வலயங்களிலுள்ள பொதுக்கட்டிடங்களிலிருந்து (பாடசாலை, வீடுகள், கோயில்கள், விடுதிகள்) வெளியேறாது தொடர்ந்து ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். இதனால் இப்பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மீளக்குடியேற முடியவில்லை (பாலசிங்கம் 2004, 382–83). எனினும் புலிகள் தமது நீண்டதூரம் ஏவப்படும் ஆயுதங்களைக் கீழே போட்டாலேயே இப்பிரதேசங்களிலிருந்து இராணுவம் வெளியேற்றப் படவேண்டுமென சதீஷ் நம்பியார் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இதைப் புலிகள் கடுமையாக எதிர்த்தனர் (கொடகே 2004). இதில் எது (யுத்தநிறுத்த உடன்படிக்கை அல்லது நம்பியாரின் அறிக்கை) முக்கியத்துவம் பெறுகிறது என்பது தெளிவில்லை. எனினும் இம்முக்கியப் பிரச்சினையே நான்காம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின்போது பிரச்சினைகளைத் தணிக்கும் உபகுழுவானது செயலற்றுப்போனதற்கும் வட, கிழக்கிற்குப் பொருளாதாரப் பலாபலன்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதற்கும் இதுவே காரணமாகும்.

அரசு தரப்பை எடுத்துப் பார்த்தால், வட, கிழக்கிலே செய்யப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பான ஒப்பந்தங்களுக்கான



கேள்வி அறிவித்தல்கள் மற்றும் அமைச்சுப் பணிகளிலும் தாமதங்கள் நிலவின. நிதியுதவிகளைப் பயன்படுத்தும்போது ஏற்பட்ட அதே பிரச்சினைகள் வட, கிழக்கிற்காக ஒதுக்கப்பட்ட சில திட்டங்களுக்கும் ஏற்பட்டது.[11] மனிதாபிமானத் தேவைகள் நிறைவேற்றப்படுவதிலுள்ள தாமதங்களால் சமாதானப் பேச்சுகளில் மக்களுக்கு இருந்த நம்பிக்கை குறையத் தொடங்கியதாக 4ஆம் சுற்றுப் பேச்சுகளில் புலிகள் தெரிவித்தனர். மக்களின் சமூகப் பொருளாதார நிலைமைகள் வீழ்ச்சி அடைந்து கொண்டிருந்தன. இடம்பெயர்ந்தவர்களும் அகதிகளும் பெரும் ஏமாற்றத்துடனும் நம்பிக்கையற்ற நிலையிலும் அகதி முகாம்களில் தமது வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தார்கள். யுத்தத்தின் கொடுமையை அனுபவித்த தமிழ் மக்கள் மேலும் மேலும் பொறுமையை இழந்துகொண்டிருந்தனர்.

வட, கிழக்குப் புனர்வாழ்வு நடவடிக்கைகளுடன் சம்மந்தப்பட்ட பல அரச நிறுவனங்களும் நிர்வாகக் கட்டமைப்புகளும் தமக்கிடையில் எவ்விதப் புரிந்துணர்வுமற்ற நிலையிலேயே செயல்பட்டுக்கொண்டிருப்பதாகவும் சிரானின் (எஸ்ஹெச்ஐஆர்என்) கீழ் இவை சிறந்த முறையில் செயல்படுத்தப்படவில்லை எனவும் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் முறைப்பாடு செய்தார் (பாலசிங்கம், 2004, 415–416).

சிரான் உபகுழு சரியாகச் செயல்படவில்லை என்பதுடன் தமிழ் மக்களின் அவசர மனிதாபிமானத் தேவைகள் பூர்த்திசெய்யப்படவில்லை என்பது புலிகளின் கருத்தாகும். அரச அதிகாரிகளின் தாமதமும் மாவட்ட தேவைகள் மதிப்பீட்டுக் குழுவிற்கு அங்கத்தவர்களை நியமிப்பதில் அரசு காட்டிய தயக்கமும் சிரான் சீராக இயங்குவதற்குத் தடையாக அமைந்தன. மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் திட்டங்களைச் சிரான் இனங்கண்டிருந்தபோதும் அவற்றிற்குத் தேவையான நிதி கிடைக்கவில்லை. 2003 மார்ச் இறுதியளவில் 6 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்த நிலையிலும்கூட வட, கிழக்கு புனவர்வாழ்வு நிதியம் செயல்படவில்லை.[12] சிரானில் காணப்பட்ட தற்காலிக ஏற்பாடுகள் இதை அமலாக்கல் அதிகாரமும் வளங்களும் இல்லாத ஒரு குழுவாக்கியது (ஃபெர்டினன்ஸ் மற்றும் பிறர், 2004).

இலங்கையை மீளக்கட்டியெழுப்புதல் என்ற இலங்கை அரசின் திட்டமானது வறுமையின் கொடுமையையும் வட, கிழக்கிலே நிலவும் அழிவு நிலைமையையும் கணக்கெடுக்கத் தவறிவிட்டதாகப் பாலசிங்கம் விமர்சித்தார். உண்மை நிலைமையைப் புறக்கணித்து

11. நிதிப்பயன்பாடு தொடர்பான பிரச்சினைகளுக்கு ஐபிஎஸ்ஸை (2001) பார்க்கவும்.

12. http ://www.peaceinsrilanka:org/insidepages/Pressrelease/March/pressRel19March03.asp



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட்டு வறுமையானது நாடு முழுவதும் நிலவும் பிரச்சினையெனக் கூறிப் பொதுவான முறையில் அதை அணுக முயல்கிறீர்கள். இது வட, கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் கடுமையான பிரச்சினைகளைக் குறைத்துச் சொல்லும் நடவடிக்கையாகும் (பாலசிங்கம் 2004: 438). இந்தக் கூற்றில் உண்மை இருக்கிறது. இருபது வருடகால யுத்தமானது வட, கிழக்கிலுள்ள உள்ளூர் அரசு நிறுவனங்களை கணிசமானளவு பலவீனப்படுத்தியுள்ளது. நிவாரண மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான அரசின் செலவுகள் 1999க்குப் பின்னர் அதிகரித்தபோதும் இவை மக்களின் வாழ்க்கைத் தரத்தில் போதியளவு மாற்றத்தை ஏற்படுத்தவில்லை எனப் பலர் கருதினர் (சிவானந்தன் மற்றும் தில்லைநாதன் 2004). 20-30% வரையான அளவிற்கு மேல் புனர்வாழ்விற்காக ஒதுக்கப்படும் நிதிகளைப் பயன்படுத்த முடியாத அளவிற்கு வட, கிழக்கிலுள்ள அரச நிறுவனங்களின் செயல் திறன் குறைந்துபோயிருந்தன (ஜேபிஐசி 2003: 30).

2003 ஏப்ரல் செயல்திறனற்ற அரச நிர்வாகத்தால் வட, கிழக்கில் போதியளவு அபிவிருத்தி ஏற்படவில்லையெனக் கூறிய புலிகள் நிதி மற்றும் அபிவிருத்தி விடயங்களில் தமது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கக்கூடிய இடைக்கால நிர்வாகச் சபையொன்று உருவாக்கப்பட வேண்டுமெனக்கோரிப் பேச்சுவார்த்தைகளிலிருந்து வெளியேறினர்.

எனினும் வட, கிழக்கில் செயல்பட்ட புலிகளின் நிர்வாக அமைப்புகளின் பிரச்சினைகள் இருந்தன. முழுமையான பலாபலன்கள் கிடைக்கப் பெறாமைக்கு இவை தடையாக அமைந்தன. புலிகளின் நிர்வாக முறையானது பெரிதும் இராணுவமுறையை ஒத்ததாகவே காணப்பட்டது. ஏ 9 பாதையூடாகப் பயணம் செய்யும் அனைத்து வாகனங்களுக்கும் ஆட்களுக்கும் வரி விதிக்கப்படுவதால் தென்பகுதியிலிருந்து வட, கிழக்கிற்கு எடுத்துச் செல்லப்படும் பொருட்களின் விலைகள் அதிகரித்தன. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வான், லாறி மற்றும் ஏனைய வாகனங்கள் புலிகளினால் சோதனையிடப்பட்டதால் அவை யாழ்ப்பாணத்தை சென்றடைய சுமார் 3 நாட்கள்வரை எடுத்தன. இதனால் சந்தைக்குப் பொருட்கள் சேவைகளை உரிய நேரத்திற்கு அனுப்புவதில் காலதாமதம் ஏற்பட்டது. களஞ்சியப்படுத்தும் வசதி போதியளவு காணப்படாமையால் நீண்ட காலத்திற்கு வைத்திருக்க முடியாத உணவுப் பொருட்கள் மற்றும் பெட்ரோலியம் தொடர்பாகப் பிரச்சினைகள் எழுந்தன[13]. கொழும்பில் பின்பற்றப்படும் நேரத்தை விட வித்தியாசமான நேரத்தைப் புலிகள் பின்பற்றியதால் வட, கிழக்கிலுள்ள மக்களிடையே குழப்பம் நிலவியது. மேலும் ஜாமின் வழங்கப்

13. மீன்பிடித் துறையில் போதியளவு களஞ்சிய வசதி இல்லையென சண்முகரத்னம் எடுத்துக் காட்டுகிறார் (2003).



பட்ட சொத்தை புலிகள் எளிதாக தமது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ளும் வாய்ப்பிருந்ததால் வங்கிகள் பலமான சொத்து ஜாமின் இல்லாமல் கடன் வழங்குவதற்கு தயக்கம் காட்டின.

புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வசித்த 15–35 வயது வரையான மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தினர். பெருமளவு மக்கள் வருவார்களென ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டபோதிலும் இதன் காரணமாக வட, கிழக்கிலிருந்து பெருமளவு புத்திசாலிகள் வெளியேறினர். இதனால் அவசரப் புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் சீர்குலைந்தன. தாம் வழங்கும் நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்வதற்குப் போதியளவு ஜனத்தொகை இல்லாத காரணத்தால் உதவி வழங்கும் நாடுகளுக்கு இது ஒரு பெரும் சிக்கலை ஏற்படுத்தியது. கொட கேயின் (2005) தகவலின்படி 2005 ஏப்ரலில் புலிகள் சிரானிலிருந்து வெளியேறியபோது வடகிழக்கிலுள்ள 6 மாவட்டங்களில் 642 திட்டங்கள் இனங்காணப்பட்டிருந்தன. இந்தச் சூழ்நிலைகளில் இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க முடியுமா என்பது கேள்விக்குறியான விடயமே.

1990–2001 காலப்பகுதியில் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பட்டினியைத் தடுப்பதற்காக யூஎன்ஹெச்சிஆர், டபிள்யூஎஃப்பி, கெயார் மற்றும் ஒக்ஸ்பாம் போன்ற சர்வதேச நிவாரண நிறுவனங்களால் செய்யப்பட்ட உதவிகள் புலிகளால் பலப்படுத்தப்படவில்லை. புலிகளின் கட்டுப்பாட்டின் கீழும் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு கழகம் (டிஈஈடஓ) இருந்தபோதும் இதன் பொருளாதாரத் திட்டங்கள் தெளிவற்றவையாகும்[14].

புலிகளின் பிரதேசங்களிலிருந்து வெளியேறி வவுனியா போன்ற எல்லைப் பிரதேசங்களுக்குச் சென்ற தொழிற்துறை முதலீட்டாளர்களை மீள அழைப்பது தொடர்பாகப் புலிகள் எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை[15]. வீதிகளைப் புனரமைத்தல் மின்சாரம் தொலைபேசி தண்ணீர் ரயில் போக்குவரத்து என்பன முழுமையான வர்த்தகச் செயல்பாடுகளுக்கு இன்றியமையாதனவாகும். புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திலும் நிதியுதவி வழங்கும் நிறுவனங்களிலுமே புலிகள் பெருமளவு சார்ந்திருந்தபோதும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கமிஷன் வசூலித்தனர். இதை உதவி வழங்கும் நிறுவனங்கள் விரும்பவில்லை. மேலும் அதிகமான வெளிநாட்டு உதவிகள் கிடைக்க வேண்டுமானால் பொருளாதாரச் சுதந்திர,

14. www. teedor. org ஐப் பார்க்க.

15. புலிகளின் நீதித்துறை, பொலிஸ் மற்றும் பொது நிர்வாகம் ஆகிய கட்டமைப்புகள் வர்த்தக நடவடிக்கைகளுக்கு விருப்பம் காட்டவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிப்படையான தன்மை மற்றும் வகை சொல்லும் பொறுப்பு என்பன காணப்பட வேண்டும். ஆனால் இவை வட, கிழக்கில் காண்படவில்லை.[16]

கருத்து வெளியிடும் சுதந்திரம், சுதந்திர நடமாட்டம் மற்றும் சுதந்திர மாக சிந்தனை செய்யக்கூடிய புதுவிதமான வாழ்க்கை முறைக்குப் பழக்கமாகி மேற்குலக நாடுகளில் வாழ்ந்து வரும் புலம்பெயர்ந்த தமிழர்களை மீண்டும் நாட்டிற்கு வரவழைப்பதற்குப் புலிகள் அவ்வளவு முயலவில்லை. பயனுள்ள வகையில் பொருளாதாரத்தைக் கொண்டு நடத்துவது என்பது கெரில்லா யுத்தம் செய்வதைப் போன்றதோ அல்லது தாக்குதல்களை நடத்துவது போன்றதோ அல்ல என்பதைப் புரிந்து கொள்ளப் புலிகள் தவறிவிட்டனர். புலிகளின் இவ்வாறான ஜனநாயக மற்ற நிர்வாகமுறை மற்றும் அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள சந்தை, மற்றும் அமைப்புகளின் மத்தியிலேயே வட, கிழக்கிற்கு பொருளாதாரப் பலாபலன்கள் கிடைக்குமென அரசாங்கம் எதிர்பார்த்தது.

உதவி வழங்கும் நிறுவனங்களிடமிருந்தும் சில கட்டுப்பாடுகள் இருந்தன. பிரச்சினைகள் யாவும் பொதுவாக ஒத்த தன்மையுடையவை என்றும் அவை கலாசாரரீதியில் உணர்ச்சியற்றவை என்ற ஊகத்தினை அடிப்படையாகக் கொண்டதே தேவைகளை மதிப்பிடும் அணுகு முறையாகும் (ஜேபிஐசி, 2003: 49). பஸ்டியனின் தகவல் படி (2003 : 150) குறிப்பிட்ட வரலாறுகள் போராட்டங்கள் மற்றும் சமுதாயப் பரிணாமங்கள் என்பவற்றை அவர்கள் புறக்கணிக்கிறார்கள். இலங்கை, உகாண்டா மற்றும் ஆப்கானிஸ்தான் என்பனவும் இவ்வாறாகவே தெரிகின்றன. கற்றோர் மற்றும் நிறுவனங்கள் மத்தியில், முரண்பாட்டினூடாகச் சமூகங்கள் எதிர்கொள்கின்ற சிக்கலான பிரச்சினைகளைப் பராமரிப்பதில் தயக்கப்போக்கு காணப்படுகிறது. சந்தைச் சக்திகள் தொழிற்பாடும் எனவும் தனியார் துறையினரின் பிரதிபலிப்பு பயனுள்ளதாக அமையும் எனவும் ஓர் ஊகம் இருந்தது. எனினும் மேற்சொன நல்ல கொள்கைகள் எப்பொழுதும் பலனளிக்கமாட்டா. உடனடியாகத் தேவைப்பட்டது நிவாரணமேயொழிய நீண்ட வளர்ச்சி அல்ல.

உட்கட்டுமானப் பணிகள் தொடர்பாகப் பக்கச்சார்பான தன்மை யொன்று காணப்பட்டது. ஆனால் உடனடியாக உதவி தேவைப்பட்டது. விவசாயம், கோழிவளர்ப்பு மற்றும் மீன்பிடித் துறைகளிலேயே தற்போதைய, பாதுகாப்பு வரம்பிற்குள் விசேட வாழ்வாதார நிர்மாணத் திட்டங்களை அமல்படுத்துவதன் மூலம் மீன்பிடித்துறையில் அதிகளவு வேலைத்திட்டங்கள் செய்யபட்டிருக்கலாமென சண்முகரத்னம் (2003) வாதிடுகிறார். இந்த நிதியுதவியினால் உண்மையிலேயே நன்மை பெற்றவர்கள் யார் எனச் சிலர் கேள்வியெழுப்பியுள்ளனர். போரால்

16. இது சர்வானந்தனை அடிப்படையாகக் கொண்டதாகும்.



பாதிக்கப்பட்ட மக்களா குடும்பங்களா பெண்களா அல்லது பெரிய கட்டுமானப் பணிகளிலும் ஒப்பந்தங்களிலும் ஈடுபடும் உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களா? (ராஜசிங்கம், 2003).

உள்நாட்டறிவு இது தொடர்பான அணுகுமுறையில் ஒதுக்கி வைக்கப் பட்டதுடன் அது குறைத்து மதிப்பிடப்பட்ட அதேவேளை சர்வதேசத் தொழில்நுட்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பொஸ்னியா மற்றும் ஹெசிகோவினா நாடுகளில் உலக வங்கியின் மதிப்பீட்டின் படி உள்நாட்டவர்களுடன் சேர்ந்து செய்த புனர்நிர்மாணப் பணிகள் வெற்றி அளித்தன. (உட்வோட், 2002). வெளிநாட்டுச் சக்திகளின் புவியியல் ரீதியிலான தந்திரோபாய நலன்கள் ஒரு சிக்கலான நிகழ்ச்சி நிரலை அவற்றின் பக்கம் ஏற்படுத்தியுள்ளன. இவை எப்பொழுதும் ஒன்றுக் கொன்று முரணானவையாகும் (பேடினன்ஸ் முதலியோர், 2004). போருக்குப்பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைக் கான தற்போதைய சர்வதேச ஆதரவானது உலகளாவியரீதியில் ஒத்துப் போகக்கூடிய கொள்கைளினூடாகப் பலப்படுத்தப்பட வேண்டும் (ரிஷிர்கி, 2004).

அரசியல் தீர்வு மற்றும் மனித உரிமைப் பாதுகாப்புடன் தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகளின் முன்னேற்றம் மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பு என்பவற்றுடன் தொடர்புபட்டதாகவே நிதியுதவி அமைய வேண்டும் என்பது தொடர்பாக நிதியுதவி வழங்கும் நாடுகளிடையே இடம்பெற்ற கலந்துரையாடல்களும் சிவில் சமூக அமைப்புகளில் இருந்து வந்த அழுத்தங்களும் தொடர்ச்சியாக மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுவந்த புலிகளுக்குப் பிரச்சினையாக அமைந்தது. அரசியல் தீர்வு மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பு என்பவற்றிற்கான பேச்சு களிலிருந்து தமது தொடர்பைத் துண்டிப்பதே புலிகளின் தந்திரமாக இருந்தது. இப்பிரச்சினைகள் உதவி வழங்கும் நாடுகளால் 2003 பிற்பகுதி யில் உள்ளடக்கப்பட்டன (பிரிவு 4).

### சமாதானத்தின் அரசியல் பொருளாதார இயக்கவியல்

நிறுவனக் கட்டமைப்பு, நிதியுதவித் திட்டங்கள் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் செயல்பாடு போன்றன சரியான முறையில் காணப் பட்டபோதிலும் சமாதான நடவடிக்கைகளை முகாமை செய்வதில் பாரதூரமான பிரச்சினைகள் காணப்பட்டன. இதை விளங்கிக் கொள்வதற்குச் சமாதான நடவடிக்கையை வரிசைக் கிரமமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

சமாதானத்தின் உடனடிப் பொருளாதார பலாபலன்களை வட, கிழக்கிற்கு வழங்குவதன் மூலம் போரால் அதிருப்தியுற்றுள்ள மக்கள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போருக்கு எதிராக ஒன்றுதிரண்டு புலிகளைப் பலவீனப்படுத்த முடியும் என்பதே பிரதமரின் யுத்தியாக இருந்தது. சமாதானத்தின் மூலம் கிடைக்கும் நன்மையான பலாபலன்கள் குறுங்காலத்திற்கேனும் சமாதான நடவடிக்கைகளைப் பலப்படுத்துமெனப் பிரதமர் கருதினார்.

இவ்வாறு புலிகள் மக்களின் ஆதரவை இழந்தவுடன் மூன்றாம் தரப்பு (நோர்வே) சர்வதேச நன்மதிப்பு மற்றும் நிதி உதவியுடன் போர் நிறுத்தத்தைத் தக்கவைத்துக்கொள்வதே பிரதமரின் எண்ணமாகும். இவ்வாறு செய்யப்படவுடன் அடிப்படை அரசியல் பிரச்சினைகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதே அவரது யுக்தியாகும்[17]. சுருக்கமாகக் கூறின் பொருளாதாரமானது பிரச்சினையை மாற்றியமைப் பதற்குப் பயன்படுத்தப்பட்டது (படம் 1). சமாதானப் பேச்சுகளைப் பலப்படுத்துவதற்குப் பொருளாதாரம் மட்டும் போதுமானதாக இல்லாத படியால் புலிகளைச் சாந்தப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டன[18]. 2002 டிசம்பரில் ஒஸ்லோவில் புலிகளுடன் வட, கிழக்கில் ஒரு சமஷ்டி முறையைக் கொண்டுவருவதற்கு இணங்குமளவிற்கு ஐதேமு அரசாங்கம் தனது நிலைப்பாட்டை பெரிதும் மாற்றியமைத்தது[19].

மாறாகச் சமாதானத்திற்கான யுத்தத்தை நடத்திப் பலமான நிலையி லிருந்து கொண்டு புலிகளுடன் அடிப்படைப் பிரச்சினைகளை முதலில் பேசுவதே 2002இற்கு முன்னரான பொதுஜன முன்னணி அரசின் யுக்தியாக இருந்தது. (படம் 2) இது புலிகளுடன் ஒரு நேரடி யுத்தமாக அமைந்த துடன் இனப்பிரச்சினைத் தீர்வானது அரசியலமைப்பு வடிவத்தில் விவரிக்கப்பட்டது. எனினும் இங்கு ஐதேமு அரசின் சமாதான நடவடிக்கைகள் போலல்லாது புலிகளின் கட்டமைப்புகள் குறைந் தளவே சகித்துக்கொள்ளப்பட்டன. படங்கள் ஒன்றையும் இரண்டை யும் பார்க்கும்போது பின்பற்றப்பட்ட வித்தியாசமான அணுகுமுறை களைக் காணலாம். புலிகளை இராணுவரீதியில் பலவீனப்படுத்தி அவர்களைத் தமிழ் மக்களிடமிருந்து தனிமைப்படுத்துவதன் மூலம் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவருவதே பொதுஜன முன்னணி

17. ஒரு கம்பனியுடன் செயல்பாடுகளில் ஈடுபடுவது பலப்படுத்தப்பட்டது. உதாரணமாக இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் தனியார் மயப்படுத்தப்பட்டபோது அதன் பிரதான பங்குதாரரான இந்தியன் ஆயிலுக்கு திருகோணமலை எண்ணெய்த் தாங்கியை முகாமை செய்வதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. திருகோணமலை புலிகளின் ஒரு கேந்திர நகரமாகும்.

18. நடவடிக்கையானது இராணுவ உளவுத் தகவல்களை வெளியிடுவது முதல் (மிலேனியம் சிட்டி, அதுறுகிரிய) புலிகளுக்கு வானொலிக் கருவிகளை சுங்கத் தீர்வையின்றி வாங்குவதற்கு அனுமதியளிக்கும் வரை சென்றது.

19. இந்த நிலை புலிகளால் வாதிடப்பட்டது. ஒஸ்லோ பிரகடனம் என்று ஒன்றுமில்லை எனவும் சமஷ்டி முறையை ஆராய்வதற்கே புலிகள் உடன்பட்டதாகவும் பாலசிங்கம் கூறுகிறார் (2004:403). பேச்சுவார்த்தைகளில் நடந்த விடயங்கள் குறிப்பெடுக்கப்படாததால் உண்மையின் நிலையை அறிய முடியாதுள்ளது.



அரசின் நோக்கமாக இருந்தது (ஆஃப்ஸ்டாட் 2002). அரசாங்கமானது புலிகளைச் சம்பங்காளிகளாகக் கருதி நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் அரசியல்ரீதியில் சிக்கலான பிரச்சினைகளைப் பேசுவதை தள்ளிப்போட்டு வந்தது.

இவ்வாறான நடவடிக்கை முறை சாத்தியமானதா மற்றும் அடிப் படை அரசியல் பிரச்சினைகளைப் பேசு முன்னர் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் செய்யப்பட்டிருக்க வேண்டுமா போன்ற கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. இது வண்டிக்கு முன்பாகக் குதிரையைக் கட்டுவது போன்றது என்கிறார் சிறிஸ்கந்தராஜா (2003). ஒஸ்லோவில் சமஷ்டி முறை பற்றிப் பேசப்பட்ட பின்னர் அடிப்படைப் பிரச்சினைகள் படிப்படியாகப் பேசப்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும், மனிதாபிமானப் பிரச்சினைகளின் மத்தியிலும் விட்டுக்கொடுக்க முடியாத திம்புக் கோட்பாடுகளினூடாகத் தனிநாட்டை தாபிப்பதில் புலிகள் உறுதியாக இருந்தவிடத்திலும், அடிப்படை அரசியல் பிரச்சினைகள் தொடர்பான பேச்சுகளை ஆரம்பித்தல் கடின மாக இருந்திருக்கும்[20]. இது புலிகளுக்கு மிகவும் சிக்கலான நடவடிக்கை யாக அமைந்திருக்கும். புலிகளின் வலியுறுத்தல்களை உள்வாங்கக் கூடிய விதத்தில் இலங்கை அரசக் கட்டமைப்பை மாற்றியமைப்பதற்கு உடனடியாக ஆதரவு வழங்கக்கூடிய நிலையில் தென்னிலங்கை வாக்காளர்கள் இருக்கவில்லை. இந்நிலையில் சமாதான நடவடிக்கை யில் சில குறைபாடுகள் காணப்பட்டாலும் பிரதமரின் நடவடிக்கை முறை சரியானதாகும்.

மேற்கூறிய தடைகளைவிட இன்னும் சில பிரச்சினைகளும் இருந்தன. சமாதான நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போதிலும் புலிகள் தமது எதிரிகளைக் கொலைசெய்தல், சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தல், யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபடல் மற்றும் கண்காணிப்புக் குழுவின் உத்தரவுகளை அசட்டை செய்தல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டனர். 2003 அளவில் புலிகள் 1935 தடவைகள் யுத்தநிறுத்த உடன் படிக்கையை மீறியுள்ளனர் (கொடகே, 2004). தமிழ் மக்களின் ஏகப் பிரதி நிதிகள் என்ற அந்தஸ்தை பலாத்காரமாக எடுத்துக்கொண்டு ஜனநாயகத் திற்கு இடங்கொடாத அமைப்பாகப் புலிகள் செயல்பட்டு வந்தனர். நிவாரண மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளைத் தம்மைப் பலப் படுத்திக்கொள்வதற்கே பயன்படுத்த வேண்டுமென அவர்கள் கருதினர்.

அத்துடன் பன்முகத்தன்மைகொண்ட ஜனநாயக முறையானது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாக இருந்தது. புலிகளின்

20. அவையாவன (1) சுயநிர்ணய உரிமை (2) தமிழர் தாயகத்தை அங்கீகரித்தல் (3) தமிழ்த் தேசியத்தை அங்கீகரித்தல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இச்செயல்பாடுகள் தென்னிலங்கை வாக்காளர்களைக் குழப்பத்திற்குள்ளாக்கியதுடன் சமாதான நடவடிக்கையின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கியது.

அரசு தரப்பை எடுத்துக்கொண்டால், சமாதானப் பேச்சுகளிலும் பேச்சுவார்த்தைக் குழுவிலும் எதிர்க்கட்சிக்கு பங்களிப்பு வழங்கப்படவில்லை. கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் பயம் மற்றும் அபிலாஷைகள் பேச்சுவார்த்தைகளில் முழுமையாகக் கலந்துரையாடப்படவில்லை. மற்றும் இறுதிவரை அடிப்படைப் பிரச்சினைகள் பேசப்படவில்லை போன்ற நிலைமைகள் காணப்பட்டன. ஒஸ்லோ பிரகடனத்திற்குப் பின்னர் மற்றைய விடயங்களுடன் சேர்ந்த அடிப்படை அரசியல் பிரச்சினைகளையும் பேசுவதை விடுத்து அவை கடைசிவரையும் பேசாது விடப்பட்டன (படம் 1). இலங்கை அரசானது சமாதானப் பேச்சுகளைப் பொருளாதாரப் பலாபலன்களுக்கேற்றவாறு கருதிச் செயல்பட்டதுடன் நிகழ்ச்சித் திட்டமொன்றையும் கொண்டிருக்காததால் புலிகளும் நோர்வே அனுசரணையாளர்களும் நிகழ்ச்சித்திட்டத்தை வகுத்ததுடன் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தினர். இச்சூழ்நிலையில் பூரணசுயாட்சியுடன் கூடிய இடைக்கால நிர்வாகச் சபைக்கான பேச்சுவார்த்தையாக சமாதானப் பேச்சுகளைப் புலிகளும் நோர்வே அனுசரணையாளர்களும் மாற்றியமைத்தனர். இங்கு அடிப்படை அரசியல் பிரச்சினைக்கான தீர்வு அவசியமானதாகியது.


இவையனைத்தும் சமாதானத்தின் பலாபலன்களைச் சீர்குலைப்பதாகவே அமைந்தன. 2002 அளவில் வட, கிழக்கில் முதலிடுவதற்கு மீள்கட்டுமானப் பணிகளிலும் ஈடுபடுவதற்கு ஆர்வம்காட்டிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சமாதானப் பேச்சுகள் தொடர்பான நிச்சயமற்ற சூழ்நிலையில் 2003 அளவில் தமது செயல்பாடுகளில் ஈடுபடத் தயங்கினர்.

### சமாதான நடவடிக்கைகளுக்கான சர்வதேசப் பாதுகாப்பு வலைப்பின்னல்

ஜனாதிபதி பாராளுமன்றத்தை அதன் காலம் முடிவடைவதற்கு முன்பே கலைக்கும்பட்சத்தில் சமாதானத் திட்டத்தின் பொருளாதாரப் பலாபலன்களின் அடிப்படையிலேயே மீண்டும் அதிகாரத்திற்குவரப் பிரதமர் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தார். பொருளாதாரப் பலாபலன்கள் வட, கிழக்கிற்குக் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுவதையும் (2003 ஏப்ரலில் தான் எழுதிய கடிதத்தில் பாலசிங்கம் இதனை உறுதிப்படுத்தியிருந்தார்) அரசாங்கத்தைக் கவிழ்ப்பதன் மூலம் யுத்தநிறுத்த உடன்படிக்கை செயலிழக்கப்போவதாக எதிர்க்கட்சி அச்சுறுத்தியதும் பேச்சுவார்த்தைகள்



**படம் 1: ஐக்கிய தேசிய முன்னணி அரசின் வழிமுறை (2002–2003)**







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**படம் 2: பொதுஜன முன்னணி அரசின் வழிமுறை (2000–2001)**




தோல்வியடைந்ததை பிரதமர், சிரான் அமைப்புக்குப் பதிலாக புதிய இடைக்கால நிர்வாக சபைக்கான கட்டமைப்பொன்றை 2003 ஜூனில் முன்வைத்தார்[21]. இதில் போதியளவு சுயாட்சி அதிகாரம் காணப்பட வில்லையெனப் புலிகள் நிராகரித்தனர். எந்த நிறுவனக் கட்டமைப்பாக விருந்தாலும் அது அரசியலமைப்பிற்கு உட்பட்டதாகவே இருக்க வேண்டுமெனவும் பேச்சுவார்த்தை மூலம் பேசித்தீர்த்துக் கொள்ளப்பட முடியுமென அரசாங்கம் விளக்கமளித்தது.

சமாதானப் பேச்சுகளைக் காப்பாற்றுவதற்கான அனைத்து முயற்சி களும் தோல்வியடைந்தபோது சர்வதேசப் பாதுகாப்பு வலைப்பின்னல் ஒன்றை உருவாக்குவதுடன் சமாதான நடவடிக்கையை சர்வதேசமயப் படுத்த வேண்டுமெனப் பிரதமர் தீர்மானித்தார். பிரதமரின் சர்வதேசப்

21. 2003 ஜூனில் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைக்கான முன்மொழிவு பரந்த பட்டதும் இலங்கை அரசியலமைப்பிற்குட்பட்டதுமாகும். அரச அதிகாரிகளின் தகவல்படி இது புலிகளால் குறிப்பிட்ட வகையில் நிராகரிக்கப்படவில்லை (வீரக்கூன், 2004). எனினும் ஒற்றையாட்சியின் கீழான எந்த ஒரு இடைக்கால நிர்வாகச் சபையும் தமக்கு முறையான அதிகாரத்தை வழங்காதெனப் புலிகள் கருதினர்.



பாதுகாப்பு வலைப்பின்னல் என்பது இனிமேல் சவால்களை நாம் மட்டும் எதிர்கொள்ள வேண்டியதில்லை எனப் பொருள்படும் என்கிறார் மிலிந்த மொரகொட (மிலிந்த மொரகொட, 2003:244). அதே வேளை இடைக்கால நிர்வாகச் சபையொன்றுக்கான முன்மொழிவுகளை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கும் வேலையில் 2003 அக்டோபரில் புலிகள் இறங்கினர்.

2003 ஏப்ரலின் பின்னர் பிரதமர் பல வெளிநாடுகளுக்குப் பயணம் செய்தார். (சீனா, அமெரிக்கா, இந்தியா, ஜப்பான்) புலிகளின் பங்களிப் பின்றி 2003 ஜூனில் டோக்கியோவில் நடந்த உதவி வழங்கும் மகாநாட்டில் உறுதி வழங்கப்பட்ட 4.5 பில்லியன் அமெரிக்க டாலர் நிதி யுதவியால் சமாதான நடவடிக்கைகள் மேலும் பலமடைந்தன[22]. 2003 மே மாதத்தில் தனது சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு திரட்டுவதற் காகப் பிரதமர் சீனாவிற்குப் பயணம் செய்தார். அதேபோல் அக்டோபரில் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு திரட்டுவதற்கும் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றைச் செய்வதற்காகக் கலந்துரையாடுவதற் காகவும் பிரதமர் இந்தியாவிற்குப் பயணம் மேற்கொண்டார் (இலங்கை-இந்தியப் பரந்துபட்ட பொருளாதார பங்குடமை உடன்படிக்கை யொன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலங்கை-இந்திய இருதரப்பு வர்த்தக உடன்படிக்கையைப் பலப்படுத்துவது உட்பட) அமெரிக்காவுக்குப் பிரதமரது மேற்கொண்ட இரு பயணங்கள் முக்கிய மானவையாகும் [செப்டம்பர் மற்றும் அக்டோபர் / நவம்பர் 2002]. சமாதான நடவடிக்கைகளுக்கு அமெரிக்க ஆதரவைப் பெற்றுக் கொள்ளல், பாதுகாப்புத் தொடர்புகளைப் பலப்படுத்துதல் மற்றும் இலங்கையின் தைத்த ஆடைத் தொழிலை விருத்திசெய்யும் விதத்தில் இருநாடுகளுக்குமிடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றை ஏற்படுத்தல் போன்ற நோக்கங்களைப் பெற்றுக்கொள்ளும் நம்பிக்கை யிலேயே அமெரிக்கப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன[23]. இருதரப்புச் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை நிறைவேற்றுவது மற்றும் சமாதான

22. டோக்கியோ உதவிவழங்கும் மகாநாட்டில் புலிகள் பங்குபெறவில்லை. 2003 ஏப்ரலில் அமெரிக்காவில் நடந்த உதவி வழங்கும் மகாநாட்டிற்கு தாம் வேண்டுமென்றே புறக்கணிக்கப் பட்டதாகப் புலிகள் கருதினர். டோக்கியோ மகாநாட்டில் நிதியுதவி வழங்கப்படுவதற்கான நிபந்தனைகளை நிறைவேற்றுவது தொடர்பான பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளப் புலிகள் தயாராக இருக்கவில்லையெனச் சில ஆய்வாளர்கள் கூறினார்கள்.

23. விரிவான தகவல்களுக்குக் கெலேகம 2004 பதிப்பைப் பார்க்க. பிரதமரின் செப்டம்பர் அமெரிக்கப் பயணத்திற்கு முன் வர்த்தக அமைச்சர் உலக வர்த்தக மைய மகாநாட்டில் (மெக்சிகோ) கலந்து கொண்டார். இம்மகாநாட்டில் இலங்கை, சில வர்த்தகப் பிரச்சினைகளில் இருந்தும் வளர்ந்து வரும் நாடுகளுக்கான தனது ஆதரவிலிருந்தும் வெளியேறியது. 2001இல் டோகாவில் ஒத்த சிந்தனையாளர்கள் குழு கூட்டத்தில் வெளிப்படுத்தியவாறும் ரங்கூனில் ஜி-20இல் வெளிப் படுத்தியவாறும் அதே வேளை அமெரிக்காவின் சில வர்த்தக விடயங்களை ஆதரித்தது. ஒரு கிழமையின் பின் இலங்கைப் பிரதமர் ஈராக் மீதான அமெரிக்கப் படையெடுப்பை ஐநா சபையில் ஆதரித்துப் பேசினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடவடிக்கைகளுக்கு அமெரிக்க ஆதரவைப் பெற்றுக் கொள்வது போன்றவற்றை அடையும் நம்பிக்கையிலேயே அக்டோபர் பயணம் அமைந்திருந்தது.

பொருளாதாரப் பிரச்சினைகளைப் பயன்படுத்திச் சர்வதேசப் பாதுகாப்பு வலைப்பின்னலை பலப்படுத்துவது சமாதான நடவடிக்கையில் முக்கிய அம்சமாகக் காணப்பட்டது. சமாதான நடவடிக்கைகளை சர்வதேசமயப்படுத்துவதன் மூலம் பிரதமர் புலிகளை சர்வதேச சமூகத்தின் பார்வையின்முன் கொண்டுவந்தார்.

இதன் மூலம் சமாதானப் பேச்சுகள் முறிவடைந்திருந்தபோதிலும் புலிகளை சமாதான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடச் செய்வதற்குப் பிரதமரால் முடிந்தது. போர் மற்றும் சமாதானம் இரண்டும் இல்லாத ஒரு சூழ்நிலையில் மீண்டும் போருக்குச் செல்வது புலிகளுக்குக் கடினமானதாக அமையுமெனப் பிரதமர் கருதினார்.

இந்த நடவடிக்கையில் சில குறைபாடுகளும் சர்வதேசமயப்படுத்தியதால் உதவி வழங்கும் நாடுகள் இலங்கை அரசாங்கத்தைக் கட்டுப்படுத்த முனைந்ததாகவும் விமர்சகர்கள் கூறியுள்ளார்கள். உதாரணமாக ஆதரவு வழங்குவதற்குப் பதிலாகப் புலிகளின் நிபந்தனையின் அடிப்படையில் பேச்சை ஆரம்பிக்குமாறு இலங்கை அரசிற்கு உதவி வழங்கும் நாடுகள் அழுத்தம் கொடுத்தன. கொடகே பின்வருமாறு கூறுகிறார்: 'உதவி வழங்கும் நாடுகள் புலிகளைச் சாந்தப்படுத்தினவேயொழிய அவர்கள்மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கவில்லை. எனினும் புலிகள் அவற்றை அவமதித்தனர். அமெரிக்கா மட்டுமே புலிகளை இராணுவ நடவடிக்கைகளைக் கைவிடுமாறு கேட்டது. இவ்வாறு அறிக்கை விடுவதைத் தவிர அமெரிக்கா வேறொன்றையும் செய்யவில்லை'. பாலசிங்கம் பின்வருமாறு கூறுகிறார்: 'சமாதான நடவடிக்கை களில் சர்வதேசப் பாதுகாவலர்கள் அதிகம் தலையிடுவதைப் புலிகளின் தலைமைப்பீடம் அவதானித்துள்ளது. அரசியல் அழுத்தம் மற்றும் பொருளாதார உதவி என்பவற்றுடன் இலங்கை அரசின் நலன்களை உயர்த்துவதற்கே சர்வதேசப் பிரமுகர்கள் தலையிட்டுள்ளார்கள். இது தரப்பினரிடையிலான உறவையும் அந்தஸ்தையும் சீர்குலைக்கும். சர்வதேச அரசக் கட்டமைப்பு முறையில் சிக்கவைக்கப்பட்ட புலிகள், அளவுக்கு மிஞ்சிய அதிகார சக்திகளிலிருந்து சுதந்திரமாகச் செயல்படுவதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டனர்'. பாதுகாப்பு வலைப்பின்னலானது இருதரப்பினருக்குமிடையிலான அதிகார சமநிலையில் தாக்கம் செலுத்தியுள்ளதுடன் அப்போதிருந்த அந்தஸ்து நிலையையும் பாதித்தது. (பேடினஸ் மற்றும் சிலர், *2004*). உதாரணமாக இது சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான தேசப்பற்று இயக்கங்களைப் பலப்படுத்தியது.



சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் காணப்பட்டபோதும் 2003 இறுதியளவில் காணப்பட்ட நிச்சயமற்ற சூழ்நிலையில் வெளிநாட்டு உதவி குறைவடைந்தது. உதாரணமாக ஒரு வருடத்தினுள் கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்ட பிஆர்ஜிஎஃப் – ஈஎஃப் நிதியானது தள்ளிப்போடப்பட்டது. உறுதியளிக்கப்பட்ட உதவியில் பெரும்பங்கு சர்வதேச நாணய நிதியத்துடன் செய்யப்பட்ட பிஆர்ஜிஎஃப் – ஈஎஃப் ஏற்பாட்டிலேயே மற்றைய நாடுகளும் தங்கியிருந்தால் 2004ஆம் ஆண்டிற்கான நிதியுதவியை வழங்குவதில் பொறுத்திருந்து பார்க்கும் கொள்கையைக் கடைப்பிடித்தன (சிபிஎஸ்எல், 2003 : 198). இதனால் 2003இல் பல வேலைத்திட்டங்கள் போதியளவு பயனுள்ளதாகச் செய்யப்படாமையுடன் பெரும்பாலான வறிய மக்களும் துன்பங்களை நோக்க வேண்டியிருந்தது.

சமாதான நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குவதற்கு டோக்கியோவில் உறுதியளித்தாலும் ஒவ்வொரு உதவி வழங்கும் நாடுகளுக்கும் தமக்கென ஒரு சொந்தக் கொள்கையைக் கொண்டிருந்தன. 2003 ஏப்ரலின் பின் சமாதான முயற்சிகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாதபோதிலும் சமாதானம் தொடர்பான நம்பிக்கைக் கீற்றுகள் முற்றாக இல்லாமல் போகாததால் இந்நாடுகளும் வட, கிழக்குத் திட்டங்களுக்கு நிதியுதவி அளித்தன. யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு முன்னராக வட, கிழக்கில் செய்யப்பட்ட திட்டங்கள் தொடர்ந்தன. வாழ்வாதார மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அரசுசார்பற்ற நிறுவனங்களுக்கு நிதி கிடைத்ததால் அவ்வேலைத் திட்டங்களும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. மனித உரிமைகளை மதித்து நடத்தல், சிறந்த நிர்வாகம் மற்றும் பன்முகத்தன்மை என்பனவற்றின் அடிப்படையிலேயே நிதிஉதவி வழங்கப்படும் என்ற நிபந்தனைகள் வெறும் எழுத்தளவிலேயே இருந்தன. ஏனெனில் இவை சமாதான நடவடிக்கைகளுக்குப் பெரும் சுமையாக அமைந்துவிடுமென உதவி வழங்கும் நாடுகள் கருதியதாகும்.

## சமாதான நடவடிக்கையின் பின்னடைவு: இடைக்கால நிர்வாகச் சபையும் தேர்தல் தோல்வியும்

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையில் சுமுகமான நல்லுறவு நிலவவில்லை. இலங்கையின் ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தல் ஏற்படுமளவிற்கு விடுதலைப்புலிகளைச் சாந்தப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகவும் ஆதலால் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்திப் பாதுகாப்பு அமைச்சு உட்பட்ட மூன்று அமைச்சுகளைத் தன்வசம் பொறுப்பெடுப்பதற்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரம் வந்துவிட்டதாக ஜனாதிபதி கருதினார். 2003 நவம்பர் 4ஆம் தேதி ஜனாதிபதி அவ்வாறு அமைச்சுகளை மீளப்பொறுப்பெடுத்துக் கொண்டார். இதனால் அரசாங்கம் நிலைகுலைந்தது. 2003 ஜூனில் அரசாங்கம் முன்வைத்த இடைக்கால நிர்வாகச் சபைக்கான முன்மொழி விற்குப் பதிலாகப் புலிகள் தமது இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஒன்றிற்கான முன்மொழிவுகளை அரசாங்கத்திடம் முன்வைத்த வேளை யிலே இவ்வாறு அமைச்சுகள் ஜனாதிபதியால் மீளப்பெற்றுக் கொள்ளப் பட்டன. குறுங்கால அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் உள்ளக சுய நிர்ணய உரிமைக்கான நீண்டகாலக் கோரிக்கைகள் என்பவற்றிற்கு இடைக்கால நிர்வாகசபையானது அவசியமெனப் புலிகள் கருதினர் (ஸ்டொக்கி மற்றும் சண்முகரத்னம், 2005).

பாலசிங்கத்தால் நேரவிரயம் என வர்ணிக்கப்பட்ட ஆறு சுற்றுப் பேச்சுகளும் இறுதியில் இடைக்கால நிர்வாகசபையை அமைப்பது பற்றியதாக மட்டுமே அமைந்தன. அரசியலமைப்புக்கு வெளியே சென்று வட, கிழக்கிற்கெனப் புலிகளைத் தலைமையாகக் கொண்ட தன்னாட்சி அதிகார சபையைப் புலிகள் கோரினர். இது தனியரசு ஒன்றின் நகல் வடிவமாகுமென அரசியல் ஆய்வாளர்கள் வர்ணித்தனர். (குணசேகரா, 2004 : கொடகே, 2004: டி சில்வா, 2004 : மற்றும் பிறரும்) இடைக்கால நிர்வாகசபையிலும் சில பிரச்சினைகள் காணப்பட்டன. புலிகள் அமைப்பு சட்டபூர்வமானதல்ல. ஆதலால் புலிகளால் கட்டுப் படுத்தப்படும் சபையொன்றிற்கு நிதி மற்றும் அரசியல் அதிகாரங்களை வழங்குவது இலங்கை அரசியலமைப்பின் கீழ்க் கடினமானதாகும். புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையானது இடைக்கால நிர்வாகத்திற்கான பேச்சுவார்த்தைக்கு ஆரம்பமாக அமையலாமென அரசாங்கம் கருதியது. சமஷ்டி முறையிலான இறுதித் தீர்வுடன் தொடர்புடையதாக இடைக்கால நிர்வாகசபை வழங்கப்படலாமென இந்தியா கருதியது.

ஜனாதிபதியின் நடவடிக்கையானது புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான முன்மொழிவு தொடர்பாகப் பதிலளிக்க வேண்டிய அரசாங்கத்தை அதன் பொறுப்பிலிருந்து விடுவித்த அதே வேளை ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்தியதுடன் அரசாங்கத் தைப் பலவீனப்படுத்தியது. அரசாங்கத்தின் கவனமானது சமாதான நடவடிக்கைகளிலிருந்து பொதுத்தேர்தலை நோக்கி நகர்ந்தது. 2004 பிப்ரவரியில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு ஏப்ரலில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. தனது வெற்றிக்காக சமாதான நடவடிக்கையின் பொருளாதாரப் பலாபலன்களில் தங்கியிருந்த பிரதமர் எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்தால் மீண்டும் போர் மூளுமெனக் கூறினார். தேர்தலில்



ஆட்சியிலிருந்த அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டதுடன் ஜனாதிபதி தலைமையிலான கட்சி ஆட்சிக்கு வந்தது.

தோல்விக்கான காரணம் புலிகள்மீது மென்போக்கைக் கடைப்பிடித்த அரசாங்கத்தின் செயல்பாடா அல்லது போதியளவு பொருளாதாரப் பலாபலன்கள் கிடைக்காமையா என்பதை மதிப்பிடுவது கடினமாகும். எனினும் தேர்தலுக்கு முன்னரான கருத்துக் கணிப்பின்படி பொருளாதாரம் மற்றும் சமூக முகாமைத்துவம் தொடர்பாகப் பெரும்பான்மையான மக்கள் ஆளுங்கட்சியைவிட எதிர்கட்சியையே விரும்பினர்[24]. மரபு ரீதியாகப் பொருளாதார விடயங்களில் பொதுஜன முன்னணியைவிட ஐதே முன்னணியே சிறந்த முகாமையாளர் என இனங்காணப்பட்டிருக் கிறது. மக்கள் இம்முறை எதிர்மாறாகச் சிந்தித்திருப்பது சமாதான திட்டத்தினூடான பொருளாதாரப் பலாபலன்கள் போதியளவு கிடைக் காமையால் அவர்கள் அதிருப்தியடைந்திருப்பதையே காட்டுகிறது. புலிகள்மீதான மென்போக்கும் தோல்விக்கு ஒரு காரணமாக அமைந் திருக்கலாம். பொதுமக்களின் பார்வையில் புலிகள்மீதான மென்போக் கானது அவர்கள் தெற்கிலே குண்டுகளை வெடிக்கவைப்பதைத் தவிர்த்ததைத் தவிர வேறெதையும் தரவில்லை. அத்துடன் புலிகள் 2002–2003 காலப்பகுதியில் 12 ஆயுதத் தளவாடக் கப்பல்களைக் கொண்டு வந்ததன் மூலம் தம்மைப் பலப்படுத்துவதால் என்ன விலை கொடுத்தா யினும் சமாதானத்தை அடைய வேண்டும் என்ற கருத்து பொதுமக்கள் மத்தியில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றாக மாறியது[25]. முன்னர் கூறியவாறு ஆயுதங்களைக் கீழே போடுவது பேச்சுவார்த்தையின் ஓர் அங்கமல்ல. கடந்த இரு ஆண்டுகாலச் சமாதானப் பேச்சுகளால் புலிகள் பலமடைந்துவிட்டதாக மக்கள் கருதினர். தான் சரியான பாதையிலேயே செல்வதை மக்கள் நம்புமாறுச் செய்வதற்குப் பிரதமரின் சமாதான யுக்தி தவறிவிட்டது.

வட, கிழக்கில் பொருளாதாரப் பலாபலன்களைக் கொடுப்பதற்குப் பிரதமர் தவறிவிட்டார். மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றக் கூடியதும் பொருளாதாரப் பலாபலன்களை ஏற்படுத்தக்கூடியதுமான சிரான் செயல்படாமற்போனது. அரசாங்கம் தேர்தலில் தோற்கடிக்கப் பட்ட பின் புலிகளின் சமாதானச் செயலகத்தின் செயலாளர் பூலித்தேவன் பின்வருமாறு கூறினார்: 'எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே எமது தேவைப்பாடாகும். அரச நிர்வாகம் செயல்திறனற்றதாகக் காணப்படுகிறது. அதனால்

24. மாற்றுக்கொள்கைக்கான நிலையத்தால் செய்யப்பட்ட தேர்தலுக்கு முந்தையக் கணிப்பு, சண்டே டைம்ஸ், 2004 மார்ச்
25. இது 2004இல் புலிகளிடமிருந்து வெளியேறிய கருணாவால் வெளியிடப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமாதானத்தின் பலாபலன்களை வழங்குவதற்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையொன்று எமக்குத் தேவைப்படுகிறது. சமாதானத்தின் பலாபலன்கள் கிடைக்காவிடின் மக்கள் எம்மீது நம்பிக்கையை இழப்பார்கள். கடந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நிலையே எமக்கும் ஏற்படும் (புலிகள் சுயாட்சி கோருகிறார்கள், ஐலண்ட் 21 மே 2004). பாலசிங்கம் இவை பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்: 'ஜனாதிபதியுடன் சுமுகமற்ற உறவு நிலையில் காணப்படும் அதிகார மற்ற, பலமற்ற அரசாங்கத்தினால் உடனடிப் பிரச்சினைகளையோ அல்லது அடிப்படைப் பிரச்சினைகளையோ தீர்க்க முடியாது. இது பேச்சுவார்த்தையில் பின்னடைவிற்கு முக்கியமான ஒரு காரணமாகும்.'

பிரதமர் வலுவான ஒரு பொருளாதாரத்தைக் கடந்த அரசாங்கத்திடமிருந்து பெற்றிருந்து பாராளுமன்றத்தில் பெரும்பான்மையையும் கொண்டிருந்திருந்தால் குறுங்காலப் பலாபலன்களைப் பெற்றுக் கொள்வதில் அவரது பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட யுக்தியானது சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டிருக்கலாமெனக் கூறலாம். குறிப்பாகப் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் உட்பட போதியளவு நிறுவனங்களும் கட்டமைப்புகளும் காணப்படாமையால் பொருளாதாரப் பலாபலன்களில் கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. ஒரு சமாதான நடவடிக்கையானது பல கருவிகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். பொருளாதாரப் பிரச்சினைகளைப் போன்று அரசியல் கலாசார மற்றும் சமூகப் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்பட முடியாது. சமாதான நடவடிக்கைகள் முன்கொண்டு செல்லப்படும்போதே அவை உள்ளடக்கப்பட வேண்டும். அடிசன் (2003:5) கூறுகிறார்: 'சமாதானத்தைப் பெறுவதற்காக இழுப்பதற்கு எந்தவொரு தனியான கருவியும் இல்லை'.

## நிறைவுக் குறிப்புகள்

அமைதியான சூழ்நிலையொன்றை உருவாக்குவதிலும் புலிகளை மீண்டும் போருக்குச் செல்வதிலிருந்து தடுப்பதிலும் சில முன்னேற்றங்கள் காணப்பட்டன. எனினும் உறுதியான பொருளாதார பலாபலன்களோ மற்றும் இனப்பிரச்சினைத் தீர்வு நடவடிக்கையில் முன்னேற்றமோ ஏற்படவில்லை. பொருளாதாரப் பலாபலன்களின் பார்வையிலான இலங்கையின் விளைவுகளை மூன்று நிலைகளில் நோக்க வேண்டும். அவையாவன: அரசாங்கம், புலிகள் மற்றும் உதவி வழங்கும் நாடுகள்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அரசாங்கத் தரப்பில் பல குறைபாடுகள் காணப்பட்டன. உதாரணமாக அரசாங்கமானது சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக சிவில் சமூகங்களுடன் போதியளவு கலந்துரையாடலில் ஈடுபடவில்லை. அவர்கள் வெறும் பார்வையாளர்களாகவே கருதப்பட்டதுடன் மிகவும் அரிதாகவே கலந்துரையாடப்பட்டனர். அரசியல் எதிர்க் கட்சியும் பேச்சுகளில் சேர்க்கப்படவில்லை. எதுவாகவிருப்பினும் நடந்து முடியும்வரை பொறுத்திருந்து பார்க்கு மளவிற்கு அரசாங்கம் தயாராவிருந்தது. குறிப்பிட்ட எந்த ஒரு நிகழ்ச்சித் திட்டமும் காணப்படவில்லை. நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையிலேயே அரசாங்கம் ஈடுபட்டது. ஒன்றைச் செய்வதன் மூலம் கற்றுக்கொள்ளும் நடவடிக்கையாகவே இலங்கைச் சமாதான நடவடிக்கைகள் காணப்படுவதாக மிலிந்த மொரகொட கூறுகிறார் (2003a, 260). போதிய நிகழ்ச்சித் திட்டம் காணப்படாமையால் சமாதானப் பேச்சுகளில் புலிகளின் கை ஓங்கியதாகவும் அவர்கள் அதைப் பயன் படுத்திப் பேச்சுவார்த்தைகளைத் தமக்கேற்றவாறு கொண்டு நடத்தினர். அத்துடன் தன்னாட்சி அதிகாரச் சபைக்கான பேச்சுவார்த்தையாக நிகழ்ச்சித்திட்டத்தை மாற்றியமைத்தனர்.

புலிகளின் இந்த ஆதிக்க நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயல்படுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. இது பொதுமக்களைச் சாந்தப்படுத்தும் நடவடிக்கையாகவே தோன்றியது. அரசின் இந்த நடவடிக்கை அளவுகடந்து சென்றதால் இது புலிகளைச் சந்தோஷப் படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கையே என்ற எண்ணத்தை உண்டு பண்ணியது. அரசாங்கம் அதிகளவு இறங்கிச் சென்றுவிட்டதாகத் தமிழ் மிதவாத அரசியல்வாதிகள் கருதினர் (ஆனந்தசங்கரி, 2005). இதனால் நாட்டின் ஏனைய பாகங்களில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்ததுடன் சமாதான நடவடிக்கைகள் தென்னிலங்கைக்குச் சரியான முறையில் எடுத்து வரப்படவில்லை. உதாரணமாக, சாந்தப்படுத்தும் யுக்திக்கு ஒரு அடிப்படைக் காரணம் இருந்திருந்தால் அது பொதுமக்களுக்குத் தெளிவற்றதாகவே காணப்பட்டது.

வட, கிழக்குப் பொருளாதார நிலைமை குறித்துப் பிழையான கருத்து நிலவியது. அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளால் உடனடியான பொருளாதாரப் பலாபலன்கள் கிடைக்குமென ஊகிக்கப்பட்டது. வட, கிழக்கில் போதியளவு நிறுவனக்கட்டமைப்புகளும் சந்தை வசதியும் இல்லாத நிலையில் அதிகளவு நிதியுதவி கிடைத்தாலும் குறுங் காலத்தில் பொருளாதாரப் பலாபலன்களைப் பெற்றுக்கொள்ளலாமா என்பது கேள்விக்குட்படுத்தப்படலாம். பொருளாதாரத்தை மட்டுமே வைத்துக்கொண்டு பிரச்சினையை மாற்றியமைக்க முடியுமா என்பதும் கேள்விக்குறியே. மனிதாபிமானத் தேவைகள் மற்றும் புனர்நிர்மாணப் பணியிலிருந்து பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதை நோக்கி நகருதல் ஒரு சிக்கலான நடவடிக்கை என்பதை இலங்கை அனுபவம் எடுத்துக்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டியுள்ளது. அரசியல் இராணுவ நிலைப்பாடுகள் மற்றும் புலிகளின் வட, கிழக்கிற்கான சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை என்பன ஆராய்ந்தறியப்பட வேண்டிய விடயங்களாகும்.

இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது நீண்ட கஷ்டமான காரியமாகும். நிதியுதவிகளைப் பயன்படுத்துவதற்கேற்ற வகையில் நிறுவனக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு முன், போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள உதவி வழங்கும் மகாநாட்டில் ஆதரவு கிடைத்தது. பேச்சுவார்த்தைகளின் அடிப்படைப் பிரச்சினைகள் பேசப்படாது தள்ளிவைக்கப்பட்டதால் சவால்களுக்கு ஏற்றவாறு செயல்பட முடியாதுபோன நிறுவனக் கட்டமைப்புகளை மாற்றியமைக்கும் செயல்பாடுகள் (சிரான்) தாமதமாகின. மேலும் இந்நிறுவனக் கட்டமைப்புகள் இறுதித் தீர்வுடன் தொடர்புபடுத்தப்படவில்லை. உதாரணமாக சமஷ்டி ஆட்சிமுறை மற்றும் அடிப்படைப் பிரச்சினைகள் என்பன, பொருளாதார பலாபலன்கள் மூலம் விடுதலைப்புலிகள் பலவீனப்படுத்தப்படுவார்கள் என்ற காரணத்தால் விவாதிக்கப்படாமல் இறுதிவரை தள்ளிப்போடப்பட்டதுடன் 2005/2006 அளவில் பிரதமர் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக வந்து அரசியலமைப்புத் தடைகளை வெற்றிகொள்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

சமாதானப் பேச்சுக்கு ஆதரவுகிடைக்க வேண்டுமானால் நாட்டின் ஏனைய பகுதிகளில் பொருளாதாரப் பலாபலன்களால் நன்மைகள் ஏற்பட்டமையை நிரூபிக்க வேண்டும். பொருளாதாரப் பலாபலன்களை அடிப்படையாகக் கொண்ட சமாதானப் பேச்சுகள் பொருளாதார வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. புள்ளிவிபரங்களின்படி இலங்கையில் பொருளாதாரம் புத்துயிர்பெற்றபோதிலும் பொருளாதார நன்மைகள் எல்லோரிடமும் பங்கிடப்படவில்லை. இவ்வளர்ச்சி நடவடிக்கையானது வறியவர்களையும் உள்ளடக்க வேண்டும்.

தமது பூரணக் கட்டுப்பாட்டில் இல்லாவிட்டால் நிவாரண மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுவதில் புலிகள் அக்கறை காட்டவில்லை. புலிகளின் பங்களிப்பின்றிய பொருளாதார பலாபலன்களால் வட, கிழக்கில் தமிழ் மக்கள்மீது புலிகள் வைத்துள்ள பூரணக் கட்டுப்பாடானது பலவீனப்படுத்தப்படுவதுடன் அவர்களின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையும் சீர்குலையும். இதைப் புலிகள் நன்றாகவே அறிந்து வைத்திருந்தனர். அதனால் தமது கட்டுப்பாட்டின்றி நிதியுதவிகள் கிடைப்பதற்கு புலிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். தாம் ஒதுக்கப்படுவோம் எனப் புலிகள் பயந்தனர். அதிகாரப் பங்கீடுகளை



முன்வைப்பதன் மூலம் பொதுஜன முன்னணி அரசாங்கம் தம்மை ஒதுக்குவதற்கு முனைவதாகப் புலிகள் கருதினர். அதேபோல் ஐதேமுன்னணி அரசானது புனர்வாழ்வு நடவடிக்கைகள் மற்றும் பொருளாதாரப் பலாபலன்கள் மூலம் இதைச் செய்ய முனைந்ததாக அவர்கள் கருதினர். இப்பயமானது அரசால் உரியமுறையில் தீர்க்கப்படவில்லை. தம்மைப் புறமொதுக்கக் கூடிய பொருளாதார பலாபலன்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளைக் கெரில்லா இயக்கமொன்று தடுக்கலாம். எனினும் தற்போதுள்ள இலக்கியங்களில் இவ்விடயம் குறைந்தளவு கவனத்தையே பெற்றுள்ளது[26].

புலிகள் உண்மையிலேயே ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு ஒன்றைத் காண்பதற்கு ஆவலாக உள்ளனரா எனக் கேள்வி எழுப்பப்படலாம். அதே போன்று யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திடுவதன் மூலம் புலிகள் தம்மைப் பலப்படுத்திப் பிரிந்துசெல்லும் எண்ணத்தைக் கொண்டிருந்தனரா எனவும் கேள்வி எழுப்பப்படலாம். இவைதான் உண்மையான நிலைமை எனில் எவ்வளவுதான் வட, கிழக்குப் பொருளாதாரப் பலாபலன்கள் கிடைத்தாலும் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாணும் திட்டம் பலனளிக்காது. பேச்சுவார்த்தைகளில் புலிகள் நடந்துகொண்ட முறை பல சந்தேகங்களை எழுப்புகிறது.

உதவி வழங்கும் நாடுகளின் தரப்பிலும் சில பிரச்சினைகள் இருந்தன. சமாதான நடவடிக்கையின் முன்னேற்றமானது எவ்வாறு உதவி வழங்கும் நாடுகளால் அளவிடப்பட முடியுமென்பது தெரியவில்லை. பல உதவி வழங்கும் நாடுகள் தமது நிபந்தனைகளைத் தளர்த்தி நிதியுதவிகளை வழங்கிய அதேவேளை இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அல்லது அதற்கீடான வேறெதுவும் வழங்கப்படுவது சமாதானத்தின் வளர்ச்சியாகவே கருதியமை 2003 இறுதிப்பகுதியில் தெளிவாயிற்று. சர்வதேச சமாதானக் குழு மற்றும் உதவி வழங்கும் நாடுகளின் முகவர்கள் என்பவர்களின் பிரசன்னமானது சுயாட்சி மற்றும் பொருளாதார அரசியல் உறுதிப்பாடு என்பவற்றிற்கு முரணான பொருளாதார விளைவுகளைக் கொண்டதாகும். இப்பிரச்சினையானது அரிதாகவே விவாதிக்கப்படும் அதேவேளை இது தொடர்பாக ஒவ்வொரு நிகழ்ச்சிக் கற்கையிலும் தெளிவாகத் தோன்றுகிறது (உட்வோட், 2002, 208).

புதிய வெளிநாட்டு நிதியுதவி தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தில் நிதிகளை உள்ளீர்க்கும் திறனை வளர்க்கும் வகையிலான செயல்பாடுகள் வலியுறுத்தப்பட வேண்டும். போர்ப் பிரதேசங்களிலே காணப்படும் போதியளவு மனிதவளம் மற்றும் நிறுவனக் கட்டமைப்பு காணப்படாமையால் நிதியுதவிகள் உள்ளீர்க்கப்படுவதில் பிரச்சினைகள்

26. ஓஈசிடி 2003ஐப் பார்க்க.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணப்படுகின்றன. இது நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பான பிரச்சினையல்ல. அவற்றைப் பயன்படுத்துவது தொடர்பான பிரச்சினையாகும். இதுவே உதவிவழங்கும் நாடுகள் தொடர்பான முக்கியப் பிரச்சினையாகும். சர்வதேச உதவிகளை நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு உள்நாட்டுப் பிரமுகர்களைப் பலப்படுத்த வேண்டியிருந்ததது. சிர்கி (2004:1) பின்வருமாறு கூறுகிறார்: 'சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தொடர்ச்சியான தடையாக அமைவது சர்வதேசப் பிரமுகர்கள் போரால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்குத் தாம் வழங்கும் உதவியை ஒழுங்குபடுத்தாததேயாகும்'.

இருதரப்பினருக்குமிடையில் ஆகக்குறைந்த நம்பிக்கையையாவது வளர்ப்பதுடன் இருவரும் ஒருவருக்கொருவர் தீங்கிழைப்பதில்லையென உறுதி வழங்க வேண்டும். நீண்டகாலமாக நம்பிக்கையற்றுக் காணப்பட்ட இருதரப்பினரிடையே பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்துவதற்குப் பொருளாதாரப் பலாபலன்கள் போதுமானவையாக அமையாதிருக்கலாம். பொருளாதாரப் பலாபலன்களை மேலும் பயனுள்ளதாக்குவதற்கு இன்னும் பல விடயங்கள் ஒரே சமயத்தில் கவனத்திலெடுக்கப்படவேண்டும். அதன் பின்னரே சமாதான நடவடிக்கைகளையும் சமாதானத் தீர்வையும் பலப்படுத்துவதற்கான பலாபலன்கள் கிடைக்கும்.

### உசாத்துணைகள்


அடிசன், டொனி (2003) *ஆப்பிரிக்காவின் பிரச்சினைகளிலிருந்து மீட்சி: வறியவர்களுக்காக சமாதானத்தை ஏற்படுத்தல்*, கொள்கைச் சுருக்கம் எண்: 6, யூஎன்யூ/வைடர், ஹெல்சிங்கி.

அருணாதிலக என்.எஸ். ஜயசூரிய மற்றும் எஸ். கெலேகம (2001) *இலங்கையில் நடைபெறும் யுத்தத்தின் பொருளாதாரச் செலவு*, உலக அபிவிருத்தி, பதிப்பு – 29, எண்: 9.

ஆர்எஸ்எல் (2003), *இலங்கையை மீளக்கட்டியெழுப்புதல்: துரித அபிவிருத்திக்கான பார்வையும் யுக்தியும்*, இலங்கை அரசு, அரசு பதிப்பகம், கொழும்பு.

ஆஃப்ஸ்டாட், ஏ (2002) *வன்முறைப் பிரச்சினைகளிலுள்ள நாடுகளுக்கு உதவி யுக்தி: இலங்கை நிலைமை*, உலக அபிவிருத்திப் பதிப்பு 30, எண். 2

ஆனந்தசங்கரி ஏ. (2005) *சமாதான நடவடிக்கைகளும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளும்*, ஐலண்ட், 21 மார்ச்.

ஈஆர்டி (2004) *வெளிநாட்டு உதவி தொடர்பான மீளாய்வு*, 2003, வெளிநாட்டு வளப்பிரிவு, நிதியமைச்சு, கொழும்பு.

ஏடிபி (2005) *ஆசிய அபிவிருத்தி வெளிப்பார்வை 2005*, ஆசிய அபிவிருத்தி வங்கி, மணிலா.

ஐஎம்எஃப் (2004) *இலங்கை: 2003 உறுப்புரை 4, அரசியலமைப்பு*, ஊழியர் அறிக்கை, www.imf.org.

ஐபிஎஸ் (பல்வேறு வெளியீடுகள்) *இலங்கை: பொருளாதார நிலை*, கொள்கை கற்கைகளுக்கான நிலையம் (ஐபிஎஸ்), கொழும்பு.

குணசேகரா எஸ்.எல். (2004) *வெறுப்பு*, சமயவர்தன வெளியீட்டார்கள், கொழும்பு.

குணரட்ண ஆர். (2003) *இலங்கை தமிழ்ப் புலிகளை ஊட்டி வளர்த்தல்*, பலென்ரின் கே. மற்றும் ஷேர்மன் (ப-ஆ) ஆயுதப் போராட்டத்தின் அரசியல் பொருளாதாரம்: பேராசைகள் மற்றும் துன்பங்களுக்கு அப்பால், ரின்னர், லண்டன்.

கெலேகம, எஸ். (1999) *இலங்கைப் பிரச்சினையின் பொருளாதாரச் செலவு*, றொட்பேர்க் (ப.ஆ) *இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தல்: சிவில் யுத்தமும் நல்லிணக்கமும்*, புரூக்கிங்ஸ் கல்வியக அச்சகம் வாஷிங்டன், டி. சி.

— (2003) *பயங்கரவாதம் மற்றும் போர் நிலவும் காலப் பகுதியில் இலங்கைப் பொருளாதாரத்தை முகாமை செய்தல்*, காட்ரி எஸ் மற்றும் ருவேக் (ப.ஆ) *கிழக்காசியாவில் பயங்கரவாதம்: ஜனநாயக நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்திமீது ஏற்படுத்தும் தாக்கம்*, சிப்ரா வெளியீட்டாளர்கள் புதுடெல்லி, இந்தியா.

— (2004 பதிப்பு) *இலங்கையில் தைத்த ஆடைத்தொழில்: எதிர்நோக்கும் சர்வதேசச் சவால்கள்*, கொள்கைக் கல்விக்கான நிலையம், கொழும்பு.

கொடகே கே. (2004) புரசல்ஸ் சமாதானப் பொறி ஐலண்ட் 01 ஜூன் கொழும்பு.

— (2005) *முக்கியமான விடயங்கள்*, ஐலண்ட் 11 மார்ச், கொழும்பு.

சண்முகரத்னம், என். (2003), யாழ்ப்பாண மீனவச் சமூகம்: தொடர்ச்சியான பிரச்சினைகளும் சாத்தியமான தீர்வுகளும், பொலிட்டி பதிப்பு 1, எண்: 5.

சர்வானந்தன், எம். (2003), *வடகிழக்கில் பொருளாதார மீட்சிக்கான தடைகள்: செயல்பாட்டு பத்திரம் 2*, இனைத்துவக் கல்விக்கான சர்வதேச நிலையம், கொழும்பு.

சிகிரி, என். (2004), *முரண்பாட்டிற்குப் பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்: பெறுபேறுகள், வரையறைகள், சவால்கள்*, பாதுகாப்பு அபிவிருத்தித் திட்டம், சர்வதேச சமாதான அகாடமி, நியூயார்க், அமெரிக்கா.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிபிஎஸ்எல் (பல வருடங்கள்) வருடாந்த அறிக்கை, இலங்கை மத்திய வங்கி, கொழும்பு.

சிவானந்தம் வி.பி. மற்றும் ஆ. தில்லைநாதன் (2004), வடமாகாணப் பொருளாதாரத்தின் போக்கும் சாத்தியங்களும், பிறெக்கஸ் ஜி. மற்றும் பி. க்லெம் (ப.ஆ) வேற்றுமைகளுடன் கையாளுதல்: சமாதானம் மற்றும் பிரச்சினை தொடர்பான இலங்கை கலந்து சர்வதேச உறவுமுறைகளுக்கான நெதர்லாந்து நிலையம், கிளின்யென்டல் உரையாடல், தறாஞ்சி பதிப்பகம், கொழும்பு.

சிறிஸ்கந்தராஜா, டி. (2003), இலங்கையின் சமாதானத்தின் மீள்வருகை: இனப்பிரச்சினைத் தீர்வுக் குதிரையின் முன்னால் அபிவிருத்தி வண்டி, ஐசிஈஎஸ் விரிவுரை/கலந்துரையாடல் தொடர்.

டிஈசிடி (2003) பயங்கரவாதத்தைத் தடுப்பதில் ஒத்துழைப்பு அபிவிருத்திப் பார்வை: செயல்பாடுகளில் இறங்குவதற்கான முக்கிய அம்சங்கள், அபிவிருத்தி உதவிக் குழுவின் குறிப்பாவணம், டிஈசிடி, பாரிஸ்.

டி. சில்வா , ஹெச்.எல்(2004) ஐஎஸ்ஜிஏ: ஒரு நாட்டின் உதயமும் மற்றைய நாட்டின் அஸ்தமனமும், சண்டே டைம்ஸ் 3 அக்டோபர், கொழும்பு.

துன்ஹாம் டி மற்றும் எட்வேட் (1997) கிராமிய வறுமை மற்றும் இலங்கையின் விவசாய நெருக்கடி 1988 – 1995, நிலைமையை விளங்கிக்கொள்ளல், கொள்கைகளுக்கான கல்விநிலையம், வறுமை மற்றும் வருமானப் பங்கீட்டுத் தொடர், எண்: 1

பஸ்டியன், எஸ். (2003), வெளிநாட்டுதவி, உலகமயமாக்கல் மற்றும் இலங்கைப் பிரச்சினை, மேயர், எம்.ஈதல் (ப.ஆ), சமாதானத்திற்காக உள்ளூர்த் திறன்களைக் கட்டியெழுப்புதல்: இலங்கையின் பிரச்சினை மற்றும் அபிவிருத்தியை மீளச்சிந்தித்தல், மக்மில்லன், புதுடெல்லி.

பாலசிங்கம், அன்டன் (2004) போரும் சமாதானமும்: புலிகளின் ஆயுதப் போராட்டமும் சமாதான நடவடிக்கைகளும், பெயார்மக்ஸ் வெளி யீட்டாளர்கள், இங்கிலாந்து.

பேடினன்ஸ் டி-ஈதல் (2004) முக்கியமான கட்டத்தில் இலங்கையின் சமாதான நடவடிக்கைகள்: பாடங்கள் சந்தர்ப்பங்கள் மற்றும் பேச்சு வார்த்தை மற்றும் பிரச்சினையை மாற்றியமைக்கும் எண்ணங்கள், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், கொழும்பு.

மொரகொட, எம். (2003 a) வாஷிங்டன் உதவி வழங்கும் மகாநாடு, பீரிஸ் எம்டிடி (ப-ஆ) உளப்பூர்வமான மனம், குளிர்தலை, ஆழ்ந்த மூச்சு, ஐ ஐடியூ லேக் ஹவுஸ் வெளியீடு, கொழும்பு.

ராஜசிங்கம் சேனாநாயக்க. டி. (2003), முரண்பாட்டிற்குப் பின்னரான சர்வதேசத் தொழிற்துறை: புராணங்கள், வழமையான செயல்பாடுகள்,



சந்தை ஒழுங்கின்மை மற்றும் புது முன்மாதிரியொன்றிற்கான தேவை, பொலிட்டி, பதிப்பு 1, எண். 3 கொழும்பு.

லடு வெட்டி என். (2004) சமாதானப் பேச்சுகளின் வளர்ச்சியை எது ஏற்படுத்துகிறது? ஐலண்ட், 28 மே, கொழும்பு.

வீரக்கூன், பிரட்மன், (2000), வட, கிழக்கு இடைக்கால நிர்வாக சபைக்கான கட்டமைப்புகள் வகுத்தல் (பகுதி I, II) சண்டே டைம்ஸ், 12 மற்றும் 19 டிசம்பர், கொழும்பு.

உட்வோட், சுசான், ட. (2002), வெற்றிகரமான சமாதான நடைமுறைக் கான பொருளாதார முன்னுரிமைகள், ஸ்டெட்ஸ்மன், எஸ்.ஜே.டி. ரொத்சைலட் மற்றும் ஈ.எம். கௌசென்ஸ் (ப.ஆ) சிவில் யுத்தங்களை முடிவுறுத்தல்: சமாதான உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்தல், டின்னர், லண்டன்.

ஸ்ரோக்கி மற்றும் சண்முகரத்னம் என். (2005), இலங்கையில் நிவாரண மற்றும் புனர்வாழ்விலிருந்து சமாதானத்தை நோக்கி, பொலிட்டி, பதிப்பு 2, எண். 3

ஜேபிஐசி (2003) பிரச்சினையும் அபிவிருத்தியும்: சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் (ஜேபிஐசி) பங்கு, இலங்கைச் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கும் புனர்நிர்மாணம் செய்வதற்குமான அபிவிருத்தி உதவி, ஐபிஐசி கல்வியகம், ஜப்பான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 9

## அபிவிருத்தி எவ்வாறு சமாதானத்தைப் பலவீனப்படுத்தியது

சுனில் பஸ்டியன்

### அறிமுகம்

2002 – 2004 சமாதான நடவடிக்கைகளும் 2004 ஏப்ரலில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அடைந்த தோல்வியும் இந்தக் கட்டுரையில் மையப்படுத்தப்படுகின்றன. சமாதான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்ப விவரணத்துடன் இது ஆரம்பிக்கப்படுகிறது. முடிவில்லாத உள்நாட்டு யுத்தம், ஸ்திரமற்ற ஆட்சி, பொருளாதார நெருக்கடி போன்றவற்றைக் கொண்டதாக 2000–2001 வருடங்கள் இருந்தன.

2001இல் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியானது சமாதான நடவடிக்கைகளுக்கான பிரதான மூலக்கரு என்பதை இந்தப் பிரிவு விவாதிக்கிறது.

மூன்று அம்சங்களை உள்ளடக்கிய உபாயத்தை ஐதேமு அரசாங்கம் ஆரம்பித்தது.

1. யுத்தநிறுத்த உடன்படிக்கையும் புலிகளுடனான பேச்சுவார்த்தையும்
2. அதிகளவிலான பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம்
3. இந்த இரு அம்சங்களுக்கும் சர்வதேச ஆதரவைத் திரட்டுதல்

என்பவையேயாகும். இந்த உபாயத்திற்கு உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து ஆர்வத்துடனான ஆதரவு கிட்டியது. அத்துடன் உதவி வழங்கும் சமூகத்துக்கும் ஐதேமுவின் தலைமைத்துவத்திற்கும் இடையில் நலன்கள், சிந்தனைகள் என்பனவற்றில் குறிப்பிடத்தக்க இசைவுத் தன்மையும் காணப்பட்டது. இரண்டாம் பகுதியானது இந்த அறிக்கையில் கணிசமான இடத்தைப்பிடித்திருக்கிறது. அதில் உதவி வழங்கும் நாடுகளின் அரசியல் மற்றும் ஐதேமு அரசின் உபாயம் என்பன மையப்படுத்தப்பட்டுள்ளன. இந்த அறிக்கையின் கடைசிப் பகுதியானது ஐதேமுவின் தோல்வியை விவரிக்கிறது. இங்கு விவாதிக்கப்படும் பிரதான விடயம் என்னவென்றால், ஐதேமுவின் பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டமானது பெரும்பான்மைச் சிங்கள மக்களின் ஆதரவைத் தக்கவைத்துக்கொள்வதற்கு ஏற்புடையதாக இருக்கவில்லை என்பதாகும். பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்ட அரசியல், பெரும்பான்மையான சிங்கள மக்களின் பெரும் பிரிவினரை அந்நியப் படுத்தியதுடன் ஐதேமுவின் தோல்விக்கும் வழிவகுத்தது.

### பொருளாதார நெருக்கடியும் சமாதானத் தேடலும்

காலனித்துவத்திற்குப் பின்னரான இலங்கை அரசாங்கமானது எதிர்கொண்ட நெருக்கடியை மிகமோசமாக்கிய காரணிகளுக்குப் பத்தாயிரமாம் ஆண்டின் முதல் இரு வருடங்களே சாட்சியங்களாக உள்ளன. இந்தக் காரணிகள் யுத்தத்தின் நிலைமை, பொருளாதாரம், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியின் ஸ்திரத்தன்மை என்பவற்றுடன் தொடர்புபட்டவையாகும்.

இரண்டு தசாப்தகால யுத்தம் முடிவுறும் நிலை தென்படவில்லை. 1995இல் யுத்தம் உக்கிர நிலையை அடைந்தது. விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தை முறிவடைந்தபின் பொதுஜன ஐக்கிய மக்கள் முன்னணி அரசாங்கம் 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற முழக்கத்துடன் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ்ப்பாணக் குடாநாட்டை (இலங்கைத் தமிழர்களின் பிரதான பகுதி) தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கான இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தது. 4 நடவடிக்கைகள் 7 வாரங்கள் நீடித்தன. இராணுவம் யாழ் நகரைக் கைப்பற்றியது. இந்த யுத்தத்தால் பொதுமக்களில் கணிசமான தொகையினர் இடம்பெயர்ந்தனர்.

எவ்வாறாயினும் 2000ஆம் ஆண்டு யுத்த முனையில் பின்னடைவை ஏற்படுத்தியது. மிகவும் முக்கியமான நிகழ்வாக ஏப்ரல் 2000இல் ஆனையிறவைப் புலிகள் கைப்பற்றினர். ஆனையிறவானது குடாநாட்டையும் பிரதான நிலப்பரப்பையும் இணைக்கும் நீண்ட ஒடுங்கிய நிலத்துண்டாகும். இந்நிகழ்வானது குடாநாட்டில் நிலைகொண்டிருந்த ஆயிரக்கணக்கான படைவீரர்களின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியதுடன் அரசாங்கம் வெளிப்படுத்திய நிலைப்பாடும் குழப்பமான நிலைக்கு இட்டுச் சென்றது. உண்மையிலேயே குழப்பமடைந்த அரசாங்கம், குடாநாட்டிலிருந்து படையினரை வெளியேற்ற இந்தியா விடமும் உதவிகோரியது.

அதிக உச்சபட்சத்திற்கு யுத்தத்தை நடத்திக்கொண்டிருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதேசமயம் அரசியலமைப்பைத்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டது. 'அடிப்படைப் பிரச்சினைகளை'க் கையாள்வதற்கு இந்நடவடிக்கைகளெனப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமை தெரிவித்தது. வடகிழக்குப் பகுதிக்குக் கணிசமான அளவுக்குச் சுயாட்சியை வழங்கும் அரசியலமைப்பு நகலைத் தயாரிப்பதே இந்நடவடிக்கையின் பிரதான நோக்கமாகும். இந்தியாவின் அழுத்தத்தால் உருவாக்கப்பட்ட மாகாணசபைகளுக்கு அப்பால் சென்று சுயாட்சியை வழங்குவதே இந்த முயற்சியாகும்.

இதன் விளைவாகப் பாராளுமன்றத் தெரிவுக்கு ஊடாக அரசியலமைப்பு தொடர்பான கலந்துரையாடல்கள் நீண்ட காலத்துக்கு இடம்பெற்றன. ஆகஸ்ட் 2000இல் பாராளுமன்றத்தில் மறுசீரமைப்பு யோசனைகள் அடங்கிய நகல்வரைவைச் சமர்ப்பிப்பதென அரசாங்கம் எதிர்பார்த்திருந்தது. ஆயினும் பிரதான எதிக்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு கிடைக்காததால் பாராளுமன்ற விவாதத்தின்போது தனது யோசனைகளை அரசாங்கம் திரும்பப் பெற்றது.

2000 அக்டோபரில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் புதிய பாராளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கியது. வன்முறைகளின் மத்தியில் இடம்பெற்ற தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொண்டது[1]. ஆயினும் ஆரம்பத்திலிருந்தே புதிய அரசாங்கம் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியது. இந்தப் பொருளாதாரரீதியான காரணிகள் 2001 ஆரம்பத்தில் வெளிக்கிளம்பின.

2000ஆம் ஆண்டு பொருளாதாரத்தைப் பலவீனப்படுத்திய இரு அதிர்ச்சி விடயங்கள் குறித்துக் கெலேகம 2001இல் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயங்கள் இடம்பெற்றிருக்காவிடின் சாதகமான பொருளாதார நிலை ஏற்பட்டிருக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். உள்நாட்டில் வட கிழக்கில் இடம் பெற்றுக்கொண்டிருந்த யுத்தம் 2000 ஏப்ரல், மே மாதங்களில் உக்கிரமடைந்தது. இதனால் நாட்டை முழு அளவிலான போர்க்காலச் சூழ்நிலையில் வைத்திருக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. வரவு–செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு செலவினத்தையும் அதிகரிக்க வேண்டியிருந்தது (1999இல் 48 பில்லியன் ரூபாவாக இருந்த பாதுகாப்புச் செலவீனம் 2000இல் 80 பில்லியனாக அதிகரித்தது. இது நிகர தேசிய உற்பத்தியில் 5.6 சதவீதம்). சர்வதேச அளவில் 2000 ஜூனிலிருந்து எண்ணெய் விலைகள் அதிகரித்தன.

1. இக்காலப்பகுதியில் இடம்பெற்ற தேர்தல் வன்முறை தொடர்பான கலந்துரையாடலுக்காக, 'இலங்கையின் தேர்தல் முறைமையும் தேர்தல் இயந்திரமும் 1931–2002. ஓர் வரலாற்று அரசியல் ஆய்வு', கே.எம்.டி..சில்வா, 2002ஐப் பார்க்க. இது 21–23 ஜூன் 2002இல் இனக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தெற்காசியாவில் தேர்தல் நடவடிக்கைகளும் ஆளுகையும் பற்றிய சர்வதேச மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை.



1999இல் பாரல் ஒன்று 19 அமெரிக்க டாலராக இருந்தது. 2000 இல் பாரல் ஒன்று 28 டாலராக உயர்ந்தது. இது நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பை மோசமாகப் பாதித்தது. அந்நியச் செலாவணிக் கையிருப்பு 596 மில்லியன் அமெரிக்க டாலராக வீழ்ச்சிகண்டது[2].

2001 ஜனவரியில் செலாவணி விகிதத்தை மிதக்கவிடுவதை மத்திய வங்கி வலிந்து அறிமுகப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்நியச் செலாவணிக் கையிருப்புகள் குறைவடைந்ததால் நாணயப்பெறுமதியைத் தக்கவைத்துக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டதாலேயே நாணயத்தை மிதக்கவிட வேண்டிய நிலைமை தோன்றியது. ஆயினும், நிலைமையை எதிர்கொள்ள இந்த நடவடிக்கை போதாமலிருந்தது. அடுத்த மாதம் சில அத்தியாவசியப் பொருட்கள் தவிர்ந்த சகல இறக்குமதிகளுக்கும் 40% மேலதிகக் கட்டணத்தை அரசாங்கம் விதித்தது. இதைத் தொடர்ந்து வருவாயை அதிகரிக்கும் அதிகளவு நடவடிக்கைகளும் செலவைக் குறைக்கும் நடவடிக்கைகளும் 2001 மார்ச்சில் புதிய அரசாங்கத்தின் முதல் வரவுசெலவுத் திட்டத்தின்போது அறிமுகப்படுத்தப்பட்டன.(மேலது).

2001 ஏப்ரலில் சர்வதேச நாணய நிதியத்தின் 530 மில்லியன் டாலர் பொதி அறிவிப்புடன் இந்தச் சகல நடவடிக்கைகளும் உச்சக்கட்டத்தை அடைந்தன[3].

உள்நாட்டு யுத்தத்தை நடத்திக்கொண்டிருக்கையில் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகளின்போது உதவி வழங்கும் அமைப்புகளின் ஆதரவை இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொள்வது திரும்பத் திரும்ப நடைபெறுவதாகும். உதவி வழங்கும் சமூகத்தின் ஆதரவுடன் பொருளாதாரம் தாராளமயப்படுத்தப்பட்ட 1977லிருந்தே இந்த நடைமுறை இருந்து வருகிறது. இலங்கை நீண்ட காலமாகவே இந்த மாதிரியான பொருளாதார அபிவிருத்தி, மறுசீரமைப்பு நடவடிக்கை மார்க்கத்தில் தொடர்ந்து சென்றுகொண்டிருந்ததுடன் யுத்தம் இடம்பெற்றாலும் உதவி வழங்கும் சமூகங்களின் ஆதரவும் கிடைத்துக்கொண்டிருந்தது.

எவ்வாறாயினும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு மூலம் 2001ஆம் ஆண்டின் பொருளாதாரநிலையைக் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை. ஏனெனில், 2001இல் மோசமான வறட்சி ஏற்பட்டது. அத்துடன் யுத்தத்தினால் ஏற்படும் பொருளாதார ரீதியான தாக்கம், ஒரேயொரு சர்வதேச விமான நிலையமான கட்டுநாயக்கா 24 ஜூலை

2. கெலேகம சமன், நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கையின் பொருளாதாரம், வரவு–செலவுத் திட்டம் 2001, சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை, பொருளாதார, அரசியல் வார சஞ்சிகை, 2001 ஜூலை 14.
3. கெலேகம சமன், முன்பு குறிப்பிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அட்டவணை 1: தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளாதாரச் சுட்டிகள்**

| | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 |
|---|---|---|---|---|---|
| நிகரத் தேசிய உற்பத்தி (% மாற்றம்) | 4.3 | 6.0 | 1.5 | 4.0 | 5.9 |
| வரவு செலவுத்திட்டத்தில் துண்டு விழும் தொகை (% நிகர தேசிய உற்பத்தியில்) | 7.5 | 9.9 | 10.8 | 8.9 | 8.0 |
| அரசக் கடன் (% நிகரத் தேசிய உற்பத்தியில்) | 95.1 | 96.9 | 103.2 | 105.4 | 105.9 |
| வெளிச் சொத்துகள் (ஒரு வருட மாதங்களில் இறக்குமதிகள்) | 5.2 | 3.5 | 4.5 | 4.9 | 5.8 |
| கடன் சேவை வீதம் (% பொருட்கள் சேவைகள் ஏற்றுமதி) | 15.2 | 14.7 | 13.2 | 13.2 | 11.6 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகள் (1999 – 2003)

2001இல் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து படுமோசமான நிலைமையைச் சந்தித்தது. நாட்டின் பொருளாதாரத்தை அழிக்க வேண்டுமென்ற பிரதான நோக்கத்துடன் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் இதுவாகும். இதனால் இலங்கையின் நவீனப் பொருளாதார வரலாற்றிலேயே மோசமான ஆண்டாகச் சுதந்திரம் பெற்றதிலிருந்து 2001 வீழ்ச்சி கண்டது.

நிகரத் தேசிய உற்பத்தியில் 1.5 சதவீதமாகப் பொருளாதார வளர்ச்சி இருந்தது.

இந்தப் பொருளாதார நெருக்கடியால் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அனுசரணையாளராகச் செயல்பட நோர்வே அரசாங்கம் விருப்பம் தெரிவித்ததைப் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. இதன் பின்னரான நிகழ்வுகள், அரசாங்கம் இந்த நிலைப்பாட்டை தயக்கத்துடனேயே விருப்பமின்றி எடுத்ததென்பதையும் பிரதானமாக, பொருளாதார நெருக்கடியாலேயே இம்முடிவுக்கு வந்ததையும் வெளிப்படுத்தின. இதன் விளைவாக நோர்வேயின் பங்களிப்பு 'அனுசரணையாளர்' என்பது மட்டுமே. அதற்கு அப்பால் எதுவுமில்லையென்பதைக் கிரமமாக அரசாங்கம் வலியுறுத்தி வந்தது.

ஆயினும், இலங்கையின் உள்விவகாரங்களில் வெளிப்பாத்திரங்களை ஈடுபடுத்துதல் என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். அதிலும்



விசேடமாக இன அரசியலை பொறுத்தவரை இதுவொரு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அதுவரை மோதலில் தலையிட்ட முக்கிய வெளிப்பாத்திரமாக இந்தியா இருந்தது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. பூகோளரீதியான தொடர்பு, வரலாற்றுப் பிணைப்புகள், பிராந்தியத்தில் அதிகாரம் படைத்த நாடென்ற பங்களிப்பு, தமிழ்நாட்டில் தமிழ் பேசும் மக்களின் இருப்பு, தனது சொந்தப் பாதுகாப்புக்கு இலங்கை மோதல் தாக்கத்தை ஏற்படுத்துமென்ற இந்தியாவின் விசனங்கள் என்பன இந்தக் காரணங்களாகும். இந்தியா சம்பந்தப்பட்ட அதிமுக்கிய விடயமாக 1987இல் கையெழுத்திடப்பட்ட இலங்கை–இந்திய ஒப்பந்தம் அமைகிறது.

நோர்வேயை அனுசரணையாளராகப் பங்களிப்புச் செய்யுமாறு அழைத்ததன் மூலம் இலங்கையின் மோதல் சம்பந்தமான வெளிமட்டச் சம்பந்தமானது இந்தியாவை மையப்படுத்திய தன்மையைக் கொண்டதே என்று ஏற்படுத்தப்பட்ட வரலாற்றுப் போக்கிலிருந்தும் இலங்கையின் ஆளும் வர்க்கம் நகர்ந்து சென்றது. இதற்கும் அப்பால், யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டதன் மூலம் இலங்கையின் ஒரு பகுதி, அமைப்பொன்றின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதை இலங்கையின் அரசியல் வர்க்கம் ஏற்றுக்கொண்டது. இந்த அமைப்பின் தலைவர் இந்திய அதிகாரமையத்தினர் பார்வையில் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டவர். அத்துடன் தமிழ்நாட்டின் தற்போதைய தலைமையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் கருதப்படுபவர்.

2001இன் இறுதிப் பகுதியில் அதிகரித்த யுத்தமும் தளம் பலமடைந்த பொருளாதார நிலைமையும் ஸ்திரமற்ற ஆட்சியைத் தோற்றுவித்ததுடன் இலங்கை அரசாங்கத்தைக் கடுமையான நெருக்கடிக்குள் தள்ளிவிட்டன. கூட்டணிக் கட்சிகளை உள்ளடக்கிய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே ஆட்டம் கண்டு வந்தது. கணிசமான எண்ணிக்கையில் இடம்பெற்ற நிகழ்வுகள் கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிலிருந்து வெளியேற்றியது. மூத்த அமைச்சர்களின் தலைமையில் அரசத்தரப்பு உறுப்பினர்கள் சிலரும் எதிரணியில் இணைந்தனர். இதன் விளைவாகப் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஒரு வருடத்திற்குள்ளேயே வீழ்ச்சி கண்டது. டிசம்பர் 2001இல் புதிய தேர்தலை நாடு எதிர்நோக்கியது.

இந்த மாற்றங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு மூன்றாம் நெருக்கடியைத் தோற்றுவித்தன. நாட்டின் விகிதாசார தேர்தல் முறைமையினால் ஸ்திரமற்ற கூட்டணி அரசாங்கங்கள் அதிகாரத்துக்கு வருவதே இந்த மூன்றாவது நெருக்கடியாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விகிதாசாரத் தேர்தல் முறைமையை வடிவமைத்தோரின் எதிர்பார்ப்புகளுக்கு நேர்முரணாக இதன் அரசியல் விளைவுகள் அமைந்தன. இந்த முறைமை அதிகளவு ஸ்திரமான அரசை உருவாக்குமென அவர்கள் எதிர்பார்த்தனர். 1978 அரசியலமைப்பின் மூலம் இந்த முறைமை அறிமுகப்படுத்தப்பட்டபோது அரசியல் கட்சிகளின் அதிகளவுக் கட்டுப்பாட்டின் கீழ் எம்பிக்களைக் கொண்டுவர முடியுமென இந்த முறைமையை முன்மொழிந்தவர்கள் கருதியிருந்தனர். விகிதாசாரத் தேர்தல் முறை யோசனைகளின் மூல அம்சமானது செல்லுபடியான வாக்குகளில் உயர்ந்தபட்ச வெட்டுப் புள்ளிகளைக் கொண்டதாகும். இதன் அடிப்படையிலேயே ஒருவர் பாராளுமன்றத்திற்குச் செல்வதற்கான தகுதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதே சமயம் எம்பிக்கள் கட்சி தாவினால் பதவி பறிபோகும் ஏற்பாடுகளும் உள்ளன. ஆனால், இரு பிரதான கட்சிகளும் சட்டவாக்கத்தில் ஆதிக்கம் செலுத்தும் விளைவே ஏற்பட்டது. கட்சிகளின் கட்டுப்பாட்டின் கீழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வருவதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டது. ஆயினும் இந்த இரு ஏற்பாடுகளும் இறுதியாகத் தளர்த்தப்பட்டன. வெட்டுப்புள்ளிகள் 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டதுடன் கட்சியிலிருந்து எம்பிக்கள் வெளியேற்றப்பட்டால், எம்பிக்கள் நீதிமன்றத்தில் மனு செய்ய முடியும். இதன் விளைவாக ஸ்திரமற்ற நிலைமைகள் ஏற்பட்டன. கட்சித் தாவல்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் ஸ்திரமின்மையை அடைவதும் பெறுபேறாக அமைந்தன[4].

2001 டிசம்பரில் இடம்பெற்ற தேர்தலில் ஐதேக தலைமையிலான கூட்டணிக் கட்சிகள் இணைந்த ஐதேமு வெற்றிபெற்றது. தேர்தல் பிரசாரத்தில் யுத்த, பொருளாதார நிலைமை விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டன. விடுதலைப்புலிகளுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதென ஐதேமு தேர்தலில் பிரசாரத்தை ஆரம்பித்தது. நாட்டின் பொருளாதாரத்திற்குப் புத்துயிர்ப்பு அளிக்கப் புலிகளுடன் நேரடிப் பேச்சு அவசியமென்ற விவாதத்தை ஐதேமு முன்வைத்தது. பொதுஜன ஐக்கிய முன்னணியைவிடப் பொருளாதார முகாமைத்துவத்தை ஐதேமுவால் சிறப்பாக மேற்கொள்ள முடியுமென்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் அதிகளவு காணப்பட்டதைப் பொதுமக்களின் அபிப்பிராயம் வெளிப்படுத்தியது.

4. பார்க்கவும் ஏ.கே. வில்சன் (1980) ஆசியாவில் கவுலிஸ்ட் முறைமை இலங்கை அரசியலமைப்பு (மக்மிலன் அச்சகம், 1978, லண்டன்) சுனில் பஸ்டியன் (2003) 'தேர்தல் மறுசீரமைப்பின் பொருளாதார அரசியல், இலங்கையின் விகிதாசாரப் பிரதிநிதித்துவம்', சுனில் பஸ்டியன், ரொபின் லக்கம், ஜனநாயகத்தை வடிவமைக்க முடியும்? (செட்புக்ஸ், லண்டன்) விகிதாசாரப் பிரதிநிதித்துவ உருவாக்கத்திற்கும் தாராளப் பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்கும் அரசியலுக்கு இருக்கும் தொடர்பு குறித்து ஆய்வுக்காக.



**அட்டவணை 2: விகிதாசாரத் தேர்தலில் ஐதேகவின் பெறுபேறு**

| | % செல்லுபடியான வாக்குகள் | தேர்தல் மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப் பட்ட உறுப்பினர்கள் | தேசியப் பட்டியல் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1989 | 47.6 | 110 | 15 | 125 |
| 1994 | 41.9 | 81 | 13 | 94 |
| 2000 | 38.1 | 77 | 12 | 89 |
| 2001 | 43.2 | 96 | 13 | 109 |
| 2004 | 35.8 | 71 | 11 | 82 |

ஆதாரம்: தேர்தல் திணைக்களத்திலிருந்து திரட்டப்பட்ட விபரங்கள்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் பொருளாதாரத்திற்கு நடந்தது என்ன என்பதைத் தெரிவித்ததால் இது ஆச்சரியமானதாக இருக்கவில்லை[5].

2001 டிசம்பரில் ஐதேமு வெற்றி பெற்றதற்குப் பொருளாதாரக் காரணிகள் கணிசமான பங்களிப்பைச் செலுத்தின.

அட்டவணை 2இல் தெரிவிக்கப்பட்ட தரவு விபரங்கள், 2001 தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் ஐதேமு 43.2% வாக்குகளைப் பெற்றமையைக் காட்டுகிறது. இது விகிதாசாரத் தேர்தல் முறையில் கிடைத்த சிறப்பான வெற்றியாகும். 1989 தேர்தலைத் தவிர இதில் சிறப்பான வெற்றி கிடைத்தது. 1989 தேர்தல் அதிகளவிலான வன்செயல் சூழ்நிலையில் இடம்பெற்றதாகும்[6].

19 தேர்தல் மாவட்டங்களில் 17 தேர்தல் மாவட்டங்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி சிறப்பான பெறுபேற்றை எட்டியது. இந்த மாவட்டங்

5. ஓர்க்-மார்க் ஸ்மார்ட்டால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான வாக்கெடுப்பு. இந்த வாக்கெடுப்பு முடிவுகள் கிரமமாக சண்டே டைம்ஸில் பிரசுரிக்கப்பட்டன. உதாரணத்துக்கு சண்டே டைம்ஸ், 11 நவம்பர் 2001ஐ பார்க்க.

6. சில சமயம் இது இலங்கையின் சமீப வரலாற்றில் அதிகளவு வன்முறைகள் இடம்பெற்ற காலமாக இருக்கும். வட, கிழக்கில் இந்திய அமைதிகாக்கும் படை விடுதலைப்புலிகளுடன் போரிட்டுக்கொண்டிருந்தபோது தெற்கில் ஜனதா விமுக்தி பெரமுனவால் (ஜேவிபி) வன்முறை அரசியல் போராட்டம் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. இந்தக் கட்சி மார்க்சிஸ சுலோகத்தையும் தேசியவாதத்தையும் ஒன்றாகப் பிணைத்த கட்சியாகும். இந்த வன்செயலுக்குப் பதில் நடவடிக்கையாகக் குரூரத்தனமாக அரசாங்கம் மரணப் படையணிகளின் நடவடிக்கை, காணாமற்போதல் போன்றவற்றை மேற்கொண்டது. தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு வன்முறைப் போராட்டத்தை ஜேவிபி ஆரம்பித்தது. பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரசாரத்தை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டதுடன் வாக்களிப்பு வீதமும் மிகத் தாழ்ந்த மட்டத்திற்குச் சென்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களில் இருபிரதான கட்சிகளுமே அதிகளவிலான பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளும் கட்சிகளாகும். இந்தத் தேர்தல் மாவட்டங்களிலும் ஐதேக போனஸ் ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. இது ஒரு வருடத்திற்கு முன்னர் கிடைத்த பெறுபேற்றைவிட முழுமையாக மாறுபட்டதொன்றாகும்.

### யுத்தநிறுத்தமும் நவதாராள நிகழ்ச்சித் திட்டம்

2001 தேர்தலில் ஐதேமு வெற்றிபெற்ற தருணம் கூட்டணிக்குத் தலைமை தாங்கும் கட்சியான ஐதேக புதிய தலைமுறை தலைமையின் கீழ் இருந்தது.

அதன் சிந்தனைகள் ஐதேகவின் முந்தைய தலைமுறைத் தலைவர்களிடம் காணப்பட்ட சிந்தனைகளைவிடக் குறிப்பிடத்தக்க அளவு வேறுபட்டதாகும். புதிய தலைமையானது யுத்தத்துக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் என்பதில் அதிக ஈடுபாடு காட்டியதுடன் பொருளாதாரத்தைப் பாரிய அளவுக்குத் தாராளமயப்படுத்த வேண்டும் என்பதற்கு ஆதரவு வழங்கியதுடன் இலங்கையின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதில் வெளிநாட்டுப் பாத்திரங்களிடமிருந்து ஆதரவைப் பெறுவதிலும் நம்பிக்கைவைத்திருந்தது. அவர்களின் பிரதானக் கரிசனை பொருளாதாரத்தின் நிலை குறித்தும் யுத்தம் எவ்வாறு இதனைப் பாதிக்கின்றது என்பது பற்றியேயாகும்.

உள்நாட்டு யுத்தங்களுக்குத் தீர்வுகண்டுவிடலாமெனவும் பொருளாதாரத்தை மீண்டும் தடத்துக்குக் கொண்டுசெல்ல முடியுமென்ற நம்பிக்கையை அவர்கள் கொண்டிருந்தனர். 2001 தேர்தலிலேயே இந்தத் தலைமைத்துவம் முதல் தடவையாக வெற்றிபெற்றுப் பாராளுமன்ற அதிகாரத்தைத் தனது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தது. இப்போது அவர்கள் தங்கள் கொள்கைகளை அமல்படுத்தத் தயாராக இருந்தனர்.

ஐதேமுவின் உபாயம் 2002 ஜனவரியில் பிரதமரால் தனது முதல் கொள்கை விளக்க உரையில் வெளியிடப்பட்டது. யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்படுவதற்கு முன்பே இந்தக் கொள்கை விளக்க உரை இடம் பெற்றது. இதில் உள்ள முக்கிய அம்சங்களாக 2001 டிசம்பரில் புலிகள் அறிவித்திருந்த யுத்தநிறுத்த உடன்படிக்கைக்குச் சாதகமான பதிலை அளித்தல், விரிவான பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்தல், இந்த நோக்கங்களுக்கு ஆதரவாகச் சர்வதேச ஆதரவைத் திரட்டிக்கொள்ளுதல் என்பன அடங்கியிருந்தன[7].

7. 'சமாதானத்திற்கான ஒரேயொரு உத்தரவாதம் நேர்மையே', பிரதமரின் கொள்கை விளக்க அறிக்கை *டெய்லி நியூஸ்*, 23 ஜனவரி, 2002.



### யுத்தநிறுத்த உடன்படிக்கையும் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையும்

தேர்தலில் வெற்றிபெற்ற உடனேயே ஐதேமு அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. 2002 பிப்ரவரியில் இந்த உடன்பாடு எட்டப்பட்டது. இந்த உடன்படிக்கை வேகமாக மேற்கொள்ளப்பட்ட விதம் தேர்தல் வெற்றிக்கு முன்பே ஐதேமு விடுதலைப் புலிகளுடன் தொடர்பை வைத்திருந்ததென்பதைத் தெளிவுபடுத்துவதாக அமைந்தது.

2002 பிப்ரவரி 22இல் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டதே யுத்தநிறுத்தமாகும். விடுதலைப் புலிகள் நாட்டின் குறித்த பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள் என்பதையும் ஆட்புல எல்லையின் வேறுபட்ட பகுதிகளில் இரு இராணுவத்தின் பிரசன்னத்தையும் இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்றுக்கொண்டுள்ளது. ஒவ்வொரு இராணுவமும் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாதென்பது பற்றிய பல உறுப்புரைகள் இதில் வரையறுக்கப்பட்டுள்ளன. பேச்சுவார்த்தைகள் தொடரும்போது இந்த அந்தஸ்து பேணிப் பாதுகாக்கப்பட்டது.

இதேவேளை, உடன்படிக்கையிலிருந்தும் விலகிக்கொள்வதாயின் ஒவ்வொரு தரப்பினரும் 14 நாட்கள் முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும் என்ற உறுப்புரையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இறுதியாக ஸ்கன்டிநேவிய நாடுகளின் பிரதிநிதிகளைப் பரந்தளவில் கொண்ட யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு உருவாக்கப்பட்டது.

இந்த உடன்படிக்கையிலுள்ள அம்சங்கள் இலங்கையின் அரசியல் தலைமைத்துவம் இதுவரை பற்றிப்பிடித்திருந்த அரசியல் அபிப்பிராயங்களிலிருந்தும் அடிப்படையில் வேறுபட்டதாக உள்ளன.

கிளர்ச்சிக் குழுவானது நாட்டின் ஒரு பகுதியைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது என்பதை ஏற்றிருப்பதும் அல்லது இந்த மாதிரியான உடன்படிக்கையில் பிரவேசிப்பதன் மூலம் சட்டபூர்வத் தன்மையை இதற்கு வழங்குவதென்பதும் இலங்கை அரசாங்கம் ஒரு போதுமே முன்னர் மேற்கொள்ளாத நடவடிக்கைகள் ஆகும்.

அதே சமயம், இந்த உடன்படிக்கையில் கிளர்ச்சிக் குழுவானது, குறித்த பகுதியைச் சுதந்திரமாக கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் ஆயுதங்களை வைத்திருப்பதற்கும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இடமளித்திருக்கிறது.

இந்த விடயங்கள் நாடு எதிர்நோக்கிய நெருக்கடியின் பாரதூரத் தன்மையை வெளிக்காட்டியது. இலங்கையின் அரசியல் வர்க்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நினைத்துப்பார்க்க முடியாததை எண்ணிப்பார்க்க வேண்டி இருந்தது. ஒரு போதுமே முடிவுக்கு வராத யுத்தமும் வெறுமையடைந்த பொருளாதாரமுமே பொறுப்பான காரணிகளாகும்.

முன்பு இடம்பெற்றிருந்ததைவிட முற்றிலும் வேறுபட்டதாக ஐதேமுவின் பேச்சுவார்த்தை தந்திரோபாயமாகக் காணப்பட்டது. மோதல் தீர்வு நிபுணர்களால் 'படிப்படியான அணுகுமுறை' என்று இது வர்ணிக்கப்பட்டது.

நெருக்கடியான அரசியல் விவகாரங்களை ஆரம்பத்தில் ஆராய்வதில்லை என்ற வகையிலான தீர்மானம் வரையறுக்கப்பட்டது. ஏனெனில், இந்த நெருக்கடியான விடயங்கள் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளை ஆரம்பக் கட்டத்திலேயே பலவீனப்படுத்திவிடுமென்றும் பேச்சுவார்த்தை முறிவடைய வழிவகுத்துவிடுமென்றும் அச்சம் காணப்பட்டது. பதிலாக வட, கிழக்கு மக்களின் உடனடித் தேவைகள் குறித்துச் சந்திப்புகளில் கவனம் செலுத்துவதென்ற கருத்து புலிகளுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

2002 செப்டம்பரிலிருந்து 2003 மார்ச் வரை அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுவார்த்தை நீடித்தது. 6 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இதில் முக்கியமான வெற்றி என்னவெனில், இலங்கை அரசாங்கத்தைச் சமஷ்டிக் கட்டமைப்புக்குள் கொண்டுவருவதற்கான இணக்கப்பாடாகும்.

2002 டிசம்பரில் இடம்பெற்ற மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் பின்னர் இந்த விவகாரம் அறிவிக்கப்பட்டது. ஆயினும் 2003 ஏப்ரலில் பேச்சுவார்த்தைகளிலிருந்தும் புலிகள் விலகிக்கொண்டனர். வாஷிங்டனில் அமெரிக்க அரசாங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற கூட்டத்தில் அவர்கள் பங்கேற்கவில்லை[8].

சமஷ்டி தொடர்பான ஒஸ்லோ உடன்படிக்கையென அழைக்கப்படுவதற்கு அப்பால் கிடைத்த கணிசமான அளவு வெற்றியானது 'சமாதான நடவடிக்கைகள் நாட்டிற்கு ஸ்திரத்தன்மையைக் கொண்டு வந்ததாகும்'. போர்நிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட கணத்திலிருந்தே இந்த நிலைமை ஏற்பட்டது. இந்த உறுதிப்பாட்டால் கிடைத்த அனுகூலங்களில் யாழ்ப்பாணத்திற்கான வீதித்திறப்பும் ஒன்றாகும். சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டு மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு வழியேற்பட்டது. நெருக்கடியில் சிக்குண்டு கிடந்த

8. பார்க்க, ஜயதேவ உயன்கொட, 1. பீஸ் வாட்ச், பொலிடி, தொகுதி 1 இல. 3. மேலும் சுமனசிறி லியனகே, சமாதானப் பேச்சுகளிலிருந்து புலிகளின் வெளியேற்றம், ஓர் அபிப்பிராயம், பொலிடி, தொகுதி இல 3. பேச்சுகளிலிருந்து புலிகள் வாபஸ் பெற்றமை தொடர்பான ஆய்வு.



பொருளாதாரத்தை மீட்சிபெறச் செய்வதற்குரிய சூழ்நிலையை இது உருவாக்கியிருக்கிறது என்பதே ஐதேமு தலைமைத்துவத்தின் நிலைப்பாடாகும்.

## பொருளாதார மறுசீரமைப்புகள்

'இலங்கையை மீள்கட்டியெழுப்புதல்' என்று தலைப்பிடப்பட்ட ஆவணமாக ஐதேமுவின் பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் வெளியிடப்பட்டது.

இந்த உபாயத்தின் அடிப்படைக் கோட்பாடானது ஆவணத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே முன்னிலைப்படுத்திக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'இலங்கை அதன் பொருளாதாரத்தைத் தாராளமயப்படுத்தும் நடவடிக்கையை 1977இலே ஆரம்பித்தது. அக்காலம் முதல் கணிசமான அளவுக்கு வளர்ச்சி கண்டது. ஆயினும் சமீப வருடங்களில் முன்னேற்றம் தாமதம் அடைந்துள்ளது. வேறு பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் அது முடங்கியிருந்ததால்'[9] என்று ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதலால் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதே நோக்கமாகும். இறுதி இலக்கானது பொருளாதார வளர்ச்சியை 10 சதவீதமாக அதிகரித்தலாகும். அதாவது கிழக்காசிய நாடுகள் அடைந்த வெற்றியைப் போல் இலங்கையும் இந்தப் பொருளாதார இலக்கை எட்டுவதே நோக்கமாகும்.

10% வளர்ச்சியை இலக்காகக் கொண்டு பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் தொடர்ச்சியான கொள்கைகளை ஐதேமு நடைமுறைப்படுத்த ஆரம்பித்தது. பாரிய அளவு கட்டமைப்புச் சீர்திருத்தங்களை மேற்கொண்டது.

ஸ்திரத்தன்மையை வென்றெடுக்க வருவாய் நிலைமையை மேம்படுத்தும் நடவடிக்கைகளும் செலவினத்தைக் கட்டுப்படுத்தும் செயல்பாடுகளும் கைக்கொள்ளப்பட்டன. வருவாயைப் பெருக்கும் நடவடிக்கைகளில் பெறுமதி கூட்டல் வரிக்குள் அடங்கும் பொருட்களின் எண்ணிக்கை விரிவுபடுத்தப்பட்டது. பெறுமதி கூட்டல் வரி (வாட்) முறைமை, வரிமன்னிப்பு என்பன வருவாய்த்துறையை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

செலவினத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசாங்கத் துறையில் ஆட்திரட்டல் (தொழில்நுட்ப, நிபுணத்துவத்துறை தவிர்ந்த) நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன.

9. இலங்கை அரசாங்கம் (2003) மீட்சிபெறும் இலங்கை: தொலைநோக்கு, அபிவிருத்தி அதிகரிப்புக்கான திட்டம் (கொழும்பு).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சம்பள, ஓய்வூதிய அதிகரிப்புகள் தவிர்க்கப்பட்டன. பாதுகாப்புச் செலவினம் குறைக்கப்பட்டு ஒழுங்கமைப்புக்குள் கொண்டுவரப் பட்டது. நலன்புரி நடவடிக்கைச் செலவீனம் சிறப்பான இலக்குடைய தாக்கப்பட்டது. வகைப்படுத்தப்படாத, பார்வைக்குப் புலப்படாத செலவினங்களுக்கான வள ஒதுக்கீடு மட்டுப்படுத்தப்பட்டது. மூலதனச் செலவினத்திற்கான ஒதுக்கீடு கட்டுப்படுத்தப்பட்டது போன்றவை உள்ளடக்கப்பட்டிருந்தன. நிதி முகாமைத்துவச் சட்டமூலம், நலன்புரி அனுகூலச் சட்டம் என்பன இந்த சில மறுசீரமைப்பு நடவடிக்கை களுக்குச் சட்டரீதியான அடிப்படையை வழங்கின.

கட்டமைப்பு சார்ந்த ஐதேமுவின் இலக்குகள் அதிகளவிலாக இருந்தன. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுஸ்தாபனம் உட்பட அரச உடைமைகள் தனியார்மயப்படுத்தப்பட்டன. இலங்கைப் பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 100 பெட்ரோல் விற்பனை நிலையங்கள் ஆயில்டாங் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டன. பிராந்தியப் போக்குவரத்துச் சபைகளை முழுமையாகத் தனியார் மயப்படுத்தும் திட்டங்களும் தயாரிக்கப்பட்டன. 2003 மத்திய வங்கி அறிக்கையின்படி, 4 நிறுவனங்களை இணைக்கவும் 51 நிறுவனங்களை மறுசீரமைக்கவும் 15 நிறுவனங்களைக் கலைத்துவிடவும் அரசாங்கம் திட்டம் தீட்டியிருந்தது[10].

இதற்கு அப்பால் பிரதான அரச நிறுவனங்களான இலங்கை மின்சார சபை, ரயில் சேவை என்பனவற்றை மீள்கட்டமைப்புக்கு உட்படுத்தவும் வருவாய் அதிகாரச் சபையை உருவாக்கவும் அரசாங்கம் நடவடிக்கை களை எடுத்திருந்தது. அதிகளவு தாமதப்படுத்தப்பட்டிருந்த அரசாங்க ஊழியரின் தொகையைக் குறைக்கும் நடவடிக்கையை முன்னெடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 2004 வரவு – செலவுத் திட்டத்தில் அரச சேவை மறுசீரமைப்புத்திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 2004 – 2006 காலப்பகுதியில் அரச வேலைவாய்ப்பு 30 சதவீதத்தால் குறைக்கப்படும். 2004 இற்கான இதன் இலக்கு 10% ஆகும். சுயவிருப்பில் ஓய்வுபெறும் திட்டமும் அறிமுகப்படுத்தப்படவிருந்தது. பல அரசாங்க நிறுவனங்களிலிருந்தும் அலுவலரின் எண்ணிக்கையைக் குறைப்பதற் காகவே இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவிருந்தது. அத்துடன் 55–57 வயதிற்கிடைப்பட்ட அரசாங்க ஊழியரின் ஒப்பந்தத்தைப் புதுப்பிப்ப தில்லை என்ற திட்டமும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

மறுசீரமைப்பில் மற்றொரு முக்கியமான பகுதியாக தொழில் சட்டம் அமைந்திருந்தது. தொழில் சட்ட மறுசீரமைப்பு தனியார் துறையினரின் பிரதான வலியுறுத்தலாக இருந்தது. நடைமுறையிலிருந்த தொழில்

10. இலங்கை மத்திய வங்கி 2003 வருடாந்த அறிக்கை.



சட்டங்கள் தனியார் துறையினர் தாம் விரும்பியவாறு தொழிலாளரைப் பணிக்கு அமர்த்திவிட்டு, வேண்டுமானால் வேலையிலிருந்து நீக்கி விடுவதைத் தடுத்து நிறுத்தக்கூடியனவாக இருந்ததால் தொழில் நடவடிக்கைகளைத் தேவைப்படும்போது மீள் ஒழுங்கமைக்க அவர்கள் விரும்பினர். 2003 மத்திய வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப் பதாவது, '2003இல் நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த தொழில் சந்தை மறுசீரமைப்புகான பாரிய நடவடிக்கைகள் 2003இல் ஆரம்பிக்கப்பட்டன. தொழிலை முடிவுக்குக் கொண்டுவருதல், வேலை யாட்கள் சட்டம், கைத்தொழில் பிணக்குகள் சட்டம், கைத்தொழில் பிணக்குகள் கேட்டல், தீர்மானித்தல், முன்னெடுப்புகள் சட்டம், பெண்கள் வேலைவாய்ப்பு, இளநபர்கள், சிறுவர்கள் சட்டம்' ஆகிய வற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. நீதித்துறையை மேலும் தாராளமயப்படுத்துவதற்கான பல நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்திருந்தது.

ஐதேமு பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள முயற்சி யெடுத்த பலபகுதிகள் அரசியல்ரீதியாக உணர்வுபூர்வமானவை என்பதே இந்தத் திட்டத்திலுள்ள முக்கியமான அம்சமாகும். கடந்த காலங்களில் அரச அதிகாரிகள் எண்ணிக்கையைக் குறைத்தல், சீர்திருத் தங்கள், தனியார்மயமாக்கல், தொழில் சட்டத்தை மாற்றியமைத்தல் போன்றவை எதிர்ப்புகளைச் சந்தித்தன. இந்த வரலாற்றின் மத்தியிலும் ஐதேமு தலைமைத்துவம் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆயத்தமாக இருந்தது.

இதனை வேறுவார்த்தைகளில் கூறுவதானால், கடினமான பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டிருந்ததற்குச் சமனாகவே ஐதேமுவின் பொருளாதாரரீதியான உபாயமும் கடினமான அரசியல் இலக்கைக் கொண்டிருந்தது.

### சர்வதேசமயமாதல்

ஐதேமுவின் உபாயத்திலுள்ள மூன்றாம் அம்சம், சமாதான நடவடிக்கை களுக்கும் திட்டமிட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கும் சர்வதேச ஆதரவைத் திரட்டுவதற்குப் பரந்துபட்ட வலையமைப்பை ஏற்படுத்தும் முயற்சியாகும். இலங்கையில் சமாதானத்தை உத்தரவாதப்படுத்துவதில் சர்வதேச அபிப்பிராயம் மிகவும் முக்கியமான காரணியெனப் பிரதமர் கருதினார். யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்படுவதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் விடுத்த முதல் கொள்கைவிளக்க அறிக்கை யில் இதனை அவர் தெரிவித்ததிலிருந்து அவர் சர்வதேச அபிப்பிராயம் முக்கியமானது என்று கருதியமை வெளிப்படுகிறது. மோதல் தொடர்பாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர் உரையாற்றுகையில், 'இந்தியாவினதும் உதவி வழங்கும் நாடுகளினதும் இப்பிரச்சினை தொடர்பான கரிசனை முன்னர் இல்லாததைவிட அதிகரித்துள்ளது. யுத்தத்திற்கு அரசியல் தீர்வு காணுமாறு ஆலோசனை கூறுகின்றனர். ஆதலால் அந்த விடயத்தில் சர்வதேச அபிப்பிராயம் பிரதான கவனத்திற்குரியதாகின்றது. சர்வதேச அபிப்பிராயத்தினூடாகவே வட–கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வுவரும். அதற்கமைய எமது கவனத்தை நாம் திருப்ப வேண்டும். இந்தப் பின்னணியில் சர்வதேச அபிப்பிராயம் எம்முடன் இருந்தால் எமது நாட்டின் ஆட்புல ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் எம்மால் பாதுகாக்க முடியும்' என்றார் (*டெய்லி நியூஸ், ஜனவரி 23, 2003*).

நோர்வேக்கு மேலதிகமாக அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை இணைத் தலைமைகளாகச் சமாதான நடவடிக்கைகளுக்கு இந்த உபாயத்தின் மூலம் கொண்டுவரப்பட்டன. இவ்வாறு செய்ததன் மூலம் சமாதான நடவடிக்கையில், வல்லரசை, இலங்கையில் வர்த்தகப் பங்காளியாகவும் அதிகளவு உதவி வழங்கும் நாடாகவும் அந்நாட்டை ஈடுபடுத்தும் நடவடிக்கையை ஐதேமு மேற்கொண்டது.

முன்னர் ஒருபோதும் கிடைத்திராத அளவுக்கு அமெரிக்க அரசின் ஆதரவை ஐதேமு தலைமை பெற்றுக்கொண்டது. பிரதி வெளிவிவகார அமைச்சராக இருந்த ரிச்சட் ஆர்மிட்டேஜ் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் அதன் வெற்றியில் கிட்டத்தட்ட தனிப்பட்டரீதியில் ஆர்வம்காட்டினார்[11]. இலங்கையின் பெரிய இருதரப்புக் கொடையாளரான ஜப்பானும் முக்கியமான பாத்திரமாக இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பல்தேசிய நிறுவனங்களில் ஜப்பானின் செல்வாக்கைக் கவனத்திற்கு எடுத்துக்கொண்டால் இலங்கைப் பொருளாதாரத்தின் மீட்சிக்கு ஜப்பானின் உதவி மிக முக்கியம் என்பது தெளிவாகும். தூதுவர் யசூசி அகாசியின் பங்குபெறுதலுடன் சமாதான நடவடிக்கைகளில் ஜப்பானின் சம்பந்தத்தையும் ஐதேமு தக்கவைத்துக்கொண்டது.

மூன்றாம் சர்வதேசப் பாத்திரம் ஐரோப்பிய ஒன்றியமாகும். குறித்த சில காலத்துக்கு இலங்கையின் அரசியல் விவகாரங்களில் ஐரோப்பிய ஒன்றியம் பங்களிப்பை வழங்கியது. பேச்சுவார்த்தை மூலமே தீர்வு

*11. சமாதான நடவடிக்கைகளின் நடுப்பகுதியில் யுஎஸ்ஐஎஸ்ஸில் இடம்பெற்ற வீடியோ மகாநாட்டில் ஆக்கியோன் பங்குபெற்றார். இதில் இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் டெரஸிடா ஸ்கேபர் கலந்துகொண்டார். தற்போது அவர் வாஷிங்டனிலுள்ள கேந்திர, சர்வதேசக் கற்கைகளுக்கான நிலையத்தில் பணியாற்றுகிறார். இந்தச் சந்திப்பின்போது, அமெரிக்காவில் ஏப்ரலில் இடம்பெற்ற மகாநாடானது இலங்கைக்குப் பாரிய வெற்றியைத் தந்ததை ஸ்கேபர் உறுதிப்படுத்தினார். ஆயினும் அமெரிக்காவின் வேறுபட்ட அமைப்புகளைச் சேர்ந்த 70 பேரே இம்மகாநாட்டில் பங்குபெற்றனர். அவர்கள் சமாதான நடவடிக்கைகளில் தீவிர ஆர்வம் காட்டியதாக ஸ்கேபர் குறிப்பிட்டார்.*



காணப்படுமென வலியுறுத்தி ஒழுங்காக அறிக்கைகளை வெளியிட்டு வந்தது மட்டுமின்றித் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களையும் இலங்கைக்கு அனுப்பி வந்தது. இதற்கும் மேலாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் முக்கியமான வர்த்தகப் பங்காளிகளாக இருந்தது மட்டுமின்றி குறிப்பிடத்தக்க அளவு கொடைகளையும் திரட்டிக்கொண்டு வந்தனர்.

ஐதேமுவின் சர்வதேசமயமாக்கல் தந்திரோபாயம் இந்தியாவையும் உள்ளடக்கியதாகும். இதனைச் செய்யாதிருப்பது மடைமைத் தனமானதாகிவிடும். சமாதான நடவடிக்கைகள் குறித்து இந்தியாவுக்குக் கிரமமான முறையில் தெரியப்படுத்தப்பட்டதுடன் முக்கியமான பொருளாதாரப் பங்காளியாகவும் இந்தியா கருதப்பட்டது. பிரதமரும் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சரும் இந்த விடயத்தைத் தமது இந்திய பயணங்களின்போது பலதடவை பிரசாரப்படுத்துவதில் முன்னணிப் பங்களிப்பினை வழங்கினர். இதற்கு அடிப்படையாக அமைந்தது பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் கையெழுத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையாகும்.

இரு நாடுகளுக்குமிடையில் விமான சேவை மார்க்கத்தை விஸ்தரித்தல், இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையில் தரைப்பாதை அமைத்தல், இலங்கைக்கு வருகை தரும் இந்தியப் பிரஜைகளுக்கு விசாக் கட்டுப்பாட்டைத் தளர்த்தல், இந்திய உல்லாசப் பயணத்துறையை இலங்கையில் மேம்படுத்தல் போன்றவை இக்கால கட்டத்தில் அமல்படுத்தப்பட்டன.

இந்தத் தருணத்தில் ஐதேக கொண்டிருந்த தரமான புதிய சிந்தனையாகத் தமிழ்நாடு, கேரளத்துடன் இலங்கையும் முக்கோணப் பொருளாதார வளர்ச்சி மையத்தின் ஒரு பகுதியாக செயல்படுதல் என்பது கருதப்பட்டது.

இந்த உபாயத்தில் மூன்று அம்சங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாக இருந்தன. மேலும், பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பாதுகாப்பு, ஸ்திரத்தன்மையை உருவாக்க வேண்டுமென ஐதேமு கருதியது. 2001இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது பொருளாதாரத்தை மீண்டும் மட்டத்திற்குக் கொண்டு வருவதற்காக முன்னொருபோதும் எடுக்காத நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளும் வர்க்கத்தைக் கொண்டு சென்றது.

இலங்கையின் ஒரு பகுதி புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கையையும் மேற்கொண்டனர். இறுதியாக சர்வதேசச் சமூகத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பங்களிப்புக்கும் அழைப்புவிடுக்கப்பட்டது. இது முன்னர் ஒருபோதுமே பார்த்திராத அளவில் அமைந்த பங்களிப்பாகும். இந்தத் தந்திரோபாயத்தின் மூலம் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியை வென்றெடுக்கலாமென ஐதேமு தலைமை கருதியது.

ஐதேமுவின் இந்த மும்முனைத் தந்திரோபாயம் ஏப்ரல் 2003 வரை நீடித்தது. அமெரிக்க அனுசரணையுடனான வாஷிங்டன் மகாநாட்டில் விடுதலைப்புலிகளுக்கு இடமளிக்கப்படாமையினால் அவர்கள் பேச்சுவார்த்தையிலிருந்தும் திரும்பப் பெற்றனர். இது டோக்கியோ உதவி வழங்கும் மகாநாட்டிற்கு முன்னர் நடைபெற்றது.

இதன்பின் உத்தியோகபூர்வமாக நேரடிச் சந்திப்புகள் இடம்பெறவில்லை. ஆயினும், நோர்வே மத்தியஸ்தத்துடன் கலந்துரையாடல்கள் நீடித்தன. வட, கிழக்கில் நிவாரண, புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுசரணையாக இடைக்கால ஏற்பாட்டை மேற்கொள்வது என்பதை மையப்படுத்தியே இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இந்த நடவடிக்கையின் மிக முக்கியமான பெறுபேறாக விடுதலைப்புலிகளால் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை முன்வைக்கப்பட்டது. அரசியல் நோக்கமுடைய இந்த யோசனை புலிகளின் ஆதிக்கத்தில் அரசியல் நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதாகும். இந்தக் கட்டமைப்பு யோசனையில் வட–கிழக்குப் புனர்வாழ்வுக்கு ஒதுக்கப்பட்ட நிதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரப்படும். ஆயினும் இதனடிப்படையில் அரசாங்கம் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவில்லை. நவம்பர் 2003 முக்கியமான அமைச்சர்களுடன் பொறுப்பேற்ற ஜனாதிபதி, பிப்ரவரி 2004இல் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டார். ஏப்ரல் 2004 தேர்தல் ஐதேமுவின் தந்திரோபாயத்தை முடிவுக்குக் கொண்டுவருவதாக அமைந்தது.

### ‘சர்வதேசச் சமூகத்தின்’ அரசியல்

1977இல் பொருளாதாரத் தாராளமயமாக்கலுடன் உதவி வழங்கும் நாடுகளின் ஆதரவைப் பெருந்தன்மையுடன் பெற்றுக்கொள்ளும் நாடாக இலங்கை காணப்பட்டது. 1977இல் திறந்த பொருளாதார நடைமுறையை ஆரம்பித்ததே, பல்தரப்பு உதவிகள் அதிகளவு கிடைத்ததற்கான பிரதான காரணமாகும்.

இதற்குச் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்களின் அங்கீகாரமும் ஆதரவும் கிடைத்தன. வரவு–செலவுத்திட்டப் பற்றாக்குறையை ஈடுகட்டவும் (சென்மதி) நிலுவைப் பிரச்சினையை வெற்றிகொள்ளவும் பொதுமுதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கும் பொருளாதார நிலை



மோசமாக இருக்கையில் காப்பாற்றுவதற்கும் உதவி வழங்கும் சமூகத்தின் ஆதரவு முக்கியமானதாகும்[12].

2001இல் பொருளாதாரம் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள வேளையில் சர்வதேச நாணய நிதியம் அறிமுகப்படுத்திய மீட்சிப் பொதிக்கு நடைபெற்றதை இக்கட்டுரையின் தொடக்கத்தில் சுருக்கமாகக் குறிப்பிட்டிருந்தோம்.

இந்நெருக்கடியின் பின்னரான பிரதானக் காரணிகளாக ஆனையிறவு வீழ்ச்சியடைந்த பின்னர் பாரியளவில் ஆயுதக்கொள்வனவு இடம்பெற்றமையும் எரிபொருள் விலை உயர்ந்தமையும் விளங்குகின்றன. 2001இல் இடம்பெற்ற பொருளாதாரப் பின்னணியானது 1977இல் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார நிகழ்ச்சித்திட்டம் (உதவி வழங்கும் சமூகத்தின் ஆதரவுடன்) பலவீனப்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கான சமிக்ஞையாகக் காணப்பட்டது. ஆயினும், விடயங்களைச் சரியான முறையில் ஆரம்பிக்கப்போவதாகவும் சமாதான நடவடிக்கைகளைத் தொடங்கப்போவதாகவும் முக்கியமானப் பொருளாதாரச் சீர்திருத்தங்களை முன்னெடுக்கப்போவதாகவும் ஐதேமு அரசாங்கம் வாக்குறுதியளித்தது.

இதன் விளைவாக ஐதேமுவின் தந்திரோபாயத்துக்கு அநேகமான உதவி வழங்கும் நாடுகள் ஆதரவளித்தன.

ஐதேமுவின் அடிப்படை உபாயமும் கோட்பாடும் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதும் முதலாளித்துவ வாதத்தை மேம்படுத்துவதுமான உதவி வழங்கும் நாடுகளின் நிகழ்ச்சித் திட்டத்துடன் நன்கு பொருந்தின. மோதல்கள் தொடர்பாக உதவி வழங்கும் சமூகத்தின் புதிய கண்டுபிடிப்புகளின் அக்கறையின் முக்கியமான பின்னணி நோக்கம் இதுவெனச் சிலர் விவாதித்தனர். அபிவிருத்தி உதவியென்ற விடயத்தில் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு என்ற இரு அம்சங்கள் இணைக்கப்பட்டிருந்தன[13]. இருந்தாலும் உதவி வழங்கும் நாடுகள் மத்தியில் விடுதலைப்புலிகள் தொடர்பான போக்கில் வேறுபாடுகள் காணப்பட்டன. ‘சுதந்திரமான சமாதானம்’ என்ற கோட்பாட்டு ரீதியான வடிவமைப்புக்குள் வேறுபட்ட தன்மைவாய்ந்த அழுத்தங்களை அவர்கள் பிரயோகித்தனர். இலங்கையில் சமாதானத்தையும்

12. 1977 இற்குப்பின் உதவிப் பாய்ச்சல் தொடர்பான ஆய்வுக்காக. பார்க்கவும் குணாள் எம். சோர்போ மற்றும் ஏனையோர் (1987) இலங்கை நாட்டைப்பற்றிய ஆய்வும் நோர்வேயின் உதவி மீளாய்வும் (அபிவிருத்திக் கற்கைகள் நிலையம், பேர்ஜன் பல்கலைக்கழகம்) ரொனால்ட் ஜே. நெரிங் (2001) ‘இன மோதலை உருவாக்குதல், இலங்கையில் உள்நாட்டு யுத்தம்’ எஸ்மான், மில்ட்ன்ஜே. ரொனால்ட்ஜே ஜெரிப், கடுமையாக முயற்சித்தால் பரிசு அல்லது தண்டனை என்ற அணுகுமுறையும், இன நெருக்கடியும் அபிவிருத்தி உதவி குறித்த மீள்சிந்தனை, மிச்சிக்கன் பல்கலைக்கழக அச்சகம், ஆன் ஆர்பர்.

13. பார்க்க: மார்க் டஃப்பீல்ட் (2001) உலக ஆளுகையும் புதிய யுத்தங்களும், இசட் புக்ஸ், லண்டன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுபிட்சத்தையும் ஏற்படுத்துவதற்குத் தாராளச் சந்தைப் பொருளாதாரத்தைச் செழிப்படையச் செய்யவேண்டும் எனவும் தாராளவாத நிறுவனங்களை வலுப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். இந்த நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுக்க இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தொடர்பாடலை அதிகரித்துக்கொள்வது தேவையானதாகும்.

இந்த விடயத்தில் உதவி வழங்கும் நாடுகளுக்கு மத்தியில் பகைமை இல்லை என்பதைப் புரிந்துகொள்ளலாம். அதேசமயம் இலங்கை மோதலில் மிகவும் முக்கியமான வெளிப்பாத்திரமான இந்தியாவின் நிலைப்பாட்டை ஒப்பிட்டுப் பார்ப்பது முக்கியமானதாகும். மோதலுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதற்கான முயற்சியை வரவேற்று இந்தியா எப்போதுமே அறிக்கைகளைவிடுத்து வருகின்றது. இது சர்வதேச உறவுகளைப் பொறுத்தவரை வாடிக்கையான விடயமாகும். எவ்வாறாயினும் விடுதலைப்புலிகளின் நோக்கங்கள் தொடர்பாக இந்தியா அதிகளவு சந்தேகங்களைக் கொண்டிருந்தது என்பதைப் பல விடயங்கள் வெளிப்படுத்துகின்றன.

இந்திய ஆய்வுகள், விமர்சனங்கள் என்பவை சமாதான நடவடிக்கைகளை நெருக்கடியான கண்ணோட்டத்தில் அணுகுவதைக் காட்டுகின்றன. இராஜதந்திர நல்லுறவுகள் இருந்தாலும் நோர்வே மற்றும் வெளிநாட்டு ஈடுபாடுகள் தொடர்பாக உண்மையிலேயே இந்தியா என்ன நினைத்தது என்பதைப் பற்றிக் கொழும்பு முழு அளவில் சிந்தனையாகவே இருந்தது. ஆதலால் இந்தியாவின் நிலைப்பாடானது ஐதேமுவின் உபாயத்தை அங்கீகரிப்பதில் உதவி வழங்கும் நாடுகள் கிட்டத்தட்ட கொண்டிருந்த இணக்கப்பாட்டிலிருந்தும் வேறுபாட்டிலிருப்பதைக் காட்டியது.

உதவி வழங்கும் நாடுகள் அமைப்புகள் மத்தியிலான பரந்தளவு உடன்பாட்டிலிருந்தும் பாரியளவு விலகிச்சென்றதாகப் புலிகள் தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாடு காணப்பட்டது. பேச்சுவார்த்தை மூலமான தீர்வை முன்னெடுப்பதில் உள்ள புலிகளின் தீவிரத்தன்மையில் அமெரிக்கா ஐயுறவு கொண்டிருந்தது. 9/11இன் பின்னர் ஆயுதக் குழுக்கள் தொடர்பான அமெரிக்காவின் பொதுவான நிலைப்பாடு இந்த அபிப்பிராயத்தில் செல்வாக்குச் செலுத்தும் முக்கியமான காரணியாக இருந்தது. அடுத்த முக்கியமான விடயம் இந்தியாவுடனான அமெரிக்காவின் உறவுநிலையாகும்.

பல காரணங்களுக்காகப் இப்பிராந்தியத்தில் அமெரிக்காவுக்கும் முக்கியமான நாடாக இந்தியா உள்ளது. அதனால் விடுதலைப்புலிகள் தொடர்பான அதன் நிலைப்பாடு இந்த உறவுநிலையிலும் பிரதிபலித்தது.



மேலும் அமெரிக்கா புலிகளுக்குத் தனது நாட்டில் தடைவிதித்திருந்தது. யூஎஸ் எய்ட் போன்ற அமெரிக்க அரசாங்க நிறுவனங்கள் மட்டுமல்லாமல் ஏனையோரால் கையாளப்படும் அமெரிக்க நிதி தொடர்பாகவும் கடுமையான விதிமுறை அமல்படுத்தப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் அமெரிக்கப் பேச்சாளர்கள் இந்த விடயம் தொடர்பாக அழுத்தி உரைத்துள்ளனர்.

பயங்கரவாதத்தைக் கைவிட்டிருப்பது தொடர்பாகத் தமது உறுதியான செயல்பாட்டைப் புலிகள் வெளிப்படுத்த வேண்டுமென அமெரிக்கப் பேச்சாளர்கள் பலமுறை தெரிவித்திருந்தனர். அத்துடன் அமெரிக்க அரசாங்கம் விடுதலைப்புலிகள்மீது அதிகளவு படிமுறைகளின் அடிப்படையில் தாராளக்கொள்கைகள் தொடர்பான நிபந்தனைகளைப் பிரயோகித்திருந்தது.

டோக்கியோ மகாநாட்டுப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த அமெரிக்கா வலியுறுத்திய நிபந்தனைகளை உதாரணமாகக் கொள்ள முடியும்[14]. அந்தப் பிரகடனத்தின் இறுதிப் பகுதியில் சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றமும் உதவி வழங்கும் சமூகத்தின் ஆதரவும் தொடர்புபட்டவையாகும். விடுதலைப்புலிகள் தொடர்பாக விசேடமான பல உறுப்புரைகள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தூதுக்குழு பங்குபெறுதல், ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் இறுதித் தீர்வை நோக்கிய முன்னேற்றம், மனித உரிமைகளைப் பேணுதல், சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கும் விவகாரம், யுத்தமற்ற நிலை போன்ற கருத்துகள் புலிகளை விசேடப்படுத்தி வெளியிடப்பட்டவையாகும். இந்த விதிமுறைகளைக் கடைப்பிடிக்கும் தேவை குறித்து அமெரிக்கப் பிரதிநிதிகள் எப்போதுமே தமது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

அமெரிக்காவிற்கு முரண்பாடான முறையில் உதவி வழங்கும் நாடுகள் பல விடுதலைப்புலிகள் தொடர்பாக அதிகளவு விட்டுக்கொடுக்கும் போக்கைக் கடைப்பிடிக்கின்றன. விடுதலைப்புலிகளுடன் நேரடியாகத் தொடர்புகளை மேற்கொள்ள அந்நாடுகள் தயாராக இருந்தன. மனித உரிமைகள் போன்ற அழுத்தம் கொடுக்கும் விவகாரங்களுக்கு அதிக முன்னுரிமை கொடுப்பதைத் தமது நடவடிக்கைகளை வட, கிழக்கில் விரிவுபடுத்துவதிலேயே அவை அதிகக் கரிசனை காட்டின.

அத்துடன், விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற நிலைப்பாட்டையும் ஏற்றுக்கொள்ள இந்நாடுகள் தயாராக இருந்தன. டோக்கியோ பிரகடனத்தின் நிபந்தனைகளை எவ்வாறு

14. இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீள் நிர்மாணத்திற்காக உதவியைத் திரட்டும் மகாநாடு. இது 2003 ஜூனில் டோக்கியோவில் இடம் பெற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரயோகிப்பது என்பதே அந்நாடுகள் மத்தியிலான விவாதத்தின் மையக் கருத்தாக இருந்தது. டோக்கியோ பிரகடனம் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் சமமாகக் கடைப்பிடிக்க வேண்டிய தேவை இருப்பதாகவும் இந்நாடுகள் விவாதித்தன.

ஐதேமுவின் உபாயத்திற்கு உதவி வழங்கும் நாடுகள் ஏகமனதான ஆதரவை வழங்கின என்பதற்கு இந்த ஆண்டுகளில் அதிகளவு உதவிகளைப் பெற்றுக்கொண்டமையைச் சுட்டிக்காட்டுகிறது. மத்திய வங்கி விபரத்தின்படி 2002இல் 17.2 மில்லியனாக இருந்த உதவித்தொகை, 2003இல் 61.2 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது. அதிகரிப்பு சுமார் 350 சதவீதமாகும். ஐதேமு அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவத்திற்கும் விசேடமாக நிதிப்பற்றாக் குறைக்கும் ஆதரவாகவே இந்த நிதி உதவிகள் அதிகரித்தன. வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை ஈடுகட்ட வெளிநாட்டு வளநிதியைப் பயன்படுத்துதல் 2002இல் நிகர தேசிய உற்பத்தியில் 0.5 சதவீதமாக இருந்தது. 2003 நிகர தேசிய உற்பத்தியில் 2.9 சதவீதமாகியது. 2003 வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட தொகையைவிட இது பாரியதாகும்[15].

சர்வதேச உதவிப் பயன்பாட்டு வீதமும் முன்னேற்றம் கண்டது. 2003இல் 21%ஆக அதிகரித்தது. 2001இல் இது 13%ஆகவும் 2002இல் 15%ஆகவும் இருந்தது. உதவியைப் பயன்படுத்துவது குறித்துப் பிரதமர் தனிப்பட்டக் கவனம் செலுத்தியதும் இந்த முன்னேற்றத்திற்கான ஒரு காரணமாக உள்ளது. இதற்கென வெளிவளத் திணைக்களத்தை ஏற்படுத்தினார். உதவிகள் தொடர்பான உடன்படிக்கைகள், உதவி வழங்கும் சமூகத்துடனான பேச்சுவார்த்தைகள் என்பவற்றுக்கு இத்திணைக் களமே பொறுப்பாக இருந்தது. பிரதமர் அலுவலகத்தின் கீழேயே இது செயல்பட்டது. அத்துடன் உதவியைத் திரட்டுதல் அதனைப் பயன்படுத்துதல் தொடர்பாக மேற்பார்வை செய்வதற்கென விசேடக் குழுவொன்றையும் அவர் உருவாக்கினார்.

உதவித்தொகை அதிகரித்தமையானது கடன்கள், மானியங்களுக் கிடையில் சமநிலையை ஏற்படுத்துவதற்கும் உதவியது. 2000இல் 33.8%ஆக இருந்த மானியங்களின் அளவு 2003இல் 41.2%ஆக உயர்ந்தது. கடன்தொகையானது இதே காலப்பகுதியில் 66.2%இலிருந்து 58.6%ஆக வீழ்ச்சியடைந்தது.

எவ்வாறாயினும் இந்தத் தாராளமான ஆதரவானது இலங்கையின் வெளிநாட்டுக் கடன் சுமை தொடர்பாக முன்னேற்றத்தை ஏற்படுத்த வில்லை.

15. இலங்கை மத்திய வங்கி, வருடாந்த அறிக்கை 2003.



**அட்டவணை 3: வெளிநாட்டு நிதியுதவியின் தேர்வுச் சுட்டிகள் (மில்லியன் ரூபாக்களில்)**

| | 2000 | % | 2001 | % | 2002 | % | 2003 | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| கடன்கள் | 10070 | 66.2 | 19396 | 77.9 | 10113 | 58.8 | 53213 | 87.0 |
| மானியங்கள் | 5145 | 33.8 | 5500 | 22.1 | 7079 | 41.2 | 7956 | 13.0 |
| மொத்தம் | 15215 | 100.0 | 24896 | 100.0 | 17192 | 100.0 | 61169 | 100.0 |
| வெளிநாட்டுக் கடன் (% நிலை தேசிய உற்பத்தி) | 43.1 | | | | 45.6 | | 47.9 | |
| வெளிநாட்டு நிதி வளப் பற்றாக்குறை (% நி.தே.உ.) | 0.4 | | 1.4 | | 0.5 | | 2.9 | |

ஆதாரம்: மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை 2000-2003

2000–2003இற்கும் இடையில் வெளிநாட்டுக் கடன் நிலுவை நிகர தேசிய உற்பத்தியில் 43 1%இலிருந்து 47.9%ஆக அதிகரித்தது. இந்த அதிகரிப்பில் 50% நாணயப் பெறுமதி இறக்கத்தால் ஏற்பட்டதாகும்.

வெளிநாட்டுக் கடன் இவ்வாறு உயர்மட்டத்திலிருந்தமையானது உதவி வழங்கும் சமூகத்தின் ஆதரவு அதிகரித்தாலும் உதவி நிதிப் பாய்ச்சலில் சில தடங்கல்கள் இருப்பதை வெளிக்காட்டியது[16].

அட்டவணை 4 இலங்கைக்குச் சாதகமான முறையில் உதவி வழங்குவோரின் நிகர அனுகூலப் பாய்ச்சலைக் காட்டுகிறது.

அத்துடன் இந்த வருடங்களில் 3 உதவி வழங்குவோரில் இலங்கை அதிகளவு தங்கியிருந்தமையையும் இந்தப் புள்ளிவிபரம் சுட்டிக்காட்டு கிறது. ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான், உலக வங்கியிடமிருந்து உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் உதவிக் கடன்கள் ஆகியவையே இவை மூன்றுமாகும்[17].

உதவித்தொகை அதிகரிப்பானது பொருளாதார முகாமைத்துவத்திற்கு துணைநின்ற அதே சமயம், சமாதான நடவடிக்கைகளும் சாதாரணப் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான பல திட்டங் களுக்கு அரசாங்கம் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு ஒத்தாசை புரிந்தன. உதாரணமாக, 2003இல் உதவியளிப்பதென உறுதிமொழி அளிக்கப்பட்ட

16. 2000–2003 வருட காலப்பகுதியில் கீழ்வரும் உதவி வழங்குவோரால் இலங்கைக்கான நிகர மட்டத்தொகை: கனடா, டென்மார்க், பிரான்ஸ், பிஆர்டி, இத்தாலி, நெதர்லாந்து (2000 மட்டும்), பிரிட்டன், அமெரிக்கா.
17. இந்தியா, சீனாவிடமிருந்து கடன் உடன்படிக்கைள் மூலம் இக்காலப்பகுதியில் இலங்கை அனுகூலமடைந்தது என்பதும் இங்குக் கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான விடயம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திட்டங்கள் 62இல் 15 திட்டங்கள் மட்டுமே சமாதானத்துடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டவை அல்லது வட கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப் படும் வேலைத்திட்டங்கள் தொடர்பானவையாகும்[18]. ஏனைய 47 செயல்திட்டங்களும் சாதாரண அபிவிருத்தி நடவடிக்கைகளாகும்.

இது வட, கிழக்கில் தமது பணியை விரிவுபடுத்த உதவி வழங்கும் சமூகம் ஆர்வம் காட்டவில்லையென்று அர்த்தப்படாது. மேலே தரப் பட்ட 15 புதிய திட்டங்களும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தமது பணியை மேற்கொள்ள உறுதி வழங்குவோர் ஆர்வமாக இருந்ததை வெளிப்படுத்துகின்றது. எவ்வாறாயினும் சமாதான நடவடிக்கைகளில் ஏற்பட்ட தோல்வியால் வடக்கு, கிழக்கிற்கான பரந்தளவிலான ஆதரவு கிடைக்க முடியாமல் போய்விட்டது. உண்மையில் டோக்கியோ மகாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட 4.5 பில்லியன் அமெரிக்க டாலரில் பொருளாதார மறுசீரமைப்புத் திட்டம், தெற்கு அபிவிருத்திக்கான நிதி, வட–கிழக்கிற்கான புதிய தொகை என்பனவும் சேர்க்கப்பட்டிருந்தன. முதல் இரு நடவடிக்கைகளுக்குமான நிதியை அரசாங்கம் பயன்படுத்திய போதும் வட–கிழக்கிற்கான தொகையில் கணிசமான பகுதியைப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. இந்தத் தொகை சமாதான நடவடிக்கைகளுக்குள் சிக்கிக்கொண்டது.

### அட்டவணை 4: வெளிநாட்டு உதவியின் சாதகமான நிகரக் கொடுப்பனவுகள்

| | 2000 | % | 2001 | % | 2002 | % | 2003 | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி | 4763 | 25.0 | 5777 | 26.9 | 12391 | 41.6 | 17548 | 28.7 |
| ஆஸ்திரேலியா | 257 | 1.3 | 216 | 1.0 | 1515 | 5.1 | 1810 | 3.0 |
| ஜெர்மனி | 839 | 4.4 | 1633 | 7.6 | 200 | 0.1 | 630 | 1.0 |
| ஐடிஏ | 2236 | 11.7 | 677 | 3.2 | 5663 | 19.0 | 15950 | 26.1 |
| ஐ எஃப்ஏடி | 231 | 1.2 | 137 | 0.6 | 205 | 0.7 | 198 | 0.3 |
| ஜப்பான் | 10179 | 53.4 | 12146 | 56.6 | 8596 | 28.8 | 23298 | 38.1 |
| நெதர்லாந்து | | | 427 | 2.0 | 626 | 2.1 | 880 | 1.4 |
| நோர்வே | 325 | 1.7 | 298 | 1.4 | 499 | 1.7 | 435 | 0.7 |
| சுவீடன் | 241 | 1.3 | 155 | 0.7 | 285 | 1.0 | 389 | 0.6 |
| மொத்தம் | 19071 | 100.0 | 21466 | 100.0 | 29800 | 100.0 | 61138 | 100.0 |

*ஆதாரம்: மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கைகள் 2000-2003*

18. நிதியமைச்சின் வெளிவள திணைக்களத்திலிருந்து பெற்ற விபரங்கள்.



பொருளாதார நிகழ்ச்சித்திட்டமே அதிகளவு உதவி கிடைத்ததால் பாரியளவில் நன்மை பெற்றதெனலாம்.

எனவே பொருளாதார அடிப்படையம்சங்கள், விசேட அபிவிருத்தி திட்டங்கள் ஆகியவற்றை முன்னெடுப்பதற்கான நிதியை அரசாங்கம் பெற்றுக்கொண்டது. அத்துடன் வறுமை குறைப்பு வளர்ச்சி வசதிக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி, வறுமைக்குறைப்பு ஆதரவுக் கடனுக்கான உலக வங்கியின் நிதியுதவி ஆகிய முக்கியமான இணக்கப் பாடுகளையும் தக்கவைத்துக்கொள்வதில் அரசாங்கம் சமாளித்துக் கொண்டது. மத்திய வங்கியின் 2003 வருடாந்த அறிக்கையின் பிரகாரம் இந்த அனுமதி கிடைத்தமையானது நாட்டின் பொருளாதாரக் கொள்கை களுக்கான அங்கீகாரமாகும். அத்துடன் உதவி வழங்கும் ஏனைய நாடு களிடமிருந்து கொடைகளைப் பெற்றுக்கொள்ளத் துணை நின்றதுடன் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் ஊக்குவிப்பாக இருந்தது.

இந்தக் குறிப்பிடத்தக்க ஆதரவின் மறுபக்கமாக ஐதேமு பல்வேறு நாடுகள், உதவி வழங்கும் அமைப்புகளின் ஆதரவைப் பெற்றுக் கொண்டமையை விளங்குகின்றது. நிதி உதவி வடிவத்தில் கிடைத்த ஆதரவானது ஐதேமுவின் கொள்கைகளுக்குக் கிடைத்த ஆதரவு மட்டு மல்லாமல் ஐதேமுவின் உபாயத்திற்கும் உதவி வழங்கும் சமூகத்தின் நலன்களுக்கும் இடையிலான பொருத்தமான அம்சத்தையும் பிரதி பலித்தது. இந்தப் பொதுவான நோக்கங்கள் பாதுகாப்பையும் சந்தைப் பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதையுமே அடிப்படையாகக் கொண்டவையாகும். அதே சமயம், ஐதேமுவின் உபாயமானது உதவி வழங்கும் அமைப்புகள், நாடுகள் ஒவ்வொன்றினதும் வேறுபட்ட நலன்களைப் பேணுவதாகவும் அமைந்திருந்தது.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆகிய மூன்று பாரிய பல்தேசிய நிறுவனங்களின் தலையாய நோக்க மான சந்தைப்பொருளாதாரத்தை அல்லது முதலாளித்துவத்தை மேம் படுத்துதல் அமைந்துள்ளது. வரவு – செலவுத் திட்டத்திற்கான சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவானது அரசாங்கம் ஸ்திரத்தன்மையை உருவாக்கும் நடவடிக்கைகளையும் கட்டமைப்பு சீர்திருத்தங்களையும் மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் அமைந்ததாகும்.

உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் இதே நோக்கத்திற் காகக் கொள்கை அடிப்படையிலான கடன் வழங்குவதில் ஈடுபட்டன. ஐதேமுவின் பொருளாதார நிகழ்ச்சித் திட்டம் முறைப்படி இதனை முன்னெடுத்துச் செல்வதென்ற உறுதிமொழியின் அடிப்படையில் அமைந்ததாகும். வழமையான பாரம்பரியத்திலிருந்தும் விலகியதாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசாங்கத்திற்கும் பல்தேசிய நிறுவனங்களிற்கும் இடையிலான எண்ணப்பாடுகள் காணப்பட்டன. இலங்கை தொடர்பான அறிக்கையில் அதிகாரத்திலுள்ள அரசாங்கத்தை உலக வங்கி வெளிப்படையாகப் புகழ்ந்திருந்தது. உதாரணமாக '2003–2006இற்கான நாட்டின் திட்ட அறிக்கையின் முதல் பக்கத்தில் தனியார் துறையை அடிப்படையாகக் கொண்ட பிரதமர்களில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம், 'விரிவான மறுசீரமைப்புத் திட்டத்தை அமல்படுத்துவதற்கான கட்டுப் பாட்டைத் தன்வசம் எடுத்துக்கொண்டு உறுதியான தீர்மானத்துடன் முன்னெடுத்துச்செல்ல ஆரம்பித்துள்ளது' என்று குறிப்பிட்டுள்ளது. உலக வங்கியும் ஏனைய பல்தேசிய முகவர் அமைப்புகளும் அரசாங்கம் இந்த நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவியளிக்கத் தயாராக இருந்தன.

ஜப்பானைப் பொறுத்தவரை இலங்கையின் சமாதான நடவடிக்கை களின் ஆரம்பம் டோக்கியோவின் வெளிநாட்டுக் கொள்கை புதிய பாதையில் செல்லத்தொடங்கிய வேளையில் சம்பவித்துள்ளது. பல வருடங்களாக உலகில் அதிகளவு உதவிவழங்கும் நாடாக ஜப்பான் இருந்து வந்தது. ஜப்பானின் நலன்களை வளர்த்தெடுக்கும் கொள்கை யுடன் வர்த்தகத்தையும் தொடர்புபடுத்தியதாக அதன் உதவிக் கொள்கை அமைந்தது. ஆனால், ஜப்பானின் புதிய பாதை இந்த நிலைப்பாட்டி லிருந்தும் மாற்றம் பெற்றது.

மோதல்களுக்குத் தீர்வுகாண்பது போன்ற அரசியல் நோக்கங் களுக்காக அபிவிருத்தி உதவியைப் பயன்படுத்துவதே ஜப்பானின் புதிய கொள்கையாகும். இந்தக் கொள்கையை ஆசியாவிலேயே முதலா வதாகச் செயல்படுத்த ஜப்பான் முயன்றது. ஜப்பான் அதிகளவு ஆர்வத்தையும் அனுபவத்தையும் கொண்டிருந்ததாலேயே இந்தப் புதிய மார்க்கத்தில் இறங்கியது. இதன் புதிய பரிசோதனைக்கான முதல் இலக்காக இலங்கை மற்றும் அச்சேயின் மோதல்கள் இருந்தன. இலங்கை விவகாரத்தைக் கையாள அதிக அதிகாரமுள்ள பிரதிநிதியை ஜப்பான் நியமித்திருப்பதும் சமாதான நடவடிக்கைகளில் இணைத் தலைமை வகிக்க இணங்கியமையும் டோக்கியோ மகாநாட்டை நடத்த அனுசரணை வழங்கியமையும் அதிக வளங்களை வழங்குவதற்கு உறுதிமொழியளித்தமையும் ஜப்பானின் புதிய அணுகுமுறைக்கான காரணத்தை வெளிப்படுத்துகின்றன.

இலங்கை விவகாரங்களில் அமெரிக்காவின் ஆர்வம் ஒரேயொரு வல்லரசு என்ற அதன் உறுதியான பங்களிப்பின் அடிப்படையில் எழுந்த தொன்றாகும். அது உலகளாவிய தந்திரோபாய நலன்கள் சார்ந்ததாகும். விஷேடமாக 9/11க்குப் பின்னரான காலகட்டமானது அமெரிக்க



கொள்கை வகுப்பாளருக்குத் தெற்காசியப் பிராந்தியப் பகுதியை அதி முக்கியத்துவம் வாய்ந்ததாக மாற்றியது. பேச்சுவார்த்தை மூலமான தீர்வு தொடர்பாக, விடுதலைப்புலிகளின் இதய சுத்தித் தொடர்பாக ஐயுறவு கொண்டிருந்தாலும் இலங்கையின் மோதலுக்குப் பேச்சு வார்த்தை மூலமான தீர்வுகாணப்பட வேண்டுமென அறிவுறுத்துவதே அமெரிக்காவின் உறுதியான வெளியுறவுக் கொள்கையாக இருந்து வருகிறது. மேலதிகமாக இலங்கையின் முக்கியமான வர்த்தகப் பங்காளியாக (பொருளாதார சீர்திருத்தங்களின் பகுதியாக) அமெரிக்கா இருந்து வருவதுடன் ஐதேமுவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை யையும் முன்னெடுத்தது. இந்த மாற்றங்கள், 9/11க்குப் பின்னரான அமெரிக்க அபிவிருத்தி உதவியின் விஸ்தரிப்பு என்பன ஐதேமுவின் கீழ் இலங்கையுடன் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை நோக்கங் களுக்கான பங்காளியாக வருவதற்கு விரும்பியமையையே வெளிப் படுத்துகிறது.

இலங்கை மோதலுடனான ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தந்திரோபாய நலன்கள் புகலிடம் கோரும் விவகாரத்துடன் நெருங்கிய தொடர்புடையவையாகும். இந்தப் புகலிட விவகாரம் ஐரோப்பிய ஒன்றியத்தின் பல அங்கத்துவ நாடுகளின் உள்நாட்டு அரசியலில் சர்ச்சைக்குரிய பாரிய விடயமாக உள்ளது. தேர்தல் பிரசார வேளை யிலோ வேறு சம்பவங்களிலோ வலதுசாரி சார்புக்குழுக்கள் புகலிடம் வழங்கும் குடிவரவுக் கொள்கை தொடர்பாக பாரிய சவாலை விடுத்து வருகின்றன (சில சமயம் வன்முறைகளும்). 9/11இன் பின்னர் இந்த விவகாரம் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட விடயமாகத் தோற்றமெடுத் துள்ளது. இதன் விளைவாக ஐரோப்பிய ஒன்றியம் 'அரண்சூழ்ந்த ஐரோப்பாவை' உருவாக்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதாவது விரும்பப்படாத குடியேற்றவாசிகள், அகதிகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தால் பலர் அகதிகளாகியுள்ளனர். அவர்கள் ஐரோப்பாவில் அகதிகள் அந்தஸ்தைக் கோரியுள்ளனர். சிலர் இந்த நாடுகளில் குடியிருப்பதற்கான உரிமைகளைப் பெற்றுள்ளனர். ஆயினும், யுத்த வேளையிலும் அகதிகள் விண்ணப்பம் நிராகரிக்கப் பட்டோரைப் பல ஐரோப்பிய நாடுகள் திருப்பி அனுப்பியுள்ளன. குறுகிய காலத்துக்கு ஐரோப்பிய நாடுகள் இந்த அகதிகள் திரும்புவதற்கான விடயம் தொடர்பாக இலங்கையுடன் உத்தியோகபூர்வமான இணக்கப் பாட்டுக்கு முன்வந்திருந்தன. இத்தகைய உடன்படிக்கையை 1994இல் முதலாவதாக மேற்கொண்ட நாடு சுவிட்சர்லாந்தாகும். இது தொடர் பான பரந்துபட்ட உடன்பாட்டுக்கான ஒரு நிலையைச் சமாதான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடவடிக்கைகள் உருவாக்கின. இந்தச் சமாதான நடவடிக்கைகளின் போது இத்தகைய இணக்கப்பாட்டைச் சகல உறுப்பு நாடுகளுக்கும் பொருந்தக்கூடியதாகக் கொண்டுவந்தமை உண்மையிலேயே ஐரோப்பிய ஒன்றியத்தின் பாரிய வெற்றியாகும். 2002 ஜூலையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் புரூசல்ஸிற்கு பயணம் மேற்கொண்டபோது இந்த நடவடிக்கை இடம்பெற்றது.

உதவி வழங்கும் நாடுகளின் அரசியல் தொடர்பான மதிப்பீடானது, ஐதேமு ஆட்சியின் போது இந்த நாடுகளுக்கும் இலங்கையின் அரசியல் வர்த்தகத்துக்கும் இடையில் குறிப்பிடத்தக்க இணக்கப்பாடுகள் எட்டப் பட்டதை வெளிப்படுத்துகிறது. ஐதேமுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி உதவி வழங்கும் சமூகத்தின் ஆசீர்வாதத்துடன் இலங்கையானது சமாதானம் ஸ்திரத்தன்மையுடைய பாதையில் சென்று கொண்டிருக் கிறது என்ற எதிர்பார்ப்பு அதிகளவில் காணப்பட்டது. ஆயினும் இது குறுகிய காலத்துக்கே நீடித்தது. இருவருடகால சந்தோசத்திற்குப் பின்னர் என்ன இடம்பெற்றது என்பது தொடர்பாக இலங்கை வாக்காளர்கள் வேறுபட்ட அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தனர் என்பதை அப்பட்ட மாகப் பார்க்க முடிந்தது.

## பொருளாதார மறுசீரமைப்பு அரசியலும் ஐதேமுவின் தோல்வியும்

ஐதேமுவின் உபாயத்தை வெற்றிகரமாக அமல்படுத்தும் அரசியல் இரு காரணிகளில் தங்கியிருந்தது. ஜனாதிபதி சந்திரிகாவுடனான (பொதுஜன முன்னணி சார்பாக 1999இல் தெரிவுசெய்யப்பட்டவர்) உறவுகளைச் சமாளித்தலும் தெற்கு வாக்காளரின் ஆதரவைத் தக்கவைத் தலுமே இந்தக் காரணிகளாகும். (2001இல் ஐதேமுவை அதிகாரத்திற்கு கொண்டு வந்தவர்கள் தெற்கு வாக்காளர்கள்?) இலங்கையின் 1978 அரசியலமைப்பானது ஒரு கட்சியானது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப் பதற்கான சாத்தியத்தையும் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி பாராளு மன்றத்தில் மாற்றுக்கட்சியைக் கட்டுப்படுத்துவதற்குமான ஏற்பாடுகளைக் கொண்டதாகும். ஆயினும், முதல்முறையாக இது யதார்த்தபூர்வமாக இடம்பெற்றது.

சுதந்திரத்திற்குப் பின்னரான ஆரம்பகாலகட்டத்தில் இருந்தே ஐதே கட்சிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையிலான பகைமை தொடங்கிவிட்டது. இதனால் இந்த இரு கட்சிகளுக்கும் இடையிலான சகவாழ்வு இருப்பு என்பது ஆரம்பம்தொட்டே நெருக்கடி மிகுந்ததாகியது. இந்த ஏற்பாட்டைத் தொடர்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டதாயினும் அரசியல் வர்க்கத்தின் மத்தியில் தனிப்பட்டதும் குடும்பப் பகைமையை அடிப்படையாகக் கொண்ட குழுக்களின் மோதல்களால்



இதனைத் தக்கவைத்துக்கொள்வது மிகவும் நெருக்கடியானதொன்றாக மாறியது. ஜனாதிபதிக்கும் ஐதேமு அரசாங்கத்திற்கும் இடையிலான சகவாழ்வு இருவருடங்கள் மட்டுமே நீடித்தது. 2003 நவம்பரில் ஜனாதிபதி மூன்று முக்கியமான அமைச்சுகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இது சகவாழ்வு முடிவுக்கு வருவதற்கான ஆரம்ப அறிகுறி யாக அமைந்தது. பிப்ரவரி 2004இல் சுதந்திரதினக் கொண்டாட்டம் முடிவுற்ற உடனடியாகவே ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டுப் புதிய தேர்தலுக்கான அறிவிப்பை விடுத்தார். ஐதேமு இந்த அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டு முறியடிப்பதற்கான ஒரே வழியாகத் தென்னிலங்கை வாக்காளரின் ஆதரவைத் தக்கவைத்துக் கொள்வதாகவே இருந்தது. 2004 தேர்தலில் ஐதேமு வெற்றியடைய, சமாதான முயற்சிகள் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புத் தொடர்பான தந்திரோபாயங்கள் வலுவடைந்ததும் அடுத்த மட்டத்திற்கு முன்னேற்ற மடைந்து சென்றிருக்க வேண்டும். இந்நிலை ஏற்பட்டிருந்தால் ஐதேமு திரட்டியிருந்த சர்வதேச ஆதரவுக்கு வாக்காளர்கள் அங்கீகாரத்தை வழங்கியிருப்பார்கள். ஆனால், அவ்வாறு இடம்பெற்றிராததால் 2004 தேர்தலில் ஐதேமு தோல்வி கண்டது. இது ஏன் இடம்பெற்றது என்பதைப் புரிந்துகொண்டால் சமாதானத்தில் ஆர்வம்கொண்டோர் பல படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வது தொடர் பான தமது எதிர்ப்பிலிருந்து பெரும்பான்மைச் சிங்கள மக்களில் பெரும் பிரிவினர் விலகியிருந்தனர். மோதலின் ஆரம்பக்கட்டத்தில் சிங்கள மக்களில் பெரும்பான்மையானோர் யுத்த முயற்சிக்கு ஆதரவாக இருந்தனர். ஊடகவியலாளர்கள் மத்தியிலும் யுத்த முயற்சிக்கு குறிப் பிடத்தக்க ஆதரவு இருந்தது. இதற்கு ஆதரவாகப் பல பொதுக் கூட்டங்கள் இடம்பெற்றன. படைக்கு ஆள்திரட்டலில் கவரப்பட்டுப் பல இளைஞர்கள், யுவதிகள் இணைந்து கொண்டனர்.

இந்த விடயத்தில் 1994 தேர்தல் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பாக ஜனாதிபதி குமாரதுங்க தேர்ந்தெடுக்கப்பட்டார். பேச்சுவார்த்தைத் தொடர்பாகத் தேர்தல் பிரசாரம்செய்து வெற்றிபெற்றார். இது 2001இலும் திரும்பவும் இடம் பெற்றது. இந்தமுறை பிரதான எதிர்க்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தைக்கு ஆதரவு தெரிவித்ததுடன் ஐதேமு ஆட்சிக்காலம் முழுவதும் அந்த நிலைப்பாட்டைப் பேணிவந்தார். பேச்சுவார்த்தை இடம்பெற்ற காலகட்டத்தில் மாற்றுக்கொள்கை களுக்கான நிலையம் சமூக சட்டதிட்டமொன்றை வெளியிட்டது. அதன் புள்ளிவிபரங்களின்படி மக்கள் தொகையில் 80 சதவீதமானோர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர் (மாற்றுக் கொள்கைகள் நிலையம் 2003).

ஐதேமுவும் புலிகளும் நேருக்கு நேர் பல சுற்றுப் பேச்சுவார்த்தையை நடத்திய காலகட்டத்தில் இந்த ஆதரவு உச்சக்கட்டத்தை எட்டியது. சிங்களவர்களில் அதிக சதவீதத்தினரின் ஆதரவு இல்லாமல் இத்தகைய உயர்ந்தமட்ட ஆதரவைப் பேணுவதென்பது மிகக்கடினமான விடயமாகும். அத்துடன் யுத்தத்திற்கு அளித்த ஆதரவிலிருந்தும் கணிசமான அளவு பெரும்பான்மைச் சமூகத்தின் அபிப்பிராயம் பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கு இணங்குகின்ற தன்மையை இந்தத் தேசியளவு உதாரணம் வெளிப்படுத்தியது.

இங்கு ஐதேமுவின் தோல்வியை விளங்கிக்கொள்வதற்குச் சமாதான நடவடிக்கைகளின் இயக்கவியலுக்கு அப்பால் சென்று பார்த்து விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஐதேமுவின் தோல்விக்குப் பங்களிப்புச் செய்த காரணியாகப் பொருளாதார மறுசீரமைப்புத் திட்டம் அமைந்திருப்பதையும் சிங்களப் பெரும்பான்மையினர் மத்தியில் அரசியல் ரீதியான செல்வாக்கை வீழ்ச்சியுறச் செய்ததையுமே இந்த அறிக்கை பிரதானமான விவாதக் கருப்பொருளாகக் கொண்டுள்ளது.

சந்தைப் பொருளாதாரத்தை மேம்படுத்துகின்ற ஒவ்வொரு பொருளாதார மறுசீரமைப்புமே பொதுமக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நடத்தைத் தன்மையைக் கொண்ட மாற்றங்களுடன் தொடர்புடையதாகும். அல்லது அதைத் தயாரித்த நிலையங்கள் அதன் வளங்களை விநியோகம் செய்ய வேண்டும். சீர்திருத்தங்கள் குறித்து மக்கள் மத்தியிலுள்ள வேறுபட்டப் பிரிவினர்களின் அபிப்பிராயங்களே சிக்கலான பல காரணிகளைத் தீர்மானிக்கின்றன. மறுசீரமைப்பு முந்தைய காலகட்டத்தில் அனுபவித்த பதவிகள், சிறப்புரிமைகள் அவற்றின் மத்தியிலுள்ள முக்கியமான விடயமாகும். அத்துடன் மறுசீரமைப்புத் தொடர்பாக உண்மையாகவே உள்வாங்கப்பட்ட தாக்கமும் முக்கியமானதொன்றாகும். மக்கள் மத்தியிலான வெவ்வேறு பிரிவினர் சீர்திருத்தம் தொடர்பான தமது எண்ணப்பாடுகளை எவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள் என்பதிலேயே இவற்றின் அரசியல்ரீதியான வெளிப்பாடுகள் தங்கியுள்ளன.

மக்கள் ஆதரவை முழு அளவில் தக்கவைத்து, எதிர்மறையான காரணிகளை அமைதியான முறையில் சமாளித்துக் கொண்டு, மறுசீரமைப்பை அமல்படுத்துவதை ஆட்சியாளரின் தரப்பைப் பொறுத்தவரை வெற்றிகரமானதாக அமையும். மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் போது அரசாங்கம் தேர்தலை எதிர்கொண்டால் சீர்திருத்தம் தொடர்பாக



மக்களின் அபிப்பிராயத்தை அறிந்துகொள்ளும் சக்தி மிகவும் முக்கியமானதாகும். இந்த நடவடிக்கைகளின் மொத்தமே சீர்திருந்த நடவடிக்கைகளின் அரசியலை உருவமைக்கிறது.

ஐதேமுவின் பொருளாதார மறுசீரமைப்புத் திட்டத்தின் பின்புலத்தில் பல குறைபாடுகள் இருப்பதைக் கண்டுகொள்ள முடியும். முதலாவதாக ஒரே சமயத்தில் இரு முயற்சிகளை மேற்கொள்வது ஐதேமுவின் தந்திரோபாயமாக இருந்தது.

ஒருபுறம் யுத்தநிறுத்த உடன்படிக்கையுடன் அரசாங்கத்தின் கட்டமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவருவது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளும் மறுபுறத்தில் அதிகளவிலான பொருளாதார மறுசீரமைப்பு முயற்சிகளும் இடம்பெற்றன. இரண்டுக்குமே ஒரே தருணத்தில் தென்னிலங்கை மக்களிடமிருந்து ஆதரவைப் பெற்றுக்கொள்வதென்பது சுலபமான இலக்கு அல்ல. முந்தைய ஆட்சிக்காலங்களில் சாதகமான அரசியல் சூழ்நிலைகள் இருந்த வேளைகளில்கூட இந்த மாதிரியான விரிவான பொருளாதாரச் சீர்திருத்தத் திட்டத்தை முன்னெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டமானது உறுதியாக தாபிக்கப்பட்ட நலன்களுடனும் முரண்பட்டதாகிவிடுகிறது. விஷேடமாக அரசாங்க மற்றும் தொழில்சார் சட்டங்களை மறுசீரமைக்க முயற்சிக்கும்போது முரண்பாடு ஏற்படுகிறது. தாராள முதலாளித்துவவாதத்தின் ஆரம்பக்கட்டம் 1977 காலப்பகுதி என்றாலும் இந்த முக்கியமான பகுதிகளில் பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னேற்றம் காணவில்லை. கணிசமான காலப்பகுதிக்குள் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவது தொடர்பாகக் கலந்துரையாடல்களும் விவாதங்களும் இடம்பெற்றன. உண்மையிலேயே பல்தேசிய நிறுவனங்கள் இதைச் சிறிது காலத்துக்கு வலியுறுத்தி வந்தன. இவை தொடர்பான சில விடயங்களில் ஆய்வுகளும் அறிக்கைகளும் நிறைவேற்றப்பட்டு உதவி வழங்குவோருடன் கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டுச் சில ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளும் இடம்பெற்றன. ஆயினும், முன்னேற்றமானது தாமதமாகவும் அடிக்கடிப் பின்னடைவை எதிர்நோக்கியதாகவும் அமைந்தது. இதற்குப் பிரதான காரணமாக இருப்பது இந்த மறுசீரமைப்புகள் ஒவ்வொன்றையும் அரசியல் நடத்திக்கொண்டு செல்வதாகும்.

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்யும்போது இங்குப் பணிபுரியும் ஊழியரின் எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அரசாங்கத் துறை ஊழியர்களைச் சில மார்க்சிஸ்டுகள் இடைநிலை வர்க்கத்தினர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று அழைக்கின்றனர். இந்த வர்க்கமானது அரச மேலாதிக்கத்துடனான முதலாளித்துவ காலகட்டத்தில் விரிவுபடுத்தப்பட்டது. சுதந்திரத்திற்குப் பின்னரான காலகட்டத்தில் இடைநிலை வகுப்பினர் மிக முக்கியமான சக்திகளாகத் திகழ்ந்தனர். இலங்கையை ஆண்ட வர்க்க முறைமையில் இவை மிக முக்கியமானவையாகத் திகழ்ந்தன. வரலாற்றுரீதியாக, மத்திய தர வகுப்பினர் காலனித்துவ எஜமானர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட அதிகாரத்தின் மூலம் அந்தக் காலப் பகுதியில் செல்வத்தைத் திரட்டிக்கொண்டனர். சர்வதேசரீதியிலான வாக்குரிமை, மற்றும் சிரமமான தேர்தல்கள் என்பவற்றால் இவற்றைப் பேணிப் பாதுகாக்க முடியவில்லை. காலனித்துவ மத்தியதர வகுப்பினருடன் இடைநிலை தேர்தல் நடவடிக்கைகள் மூலம் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதன் ஊடாக தோற்றம் பெற்ற வர்க்கமே இந்த மத்தியதர வர்க்கமாகும்[19].

1977இற்குப் பின்னரான காலப்பகுதியில் இந்த வர்க்கம் விரிவு பட்டது. அரசாங்கத் துறையிலிருந்து அதிகளவிலான ஆட்குறைப்பால் எதிர்கொள்ளப்பட்ட அரசியல் நெருக்கடிகள் இதற்கான ஒரு பகுதிக் காரணமாகக்கொள்ள முடியும்.

சேவைத் துறைகள் பலவற்றுக்குத் தொடர்ந்தும் அரசாங்கத் துறையிலேயே தங்கியிருத்தல், அரசியல் வர்க்கத்தின் ஆதரவு அரசியலின் ஆதிக்கம் என்பன தொடர்ந்தும் தமது ஆதரவாளர்களுக்குத் தொழில் வழங்குவதற்கு அரசாங்கத்தைப் பயன்படுத்தியமையும் இந்த வர்க்கம் விரிவுபடுவதற்கு ஒரு பகுதிக் காரணமாக அமைந்தது.

தாராளப் பொருளாதாரக் கொள்கையின் தாக்கத்தால் விரிவுபெற்ற மற்றொன்றாக ஒழுங்குபடுத்தப்பட்ட உழைக்கும் வர்க்கம் அமைகிறது. பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளின் விரிவால் இந்த உழைக்கும் வர்க்கத்தின் எண்ணிக்கையும் அதிகரித்தது. புதிய உழைக்கும் வர்க்கத்தை உள்ளடக்கியதாக இல்லாவிடினும் இலங்கையில் பெருந்தோட்டத் துறை, சிவில்சேவை, அரச நிறுவனங்கள் (நிதிப்பிரிவு உட்பட) தனியார் துறையில் சில பிரிவுகள் போன்ற முக்கியமான துறைகளில் தொழிற்

19. இந்த ஆய்வின் பின்னணி ஆதாரங்களுக்குப் பார்க்க: குணசிங்க நியுட்டன் (1996) '1956 அரசியல் மாற்றங்கள் தொடர்பான சமூகவியல் கருத்தும் சமூக அரசியல் நடவடிக்கைகளின் விளைவும் நிலச்சீர்திருத்தம், வர்க்க கட்டமைப்பு, அரசாங்கம்', பெரேரா சசங்க (பதிப்பு), நியூட்டன் குணசிங்க தேர்ந்தெடுத்த கட்டுரைகள் (சமூக அறிவியலாளர் சங்கம், கொழும்பு); குமாரி ஜயவர்தன (2000) முக்கியத்துவம் இல்லாமலிருந்து முக்கியத்துவம், இலங்கையின் காலனித்துவ பூர்சுவாக்களின் எழுச்சி, (சமூக விஞ்ஞானிகள் சங்கம், சஞ்சய புக்ஸ், கொழும்பு); ஜயதேவ உயன்கொட 1999 'சுதந்திரத்திற்கு பின்னரான சமூக நகர்வுகள்' (திருத்தப்பட்டது), டபிள்யு.டி. லக்ஷமன், சி.ஏ. சிஸ்டேல், 'சுதந்திரத்திலிருந்து இலங்கை அபிவிருத்தியின் முக தோற்றங்கள் சமூக, அரசியல், பொருளாதார, விஞ்ஞான, கலாசாரம், குயீன்ஸ்லாண்ட் பல்கலைக்கழகம், பிரியங்கேயர்; 'சுனில் பஸ்டியன்' (2003) 'தேர்தல் சீர்திருத்த பொருளாதார அரசியல், இலங்கையில் விகிதாசார பிரதிநிதித்துவம்', சுனில் பஸ்டியன், ரொபின் லக்கம் (திருத்தப்பட்டது), ஜனநாயகத்தை வடிவமைக்க முடியும்? இசட் புக்ஸ், லண்டன்.



சங்க இயக்கம் இருக்கிறது. தொழிற்சங்கங்கள் சில அரசியல் கட்சிகளுடன் நெருங்கிய பிணைப்புகளைக் கொண்டவையாகும். அரசியல் பேரங்களை நலன் சார்ந்த முக்கியமான குழுவாகச் செயல்படுவதற்குத் தொழிற்சங்கத்தை உருவாக்கக் கட்சிகளால் இடமளிக்கப்பட்டுள்ளது. உண்மையிலேயே ஆட்சிக்குவரும் அரசியல் கட்சிகள் தமது அரசியல் போராட்டங்களுக்கு இந்தத் தொழிற்சங்கங் களையே சார்ந்துள்ளன.

இரண்டாவதாக, இரண்டு தசாப்த காலத்துக்கு மேற்பட்ட தாராள முதலாளித்துவத்திலுள்ள சமூக முரண்பாடுகள் வெளிக்காட்டப்படும் சமூகத்தின் மத்தியில் இந்தப் பரந்துபட்ட மறுசீரமைப்புகளை ஐதேமு அறிமுகப்படுத்தியது. ஆயினும், 1977இற்குப் பின்னரான காலகட்டத்திலான பொருளாதார நோக்கம் குறித்த ஆய்வுத் தன்மையுடனான பார்வை இடம்பெறவில்லை என்பதே அடிப்படையான அனுமானமாகும். ஐதேமுவின் தலைமை தாராள முதலாளித்துவத்தின் 20 ஆண்டுகளில் ஏற்பட்ட எதிர்மறையான தாக்கம் குறித்து விளங்கிக்கொள்ளவோ புரிந்துகொள்ளவோ விரும்பவில்லை. தேவைப்படுவதற்கும் அதிகமான அளவுக்கு விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சராசரிப் புள்ளிவிபரங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினால்கூட குறித்த விடயம் தொடர்பாக ஒருவரால் ஒரு முடிவுக்குவர முடியும். கடந்த இரு தசாப்த காலங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் தாராள வாதக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகின்றபோதிலும் ஜனத்தொகையில் நான்கிலொரு பகுதியினர் தற்போதும் வறுமைக்கோட்டின் கீழேயே உள்ளனர். பொருளியலாளரின் ஆய்வுகள் இந்த உண்மையைச் சுட்டிக்காட்டுகின்றன. பார்க்க அட்டவணை.

இந்தப் புள்ளிவிபரங்கள் வட, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தோரை உள்ளடக்கவில்லை. அவர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தால் மிக மோசமான நிலைமை வெளிப்படுத்தப்பட்டிருக்கும்.

யாவற்றுக்கும் மேலாக, வருமானப் பங்கீடு தொடர்பான சமீபத்திய புள்ளிவிபரமானது இலங்கையில் மிக அதிகளவுக்குச் சமத்துவமற்ற சமூகம் காணப்படுவதை வெளிப்படுத்துகிறது. மத்திய வங்கியின் 2003–2004 காலப்பகுதிக்கான நுகர்வோர் நிதி, சமூகப் பொருளாதார மதிப்பீட்டின்படி மொத்த வருமானத்தில் 38.6 சதவீதமானதாக அதி உயர் வருமானம் உள்ளது. தாழ்ந்த மட்ட வருமானமாக 1.7 சதவீதம் உள்ளது. அதியுயர் வருமானம் குறைந்த வருமானத்தைவிட 23 மடங்கு அதிகமானதாகும். வருமானப் பங்கீட்டில் அதிகளவுக்குச் சமத்துவ மின்மையையே இது காட்டுகின்றது. இதேவேளை உயர்வான இரு சதவீத அளவானது மொத்த வருமானத்தின் அரைவாசிக்கும் கூடுதலாக இருப்பதற்குக் காரணமாகிறது. (53.7%). அதேசமயம் குறைவான 5%



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அளவானது (அதாவது மொத்த வருமான அளவின் அரைவாசிக் குறைவு 1/5 பங்காக மட்டும் 19.6%) இருப்பதற்குக் காரணமாகிறது[20].

இந்தச் சமத்துவமின்மையானது பிராந்தியத்தின் பரிமாணமாகவும் காணப்படுகிறது. நிகரத் தேசிய உற்பத்தியின் 50 சதவீதம் மேல் மாகாணத்தை மையப்படுத்தியதாகும். ஏனைய பிராந்தியங்கள் புறக் கணிக்கப்பட்டுள்ளன (பார்க்க அட்டவணை 5). வறுமையிலுள்ள வீடுகளின் பங்கீடு தொடர்பான புள்ளிவிபரங்கள் இதை வெளிப்படுத்து கின்றன. அட்டவணை 5இல் காட்டப்பட்டதன்படி 12.2% வீடுகள் மேல் மாகாணத்தில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளன. சப்ரகமுவ மாகாணத்தில் 40%க்கு மேற்பட்டோர் வறுமைக்கோட்டில் வாழ்கின்றனர். இதுவே மிக மோசமான நிலையிலுள்ள மாகாணமாக உள்ளது.

முழுமையான வறுமையைவிட இலங்கையில் சமூகச் சமத்துவ மின்மையே அரசியலில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது. இது சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து ஏற்படுத்தப்பட்ட சமூகப் போக்கிற்கு எதிராகச் செல்கிறது. இங்கே, மேற்கத்திய காலனித்துவ பூர்சுவாக்களின்

**அட்டவணை 5: பிராந்திய அளவில் சமத்துவமின்மை குறித்த சுட்டிகள்**

| மாகாணம் | வறுமையிலுள்ள குடும்பங்களின் பங்கீடு 1995/96 | வறுமையிலுள்ள குடும்பங்களின் பங்கீடு 2000 |
|---|---|---|
| மேல் | 12.2% | 49.4% |
| வடமேல் | 30.4% | 10.4% |
| மத்திய | 35.4% | 9.9% |
| தென் | 32.5% | 9.3% |
| சப்ரகமுவ | 40.0% | 6.7% |
| கிழக்கு | கணக்கிடப்படவில்லை | 4.5% |
| ஊவா | 33.9% | 4.0% |
| வடமத்தி | 26.1% | 3.8% |
| வடக்கு | கணக்கிடப்படவில்லை | 2.1% |
| இலங்கை | 26.7% | 100.0% |

ஆதாரம்: 25 நவம்பர் 2002இல் ஒஸ்லோ மகாநாட்டில் இலங்கை அரசாங்கம் சமர்ப்பித்த அறிக்கை

20. இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை, 2003. இந்த மதிப்பீடானது கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கவில்லை. வருமானப் பங்கீடு சமூக, பிராந்திய அளவில் மிக மோசமானதாக இருக்கும்.



அதிகாரம் சவாலிடப்பட்டதுடன் இந்தச் சிறிய சிறுபான்மையினரின் ஏகபோக அதிகாரத்தை உடைப்பதற்குப் பல கொள்கைரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. விவாதிக்கப்பட்டதுபோல இந்நடவடிக்கைகளால் உண்மையில் அனுகூலம் பெற்றோர் இடைநிலை வர்க்கத்தினரே. எவ்வாறெனினும் இது சமூகநீதிக்கான வலியுறுத்தல் களையும் விழுமியங்களையும் உருவாக்கியது. இன்னும் அரசியல் போராட்டங்களில் செல்வாக்குச் செலுத்துகிறது. இந்நடவடிக்கைகளால் உண்மையில், அனுகூலம் பெற்றோர் இடைநிலை வர்க்கத்தினரேயாகும். ஆயினும், இது சமூக நீதிக்கான வலியுறுத்தல்களும் விழுமியங்களும் அரசியல் போராட்டங்களில் இப்போதும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன.

அதிகரித்துச் செல்லும் சமத்துவமின்மையானது நடைமுறைப் படுத்தப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் தன்மை தொடர்பாகக் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தில் குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்துகின்றது. அத்துடன், அநீதி இடம்பெற்றிருக்கின்றது என்பது பற்றிய அபிப்பிராயத்தையும் வலுப்படுத்துகின்றது. இலங்கையில் இது சமூக, பிராந்திய மட்டங்களில் காணப்படுவதுடன் அநீதியான அபிவிருத்தி என்ற கருத்து ஆதிக்கம் செலுத்துகின்றது.

தாராள முதலாளித்துவத்தின் மற்றொரு முரண்பாடாகச் சிறிய அளவில் நெல் சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகள் மீதான பரந்துபட்ட சமூக அழுத்தங்கள் காணப்படுகின்றன. முன்பு குறிப்பிட்டது போன்று இந்த வர்க்கத்தினரைப் பாதுகாப்பது காலனித்துவத்திற்குப் பின்னரான இலங்கை அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகும். ஆயினும், பல வருடங்களாகச் சிறிய அளவில் நெற்செய்கையில் ஈடுபடுவோர் பயிர்ச்செய்கையைச் சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது[21]. அவர்கள் வாழ்க்கை நிலைமையை அரசியல்ரீதியில் பார்த்தால் வாக்காளர் தொகையில் இவர்கள் பெரிய பிரிவினராவர்.

2001இல் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் சமூக மட்டத் தாக்கங் களும் ஐதேமுவின் பரந்தளவிலான பொருளாதாரச் சீர்திருத்தங்களில்

21. இந்த விடய ஆய்வுக்காக, டேவிட் டன்ஹம், கிரிஸ் எட்வர்ட்ஸ் (1997) பார்க்கவும் 'இலங்கையில் கிராமிய வறுமை, விவசாய நெருக்கடி, 1985 – 95: பிரதி பிம்பத்தை உணர்வு பூர்வமாக்கல்' ஆய்வுக்கற்கைகள், வறுமை, வருமான விநியோகம் தொடர் இல. 1 (கொள்கை கற்கை களுக்கான நிறுவனம்), மேலும் பார்க்கவும்: உலக வங்கி (1996) பெருந்தோட்டத்துறை சாராத பிரிவிற்கான மாற்றுக் கொள்கைகள், இந்தப் பிரச்சினைக்கான வங்கியின் பதில்கள். இது நிலச்சந்தை விடுவிப்பதையும் சிறிதளவு நெற்செய்கையாளர் தமது நிலத்தை விற்பதற்கும் இலாபமீட்டும் தொழில் துறைக்கு திரும்புவதற்கும் வழிவகுக்கிறது. இது விவசாயத்துறையில் முதலாளித்துவத் தொடர்புகளை விரிவுபடுத்துவதற்குத் துணைநிற்பதாக அமையும். ஆனால் வெளிப்படுத்த வேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால் அரசியல் நடவடிக்கைகள் இந்த மாற்றத்தின் பின்னணியில் மறைந்திருக்கின்றது என்பதே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதிப்புக்குப் பங்களிப்புச் செய்தன. வாழ்க்கைச் செலவு அதிகளவில் அதிகரிப்பு, நிறுவனங்களை மூடியதால் ஏற்பட்ட நம்பிக்கையீனம், வேலைவாய்ப்பு இழப்பு என்பன பொருளாதாரச் சூழலைப் பரந்தளவில் பாதித்தன. யதார்த்தத்தில் 2001 தேர்தலில் தென்பகுதி வாக்காளர்கள் ஐதேகவிற்கு வாக்களித்தமை உள்நாட்டு யுத்தத்தைவிடப் பொருளாதாரம் தொடர்பாகக் கவனம் செலுத்தும் என்பதற்காகவே எனச் சில அபிப் பிராய வாக்கெடுப்புகள் வெளிப்படுத்தின. பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுக்கொண்டிருந்த வேளையிலும் பொருளாதார விடயங்களுக்கு மக்கள் அதிகளவு முன்னுரிமை கொடுத்திருந்தார்கள். மக்கள் எந்த விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள் என்பது பற்றிய சமூகச் சுட்டிக் கணிப்பீட்டில் ஜனவரி 2003இல் 48.2 சதவீதமானோர் வாழ்க்கைச் செலவு விடயத்தையே தேர்வு செய்தனர். 16.5 சதவீதமானோர் வேலை வாய்ப்பு இன்மையையும் 18.8 சதவீதமானோர் இனப்பிரச்சினையையும் (மாற்றுக்கொள்கை நிலையம், 2003) தேர்வுசெய்துள்ளனர். மறுபக்கமாக இதைப் பார்த்தால் 64.7 சதவீதமானோர் பொருளாதார விடயங்களுக்கே முன்னுரிமை கொடுத்துள்ளார்கள். அதேசமயம் 18.8 சதவீதமானோரே இனநெருக்கடிகளுக்கு முன்னுரிமை கொடுத்திருக்கின்றனர்.

பொதுமக்களின் அநேகமானோர் பாரியளவு பொருளாதாரப் பிரச்சினையை எதிர்கொண்டபோதும் ஐதேமுவின் உபாயமானது சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய குறிப்பிடத்தக்க கொள்கைப் பொதியைக் கொண்டதாக இருக்கவில்லை. திட்டமிடுவோரும் தலைமையும் வழமையான வளர்ச்சி, வீழ்ச்சி என்பதிலேயே நம்பிக்கை கொண்டிருந்ததுடன் சந்தைப்படுத்தலுக்கும் தனியார் துறை அபி விருத்திக்குமான தடைகளை அகற்றுவதே பிரதான பொறுப்பு என்று கருதினர். இவற்றினூடாக பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துதல் மற்றும் இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளில் உரியவர்களை இணைத்துக் கொள்ளுதல் ஆகியவற்றுடன் குறிப்பிட்ட சில ஆதரவான சேவைத் துறைகளை மேம்படுத்துவதன் மூலம் வறிய மக்கள் பயனடைவர் என்பது அவர்களின் திட்டமாகும். இதற்கு முரண்பாடாக ஐதேகவின் முந்தைய ஆட்சிகள் அமைந்திருந்தன.

ஐதேமுவின் உபாயமானது அதிகளவு மக்களைக் கவரக்கூடியதும் அரசியல் ஆதரவைத் திரட்டக்கூடியதுமான குறிப்பிடத்தக்க நிகழ்ச்சித் திட்டத்தைக் கொண்டிருக்கவில்லை. உதாரணமாக ஜனாதிபதி பிரேமதாசவின் ஜனசவிய, ஜனாதிபதி குமாரதுங்கவின் சமுர்த்தி ஆகிய வற்றை அதற்கு உதாரணமாகக் கூற முடியும். இவை பெற்ற வறுமை ஒழிப்புத் திட்டங்கள் என்பதுடன் வறுமை ஒழிப்புக்கான சமூகப் பொருளாதார நோக்கங்களைக் கொண்டவையாகும். எவ்வாறாயினும்



இவை அரசியல் முக்கியத்துவம் பெற்றவையாகவும் இருந்தன. இந்தத் திட்டங்களுடன் ஆளும்வர்க்கம் பொதுமக்களுடன் தமது உறவைச் சமாளிக்கப் பயன்படுத்தப்பட்டவையாகும். அதேசமயம் முதலாளித்துவ முன்னேற்றத்திற்குத் தேவைப்பட்ட ஏனைய சீர்திருத்தங்களையும் அவர்கள் முன்னெடுத்துச் சென்றனர். இந்தத் திட்டத்திற்காகக் கொடுக்கப் பட்ட பெயர்கள்கூட அரசியல் நோக்கத்திற்கானவையாகும். ஜனாதிபதி பிரேமதாசவும் சந்திரிகா குமாரதுங்கவும் தமது சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் சென்ற அதேசமயம், இந்தத் திட்டங்களுக்கும் நிதி அளித்தனர்[22]. ஆனால், புதிய முயற்சிகளைக் கண்டுபிடித்து முன்னெடுக் காமல் இத்திட்டங்களைக் கடினமாக்குவதாகவே ஐதேமுவின் உபாயம் அமைந்திருந்தது. ஆதலால் சீர்திருத்தத் திட்டங்கள் மக்களில் பெரும் பான்மையானோரை அந்நியப்படுத்தியது. அத்துடன் இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகள் வறிய வர்த்தகத் துறையையே பாதித்ததென்றே பரந்துபட்ட அபிப்பிராயம் ஏற்பட்டது. வரி மன்னிப்புப் போன்ற விசேடக் கொள்கைகள் இந்த மனப்பதிவை உறுதிப்படுத்தியதுடன் விமர்சனங்களுக்கும் ஊக்குவிப்பாக அமைந்தது.

பிஆர்எஸ்பி (வறுமையுடன் தொடர்புடைய பொருளாதார மறு சீரமைப்புத் திட்டம்) ஐதேமு அதிகாரத்திலிருந்தபோது முன்னெடுக்கப் பட்டது. ஆயினும், அதனால் அரசியல் பங்களிப்பை நல்க முடியவில்லை. ஆரம்பத்திலிருந்தே பிஆர்எஸ்பி உதவி வழங்கும் சமூகத்துடன் இணைந்த தாக அடையாளம் காணப்பட்டதுடன் அதற்கு அரசியல்ரீதியான நியாய பூர்வத்தன்மை கிடைக்கவில்லை. இது உண்மையாக உதவி வழங்கும் சமூகம் முன்தள்ள முயலும் அரசியல்ரீதியான சர்ச்சைக்குரிய மறு சீரமைப்பென விமர்சிக்கப்பட்டது. பிஆர்எஸ்பியின் சாராம்சமும் உள்ளடக்கமும் பல்வேறு உதவி வழங்கும் அமைப்புகளால் ஊக்கு விக்கப்பட்ட கட்டமைப்புச் சீர்படுத்தல், ஸ்திரப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் ஆகியவற்றையே கொண்டிருந்தது. வறுமை ஒழிப்புத் திட்டத் தினூடாக இந்தக் கொள்கைகளை நியாயபூர்வமானதாக்க முயற்சிக்கப் பட்டது மற்றொரு விடயமாகப் பங்குபற்றும் நடவடிக்கை அமை கிறது. இது உதவி வழங்கும் சமூகத்தின் புதிய உபாயமாகும். தாங்கள் முன்னெடுக்க விரும்பிய மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவைத் திரட்டுவதே இந்த உபாயமாகும். பிஆர்எஸ்பியின் பங்குபெறுதல் செயன்முறையானது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதொன்றாகவே இருந்ததுடன் பொதுமக்களின் பங்குபெறுதல் எதனையும் வெளிப்

22. பார்க்கவும்: மைக்மூர் (1997) 'இடது பக்கமிருந்து வலது பக்கம் முன்னெடுத்தால்: செல்வாக்கு மிக்க கூட்டணிகளும் பொருளாதார சீர்திருத்தமும்' உலக அபிவிருத்தித் தொகுதி 25, இல. 7 பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கான அரசியல் தந்திரோ பாயத்துக்கான கலந்துரையாடல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### அட்டவணை 6: ஐதேக/ஐதேமு தேர்தல் பெறுபேறு

| மாவட்டம் | 2001 | 2004 | +/- |
|---|---|---|---|
| கொழும்பு | 49.7 | 40.3 | -9.4 |
| கம்பஹா | 42.3 | 35.7 | -6.7 |
| களுத்துறை | 43.4 | 35.8 | -7.6 |
| காலி | 42.2 | 36.6 | -5.6 |
| மாத்தறை | 40.4 | 33.0 | -7.4 |
| அம்பாந்தோட்டை | 38.2 | 33.3 | -4.9 |
| மாத்தளை | 47.1 | 45.2 | -1.9 |
| கண்டி | 49.3 | 46.6 | -2.7 |
| நுவரெலியா | 62.6 | 50.3 | -12.4 |
| குருநாகல் | 46.3 | 40.9 | -5.5 |
| புத்தளம் | 48.2 | 43.4 | -4.7 |
| பொலநறுவை | 44.9 | 38.2 | -5.8 |
| அநுராதபுரம் | 43.5 | 37.8 | -5.0 |
| மொனராகலை | 39.7 | 34.7 | -4.8 |
| பதுளை | 50.2 | 45.4 | -4.2 |
| இரத்தினபுரி | 43.7 | 39.5 | -5.1 |
| கேகாலை | 46.8 | 41.8 | -8.2 |
| யாழ்ப்பாணம் | 8.2 | 0.0 | -3.7 |
| வன்னி | 26.0 | 22.3 | -9.3 |
| மட்டக்களப்பு | 11.8 | 2.4 | -6.7 |
| அம்பாறை | 19.7 | 13.6 | -6.0 |
| திருகோணமலை | 37.1 | 8.2 | -28.9 |
| மொத்தம் | 43.2 | 35.8 | -7.4 |

ஆதாரம்: தேர்தல் திணைக்களம்

படுத்தவில்லை. இந்தக் காரணங்களால் பிஆர்எஸ்பியால் ஐதேமுவுக்குத் தேவைப்பட்ட அரசியல் ஆதரவைத் திரட்டும் நடவடிக்கையை ஆரம்பிக்கக்கூட முடியவில்லை[23].

23. இலங்கையின் பிஆர்எஸ்பிக்கான விமர்சனத்துக்கு பார்க்க: தேபயாணி கார், 2003. இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியம் உலக வங்கி திட்டம்: இது உதவுமா அல்லது தெற்காசிய ☞



முழு அளவில் பார்த்தால், ஐதேமுவின் பொருளாதார திட்டம் சிங்கள மக்களின் கணிசமான தொகையினரின் ஆதரவை ஈட்டிக்கொள்ள முடியாததுடன் சமாதான நடவடிக்கைகளுக்கும் ஆதரவைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. உண்மையில் இது சுதந்திரமான சமாதான நடவடிக்கைகளுக்கான திட்டமென்ற உணர்வையே தெளிவான முறையில் ஏற்படுத்தியது. சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதேசமயத்தில் அரசியல்ரீதியான மறுசீரமைப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுத்ததால் அதனைச் சமாளிப்பது நெருக்கடிக்குள்ளானது. அதே தருணத்தில் இது சக்திவாய்ந்த விடாப்பிடியான சிந்தனையுடைய குழுக்களின் சவாலுக்கும் உட்பட்டது. புதிய சமூகத்திட்டங்கள் இல்லாத நிலையில் அரசாங்கம் தாராள முதலாளித்துவம் தொடர்பாகச் சமூக முரண்பாடுகள் தொடர்பாக, அதிக சிரத்தை எடுக்கவில்லையென்ற மனப்பதிவே ஏற்பட்டது. நெருக்கடி நிலையில் இருக்கும் மக்கள் குறித்துக் கவனமெடுக்கவில்லையென்று கருதப்பட்டது

குறுகிய காலத்துக்குள்ளேயே ஐதேமுவானது சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக அதிகளவில் வெற்றியீட்டியபோதும் இருமுனைகளில் அரசியல் நெருக்கடிகளை எதிர்கொண்டது. முதலாவதாகச் சகவாழ்வு நடவடிக்கை சீர்குலைந்தது. இரண்டாவதாக மறுசீரமைப்பு நடவடிக்கைகள் பல்வேறுபட்ட சமூகக் குழுக்கள் மத்தியில் அதிகளவிலான பகைமையை ஏற்படுத்தியது. தமது நலன்களுக்கு இந்தக் கொள்கைகள் நேரடியான எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக இந்த சமூகக் குழுக்கள் கருதின.

2004 தேர்தல் ஐதேகவின் அதிர்ஷ்டத்தை முழுமையாக மாற்றியமைத்தது. 2001இல் சிறப்பான முறையில் ஆதரவைப் பெற்ற அவர்கள் 2004இல் 35.8 சதவீத வாக்குகளையே தேசிய ரீதியில் பெற்றனர். 1994இல் அடைந்த தோல்வியிலும் பார்க்க 41.9 சதவீத வாக்குகளை ஐதேகவினர் பெற்றிருந்தனர். 14 தேர்தல் மாவட்டங்களில் ஐதேக முழுமையான பெரும்பான்மையை இழந்தது. எல்லாத் தேர்தல் மாவட்டங்களிலும் மொத்த வாக்குகளின் விகிதாசாரத்தில் பெற்ற வாக்குகளின் தொகை குறைந்துவிட்டது. 2 வருட ஆட்சியின் பின்னர் மோசமான தேர்தல் தோல்விக்கு ஐதேகவை ரணில் விக்கிரமசிங்க இட்டுச்சென்றார். 17 ஆண்டு ஐதேக ஆட்சிக்குப்பின் ஏற்பட்ட பின்னடைவைவிட இது மோசமான தேர்தல் தோல்வியாகும்.

☞ வெற்றியைத்தடுக்குமா. பொருளாதாரக் கொள்கை ஆய்வுக்கான நிலையம், வாஷிங்டன் டி.சி.; 125க்கும் அதிகமான தொழிற்சங்கங்கள், அரசுசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள், மத அமைப்புகள், ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில், சமூக அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட விமர்சனம். இயற்கை வளப் பாதுகாப்புக்கான கூட்டணி, மனித உரிமைகள் ஆகியவற்றின் அறிக்கையைப் பார்க்க.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இறுதிக் குறிப்புகள்

இருதசாப்தங்கள் நீடித்த யுத்தத்தால் இலங்கை சிதறுண்ட தேசமாயிற்று. ஆயினும், திறந்த பொருளாதாரத்தால் உலக முதலாளித்துவத்துடன் உறுதியான பிணைப்பை ஏற்படுத்திக்கொண்டது.

எங்கே உலக முதலாளித்துவம் இயங்குகின்றது என்ற தர்க்கம் குறித்து டஃப்பீல்ட் விவரிக்கும் காட்சிகளை ஒத்த தன்மையை நாடு தாங்கி நிற்கின்றது. நாட்டின் ஒரு பகுதி உலக முதலாளித்துவத்துடன் பிணைந்துள்ளது.[24] மற்றையது உள்நாட்டு யுத்தத்தாலும் அதனால் ஏற்பட்ட சமூக, பொருளாதார விளைவுகளைக் கொண்டிருந்ததாகவும் காணப்படுகிறது. இது ஆயுதக்குழுவொன்றின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த ஆயுதக் குழுவானது பல்வேறு வழிகளில் உலக முறைமைகளுடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறது.

புத்தாயிரமாம் ஆண்டின் முதல் இரண்டு வருடங்களும் யுத்தம் உக்கிரமடைந்த காலப்பகுதியாகவும் தாராள முதலாளித்துவ நிகழ்ச்சித் திட்டத்தைப் பலவீனப்படுத்துவதாகவும் இருந்தது. 2001இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை ஆளும் வர்க்கம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான நிர்ப்பந்தத்தை வலிந்து ஏற்படுத்தியது. நெருக்கடி மிக மோசமான நிலையில் இருந்ததால் ஆளும்வர்க்கம் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க ஆயத்தமாக இருந்ததுடன் நாட்டின் வெவ்வேறு பகுதிகளை இரு இராணுவங்களின் கட்டுப்பாட்டில் இருப்பதை ஏற்றுக்கொண்டு யுத்தநிறுத்த உடன் படிக்கையில் கையெழுத்திட்டுப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது.

விடுதலைப்புலிகளின் நோக்கங்களாக வடகிழக்கு மற்றும் கடல் பிராந்தியத்தில் தமது கட்டுப்பாட்டை விரிவுபடுத்தல், அது கட்டுப் பாட்டுப் பகுதிகளில் (விசேடமாக யாழ்ப்பாணக் குடாநாடு) செயல் படுதல், சர்வதேசரீதியான அங்கீகாரத்தைப் பெறுதல், புனர்வாழ்வு நோக்கங்களுக்காக வட, கிழக்குக்கான வளங்களைத் தமது கட்டுப் பாட்டின் கீழ் வைத்திருத்தல் என்பன காணப்படுகின்றன.

2002 பிப்ரவரியில் கையெழுத்திடப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை யுடன் சமாதான நடவடிக்கைகள் ஆரம்பமாயின. பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியின் ஒன்றிணைந்த நிகழ்ச்சித் திட்டமாக இது வகைப் படுத்தப்படுகின்றது. நோக்கங்கள் இரட்டைத்தன்மை வாய்ந்தவை யாகும். புலிகளுடனான உடன்படிக்கை மூலம் ஸ்திரத் தன்மையையும்

24. பார்க்க: மார்க் டஃப்பீல்ட், 2001, குளோபல் கவன்னன்ஸ் அண்ட் நியூ வார்ஸ், இசட் புக்ஸ், லண்டன். இந்நூலில் பனிப்போர் முரண்பாடு, பாதுகாப்பு பிரச்சினை மற்றும் உலக முதலாளித்துவத்துக்குமுள்ள இணைவை நுட்பமான பார்வையால் வழங்குகிறார்.



பாதுகாப்பையும் ஏற்படுத்தல் மற்றும் விரிவான பொருளாதார மறுசீரமைப்புத் திட்டம் என்பவை இவையாகும்.

இந்த இரு விடயங்களிலும் உதவி வழங்கும் நாடுகளால் வழிநடத்தப் பட்ட சர்வதேசச் சமூகம் முக்கியமான அரசியல் காய் நகர்த்துபவராக இருந்தது. இரு விடயங்கள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்திற்கு உதவி வழங்குவோரிடமிருந்தும் வலுவான ஆதரவு இருந்தது. சிவில் சமூக அமைப்புகளுக்கு உதவி வழங்கும் சமூகம் ஆதரவளித்தது. வர்த்தக நலன்களில் ஆர்வம் கொண்டோர் ஸ்திரத்தன்மை குறித்து அக்கறை கொண்டிருந்தனர். அதனால் அவர்களின் ஒன்று சேர்க்கும் உடன்படிக் கைகள் தொடர்ந்தன. கணிசமான நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் சமாதான நடவடிக்கையில் முக்கியப் பாத்திரங்களாக விளங்கின. நோர்வே மத்தியஸ்தராக இருந்தது. அதேசமயம் ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் என்பன இணைத் தலைமை வகித்தன. இவர்கள் யாவருமே பொருளாதாரச் சீர்திருத்தத்திற்கும் அதற்கும் அப்பால் சமாதான நடவடிக்கைகளுக்கும் பலவிதமான ஆதரவை வழங்கினர்.

எவ்வாறாயினும், இந்தப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது விடுதலைப்புலிகளுடன் உறுதியான முறையில் நடவடிக்கை களை மேற்கொள்ள உதவும் என்றும் தாராளச் சந்தை முறைமைக்கு அமையப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் சமாதானம், அபிவிருத்தி ஆகிய இரண்டிலும் எதனையும் வழங்க முடியவில்லை. இதில் பாரிய குறைபாடாக இருந்தது என்ன வென்றால், தாராள முதலாளித்துவக் கொள்கைகளின் சமூகமட்ட முரண்பாடுகளை முழுமையாக அலட்சியப்படுத்திய விடயமேயாகும். விசேடமாகப் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் மத்தியிலிருந்த சமூக முரண்பாடுகளைப் புறக்கணித்தமையே பெரிய குறைபாடாகும். ஜனத்தொகையில் பெரும்பான்மையானோர் எதிர்நோக்கிய சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை அலட்சியப்படுத்திவிட்டுப் புலிகளுடன் உடன்பாடு மேற்கொள்ள முயற்சித்தமையே தோல்வி ஏற்பட்டதற்கான காரணமென்பதை இது புலப்படுத்துகின்றது. நீதியான சமாதானத்தை நோக்கி இலங்கை நகர வேண்டுமானால் தாராளவாத அடிப்படைத் தன்மைகள் குறித்துக் கலந்தாராய வேண்டிய தேவை இருக்கிறது.

•



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

10

# சிவில் சமூகமும் சமாதானச் செயன்முறைகளும்

சுமனசிறி லியனகே

அடையாளத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட உக்கிரமான மோதல்களால் நாசமடைந்திருக்கும் நாடுகளில் சமாதானத்தைக் கட்டியெழுப்ப சிவில் சமூகத்தால் பங்களிப்பை நல்க முடியும் என அதிகளவில் அழுத்தி உரைக்கப்படுவது இருபிரதான நியாயவாதங்களின் அடிப்படையில் எழுந்ததொன்றாகும்.

முதலாவதாக கொடூரமான மோதல்களின் நிலைமாற்றத்திற்கு, ஜனநாயகரீதியான நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகளின் அழுத்தம் அவசியமானது என்று அடிக்கடி விவாதிக்கப்பட்டிருக்கின்றது. இது, ஜனநாயகரீதியிலான தீர்மானம் இயற்றும் நடைமுறைகள் உள்ளடங்கலாக அதிகாரப் பகிர்வின் பல்வேறு வழிகளினூடாகச் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் தமது சுயநிர்ணயத்திற்கான உரிமைகளைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிப்பதாகும். அரசு நிறுவனங்களின் ஜனநாயக மீள்கட்டமைப்பின் பயனாக இது விளைந்தது என்றபோதிலும், அரசு மறுசீரமைப்புகள் முறையாக அமுல்படுத்தப்படுகின்றன என்பதையும் செயல்படுத்தப்படுகின்றன என்பதையும், பல்தரப்பட்ட அரசு சாரா செயல்பாட்டாளர்கள் உறுதிப்படுத்துவதில் விழிப்பாக இருக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சூத்திரத்தில், உயிரோட்டமான ஜனநாயகத்திற்கு உயிரோட்டமானதும் நன்கு அபிவிருத்தியடைந்ததுமான சிவில் சமூகம் அவசியமானது என்பது பெரும்பாலும் வெளிப்படையாகிறது.

ஆகவே, சமாதானம், ஜனநாயகம், சிவில் சமூகம் என்பவற்றுக்கிடையிலான தொடர்புத்தன்மை சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் சிவில் சமூகமானது ஆக்கபூர்வமானதும் முக்கியமானதுமான பங்களிப்பை வழங்க முடியுமென்ற வாதத்தை ஒரேமாதிரியாக நியாயப்படுத்துகின்றது.



இரண்டாவதாக, மோதல்களின் தன்மை மாற்றம் பெறும் விடயமானது அதிகளவு பரிமாணங்களைக் கொண்ட நடவடிக்கையாக உள்ளது. இது முரண்பாட்டுக் கட்டமைப்புகளில் ஏற்படுகின்ற தன்மைரீதியான மாற்றம், நடத்தை, போக்குகள் என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

இதனடிப்படையில் மோதல் என்ற தன்மை மாற்றம் பெறுவதற்கான பல விடயங்களானவை அரசாங்கத்தைச் சாராதோரின் பரந்துபட்ட செயல்பாடுகள், வரையறைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இருப்பதுடன் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் உள்ளன. அரசாங்கத்தைச் சார்ந்திராத இந்தப் பாத்திரங்களின் செயல்பாடுகளே பொதுவாக சிவில் சமூகத்தின் பணியாக வரையறைக்குட்படுத்தப்படுகிறது.

நாம், சிவில் சமூகமானது குறித்த அந்தஸ்துடையதென விசேடப்படுத்திக் கூறினாலும் அதற்குள் வினயமற்ற பாத்திரமும் இருந்துகொண்டு செயல்படுவதைக் கவனத்திற்கு எடுத்தால் மேற்குறிப்பிட்ட தர்க்கமானது மிகச் சுலபமாகத் தலைகீழானதாகிவிடும்.

சிவில் சமூகத்திலுள்ள இந்த முரண்பாட்டுத்தனமான பிரிவானது ஜனநாயக நடவடிக்கைகளை மூழ்கடிக்கச் செய்வதுடன் முரண்பாட்டிற்கான கட்டமைப்புகள், நடத்தைகள், போக்குகள் என்பனவற்றுக்கு வலுவூட்டுவதாகவும் அமைந்துவிடும்.

தேசியவாதம் என்பது அரசாங்கத்துக்கு மட்டும் உரியதொன்றல்ல என்பதும் அது சிவில் சமூகத்தினால் உணரப்பட வேண்டியதொன்று என்பதும் மனத்தில்கொள்ள வேண்டிய விடயமாகும். கடந்த இரு தசாப்தங்களும் உலகின் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற அடையாளத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக இயக்கங்களின் செயல்பாட்டுக்கு இவை சாட்சியமாக உள்ளன. சிவில் சமூகம் மீதான அழுத்தங்கள் பின்காலனித்துவச் சமூகங்களின் மீதே அதிகளவில் ஏற்பட்டுள்ளன. சமாதானத்தைக் கட்டியெழுப்புதலில் சிவில் சமூகத்தால் ஆக்கபூர்வமானதும் சாதகமானதுமான பங்களிப்பை நல்க முடியும் என்பதைக் கோட்பாட்டுரீதியாக நிராகரிக்க முடியாது.

சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகள் அரசாங்கத்தின் வரையறைக்கு அப்பால் மட்டுமன்றிச் சிவில் சமூகத்தின் வரம்பெல்லையைக் கடந்தும் செல்ல வேண்டும். இந்த எண்ணப்பாடானது மஹ்மூத் மம்தானி (1996), பார்த்தா சட்டர்ஜி (2004) ஆகியோரின் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதாகத் தோன்றுகின்றது. அத்துடன் பின்காலனித்துவத்துடன் தொடர்புபட்டதான அரசியலை விரிவாக விளங்கிப் புரிந்துகொள்வதற்கு இது மிகவும் உதவுமென நான் நம்புகிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இக்கட்டுரை இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் சிவில் சமூகத்தின் பங்களிப்பின் தன்மையை ஆராய்ந்துகொள்வதாக அமையும். இந்த ஆய்வானது விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் 2002 பிப்ரவரியில் கையெழுத்திடப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கைக்குப் (சிஎஃப்ஏ) பின்னரான 48 மாதகாலப் பகுதியை விசேடமாகக் கவனத்தில் எடுத்து ஆராயப்பட்டதாகும்[1].

யுத்தநிறுத்த மீறல்கள் இடம்பெற்றபோதும் இருதரப்பினரும் கடுமையான பகிரங்க மோதலில் இதுவரை ஈடுபடவில்லை. இந்த வரையறைக்குள் பார்த்தால் யுத்தநிறுத்தமானது மிக நீண்டகாலத்திற்கு கடைப்பிடிக்கப்படுவதென்பது மட்டுமல்லாமல் மிகவும் வெற்றிகரமாக அமைந்துள்ளது என்றும் கூற முடியும். ஆயினும், மிக அண்மைக் காலத்தில் இருதரப்பினரும் பேச்சுவார்த்தை மூலமான இணக்கப் பாட்டுக்கு வருவதற்கான அறிகுறி தென்படவில்லை. இந்தக் கால கட்டத்தைப் போருமற்ற, சமாதானமுமில்லாத ஒன்று என்று பல விமர்சகர்கள் வர்ணித்திருக்கின்றனர்.

2003 ஏப்ரலில் பேச்சுவார்த்தையிலிருந்து விடுதலைப்புலிகள் விலகிக்கொண்டபின் நடவடிக்கைகள் பலவீனமடைந்ததுடன் தாழ்ந்த மட்டத்திலான மோதல் நிலைமையாக மாற்றம் அடைந்தது. இது பல காரணிகளுடன் இணைந்ததாக இருக்கலாம். ஆனால், இந்த நடவடிக் கைகள் உள்மட்டத்தில் பாதிக்கப்பட்டமை சமாதான நடவடிக்கைகளை ஆழமாகவும் விரிவாகவும் மேற்கொள்ள முடியாத நிலைமையானது பிரதானமான காரணியாகத் தென்படுகிறது (லியனகே - 2003). நோர்வேயின் மத்தியஸ்தத்துக்கான இஸ்ரேல்- பாலஸ்தீனச் சமாதான உடன்படிக்கை தொடர்பான கல்துங்கின் விவரணம் (2000) தவறான நடவடிக்கைகளால் தவறான பெறுபேறு - இது தற்போதைய இலங்கை யின் நடவடிக்கைகளுக்கும் பொருந்தக்கூடியது - என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இந்தக் கட்டுரையின் பிரதான நோக்கமானது இலங்கை யின் சிவில் சமூக அமைப்புகள் (சிஎஸ்ஓ) ஆற்றிய பங்களிப்பை மீளாய்வு செய்வதாகும்.

இந்தக் கட்டுரையில் பின்வரும் விடயம் குறித்து நான் கூற விருக் கின்றேன்: சிவில் சமூக அமைப்புகள் சமாதான நடவடிக்கைகளுக்குப் புதிய உத்வேகத்தை அளிக்கும் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கி யுள்ளனவா? சமாதான நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு சிவில் சமூக அமைப்புகள் எத்தகைய செயல்பாட்டை மேற்கொண்டன. மோதலில் சம்பந்தப்பட்ட தரப்பினரின் தீர்மானத்திற்கமைய சமாதான நடவடிக்கைகளில் முன்னேற்றமும் பின்னடைவும் ஏற்பட்ட வகை களில் அவர்கள் சென்ற பாதையிலேயே சிவில் சமூக அமைப்புகளும் செயல்பட்டு இரண்டாம்படி நிலையிலான பங்களிப்பை வழங்கி யிருந்தனவா? சமுதாயத்தில் பரந்துபட்ட பிரிவினருக்குச் சிவில் சமூக அமைப்புகளின் பணி விரிவுபடுத்தப்பட்டதா?

1. விடுதலைப்புலிகளின் ஒருதலைப்பட்ச மோதல் தவிர்ப்புப் பிரகடனத்திற்கு அரசாங்கம் சாதகமாகப் பதிலளித்துள்ளது. தொடர்ந்து 2001 டிசம்பர் 24இல் நடவடிக்கைகள் உண்மையில் ஆரம்பமாயின. சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இடையிலான 2 மாதகால முறைசாராப் புரிந்துணர்வை வளர்ந்த, திறந்த உடன்படிக்கை ஒழுங்குபடுத்தியது.



இந்தக் கட்டுரை வெளிப்படுத்த விரும்புவது இத்தகைய வினாக் களையே ஆகும்.

சிவில் சமூக அமைப்புகளின் சமாதான நடவடிக்கைகள் தொடர்பான தாக்கங்களை மதிப்பீடு செய்வதில் பல நெருக்கடிகள் உள்ளன. ஹாலிமே யும் குட்கான்ட்டும் (ஓர்ஜுலா 2004இல் மேற்கொள்ளப்பட்ட) சிவில் சமூக அமைப்புகளின் சமாதானப் பணியை மதிப்பிடுவது தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்துதல் என்ற வார்த்தைப் பிரயோகம் பொருத்த மற்றது என்ற விவாதத்தை முன்வைத்துள்ளனர்.

பதிலாக, சமாதானம் தொடர்பாக அவற்றின் செல்வாக்கு, அவற்றின் செயல்பாட்டின் ஊடாக எவ்வாறு அமைந்திருந்தது என்பதைப் பார்ப்பது அதிகளவு முக்கியமானது என்ற கருத்தை அவர்கள் முன்வைத்தனர்.

இந்தக் கட்டுரையில் சிவில் சமூக அமைப்புகளின் பங்களிப்பின் எண்ணிக்கை *(குவான்டிடி)* மற்றும் தரம் *(குவாலிடி)* பற்றிய அதிகரிப்பு அல்லது வீழ்ச்சி குறித்த விபரத்தைக் கணிக்கும் முயற்சியை மேற்கொள்ள வில்லை.[2] இலங்கையின் சிவில் சமூக அமைப்புகள் மேற்குறிப்பிட்ட வினாக்களின் அடிப்படையில் எவ்விதம் செயல்பட்டன என்பன குறித்தே இக்கட்டுரையின் நான் வரையறைப்படுத்தியுள்ளேன்.

இந்தக் கட்டுரையில் சமாதானத்தைக் கட்டியெழுப்ப சிவில் சமூகத்தால் பங்களிப்பை நல்க முடியும் என்பது பற்றிய பிரதான விடயங்கள் பிரிவு Iஇல் குறிப்பிடப்பட்டுள்ளன. பிரிவு IIஇல் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் சிவில் சமூகத்தின் செயல் பாடுகள் சுருக்கமாகக் கலந்தாராயப்பட்டுள்ளன. இலங்கையில் சிவில் சமூக அமைப்புகளின் மோசமான செயல்பாடுகள் பற்றியத் தகவல் பிரிவு IIIஇல் அடங்கியுள்ளன. இறுதிப் பகுதியில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகள் சிவில் சமூகத்தின் வரம்பு எல்லைக்கு அப்பால் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் அதிகளவு உத்வேகத்துடன் அமையவேண்டுமெனவும் வாதமொன்றை நான் முன்வைத்திருக்கின்றேன்.

2. இந்த மாதிரியான முயற்சியைப் பார்க்க, ஓர்ஜுலா, 2004.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# I

கோஹன் மற்றும் ஆரட்டோ ஆகியோர் தெரிவித்திருந்த செயல்பாட்டு வரைவிலக்கணத்துடன் இதை நான் ஆரம்பிக்கின்றேன். அவர்கள் முன்வைத்தவை வருமாறு:

> சிவில் சமூகமானது நெருங்கிய தொடர்பு வட்டம் (விசேடமான குடும்பம்), சங்கங்களின் வட்டம் (விசேடமான தொண்டர் அமைப்புகள்), சமூக இயக்கங்கள், பொதுமக்கள் தொடர்பாடல் வடிவங்கள் என்பவற்றுக்கும் அப்பாற்பட்ட உள்ளடக்கத்தைக் கொண்ட அரசாங்கம் மற்றும் பொருளாதாரத் திற்கும் இடையிலான சமூகத் தொடர்பாடலைக் கொண்ட படிநிலை என்பதை நாம் புரிந்துகொள்கின்றோம். நவீன சமூகமானது சுயவிதி முறைகள் மற்றும் சுய அணிதிரட்டல் என்பவற்றினூடாக உருவாக்கப்பட்டதாகும். இது சட்டங்களினூடாக நிறுவனமயப்படுத்தப்பட்டதும் பொதுத்தன்மைக்கு உட்படுத்தப்பட்டதுமாகும். விசேடமாக இது சமூக வித்தியாசங்களுக் கிடையிலான ஸ்திரத்தன்மை, சிறந்த சிந்தனைகள், உணர்வுகள் தொடர்பான உரிமைகளை உள்ளடக்கியதாகும். அதேவேளை சுய ஆக்கம் மற்றும் நிறுவனமயப்படுத்தப்பட்ட பரிமாணங்கள் என்பன வெவ்வேறாக அமைந்திருக்க முடியும். ஆயினும் நீண்டகால அடிப்படையில் சுயாதீனமான செயல்பாடும் நிறுவனமயமாக்கலும் சிவில் சமூகத்தின் மீள் உற்பத்திக்கு இன்றியமையாதவையாகும் (1992:9).

இந்த நடைமுறை வரைவிலக்கணத்துக்கு அவர்கள் மேலும் தகைமை சேர்த்துள்ளனர். அதாவது, சமூக வாழ்வின் சில வடிவங்கள் பொருளா தாரம் மற்றும் அரசாங்கத்துடன் நேரடியாகத் தொடர்பு என்பவை விலக்கிவிடக் கூடியவை என்று அவர்கள் கூறியுள்ளனர்:

> கட்சிகளின் அரசியல் சமூகம், அரசியல் அமைப்புகள், அரசியல் பொது அமைப்புகள் (குறிப்பாகப் பாராளுமன்றங்கள்) மற்றும் உற்பத்தி, விநியோகம் என்பவற்றை உள்ளடக்கிய அமைப்புகள், சாதாரண நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புகள், பங்குடமை ஆகியவற்றை உள்ளடக்கிய பொருளாதாரச் சமூகம் ஆகிய இரண்டிலிருந்தும் சிவில் சமூகத்தை வேறுபடுத்திப் பார்ப்பது இன்றியமையாததும் பொருள் மிக்கதுமாகும்.
>
> (அவர்கள்) அமைப்புகள் மற்றும் தொடர்பாடல் என்பவற்றின் சில தன்மை களைப் பகிர்ந்துகொள்கின்றனர். நிறுவனமயப்படுத்தப்பட்ட உரிமைகள் ஊடாக (விசேடமாக அரசியல், சொத்து உரிமைகள்) தொடர்ச்சியாக நவீன சிவில் சமூகத்தைப் பாதுகாக்கும் உரிமைகளின் கட்டுக்கோப்பு மூலம் இதனை மேற்கொள்கின்றனர். ஆனால் அரசியல், பொருளாதார சமூகத்தைச் சேர்ந்த பாத்திரங்கள், அரச அதிகாரம், பொருளாதார உற்பத்தி ஆகியவற்றுடன் நேரடியாக சம்பந்தப்பட்டவர்களாகும். அத்துடன் அவற்றைக் கட்டுப்படுத்த, நிர்வகிக்க முயல்பவர்களாக உள்ளனர். அவர்களால் சிவில் சமூகத்தின் குணாம்சமான கோட்பாட்டுரீதியான ஒருங்கிணைப்பு வெளிப்படையான




> தொடர்பாடல் என்ற தன்மைகளுக்குட்பட்டு இரண்டாம்பட்ச உபாயம் மற்றும் கருவியாக்கப்படும் தன்மை என்பவற்றைத் தாங்கிக்கொள்ள முடியாது (மேலது).

கோஹன், ஆரட்டோ ஆகியோரின் வார்த்தைகளில் சிவில் சமூகமானது நான்கு பிரதான உள்ளடக்கத்தைக் கொண்ட சமூகப் பரப்பெல்லையாகும்.

1. பன்மைத்தன்மை: குடும்பங்கள், உத்தியோகப்பற்றற்ற குழுக்கள், தொண்டர் அமைப்புகள்.
2. பிரபல்யம்: கலாசார, தொடர்பாடல் நிறுவனங்கள்.
3. தனிமை: தனிநபரின் சுயவிருத்தி, மனவிருப்பத் தெரிவு என்பன ஆதிக்கம் செலுத்துதல்.
4. சட்டபூர்வத்தன்மை: பொதுவான சட்டங்கள் மற்றும் அடிப்படை உரிமைகள் என்பன பன்மைத்தன்மை, தனிமை, பிரபல்யம் என்பவற்றை உள்ளடக்கியவையாக மீளவடிவமைக்க வேண்டிய தேவை உள்ளது. ஆகக்குறைந்தது அரசிலும் பொருளாதாரத்திலும் மறைமுகமாகவேனும் இது மீளவடிவமைக்கப்பட வேண்டும் (மேலது 346).

அரசிலிருந்து சிவில் சமூகத்தைத் தனித்துவமானதாக வேறுபடுத்திக் காட்டும் மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணமானது சிவில் சமூகம் அரசியல் சார்புடையதல்ல என்பதைச் சுட்டிக்காட்டுவதல்ல. உண்மை யில் இதன் அனைத்து உள்ளடக்கங்களுமே வேறுபட்ட அளவுகளுடைய அரசியல் தன்மை சார்ந்தவற்றையே வெளிப்படுத்துகின்றன. சமூக உருவாக்கத்தில் பணமும் அதிகாரமும் செல்வாக்கு செலுத்துவன

**படம் 1 அரசப் பொருளாதாரம் மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றுக்கிடையிலான இடைவெட்டின் மாதிரி**






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதும் சிவில் சமூகத்தினதும் இதன் நிறுவனங்கள், உரையாடல்கள் என்பன அரசாங்கத்தாலும் பொருளாதாரத்தாலும் அதிகளவிற்குச் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதும் அவதானிக்கப்பட வேண்டியவையாகும். ஹாபர்மாஸ் (1996) இந்தத் தன்மையை வாழ்வாதாரக் காலனித்துவமாக விவரிக்கின்றார். இதனை சிவில் சமூகத்திலுள்ள நாகரிகமற்ற தன்மை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த மூன்று கோளங்களிடையிலான தொடர்புத் தன்மை படம் 1இல் காட்டப்பட்டுள்ளது.

உள்நாட்டு ஆயுத மோதல்களிலிருந்து மாற்றத்தை ஏற்படுத்தவும் தீர்வுகாணவும் சிவில் சமூகத்தால் முக்கியமான பங்களிப்பைச் செலுத்த முடியுமென்பது கடந்த இரண்டு தசாப்தகாலமாக வலியுறுத்தப்பட்டு வந்தது. இதற்குப் பல காரணங்கள் உண்டு.

நீண்டகால சமூக மோதலுக்கான அஸாரின் கோட்பாட்டை (அஸார் 1990) அடிப்படையாகக் கொண்ட வழிகாட்டுதல்கள், அரசாங்கத் தலையீட்டின் எல்லைகளையும் பல்தரப்பட்ட மட்டத்தில் அரசுசார்பற்ற பாத்திரங்களின் தலையீடுகளின் தேவை குறித்தும் குறிப்பாகச் சுட்டிக் காட்டுகின்றன.

சிவில் சமூகத்தின் செயல்பாடுகள் மீளத் தோற்றம் பெற்றமை, கிழக்கு ஐரோப்பாவில் ஒரே தலைவரின் ஒரே கட்சிசார்ந்த சர்வாதிகார ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்தின. அத்துடன் தென்னாப்பிரிக்காவின் சிவில் சமூக அமைப்புகளின் அனுகூலமான பங்களிப்பு நிறவெறி ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருவதற்குப் பங்களிப்பை நல்கியது. இவையாவும் இந்த மாற்றங்களுக்கு உதவியிருப்பதுடன் இந்த விடயமானது பல்மட்டத்தில் வளர்ச்சி பெற்றதற்குச் சான்றாகவும் அமைந்திருக்கிறது (லெடாரா 1977 ஓர்ஜுலா, 2004).

மோதலிலிருந்தும் மாற்றம்பெறும் விடயத்தில் சமாதானத்தைக் கட்டியெழுப்ப சிவில் சமூகம் ஆற்றிவரும் பங்களிப்பானது மிக உயர்ந்த மட்டத்தில் இடம்பெற்று வருகின்றது. எவ்வாறாயினும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் சிவில் சமூகம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்க முடியும் என்பது குறித்துப் பொதுவான கருத்துடன்பாடு காணப்படுகின்றது. சிவில் சமூக சமாதானப் பணியின் செயல்பாடுகள்:

1. முக்கியப் பாத்திரங்களுக்கு அழுத்தத்தைக் கொடுத்தல்.
2. சமாதானத்திற்கான ஆதரவை உருவாக்குதலும் சாதாரண மக்கள் மத்தியில் சமாதான உறவைக் கட்டியெழுப்புதலும்.
3. சாதாரண மக்களுக்கும் முக்கியப் பாத்திரங்களுக்கும் இடையில் இடைத்தூதுவர்களாக செயல்படுதல் (ஓர்ஜுலா, 2004, பக்.53, 55).



**அட்டவணை 1: சிவில் சமூக அமைப்புகளின் முக்கியச் சமாதான நடவடிக்கைகள் – டிசம்பர் 2001–டிசம்பர் 2002**

| வகை | அனுமானங்கள் | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1. பிரதான பாத்திரங்கள் மீதான அழுத்தத்தைக் கொடுத்தல். | 1. இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் முக்கியமான பாத்திரங்கள்.<br>2. மோதலின் இரு தரப்புத் தன்மை மாற்றமடையாமல் இருக்கலாம்.<br>3. அழுத்தத்தைவிட ஆதரவுதான் தேவை. | 1. பத்திரிகை அறிக்கைகளை வெளியிடுதலும் கட்டுரைகளை எழுதுவதும்.<br>2. அரசியல் தலைவர்கள் மற்றும் சர்வதேச சமூகத்தை இலக்காக கொண்ட சிபார்சுப் பணி.<br>3. தெற்கிலுள்ள உள்ளூர்மட்ட அரசியல்வாதிகளுக்கான மோதல் தீர்வுப் பயிற்சிப் பட்டறை.<br>4. ஆராய்ச்சி / கற்கைகள்<br>5. முக்கியமான தலைவர்களுக்கு சர்வதேசப் பயணத்தை ஏற்பாடு செய்து கொடுத்தல். |
| 2. சமாதானத் திற்கான ஆதரவைக் கட்டியெழுப் புதலும் இனங்களுக்கு இடையிலான உறவுகளைப் பேணுதலும். | 1. சமாதான உடன் படிக்கைகளை அமல்படுத்தப் பொது மக்களின் ஆதரவு அவசியம்.<br>2. சிங்களப் பகுதி களில் அதிகளவு பணிகள் இருக்க வேண்டும் என்பது. | 1. மோதல் தீர்வும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும்பயிற்சிப்பட்டறை<br>2. பயணப் பரிமாற்றம்<br>3. சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவான ஊடகப் பிரச்சாரம்<br>4. சமாதானம் மற்றும் இன நல்லுறவை வளர்ப்பதற்கான கலை, கலாசார நடவடிக்கைகள்.<br>5. சமாதானப் பாதயாத்திரைகள், ஆர்ப்பாட்டம் போன்றவை.<br>6. சமாதானப் பூஜைகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள்.<br>7. சமாதானத்தையும் அபிவிருத்தியை யும் ஒருங்கிணைத்தல்.<br>8. நாசமாக்குவோருக்கு எதிரான எதிர் நடவடிக்கைகளைமேற்கொள்ளுதல்.<br>9. கட்டுரை, கவிதை, சித்திரப் போட்டிகள். |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | |
|---|---|---|
| 3. முக்கியப் பாத்திரங் களுக்கும் மக்களுக்கும் இடையில் இடை நடுவர். (தடம் 1ஐ தடம் 3 உடன் இணைத்தல்) | 1.தலைவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் தொடர்பாடல் குறைவு<br>2. நடவடிக்கைகள் மேலிருந்து கீழாக அமைவது. | 1. ஒஸ்லோ உடன்படிக்கை மற்றும் சமஷ்டி தொடர்பான பயிற்சிப்பட்டறை.<br>2. சமாதானத்தின் அனுகூலங்கள் தொடர்பாக விளக்கமளித்தல்.<br>3. வாக்கெடுப்பு, மதிப்பீடு, ஆராய்வை மேற்கொள்ளல்.<br>4. ஊடகப் பிரசாரம்<br>5. உள்ளூர்மட்ட அரசியல் தலை வர்கள், பத்திரிகையாளர் களுக்கு மோதல் தீர்வுத் தொடர்பான பயிற்சிப் பட்டறை போன்றவை. |
| 4. முன்னெச்சரிக்கை முறைமை, முன்கூட்டித் தலையீடு என்பனவற்றை வளர்த்தெடுத்தல். | 1. சடுதியாக மோதல்கள், கலவரங்கள் வெடிப்பது. | 1. முன்கூட்டியே எச்சரிக்கை முறைமை<br>2. நிலைமையைக் கண்காணித்தல்.<br>3. உள்ளூர்மட்டத்தில் மோதல் தீர்வு தொடர்பான நடைமுறை களை மேம்படுத்துதல்.<br>4. அபிப்பிராய வாக்கெடுப்பு மற்றும் மதிப்பீடு. |

## II

கடந்த 48 மாதகாலத்தில் இலங்கை சிவில் சமூக அமைப்புகள் மேற் கொண்ட சமாதான நடவடிக்கைகள் அட்டவணை 1இல் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

ஓர்ஜுலாவின் பரந்துபட்ட ஆய்வானது (2004) பல வருடகால களநிலைப் பணியை அடிப்படையாகக் கொண்டது. வகை 1.3 இல் சிவில் சமூகத்தின் பணிகள் பலதரப்பட்ட காரணங்களால் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பதை இந்த ஆய்வு தெளிவாக விவரணப்படுத்துகின்றது. வகை 4 ஆனது இலங்கையின் சிவில் சமூக அமைப்புகளுக்கு மிகவும் புதியதொன்றாகும். சகவாழ்வு மன்றம் மற்றும் மாற்றுக் கொள்கைக்கான நிலையம் ஆகியவை மட்டுமே இந்த மாதிரியான பணிகளில் ஈடுபட்டுள்ளன.

சிவில் சமூக அமைப்புகளின் பணிகள் முக்கியமான ஆட்கள் அல்லது அதிகளவு மக்களை மையப்படுத்தியதாக அமையக்கூடும். அதே வேளை ஓர்ஜுலாவின் வகை 1இன் நடவடிக்கைகள் முக்கியமான



நபர்களை இலக்குவைத்ததாகவும் வகை 2, 3 சாதாரண மக்களை இலக்கு வைத்ததாகவும் உள்ளது. சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக் கைகள் அதிக தொகையானோரை இலக்குவைத்ததாக இருக்கின்றதா என்பது தொடர்பான பெறுபேற்றை மதிப்பிடுதல் கடினமான விடயமாக அமைந்தாலும் முக்கியமான ஆட்களை நோக்கிய இலக்குக் கொண்ட தாகச் செயல்பாடுகளின் பெறுபேறு இருக்கின்றதா என்பதை மிகச் சுலபமாக மதிப்பிட்டுவிட முடியும். இந்த நடவடிக்கைகளில் பங்கு பெற்றோரின் நடத்தையைப் பார்த்தே இந்தக் கணிப்பீட்டை மேற்கொள்ள முடியும். தேசிய சமாதானப் பேரவையின் நிகழ்ச்சித் திட்டம் பாராளுமன்ற உறுப்பினர்களை இலக்கு வைத்ததாக இருப்பதாகக் குறிப்பிடப்படு வதுடன் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பயன்பாடு தொடர்பாக ஓர்ஜுலா வுக்கு ஐயப்பாடும் உள்ளது.

பங்குபெறுவோரின் வாக்களிப்புத் தன்மை, பொது அறிக்கைகள் போர், மற்றும் இன விவகாரம் தொடர்பான பல விடயங்களில் அவர்கள் எடுத்திருக்கும் நிலைப்பாடு என்பன தேசிய சமாதானப் பேரவையின் நிகழ்ச்சித்திட்டத்தில் அவர்கள் பெற்ற பயிற்சி, அனுபவம் என்ப வற்றைவிட அவர்கள் சார்ந்த அரசியல் கட்சியின் தீர்மானத்திற்கு அவர்களின் செயல்பாடு கட்டுப்பட்டதாக இருப்பதைக் காட்டுகின்றது.

தேசிய சமாதானப் பேரவை நிகழ்ச்சித் திட்டங்களிலும் ஏனைய அமைப்புகள் நடத்துகின்ற நிகழ்ச்சித் திட்டங்களிலும் கிரமமாகக் கலந்துகொள்ளும் அரசியல்வாதி ஒருவர் ஜனதா விமுக்தி பெரமுன (ஜேவிபி) ஏற்பாடு செய்திருந்த யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றார். திரும்பவும் பிரதி அமைச்சராக கடல்கோளின் பின்னான பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை ஆதரித்துப் பேசுகின்றவரானார்.

தேசிய சமாதானப் பேரவையின் நிகழ்ச்சித் திட்டமானது செல்வாக்கு மிக்க இளம் அரசியல்வாதிகளுக்கு அறிவூட்டினால் அதன் மூலம் அவர்கள் சார்ந்த கட்சி எடுக்கும் தீர்மானங்களில் அவர்கள் செல்வாக்குச் செலுத்துவார்கள் என்பதாகும். ஆனால், தேசிய சமாதானப் பேரவையின் நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பங்கேற்காத பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில் பங்களிப்பு மற்றும் பொதுவான நிலைப்பாட்டை எடுத்தல் என்பவை தொடர்பாகக் குறிப்பிடத்தக்க வித்தியாசம் காணப்படவில்லை. இது நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டதில் அல்லது தெரிவு நடைமுறையில் பாதிப்பு இருப் பதை அல்லது இரண்டிலுமே குறைபாடு இருப்பதைக் காட்டுகின்றது.

ஒப்பீட்டுரீதியாக இலகுவாக விடயங்கள் சென்றடையக்கூடிய மக்கள் மத்தியிலேயே சமாதான அமைப்புகள் செயல்பாடுகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்கொள்ள விரும்புவதாக அன்டர்சனும் ஒல்சனும் சுட்டிக்காட்டுகின்றனர். ஆரம்பக் கட்டத்தில் இது அழுத்தமுடையதாக இருக்கின்றது. ஏனென்றால், பதற்றமான மோதல் பகுதிகளில் சமாதான நடவடிக்கைகளை ஆரம்பிப்பது கடினம் என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

எவ்வாறெனினும், இலகுவானதற்கு அப்பால் செல்வதற்கு அமைப்புகள் மறுப்பதே கடைசியாக நடைபெறுகின்றது. இந்த மாதிரியான பணியில் தேசிய அளவில் அரசியல்வாதிகளைத் தொடர்புபடுத்தியதாகத் தேசிய சமாதானப் பேரவையின் நிகழ்ச்சித்திட்டம் அமைந்திருப்பது சிறந்த உதாரணமாகும். முற்றுமுழுதாக நிகழ்ச்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டதாலோ அல்லது அமலாக்கப் பரிமாணத்தாலோ இந்தத் தோல்வி ஏற்பட்டதென்பதைத் தவிரக் குறைவானதொன்றுமில்லை.

இலங்கையில் கட்சியின் உயர்தலைமை எடுக்கும் தீர்மானத்தில் மிகச் சொற்ப எண்ணிக்கையானோரே செல்வாக்குச் செலுத்தக்கூடியதாக இருக்கும் விதத்தில் கட்சியின் உட்கட்டமைப்பு உள்ளது. உள்மட்ட ஜனநாயகம் இங்கு இல்லை. தேர்தலுக்கு முந்தைய காலகட்டம் மட்டுமே கட்சியின் தலைமை மற்றும் கொள்கைமீது செல்வாக்கு செலுத்தக்கூடியதாக இருக்கும் காலப்பகுதியாகும். இதற்கு ஆதாரமாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் 1994இற்கு முன்னரான அரசியல் நிகழ்ச்சித்திட்டம், ஐக்கிய தேசிய முன்னணியின் 2001இற்கு முன்னரான நிகழ்ச்சித்திட்டம் என்பன உள்ளன.

அதிக தொகையான மக்களைக் கவனத்திற்கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் ஒப்பீட்டளவில் வெற்றிகரமானதாகவும் செலவு குறைந்ததாகவும் காணப்படுகின்றன.

ஊவா சமூக அபிவிருத்தி நிலையம் 13 அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து 2003இல் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பரீட்சார்த்தத் திட்டத்தை ஆரம்பித்தது. ஜெர்மனி மற்றும் ஐக்கிய ராச்சிய அரசாங்கங்களினால் நிதி உதவி வழங்கப்படும் மோதல் மாற்றத்திற்கான உள்ளூர் முன்முயற்சிகளுக்கான அனுசரணை வழங்கும் முகவர் நிலையம் (எஃப்எல்ஐசிடி) இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு அனுசரணை வழங்கியது. இது ஒரு பரிசோதனையும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதலை சமூக அபிவிருத்தியுடன் ஒருங்கிணைக்கும் முயற்சியுமாகும்.

பல சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் மக்கள் பங்கேற்றனர். இத்திட்டங்கள் வேறுபட்ட இனக்குழுமங்களுக்கிடையில் இணைப்பை ஏற்படுத்துபவையாக இருந்தன. அத்துடன் சமூக மட்டத்திலான சந்திப்புகளில் சமாதானம் தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. இது அதிக பிரபல்யம் பெறும் பயிற்சிப் பட்டறைக் கட்டமைப்பு முறையிலிருந்தும் வேறுபட்டதும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்மட்டத்தில்



உந்துசக்தியை அளிப்பதுமாகும். அத்துடன் இந்த நிகழ்ச்சித்திட்ட அமலாக்கம் படிமுறையாகப் பயிற்றுவிக்கப்பட்ட சமாதான, சமூக அபிவிருத்தி ஊக்குவிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்டது.

கிராம மட்டத்தில் அவர்கள் கலந்துரையாடல்களை ஆரம்பித்தனர். இந்தச் சமாதான ஊக்குவிப்பாளர்களின் உட்பக்கத்தன்மையானது வெளியார் முன்னெடுத்துச் சென்ற நிகழ்ச்சித் திட்டங்களைவிட அதிக அளவுக்கு ஏற்றுக்கொள்ளும் தன்மை வாய்ந்ததாக இருந்தது.

சிலசமயங்களில் நிகழ்ச்சியின் வெற்றியானது இலக்கைக்கொண்ட குழுவினரிலேயே தங்கியிருக்கின்றது. சமூகத்தில் குறைந்தளவுக்கு அந்நியமாக்கப்பட்ட பிரிவினரால் பிரதிநிதித்துவப்படுத்தும் இளைஞர்களை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களைவிட இளம் சிறுவர்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிபெறும் தன்மை காணப்படுகிறது.

மாணவர் சமாதான முகாம்கள் நிகழ்ச்சித் திட்டத்தை மல்ஹோத்ரா, லியனகே (2005) ஆகியோர் ஆராய்ந்தனர். இந்த மாணவர் சமாதான முகாம்கள் நிகழ்ச்சித் திட்டத்தை தேசிய ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிப் பிரிவு (என்ஐபிஎன்) ஏற்பாடு செய்திருந்தது. இதை ஆராய்ந்ததன்படி சமாதான முகாமில் பங்குபற்றிய மாணவர்கள் பிற இனக்குழுக்கள்மீதான பரிவிரக்கம், நட்புறவுப்போக்கு என்பவற்றை விருத்தி செய்துள்ளனர். இந்தச் சமாதான முகாமில் கலந்துகொள்ளாதோரைவிடப் பங்குபற்றிய மாணவர்களிடம் இத்தன்மை காணப்படுகிறது.

அதிகாரப் பங்கீட்டை அறிமுகப்படுத்துவதன் மூலம் காலனித்துவத்திற்குப் பின்னரான அரசாங்கத்தை மீள்கட்டமைப்பதை நோக்கமாகக் கொண்ட நீண்டகால விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் ஒப்பீட்டு ரீதியில் வெற்றியளித்தவையாகக் காணப்படுகின்றன.

அறிவு, மனப்போக்கு, நடைமுறை என்ற ஆய்வு (கேஏபிஎஸ்) சமூகச் சுட்டியால் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சமூகச் சுட்டியானது மாற்றுக்கொள்கை நிலையத்தின் மதிப்பீட்டுப் பிரிவாகும். இதன் மதிப்பீட்டின்படி 2003இல் அதிகாரப்பகிர்வு ஏற்பாட்டுக்கு 44 சதவீதமானோர் ஆதரவளித்தனர். இது 2004இல் 49 சதவீதமாக உயர்ந்தது. சிவில் சமூக அமைப்புகளின் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் பங்களிப்பினால் சிலசமயம் இந்த அதிகரிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று நிச்சயமாக இதில் கூறப்படவில்லை.

சிவில் சமூகச் செயல்பாடுகளில் உள்ள பொதுவான குறைபாடுகளில் ஒன்றாகக் காணப்படுவது சிவில் சமூகம் இலக்குவைத்துச் செயல்படும் குழுவினரில் மாற்றம் இல்லாமல் இருப்பதாகும். பல பயிற்சிப் பட்டறைகளில் பணியாற்றியுள்ளவன் என்ற வகையில் நான் பங்கேற்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டறைகளில் பரீட்சயமான முகங்களையே எப்போதும் காண முடிந்தது. பதுளை, அநுராதபுரம், மொனராகலை, குருநாகல், காலி, மாத்தறை, இரத்தினபுரி, கண்டி, கொழும்பு ஆகிய இடங்களில் இந்தப் பயிற்சிப் பட்டறைகள் இடம்பெற்றன. சிலவற்றைத் தவிர தமது வழமையான வாடிக்கையாளர்களைத் தவிர இந்த விடயத்திற்கு அப்பால் செல்வதில் சிவில் சமூக அமைப்புகள் தவறிவிட்டன. இதனடிப்படையில் பார்த்தால், ஏற்கனவே ஆர்வமுடையோர் மத்தியிலேயே சிவில் சமூக அமைப்புகளின் சமாதான வேலைகள் ஆர்வத்தைப் பேணுவதற்கு உதவின என்பதும் புதியவர்களைக் கவர்வதில் தோல்விகண்டுள்ளன என்பதும் கவனத்திற்குரியதாகும். இதேவேளை, போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் தோற்றம் பெற்ற புதிய விவகாரங்கள், பிரச்சினைகளை எதிர்கொள்வதற்குப் பல சிவில் சமூக அமைப்புகள் தவறியிருப்பதுடன் பழைய கட்டமைப்புக்குள்ளேயே தொடர்ந்தும் செயல்படுகின்றன. இந்தக் காலகட்டத்தில் போர்நிறுத்த உடன்படிக்கை அமலாக்கம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான நெருக்கடிகள் குறித்துக் கவனத்தில் கொண்டதைவிடத் தொடர்ந்தும் சமாதானத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றே கூறி வந்தனர். இதனால் இவர்கள் மௌனிகளாகவே நோக்கப்பட்டனர்.

இந்த மௌனம் காக்கும் கொள்கையின் விளைவாலேயே அரசு சார்பற்ற நிறுவனங்கள் செல்வாக்கிழந்தன (டாலர் காகங்கள்).[3]

செயல்பாடுகளின் முக்கியமான அம்சங்கள் இல்லாதவிடத்தில் இந்தப் பலவீனங்களை வெறுமனே மேலோட்டமாக விவரித்து சுட்டிக்காட்ட முடியாது. இதற்கு அப்பால் ஆய்வுத்தன்மையற்ற இடத்திலிருந்து ஆய்வுத்தன்மையுடன் அவற்றை ஒழுங்கான முறையில் விபரிப்பதே அவசியமானதாகும். இதற்கு நான் இப்போது திரும்புகிறேன்.

## III

இலங்கையின் சிவில் சமூகப் பாத்திரங்கள் பிரதான விடயத்திலிருந்தும் விலகி மேலெழுந்தவாரியாக மேற்கொள்ளும் நடைமுறைகள் என்ன? கடந்த நான்கு வருடங்களாக அவர்களுடைய செயல்பாடுகளை ஆண்டு வரும் பிரதான விடயம் என்ன? இந்தப் பகுதியிலும் அடுத்த பகுதியிலும் பதிலளிக்க முயலப்படும் கேள்விகள் இவையாகும்.

சமூக நடவடிக்கைகளே அடிப்படையில் சமூகத் தொடர்பாடலுக்கான வடிவத்தை எடுக்கின்றன. இவற்றை அவற்றின் ஆய்வுத்திறன் தொடர்பாக விளக்கமளிக்க முடியும்.

3. சிவில் சமூக அமைப்புகளின் செயல்பாட்டின் தன்மையைப் பிரபல்யப்படுத்தியமைக்காக கலாநிதி குமார் ரூபசிங்கவுக்கு நன்றி கூறுகின்றேன்.



வழிகாட்டப்பட்ட சமூகத் தொடர்பாடலைவிட நோக்கத்திற்கு அப்பாற்பட்ட விடயங்கள் தகவல் அளிப்பவையாக உள்ளன.

'நியாயங்கள், அவதானிப்புக்கள் தொடர்பான ஆவணங்கள், மற்றும் அடிப்படையம்சங்கள் என்பனவற்றில் குறிப்பிட்ட அதிகாரபூர்வ விடயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவையில்லாமல் சமூக இயக்கம் இல்லை (டோர்பிங், 1999, பக்.82). ஆயினும், லாக்கிளே மற்றும் மவ்பி ஆகியோர், ஆய்வுக்குட்படாத துறையானது உத்தியோகபூர்வமாக தெரிவிக்கப்படும் விடயத்தை அதேவிதத்தில் அறிவிப்பதாகவே அமையுமென்ற கடுமையான வாதத்தை முன்வைக்கின்றனர்'.

> இரண்டு அம்சங்கள் இங்கு வலியுறுத்தப்பட வேண்டியுள்ளன. முதலாவதாக, பிரதான அம்சத்திலிருந்தும் விலகிச்சென்றுள்ள நிறுவனங்கள், நுட்பங்கள், உற்பத்தி அமைப்புகள் கருதப்பட்டு அவை ஆய்வுக்குட்படுத்தப்பட்டால் நாம் அதிகளவோ அல்லது குறைவான மட்டத்திலோ எதிர்மறைக் காரணிகளின் மத்தியிலிருந்து வேறுபட்ட சிக்கலான உருவங்களை கண்டுகொள்ள முடியும். இவை அமைப்பு முறைமைக்குத் தேவையான வெளிப்புறத்திலிருந்தும் தோன்றுவ'தில்லை. ஆதலால், இவற்றை மேலோட்டமான சொல்லாடல்களாக மட்டும் உள்வாங்கிக்கொள்ள முடியும். இரண்டாவதாகச் சொல்லாடல் தன்மையுள்ள உரையானது அதனைத் தெரிவித்த சக்திகளின் அடையாளத்துவத்தைச் சுட்டிநிற்கின்றது. இது ஆகக் குறைந்தளவிலாவது, பகுதியளவிலாவது மாற்றி அமைக்கப்பட வேண்டும் *(2005: பக். 107)*.

இலங்கை சிவில் சமூக அமைப்புகளின் சமாதான நடைமுறைகள் கோட்பாட்டுரீதியான உரையாகவே அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் மோதல் தீர்வு மாதிரிகள் வழிகாட்டல்களாகக் கொண்டுள்ளது என்பதையும் எனது முந்தைய எழுத்தாக்கங்களில் நான் வடிவமைத்திருக்கிறேன்.

இந்நிலையில் இது இரு யோசனைகளை வகைப்படுத்தியுள்ளது:

முதலாவதாக, அண்மைய வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட சமாதான நடவடிக்கைகள். மோதல் தீர்வுகளுக்கான முன்மாதிரிகளாய் வழிகாட்டப்பட்டதாக நான் கூறுகிறேன். இவை சர்வதேச யதார்த்த உறவுகளின் யதார்த்தபூர்வக் கொள்கைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவது அவசியமானதாகும்.

இரண்டாவதாக, சிவில் சமூகத்தின் புரிந்துணர்வின் அடிப்படையிலேயே சமாதான நடவடிக்கைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பின்காலனித்துவ சமூகக் கட்டமைப்பின் பரந்துபட்ட தன்மையானது மிகக் கடுமையான அளவுக்கு சுருங்கிக் காணப்படுகின்றது.

1971 கிளர்ச்சிக்குப் பின்னர் முறைசார்ந்த அரசியல் நிறுவன மைய வடிவமைப்புக்கு வெளியே முதல் தடவையாகக் குடியியல், மனித உரிமை விவகாரங்கள் எழுப்பப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனது ஞாபகசக்தி சரியானதாக இருந்தால் சமாதான நல்லிணக்க விடயங்கள் முதன்முறையாக 1973 காலப்பகுதியில் கண்டி சத்தி யோதயாவில் சிறியளவிலான கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருந்தன என்பதைக் கூறிக்கொள்ள முடியும். தோட்டங்களில் இருந்து தமிழ் தோட்டத்தொழிலாளரை வெளியேற்ற அரசியல் மயமாக்கப்பட்ட குடும்பங்கள் தலைமைதாங்கிச் செயல்பட்டபோது அந்த நடவடிக்கை களுக்குப் பதிலாகவே கண்டியில் இந்த விடயங்கள் எழுப்பப்பட்டன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கல்விமான்கள், கண்டி யைச் சேர்ந்த வழக்கறிஞர்கள், தோட்டப் பகுதியைச்சார்ந்த தொழிற் சங்கத் தலைவர்கள், உள்ளூர்த் தலைவர்கள் ஆகியோரடங்கிய கூட்டத்தை அருட்தந்தை காஸ்பெரஸ் கூட்டினார். தோட்டத்தொழிலாளரின் நிலை, அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், தோட்டப்பகுதிகளில் இனங்களுக்கிடையில் உறவு களைக் கட்டியெழுப்ப மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் குறித்துக் கலந்துரையாடவே அக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

1977 பொதுத்தேர்தலுக்குப் பின்னர் பிராந்தியத்தில் இனமோதல்கள் வெடித்தபோது இந்த அமைப்பினர் முழுமையான பங்களிப்பை வழங்கினர்.

1970களின் பிற்பகுதியில் தமிழ்ப் போராளி இளைஞர்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினர் அடக்குமுறை நடவடிக்கைகளை ஆரம்பித்தபோது அருட்தந்தை காஸ்பெரஸ் மீண்டும் ஒருமுறை இனங்களுக்கிடையிலான நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தை (மேர்ஜ்) உருவாக்குவதற்கான முயற்சிகளை ஆரம்பித்து வைத்தார்.

மேர்ஜ் அதன் ஆரம்பகாலத்தில் வர்த்தக சமூக இயக்க நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் சென்றதாகத் தோன்றுகிறது. வசீகரமான தலைவர்களால் வழிநடத்தப்பட்டதுடன் கட்டமைப்பும் செயல்பாடும் ஏதோ ஒரு விதத்தில் இடதுசாரி இயக்கத்தைப் போன்று இருந்தது. இன நெருக்கடிக்கு நீதியான தீர்வைக் காண்பதற்கு எதிராக இருக்கும் பிரதான எதிரி இலங்கை அரசாங்கமே என்பதும் தமிழர்களின் எதிர்ப்பை நசுக்க அடக்குமுறைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது என்பதும் இதன் உறுதியான நிலைப்பாடாக இருந்தது. அமைப்புரீதியான நிறுவனமாக இருந்த மேர்ஜ் சந்தர்ப்பவசத்தில் உடைந்து சின்னா பின்னமாகி இறுதி முடிவைச் சந்தித்ததற்குத் தனிப்பட்ட பகைமைகள் உட்படப் பல காரணிகள் பங்களிப்பைச் செய்துள்ளன. தமிழ்த் தேசியவாத அமைப்பு களினால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் போன்ற யதார்த்தங் களை ஏற்றுக்கொள்வதற்கும் முடியாதிருந்த இதன் இயலாமையே



இதன் வீழ்ச்சிக்கான பிரதானக் காரணங்களில் ஒன்றென நான் நம்புகிறேன்.

நாடு முழுவதுமுள்ள சமாதான இயக்கங்களின் அண்மைக்கால முயற்சிகளும் நிலைமையைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டதாகவே தோன்றுகிறது. இந்த முயற்சிகள் வர்க்கரீதியான அரசுசார்பற்ற நிறுவனக் கட்டமைப்பை உருவாக்கியதே தவிர, வர்க்கரீதியிலான சமூக அணி திரட்டல் மூலம் இயக்கத்தைக் கட்டமைக்கவில்லை. இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல் அதிகரிப்புத்தன்மையும் இதனால் மோதலின் இரு தரப்புப் பரிமாணமும் பாரியளவிற்கு விஸ்வரூபமெடுத்ததால் மோதல் தீர்வு நிகழ்ச்சித் திட்டத்திற்கு மிக அதிகளவிலான முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

மோதலில் ஈடுபடும் இருதரப்பினருக்குமிடையிலும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படுவது சமாதானத்தை உருவாக்குவதற்கு மிகவும் முக்கியமானதென்றாலும் மோதல் தீர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் சமாதானச் செயல்பாட்டு நிகழ்ச்சித் திட்டமும் ஒத்தவையாக இருக்க முடியாது. சமாதானச் செயல்பாட்டு நிகழ்ச்சித் திட்டமானது அரசியல் உள்ளடக்கத்தைச் சார்ந்ததாக இருந்தது.

மக்களை அணிதிரட்டும் ஆற்றல் சமூக அமைப்புகளுக்கும் உள்ளது. ஆயினும், சமூக இயக்கம் எவ்வாறு ஒன்று சேர்ந்து செயல்படுகின்றதோ அதிலேயே இந்த ஒன்று திரட்டல் தங்கியுள்ளது. உதாரணமாக, நம்பிக்கைகள், அர்த்தங்களைச் சார்ந்த செயல்பாட்டின் ஒன்று சேர்க்கை யானது, நியாயபூர்வமான சமூக இயக்கத்தின் நடவடிக்கைகள், போராட்டங்களுக்கு உத்வேகமளிக்கின்றது.

கேம்சன் (1975) ஒன்று சேர்ந்த செயல்பாட்டு வடிவமைப்பின் மூன்று சக்திகள் குறித்துத் தனித்துவப்படுத்திக் காட்டுகின்றார். அ. அநீதி இழைக்கப்படுகின்றது என்னும் உணர்வு. ஆ. அடையாளத்துவ சக்தி, இ. சுறுசுறுப்பான செயல்பாடு. அதிகாரத்தைத் தம்வசம் வைத்திருப்போர் சமூகப் பிரச்சினைகள், சமூக அநீதி போன்றவிடயங்களுக்குத் தீர்வு காண்பதில் கைக்கொள்ளும் வழிமுறையில் சமத்துவமின்மை அல்லது மகிழ்ச்சியின்மை ஏற்படுவதாலேயே அநீதி இழைக்கப்படுகின்றது என்னும் உணர்வு ஏற்படுகின்றது. தேவையற்ற, விரும்பத்தகாத சூழ்நிலைக்கான வெளிமட்டக் காரணியாக இருப்போரின் உணர்வே ஆத்திரமாகும். உண்மையான விரோதிகளாக இருக்காவிடினும் வெளிப் படையான எதிர்ப்பாளர்களே இயக்கங்களுக்குத் தேவை. இந்த எதிர்ப் பாளர்கள் தெளிவாக அடையாளப்படுத்தப்பட்டால் மட்டுமே இயக்கச் செயல்பாடுகளின் நிலைப்பாடு வரையறுக்கப்படலாம். மேர்ஜின் முன்னேற்றத்தின் ஆரம்ப காலப்பகுதியில் இலங்கை அரசாங்கமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதன் எதிர்ப்பாளர் என்பது தெளிவாக அடையாளப்படுத்தப்பட்டது. இலங்கையில் காலனித்துவ ஆட்சிக்குப் பின்னர் பதவியேற்ற சகல அரசாங்கங்களின் பாரபட்சமான நடவடிக்கைகள் மற்றும் குறிப்பாக 1979 இதைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட அடக்கு முறைச் செயல்பாடுகள் என்பனவற்றை இந்த இயக்கம் வெளிப் படுத்தியது.

போராளிகளின் எதிர்ப்பை நசுக்குவதற்கான தெளிவான பணிப் புரை விடுக்கப்பட்டு யாழ்குடாநாட்டுக்குப் பிரிகேடியர் வீரதுங்கவை அனுப்பியமை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நிறைவேற்றியமை, இரவுவேளைத் தாக்குதலில் இன்பம் மற்றும் ஏனையோர் கொல்லப் பட்டமை என்பன 1970களில் அர்ஜென்டீனாவிலிருந்த இராணுவ அடக்குமுறை ஆட்சியைப் போன்றதொன்றாகும். 1980 பொதுவேலை நிறுத்தத்தை நசுக்கியமை, எதிர்க்கட்சிகளைக் குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நசுக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்பன செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தன.

போராளிகளின் போராட்டம் நியாயத்துக்கான போராட்டமாக உள்ளடக்கப்பட்டதுடன் நீதிக்கான பரந்தளவிலான போராட்டத்தின் பிரிக்க முடியாத ஓரங்கமாக இது உருவகப்படுத்தப்பட்டது. மேர்ஜ் தனது ஆரம்பக்கட்டத்தில் சமாதான இயக்கமாக இருக்கவில்லை. சமூக நீதிக்கும் சமத்துவத்திற்குமான அமைப்பாகவே இருந்தது.

நியாய உணர்வுக்கு மேலதிகமாக, அடையாளத்துவத்திற்கான மூலக் கரு பற்றிப் பிடித்திருக்கும் நம்பிக்கைகள், ஒன்றுபட்ட பகிர்வு என்ப வற்றுக்குச் செயல்பாட்டு வடிவம் கொடுக்கப்படுவதே தேவைப் படுகின்றது. இந்த நம்பிக்கையில் தாங்கள் உறுதியாக இருக்கின்றார் களென்ற எண்ணப்பாட்டை அதிகத் தொகையிலான மக்கள் மத்தியில் உருவாக்குவதன் மூலமே அமைப்புக்குப் பரந்துபட்ட ஒரு தளத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியும். அல்லது அனுதாபத்தையாவது ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அடையாள உணர்வு மற்றும் அடையாளத்திற்கான கூறு சாதகமான முந்தைய செயல்பாட்டுத் தலையீட்டுக்கு ஆதரவாக இருக்குமென்பதை எண்ணத்தில் வைப்பதன் மூலம் மாற்றத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியும். 1970களின் இறுதியிலும் 1980களின் ஆரம்பத்திலும் இடதுசாரிப் பாரம்பரியம் ஆயத்தப்படுத்திய பணிகளே மேர்ஜின் செயல்பாடுகளுக்குக் கணிசமான அளவு பங்களிப்பைச் செலுத்தின.

எவ்வாறாயினும், நீதிக்கும் சமாதானத்திற்குமான தமிழர்களின் போராட்டம் ஆயுத மோதலாகத் திரும்பியதையடுத்து இலங்கை அரசின்



ஆயுதப்படைகளும் தமிழ்த் தேசியவாத அமைப்புகளின் போராளிகளும் உக்கிரமான சண்டையில் ஈடுபட்டனர். மோதலின் தன்மையும் குறிப்பிடத்தக்க அளவுக்கு மாற்றம் பெற்றது.

மேர்ஜில் உட்பூசல் ஆரம்பத் தலைமைத்துவத்துடன் பங்குகொள்ளாத தன்மை, மேர்ஜ் அமைப்பின் வீழ்ச்சிக்குக் காரணமாகியது. நிலைமை யில் ஏற்பட்ட மாற்றத்திற்கமையப் புதிய செயல்திட்டத்தை வடிவமைக்க இந்த அமைப்பு தோல்வி கண்டமையே இதனைச் சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் அதிகரித்ததையடுத்துப் புதிய சூழ்நிலை தோற்றம் பெற்றது. இருதரப்புப் போராளிகளும் அச்சுறுத்தல் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளைப் பொதுமக்களுக்கு எதிராகக் கடுமையாக மேற்கொண்டனர். விடுதலைப்புலிகள் தமக்கு எதிரான தமிழ் அரசியல் கட்சிகளைப் பின்பற்றுவோரையும் அவற்றின் தலைவர் களையும் கொன்றதுடன் வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்க் குடிமக்கள் அல்லாதோரை வெளியேற்றும் இனச் சுத்திகரிப்பு உபாயங் களை மேற்கொண்டனர். இது தொடர்பான மோதல்தீர்வு நிகழ்ச்சித் திட்டமானது மோதலில் ஈடுபடும் இருதரப்பும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டிய தேவை குறித்து யோசனையை முன்வைத்தது. அத்துடன் மோதலில் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் சம அந்தஸ்தைப் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் பேணுவதும் ஏற்றுக்கௌ்ளப்பட்டது. மோதலில் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் சம அந்தஸ்தையுடைய பங்காளிகள் என்பதை சமாதானத்திற்கான சமூக இயக்கம் விளங்கிக் கொண்டு அங்கீகரித்த அதேசமயம், பேச்சுவார்த்தை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்போது சம்பந்தப்பட்ட தரப்பினர் மீதான அழுத்தத்தை அதிகரிப்பதற்கான அதன் செயல்பாட்டு வடிவமைப்பைக் குறைத்துக் கொள்ள முடியாதநிலை காணப்பட்டது. மோதல், வன்முறையில் ஈடுபடும் தரப்பினர்கள், எதிர் இயக்கங்கள் என்ற அடிப்படையில் சமாதான அமைப்புகள் அவற்றை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். அதாவது, இந்தத் தரப்புகள் வன்செயல், ஆயுத நடவடிக்கைகள் மற்றும் மனித உரிமை மீறல்களை மேற்கொள்கின்றார்கள் என்பதை வெளிக் காட்டியிருக்க வேண்டும். ஆனால், மோதல்தீர்வின் உள்ளடக்கத்திற்கும் சமூக இயக்கங்கள் உள்ளடக்கத்திற்கும் இடையிலான வேறுபாட்டைப் பற்றிப் பிடிக்கப் பலரும் அமைப்புகளுக்கும் தவறிவிட்டதாகவே தோன்றுகிறது.

கடந்த இரு தசாப்தங்களில் இலங்கையில் காணப்பட்ட வசதியான நிலை தொடர்பான இந்த வேறுபாட்டை (பார்க்க: அட்டவணை 2) இங்கே தருகிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### *அட்டவணை 2: செயல்பாட்டு வரைமுறைகள்*

| மோதல் தீர்வு வரைமுறை | சமூக இயக்க வரைமுறை |
|---|---|
| 1. பேச்சுவார்த்தை மற்றும் உடன்படிக்கையில் இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பங்காளிகள் என்ற பார்வை | 1. இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதானத்திற்கான எதிரிகள் என்பதற்கும் உரிமைகள் மீறுவோர் என்பதற்கும் எதிர்ப்பு. |
| 2. எதிர்கால இணக்கப்பாட்டில் சமபங்காளிகள். | 2. சமாதானத்தை வென்றெடுப்பதில் சமபந்தப்பட்ட தரப்பினர் பலவீனமடைந்திருக்க வேண்டும். |
| 3. பேச்சுவார்த்தை மூலமான இணக்கப் பாட்டின் இரு அதிகாரபீடங்கள் அதிகாரத்தை பகிர்ந்துகொள்ளுதல். | 3. இருதரப்பினராலும் ஓரம்கட்டப் பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரத்தை வழங்குதல். |
| 4. மோதலில் ஈடுபடும் இருதரப் பினருக்கும் சிறப்புரிமை வழங்குதல். | 4. மோதலில் ஈடுபடும் இருதரப் பினரதும் கரிசனைகளுக்குச் சிறப்புரிமை வழங்காதிருத்தல். |
| 5. அதிகாரச் சமநிலையில் அரசு சார்பற்ற பங்காளிகள்மீதான பக்கச் சார்புத் தன்மை. | 5. தத்தமது யுத்த முயற்சிகள் தொடர்பாக மோதலில் ஈடுபடும் இரு பங்காளி களும் சமம் என்று தெரிவித்தல். |
| 6. மோதல் தீர்வுக்கான விடயமாக யுத்தநிறுத்தத்தைப் பயன்படுத்தல். | 6. யுத்தநிறுத்த காலப்பகுதியை இயக்க விரிவாக்கலுக்குப் பயன்படுத்தல். |

நீதியை அடிப்படையாகக்கொண்ட பரிமாணத்திலிருந்து சமாதான இயக்கமானது விடுபட வேண்டுமென்ற அர்த்தத்தை இது தருகிறதா? நான் அவ்வாறு நினைக்கவில்லை. இதனுடன் தொடர்புடைய கேள்வி யைத் தொடர்புபடுத்தி நாம் இதை ஆராய்வோம். மகாத்மா காந்தியும் மார்ட்டின் லூதர் கிங்கும் (ஜுனியர்) மாற்றத்திற்கான பாதையாக ஏன் அஹிம்சையைத் தேர்ந்தெடுத்தனர்?

நியாயத்திற்கான இயக்கங்கள் பேணப்பட வேண்டும், பெரும் எண்ணிக்கையான மக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் இந்த இயக்கங்கள் பெற்றிருக்க வேண்டும். குழு உறுப்பினர்களைக் கொண்ட இந்த மக்களின் அதிகாரம் இயக்கத்தால் தீர்மானிக்கப்பட்டதாகவும் கேள்விகள், சவால்களுக்கு இந்த இயக்கமானது முகம் கொடுக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையை மகாத்மா காந்தியும் மார்ட்டின் லூதர் கிங்கும் கொண்டிருந்தனர். மேலும், ஆதிக்கம் செலுத்தும் குழுவின் திட்டங்கள் ஜனநாயகம், நீதிக் கோட்பாடுகளுக்கமைய இருக்க வேண்டுமென்ற நிபந்தனை உள்ளதுடன் பதவி நிலையில் குறைந்த குழுவுக்கு எதிரான செயல்பாடுகளை நியாய பூர்வமானதாக்கக்கூடியது. நீதியற்ற வன்முறை நடவடிக்கை மூலம் பதவி நிலை குறைந்த குழுவினர் தமக்குரித்தான நியாய ஆதிக்கத்தை இழக்கும் போதும் இந்தக் குழு குறிப்பிட்ட அளவு இராணுவ ஆற்றலைப் பெற்றிருந்தாலும் பலவீனமடைந்திருந்தாலும் ஜனநாயக நீதிக்கோட்பாடு களுக்கு எதிராக இயக்கமானது செயல்படக்கூடாது. போராளிக் குழுக் களின் சகலவிதமான மனிதாபிமானமற்ற வன்முறை நடவடிக்கைகளில் சமூக இயக்கமானது சார்ந்திருக்க ஆரம்பித்தால், அதாவது ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களை இந்தப் போராளிக்குழுக்கள் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர் என்ற வாதத்தைப் பயன்படுத்தி பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டால், தனது இயக்கத்தின் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்தும் படிப்படியாக சமூக இயக்கமானது விலகிச் சென்று விடும். இதுவே இலங்கையின் சமாதான இயக்கத்திற்கு நிகழ்ந்திருப் பதாக நான் நம்புகிறேன். ஏனெனில் விடுதலைப்புலிகளின் அராஜகங் களை விமர்சிக்காமல் நலிந்த சமூகத்திற்கான பாதுகாப்புச் செயல்பாடு களை அவர்கள் மேற்கொள்வதாக வரையறைப்படுத்த ஆரம்பித்தது முதல் சமாதான இயக்கத்திற்கு இது நிகழ்ந்திருப்பதாகக் கருதுகிறேன். சமாதான இயக்கம் புலிகளின் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயல்பட்டிருந்தால், இலங்கை அரசாங்கம் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு எதிரான இதன் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளுக்கு எதிராக இருந்திருந்தால் சமாதான நகர்வானது முஸ்லிம்கள், சிங்களவர்களின் கணிசமான ஆதரவைப் பெற்றிருக்கும்.

இதற்குச் சிறந்த உதாரணமாக, சமாதான நகர்வானது யூடிஹெச்ஆர் (ஜே) போன்ற மனித உரிமைக்குழுக்களை உள்ளடக்கத் தவறிவிட்டதைக் குறிப்பிடலாம். பதிலாக யூடிஹெச்ஆரை நாசமாக்கும் சக்தியென்ற பார்வையை சமாதான இயக்கம் கொண்டிருந்தது.

இலங்கை அரசுசார்பற்ற நிறுவனங்களும் சமாதானப் பணியாளர் களும் சமாதான நடவடிக்கைகளின் முக்கியமான தாக்கத்தைச் சமர்ப் பிக்கத் தவறியமையும், உதவி வழங்கும் முகவர் நிலையங்களுக்கு இரண்டாம்பட்சப் பணியாளர்களாக மாறியமையும், மோதல்தீர்வு நிகழ்ச்சித் திட்டம் என்ற சிறப்பு அம்சத்தை முடிவுக்குக் கொண்டுவந்து வெறும் நகர்வு நிகழ்ச்சித் திட்டமாக ஆக்கியது.

இது உண்மையில் சமாதானப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த எம்மைக் கடந்த காலத்தில் நாம் மேற்கொண்ட பணியை மேற்கொள்வதற்கு வலிந்து தள்ளியதுடன் தெளிவாக மட்டுப்படுத்தப்பட்ட இயக்கச் செயல்பாட்டு வரைவாக மீள்வழிகாட்டியது. இது சர்வதேச அரச





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உதவிவழங்கும் முகவர் அமைப்புகளின் நடவடிக்கைகளால் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது.

## IV

யதார்த்தக் கேள்வியுடன் இதனை நாம் ஆரம்பிக்க முடியும். சிவில் சமூக அமைப்புகள் சமாதான நடவடிக்கைகளை அதிகளவு திறமையுடன் திட்டமிட்டு அமல்படுத்தியுள்ளனவா என்பதும் அந்தச் செயல்பாடுகள் இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனவா என்பதே இக்கேள்வியாகும். விடை சந்தேகமின்றிச் சிறப்பானதாகவே இருக்கும். இலங்கையில் காலனித்துவ ஆட்சிக்குப் பின்னரான சமூகத் தோற்றப்பாடு, சிவில் சமூகச் செயல்பாடு என்பன அதிகளவு முக்கியத்துவத்தைப் பெறவில்லை. அதனால் சிவில் சமூகத்தில் அரசியலை தாபிப்பதற்கான சுதந்திரமான தீர்மானம் போதாமல் இருக்கும் நிலை உள்ளது.[4]

இவை சம்பந்தமான விடயங்கள் மம்தானி (1996), சட்டர்ஜி (2004) ஆகியோரின் எழுத்தாக்கங்களில் உள்ளன. இவை ஆர்வமூட்டுபவை யாகவும் எண்ணப்பாட்டை மனத்தில் தோற்றுவிப்பவையாகவும் உள்ளன. சிவில் சமூகப் பேச்சு பற்றிக் குறிப்பிட்டு மம்தானி எழுதுகையில்,

> சிவில் சமூகம் பற்றிய தற்போதைய ஆப்பிரிக்கக் கருத்தானது சோசலிசம் பற்றிய முந்தைய கருத்தையொத்ததாக உள்ளது. ஆய்வுக்குட்படுத்தப்பட்டதை விட அதிகளவு நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டதாகவும் வரலாற்றுத் தன்மை கொண்டதைவிட அதிகக் கோட்பாட்டுத்தன்மை பொருந்தியதாகவும் காணப்படுகின்றது. இரு விடயங்களை வலியுறுத்துபவையாகக் கருப் பொருள் உள்ளது. ஐரோப்பாவைப் போன்று ஆப்பிரிக்காவில் சிவில் சமூகம் முழுமையான நிர்மாணம் பெற்றதாகக் காணப்படுகிறது. ஜனநாயகமயமாக்கல் சக்தியுள்ளதாக முன்னெடுப்பது தொடர்பாகவே அரசாங்கத்திற்கும் சிவில் சமூகத்திற்கும் இடையில் சச்சரவு காணப்படுகிறது (1996, பக்.13–14).

மக்களை ஆளும் அதிகாரத்தின் விசேடத் தன்மையை விளங்கிக் கொள்வதன் மூலமே காலனித்துவ, பின்காலனித்துவ சிவில் சமூக உருவாக்கத்தின் தன்மையை விளங்கிக்கொள்ள முடியும் (அதேநூல், பக். 15).

எனது கருத்தின்படி சட்டர்ஜியின் (2004) விவாதம் மேலும் முன்னேற்ற கரமானதாக உள்ளது. அரசாங்கம் தலையிட அனுமதிக்கப்பட வேண்டு மென்ற அரசியல் உருவாக்கச் சிந்தனையை சிவில் சமூகம் தொடர்ந்து கோட்பாடாகக் கொண்டிருக்கிறது. ஆனால், குடிப்பரம்பல் ரீதியாக, உண்மையில் இது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது (2004: பக்.39). மிகவும் சுருங்கிய சிவில் சமூகத்தின் எல்லைகளுக்கப்பால் பரந்துபட்ட ஜனத் தொகையைத் தழுவிய அரசியல் சமூகம் இருக்கிறது.[5]

அரசாங்கத்துக்கும் சிவில் சமூகத்துக்கும் இடையிலான அறிவுசார் தனித்துவம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், இலங்கையின் சமாதானம் மற்றும் மோதல் தீர்வு தொடர்பாக சிவில் சமூக அமைப்புகள் தமது பிரதான நிலைப்பாட்டிலிருந்தும் விலகிச் செல்லும் நடைமுறைகளைக் கைக்கொள்ள ஆரம்பித்ததிலிருந்து அவற்றின் நடவடிக்கைகளில் அதாவது, ஆக்கபூர்வமான விளைவு களை ஏற்படுத்த அவை தவறிவிட்டன என்று நான் விவாதிக்கிறேன்.

சிவில் சமூகப் பாத்திரங்கள் பலர் பங்கேற்றுக்கொண்ட இடைக்கால நிர்வாகம் தொடர்பான விவாதத்தைக் குறிப்பிடுவதும் எனது விவாதத் துக்கு ஆதரவாக இருக்கும். முழுவிவாதமுமே புள்ளிவிபர முறைமை யின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்பட்டது.[6] அடிமட்டத்தில் என்ன நடந்தது என்பது அங்குப் புறக்கணிக்கப்பட்டிருந்தது. எதிர்மறை

4. அரசியல் சமூகத்தின் முக்கியத்துவம் பற்றி நான் முன்வைத்த வாதங்களுக்குப் பதிலளிப்பதாக (சட்டர்ஜியின் நோக்கில்) உயன்கொடவால் (2005) விபரிக்கப்பட்ட கருத்தானது சிவில் சமூகம் முன்னோக்கிய பார்வையையும் முற்போக்குத் தனமாகவும் இருக்கையில் அரசியல் சமூகமானது பின்தங்கிய பிற்போக்குத்தனமாக உள்ளது என்ற பிரதிமையைத் தருவதாகத் தென்படுகிறது. சிவில் சமூக இயக்கத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் கொழும்பில் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின்போது அவற்றில் பங்குகொண்ட பலர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்வானது இலங்கை அரசியலில் பின்நோக்கி எடுத்து வைத்த அடியென்று வகைப்படுத்தினர். எனது கருத்தானது, அதாவது சிவில் சமூகம் முற்போக்குத்தன்மை வாய்ந்தது; அரசியல் சமூகம் பிற்போக்குத் தன்மையுடையது என்ற இந்த நவீன எண்ணக் கருவானது, முற்றுமுழுதாக சரியானது அல்ல என்பதாகும்.

   அரசியல் சமூகத்தின் செயல்பாடுகள் நவீனத்துவத்திற்கு ஆபத்து ஏற்பட்டாலும் சில வேளை களில் பரந்தளவிலான ஜனநாயகத்தைக் கொண்டிருக்குமென சட்டர்ஜி சுட்டிக்காட்டுகின்றார். ஆனால், சிவில் சமூகம் நவீனத்துவத்தைச் செழிப்பாக்குவதிலேயே அதிகக் கரிசனையைச் செலுத்தும். ஜனநாயகத்திற்கான இட எல்லை குறைந்தாலும்கூட நவீனத்துவத்தைச் செழிப் பாக்குவதிலேயே சிவில் சமூகம் அதிகளவில் கரிசனை காட்டும்.

5. லியனகே விவாதம் சுருக்கமாக்கப்பட்டுள்ளது (2004).

6. நிமாந்தி பெரேரா ராஜசிங்கம் (2005) இந்த விவகாரங்களுக்குத் தீர்வுகாணப்படும் முயற்சிகள் குறித்து சர்வதேச உதவி வழங்குவோரும் சிவில் சமூகப் பாத்திரங்களும் எந்த விதத்தில் செயல்பட்டார்கள் என்பது தொடர்பான தனது அனுபவத்தை பதிவுசெய்துள்ளார்.

   அவர் எழுதுகிறார்: ஆட்திரட்டல் நடைமுறை தொடர்பான விமர்சனத்தை மௌனமாக்கும் விருப்பங்கள் தொடர்பாக ஆதிக்கம் செலுத்தும் விடயத்தை உதாரணமாக, கீழே நான் விபரிக்கின்றேன். ஏப்ரல் 2004 சண்டையின்பின் கணிசமான அளவு ஆட்கள் கிழக்குக்குப் பயணம் செய்வதற்கு ஏற்பாடு செய்து நாங்களும் சென்றோம். அதில் நானும் ஒருவர். அச்சண்டையின் பின்னர் நூற்றுக்கணக்காக சிறுவர்கள் முகாம்களிலிருந்து விடுதலை செய்யப் பட்டிருந்தனர். இந்த பயணம் ஒற்றுமையை வெளிப்படுத்தவும் உண்மை நிலையைக் கண்டறியவும் ஒழுங்குசெய்யப்பட்டதாகும். அங்கு வாழும் சமூகங்களுக்கு எமது ஆதரவை வெளிப்படுத்த 50 பேரைக் கூட்டிச்செல்ல விரும்பித் தொடர்ச்சியான பயணங்களுக்கு திட்டமிட்டிருந்தோம். ஆனால், போதியளவு நிதி இல்லாமையால் அது சாத்தியப்பட வில்லை. நிதிக்காக நாங்கள் எஃப்எல்ஐசிடியிடம் விண்ணப்பித்தோம். மோதலிலிருந்து மாற்றத்திற்கான உள்ளூர் முன்முயற்சிக்கான அனுசரணை வழங்கும் இந்த அமைப்பு ஜிடிஇ ☞





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யான பேச்சுகள் முறிவடைந்தபின் ஒவ்வொன்றுமே நடைபெற்றதா? பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே சர்வதேசச் சமூகத்தினதும் உள்நாட்டுச் சிவில் சமூகத்தினதும் வலியுறுத்தலாகும். பேச்சுவார்த்தை முறிவடைந்த பின்னர் இடம்பெற்றவற்றை அடிப்படையாகக்கொண்டே பேச்சு ஆரம்பிக்கப்படுமெனத் தோன்றுகிறது. பேச்சுவார்த்தை முறிவு அச்சமயத்தில் தற்காலிகமாகத் திரும்பப் பெறப்படுவதாகப் புலிகளால் தெரிவிக்கப்பட்டது. இது எதிர்மறையானதாகவும் உறுதியற்றதாகவும் உள்ளது. ஸ்திரமற்ற நிலை என்பது உண்மையெனத் தென்பட்டால் முதல் அனுமானம் பிரச்சினைக்குரியதாகும்.

கடந்த 6 மாதங்களில் வன்முறைகளற்ற, இணக்கப்பாடற்ற அரசியலின் வெளிப்பாட்டை நாம் காண முடியும் விசேடமாகக் கிழக்கு மாகாணத்தில் இதைப் பார்க்க முடியும்.

உயர்குழாம் சிவில் சமூகம் வினைத்திறன் அற்றதாக இருந்த நிலையில், அரசியல் சமூகம் இலங்கை அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்கு எந்தவிதத்தில் ஆயத்தமாக இருக்கிறது (பார்த்தா சட்டர்ஜின் உணர்வின்படி) என்பதை இந்த மாதிரியான நிலைமைகள் அர்த்தப்படுத்தும்.

செல்வாக்கு மிக்க அரசியலில் ஆதிக்கம் செலுத்திய ஒரு கதையொன்றை நான் கூறுகிறேன். செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் இருந்து தனது ஆட்திரட்டல் நடவடிக்கைகளைப் புலிகள் அமைப்பு

☞ இஸட்டின் ஒரு அங்கம். ஜெர்மன் அபிவிருத்தி மன்றம் (டிஎஃப்ஐடி), பிரிட்டிஷ் அரசாங்கமாகும். இந்த விடயத்தில் அவர்கள் காலை வாரியதால் நாங்கள் 10 பேர் தாமதிக்காமல் எப்படியாவது போவதெனத் தீர்மானித்தோம். மட்டக்களப்புக் கூட்டமென எங்களையே அழைத்தோம். அதேசமயம், மீள ஆள்திரட்டல் நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டதாக நாம் ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தோம். அத்துடன் கொலைகளும் தொடங்கிவிட்டமை எமக்குத் தெரிந்திருந்தது. இந்த பயணத்தின்மூலம் விபரங்களைத் திரட்டி அறிக்கையிட முடிந்தது. மட்டக்களப்பில் என்ன நடக்கிறது என்பதை மக்கள் மத்தியிலிருந்து அறிந்து ஆட்திரட்டல் விவகாரம் தொடர்பாகப் பரந்தளவில் வீதி ஆவணமாக விநியோகிக்க முடிந்தது.

எஃப்எல்ஐசிடி அலுவலகத்தை அறிக்கை சென்றடைந்ததும் நிதிவாக்குறுதிகள் யாவும் மாயமாகின. ஜோன் கோட்னர் என்பவர் கடும் தொனியில் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். இந்த ஆவணமானது அரசியல் பக்கச்சார்பு உடையது என்றும் கேள்விக்கிடமான அணுகுமுறைப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது என்றும் குறிப்பிட்டிருந்தார். இந்தக் கடிதமானது தற்செயலாகக் கைநழுவிவிட்டது. முரண்பாட்டு கற்கைகளுக்கான பேர்கொப் பவுண்டேஷனுடன் கலந்தாலோசித்துவிட்டே அவர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர். இந்த பேர்கொப் பவுண்டேஷன் யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்படுவதற்குச் சிறிது காலத்திற்கு முன்னர் உருவாக்கப்பட்டதாகும். எமது பேச்சு சுதந்திரத்தைத் தணிக்கை செய்யும் விடயத்தை இன்னொரு நிறுவனத்துடன் கலந்தாலோசிப்பதற்கான தேவை குறித்து ஒரு தடவை நாம் மோதிக் கொண்டோம். எஃப்எல்ஐசிடிக்கும் பேர்கோப்பிற்கும் இடையில் கடுமையான விசனங்கள் பரிமாறப்பட்டன. ஆகஸ்ட் 24இல் பேர்கோப்பின் பணிப்பாளர் நோர்பர்ட் ரோபர்ஸ் கடிதமொன்றை எனக்கு எழுதியிருந்தார். அதில் எஃப்எல்ஐசிடியின் எமக்கு ஆதரவளிப்பதில்லையென்ற தீர்மானத்தில் தங்களுக்குச் சம்பந்தம் இல்லையென மறுத்தும் மன்னிப்புக்கோரியும் அவரே எழுதியிருந்தார்.



அதிகரித்தது. விசேடமாக ஏப்ரலில் கருணா தரப்பால் விடுவிக்கப்பட்ட சிறுவர்கள்மீது கவனத்தைச் செலுத்தியது. இந்த அரசியல் சமூகம் பல விவகாரங்களை விவாதித்தது. அவை பொது மக்களின் நலன், பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்களாகும். சிறுவர்களைத் திரட்டுதல் அச்சுறுத்திக் கப்பம் அறவிடுதல் (வசூலித்தல்), பொதுமக்களின் அங்கீகாரமற்ற செயல்திட்டங்கள், நிலத்தைப் பயன்படுத்துவதை மட்டுப்படுத்தல், மீன்பிடிக்கும் உரிமைகளுக்கான கட்டுப்பாடு என்பவை இந்தப் பிரச்சினைகளில் உள்ளடங்கும். மாலதி டி அல்விஸ் (2004) இந்த விடயங்களின் முன்னேற்றத்தின் முக்கியத்துவம் குறித்து அழுத்தி உரைத்திருக்கிறார்:

> ஏப்ரல் 2004இல் வடக்கிலிருந்து சுயாட்சிபெறும் கருணாவின் பிரகடனத்தின் பின்னர் கிழக்கானது சடுதியாகக் கொழும்பின் பார்வைக்கு மீண்டும் எட்டியது. கொழும்பைத் தலைமையாகக் கொண்ட ஊடகங்கள் மட்டும் கருணா கொழும்புக்குத் தப்பிச்செல்ல யார் உதவியளித்தனர் என்பது பற்றியும் விடுதலைப்புலிகளின் எந்தப் பிரிவில் யாரை யார் கொன்றது என்பது குறித்தும் ஊகங்களை வெளியிட்டனர். அதேவேளை, கிழக்கில் கருணா குழுவினரால் விடுவிக்கப்பட்ட சிறுவர்களை மீளத்திரட்டுவதற்காக வன்னிக்குழுவின் பிந்தைய நடவடிக்கைகளுக்கு எதிராகக் கடுமையான போராட்டங்களை மேற்கொள்ளும் குடும்பங்களை ஊடகங்கள் முழுமையாகப் புறக்கணித்து விட்டன. கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் போராட்டத்தில் இதுவொரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணமாகும். அத்துடன் தெற்கிலுள்ள நாம் இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் எமது ஒற்றுமையையும் ஆதரவையும் இந்தத்துணிவுமிக்கக் குடும்பங்களுக்கு எம்மால் முடிந்த அளவு வெளிப்படுத்த வேண்டும்.

அக்கரைப்பற்று திருக்கோவில்வரையுள்ள பகுதியைச் சேர்ந்த 200 தாய்மாரைத் தமது பிள்ளைகளுடன் தம் அக்கரைப்பற்று அலுவலகத்தில் சமூகமளிக்குமாறு புலிகள் கேட்டுள்ளனர். இந்தப் பிள்ளைகள் முன்னாள் போராளிகளாகும். ஆனால், 50 தாய்மாரே சமுகமளித்திருந்தனர். ஆனால், அவர்களின் பிள்ளைகள் எவரும் சமுகம் தரவில்லை. சுமார் 150 தாய்மார்கள் புலிகளின் பணிப்புரைக்குக் கட்டுப்படவில்லை. இதனால் மறுநாள் பிள்ளைகளுடன் வருமாறு அத்தாய்மாருக்குத் தெரிவிக்கப்பட்டது. திரும்பவும் அந்த உத்தரவுக்குக் கணிசமான தொகையினர் கட்டுப்படவில்லை. முழுக் குடும்பமுமே சாகத் தயார் எனவும் ஆனால் தமது பிள்ளையைப் புலிகள் கொண்டுசெல்ல அனுமதிக்கப் போவதில்லையெனவும் ஒரு பாட்டனார் தெரிவித்தார். விடுதலைப்புலிகளின் பணிப்புரையை அரசியல் சமூகம் எதிர்க்கும் போது உயர்குழாம் சிவில் சமூகம் மிகவும் நம்பிக்கையுடன் பொடியன்கள் சம்மதிக்காவிடின் எதனையும் செய்யமுடியாது என்று தெரிவித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிவில் மற்றும் சர்வதேசச் சமூகம் தமது முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டாலும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் இந்த முன்னேற்றங்களும் போக்குகளும் சாதகமானதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் உள்ளன. ஆதலால் இலக்கற்ற சமாதானத்தைக் கட்டியெழுப்பும் சமாதானம் பேசுதல் அழுத்தத்திற்கு உள்ளாகியது.

தென்பகுதித் தாய்மார், வடகிழக்குப் பகுதித் தாய்மாருடன் அணி திரண்ட அரசியல் சமூகத்திற்கு இடமளிப்பதாகச் சமாதானம் உள்ளது. ஆதலால் சமாதானம் தொடர்பான கலந்துரையாடலில் சமாதானத்தைக் கட்டியெழுப்புகின்ற தலைமைப் பேச்சுவார்த்தை மேடை அல்லாத இத்தகைய வழிமுறைகள் குறைவாகவே வலியுறுத்தப்பட்டுள்ளன. புலிகள், அரசாங்கம், சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, மனித உரிமை ஆணைக்குழு, யூனிசெஃப், சர்வதேசச் சமூகம் ஆகியவற்றுடனான இவர்களின் உறவுநிலைத் தொடர்பாக மீள ஆராய முடியும்.

இந்த மாதிரியான மீள்பேச்சுவார்த்தை நடவடிக்கையில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைகூடப் பிரச்சினையாக இருக்காது. தற்போது, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையானது விடுதலைப்புலிகளிடம் சொந்தமாக இராணுவம், கடற்படை போன்றவை இருப்பதால்தான் பிரச்சினையென்று இல்லை, ஆனால் கருத்து முரண்பாடுடையோரைக் கொலைசெய்தல், மனித உரிமை மீறல்கள், அதிலும் குறிப்பாக நலிந்தவர்களின் மனித உரிமை மீறல்கள் என்பவற்றைப் புலிகள் மேற்கொள்வதும் எண்ணிக்கையில் குறைந்தளவான சிறுபான்மையினரை ஓரம்கட்டும் கொள்கைகளுமே தற்போதைய பிரச்சினையாகும். ஆதலால் பிரதான பேச்சுவார்த்தை மேசையில் ஆராயப்பட்டு முன்னர் அரசியல் சமூக மட்டத்தில் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த முடியும்.

இதனையொத்த விவாதத்தை அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்தும் எழுப்ப முடியும். அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் வாழ்ந்த பொதுமக்களின் உரிமைகளை இலங்கை அரசாங்கம் மீறுகின்றது. அந்தக் குடிமக்களின் உரிமைகள் எப்படி மீள நிலைநாட்டப்படலாம் என்பது ஒரு விவகாரமல்ல, அது இலங்கை சிவில் சமூக அமைப்புகள் கலந்தாராய வேண்டிய விடயமாகும்.

**உசாத்துணைகள்**


அஸார், இ. (1990) *நீண்டகாலச் சமூக மோதலுக்கான முகாமைத்துவம்: விடயதானமும் கோட்பாடும்*, அல்டர்சொட்: டார்ட்மவுத்.





அன்டர்சன், மேரி பி. லாரா ஒல்சன், 2003. *முரண்படும் யுத்தம்: சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்வோருக்கான கடினமான பாடங்கள்,* கேம்பிரிஜ் எம். ஏ: அபிவிருத்திச் செயல்பாடுக்கான ஒன்றிணைந்த பணி.

ஓர்ஜுலா, கமிலா, 2004. *சிவில் சமூகமும் சிவில் யுத்தமும்: சமாதானப் பணியும் இலங்கையின் அடையாளத்துவ அரசியலும்,* கோட்டேபேர்க் : கோட்டேபேர்க் பல்கலைக்கழகம்.

கேம்சன், வில்லியம், 1975. *சமூக ஆட்சேபனையின் உபாயம்,* ஹோம்வுட், III: த டோர்சி அச்சகம்.

கோல்டங் ஜோன். 2004. *எல்லை மீறுகையும் உருமாற்றமும்: முரண் பாட்டுச் செயல்பாட்டுக்கான ஓர் அறிமுகம்.* புளூட்டோ பிரஸ், லண்டன்.

கோஹன், ஜேன் எல், அன்ரு ஆரட்டோ, 1997. *சிவில் சமூகமும் அரசியல் கோட்பாடும்,* கேம்பிரிட்ஜ் எம். ஏ.: எம் ஜரி அச்சகம்.

சட்டர்ஜி, பார்த்தா, 2004. *ஆட்சிக்குட்பட்ட அரசியல்: உலகின் அதிக பகுதிகளின் பிரசித்த அரசியல் பிரதிபலிப்புகள்,* டெல்லி: பேர்மனன்ட் பிளாக்.

*சுயாட்சிக்கான இடைக்கால ஏற்பாடும் முரண்பாட்டு மாறுதலும்: கீழ் நிலையிலிருந்ததான ஒரு பார்வை,* பூகோள மற்றும் உள்நாட்டு ஒருங்கிணைப்பு மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை, *மோதலும் மோதல் தீர்வும் தொடர்பான ஆய்வின் புதிய மார்க்கங்கள்,* மேரிலாண்ட் பல்கலைக்கழகம்.

டி அல்விஸ், 2004. *கிழக்கில் ஓர் உதயம், சன்டே ஐலண்ட், ஜுலை 18.*

டோர்பிங், ஜாக்கப், 1999. *குறித்த விடயத்திற்கான புதிய கருத்தியல் கோட்பாடு,* லக்லாவு, மவ்பி, சிஸெக், ஆக்ஸ்ஃபோர்ட் பிளாக்வெல்

உயன்கொட ஜயதேவ, 2005. *சிவில் சமாஜாயே இதிரிகரயா பாராயா* ராவய, நவம்பர்.

பெரேரா ராஜசிங்கம், நிமாந்தி. 2005 *கிழக்கின் தாய்வழிசார் அரசியல்.* பெண்களுக்கு எதிரான வன்முறை மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை: கொழும்பு ஐசிஈஎஸ்.

ஃபூக்கோ, எம். 1972. *அறிவுக் களஞ்சியம்,* லண்டன், டாவிஷ்டொக்.

மம்தானி, மஹ்மூத், 1996. *பிரஜையும் குடிமகனும்: சமகால ஆபிரிக்காவும் முன்னாள் காலனித்துவம் விட்டுச்சென்றவையும்,* பிறின்ஸ்டன் என்ஜே: பிறின்ஸ்டன் பல்கலைக்கழக அச்சகம்.

மல்கோத்ரா, தீபக் மற்றும் சுமனசிறி லியனகே, 2005. *நீண்டகால மோதல் களில் சமாதானப் பயிற்சிப்பட்டறைகளின் நீண்டகால விளைவுகள்,*




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முரண்பாட்டுத்தீர்வுக்கான ஜேர்னல், தொகுதி 49, இலக்கம் 6, பக்கம் 908–924.

லக்லோ, ஏர்னஸ்டோ, சன்டல் மவ்ஃபி, 2005. *மேலாதிக்கமும் சமூகமட்ட உபாயமும்: அடிப்படை ஜனநாயக அரசியலை நோக்கி.* நியூயார்க்: வேர்சோ.

லெடராக் ஜோன்போல், 1997. *சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்: பிளவுபட்ட சமூகங்களிடையே நிலையான நல்லிணக்கம்,* வாஷிங்டன் டி.சி: யுஎஸ். ஐ. பி. அச்சகம்.

லியனகே, சுமனசிறி, 2003. 'பிழையாக நடந்தது என்ன?' ஐலண்ட், மே 2004.

ஹாபர்மாஸ், ஜேர்ஜன், 1996. *ஏற்றுக்கொள்ளப்பட்ட விதி முறை களுக்கும் உண்மைகளுக்கும் இடையில்: சட்டம் ஜனநாயகத்தின் ஒரு சம்பாஷனைக் கொள்கைக்கான பங்களிப்புகள்,* கேம்பிரிட்ஜ், எம்.ஏ: எம் ஐரி. அச்சகம்.



# 11

## இலங்கையின் சமாதானச் செயன்முறைகள்: முன்னால் இருப்பது என்ன?*

பேர்ணாட் ஏ. பி. குணதிலக

2001 டிசம்பரில் இடம்பெற்ற நிர்வாக மாற்றத்துடன் இலங்கையின் தற்போதைய சமாதான நடவடிக்கைகள் ஆரம்பமாயின.

எவ்வாறாயினும் சந்திரிகா நிர்வாகம் நாட்டிய அடிக்கல்லின் மேலாகவே இந்த நடவடிக்கைகள் கட்டியெழுப்பப்பட்டன என்ற விடயத்தைக் கவனிக்க வேண்டியது முக்கியமானதொன்றாகும். அதில் மிகவும் முக்கியமான விடயமாக அமைவது இத்தகைய நடவடிக்கையில் விடுதலைப்புலிகளின் முக்கியத்துவத்தை அடையாளம் கண்டு கொள்ளலும் நோர்வே மூன்றாம் தரப்பு அனுசரணையில் ஈடுபட்டமையும் ஆகும்.

குறிப்பாகக் கூறினால், சடுதியாக இடம்பெற்ற இரு நிகழ்வுகளின் பின்னணியிலேயே சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என்ற உண்மை குறித்து நாம் விளங்கிக்கொண்டிருக்க வேண்டியது அவசியமானதாகும். அவையாவன: ஜூலை 2001இல் விடுதலைப் புலிகளால் சர்வதேச விமான நிலையமும் அதனை அண்டியிருந்த விமானப்படைத்தளமும் தாக்கப்பட்ட சம்பவமும் அதன்பின் 6 கிழமை கழித்து அமெரிக்காவில் 9/11இல் இடம்பெற்ற பயங்கரவாதிகளின் தாக்குதலும் ஆகும்.

விமான நிலையம் மீதான தாக்குதல் சம்பவமானது, யுத்தரீதியிலான தேர்வின், எல்லைகள் குறித்து இலங்கை அரசாங்கம் உணர்கின்ற

* வாஷிங்டன் டிசியில் 4 நவம்பர் 2005இல் இடம்பெற்ற இலங்கையின் சமாதானச் செயன்முறைகள் முன்னேற்றத்திற்கான அசாத்தியம் அல்லது ஏதாவது நம்பிக்கை என்ற கருப்பொருளிலான மகாநாட்டில் ஆற்றிய உரை. இதனைக் கிழக்கு–மேற்கு நிலையத்துடன் இணைந்து சிஎஸ்ஐஎஸ் ஏற்பாடு செய்திருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலைமையை உருவாக்கியிருந்தால், 9/11 இன் பின்னர் சர்வதேசப் பயங்கரவாதத்திற்கு எதிரான உலக சமூகத்தின் மனநிலையை விளங்கிக் கொண்டிருந்தால், சர்வதேசரீதியான சகிப்புத்தன்மையின் எல்லை குறித்து மேற்குறிப்பிட்ட இரண்டுமே விடுதலைப்புலிகளுக்குச் சமமான, சக்திவாய்ந்த ஞாபகமூட்டிகளாக இருந்தன.

அந்த ஆண்டு டிசம்பரில் இருதரப்பினரும் தற்காலிக ஓய்வுக்குத் தயாராக இருந்தனர். விடுதலைப்புலிகள் டிசம்பரில் ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்த அறிவிப்பை மேற்கொண்டபோது அரசாங்கமும் துரிதமாகச் செயல்பட்டது. இதன்விளைவாக 2002 பிப்ரவரியில் போர்நிறுத்த உடன்படிக்கை உத்தியோகபூர்வமாக மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் சர்வதேசச் சமூகத்தின் தரகுப் பிடிக்குள் ஓராண்டிற்குப் பிறகு சிக்கியது. மத்தியக் கிழக்கு நெருக்கடி மற்றும் தெற்கு சூடான், இந்தோனேசியாவின் அசே பிராந்திய மோதல்கள் குமுறிக்கொண்டிருந்ததன் பின்னணிக்கு மாறாக இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் மிகவும் வெற்றிகரமானவையாகக் கருதப்பட்டன.

எவ்வாறாயினும் இந்தச் சுபிட்ச மனோநிலை குறுகிய காலமே நீடித்தது. ஏனெனில், ஏப்ரல் 2003இல் 6 சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின் சமாதானப் பேச்சிலிருந்து விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்சமாக விலகிக்கொண்டனர். இந்த நடவடிக்கையுடன் மட்டும் திருப்தியடையாமல், பேச்சுவார்த்தைகளின்போது மிகவும் கஷ்டப்பட்டு ஒருங்கிணைந்த ஏனைய நடவடிக்கைகளையும் இடைநிறுத்திக்கொண்டது. வடக்கு, கிழக்கிற்கான உடனடி மனிதாபிமானப் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவின் (எஸ்ஹெச்ஐஆர்என்) செயல்பாடுகளும் இதில் அடங்கும்.

சடுதியான மனமாற்றமானது அந்த அமைப்பின் விசேட குணமாகும். முன்னரும் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளை அந்த அமைப்பு முடிவுக்குக் கொண்டுவந்தது. இந்தியா ஈடுபட்ட 1987இல் இடம்பெற்ற பேச்சுவார்த்தை, 1990இல் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசவுடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தை ஜனாதிபதி சந்திரிகாவின் முதல் நிர்வாகக் காலத்தில் ஏப்ரல் 1995இல் பேச்சுவார்த்தை ஆகியன முடிவுக்கு வந்தமையை இங்குக் குறிப்பிடலாம்.

1980களின் நடுப்பகுதியிலிருந்து விடுதலைப்புலிகளின் தவறான நடத்தைக்குச் சாட்சியமாக இருப்போர், 2003 ஏப்ரலில் சமாதான நடவடிக்கைகள் உண்மையிலேயே முடிவைச் சந்தித்துவிட்டன என்று நம்புவதைத் தவறெனக் கூற முடியாது. ஆனால், வரையறைகள் இல்லாமலும் அதிகளவிலான மீறல்கள் இடம்பெற்றும், இடம் பெற்றுக் கொண்டிருக்கின்ற யுத்தநிறுத்தமானது 3 வருடங்களின் பின்னரும்



தொடர்ந்தும் உயிர்வாழ்வதும் எந்தவொரு தரப்பினருமே அதனைக் கைவிட விரும்பாமையுமே யதார்த்தமாகும்.

## கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள்

சமாதான நடவடிக்கைகளின் எதிர்கால முன்னேற்றத்தில் நாம் மனப்பூர்வமாக ஆர்வம்கொண்டிருந்தால் ஏப்ரல் 2003இல் நாம் ஏன் முட்டுக்கட்டை நிலைக்குச் சென்றோம் என்பது குறித்துப் பரிசீலிப்பது அவசியமானதொன்றாகும். இந்தச் சமாதான நடவடிக்கைகள் நம்பிக்கையூட்டும் விதத்தில் முன்னேற்றமடைந்து வருவதாகத் தோன்றியபோதே முட்டுக்கட்டை நிலையை அடைந்தன.

நாம் செய்த தவறுகளை அடையாளம் கண்டுகொள்ளாவிடின், தவறான திருப்பங்கள் ஏற்படின் அந்தத் திருப்பமானது மோதலில் சம்பந்தப்பட்ட தரப்பினரைக் குறித்த இலக்கிலிருந்து திசை திருப்பிவிடின் நாம் புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்தமாட்டோம். இந்த வாய்ப்புகளைத் தாண்டிச் செல்லும்போதும் அவற்றைப் பயன்படுத்தமாட்டோம். இந்த அறிக்கையில் எம்மை முடிவின் இறுதிக்கு இட்டுச்சென்ற நான்கு காரணிகள் தொடர்பாகக் கவனம் செலுத்தவுள்ளேன்.

### 1. போர்நிறுத்த உடன்படிக்கையின் வரையறைகள்

முழுச்சமாதான நடவடிக்கைகளிலிருந்து பெற்ற ஒரேயொரு உண்மையான வெற்றி போர்நிறுத்த உடன்படிக்கையே என்று புலிகளின் பிரதமப் பேச்சுவார்த்தையாளர் அன்டன் பாலசிங்கம் தெரிவித்திருந்தார். ஆயினும், எனது அபிப்பிராயமானது இருதரப்பினரும் தேவையற்ற அவசரத்தை யுத்தநிறுத்தப் பேச்சுவார்த்தையின்போது காட்டியதே முதல் தவறாகும். இதுவே அமல்படுத்த முடியாத எதிர்பார்ப்புகளைத் தோற்றுவித்தது.

ஆரம்பத்திலிருந்தே சமாதான நடவடிக்கையில் இணைந்து செயல்பட்டவர் என்ற ரீதியில் நோர்வே அனுசரணையாளர்களுடன் முதல் நகல்வரைவுத் தொடர்பான ஆரம்பக்கட்ட கலந்துரையாடலைத் தெளிவாக ஞாபகப்படுத்துகிறேன். உத்தியோகப் பற்றற்ற முறையிலிருந்து போர்நிறுத்தத்தை மூன்றாம் மாதத்துக்கு நீடிப்பதற்கு முன்னர் பிப்ரவரி 2002இல் உத்தியோகபூர்வமாகக் கையெழுத்திடுவதற்கு அவர்கள் முன்னுரிமை கொடுத்தனர். உடன்படிக்கையிலுள்ள சாராம்சத்தைவிடத் துரிதமாகக் கையெழுத்திடுவதற்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டது.

உடன்படிக்கையில் இடம்பெற்றிருப்பவை குறித்து ஆராய்ந்து பார்ப்பதற்கும் தமது அவதானிப்புகளைத் தெரிவிப்பதற்கும் ஆயுதப் படைகளுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. இவை யாவற்றுக்கும் மேலாக நோர்வே தரப்பு தனது யோசனைகளைச் சேர்த்துக்கொள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வதற்கான அழுத்தத்தை கொடுத்தது. இவை விடுதலைப்புலிகளுக்கு அனுகூலங்களைக் கொடுப்பவையாக இருந்தன. இதனால் அந்த அமைப்புக்கு இதை ஏற்றுக்கொள்வதற்கான சிறந்த வாய்ப்புக் கிட்டியது. இதனாலேயே யுத்தநிறுத்த உடன்படிக்கையில் மூலவாக்கியத்தில் எந்தவொரு மாற்றத்தையும் மேற்கொள்ள அவர்களால் முடியவில்லை.

இதன் விளைவாக அரசாங்கமும் ஆயுதப்படைகளும் நிபந்தனைகளையும் செய்து முடிக்க வேண்டிய இலக்குகளையும் முடிக்க வேண்டியிருந்தது. மதவழிபாட்டு இடங்கள், ஆயுதப்படைகள் தங்கியிருந்த அரசக் கட்டிடங்கள் ஆகியவற்றிலிருந்து வெளியேற்றம் போன்றவற்றையே ஏற்க வேண்டியிருந்தது. அதுவும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால் இவை அமல்படுத்துவதற்குக் கடினமான விடயங்களாகும்.

இவை குறிப்பிட்ட காலவரையறைக்குள் ஆயுதப்படைகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆயத்தப்படுத்த முடியாத நிலைமையைத் தோற்றுவித்ததுடன் அளித்த வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்ற வில்லையெனப் புலிகள் இடைவிடாது அரசாங்கத்துக்கு எதிராக முறைப்பாடுகளைத் தெரிவிக்கவும் வாய்ப்பளித்தது. யுத்தநிறுத்த உடன்படிக்கையின் நகல்வரைவைப் பரிசீலிப்பதற்கு இருதரப்பும் சிறிது அதிக காலத்தை எடுத்துக்கொண்டிருக்கலாம் என்பதே எனது அபிப்பிராயமாகும். இதன் மூலம் அதிகளவு யதார்த்தபூர்வமான ஏற்றுக் கொள்ளக்கூடிய வரைவை இருதரப்பும் தயாரித்திருக்க முடியும். ஆனால் இது இடம் பெற்றிருக்கவில்லை.

**2. விடுதலைப்புலிகளால் இலக்கு எல்லைகள் மாற்றப்படுதல்**

ஆரம்பத்திலிருந்தே விடுதலைப்புலிகளின் பிரதான நோக்கமாக இருந்த விடயம் வடக்கு, கிழக்கில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமது ஆதிக்கத்தை விஸ்தரிப்பதாகும். இந்த நடவடிக்கைகளின் மூலம் யாழ்குடாநாட்டிலும் ஏனைய இடங்களிலுமிருந்து அரசப் படைகளை வெளியேற்றுவது நோக்கமாகும். பேச்சுவார்த்தையூடான இணக்கப்பாட்டுக்கு முன்னர் இதை மேற்கொள்வது புலிகளின் திட்டமாகும்.

இந்த நோக்கத்தை முன்கூட்டியே வென்றெடுப்பதற்கான அடிப்படைக் காரணமாகத் தமிழ் மக்கள் எதிர்நோக்கும், உயிர்வாழ்தல் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியதை முன்னிலைப்படுத்த வேண்டியிருந்தது. வடக்கு, கிழக்குக்குக் கொண்டுசெல்வதற்கு முக்கியமான பொருட்களுக்கு அரசாங்கம் தடைவிதித்திருந்தது. இவற்றை அகற்றுவதும் புலிகளின் வலியுறுத்தலாகும். இந்தத் தடைவிதிக்கப்பட்ட பொருட்கள் தமது நிலையை வலுப்படுத்த பயன்படுத்தப்பட்டவையாகும்.



புதிய நிர்வாகக் கட்டுப்பாடுகளை அகற்றியபோது ஆலிவர் ட்விஸ்ட் போன்று புலிகள் மேலதிக நிபந்தனைகளை முன்வைத்தனர். ஆயுதப் படைகள் அதி உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேற வேண்டும் என்பதே இக்கோரிக்கையாகும். அதி உயர்பாதுகாப்பு வலயக்காணிகளில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த வேண்டிய தேவை இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இது உயர்பாதுகாப்பு வலயத்தை முழுமையாக நீக்கினால் படையினரின் பாதுகாப்பு காப்பாற்றக் கூடிய அளவுக்கு இருக்காதென்று புரிந்துகொண்ட உண்மையை அலட்சியப் படுத்துவதாகும்.

படையினர் நிலைகொண்டுள்ள காணிகளில் இருந்து படிப்படியாக விலக்கிக்கொள்வதற்கான திட்டத்தை அரசாங்கம், புலிகள் மற்றும் யூஎன்ஹெச்சிஆரின் பிரதிநிதிகள் கூட்டாகத் தயாரித்தனர். ஆயினும், அதிஉயர்பாதுகாப்பு வலயத்திற்குள் இருக்கும் காணிகளும் மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படாவிடில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை ஆரம்பிக்க அனுமதிக்க முடியாதெனவும் அவர்கள் வற்புறுத்தினர்.

பாதுகாப்புத் தரப்புக் கரிசனைகளைத் தாங்கள் முன்வைத்த கோரிக்கைகள் மூலம் நியாயப்படுத்த முடியாததென்பதை உணர்ந்து கொண்ட புலிகள் பொதுமக்களை அணிதிரட்டி இராணுவ முகாம்கள் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தச் செய்தனர். சில முகாம்களுக்குள் பலாத்காரப் பிரவேசங்களும் இடம்பெற்று வந்தன.

**3. போர்நிறுத்த மீறல்களைக் கண்காணிப்பதிலுள்ள வரையறைகள்**

ஆரம்பம் முதல் சமாதான நடவடிக்கைகள் முட்டுக்கட்டை நிலையை அடையும்வரை சுமார் 50 பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுவின் அதிகாரம், பக்கச்சார்பற்ற செயல்பாடு, அவர்களின் தீர்ப்பு என்பவை தொடர்பாக விடுதலைப்புலிகள் போதியளவு மதிப்பளிக்க வில்லை.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவானது கண்காணிப்பை மேற்கொள்ளும் அமைப்பாகவே இருந்தது. இருதரப்புக்குமே தனது தீர்மானங்களை வலிந்து அமல்படுத்தும் ஆற்றலோ, அதற்கான ஆணையோ இதற்குக் கிடையாது. இருதரப்பினரும் அதன் தீர்ப்புகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கத் தயாராக இருக்கும்வரையே அதன் பணி சிறப்பானதாக இருக்கும்.

ஆரம்பம்தொட்டே கண்காணிப்பாளர்களின் தீர்ப்பு தொடர்பாகப் புலிகள் மதிப்பளித்துச் செயல்படவில்லை. ஓர் உதாரணமாக, அவர்களின் படகொன்று ஆயுதங்களுடன் செல்வதாகக் குற்றச்சாட்டு தெரிவிக்கப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டது. அது யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு முரண்பட்டதாகும். சோதனைக்காகக் கண்காணிப்புக்குழுவினர் படகில் ஏறியபோது அங்கிருந்த புலிகள் கண்காணிப்புக் குழுவின் ஆண் உறுப்பினர் ஒருவரை யும் பெண் உறுப்பினர் ஒருவரையும் படகிலிருந்து வெளியேறவிடாமல் மனிதக் கேடயமாகப் பயன்படுத்திக் கடற்படையினர் பதில் தாக்குதல் நடத்துவதைத் தவிர்த்துக்கொண்டு பாதுகாப்பாகத் தப்பிச் சென்றனர்.

இன்றுவரை புலிகள் தொடர்ந்து சிறுவர்களைக் கடத்துவதுடன், யூனிசெஃப்புடன் மேற்கொண்ட உடன்படிக்கையை அலட்சியம் செய்வதன் மூலம் ஐநா பாதுகாப்புச்சபையின் சீற்றத்துக்கு உள்ளாகி யுள்ளனர். கப்பம்கேட்டுப் பொதுமக்களைக் கடத்துகின்றனர். அரசியல் எதிரிகளையும் பொதுமக்களையும் நடைமுறையிலிருக்கும் யுத்த நிறுத்தத்தைப் பொருட்படுத்தாமல் படுகொலை செய்கின்றனர்.

இதன் விளைவாக 2005 செப்டம்பர் 30 வரை புலிகள் 3186 யுத்தநிறுத்த மீறல்களை மேற்கொண்டுள்ளனர். அதேசமயம் இக்காலப் பகுதியில் ஆயுதப்படைகளின் யுத்தநிறுத்த மீறல்கள் 144 ஆகும். இந்த யுத்த நிறுத்த மீறல்களில் ஆகக்கூடியதாக உள்ளது 2005 ஆகஸ்ட் 12இல் இடம் பெற்ற வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலைச் சம்பவமாகும்.

**4. சர்வதேசச் சமூகத்தின் பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்ட சமாதானப் படுத்தும் கொள்கை**

யுத்தநிறுத்த உடன்படிக்கை, சமாதான நடவடிக்கைகளுக்கு அப்பால் விடுதலைப்புலிகளின் தரப்பில் அவர்களின் தோற்றப்பாட்டில் தகுதி யான அதிகரிப்பு இடம்பெற்றதாகத் தென்படவில்லை.

2002இலிருந்து சர்வதேசச் சமூகத்தின் பிரிவுகளால் மேற்கொள்ளப் பட்ட சமாதானப்படுத்தும் கொள்கையானது எதிர்காலத்தில் இந்த அமைப்பு சிறப்பான நடத்தையைக் கொண்டிருக்கும் என்ற எதிர் பார்ப்பை உள்ளடக்கியது. ஆனாலும் அத்தகைய மாற்றம் தேவை யானது என்று போதியளவுக்குப் புலிகள் உணர்ந்துகொள்ளத்தக்கதாக சர்வதேசச் சமூகப்பிரிவினரின் சமாதானப்படுத்தும் கொள்கை அவர் களைத் தூண்டவில்லை. உண்மையில் இந்தக் கொள்கையானது புலிகள் தொடர்ந்தும் தமது கொள்கைகள், நடவடிக்கைகளை மறுமதிப்பீடு செய்ய உதவியதாகத் தோன்றுகிறது.

ராஜீவ் காந்தி உட்பட அவர்கள் முன்னர் மேற்கொண்ட படுகொலை களைப் போலவே கதிர்காமர் படுகொலையிலும் தமக்கிருந்த தொடர்பை மறுத்தனர். இந்தச் சம்பவம் சர்வதேசச் சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக் கியது. இது இந்த அமைப்பு தொடர்பாகப் பல நாடுகளின் அரசாங்கங்கள் கொண்டிருந்த கொள்கையை மீள்மதிப்பீடு செய்யும் நிலைக்கு இட்டுச் சென்றதாகவும் தென்படுகிறது.



இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் டோக்கியோ மகாநாட்டின் இணைத் தலைமைகள் 2005இல் செப்டம்பர் 19இல் கதிர்காமரின் படுகொலையை ஏகமனதாகக் கண்டித்திருந்தன. 'இந்தப் பிரக்ஞையற்ற பயங்கரவாத நடவடிக்கையானது மோதலுக்குச் சமாதானவழியில் அரசியல் தீர்வு காண்பதற்குப் பொறுப்பாக உள்ளவர்கள் கொண்டிருக்கும் ஈடுபாடு குறித்துச் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்று அவை குறிப்பிட்டிருந்தன'.

அத்துடன், 'விடுதலைப்புலிகள் சமாதான நடவடிக்கைகளில் உள்ள ஈடுபாட்டையும் மாற்றத்திற்கான விருப்பத்தையும் வெளிப்படுத்து வதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அவர்கள் அழைப்பு விடுத்தனர். அத்துடன் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப் படும் அரசியல் படுகொலைகள் உடனடியாக முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும், சிறுவர்களைப் படைக்குத் திரட்டுவதைப் புலிகள் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்' என்றும் அவர்கள் சுட்டிக்காட்டி இருந்தனர்.

செப்டம்பர் 26இல் ஐரோப்பிய ஒன்றியம் அசாதாரணமான அறிக்கையொன்றை விடுத்தது. அதில், 'புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்ப்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது'. 'அதேவேளை, உடனடியாக அமலுக்கு வரும் வகையில் மறு அறிவித்தல்வரை ஒன்றியத்தின் எந்த உறுப்பு நாடுகளும் விடுதலைப்புலிகளின் தூதுக்குழுக்களை வரவேற்பதில்லை என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் இணங்கியுள்ளது' என்று குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும் 'புலிகளால் சிறுவர்கள் படைக்குச் சேர்க்கப்படுவதும் தம்வசம் தடுத்துவைத்திருப்பதும் தொடர்வது பாரதூரமான விசனத்துக் குரிய நடவடிக்கையாகும். இந்த நடவடிக்கை தொடர்ந்தால் அதற்கு மன்னிப்பு கிடையாதென்பதை அவர்களுக்கு ஞாபகமூட்டுகிறோம்' என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**எதிர்காலம்**

எதிர்காலத்திற்கான நம்பிக்கையானது சம்பந்தப்பட்ட தரப்பினரின் விருப்பமும் ஆற்றலும் உள்நாட்டு மற்றும் சர்வதேச சூழ்நிலைக்களுக் கேற்ப எதிர்கொள்ள வேண்டிய சவால்களைக் கையாளுகின்ற முறை யிலுமே பிரதானமாகத் தங்கியுள்ளது.

இங்கு ஒரு விடயம் மிகத் தெளிவானது. அதாவது, மோதலில் சம்பந்தப்பட்ட தரப்பினர் சமாதானப்பாதையில் முன்னகர்ந்து சென்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீண்டும் முட்டுக்கட்டை நிலையொன்று ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இருதரப்பினரும், குறிப்பாகப் புலிகள், புதிய சிந்தனையைக் கொண்டிருக்க வேண்டும் என்பது மிகவும் தெளிவான விடயமாகும்.

### உள்நாட்டு நிலைமை

இலங்கையானது பல்லின, பல்மதக் கலாசாரச் சமூகமாகும். இலங்கை மக்கள் தத்தமது தனித்துவத்துக்கு அப்பால் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சமாதானமாகச் சேர்ந்திருந்தனர். அரசியல்ரீதியான நெருக்கு வாரங்களினால் ஏற்பட்ட மோதல்களினால் குறிப்பிட்ட சில காலங் களைத் தவிர அவர்கள் சமாதானமாக வாழ்ந்து வந்தனர்.

இலங்கை மக்களின் நீண்ட ஆவலாக உள்ள விடயம் தத்தமது வேறுபாடுகளின் மத்தியிலும் சமாதானமாக வாழ வேண்டும் என்பதே. பாதுகாப்பு, தமது தனிப்பட்ட இலக்குகளை, அவை பொருளாதாரமோ அல்லது மத, கலாசாரம் சார்ந்ததோ எவையாயினும், ஏனையோரால் தடங்கலின்றி முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் அவாவாகும். பொதுமக்களின் இந்த ஆவலே முன்னெடுத்துச் செல்லும் சக்தியாக விளங்குவதுடன் சம்பந்தப்பட்ட அனைத்து அரசியல் கட்சி களையும் மோதலுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டு மென்று அக்கறைகொள்வதற்குரிய ஊக்கத்தை தரும்.

இதன் முக்கியத்துவத்தை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டி யிடும் இருபிரதான வேட்பாளர்களும் அங்கீரிக்கின்றனர் என்பது தெளிவான விடயமாகும். அவர்கள் ஒவ்வொருவரும் மோதலுக்குத் தீர்வுகாணக் கைக்கொள்ள உத்தேசித்திருக்கின்ற நடைமுறைகள் தொடர்பாக வெளிப்படுத்துகின்ற மாற்றத்தின் தன்மை, அழுத்தி வலியுறுத்தும் விடயங்களுக்கு அப்பால், சமாதான வழியில் அரசியல் தீர்வுவொன்றைக் காண்பது இன்றியமையாதது என்ற நிலைப்பாட்டை அவர்கள் இருவரும் கொண்டுள்ளனர்.

அத்துடன் கட்சிசார்பற்ற இணக்கப்பாட்டுத் தீர்வை எட்டுவதற்கு முன் தேவைப்படும் ஒருவிடயமென்பதில் இருவருக்கும் இணக்கப்பாடு உள்ளது. மேலும் எத்தகைய இணக்கப்பாட்டை எட்டினாலும் இலங்கை மக்களால் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதே நியாயபூர்வமானது என்றும் இவர்கள் கருதுகின்றனர்.

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை சமாதான நடவடிக்கைகள் வெற்றிபெறுவதற்குப் பல்வேறுபட்ட முக்கியமான நடவடிக்கைகளை அவர்கள் எடுக்க வேண்டிய தேவை உள்ளது. யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தீர்ப்புகளுக்குத் தாங்கள் கீழ்ப்படிய வேண்டும் என்பதில் அவர்கள் தெளிவான புரிந்துணர்வைக் கொண்டிருத்தல் வேண்டும்.



இந்த முறை அவர்கள் சமாதான நடவடிக்கைகளில் அதிகளவு ஒழுங்குமுறையிலான அணுகுமுறையைக் கைக்கொள்வதுடன் பேச்சு வார்த்தையாளர்கள் மனிதாபிமான மற்றும் அடிப்படை விவகாரங்கள் குறித்தும் பேச இடமளிக்க வேண்டும். முன்னர் செய்தது போன்று அடிப்படை விடயங்கள் குறித்துப் பேசுவதை தவிர்த்துவிடக்கூடாது.

2002 டிசம்பரில் ஒஸ்லோவில் எட்டப்பட்ட தீர்மானத்திற்கமைய ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டிக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட உள்ளக சுயநிர்ணய விதிமுறையைக் கொண்ட தீர்வொன்றைக் காண்பதற்கு இதயசுத்தியுடனான முயற்சி முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதிலும் முக்கியமாக இத்தகைய தீர்வானது சகல சமூகங்களாலும் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தாலும், ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக இருக்க வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் வளர்ச்சிபெறுகின்ற நிலவரம் தொடர்பாக அமைப்பானது முடிவுக்கு வருவதுடன் கிழக்கு மாகாணம் முரண் பட்டு நிற்கும் விடயங்களுக்கு அரசாங்கத்தைக் குற்றம்சாட்டாமல் தீர்வொன்றைக் காணவேண்டும்.

இதற்கு சம அளவில் முக்கியமான விடயம் தாங்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழும் மக்களின் மனித உரிமை விவகாரங்களாகும். மனித உரிமைகளுக்கான சர்வதேச ஆலோசகர் அயன் மார்ட்டினுடைய இலங்கை பயணத்திற்குப் பின்னரும்கூடத் தமது பகுதியிலுள்ள மனித உரிமை விவகாரங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் புலிகள் தவறிவிட்டனர்.

அத்துடன் எந்தவிதமான இடையூறுகளோ அச்சுறுத்தலோ இல்லாமல் அரசியல்கட்சிகள் செயல்படுதற்கு இடமளிக்கப்பட வேண்டும். அப்போதே விடுதலைப்புலிகள் ஆதிக்கம் செலுத்தும் வட–கிழக்குப் பகுதிகளில் ஜனநாயகம் வேர்விடும். வட–கிழக்கிலுள்ள முஸ்லிம், சிங்களச் சமூகங்களின் நலன்கள் மறந்துவிடக்கூடியவை அல்ல என்பதை யும் அவை அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படக்கூடாது என்பதையும் விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### சர்வதேசச் சூழ்நிலைகள்

இலங்கைத் தமிழருக்காக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுவதென விடுதலைப்புலிகள் முடிவுசெய்த 1970களின் நடுப்பகுதியிலிருந்து உலகம் கணிசமான அளவு மாற்றமடைந்தது. இதன் விளைவாக இந்த அமைப்பானது தனது நோக்கங்களை வென்றெடுப்பதற்கான கொள்கைகள், நடவடிக்கைகள், உபாயங்களில் உள்ளக மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. சர்வதேச நிலைமைகளில் ஏற்படும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாற்றத்திற்கமைய இதற்கான நடவடிக்கைகளைக் கொண்டிருக்க வேண்டியிருந்தது.

தகுந்த காரணத்துடன் பல நாடுகள் ஏற்கனவே அமைப்பைத் தடை செய்துள்ளன என்பது குறித்தும் ஏனையோர் தடைசெய்யப்போவதாக அச்சுறுத்துகின்றனர் என்ற உண்மையை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு எதிராகப் பலகட்டுப்பாடுகள், தடைகள் விதிக்கப்பட்டிருந்தும் கதிர்காமர் படுகொலை இடம் பெற்ற காலப்பகுதியிலிருந்து கடந்த சில மாதங்களில் புலிகள் 44 கொலைகளைச் செய்துள்ளனர். இது உலகின் பார்வைக்குக் கௌரவத்தை நாடும் அவர்களின் தேடலுக்கு துணை நிற்கமாட்டாதென்பது உண்மை.

விடுதலைப்புலிகளின் இந்த நடவடிக்கைகள் இலங்கை தொடர்பான டோக்கியோ பிரகடனத்தின் கொள்கைக்கு முரணானதாகும். அந்தப் பிரகடனத்தை 2003 ஜூனில் 51 நாடுகள் அங்கீகரித்திருந்தன. நாட்டை, குறிப்பாக வட-கிழக்கை, புனரமைப்பதற்கு உதவியளிப்பதாக அந்தப் பிரகடனத்தில் உறுதிமொழியளிக்கப்பட்டது. அதில் விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு அமையச் செயல்பட வேண்டும் என்றும் ஜனநாயகரீதியான கருத்துப் பேதத்துக்கு இடமளிக்கப்பட வேண்டுமெனவும் மனித உரிமைகள் தொடர்பான வன்முறைகளைத் தடுத்துநிறுத்த வேண்டுமெனவும் முஸ்லிம்களின் நலன்களை உறுதிப் படுத்த வேண்டும் என்றும் இறுதியாக ஆயுதங்களைக் களைய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

சூடான், வட அயர்லாந்து, பான்டாசு போன்ற இடங்களிலுள்ள பிரிவினைவாதப் போராளிக் குழுக்கள் பயங்கரவாதம், பிரிவினை வாதத்தைக் கைவிட்டு அரசியல் பாதையில் தமது இலக்குகளை வென்றெடுக்கும் வழிமுறைகளை நாடியுள்ள நிலையில் இதற்கு எதிர்மாறாக விடுதலைப் புலிகள் உலகை ஏமாற்றப் பிடிவாதம் பிடிக்கின்றனர்.

அண்மைக் காலங்களில் நடத்தப்பட்ட மோசமான பல தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் உட்படக் குறிப்பிட்டுக் கூறக்கூடிய பயங்கரவாத ஆற்றல்களைக் கொண்டிருக்கும் விடுதலைப்புலிகள் 9/11க்குப் பின்னரான காலப்பகுதியில் சர்வதேசப் பாதுகாப்புக்குத் தொடர்ந்தும் பாரதூரமான அச்சுறுத்தலாக உள்ளனர்.

இனப்பிரிவினை குறித்த மோதலில் சம்பந்தப்பட்ட இருதரப் பினருக்கும் இதுவொரு நீண்ட பாதையாக இருப்பதுடன் இலங்கை மக்களுக்கு உண்மையிலேயே ஒரு கடினமான பாதையாகவும் உள்ளது.



அழிவைத்தரும் மோதலுக்கு மத்தியிலும் வருடாந்தம் பொருளாதார வளர்ச்சிக்கான பாரிய ஆற்றலை நாடு வெளிப்படுத்துகின்றது.

பேச்சுவார்த்தை மூலம் காணப்படும் தீர்வானது நாட்டிலுள்ள அனைத்து மக்களும் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்த உதவுவதுடன் அனைவரும் சமாதானமாகவும் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு இடமளிக்கும் அந்த நாள் விரைவில் உதயமாகும் என்பது எமது நம்பிக்கை.

●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

12

# இலங்கையின் சமாதானச் செயன்முறைகளும் முஸ்லிம் பிரச்சினையும்

எம்.ஐ.எம். முஹைறதீன்

## அறிமுகம்

கடந்த இரு தசாப்த காலமாக முஸ்லிம் மக்கள் தொடர்ச்சியான பல துன்பங்களையும் மனவடுக்களையும் அனுபவித்திருக்கிறார்கள். 15 வருடங்களுக்கு முன்னர் வடமாகாணத்திலிருந்து ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டதுடன் பள்ளிவாசல்கள் மற்றும் வணக்க ஸ்தலங்கள்மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களின் உயிர்களும் பலியாக்கப் பட்டன. சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் மக்கள் தொடர்பான முக்கியமான பிரச்சினைகளை எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முஸ்லிம் மக்கள் தமது நியாயமான கோரிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வன்முறைகளை நாடவில்லை. வரலாற்றை எடுத்துப் பார்த்தால் முஸ்லிம் மக்கள் தம்முடன் வாழ்கின்ற மற்றைய இனத்தவர் களுடன் – அவர்கள் சிங்களவராயினும் சரி தமிழர்களாயினும் சரி – ராஜதந்திரரீதியிலும் அஹிம்சைரீதியிலுமே தொடர்புகளைப் பேணி வந்துள்ளார்கள். முஸ்லிம் மக்கள் எப்பொழுதும் மற்றைய இனத்தவர் களுடன் ஒற்றுமையாக வாழ்வதையே நாடிநின்றனர்.

தமிழர்களின் வரலாற்றுரீதியான வாழ்விடமும் முஸ்லிம்களின் மரபு வழித் தாயகமுமான வடகிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களின் தனிப் பட்ட அரசியல் மற்றும் கலாசார அடையாளத்தை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இலங்கை அரசாங்கமும் வட, கிழக்கு முஸ்லிம் பிரச்சினைகளை ஏற்றுக்கொண்டுள்ளதுடன் இந்த இனப்பிரச்சினைக்கு ஒரு நீதியானதும் நியாயமானதுமான தீர்வைக் காண்பதற்கு உறுதியாக உள்ளது.



நோர்வே அரசாங்கத்தால் செய்யப்படும் அனுசரணையானது இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்வைக் காண்பதற்கான ஒரு அரிய சந்தர்ப்பத்தை வழங்குகிறது என்பதே எமது கருத்தாகும்.

சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான முந்தைய அரசாங்கம் பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, நோர்வே அரசாங்கத்தையும் அனுசரணை வழங்குமாறு அழைப்பு விடுத்தது. எனினும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் துணிகரமாக விடுதலைப்புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டுப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு வழிவகுத்தது.

### இந்திய-இலங்கை ஒப்பந்தம், ஜூலை 1987

இந்திய-இலங்கை ஒப்பந்தம் வடக்கு, கிழக்கு மாகாணங்களை வெவ்வேறான மாகாணங்களாகக் கொள்ளவில்லை. வட, கிழக்கு மாகாணங்களைத் தமிழ்பேசும் மக்களின் வரலாற்றுரீதியான வாழ்விட மாகக் கருதியமை ஓர் அடிப்படைத் தவறாகும்.

முஸ்லிம் மக்கள் தமிழ் மொழியையே பேசினாலும் அவர்கள் அரசியல்ரீதியாகவும் இனரீதியாகவும் ஒரு தனியான, தனித்துவமான இனக்குழுமமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்கள். இந்திய-இலங்கை ஒப்பந்தமானது இந்த யதார்த்தத்தைக் கணக்கிலெடுக்கவில்லை.

வட-கிழக்கு மாகாணமானது தமிழ்பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடம் என்பதற்குப் பதிலாகத் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் வரலாற்றுரீதியான வாழ்விடமாகக் கொள்ளப் பட்டிருக்க வேண்டும். ஏனெனில், இந்திய வம்சாவளிவந்த மலையகத் தமிழரும் தமிழையே பேசுகிறார்கள்.

வட, கிழக்கு மாகாண இணைப்பானது ஒருவருட காலத்திற்கு மட்டுமே என ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபோதும் 18 ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையிலும் முன்மொழியப்பட்ட சர்வஜன வாக்கெடுப் பானது இதுவரை கிழக்கு மாகாணத்தில் நடத்தப்படவில்லை. தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளுக்கிடையிலான சந்திப்புகளின்போது கலந்து கொண்ட தமிழ்க் கட்சிகள், சர்வஜன வாக்கெடுப்பானது ஒப்பந்தத்தின் படியும் அரசியலமைப்பின்படியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளபோதிலும் அவ்வாறான ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கோ, அமல் படுத்துவதற்கோ ஒருபோதும் உத்தேசிக்கப்படவில்லை எனக் கூறினர். முஸ்லிம்கள் இதற்கு இணங்கவில்லை. ஏனெனில், இது தொடர்பாக அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜே.ஆர். ஜயவர்தனவும் வட-கிழக்கு இணைப்பை ஒரு வருடத்தின் பின் சர்வஜனவாக்கெடுப்பின்போது பிரிப்பதற்கேதுவாகப் பிரசாரம் செய்வதாக முஸ்லிம், சிங்கள மக்களிடம் உறுதி கூறியிருந்தார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரிவு 2.16 (2)இன்படி, வட-கிழக்கு மாகாணத்தில் வாழும் அனைத்து இன மக்களினதும் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு இந்திய, இலங்கை அரசாங்கங்கள் ஒத்துழைப்புடன் செயலாற்றுமெனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றபோதிலும் முஸ்லிம் மக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்கும் கொலைகளுக்கும் இனத் துடைப்பிற்கும் உள்ளாக்கப்பட்டனர். இந்திய ராணுவத்தினரினாலும் ஈபிஆர்எல்எஃப், ஈஎன்டிஎல்எஃப் மற்றும் டெலோ அமைப்புகளை உள்ளடக்கிய தமிழ்த் தேசிய இராணுவத்தினாலும் முஸ்லிம் மக்கள் இவ்வாறு துன்புறுத்தப்பட்ட வேளை இந்திய அரசோ, இலங்கை அரசோ உதவிக்கு வரவில்லை.

1986ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் தேதிக்கும் 19ஆம் தேதிக்குமிடையில் பேசப்பட்ட முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிபந்தனையின் அடிப்படையிலேயே இந்திய-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையிலான பரஸ்பர விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காகக் கிழக்கு மாகாண முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியாவிற்கு அழைக்கப்படவிருந்தபோதும் இந்திய அரசின் தலையீடு காரணமாக அது நடைபெறவில்லை.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரிவு 2.15இன்படி ஒப்பந்தமானது கையெழுத்திடப்பட்டு 6 மாதங்களுக்குள் முஸ்லிம்களின் எதிர்காலம் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டிருக்க வேண்டும். எனினும் வட, கிழக்கு முஸ்லிம்களையும், அவர்களது நிலைமையையும் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டவுடனும் வட, கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டவுடனும் இந்தியா மறந்துவிட்டது.

இவ்விரு மாகாணங்களினதும் தற்காலிக இணைப்பால் பாதிக்கப்பட்ட ஒரேயொரு தரப்பினர் முஸ்லிம்களே என்பதை இந்திய-இலங்கை ஒப்பந்தம் கவனத்திலெடுக்கத் தவறிவிட்டது. கிழக்கு மாகாணத்தில் மட்டுமே முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர் என்பது முக்கியமான விடயமாகும். தற்போதைய கணக்கீட்டின்படி கிழக்கு மாகாணத்தில் 41 சதவீதமான முஸ்லிம்களும் 35 சதவீதமான தமிழர்களும் 26 சதவீதமான சிங்களவர்களும் வாழ்கின்றார்கள். இது விடுதலைப்புலிகளின் சர்வாதிகாரத் தந்திரோபாயத்திற்குப் பெரும் இடைஞ்சலாக உள்ளது.



### எல்டிடிஈ தலைவரின் ஊடகவியலாளர் மகாநாடு, 10 ஏப்ரல் 2002

1990ஆம் ஆண்டு வடமாகாணத்திலிருந்து ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்பட்டமை மற்றும் கிழக்கிலே பள்ளிவாசல்களில் இடம்பெற்ற முஸ்லிம் படுகொலைகள் குறித்துக் கேட்டதற்குப் பதிலளித்த அன்டன் பாலசிங்கம் பின்வருமாறு தெரிவித்தார்: 'கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களுக்காக நான் முஸ்லிம் மக்களிடம் மன்னிப்புக் கேட்டுள்ளேன். இப்பிரச்சினைகளை அவர்களுடன் பேசித் தீர்த்துக்கொள்வதற்கு நாம் தயாராக உள்ளோம். இவையனைத்தும் யுத்தத்தினால் ஏற்பட்ட வெளிப்படையான வன்முறைகள் என்பதை நாம் அறிவோம். எமது மக்களும் துன்பப்பட்டுள்ளார்கள். இந்த யுத்தத்திலே நாம் 60,000 பொதுமக்களையும் 17,000 போராளிகளையும் இழந்துள்ளோம். தெற்கிலே பல வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான சம்பவங்கள் தொடர்வதை நாம் விரும்பவில்லை. ஆதலாலேயே ஒரு யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடித்துப் பேச்சுவார்த்தையை மேற்கொள்வதற்கு நாம் தீர்மானித்தோம். இதுவரை மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களைப் பொறுத்தவரை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானையும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமையும் பேச்சுவார்த்தைக்காக அழைத்துள்ளோம். அவர்கள் வன்னிக்கு வரவிருக்கிறார்கள். அவர்களுடன் ஒரு அர்த்தபுஷ்டியான முறையில் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து ஒரு இறுதித் தீர்வை எட்டுவதற்கு நாம் எவ்வாறு அவர்களுக்கு உதவமுடியுமெனத் தீர்மானிக்கவுள்ளோம்.'

கடந்த 12 வருடங்களாக அகதி முகாம்களில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்புவதற்கு ஏதேனும் காத்திரமான நடவடிக்கை எடுத்துள்ளீர்களா? என்ற கேள்விக்குப் பதிலளித்த வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறினார்: 'இந்த மக்கள் திரும்புவதற்கு ஏதுவான உகந்த சூழ்நிலைகள் உருவாக்கப்பட வேண்டும். அதன் பின்னர் முஸ்லிம் மக்கள் வந்து குடியமருமாறு நான் கோரிக்கை விடுப்பேன்.'

பேச்சுவார்த்தைகளின்போது முஸ்லிம் தரப்பு பங்குபெறுவதற்கு விடுதலைப்புலிகள் அனுமதியளிப்பார்களா? என்ற கேள்விக்குப் பதிலளித்த பிரபாகரன் கூறினார்: 'நிச்சயமாக முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை நாம் அனுமதிப்போம். தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும்போது முஸ்லிம்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படுவது அவசியமாகும்.'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## விடுதலைப்புலிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸிற்குமிடையிலான உடன்படிக்கை, 13 ஏப்ரல் 2002

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் அழைப்பை ஏற்று 2002ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமும் அவரது கட்சியைச் சார்ந்த ஐவரும் வன்னிக்கு சென்றார்கள்.

விடுதலைப்புலிகள் சார்பாக அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், மட்டக்களப்பு அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா, திருமலை மாவட்டத் தளபதி கேணல் பதுமன் மற்றும் திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் பங்குபெற்றனர்.

வட, கிழக்கிலே வாழ்கின்ற முஸ்லிம்கள் எதிர்நோக்கும் நடைமுறைப் பிரச்சினை தொடர்பாக ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப் பட்டது. யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீளக்குடியேற வருமாறு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அழைப்புவிடுத்தார். இந்த மீள்குடியேற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்கு விடுதலைப்புலிகளையும் முஸ்லிம் காங்கிரஸையும் உள்ளடக்கிய ஒரு கூட்டுக் குழுவை அமைக்கவும் முடிவு செய்யப்பட்டது. அதே போன்று கிழக்கு மாகாணத்திலிருந்தும் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர்வதற்கேற்ற சூழ்நிலைகளை உருவாக்கவும் முடிவுசெய்யப்பட்டது.

ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள்:

- வடகிழக்கிலே வாழ்கின்ற முஸ்லிம்களின் பயிர்ச்செய்கை (விவசாயம்) செய்யப் படாத நிலங்களில் மீள்பயிர்ச்செய்கைக்கு உதவுதல்.
- விடுதலைப்புலிகள் கிழக்குமாகாண முஸ்லிம்களிடமிருந்து பணம் பறிப்பதை நிறுத்துதல்.
- வட, கிழக்கு மாகாணத்தில் இருக்கும் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழு ஒன்று முஸ்லிம் காங்கிரஸால் உருவாக்கப்பட்டு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினையை விடுதலைப்புலிகளின் மூத்தத் தலைவர்களுடன் கலந்துரையாடுவதும் தமிழ்-முஸ்லிம் உறவை வளர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்.
- இவ்வாறான உயர்மட்டச் சந்திப்புகளைத் தொடர்ந்தும் நடத்துதல்.
- நடைபெறவிருக்கும் அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமான பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் ஒரு குழுவாகப் பங்குபெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.



- வட, கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஒரு கொள்கை அடிப்படையில் அணுகுவதற்கும் அவர்களின் தனித்துவமான அரசியல், கலாசார மற்றும் இன உரிமைகளை விருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல்.
- முஸ்லிம் காங்கிரஸ் பெரும்பான்மையான முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளமையால் வட-கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினை தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸுடனேயே பேசுதல்.

## சமாதானப் பேச்சின் வஞ்சகத் தன்மை

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் மற்றும் விடுதலைப்புலிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்குமான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பொது மக்களின் பாதுகாப்பை வலியுறுத்துகின்றபோதிலும் விடுதலைப் புலிகள் நாளாந்தம் முஸ்லிம்களையும் தமது அரசியல் எதிரிகளையும் கொன்றனர். கண்காணிப்புக் குழுவினது எச்சரிக்கைகளோ அல்லது சர்வதேசச் சமூகத்தின் அழுத்தங்களோ விடுதலைப்புலிகள்மீது எவ்விதத் தாக்கத்தையும் செலுத்தவில்லை. அண்மையில் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களமானது கிண்ணியா முகாம் பற்றியும் விடுதலைப்புலிகளின் தமிழ் எதிரிகள் கொல்லப்படுவது பற்றியும் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது. எனினும், விடுதலைப்புலிகளின் பதிலானது துப்பாக்கியைக் கிழக்கில் உள்ள முஸ்லிம்கள்மீது திருப்புவதாகவே அமைந்தது. விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்படுகின்ற கொலைகள், கடத்தல்கள், சித்திரவதைகள், பணப்பறிப்பு என்பன தெட்டத் தெளிவான யுத்தநிறுத்த மீறலாயினும் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களின் எச்சரிக்கை, கோரிக்கைகளின் மத்தியிலும் தொடர்ந்த வண்ணமுள்ளன. அரசாங்கத்தால் வழங்கப்படும் பாதுகாப்பில் நம்பிக்கை இழந்த பாதிக்கப்பட்ட இனக் குழுமங்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதங்களைத் தூக்குவதற்கு விளைகின்றன.

முஸ்லிம் மக்களின் பொருளாதார பலத்தைப் பலவீனப்படுத்துவதே விடுதலைப்புலிகளின் அரசியல், இராணுவ ரீதியான தந்திரோபாயமாகும். இதை அடைவதற்காக விடுதலைப்புலிகள், மாற்று தமிழ் இயக்கங்களுக்குச் செய்ததைப் போன்று முஸ்லிம்களின் பொருளாதார, வர்த்தக மையங்களை இலக்கு வைத்திருக்கிறார்கள். வர்த்தகப் பொருட்களைக் கொள்ளையிடுவது, வர்த்தகர்களைக் கப்பம் பெறுவதற்காகக் கடத்தும் போக்கு வட, கிழக்கிலே காணப்படுகின்றது. யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட பின்னர்கூட விடுதலைப்புலிகளால் தூண்டிவிடப்படுகின்ற மக்களால், ஆர்ப்பாட்டங்களின்பொழுது முஸ்லிம் மக்கள் பள்ளிக்குச் செல்வதுகூட மறுக்கப்பட்டிருக்கிறது. மேலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூதூர் மற்றும் வாழைச்சேனைப் பகுதிகளில் அண்மையில் இடம் பெற்ற சம்பவங்களின்போது விடுதலைப்புலிகளும் ஏனைய தமிழ் ஆயுதக்குழுக்களும் 13 முஸ்லிம்களைக் கடத்தியதுடன் 150 மில்லியனுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய சொத்துகளையும் அழித்துள்ளனர்.

இனப்பிரச்சினையில் முஸ்லிம்கள் ஒரு நேரடியான தரப்பாக இல்லாவிடினும் அவர்கள் பெருமளவு துன்பத்தை அனுபவித்திருக்கிறார்கள் என்பதை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் ஏற்றுக்கொண்டுள்ளனர். எனினும், புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டபோது தமிழ் மக்களின் நலன்களை மாத்திரமே தாம் கருத்தில் கொண்டு செயல்பட்டதாகவே விடுதலைப்புலிகளின் தளபதி கேணல் கருணா சுவிட்சர்லாந்திலே தெரிவித்திருந்தார். மேலும், கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரம் முஸ்லிம்களின் கைகளிலேயே தங்கியிருப்பதாகவும் அந்நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார். தற்பொழுது முஸ்லிம் மக்களிடம் இருந்து அவர்களது வருமானத்தின் 5 சதவீதம் வருமான வரியாக அறவிடப்படுகின்றது. இது அவர்களைத் தற்போதைக்கு மகிழ்ச்சிப்படுத்தும் நோக்குடனேயே செய்யப்படுகிறது. எனினும் விரைவில் அவ்வரியை 20 சதவீதமாக உயர்த்தவேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார். அவரின் இப்பேச்சானது விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் நடத்தப்படுகின்ற ஐபிசி வானொலி மூலம் ஒலிபரப்பப்பட்டது.

5 நாடுகளில் வெளியிடப்படுகின்ற ஈழநாடு என்ற பத்திரிகை தனது ஜனவரிமாத 20ஆம் வெளியீட்டில் மட்டக்களப்பிலே விடுதலைப் புலிகளின் தலைவர்கள் உரையாற்றிய ஒரு கூட்டம் பற்றிய செய்தியை வெளியிட்டிருந்தது. அங்கு இடம்பெற்ற உரைகளின் சாரமாக அமைத்தது அவர்களுக்குச் சமாதான முயற்சியில் நம்பிக்கையில்லை என்பதாகும். அவர்களைப் பொறுத்தமட்டில் தற்போதைய சமாதான முயற்சியானது, தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை எட்டுவதற்குச் சிங்களவர்கள் முன்வரமாட்டார்கள் என்பதை உலகத்திற்குக் காட்டுவதற்கே மேற்கொள்ளப்படுகிறது.

இதன்படி பார்த்தால் ஒரு மாற்று அரசியல் திட்டத்திற்கு அவர்கள் இணங்கமாட்டார்கள் என்பதும் எந்தவொரு சிங்களக் கட்சியாலும் அரசியலமைப்பைத் திருத்துவதற்கான மூன்றிலிரண்டு பெரும்பான்மையையும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலமான மக்களின் அனுமதியையும் பெற்றுக்கொள்ள முடியாது என்பதும் தெளிவான விடயங்களாகும்.

1990 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்றிய நடவடிக்கையை முன்னின்று நடத்திய புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மீண்டும் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பியுள்ளார். யாழ்ப்பாணத்திற்குத் திரும்பி வந்துள்ள மிகக் குறைவான முஸ்லிம் மக்களின் கவலை என்னவென்றால் தமது பாதுகாப்பு மற்றும் இடம்பெயர்ந்து வாழும் முஸ்லிம் மக்கள்மீதான கவனிப்பின்மையாகும்.



1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் 3,537 வீடுகளிலும் 194 அரச விடுதிகளிலும் மொத்தமாக 18 ஆயிரம் அளவிலான முஸ்லிம் மக்கள் வாழ்ந்தனர். அவர்கள் நான்கு ஆரம்பப் பாடசாலைகளுக்கும் இரண்டு உயர்நிலைப் பாடசாலைகளுக்கும் தமது பிள்ளைகளை அனுப்பியதுடன் 16 பள்ளிவாசல்களில் தொழுகை நடத்தினர். நடைபாதை வியாபாரம், கடை, தையல் மற்றும் பழைய இரும்பு வியாபாரம் செய்யும் குறைந்தளவான முஸ்லிம்களே தற்போது யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர். எனினும், விடுதலைப்புலிகளின் தரகர்கள் தற்போது வியாபாரத்தில் ஆதிக்கம்பெற்றுவிட்டதால் முஸ்லிம்களுக்கு யாழ்ப் பாணத்தில் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவது பெரும் கஷ்டமாகும். அத்துடன் அரச அதிபரின் அனுமதியுடன் தங்களது வீடுகளில் தமிழர்கள் குடியிருப்பதையும் யாழ்ப்பாணம் திரும்பிய முஸ்லிம்கள் கண்டனர்.

விசேடச் செயல்பாட்டுக் குழு, முக்கியமான மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு சம்பந்தமான உபகுழு (எஸ்ஐஹெச்ஆர்என்) மற்றும் வட கிழக்கு மாகாணத்திற்கானத் தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு போன்ற பலவிதமான வழிமுறைகள் விடுதலைப்புலிகளால் முன்வைக்கப் பட்டிருக்கின்றன. இதன் முக்கிய நோக்கம் யாதெனில், மத்திய அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைச் சர்வதேசத்தின் உதவியுடன் வட, கிழக்கிற்கோ அல்லது விடுதலைப்புலிகளுக்கோ மாற்றுவதாகும்.

இதன் மூலம் விடுதலைப்புலிகள் வட, கிழக்கின் ஏகப் பிரதிநிதிகள் தாங்களென்ற சட்ட அங்கீகாரத்தையும் சர்வதேச ஆதரவையும் பெற்றுக் கொள்ள முயல்கின்றார்கள். வட, கிழக்கு எனும்போது அது முஸ்லிம்களையும் உள்ளடக்கிய தமிழ்ப்பேசும் மக்களின் வரலாற்றுரீதியான வாழ்விடமாகும்.

தற்போது வட, கிழக்கிலே இரண்டு இராணுவமும் இரண்டு கடற்படையும் உள்ளன. புரிந்துணர்வு உடன்படிக்கையானது இருதரப்பினதும் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை வரையறை செய்துள்ளதுடன் ஏற்றுக்கொண்டும் உள்ளது. விடுதலைப்புலிகளின் தற்போதைய நடவடிக்கைகளைப் பார்க்கும்போது வட, கிழக்கிலே ஏற்கனவே தமிழீழம் உருவாக்கப்பட்டுவிட்டது எனச் சந்தேகப்படுவதற்கு முஸ்லிம் மக்களுக்குக் காரணமிருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் நிர்வாக நடவடிக்கைகளுக்காகப் புலிகளின் அலுவலகங்கள் திறக்கப்படல், வரிவிதிப்பு, பணப்பறிப்பு, தனியான வங்கிச் செயல்பாடு, தனியான பொலிஸ், நீதித்துறை மற்றும் பயண அனுமதி வழங்குதல் போன்ற புலிகளின் செயல்பாடுகள் பின்வரும் பல கேள்விகளை எழுப்புகின்றது:

1. வட, கிழக்கிலுள்ள முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கு யார் பொறுப்பு?
2. ஒரு வருடத்திற்குப் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்ற நிபந்தனையினடிப்படையில் தற்காலிகமாக வடக்கு, கிழக்கு இணைப்பு மேற்கொள்ளப்பட்டபோதும் கடந்த 15 வருடமாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. 2002ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் தேதி நடத்தப்பட வேண்டிய சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படாத நிலையில், முஸ்லிம்களைக் கிழக்கிலிருந்து வெளியேற்றும் எண்ணத்துடன் அவர்களைக் கொன்றும் அவர்களது வாழ்வாதாரங்களை அழித்தும் வரும் விடுதலைப்புலிகளின் ஆதிக்கத்திற்குட்பட்டுச் செயல்படவிருக்கும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காகச் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தாமலேயே வட, கிழக்கு இணைப்பை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமா?
3. கடந்த 12 வருடங்களாக, கலைக்கப்பட்ட வட, கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படவில்லை. அரசியலமைப்பிற்கான 13ஆம் திருத்தம் வட, கிழக்கில் ஏதேனும் பயனை ஏற்படுத்தி யுள்ளதா? ஜனாதிபதி தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் ஒழுங்காக நடத்தப்பட முடியுமானால் ஏன் வட, கிழக்கு மாகாண சபைத் தேர்தலைக் குறித்த தேதியில் நடத்த முடியாது?
4. இடைக்கால நிர்வாக முறையானது எவ்வாறு எவ்வளவு காலத்திற்கு உருவாக்கப்படப்போகிறது? இது 13ஆம் திருத்தத்திற்கு உட்பட்ட தாக அமையுமா அல்லது 13ஆம் திருத்தத்திற்கும் 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாணசபைச் சட்டத்திற்கும் அப்பால் சென்று உருவாக்கப்படுமா? வட, கிழக்கு இணைப்பிற்குப் பாராளு மன்றத்திலே மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியமாகும். தற்போதைய அரசிடம் அது இல்லை.
5. விடுதலைப்புலிகள் தமக்கெனத் தனியான பொலிஸ் படையை உருவாக்குகிறார்கள். ஆகவே, இரண்டு வெவ்வேறான பொலிஸ் படைகள் வட, கிழக்கிலே சுதந்திரமாக இயங்கவுள்ளமையையே இது எடுத்துக்காட்டுகிறது. ஆகவே, முஸ்லிம் மக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகத் தனியான ஒரு பொலிஸ் படையை உருவாக்க வேண்டுமா?



6. தற்போதைய நீதித்துறை முறையைச் சீர்திருத்தம் செய்து தமது சொந்த நீதித்துறை முறையை அமல்படுத்தவிருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். இப்புதிய முறைமை முஸ்லிம்களுக்கு எவ்வாறு ஏற்புடையதாகும்?
7. வடக்கு, கிழக்குப் பிரதேசமானது பருத்தித்துறையிலிருந்து குமண வரையான பிரதேசங்களை உள்ளடக்கியதாகும். இது இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 1/3 பிரதேசத்தையும் மொத்தக் கடற்பரப்பில் 2/3 பகுதியையும் உள்ளடக்குகிறது. விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை வட, கிழக்கானது தமிழர்களுக்குச் சொந்தமான தாகும். இங்கு அறுவடை செய்யும் உரிமை மட்டுமே முஸ்லிம் களுக்குண்டு. அத்துடன் குடியிருப்பு நிலங்களைப் பொறுத்தவரை முஸ்லிம்கள் விடுதலைப்புலிகளுக்கு வரிசெலுத்துகின்றபோதிலும் முஸ்லிம்களால் கட்டப்பட்ட கடைகள் மற்றும் வீடுகளைத் தவிர மிகுதியனைத்து நிலமும் விடுதலைப்புலிகளுக்கே உரியது. எனவே, வட, கிழக்கு, முஸ்லிம் மரபுவழித் தாயகம் என்பதன் நிலை என்ன?

இம்முக்கியமான பிரச்சினைகள் தொடர்பாக வட, கிழக்கிலுள்ள முஸ்லிம்கள் பெரிதும் கவலை கொண்டுள்ளதுடன், அரசாங்கமானது வட, கிழக்கு முஸ்லிம் பிரச்சினையைப் புறக்கணித்து வருவதால், அவர்கள் வெறுமனே பார்வையாளர்களாகவும் இருக்க முடியாது.

## தமிழ், முஸ்லிம் மக்களின் சகவாழ்வுக்கான சமரசத் தீர்வு

இரு தசாப்தங்களுக்கும் மேலாகத் தம்மைப் பீடித்துள்ள பிரச்சினை களிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழி சமாதானமே என்பதை வட, கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் உணர்ந்துள்ளார்கள். யுத்தப் பிரதேசத்தினுள்ள பெரும்பாலான மக்கள் தங்களில் எல்லாவற்றை யுமே இழந்துவிட்டார்கள். மனிதப் பாதுகாப்பு, இழந்த சொத்துகள், நிலங்களை மீளப்பெறுதல், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றம் மற்றும் உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு என்பனவே தற்போதைய உடனடித் தேவைகளாகும்.

அரசியல் பேதங்களை விடுத்துச் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப் பினரையும் பேச்சுவார்த்தையில் உள்ளடக்கி ஒரு தேசிய சமாதானம், ஒருமைப்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சியைக் காலம் தாழ்த்தாமல் ஏற்படுத்த வேண்டும்.

வட, கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களிடையிலான இணக்கப் பாட்டை ஏற்படுத்துவதற்கு அடிப்படையாக அமைவது பாதுகாப்பு மற்றும் நிலம் தொடர்பான பிரச்சினைகளாகும். ஆகவே, இவை தொடர்பாகத் தீர்வுகாண்பது மிகவும் முக்கியமான விடயமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் வட, கிழக்கில் நிரந்தர அமைதி ஏற்படப்போவதில்லை.

2002ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ஆம் தேதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் குழுவினர் வன்னியில் வேலுப் பிள்ளை பிரபாகரன் தலைமையிலான விடுதலைப்புலிகளின் பிரதிநிதி களைச் சந்தித்து முஸ்லிம்களின் காணி மற்றும் சொத்துகள் தொடர்பாகக் கலந்துரையாடினர். தற்போது தமிழர்களால் பலாத்காரமாக ஆக்கிர மிக்கப்பட்டுள்ள முஸ்லிம்களின் நிலங்கள் மற்றும் சொத்துகள் என்பன குறித்த பதிவுகளை சமர்ப்பித்தால் உடனடியாகவே அவற்றை மீளக் கையளிக்கத்தான் நடவடிக்கையெடுப்பதாகப் புலிகளின் தலைவர் இங்கு உறுதிகூறினார்.

வடகிழக்கிலுள்ள முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான நிலங்களை யும் சொத்துகளையும் அவர்களிடம் திருப்பிக் கொடுப்பதற்குத் தாம் ஆவலாக இருப்பதாக 2002ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ஆம் தேதி முதல் நவம்பர் மாதம் 3ஆம் தேதிவரை தாய்லாந்தில் இடம்பெற்ற அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின்போது விடுதலைப்புலிகள் அறிவித்தனர். வட கிழக்கில் 35 ஆயிரம் முஸ்லிம் குடும்பங்களுக்குச் சொந்தமான சுமார் ஒரு லட்சம் ஏக்கர் நிலங்களும் மற்றும் சொத்துகளும் தமிழர்களால் பலாத்காரமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நிலங்கள் மற்றும் சொத்துகள் தொடர்பான விபரத் தொகுப்பைத் தயாரிக்குமாறு முஸ்லிம் உரிமைகள் நிறுவனத்திடம் (எம்ஆர்) ரவூப் ஹக்கீம் வேண்டு கோள் விடுத்திருந்தார்.

இத்திட்டத்தை மதிப்பீடு மற்றும் மேற்பார்வை செய்யும் அதே வேளை, இத்திட்டத்திற்குத் தேவையான ஆதரவு மற்றும் தேவையான வற்றை வழங்குவதற்கான ஒரு வேலைத்திட்டத்தை சகவாழ்விற்கான மையம் (எஃப்சிஈ) தயாரித்தது. அத்துடன் மத்தியஸ்தம் மற்றும் பிணக்குத் தீர்த்தல் தொடர்பாக ஒரு பரந்த புரிந்துணர்வையும் அம்மையம் உருவாக்கியிருக்கிறது. ஆனால், இதற்குச் சம்பந்தப்பட்ட சகல தரப் பினரினதும் பங்களிப்பு அவசியமாகும்.

### வட, கிழக்கில் தமிழர்களால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட முஸ்லிம் களின் நிலங்களைப் பதிவுசெய்தல்

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களால் பலாத்காரமாக ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட நிலங்கள் மற்றும் சொத்துகள் தொடர்பான விபரங்களைத் திரட்டுவதற்கு யூஎஸ்எய்ட்/ஓடிஐ நிறுவனமும் கார்எய்ட் நிறுவனமும் உதவின. இப்பணி 2003ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் தேதி தொடங்கி நவம்பர் மாதம் 24ஆம் தேதி முடிவடைந்தது. இதனால் 20,000 குடும்பங் களும் ஒரு லட்சம் மக்களும் நன்மையடைபவர்களாக இருந்தனர்.



### மத்தியஸ்தம்

2003ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7ஆம், 8ஆம் தேதிகளில் பேர்லின் நகரில் இடம்பெற்ற 5ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்க சமாதானச் செயலகத்தால் கிழக்கு மாகாணத்திலுள்ள 3 மாவட்டங்களிலும் புலிகள் மற்றும் முஸ்லிம்களின் பிரதிநிதிகளையுள்ளடக்கிய மாவட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டன. முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலான நிலம் தொடர்பான மற்றும் இதரப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வ தற்காகவே இவ்வாறு செய்யப்பட்டது. இதன்மூலம் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதுடன் 25 சதவீதமான முஸ்லிம்களின் நிலங்கள் மற்றும் சொத்துகள் மீட்கப்பட்டன.

வடகிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடு வதற்கு விடுதலைப்புலிகள் விருப்பம் தெரிவித்தபோது, சகவாழ்வுக் கான நிலையத்தின் தலைவர் கலாநிதி குமார் ரூபசிங்கவின் ஏற்பாட்டின் படி 20 முஸ்லிம் பிரமுகர்கள் வடகிழக்கின் முழுமாவட்டங்களில் இருந்தும் அழைக்கப்பட்டனர். 2003ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6ஆம், 7ஆம் தேதிகளில் கொழும்பில் இடம்பெற்ற இக்கலந்துரை யாடலின் முடிவில் வட, கிழக்கு முஸ்லிம் சமாதானசபை என்ற பெயரில் (என்ஈஎம்பிஏ) புதிய அமைப்பு விடுதலைப்புலிகளுடனும் அரசாங்கத் துடனும் பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு உருவாக்கப்பட்டது.

ஆச்சரியப்படத்தக்க வகையில் 2003ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ஆம் தேதி முஸ்லிம் சிவில் அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகளைச் சந்தித்த விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாணத் தலைவர்கள், முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களின் சுமூகமான வாழ்க்கையை ஏற்படுத்துகின்ற மற்றும் இருதரப்பினருக்குமிடையிலான உறவைப் பலப்படுத்தக்கூடிய முடிவுகளை அறிவித்தனர். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள (மட்டு அம்பாறை) முஸ்லிம்களின் வயல் நிலங் களை அவர்களிடமே உடனடியாக மீளக்கையளிப்பது அவற்றில் முக்கியமான ஒரு அறிவிப்பாகும்.

இந்தச் சந்திப்பில் புலிகளின் சார்பில் கிழக்கு மாகாணத் தளபதி கேணல் கருணா அம்மான், சிறப்புத் தளபதி ரமேஸ், அரசியல் துறை தலைவர் கௌசல்யன், பொருளாதார ஆலோசகர் நிசாம் மற்றும் அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் பாவா ஆகியோரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ஈஎம்பிஏ சார்பாக அதன் தலைவர் ஏ.எல்.ஏ. ஜாவத், பொதுச்செயலாளர் எம்.ஐ.எம். முஹைதீன், ஒய்.எம்.ஏ காதர், யூ.எல்.எம்.எல். மூபீன், முனாஸ், எம்.ஹெச்.எம். ஹக்கீம், ஐ.எம். இப்ராஹிம், கலாநிதி ஏ.எல். பாருக் ஆகியோர் பங்குபற்றினர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதமரின் கிழக்கு மாகாண அரசியல் ஆலோசகருமான அல்ஹாஜ் அலிசாஹிர் மௌலானா இந்தச் சந்திப்பை ஏற்படுத்தியிருந்தார்.

கரடியனாற்றிலுள்ள புலிகளின் தேனகம் விடுதியில் சுமார் 3 மணி நேரம் இடம்பெற்ற இச்சந்திப்பில் இதுகாலமும் முஸ்லிம்கள்மீது விதிக்கப்பட்டிருந்த மீன்பிடி, பயிர்ச்செய்கை, கிழக்கில் புலிகளின் பிரதேசத்தில் முஸ்லிம்களின் நடமாட்டம் போன்றவற்றின்மீதான கட்டுப்பாட்டைக் கைவிடுவதற்குப் புலிகள் தீர்மானித்தனர்.

அத்துடன் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மீன்பிடி மற்றும் விவசாயத் துறையில் இலாபமீட்டும்போது வரி அறவிடுவதையும் நிறுத்துவதாகவும் உறுதியளித்தனர்.

2003ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ஆம் தேதி என்ஈஎம்பிஏ சார்பில் அதன் பொதுச்செயலாளர் எம்.ஐ.எம். முஹைதீனும் அல்ஹாஜ் அலிசாஹிர் மௌலானாவும் புலிகளின் திருமலைத் தளபதி பதுமனை சந்தித்துத் திருமலையிலுள்ள தமிழ், முஸ்லிம் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கான மேற்போன்றதொரு சந்திப்பை ஏற்பாடு செய்யுமாறு கேட்டிருந்தோம்.

### வட, கிழக்கு முஸ்லிம் பாதுகாப்புச்சபை என்ஈஎம்பிஏ

யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டதிலிருந்து கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலான பிரச்சினை அதிகரித்த வண்ணமே இருந்தது. 2003ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலான கொலைகள் நாளுக்கு 2 பேர் என்ற அளவிற்கு உயர்ந்திருந்தது. இதைவிடச் சட்டவிரோத வரிவிதிப்பு, துன்புறுத்தல்கள் மற்றும் தமிழ் இராணுவக் குழுக்களால் முஸ்லிம்கள் கடத்தப்படல் என்பனவும் அதிகரித்துக் காணப்பட்டன. இந்த மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்காக 2003ஆம் ஆண்டு செப்டம்பர் மாதமளவில் எஃப்சிஈயின் அனுசரணையுடன் என்ஈஎம்பிஏ என்ற கிழக்கு மாகாண முஸ்லிம்களின் சிவில் அமைப்பொன்று உருவாக்கப்பட்டது.

இது கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளைப் புலிகளுடன் பேசித்தீர்ப்பதற்கு வழிவகுத்தது. என்ஈஎம்பிஏ உடன்படிக்கையானது 2003ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ஆம் தேதி புலிகளுக்கும் கிழக்கு மாகாண முஸ்லிம் தலைவர்களுக்குமிடையில் செய்துகொள்ளப்




பட்டது. இது இருதரப்பினருக்குமிடையில் வலயமட்டத்திலான குழுக்களை அமைப்பதற்கு வழிவகுத்தது. இவ்வலயமட்டத்திலான குழுக்களின் நோக்கமானது தமிழ்–முஸ்லிம் பிணக்குகளுக்கு ஒரு மாற்றுத் தீர்வு முறையை ஏற்படுத்துவதாகும். இதன் பயனாக இருதரப்பினருக்குமிடையிலான கொலைகளின் எண்ணிக்கை 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதமளவில் முடிவுக்கு வந்தது.

### சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களின் பங்கேற்பு

2002ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் தேதி இடம்பெற்ற புலிகளின் தலைவருக்கும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர்களுக்குமிடையிலான சந்திப்பையடுத்து சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முஸ்லிம் குழுவொன்று முஸ்லிம் காங்கிரஸின் தலைமையில் செல்வதுபோன்ற ஒரு புரிந்துணர்வு காணப்பட்டது. விடுதலைப்புலிகள் அல்லது அரசாங்கத்தின் நலனுடன் ஒத்துப்போகிறதோ இல்லையோ முஸ்லிம்கள் தமது சொந்த நலனைப் பிரதிநிதித்துவப்படுத்த விரும்பினர் (இதற்காகவே தனியான முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை முஸ்லிம்கள் வேண்டி நிற்கிறார்கள்). சமாதானப் பேச்சுவார்த்தையானது எல்லா இனத்தவர்களினதும் நலனையும் கருத்திலெடுக்காது தனிப்பட்ட ரீதியில் அமைந்து காணப்படுவது ஒரு குறைபாடுடைய நிலைமையாகும் இது மிகவும் வரையறுக்கப்பட்ட

**கிழக்கு மாகாண முரண்பாட்டு நிகழ்வுகள்: முஸ்லிம் எதிர். தமிழ்**

*ஜனவரி 2003 – ஆகஸ்ட் 2004*




ஆதாரம்: சகவாழ்வுக்கான நிலையம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடவடிக்கை முறையாகும். வட, கிழக்கிலே நேரடியாகப் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் ஒரு ஒட்டுமொத்தத் தீர்வை எட்டுவதற்கு நடத்தப்படும் பேச்சுவார்த்தையில் தனித்த நபராகப் பங்குபெறுவதை விரும்புகின்றனர். முகவர்கள் மூலமல்லாது முஸ்லிம்களின் நேரடியான பங்களிப்பின்றி எட்டப்படும் தீர்வானது ஒருபோதும் நிலைக்கப்போவதில்லை.

யுத்தத்தால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவத்தை அவர்களே தெரிவுசெய்ய வேண்டும். இது முஸ்லிம்கள் தங்களுக்குள் முடிவுசெய்ய வேண்டிய விடயமாகும். முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாகவோ, அவர்களது நிலைப்பாடு தொடர்பாகவோ பிறரது தலையீடு இருக்கக் கூடாது. இது தொடர்பாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் கலந்துரையாடி ஒரு பொதுநிலைப்பாட்டிலுள்ளனர்.

டோக்கியோ மகாநாட்டில் பங்குபெற்ற 51 நாடுகளும் 22 சர்வதேச நிறுவனங்களும் இனரீதியான மற்றும் பூகோள சமநிலையைப் பேணுவதற்கு தனியான முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை ஆதரித்துள்ளனர். இடம் பெயர்ந்த அனைத்து மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் முன்னெடுக்கவுமே இவ்வாறு செய்யப்பட்டது. எனினும் உண்மையான முஸ்லிம் பிரதிநிதித்துவம் பேச்சுவார்த்தைகளில் அவசியமென்பதே பெரும்பாலான சர்வதேசக் கருத்தாகும்.

### வட, கிழக்கு முஸ்லிம்களுக்கான தனியான அதிகாரப் பங்கீட்டிற்கான கோரிக்கையும் அதற்கான முன்மொழிவுகளும்

1957ஆம் ஆண்டின் பண்டா–செல்வா ஒப்பந்தத்தில் பண்டாரநாயக்கா வடக்கிற்கு ஒரு மாகாணசபையும் கிழக்கிற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகணசபைகளையும் முன்மொழிந்திருந்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணி (டிபிஏ) 1988ஆம் ஆண்டு தனது தேர்தல் அறிக்கையிலேயே பகுதி 2இல் இனப்பிரச்சினையைத் தீர்த்தல் அதிகாரப் பங்கீட்டு தொகுதி என்பதன் கீழ்ப் பின்வருமாறு கூறுகிறது:

அ. வட, கிழக்கிலே முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசங்கள் தவிர்ந்த, தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற ஏனைய பிரதேசத்தில் ஒரு தமிழ்த் தொகுதி இருத்தல் வேண்டும்.

ஆ. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் அம்பாறையை அடிப்படையாகக் கொண்டும் மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசங்களை உள்ளடக்கி ஒரு முஸ்லிம் பிரதேசம் இருக்க வேண்டும்.



இ. இந்தப் பிரதேசங்களில் வாழ்கின்ற சிங்கள மற்றும் ஏனைய மக்களினதும் உரிமைகள் சமமாக மதிக்கப்பட வேண்டும்.

1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் தேதி மங்கள முனசிங்க பாராளுமன்ற தெரிவுக்குழுவில் ஐதேக பிரதிநிதித்துவம் செய்த பிரதிநிதிகள் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கம்யூனிஸக் கட்சி, ஸ்ரீலங்கா சமசமாஜக் கட்சி மற்றும் யாழ்ப்பாண சுயேச்சைக் குழு உறுப்பினர் கே. சீனிவாசன் ஆகியோர் ஒரு உடன்படிக்கையைச் செய்துகொண்டனர்.

1. வட, கிழக்கிற்கு இரு வேறான நிர்வாக அலகுகள்.
2. இந்திய அரசியல் அமைப்பு முறைப்படி அதிகாரப் பங்கிடுதல்.
3. மாகாணசபை ஒருங்கிய நிரலிலுள்ள விடயங்களை விரிவுபடுத்துதல்.

1994ஆம் ஆண்டு ஐதேகவின் தேர்தல் அறிக்கை மற்றும் அரசியல் பொதிகளில் இனப்பிரச்சினைக்கு அதிகாரத்தைப் பங்கிடுவது தொடர்பாகக் காமினி திசநாயக்கா பின்வருமாறு கூறினார்: ‘இலங்கையில் இருக்கும் ஒவ்வொரு இனக்குழுமமும் தனக்கெனத் தனியான அடையாளத்தையும் சுயமரியாதையையும் கொண்டுள்ளதாக நான் நம்புகிறேன். வேறுபட்டு நிற்கும் இனக்குழுமங்களிடையே அதிகாரத்தைப் பங்கிடுவது ஜனநாயகப் பண்பு என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். அதனாலேயே நான் இலங்கை–இந்திய ஒப்பந்தத்திற்கும் அரசியலமைப்பிற்கான 13ஆம் திருத்தத்திற்கும் ஆதரவு தெரிவித்தேன். இதுவே முதல்முதலாகச் சிறுபான்மை இனத்திற்கு அதிகாரத்தைப் பங்கிடச் செய்யப்பட்ட முயற்சியாகும். துரதிர்ஷ்டவசமாக 13ஆம் திருத்தப்படி குறைந்தளவு அதிகாரப் பங்கீடானது வட, கிழக்கு மக்களைக் கோபத்தில் ஆழ்த்தியது. இத் திருத்தத்தால் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்’.

இந்த முன்மொழிவில் முக்கிய விடயங்களாக அமைவன:

அ. ஒவ்வொரு இனக் குழுமத்திற்குமான தனியான அதிகார அமைப்பு

ஆ. வட, கிழக்குப் பிரிப்பு

இ. கிழக்கு மாகாணத்தில் 2 அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரப் பகிர்வுகள்.

விடுதலைப்புலிகள் தமிழீழத்தை அமைப்பதற்காகப் போராடுகின்றனர். ஆனால், அரசாங்கம் இப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முயன்று வருகிறது. அரசாங்கம் மிகவும் பொறுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் செயல்பட்டு வருகிறது. விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர அரசாங்கம் சகல வழிகளிலும் பலரது அதிருப்திக்கு மத்தியிலும் முயன்று வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திய அரசாங்கம் இலங்கை அரசிற்கு பலவழிகளிலும் உதவியளிக்க உறுதியளித்தபோதிலும் வட, கிழக்கிலே காணப்பட்ட சுமுகமற்ற சூழ்நிலைகளால் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் எந்தவொரு ஏற்பாடும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அவசரகால நிலைமை தளர்த்தப்பட்டதுடன் யுத்தநிறுத்தமும் நடைமுறைக்கு வரவில்லை. அத்துடன் தமிழ் இராணுவக் குழுக்கள் தமது ஆயுதங்களையும் கையளிக்கவில்லை.

இந்திய இராணுவத்தால், வன்முறைகள் நடப்பதைத் தடுக்கவோ வட, கிழக்கில் வாழும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவோ முடியவில்லை. தற்காலிகமாக இணைக்கப்பட்ட வட, கிழக்கிற்கான மாகாணசபையும் கலைக்கப்பட்டது. இந்திய-இலங்கை ஒப்பந்தமானது முழுமையாகத் தோல்விகண்டது.

வட, கிழக்கைக் பூகோளரீதியில் இணைத்துப் போதியளவு அதிகாரங்கள் கொடுக்கப்படுவதுடன் இலங்கை ஆட்புலத்தில் தனியான ஒரு அரசை அமைப்பதைத் தடைசெய்யும் அரசியலமைப்பின் 6ஆம் பிரிவை நீக்க வேண்டுமென்பதே புலிகளின் கோரிக்கைகளாக இருந்து வருகின்றன. எந்தவொரு இறுதித் தீர்வும் காணப்படுமுன்னர் தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்களான வட, கிழக்குப் பிரிக்கப்பட முடியாதது எனவும் அதன் பூகோளரீதியிலான அமைவிற்கும் ஆட்புல ஒருமைப் பாட்டிற்கும் நிபந்தனையற்ற அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதே புலிகளின் நிலைப்பாடாகும். தமிழ் பேசும் மக்கள் என்பது ஒரு இனத்தை மட்டும் குறிக்கவில்லை. இது யாழ்ப்பாணத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், இலங்கை முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழரையும் உள்ளடக்குகிறது. தமிழ் பேசும் பிரதேசம் என்னும்போது அதில் வட, கிழக்கே உள்ளடக்குகின்றது. கிழக்கு மாகாணமானது முஸ்லிம்களினதும் மட்டக்களப்புத் தமிழரினதும் வரலாற்றுரீதியான வாழ்விடமாகும். வரலாற்றுரீதியாகப் பார்த்தால் யாழ்ப்பாணத் தமிழரோ அல்லது மலையகத் தமிழரோ கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்ததில்லை. அது அவர்களின் தாயகமுமல்ல.

மட்டக்களப்புத் தமிழர்கள், யாழ்ப்பாணத் தமிழர்களிலிருந்து வேறுபட்ட ஒரு தனித்துவமான குழு எனவும் அவர்கள் தமக்கெனத் தனியான சட்ட முறைமையையே பின்பற்றுவதாகவும் முன்னாள் கிழக்குமாகாணப் பாராளுமன்ற உறுப்பினரும் உள்நாட்டு மற்றும் நீதித்துறை அமைச்சருமான கே.டபிள்யூ. தேவநாயகம் கூறியுள்ளார். மட்டக்களப்புத் தமிழர்கள் வித்தியாசமான குழுமம் எனவும் அதற்குச் சான்று இருப்பதாகவும் ஆதலால் கிழக்கு மாகாணத்தில் வடமாகாண மக்களுக்குத் தாயகபூமி இருப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை எனவும் கூறியுள்ளார்.



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சி. ராஜதுரை, பிரின்ஸ் காசிநாதர் மற்றும் திவ்வியநாதன் ஆகியோரும் இந்தக் கருத்தை ஆதரித்துள்ளனர்.

வட, கிழக்கு மாகாணமானது பருத்தித்துறை முதல் குமண வரையான இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 1/3 பகுதியையும் மொத்தக் கடற்பரப்பில் 2/3 பகுதியையும் உள்ளடக்கியதாகும்.

வடமாகாணமானது 3429 சதுர மைல்களைக் கொண்டுள்ளதுடன் 1981ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 11,11,468 மொத்த ஜனத் தொகையையும் கொண்டுள்ளது. இதில் 92 சதவீதமான தமிழர்களும் 5 சதவீதமான முஸ்லிம்களும் 3 சதவீதமான சிங்களவரும் அடங்குவர். 440 சதுர மைல்களைக் கொண்ட 12.8 சதவீதமான வடமாகாண நிலப்பரப்பிலேயே 67 சதவீதமான அதாவது 7,38,788 மக்கள் வாழ்கின்றனர். அனைத்து தமிழ் இராணுவக்குழுக்களும் அரசியல் கட்சிகளும் யாழ்குடாநாட்டை அடிப்படையாகக் கொண்டே செயல்படுகின்றனர். வடமாகாணத்திலுள்ள மற்றைய மாவட்டங்களான மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகியன 2,989 சதுர மைல்களைக் கொண்டனவாகும். இது வடமாகாண மொத்த நிலப்பரப்பில் 82 சதவீதமாகும். இப்பிரதேசங்களிலேயே மிகவும் குறைவான ஜனத்தொகையான 3,70,616 பேர் வசிக்கின்றனர். இது வடமாகாணத்தின் மொத்த ஜனத்தொகையின் 33 சதவீதமாகும்.

கிழக்கு மாகாணமானது 3,839 சதுர மைல்களைக் கொண்டுள்ளதுடன் 1981ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மொத்த ஜனத்தொகை 9,93,435 ஆகும். இதில் 42 வீதமான தமிழர்களும் 33 சதவீதமான முஸ்லிம்களும் 24 சதவீதமான சிங்களவரும் அடங்குவர். 1,016 சதுர மைல்களைக் கொண்ட மட்டக்களப்பில் மட்டுமே தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இதில் 73 சதவீதமான தமிழர்களும் 24 சதவீதமான முஸ்லிம்களும் 3 சதவீதமான சிங்களவரும் உள்ளடங்குவர். கிழக்கு மாகாணத்திலுள்ள மற்றைய மாவட்டங்களான திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழர்கள் சிறுபான்மையாகவே உள்ளனர். 2,823 சதுர மைல்களைக் கொண்ட அப்பிரதேசங்கள் கிழக்கு மாகாண மொத்த நிலப்பரப்பில் 72 சதவீதமான பகுதிகளை உள்ளடக்குகின்றது. இங்கு 26 சதவீதமான தமிழர்களும் 37 சதவீதமான முஸ்லிம்களும் 37 சதவீதமான சிங்களவர்களும் அடங்குவர். கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மற்றும் சிங்களக் கிராமங்கள் முஸ்லிம் கிராமங்களைப் போன்று அடுத்தடுத்ததாக அமைந்து காணப்படவில்லை.

கிழக்கு மாகாண முஸ்லிம்களும் தமிழர்களும் பாராளுமன்றத்திற்கும் கலைக்கப்பட்ட வட, கிழக்கு மாகாணசபைக்குச் சமஎண்ணிக்கையான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரதிநிதிகளைத் தெரிவுசெய்திருக்கின்றனர். இது முஸ்லிம்கள் அரசியல் ரீதியாகத் தமிழர்களுக்குச் சமனான நிலையிலுள்ளனர் என்பதையே காட்டுகிறது. வட, கிழக்கு மாகாணமானது இணைக்கப்பட்டபோது 33 சதவீதமாகவிருந்த முஸ்லிம்களின் இன விகிதம் 18 சதவீதமாக குறைந்தது. இது முஸ்லிம்களின் அரசியல் பலத்தைச் சீர்குலைப்ப தாகவே காணப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி தனது அரசாங்கமே கொண்டுவந்த மாகாண சபைச் சட்டத்தைத் தந்திரமாக வெற்றிகொண்டு அவசரகாலச்சட்டத்தின் கீழ் ஒரு தற்காலிக வட, கிழக்கு இணைப்பை மேற்கொண்டார். இது முஸ்லிம்களை அரசியலில், சமூகரீதியில் தமிழர்களின் கீழ்க் கொண்டு வந்தது. அரசியல் மற்றும் நிர்வாகத் தேவைக்காகச் செய்யப்பட்ட தற்காலிக வட, கிழக்கு இணைப்பானது தமிழர்களை ஒருதலைப் பட்சமான தமிழீழ அரசைப் பிரகடனப்படுத்த வைத்ததுடன் ஒற்றை யாட்சி மற்றும் அதிகாரப்பங்கீடு என்பவற்றையும் கேள்விக்குள்ளாக்கவே வழிகோலியது.

வட, கிழக்கு மாகாணம் நிரந்தரமாக இணைக்கப்படும்போது ஏற்படும் பாரதூரமான விளைவுகள் பற்றி முஸ்லிம்கள் நன்றாக அறிந்து வைத்துள்ளனர். இம்மாகாணம் தற்காலிகமாக இணைக்கப்பட்டதற்குப் பின் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலையங்கள் ஈபிஆர்எல்எஃப், டெலோ மற்றும் ஈஎன்டிஎல்எஃப் என்பவற்றை உள்ளடக்கிய தமிழ்த் தேசிய இராணுவத்தால் தாக்கப்பட்டதுடன் நூற்றுக்கணக்கான முஸ்லிம் களும் கொல்லப்பட்டனர்.

கடந்த காலங்களைப் போன்று தமிழர்களும் முஸ்லிம்களும் ஒற்றுமை யாக வாழ வேண்டும் என்ற முஸ்லிம்களின் விருப்பத்திற்கிணங்க 1987 செப்டம்பர் மற்றும் 1988 ஏப்ரல் காலப்பகுதிகளில் முஸ்லிம் தூதுக்குழு வொன்று சென்னைக்கு பயணம் செய்து தமிழ் மிதவாத அரசியல்வாதி களுடனும் இராணுவக் குழுக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தியது.

இந்திய–இலங்கை ஒப்பந்தம் மற்றும் அரசியலமைப்பிற்கான 13ஆம் திருத்தம் என்பவற்றின் பின் முஸ்லிம்கள் ஒரு படி மேலே சென்று வட, கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் தற்காலிக மாக இணைக்கப்பட்ட வட, கிழக்கு மாகாணசபையை உருவாக்கு வதற்கு உதவினர்.

1990 செப்டம்பர் மாதமளவில் தமிழ்க் கட்சிகளுக்கும் முஸ்லிம் கட்சிகளுக்குமிடையில் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. இதன்படி வட, கிழக்கில் ஒரு மாகாணசபையும் இருவேறான சமமான அதிகாரப்பகிர்வைக் கொண்ட இரு சபைகளும் இருத்தல் வேண்டும்.



இங்கு முஸ்லிம் சபையானது தமிழ்ச் சபைக்கு எவ்விதத்திலும் கீழ்ப் பட்ட தல்ல எனவும் வெளிப்படையாகவே முடிவு செய்யப்பட்டது. அத்துடன் மாகாணசபையானது இருசட்டவாக்கத்தைக் கொண்டதாகவும் இரண்டாவதில் அப்பிரதேசத்தில் வாழும் சிறுபான்மையினருக்குச் சமமான பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது.

எனினும், முஸ்லிம்களுக்குத் தனியானதொரு அலகு வழங்குவ தில்லையென்ற நிலைப்பாட்டைத் தமிழ்க் கட்சிகள் தற்போது எடுத்துள்ளன. வட, கிழக்குப் பிராந்திய சபையில் முஸ்லிம்களுக்கு ஓர் உப அலகு வழங்குவதெனத் தற்போது தமிழ்க்கட்சிகள் கூறுவது புதுமை யாக இருக்கிறது. வட, கிழக்கிலே 18 சதவீதமாகவுள்ள முஸ்லிம்கள் அரசியலமைப்பினூடான பாதுகாப்புடன் மட்டும் திருப்திப்பட்டுக்கொள்ள வேண்டுமென்ற நிலைப்பாட்டைத் தமிழ்க்கட்சிகள் எடுத்துள்ளன. அப்படியானால் இங்கு வாழும் 10 சதவீதமான தமிழ் மக்களும் அதிகாரப் பங்கீட்டைக் கோராமல் ஏன் அவ்வாறு திருப்திப்பட்டுக்கொள்ளக் கூடாது.

அண்மைக்கால அனுபவங்களிலிருந்து முஸ்லிம்கள் ஒன்றை உணர்ந்துள்ளார்கள். வடகிழக்கிலுள்ள முஸ்லிம்கள் ஏன் ஒரு தனியான அதிகாரப் பங்கீட்டைக் கோருகிறார்கள் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் எதிர்கொண்ட கடந்தகாலக் கசப்பான அனுபவங்களும் அரசாங்கம் மற்றும் விடுதலைப்புலிகளின் செயல் பாடுகளும் இந்நிலைக்கு முஸ்லிம்களைத் தள்ளியது. முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட அதிகாரப் பங்கீட்டுக் குழுவினாலேயே முஸ்லிம்களின் கலை, கலாசார மற்றும் உயிர், உடைமைகளைப் பாதுகாக்க முடியும். அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும்போது அரசியல் மற்றும் சமூகரீதியில் ஓர் அடிமைத் தனமான முஸ்லிம் சமுதாயத்தை உருவாக்கிவிடக் கூடாது. நாட்டின் வரலாற்றின் மிக முக்கியமான அந்த நேரத்தில் அரசாங்கம் அவ்வாறான ஒரு தவறைச் செய்யாது என நம்பப்படுகிறது.

தமிழ் மற்றும் சிங்கள மக்களைப் போன்றே முஸ்லிம்களுக்கும் அவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிராந்தியசபை வழங்கப் படவேண்டுமென கோருவது நியாயபூர்வமானதே. இச்சந்தர்ப்பங் களின்படி முஸ்லிம்களுக்கான தனியானதொரு அதிகாரப் பங்கீடு அவசியமாவதுடன் அவர்களது இன உரிமைகளையும் அடையாளம் காணப்பட்ட தாயகத்தையும் பாதுகாக்க வேண்டும்.

முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்வும் பின்வரும் முக்கிய அம்சங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1. இலங்கையில் முஸ்லிம்கள் ஒரு தனித்துவமான இனம் என்பதை அங்கீகரித்தல்.
2. வட, கிழக்கிலே அடையாளம் காணப்பட்ட முஸ்லிம்களின் தாயகத்தை அங்கீகரிப்பதுடன் ஆட்புல ஒருமைப்பாட்டிற்கும் உத்தரவாதமளிக்க வேண்டும்.
3. மேற்சொன்னவற்றை அடிப்படையாகக் கொண்டு பாராதீனப் படுத்தப்பட முடியாத சுயநிர்ணய உரிமை முஸ்லிம்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இக்கோட்பாடுகளை உறுதிசெய்ய வேறுபட்ட அரசாங்க முறை களை ஏற்படுத்துமாறும் பலதரப்பட்ட இனத்தவர்கள் கேட்டுள்ளனர். இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலான அதிகாரப் பங்கீட்டு முறையையே ஒத்ததொரு அதிகாரப் பங்கீட்டையே முஸ்லிம்கள் வடக்கு, கிழக்கில் கேட்டுள்ளனர்.

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் தற்போதே சிறுபான்மை யினருக்கு அதிகாரங்களைப் பங்கீடு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. முஸ்லிம்கள் தாம் புறக்கணிக்கப்படுவதையோ நியாயமான உரிமைகள் மறுக்கப்படுவதையோ விரும்பக் கூடாது. 74 சதவீதமான சிங்களவர்களுக்கு 7 சபைகளும் 18 சதவீதமான தமிழர்களுக்கு 2 சபைகளும் 8 சதவீதமான முஸ்லிம்களுக்கு 1 சபையும் அமைக்கப் படுவதே நீதியான, நியாயமான தீர்வாகும்.

இலங்கையின் பிரஜைகளான தமக்கு என்ன கிடைக்க வேண்டுமோ அதற்கு மேலதிகமாக முஸ்லிம் எதனையும் கேட்கவில்லை. அவர்கள் பிரிவினையைக் கோரவோ அல்லது தமது பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தீவிரவாதத்தையோ நாடவில்லை.

### வட, கிழக்கில் முஸ்லிம் அதிகாரப் பங்கீட்டு அலகு

1. பனம்பற்று, அக்கரைப்பற்று, சம்மாந்துறைப்பற்று, கரவாகு, நிந்தவூர்ப்பற்று மற்றும் வெகம்பற்று தெற்குப்பிரிவு (தெற்குக் கல் ஓயா) ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையுள்ளடக்கிய முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நிர்வாக மாவட்டம் அம்பாறையில் உருவாக்கப்பட வேண்டும். பிரதேச அளவு: 920 சதுரமைல்
2. மேற்குறித்த மாவட்டத்தில் இனரீதியான பிரதேச சபைகள், கிராமசேவையாளர் பிரிவுகள் உருவாக்கப்படுவதுடன் இயற்கை வளங்கள் மற்றும் நிலங்கள் ஒவ்வொரு இனத்தினதும் ஜனத் தொகையடிப்படையில் பங்கிடப்பட வேண்டும்.



3. காத்தான்குடி, ஏறாவூர் மற்றும் ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசசபைகள், கிராம சேவையாளர் பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டும். இவற்றில் மட்டக்களப்பிலுள்ள 24 சதவீதமான முஸ்லிம் ஜனத்தொகைக்கேற்றவாறான விவசாய நிலங்களும் இயற்கை வளங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். பிரதேச அளவு: 346 சதுரமைல்.
4. திருகோணமலையிலுள்ள மூதூர், கிண்ணியா, தம்பலகாமம், தோப்பூர் மற்றும் கச்சவேலி ஆகிய பிரதேசங்களையுள்ளடக்கிய முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசசபை, கிராமசேவையாளர் பிரிவுகள் உருவாக்க வேண்டும். இவற்றில் திருகோணமலையிலுள்ள 29 சதவீதமான முஸ்லிம் ஜனத்தொகைக் கேற்றவாறான விவசாய நிலங்களும் இயற்கை வளங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். பிரதேச அளவு: 278 சதுரமைல்.
5. மன்னாரிலுள்ள முசாலி மற்றும் எருக்கலம்பிட்டி ஆகிய பிரதேசங் களை உள்ளடக்கிய முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேச சபைகள், கிராமசேவையாளர் பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டும். இவற்றில் மன்னாரிலுள்ள 27 சதவீத மான முஸ்லிம் ஜனத்தொகைக்கேற்றவாறான இயற்கை வளங் களும் நிலங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். பிரதேச அளவு: 278 சதுர மைல்.
6. கல்முனை, சம்மாந்துறை, காத்தான்குடி மற்றும் கிண்ணியா ஆகிய பிரதேசங்களில் நகரசபைகள் உருவாக்கப்பட வேண்டும். ஆனால், மற்றப் பிரதேச சபைகள், கிராம சேவையாளர் பிரிவுகளி லுள்ள முஸ்லிம் பெரும்பான்மை குறைக்கப்படக் கூடாது.
7. மன்னார், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங் களிலுள்ள முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியே முஸ்லிம் நிர்வாக மாவட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.
8. வட, கிழக்கிலே உருவாக்கப்படும் அனைத்து முஸ்லிம் பெரும் பான்மையைக்கொண்ட நிர்வாக மாவட்டங்களும் தனியான தேர்தல் மாவட்டங்களாகக் கருதப்பட வேண்டும்.
9. வடக்கிலுள்ள அனைத்து முஸ்லிம் பெரும்பான்மை மாவட்டங் களும் தேர்தல் மாவட்டங்களே முஸ்லிம் பெரும்பான்மை அதிகாரப் பங்கீட்டு அலகாகும் (நிலம் 1958 சதுர மைல் 5,071 சதுர கிலோ மீட்டர், ஜனத்தொகை 4,80,000).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

10. அடுத்ததாக அமையாது காணப்படும் பிரதேசங்களை நிர்வகிப்பது எடுத்துக்காட்டப்பட்டிருப்பதுபோல் அவ்வளவு கடினமானதல்ல. உதாரணமாக பிரான்ஸின் உடைமையாயிருந்த இந்தியாவிலுள்ள பாண்டிச்சேரி தற்போது தமிழ்நாடு, கேரளா மற்றும் ஆந்திரப் பிரதேசம் என மூன்று பிரிவுகளாகப் பிரிந்துள்ளது. இவை வெவ்வேறாக நிர்வகிக்கப்படுவதுடன் இங்கு வெவ்வேறு மொழிகளும் பேசப்படுகின்றன. பாண்டிச்சேரியை ஒத்த பிராந்திய சபையையே முஸ்லிம்கள் கேட்கின்றனர்.

11. **பாண்டிச்சேரி: பொது எல்லையற்ற ஓர் இந்திய மாநிலம்**

| | | |
|---|---|---|
| பிரதேசம் | : | 492, சதுர கிலோ மீட்டர் |
| ஜனத்தொகை | : | 8,07,785 |
| தலைநகரம் | : | பாண்டிச்சேரி |
| முக்கியமான மொழிகள் | : | தமிழ், தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம், பிரெஞ்சு |

அரசாங்கம் – அரசுகளும் ஆட்புலங்களின் கூட்டு

| | | |
|---|---|---|
| ஆளுநர் | : | கலாநிதி. ரஜனி ராய் |
| தலைமைச் செயலாளர் | : | டி.டி. ஜோசப் |
| முதலமைச்சர் | : | ஆர்.வி. ஜானகிராமன் |
| நியாயாதிக்கம் | : | நியாயாதிக்கத்தின் கீழானது |
| உயர் நீதிமன்றம் | : | சென்னை உயர்நீதி மன்றம் |

| எண் | மாவட்டம் | அளவு | ஜனத்தொகை | தலைமையகம் |
|---|---|---|---|---|
| 1. | பாண்டிச்சேரி | 293 | 6,08,338 | பாண்டிச்சேரி |
| 2. | காரைக்கால் | 160 | 1,45,703 | காரைக்கால் |
| 3. | மஹே | 9 | 33,447 | மஹே |
| 4. | யானம் | 30 | 20,297 | யானம் |

**பிரதேசம், ஜனத்தொகை, தலைமையகம்**

**வரலாறும் புவியியலும்**

பாண்டிச்சேரியானது காரைக்கால், மஹே, யானம் மற்றும் பிரான்ஸின் கீழிருந்த பாண்டிச்சேரியின் பகுதி ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இவை தென்னிந்தியாவில் பரந்து காணப்படுகின்றன. தலைநகரமான பாண்டிச்சேரியே பிரான்ஸின் இந்தியாவிற்கான தலைமையகமாக இருந்தது.



கிழக்கிலே வங்காள விரிகுடாவும் மிகுதி 3 பக்கங்களும் தமிழ் நாட்டால் சூழப்பட்டுள்ளது. பாண்டிச்சேரியின் தெற்கிலிருந்து சுமார் 150 கிலோ மீட்டர் தொலைவில் காரைக்கால் உள்ளது. கேரளாவின் மேற்கு மலைத்தொடரால் சூழப்பட்ட மலபார் கடற்கரையோரப் பிரதேசத்தில் மஹே அமைந்துள்ளது. இது கலிகட் விமான நிலையத்திலிருந்து 70 கி.மீ தூரமுடையது. ஆந்திரப் பிரதேசத்தின் கோதாவரி மாவட்டத்தையொட்டி யானம் அமைந்துள்ளது. இது விசாகபட்டினம் விமான நிலையத்திலிருந்து 200 கி.மீ தூரமாகும்.

●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 13

## சமாதானப் பணியில் நோர்வேயின் பங்களிப்பு

*எரிக் சொல்ஹெய்முடன் ஒரு நேர்காணல்

குமார் ரூபசிங்க

***1. சமாதானத்தை ஏற்படுத்துவதில் நோர்வேயின் பங்களிப்பு அதிக அங்கீகாரத்தைப் பெற்றுவருகிறது என்பதை அறியக்கூடியதாக இருக்கிறது. சமாதானத்தை ஏற்படுத்துவது, நோர்வே நாட்டின் வெளி உறவுக் கொள்கையில் ஓர் இயல்பான அங்கம் என்றே தோன்றுகிறது. இது தொடர்பான வரலாற்று விபரங்களைச் சுருக்கமாக விவரிப்பீர்களா?***

நாங்கள் மேற்கத்திய குழாமில் இருந்துகொண்டு, ரஷ்யாவைப் பகைத்துக் கொள்ளாமல் இருக்கவே முயன்றோம். பனிப்போர் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில், சமாதானப் பணிகளுக்கு நோர்வேயால் எந்த ஒரு பங்களிப்பையும் வழங்க முடியாதிருந்தது. 1989இல் பனிப் போர் முடிவடைந்த பின்னர், முற்றிலும் ஒரு புதிய உலகமாக இருந்தது. வெளியுறவுக்கொள்கைகளை வகித்துக்கொள்வதற்கு இலகுவாக இருந்தது. நாங்கள் சமாதானப் பணிகளில் பங்குகொள்வது ஆரம்பம் முதலே திட்டமிட்ட ஒன்றாக இருக்கவில்லை. ஆதரவு வழங்குகின்ற அந்தப் போக்கு ஏற்கனவே அங்கு இருந்தது. உலகத்தில் எப்பகுதியிலும் இராணுவத்துறையிலோ அல்லது அரசியல் துறையிலோ எந்தவிதத் தந்திரோபாய அக்கறைகளையும் கொண்டிருக்காத ஒரு சிறிய நாடு நோர்வே. இருப்பினும், தொழிலாளர் இயக்கக் காலகட்டத்திலிருந்து ஒரு நீண்ட பாரம்பரியத்தை, நோர்வே சமூகம் கடைப்பிடித்து வந்துள்ளது. ஆகவே சமாதானப் பணிகளில் நோர்வேயின் ஈடுபாடு ஒரு தற்செயலாக ஏற்பட்ட நிகழ்வே தவிர, திட்டமிடப்பட்ட செயல்பாடல்ல. மத்தியக் கிழக்குத் தகராறு, பாலஸ்தீன-இஸ்ரேல் முரண்பாடு, குவதமாலா பிரச்சினை இவைகளே நாம் ஆரம்பத்தில் ஈடுபாடு கொண்ட முக்கிய

* நோர்வே நாட்டின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் மற்றும் இலங்கைச் சமாதானப் பணிகளுக்கான அனுசரனையாளர்



நிகழ்வுகள். இன்னும் சில முக்கியமற்ற செயல்பாடுகளிலும் நாம் பங்கு கொண்டோம். சில நாடுகளுக்கு அபிவிருத்தி உதவி வழங்க வேண்டிய முக்கியத் தேவையும் காணப்பட்டது. பொருளாதார மற்றும் கைத் தொழில் அபிவிருத்திக் கான சராசரி உதவி வழங்கும் நாடுகளில் நாமும் எப்போதும் முன்னணி யில் இருந்து வருகிறோம்.

***2. அபிவிருத்தி உதவி மற்றும் சமாதானம் ஏற்படுத்துதல் – இவை இரண்டும் தொடர்புடையனவா?***

ஆம். தொடர்பு இருக்கிறது. சமாதான அனுசரணைப் பணிகளுக்குச் சுய ஈடுபாடுடன் மக்களையும் தெரிந்திருப்பது எப்போதும் முக்கியமான ஓர் அம்சமாகும். சமாதான அனுசரணைப் பணிகள், அரசுசார்பற்ற நிறுவனங்களுடன் ஆரம்பமாகின. இந்த நிறுவனங்கள் பணிகளை ஆரம்பிக்கலாம், தொடர்புகளை ஏற்படுத்தலாம். ஆனால் அவற்றை நிலைபெறச் செய்ய மூன்றாம் தரப்பு ஒன்று தேவை. உதாரணமாக, அரசியல் மற்றும் இராஜதந்திர உந்துதல்களையும் நிதிவலுவையும் அரசுச் சார்பற்ற நிறுவனங்கள் கொண்டிருக்காததனால், அவற்றால் இலங்கையில் சமாதானப் பணிகளை நிலைபெறச் செய்ய முடியாது. அவர்களால் நிச்சயமாக உதவ முடியுமே தவிர, நீண்டகாலம் நிலைத்து நிற்க முடியாது.

**3. இராணுவ மற்றும் பொருளாதார வலுவில்லாத ஒரு சிறிய நாட்டினால், உலக அரங்கில் சமாதானப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பது ஜொஹன் கல்டுங் என்போரின் வாதம். இதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?**

நோர்வே, இராணுவரீதியாக ஒரு வல்லரசாக இல்லாவிடினும் உலகில் சமாதானச் சூழலை ஏற்படுத்த முடிந்த செல்வாக்கைக் கொண்ட ஒரு வளமான நாடு என்பதே இங்கே முக்கியமாகிறது.

இந்த ஊக்கத்தில் எப்போதுமே சில உண்மைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் மறுபுறத்தில் சமாதானப் பணிகள் மலிவானவை. வெளியுறவுக் கொள்கைத் தீர்மானங்களில் அவை மிக மலிவானவை. நம்பமுடியாதவாறு செலவுகளை ஏற்படுத்துவதுதான் போர். சமாதானத்தை ஏற்படுத்துவதைவிடவும் போர் செலவுமிக்கது. சில ஊழியர்களுக்கான ஊதியம், இருதரப்பினரும் சமாதான செயலகங்களைப் பேணுவதற்கான செலவு, போக்குவரத்து மற்றும் தங்குமிடச் செலவுகள் இவை மட்டுமே சமாதானப் பணிகளின் முக்கியச் செலவினங்கள். இதற்கு மேலாகக் குடிசார் குழுமங்கள், முரண்பாட்டுப் பகுதிகளில் அபிவிருத்திப் பணி களை மேற்கொள்தல் இவையும் உள்ளன. ஆனால், அடிப்படையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமாதானப் பணிகள் போரை விடவும் மிகவும் மலிவானவை என்பதை நான் வலியுறுத்த வேண்டும் என்று நினைக்கிறேன்.

**4. நோர்வே தற்போது ஈடுபாடு கொண்டுள்ள முக்கியக் கேந்திரங்கள் யாவை?**

தற்போது இலங்கையிலும் சூடானிலும் வேறுபட்ட பரிமாணங்களில் நோர்வே பணிகளை மேற்கொண்டுள்ளது. இருப்பினும், பாலஸ்தீன விவகாரம் அதிகப் பிரபல்யத்தைப் பெற்றது. ஈராக் பிரச்சினையில் முக்கியப் பங்கு கொள்ளாவிடினும், மத்தியக் கிழக்கில் பல்தரப்பட்ட பணிகளில் நோர்வே ஈடுபாடு கொண்டுள்ளது. பிலிப்பைன்ஸ், ஹெய்ட்டி, கொலம்பியா மற்றும் குவதமாலா – இவைகளிலும் ஈடுபாடு உண்டு.

**5. சுயநலத்திற்காகவே நோர்வே சமாதானப் பணிகளில் ஈடுபடுகின்றது என உங்களுடைய விமர்சகர்கள் குற்றம்சாட்டுகின்றனர். மீன்பிடி, மற்றும் எண்ணெய் வளங்களைச் சுரண்டுவதற்காக எனச் சிலர் விமர்சிக்கின்றனர். வேறு சிலர், லூதர் மதத்தைப் பரப்புவதற்காக என்றும் பறைசாற்றுகின்றனர். இலங்கையைப் பொறுத்தமட்டில், எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சியில் நோர்வே ஈடுபட்டுள்ளது என்பது தற்செயலான நிகழ்வாகவேயிருக்க வேண்டும்.**

இவை போன்ற அனைத்து ஊகங்களும் அர்த்தமற்றவை. நோர்வேயின் மீன்பிடி மற்றும் எண்ணெய் வள ஆராய்ச்சிக்கும் அண்மைய சமாதானப் பணிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் நிச்சயமாக இல்லை. இலங்கையில் இயற்கை வளங்கள் இருப்பதாகக் கண்ட அதேசமயம், நோர்வேயும் இலங்கையுடன் ஈடுபாட்டை ஏற்படுத்தியது தற்செயலான நிகழ்வு மாத்திரமே. லூதர் மதம் நோர்வேயின் அரச மதமாக இருந்தபோதிலும் அதைப் பரப்புவதில் நோர்வேக்கு அக்கறை இல்லை. இலங்கையில் மறைமுகமாக மதப் பிரச்சாரத்தை நோர்வே மேற்கொண்டுள்ளது எனக் கூறுவது அபத்தமானது. 21ஆம் நூற்றாண்டில், சமாதானத்தை நிலைபெறச் செய்வது, நோர்வேயினால் மட்டுமே முடியாதென்பது எமது திடமான நம்பிக்கை. சுவீடன், பின்லாந்து மற்றும் ரஷ்யா – இவற்றிடமிருந்து எவ்வித எல்லைப் பிரச்சினையும் எமக்கில்லை. எமது பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் ஒரு பாதுகாப்பான உலகத்தை அளிக்கலாம். நாம் பயங்கரவாதத்தையும் பொருளாதார, சுற்றுச்சூழல் அனர்த்தங்களையும் குறைத்துக்கொள்வதற்கு உறுதிபூண வேண்டும். ஒரு நாட்டில் அமைதியின்மை நிலவுமாயின், அது நோர்வே போன்ற சமாதானம் நிலவும் நாடுகளுக்கும் பரவிவிடலாம். அடுத்து, சமாதானப் பணிகளில் நோர்வே ஈடுபட்டுள்ளதால், உலகின் ஏனைய முக்கிய நாடுகள் நோர்வேயை அக்கறையுடன் நோக்குகின்றன.



**6. பனிப்போருக்கு முன்பு, மத்தியஸ்தம் வகிக்கவும் சமாதானப் பணிகளை முன்னெடுக்கவும் வல்லரசுகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பனிப்போருக்குப் பின்புதான் வலுவுள்ள சிறிய நாடுகள் சமாதானப் பணிகளில் ஈடுபடத் தொடங்கின. வல்லரசுகளின் மத்தியஸ்தத்திற்கும் வலுவுள்ள சிறிய நாடுகளின் அனுசரணைக்கும் இடையிலுள்ள ஒப்பீட்டு அனுகூலங்கள் யாவை?**

பிணக்குகளைக் கொண்டுள்ள நாடுகளின் அங்கங்களைத் திருகிக் கொண்டு, சமாதானத்தை அவற்றின் மீது பலவந்தமாகத் திணிப்பது, பெரிய வல்லரசுகளின் மத்தியஸ்தத்தால் ஏற்படும் முக்கிய அனுகூலம். கடந்த 10 வருடங்களுக்குள் இதை விளக்கும் ஓர் உதாரணத்தைத் தருவதானால், ஓஹியோவில் கையெழுத்திடப்பட்ட டெய்ட்டன் உடன்பாட்டைக் குறிப்பிடலாம். பிணக்குகளைக் கொண்டிருந்த சேபியர்களையும் குரோஷியர்களையும் முஸ்லிம்களையும் ஓஹியோவிலுள்ள டெய்ட்டன்களுக்கு வரவழைத்த அமெரிக்கா, அம்மூன்று நாட்டவர்களையும் நன்னடத்தையைப் பேணிக்கொண்டு வாழுமாறும் இல்லாவிட்டால் உலகின் கழிவுப் பொருட்களாக அவர்களை மாற்றிக் கணிக்கப்படும் எனவும் அவர்கள் போர் தொடுப்பதைத் தடுப்பதற்குத் தனது முழு வலுவையும் சக்தியையும் பயன்படுத்தும் எனவும் அவர்கள் ஒரு தீர்வுக்கு வராதபட்சத்தில், போதியளவு பொருளாதார மற்றும் இராஜதந்திர அழுத்தங்களை ஏற்படுத்தி அவர்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள் எனவும் அச்சுறுத்தியது. இந்த உபாயம் வெற்றி அளித்தது. அவர்கள் ஒரு சமாதான உடன்பாட்டிற்கு இணங்கினார்கள். இது நிச்சயமாக முற்றிலும் சரி காணக்கூடிய வழிமுறை அல்ல. இருப்பினும் போர்நிறுத்தம் சாத்தியமாயிற்று. இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் போன்ற ஏனைய வலுமிக்க பெரிய நாடுகளும் சிலவேளைகளில், இவ்வாறு செய்யக்கூடும். இருப்பினும் மக்கள் நினைப்பதைவிடவும் மட்டுப்படுத்துகைகள் அதிகமாக உள்ளன. உதாரணமாக ஈராக் நாட்டில் வலுமிக்க நாடுகள் ஈடுபட்டிருந்தாலும், அவை என்ன செய்யலாம் என்பதில் மட்டுப்படுத்துகைகள் உள்ளன.

ஒரு நாடு உள்ளக முரண்பாடுகளை எதிர்கொள்கிறது என்றால், அது நோர்வே போன்ற ஏனைய சமாதானம் நிலவுகின்ற நாடுகளுக்கும் பரவுவதற்கு வாய்ப்புள்ளது. இறுதியாக, பல்வேறு சமாதானச் செயன்முறைகளில் நோர்வேயின் ஈடுபாடானது உலகின் ஏனைய பிரதான நாடுகளிலிருந்து நோர்வேயில் ஒரு ஈடுபாட்டை உருவாக்குகிறது.

**7. வலுவுள்ள சிறிய நாடொன்றின் அனுசரணையிலுள்ள இருதரப்பினரும் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்ல விரும்பினால் மட்டுமே அது**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சாத்தியமாகும். இவ்விரு தரப்பினரும் வெவ்வேறு நிகழ்ச்சி நிரல்களைக் கொண்டிருந்தால், அனுசரணை முயற்சிகள் சிதைந்துவிடுமல்லவா?**

ஆம்! முரண்பாடு சிறிய நாட்டால் உருவாக்கப்படவில்லையாதலால் இது உண்மைதான். முரண்பாட்டை உருவாக்கிய தரப்பினர்கள், அவற்றிற்கான தீர்வையும் தாமே பெற்றுக்கொள்வார்கள் என்றால், அது மூன்றாம் தரப்பினரின் தீர்வைவிடவும் நிலைத்து நிற்கும்.

**8. ஆனாலும், எரிக் சொல்ஹெய்ம் ஆகிய நீங்கள், ஒரு பேயென நிந்திக்கப் பட்டீர்கள். உங்களுடைய இப்போதைய வருகையின் போது, உங்களை ஓர் இரட்சகர் எனத் துதிக்கிறார்கள். இருதரப்பினரைவிடவும், அனுசரணை யாளர்மீது அதிக எதிர்பார்ப்பு வைக்கப்படுகிறது. இந்த முரண்பாட்டை நீங்கள் எவ்வாறு விளக்குகிறீர்கள்?**

இவை அனைத்துமே ஊடகங்களால் தோற்றுவிக்கப்பட்ட முரண் பாடுகள். விடயங்களைப் பூதாகரமாக்குவது ஊடகங்களின் இயல்பான ஒரு வேலையாக இருக்கிறது. நோர்வேயிலும் ஊடகங்களின் செய்தி தெரிவிக்கின்ற இத்தகைய மனோபாவம் காணப்படுகிறது. உதாரண மாக, பிரதமர் ஸ்ரோல்டென்பேர்க் நேற்றிரவு முக்கியமானதொரு உரைநிகழ்த்தினார் என்று ஊடகங்கள் செய்தி வெளியிடமாட்டா. இது முற்றிலும் அற்புதமானதானது அல்லது அபத்தமான பேச்சு; அத்துடன் ஒரு பேதையின் பேச்சு எனச் செய்தி வெளியிடும். இது எப்பொழுதுமே ஒன்றில் இது அல்லது அது என்பதாகவே இருக்கிறது. இல்லாவிட்டால் இது ஊடகங்களில் மகிழ்ச்சிப்படுத்தப்பட முடியாது. இங்கு முக்கிய மான அம்சம் என்னவென்றால், உள்ளக முரண்பாட்டினால் பிரச்சினைப் பட்ட ஏனைய சகல நாடுகளிலும் போன்று, நீண்டகாலரீதியில், இலங்கை யின் முரண்பாடானதும் சம்பந்தப்பட்ட தரப்பினராலேயே தீர்க்கப்பட வேண்டும். தமக்கிடையிலான முரண்பாட்டைத் தாமே தீர்த்துக்கொள் கின்ற இந்தப் பொறுப்பிலிருந்து தரப்பினர் தப்பித்துக்கொள்ளக் கூடாது என்று நான் கருதுகிறேன். முரண்பாட்டைத் தீர்த்துக்கொள்வதற்கான முயற்சியில் ஒரு சிறிய நாடு உதவியளிக்க முடியும். ஆனால், முரண் பாட்டில் சம்பந்தப்பட்ட பிரதானத் தரப்பினரிடம் இதற்கான முன் வருகை, இல்லாதுவிட்டால், எதையுமே செய்ய முடியாது.

**9. இலங்கையின் சமாதான செயன்முறையில் நோர்வேயின் ஈடுபாட்டுக்கான விசேடக் காரணங்கள் எவை? இதற்கு உங்களை இட்டுச் சென்ற முக்கியக் காரணிகளை விளக்க முடியுமா?**

இலங்கைக்கான நீண்டகாலரீதியான அபிவிருத்தி உதவி மற்றும் இலங்கையின் நீண்டகாலப் பாதுகாப்பற்ற சூழ்நிலையின் இருப்பு மற்றும் ஆர்னே போர்டொப் போன்றவர்களின் இலங்கை இருப்பு என்பவற்றுடன் இது ஆரம்பித்தது. அத்துடன் தற்செயலாக நிகழ்ந்த ஒரு விடயத்தையும் இங்கு சேர்க்க வேண்டும். 1999ஆம் ஆண்டு நான் இங்கு முதன்முதலாக வந்தேன். நான் இலங்கை வந்தபோது, இலங்கையின் முரண்பாட்டுடன் சம்பந்தப்படக்கூடிய எதிலேயாவது சம்பந்தப் படுவேன் என்ற எந்தவிதமான எண்ணக் கருவும் எனக்கு இருக்க வில்லை. ஆர்னே போர்டொப்பின் அழைப்பின் பேரில் நோர்வேயின் சமீபகால அரசியல் பற்றி ஒரு புத்தகம் எழுதுவதற்காகவே இங்கு வந்தேன். கொழும்புக்கு வெளியே உள்ள தனது இருப்பிடத்தில் அமைதியாக இருந்து அத்தகைய வேலையில் கவனம் செலுத்தலாம் என்று அவர் கூறியிருந்தார். இந்த விடயத்தின்போது சிலரை நான் இங்குச் சந்தித்திருந்தேன். கலாநிதி சரத் அமுனுகம, (இவர் முன்னர் நிதி அமைச்சராக இருந்தார்), கலாநிதி நீலன் திருச்செல்வம் (இவர் புலிகளால் பின்னர் கொலைசெய்யப்பட்டார்), கரு ஜயசூரிய (அப்போதைய கொழும்பு மாநகரசபை மேயர்) மற்றும் ஹக்கீம் ஆகியோரைப் பின்னர் சந்தித்திருந்தேன். இவர்களை நான் சந்தித்திருந்தபோதிலும், இங்குள்ள முரண்பாடு தொடர்பில் அனுசரணையாளராக வரவிருந்தேன் என்று கொஞ்சம்கூட அறிந்திருக்கவில்லை. இதன் பின்னர் இலங்கையின் பல்வேறு செயல்பாட்டார்களால் நான் நோர்வேயில் அணுகப்பட்டேன்.

ஒரு நாள், ஒஸ்லோவில் என்னைச் சந்திக்க வந்த விடுதலைப்புலி களின் தலைமை பேச்சுவார்த்தையாளரான அன்டன் பாலசிங்கத்தை முக்கியமானதொரு சத்திரசிகிச்சைக்காக இலங்கைக்கு வெளியே கொண்டு வருவதற்கு இலங்கை அரசாங்கத்துடன் பேச முடியுமாஎன்று கேட்பதற் காக நோர்வேயின் வெளிநாட்டமைச்சகத்திற்கு வந்ததாகக் கூறினார்கள்.

நோர்வேயில் வெளிநாட்டமைச்சில் சில சிவில் உத்தியோகஸ்தர் களிடம் இந்த விடயம் எழுப்பப்பட்டிருந்தது. ஆனால் தமது வேண்டு கோள் நிராகரிக்கப்படுமென்று புலிகள் நினைத்திருந்தார்கள். இதன் காரணமாகவே அப்போது நோர்வேயின் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாக ஈடுபட்டிருந்த சிலருள் நானும் ஒருவன் என்று அறியப் பட்டிருந்ததால் தமது வேண்டுகோள் தொடர்பாக ஒரு ஆதரவை ஏற்படுத்துவதற்காக என்னைச் சந்திப்பதற்கு அவர்கள் வந்திருந்தார்கள். அப்போதும் பாராளுமன்றத்தில் வெளிநாட்டுக் கொள்கைக் குழுவின் உறுப்பினராக இருந்தேன். அதனால் தமது வேண்டுகோள் உயர் மட்டத்தில் கவனத்தில் எடுக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக அவர்கள் என்னிடம் வந்திருந்தார்கள்.

இந்த வேண்டுகோள் தொடர்பாக நான் அப்போதைய இலங்கைக் கான நோர்வே தூதுவர் வெஸ்பேர்க் மற்றும் சிலருடன் தொடர்பு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டேன். வெஸ்பேர்க் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடனும் பேசினார். பாலசிங்கத்தை இலங்கைக்கு வெளியே கொண்டு வருவது பற்றி ஐரோப்பாவில் புலிகளுடனும் கொழும்பில் ஜனாதிபதி மற்றும் லக்ஷ்மன் கதிர்காமருடனும் விரிவாக ஆராயப்பட்டது. ஆனால் பல்வேறு காரணங்களால் இது தொடர்பாக முயற்சி எதனையும் சாதிக்கவில்லை.

பின்னர் அன்டன் பாலசிங்கம் வேறு வழிமுறைகளினூடாக இலங்கையைவிட்டு வெளியேறி இருந்தார். இது பற்றி அடேல் பாலசிங்கத்தின் புத்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

இவை எல்லாமே இரகசியமாக மேற்கொள்ளப்பட்டன என்ற ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க மற்றும் கதிர்காமர் தவிர வேறு எவரும் இது பற்றிக் கொழும்பில் அறிந்திருக்கவில்லை என்றும் விடுதலைப்புலிகளிலும் ஒரு சிலருக்கே இது பற்றித் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவுமே நான் உறுதியாக நம்பு கிறேன். நோர்வே தரப்பிலிருந்து எந்தவிதமான செய்திக் கசிவும் இது தொடர்பாக ஒருபோதும் இருக்கவில்லை. சமாதான நடைமுறை முழுவதிலும், நோர்வேயிடமிருந்து முற்றிலுமாக எவ்விதக் கசிவும் இருக்கவில்லை. ஒரு சிலர் மட்டுமே இது பற்றி அறிந்திருந்தனர். 1999-2000ஆம் ஆண்டு புதிய வருட தேர்தலுக்குச் சற்று முன்னர் விடுதலைப்புலிகள் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைக் கொலை செய்ய எத்தனித்த பின்னர் சந்திரிகா குமாரதுங்க இது பற்றி அம்பலப்படுத்தும்வரை அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாம் எமது பணி பற்றி இரகசியம் காத்தோம்.

சந்திரிகா குமாரதுங்க தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் தமிழர் களுக்கு எதிராக எவ்விதப் பழிவாங்குதல்களும் இராது என்று கூறினார். இது அவரது தைரியத்தன்மை என்று நான் கருதினேன். பிபிசியுடனான ஒரு நேர்காணலில் நீண்ட காலமாக நோர்வே அனுசரணைப் பணி வகித்து வருகிறது என்று அவர் வெளிப்படுத்தினார். இது நோர்வேக்கு முற்றிலுமான ஒரு ஆச்சரியமாக அமைந்தது. எமக்கு அறிவிக்காமல் இது பற்றி வெளிப்படுத்தியமைக்காகப் பின்னர் எம்மிடம் அவர் மன்னிப்புக் கோரினார். ஆகவே இதனால் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. ஊடகம் மூலம் அல்லது வேறு வழிவகைகளின் மூலம் கசியவிடுவதைக் காட்டிலும் இவ்வாறு சந்திரிகா குமாரதுங்க அறிவித்தது நல்லது என்றே நான் நினைக்கின்றேன்.

**10. இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான யுத்தநிறுத்த உடன்படிக்கையில் நோர்வே முக்கிய பங்கு வகித்ததாக**



**ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்காலத்தில் யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டபோது ஜனாதிபதி தவிர்க்கப்பட்டிருந்தார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்களாக இருக்கும் போது இது ஒரு பிரதான விவகாரமாக இருந்தது. ஏன் இது நடைபெற்றது என்று விளக்குவீர்களா?**

சமாதான நடைமுறையின்படி நிறைந்த பகுதிகளில் ஒன்றாக இது இருக்கவில்லை. எவர்மீதும் நான் விரல்களைச் சுட்டிக்காட்டமாட்டேன்.

ஆனால், பின்னர் இது அதிகளவான வருத்தமூட்டும் உணர்வுகளை ஏற்படுத்தியது அப்போதைய காலப்பகுதியில் பல்வேறு கஷ்டங்கள் இருந்தபோதிலும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை யானது, 1983 வன்முறை இடம்பெற்ற பின்னர் முதன்முதலில் உறுதி யானதும் அமைதியானதுமான சூழ்நிலையை உருவாக்கியது. தமது பொறுப்புகள் என்ன என்பதை இருதரப்பினரும் அறிவார்கள். ஒப்பந்தத்தில் அவை தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக இரு சாராரினதும் பற்றுதிகளை ஞாபகமூட்டுவதற்குப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு இருக்கிறது. பல்வேறுபட்ட வன்முறை நிகழ்வுகள் மற்றும் மீறல்களைக் கணக்கிலெடுக்கின்றபோதிலும்கூட யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பிரதானமான அம்சங்கள் அண்மைய மாதங்கள் வரை பெரியளவில் மதிக்கப்பட்டிருக்கின்றன. இதனடிப்படையில் யுத்தநிறுத்த உடன்படிக்கையானது வெற்றிகரமானதாக இருப்பதாகக் கூற முடியும்.

**11. யுத்தநிறுத்த உடன்படிக்கையில் நோர்வே அனுசரணை வழங்கிய விடயத்தை மீண்டும் பார்க்கின்றபோது, முரண்பாட்டுடன் தொடர்புடைய சகல பங்குதாரர்களும் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பது முரண்பாடு களுக்கான தீர்வுக் கோட்பாட்டின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும். ஆனால், மறுபுறத்தில் இரகசியம் பேணுவது தொடர்பாகச் சமநிலை பேணுவது மற்றும் இவ்விரு விவகாரங்களுக்கான தேவை தொடர்பில் பிரச்சினை இருந்ததாக நான் கருதுகிறேன்.**

சமாதானச் செயன்முறையில் உரித்துடைமையானது சம்பந்தப்பட்ட இருதரப்பினரதும் கைகளில்தான் தங்கியிருக்கிறது என்பதை மீளவும் நான் வலியுறுத்துகிறேன். நான் சமாதானச் செயன்முறையில் ஈடுபட்டி ருக்கின்ற கடந்த 7 வருடங்களில் நோர்வேயினால் எந்தத் தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை. ஆட்டத்தின் தன்மை அதுதான். இருதரப் பினருமே சகல தீர்மானங்களையும் எடுக்கிறார்கள். இந்த தீர்மானங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிவுபூர்வமான தீர்மானங்களோ இல்லையோ அனுசரணையாளர் என்ற வகையில் நாங்கள் எந்தத் தீர்மானமும் எடுப்பதில்லை. யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக அனுசரணை வழங்கிய விவகாரத்தில் கூட, நான் உட்பட வேறுபல முக்கியஸ்தர்கள் ஈடுபட்டிருந்தார்கள்.

உண்மையில் சிறிய ஒரு நாடு என்ற வகையில் இருதரப்பினரின் இராணுவச் சமநிலை பற்றி நோர்வேயிடம் எந்தப் புலனாய்வும் இல்லை.

இதனால் இருதரப்பினருக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடியவை நோர்வேக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டியிருந்தது. பொதுவான ஒரு தளத்தை ஏற்படுத்துவதே எமது பணியாக இருந்தது. இது இருசாராரினதும் முக்கியக் கவலைகளை ஒருங்கிணைத்ததுடன் இருசாராரும் ஏற்கக்கூடியதாக இருந்தது.

***12. யுத்தநிறுத்த ஒப்பந்தம் எவ்வாறு உருவானது? இருதரப்பினருக்கும் நீங்கள் விளக்கமான வாசகப் பிரதிகளை வழங்கினீர்களா? உண்மையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் எவ்வாறு உருவாக்கப் பெற்றது?***

பிரதான விடயங்கள் தொடர்பாக நான் லண்டனில் பாலசிங்கத்துடன், கொழும்பில், ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொரகொட மற்றும் ஏனைய அரசியல் தலைவர்களுடன் நீண்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டேன். பிரச்சினைகளை ஆராய்ந்து பல மணிநேரம் கலந்துரையாடினோம் இருதரப்பினரும் அநேக மாற்றங்களைச் செய்த பின்னர், எம்மிடம் தரப்பட்ட விடயதானங்களை வாய்ப்பேச்சுகள் மூலம் கலந்துரையாடினோம். இதன் பின்னர் நான் புதிய யோசனைகள் அடங்கிய நகல் ஒன்றைத் தயாரித்தேன். இதற்கு 2 மாதங்கள் எடுத்தது. பிப்ரவரி 22இல் இது கையெழுத்திடப்பட்டது. ஒப்பந்தத்தை வரைவதற்கும் அது தொடர்பான கலந்துரையாடல்களுக்கும் 6 முதல் 8 வாரங்களைச் செலவிட்டோம்.

***13. யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பலங்கள் பலவீனங்கள் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?***

இலங்கையில் அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வன்முறையைப் பயன்படுத்தக் கூடாது என்பது மிகவும் தெளிவானது என்று நான் நினைக்கிறேன். யுத்தத்தை நிறுத்துகின்ற அதேவேளை, தரப்பினரை அரசியல் தீர்வொன்றுக்கு அனுமதிப்பதே யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பலமாகும். யுத்தநிறுத்தக் கண்காணிப்பு குழுவானது அதன் மற்றொரு பலமாகும். பெருமளவுக்கு அமல்படுத்தப்பட்டிருந்த நம்பிக்கையை கட்டியெழுப்புகின்ற நடவடிக்கைகளை ஞாபகம் கொள்வதும் முக்கியமானது. உதாரணமாக வடக்கு, கிழக்கில் பாடசாலைகள் போன்ற



பொது இடங்களிலிருந்து இலங்கை இராணுவத்தின் வாபஸ் தெற்கிலிருந்து வன்னி ஊடாக யாழ்குடாநாட்டுக்குச் சாதாரண பயணத்திற்காக ஏ 9 பாதையை விடுதலைப்புலிகள் திறந்துவைத்தமை போன்ற நடவடிக்கைகள் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு வழிவகுத்தன.

இருதரப்பினரையும் உடன்படிக்கைக்கு இணங்கவைப்பதற்கான வலிமையானதும் சக்திமிக்கதுமான கண்காணிப்பு முறைமை இல்லாதது யுத்தநிறுத்த உடன்படிக்கையின் அடிப்படையான பலவீனமாகக் கருதலாம். ஆனால், அச்சமயத்தில் உண்மையில் இது சாத்தியம் இல்லாததாகக் காணப்பட்டது. அத்துடன் தீர்மானங்களைத் திணிக்கின்ற ஆணை போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவுக்கு வழங்கப்படவில்லை. ஆனால், யுத்தநிறுத்த உடன்படிக்கையின் வெற்றியானது இருதரப்பினரதும் கைகளிலேயே தங்கியிருக்கிறது என்று நான் மீண்டும் எடுத்துரைக்கிறேன். யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ள கடப்பாடுகளை அமல்படுத்துவதற்குப் பொறுப்பானவர்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரே அன்றிக் கண்காணிப்புக் குழு அல்ல.

***14. எழுந்துள்ள இன்னுமொரு பிரச்சினை, அனுசரணையாளராகவும் கண்காணிப்பாளராகவும் நோர்வே பணிபுரிதல் – இருதரப்பினரும் நோர்வே நாட்டைக் கண்காணிப்புக் குழுவின் தலைமையை ஏற்கும்படி வேண்டினர் என்பது எனக்குத் தெரியும். அனுசரணையாளராகவும் கண்காணிப்பாளராகவும் நோர்வே செயலாற்றுவது அடிக்கடி விமர்சனத்திற்குள்ளாகியது. இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?***

ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னரும் நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நிருவாகத்துடனும் லக்ஷ்மன் கதிர்காமருடனும் கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்துவது தொடர்பாக நீண்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தோம். இந்தியாவுடனும் கலந்து பேசினோம். இந்தியாவின் ஆதரவின்றி இலங்கையில் ஒரு போதும் சமாதானம் ஏற்படமாட்டாது என்பதை நாம் முதன்முதலே தெரிந்து கொண்டோம். இலங்கைமீதான இந்தியாவின் அக்கறை நியாயபூர்வமானது. கண்காணிப்புக்குழு உள்ளிட்ட அனைத்து முக்கிய விடயங்களையும் அவர்களுடன் கலந்துரையாடினோம். யுத்தி வியூகக் காரணங்களுக்காக அநேக அந்நியச் சக்திகள் தென் ஆசியப் பிராந்தியத்தில் வட்டமிடுவதை இந்தியா விரும்புவதில்லை என்பதை நாம் அனைவரும் அறிவோம். குடியேற்ற நாடு என்ற போர்வையில், அந்நிய ஆதிக்கத்தின் கீழ் அல்லலுற்ற கசப்பான அனுபவம் தென் ஆசியப் பிராந்தியத்திற்கு உண்டு. அந்நியரின் தலையீடுகள் இன்றித் தமது விவகாரங்களைத் தாமே தீமானித்துக்கொள்ளும் நிலையில் தென் ஆசியப் பிராந்தியம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்போது உள்ளது. இது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று. நாம் அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடினோம். நோர்வேயின் பணிகள், முழுமையாகப் பிரிந்து வெவ்வேறாக்கப்பட வேண்டியவை எனத் தீர்மானித்தோம். நோர்வே அனுசரணையாளாராக இருப்பதால் கண்காணிப்பாளராகவும் இருக்கக் கூடாது என்பது நோர்வேயின் நிலை. இந்தியா உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் நோர்வே முக்கியப் பங்களிக்க வேண்டுமென விரும்பினார்கள். சிறிய வலுவுடைய நாடாக நோர்வே இருப்பதால், அதன் ஈடுபாடு ஏற்றுக்கொள்ளக் கூடியது என்று அவர்கள் வற்புறுத்தினர். எல்லா ஸ்கண்டிநேவிய நாடுகளுமே நோர்வேயை ஒத்தவையாகவும் சிறிய நாடுகளாகவும் இருந்தமையால் ஸ்கண்டிநேவியக் குழுவாக உருப்பெற்றது.

இருதரப்பினரும் இந்தியாவும் இப்படித்தான் இது இருக்கவேண்டும் என்று அடிப்படையில் தீர்மானித்தனர். நோர்வே இரண்டு முக்கியப் பங்குகளை வகிக்கின்ற இத்தகைய ஒரு ஏற்பாட்டில் பலங்களும் பலவீனங்களும் இருக்கின்றன. மேல்மட்டத்திலான அணுகுமுறைக்கும் உள்ளூர்க் களங்களில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் மேற்கொள்ளப்படும் முரண்பாட்டுக்கான தீர்வுக்கும் இடையில் நெருக்க மான உறவு இருக்கின்றமை இங்குப் பலமான ஒரு விடயம். ஆனால் உண்மையில் அனுசரணையாளர் என்ற வகையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தீர்மானம் இயற்றுகையில் நான் ஒருபோதும் தலையிட்டதில்லை.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவானது ஒரு சுயாதீனமான ஒரு அமைப்பு. ஆனால் என்னுடைய வாதம் என்னவென்றால், அனுசரணை யாளருக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்குமிடையே நெருக்கமான கலந்துரையாடலும் ஒத்துழைப்பும் இருந்தன என்பதுதான். பலவீனம் என்ன வென்றால், அனுசரணையாளர் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமை ஆகிய இரு பணிகளுக்கும் நோர்வே நியமிக்கப்படுவதானது இதை ஒரே அமைப்பு ஒரே பாகம் என்று கருத இடமளிக்கிறது. இது எளிதில் சரியான ஒன்று அல்ல. ஆனால் நாங்கள் புரிந்துகொள்ள வேண்டியிருக்கின்ற கருதுகையின் பிரச்சினையாகும்.

***15. முஸ்லிம்கள் தொடர்பிலான பிரச்சினை சமாதானச் செயன்முறையின் ஒரு விவகாரமாக காணப்படுகிறது. முரண்பாட்டால் பாதிப்படைபவர் களாக முஸ்லிம்கள் காணப்படுகின்றபோதிலும் முரண்பாட்டில் ஒரு தரப்பாக முஸ்லிம்கள் காணப்படவில்லை என்ற ஒரு கவலை முஸ்லிம் காங்கிரஸால் வெளிப்படுத்தபட்டிருக்கிறது. முரண்பாட்டால் பாதிக்கப் பட்டவர்களாக மட்டுமே முஸ்லிம்கள் பார்க்கப்படுவதும் இன்னமும் முரண்பாட்டில் ஒரு தரப்பினராக அவர்கள் கருதப்படவில்லை என்பதும் முஸ்லிம் தலைவர்கள் மத்தியில் ஒரு கசப்புணர்வை ஏற்படுத்தியிருப் பதாகக் கருதுகிறேன்.***



இந்தக் கசப்புணர்வானது புரிந்துகொள்ளக்கூடியதுதான். பின்னோக்கிப் பார்க்குமிடத்து, சமாதானச் செயன்முறையில் முஸ்லிம்களினதும் ஆழமான ஈடுபாட்டுடனான ஒரு பல்வேறுபட்ட அம்சங்களைக் கொண்ட சமாதானச் செயன்முறையை மேற்கொண்டிருப்பதற்கு தனிப்பட்ட முறையில் நான் விரும்பியிருப்பேன். ஆனால் இது விடயத்தில் தீர்மானம் எடுப்பது நோர்வேயின் கைகளில் தங்கியிருக்கவில்லை. சுனாமி நிவாரணக் கட்டமைப்புக்கான கலந்துரையாடல்களில் முஸ்லிம் களின் விவகாரத்தைத் தூக்கிப்பிடித்தவர் பிரஸ்ட்கார் என்பதை நான் தெளிவாக நினைவில் கொள்கிறேன். சுனாமியால் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்கள். அதனால் இது விவகாரத்தில் அவர்களுக்கு நியாயபூர்வ மான ஒரு அக்கறை இருக்கிறது என்பதை நாம் எப்பொழுதும் நினைவு படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். இதன் விளைவு, இலங்கையின் சமாதானச் செயன்முறை தொடர்பாக வேறு எந்த ஆவணத்தைக் காட்டிலும் சுனாமி நிவாரணக் கட்டமைப்பில் முஸ்லிம் களின் நிலை வலுவானதாகக் காணப்படுகிறது.

***16. முஸ்லிம் விவகாரம் தொடர்பாகப் பார்க்கின்றபோது யுத்தத்தின்போது வடக்கிலிருந்து அவர்கள் கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்கள். இரண்டாவதாக, அவர்களது விவசாய நிலங்கள் சம்பந்தப்பட்ட விடயம் காணப்படுகிறது. தாய்லாந்து பேச்சுவார்த்தையில் பாலசிங்கத்தின் வேண்டு கோளுக்கிணங்க 55 ஆயிரம் குடும்பங்களை நேரில்கண்டு ஓர் ஆய்வைச் சகவாழ்வுக்கான மன்றம் நடத்தியிருந்தது. சிவில் சமூக அமைப்புகளின் ஈடுபாடு மற்றும் அடிமட்ட மக்களின் ஒருங்கிணைப்புக் காரணமாகத் தமிழ்–முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவு முன்னேற்றம் கண்டது. ஆனால் காணி மாற்று விவகாரம் இன்னமும் தீர்க்கப்படவில்லை. இந்த விவகாரம் தீர்க்கப்பட்டாலன்றித் தமிழ்–முஸ்லிம் மக்களிடையிலான சகவாழ்வு பற்றி நீங்கள் பேசிக் காணி மாற்ற முடியாது என்று நான் நினைக்கிறேன். அனுசரணையாளர் என்ற வகையில் விடுதலைப்புலி களின் கவனத்திற்கு இதைக் கொண்டுசென்றீர்களா?***

விவகாரம் ஒரு முக்கியமான அம்சம். புலிகளின் கவனத்திற்கு இதைக் கொண்டுசென்றேன். நாட்டின் நிலைமை மோசமடைந்திருக்காது விட்டால் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டிருந்திருக்க முடியும் என்று நான் நினைக்கின்றேன். 2003இல் இவ்விவகாரம் எழுப்பப்பட்டபோது இதைத் தீர்ப்பதற்கான ஆவல் காணப்பட்டது. ஆனால் தொடர்ந்து வந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரச்சினைகள் இருதரப்பினர் மத்தியிலுமான நம்பிக்கையைப் பாதித்துச் சீர்குலைத்ததுடன் இவ்விவகாரங்கள் தீர்க்கப்படுவதைக் கடினமாக்கியது. நம்பிக்கையையும் சகவாழ்வையும் மேம்படுத்துவதற்குக் களத்திலே சமாதானத்தைக் கட்டியெழுப்புவது அவசியமானது என்று நிச்சயமாகக் கருதுகிறேன். ஆதலால், சாத்தியமானளவு விரைவாக இது தீர்க்கப்பட்ட வேண்டும். எப்படியென்றாலும், இவை முழுவதும் நோர்வேயில் செய்யப்பட முடியாது இது இலங்கை சமூகத்திடமிருந்தும் வரவேண்டும்.

**17. சுயாதீனமாக மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு தாபிக்கப்பட வேண்டும் என்று ஹக்கோனேவில் இயன் மாட்டின் ஆலோசித்ததுபோல, கொலைகள் அதிகரித்து வரும் நிலையில் உண்மைகளைக் கண்டறிவதற்கான ஒரு வேறுபடுத்தல் பொறிமுறை அவசியம் என்ற ஒரு வாதம் இருக்கிறது. இதற்கு எவ்வாறு பதில் கூறுகிறீர்கள்?**

துஷ்பிரயோகங்கள், கொலைகள் மற்றும் ஆட்கடத்தல்கள் தொடர்பாகக் குற்றவாளிகளை நீதிமன்றத்தின் முன்னால் கொண்டுவருவதற்கான பூரண விசாரணை நடத்துவது பற்றிப் பார்க்கின்றபோது, இந்த வேலை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட வேண்டும். தவறான நடத்தைக்காக மக்களைக் கைதுசெய்வது பொலிஸாரின் பொறுப்பே அன்றிக் கண்காணிப்புக் குழுவினுடையதல்ல. நீதிமன்றங்கள் தண்டனை வழங்குவதற்குப் பொறுப்பானவை. விடுதலைப்புலிகளும் அரசாங்கப்படைகளும் குற்றவாளிகள் என்று சந்தேகிக்கப்படுகின்ற எல்லா விவகாரங்களுக்கும் இது பொருந்துகிறது. இது இரு வழிகளிலும் நடைபெற வேண்டும். ஆனால் இலங்கையில் அது நடைபெறவில்லை. இது இலங்கையால் தீர்க்கப்பட முடியுமே தவிர, கண்காணிப்புக் குழுவால் அல்ல. மனித உரிமைகள் கண்காணிப்பு விவகாரம் எவ்வாறு தீர்க்கப்படலாம் என்பது பற்றிச் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேசுவதற்கு நாம் தயாராகவே இருக்கிறோம். இது விடயத்தில் பல்வேறு வழிமுறைகளில், ஒருவேளை வேறுபடுத்தும் பொறிமுறை இருப்பது பற்றி, அதாவது மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பது தொடர்பாகக் கண்காணிப்புக் குழுவைப் பலப்படுத்துவது குறித்து இங்குப் பேசமுடியும்.

**18. அனுசரணையாளர்களாக நோர்வே வகித்த பங்கின் நற்பெயரைக் களங்கப்படுத்துவதற்கு ஊடகங்களால் ஒருமித்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த எண்ணப்பாட்டை நீங்கள் எவ்வாறு கவனத்தில் எடுக்கிறீர்கள்? உதாரணமாக, விடுதலைப்புலிகளுக்காகச் செய்தி பரிமாற்ற உபகரண விவகாரத்தைக் கையாண்டமை விமர்சனத்திற்குள்ளாகியது. நடுநிலைத் தன்மை இன்மையானது மற்றொரு விமர்சனம். நோர்வேயில் விடுதலைப்**



**புலிகளுக்குப் பயிற்சி வழங்குவதுவரை சென்று நோர்வே புலிகளுக்குப் பக்கச்சார்பாக நடந்துகொள்வதாகச் சிலர் கூறுகின்றனர். இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக என்ன கருத்தைக் கூறுகிறீர்கள்? அத்துடன், இத்தகைய தவறான புரிதல்களைக் களைவதற்காக எத்தகைய நடவடிக்கையை எடுத்து வருகிறீர்கள்?**

விமர்சனங்களைப் பற்றிப் பேசுகின்றபோது அதில் இரண்டு வகை உண்டு என்று நீங்கள் கூறமுடியும். நியாயபூர்வமான விமர்சனம் என்று நான் கூறுகின்ற ஒரு விமர்சனம் இருக்கிறது. இது எதிர்பார்க்கப்பட வேண்டியிருக்கிறது. நோர்வேயிலும்கூட, அரசியலில் இறங்குகின்ற எவரும், விமர்சனம் இருக்கும் என்பதை எதிர்பார்க்க வேண்டும். இது முற்றிலும் சாதாரணமானது. எப்படியென்றாலும், இலங்கையில் அதிகளவான ஊடக விஷமம் காணப்படுகிறது. அதாவது பத்திரிகைகளை விற்பனை செய்யும் பொருட்டு உண்மைக்கான எந்தவிதமான அடிப்படையும் இன்றி எழுதப்படும் ஆச்சரியம் மிக்க செய்திகளை நான் குறிப்பிடுகிறேன்.

மறுபுறத்தில் இந்தியாவை எடுத்துக்கொண்டால், வேண்டுமென்றே பிழையான செய்திகளை இந்தியாவின் பிரதான ஊடகங்கள் வெளியிடுவதைக் காணமாட்டீர்கள். உண்மை அற்ற செய்தி ஏதாவது அச்சிடப்பட்டால் மறுநாளே அது திருத்தப்படுகிறது. ஆனால் இலங்கையில் எப்பொழுதும் இந்த நிலைமை இல்லை. விடுதலைப்புலிகளுக்குக் கொண்டுவரப்பட்ட செய்திப்பரிமாற்ற உபகரணத்தை எடுத்துக் கொண்டால், அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரிலேயே புலிகளுக்கு அவ்வுபகரணத்தை கொண்டுவருவற்காக உதவினோம். இலங்கை அரசாங்கமே அதனைக் கொள்வனவு செய்திருந்தது. சுங்க அனுமதியை வழங்குவது மட்டுமே எமது பங்காக இருந்தது. சமாதான நடைமுறையின் பல்வேறு அம்சங்களைத் தமது சமூகத்திற்குப் புலிகள் தெரிவிக்க வேண்டிய தேவை இருந்தது என்று அரசாங்கம் உணர்ந்ததாலேயே புலிகள் இவ்வுபகரணத்தைப் பெறுவதற்கு அரசு விரும்பியது. இத்தகைய ஒரு வேண்டுகோளை ஏற்றுக்கொள்வது என்ற எமது தீர்மானம் பிழையானது என்று நான் நினைக்கவில்லை.

நோர்வேயில் இராணுவ முகாம்களில் விடுதலைப்புலிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது என்ற செய்தியைப் பொறுத்தவரையில், வெளிநாடுகளில் சமாதானப் பணிகளுக்காக நோர்வே எவ்வாறு தயாராகிறது என்பதை விடுதலைப்புலிகளுக்குக் காண்பித்தமையே உண்மையில் நடந்தது. உலகம் முழுவதுமிருந்தும் நோர்வேக்கு வரும் நூற்றுக்கணக்கானவர்களுக்கு வழங்கப்படுகின்ற நியாயமான ஒரு அறிமுகம்தான் இது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கையின் இராணுவம், கடற்படை மற்றும் இலங்கையிலிருந்து பயணம்செய்த விடுதலைப்புலிகளின் குழு ஆகியவற்றையும் இது உள்ளடக்குகிறது. இது இரகசியமாக நடைபெறவில்லை. நோர்வேயின் ஊடகங்கள் மற்றும் தமிழ்நெட் ஆகியவற்றால் நன்றாக இந்த விவகாரம் செய்தியிடப்பட்டிருந்தது. மிகவும் வெளிப்படையான முறையில் இது மேற்கொள்ளப்பட்டிருந்தது. பின்னர் இரண்டரை வருடங்களுக்குப் பின்னர் சில இலங்கை ஊடகங்கள் ஏதோ புதிய இரகசியம் கண்டறியப்பட்டிருந்ததுபோல இவ்விவகாரத்தை வெளிப்படுத்தின. இது மிகவும் அபத்தமான ஒன்று. இது மாதிரியான பல சம்பவங்கள் இருக்கின்றன. பின் நோக்கிப்பார்க்கின்றபோது, சிலவேளை நோர்வேயானது உடனடியாகச் செயல்பட்டு ஊடகங்களை அணுகிப் பரப்பப்பட்டுக் கொண்டிருந்த பல்வேறு தவறான செய்திகளை சரிசெய்திருக்கலாம் என்று உணர்கிறேன். ஆனால் இருதரப்பினரும் இது விடயத்தில் நோர்வே குறைந்தளவு விபரிப்பைப் பேண வேண்டும் என்று விரும்பியதால் நாங்கள் இதைச் செய்யவில்லை. ஆகவே, தொடர்ந்தும் நாம் கீழ் நிலைப்படுத்தப்படுவதை அனுமதித்தோம். இருதரப்பினரதும் இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டமையே அநேகமாக ஒரு தவறாக இருக்கக்கூடும். ஊடகங்களின் இம்மாதிரியான நீண்ட எதிர்மறையான பரப்புரைகள் வெளிநாட்டு அவதானிப்புகளில் ஒரு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பது இங்குக் குறிப்பிடப்பட வேண்டும்.

அனுசரணையாளர் பணியிலிருந்து விலகுவதற்கு நோர்வே தீர்மானிக்குமானால் நிச்சயமாக வேறு எந்த நாடுமே இந்தப் பணியை மேற்கொள்வதற்குத் தயாராக இல்லை. நோர்வே எவ்வாறு நடத்தப்பட்டது என்பதை அவர்கள் அனைவரும் பார்த்திருக்கிறார்கள். இந்தப் பணியை மேற்கொள்வதற்கு எவருக்குமே விருப்பமில்லை.

**19. நோர்வேயின் விவகாரத்திற்கு முன்பாகத் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்கள், கொடும்பாவிகள் எரிப்பு, தேசியக் கொடி எரிப்பு, சவப்பெட்டிகளைக் கொண்டு வருதல் என்பன இடம்பெறும்பொழுது நோர்வேயின் வரி செலுத்துகின்ற மக்கள் எவ்வாறு இதைப் பார்க்கிறார்கள். நிச்சயமாக வரிசெலுத்தும் மக்களில் இது ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமே.**

இலங்கை ஊடகங்களில் இது பற்றிக் கூடுதலாக அறிக்கையிடப்பட்டாலும் நோர்வே ஊடகங்களால் கூடுதலாக அறிக்கையிடப்பட்டாலும் கொடும்பாவிகளையும் தேசியக் கொடிகளையும் எரிப்பது நோர்வேயில் ஒரு போதும் இடம்பெறுவதில்லை. இது நோர்வேயின் கலாசாரத்திற்கு அப்பாற்பட்ட விடயம். ஆனால் நோர்வேயிலுள்ள மக்களுக்கு என்ன நடைபெறுகிறது என்று எதுவும் தெரியாது. அதேசமயம், சில ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம்சாட்டுவதுபோல நோர்வே புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதாகக் கூறப்படுவதை எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்த ஒரு நோர்வேயியனும் நம்பமாட்டான். இது மிகவும் எளிதில் பரிகசிக்கத்தக்க ஒன்று.

**20. இணைத்தலைமை வகிக்கின்ற நாடுகளுடன், விசேடமாக இந்தியாவுடனான, நோர்வேயின் உறவு எப்படி?**

உறவானது மிகவும் சிறந்தது; நெருக்கமானது. இலங்கை விவகாரங்களைப் பொறுத்தவரையில் ஏனைய எந்த நாட்டைக் காட்டிலும் இந்தியா மிகவும் முக்கியமானது. இணைத்தலைமை வகிக்கின்ற நாடுகள் குழுவில் இந்தியா அங்கம் வகிக்கவில்லை. ஆனால் இணைத் தலைமை நாடுகள் விவகாரத்தைக்காட்டிலும் இந்தியாவின் ஈடுபாடானது ஆழமான மட்டத்திற்குச் செல்கிறது. இந்தியாவை ஆலோசிக்காமல் எந்த ஒரு தீர்மானமும் இதுவரை எடுக்கப்படவில்லை. எல்லா விடயங்களையுமே இந்தியா விரும்பாமல் இருந்திருக்கலாம். ஆனால் சமாதான முயற்சியில் தனது முழுமையான ஆதரவை வழங்கியிருந்தது. இணைத்தலைமை நாடுகளின் முக்கியத்துவமானது சமீப மாதங்களில் கூடுதலான அளவு ஈடுபாட்டைக் கண்டிருக்கிறது. இதை ஒரு சிறப்பான முன்னேற்றமாக நான் காண்கிறேன்.

**21. ஐதேமு அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள்தான் இதுவரை அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் அதிகளவு பலனைத் தந்துள்ளன. இருந்தபோதிலும் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த பின்னர், பேச்சுவார்த்தைகள் மூலம் அடையப்பட்டவை மிகச் சொற்பமே என்று உடன்படிக்கைகளை அமல்படுத்தாமைக்காக அன்டன் பாலசிங்கம் அரசாங்கத்தையும் சாடியிருந்தார். ஆனால் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அவர் இவ்வாறு கூறியிருக்கவில்லை. இதனை நீங்கள் எவ்வாறு மதிப்பிடுகிறீர்கள்?**

இலங்கையின் சமாதான முயற்சிகளில் பொறுமை என்பது மிகவும் முக்கியமான ஒன்று என்று நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். சமாதானச் செயன்முறைகள் முழுவதும் நாம் பொறுமையுடனிருந்தோம். இருதரப்பினருக்குமிடையிலான முக்கியத்துவம்மிக்க யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு மேலாகப் பல புதிய திட்டங்களை இந்த ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் உருவாக்கி இருந்தன. பேச்சுவார்த்தைகளில் ஆராயப்பட்டிருந்த இந்த புதிய திட்டங்களைச் செயல்படுத்து





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வதற்காக கூடுதல் காலம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். உடனடி மனிதாபிமானப் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழு (சிரான்) பூரணமான ஒன்றல்ல. அது வினைத்திறன்மிக்கதாக இருந்திருக்க வேண்டும். ஆனால் கூடுதல் காலம் வழங்கப்பட்டிருந்தால் அது செயல் பட்டிருக்கும் என்று நான் திடமாக நம்புகிறேன். யுத்தநிறுத்த உடன் படிக்கை தவிர, முரண்பாட்டிற்கான நீண்டகாலத் தீர்வாகச் சமஷ்டி முறைமையை ஆராய்வதற்கான முக்கியமான ஒரு தீர்மானம் பேச்சு வார்த்தைகளில் மேற்கொள்ளப்பட்டது.

2003இல் புலிகள் பேச்சுவார்த்தையை இடைநிறுத்தியபோது, தற்காலிமானது என்றுதான் நான் நம்பினேன். பல்வேறு அரசியல் திருப்பங்கள் காரணமாகப் பேச்சுகள் ஆரம்பமாகவில்லை. இது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இத்தகைய கஷ்டங்கள் இருந்தபோதிலும் இலங்கைப் பேச்சுவார்த்தைகளில் வெற்றிகரமான பேச்சுவார்த்தை என்று இதனைக் கூற முடியும். ஏனைய எந்தப் பேச்சுவார்த்தையை விடவும் அதிகளவான பெறுபேற்றை இது உருவாக்கியிருக்கிறது. யுத்தநிறுத்த உடன்படிக்கை, உடனடி மனிதாபிமானப் புனர்வாழ்வு தேவைகளுக்கான உபகுழு (சிரான்) சர்வதேசச் சமூகத்தின் ஈடுபாடு, டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மகாநாடு போன்றவற்றை நல்ல நோக்கங்களுக்காகப் பயன்படுத்தியிருக்க முடியும். இவை அனைத்துமே சாதகமான பண்புகளாகும்.

**22. பிரதானச் சாதனைகள் என்று எவற்றைக் கருதுகிறீர்கள்?**

யுத்தநிறுத்த உடன்படிக்கை, உதவிகளுக்கான உறுதிமொழிகள், சமஷ்டி முறைமையை ஆராய்வது என்ற முடிவு, சமாதானப் பேச்சுகளின்போது நிலவிய சாதகமான சூழல் என்பவையே முக்கியமான சாதனைகள். இவை இருதரப்பினருக்குமிடையிலான அதிகளவான நம்பிக்கையை ஏற்படுத்தின. ஒருவரையொருவர் நம்பவும் ஆரம்பித்தனர். மீண்டும் சமாதானப் பேச்சுகள் தொடங்கும்போது இவை சாதகமான அம்சங் களாகக் காணப்படும். நாம் மீண்டும் பூச்சியத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டியிராது. இலங்கை அரசும் புலிகளும் தமது வார்த்தைகளை மீற முடியாது.

**23. சமீப காலத்தில் அதிகளவு கொலைகள் இடம்பெற்றுள்ளன. இந்த வன்முறைகளுக்குப் புலிகளே காரணம். அத்துடன் இராணுவம் பதிலுக்குப் பொதுமக்கள்மீது வன்முறை மேற்கொள்கிறது. தற்போது, மாயாஜாலம் செய்து எரிக் சொல்ஹெய்ம் சமாதான செயன்முறையை மீள ஆரம்பித்து வைப்பார் என்று சகல நம்பிக்கைகளும் அவர்மீது இருக்கின்றன. மீண்டும் யுத்தத்திற்கா, சமாதானத்திற்கா செல்வது என்ற விளிம்பில் நாங்கள் நின்றுகொண்டிருக்கிறோம். இந்தச் சாவாலை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

இது நோர்வேக் குழுவின் மீதான பிரதானத் தனிப்பட்ட ஒரு பாரிய பொறுப்பாகும். எப்படியிருந்தபோதிலும் இறுதி நாளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் புலிகளின் தலைவர் பிரபாகரனுமே தீர்மானிப் பாளர்கள் என்பது ஞாபகப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது. அவர் களுக்குச் சமாதானம் வேண்டுமானால் நாம் இங்கே உதவி செய்வதற்கு இருக்கிறோம். இல்லை யுத்தம்தான் வேண்டும் என்றால் நாம் செய்வதற்கு இங்கு எதுவும் இல்லை. தத்தமது முக்கியமான ஆலோசகர்களுடன் கலந்து பேசி அவர்கள் முடிவுசெய்வார்கள். குறிப்பிட்ட அளவிற்கு நாம் அவர்களை ஆதிக்கம் செய்ய முடியும். ஆனால் அவர்கள்தான் இறுதி முடிவை எடுப்பார்கள்.

**24. யுத்தநிறுத்த உடன்படிக்கையில் 2.1ஆம் உறுப்புரை அரசியல் படுகொலை களைக் குறிக்கிறது. இது அண்மையில் அதிகரித்திருக்கிறது. உறுப்புரை 1.8 துணை இராணுவக் குழுக்களைக் குறிக்கிறது. ஒப்பந்தம் கையெழுத் திடப்பட்டபோது கருணா என்பவர் பற்றி எவரும் நினைத்திருக்கவில்லை. இதன் விளைவாகத் தமிழர்களுக்கிடையிலான வன்செயல்கள் அதிகரித் துள்ளன. இதை நீங்கள் எவ்வாறு கருதுகிறீர்கள்?**

சமீபத்தில் இடம்பெற்ற கொலைகள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் மிக மோசமான மீறல்களாகும். ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர். கொடிகளை ஏற்றுவது ஒப்பந்த மீறல் என்றாலும் இதனைக் கதிர்காமர், பரராஜசிங்கம் ஆகியோரின் கொலைகளுடன் ஒப்பிட முடியாது. பாலியல் வல்லுறவு, சித்திரவதை, ஆட்கடத்தல் மற்றும் பல்வேறு அழுத்தங்கள் என்பவற்றுடன் கொலைச் சம்பவங்கள் பாரதூரமான யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறல்களாகும். இவற்றுக்குப் பொறுப் பானவர்களை இவற்றை நிறுத்திக்கொள்ளுமாறு மிகத் தெளிவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

**25. புலிகளின் கவனத்திற்கு இப்பிரச்சினைகளைக் கொண்டுவருவதாக நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால், உண்மையில் அவ்வாறு செய்கின்ற நோக்கம் உங்களுக்கு இல்லை என்ற ஒரு கருத்து இருக்கிறதே.**

ஒவ்வொருமுறையும் நாம் மிகவும் திடமாகவும் வலுவாகவும் இப்பிரச்சினைகளைக் கொண்டு வருகிறோம். இலங்கையில் இடம் பெறும் பெரும்பான்மையான கொலைகள் சமாதானச் செயன்முறையின் இருதரப்பினரையுமே சுட்டுகிறது. இது ஒருவகையில் சாதகமான





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிகுறி. சுயாதீனமாகச் செயல்பட்டு மக்களைக் கொலைசெய்பவர்கள் இலங்கையில் இல்லை. கொங்கோ, சூடான் மற்றும் சோமாலியாவில் சொந்த நிகழ்ச்சித் திட்டத்தைக் கொண்டிருக்கின்ற அரசாங்கத்தால் கட்டுப் படுத்த முடியாத பல்வேறுபட்ட செயல்பாட்டாளர்கள் இருக்கிறார்கள். அதனால் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்குத் தயாராக இருக்கின்றபொழுது அரசாங்கமும் புலிகளும் வன்முறைக்கு முற்றுப்புள்ளி இட முடியும் என்று நம்புவது யதார்த்தமானது என்று நான் நினைக்கிறேன்.

***26. சவால்கள் என்று எவற்றைப் பார்க்கிறீர்கள்?***

இவை அனைத்திலுமிருந்து நோர்வே அரசாங்கம் சில படிப்பினை களைக் கற்றிருக்கிறது என்று நம்புகிறேன்.

எல்லாவற்றையும் விபரமாக பார்க்க வேண்டும் என்று நான் நினைக்க வில்லை. ஆதலால், நீண்டகாலரீதியிலான அம்சங்கள்மீது நான் கவனம் செலுத்துகின்றேன்.

ஒரு சவால் என்னவென்றால், அடிப்படையில் ஒரு இராணுவ சக்தி என்ற நிலையிலிருந்து பிரதானமாக ஒரு அரசியல் சக்தியாக விடுதலைப் புலிகள் மாற்றம் பெறுவது காணப்படுகிறது. வெளிநாட்டவர்களுடன் செயல்படுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துதல் இராணுவ வழி முறையை அன்றி வேறு வழிமுறைகளைப் பயன்படுத்துவதற்கு ஊக்கப்படுத்துதல் என்பவற்றின் மூலம் புலிகளைக் கூடுதலான அரசியல் நீரோட்டத்தில் இயங்க விடுதலாகும்.

மறுபுறத்தில், மாறிமாறி ஆட்சியமைத்து வரும் இரு பிரதானக் கட்சி களை ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக்கட்சி ஆகியவை தாங்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக உதவி செய்தல் காணப்படுகிறது. பண்டா–செல்வா ஒப்பந்தம் சுதந்திரக் கட்சி யினாலும், டட்லி–செல்வா ஒப்பந்தம் ஐக்கிய தேசிய கட்சியினாலும் கலைக்கப்பட்டமை இலங்கை அரசுமீதான தமிழ் மக்களின் நம்பிக்கை யைப் பாதித்திருக்கிறது. இந்த உறுதியின்மை இலங்கை அரசை நம்புவது தொடர்பாகத் தமிழ் மக்களுக்குக் கடினத்தன்மையை ஏற்படுத் தியது. இறுதியாக, தென்னிலங்கையின் இருபிரதானக் கட்சிகளையும் ஒன்றுசேர்த்துச் சமாதானச் செயன்முறை தொடர்பாக அவ்விரு கட்சி களுக்குமிடையிலான நீண்டகாலத் தடைகற்களை அகற்றுவதை மற்றொரு சவாலாக நான் காண்கிறேன்.

●



# 14

## சர்வதேச சமூகத்தின் வகிபங்கு

கீத் நொயார்

இக்கட்டுரையில், முந்தைய பேச்சுவார்த்தைகளிலிருந்து ஐக்கிய தேசிய முன்னணி (ஐதேமு) அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப்புலிகளை யும் (எல்டிடிஈ) சம்பந்தப்படுத்தும் 2001–2004 நோர்வே அனுசரணை யிலான சமாதான நடைமுறையை நான் வேறுபடுத்திக் காட்டியுள்ளேன். இங்கு வேறுபடுத்துகின்ற அம்சம்: முன்னெப்போதும் இல்லாத வகையில் திட்டமிட்ட வழியில் சர்வதேசச் சமூகத்தின் ஈடுபாடாகும்.

உண்மையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பொதுஜன முன்னணி (பிஏ) நிர்வாகத்தின்போது உண்மையிலேயே ஆரம்பமான நோர்வேயின் அனுசரணையானது, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலான ஐதேமு அரசாங்கத்தின் கீழ்த் துளிர்விட்டுத் தழைத்தது.

இது இறுதியில் பலனை அளிக்குமா என்பது முக்கியமான கேள்வி யாகும். சகவாழ்வு நெருக்கடியைத் தொடர்ந்து, ஐதேமு அரசாங்கம் வெளியேற்றப்பட்ட பின்னரும்கூட, இந்த நடைமுறை தொடர்ந்ததை நான் கவனத்திற்கு எடுத்துள்ளேன். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியி லிருந்து (யூபிஎஃப்ஏ-ஐமசுமு) முக்கியத் தோழமைக் கட்சியான ஜேவிபி வாபஸ் பெற்றது. இருந்தும், நோர்வேயின் அனுசரணை தொடர்ந்தது. நோர்வேக்கு எதிர்ப்புத் தெரிவித்த கட்சிகளின் ஆதரவுடனான புதிய நிறைவேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தெரிவுகூட ஒஸ்லோ அனுசரணையை முடிவுக்குக் கொண்டுவர முடியவில்லை. ஒரு காரணம்: சர்வதேசச் சமுதாயத்தின், குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் மற்றும் ஜப்பான் ஆகிய மூன்று வேறு இணைத் தலைமை நாடுகளின் ஆதரவு. ஆனால், அதன் வாதப்பொருத்தமான முடிவுக்கு நடைமுறையைக் கொண்டுசெல்வதற்கு இணைத்தலைமை நாடுகள் அனுமதிக்கப்படுமா என்பது பலதரப்பட்ட பங்குதாரர்களின், குறிப்பாக இணக்கப்பாட்டுக்கான இரு பிரதான கட்சிகளின், சம்மதத் திலேயே தங்கியுள்ளது. அனுசரணைக்கும் சர்வதேசத் தலையீட்டுக்கும் தனது ஆசீர்வாதத்தை வழங்கிய பிராந்தியச் சக்தியான இந்தியா அதே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விருப்பத்தைக் கொண்டிருப்பதைத் தொடர்ந்துள்ளதா என்பதை உறுதிப் படுத்துவதற்கு ஒரு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு இணைத் தலைமை நாடுகளுக்கான மேற்கோளுடன் அனுசரணையாளர்களினதும் பாரிய சர்வதேச சமுதாயத்தினதும் செயல் நோக்கமானது கையாளப்பட்டுள்ளது. இணைத் தலைமை நாடுகளைச் சம்பந்தப்படுத்துவதில் அரசாங்கத்தின் நோக்கமும் கையாளப் பட்டுள்ளது. செயல் நோக்கங்களை விவரித்த பின்னர், ஒவ்வொரு இணைத் தலைமை நாடுகளினதும் ஈடுபாட்டின் அளவு மற்றும் அவற்றின் வகிபங்கு என்பவற்றை விளக்குவதற்கு நான் முயல்கின்றேன். வரலாறு மற்றும் உள்ளுணர்வின் அனுகூலத்துடன் சமாதான நடை முறையின் மடிப்பு அவிழ்கையில், அதை நோக்கும்போது, ஒரு தெளி வான படத்தைத் தீட்டுவதற்காகப் பின்னணியுடனும் புதிய முன்னேற்றங் களுடனும் மதிப்புரையின் கீழுள்ள இந்தக் காலத்தை அடுத்தடுத்து வைப்பதற்கு முயற்சியொன்று எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேசப் பாதுகாப்பு வலை, மற்றும் சர்வதேச சமுதாயத்தின் உள்ளுணர்வு என்றவாறு இருபுறம்பான துணைப்பிரிவுகள் உள்ளடக்கப் பட்டுள்ளன. அவை பிராந்திய அம்சங்கள், சாமர்த்தியமான விவகாரங்கள், குற்றச்சாட்டுகள், மற்றும் எதிரான குற்றச்சாட்டுகள் ஆகியவற்றைக் கையாளுகின்றன. இனமோதல் அரசியல்ரீதியில் தீர்க்கப்பட வேண்டும் என்பதை இந்தியா ஆதரிக்கின்றது. இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ள தாபனமொன்றைச் சம்பந்தப்படுத்தும் இந்தச் சமாதான நடைமுறை யின்போது பெரிதுமே மேற்கத்தைய சக்திகளையும் அதன் நேசநாடு களையும் கையாளுதல் இந்தியாவின் வகிபங்கு மீதான துணைப்பகுதி ஒன்று வாதப்பொருத்தமானது மட்டுமல்ல, ஆனால் கட்டாயமுமாகும். அதன் மூலோபாயமான புவிஅரசியல் நிலையை வழங்குகையில், நாட்டின் பிரதேச ஒற்றுமையில் 'நிலையான அக்கறை ஒன்றை' புதுடெல்லி தொடர்ச்சியாக வெளிப்படுத்தியுள்ளது. ஒஸ்லோ சமாதான ஆதரவுக் கூட்டம், டோக்கியோ நன்கொடை வழங்கும் மகாநாடு, இணைத் தலைமை நாடுகளின் மதிப்பாய்வு அறிக்கைகள், கண்ணிவெடி அகற்றல் மற்றும் யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்களின் வகிபங்கு ஆகியவற்றையிட்டும் நான் தொட்டுக் காட்டியுள்ளேன். அவசியமான நடைமுறைத் திருத்தங்களுடனும் பங்குதாரர்கள்மீது கணிசமானளவு நெம்புகோலைக் கொண்டுள்ள இந்தியாவின் பாரிய உறுதியான வகிபங்குடனும் நடைபெற எங்கு நின்றதோ, அதிலிருந்து மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் என நான் முடித்துள்ளேன். ஒரு முனைவரை வெளியார் உதவியளிக்க முடியும். இலங்கை அரசாங்கம், எல்டிடிஈ ஆகிய இருபிரதானத் தரப்புக்களினதும் அனேகமாகப் பிரதான எதிர்க் கட்சியினதும் கைகளிலேயே தீர்வு தங்கியுள்ளது.



### வெளிநாட்டு அனுசரணைக்கான பின்னணி

இலங்கையில் பேச்சுவார்த்தையிலான சமாதானத்திற்கான கரடுமுரடான பாதை இரு நீண்ட தசாப்தங்களுக்கு விரிந்துள்ளது. 13 யுத்த வீரர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, 1983இல் நாடு முழுவதும் இடம் பெற்ற தமிழ் எதிர்ப்புக் கலவரங்கள் தமிழ்நாட்டுக்கு அகதிகளின் திடீர் வரவைக் கண்டது. தமிழ்த் தீவிரவாதிகளுக்கு இந்தியாவில் ஆயுதம் வழங்கப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டனர்.

1985 ஜூனில், முதல் மோதல் தவிர்ப்பு ஏற்பட்டது. இது இந்தியாவின் ஆதரவிலான திம்புப் பேச்சுவார்த்தைக்கு இட்டுச் சென்றது. இப்பேச்சு வார்த்தைகளுக்கு முன்னர், 1984இல் சர்வகட்சி மகாநாடும் அதைத் தொடர்ந்து 1986இல் அரசியல் கட்சிகள் மகாநாடும் இடம் பெற்றன. சமாதானத்தைக் கொண்டுவருவதில் 1987இன் இந்திய-இலங்கைச் சமாதான ஒப்பந்தம் தவறியுள்ளது. நேரடிப் பேச்சுவார்த்தை செய்து கொள்வதாகக் கூறி (1989–1990) இந்திய அமைதிப்படையைத் திருப்பி அனுப்புவதற்கு ஜனாதிபதி ரணசிங்க, பிரேமதாசவை எல்டிடிஈ மோசம் செய்யும்வரை, இந்திய அமைதிப்படை சண்டையிடுவதற்குத் தள்ளப் பட்டது. எண்பதுகளில் உட்பகை சார்ந்த யுத்தத்தின்போது, ஏனைய தீவிரவாத இயக்கங்களைப் புலிகள் வகைதொகையின்றி அழித்தொழித் தனர். பிரேமதாசவுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்திய அதே வேளை, உயர்தமிழ் அரசியல் தலைவர்களை அது அழித்தொழித்தது. 1991இல் இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலைசெய்த பின்னர், எல்டிடிஈ தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இரகசியமாக மறைந்துபோனார். இருவருடங்களின் பின்னர், 1993இல் பிரேமதாச கொலைசெய்யப்பட்டார். 1999இல் குமாரதுங்கவுடனான பேச்சுவார்த்தை தோல்வியடைந்த பின்னர், அவர் மீது கொலை முயற்சி இடம்பெற்றது.

1994இல் சமாதான மேடைமீது அதிகாரத்தை பற்றிக்கொண்ட குமாரதுங்க, உத்தியோகபூர்வப் பிரெஞ்சு 'இடைத்தரகருடன்' பேச்சு வார்த்தைகளை நடத்த விரும்பினார். ஆனால், இதை எல்டிடிஈ நிராகரித்தனர்.[1] 'இடைவெளியை நிரப்புவதற்கு நம்பிக்கையான மூன்றாம் தரப்பு கிடைக்காமையினாலேயே' தோல்வி ஏற்பட்டது என சுகீஸ்வீர சேனாதீர காரணம் கற்பித்தார்.[2]

ஜனாதிபதி குமாரதுங்க 'சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு' புத்துயிர் அளித்தபோது, 'ஒன்றில் இலங்கை அரசாங்கமோ எல்டிடிஈயோ தீவிரமான அமெரிக்காவின் மூன்றாம் தரப்பு வகிபங்கை விரும்ப வில்லை' என இலங்கைக்கான முன்னாள் ஐக்கிய அமெரிக்கத் தூதுவர்

1. எல்டிடிஈக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தகவல் தொடர்பு, 1995 பிப்ரவரி 20.
2. சுகீஸ்வீர சேனாதீர, 'இலங்கையில் சமாதான நடைமுறை', இலங்கைமீதான ஆசிய விவகாரங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டெரஸிடா ஸ்கேபர் குறிப்பிட்டுள்ளார். 'ஐக்கிய அமெரிக்காவின் அனுபவத்தின் விளைவுகள் சிலவற்றைக் கிட்டச் செய்வதற்கு ஐக்கிய அமெரிக்கா முயன்றது' என ஸ்கேபர் தெரிவித்தார்.[3]

சர்வதேசச் செயல்பாட்டாளர்கள், விசேடமாகப் பிரதான நன்கொடையாளர்கள் 1998 முதல் அரசியல் இணக்கமொன்றுக்கே அழுத்தியதுடன், 'ஐந்தாவது (ஐதேமு) சமாதான நடைமுறை பங்குதாரர்களாகத் தீவிரமான வகிபங்கொன்றை ஆற்றுவதற்கு அவற்றில் சிலவற்றை இயலச் செய்தது' என என்.சண்முகரத்னம் மற்றும் கே.ஸ்டொக் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.[4]

### மூன்றாம் தரப்பான நோர்வேயின் அனுசரணை

1995இல் பொதுஜன முன்னணி (பிஏ) தலைமையிலான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த பின்னர், பயங்கரமான இராணுவ இயக்கம் தொடர்ந்தது. 'சமாதானத்திற்கான யுத்தம்' ஆரம்பிப்பதற்கு முன், 1999இல் மட்டுமே, ஒஸ்லோவினாலான வெளிநாட்டு அனுசரணைக்கான தனது சம்மதத்தைக் குமாரதுங்க வழங்கினார். பிஏ மீளத்தெரிவு செய்யப்பட்ட பின்னர், இலங்கைக்கான நோர்வேயின் விசேடப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் உடனடியாகவே 2000 அக்டோபரில் கொழும்பில் குமாரதுங்கவையும் வன்னியில் பிரபாகரனையும் சந்தித்தார்.

'யாழ்ப்பாணத்தை இழந்ததுடன் (முன்னர்), இன்னொரு ஆறு ஆண்டுகளுக்கு நாம் பதவிக்கு வருவதைப் பார்க்கையில், தம்மை நோர்வே நாட்டினர் அழுத்துவதை அவர்கள் கண்டார்கள்' என குமாரதுங்க குறிப்பிட்டுள்ளார்.[5]

2000இல் முக்கியத்துவம்மிக்க ஆனையிறவு உட்பட பெருமளவு இராணுவ முகாம்களை எல்டிடிஈயினர் கைப்பற்றிக்கொண்டனர். இராணுவ அனுகூலத்துடன், வசதிப்படுத்தலுக்கு எல்டிடிஈ அமைப்பு மோதல் தவிர்ப்புக்கு உடன்பட்டதுடன், பகைமையையும் நிறுத்திக் கொண்டது. பலவீனத்திலான ஒரு நிலையிலிருந்து கொடுத்து வாங்குவதற்கு விரும்பாத குமாரதுங்க, பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஆர்வம்காட்டவில்லை. ஆனால், 2001 ஆகஸ்டில் கட்டுநாயக்க விமான நிலையம் மீதான தாக்குதல், பிஏயின் தலைவிதிக்கு முடிவு கட்டியது.

3. டெரஸிடா ஸ்கேபர், 'இலங்கையின் சமாதான நடைமுறையில் சர்வதேசப் பரிமாணங்கள்', மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையக் கருத்தரங்கு, 2005 ஜூலை 89.
4. என்.சண்முகரத்னம் மற்றும் கே.ஸ்டொக், 'மோதல் தீர்மானத்திற்கு முன்னோடியான அபிவிருத்தி: இலங்கையில் ஐந்தாம் சமாதான நடைமுறையின் பகுத்தறிகின்ற மதிப்பாய்வு' மே 2004.
5. வி.எஸ்.சம்பந்தன், 'இரு பாரிய ஜனநாயக சக்திகள் ஒன்று சேர வேண்டும்', ஃபிரண்ட்லைன், 2005 நவம்பர் 5-18.



அரசாங்கத்தின் சமாதானச் செயன்முறையை ஒன்றிணைப்பதற்கான செயலகத்தின் (ஸ்கோப்) முதல் தலைவர் பேர்ணாட் குணதிலக பின்வருமாறு குறிப்பிட்டார்: 'இராணுவ விருப்பின் எல்லைகளை'க் கொழும்பு உணர்ந்த அதேவேளை, செப்டம்பர் 11க்குப் பிந்தைய பயங்கரவாதத்திற்கு எதிரான உணர்வு 'சர்வதேசச் சகிப்புத்தன்மையின் எல்லைகள் பற்றி எல்டிடிஈக்கு சம அளவில் சக்திவாய்ந்த ஒரு நினைவூட்டலாக அமைந்தது'.[6]

'மேற்கத்தைய நாடுகளினால் சுமத்தப்பட்ட கடுமையான பயங்கரவாதத்திற்கு எதிரான கொள்கைகள்... பல்தேசியக் குடிபெயர்ந்தோர் அரசியல் வலைப்பின்னல்களைக் குற்றமுடையதாக்குவதற்குப் பயமுறுத்தல் விடுத்தன'[7] என என்.சண்முகரத்னம் குறிப்பிடுகின்றார். இதனிடையே மிதவாதிகளையும், கிறிஸ்தவ ஜனநாயகவாதிகளையும் கொண்ட புதியதொரு கூட்டணி நோர்வேயில் பதவிக்கு வந்ததுடன், கட்சித் தாவலின் பின்னர் பிஏ தனது பெரும்பான்மையை இழந்து, பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்குத் தள்ளப்பட்டது.

'எமது பிரதான நோக்கம் சமாதானமாகும். நாம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவோம். நாம் ஓர் அரசியல் தீர்வொன்றைக் கொண்டுவருவோம்' என ஐதேமு தேர்தல் அறிக்கை குறிப்பிட்டிருந்தது.[8] நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க்கைச் சந்தித்த விக்ரமசிங்க, 'சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எல்டிடிஈ உடன் ஈடுபடுவதற்கான' தன் விருப்பத்தை வெளிப்படுத்தியதுடன்,[9] அனுசரணையைத் தொடரும்படி ஒஸ்லோவை வலியுறுத்தி நோர்வேயின் பிரதமர் கெஜல் பொன்டேவிக்குக் கடிதம் எழுதினார். அதைப் பிரபாகரனும் ஒத்துக்கொண்டார்.

ஐதேமு ஆட்சியுடன் சேர்த்து ஐந்து வருடப் பழமைவாய்ந்த ஒஸ்லோவின் அனுசரணை ஐதேமு 'வெளியேற்றப்பட்ட' பின்னரும் தொடர்ந்ததுடன், இது இரு ஜனாதிபதிகளையும் இரு நாடுகளின் மூன்று அரசாங்கங்களையும் கண்டுள்ளது. நோர்வேயைப் பின்லாந்துடன் பதிலீடுசெய்கின்ற கருத்துடன் குமாரதுங்க சரசமாடியதுடன், ஐதேமு நிர்வாகத்தின்போது முன்னாள் பின்லாந்து ஜனாதிபதி மார்ட்டின் அஹிச்சாரியுடன் பூர்வாங்கப் பேச்சுவார்தைகளை நடத்தினார். ஐமசுமு

6. பேர்ணாட் குணதிலக, 'இலங்கையின் சமாதான நடைமுறை: எது முன்னால் காத்திருக்கிறது', வாஷிங்டன் ஃபோரம், இலங்கைச் சமாதான நடைமுறை முட்டுச்சந்தா அல்லது நம்பிக்கையுள்ளதா? 2005 நவம்பர் 4.
7. என்.சண்முகரத்னம், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது.
8. ஐதேமு பொதுத்தேர்தல் அறிக்கை, 2001 அக்டோபர்.
9. அன்டன் பாலசிங்கம், 'யுத்தமும் சமாதானமும்: விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டமும் சமாதான முயற்சிகளும்', ஃபெயார்மக்ஸ் பப்ளிஷிங் லிமிட், 2004 பக்.355.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(யூபிஎஃப்ஏ) ஆட்சிபீடமேறிய பின்னர் ஐநாவின் பிரதம விசேடப் பிரதிநிதி லக்தார் பிராமியையும் அவர் வரவழைத்தார். நோர்வேயின் அனுசரணைக்கு ஜேவிபியும் ஜாதிக ஹெல உறுமயவும் எதிரெதிராக எதிர்ப்புத் தெரிவித்தன. எனினும், ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ வந்த பின்னர் மட்டுமே அனுசரணையாளராக நோர்வேயின் வகிபங்கு உண்மையாகவே சந்தேகத்தில் இருந்தது. தனது பதவியேற்ற உரையிலும் கொள்கைக் கூற்றிலும் நோர்வேயை ஓரங்கட்டிய அவர், இந்தியாவையும் ஆசிய நாடுகளையும் நோக்கி ஈர்க்கப்பட்டார். ஆனால் பின்னர், 'இணைத் தலைமை நாடுகளுடன் ஆலோசனைகளை ஆரம்பிக்குமாறு' உத்தியோகஸ்தர்களைப் பணிப்பதற்குத் தள்ளப்பட்டார்.[10]

நோர்வே நாட்டினர் நேரத்தையும் பணத்தையும் செலவழித்தார்கள்; மூன்று சமாதான செயலகங்களுக்கு (அரசாங்கம், எல்டிடிஈ மற்றும் முஸ்லிம்) நிதி வழங்கினர்; இருதரப்புகளுக்கும் வெளிநாட்டுப் பயணம், மகாநாடுகள் மற்றும் கற்கைப் பயணங்கள் ஆகியவற்றை ஒழுங்கு செய்தார்கள். இலங்கை அரசாங்கத்தின் அறிவுடன், செயலகம், பிரயாணம், மற்றும் வேறு செலவினங்கள் ஆகியவற்றுக்காக 2002 முதல் 25 மில்லியன் குரோனரை எல்டிடிஈக்கு ஒஸ்லோ வழங்கியுள்ளது.[11]

ஒஸ்லோவில் குடிபெயர்ந்த தமிழர்களைக் குறிப்பிடுகையில், அதன் உள்ளூர் அரசியலிலிருந்து முளைவிடுகின்ற எல்டிடிஈஐ நோக்கி பாரபட்சமுள்ளதாகப் பெருமளவுச் சிங்கள தேசியவாதிகள் குற்றஞ்சாட்டுகின்றார்கள். ஆனால், நோர்வே அரசாங்கத்தில் மாற்றங்கள் இருந்த போதிலும், ஒஸ்லோவின் வசதிப்படுத்தல் தொடர்ந்துள்ளது. மத்தியக் கிழக்குச் சமாதான நடைமுறையில் ஒஸ்லோ நெருக்கமாகச் சம்பந்தப்பட்டிருந்ததுடன், பிலிப்பைன்ஸ் அரசாங்கத்திற்கும் புதிய மக்கள் இராணுவத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தைகளை வசதிப்படுத்தியுள்ளதனால், ஐக்கிய அமெரிக்காவின் கட்டளையை மேற்கொண்டு அதன் பிரதிநிதியாக நோர்வே செயல்படுகின்றது எனச் சிலர் குறிப்பிடுகின்றார்கள். சர்வதேசப் பங்கெடுப்புக்கு அழைப்புவிடுப்பதற்கு அதன் இலக்கின் காரணமாக, ஐக்கிய அமெரிக்காவை நோர்வே தன்வழிப்படுத்திவிட்டதாக ஏனையோர் கூறுகின்றனர். எண்ணெயைப் பற்றி இவ்வளவுதானா? எண்ணெய்ப் படிவுகளின் செய்தியை நோர்வே நாட்டினர் வெளியிட்டதுடன், தற்போது ஆராய்ச்சியில் ஆர்வம் காட்டுவதாகச் சிலர் குறிப்பிடுகின்றனர். ஐக்கிய அமெரிக்காவுக்கும் எண்ணெய் என்றால் முக்கியமானதாகவே விளங்குகின்றது.

10. 'சர்வதேசச் சமுதாயத்திற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுருக்கமாக விளக்குகிறார்', peaceinsrilanka.org, 2005 நவம்பர் 28

11. எல்டிடிஈக்கு 25 மில்லியன் குரோனர் கிட்டியது , த ஐலண்ட், 2005 டிசம்பர் 2.



ஆனால், ஸ்கேபர் போன்றவர்களுக்கு, 'நோர்வே ஒரு பாரிய உலகளாவிய சக்தி அல்ல; முக்கியமான வெளிநாட்டுக் கொள்கை இலக்காகச் சமாதானத்தை ஏற்படுத்துவதை வரையறுப்பதற்காகவும் அதிகளவு இம்மைக்குரிய உயரிய நோக்கங்களுக்கு இடங்கொடுக்கின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகாமல் அதைப் பின்தொடர்வதற்காகவும் அதன் இராஜதந்திரிகளுக்குச் சுதந்திரத்தை அது வழங்குகின்றது'.[12]

## அனுசரணையாளர்களின் இராஜதந்திரம்

2001 நத்தாருக்கு முந்தைய தினத்தில் எல்டிடிஈ பிரகடனப்படுத்திய யுத்த நிறுத்தத்தை ஐதேமு அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பின்னர், கட்டமைக்கப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையைக் கொண்டிருப்பதே அடுத்த பணியாகும். இயேசுநாதரின் திருவருள் தோற்ற தினத்தன்று (ஜனவரி 6) முடிவடைந்த சிறந்த சமாச்சாரங்களைக் கொண்ட பருவத்துடன், 'உத்தேசமான யுத்தநிறுத்தத்திற்குப் பொதுவான வழிகாட்டல்களாக அல்லது முறைமையியல்களாக நோர்வேயின் வெளிநாட்டுப் பிரதி அமைச்சர் விதார் ஹெல்கீசனுக்கு அதன் ஆலோசனைகளை எல்டிடிஈ அமைப்பு சமர்ப்பித்தது'.[13] 'இருதரப்புகளிடமிருந்தும் ஆலோசனைகளைப் பெற்ற பின்னர், இருதரப்புகளும் ஏற்றுக்கொள்ளத்தக்க வரைத்திட்டமொன்றை வகுத்தமைக்கும் கஷ்டமான பணியை நோர்வே நாட்டினர் பொறுப்பேற்றுக்கொண்டனர்' எனப் பாலசிங்கம் தெரிவித்தார்.[14]

ஆனால், 'எல்டிடிஈயிடமிருந்து உள்ளீடுகளின் அனுகூலத்தைக் கொண்டிருந்த, இயக்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குச் சிறந்த சந்தர்ப்பத்தைக் கொண்டிருந்த அவர்களது விஷயதானத்தை நோர்வே வற்புறுத்தியது' எனவும் 'அமல்படுத்துவதற்கு புறமைவாய்ந்த நிலையிலான எதிர்பார்ப்புக்களுக்கு யுத்தநிறுத்த உடன்படிக்கையையிட்டுப் பேச்சுவார்த்தை நடத்துவதில் மிதமிஞ்சிய அவசரத்திற்கு இட்டுச் சென்றது எனவும் குணதிலக குற்றஞ்சாட்டினார்.[15] யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட பின்னர், 'அரசியல் மற்றும் நிதிசார் ஆதரவை ஒன்று திரட்டுவதற்குச் சர்வதேச சமுதாயத்தின் ஒற்றுமையை' நோர்வே நாட்டினர் வலியுறுத்தினர்.

2002 ஏப்ரலில், கிளிநொச்சியில் பிரபாகரன், தமிழ்ச்செல்வன் மற்றும் பாலசிங்கம் ஆகியோரை சொல்ஹெய்ம், வெஸ்ட்போர்க், மற்றும் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல்

12. டெரஸிடா ஸ்கேபர், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது.

13. அதே நூலில் பக்.360.

14. அதே நூலில்.

15. அதே நூலில்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ட்ரொன்ட் புருஹொப்டே ஆகியோர் சந்தித்தனர். கடல் விமானம் மூலம் பாலசிங்கம், அடெல் மற்றும் தோமஸ் ஸ்ரேஞ்லாண்ட் (நோர்வே வெளிநாட்டு அமைச்சு அதிகாரி) ஆகியோர் இரணைமடுவில் தரை இறங்கினர். பாதுகாப்பு அச்சங்களைக் காரணங்காட்டிக் கொழும்பு ஊடாக வருவதற்கு எல்டிடிஈ மறுத்தது. ஆனால் 2006இல், யுத்தத்தின் விளிம்பில் நாடு இருந்தபோது, கட்டுநாயக்க ஊடாகப் பாலசிங்கம் பறந்தார்.

பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சி நிரலையிட்டுக் கருத்துப் பரிமாறுவதற்கு அனுசரணையாளர்கள் வந்து இறங்குவதற்கு முன்னரான நாட்களில், சர்வதேச ஊடாக மகாநாடு ஒன்றின்போது பிரபாகரன் சந்தேகங்களை வெளிப்படுத்தினார். அவர் சொன்னார்:

> முக்கியப் பிரச்சினைகளைக் கவனத்திற்கு எடுத்து, இக்கட்டத்தில் நிரந்தரமானதொரு தீர்வை எமக்கு தருகின்ற ஆற்றலளவை விக்ரமசிங்க கொண்டிருக்கிறார் என நான் நினைக்கவில்லை. ஏனெனில், அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரங்கள் ஜனாதிபதியில் உரித்தாக்கப்பட்டிருக்கையில், அவரது அதிகாரங்கள் பாராளுமன்றத்திற்குள் மட்டுப்பட்டுள்ளன.[16]

இப்படிச் சொன்ன பிரபாகரன் 'இடைக்கால நிருவாகமொன்று வகுத்தமைக்கப்பட வேண்டும்' என வலியுறுத்தினார்.[17] ஜனாதிபதி ஆவதற்கு விக்ரமசிங்கவுக்கு 30 மாதங்களுக்குப் பின்னர் வழங்கப்பட்ட வாய்ப்பொன்றில், தனி அலகு நாடு ஒன்றையிட்டு வற்புறுத்தியதும் சுனாமி உதவி தொடர்பாக எல்டிடிஈக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான இணை பொறிமுறையைக்கூட ரத்துசெய்வதாக வாக்களித்ததுமான ராஜபக்ஷவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக வடக்கு, கிழக்கில் தேர்தல் புறக்கணிப்பைப் பிரபாகரன் அமல்படுத்தினார். தோல்வியடைந்த விக்ரமசிங்கவைப் 'பயங்கரமானதொரு நரி' எனப் பாலசிங்கம் அழைத்தார்.[18] விக்ரமசிங்க நோக்கொன்றையும் ஆழமான புலமையையும் வரலாறு பற்றிய சிறந்த அறிவொன்றையும் உறுதியாகவே கொண்டிருந்தார். பின்னர், சமஷ்டி பொறிக்குப் பங்களித்தார் என முன்னாள் அரசாங்கத்தின் பிரதமப் பேச்சுவார்த்தையாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸைக் காரணங்காட்டிய எல்டிடிஈ, 2006இல் ஜெனிவா பேச்சுவார்த்தைகளுக்கான பிரதிநிதிகளின் அங்கத்தவராக அவர் விளங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

பேச்சுவார்த்தைகளை விருந்தோம்புவதற்குத் தாய்லாந்து அரசாங்கத்தின் இணக்கத்தை வெளிப்படுத்துவதற்குப் பிரபாகரனை ஹெல்கீசன் மற்றும் சொல்ஹெய்ம் ஆகியோர் சந்தித்தனர். ஆனால், வேறு

16. அதே நூலில்.
17. அதே நூலில்.
18. அன்டன் பாலசிங்கம், லண்டனில் உரை, 2005 நவம்பர் 30.



முன்னுரிமைகளை எல்டிடிஈ தலைவர் கொண்டிருந்தார். 'யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கடப்பாடுகளின் அமலாக்கத்தில் உள்ள தாமதம்' பற்றிப் பிரபாகரன் முறைப்பாடு செய்துள்ளதாகப் பாலசிங்கம் குறிப்பிட்டார். 'நேரடிப் பேச்சுவார்த்தைகளில் இவை கருத்துப் பரிமாறப்பட்டு, தீர்க்கப்பட வேண்டும்' என சொல்ஹெய்ம் ஆலோசனை வெளியிட்டிருந்தார்.[19]

இறுதியாகப் பேச்சுவார்தைகளை ஆரம்பிப்பதற்கு எல்டிடிஈ இணங்கியது. ஆனால், தடைநீக்கத்தை வற்புறுத்தியது. தடைநீக்கத்திற்கான அவசியம்மீது குமாரதுங்கவை நம்பவைப்பதற்கு ஹெல்கீசன் கடுமையாக முயன்றார். குமாரதுங்க பேச்சுவார்த்தைகளைக் கோரினார். ஆனால், தடைநீக்கத்தை அங்கீகரிக்க அவர் இணங்கவில்லை. இரண்டுக்கும் இடையே விக்ரமசிங்க அகப்பட்டார்.

2002 ஜூனில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க நோர்வே நாட்டினர் விரும்பினர். பாலசிங்கத்தைச் சந்திக்க வெஸ்ட்போர்க் முயன்றபோதும், அவரைப் பாலசிங்கம் தவிர்த்துக் கொண்டதாகக் கூறப்படுகின்றது.[20] இதன் பின்னர் ஜூலை நடுப்பகுதியில் லண்டனில் பாலசிங்கத்தை ஹெல்கீசன், சொல்ஹெய்ம் மற்றும் விஸா கோல்டன் (வெளிநாட்டு அமைச்சு அதிகாரி) ஆகியோருடன் வெஸ்ட்போர்க் சந்தித்தார். ஜூலை 27 அன்று மொரகொடவையும் ஹெல்கீசன் சந்தித்தார். 2002 ஆகஸ்டில், ஒஸ்லோவில், நோர்வே தரப்பை ஹெல்கீசன், சொல்ஹெய்ம், வெஸ்ட்போர்க் மற்றும் கோல்டன் ஆகியோர் பிரதிநிதிப்படுத்தினர். இலங்கையை மொரகொட மற்றும் குணதிலக ஆகியோரும் எல்டிடிஈ ஐ பாலசிங்கம் மற்றும் அடேல் ஆகியோரும் பிரதிநிதிப்படுத்தினார்கள்.

தாய்லாந்து, சத்தாஹிப் கடற்படைத் தளத்தில் ஆரம்பப் பேச்சுவார்த்தைகளில், அனுசரனையாளர்களை இருதரப்புகளும் புகழ்ந்தன. 'ஒருமுகப்படுத்துவதிலும்', 'கலந்தாய்வை நோக்கிலானதாக' வைத்திருப்பதிலும் அவர்களது 'உறுதியான' வகிபங்கினைப் பாலசிங்கம் குறிப்பாகச் சொல்லிக்காட்டியதுடன், 'சொற்புரட்டுடனும் இரட்டை வேடத்துடனும்கூட' ஆற்றுப்படுத்தியதற்காக ஹெல்கீசனைப் பாராட்டினார்.[21] 'மதிப்புமிக சேவை' மற்றும் தந்திரம், சீவியத்தொழில் தன்மை, சாமர்த்தியம், கடுமையான பணி ஆகியவற்றுக்காக அவர்களை பீரிஸ் பாராட்டினார்.[22]

19. அன்டன் பாலசிங்கம், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது, பக் 366.
20. கொழும்பு நிருபர், காலிஜ் டைம்ஸ், 2002 ஜூலை.
21. அன்டன் பாலசிங்கம், சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முதலாம் அமர்வு, சத்தாஹிப், தாய்லாந்து, peaceinsrilanka.org, 2002 செப்.16.
22. பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அன்டன் பாலசிங்கம், சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முதலாம் அமர்வு, சத்தாஹிப், தாய்லாந்து, peaceinsrilanka.org, 2002 செப்.16.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'தமிழர் பிரச்சினையின் சர்வதேசமயப்படுத்தலின்' முக்கியத்துவத்தை வலியுறுத்தியதற்காகப் பிரபாகரனின் பாராட்டைப் பாலசிங்கம் பெற்றார்.[23] எனினும், வசதிப்படுத்துநர்களைச் சந்தித்த எல்டிடிஈ தலைவர், 'தமிழ் மக்களின் மோசமான நிலையின் இருளடைந்த படமொன்றை வரைந்தார்'. 'இடம்பெயர்ந்த மக்களின் பாரிய மனிதாபிமான சோகத்தைக் கவனத்தில் எடுப்பதற்கும் தீர்த்துவைப்பதற்குமான ஒழுக்கமுறைப் பொறுப்பினை' நோர்வேயும் ஏனையவையும் கொண்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். 'நிதிசார் ஆதரவை ஒன்று திரட்டுவதற்குச் சர்வதேச மட்டத்தில் பாரியளவு பணி செய்ய வேண்டியுள்ளது என ஹெல்கீசன் பதிலளித்தார்.[24] ஒஸ்லோவில் நன்கொடையாளர்களைக் கொண்ட கூட்டமொன்றைத் தாம் ஒழுங்குபடுத்துவதாக அவர் வெளிப்படுத்தியதுடன், நிதியங்களைப் பெறுவதற்கு இணைச் செயலணி அவசியம் எனத் தெரிவித்தார். ஆனால், ஐதேமு அறிக்கையில் வாக்குறுதியாக வழங்கப்பட்டிருந்த இடைக்கால நிர்வாகம் ஒன்றைப் பிரபாகரன் வற்புறுத்தினார்.

சகவாழ்வு நெருக்கடிநிலை பற்றிப் பிரபாகரன் குறிப்பிட்டபோது, 'பாராளுமன்றத்தில் ரணில் பெரும்பான்மை கொண்டிருந்ததுடன், ஜனாதிபதி பிரதமருடன் பணியாற்றுவதற்குச் சர்வதேச அழுத்தத்தின் கீழ் இருக்கின்றார்' எனக் கூறி, அதை வசதிப்படுத்துநர்கள் (அனுசரணையாளர்கள்) குறைத்து மதிப்பிட்டிருந்தனர்.[25]

பேச்சுவார்த்தைகளின் இரண்டாம் அமர்வின்போது, இணைச் செயலணியைப் பதிலீடுசெய்து, வடக்கு, கிழக்கில் உடனடி மனிதாபிமானப் புனரமைப்புத் தேவைகள் மீதான துணை குழு (எஸ்ஐஹெச்ஆர்என்) தாபிக்கப்பட்டது. உலக வங்கி உடமையிலான வடக்கு, கிழக்கு மீள்நிருமாண நிதியத்தின் (என்ஈஆர்எஃப்) ஊடாக எஸ்ஐஹெச்ஆர்என் நிதிப்படுத்தப்பட்டது. மோதல் தவிர்ப்பு மற்றும் வழமைக்குத் திரும்புதல் ஆகியன மீதும் அரசியல் அலுவல்கள் மீதும் முறையே பாதுகாப்பு மற்றும் உள்ளகப் பிரச்சினைகள் ஆகியவற்றுக்காக துணைக்குழு உருவாக்கப்பட்டது. எஸ்ஐஹெச்ஆர்என்யின் தோல்வியைக் குற்றஞ்சாட்டிப் பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்துவதற்கு முன்னதாக, மோதல் தவிர்ப்பு மற்றும் வழமைக்குத் திரும்புதல் ஆகியவற்றிலிருந்து எல்டிடிஈ வெளியேறியது.

பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்திய பின் பாலசிங்கம், 'இணக்கமான ஒருவருடன் ஒருவருக்கான உறவும் தெளிவானதும் வெளிப்

23. அன்டன் பாலசிங்கம், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது, பக்.385.

24. அதே நூலில்.

25. அதே நூலில்.



படையானதுமான கருத்துப் பரிமாறல்களும் அனுசரணையாளர்களின் திறமையானதும் புத்திசாலித்தனமானதுமான வழிகாட்டலும் பேச்சுவார்த்தை நடத்தியோர்களுக்கு இடையில் நம்பிக்கையையும் தன்னம்பிக்கையையும் பேணியதுடன், பேச்சுவார்த்தைகள் முன்னேறுவதற்கும் உதவின' எனச் சொன்னார்.[26] 'அதன் பாரபட்சமின்மைக்காகவும், நோக்கத்திலான நடுநிலைக்காகவும்' ஒஸ்லோவைப் பிரபாகரன் பாராட்டினார்.[27]

ஆனால், நோர்வேயின் பாரபட்சத்தையிட்டு பிஏ, ஜேவிபி, மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற சிங்களத் தேசியவாதிகள் குற்றஞ்சாட்டின. பேச்சுவார்த்தையிலிருந்து எல்டிடிஈ அமைப்பு விலகிவிடும் அச்சத்தினால் புலிகளை ஒஸ்லோ, ஓடும் புளியம் பழமுமாக நடத்தியது. ஒஸ்லோவுடன் சிறந்த தொடர்பினை பேணிய இந்தியா உள்ளூர்த் தலைவர்களுக்கு வித்தியாசமான படமொன்றைக் கீறியது. அதனால் நோர்வேமீது ஜனாதிபதிகள் குமாரதுங்கவும் ராஜபக்ஷவும் ஆட்சேபணைகளைக் கொண்டிருந்தனர். அத்துடன், டெல்லிக்கான புறம்பான உத்தியோகபூர்வ பயணங்களின்போது வெளிநாட்டு அமைச்சர்கள் கதிர்காமரும் அனுர பண்டாரநாயக்கவும் ஒஸ்லோவைத் தாக்கிப் பேசினர். எல்டிடிஈயைச் சாந்தப்படுத்துவதற்காக நோர்வே அரசாங்கம் விட்டுக்கொடுக்கின்றது எனக் கதிர்காமர் குறிப்பிட்டார்.[28]

இந்திய அரசாங்கத்தின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என். தீட்சித் அனுசரணையாளர்களின் வகிபங்கு குறித்து இந்திய முன்னுணர்வு மீது வெளிச்சம் போட்டுக்காட்டினார்.[29] 'இலங்கையின் ஒற்றுமையைக் கணிசமானளவு சிதைவடைந்தாலும்கூட, ஏதோ வகையிலான அமைதியான தீர்வொன்றைப் பெறுவதில் அதிகளவு அக்கறையை' அனுசரணையாளர்கள் கொண்டிருந்ததாகத் தோன்றுகின்றது என முன்னாள் வெளியுறவுச் செயலாளர் தீட்சித் குற்றஞ்சாட்டினார்.[30] இறைமைத்துவமான தமிழ்நாடு ஒன்றை உருவாக்குவதே எல்டிடிஈயின் அடிப்படைக் குறிக்கோள் என அவர் தெரிவித்தார்.[31]

நோர்வே நாட்டினரை அவர்களது வகிபங்குக்காக இணைத் தலைமை நாடுகளின் எஞ்சியவை கூட்டாகவும் புறம்பாகவும் பாராட்டின. யுத்த நிறுத்த உடன்படிக்கையின் மூன்றாம் ஆண்டு நிறைவை நினைவுபடுத்திய ஜப்பானின் சுடா 'பாரபட்சமற்ற வசதிப்படுத்துனர், கண்காணிப்பாளர்

26 அன்டன் பாலசிங்கம், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது, பக் 435, விக்ரமசிங்கவுக்குக் கடிதம், 2003 ஏப்ரல் 21.

27 அதே நூலில்.

28 அம்ரித் போரா, 'ஏதாவது விலையில் சமாதானத்தை வாங்க கொழும்பு விரும்புகின்றது', இந்து, 2003 ஜனவரி 13.

29 ஜே.என். தீட்சித், நேர்காணல், இந்தியா எபரோட் நியூஸ் சர்வீசஸ் (ஐஏஎன்எஸ்), 2003 ஜூலை 21.

30. அதே நூலில். 31. அதே நூலில்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ற தமது வகிபங்கினை' நோர்வேயும் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் நிறைவேற்றியுள்ளன எனக் கூறினர்.[32]

நோர்வேயின் வகிபங்கு 'அனுசரணையாளரிலிருந்து மத்தியஸ்தராக படிப்படியாக மாற்றமடைந்துள்ளது'[33] என்பதை ஒஸ்லோ பிரச்சினை தெளிவுபடுத்துகின்றது; ஆலோசனை வழங்குகின்றது, பேச்சுவார்த்தைகளில் பங்கெடுக்கின்றது, அத்துடன் ஆலோசனையை வகுத்தமைக்கின்றது எனச் சேனாதீர குறிப்பிடுகின்றார்.

தென்பகுதியில் நோர்வேயின் பிரதிமை மாசடைந்ததுடன், இந்த முன்னுணர்வுகளை மாற்றுவதற்கு ஒஸ்லோ பெரிதுமே ஒன்றும் செய்யவில்லை. இத்தகையதொரு பிரதிமைக்கு மறுதலையான பத்திரிகை அறிக்கை, செய்திப்பத்திரிகைக் கட்டுரைகள் மற்றும் தேசியவாதிகளின் பாரதூரமான கருத்துரைகள் ஆகியன பங்களித்தன. எனினும், எல்டிடிஈக்கு இராணுவப் பயிற்சியை வழங்கிய குற்றஞ்சாட்டுகளை நோர்வே தூதுவராலயம் கடுமையாக மறுத்துரைத்தது.

'நோர்வேயில் ரெனா இராணுவ முகாமுக்கு எல்டிடிஈயின் அரசியல் அலுவல்கள் குழுவின் பயணம்... குழுவின் (கற்கை) பயணத்தின் அங்கமொன்றாகும்' என தெரிவித்த அறிக்கை, நான்கு மணிநேர பயணம் சமாதானத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளைத் தயார்படுத்துவது மீதான எடுத்துக்காட்டலையே உள்ளடக்கியிருந்தது எனக் குறிப்பிட்டிருந்தது.[34]

நோர்வே உண்மையிலேயே சிங்களவர்களுக்கு எதிரானது, எல்டிடிஈக்கு சார்பானது என்பதைக் கண்டறிவதை அனுமதிப்பதற்காகப் பௌத்தபிக்குமார்களையும் சிங்களப் பத்திரிகையாளர்களையும் அழைத்து ஒஸ்லோ விருந்தோம்பியது.

கோஷங்களாலும் விமர்சனத்தாலும் நம்பிக்கையிழக்காமல், தமது இராஜதந்திரத்தை அனுசரணையாளர்கள் தொடர்ந்தனர். சிலவேளைகளில் அவர்கள் வரவழைக்கப்பட்டபோது வலுவான நிலைகளில் இருந்து தரப்புகள் அசையவில்லை என்பதை மட்டுமே கண்டறிந்தனர். முட்டுக்கட்டையை இட்டு தான் வெறுப்படைந்துள்ளதாக ஒரு முறை சொல்ஹெய்ம் தெரிவித்திருந்ததுடன், 'சர்வதேச சமுதாயத்தின் பொறுமை' சோதிக்கப்படுகின்றது என ஹெல்கீசன் கருத்து வெளியிட்டார்.[35] ஆனால், தமது தேசியக் கொடி எரிக்கப்பட்ட போது நோர்வே நாட்டினர் தமது உணர்ச்சியை இழந்தனர். சொல்ஹெய்மைப் பார்ப்பதற்கு மறுத்ததன்

32. அகியோ சுடா, உரை, தேசிய சமாதானப் பேரவை நிகழ்ச்சி, கொழும்பு, 2005 பிப்ரவரி 22.
33. சுகீஸ்வீர சேனாதீர, ஏற்கனவே குறிப்பிடப்பட்டது.
34. நோர்வே தூதுவராலயம், கொழும்பு, பத்திரிகை அறிக்கை, 2004 ஆகஸ்ட் 27.
35. விதார் ஹெல்கீசன், *ஊடகவியலாளர் மகாநாடு*, கொழும்பு, 2004 ஜூலை 28.



மூலம் அவரை ஒருமுறை மட்டந்தட்டிய குமாரதுங்க, ஒஸ்லோவுக்கு அவரையிட்டு முறையிட்டார்.[36] எல்டிடிஈயினருக்காக உயர் அலைவரிசை சாதனங்களை வெஸ்ட்போர்க் பெற்றார் என அவர் முறையிட்டார்.[37] ஆட்சேபனைக்குரிய இடைக்கால சுயாட்சி அதிகாரசபை (ஐஎஸ்ஜிஏ) ஆலோசனையைப் பெற்ற அவருக்கு அடுத்தமைந்தவரான ஹன்ஸ் பிரட்ஸ்கார், முன்னும், பின்னுமான இராஜதந்திரத்தை தொடர்ந்தார்.[38] பாதுகாப்பு அமைச்சு பறிக்கப்பட்ட பின்னர், 2003இன் பிற்பகுதியில், யார் கட்டுப்பாட்டில் உள்ளார் என்பது குறித்து தெளிவு இருக்கும்வரை தனது அனுசரணையை ஒஸ்லோ இடைநிறுத்திக் கொண்டது.[39] ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (ஐமசுமு) பதவிக்கு வந்த பின்னர் குமாரதுங்கவின் அழைப்பைத் தொடர்ந்து தனது அனுசரணையை நோர்வே மீள ஆரம்பித்தது.[40] ஐமசுமு ஆட்சி காலத்தின்போது மட்டும், அனுசரணையாளர்கள் 11 பயணங்களை மேற்கொண்டனர். சொல்ஹெய்ம் ஆறு, ஹெல்கீசன் மூன்று மற்றும் பீட்டர்சன் இரண்டு. ஸ்கோப்பின் தலைவராக முன்னாள் பிரதிச் செயலாளர் ஜயந்த தனபாலவுக்கு குணதிலக அடுத்தமைந்தவராக விளங்கினார். அதிகளவு காரசார விவாதத்தின் பின்னர் 2005 ஜூன் 24 அன்று எல்டிடிஈ அமைப்பாலும் இலங்கை அரசாங்கத்தாலும் கையெழுத்திடப்பட்ட சுனாமிக்குப் பிந்தைய தொழிற்படுதல் முகாமைத்துவக் கட்டமைப்புடன் (பி-டோம்ஸ்) இராஜதந்திரம் பலனளித்தது. தீர்வொன்றுக்கு உடன்படிக்கை ஒரு பொருத்தமான அடிப்படை எனக் குமாரதுங்கவும் எல்டிடிஈயினரும் குறிப்பிட்டனர்.

ஜனாதிபதியாக ராஜபக்ஷ வந்தபின் சிறிது காலத்திற்கு சந்தேகத்தில் இருந்த அதன் அனுசரணையாளர் வகிபங்கினைத் தொடர்வதென ஒஸ்லோவின் புதிய பிரதமர் ஜென்ஸ் ஸ்ரோல்ரென்பேர்க் சபதம் எடுத்தார். நோர்வே அதன் அனுசரணையைத் தொடர முடியும் என ஜோன் குணரத்ன தெரிவித்தார். ஆனால், ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கும் பிரதானக் கட்சிகள் நோர்வேக்கு எதிரானவை என்பதால், நிபந்தனைகளுக்கு உட்பட்டு அது மீள ஆரம்பிக்கும் என ஒஸ்லோ தெரிவித்தது.

ஆரம்பத்தில் ராஜபக்ஷ ஜனாதிபதியான பின்னர் இலங்கைக்கான பயணத்திலிருந்து சொல்ஹெய்ம் தடுக்கப்பட்டார். ஆனால், பாதுகாப்புப் படைகள்மீது எல்டிடிஈ தாக்குதல்களின் பின்னணியில், அழைப்பின் பேரில் வந்திறங்கிய அவர், யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமல்

36. *தமிழ் கனேடியன்*, 2005 ஏப்ரல் 20.
37. இராஜதந்திர நிருபர், *சண்டே டைம்ஸ்*, கொழும்பு 2002 டிசம்பர் 22.
38. *டெயிலி மிரர்*, 2003 நவம்பர் 1.
39. வசதிப்படுத்தலை நோர்வே இடைநிறுத்தம், *டெயிலி மிரர்*, 2003 நவம்பர் 14.
40. சந்திரிகா குமாரதுங்க, பொன்டேவிக்குக்கு கடிதம், 2004 நவம்பர் 23.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுத்தல் மீதான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான முட்டுக் கட்டையை வெற்றிகரமாக உடைத்தார். யுத்தம் உடனடியான நிகழ் வாகும் என்ற தருணத்தில் தடை தகர்ந்தது. யுத்தநிறுத்த உடன்படிக்கை 4ஆவது ஆண்டு நிறைவிலும் தப்பிப்பிழைத்தது.

### ஒஸ்லோ சமாதான ஆதரவுக் கூட்டம்

2005 நவம்பர் 25இன் ஒஸ்லோ நன்கொடையாளர் மகாநாட்டில் 37 நாடுகளைச் சேர்ந்த 100க்கு மேற்பட்ட உயர் அதிகாரிகளும் பிரதிநிதி களும் பங்கெடுத்தனர். இதை ஆரம்பித்துவைத்த பீட்டர்சன், புனர் வாழ்வுக்கும், மீள்நிர்மாணத்திற்கும் நிதிசார் ஆதரவை வலியுறுத்தினார். 'சமாதான நடைமுறை வெற்றியடைவதற்குச் சமாதானத்திற்கான பிரசித்தமான ஆதரவு தக்கவைக்கப்பட வேண்டும். தமது நாளாந்த, வாழ்க்கையில் சமாதானத்தின் திடமான அனுகூலங்களை மக்கள் பார்க்க வேண்டும். குறிப்பிடத்தக்க சர்வதேச உதவியின்றி, இந்த வாய்ப்பு தொலைந்துவிடும்' எனப் பீட்டர்சன் பிரகடனப்படுத்தினார்.[41]

ஐக்கிய அமெரிக்க ராஜாங்க பிரதிச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ், ஜப்பானின் விசேடப் பிரதிநிதி யசூஷி அகாசி, ஐரோப்பிய யூனியன் பிரதிநிதி பீட்டர் லைஷோல்ட், ஐரோப்பிய யூனியன் ஆணையாளர் மார்கொட் வோல்ஸ்ரோம் மற்றும் பிரிட்டிஷ் சர்வதேச அபிவிருத்திக் கான அரசாங்கச் செயலாளர் கிளாயர் ஷோர்ட் ஆகியோர் அரங்கில் உரையாற்றியதுடன், தமது முழு ஆதரவையும் வெளிப்படுத்தினார். ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க், நெதர்லாந்து, சுவீடன், பின்லாந்து மற்றும் கிரேக்கம் ஆகியன பிரதிநிதிகளுக்கு உடனடியாக மனிதாபிமான உதவியாக ஏறத்தாழ 70 மில்லியன் டாலர் வாக்குறுதி அளிக்கப்பட்டது. 'இது நன்கொடையாளர்களிடமிருந்து சமாதான நடைமுறையில் நம்பிக்கையூட்டும் ஒரு சமிக்ஞை' என உடனடியாகவே ஹெல்கீசன் பிரகடனப்படுத்தினார்.[42] ஒஸ்லோ பிரகடனம் செய்யப்பட்டது.

### சர்வதேசப் பாதுகாப்பு வலை

புலிகள் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பார்கள் என்று தென்பகுதியில் அதன் அச்சங்களைச் சாந்தப்படுத்துவதற்கே பாதுகாப்பு வலையொன்றின் கருத்துரு உருவாக்கப்பட்டது. சமாந்தரமான மீள்நிர்மாணத்தை உறுதிப் படுத்துவதற்கு 'சுமையைப் பங்கிடுவதில்' சர்வதேசச் சமுதாயமும் வகிபங்கொன்றைக் கொண்டிருந்தது. இந்த காரணத்தின் நிமித்தமே முந்தைய பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தன.

41. ஜேன் பீட்டர்சனின் அறிக்கை, ஒஸ்லோ சமாதான ஆதரவுக் கூட்டம், peaceinsrilanka.org, 2002 நவம்பர் 25.
42. விதார் ஹெல்கீசன், ஊடகவியலாளர் மகாநாடு, ஒஸ்லோ, 2002 நவம்பர் 25.



'பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதில் எமது முந்தைய அனுபவங்கள் மீதே அரசியல் தீர்வொன்றைக் கண்டறிவதற்கான எமது அணுகுமுறை அடிப்படையைக் கொண்டிருந்தது. எனவே, மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலம் நாம் ஆரம்பித்தோம். எமது மீள் நிர்மாணத் திட்டத்தில் அவர்களது பெறுமதிமிக்க ஆதரவைப் பெறுவதற்கு எம்மால் இயலுமாக இருந்தது' என விக்ரமசிங்க தெரிவித்தார்.[43] பாராளுமன்றத்தைத் தன்னிச்சையாகக் கலைப்பதற்கான அதிகாரத்தைக் குமாரதுங்க கொண்டிருந்தார். பிரசித்தமான சர்வதேசப் பிரமுகர்கள் அவரது கவனத்தைக் கவர்ந்தனர். சகவாழ்வின் நெருக்கடிநிலைமீதான அவர்களது அறிக்கைகளும் 'ஒரு குரலில் பேசவேண்டும்' என்ற அரசாங்கத் திற்கான அவசியமும் அவர்மீது கவனத்தைச் செலுத்தியிருந்தன. யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டமை மற்றும் எல்டிடிஈயின் மீதான தடையை நீக்கியமை ஆகியன சர்வதேச ஆதரவுடன் எடுக்கப்பட்ட தைரியமான நடவடிக்கைகளாகும். 'சர்வதேசச் சமுதாயத்தின் ஆதரவும் நல்லெண்ணமும் இன்றிச் சமாதான நடைமுறையும் யுத்தநிறுத்த உடன்படிக்கையும் நீண்ட பயணத்தைத் தாங்கிக்கொண்டிருக்குமா' என்பது பற்றி விக்ரமசிங்க சந்தேகம் கொண்டிருந்தார்.[44]

அசாத்தியமான கோரிக்கைகளை எல்டிடிஈ முன்வைத்ததுடன், 'சர்வதேசச் சமுதாயத்திற்குச் சிங்களத் தேசத்தின் உண்மையான முகத்தை வெளிப்படுத்துவதற்குப் பேச்சுகளைப் பயன்படுத்தும்'[45] பாலசிங்கத்தின் செயல்நோக்கத்தை இது விளக்குகின்றது. புலிகள் கண்ணாமூச்சி காட்டுகிறார்கள் என்பதை உணர்ந்த விக்ரமசிங்க, 'அவர்கள் (புலிகள்) அதை முறித்தால், அவர்கள் கஷ்டப்படப்போகிறார்கள். இப்பாதை யில் நான் தனியாகச் செல்லமாட்டேன். நான் சர்வதேசச் சமுதாயத் துடனேயே செல்வேன். ஆகவே, புலிகள் அளிக்கின்ற வாக்குறுதிகள் அவர்களால் ஈடேற்றப்பட வேண்டும்' எனத் தெரிவித்தார்.[46]

'அவர்களது ஆயுத விநியோகத்தின்மீது யுத்தநிறுத்தமும் எதிர் கால பேச்சுவார்த்தைகளும் முன்வைத்துள்ள கட்டுப்பாடுகளையும் நிபந்தனைகளையும் புலிகள் கௌரவப்படுத்துவது அவசியமாகும்' என ஆர்மிட்டேஜ் தெரிவித்தார்.[47] சமாதான நடைமுறையின் 'அளவுக்கு

43. ரணில் விக்ரமசிங்க, முக்கிய உரை, ஸ்ரீ தினேஷ் சிங் விரிவுரை, புதுடெல்லி, 2005 ஆகஸ்ட் 17.
44. ரணில் விக்ரமசிங்க நேர்காணல், சண்டே டைம்ஸ், 2005 நவம்பர் 13.
45. அன்டன் பாலசிங்கம், தமிழ் குடியகன்றோர் மத்தியில் உரை, டுசல்டோர்ப், ஜேர்மனி, 2003 பிப்ரவரி 9.
46. 'யுத்தநிறுத்தத்தை முறிப்பதாக இலங்கைப் பிரதமர் எல்டிடிஈக்கு எச்சரிக்கை', இலங்கையி லிருந்து செய்தி, எஸ்பியூஆர். 2003 மார்ச் 2.
47. ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ், 'இலங்கைச் சமாதானத்திற்கான எதிர்காலம்' மூலோபாய சர்வதேச கற்கைகள் நிலைய மகாநாடு, 2003 பிப்ரவரி 14.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிஞ்சிய சர்வதேச மயப்படுத்தலுக்குப் பாலசிங்கம் சாட்டையடி கொடுத்ததுடன், தமிழர்கள் மீது வெளிநாட்டுச் சக்திகள் தீர்வுகளைத் திணிக்க முயலுகின்றன என அவர் குற்றஞ்சாட்டினார்.[48] அரசாங்கத்தின் சகவாழ்வுச் சச்சரவுகளை' அவர் சுட்டிக்காட்டியதுடன், முன்னேற்றத்திற்கான 'தடைகள்' 'அதிகாரத்தின் இரட்டை மையங்களே' எனக் குறிப்பிட்டார்.

> அரசாங்கம் பிளவுபட்டுள்ளதுடன், இதனால்தான் பேச்சுவார்த்தைகளும் சமாதான முயற்சிகளும் தகராறுகளுக்கு முகங்கொடுக்கின்றன. எம்மைப் பொறுத்தளவில் நாங்கள் ஒரு இயக்கம், ஒரு தலைமை, ஒரு மக்கள்[49]

எனப் பாலசிங்கம் தெரிவித்தார்.

சர்வதேசமயப்படுத்தல் புலிகளுக்கு சட்டபூர்வதன்மையை வழங்கியுள்ளது என்ற வாதத்தை மறுத்துரைத்த மொரகொட, 'சமாதான நடைமுறையின் ஓர் உற்பத்தி கருணா' எனக் குறிப்பிட்டார்.[50]

'யுத்தச் சூழ்நிலையொன்றில் கருத்து வேறுபாட்டைக் கொண்ட கருணா பெரிதும் அனேகமாக ஒரு போதும் தோன்றியிருக்கமாட்டார். துப்பாக்கிகளை அமைதிப்படுத்தியதன் மூலமும் வீதிகளைத் திறந்ததன் மூலமும் தடைகளை நீக்கியதன் மூலமும் மிகவும் இரக்கமற்ற எல்டிடிஈ போராளிகளுக்கு மாற்றுவழிகளை வழங்கும் சூழ்நிலையொன்றை நாம் உருவாக்கினோம்' என்று மொரகொட தெரிவித்தார்.[51]

கதிர்காமரின் மறைவுக்குப் பின்னர் ஐரோப்பிய யூனியனினால் எல்டிடிஈமீது ஏற்படுத்தப்பட்ட பிரயாணத் தடைகூட, இந்தப் பாதுகாப்பு வலையின் நேரடி விளைவாகும். 'சர்வதேசப் பாதுகாப்பு வலை எனக் கூறப்படுவது சூழ்நிலைகளைக் கையாள இயலாததாக உள்ளது' என ஏற்கனவே பிரகடனப்படுத்திய ராஜபக்ஷ, யுத்தத்திற்குத் திரும்புவதிலிருந்து அது தன்னைக் காப்பாற்றியுள்ளது எனத் தற்போது ஒப்புக்கொள்வார். ஐக்கிய அமெரிக்க அதிகாரிகளால் இருகாரசாரமான அறிக்கைகளுக்குப் பின்னர், சொல்ஹெய்மின் பிரச்சினைகளைக் களையும் செயல்பணியானது முட்டுக்கட்டையை முறித்தது.

கருணாமீதான மொரகொடவின் கருத்துரைகளை எல்டிடிஈ தனது அனுகூலத்திற்குப் பயன்படுத்தியது. கருணாவின் பிரிவுக்கு ஐக்கிய தேசிய முன்னணியே பொறுப்பு என்றும் புலிகள் நழுவல் போக்கைக் கொண்டிருந்தால், ஐக்கிய அமெரிக்கா நுழைவதற்குத் தயங்காது என்றும் எல்டிடிஈ சார்பான உதயன் பத்திரிகைக்கு நவீன் திசநாயக்காவால் செய்யப்பட்ட இன்னொரு கூற்றையும் எல்டிடிஈ அமைப்பு குற்றமாக எடுத்தது. அதன் தேர்தல் புறக்கணிப்பைக் கைவிடுமாறு எல்டிடிஈயை ஒத்துப்போக வைப்பதற்கான முயற்சிகள் நடந்துகொண்டிருந்த வேளையிலேயே இந்த இருகூற்றுகளும் ஊடகத்திற்கு வழங்கப்பட்டன. ஆனால், விக்ரமசிங்கவைத் தோற்கடிப்பதற்கான எல்டிடிஈ தீர்மானம் பெரிதும் முன்னரே எடுக்கப்பட்டது என்பதே உண்மையாகும்.

48. அன்டன் பாலசிங்கம், விக்ரமசிங்கவுக்கு கடிதம், *தமிழ்நெட்*, 2003 ஏப்ரல்.
49. முசல்டோர்ப்பில் அன்டன் பாலசிங்கத்தின் உரை, ஏற்கனவே குறிப்பிடப்பட்டது.
50. மிலிந்த மொரகொடவுடன் சம்பிகா லியனாராச்சி நேர்காணல், *டெயிலி மிரர்*, 2005 நவம்பர் 8.
51. அதே நூலில்.



முதலாவதாகப் பல்ரிமோரில் ஐக்கிய அமெரிக்காவின் கரையோரக் காவல் கப்பலை மொரகொட பெறுவதைக் கண்டபோதே எல்டிடிஈயின் விரோதத்தை அவர் சம்பாதித்துக்கொண்டார். ஆனால், 2003 ஏப்ரல் நடுப்பகுதியிலான வாஷிங்டன் தயார்நிலை மகாநாட்டிலிருந்து விட்டு விடப்பட்டதற்காகவும் மீள்நிருமாணத்தை உறுதிப்படுத்துவதற்குத் தவறியமைக்காகவும் 2003 ஏப்ரல் 21 அன்று பேச்சுவார்த்தைகளை எல்டிடிஈ இடைநிறுத்திக்கொண்ட பின்னர், நீண்ட காலத்திற்குப் பின்னரே இது நிகழ்ந்தது. இம்மகாநாட்டுக்கு எல்டிடிஈ அழைக்கப்படும் எனப் பாலசிங்கத்திற்கு மொரகொட வாக்குறுதி அளித்திருந்தார் என்ற தமிழ்ச் செல்வனின் குற்றச்சாட்டிலிருந்து சச்சரவு ஆழமடைந்தது. ராஜாங்க திணைக்களத்தின் வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கமாக ஏற்கனவே பட்டியல்படுத்தப்பட்டிருந்த எல்டிடிஈக்கு ஐக்கிய அமெரிக்காவால் அழைப்பு விடுக்க முடியவில்லை. தனது பெயர் களங்கத்திலிருந்து தெளிவுபடுத்தப்படும்வரை அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைக் குழுவிலிருந்து வெளி யேறப்போவதாகக்கூட மொரகொட பயமுறுத்தினார். மொரகொடவைப் பாலசிங்கம் தெளிவுபடுத்தியதுடன், அவரிடம் மன்னிப்பும் கேட்டார். மொரகொட சரியாக இருந்தாலும்கூட, சிங்களவர் ஒருவரிடம் மன்னிப்பு கோருவதற்கு அவசியமில்லை எனப் பாலசிங்கத்திற்கு பிரபாகரன் கூறியிருப்பதாகத் தெரியவந்தது.

ஆழமானதொரு உறவுக்குள் ஐக்கிய அமெரிக்காவை இழுத்துவந்த அரசாங்கத்தின் யுத்ததந்திரவல்லுநரான மொரகொட, ஐதேமு ஆட்சியின் இறுதியில் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றின் கலந்துரையாடலின் காரணகர்த்தாகவாக விளங்கினார். எவ்வாறாயினும் இது உருப்படியாகவில்லை. தயக்கம்காட்டிய ஐரோப்பிய யூனியனை இணைத்தலைமை நாடொன்றாக அமரவைப்பதற்கு அவரே தொடர்புகொண்டு கடுமையாக உழைத்தார்.

### வியப்பூட்டும் சர்வதேசச் சம்பந்தங்கள்

சர்வதேசச் சம்பந்தத்திற்கான தனது நோக்கத்தின் பின்னணியை விக்ரமசிங்க மீட்டுப்பார்த்துள்ளார். 'சர்வதேச சமுதாயத்தின் சம்பந்தத்தைச் செய்துள்ள பிரச்சினையின் தன்மை தவிர்க்க முடியாததாகும். பிரச்சினை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியா உட்பட பெருமளவு நாடுகள் அரசியல் செயல்பாட்டிலிருந்து எல்டிடிஈயைத் தடைசெய்துள்ளன. குடிபெயர்ந்த தமிழ் மக்கள் வாழ்கின்ற நாடுகளின் அரசாங்கங்கள் மீது அவர்களின் பாரியதும் பரந்ததுமான தாக்கம் இருந்தது. இவை யாவும் சர்வதேசச் சம்பந்தத்திற்கு ஆதரவளித்தது' என விக்ரமசிங்க குறிப்பிட்டார்.[52]

செப்டம்பர் 11இற்குப்பின் ஐக்கிய அமெரிக்கா தலைமையிலான 'பயங்கரவாதம் மீதான யுத்தத்திற்கு' பெருமளவு நாடுகள் ஆதரவளித்தன. மேலும், அரசியல் தீர்வொன்று நம்பிக்கையூட்டுவதாகத் தோன்றுகின்ற விடத்து, சர்வதேசச் சமாதானத்திற்கு எல்டிடிஈ ஒரு பயமுறுத்தலாக இருப்பதனால் சர்வதேசச் சமுதாயம் அதற்கு ஆதரவளிப்பதற்குத் தயாராக இருந்தது. 'சமாதான நடைமுறையில் உள்ளக அம்சம் ஒன்றே சர்வதேசமயப் படுத்தல் ஆகும். இது ஒரு விபத்தோ அல்லது யதேச்சையான நிகழ்வோ அல்ல. இது ஒரு உணர்வுப்பூர்வமான அல்லது வேண்டுமென்றேயான கொள்கையைக் கொண்டதொரு விடயமாகும். அத்துடன் சமாதான நடைமுறையை சர்வதேசச் சமுதாயம் கீழ்க் கையெழுத்திடுவதற்கு மூலவளங் களின் அனுகூலத்தை எமக்குத் தர வேண்டும்' என பீரிஸ் தெரிவித்தார்.[53]

இந்து சமுத்திரத்தின் கண்ணீர்த்துளி எனப்படும் இலங்கையில் என்றுமில்லாத அளவுக்கு சர்வதேச சம்பந்தத்தைப் பார்ப்பது வியப் பூட்டும் என்பது உறுதியானதாகும். செயன்முறை சுபிட்சத்தை வழி காட்டுவதில் கனியவைக்குமா அல்லது வெளிநாட்டுச் சக்திகளுக்கு இடையிலான பிராந்திய தகராறு பின்னர் வெடிக்குமா?

முன்னெப்போதுமில்லாத வெளிநாட்டுச் சம்பந்தத்திற்கான ஒரு காரணமாக இலங்கையின் மூலோபாய அமைவிடமும் உலகின் சிறந்த இயற்கையான துறைமுகமான திருகோணமலையுமே எனச் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். 'ஏதோ வகையிலான கட்டுப்பாட்டுக்காக' போர்த்துக்கீசியர், டச்சுக்காரார், பிரெஞ்சுக்காரார், பிரிட்டிஷ்காரர் மற்றும் இந்தியர்கள் போட்டியிட்டனர் எனக் கூறி அதன் மூலோபா யத்தை ரமேஷ் சோமசுந்தரம் குறிப்பிட்டுள்ளார்.[54] 18ஆம் நூற்றாண்டில், இந்தியாமீதான தமது பிடியை ஒன்றுதிரட்டுவதற்காகக் கடற்படைத் தளமொன்றாக இலங்கையின் துறைமுகத்தைப் பலப்படுத்துவதற்குப் பிரான்ஸும் பிரிட்டனும் விரும்பின. அணுசக்தி ஆயுதத் தளவாடம் மற்றும் அணுசக்திக் கடல்மூழ்கிக் பீரங்கிகள் ஆகியன கொண்டு

52. ரணில் விக்ரமசிங்க, முக்கிய உரை, ஸ்ரீ தினேஷ் சிங் விரிவுரை, புதுடெல்லி, 2005 ஆகஸ்ட் 17.

53. பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பாராளுமன்றத்தில் உரை, 2005 டிசம்பர் 7.

54.. ரமேஷ் சோமசுந்தரம், 'இலங்கையில் மூலோபாய முக்கியத்துவம்', ஸ்டாம்ஃபோர்ட் லேக் பப்ளிஷர்ஸ், 2005.



இந்நாளிலும் காலத்திலும் திருகோணமலை அளப்பரிய முக்கியத் துவத்தைக் கொண்டது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

மேலதிகமாக, துறைமுகத்தின் ஆழத்தை வழங்குகையில், ராடாரினால் கண்டுபிடிக்கப்படுவதைச் செயல்திறனாகத் தவிர்க்கும்வண்ணம் உள் துறைமுகத்தினுள் அணுசக்தி நீர்மூழ்கிகள் மூழ்குவதற்கு இயலக் கூடியதாகவுள்ளன.[55] இந்திய போர்த்திறவல்லுநர் ராமச்சந்திர ராவை குறிப்பிட்டுச் சோமசுந்தரம் பின்வருமாறு தெரிவித்தார்: 'இலங்கையில் விரோத சக்தி நிலைகொள்ளக் கூடாது என்பதை உறுதிப்படுத்துவதில் மிகவும் உண்மையான அக்கறையை இந்தியா கொண்டுள்ளது. ஆகாய மற்றும் கடல் குண்டுவீச்சுக்கும் அதன் விஸ்தாரமான கரையோரங்களின் நீளவாட்டில் தாக்குதலுக்கும் வெளிநாட்டு விமான ஓடுபாதைகளும் திருகோணமலையின் கடல் கட்டுப்பாடும் இன்றியமையாததாக இந்தியாவை வெளிப்படுத்தும்.[56]

56 கி.மீ. கடற்கரைக்கோட்டுடன், உலகில் 5ஆம் பாரிய சகல கால நிலையிலானதும் சமுத்திர ஏற்ற இறக்கம் சாராத இயற்கை துறைமுக மானதுமான திருகோணமலைத் துறைமுகமானது மத்திய கிழக்குக்கும் சிங்கப்பூருக்கும் இடையில் அமைந்துள்ள பாரிய தடாகமாக விளங்கி வரலாற்றுரீதியிலானதும் மூலோபாய முக்கியத்துவத்துடனும் உலகம் மகாயுத்தம் 2இன் அறுவடையிலான சீனன்குடா தடாகப் பண்ணை யுடன் இணைந்துள்ளது. துறைமுகத்துடன் தடாகப் பண்ணை இணைந்து, எரிபொருளைப் பெறுவதற்கும் களஞ்சியப்படுத்துவதற்கும் விநியோகிப் பதற்கும் மிகவும் செயல்திறமையிலானதாக அதைச் செய்துள்ளது.

வெளியேறிய பின்னர், இணைத் தலைமைத்துவ நாடுகளுக்கு, குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் எதிராக இந்தியா வைக் குறிவைப்பதற்கு தமிழ் ஊடகத்தில் எல்டிடிஈ அதிகப்படியான நேரத்தைச் செலவழித்தமை பற்றி இந்தியா அறிந்துவைத்திருந்தது.

2004 செப்டம்பரில் 'தராகி' என்ற பத்தியில் எண்ணத்தைத் தூண்டும் கட்டுரையொன்றை டி.சிவராம் 'இலங்கையில் ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் மூலோபாய முக்கியத்துவமான அக்கறைகளைக் கொண் டுள்ளதா? அப்படியெனில், அவை யாவை' என்ற தலைப்பில் எழுதி யிருந்தார். குறிப்பாக, உபகண்டத்தில் அதன் மூலோபாயத் திட்டங்களின் அங்கமாகக் களத்தைக் கொண்டிருப்பதற்கான வாய்ப்புகளுக்காகவும் விமான ஓடுதள வசதிகளுக்காகவும் ஐக்கிய அமெரிக்கா இங்கு அக்கறை களைக் கொண்டிருந்ததாக அவர் வாதாட முயன்றிருந்தார்.[57]

55. அதே நூலில்.

56. அதே நூலில்.

57. தராக்கி, 'இலங்கையின் மூலோபாய அக்கறைகளை ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் கொண்டுள்ளதா? அவ்வாறெனின், அவை என்ன?' டெயிலி மிரர், 2004 செப்டம்பர் 29.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்த மாதம், 'சேது சமுத்திரத்தின் புவி' மூலோபாயத் தாக்கங்கள் என்ற தலைப்பின் கீழ்ப் பிராந்திய சக்தியான இந்தியாமீது 'தராகி' கட்டுரை நோக்கினைக் கொண்டிருந்தது. புவி அரசியல் நோக்கு நிலையிலிருந்து அதன் முக்கியத்துவத்தை அவர் விவரித்தார்.[58] ஐக்கிய அமெரிக்காவுடன் அதன் சீன, ஜப்பான் உறவுகளில் குறிப்பிடத்தக்க நெம்புகோலை இந்தியாவுக்கு சேது சமுத்திரம் வழங்கும் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

அடுத்த மாதத்தில் 'ஜப்பான்: ஆசியாவில் தோன்றுகின்ற ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதி' என்ற தலைப்பின் கீழ் ஜப்பான்மீது 'தராகி' கட்டுரை எழுதியிருந்தது.[59] இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அதிகாரத்தை முன்னீட்சிப்படுத்தும் திட்டத்தில் அமெரிக்காவின் பிரதிநிதியாக மூலோபாயப் பங்காளியாக ஜப்பானின் தோன்றி வருகின்ற வகிபங்கு பற்றிய முன்னுணர்வொன்று உள்ளதாக அவர் வாதாடினார். இலங்கை மற்றும் இந்தோனேஷியா மாகாணமான ஆச்சே ஆகிய இரு மோதல்களில் ஜப்பானின் தொடர்புக்கு இடையிலான ஒத்துப்போகின்றவற்றை அவர் முன்வைத்ததுடன், இந்திய சமுத்திரத்தின் சுறுசுறுப்பான கடல் ஒழுங்கையில் இரண்டுமே முக்கியமான இடங்கள் எனக் குறிப்பிட்டிருந்தார்.

### சமாதான நடைமுறையில் இந்தியாவின் தொடர்புகள்

மேற்கத்தைய நாடுகளின் அதிகரித்த தொடர்போடு, ஏதாயினும் அச்சங்களைப் போக்குவதற்கு 2002 ஜூனில் டெல்லிக்கு விக்ரமசிங்க பயணம் செய்ததுடன், திருகோணமலையில் களஞ்சிய வசதிகளை இந்தியாவுக்கு வழங்கினார். முக்கியமாகப் பெட்ரோலிய உற்பத்திக் களஞ்சிய வசதியை முன்னேற்றுவதற்காக 35 வருடக் குத்தகையில் ஒரு மில்லியன் டன் ஆற்றலளவைக் கொண்ட எண்ணெய் தாங்கிப் பண்ணையை இந்தியன் ஒயில் கம்பெனி (ஐஓசி) பெற்றுக்கொண்டது. 99 தாங்கிகளில் (ஒவ்வொன்றும் 12,000 கிலோ லிட்டர் கொள்ளளவைக் கொண்டுள்ளது) 15 மட்டுமே செயல்படக்கூடிய நிலையில் இருந்தன. பொருளாதார முன்னேற்றத்திற்கும் பாதுகாப்புக்கும் இந்தியர்களுக்கான ஒரு சுதந்திர வர்த்தக வலயம் திருகோணமலையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சமாதான நடைமுறைமீது இந்தியாவின் ஆசீர்வாதங்களைக் கோரி, 2001 டிசம்பரில் அதிகாரத்திற்கு வந்து சில நாட்களுக்குள் விக்ரமசிங்க புதுடெல்லிக்கு பயணம் செய்தார். இரு அடுத்தமைந்த வெளிநாட்டு அமைச்சர்களான ஜஸ்வந்த்சிங் மற்றும் யஷ்வந்த சின்ஹா ஆகியோருடன்

58. தராக்கி, 'சேது சமுத்திரத்தின் புவிமூலோபாய தாக்கங்கள்', டெயிலி மிரர், 2004 அக்டோபர் 6.

59. தராக்கி, 'ஜப்பான்: ஆசியாவில் தோன்றிவரும் ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதி?' டெயிலி மிரர், 2004 நவம்பர் 3.



தான் பேச்சுவார்த்தை நடத்தியதாகப் பீரிஸ் தெரிவித்தார். ஆலோசனைகள் 'தீவிரமானவை', 'யதார்த்தமானவை', மற்றும் 'முழுமையானவை' என அவர் மேலும் தெரிவித்தார். இந்தியாவில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும் எல்டிடிஈ ஆர்வம் காட்டியதுடன் (2002 ஏப்ரல் 10 பத்திரிகையாளர் மகாநாடு) 'துரதிர்ஷ்டவசமான நிகழ்வை' மறக்குமாறு புதுடெல்லியை வலியுறுத்தியது.

பிரேமதாச–எல்டிடிஈ பேச்சுவார்த்தைகள் பற்றி ஏற்கனவே பாலசிங்கம் குறிப்பிடுகையில், 'பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதை' டெல்லி 'பகிரங்கமாக' வரவேற்பதாகத் தோன்றுவதுடன், ஆனால், 'தனிப்பட்டரீதியில் இந்தியா சினங்கொண்டிருப்பதுடன், பிராந்தியத்தில் அதியுயர் சக்தியாகத் தன்னை வலியுறுத்துவதற்கும் இங்குப் பாரிய செயல்பாட்டாளராகத் தொடர்ந்தும் இருப்பதற்கும் முயலும்' என்று தெரிவித்தார்.[60] உடன்படிக்கையைத் திணிப்பதற்கும் அதைச் செயல்படுத்த முயல்வதற்கும் இந்தியாவை நோக்கிய எல்டிடிஈயின் இயற்கையான வெறுப்பின் அடிப்படையில் – அந்நேரத்தில் – பாலசிங்கத்தின் குறிப்புக்களைப் பார்க்க வேண்டும். ஆனால், ஐதேமு–எல்டிடிஈ பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில், இத்தகையதொரு வலியுறுத்தல் ஓரளவுக்குத் தீர்க்கதரிசனமாக இருந்திருக்கும்.

முரண்பட்ட கொள்கையொன்றின் மீது எண்பதுகளில் சமாதானத்தை மத்தியஸ்தம் செய்ய முயல்வதில் இந்தியாவின் துரதிர்ஷ்ட நிலையை 'இந்து' பத்திரிகையின் நீண்ட அனுபவத்தைக் கொண்ட நிருபர் தோமஸ் ஏபிரஹாம் கட்டுரையொன்றில் இந்தியாவைச் சாடியுள்ளார். 'இலங்கையின் ஒற்றுமையைப் பேணுவதற்கான இந்தியாவின் பகிரங்கப்படுத்தப்பட்ட விருப்புகளும் அந்த முடிவை அடைவதற்குக் கருவியொன்றாகத் தீவிரவாதத் தமிழ் தேசியவாதத்தை அது பாவித்ததிற்கும் இடையில் முரண்பாடொன்றுள்ளது' என ஏபிரஹாம் குறிப்பிடுகின்றார்.[61]

ஒரு விடயம் உறுதியானதாகும். இங்கு இடம்பெறும் யுத்தம் அங்கு வழிந்தோடும் தாக்கமொன்றைக் கொண்டிருக்கும் என்பதால், இன மோதலுக்குத் தீர்வொன்றையிட்டு இந்தியா ஆர்வங்கொண்டுள்ளது. இருந்தபோதிலும், இங்கு வலியுறுத்தப்படும் தீர்வு அங்கு சம்பந்தத்தைக் கொண்டுள்ளது. எல்டிடிஈயின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையானது (ஐஎஸ்ஜிஏ) புதுடெல்லிக்கு அளவுக்கு மீறியதாக இருந்தமை புதுமையானதல்ல. 2003 அக்டோபர் 21 இணைப் பத்திரிகை வெளியீட்டுக்குப் பின்னரும்கூட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை (இதஅச) மீதான அடிப்படையில் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு ஐதேமு

60. அன்டன் பாலசிங்கம், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது, பக்.138.

61. கலாநிதி குமார் ரூபசிங்க, ஏற்கனவே குறிப்பிடப்பட்டது, பக்.18.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முயன்றபோது சமமாக்குதலில் இந்தியா பிரவேசித்தது. 2003 நவம்பர் 3இல் தனது சொந்த பத்திரிகை அறிக்கை மூலம் ஐதேமு அரசாங்கத்தால் கருக்கொள்ளப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபைமீது பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதைத் தடுக்கக் குமாரதுங்கவின் அரசியலமைப்பு திடீர்ப் புரட்சி குறிக்கோளாகக் கொண்டிருந்தது.[62] இறுதி இணக்கத்தின் உள்ளக அங்க மொன்றாக ஏதாவது இடைக்கால நிர்வாகம் இருக்கவேண்டும் என்பதுடன், ஐக்கியத்தினதும், பிரதேச ஒற்றுமையினதும் வரைத்திட்டத்தில் இருக்கவேண்டும் என இணைப் பத்திரிகை அறிக்கை குறிப்பிடுகின்றது.

இந்நிலை இருந்தபோதிலும், பிராந்தியச் சக்தியின் கடும்சினத்தைச் சம்பாதித்தபடி, இடைக்கால தன்னாட்சி அதிகார சபைமீது பேச்சுவார்த்தை நடத்துவதற்கு உடன்பட்டுள்ளார். இந்தியாவால் சீர்ப்படுத்தப்பட்ட ஜேவிபி இக்காரணத்தால் விக்ரமசிங்கவையும் பின்னர் குமாரதுங்கவையும் எதிர்த்தது. அவர்கள் இந்தியாவின் செய்தியைப் பற்றிக்கொள்ள தவறினர் அல்லது மாற்றீட்டைக் கொண்டிருக்கவில்லை.

'குறிப்பிடத்தக்கது' மற்றும் 'விரிவானது' என இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ஆர்மிட்டேஜ் பாராட்டினார். ஆனால், 'இணக்கத்திற்காக சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டல்களை' மீறிவிட்டதாகக் குறிப்பிட்டார். 'பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதன் மூலம் இந்நடவடிக்கைமீது கட்டியெழுப்பும்படி இருதரப்புகளையும்' ஐக்கிய அமெரிக்கத் தூதரகம் வலியுறுத்தியது. ஒஸ்லோ மற்றும் டோக்கியோ உடன்படிக்கைகளுக்கு அமைவாக 'இடைக்கால நிர்வாகம் மீதான உடன்படிக்கை காலப்போக்கில் நிரந்தரமான சமாதான இணக்கப் பாட்டுக்கு இட்டுச் செல்ல வேண்டும்' என ஐக்கிய அமெரிக்க அறிக்கை 'வலியுறுத்தியது'.[63] இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஆலோசனைகள் 'அரசாங்க ஆலோசனைகளிலிருந்து அடிப்படையில் வேறுபட்டுள்ளன. ஆனால், இடைவெளியை நிரப்புவதற்காக இரு தரப்புகளும் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்துவதாக' ஜப்பான் தெரிவித்தது.[64] இணைத்தலைமைத்துவ நாடுகளுடன் சூழ்நிலை ஒத்துப் போகத்தக்கதல்ல என்பதுடன், அவை இடைக்கால ஒழுங்கொன்றுக்கு அழுத்தம் கொடுத்ததுடன் (ஆனாலும் இதஅச அல்ல) முதலில் இறுதி யான தீர்வொன்றையே இந்தியா வலியுறுத்தியது.

62. எல்டிடிஈயின் ஐஎஸ்ஜிஏ ஆலோசனைகள்மீது ஐதேமு அரசாங்கத்தின் பத்திரிகை வெளியீடு.
63. ஐக்கிய அமெரிக்கத் தூதுவராலயம், கொழும்பு, பத்திரிகை அறிக்கை, 2003 நவம்பர்.
64. ஜப்பானியத் தூதுவராலயம், கொழும்பு, பத்திரிகை அறிக்கை, 2003 நவம்பர் 5.



சமஷ்டிக்கான சமாதானப் பொறியிலிருந்து எல்டிடிஈ கஷ்டப்பட்டு வெளியேற வேண்டியிருந்தது. இதை சர்வதேசச் சமுதாயத்துடன் அரசாங்கம் உருவாக்கியுள்ளதாக எல்டிடிஈ குற்றஞ்சாட்டியது. ஐரோப்பிய நாடு ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குப் போவதும் வருவதுமாக விளங்கிய இயக்கம், இறுதியில் வலியுறுத்தப்பட்ட இறுதி ஒன்றுக்கு அப்பாற்பட்ட இடைக்காலத் தீர்வொன்றை முன்மொழிந்தது. இலங்கையை நோக்கி 'கைகழுவிய' கொள்கையைப் பேணிய இந்தியாவை 'உள் நுழைவதற்கு' இது கட்டாயப்படுத்தியதுடன், இதனுள் நுழைந்ததால் அது சச்சரவுக்கும் உள்ளாகியது.

விக்ரமசிங்கவிடமிருந்து பாதுகாப்பு உட்பட மூன்று அமைச்சுக்களைப் பறிப்பதற்குக் குமாரதுங்கவின் சதிப்புரட்சி புதுடெல்லியின் மறைமுகமான அங்கீகாரத்தை அல்லது ஆகக்குறைந்தது அங்குள்ள இந்திய ஹைகமிஷனர்களின் அங்கீகாரத்தைக் கொண்டிருந்ததாகச் சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். இது இறுதியாக அரசாங்கத்தைக் கலைப்பதற்கு இட்டுச் சென்றது. அத்துடன், தேர்தல்களின்போது, கிழக்குத் தமிழர்களை நோக்கி வன்னித் தரப்பால் பாகுபாடு காட்டப்படுவதாகக் குறிப்பிட்டு எல்டிடிஈ அமைப்பிலிருந்து 2004 மார்ச்சில் முரளிதரன் என்னும் கேணல் கருணா பிரிந்து சென்றார். தப்பியோடிய முன்னாள் சகபாடிகள் இருவரைக் குறிப்பிட்டு, எல்டிடிஈ இந்தியாவிலிருந்து கருணா இயங்குவதாகவும் கிழக்கில் உள்ள பிள்ளையானுடன் தொடர்ச்சியாக தொடர்பைக் கொண்டிருப்பதாகவும் எல்டிடிஈ அமைப்பு குற்றஞ்சாட்டியது. சிக்கல்தன்மையைக் கொண்ட இரு அமைச்சர்களையும் அது குற்றஞ்சாட்டியிருந்தது.[65]

இந்தியாவில் பேச்சுவார்த்தைகளுக்கான பாலசிங்கத்தின் கோரிக்கைக்கான பதிலிறுப்பாக (2002 ஏப்ரல் 10), அதன் அரசியலமைப்பு நிபுணர்களைப் பரிமாறிக்கொள்வதற்கு மட்டுமே புதுடெல்லி தயாராக இருந்தது. கிழக்கு மாகாணத்தில் உயர்ந்தளவிலான சிக்கல் நிலைமைக்கு நேரடித் தொடர்பைக் கொண்டிருந்த சில அம்சங்களுக்கும் டார்ஜிலிங் மற்றும் லடாக் ஆகியவற்றுக்கும் அதிகாரத்தின் பரவலாக்கத்திற்கான கட்டமைப்புகள் தொடர்பில்... அனைத்து உதவியையும் நாமே முடிவுகட்ட வேண்டும் என அவர்கள் முன்வைத்தார்கள் எனப் பீரிஸ் தெரிவித்தார்.[66]

இந்தியாவின் பேச்சுவார்த்தைகளுக்காக எல்டிடிஈயினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு ஒரு மாதத்திற்குப் பின்னர், 2002 மே மாதத்திலிருந்து புலிகள்மீதான தடையைப் புதுடெல்லி நீடித்தது. 'எல்டிடிஈக்கு

65. 'கருணா இந்தியாவில்: முன்னாள் சகபாடிகள்', *தமிழ்நெட்*, 2005 டிசம்பர் 13.
66. பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பாராளுமன்றத்தில் உரை, ஏற்கனவே குறிப்பிடப்பட்டது, 'படிப்படியான அணுமுறை பயனுள்ளது', *டெயிலி மிரர்*, 2005 டிசம்பர் 16.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்நாடு தலைமைத்துவம் ஆதரவளிக்க முடியாவிட்டாலும், நாம் ஆகக்குறைந்தது அவர்கள் நடுநிலையாக இருக்க வேண்டும் என்பதையே எதிர்பார்க்கிறோம்' என எல்டிடிஈ கூறிய பின்னரே மத்திய அரசிடம் நீடிப்பை முதலமைச்சர் ஜெயலலிதா கோரினார்.

தொடக்கத்திலிருந்தே, 2006 மே சட்டசபைத் தேர்தல்களின்போது தமிழ்நாட்டின் ஆதரவைப் பெறுவதற்காக அதன் திட்டங்களை எல்டிடிஈ அமைப்பு ஏற்கனவே வரைந்திருந்தது. புலிகளின் நோக்கத்திற்கு ஆதரவளிப்பதற்கு அதிக மைலைச் செலுத்தும் நடைமுறையில் தமிழ்நாடு தற்போதுள்ளது. தனது இந்தியப் பயணத்தின்போது தென்னிந்திய வருகையில் ராஜபக்ஷவின் படுதோல்வி கவனிக்கத்தக்கதொன்றாகும். எல்டிடிஈ சார்பு கட்சிகளால் சென்னையில் தீவிரமாக்கப்பட்ட ராஜபக்ஷ எதிர்ப்பு சிங்கள ஆதிக்க எதிர்ப்பு அட்டூழியம் சுய-விளக்கத்தில் ஆனதாகும்.

இலங்கையுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையைக் கொண்டிருப்பதற்காக 2004 நடுப்பகுதிக்குள் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு முன்னணியைப் பணயம் வைப்பதற்கும் முன்னாள் பாரதீய ஜனதாக் கட்சி (பிஜேபி) அரசாங்கத்தின் திட்டங்களை வெறுப்பூட்டுவதற்கும் எல்டிடிஈ அமைப்பு முயன்றது.

இதே பிஜேபி நிர்வாகத்தின்போது, கொழும்புக்கு சின்ஹா பயணம் செய்ததுடன், 'சர்வதேச சமாதானத்திற்கும் பாதுகாப்புக்கும் உலகளாவிய பயங்கரவாதம் ஒரு பயமுறுத்தல் என்பதுடன், அரசியலாக (அல்லது) இனத்துவமாக இருந்தாலும் எக்காரணங்களாலும் அதை நியாயப்படுத்தப் பட முடியாது' எனக் குறிப்பிட்டார்.[67] பேச்சுவார்த்தைகளைப் பற்றி நம்பிக்கையற்று இருந்தாலும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் ஆதரவை சின்ஹா மீள் உறுதிப்படுத்தினார். ஆனால், ஒஸ்லோ பிரகடனமும் ஒஸ்லோ பத்திரிகை அறிக்கையும் இந்திய முன்னுணர்வுகளை மாற்றியதா? ஒஸ்லோ தடைத் தகர்ப்பை நெருக்கமாகப் பின்தொடர்ந்து 2002 டிசம்பர் 8 அன்று இந்திய வெளிநாட்டுச் செயலாளர் கன்வால் சிபல் கொழும்பில் வந்திறங்கினார். உள்ளூர் நடைமுறையில் நாம் நியாயப்படி சம்பந்தப்பட வேண்டும் என அவர் ஒத்துக்கொண்டபோதிலும், இந்தியாவின் விருப்புகளைச் 'சட்ட சிக்கல்கள்' மட்டுப்படுத்துவதாகக் குறிப்பிட்டு, சாக்குபோக்குகளை நிதானமாகத் தெரிவித்தார். தடை பற்றியும் எல்டிடிஈ தலைவர்கள் 'வேண்டப்படுகிறார்கள்' என்ற உண்மையையும் அவர் குறிப்பிட்டார்.[68]

67. யஷ்வந் சின்ஹா, இந்திய-இலங்கை இணை அறிக்கை, கொழும்பு, 2002 ஜுலை 12.

68. வி.எஸ்.சம்பந்தன், 'இலங்கையில் எமது விருப்புகள் மட்டுப்பட்டுள்ளதுன: சிபால்', இந்து, 2002 டிசம்பர் 9.



அடுத்த மாதத்தில், டெல்லியில் சிபலையும் ஏனையோரையும் கதிர்காமர் சந்தித்து, 'சமாதானத்திற்கான விலை அதிகக் கூடுதலானது' என்றும் 'ஏதாவது விலையில் சமாதானத்தை வாங்குவதற்கு' அரசாங்கம் விரும்பிய அதேவேளை, புலிகள் 'வெறுமனே நிபந்தனைகளையே விதிக்கின்றனர்' என்றும் பிரகடனப்படுத்தினார்.[69]

'ஒரு சில சந்தர்ப்பங்களில், இலங்கைமீது தீர்வொன்று திணிக்கப் படக் கூடாது என இந்தியா தெளிவுபடுத்தியதுடன், உள்நாட்டில் உருவாக்கப்பட்ட ஒன்றையே வற்புறுத்தியது. அடுத்த ஆறு வருடங்களுக்குத் தலைமைப் பதவியில் இருப்பதற்கு ஐக்கிய அமெரிக்கா சார்பிலான விக்ரமசிங்கவைத் தடுப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு 2005இல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னிலை ஜனாதிபதி அறிக்கையில் இந்த உணர்வுகள் எதிரொலித்தன'.

'மக்களுக்கான மேற்கோளின்றி, பலதரப்பட்ட சர்வதேச அரங்குகளில் உடன்படிக்கைகள் அடையப்பட்டன... இத்தகைய உடன்படிக்கைகளைத் திணிக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன... இத்தகைய தோல்விகளைத் தாக்குப்பிடிக்காமல் இன்னுமே ஆதரவு தெரிவிக்கும் சில ஆட்களும் உள்ளனர்' என அறிக்கைக் குறிப்பிடுகின்றது.[70]

இந்தியா பாரியதொரு வகிபங்கை ஆற்ற வேண்டும் என ராஜபக்ஷ விரும்பியிருக்கக்கூடும் என்பதுடன், பிரதமருக்கான பதவியில் அவருக்கு ஆதரவு வழங்கப்பட்ட நேரத்திலிருந்து, ஜனாதிபதிக்கான ஓட்டம்வரை அந்த எண்ணத்தைப் புதுடெல்லி அவருக்கு வழங்கியிருக்கக்கூடும். இத்தகையதொரு எண்ணத்தைக் குமாரதுங்கவுக்குப் பிஜேபி அரசாங்கம் வழங்கியிருந்தால், அது புரிந்துகொள்ளத்தக்கதாகும். ஆனால், எல்டிடிஈ சார்பிலான கட்சிகள்மீது அதன் தங்கியிருத்தலைக் குறிப்பிடுகையில் திட்டமிடுவதற்கான இடைவெளியைக் காங்கிரஸ் தலைமையிலான முன்னணி கொண்டிருக்கவில்லை.

'அவர்கள் தற்போது ஆடும் ஆட்டமே இந்தியாவின் வகிபங்காகும். அதனால்தான்நான் இந்தியாவுடன் கருத்துப் பரிமாறியுள்ளேன். அதன் சொந்த உள் அரசியலினாலேயே இந்தியாவின் வகிபங்கு வரையறுக்கப் படுகின்றது. மஹிந்தவின் ஆலோசனைகள் பற்றி எனக்குத் தெரியாது. அவர் வெறுமனே மனம்போன போக்கில் ஆலோசனைகளை வெளியிடுவதாகத் தோன்றுகின்றது' என விக்ரமசிங்க தெரிவித்தார்.[71]

69 அமித் போரா, 'ஏதாவது விலையில் சமாதானத்தை வாங்கக் கொழும்பு விரும்புகின்றது', இந்து, 2003 ஜனவரி 13.

70. மஹிந்த சிந்தனை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஜனாதிபதி அறிக்கை, 2005 அக்டோபர் 18.

71. ரணில் விக்ரமசிங்க, நேர்காணல், சண்டே டைம்ஸ், 2005 நவம்பர் 13.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இறுதியாக, தமது வகிபங்குகளை மீள ஆரம்பிப்பதில் நோர்வேயை இணைத்தலைமைத்துவ நாடுகள் உள்ளடக்குவதையிட்டு அது ஒரு பொருட்டாகக் கருதமாட்டாது எனச் சமரவீரவுக்குப் புதுடெல்லி தெளிவு படுத்தியது. யுத்தத்தை மீள ஆரம்பிக்கப்போவதாக எல்டிடிஈயின் மாவீரர் தின பயமுறுத்தலுக்கும் படை ஆளணியினர்மீது ஒரு தொடரான கிளேமோர் கண்ணிவெடித் தாக்குதலுக்கும் பின்னர் ராஜபக்ஷ அரசியல் குட்டிக்கரணம் அடிக்க வேண்டியிருந்தது.

சுனாமி பொறிமுறையை அங்கீகரிக்க இந்தியா தயங்கியதுடன், ஆரம்பத்தில் ஜனாதிபதியின் பயணத்தையும் தள்ளிப்போட்டது. குமாரதுங்கவின் இரண்டாம் முயற்சியில், பி-டோம்ஸ்க்கு அரை மனத்திலான அங்கீகாரத்தை வழங்குவதில் புதுடெல்லியுடன் அவர் வெற்றியீட்டினார்.[72] எனினும் பி-டோம்ஸை ஜேவிபி எதிர்த்ததுடன், அரசாங்கத்திலிருந்து வெளியேறியது (பி-டோம்ஸை ரத்துச் செய்வதற்கு ராஜபக்ஷவும் வாக்குறுதியளித்திருந்தார்).

'நீடிக்கக்கூடிய அரசியல் தீர்வு' ஒன்றுக்கு இட்டுச்செல்லும் 'பேச்சுவார்த்தைகளை முன்கூட்டியே மீள் ஆரம்பிப்பதற்கு' குமாரதுங்கவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் இணை அறிக்கையில் வலியுறுத்தி இருந்தனர்.[73]

பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான இந்தியாவின் அழைப்பு அதிகளவு அர்த்தத்தை அளிக்கவில்லை. பேச்சுவார்த்தைகளுக்கான புலிகளின் முன்நிபந்தனையான இடைக்கால தன்னாட்சி அதிகார சபை மீதான அடிப்படையிலான நேரடிப் பேச்சுவார்த்தைகளை ஜேவிபி எதிர்த்தது. பேச்சுவார்த்தையைக் கெடுப்பதற்காகவே இந்தியா செயல்பட்டது எனச் சிலர் குற்றஞ்சாட்டிய அதேவேளை, எல்டிடிஈ, ஏனையோரின்மீது குறிவைக்கவே புதுடெல்லி செயல்பட்டதாக ஏனையோர் கூறுகின்றனர்.

1990இல் இந்திய அமைதிப்படை வெளியேறும்முன், தமிழ்த் தேசிய இராணுவத்தை (ததேஇ) அமைப்பது பற்றி நிச்சயப்படுத்தியிருந்தது. இதை எல்டிடிஈ அழித்தொழித்தது. பதினாறு வருடங்கள் கழித்து (2006) பேச்சுவார்த்தைகளின் தருணத்தில், ஒரு வருடத்திற்குப் புலிகளை ஓட்டம் பிடிக்கச் செய்த ஆயுதபாணியிலான கருணா குழு, புலிகள் இயக்கத்தின் கடும் சினத்திற்கு முகம்கொடுப்பதற்கு சமநிலையில் உள்ளது.

கடலின் சில பகுதிகள்மீது கடல்புலிகள் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதையிட்டு, கண்காணிப்பாளர்கள் வாதத்திற்குக் கொண்டு வந்தனர் என்பதை இந்தியா உணர்ந்தபோது, திருப்புமுனை ஏற்பட்டது.

72. குமாரதுங்க மற்றும் டாக்டர் சிங், இணைப் பத்திரிகை அறிக்கை, டெல்லி, 2005 ஜூன் 3.
73. அதே நூலில்.



பிந்தைய சமாதான நடைமுறை 'வெற்றியடையாவிட்டால்'[74] இந்த 'திரிசங்கு நிலையையும் முரண்பாடுகளையும் கையாள்வதற்கு' 'சமாதான நடைமுறைக்கு ஆதரவாக விளங்குகின்ற இந்தியா உள்வர வேண்டியிருக்கும்' என தீட்சித் குறிப்பிட்டார். விவகாரங்களை நோர்வேயும், ஜப்பானும் நடத்திய விதத்தையிட்டு இந்தியா கோபமடைந்திருந்ததுடன், ஐக்கிய அமெரிக்காவுடன் ஆழமான மூலோபாய உறவு இருந்தபோதிலும், முந்தைய அச்சங்கள் மீள ஏற்பட்டிருக்கக்கூடும்.

இலங்கையில் இந்திய சம்பந்தத்தின் கடந்துபோன காலத்திற்கான மதிப்பாய்வொன்றில் 1987இன் உடன்படிக்கையின் 10ஆம் ஆண்டு நிறைவை ஞாபகப்படுத்துகையில், எண்பதுகளில் தமிழ்த் தீவிரவாதத்திற்கு மத்திய அரசாங்கத்தின் ஆதரவுக்கான இரு காரணங்களை வழங்கியது. தீட்சித் குறிப்பிட்ட காரணங்களில் ஒன்று வருமாறு:

> ஐக்கிய அமெரிக்காவுடனும் இஸ்ரேலுடனும் பாகிஸ்தானுடனும் ஜயவர்தனவின் உறுதியானதும் நீடிக்கப்பட்டதுமான இராணுவ மற்றும் புலனாய்வு ஒத்துழைப்பு இவற்றின் பிரசன்னங்கள் இந்தியாவுக்கு மூலோபாயப் பயமுறுத்தலை முன்வைக்கும் என்பதே மதிப்பீடாகும்... தமிழ்க் கலவரங்கள் இடம்பெற்றிருக்காவிட்டால், சிங்கள அரசாங்கத்தின் இராணுவ ஆற்றல் அளவைப் படிப்படியாக அதிகரிப்பதுடன், இலங்கையில் தொடர்ச்சியான பிரசன்னத்தை ஐக்கிய அமெரிக்கா, பாகிஸ்தான், மற்றும் இஸ்ரேல் ஆகியவற்றுக்கு வழங்குவதே ஜயவர்தன அரசாங்கத்தின் திட்டமாகும்.[75]

சமாதான நடைமுறையில் அதன் தொடர்பை ஐக்கிய அமெரிக்கா ஆழமாக்கியதுடன், உயர்பதவியிலான ஐக்கிய அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளின் வருகைகளுக்கு ஐக்கிய அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்பில் வளர்ச்சி இருந்தது. விமானப் படையில் உள்ள தமது உள்ளூர் சகபாடிகளின் தேவைகளை மதிப்பிடுவதற்கு உதவுமுகமாக, இலங்கையின் விமானத் தளங்களை இணைந்து அளவீடு செய்வதற்கு ஐக்கிய அமெரிக்க விமானப்படை நிபுணர்களின் அறிவித்தலுடன், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவைப் பதவி நீக்கியமை எதிர்பாராதவிதமாக நிகழ்ந்தது. ஐக்கிய அமெரிக்காவுக்கும் இலங்கையின் விமானப் படைக்கும் இடையிலான இந்த நீண்டகாலத் திட்டமிடப்பட்ட விடயப் பரிமாற்றம் பெருமளவு நடைமுறையிலான செய்திட்டங்களில் ஒன்றாகும் என ஐக்கிய அமெரிக்க பத்திரிகை வெளியீடு குறிப்பிட்டிருந்தது.[76]

74. ஜே.என். தீட்சித், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது.
75. கலாநிதி குமார் ரூபசிங்க, 'இலங்கையின் சமாதானத்திற்கான பேச்சுவார்த்தை, முயற்சிகள், தோல்விகள், மற்றும் படிப்பினைகள்', இன்டர்நேஷனல் அலேர்ட், லண்டன், 1998, பக்.34.
76. ஐக்கிய அமெரிக்கத் தூதுவராலயம், பத்திரிகை வெளியீடு, கொழும்பு, 2003 நவம்பர் 3.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருகோணமலையைச் சுற்றி எல்டிடிஈ பலப்படுத்தியிருந்தமையும் இடைக்கால தன்னாட்சி அதிகாரச் சபையும் (ஐஎஸ்ஜிஏ) அரசியல் கட்டுப்பாட்டைப் பறிப்பதற்கு அதிகார வெறிகொண்ட குமாரதுங்கவுக்கு ஒரு நல்ல சாக்குப்போக்கு எனச் சிலர் குறிப்பிடுகின்றனர். ஐக்கிய அமெரிக்காவுடன் அளப்பரிய இராணுவ ஒத்துழைப்பைத் தடுப்பதற்கு இந்தியா ஆர்வம் கொண்டிருந்தது.

இலங்கையின் துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் விமானப் பரப்பு ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்கு ஐக்கிய அமெரிக்காவை இயலச் செய்வதற்கான கையகப்படுத்தல், குறுக்குச் சேவைப்படுத்தல் உடன்படிக்கையொன்று (ஏசிஎஸ்ஏ), ஏசிஎஸ்ஏவை தள்ளிப்போடுவதற்கு இலங்கை வாக்குறுதி அளித்த பின்னர், பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை (பாஒஉ) ஒன்றுக்கு உடன்பட்டிருந்த வேளையில், திட்டமிடப்பட்டுக் கொண்டிருந்தது.

பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றைப் பின்தொடர்ந்து செல்வதற்காக இந்திய–இலங்கை உடன்படிக்கை செய்துகொள்ளப் பட்டு இரு வாரங்களின் பின்னர், அரசியலமைப்புக்கு அமைவாக ஐதேமு பாதுகாப்பு அமைச்சரைக் குமாரதுங்க பதவிநீக்கம் செய்த துடன், ஜனநாயகம் சாராத இந்நடவடிக்கையை முணுமுணுப்பு இன்றி இந்தியா அங்கீகரித்தது.

'இலங்கையின் அரசியலமைப்புக்கு யாவரும் கட்டுப்படுவார்கள் என்பதுடன், இதன் பிரகாரம் பின்தொடர்ந்து செல்வார்கள்' என வெளி விவகார அமைச்சர் யஷ்வந்த் சின்ஹா நம்பிக்கை கொண்டிருந்தார்.[77]

ஆனால், 'ஜனநாயக நிறுவனங்களுக்கு' மரியாதை அளிப்பதையே ஐக்கிய அமெரிக்காவும் ஜப்பானும் திரும்பத் திரும்ப கூறின. 'ஜனநாயக நிறுவனங்களின் பணிகளுக்கு மரியாதையளித்து, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்புகளையும் ஒன்றாகப் பணியாற்றும்படி' ஜப்பானின் பிரதம அமைச்சரவைச் செயலாளர் யசூவோ புக்குடா வலியுறுத்தினார்.[78]

பிரதமரின் முயற்சிகளை ஐக்கிய அமெரிக்கா ஆதரவளிப்பதாக ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் டபிள்யு. புஷ் தெளிவுபடுத்தினார். 'சமாதான நடைமுறைக்கும் ஜனநாயக நிறுவனங்களுக்கும் எமது பலமான ஆதரவை ஜனாதிபதி மீள்வலியுறுத்தினார்' என வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஸ்கொட் மக்லேலன் தெரிவித்தார்.[79]

77. அமித் போரா, 'இலங்கை தப்புவதற்கு ஒரே வழி பேச்சுவார்த்தை: இந்தியா', இந்து, 2003 நவம்பர் 6.

78. ஜப்பான் தூதுவராலயம், கொழும்பு, பத்திரிகை அறிக்கை, 2003 நவம்பர் 6.

79. 'இலங்கையில் சமாதான நடைமுறைக்குப் பலமான ஆதரவை ஐக்கிய அமெரிக்கா மீள் உறுதிப்படுத்துகிறது', ஐக்கிய அமெரிக்க பத்திரிகை, வெளியீடு, கொழும்பு, 2003 நவம்பர் 6.



வாஷிங்டனில் இருந்து தனது சமாதான நடைமுறைக்கு ஆதரவின் உறுதிமொழியை இலங்கைப் பிரதமர் பெற்றுக் கொண்டார் என இந்திய முன்னாள் ராஜதந்திரியும் அரசியல் ஆய்வாளருமான குல்திப் நய்யார் குறிப்பிட்டிருந்தார். 'தனது பக்கத்திற்குப் புதுடெல்லி ஏன் வெளிப்படை யாகவே வரவில்லை என்பது சூழ்நிலையின் வெறுமனே தப்பான புரிந் துணர்வாகும். அமெரிக்காவுக்குப் பயணமாவதற்கு முன் புதுடெல்லிக்கு விக்ரமசிங்க வந்திருந்தார்' என நய்யார் குறிப்பிட்டிருந்தார்.[80] புஷ்ஷைச் சந்திப்பதற்கு சில மணிநேரத்திற்கு முன்னரான சதிப்புரட்சி நடத்தப் பட்ட நேரத்தைச் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். விக்ரமசிங்கவுக்கு, இந்தியாவின் உள்வீட்டு மட்டுப்படுத்தல்கள் அவர்களை வெளியே வைத்திருந்த அதேவேளை, கவிழ்வதிலிருந்து தப்புவதற்காகக் கழுத்தைக் கொடுத்தாவது உறுதியாக இருப்பதற்கு ஐக்கிய அமெரிக்கா இணக்க மாக இருந்தது.

'சமாதான நடைமுறைமீது மறுதலையான தாக்கத்தினை' முன்னேற் றங்கள் 'கொண்டிருக்கக் கூடாது' என ஐநா செயலாளர் நாயகம் கோபி அனான் எச்சரிக்கைவிடுத்த[81] அதேவேளை, 'அந்த நடைமுறையை கஷ்டத்திற்குள்ளாக்கும் முன்னேற்றங்கள் அனுமதிக்கப்படக் கூடாது' என டோனி பிளேயர் எச்சரித்தார்.[82]

குமாரதுங்கவின் புதிய பாதுகாப்புச் செயலாளர் சிரில் ஹேரத் புதுடெல்லிக்கு பயணம் செய்து, பிராந்தியப் பாதுகாப்புக் காட்சித் தோற்றம், உலகளாவிய பயங்கரவாதத்திற்கு எதிரான சண்டை, இராணுவ ஒத்துழைப்பு மற்றும் பயிற்சி ஆகியனவற்றை முன்வைத்து கருத்துப் பரிமாறியதுடன், ஒரு மாதத்திற்குள் பாதுகாப்பு உடன்படிக்கையைக் கொண்டிருப்பதற்கான வாக்குறுதியை அளித்தார்.[83] அது புதிய ஐக்கிய முன்னேற்றகர முன்னணி அரசாங்கத்தின் கீழ் அன்றி, ஆனால், முன்னாள் பிஜேபி நிர்வாகத்தின் கீழ் சாத்தியப்பட்டிருக்கும்.

இத்தகையதொரு உடன்படிக்கையில் இந்தியா கையெழுத்திட மாட்டாது என மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் (எம்டிஎம்கே) பொதுச் செயலாளர் வைகோவுக்குப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் உறுதிமொழி அளித்திருந்தார். ஏதாவது பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை 'மோசமான நாசமேற்படுத்தும் பெருந் தவறு' ஆகும் என்றும் இலங்கைக்காக ஏதாவது இராணுவ உதவி இரு

80. குல்திப் நய்யார், கல்ஃப் நியூஸ், துபாய், 2003 நவம்பர் 8.

81. 'இலங்கை ஜனாதிபதியின் தீர்மானங்கள் சமாதான நடைமுறைக்குக் கேடு விளைவிக்காது எனச் செயலாளர் நாயகம் நம்பிக்கை', ஐக்கிய நாடுகள் தகவல் சேவைகள், நியூயார்க், 2003 நவம்பர் 5.

82. பிரிட்டிஷ் பிரதமரின் அறிக்கை, டவுனிங் ஸ்ரீட், லண்டன், 2003 நவம்பர் 4.

83. தி ஐலண்ட், 'இந்திய–இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம்மீது 'கரிசனை'யை எல்டிடிஈ வெளிப் படுத்துகின்றது', 2004 ஜனவரி 17.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பக்கங்களில் உள்ள தமிழர்கள்மீது சீர்படுத்த முடியாத காயங்களை விளைவிக்கும் என்றும் வைகோ தெரிவித்தார். பாதுகாப்பு உடன்படிக்கையொன்றை பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி நிராகரித்ததுடன், பலாலி விமான ஓடுபாதை மீள்நிர்மாணத்தின் அறிக்கைகளை விசாரிப்பதாக வாக்குறுதியளித்தார்.[84]

விமான ஓடுபாதையைப் பழுதுபார்ப்பதற்குப் பரிமாற்றமாகப் பலாலி விமான நிலையத்தைப் பயன்படுத்துவதற்கான பிரத்தியேகமான உரிமைகளை இந்தியாவுக்கு வழங்குவதற்குக் குமாரதுங்க மற்றும் விக்ரமசிங்க நிர்வாகங்கள் தயங்கின. ஆனால், 'பிராந்தியப் பாதுகாப்பு மற்றும் சமாதானம் தொடர்பாக உடன்படிக்கை ஒன்றுக்கு' ராஜபக்ஷ வாக்குறுதி அளித்தார்.[85]

ஜனாதிபதி ராஜபக்ஷ காலத்தின்போது, பெருமளவு இந்திய இராணுவ அதிகாரிகள் இலங்கைக்கு பயணம் செய்தனர். இவர்களில் லெப். ஜெனரல் பி.எஸ்.தக்கார், இந்தியக் கிழக்குக் கட்டளையைச் சேர்ந்த வைஸ் அட்மிரல் சுரேஷ் மெஹ்ந்தர், இந்திய விமானப்படைத் தலைவர் எஸ்.பி.தியாகி ஆகியோர் சிலராவர். ஐதேமு அரசாங்கம் பதவிநீக்கப்பட்ட பின்னர் 2004 பிப்ரவரியில், இந்தியக் கடற்படைத் தலைவர் அட்மிரல் மாதவேந்திரசிங் இலங்கைக்கு பயணம் செய்திருந்தார்.

சட்டபூர்வதன்மையை ஈட்டுவதற்கே நடைமுறையையும் பேச்சுவார்த்தைகளையும் எல்டிடிஈ பயன்படுத்துவதாக இந்தியா ஆரம்பத்திலிருந்து இறுதிவரை உணர்ந்தது. இந்த அச்சங்களைப் பாலசிங்கம் உறுதிப்படுத்துகின்றார்: 'பலதரப்பட்ட சமாதான நடைமுறைகளில் எல்டிடிஈ பங்கெடுத்துள்ளபோதிலும், இந்தப் பேச்சுவார்த்தைகளின் முதலாவது அமர்வு... குறிப்பிடத்தக்களவில் உறுத்தக்கூடியது. பிராந்திய அரங்கிலிருந்து சர்வதேச அரங்கொன்றுக்குப் பேச்சுவார்த்தையின் மேடை இடமாறிவிட்டது' என அவர் தெரிவித்தார்.[86]

தடையை நீக்கும்படி மேற்கத்தைய நாடுகளிடம் கோரிக்கை விடுத்து ஐந்து மாதங்களுக்குப் பின்னர், ஜெர்மனி, டுசெல்டோர்ப்பில் பாலசிங்கம், 'சர்வதேசச் சட்டபூர்வத்தைப் பெறுவதற்கும் எமது குறிக்கோளைச் சாதிப்பதற்கும் இராஜதந்திர நகர்வொன்றே தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தைகளாகும். எம்மைப் பயங்கரவாதிகள், தீவிரவாதிகள், ஆயுததாரிகள் என அழைத்த சர்வதேசச் சமுதாயம் எமக்கு அழைப்பு விடுக்கின்றது' எனத் தெரிவித்தார்.[87]

84. 'கொழும்பின் அடக்குமுறை அரசியல் ஆட்டத்தில் இந்தியா சீட்டாக இருக்க முடியாது–வைகோ', தமிழ்நெட், 2005 டிசம்பர் 13.
85. மஹிந்த சிந்தனை, ஏற்கனவே குறிப்பிடப்பட்டது.
86. அன்டன் பாலசிங்கம், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது .
87. அன்டன் பாலசிங்கம், டுசல்டோர்ப், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது.



நாட்டை நேர்வழியில் கொண்டு செல்வதற்கும் தமது நிலைகளை பலப்படுத்துவதற்கும் சர்வதேசச் சமுதாயத்தினதும் வெளிநாட்டினதும் உதவியுடன் அரசியல் தீர்வொன்றில் விக்ரமசிங்கவும் பின்னர் குமாரதுங்கவும் ஆர்வம்காட்டினர். எல்டிடிஈக்குச் சட்டபூர்வத் தன்மை சிறிதளவு முக்கியத்துவமாகவே விளங்கியது.

ராஜபக்ஷவின் இந்திய விஜயத்திற்கு முன்னதாக, நீண்ட அனுபவமுள்ள இந்திய–இலங்கை கண்காணிப்பாளரான நிருபமா சுப்பிரமணியம், 'சமாதானத்திற்கான இலங்கையின் தேடல் தொடர்பாக, அதனால் என்ன செய்ய முடியும் என்பது பற்றிப் புதுடெல்லி தெளிவாக இருப்பதாகத் தோன்றுகின்ற அதேவேளை, அது என்ன செய்யவேண்டும் என்பது குறித்துத் தெளிவு இல்லை' எனக் குறிப்பிட்டுள்ளார்.[88] 'இறங்க வேண்டும்' எனத் தீட்சித் பயமுறுத்தியதுடன் 'இணைய வாருங்கள்' என விக்ரமசிங்க வாக்குறுதி அளிக்க வேண்டியிருந்தது.

இந்திய ஹைகமிஷனர் நிருபமா சென் பற்றிச் *சண்டே லீடர்* குறிப்பிடுகையில், 'இந்தியாவுக்கான அதிக நேரடியான வகிபங்கு பற்றிச் சென்கூடப் பேசியுள்ளார்' எனத் தெரிவித்திருந்தது. பயணமொன்றின்போது விக்ரமசிங்கவுக்கு 'கதிர்காமர் முறைசாராரீதியில் முனைவை முன்வைத்தார்' என்றும் 'ஆலோசனைகளுடன் வருமாறு இலங்கை அரசாங்கத்தைப் பிந்தையவர் கோரிக்கை விடுத்திருந்தார்' என்றும் பத்திரிகை குறிப்பிட்டிருந்தது.[89]

ஆரம்பத்தில் கொழும்பில், கோபால் காந்தியுடன் ஒஸ்லோவில் தளத்தைக் கொண்ட சென் இடங்களைப் பேரம்பேசி மாற்றிக்கொண்டார். ஆனால், சச்சரவை உருவாக்கிய சென்னுக்கு ஐக்கிய நாடுகளில் உயர் பதவி வழங்கப்பட்டது.

இணை அனுசரணையாளரின் வகிபங்கு இந்தியா விரும்பும் ஒன்றல்ல. ஒரு காரணத்தைக் கூட்டாகப் பங்கிடும் இரு எண்ணங்கள் உள்ளன. இந்தியா இன்னொரு இணைத் தலைமை நாடாக இருந்து, அரசாங்கம், எல்டிடிஈ மற்றும் எதிர்க்கட்சியையும்கூடக் கையாள்வதற்கு நெம்புகோலியக்கத்தைக் கொண்டிருக்கும் என ஒன்று சுட்டிச் சொல்கின்றது. இந்தியாவின் குரலை இணைத் தலைமை நாடுகள் மூழ்கடிக்கும் என ஏனையவை அச்சமுறுகின்றன. இந்தியா சரிசம வலுவுடன் ஆதிக்கத்தைச் செலுத்த வேண்டும் என்ற இரண்டாவது எண்ணமானது கண்காணிப்புச் செயல்பணியில் வகிபங்கொன்றை இந்தியா ஆற்றுவதையிட்டு ஆர்வம் காட்டுகின்றது.

88. நிருபமா சுப்பிரமணியம், 'இந்தியாவும் இலங்கையும்: மிக அருகில் இருந்தும், மிகத் தூரத்தில்தான்' , ஃபிரண்ட்லைன், 2005 டிசம்பர்.
89. சுரணிமல, *சண்டே லீடர்*, 2004 மே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்கத்தைய சார்புப் போக்கை முன்னேற்றுவதற்கு முயன்ற இந்தியா, இலங்கையில் என்றுமே இல்லாதவாறு அதிகளவிலான வகிபங்கைச் சீனா ஆற்றுகின்றது என்பதை உணர்ந்துள்ளது. நுரைச்சோலை நிலக்கரி மின் கருத்திட்டத்திற்கு சீன அரசாங்கம் நிதிப்படுத்தியதுடன், பதவியின் அந்திமக் காலத்தில் இராஜங்க பயணத்தின்போது குமாரதுங்கவுக்கு அதிகளவு ஆதரவுக்கும் வாக்களித்திருந்தது. தனது தேர்தல் அறிக்கையிலும், பின்னர் பத்திரிகைக்கான நேரடிப் பேட்டியொன்றிலும் சீனாவைப் பற்றி ராஜபக்ஷ வெளிப்படையாகக் குறிப்பிட்டிருந்தார். அறிக்கையில் இந்தியாவுக்கு அடுத்ததாக சீனா குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தனது பதவி ஏற்பு உரையில் அவர் சீனாவை உதறித் தள்ளிவிட்டு, 'நாங்கள் ஆசியர்கள்... எமது ஆசிய நண்பர்களுடன் நெருக்கமான ஒத்துழைப்புடன் பணியாற்றவே விரும்புகிறேன்... எமது நாட்டுக்குப் பொருந்துகின்ற வெளிநாட்டுக் கொள்கையொன்றை நான் பின்பற்றுவேன்' என்று குறிப்பிட்டார். இது ஜேவிபியின் உத்தரவிலான சீனச் சார்பு வெளிநாட்டுக் கொள்கையா அல்லது ராஜபக்ஷ தானாகவே செய்த முன்னெடுப்பா?

இந்தியாவைப் போன்று சீனாவைச் சோதிக்கும் பொதுவான அக்கறையை ஐக்கிய அமெரிக்காவும் கொண்டுள்ளது. அடுத்த துணைப் பிரிவில், சீனாவும் இந்தியாவும் முன்னேற்றத்தை வழங்குகையில் தென் ஆசியாவில் ஐக்கிய அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை குறித்து நாம் கையாள்வோம்.

### சமாதான நடைமுறையில் ஐக்கிய அமெரிக்காவின் வகிபங்கு

இலங்கைப் பிரச்சினையில் ஐக்கிய அமெரிக்கா மூலோபாய அக்கறைகளை கொண்டுள்ளதா? அதன் கரைகளிலிருந்து வெகுதூரத்தில் உள்ள சிறிய நாடு இலங்கை; அமெரிக்கா மனிதாபிமான செயல்பாடுகளில் வானளாவிய அதிகாரம் கொண்டுள்ளதா? இக்கட்டுரையாசிரியரைப் படபடக்க வைக்கிறது. ஐந்து வருடங்களுக்கு இழுபட்டதும் பேச்சுவார்த்தைகளில் இருந்து எல்டிடிஈ வெளியேறிய பின்னரும் சமாதான நடைமுறையில் ஐக்கிய அமெரிக்காவால் எடுத்துக்காட்டப்பட்ட பொறுமை நம்பக்கூடிய தொன்றாகும்.

தீவகத் தேசத்தில் மூலோபாய அக்கறைகளை, விசேடமாக ஐக்கிய அமெரிக்கா யுத்தக் கப்பல்களுக்கும் விமானங்களுக்கும் வசதிகள் தொடர்பாக ஐக்கிய அமெரிக்கா கொண்டுள்ளதா என்ற அச்சங்களைச் சாந்தப்படுத்த ஆர்மிட்டேஜ் நாடி நின்றனர்.[90] 'ஏதாவது இடத்தில் வன்முறை மற்றும் சச்சரவு இருந்தால், அது ஏனைய இடங்களுக்கும் பரவலாம் என்பதே எமது மூலோபாய அக்கறையாகும். ஆகவே, இது தொடர்பாக, நாம் மூலோபாய அக்கறையொன்றைக் கொண்டுள்ளோம் என அவர் விளக்கமளித்தார்'.[91]

வாஷிங்டனின் ஏனைய அழுத்துகின்ற கரிசனைகள் இருந்தபோதிலும், இந்நடைமுறையை அந்தரங்கமாக அழுத்துவதற்கான காரணமாகச் சமாதானத்தின் உண்மையான சாத்தியமொன்றுக்கு அவர் காரணம் கற்பித்தார். அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்களுக்கும் எல்டிடிஈக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஐக்கிய அமெரிக்கா எப்பொழுதுமே ஆதரவளித்துள்ளதுடன், இத்தடவை அது மேலதிக மைல் ஒன்றையும் கடந்துள்ளது.

நோர்வேயின் இரு கட்சி அணுகுமுறையைப் போன்று, 'சமாதான நடைமுறைக்கு அர்ப்பணிப்பைத் தொடர்ந்துகொண்டிருப்பதற்கும் தேசிய இணக்கப்பாட்டில் சகல சாத்தியமான முயற்சியைச் செய்வதற்கும் இலங்கையின் சகல தரப்புகளையும்' ஐக்கிய அமெரிக்கா மூதவை *(செனேட்)* 'வலியுறுத்தியது'.[92] இரு கட்சித் தீர்மானத்தைக் குடியரசு செனேட் உறுப்பினர் ஜோன் மக்கெயின் மற்றும் ஜனநாயக மூதவை உறுப்பினர் ஜோசப் பீடென் ஜூனியல் ஆகியோர் இணைந்து அனுசரணை செய்தனர். ஆனால் 'தீவிரவாதக் குழுக்களுக்கு' நிதியளித்த ஜனநாயகம் சாராத வெளிநாட்டுச் சக்திகளைக் குறிப்பிட்ட இரகசியமான வரைவு ஒன்று சீனாவுக்கும் ஜேவிபிக்கும் வெளிப்படையான மேற்கோள் ஆகும். இந்த மேற்கோள்கள் பின்னர் நீக்கப்பட்டன.[93]

'சீனாவுக்குத் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் அதன் செல்வாக்கை ஐக்கிய அமெரிக்கா படிப்படியாக இழுக்கின்றது' என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இது 'பயங்கரவாதம் மீது விசாரமற்ற ஒடுங்கிய நோக்கு மற்றும் பல தரப்புகளுக்கு மேலாக இருதரப்பு உறவுகளை இடுவதற்கான மனோபாவம்' ஆகியவற்றின் காரணமாகும் என ஐக்கிய அமெரிக்க மற்றும் சீன ஆய்வாளர்களைக் குறிப்பிட்டு ஐபிஎஸ் அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.[94] பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தை ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய மூன்று நாடுகளும் ஆதரவளிப்பதுடன், அரசியல் ஸ்திரத்தன்மையை விரும்புகின்றன.

90. 'இலங்கையின் சமாதான நடைமுறையில் சம்பந்தப்படுவது இந்தியாவைச் சார்ந்தது' rediff.com, 2003 நவம்பர் 4.

91. அதே நூலில்.

92. ஐக்கிய அமெரிக்கா மூதவைத் தீர்மானம் தீர்மான எண் 324 2005 நவம்பர் 18 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

93. சம்பிகா லியனாராச்சி, 'சமாதானத்திற்காகச் செயல்படும்படி சகலத் தரப்புகளையும் ஐக்கிய அமெரிக்கா மூதவை தீர்மானம் வலியுறுத்துகிறது' , டெயிலி மிரர், 2005 நவம்பர் 16.

94. டிம் ஷொரொக், 'சீனாவுக்குத் தென்கிழக்காசியாவில் ஐக்கிய அமெரிக்கா பிடியை இழக்கின்றது', ஐபிஎஸ், 2005 டிசம்பர் 9.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐநா பாதுகாப்புச் சபையில் நிரந்தர ஆசனமொன்று ஜப்பானுக்கு அவசியமாகும். ஜப்பானின் கோரிக்கையை சீனா எதிர்த்த அதேவேளை, ஜப்பானையும் இந்தியாவையும் ஐக்கிய அமெரிக்கா ஆதரித்தது. ஆனால், தற்போது சந்தர்ப்பங்கள் உற்சாகமின்றி இருப்பதாகத் தோன்று கின்றன. ஐக்கிய அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான முக்கியமான அணுசக்திப் பேரம்கூட பயமுறுத்தப்பட்டுள்ளது.

ஐநா ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விதத்தில் அது விரைவிலேயே தட்டிச்சீராக்கப்படும் அல்லது மாற்றம் இருக்கும் என நான் நினைக்க வில்லை. இது நிகழக்கூடாது எனப் பிரிட்டனும் பிரான்சும் விரும்பு கின்றன. ஜப்பான் தற்போது பலவீனமடைந்துள்ளதுடன், ஒன்றுக்காக அழுத்தவில்லை. இந்திய ஆசனமொன்றைச் சீனா நிச்சயமாக எதிர்க்கும்' என கலாநிதி ஸ்டீபன் கோஹன் தெரிவித்தார்.[95]

'ஐக்கிய அமெரிக்காவுடன் இந்தியாவில் பாதுகாப்பு ஒழுங்குகள்' பற்றி விக்ரமசிங்க குறிப்பிடுகையில், 'தமது சொந்த ஒழுங்குகளைச் செய்வதே' நடுநிலை இயக்கத்தின் உறுப்பு நாடுகளின் போக்காகும் எனத் தெரிவித்தார்.[96] நடுநிலை இயக்கத்தை விக்ரமசிங்க புறந்தள்ளினார். இது கிரமமாக ஒன்று கூடுவதுடன், ஆனால், கடந்த இரு தசாப்தங்களின் போது சாத்தியமான முன்னெடுப்புகளைக் கொண்டுவரவில்லை' என அவர் தெரிவிக்கின்றார்.

'எனது கருத்துப்படி, இலங்கை அரசியல் மற்றும் பொருளாதார அக்கறைகளைக் கொண்டுள்ளது. எனது காலத்தில், ஐக்கிய அமெரிக்கா வுடன் எமக்குத் தொடர்பு இருந்தது. சமாதான நடைமுறைத் தொடர்பாக ஐக்கிய அமெரிக்காவுடன் நாம் தொடர்பைக் கொண்டிருந்தோம். எமது சமாதான நடைமுறையில் ஐக்கிய அமெரிக்கா அக்கறையைக் கொண்டிருந்ததுடன், இறுதியில் இணைத்தலைமை நாடாக விளங்கு கின்றது' என அவர் தெரிவித்தார்.[97] 'பல்–நார் உடன்படிக்கையை ரத்துச் செய்தமையும் தீர்வையற்ற சந்தையில் இலங்கை பிரவேசிப்பதற்கான அவசியமுமே இன்னொரு கரிசனையிலான பிரச்சினையாகும்... மூன்றாவதாக, மில்லேனியம் சவால் கணக்கின் ஊடாக இலங்கைக் கான உதவியை என்னால் பெறக்கூடியதாக இருந்தது. இது ஐக்கிய அமெரிக்காவில் ஆதரவு தேடுதலையும் அவசியப்படுத்தியது' என விக்ரமசிங்க தெரிவித்தார்.[98]

95. ஸ்டீபன் கோஹன், *தென் ஆசியாவில் ஐக்கிய அமெரிக்கக் கொள்கை, நேரடி இன்டர்நெட் உரையாடல், 2000 மார்ச் 21* www.brook.edu.comm/chat/cohen000321.htm.

96. ரணில் விக்ரமசிங்க, ஏற்கனவே குறிப்பிடப்பட்டது.

97. ரணில் விக்ரமசிங்க, *சண்டே டைம்ஸ்* பத்திரிகையுடன் நேர்முகங்காணல், 2003 நவம்பர் 13.

98. அதே நூலில்.



கட்சி மாறியதைத் தொடர்ந்து பிஏ அரசாங்கம் வீழ்ச்சியடைந்த பின்னர் அதிகாரத்திற்கு ஐதேமு பதவிக்கு வருவதற்கு முன் ஐக்கிய அமெரிக்க ராஜாங்க திணைக்களக் குறிப்பொன்று அதன் வெளிநாட்டு கொள்கையை இவ்வாறாக வரையறுக்கின்றது: 'இலங்கையை நோக்கிய ஐக்கிய அமெரிக்கக் கொள்கையானது அதன் சுதந்திரம், இறைமைத் துவம், மற்றும் மிதவாத நிலையிலான வெளிநாட்டுக் கொள்கை ஆகியவற்றுக்கான மரியாதையினாலும் நாட்டின் ஒற்றுமை, பிரதேச ஒருமைப்பாடு, மற்றும் ஜனநாயக நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான ஆதரவாலும் அதன் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தின் ஊக்குவிப்பினாலும் சித்திரிக்கப்படுகின்றது'.[99]

சுதந்திரத்திலிருந்து 2001 நவம்பர் வரை இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்க உதவியின் மொத்தத் தொகை 1.63 பில்லியன் டாலர்களாகும். ஆனால், டோக்கியோ நன்கொடையாளர் மகாநாட்டின் பின்னர் ஆர்மிட்டேஜ் வெளிப்படுத்தல் ஒன்றைச் செய்தார்: 'பெரிதுமே இருபது வருடங்களுக்கு இழுபட்டுக்கொண்டிருக்கும் தொல்லைப்படுத்துவதும் தலைவலியிலானதுமான யுத்தத்தின் காரணமாக, எமது உதவித் திட்டத்தை நிறுத்துவது பற்றி சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் ஐக்கிய அமெரிக்கா எண்ணிக்கொண்டிருந்தது...[100] இது 1988 மற்றும் 1998 ஆகிய ஆண்டுவாக்கிலாகும்.

'யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண முயற்சிகள்மீது இலங்கைக்கான உதவித்திட்டத்தை மீள் நோக்குமாறும் இடம்பெயர்ந்த மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவையை நிறைவேற்றுவதற்கு உதவி வரவுசெலவுத் திட்டத்தை அதிகரிக்குமாறும்' 2001இல் ஐக்கிய அமெரிக்காவை ரெஃப்யூஜீஸ் இன்டர்நேஷனல் என்ற நிறுவனம் வலியுறுத்தியிருந்தது.[101] நாம் மீள்மதிப்பீடு செய்ததுடன், மாபெரும் சமிக்ஞையாக இலங்கை விளங்கமுடியும் என நாம் நினைத்தோம்... நாம் தற்போது நீண்டகாலம் காத்திருக்க வேண்டும் என ஆர்மிட்டேஜ் தெரிவித்தார்.[102]

தென் ஆசியாவில் ஐக்கிய அமெரிக்கக் கொள்கையை எது இயக்கு கிறது என்பது குறித்து ஸ்கேபர் பேசுகையில், 'பயங்கரவாதம் மீதான யுத்தம் ஒரு முக்கியக் காரணியாகும். ஒரு புதிய தொகுதியிலான உறவு களை ஐக்கிய அமெரிக்கா கட்டுவதற்கு அவசியமாக விளங்குகின்ற ஒரு

99. ஐக்கிய அமெரிக்கா ராஜாங்கத் திணைக்களப் பின்னணிக் குறிப்பு, 2001 அக்டோபர், www.state.gov/r/pa/ei/bgn/5249.htm.

100. ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ், டோக்கியோ மகாநாட்டின் பின்னர் நேர்முகங்காணல், ஜப்பானின் டிபிஎஸ் டிவி 2003 ஜூன் 10.

101. ரெஃப்யூஜீஸ் இன்டர்நேஷனல் இணையதளம்.

102. ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ், நேர்காணல், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதிய உலக அதிகாரக் கட்டமைப்பு தோன்றுகின்றது என்ற வாஷிங்டனின் உணர்வே, மற்றதாகும்'.[103] பொருளாதார மற்றும் இராணுவ சக்தியில் சீனா உயர்வடைகின்றது. சீனாவின் உயர்ச்சி... ஐக்கிய அமெரிக்காவுக்கு ஆகக்குறைந்தது தொக்கிநிற்கின்ற சவாலைப் பிரதிநிதிப்படுத்துகின்றது' என்ற ஸ்கேபர், 2001 முதல் உறவுகள் 'நியாயமான அளவில் நல்லது' எனக் குறிப்பிட்டதுடன், மேற்கத்தைய பசிபிக் பிராந்தியத்தில் பாரம்பரியரீதியில் பலமான ஐக்கிய அமெரிக்காவின் பிரச்சன்னத்திற்கு, இத்தருணத்தில் ஏதாவது எதிர்ப்பை சீனா கொண்டிருக்கமாட்டாது எனத் தோன்றுகின்றது எனக் குறிப்பிட்டார்.[104]

'இந்தியாவும் உயர்ச்சி அடைகின்றது. ஆனால், இந்தப் புதுமையை ஐக்கிய அமெரிக்கா பெரிதுமே வித்தியாசமாகக் கருதுகின்றது. கடந்த 15 வருடங்களில், ஐக்கிய அமெரிக்கா–இந்திய உறவுகளில் புரட்சியொன்று இருந்துள்ளது' என ஸ்கேபர் தெரிவித்தார். ஐக்கிய அமெரிக்காவின் மிகவும் முக்கியமான மேலதிக – பிராந்தியச் சக்தியாக இந்தியா வந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.[105]

'சீனா உயர்ச்சியடைகின்றது என்ற உண்மை கொரியாவை ஆழமான தொந்தரவுக்குள் தள்ளுகின்றது. ஜப்பான் மந்தநிலையொன்றில் உள்ளது. இந்தியா பிரிவினைவாதப் பிரச்சினைகளால் வாரி இழுக்கப்படுகின்றது. எல்லாமே ஒரு நேரத்தில் இடம்பெறுவதால், இந்தியாவுடன் ஒரு சீரியதும் மிக நவீனமயத்துவமானதுமான மூலோபாய உறவொன்றை விருத்திசெய்வதற்கு ஐக்கிய அமெரிக்கா உறுதியான புவி அரசியல் காரணங்களைக் கொண்டுள்ளது என்பதைச் சுட்டிச் சொல்கின்றது'.[106]

'புஷ்ஷுக்கு ஆதரவு தெரிவிக்கும் கொயிசூமியின் பலமான வெளிக்காட்டல், எதிரெதிர்மாறாகவும் ஆசியாவில் அதன் தசைநாரை வளைப்பதற்கு ஐக்கிய அமெரிக்காவுக்கு முக்கிய வகிபங்கை ஆற்றுகின்றது. சீனாவினதும் இந்தியாவினதும் உயர்ச்சியடையும் அதிகாரம் இரு நாடுகளினாலும் எச்சரிக்கையுடன் கவனம் செலுத்தப்படுகின்றது' எனக் குறிப்பிடுகிறது 2005 ஐபிஎஸ் அறிக்கை.[107] இரு தலைவர்களுக்கு இடையில் கொயோட்டாவில் நடைபெற்ற உச்சி மகாநாடு... ஆசியாவில் பலமானதொரு ஜப்பான் – ஐக்கிய அமெரிக்கா பிரசன்னத்திற்கான மேடையை உருவாக்கியுள்ளது' என ஆய்வாளரும் நூலாசிரியருமான ஹருமி அரிமாவை குறிப்பிட்டு, ஐபிஎஸ் தெரிவித்தது.

103. டெரஸிடா ஸ்கேபர், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது.

104. அதே நூலில்.

105. அதே நூலில்.

106. அதே நூலில்.

107. சுவேந்திரினி கக்குச்சி, ஆசிய விவகாரங்களைப் புதிய ஜப்பான் ஐக்கிய அமெரிக்க உறவுகள் செய்வதற்கு அல்லது பழுதுபடுத்துவதற்கு அமைந்துள்ளது, ஐபிஎஸ் 2005 நவம்பர் 27.



'இலங்கையை நோக்கி ஐக்கிய அமெரிக்கக் கொள்கை எங்குப் பொருந்துகின்றது?' 'இலங்கையில் செயல்பாட்டில் உள்ள பிரதான ஐக்கிய அமெரிக்கா அக்கறையானது தென் ஆசியாவினதும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தினதும் சமாதானத்திற்கு இன மோதல் முன்வைத்துள்ள அபாயமேயாகும்' என ஸ்கேபர் குறிப்பிடுகின்றார்.[108]

இலங்கையின் தலைவர்களுக்குப் பாதுகாப்பையும் வசதிகளையும் பராமரிப்பதற்காகப் பணிக்கப்பட்டுள்ள தாபனங்களுக்கான ஆலோசனை, மற்றும் 'பயங்கரவாதத்திற்கு எதிரான உதவி' ஆகியன உட்பட 1990களின் நடுப்பகுதியிலும் அதற்கு அப்பாலும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான 'இராணுவ ஒத்துழைப்பு' படிப்படியாக மீள ஆரம்பிக்கப்பட்டமையை ஸ்கேபர் குறிப்பிடுகின்றார்.[109] இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஆழமாக ஈடுபடுதலுக்கும் அதன் 'உயர்வான புறவரை' ஆதரவுக்குமான நான்கு பிரதான காரணங்களை ஸ்கேபர் வழங்குகின்றார்.

செப்டம்பர் 11இன் பின்னர், 'இலங்கையின் இப்புதுமையை (பயங்கரவாதம்) கொண்டு வருவதில் அக்கறை' ஒன்று இருந்ததுடன், இரண்டாவதாக, 'தமது முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக சர்வதேச ஆதரவு தேவை என்பதைக் கண்டறிந்த நோர்வே அனுசரணையாளர்கள், நடைமுறையை நிலையாக வைத்திருக்குமுகமாக அதன் தொடர்பைத் துரிதப்படுத்துமாறு வேண்டுகோள்விடுத்து, வாஷிங்டனுக்குக் கட்டாயப்படுத்தும் விடயத்தைச் செய்தது'.[110] 'வெற்றியின் உண்மையான சாத்தியம் இருந்தது' என்பதே ஸ்கேபரின் இறுதியானதும் குறிப்பிடத்தக்கதுமான காரணமாகும்.[111]

மூன்றாம் காரணமாக 'ஐக்கிய அமெரிக்க–இந்திய உறவையும் ஐக்கிய அமெரிக்க மற்றும் இந்திய அக்கறைகளுக்கு இடையிலான அதிகரித்துவரும் ஒன்றின் மீது ஒன்று படிந்திருத்தலையும்' ஸ்கேபர் குறிப்பிடுவதுடன், 'ஐக்கிய அமெரிக்காவின் வகிபங்குபற்றி இதே தன்னிச்சையிலான சந்தேகத்தை இந்தியா இனி மேலும் கொண்டிருக்கவில்லை' எனவும் குறிப்பிடுகின்றார்.[112] பாரிய அளவிலான சம்பந்தத்திற்கு ஐக்கிய அமெரிக்காவுக்குக் காரணங்கள் நிறையவே உள்ளன.

ஐக்கிய அமெரிக்காவில் குடியரசுக் கட்சி ஆட்சிபீடத்தில் இருந்தமை ஐதேமுயின் அதிர்ஷ்டமேயாகும். மரபுரிமை மன்றத்தின் உறுப்பினராக மொரகொட விளங்கியதுடன், இதையே 'கன்சர்வேட்டிவ்' குடியரசுக் கட்சியும் சார்ந்திருந்தது. உண்மையில், மன்றத்தால் விருந்தோம்பப்

108. டெரஸிடா ஸ்கேபர், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது.

109. அதே நூலில்.

110. அதே நூலில்.

111. அதே நூலில்.

112. அதே நூலில்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்ட வட்டமேசை நிகழ்ச்சியொன்றில் விக்ரமசிங்க கலந்து கொண்டார். வாஷிங்டனில் தூதுவர் திவிந்த சுபசிங்கவின் செயல்திறனான வலைப் பின்னலும் ஐக்கிய அமெரிக்கா தாபனத்தைக் கையாளக்கூடிய மொரகொடவின் திறமையும் (அங்குப் படித்ததால்) உதவின. 2002 ஜூலையில் புஷ்ஷுடனான விக்ரமசிங்கவின் சந்திப்பு என்றுமே இல்லாத தொடர்புக்காக அரங்கை அமைத்துக் கொடுத்தது. அவர் ராஜாங்க செயலாளர் கொலின் பவல், ராஜாங்க பிரதிச்செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் கொன்டோலீஸா ரைஸ், மற்றும் ஐக்கிய அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி ரொபார்ட் ஸொலிக் ஆகியோரைச் சந்தித்ததுடன், ஐக்கிய அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் சர்வதேச உறவுகள்மீதான குழுவுக்கும் ஐக்கிய அமெரிக்கா தேவையின் வெளிநாட்டு உறவுகள்மீதான குழுவுக்கும் சுருக்கமாக விளக்கமளித்தார்.

ஐக்கிய அமெரிக்காவின் வரலாற்றையும் அரசியலையும் பற்றிய விக்ரமசிங்கவின் அறிவையிட்டு ஐக்கிய அமெரிக்கா அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்ததாகச் சில அவதானிகள் தெரிவிக்கின்றனர். மொரகொட வாலும் ஸொல்லிக்கினாலும் வர்த்தக, முதலீட்டு வரைத்திட்ட உடன் படிக்கையொன்று கையெழுத்திடப்பட்டது. பல்தரப்பு நன்கொடை முகவராண்மைகளின் பாரிய சம்பந்தத்திற்கு வழிசமைக்குமுகமாக உலக வங்கித் தலைவர் ஜேம்ஸ் ஃபுல்பென்டென் மற்றும் சர்வதேச நாணயச் சபைப் பணிப்பாளர் ஹோர்ஸ்ட் கொயலர் ஆகியோருடன் விக்ரமசிங்க பேச்சுவார்த்தைகளை நடத்தினார். பெருமளவு பொருளாதாரரீதியில் அனுகூலமளிக்கும் உடன்படிக்கைகள் கையெழுத்திடப்பட்டன. கன்குனில் (அக்டோபரில் டபிள்யூடிஓ கூட்டத்தில்) இந்திய வகித்த உறுதி யான வகிபங்குக்காக ஐக்கிய அமெரிக்கா நன்றிக்கடன் செலுத்தியது.[113]

சுனாமியின் பின்னர் உத்தியோகபூர்வமாகப் பவல் இலங்கைக்கு பயணம் செய்தார். 2004 நவம்பரில் இரண்டாம் பயணத்தை ஆர்மிட்டேஜ் ரத்துச் செய்தார். 2006 ஜனவரியில் அரசிய விவகாரப் பிரதிச் செயலாளர் ரிச்சர்ட் பேர்ன்ஸ் வருகை தந்தார். அதேவேளை, தென் ஆசியாவுக்கான ராஜாங்க உதவிச் செயலாளர் கிறிஸ்டீனா ரொக்கா மூன்று பயணங்களை மேற்கொண்டார். 2002 ஆகஸ்டில் பிரதி வர்த்தக பிரதிநிதி ஜோன் ஹன்ட்ஸ்மன் மற்றும் வர்த்தக உதவிச் செயலாளர் வில்லியம் லாஷ் ஆகியோர் இலங்கைக்கு பயணம் செய்தனர். 2004இலும், 2005இலும் தேசியப் பாதுகாப்புச் சபையின் தென் ஆசியாவுக்கான முன்னாள் பணிப்பாளரும் தென் ஆசிய விவகாரங்களுக்கான தற்போதைய ராஜாங்கப் பிரதான பிரதி உதவிச் செயலாளருமான டொனல்ட் எ காம்ப் இலங்கைக்கு பயணம் செய்தார்.

113. ஐக்கிய அமெரிக்கத் தூதுவராலய அறிக்கை, 2003 நவம்பர் 06.



2004 மார்ச்சில் ஜப்பானுக்கான ஐக்கிய அமெரிக்கா தூதுவரின் முன்னாள் மூத்த ஆலோசகரும் தென் ஆசிய விவகாரங்களுக்கான தற்போதைய ராஜாங்கப் பிரதி உதவிச் செயலாளருமான டோக்கல் எல் பட்டர்டன், ஜனாதிபதிக்கான விசேட உதவியாளரும் தேசிய பாதுகாப்புப் சபையில் ஆசிய விவகாரங்களுக்கான சிரேஷ்ட பணிப் பாளரும் பயணம் செய்தனர். அவர் ஏற்கனவே தேசியப் பாதுகாப்பு சபைப் பணியாளர்மீதான ஆசிய விவகாரங்களின் பணிப்பாளராகவும் சேவையாற்றினார். சர்வதேசப் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பாதுகாப்பு உதவிச் செயலாளரின் அலுவலகத்தில் ஜப்பானுக்கான மூத்த பணிப்பாளராகவும் பணியாற்றினார். 2004 பிப்ரவரியில், ஐக்கிய அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்திற்கான தென் ஆசிய விவகாரங்கள் பணியகத்தின் பிராந்திய விவகாரங்கள் அலுவலகத்தின் பணிப்பாளர் ஜோன் ஸ்லோஸர் பயணம் செய்தார். 2004 மார்ச்சில் இங்குள்ள பலதரப்பட்ட விமானப்படைத் தளங்களுக்குக் குவாம், அன்டர்சன் விமானப்படைத் தளத்தின் தளபதி மேஜர் ஜெனரல் டெனிஸ் ஆர் லார்சன் பயணம் செய்தார். அவர் தென்மேற்குப் பசுபிக் மற்றும் இந்து சமுத்திரப் பகுதிகளில் விமானச் செயல்பாடுகளைத் திட்டமிட்டு, வழிகாட்டுவதுடன், ஆறு தாபனங்களையும் ஒரே வரிசையில் நிறுத்தும் 613ஆம் அவசரகாலப் பதிலிறுப்புக் குழுவையும் மேற்பார்வை செய்கின்றார். மேலதிகமாக நிலையியல் இணைச்செயலணித் தளபதி யான குறித்தொதுக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்கப் பசுபிக் கட்டளையின் தளபதி ஜெனரல் லார்சனும் வருகை தந்தார்.

2004 செப்டம்பரில், பயங்கரவாதத்திற்கு எதிரான ஐக்கிய அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள அலுவலகத்தின் தலைவர் ஜேகொஃபர் பிளாக் கொழும்புக்கு பயணம் செய்தார். சர்வதேசப் பயங்கரவாதச் சம்பவங் களுக்கான பதிலிறுப்புகளை அவரது அலுவலகம் ஒருங்கிணைக் கின்றது. சுனாமிக்குப் பின் சில நாட்களில் இலங்கை இணைந்த ஆதரவுக் குழுவின் தளபதி பிரிகேடியர் ஜெனரல் பிராங்க் எல்பன்டர் (ஐக்கிய அமெரிக்க இராணுவத்தின் மனிதாபிமான உதவிச் செயல்பாடுகள்) இங்கு நிவாரண முயற்சிகளையிட்டுக் கருத்துப் பரிமாறுவதற்கு 2005 ஜனவரியில் பயணம் செய்தார்.

அரசியல், பாதுகாப்பு மற்றும் உட்கட்டமைப்புச் சூழல்கள் ஆகியவற்றை ஆய்வதற்கும் இங்குச் செயல்பாடுகளுக்குச் சாத்தியமான திரும்புதலை மதிப்பிடுவதற்கும் 2003 செப்டம்பரில் ஐரோப்பா, மத்தியதர நாடுகள், மற்றும் ஆசியா ஆகியவற்றுக்கான செயல்பாடு களின் தலைவர் கலாநிதி ரொபர்ட் ரீட் அவர்களினால் தலைமைதாங்கப் பட்ட ஐக்கிய அமெரிக்க சமாதானப் பட்டாளம் ஒன்று வந்திறங்கியது.[114]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈராக்மீதான ஐக்கிய அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு விக்ரமசிங்க ஆதரவளித்ததுடன், வாஷிங்டனிலிருந்து பெருமளவு ஆதரவைத் தனதாக்கிக் கொண்டார். எந்த நாட்டினதும் ஆதரவை ஐக்கிய அமெரிக்க நம்பிக்கையற்ற நிலையில் கணக்கிட்டுக்கொண்டிருந்தது. பேச்சுவார்த்தைகளை எல்டிடிஈ தாமதப்படுத்தியபோது, அவசியப்பட்டால் தனது நாடு அழுத்தத்தைப் பயன்படுத்தத் தயங்காது எனக் கூறிப் புலிகள் இயக்கத்தை ஆர்மிட்டேஜ் பயமுறுத்தினார்.[115]

மீண்டும் வெளிநாட்டு அமைச்சர் சமரவீரவின் பயணத்திற்குப் பின்னர், 2006 பிப்ரவரி நடுப்பகுதியில் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான இணக்கப்பாட்டிலான இடமாக ஜெனிவாவையிட்டு எல்டிடிஈ உடன்பட்டது. செயலாளர் ரைஸ் ஒரு பணிப்புரையை விடுத்ததுடன், பலப்படுத்தப்பட்ட இலங்கை இராணுவத்திற்கு எல்டிடிஈ முகங்கொடுக்க வேண்டியிருக்கும் என்ற கடுமையான அறிக்கையுடன் பேர்ன்ஸ் அதற்குக் கட்டுப்பட்டார். பேச்சுவார்த்தைகள் தொடர்பாகப் பாரிய தடை தகர்ப்பு இல்லாதபோதிலும், சட்டத்தினதும் ஒழுங்கினதும் சீர்குலைவு தணிக்கப்பட்டது. இறுதியாக 2002 செப்டம்பரில் ஆரம்பப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமானதுடன், சர்வதேசத்தின், குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் ஊக்கமளிப்பினை தூண்டக்கூடியதாக மிகவும் உறுதியானதன்மையில் ஆரம்ப அமர்வு முடிவடைந்தது. 'இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டைப் பேணுகின்ற அதேவேளை... மோதலுக்கான நிரந்தர முடிவுக்குப் பேச்சுவார்த்தையிலான நடைமுறைக்குக் கொண்டுச் செல்லும் என நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்... விரும்பத்தக்க விளைவொன்றுக்கான சாதகமான நிலைமைகளை (நாம்) உணர்கின்றோம்' என ஐக்கிய அமெரிக்க அறிக்கையொன்று தெரிவித்தது.[116]

பேச்சுகளின் விளைவுமீது ஆர்மிட்டேஜுக்கு சுருக்கமாக விளக்குவதற்காகப் பாங்கொக்கிலிருந்து வாஷிங்டனுக்கு மொரகொட பறந்ததுடன், பின்னர் லண்டனுக்கும் பறந்தார். 'சர்வதேச மனிதாபிமான உதவிக்கான தேவைகளுக்கு இரு அதிகாரிகளும் விசேடக் கவனத்தைச் செலுத்தியதுடன், இலங்கையின் மீள்நிர்மாணத்திற்கு ஆதரவாக நன்கொடையாளரின் மகாநாடொன்றின் சாத்தியத்தையிட்டுக் கருத்துப் பரிமாறினர்' என ராஜாங்கத் திணைக்கள வெளியீடு ஒன்று தெரிவித்தது.[117]

114. 'இலங்கையில் சமாதான வியூகங்கள்', ஐக்கிய அமெரிக்கத் தூதுவராலயம், கொழும்பு, பத்திரிகை அறிக்கை, 2003 செப்டம்பர் 6.

115. ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ் இலங்கைக்கான பயணத்தின்போது ஊடகத்திற்கான கருத்துகளில், 2002 ஓகஸ்ட 21–22.

116. ஐக்கிய அமெரிக்க அறிக்கை, கொழும்பு, 2002 செப்டம்பர் 13.

117. ஐக்கிய அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம், பத்திரிகை அறிக்கை, 2002 செப்டம்பர் 20.



'இந்த மகாநாட்டில் இன்று எனது பிரசன்னம் இலங்கையின் மீள்நிருமாணத்தில் தீவிரமானப் பங்கெடுப்பாளராக விளங்குவதற்கு எனது நாடு தயார்நிலையில் நிற்கின்றது என்பதற்கான தெளிவான சமிக்ஞையாகும்...' என ஒஸ்லோவில் ஆர்மிட்டேஜ் தெரிவித்தார்.[118] 'அரசியல் தீர்வுக்கு அர்ப்பணிப்பொன்றை எல்டிடிஈ செய்துள்ளது; சமாதான வழிவகைகள் மூலம் இந்த மோதலை இணக்குவதற்கு அது உடன்பட்டுள்ளது என்பதையிட்டு ஐக்கிய அமெரிக்கா அளப்பரிய விதத்தில் ஊக்கமடைகின்றது. மேலும் ஒரு படி முன்னேறி, இந்த அர்ப்பணிப்புடன் சேர்த்துக் கொள்வதற்கு பயங்கரவாதத்தையும் வன்முறையையும் பகிரங்கமாகத் துறந்துவிடுமாறு நாம் எல்டிடிஈயை வலியுறுத்துகின்றோம்' என ஆர்மிட்டேஜ் தெரிவித்தார்.[119] ஒஸ்லோவில் தடைதகர்ப்பைத் தொடர்ந்து, ஐக்கியப்படுத்தப்பட்ட இலங்கையினுள் சமஷ்டிக் கட்டமைப்பொன்றை தாபிப்பதற்கு உடன்படுவதன் மூலம் அரசியல் பிரச்சினைகளையிட்டுக் கருத்துப் பரிமாறுவதில் இருதரப்புகளும் முன்னேற்றத்தை அடைந்துள்ளன' என ஐக்கிய அமெரிக்க தூதுவராலயம் குறிப்பிட்டிருந்தது.[120]

2003 ஏப்ரலில், 'சமாதானத்தின் இயங்குவிசையின்' ஆதரவுக்கு அழைப்புவிடுப்பதன் மூலம் ராஜாங்கத் திணைக்களத்தில் இலங்கை மீதான சர்வதேச மகாநாடொன்றை (21 நாடுகளும் 16 சர்வதேச முகவராண்மைகளும் பங்கெடுத்தன) ஆர்மிட்டேஜ் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.[121] 'சமாதானத்தின் இந்த இயங்குவிசைக்கு நிறுத்த முடியாத அழுத்தத்தை சர்வதேச ஆதரவு சேர்த்துக்கொள்ள முடியும்' என அவர் குறிப்பிட்டார்.[122] 'நல்லெண்ணத்தைக் கொண்ட தேசங்கள் ஒன்றாக இணைந்து, பங்காளிகளாகப் பணியாற்றும்போது... அதிகளவு சாத்தியமானது என்பதைக் காட்டுவதற்கு இது ஒரு வாய்ப்பாகும்' என ஆர்மிட்டேஜ் தெரிவித்தார்.[123] 'சட்டபூர்வமானதொரு அரசியல் தாபனமாக எல்டிடிஈக்கான எதிர்காலத்தை ஐக்கிய அமெரிக்கா காண முடியும்' எனக் குறிப்பிட்ட ஆர்மிட்டேஜ், 'தமக்குச் சூட்டப்பட்டுள்ள அவப்பெயரிலிருந்து நீங்கிக்கொள்வதென அவர் கருதினால், சொல்லிலும் செயலிலும் சந்தேகத்திற்கிடமின்றிப் பயங்கரவாதத்தைத் துறக்கும்படி' வலியுறுத்தினார்.[124]

118. ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ், உரை, ஒஸ்லோ நன்கொடையாளர் மகாநாடு, 2005 நவம்பர் 25.

119. அதே நூலில்.

120. ஐக்கிய அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம், பத்திரிகை வெளியீடு, 2002 டிசம்பர் 5.

121. டோக்கியோவுக்கு முற்பட்ட இலங்கைக் கருத்தரங்கு, 2003 ஏப்ரல் 14.

122. அதே நூலில்.

123. அதே நூலில்.

124. அதே நூலில்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாஷிங்டன் மகாநாட்டுக்குப் பத்து நாட்களுக்குப் பின்னர், பேச்சுவார்த்தைகளில் அது கைவிடப்பட்டுள்ளதாக வாதாடியும் வடக்கிலும் கிழக்கிலும் அபிவிருத்தியைச் செயல்படுத்துவதற்குத் தவறியதைக் குறிப்பிட்டும் எல்டிடிஈ பேச்சுவார்த்தைகளில் இருந்து வெளியேறியது. நோக்கத்திற்காக ஒஸ்லோவில் ஏற்கனவே 624 கருத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டும், 70 மில்லியன் டாலர்கள் வாக்களிக்கப்பட்டும் இருந்தபோதிலும் இது இடம்பெற்றுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக, சிரானின் பணிப்பாளர் எல்டிடிஈ நியமத்தர் ஆவார்.

தீவகம் பூராவிலும் சமாதானத்தின் பிரதிபலன்களை மேம்படுத்துவதற்கு இடைத்தங்கல் முன்னெடுப்புகளின் அலுவலகத்தை அளிக்கவுள்ளதாக ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் அறிவித்த தினத்தன்றே யதேச்சையாகவே எல்டிடிஈயை இடைநிறுத்துதல் வந்தது. திருகோணமலையிலும் அம்பாறையிலும் இந்த அலுவலகங்களில் இரு கிளைகளை ஆரம்பிப்பதற்குத் தான் திட்டங்களைக் கொண்டுள்ளதாக ஐக்கிய அமெரிக்கா கூறியது. ஏறத்தாழ 11.5 மில்லியன் பெறுமதியிலான 400க்கு மேற்பட்ட மான்யங்களை இந்த அலுவலகம் கொடுத்துத் தீர்த்துள்ளது.

எல்டிடிஈயின் இடைநிறுத்தலுக்குப் பிரதிபலிப்பாக, விரிவான பதிலிறுப்பொன்றை ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் வழங்கினார். ‘சமாதானமான, அரசியல் இணக்கமொன்றை உண்மையாகவே விரும்பும் சிறந்த நோக்கிலான தரப்பொன்று, பேச்சுவார்த்தை மேசையில் இத்தகைய மனக்குறைகளையிட்டு முடிவுசெய்யலாம். தமிழ் அக்கறைகளையிட்டுப் பிரதிநிதிப்படுத்த எல்டிடிஈ விரும்பினால், அது பேச்சுவார்த்தைகளில் பங்கெடுக்க வேண்டும். வெளியேறக் கூடாது’ என வில்ஸ் தெரிவித்தார்.[125] ‘தொடருகின்ற அரசியல் கொலைகள் பற்றி நாம் தொடர்ந்தும் கரிசனை கொண்டுள்ளோம்’ என வில்ஸ் மேலும் தெரிவித்தார்.[126]

‘கொலைகளும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களும் ஏற்றுக்கொள்ள முடியாதவையாகும். சிறுவர் வீரர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் நிறுத்தப்பட வேண்டும்’ என ஐக்கிய அமெரிக்கா அறிக்கையொன்று எச்சரித்தது.[127] தன்னை இழிவுபடுத்துபவர்கள் என்னதான் சொன்னாலும், நோர்வே மற்றும் ஐக்கிய அமெரிக்கா மூலம் கரட்டும் தடியும் என்ற கொள்கையைப் பயன்படுத்துவதற்கான விக்ரமசிங்கவின் தீர்மானம் பிரதிபலன்களை வழங்கின. இது யுத்தநிறுத்த உடன்படிக்கையின் நிலைத்திருத்தலையும் முக்கியமான தீர்மானங்களையும் உறுதிப்படுத்தியது.

125. ஆஷ்லி வில்ஸ், ராய்ட்டருடன் நேர்காணல், 2003 ஏப்ரல் 23.

126. அதே நூலில்.

127. ஐக்கிய அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம், 2004 ஆகஸ்ட்.



## இணைத்தலைமை நாடாக ஜப்பானின் வகிபங்கு

இலங்கைக்கான ஜப்பானின் தூதுவர் செயிசிரோ ஒட்சுகா முதலில் அணுகப்பட்டபோது, அவர் அரசியல் இணக்கமொன்றுக்குப் பின்னர் மட்டுமே தனது நாட்டுக்கு வகிபங்குள்ளது என்பதை எடுத்துக்காட்ட முயன்றார். ஆனால், சமாதானப் பேச்சுவார்த்தைகளுடன் சர்வதேச மனிதாபிமான உதவி கைகோர்த்த நிலையில் செல்ல வேண்டும் என விக்ரமசிங்க உணர்ந்தார். ஜப்பானியப் பல்கலைக்கழகமொன்றில் சக பேராசிரியார் ஹிஷாஸி நக்கமுராவுடன் தொடர்புகொண்ட மொன்டே காசிம் என்ற தனது வகுப்பு நண்பன் மூலம் ஜப்பானை இடம்பெறச் செய்தார். இவர் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களின் முன்னாள் பிரதிச் செயலாளர் நாயகமான யசூஷி அகாசியைப் போன்று அதே கிராமத்தைச் சேர்ந்தவராவார். ஜப்பானியப் பிரதமர் கொயிஸூமியையும் நக்கமுரா அறிந்துவைத்திருந்தார்.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்து ஒரு மாதத்திற்குப் பின்னர், இங்கு ‘சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், புனரமைப்பு மற்றும் புனர் நிர்மாணம்’ ஆகியவற்றுக்குப் பங்களிக்கும் நோக்குடன் ஜப்பானின் விசேடப் பிரதிநிதியாக அகாசி நியமிக்கப்பட்டார்.[128] கம்போடியாவுக்கும் (1992–1993) மற்றும் யூகோஸிலாவியாவுக்கும் (1994–1995) ஐநா செயலாளர் நாயகத்தின் விசேடப் பிரதிநிதியாக அகாசி ஏற்கனவே சேவையாற்றியிருந்தார்.

இலங்கையின் சமாதான நடைமுறையில் ஜப்பானின் அக்கறைக்குப் பின்னாலுள்ள காரணங்கள் பற்றி விசாரித்தபோது, ‘சர்வதேச உறவுகளில் தமது அரசியல் புறவரையை உயர்த்துவதில் ஜப்பானியர்கள் அக்கறை கொண்டுள்ளார்கள்’ என ஒஸ்லோ பேச்சுவார்த்தைக்கு வெளியே பாலசிங்கத்திடம் சொல்ஹெய்ம் கூறியிருந்தார்.

தமது பொருளாதாரப் பங்களிப்புகளுக்கு ‘அரசியல் அங்கீகாரம்’ இன்றி ‘மோதலுக்குப் பிந்தைய சூழ்நிலைகளில் மீள்நிருமாணத்திற்கும் அபிவிருத்திக்குமான சிட்டைகளைச் செலுத்துவதையிட்டு ஜப்பானியர்கள் மனம்தளர்ந்துவிட்டதுடன், களைத்தும்விட்டார்கள்’ என அவர் விளக்கமளித்தார். சமாதானத்தை ஏற்படுத்துபவராக அரசியல் வகிபங்கொன்றை அது வகிக்க முடியும் என ஜப்பான் உணர்வதாகப் பாலசிங்கத்திற்கு சொல்ஹெய்ம் அறிவித்தார்.[129]

இலங்கை ‘ஏனையவற்றுக்கு வெற்றிகரமான மாதிரியொன்றாக விளங்க முடியும்’ என்றும் ‘இன மோதல்களாலும் பயங்கரவாதச்

128. ஜப்பானிய தூதுவராலயம், கொழும்பு, பத்திரிகை வெளியீடு, 2005 அக்டோபர் 25.

129. அன்டன் பாலசிங்கம, ஏற்கனவே குறிப்பிடப்பட்டது, பக்.399.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயல்களாலும் பாதிக்கப்பட்ட ஏனையோர்க்கும் நம்பிக்கையை ஊட்ட வேண்டும்' என்றும் டோக்கியோ மகாநாட்டில் கொயிஸோமி அறிவித்தார்.[130]

புதிய ஐமசுமு (யூபிஎஃப்ஏ) அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் மேற்கொண்ட நான்கு பயணங்கள் உட்பட 11 தருணங்களில் இலங்கைக்கு அகாசி பயணம் செய்துள்ளார். ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்த பின்னர் அவரது கடைசி பயணத்தின்போது, கிளிநொச்சிக்கு பயணம் செய்வதிலிருந்து அவர் தடுக்கப்பட்டார். அவர் தென்பகுதித் தலைவர்கள் மற்றும் பிரபாகரன் உட்பட எல்டிடிஈ தலைவர்களைச் சந்தித்துள்ளார். ஆரம்பத்தில் சச்சரவுக்குரிய ஈழம் அடையாள ஞாபகச் சின்னத்துடன் அவரைப் பிரபாகரன் தர்மசங்கட நிலைக்குள்ளாக்கியிருந்தார். அவர் வடக்கு, கிழக்கில் உள்ள திருகோணமலை, அம்பாறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகியவற்றுக்கும் தெற்கில் ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை ஆகியவற்றுக்கும் பயணம் செய்திருந்தார். சிரான் செயலகத்திற்கு ஆதரவளிப்பதற்காக 35.25 மில்லியன் ரூபாவை ஜப்பானிய அரசாங்கம் தருவதாக வாக்களித்திருந்தது. அவர் ராஜதந்திரிகளின் தலைவர்களையும் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவையும் சந்தித்தார். ஒரு தருணத்தில் அவரைச் சந்திப்பதற்குப் பிரபாகரன் மறுத்திருந்தார்.

2003 ஆகஸ்டில் யாழ்ப்பாணத்தில் உள்ள இணுவிலிலுள்ள உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்தவர்கள் முகாமொன்றுக்கு ஜப்பானின் வெளிநாட்டு அலுவல்கள் மூத்த உப அமைச்சர் ரெட்சுரோ யனோ பயணம் செய்திருந்ததுடன், மாத்தறை நீர் விநியோகத் திட்டமொன்றுக்கான மான்ய உதவி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுமிருந்தார். அத்துடன், யாழ்ப்பாணத்தில் தாய்மார் சுகாதாரப் பராமரிப்புக்காக யூனிசெஃப்புக்கு 26 மில்லியன் அமெரிக்க டாலர்கள் கொண்ட மான்யத்தை அறிவித்திருந்தார்.

2004 ஜனவரியில் வெளிநாட்டு அமைச்சையும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையையும் ('ஜய்கா') சேர்ந்த அதிகாரிகளைக் கொண்ட பேராளர் குழுவைப் பொருளாதார ஒத்துழைப்புப் பணியகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மொட்டோஹைட் யொஹிகாவா வழி நடத்திச் சென்றார். 2005 ஜனவரியில் ஜப்பானிய மூத்தத் துணை வெளிநாட்டு அமைச்சர் சூசென் தனிகாவ இலங்கைக்கு விஜயம் செய்தார். ஜப்பான்–இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் லீக்கின் தலைவரும் பிரதிநிதிகள் சபையின் மூத்த உறுப்பினருமான ஹெஸேயி நொரோட்டா 2005 மார்ச்சில் இலங்கைக்கு பயணம் செய்து பேரழிவு

130. ஜூனிசிரோ கொயிஸுமி, ஆரம்பக் குறிப்புரைகள், டோக்கியோ நன்கொடையாளர் மகாநாடு, 2003 ஜூன் 9.



தொடர்பாக ஜப்பானின் உதவி குறித்த கருத்துகளைப் பரிமாறிக் கொண்டார். நொரோட்டா முன்னாள் விவசாய அமைச்சர் என்பதுடன், பாதுகாப்பு முகவராண்மையின் முன்னாள் பணிப்பாளர் நாயகமுமாவார். 2005 ஜூனில் விஜயமொன்றின்போது, ஜப்பானின் வெளிநாட்டு விவகார மூத்தத் துணை அமைச்சர் இசிரோ அயிஸவா ஒத்துழைப்பு மற்றும் சுனாமி உதவி ஆகியன பற்றிக் கருத்துப் பரிமாறினார்.

## இணைத் தலைமைத்துவ நாடுகளும் ஐரோப்பிய யூனியனும்

புகலிடம் கோருபவர்களுடன் ஐரோப்பாவில் வழிந்தோடும் தாக்கத்தின் காரணமாக, இங்குள்ள மோதலுக்குத் தீர்வொன்றைக் காண்பதற்குப் பெருமளவு ஐரோப்பிய யூனியன் அங்கத்துவ நாடுகள் ஆர்வம்காட்டுவதாக விக்ரமசிங்க உறுதிப்படுத்துகின்றார். நிராகரிக்கப்பட்ட புகலிடம் கோருபவர்களைத் திருப்பி அனுப்புவதுமீதான உடன்படிக்கை ஒன்று ஐரோப்பிய யூனியனுக்கும் இலங்கைக்குமிடையில், வெளிநாட்டுச் செயலாளர் ஹெச்.எம்.ஜி.எஸ். பள்ளியகார, இலங்கைக்கான ஐரிஷ் தூதுவர் பிலிப் மெக்டொனா மற்றும் தூரதரக அரசியல் விவகார அதிகாரி வெளட்டம் வில்டன் ஆகியோரால் கையெழுத்திடப்பட்டது.[131]

பல்நார் உடன்படிக்கையும் கோட்டா முறைமையும் முடிவுக்கு வருவதனால் ஆடைகளின் ஏற்றுமதித் தொடர்பாக, இந்நாடுகளுடன் வியாபாரத்தைச் செய்வதில் ஐதேமு ஆர்வம்காட்டியது. ஐரோப்பிய ஆணைக்குழுவின் பொதுமைப்படுத்தப்பட்ட விருப்புகள் முறைமைத் திட்டத்தின் கீழ் ஏற்றுமதி செய்யப்படும் இலங்கையின் பொருட்களுக்கு விசேடமான விருப்பத்தைப் பெறுவதற்கு அடித்தளம் இடப்பட்டது.

கொழும்பில் ஆணைக்குழுவின் பேராளர்குழு தாபிக்கப்பட்டு நான்கு வருடங்களுக்குப் பின் அதன் வெளிவாரிச் சேவையைச் சீர்படுத்துவதற்கு 2001 ஜூலை 3 அன்று தீர்மானமொன்றை ஆணைக்குழு எடுத்த பின்னர் இணைத் தலைமைத்துவ நாடுகளாக ஐரோப்பிய யூனியனைச் சிக்கவைப்பது இலகுவாக விளங்கவில்லை. முடிவு: இங்கு அலுவலகத்தைத் தனித்த உத்தியோகத்தர் ஒருவர் நிருவகிப்பதன் மூலம் நாட்டுக்கு வதிவிடம் சாராத பேராளர்குழுத் தலைவர் அதிகாரமளிக்கப்பட்டிருந்தார்.

எட்டு வருடங்களாகப் புரூசல்ஸில் இராஜதந்திரப் பதவியொன்றில் ஏற்கனவே சேவையாற்றிய ஸ்கோப்பில் பணிப்பாளர் ஒருவராகப் பதவி வகித்த கே.கொடகே, ஐரோப்பிய யூனியனைத் தொடர்புகொள்ள வைப்பதற்காக மொரகொடவுக்குத் தளத்தைத் தயார்படுத்துவதற்காகப் புரூசல்ஸில் உள்ள தூதுவர் ரமேஷ் ஜயசிங்கவுடன் ஒருங்கிணைந்திருந்தார். அரசாங்கத்தின் மூலவள ஒன்றுதிரட்டல் குழுவின் தலைவராக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனது ஆற்றலளவில் ஏப்ரல் 2 மற்றும் 3ஆம் தேதிகளில் புரூசல்ஸில் ஐரோப்பிய யூனியன் தலைமைப்பீடத்திற்கு மொரகொட பயணம் செய்தார். இலங்கையில் பிறந்த ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் நிராஞ்ஜன் தேவ ஆதித்யா உதவியாக விளங்கினார். ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் குஷ்னஹன், வெளிவாரி உறவுகளுக்கான ஐரோப்பிய யூனியன் ஆணையாளர் கிறிஸ் பட்டர்ன், ஐரோப்பிய யூனியனின் பொது, வெளிநாட்டு, பாதுகாப்புக்கொள்கைக்கான உயர் பிரதிநிதி கலாநிதி ஜாவிர் சொலன்னா, வோல்ஸ் ட் ரொம் மற்றும் ஏனையோரை மொரகொட சந்தித்ததுடன் முடிவாக தொடர்புகொள்வதற்கு மிகவும் தயக்கத்துடன் ஐரோப்பிய யூனியனை உடன்பட வைத்தார்.[132] ஐரோப்பிய யூனியன் அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளை அடக்கியுள்ள ஏஎல்ஏ குழுவில் மொரகொட உரையாற்றியதுடன், ஆசிய மற்றும் லத்தீன் அமெரிக்கப் பிராந்தியங்களுக்கு ஐரோப்பிய யூனியனின் அபிவிருத்தி ஒத்துழைப்புக் கொள்கைகளை வகுத்தமைப்பதற்கு ஐரோப்பிய யூனியன் உறுப்பினர்களுக்கு ஆணை அளிக்கப்பட்டிருந்தது.[133]

இலங்கையில் பொதுத்தேர்தல்களுக்கு இரண்டுமுறை ஐரோப்பிய யூனியனின் பிரதம அவதானிப்பாளராக விளங்கிய குஷ்னஹன், நாட்டின் சமாதான நடைமுறைக்கு உதவியளிப்பதற்காக 2003 மே மாதத்தில் இரு வார பயணத்தை மேற்கொண்டு இங்கு வந்திறங்கினார்: 'தற்போதைய பேச்சுவார்த்தைகளில் இருந்து எல்டிடிஈ வாபஸ் பெற்றிருப்பது ஏமாற்றத்தை அளிக்கிறது' என அறிக்கையொன்றில் குஷ்னஹன் தெரிவித்திருந்ததுடன், ஆனால், 'உடனடியான மனிதாபிமான நிவாரணத்திற்கான நடவடிக்கைகளின் விரைவான விநியோகம் இன்மையினால் அவர்களது (எல்டிடிஈ) ஏமாற்றத்தில் நியாயம் உள்ளது' என அவர் குறிப்பிட்டார்.[134]

'அரசியல் இணக்கமொன்றுக்குப் பின்னர் ஆயுதக் களைவுடன் இராணுவத்தைக் கலைத்தல் தொடர்புபட்டிருக்கும்' என எச்சரிக்கை விடுத்த குஷ்னஹன், 'சிறுவர்களைக் கடத்துதல்/சேர்த்துக் கொள்ளுதல், அரசியல் எதிராளிகளின் இலக்குபடுத்தப்பட்ட கொலைகள் மற்றும் பணம் பறித்தல் ஆகியன தொடரும்போது, சமாதான நடைமுறை

131. இலங்கைஐரோப்பிய உடன்படிக்கை, கையெழுத்திட்டோர், வெளிநாட்டுச் செயலாளர் எஸ்.பள்ளிஹகார, பிலிப் மக்டொனா மற்றும் வௌட்டர் வில்றொன், பாதுகாப்புப் பொறுப்பு அதிகாரி.

132. ஸ்கோப்புக்கும், ஐரோப்பிய யூனியன் தூதுவருக்கும் இடையிலான கடிதத் தொடர்பு, 2003 மார்ச் 24.

133. அதே நூலில்.

134. பத்திரிகை அறிக்கையொன்றில் ஜோன் குஷ்னஹன், 2003 மே 13.



யொன்று முழுமையாக அமல்படுத்தப்பட வில்லை என்பதாகும். இத்தகைய நடவடிக்கைகள் சமாதான நடைமுறையை ஸ்திரமின்மைப் படுத்துகின்றன' என்றார்.[135]

டோக்கியோ நன்கொடையாளர் மகாநாட்டில் இணைத் தலைமைத்துவ நாடுகளும் ஐரோப்பிய யூனியனும் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்திக்கொண்டன. பட்டர்ன் வராதபடியினால், ஐரோப்பிய யூனியன் தலைமைத்துவத்தைக் கிறிஸ் கொண்டிருந்தபடியால், துணை அமைச்சர் மட்டத்தில், ஐரோப்பிய யூனியனின் ஐரோப்பிய யூனியன் அம்சத்தைக் கிரேக்க நாட்டவரும் ஐரோப்பிய யூனியன் தொழில், சமூக விவகார ஆணையாளருமான செல்வி அனா டயமன்ரே பொலோ தலைமை தாங்குவார் என எதிர்பார்க்கப்பட்டது.[136] அவ்வாறாக அது நடைபெறவில்லை.

ஜூலை முற்பகுதியில் புரூசல்ஸ்ஸுக்கு மொரகொட திரும்பிவந்து, பட்டர்னைச் சந்தித்து, பொறுப்பை மேற்பார்வை செய்வதற்கு அதன் அந்தஸ்திலிருந்து மூத்த ஆளுமை கொண்ட ஒருவரை அடையாளம் காணுமாறு ஐரோப்பிய யூனியனிடம் ஆலோசனை கேட்டார். அவர் கலாநிதி சொல்லானவைச் சந்தித்ததுடன், இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பலத்தை உயர்த்துவதை நோக்கி ஐரோப்பிய யூனியனிடமிருந்து நிதிசார் உதவிக்கு வேண்டுகோளை முந்தைய கருத்துப் பரிமாறலின்போது தாம் விடுத்ததாக நினைவுபடுத்தினார். ஒழுங்கொன்றைக் கொண்டிருப்பதாகக் கலாநிதி சொல்லனாவும் பட்டர்னும் உடன்பட்டனர். 2003 நவம்பரில் பற்றனின் விஜயம் கடும் விமர்சனமாக மாறியது. அவரது பயணம் பிரபாகரனின் பிறந்த தினத்துடன் சரியாக ஒத்திருந்ததால் தந்திரசாலியான எல்டிடிஈ தலைவரை வாழ்த்தவே அவர் விரும்புகிறார் எனச் சிலர் சுட்டிச் சொன்னார்கள். ஆனால், இந்தியாவில் அவர் ஏற்கனவே சந்திப்பை ஒழுங்குசெய்திருந்ததுடன், உள்ளூர் விஜயம் அதற்கேற்றவாறே ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

ஒஸ்லோவினால் நிதிப்படுத்தப்பட்ட புறம்பானதொரு ஆய்வுப் பயணத்தில் எல்டிடிஈ பேராளர் குழு 2004 ஏப்ரலில் ஸ்கண்டினேவிய நாடுகளுக்கு விஜயம் செய்தது. நோர்வே, சுவீடன், மற்றும் பின்லாந்து ஆகியவற்றைப் பயணம் உள்ளடக்கியிருந்தது. அதன் வன்முறைமீது ஐரோப்பிய யூனியன் கண்மூடித்தனமாக விளங்கும் என்றும் ஐரோப்பாவின் விருந்தோம்பலைத் தனது உறுப்பினர்கள் அனுபவிப்பார்கள் என்றும் எல்டிடிஈ நம்பியிருந்தது. கதிர்காமரின் கொலை குறித்து அதன் மிகக்

135. அதே நூலில்.

136. ஸ்கோப்புக்கும், ஐரோப்பிய யூனியன் தூதுவருக்கும் இடையிலான கடிதத் தொடர்பு, 2003 ஏப்ரல் 10.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடுமையான தொனியில் ஐரோப்பிய யூனியனின் கண்டனத்திற்கு எல்டிடிஈ உள்ளாயிற்று: 'தனது நாட்டின் துரதிர்ஷ்டங்களுக்குச் சமாதானமானதும் ஜனநாயகரீதியிலானதுமான தீர்வொன்றைக் கண்டறிவதற்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட மிகச் சிறந்த ஆகிருதியையும் கௌரவத்தையும் கொண்ட மனிதனை இலங்கையிடமிருந்து அர்த்தமற்ற கொலை பிடுங்கிக்கொண்டுள்ளது' என ஐரோப்பிய யூனியனின் வெளிநாட்டு விவகார ஆணையாளர் பெனிட்டா பெரேரோ வால்ட்னர் தெரிவித்தார்.[137]

'இது உண்மையிலேயே விசமத்தனமான நடவடிக்கை என்பதுடன், குற்றமிழைத்தவர்கள் நீதியின்முன் கொண்டு வரப்பட வேண்டும்... மோதலை மீள ஆரம்பித்து, தசாப்தகாலச் சிவில் யுத்தத்தினதும் பேரழிவிலான சுனாமியினதும் பின்னர், இலங்கையின் பெறுமதிமிக்க மக்களிடமிருந்து, அவர்கள் தெளிவாகவே தகுதியைப் பெற்றுள்ள சமாதானத்தையும் மீளிணக்கத்தையும் சுபீட்சத்தையும் பறிப்பதே கொலையாளிகளின் தெளிவான நோக்கமாக நான் காண்கின்றேன்' என்று பெரேரோ வால்ட்னர் தெரிவித்தார்.[138] முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாத முறைகளினாலான அரசியல் நோக்குகளைப் பின்தொடர்தலானது பேச்சுவார்த்தையிலான பங்காளியாக எல்டிடிஈயின் நிலையையும் நம்பகத்தன்மையையும் சேதப்படுத்துவதற்கு மட்டுமே பங்களிக்கும்' என ஐரோப்பிய யூனியன் தெரிவித்தது.[139]

லண்டன் குண்டு வெடிப்புகளுக்குப் பின்னர் ஐரோப்பிய யூனியன் ஆட்டங்கண்டுவிட்டதுடன், சுதந்திரப் போராட்டம் என்ற போர்வையின் கீழ்ப் பயங்கரவாதத்தை இனிமேலும் சகித்துக்கொள்ளமாட்டாது என்பதைத் தெளிவுபடுத்தியது. அரசாங்கத்தால் மேன்முறையீடொன்று செய்யப்பட்டபோதிலும், எல்டிடிஈயின்மீது அங்கீகாரங்களை சுமத்துவதற்கானத் தீர்மானமொன்றை ஐரோப்பிய யூனியன் ஒத்திப்போட்டது. இதை நோர்வேயின் வற்புறுத்தலாகச் சிலர் காரணம் கற்பிக்கின்றனர். ஐரோப்பிய யூனியன் தலைமையின் ஐக்கிய ராச்சிய ஆட்சியின்போது, எல்டிடிஈமீது பிரயாணத் தடையொன்று சுமத்தப்பட்டது.[140]

'பயங்கரவாத தாபனமொன்றாக எல்டிடிஈயை முறைமையாகப் பட்டியல்படுத்துவதையிட்டு ஐரோப்பிய யூனியன் தீவிரமாகக் கரிசனைக்கு எடுத்துள்ளது' என அறிக்கை குறிப்பிட்டிருந்ததுடன், 'எல்டிடிஈயும் அதன் தாபனங்களிலும் அறியப்பட்ட ஆதரவாளர்களிடமும் சட்ட விரோதமான அல்லது விரும்பத்தகாத நடவடிக்கைகளை (நிதிப்படுத்தல்

137. கதிர்காமரின் கொலைமீது ஐரோப்பிய யூனியன் அறிக்கை.

138. அதே நூலில்.

139. ஐரோப்பிய யூனியன் பிரகடனம், 2005 செப்டம்பர் 26.

140. அதே நூலில்.



மற்றும் பிரசாரம் போன்ற) சோதிப்பதற்கு மேலதிக நடவடிக்கைகளை அங்கத்தவர்கள் எடுக்க முடியும்' என அறிக்கை மேலும் குறிப்பிட்டிருந்தது.[141] பிரயாணத் தடையை நீக்கும்படி எல்டிடிஈயின் முன்னணி தாபனங்கள் அழுத்தம் கொடுப்பதாகக் கோரி, அதற்காக நடவடிக்கை எடுக்குமாறு பிரட்ஸ்காரைத் தமிழ்ச்செல்வன் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி தேர்தலைப் புறக்கணிக்குமாறு வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழர்களுக்கு எல்டிடிஈ விடுத்த அழைப்பைக் குஷ்னஹன் தலைமையிலான ஐரோப்பிய யூனியன் கண்காணித்தல் குழாம் கடுமையாக விமர்சித்தது. 'வன்முறையும் பயமுறுத்தலும் நிரம்பிய சூழலொன்றை உருவாக்குவதன்' மூலமும் 'துக்க நாளாக' அழைப்பதன் மூலமும் இந்தப் பகிஷ்கரிப்பை அவர்கள் அமல்படுத்தினார்கள்.[142]

2006இல் சுதந்திரப் போராட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கு முன்னர், புதிய ஜனாதிபதிக்குப் பிரபாகரனின் 2005 மாவீரர் தினச் செய்தி இறுதி எச்சரிக்கை ஒன்றைக் கொண்டிருந்தபோதிலும், பகிஷ்கரிப்புமீதான குஷ்னஹனின் அறிக்கையானது யுத்தத்திற்கு மீளச்செல்வதிலிருந்து எல்டிடிஈயைத் தடுத்திருக்கும்.[143]

## டோக்கியோ நன்கொடையாளர் மகாநாடு

எல்டிடிஈயினால் புறக்கணிக்கப்பட்ட இலங்கையின் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி மீதான மகாநாடு டோக்கியோவில் 2003 ஜூனில் நடைபெற்றதுடன், மொத்தமாக 4.5 பில்லியன் அமெரிக்க டாலர்களை 51 நன்கொடை நாடுகளும் 20 சர்வதேச நிறுவனங்களும் வாக்களித்திருந்தன. மீள்நிர்மாணத்திற்கு ஜப்பானும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் தலா ஒரு பில்லியன் டாலர்களை அறிவித்திருந்த அதேவேளை, வருடம் ஒன்றுக்கு 200 மில்லியன் டாலர்களை உலக வங்கி வழங்கியது. மூன்று வருட காலத்திற்கு ஐரோப்பிய யூனியன் 293 மில்லியன் டாலர்களைப் பாரப்படுத்தியது. ஐக்கிய அமெரிக்கா 54 மில்லியன் டாலர்களை வாக்களித்திருந்தது. நோர்வே 3 மில்லியன் டாலர்களுக்கு வாக்குறுதி அளித்தது.[144] சமாதான நடைமுறையில் முன்னேற்றத்திற்கு நிதியங்களை விடுவிக்கப்படுவதை டோக்கியோ பிரகடனம் கட்டிப்போட்டிருந்தாலும், நிதியங்களின் ஒரு பகுதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. 'வாய்ப்புக்கு நாம் பதிலிறுக்கத்தான் வேண்டும். அவற்றின் பயங்கரமான உயிர்ப்பலிகளைப் பிடுங்கிக்கொள்வதற்கு நோய்க்கும் யுத்தத்திற்கும் பேரழிவுக்கும்

141. ஐரோப்பிய யூனியன் பிரகடனம், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது.

142. ஐரோப்பிய யூனியன் ஐரோப்பிய அவதானிப்பாளர் செயல்பணி அறிக்கை, 2005 நவம்பர் 10.

143. பிரபாகரனின் மாவீரர் தின உரை, 2005 நவம்பர் 27.

144. டோக்கியோ நன்கொடையாளர் மகாநாடு, 2003 ஜூன் 10.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காத்திருப்பதைவிட, பணத்தைப் பொறுத்தளவிலும் மனித வாழ்க்கையைப் பொறுத்தளவிலும் சமாதானத்தில் மூலதனமிடுவதும் சுபீட்சத்தில் மூலதனமிடுவதும் மிகவுமே மலிவானதாகும்' எனக் கூறிய ஆர்மிட்டேஜ், கொயிஸுமியின் சமாதான முன்னெடுப்பை ஒன்று திரட்டுதல் பாராட்டத்தக்கதுடன், புதுமையைப் புகுத்தலானதுமாகும் எனக் குறிப்பிட்டார்.[145]

மற்றைய விடயங்களிடையே, இருதரப்புகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு முழுமையாக இணக்குதல்; வடக்கிலும் கிழக்கிலும் அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பில் செயல்திறனான விநியோகப் பொறிமுறையொன்றை உருவாக்குதல்; தாய்லாந்தில் பேச்சுவார்த்தைகளின் நான்காவது அமர்வில் உடன்பட்டவாறு, முஸ்லிம் பேராளர் குழுவொன்றின் பங்கெடுப்பு; ஒஸ்லோ பிரகடனத்தின் கோட்பாடுகளின் மீதான அடிப்படையில் இறுதித் தீர்வொன்றை நோக்கிச் சமாந்தரமான முன்னேற்றம்; இடம்பெயர்ந்தவர்களுக்கு தீர்வுகள்; அனைத்து மக்களின் மனித உரிமைகளின் செயல்திறனான மேம்படுத்தல் மற்றும் பாதுகாப்பு; வயது குறைந்தோரை இயக்கத்தில் சேர்த்துக்கொள்வதை நிறுத்துவதற்கு 'யூனிசெஃப்'பின் செயல்திட்டம் மீது செயல்திறனான அமலாக்கம்; முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளித்தல்; அரசியல் இணக்கமொன்றை அடையும் சம்பந்தத்தில் கட்டம் கட்டமான, சமநிலையிலான, சரிபார்க்கக்கூடிய மோதல் தவிர்ப்புக்கும் இராணுவத்தைக் களைவதற்கும் வழமைக்கு திருப்புவதற்கும் தரப்புக்களினாலான உடன்பாடு ஆகியவற்றை டோக்கியோ பிரகடனம் வலியுறுத்தியது.[146]

## இணைத்தலைமை நாடுகளும் டோக்கியோ மதிப்பாய்வுக் கூட்டங்களும்

இணைத்தலைமைத்துவ நாடுகள் பலதரப்பட்ட விதமாக காலத்திற்கு காலம் சந்திப்பதுடன், சமாதான நடைமுறையை நிலைத்திருக்க வைப்பதற்கும் பேச்சுவார்த்தை மேடைக்குத் திரும்புவதற்குத் தரப்புகளை இயலச் செய்வதற்குமான முயற்சியொன்றில் பலமான அறிக்கைகளை விடுவிக்கின்றன. வாஷிங்டனில், 'சகவாழ்வு' முயற்சிகளின் சீர்குலைவையிட்டு ஏமாற்றத்தை அவர்கள் வெளிப்படுதினார்கள். ஆனால், யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கும் பேச்சுவார்த்தைகளுக்குமான அர்ப்பணிப்பை தொடர்ந்து எல்டிடிஈயின் அறிக்கைகளைப் பாராட்டினார்கள்.

2004 ஜனவரியில், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, 'ஜய்கா', ஜேபிஐசி, யூஎன்டிபி, யூனிசெஃப், மற்றும் சிஐடிஏ ஆகியன உட்பட 25

145. ரிச்சர்ட் ஆர்மிட்டேஜ், உரை, டோக்கியோ நன்கொடையாளர் மகாநாடு, 2003 ஜூன் 10.

146. டோக்கியோ பிரகடனம், 2003 ஜூன் 10.



வெளிநாட்டுத் தூதுவராலயங்களையும் நன்கொடை முகவராண்மைகளையும் சேர்ந்த பிரதிநிதிகள் மீள்நிர்மாணத்தையும் புனரமைப்பையும் பற்றிக் கருத்துப் பரிமாறுவதற்காகக் கிளிநொச்சியில் எல்டிடிஈ அனுசரணையிலான கூட்டமொன்றில் சந்தித்தனர்.[147] பிப்ரவரி ஜெனிவா பேச்சுவார்த்தைகளின் முன்னர் கிளிநொச்சியில் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் யூஎன்டிபி ஆகியவற்றை சந்திக்க எல்டிடிஈயினால் எடுக்கப்பட்ட இதையொத்த முயற்சியொன்று அரசாங்கத்தால் தடுக்கப்பட்டது. தமது பயணத்தை முகவராண்மைகள் ஒத்திப்போட்ட அதேவேளை, சமாதான நடைமுறையின்போது ஐக்கிய ராச்சியத்தில் குற்றங்குறையுடையவர் பட்டியலில் சேர்க்கப்பட்ட அதன் தமிழர் புனர்வாழ்வுத் தாபனத்தின் (டிஆர்ஓ) பெருமளவு உத்தியோகத்தர்கள் கஷ்டப்பட்டதைக் காரணங்காட்டிப் பிப்ரவரி நடுப்பகுதியிலான கூட்டத்தை எல்டிடிஈ தள்ளிப்போட்டது.

2004 ஏப்ரல் பொதுத்தேர்தலின்போது 'சமய மற்றும் இனத்துவ சகிப்புத்தன்மையற்ற நிலையை உருவாக்காத' விதத்திலான பிரசாரத்திற்கு அழைப்புவிடுத்த அதேவேளை, சுதந்திரமானதும் நியாயமானதும் அமைதியானதுமான தேர்தலொன்றை உறுதிப்படுத்துவதற்குப் பணியாற்றுவதற்கு அனைத்து அரசியல் புள்ளிகளையும் இணைத் தலைமை நாடுகள் வலியுறுத்தின. 'சமாதான நடைமுறையில் செய்யப்பட்ட முக்கியமான பிரதிபலன்கள்' குறைத்து மதிப்பிடப்படக் கூடாது என்பதில் அவர்கள் ஆர்வம்காட்டினார்கள்.[148]

தமது தூதுவர்கள் சுடா, பிளங்கர்ட் மற்றும் லுன்ஸ்டெட் ஆகியோரால் பிரதிநிதிப்படுத்தப்பட்ட இணைத்தலைமை நாடுகள் ஜேவிபியுடன் தொடர்பைக் கொள்ளுமாறு குமாரதுங்கவுக்கு அழைப்பு விடுத்தனர்.[149] அடுத்த நாள் அறிக்கையொன்றில் 'சமாதான நடைமுறைகளுக்கும்', 'நோர்வேயின் வசதிப்படுத்துநர் முயற்சிகளுக்கும் எதிராக நடைமுறையிலான ஜேவிபி தலைமையிலான நடவடிக்கைகள் பற்றி ஆழ்ந்த கரிசனையை' இணைத்தலைமை நாடுகள் வெளிப்படுத்தின.[150]

ஐரோப்பிய யூனியனைப் போன்ற உயர் அதிகாரத்தைக் கொண்ட பேராளர் குழுவினர், ஐக்கிய ராச்சிய ஹைகமிஷனர் ஸ்டீபன் ஈவன்ஸ், நெதர்லாந்து தூதுவர் சூசன் பிளங்கேர்ட் ஆகியோர் கிளிநொச்சிக்கு பயணம் செய்து, பகைமைகளை மீள ஆரம்பிக்கவிருப்பதையிட்டு

147. ரங்க ஜயசூரிய, 'வடக்கு–கிழக்கு புனரமைப்புப் பற்றி நன்கொடையாளர், எல்டிடிஈ கருத்துப் பரிமாறல்' , டெயிலி நியூஸ், 2004 ஜனவரி 20.

148. இணைத் தலைமை நாடுகளின் அறிக்கை, 2004 பிப்ரவரி 17.

149. இணைத் தலைமை நாடுகளுடனான கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கூட்டம், 2004 டிசம்பர் 14.

150. இணைத் தலைமை நாடுகளின் அறிக்கை, 2004 டிசம்பர் 15.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்டிடிஈயை எச்சரித்தனர். இதை எல்டிடிஈ கவனத்திற்கு எடுக்காமல், 2004 மாவீரர் தினக் கொள்கை உரையில் அதன் தலைவர் யுத்தத்தை மீள ஆரம்பிக்கவிருப்பதாகப் பயமுறுத்தினார். யுத்தத்தை மீள ஆரம்பிக்கும் கொடூரமான மார்க்கத்தில் செல்லவிருந்த எல்டிடிஈயைத் தன்வசப் படுத்துவதற்கு சர்வதேசச் சமுதாயம் தோல்வியடைந்துள்ளது என்பது புலனாகி உள்ளபோதிலும், புலிகளின் திட்டங்களை ஏமாற்றுவது போல் பேரழிவிலான சுனாமியாக இயற்கை நிலைகொண்டது (மாவீரர் தின உரையின் அச்சொட்டாக 30 நாட்களுக்குப் பின்னர்).

2005 ஜனாதிபதி தேர்தலின் பின்னர், சில குழுக்கள் தமது துணை இராணுவ நடவடிக்கைகளை இடைநிறுத்திக்கொள்ள வேண்டும் என்பதை உறுதிப்படுத்துமாறு அரசாங்கத்தை இணைந்த தலைமைத்துவ நாடுகள் வலியுறுத்தியதுடன், 'கடும் பின்விளைவுகள் என்ற எச்சரிக்கை யுடன் நடந்துகொண்டிருக்கும் அவர்களது வன்முறை இயக்கத்திற்கு' முடிவு கட்டுமாறு எல்டிடிஈக்கு அழைப்புவிடுத்தன.[151] குடிபெயர்ந்த தமிழர்களுக்கு எதிரெதிர் நிலையாக நிதியைச் சேகரிப்பதற்கும் எதிராக கடுமையான நடவடிக்கைகள் உட்பட அதிகளவு சர்வதேச அழுத்தத்தின் கீழ் ஜெனிவா இணக்கம்வரை நச்சுத்தன்மையிலான சுற்று தொடர்ந்தது.

## சிவில் சமூகத்தால் வசதிப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நிபுணர்களின் வகிபங்கு

மோதல் தீர்மானம்மீது பேச்சுவார்த்தைக்கு சிவில் சமூகம் ஊக்க மளித்ததுடன், கருத்தரங்குகளையும் உரைகளையும் நடத்துவதற்கு வெளிநாட்டு நிபுணர்களை வரவழைத்தது. இதில் மாற்றுக்கொள்கை களுக்கான நிலையத்தின் மோதல், சமாதானப் பகுப்பாய்வு அலகு, பேர்கொப் மன்றம், ஸ்ரீலங்கா ஃபர்ஸ்ட் (ஒரு வியாபார முன்னெடுப்பு), சகவாழ்வுக்கான மன்றம் மற்றும் ஏனையவை சம்பந்தப்பட்டிருந்தன.

அயர்லாந்தின் 1999 பெரிய வெள்ளி உடன்படிக்கையை வகுத்தமைப் பதில் முக்கியச் செயல்பாட்டாளரான நோபல் பரிசை வென்றெடுத்த ஐரிஷ் கபூர் ஜோன் ஹியூம் தனது அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார். முன்னாள் யுத்த வலயங்களில் ஒழுங்கை நிலைநிறுத்துதல் மீதான அறிக்கையொன்றை பெல்ஃபஸ்ட் பொலிஸ் கல்லூரியைச் சேர்ந்த கண்காணிப்பாளர் ரோய் ஃபிளெமிங் மற்றும் சார்ஜன்ட் ஸ்டீபன் பொடி ஆகியோர் தொகுத்தனர். முன்னாள் ஒன்டறியோ பிரதமர் பொப்ரே தலைமையில் பேராசிரியர் டேசிட் கமரோன் மற்றும் ஏனையோர் அடங்கலாகக் கனடாவில் உள்ள சம்மேளனங்களின் ஒன்றியத்தைச்

151. இணைத் தலைமை நாடுகளின் அறிக்கை, புருசல்ஸ், 2005 டிசம்பர் 19.



சேர்ந்த பேராளர் குழுவொன்று பேச்சுவார்த்தைகளின் மூன்றாம் சுற்றில் தரப்புகளுடன் அரசியலமைப்புப் பிரச்சினைகளையிட்டுக் கருத்துப் பரிமாறினர். பேச்சுவார்த்தைகளின்போது மனித உரிமைகள் மீது தனது ஆவணத்தைச் சமர்ப்பித்த சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவர் இயன் மார்ட்டின் இலங்கைக்கு விஜயம் செய்தார். இவர் மனித உரிமைகளுக்கு வீதி வரைபடமொன்றை வழங்கினார். இதை எல்டிடிஈ அழித்தெறிந்தது. இந்திய சமஷ்டியின் சார்புரீதியிலான வெற்றி மீது பகிரங்க விரிவுரையொன்றை மிச்சிகன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அசூரோஷ் வார்ஷ்னே ஆற்றினார்.

இலங்கைக்கு பயணம் செய்தோர் மத்தியில் பின்வருவோர் விளங்கு கின்றனர்: தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேல யின் சட்ட மற்றும் அரசியலமைப்பு விவகார ஆலோசகர் பேராசிரியர் நிக்கலஸ் ஹேஸொம், ஏஎன்சி (ஆப்பிரிக்க நேஷனல் காங்கிரஸ்) இராணுவ அணியில் முன்னர் பதவி வகித்த டாக்டர் டொக்கி வில்லியம்ஸ், நைஜீரியக் கல்விமான் டாக்டர் கெயோடே பைமீ, தென் ஆபிரிக்காவின் சிவில் சமூக முன்னெடுப்பின் தலைவர் ரொயில்ப் மேயர், தென் ஆப்பிரிக்கப் பிரதி ஜனாதிபதி ஜேக்கப் சுமா மற்றும் ஏஎன்சியைச் சேர்ந்த இப்ராகிம் இப்ராகிம்.

## முன்னாள் யுத்த வலயங்களில் கண்ணிவெடி அகற்றுதல்

கண்ணிவெடி அகற்றுவதற்கு உலக வங்கியும் ஆஸ்திரேலியா, இத்தாலி, ஜப்பான், நெதர்லாந்து, டென்மார்க், மற்றும் ஐக்கிய ராச்சியம் ஆகிய வற்றின் அரசாங்கங்களும் ஏனைய முகவராண்மைகளும் அரசு சார்பற்ற தாபனங்களும் நிதியங்களை அனுப்பிவைத்துள்ளன. இவற்றில் யூனிசெஃப், ஈசிஹெச்ஓ (யூரோப்பியன் கமிஷன்ஸ் ஹியூமரி டேரியன் ஆஃபீஸ்), சிஐடிஏ, யூகேயின் டிஎஃப்ஐடி (டிபார்ட்மெண்ட் ஃபார் இன்டர்நேஷனல் டெவலப்மெண்ட்), சுவீடனின் எஸ்ஐடிஏ ஆகியன சிலவாகும். ஐக்கிய அமெரிக்கா விரைவிலான எதிர்தாக்குதல் கண்ணி வெடி அகற்றல் படையுடன் ஆரம்பித்து, பின்னர் இராணுவத்திற்கான பயிற்சி மற்றும் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றுதல் திட்டம் ஆகியவற்றுக்கு இறங்கியது. சர்வதேசத் தரங்களுக்கு அமைவான கண்ணிவெடி அகற்றுதல் தொழில்நுட்பங்கள் 2004 பிப்ரவரி வரை வழங்கப்பட்டன.[152]

கண்ணிவெடித் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு 2002இன் அரசாங்கத்திற்குக் கனடியப் பேராளர் குழுவொன்று ஊக்கமளித்தது.

152. ஐக்கிய அமெரிக்கத் தூதுவராலயம், கொழும்பு, அறிக்கை, 2003 ஆகஸ்ட் 22, ஏற்கனவே குறிப்பிடப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனித எதிர் கண்ணிவெடிகளின் உபயோகத்தைக் கைவிடுவதற்காக சுவிஸ் அரசுசார்பற்ற தாபனமான ஜெனிவாகாலின் 'அர்ப்பணிப்பின் பத்திரத்தில்' எல்டிடிஈயைக் கையெழுத்திடுமாறு சுவிஸ் அரசாங்கம் ஊக்குவித்தது. ஒட்டாவா உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கு அரசாங்கம் இணக்கமாக இருந்ததுடன், உறுதியாக எதிர்வினையாற்றும் எல்டிடிஈயிடம் வேண்டிக்கொண்டது. ஆனால், கையெழுத்திடுவதற்குப் புலிகள் தயக்கம் காட்டினர்.[153]

கண்ணிவெடித் தடை ஒப்பந்தத்தின் உலகமயமாக்கலுக்கு அழைப்பு விடுக்கும் ஐநா பொதுச்சபைத் தீர்மானம் 59/84க்கு இலங்கை சாதகமாக வாக்களித்ததுடன், 1996 முதல் அவ்வாறாகவே செய்கின்றது.

ஜெனிவாவில் ஜெனிவாகால் என்ற ஸ்தாபனத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட அரசாங்கச் சார்பற்ற செயல்பாட்டாளர்களின் கூட்டமொன்றில் எல்டிடிஈ பங்கெடுத்தது. கண்ணிவெடி நடவடிக்கைமீது தேசியச் செயல்குழுவொன்றை அரசாங்கம் தாபித்துள்ளது.

தொழில்நுட்ப அளவீடு மற்றும் எல்லைப் பிரிப்புக் கருத்திட்டமொன்றை ஹலோ ட்ரஸ்ட் நம்பிக்கைப் பொறுப்பு நடத்தியது. இது சமூகப் பொருளாதாரத் தரவின் சேகரிப்பை உள்ளடக்குகின்றது. யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் 9 இலட்சம் கண்ணிவெடிகளை இராணுவம் புதைத்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2002இல் 36,880 கண்ணிவெடிகள் மற்றும் 10,198 யூஎக்ஸ்ஓக்கள் உட்பட மொத்தமாக 16,356,485 சதுர மீட்டர்கள் கொண்ட நிலம் துப்பரவுபடுத்தப்பட்டது. 2003 ஜனவரியிலிருந்து மார்ச்வரை 17,966 கண்ணிவெடிகள் மற்றும் 2,951 யூஎக்ஸ்ஓக்கள் உட்பட மேலும் 4,44,494 சதுர மீட்டர்கள் துப்பரவுபடுத்தப்பட்டன.

## உயிர் பாதுகாப்பற்றச் சூழலில் கண்காணிப்பாளர்களின் தத்தளிப்பிலான நடைபயிலல்

விரோதமான தமிழ்த் தரப்புகளின் உறுப்பினர்கள், வேவுபார்ப்பவர்கள் மற்றும் உளவுபார்க்கும் அதிகாரிகள் ஆகியோரின் கொலைகளைச் சரிவரக் கையாள ஸ்கண்டிநேவியக் கண்காணிப்பாளர்கள் தவறியுள்ளனர். இக்கொலைகளை மீறல்களாக உள்ளடக்குவதற்கு யுத்த நிறுத்த உடன்படிக்கை திருத்தப்பட வேண்டும். இருதரப்புகளினாலும் பாரபட்சம் எனக் குற்றஞ்சாட்டப்படும் கண்காணிப்பாளர்கள் அவர்களது தத்தளிப்பிலான நடைபயிலலுக்காகப் பாராட்டப்பட வேண்டும். உயர்பாதுகாப்பு வலயங்களை அப்புறப்படுத்துவதற்கு எல்டிடிஈயின் முயற்சிகள் தோல்வியுற்றன. ஏனெனில், யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட வேளையில், செயல்பட்டுக் கொண்டிருந்த சமநிலையைப் பேணுவதற்கு வசதிப்படுத்துநர்களும் ஸ்கண்டிநேவியக் கண்காணிப்பாளர்களும் முயன்றனர். உயர் பாதுகாப்பு வலயங்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டுமானால், சர்வதேசப் பாதுகாவலின் கீழ் நீண்ட தூர ஆயுதங்களைப் புலிகள் கைவிட வேண்டும் என ஓய்வு பெற்ற ஜெனரல் சதீஷ் நம்பியார் சிபாரிசு செய்தார். 'யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரத்தையும் பாரபட்சமின்மையையும் அத்துடன் அவர்களது தீர்மானங்களையும் இட்டு எல்டிடிஈ அற்பமான மதிப்பினையே செலுத்தியது' எனக் குணதிலக குறிப்பிட்டதுடன், 'அதன் தீர்மானங்களின் அமலாக்கத்தை நிறைவேற்றுவதற்கான கடப்பாட்டையோ ஆற்றலளவையோ இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு கொண்டிருக்கவில்லை' என அவர் மேலும் தெரிவித்தார்.[154]

திருகோணமலை மாவட்டத்தில் மணிராசகுளம் முகாம்மீதான கட்டளைக்கு எல்டிடிஈ கீழ்ப்படிய மறுத்தது. அதை அகற்றும்படி இயுநிக குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரூப் ஹொாக்லண்ட் கட்டளையிட்டார். ஆனால், புலிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். 'அவர்கள் மறுத்தால், கட்டளைகளைச் செய்வதற்கு அவர்கள் எமக்கு அளித்துள்ள அதிகாரத்தையிட்டு அவர்கள் மீள்பரிசீலிக்க வேண்டும்... எமது கட்டளைகளை ஏற்றுக் கொள்ள எல்டிடிஈயினர் இணங்க மறுத்தால், அவர்கள் அரசாங்கத்துடன் அமர்ந்து, எமது எதிர்காலத்தை மீள்பரிசீக்க வேண்டும்' என ஹொாக்லண்ட் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.[155] திருகோணமலையில் ஊர்காவல் படைவீரர்களை விடுவிப்பது மீதான கட்டளைகளும் கீழ்ப்படியப்படவில்லை என்பதுடன், அது தேவையற்ற கெடுபிடி நிலைக்கு இட்டுச்சென்றது. மட்டக்களப்பில், இயுக குழுவின் வாகனம் கட்டுக்கடங்காத கோஷ்டியால் தாக்கப்பட்டு, கற்களும் வீசப்பட்டன. இதனால் வாகனத்தின் முன்பக்கக் கண்ணாடி நொறுங்கியது. எல்டிடிஈ உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டதற்கு எதிரான எதிர்ப்பே இதுவாகும்.

2002 பிற்பகுதியில், ஆயுதங்களைச் சோதனையிட எல்டிடிஈ கப்பலில் ஏற முற்பட்ட கடற்படையிடமிருந்து தப்பியோடிய போது, அதில் இருந்த இருவெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை 'மனிதக் கேடயங்களாக' கடல்புலிகள் 'பலாத்காரமாகத்' தடுத்து வைத்திருந்தனர்.[156]

153. அன்டன் பாலசிங்கம், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது, பக்.402.

154. பேர்னாட் குணதிலக, ஏற்கனவே குறிப்பிடப்பட்டது.

155. ஹக்ரூப் ஹொாக்லண்ட், ஏஎஃப்பி நேர்முகங்காணல், 'தமிழ்ப் புலிகளுக்கு இலங்கை யுத்த கண்காணிப்புக் குழு காலக்கெடு விதிப்பு, கிஃபி நியூஸ், 2003 ஜூலை 27.

156. பேர்னாட் குணதிலக, ஏற்கனவே குறிப்பிடப்பட்டது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருமுறை கண்காணிப்பாளர்கள் தப்பிப் பாய்ந்த பின் கப்பலில் இருந்த அவர்கள் தம்மை வெடிக்கவைத்தனர்.[157] 'நிதர்சனமான கடற்படை அலகாக எல்டிடிஈயின் கடல்புலிகளை இலங்கை அரசாங்கம் விசேடமாக இலங்கைக் கடற்படை, அங்கீகரிக்க வேண்டும்' என ரெலிப்சன் முன்மொழிந்தார். இது அவரது நடத்தையைக் குமாரதுங்க முறையிடுவதைத் தூண்டியது. ஒஸ்லோவினால் ரெலிப்சன் மீள அழைக்கப்பட்டு, ட்ரொன்ட் புரூஹொவ்டே நியமிக்கப்பட்டார். ஆனால், அவர் பின்னர் ஹொக்லண்டினால் மாற்றீடு செய்யப்பட்டார். 2005 டிசம்பர் 1இன் பின் சுமார் 100 பாதுகாப்பு ஆளணியினரைக் கொலை செய்ததினால் யுத்தநிறுத்த உடன்படிக்கையை எல்டிடிஈ கேலிக்குரியதாக்கியுள்ளது. இது யுத்தநிறுத்தமொன்று உண்மையிலேயே நிலவுகின்றதா எனக் கேள்வி எழுப்புவதற்கு அந்நேரத்தில் தூண்டியது.

## முடிவுரை

ஒஸ்லோ பிரகடனம், ஒஸ்லோ பத்திரிகை வெளியீடு, மற்றும் டோக்கியோ பிரகடனம் ஆகியன சமாதான நடைமுறையை முன்னே கொண்டு செல்வதற்கான பயனுள்ள சூத்திரங்களாகும். சமஷ்டித் தீர்வொன்றை ஆராய்வதற்கான உடன்படிக்கை உட்பட இத்தகைய சூத்திரங்களுக்கு நோர்வே வசதிப்படுத்துனர்களும் (அனுசரணையாளர்களும்) எஞ்சிய இணைத் தலைமை நாடுகளும் அழுத்தம் கொடுத்தன. இந்தச் சமாதான நடைமுறையின் வேறுபட்ட கட்டங்களில் பலதரப்பட்ட விமர்சனங்கள் இருந்தபோதிலும், எல்டிடிஈயும் இலங்கை அரசாங்கமும் பின்னோக்கிச் செல்வதைத் தடுப்பதற்காக அவற்றைக் கட்டிவைப்பதற்கு சர்வதேசச் சமுதாயம் தேவையானதைச் செய்துள்ளதை இறுதியாக ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இரு தசாப்த கால மோதலில் சமஷ்டியை ஆராய்வதற்கும் ஐக்கிய இலங்கையினுள் உள்ள சுயநிர்ணயத்திற்கும் அவர்களுக்கிடையிலான உடன்பாடே பாரிய சாதனையாகும். முதல் தடவையாக, ஐஎஸ்ஜிஏ (இடைக்கால தன்னாட்சி அதிகார சபை) என்ற அரசியல் ஆலோசனைகளின் தொகுதியொன்றை எல்டிடிஈ வெளிப்படுத்தியது. எனினும், இந்த ஆலோசனை சமஷ்டியையும் மீறிச் செல்கின்றது. இடைக்கால இறுதித் தீர்வை மீறக் கூடாது.

நோர்வேயின் நன்மதிப்புக்கு யுத்தநிறுத்த உடன்படிக்கை என்ற பொதுவான ஆவணமொன்றில் இரு முக்கியச் செயல்பாட்டாளர்கள் கையெழுத்திட்டுள்ளமை இதுவே முதல்முறையாகும். இதில் பிரபாகரனும்

157. ஹக்ரூப் ஹொக்லண்ட், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது.



கையெழுத்திட்டவர்களில் ஒருவராவார். நான்கு வருடங்களில் பல தடவைகள் யுத்தத்தின் விளிம்புக்கு இருதரப்புகளுமே வந்தபோதிலும், நன்கு கட்டமைக்கப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை உயிர்பிழைத்தது. கதிர்காமரின் கொலையைத் தொடர்ந்து ஐரோப்பிய யூனியன் எல்டிடிஈ மீது பிரயாணத் தடையொன்றை விதித்தது. இது முழுமையான தடைக்குப் பயமுறுத்தலை விடுத்துள்ள 25 நாடுகளைக் கொண்ட ஒன்றியத்தால் எல்டிடிஈ பேராளர்கள் வரவேற்கப்படுவதைத் தடை செய்கின்றது.

இருதரப்புகளையும் ஒன்றாகக் கொண்டு வருவதற்கும் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் அனுசரணையாளர்கள் உதவியதுடன், இந்நடைமுறையின்போது அவர்களது சம்பந்தப்பட்ட வெட்டிப் பேச்சுகளைக் கைவிடும்படி கேட்டுக் கொண்டனர். இந்தப் பிந்தைய சமாதான நடைமுறையின் மூலம், எதிர்த்தரப்பின் சந்தர்ப்பவாத அரசியல் முனைப்பாக விளங்கியதுடன், இவ்வாறாகவே இந்தியாவின் இரட்டை வேடமும் விளங்கியது. முறைப்படியாக, எல்டிடிஈ, பதவியில் இருந்த அரசாங்கம் மற்றும் சர்வதேசச் சமுதாயம் ஆகியவற்றின் மீது இந்தியா விழிப்பாக இருந்தது. தமது வகிபங்குகளுக்காக இணைத் தலைமை நாடுகள் பாராட்டப்பட வேண்டும் என்ற அதேவேளை, கண்காணித்தலில் இருந்து நோர்வே விலகுவதுடன், பரந்த கூட்டணி ஒன்றை அனுமதிக்க வேண்டும் என்பதே விரும்பத்தக்கது.

தரப்புகளுடன் கணிசமானளவு நெம்புகோல்தன்மையை இந்தியா கொண்டுள்ளதுடன், பெற்றுக்கொள்வதற்கான அபரிதமான நிபுணத்துவத்தையும் கொண்டுள்ளது. அதன் சாதுரியமான தலையீட்டிற்குப் பின்னர் இந்தியா பின்வாங்கக் கூடாது. நடைமுறையில் இந்தியா இணைந்துகொண்டால், பிராந்தியத்தில் ஏனைய மூலோபாய அக்கறைகள் பின்தொடர்ந்து செல்லப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுக்களும் அற்றுப்போகும். கால்நூற்றாண்டுக்கு மேலாக நீடித்துள்ள, ஏற்கனவே சிக்கலடைந்துள்ள, மோதலை மேலும் சிக்கலாக்குவதைவிட, தசாப்த கால நீண்ட பிரச்சினைக்கு நீதியும் நியாயமானதுமான அரசியல் தீர்வைப் பின்தொடர்ந்து செல்லும்போது தனித்த மனப்பான்மையை நான்கு இணைத் தலைமை நாடுகளும் இந்தியாவும் உறுதிப்படுத்த வேண்டும். இறுதியான சமாதானம் உதயமாக வேண்டுமானால் அவர்களது முயற்சிகளில் பிரதான தரப்புகள் நேர்மையாக விளங்க வேண்டும். இருதரப்பு அணுகுமுறையைப் பிரதான எதிர்க்கட்சி பின்தொடர வேண்டும்.

பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக ஸ்திரத்தன்மை இருக்கவேண்டும். பொதுவாக அரசாங்கமும் பாதுகாப்புப்படைகளும் தென்பகுதியும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதுவரை பொறுமையாகச் செயல்பட்டுள்ளன. யுத்தநிறுத்த உடன் படிக்கையின் நிறைவையிட்டு நினைவுபடுத்துகையில், உதவியை வழங்க சர்வதேசச் சமுதாயம் தயாராக இருக்கின்றது என்று தெரிவித்த சுடா, ஆனால் தீர்வொன்றுக்குத் தரப்புகள் உழைக்க வேண்டும் என வற்புறுத்தினார்.

'சீரிய சமாதான நடைமுறையை நிலைத்திருக்கவைப்பதிலும் பொருளாதாரத் திட்டத்தை அமல்படுத்துவதிலும் தமது நாட்டுடன் சேர்ந்துநிற்க இலங்கையின் கடல்கடந்த நண்பர்கள் தயாராக இருக்கின்றார்கள். ஆனால், சமாதான நடைமுறை சீர்குலைவதற்கு அனுமதிக்கப்பட்டால், அதைக் காப்பாற்றுவதற்கு அவர்கள் தயாராக வில்லை என்பதுடன், அனேகமாக இயலாதவர்களாகவும் விளங்கு கின்றனர்' என ஸ்கேபர் தெரிவித்தார்.

இருதரப்புகளுக்கும் இடையில் நம்பிக்கையீனத்தையும் மிதமிஞ்சிய தேசியவாதங்களையும் வெளிப்படுத்துகையில், நியாயமான இறுதி யிலான தீர்வொன்றை (சகல சமுதாயங்களையும் மனத்தில் வைத்து) திட்டமிடுவதற்குச் சர்வதேச சமுதாயம் (இந்தியா உள்ளடங்கலாக) அதன் வகிபங்கினை ஆற்ற வேண்டும் என்பதே எனது எண்ணமாகும். சமாதானத்தை விரும்பும் சகல பிரஜைகளினதும், குறிப்பாக ஊறுபடத் தக்க தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்களின், இரு தசாப்த கால கொடூரமான யுத்தத்தின் உக்கிரத்திற்கு முகம்கொடுத்த ஏனையோரின் விருப்புகளுக்கு மதிப்பளித்து, யுத்தத்திற்கு மீளத் திரும்புதல் தவிர்க்கப் பட வேண்டும்.



15

# சமாதான செயன்முறைகள்: 2006இன் ஒரு யதார்த்தப் பரிசீலனை

என். ராம்

இலங்கையில் சமாதான நடவடிக்கைகளின் எதிர்பார்ப்புகள் தோற்று வித்துள்ள முக்கிய விடயங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக இந்திய அனுகூலக் கண்ணோட்டத்தில் என்னால் முடிந்த அளவுக்கு இவற்றை மதிப்பிட முயல்கிறேன்.

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு நிலையானதொரு அரசியல் தீர்வை எய்துவதைக் குறிப்பிடாத வகையில் சமாதான நடைமுறை தொடர்பான எதிர்பார்ப்புகள் அதிகளவு நீண்டகாலத்திற்குத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. 'இன' அல்லது தமிழ்ப் பிரச்சினையானது மீண்டும் வெடித்துள்ள வன்முறையுடன் உக்கிரமடைந்திருக்கிறது.

பொதுமக்களுக்கு எதிராகவும் கூடுதலாக இராணுவ இலக்குகளுக்கு எதிராகவும் விடுதலைப்புலிகள் வன்முறைகளையும் பயங்கரவாதத்தை யும் கடந்த சில மாதங்களாக மேற்கொண்டிருக்கிறார்கள். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின் ஆக்ரோஷத் துடன் அதிகரிக்கப்பட்டுள்ள இவ்வன்முறைகள் புலிகள் பாரிய திட்டத் துடனேயே செயல்படுகின்றார்கள் எனவும் கொள்ளக்கூடியதாக இருக் கிறது. இவற்றிற்குப் பதிலடியான தாக்குதல்களும் குறிப்பாகக் கிழக்குப் பிராந்தியத்தில் இடம்பெற்றுள்ளன. இவை, பிரிந்துசென்ற கருணா அணியினருடன் இணைந்து இராணுவம் மேற்கொள்ளும் வன்முறைகள் என்று புலிகள் கூறியுள்ளனர்.

இந்நிகழ்வுகள் சமாதானப் பணிகளை முன்னெடுப்பதற்கு மிகவும் தெளிவான பின்னடைவுகளாகும். 'யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை நடை முறைப்படுத்துதல்' என்பது தொடர்பாக, இலங்கை அரசும் புலிகளும் நிபந்தனைகளற்ற பேச்சுவார்த்தைகளில் சுவிட்சர்லாண்ட் நாட்டில் கலந்து கொள்வதற்கு இணக்கம் தெரிவித்திருப்பது, நிலைமையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளிம்பில் இருந்து பின்தள்ளியுள்ளதாகத் தெரிகிறது. ஆனால், காலமும் திருப்தி தரும் சூழ்நிலையும் குறைவாகவே உள்ளது.

சமாதான நடைமுறையின் உயர்புள்ளியை நினைவுபடுத்திப் பார்க்க முடியும். அது 2002 டிசம்பரில் ஒஸ்லோவில் நடைபெற்ற சுற்றுப் பேச்சு வார்த்தையின் நிறைவில் ஏற்பட்டது. இலங்கையில் இருதசாப்தங் களாக இடம்பெற்றுவரும் மோதலுக்கான அரசியல் தீர்வொன்றை எட்டக்கூடிய திருப்பம் ஒன்று எட்டப்பட்டுவிட்டதாக அப்போது ஒரு சர்வதேசக் கருதுகை இருந்தது. இந்த எதிர்பார்ப்பு சரியானதாக இருந்திருப்பின், பயங்கரமான அனுபவம் தொடர்பாகக் குறிப்பிடத் தக்க வெற்றி பெற்ற ஒரு களிப்பைக் கொண்டிருப்பதற்கான காரணம் இருந்திருக்கும். அப்படி இருந்திருப்பின் குறுகிய மற்றும் நீண்ட காலரீதியில் பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கான சவாலாக இருந்து, தீர்ப்பதற்குக் கடினமானது என்று கருதப்பட்ட பிரச்சினை அல்லது நெருக்கடி பற்றிய எமது மதிப்பீட்டை முழுமையாக மாற்ற வேண்டி இருந்திருக்கும்.

### சண்டை இன்மை 'எதிர்' சமாதானமாக

கடந்த இரண்டு தசாப்தங்களாகக் கண்டிராத வகையில், இலங்கை அனுபவித்து வரும் தற்போதைய யுத்தநிறுத்தம்தான் அனைத்து நம்பிக்கை களுக்கும் அடித்தளமாக அமைகிறது. பயங்கரமான வன்செயல்கள், இலக்குவைக்கப்பட்ட தாக்குதல்களின் மோசமான செயல்பாடுகள், பயங்கரவாதம், வாய்மூல அச்சுறுத்தல்கள், பேச்சு வார்த்தை இழுபறி போன்ற பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் யுத்தநிறுத்தம் நான்கு வருடங்களாக நடைமுறையில் உள்ளது. இதனை 'எதிர் சமாதானமாக' சில ஆய்வாளர்கள் விவரித்திருக்கிறார்கள்.

2002 பிப்ரவரியில் கைமெழுத்திடப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம் புலிகளுக்கு முறையற்ற விதத்தில் பாரதூரமான சலுகைகளை வழங்கி யுள்ளது என விமர்சிக்கப்பட்டபோதிலும், யுத்தநிறுத்தம் இலங்கையில் சகலத் தொகுதிகளிலும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் சம அளவில் பிரபல்யம் பெற்றிருந்தது என்பதில் சந்தேகம் இல்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தபடி இந்த யுத்தம் 60000 உயிர்களையும் 500 பில்லியன் இலங்கை ரூபாய்கள் பெறுமதியான அழிவையும் ஏற்படுத்தியுள்ளது. தென் இலங்கையில், சில பிரிவினர் யுத்தத்தின் மூலமாகப் புலிகளை அழித்து விடவேண்டு மென்ற தெளிவற்ற முறையில் வாதிட்டிருந்தாலும், இராணுவ நடவடிக்கைகள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டுகொள்ள முடியும் என எவரும் நம்பிக்கையை கொண்டிருக்கவில்லை.



சிக்கலான காரணிகள் அதிகளவானவையும் பயங்கரமானவையு மாகும். யுத்தம் இல்லாத காலப்பகுதியில் கிளர்ச்சி அமைப்பின் நடத்தை பற்றி ஆத்திரப்படுகின்ற பல சம்பவங்கள் வடக்கு, கிழக்கில் இடம் பெற்றிருக்கின்றன. அதன் அதிகார விளையாட்டு, மேலாதிக்க தாகம், தீவிரவாதப் போக்கு, சமாந்திர அரை – அரசக் கட்டமைப்புகளை விரிவுபடுத்தவதற்கான அதன் முயற்சிகள், இராணுவமயம் மற்றும் வெறுமையடைந்துள்ள தனது இராணுவ இயந்திரத்தை நிரப்புவதற்கும் முதன்மைப்படுத்துவதற்குமான தீர்மானம் என்பவை கடந்த காலத்தி லிருந்து ஒரு தடையை அது ஏற்படுத்தவில்லை என்பதையே காட்டு கின்றன. கடல் வழியாக அந்த அமைப்பு ஆயுதக் கப்பல்களை வருவித்துக் கொள்கிறது என்பதற்கான நம்பகரமான அறிக்கைகள் தெரிவிக்கின்றன. சமன்பாட்டில் நீண்டகாலமாக, பலவீனமானதாக இருந்துவரும் கிழக்கு மாகாணம் தற்போது அந்த அமைப்பிற்குள்ளான உள்முரண்பாடு காரணமாக முதன்மையடைந்திருக்கிறது. குறிப்பானதொரு வகையில் கருணாவின் கிளர்ச்சிக்கு உத்தியோகபூர்வமான ஒரு ஆதரவு இருப் பதாகத் தெரிகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைபினூடாக மிதவாதம், தீவிரவாதம் ஆகிய இருகோடுகளுக்குமிடையே விடுதலைப்புலிகளுக்குப் பாராளுமன்றத்தில் என்றுமில்லாத வகையில் வலு இருக்கிறது. இந்த வலுவானது அரசியல் வலியுறுத்தல்களை நசுக்குவது என்றவகையில் ஓரளவிற்கு முன்னர் அழிக்கப்பட்டிருந்தது.

அரசியல் மட்டத்தில் சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்தான விடுதலைப்புலிகளின் ஒருதலைப்பட்சமான விலகலுடன் 2003இல் முடிவுக்குவந்த ஆறு சுற்றுப் பேச்சுகளும் அரசியல்ரீதியான தீர்வுக்கான தாக்கத்திற்கு எவ்விதப் பங்களிப்பையும் செய்யவில்லை. 24 ஜூன் 2005இல் கையெழுத்திடப்பட்ட சுனாமிக்குப் பின்னான முகாமைத்துவக் கட்டமைப்பு, சமாதானப் பேச்சுவார்த்தைகளின் தோல்வியால் ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்தையேனும் நிரப்பும் என்று அரசாங்கத்தால் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தென்னிலங்கை அரசியல் சம்பந்தமான காரணிகளால் அது செயல்படத் தவறியது. அரசு விரும்பியோ அல்லது அரசியல்ரீதியான ஒரு தீர்வை நோக்கி விடுதலைப்புலிகளை நகர்த்து வதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கான பெரிய பின்னடைவு களாக இவை அடையாளம் காணப்பட வேண்டும்.

ஆனால், நன்மையைக் குறைத்து எடைபோடக் கூடாது. மரபுரீதியான கெரில்லா யுத்தம் இல்லாத சூழ்நிலையில் முழுமையான நிவாரணம் வலுவானதாக இருப்பதுடன் எதிர்மறைச் சக்திகளைத் தடுத்து நிறுத்தி இருக்கிறது. பொருளாதார, அரசியல் மற்றும் சமூகரீதியாக இலங்கைக் கான சமாதானப் பலாபலன் என்பது வெளிப்படையானது. இதற்கு எந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆதாரமும் வேண்டியதில்லை. யுத்தம் இல்லாத இந்தக் காலப்பகுதியில் சர்வதேசரீதியிலும்கூட, நிவாரணம் இருந்து வருகிறது. பேச்சுவார்த்தைகள் மூலமாக அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ளப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு அரசியல் இடத்தையும் புதிய வாய்ப்புகளையும் இந்தச் சமாதான அடித்தளம் வழங்கியிருக்கிறது. கோட்பாடு மற்றும் எதிர்பார்க்கப்பட்ட தீர்வின் கூறு ஆகியவற்றின் அடிப்படையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விசாலமாகச் சென்றிருந்தார். ஆனால், ஒரு சுயாதீனமான இந்தியரின் அவதானிப்பில், ஜனநாயக அரசியல் அமைப்பிற்குள் ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்தும் தன்மை மற்றும் செயல்பாட்டில் ஐக்கிய தேசிய கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லை என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது. இவ்வாறான ஒரு தீர்வு,

1. ஐக்கிய இலங்கைக்குள் வட, கிழக்கில் சமஷ்டி முறையிலான பெரும்பாலும் சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு.
2. இதை அடையும் பொருட்டு அரை அல்லது கால் வழியாக இடைக் கால ஏற்பாடாக இடைக்கால நிர்வாகம்.

எப்படியிருந்தாலும் நாம் எல்லோருமே அறிந்தவகையில் விடுதலைப் புலிகள் எவ்விதம் தெரிவுசெய்து செயல்படப் போகிறார்கள் என்பதிலேயே ஒவ்வொன்றும் தங்கியிருக்கிறது.

### விடுதலைப்புலிகள் உண்மையான தெரிவைக் கொண்டுள்ளனரா?

யுத்தம் அல்லது சமாதானம் என்ற விடயத்தில் விடுதலைப்புலிகள் எந்தளவிற்கு சுயாதீனமானவர்கள் அல்லது வரையறை உடையவர்கள் என்ற இரண்டாவது பிரதானமான கேள்விக்கு இது இட்டுச் செல்கிறது.

செப்டம்பர் 11இற்குப் பின்னரான நிலைமை மற்றும் பயங்கரவாதத்திற்கெதிரான சூழ்நிலை ஆகியவற்றில் விடுதலைப்புலிகளுக்கு வேறு தெரிவு இல்லை என்றும் அவர்கள் யுத்தப் பாதைக்கு திரும்புவதும் வெளிபடையாகப் பயங்கரவாதத்தில் ஈடுபடுவதும் நிராகரிக்கப்பட வேண்டும் என்றும் சிலர் வாதிட்டனர். செப்டம்பர் 11க்கு முன்னர்கூட முக்கியமான சில நாடுகள், குறிப்பாக இந்தியா, அமெரிக்கா, ஐக்கிய ராச்சியம் ஆகியவை, விசேடச் சட்டங்களின் கீழ்ப் புலிகளுக்குத் தடைவிதித்தன அல்லது புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனப்படுத்தின. ஆஸ்திரேலியா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை அண்மையில் இதே வழியில் நடவடிக்கை எடுத்திருக்கின்றன. இதன் காரணமான சாத்தியமானத் தடை என்னவென்றால், அபிவிருத்தி அடைந்த நாடுகளில் புலிகள் நிதி சேகரிப்பதற்கான பாதகமான



சூழ்நிலைதான். வெளி வளங்களில் இருந்தான நிதி சேகரிப்பில் ஏற்படக்கூடிய வீழ்ச்சியின் முழுமையான உறுதிப்பாடானது அவர்கள் மீண்டும் வன்முறைக்குத் திரும்புவதற்கான வினைத்திறன்மிக்க தடையாகச் செயல்படும் என்று ஆலோசனை பகரப்பட்டிருக்கிறது.

இத்தகைய தடைக் காரணிகள் உண்மையானவை. மீண்டும் யுத்தத்திற்குச் செல்ல முடியாது என்ற கருத்தைப் பரிசீலிக்கின்றபோது, இத்தடைக் காரணிகளை ஒதுக்கிவைத்துவிட முடியாது. வேறு வகையில் கூறுவதென்றால், இத்தடைக் காரணிகள் செயல்படுகின்றனவா என்பதல்ல பொருத்தமான கேள்வி. புலிகள் அமைப்பின் நிரூபிக்கப்பட்ட தீவிர வாதம், அதன் விட்டுக் கொடுக்காத போக்கு, ஆயுதப் போராட்டம் மற்றும் பயங்கரவாதத்தினூடாகத் தமிழீழத்தை அடைவது என்ற அவர்களது பற்றுறுதி மற்றும் பல வருடங்களாக அவர்கள் கட்டியெழுப்பியுள்ள எதிர்க்க முடியாத இராணுவபலம் மற்றும் அரசியல் திறமை ஆகியவற்றுக்கு எதிராக இத்தடைக் காரணிகள் தாக்குப்பிடிக்குமா என்பதே கேள்வி.

யுத்தம் அல்லது சமாதானம் என்ற விடயத்தில் எந்தளவிற்குப் புலிகள் சுயாதீனமான அல்லது வரையறை கொண்ட செயல்பாடுடையவர்கள் என்ற கேள்விக்கான ஒரு மாற்று விடையை அனுபவம் மிக்க இலங்கைப் பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமான டி.பி.எஸ். ஜெயராஜ் 2003ஆம் ஆண்டு முன்மொழிந்துள்ளார்: ‘இது தெரிவதுபோல மயக்கமானது, புலிகள் தமது அடிப்படை நோக்கங்களை மறுசீரமைக்கவில்லை. ஒரு அரசியல் நடவடிக்கையாக தந்திரோபாயமான நகர்வை மட்டும் மேற்கொண்டார்கள். அவ்வாறானால் புலிகளின் விளையாட்டுத் திட்டம் தெளிவானது. சமஷ்டி முறைமை அடிப்படையில் தீர்வுக்காக முயல்வது என்ற அறிவிப்பு உண்மையில் சர்வதேச நுகர்விற்கானது. தாம் ஏதேனும் கண்டனத்திற்குட்படாத வகையில் சமாதானப் பேச்சுவார்த்தை ஒரு கட்டத்தில் தோல்வியடைய வேண்டும்’ என்பதே புலிகளுடைய விருப்பம் என்று தெரிகிறது. தர்க்கரீதியாக எந்த முடிவுக்கும் சமாதான செயன்முறை வந்துவிடக் கூடாது. பதிலாகத் திருப்திகரமான தீர்வுக்கான கட்டமைப்பு அமைக்கப்படாத வகையில் அது தோல்வி அடைய வேண்டும். அது நடைபெற்றால் அல்லது நடைபெறும்பொழுது புலிகள் சமாதான நடைமுறையிலிருந்து விலக முடிவதுடன் தமது வெளியகச் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி மீண்டும் பிரிவினைவாத யுத்தத்தை தொடரலாம். சமஷ்டித் தீர்வுக்கு வருவதில் கொழும்பின் தவறைச் சுட்டிக்காட்டி ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் துயரங்களையும் நிவர்த்திப்பதற்குச் சிங்கள மக்கள் இயலாதவர்கள் என்று புலிகள் உரைப்பர் (ஒரு சாதுர்ய நகர்வு, *ஃப்ரண்ட் லைன், ஜனவரி 3, 2003*).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், 27 நவம்பர் 2005 இல் நிகழ்த்திய மாவீரர் தின உரையில், யுத்தநிறுத்தம் முடிவடைந்துவிட்டதாக சூசகமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பது பல ஆய்வாளர்களின் கருத்து. பிரபாகரன் தனதுரையில் 'தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைத் திருப்திசெய்யும் வகையிலான நியாயமான ஓர் அரசியல் தீர்வை அடுத்த ஆண்டில் முன்வையுங்கள் என்று அரசாங்கத் திற்கு அவசரமானதும் இறுதியானதுமான வேண்டுகோள் விடுத்தார். இந்த வேண்டுகோள் அலட்சியம் செய்யப்பட்டால், எமது தாயகத்தில் சுய அரசாங்கத்தை நிறுவுவதற்கான தேசிய விடுதலைப் போராட்டத்தை விடுதலைப்புலிகள் துரிதப்படுத்துவர்' என்று கூறியிருந்தார். பிரபாகரன் குறிப்பிட்ட 'அடுத்த ஆண்டு' என்பது எல்லை அற்றது என்றும் பிரபாகரனின் நவம்பர் 2006ஆம் ஆண்டு மாவீரர் தின உரைவரை யிலுமானது எனவும் அவரது உரை அர்த்தப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆனால், செல்கின்ற பாதையானது கடந்தகாலப் பாதைகளின் பதிவுகளால் ஆதரவளிக்கப்பட்டது என்று, கோடுகளுக்கிடையிலான கடுமையான வாசிப்புகள் கூற முடியும். நீடிக்கப்பட்ட இந்த யுத்தமற்ற காலப்பகுதியில் அமெரிக்கா தலைமையிலான அபிவிருத்தியடைந்த நாடுகளின் தெளிவான சமிக்ஞை உட்பட்ட சர்வதேச நிலைமையானது, இராணுவ மோதலில் இருந்து புலிகளை விலகியிருக்க நிர்ப்பந்திப் பதற்குத் தொடர்ச்சியாக அழுத்தம் பிரயோகிக்க முடியுமா இல்லையா என்ற கேள்வி இங்கு வெளிப்படையாக வைக்கப்பட வேண்டும். விடுதலைப்புலிகள் மீண்டும் யுத்தத்திற்குச் செல்கின்ற தருணத்தில் இந்தியா எடுக்கக்கூடிய நிலைப்பாடும் நடைமுறைச் செயல்பாடுகளும் நிச்சயமாக நெருக்கடியான காரணிகளாக இருக்கும்.

## தென்னிலங்கைக் கருத்தொருமைப்பாடு சாத்தியமா?

எந்தவொரு சமாதானப் பேச்சுவார்த்தையும் வெற்றிபெறும் பொருட்டு, எதிர்பார்ப்புரீதியாக இருபிரதான சிங்கள அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி ஆகியவற்றினதும் தெற்கில் பிரபலம் வாய்ந்த சகல கட்சிகளினதும் பரந்தளவிலான உடன்பாடு வெற்றிகொள்ளப்பட வேண்டும் என்பது வெளிப்படையானது. உண்மையில் இது உயர்வரிசையில் இருக்கிறது. கள மட்டத்திலே ஜேவிபி கண்டிருக்கின்ற முன்னேற்றம் காரணமாகவும் அரசாங்கத்தின் தீர்மானங்கள் தொடர்பாக அதன் செல்வாக்குக் காரணமாகவும் இன்று நிலைமை சிக்கலடைந்திருக்கிறது.

விடுதலைப்புலிகளின் எதிர்ப்பு ஒருபுறம் இருக்கத் தெற்கில் போட்டிக் கட்சிகளிடையேயும் ஆளும்கட்சி மற்றும் அரசாங்கத்திற்குள்ளேயும்



ஆகக்குறைந்த உடன்பாடு இல்லாதது காரணமாக, இந்திய–இலங்கை உடன்படிக்கை அரசியல் குழப்பத்திற்குள் சென்றது என்பது நன்கு நிரூபிக்கப்படுகிறது. தமிழ் பேசுகின்ற மக்களின் நியாயமான அபிலாஷை களையும் கோரிக்கைகளையும் திருப்திசெய்வதற்குத் தேவையான முறையான ஒரு மாற்றம் தொடர்பாகச் சிங்கள அரசியல் இணக்கப் பாடொன்றை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் நிச்சயமாக இருக் கின்றன. வடக்கு, கிழக்கில் சமஷ்டிக் கட்டமைப்பு மற்றும் அதிகாரப் பரவலாக்கம் ஆகியவை தொடர்பாக ஜனநாயக அமைப்பினுள் ஒரு குறைந்தபட்ச தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை (என்சிஎம்பி இந்திய அரசியல் பதம்) இருபிரதானக் கட்சிகளும் செயல்படுத்த முடியுமானால், அது நேர்மையான ஒரு சாதனையாக இருக்கும். ஆனால் இத்தகைய ஒரு கட்டமைப்பைப் புலிகள் எப்பொழுதாவது ஏற்றுக்கொள்வார்களா என்பது மற்றொரு கேள்வி.

## இடைக்கால நிர்வாகம் பற்றி?

இறுதி சமாதானம் அடையப்படும்வரை வட–கிழக்கில் இடைக்கால நிர்வாகம் என்ற எண்ணக்கருவானது, இந்திய–இலங்கை உடன்படிக்கை அமலாக்கம் தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டத்துடனேயே முதன்முதலில் வெளிவந்தது (உடன்படிக்கையின் விபரங்கள் இடைக்கால நிர்வாகம் பற்றி எதனையும் குறிப்பிடாதபோதிலும்). ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தியாவின் தாராளமான முன்மொழிவுகளைப் புலிகள் முதலில் ஏற்றுக்கொண்டு, பின்னர் முயற்சிக்கப்பட்ட அரசியல் தீர்வுக்கான அஸ்தமனத்தை ஏற்படுத்து கின்ற பாரதூரமான விளைவுகளுடன் அதிலிருந்து பின்வாங்கினர்.

இறுதியான ஒரு அரசியல் தீர்வை அடைவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அவசரப்படவில்லை என்பதும் யுத்தமின்மை இருக்கின்றவரையில் விடுதலைப்புலிகளுடன் வட, கிழக்கிற்கான சந்தர்ப்பத்திற்கேற்ற நடைமுறை ஏற்பாடுகளைத் திருப்திப்படுத்துவதும் தான்.

இறுதியான ஒரு அரசியல் தீர்வை அடைவதற்கு அவசரப்படாமலும் யுத்தமின்மை இருக்கின்றவரையில் விடுதலைப்புலிகளுடன் வடக்கு, கிழக்கிற்கான சந்தப்பத்திற்கேற்ற நடைமுறை ஏற்பாடுகளுடன் திருப்திப் படுத்துவதுமே ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினது உபாயம் என்பது பரந்தளவிலான கருத்து. வடக்கு–கிழக்கை, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்போகிறது என்ற பீதி இலங்கையிலும் இந்தியாவிலும் வெளிப்படுத்தப்பட்டது. விடுதலைப்புலிகளின் மேலாதிக்கம் நிறைந்ததும் முஸ்லிம்கள் மற்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏனைய பிரிவினரின் அடையாளப் பிரதிநிதித்துவத்தையும் கொண்டதான இடைக்கால நிர்வாகசபையே இந்தக் 'கையளிப்பு' என்று கூறப்பட்டது. வன்னியிலுள்ள ஒரு காட்டுப் பகுதியில், 10 ஏப்ரல் 2002 அன்று நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் பேச்சு வார்த்தை வட, கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது பற்றியதாகவே இருக்கும் என்று புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அறிவித்தார்.

இது இலங்கையிலும் வெளிநாட்டிலும் அரசியல் விமர்சனங்களுக் குட்படுத்தப்பட்டது. ஜனநாயக மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான கவலைகள் எழுப்பப்பட்டன. இது அரசியல் மற்றும் சட்டச் சிக்கல்களைப் பின்னணியில் கொண்டது என்பது பின்னர் தெளிவானது. சிறிது காலத்திற்கு இடைக்கால நிர்வாகம் என்ற விவகாரத்தைக் கடந்து செயல்படுகின்ற ஒரு தொழில்நுட்பத்துடனும் வலுவூட்டப்பட்ட குழு வழிமுறையூடாகவும் புலிகள் இயக்கம் செல்லும் எதைத் தோன்றியது. ஆனால், இலங்கையின் அரசியல் அமைப்பிற்குள் ஏற்றுக்கொள்ள முடியாத இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான முறையற்ற ஒரு முன்மொழிவை வெளியிட்டு, இதன் அடிப்படையில் மட்டுமே அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்கப்பட முடியும் என்று புலிகள் வலியுறுத்தினர். இடைக்கால நிர்வாகம் தொடர்பான ஐதேக–சுதந்திரக்கட்சி ஆகியவற்றுக்கிடையிலான இருதரப்பு இணக்கம் மற்றும் இறுதித் தீர்வுக்கான ஏற்பாட்டின் தொடர்பும் முற்றிலும் தவிர்க்க முடியாதாயிற்று. ஒரு இந்திய ஒப்பீட்டுப் பார்வை இங்குப் பொருத்தமானதாக இருக்கலாம். காஷ்மீர் நிலைப்பாட்டில் அல்லது காஷ்மீர்ச் சர்ச்சை பற்றிப் பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு செயல்திட்டம் தொடர்பாக இந்தியாவின் இரு பிரதான அரசியல் கட்சிகளான காங்கிரஸூம் பிஜேபியும் தவறியமைமையை ஒத்ததே இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு இருபிரதானக் கட்சிகளும் உடன்பாட்டுக்கு வரத் தவறியமையுமாகும்.

## இணை அரசக் கட்டமைப்பிற்கு நடக்கப்போவதென்ன?

2002ஆம் ஆண்டு டிசம்பர் 13இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கையில் பின்வரும் கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன: 'ஐக்கிய தேசிய முன்னணி அரசு எங்கே போகிறது என்பது அதற்குத் தெரியுமா? அதன் சேருமிடம் அதற்குத் தெரியுமா? சேரும் இடத்தை அடைந்ததும் நாம் காணப்போவது என்ன? நிலையான இராணுவம், நிலையான கடற்படை, நிரந்தரமான நிர்வாகம் சுயேச்சையான நீதி பரிபாலனம், வரிக்கட்டமைப்பு, வங்கி முறைமை



இவையெல்லாம் ஒரு நட்பு நாமத்தால் தனிநாடு என்பதைவிட வேறு எதனைக் குறிக்கும்?

சர்ச்சைக்குரிய தொனியாக இருந்தாலும் இந்தக் கேள்விகள் பொருத்த மானவையாக இருந்தன. உண்மையில் சமாதான நடைமுறை எதிர் கொண்டிருந்த சவாலின் இதயப் பகுதிக்கு இவை சென்றன. ஒரு தர்க்கத்திற்காக சமாதான நடைமுறையில் முன்னேற்றம் காணப்படும் என்று கருதுவோமானால், ஆயுதக்களைவு விவகாரம் (புலிப் போராளி களின் ஆயுதக்களைவு பற்றிக் குறிப்பிடவில்லை) தீர்க்கப்பட வேண்டி யிருக்கிறது. அதேபோல், விடுதலைப்புலிகளால் பயிற்சிக்காகக் குடும்பங்களில் இருந்து பிரிக்கப்படும் சிறுவர்கள் உள்ளடங்கலான மனித உரிமை விவகாரங்கள் கவனத்தில்கொள்ளப்பட வேண்டும். அரை அரசக் கட்டமைப்புகளின் இருப்பு, தமது சொந்த நிறுவனங் களின் இருப்பு மற்றும் ஆயுதக் கையிருப்பு ஆகியவை சமாதான நடைமுறையின் முன்னேற்றத்திற்குப் பிரதான தடங்கலாக இருக்கும். கட்டம் கட்டங்களாகவாவது இந்தச் சமாந்தர (இணை) அரசக் கட்டமைப்பு களை இல்லாமல் செய்வதற்குப் புலிகள் இணங்குவார்களா?

## இறுதித் தீர்வுக்கான செயல்திட்டம்

அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையில் ஒஸ்லோவில் நடைபெற்ற மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிவிப்பு பெரும் அரசியல் ஆச்சரியமாக அமைந்தது. தமிழ் பேசும் மக்களின் தாயகப் பிரதேசங்களில் சமஷ்டி முறைமையின் கீழ் ஐக்கிய இலங்கைக்குள் உள்ளகச் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப் படையில் தீர்வுகாண்பதற்குப் புலிகள் முடிவு செய்தனர். யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பலப்படுத்துதல், மனிதாபிமான மற்றும் புனர் வாழ்வுச் செயல்பாடுகள் மற்றும் அரசியல் விவகாரங்கள் ஆகிய மூன்று பிரதான விடயங்கள் தொடர்பாக ஏககாலத்தில் பேசும் பொருட்டு அரசியல் நிகழ்ச்சித்திட்டம் கொண்டுவரப்பட்டதாகத் தெரிந்தது.

ஆனால், பின்னர் வலியுறுத்துகின்ற கேள்விகள் கேட்கப்பட்ட பொழுது முதலான கோட்பாடோ அல்லது அரசியல் தீர்வொன்றின் சுற்றுக்கோடுகளோ பேச்சுவார்த்தையாளர்களால் வரையறை செய்யப் படமுடியவில்லை. அடிப்படைக் கோட்பாடுகள், களயதார்த்தங்கள் மற்றும் நடைமுறை என்று வருகின்றபொழுது பாரியதொரு இடைவெளி யுத்தநிறுத்த உடன்படிக்கையின் இருதரப்பினரையும் வேறுபடுத்துகிறது.

ஒஸ்லோவில் அறிவிக்கப்பட்ட வெற்றியின் பிரதான வார்த்தை களானவை.

அ. உள்ளகச் சுயநிர்ணயக் கோட்பாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆ. ஒரு சமஷ்டிக் கட்டமைப்பு

இ. தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுரீதியான வாழ்விடங்கள்

ஈ. ஒரு ஐக்கிய இலங்கை.

இங்கு, முதல்முறையாக உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றில் (அ)இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் இலங்கை அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (ஆ)இல் குறிப்பிடப்பட்ட விடயம் முதல் தடவையாக உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றில் புலிகளால் ஏற்றுக்கொள்ளப் பட்டது. (இ)இல் குறிப்பிடப்பட்ட விடயமானது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் இருந்து எடுக்கப்பட்ட உருவாக்கமாகும். (ஈ) என்பது சர்வதேசப் பொது அபிப்பிராயம் காரணமாகப் புலிகள்மீதான அழுத்தம்.

ஆனால், பிரதானமான கோட்பாடுகளை விவரிக்கின்ற முக்கியமான இந்த வார்த்தைகள் எவ்வாறு ஒத்து இயங்கப்போகின்றன? உதாரணமாக, உள்ளகச் சுயநிர்ணயத்திற்கும் சமஷ்டி அமைப்பிற்குமிடையிலான தொடர்பு என்ன? தமிழ் பேசுகின்ற மக்கள் வாழ்கின்ற வரலாற்று ரீதியான பகுதிகள் என்பது, 2002 நவம்பர் மாவீரர் நாள் உரையில், ஒஸ்லோவில் என்ன நடைபெறவிருந்தது என்பதற்கான நிபந்தனைகளைக் குறிப்பிடார்: 'சுயநிர்ணயத்திற்கான உரிமையில் புலிகள் திடமாக இருப்பதை உறுதிப்படுத்தியதுடன் தமிழர் தாயகம், தமிழ்த் தேசம், சுயநிர்ணத்திற்கான தமிழர்களின் உரிமை' ஆகியவை எமது நோக்கங்களின் அடிப்படைகள் என்றும் திம்பு முதல் தாய்லாந்துவரை இந்த விவகாரங்களைப் புலிகள் வலியுறுத்தி வருவதாக விளக்கினார். தனிப்பட்ட ஒரு இனம் என்ற வகையில் சுயநிர்ணயத்திற்கான உரிமை தமிழ் மக்களுக்கு இருக்கிறது என்று வலியுறுத்திய அவர், இந்த உரிமையானது 'உள்ளக மற்றம் வெளியக என்ற இரண்டு பகுதிகளைக் கொண்டது' என்றும் கூறினார். உள்ளக சுயநிர்ணயமானது சுய ஆட்சிக்கு உரித்துடையது. புறச்சக்திகளின் ஆதிக்கம் இன்றி வரலாற்றுரீதியாக அமைந்த பாரம்பரிய நிலங்களில் சுதந்திரத்துடனும் இறைமையுடனும் தமிழ் மக்கள் வாழ வேண்டும். தமது மொழி, கலாசாரம் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை வளப்படுத்தித் தமது தேசிய அடையாளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதுடன் சுய ஆட்சி என்ற முறைமையின் அடிப்படையின் கீழ்த் தமது தாயகத்தில் அவர்கள் வாழ வேண்டும். 'எமது மக்களின் அரசியல் அபிலாஷை' என்று இதனை வகைப்படுத்தி, உள்ளகச் சுயநிர்ணயத்தின் அவசியமான கருத்தை இந்த வலியுறுத்தல் உருவாக்கியிருக்கிறது என்று புலிகளின் தலைவர் அழுத்தியுரைத்தார். பின்னர், ஒஸ்லோ வெற்றிக்கான கட்டத்தை நிர்ணயித்த பிரதானமான சூத்திரம் வெளிவந்தது. உள்ளகச் சுயநிர்ணயத்திற்கான எமது உரிமையின் அடிப்படையில் எமது தாயகத்தில் கணிசமான



பிராந்திய சுயாட்சி மற்றும் சுய அரசாங்கம் ஆகியவற்றை வழங்குகின்ற ஓர் அரசியல் செயல்திட்டத்தைச் சாதகமான முறையில் பரிசீலிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஒஸ்லோ பிரகடனத்தில் எது தவறு கின்றது என்றால், 2002 மாவீரர்தின உரையில் பிரபாகரன் விடுத்த அச்சுறுத்தலாகும். 'எமது சுயநிர்ணயத்திற்கான உரிமை மறுக்கப்படுமானால், பிராந்திய சுயாட்சிக்கான எமது வலியுறுத்தல் நிராகரிக்கப் படுமானால் பிரிந்து சென்று தனியரசை அமைப்பதைத் தவிர வேறு எந்த மாற்று வழியும் எமக்கு இல்லை' என்று அவர் எச்சரித்திருந்தார். ஈழம் என்ற இலக்கைக் கைவிட்டு, ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி மூலமான தீர்வுகாண்பதை இது கருதுகிறதா? வரலாற்றுரீதியாகத் தீர்மானிக்கப் பட்ட இலங்கைத் தமிழ் மக்களின் பிறப்புரிமை என்று விடுதலைப் புலிகளால் உரிமை கோரப்பட்ட தாயகத்திற்கு இணையானதா? ஐக்கிய இலங்கைக்குள் உள்ளகச் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு பயன்படுத்தப் பட முடியுமா?

சிக்கலான இந்தக் கேள்விக்கு விடையளிக்கும் பொருட்டு எமக்குச் கோட்பாடு மற்றும் நடைமுறை ஆகியவற்றின் அடிப்படையிலான ஏராளமான வழிகாட்டல்கள் இருக்கின்றன. முதலில் 1985 ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் விடுதலைப்புலிகள் மற்றும் ஏனையத் தமிழ் ஆயுதக் குழுக்களால் முன்வைக்கப்பட்ட நான்கு திம்புக் கோட்பாடுகளில் முதல் மூன்று கோட்பாடுகளும் இருக்கின்றன. அடுத்து, 1989ஆம் ஆண்டு பிரபாகரனின் பிரபல்யமான மாவீரர்தின உரை இருக்கிறது. அதில் அவர், எப்பொழுதேனும் தமிழீழம் என்ற இலட்சியத்திற்குத் துரோகம் செய்தால் தன்னைச் சுட்டுக்கொல்லுமாறு போராளிகளுக்குக் கூறியிருந்தார். வன்னியில் 2002 ஏப்ரல் 10இல் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில், இந்த அறிவித்தல் இன்னமும் செல்லுபடியாகுமா என்று இந்தியச் செய்தியாளர் ஒருவர் பிரபாகரனிடம் கேள்வி எழுப்பினார். அதற்குப் பிரபாகரன் அளித்த விடை மிக எளிதான உறுதிப்படுத்தலாக இருந்தது.

1957இன் பண்டா–செல்வா உடன்படிக்கையின் சிறந்த கூறுகள், 1987இன் இந்திய–இலங்கை உடன்படிக்கை, 1995–2000ஆம் ஆண்டுகளின் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் முன்மொழிவுகள், ஐக்கிய தேசியக் கட்சியின் வெளியிடப்படாத அதிகாரப்பகிர்வு முன்மொழிவுகள் மற்றும் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இலங்கையின் சுயாதிபத்திய மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கின்ற வகையிலான உச்சபட்ச அதிகாரப் பகிர்வு என்ற சிந்தனை ஆகியவை சிங்கள அரசியல் இணக்கப்பாட்டினூடாக ஒன்றுபடுத்தப்படவும் மேம்படுத்தப்படவும் முடியும் என்று இன்னமும் நாங்கள் கருதுவதா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை சமாதானச் செயன்முறையில் இந்தியத் தயாரிப்பின் அவநம்பிக்கையைப் புகுத்துவது இங்கு எனது நோக்கம் அல்ல. 2002 யுத்தநிறுத்த உடன்படிக்கையால் எழுப்பப்பட்டுள்ள நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் தொடர்பாக என்ன நடைபெற்றிருக்கிறது, என்ன நடைபெறவில்லை என்ற யதார்த்தப் பரிசீலனைக்காகக் கேட்பவை களாகும். இது வெற்றிகொள்ளப்பட முடியாத ஒரு யுத்தத்திற்கு இலங்கை மீளவும் தள்ளப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காகச் செயல் படுவதற்கான நல்லெண்ணம் கொண்ட மக்களின் நியாயமுடைய மக்களின் செயல்பாடாகும். இலங்கையின் முதலான தேசியப் பிரச்சினையாக 'இன' அல்லது தமிழ்ப் பிரச்சினையின் சில முக்கியமான அம்சங்களுக்கும் இந்திய–இலங்கை உறவுகளுக்குமிடையே தெளிவான தொடர்பு இருக்கிறது. 1987ஆம் ஆண்டு இந்திய–இலங்கை உடன் படிக்கை அந்த நேரத்தில் மிகவும் சர்ச்சைக்குரியதும் கருத்தொருமைப் பாட்டைப் பெறாததும் என்றால், அது இன்று எமக்குப் பிரத்தியேகமான பாடங்களைக் கொண்டிருக்கின்றது. இலங்கையின் முதலான தேசியப் பிரச்சினைக்கு, இலங்கையின் ஒருமைப்பாடு, இறைமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாடு ஆகியவற்றிற்குள் தீர்வைக் காண்பதற்காகப் பாடுபடுபவர்களுக்குத் தீர்வுக்கான இந்த 'கருதுகைச் செயல்திட்ட மானது' கூடவோ குறையவோ ஒரு செயல்திட்ட மாதிரியாகவும் வடக்கு–கிழக்கின் இடைக்கால நிர்வாகத்தின் உள்ளடக்கம் மற்றும் தன்மை ஆகியவை தொடர்பான தலையாய பிரச்சினைக்கானதுமாக இருந்தால், 1980களில் வெளிப்படுத்தப்பட்ட வெற்றிகரமற்ற சாதனைக் காரியங்கள் கருதுகை அடிப்படையிலும் அரசியல் அடிப்படையிலும் மீளவும் தொடரப்பட்டுக் கட்டியெழுப்பப்பட முடியும்.

இந்திய–இலங்கை உறவின் எழுச்சி பெற்றுவருகின்ற எதிர்காலம் குறித்து முன்கூட்டியே நாம் குறிப்பிடுவதற்கு அனுபவம்தான் கூடுதலான வழிகாட்டலாக இருக்கிறது. இது விடயத்தில் முரண்பட்டதாக இருந் தாலும் உண்மையாகத் தெரியக்கூடிய இந்த எளிய ஆலோசணையை முன்வைக்கின்றேன். 'இன' அல்லது தமிழ்ப் பிரச்சினைக்கும் இந்திய–இலங்கை இருதரப்பு உறவுகளுக்குமிடையிலான தொடர்பு (1983 மற்றும் 1991இற்குமிடையே இது நேரடியானதும் முற்றிலும் வெளிப் படையானதுமாகும்) 1991இற்குப் பின்னர் மதிப்பிடுவதற்கு மிகவும் கடினமானதாகவும் குறைந்தளவு நேரடியானதாகவும் வந்திருக்கிறது. முக்கியமான ஒரு படிப்பினையுடன் ஒரு முக்கியமான போக்கு மாற்றம் இந்தியாவால் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, இலங்கை யின் பொதுமனோநிலை மற்றும் அரசியல் சிந்தனையில் ஆகக் குறைந்தது பகுதியானதொரு முக்கிய மாற்றம் இடம்பெறுகிறது. இந்தத் தொடர்பானது இலகுவாக உயிர்வாழும் என்று நான் கருதவில்லை.



ஆனால், உண்மையில் இது வலுப்பெறும். பாக் நீரிணையின் இரு பக்கத் தினருடைய மதிப்பீடுகளை அதிகரிக்கக்கூடியதாகவும் மறுவுறுதிப் படுத்துவதற்கான மூலமாகவும் இருப்பதாக நான் நம்புகிறேன் – இது யுத்தமின்மை கடைப்பிடிக்கப்படுகிறதா இல்லையா என்பதிலிருந்து சுயாதீனமானது.

இரு நாடுகளிலும் நெருக்கமான ஆலோசணை மற்றும் பூரணமான அரசியல் நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் சச்சரவற்ற இந்திய –இலங்கை உறவுகளைக் கட்டியெழுப்புகின்ற நடைமுறை வலுவான பொருளாதார உள்ளடக்கத்துடன் அரசியல் பிளவுகளுக்கும் மேலாக ஆதரவை வென்றிருப்பதுடன் அதிகாரத்தில் இருக்கின்ற கட்சி அல்லது தலைவரை கருத்திற்கொள்ளாமல் வசதியான ஓர் அரசக் கொள்கையாக வந்திருக்கிறது.

1991இற்குப் பின்னர் இந்தியத் தரப்பைப் பொறுத்தவரையில் எந்த அரசாங்கம் ஆட்சியில் இருக்கிறது என்பதைப் பொறுத்துக் கொள்கை அபிவிருத்தி மற்றும் செயல்படுத்துகை என்பவற்றில் மிகச் சிறிய மாற்றங்களும் வேறுபாடுகளும் இருக்கின்றன. 1991இற்குப் பின்னதான காலப்பகுதி நான்கு வகையான அரசாங்கங்களைக் கண்டிருக்கிறது. காங்கிரஸ் அரசாங்கம், அதைத் தொடர்ந்து மூன்று கூட்டு அரசாங்கங்கள் அதாவது ஐக்கிய முன்னணி அரசாங்கம், பாரதிய ஜனதா தலைமை யிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் மற்றும் தற்போதைய காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் அத்துடன் ஆறுவரையிலான பிரதமர்கள். இது எதைகாட்டுகிறது என்றால், இந்திய அமைதிகாக்கும் படையினர் திரும்பிய பின்னர் வடிவம் மாறிய கொள்கைப் போக்கின் தொடர்ச்சியும் நேர்த்தியான தன்மையும் 1991 மே 21ஆம் தேதி சென்னைக்கு அருகே ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் காந்தி விடுதலைப்புலிகளால் கொலைசெய்யப்பட்ட பின்னர் கடினமான நிலையில் இது நிர்ணயிக்கப்பட்டது. இலங்கைத்தரப்பில் கூட 1994இற்குப் பின்னர் இந்தியாவை நோக்கிய அதன் உத்தியோக பூர்வக் கொள்கை குறிப்பிடத்தக்க அளவு வசதியானது. எழுச்சி பெற்று வருகின்ற இந்த எதிர்கால இருதரப்பு உறவின் உள்ளடக்கம் தொனி என்பவற்றுக்கு ஜேவிபி உட்பட அனேகமாக எல்லா அரசியல் கட்சி களும் சாதகமான பங்களிப்பைச் செய்திருக்கின்றன.

இந்திய–இலங்கை உறவுகள் ஒரு போதுமே நல்ல முறையில் இருந்த தில்லை. ஆனால் அவை எதிர்காலத்தில் நல்ல நிலையை அடையும் என்று போக்குகள் காட்டுகின்றன. என்ன நடந்தது என்றால், பிப்ரவரி 1987லிருந்து 24 மார்ச் 1990வரை இந்திய அமைதிகாக்கும் படை இலங்கையிலிருந்து முழுமை திரும்பப் பெற்றபோது அது வரலாற்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரீதியான ஓர் ஆபத்து கருதாத துணிகரச் செயலாக இருந்தது. சிலர் இதை விபத்து என்று கூறுவர். அனுபவத்தை ஆழமாக விளக்குவதற்கான சந்தர்ப்பம் அல்ல இது. ஏற்பட்ட உயிரிழப்பு, விரயமாக்கப்பட்ட வளங்கள் மற்றும் இணைந்த வடக்கு, கிழக்கில் தமிழ் மற்றும் ஏனைய இன மக்களுக்கான நேர்மையான அதிகாரபரவலாக்க நிறுவனம், புலிகளால் முன்னெடுக்கப்பட்ட பிரிவினைவாத ஆயுதப் போராட்டத் திற்கு முற்றுப்புள்ளி என்ற இரண்டு நோக்கங்களையும் அடைவதற்குத் தவறியமை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தச் செயல்திட்டமானது விலைகூடியது என்று நிரூபித்திருக்கிறது என்று கூறுவதற்குப் போது மானது. ஆனால் துணிச்சலான இந்தச் செயல்திட்டம் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட திசை மற்றும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட எண்ணக் கருக்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவை பிந்தைய அபிவிருத்திகளில் முக்கியமானதும் செல்வாக்குமிக்கதுமான தாக்கத்தை ஏற்படுத்தியதாகக் கூற முடியும். இன்று இலங்கைச் சமாதான முயற்சியில் இந்தியா நேரடியானப் பங்கு வகிக்க முடியாது என்று தெரிகிறது. கூட்டான ஒரு அரசியல் மற்றும் சட்டக் காரணங்களால் இது கட்டுப்படுத்தப்படுகிறது. வெளிப்படையாகச் சொல்வதானால் இந்தியச் சட்டத்தின் கீழ்ப் பயங்கரவாத இயக்கமாகக் கருதப் பட்டுத் தடைசெய்யப்பட்டுள்ள விடுதலைப்புலிகளுடன் அமர்ந்து அவர்கள் சம்பந்தப்பட்ட நடைமுறை ஒன்றுக்கு அனுசரணையையோ மத்தியஸ்தத்தையோ உத்தியோகபூர்வமாக இந்தியா செய்ய முடியாது. சர்வதேச நன்கொடையாளர்கள் கூட்டங்களில் இந்தியாவின் பங்கு பெறாமையையும் இது குறிக்கிறது.

அதே நேரத்தில் 2001இன் இறுதியில் இருந்து சமாதானச் செயன் முறையில் இந்தியா சர்வ ஜாக்கிரதையாக வைக்கப்பட்டதுடன் செயன் முறையுடன் சம்பந்தப்பட்ட அரசாங்கத்தின் ஒவ்வொரு செயல்பாட்டாளர் களாலும் முறையாக ஆலோசனை செய்யப்பட்டிருக்கிறது. இலங்கை அரசாங்கம், நோர்வே, ஜப்பான் ஆகியவற்றை மட்டும் இது குறிக்க வில்லை. சமாதானச் செயன்முறையில் ஈடுபாடு காட்டிவரும் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஏனைய நாடுகளையும் குறிக்கிறது.

2003 அக்டோபரில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு மூன்று நாள் பயணம் செய்தபோது வெளியிடப்பட்ட கூட்டறிக்கை, இந்தியக்கொள்கையின் தெளிவான விளக்கத்தைக் கொண்டிருக்கிறது. ஜனநாயகம், பல்லினத்தன்மை மற்றும் தனிமனித உரிமைகளை மதிக் கின்ற வகையில் ஐக்கிய இலங்கைக்குள் இலங்கையின் சகல சமூகங் களுக்கும் ஏற்புடையதான பேச்சுவார்த்தை மூலமான தீர்வு முயற்சிக்கு இந்தியா ஆதரவளிக்கிறது. உள்ளக அரசியல் நடைமுறைகளினூடாகவே



நிலையான தீர்வு ஏற்பட வேண்டியிருக்கிறது என்று இந்தியா கருது கிறது. மேலும், 'இலங்கையின் பாதுகாப்பு விடயத்தில் இந்தியா நிலையான கரிசனையைக் கொண்டிருப்பதுடன் அதன் இறைமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டில் தொடர்ந்தும் பற்றுறுதியாக இருக்கிறது. சமாதானச் செயன்முறையின் தற்போதைய நெருக்கடி நிலைக்கான தீர்வையும் பேச்சுவார்த்தையின் விரைவான ஆரம்பத்தையும் இந்தியா வரவேற்கும். எந்தவொரு இடைக்கால ஏற்பாடும் இறுதித்தீர்வின் ஒரு உள்ளார்ந்த அங்கமாக இருப்பதுடன் இலங்கையின் ஆட்புல ஒருமைப் பாடு மற்றும் ஐக்கியம் என்ற செயல்திட்டத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும்'.

டிசம்பர் 2005இல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நான்கு நாள் உத்தி யோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா வந்திருந்தபோது அதே கொள்கைமீதான தமது பற்றுறுதியை மன்மோகன் சிங் அரசாங்கம் மீள வலியுறுத்தியது. விஜயத்தின் நிறைவில் வெளியிடப்பட்ட அறிக்கை யின் முக்கியமான பகுதி பின்வருமாறு கூறுகிறது. 'இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பவற்றைப் பாதுகாக்கின்ற வகையில் சமாதானச் செயன்முறையினூடாக ஆகக்கூடிய அதிகாரப் பரவலாக்கத்திற்கான தனது அணுகுமுறையை இலங்கை ஜனாதிபதி இந்தியத் தலைமைக்கு வெளிப்படுத்தினார். இணக்கப்பாடு மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை மேம்படுத்துகின்ற உள்ளக அரசியல் நடைமுறைகளினூடாக மட்டுமே நிலையான சமாதானம் ஏற்பட முடியும்' என்று இருதரப்பும் இணங்கின. மனித உரிமைகளுக்கான கௌரவம், பல்லினத்தன்மை, ஜனநாயகம் ஆகியவற்றுடன் பிரிக்கப் படாத இலங்கை என்ற செயல்திட்டத்தினுள் இலங்கையின் எல்லாச் சமூகங்களுக்கும் ஏற்புடையதான பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வுக்கான சமாதானச் செயன்முறைக்கான தனது ஆதரவை இந்தியா மீள வலியுறுத்தியது. இலங்கையின் பாதுகாப்பில் இந்தியா தொடர்ந்தும் தனது நிலையான அக்கறையைக் கொண்டிருப்பதுடன், அதன் ஆட்புல ஒருமைப்பாடு, இறைமை, ஐக்கியம் ஆகியவற்றில் தொடர்ந்தும் பற்றுறுதியுடன் இருக்கிறது. பிரிக்கப்படாத ஜனநாயக இலங்கையில் சகல இலங்கையர்களுக்கும் அமைதியும் பிரகாசமுமான எதிர்காலத்தை உறுதிப்படுத்துகின்ற வகையிலான அரசியல் தீர்வானது, அதிகாரப் பகிர்வு, வெளிப்படைத்தன்மை, பகிரங்கம் மற்றும் தெளிவான சிந்தனை மற்றும் சிறந்த புரிந்துகொள்ளுகை என்பவற்றின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட இருதரப்பினருக்குமிடையிலான பேச்சுவார்த்தை களினூடாக அடையப்படும் என்ற நம்பிக்கையை இந்தியா வெளிப் படுத்தியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிய அரசியல் நிறமாலையில் இந்தச் சமப்படுத்தப்பட்ட கொள்கைக்கு உறுதியான ஆதரவு இருக்கிறது. ஈழ இலட்சியத்திற்கு ஆதரவாக உள்ள தமிழ்நாட்டின் ஒரு சில சிறிய கட்சிகளால் மட்டும் இது சில வகைகளில் விமர்சிக்கப்படுகிறது. இனங்காணப்பட முடியாதவாறு சூழ்நிலைகள் மாறினால் அன்றி, மனத்தில் நினைக்கக்கூடிய எதிர் காலத்தில் எந்தவொரு குறிப்பிட்ட வகையிலும் இந்தக் கொள்கை மாற்றமடைவதற்கில்லை.

2003 மற்றும் 2005ஆம் ஆண்டு கூட்டறிக்கைகளில் காணப்படுகின்ற பொதுவானதும் கூடுதல் சுவாரஸ்யம்மிக்கதுமான அம்சம் என்ன வென்றால் இலங்கையின் பாதுகாப்பில் இந்தியா வெளிப்படுத்திய 'நிலையான அக்கறை' மற்றும் இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் இறைமை ஆகியவற்றில் அதன் உறுதியான பற்றுறுதி ஆகியவை யாகும். எந்தவொரு இடைக்கால நிர்வாக ஏற்பாடும் இறுதியான சமாதானத்தின் உள்ளார்ந்த ஒரு அங்கமாக இருப்பதுடன், இலங்கை யின் ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் ஐக்கியம் என்ற வரையறையினுள் அமைந்ததாக இருக்க வேண்டும் என்ற தெளிவான புரிந்துகொள்ளுகை தொடர்பாகவே 2003இல் மிகவும் நம்பிக்கைக்குரிய ஒரு காலகட்டத்தில் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வுக்கான இந்தியாவின் ஆதரவு முன்னுரைக்கப்பட்டது என்பதைக் குறிப்பிடுவது இங்குப் பொருத்த மானது. 2005ஆம் ஆண்டு கூட்டறிக்கையில் இந்தச் சூத்திரம் இருக்க வில்லை. அநேகமாக தற்போதைய அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தில் இடைக்கால நிர்வாகம் இல்லை என்பது இதற்குக் காரணமாக இருக்கலாம்.

முழுமையான ஆட்பல ஒருமைப்பாடு மற்றும் சுயாதிபத்தியம் ஆகியவற்றுடனான 'ஒரு நாடு' என்ற இலங்கையின் எதிர்காலத்தின் பாதுகாப்பு அரணாகவும் உத்தரவாதியாகவும் இலங்கையின் தெற்கில் இந்தியா பார்க்கப்படுவதில் எந்த ஆச்சரியமும் இல்லை. எவ்வளவு தூரத்திற்கு இந்த உயர்கொள்கைப் பற்றுறுதியைக் கடைப்பிடிக்கின்ற வகையில் இந்தியா செயல்படும் என்பது ஒரு திறந்த கேள்வியாகும். இந்தக் கேள்வி எதிர்கொள்ளப்பட வேண்டியிருக்கும்பொழுதும் எதிர் கொள்ளப்பட வேண்டியிருக்குமானால் என்ற ஒரு நிலைமையிலும் நிலவக்கூடிய உள்ளக அரசியல் சமன்பாடுகள் மற்றும் நடுநிலையான வெளிச் சூழ்நிலைகளிலுமே இதற்கான விடை தங்கியிருக்கிறது.

1980களுக்குப் பின்னரான அதிகூடிய திரிபுகளின் பின்னர், இரு நாடுகளும் ஆக்கபூர்வமானதும் முதிர்ச்சிக்குரியதுமான வழியில் தமது இருதரப்பு உறவுகளைக் கையாண்டிருக்கின்றன. பேச்சுவார்த்தை மூலமான அமைதியானதொரு தீர்வை ஏற்படுத்தும் இலங்கையின் முதலான பிரச்சினைக்கான முயற்சிகள் தொடர்பாக இந்தியக் கொள்கை சார்ந்த வரையறைகள் மற்றும் தடைக் காரணிகள் ஆகியவை இந்திய அரசியலில் நன்கு அறியப்பட்டவை. சமன்பாட்டில், தமிழ்நாட்டுக் காரணியானது சுருங்கி மீண்டும் சாதாரண அளவை அடைந்திருக்கிறது. சிறு கட்சிகளின் சில தலைவர்களும் சில குழுக்களுமே விடுதலைப்புலி களின் போராட்டத்தை ஆதரிக்கின்றனர். ஆனால், மாநில அரசாங்கம் இதைக் கடுமையாக எதிர்க்கிறது. 1991இற்குப் பின்னரான செயல்திறன் அற்றதான அல்லது தலையிடா வகையிலானதான இந்தியாவின் கொள்கை உறுதியான பொது ஆதரவைப் பெற்றிருப்பதாகத் தெரிகிறது.

இந்தியாவின் அரசியல் கொள்கை தொடர்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வரையறைகள் மற்றும் மட்டுப்படுத்தும் காரணிகள் ஆகியவற்றின் மத்தியிலே இரதரப்பு உறவைப் பொறுத்தவரையில் பொருளாதாரப் பரிமாணமானது மையஸ்தானத்தைப் பிடிக்கும் வகை யில் வந்திருக்கிறது.

ஒன்றைச் சரிப்படுத்த முனைந்து மற்றொரு பிரச்சினையைத் தோற்று வித்தல் என்ற விதியின் வெளிப்பாடே இது என்று நான் நம்புகிறேன். அத்துடன், ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில் இது நன்மைக்கானதே. ஆனால், வட-கிழக்கின் நிலைமை தீவிரமாக மாற்றமடையுமானால், இந்தியாவின் அரசியல் கொள்கை தொடர்ந்தும் பாராமுகமானதாக இருக்க முடியாது என்றும் நான் நம்புகிறேன்.

இலங்கையில் என்ன நடைபெறுகிறது என்பவற்றின் அடிப்படையில், நண்பனாகவும் முழுமையான ஆட்புல ஒருமைப்பாடு, சுயாதிபத்தியம் மற்றும் ஜனநாயக நிறுவனங்கள் ஆகியவற்றுடனான 'ஒருநாடு' என்ற இலங்கையின் எதிர்காலத்தின் பாதுகாப்பு அரணாகவும் இந்தியாவின் வகிபங்கானது இன்று ஒருவர் கற்பனைசெய்ய முடிவதைக்காட்டிலும் கூடுதல் முக்கியத்துவம் பெறும் என்று நான் எதிர்வு கூறுகிறேன். 1980 களில் இருந்து, நன்மை தரக்கூடிய பாடங்களைக் கற்றுக்கொண்டிருக் கின்ற நிலையில் ஒரு அயல்வீட்டு நண்பனுக்குரிய தராதரங்களையும் சிறப்பான மரபுகளையும் ஆக்கபூர்வமானதும் உயர்வானதுமான வகை யில் வெளிப்படுத்திச் செயல்பட இந்தியா எதிர்பார்க்கப்படும்.

•





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

## பின்னிணைப்பு 1

# படத்தொகுப்பு



ஒஸ்லோவில் 25 நவம்பர் 2002இல் நடைபெற்ற உதவி மகாநாட்டில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அன்டன் பாலசிங்கத்தை சந்தித்தல். இடமிருந்து வலம்: எரிக் சொல்ஹய்ம், விதார் ஹெல்கீசன், ரணில் விக்கிரமசிங்க, அன்டன் பாலசிங்கம்.




ஜப்பானின் ஹக்கோனேவில் 18–21 மார்ச் 2003 இல் நடைபெற்ற ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தை.





முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 22 பிப்ரவரி 2002 அன்று யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திடுதல்.




தாய்லாந்தில் 16–18 செப்டம்பர் 2002இல் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான முதல் சுற்று சமாதான பேச்சுவார்த்தை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாய்லாந்தின் சட்டாசாஹிப்பில் நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையின் ஆரம்பத்தில் பேராசிரியர் ஜி.எல். பீரிஸும் அன்டன் பாலசிங்கமும்.



நோர்வேயின் ஒஸ்லோவில் 25 டிசம்பர் 2002இல் நடைபெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது.





ஜப்பானின் ஹக்கோனேவில் நடைபெற்ற ஆறாவது சுற்று பேச்சுவார்த்தை. இடமிருந்து வலம் : பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், யசூசி அகாசி, விதார் ஹெல்கீசன் மற்றும் அன்டன் பாலசிங்கம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்னிணைப்பு 2

# முக்கியமான உடன்படிக்கைகள்

## 1

## பிப்ரவரி 22, 2002: இலங்கை ஜனநாயக் சோசலிஸக் குடியரசு அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம்

### முகவுரை

இலங்கை ஜனநாயக சோசலிஸக் குடியரசு அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் ஒட்டுமொத்தமான நோக்கம் இலங்கையில் தற்போதுள்ள இனமோதலுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்ப தாகும். இந்தத் தரப்பினர் (இந்தத் தரப்பினர் என்று இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடுவது ஸ்ரீலங்கா அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் ஆகும்) பகைமைகளுக்கு ஒரு முடிவுகட்டி, மோதலால் பாதிக்கப் பட்டிருக்கும் அனைத்துக் குடிமக்களதும் வாழ்க்கை நிலைமையைச் சீருயர்த்துவதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கின்றனர். பகைமை களுக்கு முடிவு கட்டுவது எனும் போது, நிரந்தர தீர்விற்கான பேச்சு வார்த்தைகளை நோக்கிய மேலதிக நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய தாக ஒரு சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதாக இந்தத் தரப்பினரால் கவனிக்கப்படுகின்றது.

மோதலில் நேரடியாக சம்பந்தப்படாத குழுக்களும் இதன் பாதிப்புக் களால் துன்பப்படுகின்றனர் என்பதையும் இந்தத் தரப்பினர் மேலும் அங்கீகரிக்கின்றனர். குறிப்பாக முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் இது பொருந்தும். ஆகவே, பொதுமக்களும் அவர்களின் சொத்துக்களும் பாதுகாப்புப் பற்றிய இந்த ஒப்பந்தத்தின் உறுப்புரைகள் அனைத்துக் குடிமக்களுக்கும் செல்லுபடியாகும். இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, போர்நிறுத்தம் ஒன்றில் ஈடுபடவும் நல்ல நோக்கங்களைப் பாதிக்கக்கூடிய அல்லது ஒப்பந்தத்தின் சாரத்தை முறிக்கக்கூடிய செயல் பாடுகளைத் தவிர்த்துக்கொள்ளவும், கீழ்வரும் பிரிவுகளில் சொல்லப் பட்டிருப்பது போன்று நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கை களைச் செயல்படுத்தவும் இந்தத் தரப்பினர் ஒப்புக்கொண்டுள்ளனர்.



### உறுப்புரை 1: போர்நிறுத்தத்தின் முறைகள்

இந்தத் தரப்பினர் தமது ஆயுதப்படைகளுக்கு இடையே போர்நிறுத்தம் ஒன்றை பின்வருமாறு அமல்படுத்த ஒப்புக்கொண்டுள்ளனர்.

1.1 நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரால் விதி 4.2இன்படி டி-தினம் என்று இதன் பின்னர் குறிக்கப்படும் தினம் அறிவிக்கப் பட்டதும் அத்தினத்தில் இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கூட்டாக ஒப்புக்கொள்ளப்பட்ட போர் நிறுத்தம் ஒன்று அமலுக்கு வரும். (இந்த உறுப்புரையின் கீழ் 23.02.2002ஆம் தேதி 00.00 நேரத்தை நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் பிரகடனம் செய்து போர்நிறுத்தம் அமலுக்கு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது).

### இராணுவ நடவடிக்கைகள்

1.2 வலுத்தாக்குதல் இராணுவ நடவடிக்கைகளில் எந்தத் தரப்பினரும் ஈடுபட இயலாது. முற்று முழுதாக சகல இராணுவ நடவடிக்கை களையும் நிறுத்துவதை இது கோருகின்றது. பின்வரும், ஆனால் மட்டுப்படுத்தப்படாத நடவடிக்கைகளை இது உள்ளடக்குகின்றது.

அ நேரடியானதும் மறைமுகமான ஆயுதங்களால் சுடுதல், ஆயுதங் களுடன் முற்றுகைத் தேடுதல், பதுங்கியிருந்து தாக்குதல், கொலைகள், ஆள்கடத்தல், பொதுமக்களது அல்லது இராணுவத் தினது சொத்துகளை அழித்தல், நாசகாரச் செயல்கள், தற்கொலைத் தாக்குதல் நடவடிக்கைகள், ஆழ ஊடுருவும் குழுக்களின் செயல்பாடுகள்.

ஆ வான்வழி குண்டு வீச்சுக்கள்.

இ கடலில் வலுத்தாக்குதல் நடவடிக்கைகள்.

1.3 விடுதலைப்புலிகளுக்கு எதிரான வலுத்தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடாதவகையில், இலங்கையின் ஆயுதப்படைகள் இலங்கையின் இறைமையையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் சட்டப்படியான நடவடிக்கைகளைத் தொடர்ந்து நிறைவேற்றலாம்.

### படைகளைப் பிரித்துவைத்தல்

1.4 முன்னணிக் காவலரண்கள் அமைக்கப்பட்டிருக்கும் பகுதிகளில், குறைந்தது 600மீட்டர் தூரம் இடைவெளி பிரித்து இலங்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசாங்கத்தின் ஆயுதப்படைகளும் விடுதலைப்புலிகளின் போரிடும் படைகளும் தமது களநிலையை வைத்திருக்கலாம். எனினும் ஒவ்வொரு தரப்பினரும் தமது காவல்நிலையிலிருந்து 100 மீட்டர் துரம் தங்களுக்குள் உள்ளவாறு நடமாடுவதற்கான உரிமையைக் கொண்டிருப்பர். 400 மீட்டருக்குக் குறைவான இடைவெளி உள்ள தற்போதுள்ள நிலைகள் விடயத்தில் இந்த நடமாடும் உரிமை செல்லாது. தமது துருப்பினர் இடையே முடிந்தளவு கூடுதலான இடைவெளியை உறுதிப்படுத்த இந்தத் தரப்பினர் ஒப்புக்கொள்கின்றனர்.

1.5 பகுதிகள் தெளிவாக வரையறுக்கப்படாத இடங்களில் 1.6 உறுப்புரையில் குறிப்பிடுவது போன்று நிலவரையறை செய்யப்படும் வரை 2001 டிசம்பர் 24ஆம் தேதியில் இருந்தவாறு இலங்கை அரசாங்கத்தாலும் விடுதலைப்புலிகளாலும் கட்டுப்படுத்தப்படும் பகுதிகள் அவ்வாறே இருந்து வரலாம்.

1.6 இலங்கைக் கண்காணிப்புக் குழுவினருக்கு 3ஆம் விதியின்படி சிக்கலுக்குரிய சகல பகுதிகளினதும் காவலரண் நிலைகள் பற்றிய தகவல்களை இந்தத் தரப்பினர் வழங்கலாம். ஆகக் குறைந்தது டி–தினம் 30க்கு உள்ளாக நிலவரையறைக் கோடுகளை வரைவதில் இந்தத் தரப்பினருக்குக் காண்காணிப்புக் குழுவினர் உதவுவர்.

1.7 மற்றைய தரப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் ஆயுதங்கள், வெடிபொருட்கள் மற்றும் இராணுவத் தளவாடங்கள் என்பனவற்றை இந்தத் தரப்பினர் நகர்த்த முடியாது.

1.8 இலங்கை அரசாங்கம் தமிழ் ஆயுதக்குழுக்களிடம் இருந்து ஆயுதங்களை ஆகக் குறைந்தது டி–தினம் 30க்கு உள்ளாகக் களைய வேண்டும். வடக்கு–கிழக்கிற்கு அப்பாற்பட்ட பகுதிகளில் சேவைக்கென இலங்கை ஆயுதப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் மேற்படி குழுக்களில் இருக்கும் தனிநபர்களைச் சேர்த்துக்கொள்ள இலங்கை அரசாங்கம் முன்மொழியலாம்.

### நடமாடும் சுதந்திரம்

1.9 இந்தத் தரப்பினரின் படைகள் 1.4 மற்றும் 1.5 உறுப்புரைகளில் சொல்லப்பட்டிருப்பது போன்று ஆரம்பத்தில் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தங்கியிருக்க வேண்டும்.

1.10 ஆயுதமேந்தாத இலங்கைத் துருப்பினர் டி–தினம் 60இற்கு பின்னர் யாழ்ப்பாணத்திற்கும் வவுனியாவிற்கும் இடையே யாழ்–கண்டி (ஏ 9) வீதியைப் பாவித்து மட்டுப்படுத்தப்படாத அளவில் பயணம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். இந்தச் செயல்முறைகள் இந்தத் தரப்பினரால் ஸ்ரீலங்கா கண்காணிப்புக் குழுவினரின் உதவியுடன் வகுக்கப்பட வேண்டும்.

1.11 டி–தினத்திலிருந்து போராளிகளான தனிநபர்கள் தமது பிராந்தியத் தளபதியின் சிபாரிசின் பெயரில் ஆயுதமில்லாமலும் சாதாரண உடையிலும் தமது குடும்பத்தவர் மற்றும் நண்பர்கள் ஆகியோரை மற்ற தரப்பின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று பார்த்துவர அனுமதிக்க வேண்டும். குறைந்தளவு தூர வீதியால் பயணம் செய்யும் நேரத்தைக் கணக்கில் எடுக்காது ஒவ்வொரு இரண்டு மாதத்தில் ஆறு நாட்களுக்கென இத்தகைய பயணங்கள் மட்டுப் படுத்தப்படும். இந்த நோக்கத்திற்கு யாழ்–கண்டி வீதியை விடுதலைப்புலிகள் வசதிசெய்து கொடுப்பர். குறிப்பிட்ட இராணுவப் பகுதிக்குள் நுழைவதற்கு மறுப்புத் தெரிவிக்கும் உரிமையை இந்தத் தரப்பினர் கொண்டிருப்பர்.

1.12 போராளிகளான தனிநபர்கள் டி-தினத்திலிருந்து இரண்டு மாதக் கட்டுப்பாட்டைக் கவனத்தில்கொள்ளாது தமது நெருங்கியவர்கள் (மனைவி, பிள்ளைகள், பாட்டனார், பெற்றோர், உடன்பிறப்புகள்) திருமணம், இறுதி அஞ்சலி போன்றவற்றிற்கு ஆயுதமில்லாமலும் சாதாரண உடையிலும் சென்றுவர அனுமதிப்பதென இந்தத் தரப்பினர் ஒப்புக்கொள்கின்றனர். குறிப்பிட்ட இராணுவப் பகுதிக்குள் நுழைவதற்கு மறுப்புத் தெரிவிக்கும் உரிமை இங்குச் செல்லுபடியாகும்.

1.13 ஆயுதம் ஏந்தாத 50 விடுதலைப்புலி உறுப்பினர்கள் டி-தினம் 30லிருந்து வடக்கு, கிழக்கில் ஸ்ரீலங்கா அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் அரசியல் பணிகளுக்கென சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவர். டி–தினம் 60இல் இருந்து மேலும் ஆயுதம் ஏந்தாத 100 விடுதலைப்புலி உறுப்பினர்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவர். டி–தினம் 90இல் இருந்து சகல ஆயுதம் ஏந்தாத விடுதலைப்புலி உறுப்பினர்களும் வடக்கு, கிழக்கில் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவர். விடுதலைப் புலி உறுப்பினர்கள் அடையாளப் பத்திரங்களை வைத்திருக்க வேண்டும். குறிப்பிட்ட இராணுவப் பகுதிக்குள் நுழைவதற்கு இலங்கை அரசாங்கம் மறுப்புத் தெரிவிக்கும் உரிமை இங்குச் செல்லுபடியாகும்.

### உறுப்புரை 2: இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் நடவடிக்கைகள்

இலங்கையின் சகலக் குடிமக்களுக்கும் இயல்புநிலை வாழ்க்கையை மீளமைப்பதற்காக பின்வரும் நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகளை இந்தத் தரப்பினர் மேற்கொள்வர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2.1 சர்வதேசச் சட்டங்களுக்கு அமைவாக இந்தத் தரப்பினர் சித்திரவதை நெருக்கடி, ஆட்கடத்தல், கட்டாய வரி வசூலித்தல், தொந்தரவு என்பன உள்ளிட்டதான பகைமை நடவடிக்கைகளைப் பொது மக்களுக்கு எதிராக மேற்கொள்வதைத் தவிர்த்துக்கொள்வர்.

2.2 கலாசார, மத உணர்வுகளைப் புண்படுத்தக்கூடிய நடவடிக்கைகள், கொள்கைப் பரப்புதல் என்பனவற்றில் ஈடுபடுவதில் இருந்து இந்தத் தரப்பினர் தம்மைத் தவிர்த்துக்கொள்வர். எந்தத் தரப்பினதும் படைகளால் தற்போது வைத்திருக்கப்படும் வழிபாட்டு இடங் களில் (கோவில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் மற்றும் ஏனைய புனித தலங்கள் என்பன) இருந்து டி–தினம் 30 அளவில் படையினர் வெளியேறுவதுடன் அவை பொதுமக்கள் சென்று வரக்கூடியதாயிருக்க வேண்டும். உயர்பாதுகாப்பு வலயங்களில் உள்ள வழிபாட்டுத் தலங்களில் இருந்து, அவை பொதுமக்கள் சென்று வர முடியாததாயிருப்பினும் ஆயுதமேந்திய அனைத்து தரப்பினரும் வெளியேறுவதுடன் பொதுஜன தொண்டர்களால் அவை நல்ல நிலையில் பரிபாலிக்கப்பட வேண்டும்.

2.3 இந்த ஒப்பந்தம் அமலுக்கு வரும் நாளில் இருந்து எந்தத் தரப் பினராலும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பாடசாலைக் கட்டடங்கள் விடுவிக்கப்பட்டு அவற்றின் நோக்களுக்குப் பாவிக்கவெனத் திரும்பக் கொடுக்கப்பட வேண்டும். ஆகக் குறைந்தது டி–தினத்தி லிருந்து 160 நாட்களுக்குள் இந்த நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

2.4 ஏனைய சகலப் பொதுக்கட்டடங்களும் அவற்றின் நோக்கங்களுக் கெனத் திரும்ப ஒப்படைக்கப்படுவதன் கால அட்டவணை இந்தத் தரப்பினரால் தயாரிக்கப்பட்டு ஆகக் கூடியது டி–தினம் 30இற்குள் வெளியிடப்பட வேண்டும்.

2.5 பாதுகாப்பு நடவடிக்கைகளையும் சோதனைச் சாவடிகளின் அமைப்பையும், குறிப்பாக நெருக்கமாகக் குடிசனங்கள் உள்ள நகரங்களிலும் பட்டணங்களிலும் பொதுமக்கள் தொந்தரவு செய்யப் படுவதை தவிர்க்கும் வகையிலான முறைகளைப் புகுத்துவதற்காக இந்தத் தரப்பினர் மீளாய்வுசெய்வர். டி–தினம் 60லிருந்து இத்தகைய முறை அமலில் இருக்கவேண்டும்.

2.6 விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கும் அங்கிருந்தும் இராணுவப் பாவனைக்கில்லாத பொருட்கள் தங்கு தடையின்றிக் கொண்டுசெல்லப்படுவதை உறுதிப்படுத்துவதென இந்தத் தரப்பினர் ஒப்புக்கொள்கின்றனர். இணைப்பு 'ஏ'வில் உள்ள சில பொருட்கள் இதற்கு விதிவிலக்காயிருக்கும். பொருட் களின் அளவு சந்தையின் தேவையைப் பொறுத்தே நிச்சயிக்கப் படும். இராணுவப் பாவனைக்கல்லாத பொருட்கள்மீது எஞ்சியுள்ள கட்டுப்பாடுகளை படிப்படியாக அகற்றுவதற்காக இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக இந்த விடயத்தை மீளாய்வுசெய்து வரும்.



2.7 பொருட்கள் கொண்டுசெல்லப்படுவதையும் பொதுமக்களின் நடமாட்டத்தையும் வசதிப்படுத்துவதற்காக இந்தத் தரப்பினர் தமது கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் இணைப்பு 'ஏ'வில் கூறப்படும் இடங்களில் சோதனைச்சாவடிகளை அமைக்க ஒப்புக் கொள்கின்றனர்.

2.8 திருமலை ஹபரணை வீதி பயணிகளின் போக்குவரத்து 24 மணி நேரமும் டி–தினம் 10இல் இது திறந்திருப்பதை உறுதிப்படுத்தும் விதமாக இந்தத் தரப்பினர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

2.9 மட்டக்களப்புப் பாதையில் ரயில் சேவை வெலிகந்தவரை விரிவாக்கப்படுவதற்கு இந்தத் தரப்பினர் வசதிசெய்வர். மட்டக் களப்புவரை சேவையை விரிவுப்படுத்துவதற்கு திருந்த பராமரிப்பு பணிகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

2.10 கண்டி–யாழ்ப்பாணம் (ஏ 9) வீதியை இராணுவப் பயணமல்லாத பயணிகளதும் பொருட்களினதும் போக்குவரத்திற்கு இந்த தரப் பினர் திறந்துவிட வேண்டும். இது பற்றித் திட்டவட்டமான முறைகள் இந்தத் தரப்பினரால் நோர்வே அரசாங்கத்தின் உதவி யுடன் ஆகப்பிந்தையது டி–தினம் 30க்குள் வகுக்கப்பட வேண்டும்.

2.11 மீன்பிடிக் கட்டுப்பாடான படிப்படியாகத் தளர்த்துவது டி-தினத்தில் இருந்து ஆரம்பமாக வேண்டும். பின்வரும் சில விதிவிலக்கு களைத் தவிர்த்து டி–தினம் 90 அளவில் அனைத்து இரவு, பகல் மீன்பிடிக் கட்டுப்பாடுகளும் விலக்கப்பட்டிருக்க வேண்டும்.

1. கரையில் பாதுகாப்புப்படைகளது சகல முகாம்களில் இருந்தும் இருபக்கமாகவும் கரைப்புறமாக ஒரு கடல் மைல் தூரமும் கடல் புறமாக இரு கடல் மைல் தூரமும்
2. துறைமுகங்கள், துறைமுகங்களுக்குச் செல்லும் வழிகள், கரையோரமாகவுள்ள குடாக்கள், களப்புகள் என்பவற்றில் மீன் பிடிக்க அனுமதிக்கப்படமாட்டாது.

2.12 பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தேடுதல்கள், கைதுசெய்தல் என்பன நடக்கக்கூடாது என இந்தத் தரப்பினர் ஒப்புக்கொள்கின்றனர். கைதுசெய்யப்படுவது கிரிமினல் சட்டக் கோவைக்கு அமைந்த தாக முறையான சட்ட ஒழுக்குப்படி நடத்தப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2.13 தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களை அவர்களது குடும்பத்தவர்கள் சென்று பார்ப்பதற்கு டி-தினம் 30இற்குள் அனுமதிப்பதென இந்தத் தரப்பினர் ஒப்புக்கொள்கின்றனர்.

## உறுப்புரை 3: கண்காணிப்புக் குழு

இந்த ஒப்பந்தத்தின் ஒழுங்குகள் நிபந்தனைகள் மீறப்படும் எந்த வொரு சம்பவத்தையும் விசாரிப்பதற்குப் பொறுப்பாகச் சர்வதேசக் கண்காணிப்புக் குழு ஒன்றை அமைப்பதென இந்தத் தரப்பினர் ஒப்புக் கொண்டுள்ளனர். எந்தவொரு மோதலும் தமது தரப்பால் ஏற்படும் போது அவற்றைச் சரிப்படுத்துவதற்கு இருதரப்பும் முற்றாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்த ஒப்பந்தத்தில் ஒப்புக் கொண்டவற்றை நிறைவேற்றுவதில் களத்தில் இருந்து சர்வதேசக் கண்காணிப்பை இந்தக் குழு பின்வரும் முறையில் மேற்கொள்ளும்:

3.1 இக்கண்காணிப்புக் குழுவின் பெயர் இலங்கைக் கண்காணிப்புக் குழு.

3.2 இந்தத் தரப்பினரின் ஒப்புதலைப் பெற்று, இலங்கை கண்காணிப்புக் குழுவின் தலைவரை நோர்வே அரசாங்கம் நியமிக்கும். அவரே இந்த ஒப்பந்தத்தின் விளக்கம் தொடர்பாக இறுதி அதிகாரத்தைக் கொண்டிருப்பார்.

3.3 இலங்கைக் கண்காணிப்புக்குழு இந்தத் தரப்பினருடன் தொடர்பு வைத்திருப்பதுடன் நோர்வே அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

3.4 இலங்கைக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் தினத்தைத் தீர்மானிப்பார்.

3.5 இலங்கைக் கண்காணிப்புக் குழு, நோர்டிக் நாடுகளின் பிரதிநிதி களைக் கொண்டு அமைக்கப்படும்.

3.6 இலங்கைக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் பொருத்தமாகத் தெரிவுசெய்யும் இடத்தில் குழுவின் தலைமை அலுவலகம் அமைக்கப்படும். இலங்கை அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் தொடர்புகொள்ளக் கொழும்பிலும் வன்னியிலும் அலுவலகங்கள் அமைக்கப்படும். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இலங்கைக் கண்காணிப்புக் குழுவினர் பிரசன்ன மாக இருப்பார்கள்.

3.7 யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக் களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ளகக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படும். ஒவ்வொரு குழுவிலும் ஐந்து அங்கத் தவர்கள் இருப்பார்கள். அவர்களில் இருவர் இலங்கை அரசாங்கத் தாலும் இருவர் விடுதலைப்புலிகளாலும் நியமிக்கப்படுவதுடன் ஒரு சர்வதேசக் கண்காணிப்பாளர் இலங்கைக் கண்காணிப்புக் குழுவின் தலைவரால் நியமிக்கப்படுவார். சர்வதேசக் கண்காணிப் பாளர் இந்தக் குழுவிற்குத் தலைமை தாங்குவார். இலங்கை அரசாங்கம், விடுதலைப்புலிகளின் நியமனதாரிகள் ஓய்வுபெற்ற நீதிபதிகள், பொதுச்சேவை உத்தியோகஸ்தர்கள், சமயத் தலைவர்கள் மற்றும் அத்தகைய பொதுஜனத் தலைவர்கள் ஆகியோர் மத்தியி லிருந்து தெரிவுசெய்யப்படலாம்.

3.8 இலங்கைக் கண்காணிப்புக் குழுவினரின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பனவற்றிற்கு இந்தத் தரப்பினர் பொறுப்பாயிருப்பார்கள்.

3.9 இலங்கைக் கண்காணிப்புக் குழுவினர் தமது கடமையை நிறை வேற்றுவதற்கென அவர்களின் நடமாடும் சுதந்திரத்தை உறுதிப் படுத்த இந்தத் தரப்பினர் ஒப்புக்கொள்கின்றனர். ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளதாகக் குற்றம்சாட்டப்படும் பகுதிக்கு உடனடி யாகச் செல்வதற்குக் கண்காணிப்புக் குழுவினர் அனுமதிக்கப்பட வேண்டும். அத்தகைய பகுதிகளில் மேற்படி ஆறு மாவட்ட குழுக் களின் அங்கத்தவர்களும் முடிந்தளவு கூடுதலாகப் புழங்குவதற்கு வசதிசெய்வதென இந்தத் தரப்பினர் ஒப்புக்கொள்கின்றனர்.

3.10 ஒப்பந்தத்தின் எந்தத் தரப்பினரும் செய்யும் எந்த முறைப்பாடுகள் குறித்தும் உடன் நடவடிக்கை எடுப்பதும் அவற்றை விசாரிப்பதும் அத்தகைய முறைப்பாடு தொடர்பாக எழும் எந்தப் பிணக்கையும் தீர்த்துவைப்பதிலும் இந்தத் தரப்பினருக்கு உதவுவதும் இலங்கை கண்காணிப்புக் குழுவினரின் பொறுப்பாகும்.

3.11 முடிந்தளவு அடிமட்டத்தில் பிணக்கைத் தீர்க்கும் நோக்குடன் இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப்படைகளது தளபதிகள், விடுதலைப்புலிகளின் பிராந்தியத் தலைவர்கள் ஆகியோருக்கு மத்தியில் தொடர்புகளைப் பிணக்குகளுக்கு உரிய பகுதிகளில் பிரச்சினையைத் தீர்க்க உதவுவதற்காக ஏற்படுத்த வேண்டும்.

3.12 இலங்கைக் கண்காணிப்புக் குழுவின் செயல்பாடு குறித்த வழிமுறைகள் பிறிதொரு தனியான ஆவணத்தில் உருவாக்கப்பட வேண்டும்.

## உறுப்புரை 4: ஒப்பந்தம் அமலுக்கு வருதல், திருத்தங்கள் மற்றும் முடிவடைதல்

4.1 இந்த ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டு தமது விருப்பத்தை ஒவ்வொரு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தரப்பும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் விடுதலைப்புலிகளின் சார்பில் வேலுப்பிள்ளை பிரபாகரனும் முறையே கையெழுத்திட்டு நோர்வேயின் வெளி விவகார அமைச்சருக்குக் கடிதம் மூலமாக அறிவிக்க வேண்டும்.

4.2 நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் அறிவிக்கும் தினத்தில் இந்த ஒப்பந்தம் அமலுக்கு வரும்.

4.3 இருதரப்பினதும் பரஸ்பர இணக்கத்துடன் இந்த ஒப்பந்தம் திருத்தவும் மாற்றப்படவும் இயலும். அத்தகைய திருத்தங்கள் எழுத்து மூலமாக நோர்வே அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும்.

4.4 எந்தத் தரப்பினராலும் ஒப்பந்தத்தை முடிவுக்குக்கொண்டு வருவதாக நோர்வே அரசாங்கத்திற்கு அறிவித்தல் கொடுக்கப்படும்வரை இந்த ஒப்பந்தம் அமலில் இருக்கும். அத்தகைய முன்னறிவித்தல் முடிவிற்கு வரும் தினத்திற்கு 14 தினங்களிற்கு முன்னதாகக் கொடுக்கப்பட வேண்டும்.

## இணைப்புகள்

இணைப்பு ஏ: பொருட்களின் நிரல்.

இணைப்பு பி: சோதனை நிலையங்கள்.

## இணைப்பு ஏ

1. இராணுவ ஆயுதம் அல்லாத ரவைகள், குண்டுகள்.
2. வெடிபொருட்கள்
3. தூர இருந்து இயக்கும் கருவி
4. முள்ளுக்கம்பி
5. தூரநோக்கிகள்
6. காற்று அழுத்தி மிஷன்
7. பென்டோர்ச் லைட் பட்டரி
8. டீசல், பெட்ரோல் சிமெண்ட், இரும்புக் கம்பிகள் என்பவை கீழ்க் காணும் வழிமுறைப்படியும் தொகைப்படியும் கட்டுப்படுத்தப் படும்.

**டீசல், பெட்ரோல்.** அரசாங்க அதிபர்கள் (ஜிஏ) விடுதலைப்புலிகளின் வட்டாரத்திலுள்ள வாகனங்கள், ட்ராக்டர்கள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றைப் பதிவுசெய்வார்கள். அவர் இவற்றிற்குப் பின்வருமாறு ஒரு கிழமை அவசியப்படும் எரிபொருளைக் கணிப்பிட்டு வழங்குவர்.



**ட்ரக் வண்டிகள் / பஸ் வண்டிகள் 250 லிட்டர் கிழமைக்கு**

| | | |
|---|---|---|
| 4 சில்லு உழவு இயந்திரம் | – | 350 லிட்டர்/கிழமைக்கு |
| 2 சில்லு உழவு இயந்திரம | – | 40 லிட்டர்/கிழமைக்கு |
| பெட்ரோல் வாகனம் | – | 30 லிட்டர்/கிழமைக்கு |
| மோட்டர் சைக்கிள் | – | 7 லிட்டர்/கிழமைக்கு |
| மீன்பிடி வள்ளம் | – | 400 லிட்டர்/கிழமைக்கு. |

**சிமெண்ட்.** அரசாங்க அதிபரால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் அடிப் படையில் தொடர்புள்ள நிறுவனங்களின் கீழ் அரசக் கட்டடங் களைப் புனரமைத்தல், பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது இலங்கை அரசாலும் சர்வதேச அரசச் சார்பற்ற நிறுவனங் களாலும் சமூகத்தில் செல்வம் படைத்த உறுப்பினர்களாலும் அமல் படுத்தப்படும் வீடமைப்புத் திட்டங்கள் ஆகியவற்றிற்குத் தேவைப் படும் சிமெண்ட் வழங்கப்படும். திட்டமிட்ட மற்றும் அறிவிக்கப்படும் திட்ட முன்னேற்றங்களின் அடிப்படையில் மாதாந்தத் தேவைகளை அரசாங்க அதிபர் குறிப்பிடுவார்.

தனிப்பட்டவர்கள் பாவனைக்கு, வியாபாரிகளுக்கு, வீடு கட்டுபவர் களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வர்த்தகரீதியில் வழங்கப்படும். இதற்கு ஏற்ப முதல் மாதம் 5000 மூட்டைகளும் அதன் பின் ஒவ்வொரு மாதமும் 10,000 மூட்டைகளும் தனிப்பட்ட விற்பனை, கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பதிவுசெய்யப்பட்டு 25 மூட்டைகள் ஒவ்வொரு வீட்டிற்கும் கொடுக்கப்படும்.

**இரும்புக் கம்பிகள்.** இரும்புக் கம்பிகள் விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டில் உள்ள பிரதேசப் பாவனைக்கு அரசாங்க அதிபர் அவர்களின் அனுமதியுடன் வழங்கப்படும்.

## இணைப்பு பி

உடன்படிக்கையின் பிரிவு 2.7இல் ஒப்புக்கொள்ளப்பட்ட சோதனைச் சாவடிகள் பின்வருமாறு:

- மண்டூர்
- பட்டிருப்பு
- களுதாவெளி வள்ளத்துறை
- அம்பலந்தீவு வள்ளத்துறை
- மண்முனை வள்ளத்துறை
- வவுணத்தீவு
- கரும்பாலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- சித்தாண்டிப் படகுத்துறை
- கிரான் பாலம்
- கிண்ணியடிப் படகுத்துறை
- வாழைச்சேனை
- மாங்கேணி
- மஹிந்தபுரம்
- மூதூர்
- உயிலங்குளம்
- ஓமந்தை.

2

# இலங்கைத் தீவின் வடக்கு–கிழக்கில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை நிறுவுவதற்கான ஓர் உடன்படிக்கைக்குத் தமிழ் மக்கள் சார்பாகத் தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைக்கும் ஆலோசனை

சட்டத்தின் ஆட்சிக்கான கோட்பாடுகள், மனித உரிமைகள், அனைத்து நபர்களதும் சமத்துவம் மற்றும் மக்களது சுயநிர்ணய உரிமைக்கு அமைவாகவும்,

இலங்கைத் தீவின் அனைத்து நபர்களுக்கும் நிலையான அமைதியைக் கொண்டுவருவதற்கு உறுதிபூண்டும்,

இத்தீவில் அமைதியைக் கொண்டுவருவதற்கு மாண்புமிகு நோர்வே அரசும் நோர்வே மக்களும் சர்வதேசச் சமூகமும் ஆற்றும் சேவைகளைப் பாராட்டி ஏற்றுக்கொண்டு,

தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையிலான சமாதான நடவடிக்கைகள் சவால்கள் நிறைந்த வரலாறாக அமைந்திருந்தாலும், அமைதி வழியிலான தீர்விற்கு உண்மையான வாய்ப்பு இருப்பதை இனம்கண்டு இறுதித் தீர்வை அடைவதற்கான செயல்முறை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்க, சட்டங்களையும் கொள்கைகளையும் வகுத்து, வடக்கு–கிழக்கிலே மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி ஆகிய பணிகள் அனைத்தையும் செயல்திறனுடன் விரைவாக நிறைவேற்றுவதன் மூலம் வடக்கு, கிழக்கு மக்களது உடனடித் தேவைகளை வழங்குவதற்காக வடக்கு, கிழக்குப் பிராந்தியத்திற்கு ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை நிறுவுவதற்கு உறுதிபூண்டு,



தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான உறவுகள் பற்றிய வரலாறு, வாக்குறுதிகளை மீறிய ஒரு செயன்முறையாக இருந்தமையையும் இலங்கை அரசாங்கத்திற்கும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட தமிழ் மக்களது பிரதிநிதிகளுக்கும் இடையே காத்திரமாகச் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் அடுத்தடுத்துப் பதவிக்குவந்த இலங்கை அரசாங்கங்களால் ஒருதலைப் பட்சமாக, மதிக்கப்படாது முடிவிற்குக் கொண்டுவந்தமையையும் கவனத்திலெடுத்து,

அடுத்தடுத்துப் பதவிக்குவந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட இனரீதியான துன்புறுத்தல், பாரபட்சம், அரச வன்முறை மற்றும் அரசுகள் பின்னிருந்து நடத்திய வன்முறை ஆகியன வற்றை மனத்தில் நிறுத்தியும்,

1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் தமிழ் மக்களுக்கு ஒரு சுதந்திர, இறைமையுள்ள, மதசார்பற்ற அரசை அமைக்குமாறு தமிழ் மக்கள் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட தமது பிரதிநிதி களுக்கு ஆணை வழங்கியிருந்தமையைக் கவனத்திலெடுத்தும்,

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக, வன்முறையின்றி அமைதி வழியில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு வரையறைக்குள் அமைந்த போராட்டம் பயனற்றதென நிரூபிக்கப்பட்டு, முரண்பாட்டை அமைதி வழியில் தீர்ப்பதற்கான மார்க்கங்கள் இல்லாது போனபின்னர்தான், ஒரு தற்காப்பு நடவடிக்கையாகவும் தமிழரது சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு வழிமுறையாகவுமே தமிழரது ஆயுதப் போராட்டம் தொடங்கியது என்பதை மனத்தில் நிறுத்தியும்,

முதலில் டிசம்பர் 2000இலும் பின்னர் டிசம்பர் 2001இலும் ஒருதலைப் பட்சமாகப் போர்நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி, நெடுஞ்சாலைகளைத் திறந்து, வர்த்தகத்திற்கும் மக்களது சுதந்திரமான நடமாட்டத்திற்கும் அனுசரணை வழங்கி, இயல்புநிலை திரும்புவதற்கான ஓர் உகந்த சூழலையும் முரண்பாட்டிற்கு ஒரு நீதியான தீர்வையும் காணும் நம்பிக்கையோடு சமாதானப் பேச்சுகளுக்குள் நேர்மையாக இறங்கி, சமாதானம் நோக்கிய நடவடிக்கைகளைத் தமிழீழ விடுதலைப்புலிகளே முதலில் முன்னெடுத்தார்கள் என்பதை மீளநினைவுபடுத்தியும்,

2001 போர்நிறுத்த அறிவிப்பிற்கு மதிப்பளித்து தற்போதைய இலங்கை அரசாங்கம் தானும் ஓர் போர்நிறுத்தத்தை அறிவித்ததிலுள்ள அரசியல் துணிவைக் கவனத்தில்கொண்டு,

இலங்கைத் தீவிலுள்ள வடக்கு, கிழக்குப் பகுதியின் சமூக, பொருளாதார, நிர்வாக மற்றும் பௌதீகக் கட்டுமானங்களுக்கு அழிவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளைவித்த போர், வடக்கு, கிழக்கிற்கே பிரதானமாக மட்டுப்படுத்தப் பட்டிருந்ததோடு, வடக்கு, கிழக்கே இலங்கைத் தீவில் போரால் பாதிக்கப் பட்ட பிரதேசமாகத் தொடர்ந்தும் இருக்கிறது என்பதையும் உணர்ந்து,

2000ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில், வடக்கு, கிழக்கி லுள்ள பெரும்பான்மையான தமிழ் மக்கள் தமது செயல்கள் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளைத் தங்கள் அதிகாரபூர்வமான பிரதிநிதிகள் என ஏற்றுக்கொண்டே தங்கள் வாக்கை வழங்கினார்கள் என்பதை இனம்கண்டு,

இலங்கைத் தீவிலுள்ள வடக்கு, கிழக்கின் பெரும்பான்மையான பகுதி மீது தமிழீழ விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டையும் நியாய ஆதிக்கத்தையும் செயல்திறன்வாய்ந்த முறையில் செயல்படுத்து கின்றமையைக் கருத்தில்கொண்டு,

பேச்சுவார்த்தை மூலமான ஒரு இறுதித் தீர்வை அடைவதும் அதை அமல்படுத்துவதும் ஒரு நீண்ட காலமெடுக்கும் செயல்பாடாக அமையலாம் என்பதை உணர்ந்து,

அனைத்து அகதிகளும் இடம்பெயர்ந்த நபர்களும் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் திரும்பிச்செல்வதற்கான அவசியத்தையும் அவர்கள் வடக்கு, கிழக்கிலுள்ள தங்கள் வீடுகளுக்குத் தங்குதடையின்றிச் சென்று, தரையிலும் கடலிலும் தமது வாழ்வாதாரங்களைப் பெற்றுக்கொள்வ தற்கான அவர்களது உடனடித் தேவையையும் வலியுறுத்தி,

இலங்கை அரச நிறுவனங்களும் அவை வழங்குகின்ற சேவைகளும் வடக்கு, கிழக்கு மக்களது உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமானவையல்ல என உணரப்பட்டுள்ளமையை மனத்திற்கொண்டு,

அமைதிப் பேச்சுகளின்போது அமைக்கப்பட்ட அவசர மனிதாபி மான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவும் (சிரான்) ஏனைய உபகுழுக்களும் தோல்வியுற்றமையையும் மீண்டும் மீண்டும் செயலற்ற நிலைக்கு இட்டுச்சென்ற இந்த உபகுழுக்களது அமைப்பு முறையே அந்தத் தோல்விக்குக் காரணம் என்பதையும் இனங்கண்டு,

இலங்கை அரசாங்கம் தனது 2000ஆம் ஆண்டுத் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு, ஓர் இடைக்கால அதிகாரசபைக்கான தேவையை அங்கீகரித்துள்ளமைக்கு மதிப்பளித்து,

சட்டம், ஒழுங்கைப் பேணுவது ஒரு நீதியானதும் சுயாதீனமுமான சமூகத்திற்கு இன்றியமையாத அம்சம் என்பதை உணர்ந்து,

போரால் சிதைக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் மீள்குடி அமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் மற்றும் எந்தவொரு



ஆட்சியியல் செயல்பாட்டை அங்கு மேற்கொள்வதற்கும் வருமானம் ஈட்ட வேண்டியது தேவை என்பதை இனம்கண்டு,

மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி என்பனவற்றிற்கு, நிலத்தின் மீதான கட்டுப்பாடு முக்கியம் என்பதை இனம்கண்டு,

1972, 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு உருவாக்கத்தில் தமிழ் மக்கள் பங்குபெறவில்லை என்பதையும் அவை பாகுபாடான ஆட்சியியலை நிறுவனமயப்படுத்தி, தீர்மானம் எடுக்கும் செயல்முறையில் காத்திரமான பங்கைத் தமிழ் மக்களுக்கு வழங்க மறுத்ததையும் மனத்தில் கொண்டு,

கடந்த தசாப்தத்தில் இனங்களுக்கிடையேயான முரண்பாடுகளைத் தீர்க்கப் புதுமையானதும் பரந்த சிந்தனையுடனுமான நடைமுறை களூடே சமத்துவத்தின் அடிப்படையில் முரண்பட்ட தரப்புகளுக் கிடையே உடன்படிக்கையை ஏற்படுத்துவதன் மூலமாக சர்வதேச மட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்ட வழக்கத்தைக் கவனத்திற்கொண்டு,

போரிடும் தரப்புகளுக்கிடையே சர்வதேசச் சமூகத்தின் அங்கீகாரத் தோடு எட்டப்படும் ஒப்பந்தங்களில் அல்லது உடன்படிக்கைகளில் மட்டுமிருந்தே பெறப்படும் சட்டரீதியான பலத்தைக்கொண்டு போரால் சிதைந்த நாடுகளில் இடைக்கால அரசாங்க ஒழுங்குகளை நிறுவுவதற் கான முன்னுதாரணங்களில் நம்பிக்கைகொண்டும்,

இலங்கைக் கண்காணிப்புக் குழுவின் (எஸ்எல்எம்எம்) பணியை உள்ளடக்கிய போர்நிறுத்த ஒப்பந்தம், சிரான் மற்றும் வடக்கு–கிழக்கு மீள்கட்டுமான நிதியம் (என்ஈஆர்எஃப்) அமைக்கப்பட்டமை போன்ற நடைமுறைகள் இத்தகைய ஒழுங்குகளை ஏற்படுத்துவதற்குரிய பெறுமதியான முன்னுதாரணங்களாக அமைகின்றன என்பதைக் கவனத்திற்கொண்டு,

மேலே கூறப்பட்டனவற்றின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட தரப்புக்களான தமிழீழ விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் கீழ்வரும் ஏற்பாடுகளுக்கு இணங்குகின்றன:

### 1. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை

பேச்சுவார்த்தை மூலமான இறுதித்தீர்வு எட்டப்பட்டு அமல்படுத்தப் படும் வரை, வடக்கு, கிழக்கிலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கி ஒரு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை (ஐஎஸ்ஜிஏ) நிறுவப்படும்.

ஐஎஸ்ஜிஏயில் முஸ்லிம் சமூகத்தின் பங்கை உருவாக்குவதில் கலந்து கொள்வதற்கு அவர்களது பிரதிநிதிகளுக்கு உரிமை உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**2. ஐஎஸ்ஜிஏயின் அங்கத்துவ அமைப்பு**

2.1 இந்த உடன்படிக்கையில் சம்பந்தப்படுகின்ற தரப்புகளால் தீர்மானிக்கப்படும் எண்ணிக்கையிலான உறுப்பினர்களை ஐஎஸ்ஜிஏ கொண்டிருக்கும்.

2.2 ஐஎஸ்ஜிஏயின் அங்கத்துவ அமைப்பு கீழ்வருமாறு அமையும்:

1. தமிழீழ விடுதலைப்புலிகளால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள்,
2. இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள்,
3. வடக்கு, கிழக்கிலுள்ள முஸ்லிம் சமூகத்தால் நியமிக்கப் படுகின்ற உறுப்பினர்கள்.

2.3 கீழ்வருவனவற்றை உறுதிசெய்யக்கூடிய விதத்தில் உறுப்பினர் களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்:

1. ஐஎஸ்ஜிஏயில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நியமனதாரிகளே அறுதிப் பெரும்பான்மையினராக இருப்பர்.
2. மேலுள்ள உபவிதி (1)க்குப் பங்கம் ஏற்படாத வகையில் வடக்கு, கிழக்கிலுள்ள முஸ்லிம் மற்றும் சிங்களச் சமூகங்கள் ஐஎஸ்ஜிஏயில் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும்.

2.4. தலைவர் ஐஎஸ்ஜிஏயிலுள்ள பெரும்பான்மை வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டு ஐஎஸ்ஜிஏயின் பிரதான நிறைவேற்று அதிகாரியாகச் செயல்படுவார்.

2.5. வடக்கு, கிழக்கிற்கான பிரதானச் செயலாட்சியரையும் அவரது கடமைகளை ஆற்றுவதில் உதவுவதற்குத் தேவைப்படக்கூடிய ஏனைய அதிகாரிகளையும் தலைவர் நியமிப்பார். இந்த நியமனம் ஏதனையும் இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அதிகாரங்களையும் தலைவர் கொண்டிருப்பார்.

**3. தேர்தல்கள்**

உறுப்புரைகள் 2.2 மற்றும் 2.3இன் ஏற்பாடுகள், ஐஎஸ்ஜிஏவிற்கான தேர்தல்கள் நடத்தப்படும்வரை தொடரும். இந்த ஒப்பந்தம் நடை முறைக்கு வந்து ஐந்தாண்டின் முடிவில் இறுதித்தீர்வு எதுவும் எட்டப் படாமலும் அமல்படுத்தப்படாமலும்விட்டால், இந்த ஐந்தாண்டு காலப்பகுதி முடிவடையும் தேர்தல்கள் நடத்தப்படும். ஐஎஸ்ஜிஏயால் நியமிக்கப்படும் ஒரு சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழு, சுதந்திர மானதும் நேரடியானதுமான தேர்தல்களைச் சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் சர்வதேச ஜனநாயகக் கோட்பாடுகள் மற்றும் நியமங்களுக்கு அமைவாக நடத்தும்.



**4. மனித உரிமைகள்**

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளவாறு அனைத்து உரிமைகளும் வடக்கு, கிழக்கிலுள்ள மக்களுக்கு வழங்கப் படும். ஐஎஸ்ஜிஏ இயற்றும் சட்டம், ஒழுங்குமுறை, தீர்ப்பு, கட்டளை, தீர்மானம் எல்லாம் மனித உரிமைகள் பாதுகாப்பிற்கென சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும். ஐஎஸ்ஜிஏயால் நியமிக்கப்படும் ஓர் சுயாதீனமான ஆணைக் குழு இந்த மனித உரிமைகளுக்கான கடப்பாடுகள் எல்லாம் பேணப் படுவதை உறுதிசெய்யும். மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒரு காத்திரமான ஒழுங்கமைப்பை நிறுவுவதற்கு இந்த ஆணைக்குழு சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் உதவியை நாடும். இந்த ஆணைக்குழு எந்தவொரு தனிநபரிடமிருந்தும் முறைப்பாடுகளை ஏற்று விசாரித்து, பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் வழங்க வேண்டிய நஷ்டயீடைப் பரிந்துரைத்து, அந்த நபரின் உரிமைகள் மீள நிலைநிறுத்தப்படுவதை உறுதிசெய்யும்.

**5. மதச்சார்பின்மை**

வடக்கு, கிழக்கில் எந்தவொரு மதத்திற்கும் விசேட இடம் வழங்கப் படமாட்டாது.

**6. பாகுபாட்டிற்கு எதிரானத் தடை**

வடக்கு, கிழக்கில் மதம், இனம், சாதி, தேசியம் அல்லது பிராந்தியம், வயது அல்லது ஆண், பெண் என்பவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படாதிருப்பதை ஐஎஸ்ஜிஏ உறுதிசெய்யும்.

**7. இலஞ்ச ஊழலைத் தடுத்தல்**

ஐஎஸ்ஜிஏ தனது நிர்வாகத்தில் அல்லது தனது நிர்வாகத்தின் கீழ் லஞ்சம் அல்லது ஊழல் எதுவும் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்யும்.

**8. அனைத்துச் சமூகங்களின் பாதுகாப்பு**

கலாசாரம் அல்லது மதம் தொடர்பாக ஒரு சமூகத்திற்கு வழங்காத தனிச் சலுகைகளை அல்லது அவர்கள்மீது திணிக்காத அசௌகரியங்களை இன்னொரு சமூகத்திற்கு வழங்கும் அல்லது திணிக்கும் சட்டம், ஒழுங்கு முறை, விதி, கட்டளை அல்லது தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்பட மாட்டாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**9. ஐஎஸ்ஜிஏயின் நியாயாதிக்கம்**

*9.1* மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் தற்போதுள்ள சேவைகளையும் வசதிகளையும் மேம்படுத்தி உயர்த்துதல் உள்ளடங்கலான அபிவிருத்தி (இதன் பின்னால் ட்ரிபிள் ஆர் எனக் குறிப்பிடப்படுகின்றது), வரிவிதித்தல் உள்ளடங்கலான வருவாய் ஈட்டல், வருமானம், தீர்வையும் சுங்கவரியும், சட்டமும் ஒழுங்கும் மற்றும் காணி தொடர்பான அதிகாரங்கள் உள்ளடங் கலாக வடக்கு, கிழக்கை ஆள்வதற்கு வேண்டிய அனைத்து அதிகாரங்களையும் ஐஎஸ்ஜிஏ கொண்டிருக்கும்.

இந்த அதிகாரங்களுக்குள், வடக்கு, கிழக்கிலும் வடக்கு, கிழக்கிற் காகவும் பிராந்திய நிர்வாகம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் அனைத்து அதிகாரங்களும் செயல்பாடு களும் உள்ளடங்கும்.

*9.2* இவ்வாறான அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கும் செயல்பாடு களைச் செயல்படுத்துவதற்குமான விரிவான வழிமுறைகள் இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகளால் மேலும் பேசி முடிவெடுக்கப்படும்.

**10. அதிகாரங்களை வகைபிரித்தல்**

வடக்கு, கிழக்கில் நீதியை நிர்வகிப்பதற்கான தனியான அமைப்புகள் உருவாக்கப்பட்டு, அவற்றுக்கு நீதி அதிகாரங்கள் உரித்தாக்கப்படும். நீதிபதிகளின் சுயாதீனத்தை உறுதிசெய்வதற்கு ஐஎஸ்ஜிஏ பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும்.

இந்த ஒப்பந்தத்தின் உறுப்புரை 4 (மனித உரிமைகள்) மற்றும் 22இற்கு (பிணக்குத் தீர்த்தல்) பங்கம் ஏற்படாதவாறு, இந்த உறுப்புரையின் கீழ் உருவாக்கப்படும் அமைப்புகளே, இந்த உடன்படிக்கையை அர்த்தப் படுத்தி அமல்படுத்துவதில் எழும் அனைத்துப் பிணக்குகளையும் இந்த உடன்படிக்கையில் அல்லது இந்த உடன்படிக்கையின் கீழ் அல்லது இந்த உடன்படிக்கையின் ஏதேனும் ஏற்பாட்டில் எழும் ஏதேனும் பிணக்குகளையும் தீர்ப்பதற்குத் தனியானதும் தனித்துவமானதுமான நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும்.

**11. நிதி**

ஐஎஸ்ஜிஏ, ஓர் வருடாந்த வரவுசெலவு அறிக்கையைத் தயாரிக்கும்.

ஐஎஸ்ஜிஏயால் நியமிக்கப்படும் அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு நிதி ஆணைக்குழு அமைக்கப்படும். இந்த அங்கத்தவர்கள் நிதி, நிர்வாகம், அல்லது வாணிபம் போன்ற துறைகளில் உயர்பதவி வகித்தவர் களாகவோ அல்லது இத்துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்கள் என இனம் காணப்பட்டவர்களாகவோ இருக்க வேண்டும். இலங்கை அரசாங்கத்தின் ஒன்றுதிரட்டிய நிதியத்திலிருந்து (கன்சாலிடேட் ஃபண்ட்) வடக்கு, கிழக்கிற்கு ஒதுக்கப்பட வேண்டிய நிதியின் அளவை இந்த ஆணைக்குழு பரிந்துரைக்கும். இப்பரிந்துரைகளைச் செயல்படுத்து வதற்கு இலங்கை அரசாங்கம் தனது நல்லெண்ண முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சமவிகிதத்தில் பகிர்ந்தளிப்பதற்கு உரிய கவனம் செலுத்தி, ஐஎஸ்ஜிஏ தன்வசமுள்ள நிதிகளை எப்படிப் பயன்படுத்துவதெனத் தீர்மானிக்கும். ஐஎஸ்ஜிஏ வசமுள்ள நிதிகளுள் வடக்கு, கிழக்குப் பொதுநிதியம், வடக்குக்கிழக்கு மீள்கட்டுமான நிதியம், விசேடநிதியம் ஆகியன உள்ளடங்கியிருக்கும்.

வடக்கு, கிழக்கில் அல்லது வடக்கு, கிழக்கு பகுதிக்காக இலங்கை அரசு செய்யும் அனைத்துச் செலவுகளும் ஐஎஸ்ஜிஏயின் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன என்பதை இலங்கை அரசு ஏற்றுக்கொள்கிறது.

**11.1.வடக்கு, கிழக்குப் பொதுநிதியம்**

வடக்கு-கிழக்கு பொதுநிதியம் ஐஎஸ்ஜிஏயின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதோடு பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:

*11.1.1* இலங்கை அரசாங்கம் ஏதேனும் குறித்த நோக்கங்களுக்காக வழங்கும் அனைத்து உதவிகளிலிருந்தும் கடன்களிலிருந்தும் கிடைக்கும் பணம் மற்றும் ஐஎஸ்ஜிஏயிக்கு வழங்கப்படும் ஏனைய பிறகடன்கள் மூலம் பெறப்படும் பணம்.

*11.1.2* அரசுகளுடனோ நிறுவனங்களுடனோ ஏனைய அமைப்பு களுடனோ ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தங்களின் அடிப்படை யில் வடக்கு, கிழக்குப் பகுதிக்காக இலங்கை அரசாங்கத்தால் குறித்தொதுக்கப்படும் நிதிகள்.

*11.1.3.* கீழே குறிப்பிடப்படும் நிதியங்கள் தவிர்ந்த, ஐஎஸ்ஜிஏவுக்கு கிடைக்கும் ஏனைய வரவுகள்.

**11. 2. வடக்கு, கிழக்கு மீள்கட்டுமான நிதியம்**

என்ஈஆர்எஃப் அமைப்பு, கட்டுப்பாடு ஐஎஸ்ஜிஏவிற்கு மாற்றப்படுவது தவிர, ஏனைய அம்சங்களில் அதன் தற்போதைய வடிவத்திலேயே தொடர்ந்தும் இருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடக்கு, கிழக்கு மீள்கட்டுமானத்திற்காகக் கொடுக்கப்படும் அனைத்துக் கொடுப்பனவுகளும் என்ஈஆர்எஃப்பினூடாகப் பெறப்படும். என்ஈஆர்எஃப் நிதியத்திலிருந்து பெறப்படும் வளங்களைப் பயன்படுத்துவது தொடர் பாக ஐஎஸ்ஜிஏ நேரடியாக முடிவுகளை எடுத்துக் கண்காணிக்கும்.

### 11.3. விசேட நிதியம்

மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றிற்கென்றே வரும் கடன்களும் கொடுப்பனவுகளும் என்ஈஆர்எஃப் நிதியத்தினூடாக உள்வர முடியாதவிடத்து, இந்த விசேட நிதியத்திற்குள் உள்வாங்கப்படும். ஏனைய நிதியங்களைப் போலவே இந்த விசேட நிதியமும் ஐஎஸ்ஜிஏயின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

### 12. கடன்பெறுவதற்கும் உதவிபெறுவதற்கும் வர்த்தகத்திற்குமான அதிகாரங்கள்

உள்ளூரிலும் வெளியூரிலும் கடன்பெறுதல், உத்தரவாதங்களையும் இழப்பீடுகளையும் வழங்குதல், நேரடியாக உதவிகளைப் பெறுதல், உள்ளூர் மற்றும் வெளியூர் வர்த்தகத்தில் ஈடுபடுதல் அல்லது அதை ஒழுங்கமைத்தல் போன்றனவற்றிற்கான அதிகாரங்களை ஐஎஸ்ஜிஏ கொண்டிருக்கும்.

### 13. நிதிக் கணக்கீடும் கணக்காய்வும்

13.1 ஐஎஸ்ஜிஏ ஓர் கணக்காய்வாளர் நாயகத்தை நியமிக்கும்.

13.2 இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிதியங்களும் சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாகச் செயல்படுத்தப்பட்டு, பேணப்பட்டு, கணக்கீடு செய்யப்படும். இந்தக் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்தால் ஆய்வுசெய்யப்படும். சர்வதேச மூலங்களிலிருந்து பெறப்படும் அனைத்து நிதிகளது கணக்காய்வும் ஐஎஸ்ஜிஏயால் நியமிக்கப்படும் சர்வதேசப் புகழ்பெற்ற நிறுவனத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

### 14. மாவட்டக் குழுக்கள்

14.1 தனது சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரங்களைக் காத்திரமாகச் செயல்படுத்துகையில், மாவட்டங்களில் நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக ஐஎஸ்ஜிஏ, மாவட்டக் குழுக்களை உருவாக்கி, இந்தக் குழுக்களுக்கு தான் தீர்மானிக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கலாம். ஐஎஸ்ஜிஏவுக்கும் குழுக்களுக்கும் இடையிலான ஓர் இணைப்பாளராகச் சேவையாற்றக் கூடியவாறு, ஐஎஸ்ஜிஏயின் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து ஐஎஸ்ஜிஏயால் இந்தக் குழுக்களது தலைவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

14.2 குழுவின் ஏனைய உறுப்பினர்களும் ஐஎஸ்ஜிஏயால் நியமிக்கப்படுவதோடு இந்த நியமனங்கள் எதனையும் இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களையும் ஐஎஸ்ஜிஏ கொண்டிருக்கும். இந்த உறுப்பினர்களை நியமிக்கையில், அனைத்துச் சமூகங்களதும் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்வதற்கு உரிய கவனம் செலுத்தப்படும்.

14.3 இந்தக் குழுக்கள் ஐஎஸ்ஜிஏயின் கீழ் நேரடியாகச் செயல்படும்.

14.4 ஐஎஸ்ஜிஏயின் பிரதான செயலாட்சியாளர் மாவட்டங்களில் பிரதான நிறைவேற்று அதிகாரிகளை நியமிப்பதோடு இந்தப் பிரதான நிறைவேற்று அதிகாரிகள், குழுக்களுக்குச் செயலாளர்களாகவும் செயல்படுவார்கள். இந்த நியமனங்கள் எதையும் இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக்கொண்டு வருவதற்கான அதிகாரங்களைப் பிரதான செயலாட்சியாளர் கொண்டிருப்பார்.

14.5 குழுக்களது அனைத்து நடவடிக்கைகளும் செயல்பாடுகளும் அந்தந்தக் குழுக்களது செயலாளர்கள் ஊடாக ஒருங்கிணைக்கப்படும்.

14.6 நிர்வாகத்திற்கு உதவியாக இருப்பதற்காக உபகுழுக்களும் நியமிக்கப்படலாம்.

### 15. நிர்வாகம்

தனது நிறைவேற்று அதிகாரங்களைச் செயல்படுத்துவதன் ஒரு பகுதியாக, இந்த ஒப்பந்தத்தின் உறுப்புரை 9இல் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களுடன் தொடர்புபட்ட வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து நிர்வாக அமைப்புகளும் ஆளணியும் ஐஎஸ்ஜிஏயின் கட்டுப்பாட்டிலும் நெறிப்படுத்தலின் கீழும் அமையும்.

ஐஎஸ்ஜிஏ தற்றுணிவுடன், தேவையான துறைகளில் நிபுணர்களது ஆலோசனைக் குழுக்களை உருவாக்கலாம். இந்த ஆலோசனைக் குழுக்கள் பொருளாதார, நிதி, நீதி விவகாரங்கள், மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு விவகாரங்கள், அடிப்படைக்கட்டுமானங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அத்தியாவசியச் சேவைகள் ஆகியனவற்றிற்கும் இவற்றிற்கென மட்டுப்படுத்தப்படாமல் இன்னும் தேவையான துறைகளுக்கும் அமைக்கப்படலாம்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### 16. காணி நிர்வாகம்

உறுப்புரை 9இல் (ஐஎஸ்ஜிஏயின் நியாயாதிக்கம்) குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயல்படுத்துவதற்குக் காணி முக்கியம் என்பதால், வடக்கு, கிழக்கிலுள்ள தனியாருக்குச் சொந்தமானவை தவிர்ந்த எல்லாக் காணிகளையும் பகிர்ந்தளிப்பதற்கும் மற்றும் பொருத்தமான தேவை களுக்குப் பயன்படுத்துவதைத் தீர்மானிப்பதற்குமான அதிகாரத்தை ஐஎஸ்ஜிஏ கொண்டிருக்கும்.

காணிகளிலிருந்து விரட்டப்பட்ட மக்களது காணிகளின் உரிமை, அத்துமீறிக் குடியேறியோர் வசிக்கும் காணிகளின் உரிமை போன்ற வற்றை, காலம் எவ்வளவு கடந்திருந்தாலும் கூட, விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கெனக் காணி நிர்வாகம் தொடர்பான ஒரு விசேட ஆணைக்குழுவை ஐஎஸ்ஜிஏ நியமிக்கும்.

7 விசேட ஆணைக்குழு செயல்படுகின்ற காலவரையறையை ஐஎஸ்ஜிஏ தீர்மானிக்கும்.

### 17. ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் மீள்குடியமர்வு

இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப்படைகளால் காணிகள் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளமையும் இத்தகைய காணிகளுக்கு உரித்துடைய பொதுமக்கள் தங்குதடையின்றிச் செல்வதற்கான உரிமையை மறுப்பதும் சர்வதேசச் சட்ட நியமங்களை மீறும் செயலாகும். இந்தக் காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட்டு, அவற்றின் உரிமை முந்தைய உரித்தாளர்களுக்கு மீளளிக்கப்பட வேண்டும். சொந்தக்காரர்களிடமிருந்து அவர்களது காணிகளைக் கடந்தகாலங்களில் பறித்துவைத்திருந்தமைக்காக, இலங்கை அரசாங்கம் அவர்களுக்குக் கட்டாயம் நஷ்டயீடு செலுத்தவேண்டும்.

இந்த காணிகளில் இடம்பெயர்ந்த மக்களையும் அகதிகளையும் மீளக்குடியமர்த்திப் புனர்வாழ்வு அளிப்பதற்கு ஐஎஸ்ஜிஏ பொறுப்பாக இருக்கும்.

### 18. கடல் மற்றும் கரையோர வளங்கள்

வடக்கு, கிழக்கு நிலப்பிரதேசத்தை அண்டிய கடல் மற்றும் கரையோர வளங்கள்மீது ஐஎஸ்ஜிஏ கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதோடு இந்த வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பாகத் தேவைப்படும் கட்டுப் பாடுகளை ஒழுங்கமைப்பதற்கான அதிகாரங்களையும் கொண்டிருக்கும்.

### 19. இயற்கை வளங்கள்

வடக்கு, கிழக்கிலுள்ள இயற்கை வளங்கள்மீது ஐஎஸ்ஜிஏ கட்டுப் பாட்டைக் கொண்டிருக்கும். அத்தகைய இயற்கை வளங்கள் தொடர்பாக



ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும். அத்தகைய ஒப்பந்தங்களின் கீழ் வர வேண்டிய பணம் அனைத்தும் ஐஎஸ்ஜிஏவிற்குச் செலுத்தப்படுவதை இலங்கை அரசு உறுதிசெய்யும். நடைமுறையிலிருக்கும் அத்தகைய ஒப்பந்தங்களில் எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் யாவும் ஐஎஸ்ஜிஏயின் சம்மதத்துடனேயே செய்யப்பட வேண்டும். எதிர்காலத்தில் இவற்றிற் கான ஒப்பந்தங்கள் ஐஎஸ்ஜிஏவுடன் செய்யப்பட வேண்டும்.

### 20. நீர்ப் பயன்பாடு

ஆறுகளின் கீழ்ப்பகுதியில் நீர்பெறுவோருக்கு நீதியாகவும் நியாய மாகவும் சம அளவிலும் நீர் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டிய கடப்பாடு ஆறுகளின் தோற்றுவாய்ப்பகுதிகளில் நீர் பெறுவோருக்கு உண்டு. இலங்கை அரசாங்கமும் ஐஎஸ்ஜிஏவும் நீர்வளப் பாவனையில் சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இந்தக் கோட்பாடு பின்பற்றப் படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

### 21. ஒப்பந்தங்களும் குத்தகைகளும்

ஐஎஸ்ஜிஏயின் நியாயாதிக்கத்தின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் எய்தப்படும் ஒப்பந்தங்கள் அனைத்தும் ஐஎஸ்ஜிஏவுடன் மேற்கொள்ளப்படவேண்டும். நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தங்கள் அப்படியே தொடரும். ஆனால், இந்த ஒப்பந்தங்களின் கீழ்க் கிடைக்கும் அனைத்து வருமானங்களும் ஐஎஸ்ஜிஏவிற்குக் கொடுக்கப்படுவதை இலங்கை அரசு உறுதிசெய்ய வேண்டும். அத்தகைய ஒப்பந்தங்களில் ஏதேனும் மாற்றம்செய்வதாயின் ஐஎஸ்ஜிஏயின் சம்மதத்துடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 22. பிணக்கு தீர்த்தல்

இந்த ஒப்பந்த உறுப்புரைக்களுக்கு அர்த்தம் கற்பிப்பதிலோ நடை முறைப்படுத்துவதிலோ இருதரப்பினரிடையேயும் பிணக்கு ஏதேனும் ஏற்பட்டு, அப்பிணக்கு நோர்வே அரசின் நல்லிணக்கம் உட்பட இரு தரப்பினருக்கும் ஏற்புடைத்தான வேறு ஏதாவது வழியில் தீர்க்கப்பட முடியாவிட்டால் மூன்று அங்கத்தவர்கள்; இதில் இருவர், தரப்பிற்கு ஒருவர் என்ற ரீதியில் இருதரப்பினராலும் நியமிக்கப்படுவர். மூன்றாம் உறுப்பினர் மன்றின் (ஒருவன் குழுவின்) தலைவராக இருப்பர். இவர் சம்பந்தப்பட்ட தரப்பினரினால் கூட்டாக நியமிக்கப்படுவார். ஏதேனும் கருத்து வேறுபாடு ஏற்படுமிடத்து, மன்றின் தலைவரை நியமிக்குமாறு சர்வதேச நீதிமன்றின் தலைவரை இருதரப்பினரும் கோருவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எந்தவொரு தகராறு பற்றியும் தீர்மானமெடுக்கையில், பிணக்குத் தீர்ப்பவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளதும் இலங்கை அரசாங்கத் தினதும் சமத்துவமான நிலையை உறுதிசெய்வதோடு, இந்த உடன் படிக்கையின் ஏற்பாடுகளை மட்டுமே உசாத்துணையாகக் கொண்டு பிணக்குகளைத் தீர்ப்பர்.

பிணக்குத்தீர்ப்பவர்களது தீர்மானம் இறுதியானதாகவும் முடிவான தாகவும் இருப்பதோடு, பிணக்கில் சம்பந்தப்பட்ட தரப்புக்களையும் கட்டுப்படுத்தும்.

### 23. செயல்படும் காலம்

பேச்சுவார்த்தை மூலமான நிரந்தரத் தீர்வொன்றின் விளைவாக வடக்கு, கிழக்கிற்கென ஓர் புதிய அரசாங்கம் நிறுவப்படும்வரை, இந்த ஒப்பந்தம் தொடர்ந்து நடைமுறையிலிருக்கும். அத்தகைய ஒரு தீர்வை எவ்வளவு விரைவாக அடைய முடியுமோ அவ்வளவு விரைவாக அடைவதற்கு இருதரப்பும் நல்லெண்ணத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும்.

இருப்பினும்கூட, இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக் கிடையே நான்கு வருடங்களின் முடிவில் இறுதி உடன்படிக்கை எதுவும் எட்டப்படாவிட்டால், ஒப்பந்தத்தின் விதிகளை மேலும் அதிகரித்து, தெளிவுபடுத்தி, வலுப்படுத்தும் நோக்கத்தில் இருதரப்பும் நல்லெண்ணத்தோடு பேச்சுக்களில் ஈடுபடும்.

•

## 3

## *சுனாமிக்குப் பின்னரான தொழிற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றை *(பி-டோம்ஸ்)* தாபிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்: 27 ஜூன் 2005

### முன்னுரை

2004 டிசம்பர் 26ஆம் தேதியன்று இலங்கையைத் தாக்கிய சுனாமி முன்னொருபோதும் இல்லாத அளவில் மனித உயிர்களையும் ஆதனங் களையும் அழித்துள்ளமையாலும்: இப்பொது அனர்த்தத்தை எதிர் கொள்வதில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய சமுதாயங்கள் அனைத்தும் மனிதாபிமானரீதியில் ஒத்துழைக்க வேண்டிய அவசரத் தேவை ஒன்றுள்ளதானாலும் சுனாமியால் தாக்கப்பட்ட இலங்கையின் அனைத்து பாகங்களுக்கும் சுனாமிக்குப் பின்னான நிதிகளின் சமமான ஒதுக்கீடு, ஏற்றுக்கொள்ளத்தகு தேவை மதிப்பீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட உள்ளதாலும் இந்த அவசரமான மனிதாபிமானத் தேவையை அங்கீகரித்து ஒத்துழைக்கும் மனப்பான்மையுடனும் அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய ஆறு மாவட்டங்களிலுள்ள கரையோரச் சமுதாயங்களுக்கு துரிதமான நிவாரணத்தையும் புனர்வாழ்வையும் புனரமைப்பையும் அபிவிருத்தியையும் வழங்குவதற்கும் அத்துடன் பாதிக்கப்பட்ட இடப்பரப்புகளை மீளக்கட்டியெழுப்பும் நடைமுறைக்கு வசதி வாய்ப்பளிப்பதற்கும் அதனைத் துரிதப்படுத்துவதற்கும் என இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் நல்லெண்ணத் துடனும் அவற்றின் முனைப்பான முயற்சிகளைப் பயன்படுத்தியும் ஒருமித்துச் செயலாற்றத் தீர்மானித்தமையாலும் சமுதாயங்களுக்கு இடையிலும் திறத்தவர்களுக்கிடையிலும் அத்தகைய ஒத்துழைப்பிற்கு வசதிவாய்பளிப்பதற்காக *பி-டோம்ஸ்* ஒன்றை தாபிப்பதற்கான தேவை யொன்றுள்ளதாலும் இப்போது, மேற்கூறியதைக் கருத்திற்கொண்டு ஏற்றுக்கொண்ட தரப்பினர் இருவரும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டுள்ளதுடன் பின்வருமாறும் உடன்படுகின்றனர்.

### 1. அமைப்பு

அ. சுனாமிக்குப் பின்னரான பணியைத் திட்டமிடல், நடைமுறைப் படுத்தல், இபைடுத்தல், ஆகிய நோக்கங்களுக்காக ஒருங்கிணைந்த தொழிற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பொன்று தாபிக்கப் படுதல் வேண்டும். அத்தகைய கட்டமைப்பு பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- i. சுனாமிக்குப் பின்னரான கரையோரப் புனரமைப்புக்குழு.
- ii. ஆறு மாவட்டங்களுக்குமான சுனாமிக்குப் பின்னான கரை யோரப் புனரமைப்புக் குழு (பிராந்தியக் குழு) அத்துடன்,
- iii. அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் சுனாமிக்குப் பின்னரான கரையோரப் புனரமைப்புக் குழுக்கள் (மாவட்டக் குழுக்கள்).

ஆ. உயர்மட்டக் குழுவும் பிராந்தியக் குழுவும் மாவட்டக் குழுக்களும் சுனாமி அனர்த்த வலையமைப்பிலுள்ள (டிடிஇசட்) சகலரதும் துயரங்களைக் கருத்தில்கொள்ளக்கூடியவாறான முறையொன்றில் அவற்றின் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும் என்பதுடன் இனப்பூர்வாங்கம் பால்நிலை, மொழி, மதம், அரசியல் அல்லது

* இந்த உடன்படிக்கை ஸ்கோப்பின் இணையத்தளத்திலிருந்து எடுக்கப்பட்டது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேறு அபிப்பிராயம், சமூகப்பூர்வாங்கம், பிறப்பு அல்லது வேறு அந்தஸ்து போன்ற ஏதுக்களின் மீது எந்தவொரு நபருக்கும் எதிராகப் பாரபட்சமின்றிச் செயல்பட வேண்டும்.

**2. நோக்கெல்லை**

அ. உயர்மட்டக்குழுவினதும் பிராந்தியக்குழுவினதும் மாவட்டக் குழுவினதும் நோக்கெல்லை முறையே பிரிவுகள் 5(அ), 6(ஆ) 8(ஆ) என்பவற்றில் வரைவிலக்கணம் கூறப்பட்ட பணிகளைப் புரிவதற்கும் பிராந்தியக்குழுக்களின் விடயத்தில் 8(அ) என்னும் பிரிவாலும் (கீழ்க் குறித்துரைக்கப்பட்டவாறு) பிரத்தியேகமாக ஆர்எம்டியிக்கும் பயனுறுவதாகவும் வரையறுக்கப்படுதல் வேண்டும்.

ஆ. சுனாமி அனர்த்த வலயம் (ஆர்எம்டி) சுனாமியால் பாதிக்கப்பட்ட இடப்பரப்பாக வரைவிலக்கணம் செய்யப்படுதல் வேண்டும்.

இ. ஆர்எம்டி ஆனது கடலையடுத்துள்ளதும் சராசரித் தாழ்த்தப்பட்ட நீர்மட்டத்திலிருந்து தரை நோக்கி இரண்டு கிலோமீட்டர் எல்லைக்குள் அமைந்துள்ளதுமான சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையின் எல்லாக் காணி இடப்பரப்பையும் உள்ளடக்குதல் வேண்டும்.

ஈ. உயர்மட்டக்குழு, மேலதிகக் காணி இடப்பரப்புகளைச் சுனாமி அனர்த்த வலயத்திற்குள் கொண்டுவரத் தீர்மானிக்கலாம். எவ்வாறாயினும் அத்தகைய எல்லாக் காணி இடப்பரப்புகளும் சுனாமியால் நேரடியாக தாக்கத்திற்குள்ளாக்கப்பட்டு அல்லது சுனாமியின் விளைவாக ஆட்களின் புலம்பெயர்வினாலும் மீள்குடியேற்றத் தினாலும் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உ. கடல்நீரால் மேவப்பட்ட கரையோர இடப்பரப்புகளில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய அல்லது அவற்றைப் பாதிக்கின்ற வழிமுறைகளுக்கான புதிய முன்மொழிவுகளை சர்வதேச முகவராண்மையொன்றில் அனுசரணையின் கீழ்ப் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும். அத்தகைய வழிமுறைகள் சுனாமியின்போது கடலுக்குள் இழக்கப்பட்ட பொருட்களை மீளப்பெறுவதற்கான வழிமுறைகளையும், பாதிக்கப்பட்ட கரையோரங்களையும் கடற்கரைகளையும் கடல்நீரால் குழப்பப்பட்டிருக்கும்போதுகூட துப்பரவு செய்தலையும் அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள இறங்குதுறைகளை அல்லது வர்த்தகக் கடல்தொழில் துறைமுகங்களைப் பழுதுபார்த்தலையும் தீர்மானித்தலையும் உள்ளடக்கக்கூடும்.

ஊ. இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான 2002 பிப்ரவரி 23 எனத் தேதியிடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கை முழுவலுவுடனும் பயனுறுதியுடனும் தொடர்ந்திருத்தல் வேண்டும் என்பதுடன் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திலுள்ள எதுவும் அத்தகைய உடன்படிக்கையைப் பங்கப் படுத்துவதாகவோ அல்லது அதன் நியதிகளை ஏதேனும் விதத்தில் மாற்றுவதாகவோ பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.



**3. நடைமுறையில் இருக்கும் காலப்பகுதி**

அ. இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு திறத்தவர்களாலும் அது நிறைவேற்றப்படும் தேதியிலிருந்து ('தொடங்கும் தேதி') வலுவுக்கு வருதல் வேண்டும் என்பதுடன் தொடங்கும் தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியொன்றிற்குத் தொடர்ந்து நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

ஆ. திறத்தவர்களின் உடன்பாட்டின் மூலம் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேலும் ஒரு காலப்பகுதிக்கு அல்லது காலப்பகுதிகளுக்கு நீடிக்கும் விருப்பத்தெரிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**4. ஆகு செலவும் செலவுகளும்**

*பி-டோம்ஸ்* என்னும் கட்டமைப்பை தாபித்தல், அதன் செயல்பாடு என்பன தொடர்பாக ஏற்படும் எல்லா ஆகுசெலவுகளையும் *(காஸ்ட்)* செலவுகளையும் ஏற்குமாறு உதவி வழங்குநர்கள் கேட்டுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

**5. உயர்மட்டக் குழு**

அ. புவியியல் நோக்கெல்லை உயர்மட்டக் குழு பிரத்தியேகமாக சுனாமி அனர்த்த வலயம் தொடர்பாகச் செயல்படுதல் வேண்டும்.

ஆ. பணிகள் உயர்மட்டக் குழு பின்வரும் பணிகளைப் புரிதல் வேண்டும்:

1. சுனாமி அனர்த்த வலயத்தில் உதவி வழங்குநர்களின் நிதிகளின் சமமான ஒதுக்கீட்டிற்கும் செலவீட்டிற்கும் உயர்மட்டக் குழுவின் கொள்கை வகுத்தல் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தேவை மதிப்பீடுகளின் அடிப்படையிலும் பாதிக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையினதும் சேத அளவினதும் விகிதாசாரத்தின் அடிப்படையிலும் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும் என்ற கோட்பாட்டினால் வழிநடத்தப்படல் வேண்டும்.
2. மதியுரைச் சேவைகளை வழங்குதல்.
3. *பி-டோம்ஸ்* கட்டமைப்பின் பணிகளைக் கண்காணித்தல்.

இ. அமைப்பு: உயர்மட்டக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1.1 இலங்கை அரசின் நியமத்தர்.

2.1 தமிழீழ விடுதலைப்புலிகளின் நியமத்தர்.

3.1 முஸ்லிம் கட்சிகளின் நியமத்தர்.

ஈ. மாற்று நியமத்தர்கள்: பெயர் குறித்த நியமனம் செய்யும் திறத்தவர் ஒவ்வொருவரும் மாற்று நியமத்தர் ஒருவரைப் பெயர் குறித் தொதுக்குதல் வேண்டும். உறுப்பினர் ஒருவர் சுகயீனம் காரணமாக அல்லது பிரயாணத்தின் காரணமாக அல்லது வேறு காரணத்தின் அவசியம் காரணமாக அல்லது வேறு அவசியச் சூழ்நிலை காரண மாக சமூகமாயிருக்க இயலாதிருக்கும்பட்சத்தில் மட்டும் கூட்டங் களுக்குச் சமூகம் அளிப்பதற்கும் உறுப்பினரின் சார்பில் செயலாற்று வதற்கும் அதிகாரமளிக்கப்படுவார்.

உ. தவிசாளர் (சேர்பர்சன்): உயர்மட்டக் குழு தவிசாளராகச் சேவை யாற்றுவதற்கும் அதன் கூட்டங்களை நடத்துவதற்கும் இசைவு படுத்துவதற்கும் உயர்மட்டக் குழுவின் உறுப்பினர்களுள் ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும். தவிசாளரான ஒவ்வொருவரும் இரண்டு மாதங்களுக்குச் சேவையாற்றிய பின்னர் தலைமைவகிக்கும் பணி உறுப்பினர்களிடையே சுழற்சி முறையில் வருதல் வேண்டும்.

ஊ. பார்வையாளர்கள்: உயர்மட்டக் குழுக் கூட்டங்களுக்குப் பார்வை யாளராக பலதரப்பு உதவி வழங்குநர்களையும் இருதரப்பு உதவி வழங்குநர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒவ்வொருவரைக் கொண்டிருத்தல் வேண்டும். பார்வையாளர்கள் முறையே பல தரப்பு உதவி வழங்கும் சமுதாயத்தாலும் பெயர் குறித்து நியமிக்கப் படுதல் வேண்டும்.

எ. முடிவெடுத்தல்:

1. உயர்மட்டக் குழு உடன்பாட்டின் அடிப்படையில் முடிவுகளை எடுக்க முயலுதல் வேண்டும். உயர்மட்டக் குழு எந்தவொரு முடிவுகளையும் எடுக்கும் முன்னர் எல்லா உறுப்பினர்களும் நல்லெண்ணத்துடன் ஒருமித்துப் பணியாற்றிப் பொது உடன் படிக்கை ஒன்றை எய்துவதற்குத் தங்களது முனைப்பான முயற்சிகளைப் பயன்படுத்துதலும் வேண்டும்.

2. உடன்பாட்டை எய்த முடியாதபட்சத்தில் உறுப்பினர்கள் உயர் மட்டக் குழுவில் தொடர்ந்தும் ஒத்துழைப்பை உறுதி செய்யும் நோக்கத்துடன் உடனடியாக அவர்களை நியமனம் செய்யும் திறத்தவர்களுடனும் விரிவான கலந்தாலோசனை நடைமுறை ஒன்றில் ஈடுபடுதல் வேண்டும்.



4. அப்போதும் உடன்பாட்டை எய்த முடியாதபட்சத்தில் நியமனம் செய்யும் திறத்தவர்கள் பிரிவு 5 (எ1, 2) என்பதில் விதிந்துரைக்கப் பட்ட கலந்தாலோசனை நடைமுறையைப் பின்பற்றியப் பின்னரும் 14 நாள் முன்னறிவித்தலைக் கொடுத்ததன் பின்னரும் உயர்மட்டக் குழுவின் ஒத்தழைப்பை இடைநிறுத்தல் செய்யலாம்.

ஏ. அமைவிடம்: உயர்மட்டக் குழு கொழும்பில் அமைந்திருத்தல் வேண்டும்.

ஐ. நடவடிக்கை முறைகள்: உயர்மட்டக் குழு அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அதன் சொந்த நடவடிக்கை முறைகளைத் தீர்மானித்தல் வேண்டும்.

ஒ. சேவையாற்றும் செயலகம்: உயர்மட்டக் குழு போதியளவு பணியாள் தொகுதியினருடன் சிறிய, சுயேச்சையான செயலகம் ஒன்றை தாபித்தல் வேண்டும்.

**6. பிராந்தியக் குழு**

அ. புவியியல் நோக்கெல்லை. பிராந்தியக் குழு பிரத்தியேகமாக ஆறு மாவட்டங்களிலுமுள்ள சுனாமி அனர்த்த வலயம் இடப்பரப்புகள் செயலாற்றுதல் வேண்டும்.

ஆ. பணிகள். பிராந்தியக் குழு பின்வரும் பணிகளைப் புரிதல்வேண்டும்:

1. சுனாமிக்குப் பின்னரான அவசரகால நிவாரணம், புனர்வாழ்வு, புனர்நிர்மானம், அத்துடன் அபிவிருத்தி வழிமுறைகளை நடை முறைப்படுத்துவதற்கும் அவற்றிற்கு முன்னுரிமை அளிப் பதற்குமான தந்திரோபாயங்களை விருத்தி செய்தல்.

2. சுனாமிக்குப் பின்னரான நிவாரணம், புனர்வாழ்வு, புனர்நிர்மானம், அத்துடன் அபிவிருத்தி என்பவற்றுக்கான கருத்திட்டங்கள் தொடர்பான கருத்திட்ட அங்கிகாரமும் முகாமைத்துவமும்.

3. கருத்திட்டங்களின் முழுமையான கண்காணிப்பு.

4. பிரிவு 7இல் குறித்துரைக்கப்பட்டவாறு வரைவிலக்கணம் கூறப்பட்ட நிதி தொடர்பாக நிதி முகாமைத்துவம்.

இ. அமைப்பு: பிராந்தியக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்:

1. இலங்கை அரசாங்கத்தால் பெயர் குறித்து நியமிக்கப்படும் 5 உறுப்பினர்களில் ஒருவர் பிரதித் தவிசாளராகச் செயலாற்றுவார்.

2. தமிழீழ விடுதலைப்புலிகளால் பெயர் குறித்து நியமிக்கப்படும் 5 உறுப்பினர்களில் ஒருவர் தவிசாளராக செயலாற்றுவார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3. முஸ்லிம் கட்சிகளால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட 3 உறுப்பினர்களில் ஒருவர் பிரதித் தவிசாளராகச் சேவையாற்றுவார்.

4. பிராந்தியக்குழு தகுந்த ஆண், பெண் சமநிலை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஈ. பார்வையாளர்கள்: பிராந்தியக்குழு அதன் கூட்டங்களுக்குச் சமுகமளிப்பதற்குப் பலதரப்பு உதவி வழங்குநர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பார்வையாளர் ஒருவரையும் இருதரப்பு உதவி வழங்குநர்களைப் பிரதிநிதிப்படுத்தும் பார்வையாளர் ஒருவரையும் கொண்டிருத்தல் வேண்டும். பார்வையாளர்கள் முறையே பல தரப்பு உதவி வழங்கும் சமுதாயத்தாலும் பெயர் குறித்து நியமிக்கப் பட வேண்டும். ஏனைய பார்வையாளர்கள் பிராந்தியக் குழுவின் கூட்டத்திற்குச் சமுகமளிப்பதற்கு அழைக்கப்படலாம்.

உ. முடிவெடுத்தல்:

i. பிராந்தியக்குழு உடன்பாட்டின் அடிப்படையில் முடிவுகளை எடுக்க முயலுதல் வேண்டும். பிராந்தியக்குழு எவையேனும், முடிவுகளை எடுப்பதற்கு முன்னர் எல்லா உறுப்பினர்களும் நல்லெண்ணத்துடன் ஒருமித்துப் பணியாற்றுதலுக்கும் பொது உடன்படிக்கை ஒன்றை எய்துவதற்கும் தங்களது முனைப்பாக முயற்சிகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

ii. உடன்பாட்டை எய்த முடியாதபட்சத்தில் பிராந்தியக்குழுவின் சாதாரணப் பெரும்பான்மையொன்றால் முடிவுகள் எடுக்கப் படுதல் வேண்டும்.

iii. கீழே உள்ள பத்தி.

iv. எவ்வாறிருப்பினும் சிறுபான்மைக் குழுவொன்றின் மீது பாதிப்பை ஏற்படுத்தும் பிரச்சினை ஒன்றின் மீது பிராந்தியக் குழுவின் குறைந்தபட்சம் 2 உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டிருப்பின் முடிவொன்று எடுக்கப்படும்பட்சத்தில் பிராந்தியக் குழுவின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கீகாரம் (7 உறுப்பினர்கள்) தேவைப்படும்.

v. மாவட்டக்குழுவொன்றின் தீர்மானம் ஒன்றிற்குப் பிராந்தியக் குழுவின் சாதாரணப் பெரும்பான்மையொன்று கிடைக்காத பட்சத்திலும் அத்துடன் பிரேரணை தொடர்பான முடிவை சீராக்குமாறு பிராந்தியக் குழுவின் குறைந்தபட்சம் இரண்டு உறுப்பினர்கள் வேண்டுகோள்விடுக்கும்பட்சத்தில் நிராகரிப் பிற்கு பிராந்தியக் குழுவில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கீகாரம் (7 உறுப்பினர்கள்) தேவைப்படும்.



ஊ. அமைவிடம்: பிராந்திக் குழு கிளிநொச்சியில் அமைந்திருத்தல் வேண்டும்.

எ. நடவடிக்கை முறைகள்: பிராந்தியக் குழு அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை முறைகளை உயர்மட்டக் குழுவுடனான கலந்தாலோசனையுடன் தீர்மானித்தல் வேண்டும்.

ஏ. சேவையாற்றும் செயலகம்: ஆறு மாவட்டங்களுக்கான சிறிய செயலகம் ஒன்று நிறுவப்படுதல் வேண்டும் என்பதுடன் உடனடி மனிதநேய மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான செயலகத்தி லிருந்து (சிரான்–எஸ்ஐஹெச்ஆர்என்) பணியாள் தொகுதியினர் பெறப் படலாம். இச்செயலகம் சுனாமிக்குப் பின்னரான கரையோரப் புனர் நிர்மான அபிவிருத்திப் பிராந்தியச் செயலகம். (ஆர்எஸ்பிசிஆர்டி) எனப் பெயரிடப்படல் வேண்டும் என்பதுடன் பிராந்தியக் குழு விற்குச் செயலக நிர்வாகச் சேவைகளைப் புகுத்துதலும் வேண்டும்.

ஐ. கருத்திட்ட முகாமைத்தவக் கூறு (யூனிட்): பிராந்தியக்குழுவால் அங்கீ கரிக்கப்பட்ட முகாமைத்துவக் குழுவொன்று (கமுக – பிஎம்யூ) தாபிக்கப்படுதல் வேண்டும்.

ஒ. கணக்கீட்டுப் பிராந்தியக் குழு: பொருத்தமான தகமைபெற்ற சுயேட்சையான கணக்காளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

### 7. பிராந்திய நிதியம்

அ. ஆறு மாவட்டங்களுக்கும் குறித்துரைக்கப்படாத (நிகழ்ச்சி) திட்டநிதிகளையும் செயலக நிதிகளையும் கொண்ட சுனாமிக்குப் பின்னரான கரையோர நிதியம் ஒன்றிருத்தல் வேண்டும். (பிராந்திய நிதியம்) குறித்துரைக்கப்படாத (நிகழ்ச்சி திட்டம்) நிதிகள் பிரத்தியேக மாக வெளிநாட்டு நிதிகளைக் கொண்டிருக்க வேண்டிய அதே வேளையில் செயலக நிதிகள் வெளிநாட்டு நிதிகள், உள்ளூர் நிதிகள் ஆகிய இரண்டையும் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ. திறத்தவர்கள்: பிராந்திய நிதியத்தின் சட்டக்காப்பாளராக இருப் பதற்குப் பொருத்தமான பல தரப்பு முகவர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

இ. பிராந்திய நிதியத்தின் நோக்கம்: ஆறு மாவட்டங்களினதும் சுனாமி யால் பாதிக்கப்பட்ட இடப்பரப்புகளில் நிவாரண, புனர்வாழ்வு, புனர்நிர்மான, மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கும் அதைத் துரிதப்படுத்துவதற்கும் தகுந்த அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளின்படி நிதிகளைத் துரிதமாக கிடைக்கச் செய்வதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈ. திறத்தவர்களும் சட்டக்காப்பாளர்களும்: பிராந்திய நிதியத்தை தாபிப்பதற்கும் தொழில்படுவதற்குமான கட்டமைப்பு முறையொன்றின் மீது உடன்படுதல் வேண்டும்.

**8. மாவட்டக் குழுக்கள்**

அ. புவியியல் நோக்கெல்லை: மாவட்டக் குழு ஒவ்வொன்றும் பிரத்தியேகமாகத் தத்தமது மாவட்டத்திற்குட்பட்ட சுனாமி அனர்த்த வலயம் இடப் பரப்புகள் தொடர்பாகச் செயலாற்றுதல் வேண்டும்.

ஆ. பணிகள்: மாவட்டக்குழு ஒவ்வொன்றும் அதன் மாவட்டத்திற்குள் பின்வரும் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

1. தேவைகளை இனம் காணுதல்.
2. தேவைகளை முன்னுரிமைப்படுத்தல்.
3. பல்வேறு பங்காளிகளிடமிருந்தும் கருத்திட முன்வைப்புகளைப் பிறப்பித்தலும் பெறுதலும் கணிப்பீடு செய்தலும் முன்னுரிமைப் படுத்தலும் அத்துடன் பிராந்தியக்குழுவிற்கு விதிப்புரைகளைச் சமர்ப்பித்தலும்.
4. கரத்திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணித்தலும் அதைப் பற்றிப் பிராந்தியக் குழுவிற்கு அறிக்கையிடுதலும்.

இ. அமைப்பும் முடிவெடுத்தலும்: ஏற்கனவே தாபிக்கப்பட்ட நன்கு பணியாற்றும் மாவட்டக் குழுக்கள் அவற்றின் பணிகளைத் தொடருதல் வேண்டும். மாவட்டக் குழுக்கள் அவற்றின் அமைப்பு மற்றும் முடிவெடுத்தல் தொடர்பான பிரச்சினைகளை மேலும் கலந்துரையாடி அவற்றின் மீது முடிவெடுக்கலாம். போதியளவிலான முஸ்லிம் பிரதிநிதித்துவம் உள்ளடக்கப்படவேண்டும். மாவட்டக் குழு தகுந்த ஆண், பெண் சமநிலையையும் கொண்டிருக்க வேண்டும்.

ஈ. அமைவிடம்: மாவட்டக் குழு ஒவ்வொன்றும் அதன் மாவட்டத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும்.

உ. சேவையாற்றும் செயலகம்: சிறிய சேவையாற்றும் செயலகம் ஒன்று மாவட்டக் குழுக்களுக்குச் செயலக நிர்வாகச் சேவைகளை வழங்க வேண்டும்.

**9. நிறைவேற்றுகை**

இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் இணைப்புப் பிரதிகளில் நிறைவேற்றப் படலாம். 2 வாசகங்களும் சமமான சான்றுறுதி கொண்டவையாகும்.



பின்னிணைப்பு 3

## சமாதானக் கால வரிசை

டிசம்பர் 2001 – பிப்ரவரி 2004

| | |
|---|---|
| 05.12.2001 | விடுதலைப்புலிகளுடன் திறந்த அடிப்படையில் பேச்சு வார்த்தை நடத்துவது என்ற வாக்குறுதியுடன் ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுகிறது. |
| 19.12.2001 | டிசம்பர் 24 நள்ளிரவு முதல் அமலில் இருக்கக்கூடிய வகையிலான ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை ஒரு மாத காலத்திற்குப் புலிகள் அறிவிப்பு. |
| 21.12.2001 | அதே காலப்பகுதியில் இலங்கை அரசாங்கமும் யுத்த நிறுத்தத்தை அறிவிக்கிறது. |
| 25.12.2001 | உதவுவதற்கு இந்தியா சம்மதிக்கிறது. ஆனால், மத்தியஸ்தத்தை நிராகரிக்கிறது. |
| 27.12.2001 | அனுசரணையாளர் பணியை மீளமேற்கொள்ளுமாறு பிரதமர் உத்தியோகபூர்வமாக நோர்வேயை வேண்டுகிறார். |
| 01.01.2002 | அதே வேண்டுகோளைப் புலிகளின் தலைவரும் விடுக்கிறார். |
| 15.01.2002 | பொருளாதாரத் தடைகளை நீக்கப் பிரதமர் உத்தரவு. பொதுமக்களுக்கான பயணக் கட்டுப்பாடுகளைப் பிரதமர் தளர்த்துகிறார். சகல கிழமை நாட்களிலும் வன்னிக்கான பணம் அனுமதிக்கப்படுகிறது. |
| 20.01.2002 | 24 பிப்ரவரி 2002 வரை யுத்தநிறுத்தம் இருதரப்பினராலும் நீடிப்பு. |
| 22.02.2002 | யுத்தநிறுத்த உடன்படிக்கை கையெழுத்து. |
| 24.02.2002 | யுத்தநிறுத்த உடன்படிக்கையைக் கண்காணிப்பதற்காக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வருகிறது. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயல்பாடுகள் பற்றிய உடன்பாடுகள் பகிரங்கப்படுத்தப்படவில்லை. |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*04.03.2002* யுத்தநிறுத்த உடன்படிக்கைமீதான பாராளுமன்ற விவாதம்.

*13.03.2002* யுத்தநிறுத்த உடன்படிக்கை பற்றி ஜனாதிபதியும் பிரதமரும் விவாதிக்கிறார்கள்.

*27.03.2002* நேரடியான சமாதானப் பேச்சுவார்த்தையை ஜனாதிபதி வரவேற்பு. பேச்சுவார்த்தைக்கான இடம் பற்றி அரசும் புலிகளும் விவாதிப்பு, இந்தியா மறுப்பு.

*10.04.2002* 12 வருடகாலத்தில் முதல் தடவையாக முதல் சர்வதேச ஊடகவியலாளர் மகாநாட்டைப் பிரபாகரன் நடத்துகிறார். பிராந்திய சுயாட்சியை ஏற்றுக்கொள்ளும் அதேசமயம் இறுதித் தீர்வு காணப்படும்வரை ஆயுதக் களைவை நிராகரிக்கிறார்.

*01.05.2002* பிரதமரைத் தவிர்த்துவிட்டு, தேசியப் பாதுகாப்புச் சபையை ஜனாதிபதி கூட்டுகிறார்.

*18.05.2002* விடுதலைப்புலிகள்மீதான தடை இலங்கையில் நீக்கப் பட்டாலும் அவர்கள்மீதான சர்வதேசத் தடை தொடர்ந்து இருக்க வேண்டும் என்று பிரதமர் கூறுகிறார்.

*19.05.2002* பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தர் வேண்டும் என்கிறது விடுதலைப்புலிகள் அமைப்பு. விடுதலைப்புலிகள் சார்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தென்னிலங்கை யில் கருத்துகளை முன்வைக்கும்.

*27.05.2002* நடைபெற வேண்டிய சமாதானப் பேச்சுவார்த்தையின் எண்ணிக்கை, அதன் காலம், அதில் பங்குகொள்ளும் தூதுக் குழுவின் அளவு, ஆலோசகர்கள் பேச்சுவார்த்தை யில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்களா இல்லையா என்பவை தொடர்பான கேள்விப் பத்திரங்களை நோர்வே யானது அரசாங்கம் மற்றும் விடுதலைப்புலிகளுக்கு அனுப்புகிறது.

*02.06.2002* எல்டிடிஈ நம்பிக்கையை வெளிப்படுத்தியது.

*12.07.2002* இனி யுத்தம் இல்லை என்று புலிகள் உறுதியளிப்பு.

*13.07.2002* கிழக்கில் முஸ்லிம் மக்களைப் புறக்கணித்தமையால் ஏற்படக்கூடிய எதிர்விளைவுகளைக் குறிப்பிட்டுப் புரிந் துணர்வு உடன்படிக்கையை மீளாய்வு செய்வதற்கான கோரிக்கையைப் பொதுஜன ஐக்கிய முன்னணி மீள வலியுறுத்துகிறது.

*14.08.2002* சமாதானப் பேச்சுவார்த்தைக்கான தேதிகளை நோர்வே அறிவிக்கிறது.



*02.09.2002* புலிகள்மீதான தடையை நீக்குவதற்கு ஜனாதிபதி எதிர்ப்பு.

*04.09.2002* புலிகள்மீதான தடை நீக்கப்பட்டது. முதல் தடவையாக இருதரப்பினரிடையிலுமான யுத்தக் கைதிகளின் பரிமாறல் தனிநாட்டுக்கான கோரிக்கையைப் புலிகள் கைவிடுதல்.

*10.09.2002* சமாதானப் பேச்சுவார்த்தைக் குழுவின் விபரத்தை அரசு அறிவிப்பு.

*16–18.09.2002* தாய்லாந்தின் சட்டாசாஹிப்பில் அரசு புலிகளுக்கிடை யிலான முதல் சுற்றுப் பேச்சுவார்த்தை சமாதானத்தை நோக்கிய படிப்படியான அணுகுமுறைக்கும் மனிதாபி மானச் சவால்களுக்கு முன்னுரிமை அளிப்பது எனவும், தரப்பினர் இணக்கப்பாடு.

*02.10.2002* தேசியப் பாதுகாப்பு விடயங்கள் சம்பந்தமாக பிரதமருக்கு ஜனாதிபதி கடிதம் எழுதுகிறார்.

*31.10.2002 – 03.11.2002* மத்திய வங்கிக் குண்டு வெடிப்புக் குற்றச்சாட்டிற்காகப் பிரபாகரனுக்கு 200 வருடச் சிறைத்தண்டனை. தாய்லாந்தில் இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை சிரான், எஸ்டிஎன் மற்றும் எஸ்பிஎம் ஆகிய உபகுழுக்களை நிறுவு வதற்குத் தரப்பினர் தீர்மானம். பேச்சுவார்த்தையில் முக்கியமான அரசியல் விவகாரங்களை ஆராய்வதற்குப் புலிகள் இணக்கம் தெரிவித்ததுடன் பிரதான அரசியல் நீரோட்டத்தில் இணைவு.

*12.11.2002* 2ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தைத் தொடர்பாக ஜனாதிபதிக்கு விவரிப்பு. சமானத்திற்கான ஆணைக் குழுவில் புலிகளை அனுமதிக்க ஜனாதிபதி முன்மொழிவு.

*15.11.2002* நோர்வே பக்கச்சார்பற்ற நாடு அல்ல என்று கதிர்காமர் தெரிவிப்பு.

*25.11.2002* ஒஸ்லோவில் சமாதான ஆதரவுக்கான கட்டத்தை நோர்வே நடத்துகிறது. வடக்கு-கிழக்கை மீளக் கட்டியெழுப்பு வதற்காக 85 பில்லியன் டாலர்களைப் பெற்றுக்கொள் வதற்கான வாய்ப்பை அரசும் புலிகளும் ஏற்படுத்திக் கொண்டன.

*2–5.12.2002* ஒஸ்லோவில் மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தை ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறைமை அடிப்படையில் தீர்வைக் காண்பதற்கான வாய்ப்புகளை ஆராய்வதற்காக இணக்கப்பாடு. சுயநிர்ணயத்திற்கான உரிமையைப் புலிகள் மீளவலியுறுத்தல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

27.12.2002 ஆயுதக் களைவைப் புலிகள் நிராகரிப்பு

6–9.01.2003 தாய்லாந்தின் நாக்கோன் பத்தோமில் 4ஆம் சுற்றுப் பேச்சு வார்த்தை. எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு உதவிக்கான பாதுகாவலனாக உலக வங்கி நியமனம்.

7–8.02.2003 ஜெர்மனியின் பேர்லினில் 5ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தை.

18–21.03.2003 ஜப்பானின் ஹக்கோனேவில் 6ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தை.

21.04.2003 தாங்கள் ஓரங்கட்டப்பட்டதாகக் கூறி, விடுதலைப்புலிகள் ஒரு தலைப்பட்சமாகப் பேச்சுவார்த்தையை இடை நிறுத்துதல், யுத்தநிறுத்த உடன்படிக்கையை மதித்து நடக்கவும் சமாதானத்திற்காகப் பற்றுறுதியுடன் செயல் படவும் புலிகள் உறுதி.

22.04.2003 பாதுகாப்புப் படைகளை உயர் உசார் நிலையில் ஜனாதிபதி வைக்கிறார்.

02.06.2003 இடைக்கால நிர்வாக சபைக்கு மாற்றீடான ஒரு சபையை அரசாங்கம், புலிகளுக்கு முன்மொழிவு.

04.06.2003 அந்த மாற்றீட்டுச் சபையைப் புலிகள் நிராகரிப்பு.

05.06.2003 டோக்கியோ உதவி வழங்கும் நாடுகள் மகாநாட்டைப் புலிகள் புறக்கணிப்பு, நிபந்தனையற்ற இடைக்கால நிர்வாக சபைக்கு ஜனாதிபதி மறுப்பு.

09.06.2003 விடுதலைப்புலிகளுக்கு 'மாகாண நிர்வாகப் பங்கை' வழங்கப் பிரதமர் முன்வருதல்.

10.06.2003 டோக்கியோ உதவி வழங்கும் நாடுகள் மகாநாட்டில் 4.5 பில்லியன் டாலர் உதவி இலங்கைக்கு உறுதியளிப்பு.

01.07.2003 அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள கிண்ணியா முகாமை அகற்றுமாறு போர்நிறுத்தக் கண்காணிப்பு குழு விடுதலைப்புலிகளிடம் வேண்டுகோள்.

24.07.2003 இடைக்கால நிர்வாக முன்மொழிவுகளை ஆராய்வதற்கு ஜனாதிபதி குழுவொன்றை நியமித்தல்.

29.07.2003 கிண்ணியா முகாம் விவகாரம் காரணமாக, யுத்தநிறுத்த உடன்படிக்கை பாதிக்கப்படுவதாக யுத்தநிறுத்தக் கண்காணிப்பு குழு, பிஆர்ஐயூவிற்குக் கூறுகிறது.

04.08.2003 இடைக்கால நிர்வாக சபை முன்மொழிவுகளை ஆராய் வதற்கு ஜனாதிபதி இணக்கம்.

14.08.2003 அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாக முன்மொழிவை விவாதிப்பதற்காக ஆகஸ்ட் 21–27 வரை தமது சட்ட



வல்லுநர்களுடன் பாரிஸ் நகரில் உள்ளகக் கூட்டம் நடத்த அறிவிப்பு.

11.09.2003 டோக்கியோ மகாநாட்டின் பின்னரான மீளாய்வு மகாநாட்டை நடத்துவதற்காக ஜப்பானின் விசேடத் தூதுவர் யசூசி அகாசி வருகை. இருதரப்பினருடன் நன்கொடையாளர் களும் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜப்பானிய அரசாங்கத்தால் அழைப்பு.

12.09.2003 கொழும்பு, ஹில்டன் ஹோட்டலில் டோக்கியோ மகாநாட்டின் மீளாய்வுக் கட்டம். கூட்டத்தைப் புலிகள் புறக்கணிப்பு. சமாதான முயற்சியில் முன்னேற்றம் இல்லை என்றால், உதவியைத் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்போவதாகக் கொடையாளர்கள் அறிப்பு.

15.09.2003 சமாதானப் பேச்சுவார்த்தையின் வெற்றிக்காக, ஜனாதிபதி யின் பங்கு குறித்து யசூசி அகாசி சுட்டிக்காட்டுகிறார்.

02.10.2003 விடுதலைப்புலிகளை வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கமாக அமெரிக்கா வலியுறுத்துகிறது.

08.10.2003 திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றிய பகுதியில் விடுதலைப்புலிகளின் முகாம் அமைப்பு கவலையளிக்கக் கூடிய ஒரு விடயம் எனப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு.

23.10.2003 போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரை நீக்குமாறு ஜனாதிபதி வேண்டுகோள்.

30.10.2003 போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவானது ஆலோசனைப் பகிர்விற்காக ஒஸ்லோவிற்கு மீள அழைப்பு.

31.10.2003 இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான முன் மொழிவைப் புலிகள் சமர்ப்பிப்பு.

04.11.2003 ஐதேமு அரசாங்கத்திடமிருந்து பாதுகாப்பு, உள்துறை மற்றும் ஊடகத்துறை அமைச்சுகளை ஜனாதிபதி தன்வசம் பொறுப்பேற்பு. நாடு முழுவதும் அவசரகாலப் பிரகடனம்.

05.11.2003 இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனையை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நிராகரிப்பு. யுத்தநிறுத்தம் தொடர்ந்தும் பேணப்படும் என்கிறார் ஜனாதிபதி.

12, 14.11.2003 சமாதானச் செயன்முறையைப் பிரதமரே தொடர வேண்டுமென அனுசரணையாளர்களுக்கு ஜனாதிபதி சொல்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | |
|---|---|
| *19.01.2004* | 1 பிப்ரவரி 2004 முதல் ட்ரொன்ட் பியுறுஹொவ்டே போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராக மீள நியமிக்கப்படுகிறார். டோக்கியோ மகாநாட்டின் 2ஆம் மீளாய்வுக் கூட்டத்திற்காக யசூசி அகாசி கொழும்பு வருகிறார். |
| *05.02.2004* | இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனையை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நிராகரிப்பு. யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் பேணப்படும் என்கிறார் ஜனாதிபதி. |



## பின்னிணைப்பு 4

# கட்டுரை ஆசிரியர்கள் பற்றிய குறிப்புகள்

**குமார் ரூபசிங்க**

இலங்கையில் மானிடப் பாதுகாப்புக்கு ஊடாக சகவாழ்வை மேம்படுத்தி வரும் ஒரு நிறுவனமான சகவாழ்வு மன்றத்தின் ஸ்தாபகர் மற்றும் தலைவர் ஆவார். அவர் 1992–1998 காலப் பிரிவின்போது வன்முறை யுடன் கூடிய உள்நாட்டு மோதல்களைத் தடுத்தல் மற்றும் தணித்தல் என்பவற்றுக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் அரசு சாரா நிறுவனமான இன்டர்நேஷனல் அலெட் அமைப்பின் செயலாளர் நாயக மாகப் பணியாற்றினார். கலாநிதி ரூபசிங்க அவர்களின் தலைமையின் கீழ் இன்டர்நேஷனல் அலெட் அமைப்பு உலகிலுள்ள மிகப் பெரிய சர்வதேச அரசு சாரா அமைப்புகளில் ஒன்றாக உருவாயிற்று. அவர் இந்த அமைப்பில் பணியாற்றிய காலத்தின்போது உள்ளூர் அமைப்புகளின் ஆற்றல்களைக் கட்டியெழுப்புவதில் ஈடுபட்டதுடன், பிரதானமாக மோதல்கள் இடம்பெற்று வரும் பிரதேசங்களில் 50க்கும் மேற்பட்ட அமைப்புகளுடன் கூட்டாக இணைந்து பணிகளை மேற்கொண்டிருந்தார். முன்னெச்சரிக்கை முறைகள் மற்றும் முரண்பாட்டுத் தீர்வு என்பவற்றை முன்னெடுத்தல், நீண்டகாலமாக இடம்பெற்று வரும் உள்நாட்டு மோதல்களைச் சமரசம்செய்துவைப்பதில் மூன்றாம் தரப்பினரின் பாத்திரம் என்பன தொடர்பான கோட்பாட்டுரீதியான மற்றும் எண்ணக் கருரீதியான சிந்தனைகளை உருவாக்குவதற்கு அவர் பங்களிப்புச் செய்திருந்ததுடன், உள்நாட்டுப் போர்களுக்குப் பல வழிமுறை களினூடாகத் தீர்வுகளை எடுத்துவரும் எண்ணக்கருவை முன்வைத்தார். இக்காலப் பிரிவின்போது இன்டர்நேஷனல் அலெட் அமைப்பு இலங்கை, பிலிப்பைன்ஸ், பிஜி, சியாரா லியோன், புருண்டி, ருவண்டா, கொக்கேசஸ் பிராந்தியம் மற்றும் ரஷ்யக் கூட்டமைப்பு என்பவற்றையும் உள்ளடக்கிய 15க்கும் மேற்பட்ட நாடுகளில் முரண்பாடுகளைச் சமரசம் செய்துவைப்பதிலும், தீர்த்துவைப்பதிலும் சம்பந்தப்பட்டிருந்தது. இதற்கு முன்னர் அவர் ஒஸ்லோவில் அமைந்திருக்கும் சர்வதேச சமாதான ஆராய்ச்சி நிறுவனத்தில் (பிஆர்ஐடி) பணியாற்றினார். அங்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர் இன முரண்பாடு மற்றும் முரண்பாட்டுத் தீர்வு குறித்த அந்த நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டத்தை நெறிப்படுத்தினார். சர்வதேச சமாதான ஆராய்ச்சி நிறுவனத்தில் பணியாற்றிய காலப்பிரிவின்போது ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகத்தின் ஆளுகை மற்றும் முரண்பாட்டுத் தீர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார். அவருடைய 20 வருடப் பணிக்காலத்தின்போது முன்னெச்சரிக்கை மற்றும் முன் எதிர்வினை மன்றத்தின் (*ஃபியூவர்*) தலைவராகவும் சர்வதேச மனித உரிமைகள் தகவல் ஆவணப்படுத்தல் மற்றும் தகவல் பரிமாற்றப் பிரிவின் (*ஹிரிடாக்ஸ்*) தலைவராகவும், உள்நாட்டு முரண்பாடுகள் தொடர்பான ஆணைக்குழுவின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். அவர் லண்டன் பொருளியல் பள்ளியிலிருந்து பி.ஏ. (ஹொன்ஸ்) பட்டத்தையும் லண்டன் சிட்டி பல்கலைக்கழகத்திலிருந்து கலாநிதி (முனைவர்) பட்டத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார். அவர் 30க்கும் மேற்பட்ட புத்தகங்களின் ஆசிரியராகவும் தொகுப்பாசிரியராகவும் இருந்து வந்திருப்பதுடன், கல்வித் துறைச் சஞ்சிகைகளில் முரண் பாட்டுத் தீர்வுத் துறை தொடர்பாக 500க்கும் மேற்பட்ட கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

### பிரட்மன் வீரக்கூன்

வீரக்கூன் மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் பொருளியல் மற்றும் சமூக வியல் ஆகிய பாடங்களைக் கற்றுச் சமூகவியலில் எம்ஏ பட்டத்தைப் பெற்று 1954இல் இலங்கை சிவில் சேவையில் சேர்ந்தார். தனது பணிக் காலத்தின்போது அவர் இலங்கையின் ஏழு பிரதம மந்திரிகளின் செயலாளராக இருந்து வந்துள்ளார். மேலும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட மூன்று ஜனாதிபதிகளின் மூத்த ஆலோசகராகவும் பணியாற்றி யுள்ளார். இது தவிர மூன்று மாவட்டங்களில் அரசாங்க அதிபராகவும், இரு அமைச்சுகளில் நிரந்தரச் செயலாளராகவும் செயல்பட்டுள்ளார். 1983 ஜூலை கலவரங்களை அடுத்து நாட்டின் முதலாவது அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளராகவும் அவர் பணியாற்றினார். எல்டிடிஈ இயக்கத்துடனான போர்நிறுத்த ஒப்பந்தம் 2002 பிப்ரவரி 22ஆம் தேதி ஆரம்பமானதை அடுத்து, போர்நிறுத்தக் காலப்பிரிவின்போது பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் செயலாளராக பணிபுரிவதற்கு மீண்டும் அவர் சேவைக்கு அழைக்கப்பட்டார். வீரக்கூன் அவர்களின் சர்வதேச மட்டத் திலான தொழில் அனுபவம் லண்டனில் அமைந்துள்ள சர்வதேசக் குடும்பத் திட்டமிடல் சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் (1984–1989) மற்றும் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுவின் (ஐசிஆர்சி) சர்வதேச ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் (1994–1999) என்ப வற்றையும் உள்ளடக்குகின்றது. வீரக்கூன் முரண்பாட்டுத் தீர்வு, மனித



உரிமைகள், ஆளுகை மற்றும் பொது நிர்வாகம் போன்ற விடயங்கள் குறித்து எழுதியும் பேசியும் வருகின்றார். அவருடைய எழுத்தாக்கங்கள் ஜனாதிபதி பிரேமதாசவின் அரசியல் வாழ்க்கை வரலாறான *பிரேமதாச ஆஃப் ஸ்ரீலங்கா* (விகாஸ், இந்தியா) மற்றும் *ரென்டரிங் அண்டு சீசர்* (ஸ்டெர்லிங் பப்ளிசர்ஸ், இந்தியா, 2004) ஆகிய நூல்களையும் உள்ளடக்கு கின்றன. நாட்டின் 10 தேசியத் தலைவர்கள் இலங்கை இதுவரையில் எதிர்கொண்டிராத அரசியல் மற்றும் பாதுகாப்புச் சவால்களை எதிர் கொண்டபொழுது அவர்களுடன் நூலாசிரியர் கொண்டிருந்த தொடர்பின் விவரங்களை இந்த இரண்டாம் நூல் விளக்குகின்றது.

### ஆஸ்டின் பெர்னாண்டோ

ஆளுகை, மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்ற துறைகளில் சுதந்திரமான ஓர் ஆலோசகராக இருந்து வரும் ஆஸ்டின் பெர்னாண்டோ தற்பொழுது சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியின் ஆலோசகராகப் பணியாற்றுகிறார். அவர் முன்னர் பாதுகாப்பு, மாகாண சபைகள், உள்ளூராட்சி, கூட்டுறவு, உள்நாட்டு மருத்துவம், புனர்வாழ்வளிப்பு மற்றும் புனருத்தாரணம் ஆகிய அமைச்சுகளின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். மேலும், 15 வருடங்களுக்கும் மேலாக மாவட்ட நிர்வாகத்திலும் பல நியதிச் சபைகளிலும் அவர் பல்வேறு பதவிகளை வகித்து வந்துள்ளார். தேசிய மற்றும் சர்வதேச அரங்குகளில் பல கட்டுரைகளை வாசித்திருக்கும் பெர்னாண்டோ, ஆங்கில மற்றும் சிங்களப் பத்திரிகைகளில் பெருந்தொகையான கட்டுரைகளை எழுதியுள்ளார்.

### ஜி. எல். பீரிஸ்

இலங்கைப் பாராளுமன்றத்தின் தற்போதைய உறுப்பினராவார். பொது ஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தில் தொழில் அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் அரசியலமைப்பு விவகார அமைச்சராகப் பதவி வகித்தவர். றோடெஸ் புலமைப் பரிசில் பெற்று, ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். கொழும்புப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தராகவும் சட்டத்துறைப் பேராசிரிய ராகவும் பணியாற்றியிருக்கிறார்.

### பிரியான் செனவிரத்ன

தற்பொழுது சகவாழ்வு மன்றத்தில் தகவல் பகுப்பாய்வாளராகப் பணியாற்றி வருகின்றார். அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருளாதாரம், சமூகவியல் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் படித்துப் பிஏ பட்டம் பெற்றுள்ளார். தற்பொழுது மனித வள முகாமைத்துவத் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்று வருகிறார்.

### ஹக்ரூப் ஹொக்லண்ட்

2002 இல் போர்நிறுத்த கண்காணிப்புக் குழு தாபிக்கப்பட்டது முதல் பணியாற்றிவரும் இவர், தற்போது அதன் தலைவராகச் செயல்படுகிறார். இலங்கைக்கு வருவதற்கு முன்னர் எட்டு இடங்களில் கண்காணிப்புக் குழுவில் பணியாற்றியிருக்கின்றார். ஐக்கிய நாடுகள் சபை மற்றும் நேட்டோ ஆகியவற்றின் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது லெபனான், பொஸ்னியா போன்ற நாடுகளில் சேவையாற்றியிருக்கிறார்.

### தர்மரத்னம் சிவராம்

அப்பொழுது தமிழீழ மக்கள் விடுதலை – புளொட் – அமைப்பின் ஓர் அங்கமாக இருந்து வந்த காந்திய இயக்கத்தில் ஆரம்பத்தில் ஓர் உறுப்பினராக இருந்து வந்த சிவராம், பின்னர் நாடறிந்த ஒரு அரசியல் பகுப்பாய்வாளராகவும் சுதந்திர ஊடகவியலாளராகவும் உருவானார். முதலில் அவர் இன்டர் பிரஸ் சர்வீஸ் (ஐபிஎஸ்) செய்திச் சேவைக்குப் பெருந்தொகையான கட்டுரைகளை வழங்கினார். அதன் பின்னர் *தராக்கி* என்ற புனைபெயரில் *சண்டே டைம்ஸ், தமிழ் டைம்ஸ்* (லண்டன்), *டெய்லி மிரர்*, வீரகேசரி மற்றும் *தி* ஐலண்ட் ஆகிய பத்திரிகைகளுக்கு எழுதினார். அவர் 2005இல் மரணமடைந்தபொழுது *தமிழ்நெட்* இணையதள பத்திரிகையின் மூத்த ஆசிரியராகச் செயல்பட்டு வந்தார்.

### சமன் கெலேகம

இலங்கையின் கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராகச் செயல்பட்டு வருகின்றார். இவர் *சவுத் ஏசியன் எகனாமிக் ஜோர்னல்* சஞ்சிகையின் ஆசிரியராகவும், வேறு பல சஞ்சிகைகளின் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் உள்ளார். 1999–2003 காலப் பிரிவின் போது இலங்கைப் பொருளாதாரச் சங்கத்தின் *(ஸ்ரீலங்கா எகனாமிக்ஸ் அசோசியேசன்)* தலைவராகச் செயல்பட்டார். கலாநிதி கெலேகம உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சஞ்சிகைகளில் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து விரிவாக எழுதியுள்ளார். மேலும், அவர் இந்த விடயம் தொடர்பாக உள்நாட்டு மற்றும் சர்வதேச அரங்குகளில் பெருந்தொகையான விரிவுரைகளையும் நிகழ்த்தியுள்ளார். *எகனாமிக் பாலிசி இன் ஸ்ரீலங்கா: இஸ்யூ அண்டு டிபேட்ஸ்* (ஷேஜ் பப்ளிசர்ஸ், 2004) மற்றும் *ரெடிமேட் கார்மெண்ட் இன்டஸ்ட்ரி இன் ஸ்ரீலங்கா: ஃபேசிங் த குளோபல் சேலஞ்ச்* (ஐபிஎஸ் பப்ளிகேசன், 2004) என்பன அவருடைய சமீபத்திய நூல்களாகும். அவர் ஐக்கிய ராச்சியத்தில் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

### சுனில் பஸ்டியன்

சுனில் பஸ்டியன் கொழும்பில் அமைந்துள்ள இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச மையத்தில் மூத்த ஆய்வாளராகப் பணியாற்றி வருகின்றார். அரசியல் பொருளாதாரம், சமூக அபிவிருத்தி, முரண்பாடு என்பன அவருடைய பிரதான ஆராய்ச்சி அக்கறைகளாக இருந்து வருகின்றன. தற்பொழுது அவர் 'உலகமயமாக்கல், வெளிநாட்டு உதவி மற்றும் உள்நாட்டுப் போர் இலங்கையின் நிலை' என்ற தலைப்பிலான ஒரு செய்திட்டத்தில் பணியாற்றி வருகின்றார். அவர் பெருந்தொகையான கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார். தனது ஆராய்ச்சிப் பணிக்கு மேலதிகமாக கடந்த 20 வருட காலமாகத் பஸ்டியன் பெருந்தொகையான நிதி வழங்குநர்களின் ஆலோசகராகவும் செயல்பட்டு வந்துள்ளார். மேலும், அவர் வறுமைப் பகுப்பாய்வு நிலையம் மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்பவற்றின் பணிப்பாளர் சபைகளிலும் அங்கம் வகித்து வருகின்றார்.

### சுமனசிறி லியனகே

இலங்கைப் பல்கலைக்கழகத்திலிருந்து பிஏ பட்டத்தையும், கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து எம்.பில் பட்டத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார். அவர் 1970 தொடக்கம் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொருளியல் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றி வந்துள்ளார். பேரண்டப் பொருளியல், அரசியல் பொருளாதாரம் மற்றும் முரண்பாட்டின் பொருளியல் ஆகிய விடயங்கள் குறித்து விரிவுரையாற்றி வந்திருப்பதுடன், தற்பொழுது பொருளியல் துறையின் தலைவராகவும் உள்ளார். அவருடைய பிரதான ஆராய்ச்சித் துறைகள் முரண்பாடுகள் மற்றும் பேச்சுவார்த்தைகள் என்பவற்றையும் உள்ளடக்குகின்றன. இலங்கையின் சமாதான இயக்கம் மற்றும் இனக் கலவரங்களின் அரசியல் பொருளாதாரம் போன்ற விடயங்கள் குறித்து இவர் விரிவாக எழுதியுள்ளார்.

### பேர்ணாட் ஏ.பி. குணதிலக

வாஷிங்டன் டிசியில் இலங்கையின் உயர் ஸ்தானிகராகக் கடமையாற்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருகிறார். பல நாடுகளில் இலங்கையின் பிரதிநிதியாகப் பணியாற்றிய இவர், இலங்கை சமாதானச் செயன்முறைகளின் ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் செயலாளர் நாயகமாகவும் செயல்பட்டிருக்கிறார்.

### எம். ஐ. எம். முஹைதீன்

எம். ஐ. எம். முஹைதீன் முஸ்லிம் உரிமைகள் அமைப்பின் (எம்ஆர்ஓ) தலைவராகவும் வடக்கு, கிழக்கு முஸ்லிம் சமாதானப் பேரவையின் செயலாளர் நாயகமாகவும் முஸ்லிம் புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்ற அமைப்பின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் கிழக்கு மாகாண தமிழ்-முஸ்லிம் சமாதானக் கமிட்டியின் ஒருங்கிணைப்பாளராகவும் இனமுரண்பாட்டுத் தீர்வுக்கான அம்பாறை மாவட்டக் கமிட்டியின் தலைவராகவும் இருந்து வருகிறார். இவர் முன்னர் அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் இணைச் செயலாளராகவும் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய இணைப்புச் செயலாளராகவும் செயல் பட்டு வந்துள்ளார். மேலும், இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் என்பவற்றுக்கிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுவின் ஓர் உறுப்பினராகவும் முஹைதீன் இருந்தார்.

### எரிக் சொல்ஹெய்ம்

நோர்வே அரசியலில் இவர் ஒரு முக்கிய நபராவார். 1990களில் தனது கட்சி கூடுதல் பிரபல்யம் பெறுவதற்காகச் சிறப்பாக வழிநடத்தியிருந்தார். நோர்வே வெளிவிவகார அமைச்சின் ஆலோசகராக இலங்கையில் பணி யாற்றுவதற்காக 2000ஆம் ஆண்டின் வசந்த காலம் முதல் அந்நாட்டின் பாராளுமன்றத்திற்குச் சமூகமளிக்காமல் இருப்பதற்காக விடுப்பு அனுமதி பெற்றிருந்தார். இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் குறிப்பிடத்தக்க ஒருவராகக் காணப்படுகிறார். 2005இல் நோர்வேயின் சர்வதேச அபி விருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டபோது சர்வதேச விவகாரங்களில் ஈடுபட்டிருந்தார். இந்த ஸ்தானத்தில் இருந்துகொண்டு இலங்கை விவகாரங்களில் அவரால் தொடர்ந்தும் ஈடுபட்டுக்கொண்டிருக்க முடிகிறது. சமாதானச் செயன்முறையின் 3 வருடகாலத் தடங்கலுக்குப் பின்னர் 2006இன் ஆரம்பத்தில் இலங்கையில் யுத்தத்துடன் சம்பந்தப் பட்ட இருதரப்பினரையும் பேச்சுவார்த்தை மேடைக்குக் கொண்டு வருவதற்காகக் கலந்துரையாடலில் ஈடுபட்டார். யுத்தநிறுத்த உடன் படிக்கையின் அமலாக்கத்தை எவ்வாறு பலப்படுத்துவது என்பதே இதன் நோக்கமாகும்.



### கீத் நொயார்

தற்போதைய பதவியில் ஒன்பது வருடகால சேவையையும் உள்ளடக்கிய விதத்தில் ஊடகவியல் துறையில் சுமார் 18 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருக்கும் நொயார் *டெய்லி மிரர்* பத்திரிகையின் பிரதி ஆசிரியராகப் பணியாற்றுகிறார். அவர் இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கைப் பத்திரிகை நிறுவனம் என்பவற்றால் 2004ஆம் வருடத்தின் ஆங்கில மொழி மூலமான மிகச் சிறந்த பத்தி எழுத்தாளராகத் தெரிவு செய்யப்பட்டார். *மிட்வீக் மிரர்* பத்திரிகையின் ஆரம்பம் தொடக்கம் அவர் சிறப்புக் கட்டுரைப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்து வந்ததுடன், இப்பொழுது ஏனைய பொறுப்புகளுடன் பத்திரிகை யின் ஆசிரியர் தலையங்க மற்றும் அபிப்பிராயப் பக்கங்களுக்குப் பொறுப்பாக உள்ளார். *மிரர்* பத்திரிகையில் இணைவதற்கு முன்னர் *சண்டே டைம்ஸ்* செய்திப் பிரிவின் இணை ஆசிரியராகப் பணி யாற்றினார். அவர் ஒரு வருடகாலம் அசோசியேட்டட் பிரஸ் (ஏபி) செய்தி நிறுவனத்தின் கொழும்பு பணியகத்தில் ஒரு நிருபராக வேலை செய்ததுடன், நான்கு வருடகாலம் *கலீஜ் டைம்ஸ்* பத்திரிகையின் வெளிநாட்டு நிருபராக இருந்துள்ளார். மேலும், துபாயிலிருந்து வெளி வரும் ஒரு பத்திரிகைக்கு வாராந்த பத்தி ஒன்றையும் எழுதியுள்ளார். நொயார் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல், ஆங்கில இலக்கியம் மற்றும் மெய்யியல் ஆகிய பாடங்களைக் கற்றுப் பிஏ பட்டம் பெற்றதுடன், கடந்த ஏழு வருடகாலமாகக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஊடகவியல் பிரிவில் வருகை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார். அவர் ஐக்கிய அமெரிக்காவில் *ஆல்ஃபிரட் ஃபிரண்டிலி பிரஸ்* அமைப்பின் உயர் உறுப்பினராகவும் *கேம்பிரிட்ஜ் வொல்ஃப்சன் காலேஜ் பிரஸ்* அமைப்பின் உயர் உறுப்பினராகவும் உள்ளார்.

### என். ராம்

அரசியல் துறை ஊடகவியலாளரும் பகுப்பாய்வாளருமான என். ராம் *த ஹிந்து* பத்திரிகையினதும் அதன் குழும வெளியீடுகளான *ஃபிரண்ட் லைன், பிசினஸ் லைன், ஸ்போர்ட்ஸ்டார்* ஆகிய பத்திரிகைகளினதும் பிரதம ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் வரலாறு மற்றும் நியூயார்க் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் இதழியல் துறை ஆகியவற்றைக் கற்றிருக்கும் அவர் 1966 தொடக்கம் ஊடகவியல் துறையில் உள்ளார். அவருடைய சிறப்பு அக்கறை இந்திய அரசியல், இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் அணுக்கொள்கை, இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் அரசியல் இறைமையிலான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளி அழுத்தங்கள், ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பான பிரச்சினைகள், இந்தியாவில் இனவாதம் மற்றும் அடிப்படைவாதம் என்பவற்றின் சவால், இலங்கையின் இனப்பிரச்சினை மற்றும் இந்தியா அதில் கொண்டுள்ள தொடர்பு, கருத்துச் சுதந்திரம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் சமூகத்தில் ஊடகங்கள் வகித்துவரும் பாத்திரம் என்பவற்றையும் உள்ளடக்குகின்றன. அவர் பெற்றுக்கொண்டிருக்கும் விருதுகள் மற்றும் கௌரவம் என்பன வருமாறு: (இதழியல் துறைக்கான) பத்மபூஷன் விருது 1990, ஆசியப் பத்திரிகை மன்றத்தின் வருடத்துக்கான மிகச் சிறந்த ஆசியப் புலனாய்வு இதழியலாளர் விருது (1990), இதழியல் துறைக்கான அதியுயர் பி. டி. கோயங்கா விருது (1989), தேசியப் பிரஜைக்கான விருது (1995), வணிக தார்மீக நெறிமுறைகளுக்கான ஜே.ஆர்.டி. டாட்டா முதல் விருது (2002) மற்றும் ஸ்ரீலங்கா ரத்ன (2005). அவர் சுசான் ராம் உடன் இணைந்து *நாராயண்: தி ஏர்லி இயர்ஸ்*, 1906-1945 என்ற வாழ்க்கை வரலாற்று நூலை எழுதியுள்ளார். மேலும், *ரைடிங் த நியூக்ளியர் டைகர்* என்ற அவருடைய நூல் 1999 இல் புதுடெல்லியைச் சேர்ந்த சைன்போஸ்ட் பப்ளிகேசன், லெஃப்ட் வேர்ட் புக்ஸ் என்ற வெளியீட்டு நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. அவருடைய ஆராய்ச்சி வெளியீடுகள் *தி இன்டியன் நியூக்ளியர் டிஸ்பூட்: ஆன் இன்டியன் ஃபெர்ஸ்பெக்டிவ்* மற்றும் *ஆன் இன்டிபென்டன்ட் பிரஸ் அண்டு ஆன்டி – ஹங்கர் ஸ்ட்ரடஜீஸ்: தி இன்டியன் எக்ஸ்பீரியன்ஸ்* என்பவற்றையும் உள்ளடக்குகின்றன. இங்கு இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட கட்டுரை ஜீன் டெரஸ் மற்றும் அமர்த்தியா சென் ஆகியோர் தொகுப்பாசிரியர்களாக இருந்து வந்த *த பொலிடிகல் எகனாமி ஆஃப் ஹங்கர்*, தொகுதி 1, *என்டைட்டில்மெண்ட் அண்டு வெல்–பீயிங்* (கிளரிடோன் பிரஸ், ஆக்ஸ்ஃபோர்ட், 1990) என்ற நூலில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொகுதி இரண்டு

# இலங்கையில் சமாதானம் பேசுதல்

முயற்சிகள் • தோல்விகள் • படிப்பினைகள்

பதிப்பு குமார் ரூபசிங்க

போர்நிறுத்த ஒப்பந்தம் பரவலான தாக்கங்களைக் கொண்டிருந்ததுடன், பேச்சுவார்த்தைச் செயன்முறைக்குத் தேவையான ஒரு கட்டமைப்பையும் உருவாக்கியது. இந்த ஒப்பந்தத்தில் காணப்பட்ட மிக முக்கியமான அம்சம் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வழிமுறைகளும் தரப்பினருக்கிடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் விடயமும் வலியுறுத்தப்பட்டதாகும். எத்தகைய செயற்கையான காலகெடுக்களும் நிர்ணயிக்கப் பட்டிருக்கவில்லை. மேலும், அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் ஏற்பாடுகளின் இயல்பு மற்றும் ஆயுதங்களைக் களைதல் போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் பூர்வாங்கக் கலந்துரையாடல்களின்போது எடுத்துக்கொள்ளப்படமாட்டாது என இருதரப்புகளும் முடிவு செய்திருந்தன. எனவே, மக்களிடம் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் மற்றும் இருதரப்பினருக்கிடையிலான விசுவாசம் என்பன வெற்றிகரமான பேச்சுவார்த்தைச் செயன்முறை ஒன்றுக்கான அத்தியாவசியமான ஒரு முன்நிபந்தனையாக இருந்து வருகின்றது என்னும் படிப்பினையை முந்தைய பேச்சுவார்த்தைகளிலிருந்து இரு தரப்புகளும் பெற்றுக் கொண்டிருந்தன.

குமார் ரூபசிங்க

சமாதானச் செயன்முறையின் ஒட்டுமொத்த முயற்சிகளின்போது இடம்பெற்ற அனைத்து நிகழ்வுகளையும் மீண்டும் திரும்பிப் பார்த்தல், நோர்வே அனுசரணையாளரின் நம்பிக்கையை வென்றெடுத்தல், போர்நிறுத்த உடன்படிக்கையை முன்னெடுத்துச் செல்லல் மற்றும் எல்டிடிஈ தலைவர்களின் விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ளல், வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள், சிங்களவர்களில் கணிசமான ஒரு பிரிவினர் ஆகியோரின் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்ளல், வளர்ச்சியடைந்த நாடுகளின் சக்திவாய்ந்த ஒரு தொகுதியின் கடப்பாட்டைப் பெற்றுக்கொள்ளல், ரணில் விக்ரமசிங்க உண்மையில் சமாதானத்தை எடுத்துவருவதில் வெற்றிகண்டிருந்தார். துணிச்சலானதும் புத்தாக்க இயல்பிலானதுமான உத்திகள், நோக்கத்தின் தெளிவு பல செயல்பாட்டாளர்களின் குழுக்களை அணிதிரட்டியமை மற்றும் இதற்குத் தேவையாக இருந்த அளவுகடந்த பொறுமை என்பவற்றைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

பிரட்மன் வீரக்கூன்

சமாதானச் செயன்முறை தொடர்பாக ஓரளவுக்கு மீண்டும் திரும்பிப் பார்க்க வேண்டியிருப்பதுடன், அது தொடர்பான ஒரு விமர்சனத்தையும் முன்வைக்க வேண்டியுள்ளது. சமாதானச் செயன்முறை குறையற்ற ஒன்றாக இருந்து வந்தது எனக் கூறுவது சாத்தியமல்ல. அந்தவகையில் நோக்கும்பொழுது எத்தகைய களங்கமும் இல்லாத ஒரு சமாதானச் செயன்முறை எந்த இடத்திலுமிருந்து வர முடியாது என்றே நான் நினைக்கிறேன். எனவே, எந்த ஒரு சமாதானச் செயன்முறையிலும் காலத்துக்குக் காலம் தவறுகள் இடம்பெற முடியும். ஒரு சில தவறுகள் தீவிரமானவையாகவும் ஒரு சில சிறியதாகவும் இருந்து வரும். எந்த ஒரு நாட்டிலும் எந்த ஒரு காலத்திலும் முன்னெடுக்கப்படும் எந்தச் சமாதானச் செயன்முறையிலும் குறைகள் தென்படுவது ஒரு பொதுவான குணாம்சமாகும். இன்றைய காலகட்டத்தில் எங்குத் தவறு நிகழ்ந்துள்ளது என்பதைத் திரும்பிப் பார்ப்பதும் இத்தகைய தவறுகள் மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்வது எவ்வாறு சாத்தியம் என்பதை நோக்குவதும் மிக முக்கியமாகும். இப்பொழுது நாங்கள் இன்றைய நிலையை மதிப்பீட்டுக்கொள்வதற்கும் எமக்கு முன்னால் இருக்கும் பாதையை இனங் கண்டுகொள்வதற்கும் சற்று நிதானித்துச் சிந்தித்துப் பார்க்கவேண்டிய தருணம் வந்துள்ளது. கடந்தகாலத்தின் அனுபவங்களின் மீது கவனம்செலுத்தி எமது குறைபாடுகள் எவை என்பதை நாங்கள் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

ஜி.எல். பீரிஸ்

அடையாளம்

ISBN 978 817720 110 9

விலை ரூ. 550 (இரு தொகுதிகள்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்